180

26 MAR 1918
MADRAS

# ஜனோபகாரி

1918

செப்பனிடுபவர் பெயர்
வே. சுப்பிரமணியன்
செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட நாள் 9/96

செப்பனிட்டு முடித்த நாள் 10/96

சரிபார்க்கும்
மு. பா.
கையொப்பம்

ஆராய்ச்சி
உதவியாளர்
கையொப்பம்

161990

*Supplement to the "Janopakari."*



SIR WILLIAM WEDDERBURN

ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்

# ஜனோபகாரி.

## (JANOPAKARI)

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.


புஸ்தகம் 3. Vol. III. | பிங்கள௵ தைமீ, JANUARY 1918. | சஞ்சிகை 1. No. 1.


## JANOPAKARI.

A high class illustrated Tamil Monthly Review devoted mainly to social, Literary, Educational and Economic topics of interest.

Selections from important speeches and papers on Economic subjects; notes of the month on Economic matters.

Pages for Boys and Ladies: A speciality.

**Rates of Subscription (Post Free.)**

| | | Inland. | Foreign. |
|---|---|---|---|
| Per annum | Rs. | 3 0 0 | 4 8 0 |
| Single copy | ,, | 0 5 0 | 0 6 0 |
| Sample copy | ,, | 0 1 0 | 0 2 0 |

**Rates of Advertisement.**

| | | | |
|---|---|---|---|
| 1 page | Rs. | 8 0 0 | per month. |
| ½ ,, | ,, | 4 0 0 | ,, |
| ¼ ,, | ,, | 2 0 0 | ,, |

All orders for advertisement must accompany with advance.

**To Contributors**:—Contributions on subjects specified above will be received for publication. The articles should be written in plain colloquial Tamil with ink on one side of the paper only. Accepted articles will be paid for on publication. The copyright and right of translation of the articles paid belongs to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

All letters, contributions and remittances etc should be addressed to the Proprietors:

V. N. SAMA RAO & Co.,
VELLORE, (SOUTH INDIA.)

## ஜனோபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்து வரும் ஓர் சிறந்த சித்திரப்படங்கள் அடங்கிய தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இதில் கல்வி, வியவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூட்டுறவு ஆகிய இவைகளைக்குறித்த பல விஷயங்களும், ஜனசமூகத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்களும், சிறந்த நீதிகளைப் போதிக்கவல்ல நாவல்களும் நாடகங்களும், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்களும், நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்களும், ஸ்திரீகளுக்கும், சிறுவர்களுக்கும் உபயோகமான பல விஷயங்களும் சிறந்த கற்றறிந்தவர்களால் மிகவும் தெளிவான நடையில் எழுதப்பட்டு வருகின்றன.

**தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.**

| | | உள்நாடு. | வெளிநாடு. |
|---|---|---|---|
| ஒரு வருஷத்திற்கு | ரூபா | 3—0—0 | 4—8—0 |
| தனிப்பிரதி | ,, | 0—5—0 | 0—6—0 |
| மாதிரிகாபி | ,, | 0—1—0 | 0—2—0 |

**விளம்பர விகிதங்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 1-பக்கத்திற்கு | மாதம் 1-க்கு | ரூபா | 8—0—0 |
| ½ ,, | ,, | ,, | 4—0—0 |
| ¼ ,, | ,, | ,, | 2—0—0 |

வியாசமெழுதுவோர் கவனிக்கவேண்டியவை:— வியாசம் எழுதுபவர்கள் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங்களைப்பற்றி எழுதலாம். ஒவ்வொரு வியாசமும் காகிதத்தின் ஒரே பக்கத்தில் அரைப்பாதியில் எழுதியிருத்தல்வேண்டும். கடினமான தமிழ் உதவாது. வியாசங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டால், பிரசுரமானதும் எழுதியவர்களுக்குத் தக்க சம்பாவனை செய்யப்படும். சம்பாவனை செய்திருக்கும் வியாசங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வியாசங்களைத் திரும்பவேண்டுவோர் தபால் ஸ்டாம்புகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லாக்கடிதங்களும், சந்தாப்பணம் முதலானவைகளும் கீழ்க்கண்டவிலாசத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
இராயவேலூர், (தென்னிந்தியா.)

161990
TL
தமிழ், ...
N16.3

## The [illegible]age Panchayath in Baroda.

## [illegible]ரோடாவில் கிராம பஞ்சாயத்து.

பரோடா [illegible] ஸ்டர் வி. பி. மாதவ ராவ் பி. ஏ. ஸி. ஐ. இ. அவர்கள் திவானாயிருக்கும்பொழுது வெளியான 1914-15-ம் வருஷத்து நிர்வாக அறிக்கையில் பரோடா பஞ்சாயத்து ஸம்பந்தமான சில விஷயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றின் சில முக்கிய விஷயங்களை இங்கு எழுதுகிறோம்.

இந்தியாவில் முன்னே மத விஷயமாயும், ராஜ்யத்தைக் கைப்பற்றும் விஷயமாயும் ராஜாக்கள் அடிக்கடி படையெடுத்துச் சண்டையிட்டு வந்தார்கள். இதன் காரணமாக, கிராம ஸமூஹத்தார்களின் பொருளாதார நிலைமையானது பல வழிகளிலும் பாதகப்பட்டு வந்தது. ஆனாலும், அவர்கள் தங்கள் கிராம சம்பந்தமான நிர்வாக காரியங்கள் சீர்கேடடையாமல் பாதுகாத்து வந்தார்கள். இம்மாதிரியான ஸ்தாபனங்கள் பதினெட்டாம் நூற்றாண்டிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் மிகவும் செழிப்புற்று நடந்து வந்தன. பரோடாவில் ரயத்வாரி சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, கிராம பஞ்சாயத்தானது நாளடைவில் அழியத் தலைப்பட்டது. ஆனால், நிலத்தீர்வையை ஏற்படுத்துவோர்கள் இவை அழிந்து போகாமல் பாதுகாத்து வந்தார்கள். அப்போது அங்கு ஸெட்டில்மெண்டு உத்தியோகஸ்தராயிருந்த மிஸ்டர் எல்லியட் என்பவர், 1893-ம் வருஷத்தில் இப்பஞ்சாயத்துக்கள் மீண்டும் அழிந்துபோகாவண்ணம் நிலைநிறுத்துவதற்கான பல யோசனைகளைக் கூறிவந்தார். இவற்றை மகாராஜா அவர்கள் கைக்கொண்டு தக்க ஆதரவளிக்கலானார். கிராம ஸமூஹத்தினருக்குத் தங்களைத் தாங்களே ஆளுந்திறமை ஏற்படவேண்டுமென்பது இவருடைய கருத்து.

பரோடா கிராம பஞ்சாயத்தானது 1902-ம் வருஷத்தில் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. அப்போது அது சம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்ட சில முக்கிய விதிகள் வருமாறு:—

ஆயிரம் அல்லது அதற்கு அதிகமான ஜனங்களையுடைய ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தப்படவேண்டும். அப்படி ஒரு கிராமத்தில் ஆயிரம் ஜனங்களுக்குக் குறைவாயிருக்குமானால், பல கிராமங்களைச் சேர்த்துப் பொதுவாக ஒரு பஞ்சாயத்தை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து ஸபையிலும் ஐந்து முதல் ஒன்பது பேர்கள் வரை அங்கத்தினர்களாக ஏற்படுத்தப்படுவார்கள். இவர்களில் ஒரு பகுதியாரை ஜில்லா உத்தியோகஸ்தர்களும், மற்றொரு பகுதியாரை வியவசாயிகளும் பொறுக்கி யெடுப்பார்கள். கிராமாதிகாரி பஞ்சாயத்து ஸபைக்கு அக்கிராசனம் வகிப்பார். கிராமக் கணக்கனும், உபாத்தியாயரும் உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தினராவர். பஞ்சாயத்தார்கள், கிராம ரஸ்தாக்கள், கிணறுகள், குளங்கள், பள்ளிக்கூடங்கள், சத்திரங்கள், தேவாலயங்கள், வியவசாயப் பண்ணைகள், இராஜாங்க சம்பந்தமானதும், பொது சம்பந்தமுமான சொத்துக்கள் முதலியவற்றை மேற்பார்வை செய்துவரவேண்டும். பஞ்சக்காலங்களிலும் வைத்திய சம்பந்தமான பரிகாரங்களிலும் பஞ்சாயத்தார்கள் உதவி செய்யவேண்டும். கிராம முனிசிப்புக்கு ஸிவில் வியவகார விஷயங்களில் உதவியாயும், சப்ரெஜிஸ்ட்ராரின் வேலைகளுக்கு ஆதாரவாயும் பஞ்சாயத்தார்கள் உதவி புரியவேண்டும். இவர்கள், நிலங்களின் எல்லைக் கல்லுகள் சரியாயிருக்கின்றனவா வென்பதையும், கால்நடைகளின் தொழுவங்கள் சரியாக வைக்கப்பட்டுள்ளனவா வென்பதையும் கவனிக்க வேண்டும்.

பரோடாவில் மொத்தம் 3054 கிராமங்கள் உள்ளன; அவற்றில் 2287 கிராமப் பஞ்சாயத்துக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

1906-ம் வருஷத்தில் கிராம பஞ்சாயத்தாருக்கு ஒருவரை வேலைக்கு நியமிக்கவும், வேலையை விட்டு நீக்கவும், தண்டிக்கவும், ரஜா கொடுக்கவும், ரஜாவிலிருப்பவர்களுக்குப் பதில் ஆட்களை ஏற்படுத்தவும், கிராமத் தலைவன், கணக்கன், ஹவில்தார் ஆகிய இவர்களைத் தவிர மற்ற வேலைக்காரர்களை நடத்தவும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. இவர்கள் தாலுக்கா கஜானாவிலிருந்து பணம் பெற்று மேற்சொன்ன அதிகாரிகளைத் தவிர மற்ற கிராம வேலைபாட்களுக்குப் பட்வாடா செய்ய அதிகாரம் பெற்றிருந்தார்கள். 1907-ம் வருஷத்திலும் 1909-ம் வருஷத்திலும் சில யோக்கியதையுள்ள பஞ்சாயத்தார்களுக்குச் சிறு ஸிவில் கிரிமினல் முதலிய வியவகாரங்களில் தீர்ப்புச்சொல்வதற்கு வேண்டிய சில விதிகள் ஏற்படுத்தப்பட்டன. 1914-15-ம் வருஷத்தில் 159 பஞ்சாயத்துக்கள் இப்படிப்பட்ட 769 கேஸ்கள் வரை தீர்ப்புச்செய்திருக்கின்றன. லோகல் போர்டு சட்டப்படி ஒவ்வொரு பஞ்சாயத்தும் தனது சபையினின்று ஒரு மெம்பரைத் தாலுக்கா போர்டுக்கு அனுப்ப வேண்டும்.

பரோடாவில் கிராம பஞ்சாயத்து ஸம்பந்தமாக மேலே கூறிய சீர்திருத்தங்கள் கிராம ஸமூகத்தார்களுக்கு மிக்க பலனைக் கொடுக்கத் தக்கவையாயிருந்தன. அங்குக் கிராம பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் தக்க பலனைக் கொடுப்பதுபோல, ஏன் இந்தியாவின் இதர பாகங்களிலும் இவை தக்க பலனைக் கொடுக்கக்கூடாது? பரோடாவில் இப்போது இருக்கும் நிலைமையில் படியாதவர்களும் பஞ்சாயத்தின் அக்கிராசனாதிபத்தியம் வகிக்க நேரிடுவதாலும், அவர்கள் அதிகாரிகளின் போக்கையே அநுசரிக்க வேண்டியிருப்பதனாலும் பஞ்சாயத்து நிர்வாகத்தில் சில கோளாறுகள் ஏற்பட ஏதுவாகின்றது. ஆனால், இப்போது அங்குக் கட்டாயக்கல்வியின் காரணமாக ஒவ்வொரு சிறு பிள்ளையும் கல்விபெற்று வருவதனால், சமீப காலத்திற்குள்ளேயே இக்குறை நீங்கிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.



3

---

## Shantiniketan.

## சாந்திநிகேதனம்.

நமது இந்தியாவில் கவிச் சக்கரவர்த்தியாக விளங்கி, இந்தியாவில் மாத்திரமல்லாமல் பிற நாடுகளிலும் புகழ்பெற்ற ஸர் ரவீந்திரநாத் தாகோர் மகானை எவரும் அறிவர். உலகமுழுதும் மெச்சும் "நோபல்" வெகுமதியைப்பெற்ற பிறகே இவருடைய கவித்திறமையும், புகழும் எல்லோருக்கும் வெளியாயிற்று. இவர் மிக்க பெருமை பொருந்திய புராதன தாகோர் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் 1861-ம் வருஷத்தில் ஜனனமானார். இந்தச்சாந்திநிகேதன ஆச்ரமத்துக்கு இப்போது சொந்தக்காரர் நம் தாகோர் மகானே. இக்கலாசாலையானது சென்ற 17 வருஷங்களாக நிலைத்துள்ளதேனும், 1914-ம் வருஷம் வரையில் வங்காள பாகாணத்தைத் தவிர்த்து பிற நாடுகளில் அறியப் பெற்றதாக இருந்திருக்கவில்லை.

பூர்விக ஆசார முறையில் ஒரு கலாசாலை ஆரம்பிக்கவேண்டுமென்ற நினைவு நமது தாகோரின் பிதாவான மஹரிஷி தேவேந்திரநாத் தாகோர் அவர்களுக்கு வந்தது. அகன்ற ஆகாயம் பூமி இவற்றின் விரிந்துபரந்த இடங்களே ஆத்மாவுக்கு (ஆத்ம) சக்தியைத் தந்து ஜடமாகிய தேஹக்கட்டிலுள்ள பற்றை ஒழித்துக் காட்டுவனவென்று நன்கு அநுபவ முறையில் உணர்ந்த மஹரிஷியவர்களே இப்போது கலாசாலை இருக்கும் இடத்தைத் தெரிந்தெடுத்தவர்கள். அங்கே அவர் நிஷ்டையிருந்த இடம் இரண்டு ஏழிலைப் பாலைமரங்களின் கீழிருக்கிறது. அங்கு இப்போதும் அடையாளமாகப் பின்வரும் வாக்கியம் வங்காளி பாஷையில் எழுதப் பெற்றிருக்கிறது: "அவரே எனது உயிர்க்குச் சுகம் தருபவராகவும், என் இருதயானந்தகராகவும் என் ஆத்மசாந்திதராகவும் இருக்கிறார்."

இந்த ஆச்ரமமானது போல்பூரில் இருக்கிறது. ஈஸ்டு இந்திய ரெயில்வேயின் மேல், கல்கத்தாவுக்கு 99 மைலில் உள்ளதும், பாத்வா

னுக்கு 33 மைலில் உள்ளதுமான போல்பூர் ஸ்டேஷனுக்குச் சுமார் இரண்டு மைல் தூரத்தில் அமைக்கப்பெற்றிருக்கிறது. இந்த ஆசிரமத்து இருப்பிடம் பட்டண வாசத்திலிருந்து விலகினதாகவும், அதனாலேயே சாந்தமும் இன்பமும் நிறைந்துள்ளதாகவும் இருக்கின்றது. ஒரு பகுத்தறிவில் பழகியுள்ள ஜீவனும் பிரகிருதியின் இயற்கை அம்சங்களும் இனிய வுறவுடன் கலந்தாடுந் தன்மை அங்கு நன்கு விளங்குகின்றது. அதனைச் சுற்றியுள்ள தோட்டம் நமது ரவீந்திரநாதரால் வைத்து வளர்க்கப்பெற்ற ஸால மரங்களாலும் மாமரங்களாலும் குளிர்ந்து இன்பமளிக்கும் ஆனந்தகரமான நிழலைத் தந்துகொண்டிருக்கிறது. மாணவர்விளையாட்டிடம் பெரியதாகவும் வெளியாகவும் இருக்கிறது. நான்கு புறங்களிலிருந்தும் சுத்த வாயு அபரிமிதமாக வீசிக்கொண்டிருக்கிறது. தோட்டத்துள் பலவிடங்களில் சுத்த நீர்க்கேணிகள் தோண்டப் பெற்றிருக்கின்றன. இதுவே மாணவர்கள் சுத்த மனதுடன் கல்வி கற்றுக்கொள்ளத் தக்க இடம்.

வகுப்புக்கட்கெல்லாம் பாடங்கள் மரங்களின் நிழல்களிலே கற்பிக்கப்படுகின்றன. மரங்களின் கீழே பாய்களின்மேல் பிள்ளைகள் உட்கார்ந்து படிக்கிறார்கள். மழைக்காலங்களில், மாணவர்கள் உபாத்தியாயர்களுடைய அறைகளில் கூடியிருக்கிறார்கள். உபாத்தியாயர்களும் தங்களால் கூடியவரை மாணவர்கட்கு எவ்வழியாலும் உயிர் வாழ்க்கைக்கும் ஆத்ம முன்னேற்றத்திற்கும் வேண்டியவைவற்றைப் போதித்து வருகிறார்கள். சுலபமாகவும் இயற்கையாகவும் உள்ள வழிகளால் ஆத்மபோதத்தை ஊட்டுகிறார்கள். சித்திரம் சங்கீதம் இவற்றில் பிரியமும் வாஸனையும் உடையவர்க்கு அவையும் முறையே கற்பிக்கப்படுகின்றன.

ஸங்கீத ஸபைகளும் நாடக ஸபைகளும் ஏற்றமாகக் கொண்டாடப்படுகின்றன. ஸங்கீத முறை மனதுக்கு இன்பத்தையும் பக்தியையும் தரக்கூடியதாகவே இருக்கின்றது. மாணவர்கள் மழைக்காலங்களிலும் ஸங்கீதத்தைப் பயில்கிறார்கள். திறந்த வெளியில் காலையாரம்பத்திலும் மாலையாரம்பத்திலும் கால் மணி நேரம் மாணவர்கள் தோத்திரம் சொல்லுகிறார்கள்.

வருஷத்துக்கு இரண்டு முறைதான் மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்படுவார்கள். பெரும்பாலும் 11 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் மாணவராகச் சேர்க்கப்படுகிறார்களில்லை; அநேகமாக 8, 9 வயதே சேர்த்துக்கொள்ளத் தக்க காலம். ஒவ்வொரு மாணவனும் பிரவேசச் சம்பளம் ரூ. 20-ம், மாதச் சம்பளம் ரூ. 20-ம் கட்டிச்சேரவேண்டும். மாதச் சம்பளம் சாப்பாட்டுக்கும், வாடகைக்கும், கற்பிப்பதற்கும், விளக்கு, வண்ணான், அம்பட்டன், வைத்தியம் முதலியவற்றின் கூலிக்குமாகக் கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு மாணவனும் காகிதம் முதலியவற்றிற்காக ரூ. 5 கொடுத்துவைத்திருக்க வேண்டும். அது செலவான பின்னர் மறுபடியும் அப்படியே கொடுத்து வைத்திருக்கவேண்டும். எல்லாச் சம்பளங்களும் வங்காள மாதத்தின் முதல் வாரத்திலேயே கொடுக்கப் பெற வேண்டும். இல்லையாயின், மூன்று வாரங்கள் தவணையாகக் கொடுக்கப்படும்; இதனிலும் கடந்து சென்றால் ரூ. 2 கூட்டிக்கொடுக்க வேண்டும்.

மாணவர் கலாசாலையில் சேரும்போதே பின் வரும் சாமான்களை ஆயத்தப்படுத்திக்கொண்டு வரவேண்டும். அவை:—மெத்தை, தலையணை, கொசுவலை, விரிப்பு, கம்பளியாகிய படுக்கைச் சாமான்களும், உடைகளும், குளிர்காலத்துக்கு வேண்டிய உடுப்புக்களும், ஒரு பானபாத்திரம் இரண்டு கிண்ணங்கள் ஒரு தாலமாகிய தட்டுமுட்டுச் சாமான்களும், புஸ்தகங்கள், தேசப் படங்கள், மைக்கூடு, காகிதம், எழுதுகோலாகிய படிப்புச் சாமான்களும் ஆம்.

ஸம்ஸ்கிருதம், வங்காளி, இங்கிலீஷ், கணிதம், சித்திரப்பாடம், பூகோள சாஸ்திரம், ரஸாயன சாஸ்திரம், இயற்கைத் தத்துவம், ஸங்கீதம் ஆகிய இவைகள் கற்பிக்கப்படுகின்றன. போதனா முறைக்குப் போதிய பாஷையாக வங்காளியையே கைக்கொண்டிருக்கிறார்களென்பது சொல்லத் தேவையில்லை. இந்தக் கலாசாலையிலிருந்தே

4

*Supplement to the "Janopakari."*

26 MAR 1918



SIR RABINDRANATH TAGORE

ஸர் ரபீந்த்ராநாத் டாகூர்

மாணவர்கள் கல்கத்தா யூனிவர்ஸிடியின் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குச் செல்லலாகும். அதாவது வகுப்புக்கள் தாழ்ந்த முறையில் நடத்தப்படவில்லை என்பது இதனால் அறியலாகும். பெரும்பாலும் மாணவர்கள் தங்கள் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையானபிறகு ஆசிரமத்தைவிட்டு விலகிக்கொள்ளுகிறார்கள். ஆனால் சிலர் இருந்து ஸம்ஸ்கிருதத்தை விருத்தி செய்து கொள்ளுகிறார்கள்.

காற்பந்து கிரிக்கட் முதலான சிறு விளையாடல்களே மாணவர்கட்குத் தேகாப்பியாஸ முறைகளாகும்; சில சமயங்களில் உபாத்தியாயர்களுடன் உலாவப் போவதுமுண்டு. தோட்ட வேலைகள் தச்சுத் தொழில் முதலானவைகளும் ஒழிவு நேரங்களில் கற்பிக்கப்படுகின்றன. பூந்தோட்டங்களும் மாணவர்களால் ஆதரிக்கப்படுகின்றன.

மாணவர்களது தினசரி மிகவும் கவனிக்கத்தக்கது: அதிகாலை $4\frac{1}{2}$ மணிக்கு நித்திரை நீங்கி எழுந்திருக்கிறார்கள்; தங்கள் தங்கள் இடங்களைச் சுத்தம் செய்து கொண்ட பிறகே காலைக்கடன் கழிக்கச் செல்கிறார்கள்; பிறகு ஆசிரமத்து வேலைக்காரர்களால் கிணற்றிலிருந்து இறைக்கப்பட்டு நிரப்பப் பெற்றுள்ள தொட்டித் தண்ணீரில் ஸ்நாநம் செய்கிறார்கள்; சிறிதுகாலம் திறந்தவெளியில் நிஷ்டையும் தோத்திரங்களும் செய்கிறார்கள்; பிறகு, காலை 7 மணிக்குக் காலையாகாரம் செய்துகொண்டு $10\frac{1}{2}$ மணி வரையில் காலைப் பாடங்களைப் படிக்கிறார்கள். பிறகு, 11-மணிக்கு மத்தியான்னஆகாரம்கொடுக்கப்படுகிறது, மச்ச மாமிசங்கள் ஆசிரமத்தில் சேர்க்கப்படுவதில்லை. பொதுவான சாப்பாட்டறையில்தான் எல்லோரும் கூடியிருந்து சாப்பிடுகிறார்கள்; ஜாதி வித்தியாச நோக்கமுடைய பெற்றோர்கள் விரும்பினால், தனியே இருத்தி அமுது படைக்கப்படும். ஆனால், வந்து சேரும்போது பொதுச் சாப்பாட்டறையில் சேர்ந்துள்ள மாணவன், பிறகு தனிபறைக்கு அனுப்பப்படுவதில்லை. யார்க்கும் ஒரேமாதிரி ஆகாரந்தான்; ஆனால், அசௌக்கிய காலங்களில் வைத்தியருடைய சட்டளையின்மேல் தனிச் சாப்பாடு தரப்படும். சமையற்காரர்கள் பிராமணர்களேயாம். காலையும் மாலையும் மாணவர்கட்கென்றே மிகுதியாகப் பால் வாங்கப்படுகிறது.

ஆசிரமம் ஒரு சிறு கிராமம்போலவேயிருக்கிறது. சில உபாத்தியாயர்கள் தங்கள் குடும்பத்துடன் அங்கு வசிக்கிறார்கள். இவர்களுக்கும் கலாசாலைப் போஜனம் இனாமாகவே அளிக்கப்படுகின்றது. நமது தாகோர் குடும்பத்தாரிற் சிலரும் இங்கேயே வசித்துக்கொண்டிருக்கிறார்கள். சாந்திநிகேதனக் கட்டிடமானது தளவரிசை செய்யப்பெற்றதும், மேல்மாடியுள்ளதுமாக இருக்கிறது. கட்டிடச் சாமான்களெல்லாம் பிராசீன முறையை நன்கு தெரிவிக்கக் கூடியனவாக அமைக்கப்பட்டிருக்கின்றன. கொக்கி தாழ்ப்பாள் முதலானவைகளெல்லாம் மரங்களாலேயே ஆக்கப்பெற்றிருக்கின்றன. உயிர் வாழ்க்கையில் அதிகச் செலவைத் தருவனவும், அவசியமில்லாதனவும், டம்பத்துக்கானவுமான ஸாமான்கள் அங்கு விலக்கப்பட்டிருக்கின்றன; சுருங்கிய செலவில் செய்யப்பெற்றனவேனும், அழகாக அமைக்கப்பெற்றிருக்கின்றன. விருந்தினர்க்கென்று ஒரு வீடும் அமைக்கப்பட்டிருக்கிறது. சிற்சில சமயங்களில் சிலர் ஆசிரமத்தைப் பார்த்துப்போகவும் வருவதுண்டு. அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் அங்குச் செய்தளிக்கப்படுகின்றன. ஆனால், அவை வடதேச முறைப்படியிருக்கும்.

மாணவர்கள் மூன்று வகுப்பினராகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள்; பிரிவு வயதையனுசரித்தபடியாகவே இருக்கும். பள்ளிக்கூடமாணவர்களுக்கே ஒருவன் தலைவனாக இருப்பான். ஒவ்வொரு வகுப்பினரும் தத்தமக்கென்று ஒவ்வொரு மாணவச் சிறுதலைவரைப் பெற்றிருப்பார்கள். அந்த மாணவச் சிறு தலைவர்க்கும் துணைத் தலைவர்கள் உண்டு. அறுவர் அல்லது எழுவர்க்கு ஒரு துணைத்தலைவனுண்டு. மாணவரும் அத்தலைவர்க்கடங்கிக் கீழ்ப்படிதலுள்ளவராக இருப்பார்கள். சிறு சச்சரவுகளையும் கீழ்ப்படியாமையையும் மாணவத்தலைவர்களே

விசாரித்துத் தீர்த்துவிடுவார்கள். குற்றத்திற் குத்தண்டனை சிறிதேனும் அதுஉறுதியுள்ளதாக விருக்கும். குற்றம் செய்தோர் சிறிது காலத்திற்கு விளையாட்டில் சேர்க்கப்படாமலாவது மற்ற மாணவர்களுடன் பேசக்கூடாமலாவது ஒதுக்கி வைக்கப்படுவார்கள். எல்லா மாணவர்கட்கும் முன்னிலையில் தன் குற்றங்களை ஒப்புக்கொண்டால் மன்னிக்கப்படுவதுண்டு. உபாத்தியாயர்கள் பிரம்பு என்பதனைக் கண்ணாலும் பார்த்திருக்கமாட்டார்கள். அன்றியும், எவ்வித மான குரூர தண்டனையும் அங்கு இல்லை.

மாணவர்கள் மூன்று வங்காளிப் பத்திரிகைகளையும், ஒரு இங்கிலீஷ் பத்திரிகையையும் நடத்தி வருகிறார்கள். அநேகமாக அவைகள் பிழைகள் இல்லாமலே வெளியாகின்றன. எழுதப்படும் விஷயங்கள் கலாசாலை அங்கத்தினரால் பார்க்கப்பட்ட பின்னரே அச்சிடப் பெறுகின்றன. ஆசிரம புஸ்தக சாலை ஸம்ஸ்கிருதம் வங்காளி இங்கிலீஷ் பாஷைப் புஸ்தகங்களாலேயே நிரம்பியிருக்கிறது. யாத்திரையையும், வீரத்தையும் பற்றிய புஸ்தகங்களையே மாணவர்கள் மிகுதியும் விரும்புகிறார்கள்.

இந்த ஆசிரமம் கவர்ன்மெண்டாரது அங்கீகாரத்தைப் பெறவில்லையாதலால், அவர்களது உதவியை எதிர்பாராமலே நடத்தப் பெறுகிறது. கலாசாலைச் செலவுக்குத் தேவையான வருவாய்கள் நான்கு வகையாயிருக்கின்றன. அவை:— (1) சாந்திநிகேதன மூலதனத்தின் வட்டிவரும்படிகள். இதுவே முக்கிய ஆதாரமாக இருக்கிறது. (2) ஸர் ரவீந்திரநாத் தாகோர் அவர்கள் எழுதியுள்ள புஸ்தகங்களின் விற்று வரவுகள். (3) மாணவர்களின் சம்பளங்கள். (4) நமது தாகோர் அவர்களின் நோபல் வெகுமதியின் வட்டி. இவைகளெல்லாம் கூடி ஆசிரமச் செலவுக்குப் போதாதிருப்பின் தாகூர் அவர்கள் கவனித்துக்கொள்ளுகிறார்கள்.

மாணவர்கள் பெரும்பாலும் எல்லாக்காலங்களிலும் உபாத்தியாயருடன்கூடிக்கொண்டேயிருப்பார்கள். மாணவர்களின் படிக்கைபறைகளைப் பற்றிக் கவனிக்கும்படி உபாத்தியாயர்களே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உபாத்தியாயர்களும் மாணவர்களும் அருளும் அன்பும் கூடினவர்களாக இருப்பதனால், அந்தக் கூட்டுறவு சுககரமாகவும் ஆனந்தகரமாகவும் இருக்கிறது. மாணவர்களும் தங்கள் வீட்டு வாசத்தைவிட இதனையே விரும்புகிறார்கள். சிற்சில காலங்களில் வயது கூடிய மாணவர்கள் வெளிச்சென்று அயல் கிராமங்களுக்குள் நுழைந்து, அங்குள்ள வாலிபர்களுக்குத் தேசாபிமானத்தைப் போதித்து வருவதுமுண்டு. மாணவர்களுக்குப் பரோபகார குணமும் தேசாபிமானமும் சிறு போதிலிருந்தே போதிக்கப்படுகின்றன.

பாபு ஸந்தோஷ மஜூம்தாரது மேற் பார்வையில் ஒரு தினசரிக் குறிப்புப் புஸ்தகமும் ஆசிரமத்தில் இருக்கிறது. சுத்தமான பால் கொண்டுவந்து கொடுக்கப்படுகிறது; அதிகம் வேண்டுமானாலும் தருவிக்கப்படுகிறது. ஆசிரமத்துஉபயோகத்துக்காகவே ஒருவைத்தியசாலையும் நடத்தப்பட்டுவருகிறது. சுரம், சீதபேதி, பேதி இவைகள் சில சமயங்களில் இருப்பதுண்டு. ஆனால், தினசரிக்குறிப்பில் (வைத்தியம்) நால்வர் அல்லது ஐவர்தாம் குறிக்கப்படுகிறார்கள். அதனாலேயே ஆசிரமம் சௌக்கிய நிலையில் இருக்கிறதென்பது ஊகிக்கப்படலாகும். மாணவர்களின் சௌகரியத்திற்காக ஆசிரமத்தைபொட்டி ஒரு தந்தித் தபாலாபீஸும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.—இது வித்தியாபாநுவினின்று சுருக்கி எழுதப்பட்டது.

---

ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய
துப்பறியும் தமிழ் நாவல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாத சுந்தரம் | ... | ... | 1 | 0 | 0 |
| புஷ்பவனம் | ... | ... | 0 | 10 | 0 |
| கருணாகரன் | ... | ... | 0 | 4 | 0 |
| ஸர்த்தார்லிங் | ... | ... | 0 | 3 | 0 |

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர்.
(தென்னிந்தியா.)

V. N. Sama Rao & Co., Vellore (S. India.)



# India's Prayer. *

By Dr. Sir Rabindranath Tagore.

## இந்தியாவின் பிரார்த்தனை.

பிரார்த்தனைப்பத்து.

I.

வாழ்க வென்று வாழ்த்தி யெங்கட்கு
வாழ்வுதந் தருளினை
வாழ்கவே நாங்களும் வாழ்வை யோம் புவம்
தாழ்வுவா ராமலே
வாழ்வின் மஹிமைதா னெப்படியெப்படி யுன்றன்
மஹிமையு மாதலால்
வாழ்வில் தாழ்வு வாச்செயு மெமையுமுன்
னருளினாற் றகைப்போமே!

II.

நின்னருள் பெறவன்றி வேறொரு பொருள்பற்றி
யுள்ளம்பணி யவகேடு
நின்னருள் பெறவறி யாதழியு மென்றறிந்
தனையே பணிகுவோம்!
நின்னருட் பணியின்றி வேறொன்று பற்றியே
யுள்வலிகுறை வுறினுடனே
நின்னருட் பேறிலாப் பொய்ம்மை வந்தணுகியெம்
முயிரையே வௌவுமால்—

III.

எம்முள நிறைந்தனைப் பிரார்த்தனை செய்வமிவ்
வரந்தா நினைப்போற்றியே:—
எம்முளங் கவர்காம வின்பநுக ராசையை
யெதிர்த்துத் தகைக்க வலியருளுவாய்!
எம்முளஞ் சோர்வுறச் செய்துன்ப முன்னருள் [வெளிகாயத்
தூக்கியே நீக்கியருள்வாய்!
எம்முள முன்னருள் வலியினா லுன்னன்பி
லீடுபட் டுன்பணி செய்கவே!

IV.

பின்னுமுள மற்றெலாம் போராடி யழிவுற்று
மண்ணுகிரை யாகையிலும்
தன்னுமுன் னருளையே நம்பிவள ருயான்பி
லீடுபட்டிருந் துய்புவாம்!
பின்னுமுள பேர்களுன் பேர்சொல்லிப் பாதித் [துச்
சுயநயஞ் சாதித்தழிவரால்
மன்னுமொரு பகிகாரங்கொண்டு மன்னுயிர் [வதைப்போரை
யுன்கோபத் தீத்தகிக்குமால்—

---

Thou hast given us to live
Let us uphold this honour with all our strength and will.
For Thy glory rests upon the glory that we are.
Therefore in Thy name we oppose the power that would plant its banner upon our soul.
Let us know that Thy light grows dim in the heart that bears its insult of bondage,
That the life, when it becomes feeble, timidly yields Thy Throne to untruth,
For weakness is the traitor who betrays our soul.
Let this be our prayer to Thee—
Give us power to resist pleasure where it enslaves us,
To lift our sorrow up to Thee as the summer holds its midday sun;

---

* சென்ற டிஸம்பர்மாதம் கல்கத்தாவிற் கூடிய 32-வது காங்கிரஸ் மகா ஸபையின் முன், ஆசியாவின் கவிச் சக்கரவர்த்தியாகிய ஸர் ரவீந்திரநாத் தாகோர் அவர்கள் "இந்தியாவின் பிரார்த்தனை" யென்று ஆங்கிலத்தில் வாகவி யொன்று பாடி அதை வாசித்தார். அது எல்லோராலும் மிகவும் மேன்மையானதென்று கொண்டாடப்பட்டது. அதன் கருத்தைப் பிரார்த்தனைப் பத்தாக தமிழ்ப்படுத்தி "விவேக சிந்தாமணி" யின் ஆசிரியர் தமது பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். அதை அப்படியே இங்குப் பிரசுரிக்கிறோம். இதற்காக அவ்வாசிரியருக்கு எமது மனமார்ந்த வந்தனத்தை யளிக்கிறோம்.

V.

உறுதிநிலை தானறிந் தண்மைவழி மிக் [கோராய்

வருவன வருகவென்

றுறுதிகொண் டுண்மைக்கு நன்மைக்கு நயமுடன்
நித்தியமாந் தன்மைக்கு

மிறுதிவரை யிசைந்துநின் றவமொன்றி வரு [மூன்றன்

ஸாம்ராஜ்ய சித்திபெறவும்

அறுதியி லாத்மசுக மளிக்குமொரு ஸ்வதந்திரப்
பேறுபெற வேண்டினோமாய்,—

VI.

கதிபெற நினைத்துஜக யாத்திரை துவக்கினோம்
தலைவநீ சரணமென்றே

விதிவலி புயலெனக் கிளம்பியச் சுறுத்தவும்
தியனவே செய்யும் அலை

கதிசே ரொட்டாது போல்மோதி யார்ப்பரி [க்கவ

மிளைக்காது களைக்காது

மதிவலியோ டுனதுவலி பெரிதெனவே கதிபெற [யாம்

வலித்தோட்டி வழியேகிறோம்.

VII.

வழியிலே யாபத்து வலிபெற்று வதெனுமச்சம்
மிச்சமாய் நின்றெமை

வழிமறித்துக் கொண்டதன் வருத்தத்தைக் [கொடுக்கவே

காத்துக்கொண் டிருக்கு’ தையே!

பழிவாங்கு புயல்மத்தி தனிலுறை சத்தம்வாய்
கொண்டுரை பேசுமாபோல்

இழிவின்றி டேயச்சந் தவிர்ப்பான்போ லடயக் [குரல்கொண்

டெமைமுந்த வழைக்கையிலே,

VIII.

உடனுற்று வாராமல் தயங்கித் தவிப்போர்க்குத்
தாணியில்நாம் தங்கிநிற்கலாமோ!

உடனுற்ற காலத்தை யச்சம்லஜ்ஜை பற்ற [விட்டொ

மவமே கழிக்கலாமோ]

திடனுற்றுத் தெய்வசங் கல்பமே நாங்கொண்ட
சங்கல்ப மெனத்தேறியே

உடனுற்ற தலைப்பாரம் தெய்வசங் கல்பத்தா
லுன்பார மெனவகித்தே—

IX.

இறப்பது மிருப்பதுமுன்னருள் வெளியிலல்லால்
வேறிலையென் றுறுதிகொண்டு

துறப்பது வெறுப்பது முன்னருள் வெளி [கண்டார்க்

கிலையென மனந்தேறியே

மறப்புட னினைப்புக்காளாஞ் சிற்றுயிர் பற்றி [நிற்பார்

சீர்பெறச் செய்யநாடலின்றிச்

சிறப்பது தானில்லாத் தன்மையுண் டொழுகு [வார்

யபயம் நாடாமலே—

Make us strong that our worship may flower in love and bear fruit in work;

Make us strong that we may not insult the weak and the fallen,

That we may hold our love high where all things around us are wooing the dust.

They fight and kill for self-love, giving it Thy name,

They fight for hunger that thrives on brother's flesh,

They fight against Thy anger and die.

But let us stand firm and suffer with strength

For the true, for the good, for the eternal in Man,

For Thy Kigdom which is the union of hearts,

For the freedom which his of the Soul.

Our voyage is begun, Captain,

We bow too Thee!

The storm howls and the waves are wicked and wild,

But we sail on.

The menace of danger waits in the way.

To yield to Thee its offerings of pain,

And a voice in the heart of the tempest cries,

Come to conquer fear!

Let us not linger to look back for the laggards,



X.

“அன்றே யென்றன் ஆவியும் பொருளு
முடைமை யெல்லாமும்

“குன்றே யனையாய்! எனையாட் கொண்ட
போதே கொண்டிலையோ!

“இன்றோ ரிடையூ றெனக்குண்டோ!” வென்றுர்
வழிபற்றி யாம்நடப்போம்!

“நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நாமோவிதற்கு நாயகமே!”

Or benumb the quickening hours with dread and doubt,

For thy time is our time and Thy burden is our own, and life and death are but Thy breath playing upon the eternal sea of life.

Let us not wear our hearts away in picking small help and taking slow count of friends,

Let us know more than all else that Thou art with us and we are Thine for ever.

SIR RABINDRANATH TAGORE.

---

## Sweet Potato.

## சர்க்கரை வள்ளிக்கிழங்கு.

இது கிழங்கு வர்க்கத்தைச் சேர்ந்தது. ஜனங்கள் சாதாரணமாக இதைக் கறிகாய்க்கு உபயோகப்படுத்துகிறார்கள். இதில் இரண்டு வகைகள் உள்ளன: ஒன்று சிவப்புக் கிழங்கு, மற்றொன்று வெள்ளைக் கிழங்கு. இவற்றில் வெள்ளை கிழங்கில்தான் மாசூல் அதிகம் கிடைக்கும். சிவப்பில் மாசூல் குறைவானாலும் கிழங்கானது சர்க்கரையைப்போல் மிகவும் இனிமையாயிருக்கும்; கொடிகள் அதிகமாகப் படரும்.

### பூமி.

இந்தப் பயிரானது நல்ல வடிகால் வசதியுள்ள மணல் சம்பந்தமான பூமியில் நன்றாய் வளரும்; தோட்டக்கால் பூமிகளிலும் பயிர் செய்யலாம். மணற் பூமியில் இப்பயிரைச் சாகுபடி செய்வதாயிருந்தால் அதிகமான எருப்போடவேண்டும்.

### தகுந்த எருக்கள்.

இப்பயிருக்கு சாம்பல் எருவே முக்கியமானது. ஒரு ஏக்கருக்கு 30 வண்டிகளுக்குக் குறையாமல் எருப் போடவேண்டும். எருவுக்காக ஆட்டுக்கிடையும் மடக்கலாம். அவரி முதலிய பசுந்தாள் உரம் இடுவதும் நன்று; இதற்கு பசுந்தாள் பயிரைச்சாகுபடி செய்து அதை அப்படியே அதில் உழுதுவிடலாம்.

### நிலத்தைப் பண்படுத்தல்.

பயிர் செய்யப்படும் பூமியை ஜூலை ஆகஸ்டு மாதங்களில் நன்றாய் பலதடவைகளிலும் ஆழ உழுது, மேடு பள்ளங்களை நிரவிப் புல்பூண்டுகளில்லாமல் சுத்தம் செய்யவேண்டும். பிறகு வேண்டியவளவு உரம் பாட்டு மறுசால் உழுது பாத்திகளாகக் கட்டவேண்டும்; அல்லது முகடுகள் போடுவதும் நல்லது. இதன் பிறகே கொடிகளை நடவேண்டும். பாத்திகள் கட்டுவதாயிருந்தால், 10 அடி நீளமும் 5 அடி அகலமும், முகடுகளாயிருந்தால், 10 அடி நீளம் வேண்டும். ஒவ்வொன்றுக்கொன்று 2½ அடி வித்தியாசத்தில் இருக்கவேண்டும். பாத்திகளில் சாகுபடி செய்வதைக்காட்டிலும் முகடுகளில் போடுவதுதான் உத்தமம்.

### நாற்றங்கால்.

மாசூல் எடுக்கும்போது நல்ல முதிர்ந்த கொடிகளை அறுத்து மூன்று கணுக்களுடைய துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவேண்டும். பிறகு இவற்றை இரண்டு கணுக்கள் தரையிலும் ஒன்று மேலும் இருக்கும்படி நட்டுத் தண்ணீர் ஊற்றிவரவேண்டும். நாற்றங்காலானது எப்போதும் தண்ணீர்க்கு அருகிலேயே யிருப்பதுதான் நல்லது. இவ்விதம் நடப்பட்டவை செழுமை-

யாக வளர்ந்து பரவிக்கொண்டிருக்கும். இவைகளிலிருந்துதான் பதியன்கள் நறுக்கப்பட்டு ஏற்கெனவே தயார் செய்யப்பட்டிருக்கும் பூமியில் நடப்படவேண்டும்.

### விதைப்பு.

ஏக்கருக்கு 15,000 முதல் 20,000 பதியன்கள்வரை நடப் போதுமானது. பாத்திகளில் நடப்படும் பதியன்களின் வரிசைகளுக்கு இடையே 1½ அடி தூரம் இருக்கவேண்டும். ஒவ்வொரு பதியனுக்கும் மத்தியில் ஒரு அடி தூரம் வித்தியாசம் இருக்கவேண்டும். முகடுகளிலும் ஒரு அடிக்கொன்றுதான் நடப்படுகின்றது. 12 அடி நீளமும் 6 அடி அகலமுமுள்ள ஒரு பாத்தியில் சுமார் நூறு பதியன்கள்வரை நடலாம்.

### களையெடுத்தல் முதலியன.

முகடுகளில் பாத்திகளுக்குப்போல் அவ்வளவு அதிகமாய்த் தண்ணீர் பாய்ச்சவேண்டியதில்லை. இவற்றில், சில சமயங்களில், அதிகமான தண்ணீர் பாய்ச்சலால் பயிர்களும் கெட்டுப்போவதில்லை. மழை இல்லாவிடில் வாரத்திற்கு ஒரு முறையாவது பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டும். பயிர் பூமியில் நன்கு வளரும்வரை களைகளைப் பரவ வொட்டாமல் அவ்வப்போது சுத்தம் செய்யவேண்டும். பயிர் படர ஆரம்பிக்கும்போது அதன் கொடிகளை அடிக்கடி தூக்கிவிட்டு, கண்டவிடங்களில் வேர் ஊன்றாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிடில், பாகனத்தினால் ஒவ்வொரு கணுவிலும் வேர் ஊன்றிக் கிழங்கு சிறுத்துப்போகும்.

### அறுவடை.

இப்பயிரானது நாலைந்து மாதங்களில் பலன் தரக்கூடியது. பயிரிலிருந்து இலைகள் பழுத்து உதிர்ந்தாலும், கணுக்களிடத்தில் கெட்டியாக நார் இருந்தாலும், கிழங்கை வெட்டிக் கத்தியால் அறுத்து, அது கறுப்பு நிறம் அடையாமலிருந்தாலும் பயிர் முற்றிவிட்டதென்று அறிந்து கொள்ளலாம். கொடிகளில் அடுத்த நாற்றங்கால் பயிருக்குத் தேவையான பதியன்களைத் தயார் செய்துகொண்டு மீதியானவற்றைக் கால்நடைகளுக்கு ஆகாரமாக உபயோகிக்கலாம். கிழங்குகளை மண்வெட்டியால் வெட்டி எடுக்க வேண்டும். ஏக்கர் 1க்குச் சுமார் ரூ. 200 முதல் ரூ. 300 மதிப்புள்ள கிழங்குகள் கிடைக்கலாம்.

---

## The Late Sir William Wedderburn.

## காலஞ்சென்ற ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்.

இந்தியரின் மேன்மைக்காகப் பலதுறைகளிலும் சலியாது உழைத்துவந்த ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் காலகதியடைந்து விட்டாரென்பதைக் கேட்க நாம் மிகவும் வியசனிக்கிறோம். அவர் அதிகாரப்பதவியில் இருந்தபோது இந்தியர்களுக்கு எந்தெந்த வழிகளில் நன்மை செய்யக்கூடுமோ, அவற்றையெல்லாம் சிரத்தையுடன் செய்து வந்தார். 1885-ம் வருஷத்தில் காங்கிரஸ் மகா சபையைக் கூட்டிவைக்க உழைத்தவர்களுள் அவர் ஒருவராக விளங்கினார். கடைசியாக, 1887-ம் வருஷத்தில் தமது உத்தியோகத்திலிருந்து நீங்கி இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கும் இதுகால பரியந்தம் இந்தியாவின் முற்போக்குக்கென்றே அல்லும் பகலும் மெய்வருத்தம் பாராமல் உழைத்துவந்த அவருக்கு நாம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் ஸ்காட்லாந்திலுள்ள எடின்பரோவென்னும் நகரில் 1838-ம் வருஷம் மார்ச்சுமாதம் 25ந்தேதி ஜனனமானார். அவருடைய வம்சத்தினர் பல நூற்றாண்டுகளாக ராஜஸேவையிலேயே சிறந்து விளங்கியவர்கள். அவரது முன்னோர்கள் நமது இராஜாங்கத்தில் பற்பல உத்தியோகங்களை வகித்துள்ளார்கள். எவ்வாறெனில்: அவருடைய தந்தை பம்பாய் ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகத்தில் 1807-ம்



வருஷம் அமர்ந்து 30 வருஷகாலம் வரை வேலைபார்த்து வந்தார். அவரது தமையனார் 1841-ம் வருஷத்தில் கல்கத்தா ஸிவில் ஸர்விஸ் உத்தியோகத்தில் அமர்ந்து தாம் இறக்குமளவும் வேலைபார்த்து வந்தார். நமது வெட்டர்பர்னும் அதே உத்தியோகத்தில் அமர்ந்து 1860-ம் வருஷம் முதல் 1887-ம் வருஷம்வரை வேலையைப் பார்த்து வந்தார். ஆதலால், இந்தியாவுக்கும் வெட்டர்பர்னது வம்சத்தினருக்கும் ஒரு நூற்றாண்டுக்கு முன்னிருந்தே சம்பந்தமிருந்து வந்திருக்கின்றதென்பது நன்கு புலப்படுகிறது. இந்தியரின் உண்மையான கோரிக்கைகளையும் ஆவல்களையும் நன்கு உணர்ந்த வில்லியம், "சென்ற இருபத்தைந்து வருஷகாலமாய் நான் உங்களுடைய உப்பைத் தின்றிருக்கிறேன். நான் உயிரோடு இருக்கும்வரை உங்களுக்கு என்னால் கூடிய ஊழியத்தைச் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்று சொல்லியிருப்பது அவருடைய உதார குணத்தையும் பெருந்தன்மையையும் வெளிப்படையாகக் காட்டுகின்றதல்லவா?

ஸர் வில்லியம் ராஜசேவையிலிருந்தபோது பற்பல பதவிகளை வகித்துவந்தார். அவர் கவர்ன்மெண்டின் உதவிக் காரியதரிசியாய் முதலில் இருந்தார்; பிறகு ஹைகோர்டு ரெஜிஸ்ட்ரார் என்ற பதவியிலும், அதன்பிறகு ஸிந்துப் பிரதேசத்தின் தலைமை அதிகாரப் பதவியிலும் இருந்தார்; ஹைகோர்ட்டு ஜட்ஜி பதவியையும் வகித்து வந்தார். அவர் 1887-ம் வருஷத்தில் ராஜாங்க ஸேவையிலிருந்து விலகிக்கொண்டபோது, கவர்ன்மெண்டார் அவரது ஊழியத்தை மெச்சி, இந்தியர்களின் நிலைமையை உயர்த்துவதற்கு அவர் அதிக ஆவலுள்ளவராயிருந்தாரெனக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தியமக்களும் அவரது ஊழியத்தை மதிப்பதற்கு அறிகுறியாக அவருக்கு ஒரு பணமுடிப்பைக் கொடுத்தார்கள். ஆனால், அவர் அதைத் தமது நன்மைக்கு உபயோகப்படுத்திக்கொள்ளாமல், பம்பாய் இராஜதானிச்சங்கத்திற்காக அதன் பெரும் பாகத்தைக் கொடுத்துவிட்டார். இந்தியர்களிடத்தில் அவருக்கு எவ்வளவு அபிமானமுள்ளதென்பதை, அவர் தமது சொந்தப்பணத்திலிருந்து சுமார் ஒரு லட்சம் ரூபாய்வரை இந்தியரின்பொருட்டுச் செலவழித்திருப்பதிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

இந்திய தேசீய சபைகளின் விஷயமாய் அவர் செய்திருக்கும் ஊழியம் கொஞ்சமன்று. காங்கிரஸ் மகா சபை ஏற்பட்ட 1885-ம் வருஷம் முதற்கொண்டு அவர் அதில் உழைத்துவந்திருக்கிறார். ஸர் வில்லியம் தமது உத்தியோகத்திலிருந்து விலகி இங்கிலாந்திற்குச் சென்று விட்டிருந்தாலும், 1889-ம் வருஷம் காங்கிரஸ் மகா சபையில் அக்கிராசனம் வகிக்க இந்தியாவிற்கு விஜயம் செய்தார். இதன் பிறகு 1903-ம் வருஷத்தில் ஸர் காட்டன் அக்கிராசனம் வகித்தபோதும், அவருடன் ஸர் வில்லியமும் இரண்டாவது தடவையாக இந்தியாவுக்கு விஜயஞ்செய்தார். இன்னும், இங்கிலாந்திலுள்ள காங்கிரஸ் கமிட்டிக்கு நெடுங்காலம் தலைவராகவும், அங்கு இந்தியாவின் விஷயமாய்ப் பிரசார வேலையை மேற்கொண்டவராகவும், பார்லிமெண்டிலும் இன்னும் மற்ற இடங்களிலும் இந்திய விஷயங்கள் நன்கு கவனிக்கப்படுவதற்கு மூலபுருஷராகவுமிருந்தவரான ஸர் வில்லியம் வெட்டர்பர்னைவிட மேலான உத்தமரை நாம் இனி காண்பதரிது.

---

### புதிதாய் வந்த புஸ்தகங்கள்.

| | |
|---|---|
| அமிர்சிங் — ஓர் இனிய தமிழ் நாவல். எஸ். ஏ. இராமசாமி ஐயர் எழுதியது. | 0 12 0 |
| ஞானசுந்தரம் — மாயவரம் வக்கீல் அ. நடேசபிள்ளை அவர்கள் எழுதியது; ஓர் இனிய தமிழ் நாவல். | 0 8 0 |
| வனஜாக்ஷி — ஓர் ஜனசாரத்தமிழ் நாடகம்; வாகவி-திரு. அ. சுப்பிரமணிய பாரதியார் எழுதியது. | 0 8 0 |
| கள்வர் கவர்ந்த கலியாணப்பெண் — எம். எஸ். கிருஷ்ணசாமி ஐயர் எழுதியது. | 0 6 0 |
| குணசீலன் — வி. எ. கோபாலகிருஷ்ண ஐயர் இயற்றிய ஓர் இனிய தமிழ் நாடகம். | 0 10 0 |

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
வேலூர். (தென்னிந்தியா.)

## Evil effects of Overeating.

By Pandit P. K. Sreenivasachariar.

## அமிதமாக உண்ணுதலின் கேடுகிகள்.

"மீதூண் விரும்பேல்" என்பது, அன்னையென்னத்தக்க ஔவையாரின் அருளிச் செயலாகிய ஆத்திசூடியில் உள்ள ஓர் அமுதமொழி. அமிதமாக உண்ணுதலை விரும்பாதே யென்பது இதன் பொருள்: அளவறிந்து உண் என்பது கருத்து.

நோயற்று நீடித்து உயிர்வாழ விரும்புகிறவர்கள் அளவு கடந்து உண்ணுவதைவிடவேண்டும். அதிகமாகத்தின்று நோயை வருவித்துக் கொள்வானேன்? வைத்தியனையும் மருந்தையும் தேடுவானேன்? ஒவ்வொருவர்க்கும் இவ்வளவு ஆஹாரம் உட்கொண்டால் ஜீர்ணமாகு மென்பதனை அறிந்துகொள்ளத்தக்க அறிவு இருக்கவும், ஏன் அதிகமாக உண்டு சிரமப்படவேண்டும்? சிலர் அஹோராத்திரம் உண்டே கழிக்கின்றனர். நல்லன இயற்றி நற்பேறுகளைப் பெறுதற்பொருட்டு இனிது உயிர் வாழ்ந்திருப்பதற்காக உண்ணுகின்றோமேயன்றி, இடைவிடாது உண்ணுதற்காகவா உயிர் வாழ்கின்றோம்? அரைக்கும் இயந்திரம்போலச் சிலர் வாய் ஓயாது அசையத் தின்றுகொண்டேயிருப்பதனால், "அவிழ்ச்சுவையே யறிந்து அரனடிபரவுந், தமிழ்ச்சுவை யறியாத் தம்பங்க" ளாயிருக்கின்றனர். இத்தகையோர் கல்வி, கேள்வி, தானம், தியானம், தவம் முதலிய இன்பங்களை அறியாமல் வாணாளை வீணாளாகப் போக்கிவிடுகின்றனர்; அன்றியும் இனிது உலாவவும், உத்ஸாஹத்துடன் நலம் பெறுந் தொழில்களைச் செய்யவும், நுண்ணறிவுடன் நுணுக்கங்களை அறியவும் திறமற்று, விகாரமாய் அருவருக்கத் தக்க ஸ்தூலதேகமும் மந்தமதியும் பொருந்தி அவமதிப்புக்கு இலக்காகின்றனர்.

சுறுசுறப்பு வாய்ந்த லக்ஷணமுள்ள மென்மையாய்ப் பலம் பொருந்திய தேகம் படைத்திருப்பது ஓர் சிறப்பு. லக்ஷணமுள்ள மென்மையான வலிய உடம்பு அளவறிந்துண்பவர்க்குத்தான் உண்டு. இயற்கையில் பலஹீனத்தன்மை பொருந்தியவர்கள் மகளிர். முக்கியமாக அவர்கள் அளவுகடந்து உண்ணலாகாது. "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு" என்று மற்றோரிடத்தில் நம் அன்னை உரைத்தருளியமை கவனிக்கத்தக்கது. அதிகமாக உண்டால் அநுதினம் உண்பவர், ஆண்மக்களேயாயினும், பெண்மக்களேயாயினும் காண்பதற்கினிய அழகிய தோற்றம் பெறுதொழிகின்றனர். சான்றவரைக் குணத்தாலும் தோற்றத்தாலும் நலமுறக் கவர்ந்துகொண்டு சீர் பெறச்செய்தல் மக்கள் கடமை யென்க.

சிலர் சமயமென்பதின்றித் தீனி கிடைத்தாற் போதும்; உடனே மிதமின்றித் தின்று விடுகிறார்கள். சிலர் அதிகமாகத் தின்றுவிட்டு, இப்புறம் அப்புறம் அசையக்கூட முடியாமல், இரையை அளவின்றி விழுங்கிவிட்டுச் செத்தாற்போலக் கிடக்கும் மலைப்பாம்புபோல மயங்கிக் கிடக்கிறார்கள். சிலர் அமிதமாக உண்டவை சீர்ணித்தற்காகப் புரளுகிறார்கள். சிலர் உணவு சும்மா கிடைத்தால் வரம்பின்றிப் புசித்து, பேதி முதலிய தேக பீடைகளோடு தவிக்கின்றனர். அதிகத் தின்றியில் சிலர் மரணமும் அடைகின்றார்கள். மிதமிஞ்சி அன்னம் புசிப்போரிடத்தில் மூதேவி வாழ்வதாகப் பழைய நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. கூடியவரையில் சமாராதனைகளிலும் நிமந்தணத்திலும் அந்தணாதியோர் அதிகம் உண்ணுதற்குச் சந்தர்ப்பம் நேர்ந்தாலும், அளவறிந்து புசிக்கவேண்டும். இரைப்பை மிக மென்மையானது; மிதமின்றி உண்டால் அது விண்டு விரிந்து சீர்கெட்டுப் போகும் என்று அறியாதபேதை மாக்களும் உளர். உணவை வச்சீர்ணம் செய்விக்கவேண்டிய மெல்லிய உறுப்புக்கள் அதிக வேலை செய்யும்படி நேர்ந்தால், பிராணஹானிவிரைவில் விளையும்



ரைப்பைக்குச் சுவையாயிருக்கிறதென்று அளவு கடந்து தீனிதின்னும் ஜனங்கள், வயிறு சுரைக் குடுக்கைபோல விகாரமாய்ப் பருத்துத்தோன்றக் குண்டோதரர்களாய் இருக்கின்றனர்.

அறுசுவைகளில் எதுவும் மிதமிஞ்சி இருக்கக் கூடாது; அதனை மிதமிஞ்சி உண்ணலுமாகாது. முக்கியமாக உப்பும் தித்திப்பும் மிகுந்த உணவுகளை அளவு கடந்து உண்பவர் விரைவில் நோய்க்குள்ளாகின்றனர். காப்பி தேயிலை என்னுமிவற்றின் பானங்களை மிதமிஞ்சி அருந்தலாகாது; அன்றியும், அவற்றில் தித்திப்பை மிதங்கடந்து இட்டுக் குடித்தலும் ஆகாது. சில இனத்தார் ஒரு நாளைக்கு ஆறுதரம் எட்டுத்தரம் உண்ணுகிறார்களென்று கேள்வி. இந்தச் சாப்பாட்டிராமர்கள் அரிய பெரிய இம்மை மறுமைக்கான நற்காரியங்களைச் செய்தல் ஒருபோதுமின்று. சிலவகுப்பார் தீனிக்காகவே அதிகப்பணம் செலவிட்டுத் தம்பொருளிழந்து வறியவர்களாகி, முன் நன்றாகத் தின்ற வழக்கத்தால் அத்தின்றியைவிடமாட்டாமல்கையிற் பொருளின்மையால் கடன் வாங்கி வாங்கி அக்கடனென்னும் கடலில் ஆழ்ந்து கரைகாணாது பெருந்துயருகின்றனர். கல்வி, கேள்வி, பரோபகாரம் முதலியவற்றினால் ஒருவன் உண்மையான இன்பம் பெறலாமேயன்றி, உண்ணுவதனால் உண்மையான இன்பம் பெறுதலென்பது உண்டோ? இதனாலேயே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்,

> "செவிக் குணவில்லாத போழ்து சிறிது
> வயிற்றுக்கும் ஈயப்படும்" என்றார்.

அங்கு, பரிமேலழகரென்னும் அதன் உரையாசிரியர், கேள்வி சுவை மிகுந்ததும், பின்னே பயன் தருவதுமாதலால் அத்தகைய கேள்வி உள்ளபொழுது உணவு வெறுக்கப்படுதலால் 'இல்லாத போழ்து' என்றும், உணவு பெரிதானால் கேடுதல் துன்பத்தோடு நோயும் காமமும் அதிகமாதலால் 'சிறிது' என்றும், அப்படி சிறிது உண்ணுவதுதான் எதற்காகவென்றால் பின் உயிர் வாழ்ந்திருந்து நாற்பொருள்களைக் கேட்டற்பொருட்டாதலால், 'ஈயப்படும்' என்றும் நாயனார் கூறுபாடாகக் காட்டினார்; அன்றியும், வயிற்றின் இழிவு தோன்ற 'ஈயப்படும்' என்று இழிவு குறிக்கும் ஈ என்னும் வினையை வைத்தாரென்றும் உரைத்தார்.

கல்விகேள்விகளாகிய நல்லுணவையுடையோரன்றி மற்றைய உணவை வரம்பின்றி உண்போர் அறிவால் நிறைந்த சான்றோராகார். மிதமாக உண்பவர் துன்பங் காணாமல் இன்பத்தையே அறிவாராதலால், அவர்களைத் தேவர்களென்றும் கூறலாம். காதால் நுகரப்படும் குணமும் அலங்காரமுமாகிய சொற்சுவையையும், சிங்காரம், நகை, கருணை, வீரம், உருத்திரம், அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தம் என்னும் பொருட் சுவையையும் உணராமல், வாயால் நுகரப்படும் அறுசுவைகளையே மிகுதியாக உடைய ஜனங்கள் செத்தால் நஷ்டமும் வாழ்ந்தால் லாபமும் இல்லையென்னுங் கருத்துத் தோன்றத் திருவள்ளுவ நாயனார்,

> "செவியிற்சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
> அவியினும் வாழினுமென்" னென்றார்.

மனமும் மொழியும் மெய்யும் செய்யும் தொழில்கள் மிகுந்தால் பிணி வருவதுபோலவே, உணவு மிகுதலாலும் பிணி உண்டாமென்பதை நாயனார் 'மருந்து' என்னும் அதிகாரத்தில் நன்றாகக் கூறினார். அச்செய்யுள்களாவன:—

> "மிகினும் குறையினும் நோய் செய்யும்; நூலோர்
> வளி முதலா வெண்ணிய மூன்று.

(இதன் பொருள்): உணவும் மனமொழியெய்களின் செயல்களும் ஒருவனது பகுதிக்கு ஒத்த அளவாக அல்லாமல் அதில் மிகுந்தாலும் குறைந்தாலும், ஆயுர்வேதமுடையவர்களால் வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னப்படும் மூன்று நோயும் அவனுக்குத் துன்பஞ் செய்யும் (என்பதாம்.)

> "மருந்தெனவேண்டாவாம் யாக்கைக்கு; அருந்தியது
> அற்றது போற்றியுணின்."

(இதன்பொருள்): ஒருவன் முன்னே உண்டது ஜீர்ணமாய் அற்ற விதத்தை, தேகம் இலேசாயிருப்பது, பரிசுத்தம், அவயவங்கள் வேலைகள் செய்வதற்கு உரியவையாதல், பசி மிகுதல் முதலிய அடையாளங்களாலே தெளிவாக

அறிந்துகொண்டு, பிறகு உண்ணுவானானால், அவன் தேகத்துக்கு மருந்தென்று வேறு வேண்டாவாம். (என்பதாம்.)

"அற்றால் அளவறிந்துண்க ; அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்குமாறு".

(இதன் பொருள்): கோடானுகோடியாகிய மற்ற தேசங்களில் தப்பிப் பெறுவதற்கருமையான இந்த மானிட தேகத்தைப் பெற்றால், அதை நெடுங்காலங்கொண்டு செலுத்துவதற்கு வழி அது ஆசையினால், முன்னே உண்டது சீர்ணித்துத் தீர்ந்தால், பின்பு உண்பதைச் சீர்ணித்துத் திருமளவை அறிந்து அவ்வளவாகவே உண்ணவேண்டும் (என்பதாம்.)

இம்மை மறுமை வீடு பேறுகளை அடையக்கூடியது இத்தேகமொன்றேயாதலால், இது பெறுவது அரிது என்பது தோன்ற, 'உடம்பு பெற்றான்' என்றும், இத்தேகம் நீடித்து நின்றால் அந்த இம்மை மறுமை வீடு பேறுகளை மிகுதியாகச் செய்து கொள்ளலாமாதலால், 'நெடிதுய்க்குமாறு' என்றுங் கூறியமை கவனிக்கத்தக்கது.

உண்டது அற்றாலும் அதன் பயனாகிய ரஸம் அறாது ; ஆதலால், அதுவும் அறவேண்டும். அதுவும் அற்ற விஷயம் மிகவும் பசியெடுத்தால் அறியப்படும். அப்போதுதான் உண்ணவேண்டும். அல்லாமலும் உண்பவன்தன்னது தேகவாசிக்கு உணவு மாறுபடக்கூடாது; காலவியல்போடு மாறுபடவுங்கூடாது; சுவை வீரியங்களினால் தமக்குள் மாறுபடாமலும் இருக்கவேண்டும். அவையாவன:—முறையே வாதம், பித்தம், சிலேஷ்மம் என்னும் இவற்றாலாகிய பகுதிக்குத் தகாதவற்றைச் செய்வனவாதலும், வெயிற்காலம் மழைக்காலம் முதலிய பெரும்பொழுதும், காலை நடுப்பகல் முதலிய சிறுபொழுதுகளும் என்னும் காலவேறுபாடுகளில் ஒன்றுக்கு ஆனவை மற்றொன்றிற்கு ஆகாமையும், தேனும் நெய்யும் தமக்குள் ஒத்து விஷமாவது போல்வனவுமாம். இவற்றையெல்லாம் கவனிக்காமல் மனம் கொண்டபடி தின்றால், அதனால் வியாதியும் அகாலமரணமும் வரும். இதனை, நாயனார்,

"அற்றதறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து."

என்னும் குறளில் காட்டினார்.

மற்றும்,

"மாறுபாடில்லாத வுண்டி மறுத்துண்ணின்,
ஊறு பாடில்லை யுயிர்க்கு"

என்றமை காண்க.

(இதன் பொருள்) : மேற்கூறிய மூவகை மாறுபாடுகளும் இல்லாத உணவை, தன் மனம் வேண்டிய அளவாலல்லாமல் நோய் வாராத அளவினால் ஒருவன் உண்ணுவானானால், அவனுயிர்க்கு நோய்களால் துன்பம் உண்டாகாது (என்பதாம்.)

"இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேரிரையான்கண் நோய்."

(இதன் பொருள்.) : உண்டி சுருங்குதலை நல்லதென்று அறிந்து, அப்படியே உண்ணக்கூடிய அளவில் சிறிது குறைய உண்ணுமவனிடத்தில், வாதம் முதலியவை மூன்றும் தம்தம் நிலைமையில் வேறுபடாமையால் மனமும் மொழியும் தேகமும் அவன்வசத்தில் இருத்தலும், அதனால், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் அடைதலுமாகிய இன்பம் நிலைநிற்கும். அவ்வாறுபோல், மிகப் பெரிய இரையை விழுங்குபவனிடத்தில் நோய் நீங்காமல் நிலைநிற்கும். மிதூண் விரும்புமவன் இரையை அளவில்லாமல் எடுத்து அதனால் வருந்தும் மிருகத்தை ஒத்திருப்பதனால், இங்கே நாயனார், 'இரையான்' என்று உரைத்தது கவனிக்கத்தக்கது.

"தீயளவன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயளவின்றிப் படும்"

(இதன் பொருள்): தன் பிரகிருதியையும் அதற்கு ஏற்ற உணவையும் காலத்தையும் ஆராயாமல் வேண்டிய ஒரு உணவை வேண்டிய ஒரு காலத்தில் வயிற்றுப்பசித் தீயளவல்லாமல் ஒருவன் மிகுதியாக உண்ணுவானானால்; அவனிடத்தில் நோய்கள் எல்லையில்லாமல் வளரும். என்றிங்ஙனம் நாயனார் உரைத்தவை காண்க.

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.



# Ancient Stories of South India.

# தென்னிந்திய புராதன கதைகள்.

## ராத்திருடனும் பகல்திருடனும்
## அல்லது
## "திருடனிலும் திருடன் ஸாமாந்ய திருடனா!"

தாராபட்டணம் என்றொரு நகரம் உண்டு. அதில் ராத்திருடன் என்று ஒரு திருடனிருந்தான். அவனுக்கு ஒரு மனைவி உண்டு. அவள் பெயர் ஸுகுணவதி. திருடனென்றாலும் திருடன் அவன் லேசான திருடனல்லன். அஸஹாயசூரன். ஒன்று தெரிந்தது ஒன்று தெரியாதது என்பது அவனிடம் கிடையாது. அக்னிஸ்தம்பனம், ஜலஸ்தம்பனம், உச்சாடனம், மோஹனம், மாரணம் என்னும் பெரியபெரிய ஸமாசாரங்களெல்லாம் தெரிந்தவன். எப்பேர்ப்பட்ட ஸாமர்த்யவானாலும் அவனுக்கு ஈடாகமாட்டான். அவன் எத்தனையோ வீடுகளில் கன்னமிட்டுக் களவாடியிருக்கிறான். ஒரு ஸமயமாவது அவன் அதிகாரிகள் கையில் அகப்பட்டான் என்பது கிடையாது. அந்தப் பட்டணம், அந்த ப்ராந்த்யமுழுவதும் அவன் கன்னமிடாத பணக்காரன் வீடு ஒன்றுகூட இல்லை. அவன் வீட்டைப்பார்த்தால் மஹாராஜா அரண்மனையாகிரித்தான் இருந்தது. அவ்வளவு வைபவம் அவனுக்கு உண்டானவிதம் இன்னதென்று ஒருவரும் அறியார். அவன் செய்யும் கணக்கற்ற தானதர்மங்களைப் பார்த்து எல்லோரும் ஆச்சர்யப்பட்டார்கள். அவனிடம் எப்போதும் பணத்துக்குக் குறைவில்லை. அதுவென்ன குறையில்லாவிட்டால் வேறென்ன குறையிருக்கிறது? ஸகல ஸம்பத்துக்களும் அவனிடம் நிறைந்திருந்தன. ஆனால் அவனுக்கு ஒரு குறைமாத்ரம் நீங்காக் குறையாயிருந்தது. அது ஆண்பெண் இருவர்களுக்கும் ஸதாஸர்வகாலமும் விசாரமாயிருந்தது. அது என்ன விசாரம்? ஒரே விசாரந்தான்; பிள்ளையில்லாத விசாரந்தான்; இப்படியே வெகுகாலம் கழிந்தது; தெய்வம் கண்திறக்கவில்லை. இப்படியிருக்கையில் ஒருநாள் அவர்கள் வீட்டுக்கு ஒரு பைராகி வந்தான். ஸுகுணவதி உள்ளேயிருந்து அரிசியெடுத்துக்கொண்டுவந்தாள். அவளைப்பார்த்து அந்தப்பைராகி, "அம்மா, உனக்குநல்ல அதிர்ஷ்டம் உண்டாகப்போகிறது, கொஞ்சகாலைக்கெல்லாம் உனக்கு அதிவிவேகியான ஒரு பிள்ளை பிறக்கப்போகிறது. இந்தா, இந்த தாழ்த்தியைக் கட்டிக்கொள்" என்றான்.

அதைக்கேட்டவுடன் அவளுக்கு எவ்வளவோ ஸந்தோஷமுண்டாயிற்று. பைராகிக்கு உபசாரம் ஜாஸ்தியாகிவிட்டது. "எனக்குப் பிள்ளை மாத்திரம் பிறந்துவிட்டால் நீர் என்னவெல்லாம் செய்யச்சொல்லுகிறீர்களோ அதையெல்லாம் செய்கிறேன்." என்று சொன்னாள். "உனக்குக் குழந்தைபிறந்த இருபத்தோராம் நாள் மறுபடியும் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் பைராகி போய்விட்டான்.

உடனே ஸுகுணவதி நடந்த விஷயங்களையெல்லாம் தன் புருஷனிடம் சொன்னாள். அவன் எல்லாவற்றையும் 'உம்' கொடுத்துக்கேட்டான், ஆனால் நம்பமாத்திரமில்லை. இருந்தாலும்; பலன் உண்டானால் உண்டாகலாம், இல்லாவிட்டால் இல்லை, கெடுதிமாத்திரம் ஸம்பவிக்காது என்று தாழ்த்தியைக் கட்டிக்கொள்வதற்குத் தடை சொல்லவில்லை. இவ்வளவாவது பெரியமனது செய்தாரே என்றெண்ணி ஸந்தோஷமடைந்து அவள் பைராகி சொன்னவிதம் தாழ்த்திக்குப் பூஜைசெய்து நல்லமுகூர்த்தம் பார்த்து அதைக் கழுத்தில் கட்டிக்கொண்டாள். அது முதல் கொண்டு ப்ரதிதினமும் அவள் "பைராகி மோசக்காரனல்லன்; மாயக்காரனுமல்லன். அவன் என்னத்துக்காக மோசம் செய்யவேண்டும்? எனக்குப் பிள்ளைபிறக்கும் என்பதில் எள்ளளவேனும் ஸந்தேகமில்லை. அப்புறம் நான் என் சிங்காரக் குழந்தையையெடுத்துக்கொண்டு எனக்கு ஸரிஸமானமான ஸ்த்ரீகள் நடுவில் தலையெடுத்து நடக்கலாம். என் கண்மணிச்செல்வத்தைப் பொன்னூஞ்சலிட்டுத் தாலாட்டுவேன். தங்கக்கின்னத்தில் சாதமெடுத்து மாடியில் நின்று சந்தமா

பார்வைக் காட்டிக்கொண்டே என் சின்ன அப்பனுக்கு ஒவ்வொரு வாயாய் ஊட்டுவேன். என்ன ஆனந்தம்? உண்மையில் அந்த பாக்கியம் எனக்கும் கிடைக்குமா? கிடைக்கும்! கிடைக்கும்!" என்று மனதுக்குள்ளேயே சொல்லிக்கொள்வாள்.

அவள் தபஸும் வீண்போகவில்லை. இரண்டொரு மாதங்களுக்கெல்லாம் கர்ப்பந்தரித்தாள். இனி ஆனந்தத்துக்குக் கேட்பானேன்? ராத்திருடன் கூட பைராகியை ஸ்துதிக்கலானான். அந்த ஆனந்தத்தில் தம்பதிகள் கணக்கற்ற தானதர்மங்கள் செய்யலாயினர். அவர்கள் வீடு தர்மஸத்ரமாய்விட்டது. அநேக தெய்வங்களுக்கு அபிஷேகாதி உத்ஸவங்கள் சிறப்பாக நடத்தினார்கள். ஸகலவிதமான தர்மங்களையெல்லாம் சலிக்காமல் செய்துகொண்டேயிருந்தார்கள். பந்துக்களெல்லாம் விதவிதமான பக்ஷணங்கள் செய்துவந்து கர்ப்பஸ்திரிக்குக் கொடுக்கலாயினர். ஊராரெல்லோரும் அவர்களுடைய அதிர்ஷ்டத்தைக் கொண்டாடினார்கள். கணக்கற்று லக்ஷக்கணக்காய்க் குவிந்துகிடக்கும் த்ரவ்யத்துக்கு ஸரியான விநியோகம் ஏற்பட்டதென்று ஜனங்களெல்லாம் ஸந்தோஷித்தார்கள்.

இப்படியே ஒன்பது மாதமும் பூர்த்தியாயிற்று. பத்தாம்மாதத்தில் ஒருநாள் நல்ல சுபமுகூர்த்தத்தில் ஸுகுணவதிக்கு ஓர் ஆண்பிள்ளை ஜனனமாயிற்று. ராத்திருடன் அத்யந்த ஸந்தோஷமுடையவனாய் அன்றையதினம் ஆயிரம் ஆயிரமாய்த் தானங்கள் செய்தான். புத்ரப்பேறு உண்டான காரணமாய் அவன் தேகம் புளகாங்கிதம் எய்தியது. குழந்தையைப் பார்த்துப்பார்த்து அவன் பொங்கிப்போனான். இவ்வாறாக இருபதுதினங்கள் கழிந்தன. இருபத்தோராம் நாள் உதயமாயிற்று. அன்றையதினம் ஸுகுணவதி "இன்றே பைராகி வருவதாகச் சொன்னார். அந்த மஹாத்மாவின் கடாக்ஷத்தால் தான் இந்தப் புத்ரஸம்பத்து உண்டாயிற்று. அவர் மஹாயோகி, திவ்யஞான ஸம்பன்னர், இன்றையதினம் தப்பாமல் வருவார். பக்திஸ்ரத்தையுடன் அவரை உபசரிக்கவேண்டும்" என்று அதற்கு வேண்டிய ப்ரயத்தனங்களையெல்லாம் செய்யத்தொடங்கினாள்.

ஸமார் ஜாமப்பொழுதுக்கு ஸாக்ஷாத்பரமசிவம்போல் ஜ்வலிக்கும் தேஜஸுடன் பைராகி வந்து ப்ரத்யக்ஷமானார். உடனே ஸுகுணவதி அவருடைய பாதங்களில் நமஸ்கரித்துத் தக்ஷணமே தன் சிங்காரக் குழந்தையைக் கொண்டுவந்து அவருடைய பாதங்களில் அமர்த்தினாள். பைராகியும் ஆசீர்வதித்துக் குழந்தையையெடுத்து தாயார்கையில்கொடுத்து 'அம்மா உன் பர்த்தாவைப் பார்க்கவேண்டும்' என்றார். ஸுகுணவதி தன் கணவனுக்குச் சொல்லியனுப்பினாள். அப்போது அவன் மாடியில் ஏதோ வேலையாயிருந்தான்; இந்த ஸங்கதியைக் கேட்டவுடன் 'எங்கே அந்த மஹாத்மா' வென்று ஒரே ஓட்டமாய் ஓடிவந்தான். 'நமக்குப் பிள்ளை பிக்ஷை கொடுத்த மஹாத்மா இவர்தான்' என்று ஸுகுணவதி பைராகியைக் காண்பித்தாள். உடனே ராத்திருடன் அவர்காலில் ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தான். பைராகி அவனுக்கு ஆசிகூறிப் பூமியினின்றும் எழுப்புவித்தார். அவரை மாடிக்கு அழைத்துப்போய் ஆஸனத்திலமர்த்தித் தம்பதிகளிருவரும் அவருடைய ஸந்நிதியில் வணங்கிநின்றனர்.

கொஞ்சங்கழித்து இராத்திருடன் ஒரு கட்டு நிறைய ரத்னாதி ஆபரணங்களைக் கொண்டுவந்து பைராகியை அங்கீகரித்துக்கொள்ளும்படி வேண்டினான். அவர் "எனக்கேன் இவையெல்லாம்? உன்பக்திக்காக மகிழ்ந்தேன்; எல்லாவற்றையும் உன் வீட்டிலேயே வைத்திரு" என்றுசொல்லி அவைகளைத் திருப்பியனுப்பிவிட்டார். ஸுகுணவதியும் ராத்திருடனும் என்னென்னவிதமாய் வேண்டிக்கொண்டாலும் பைராகி ஒரேபிடிவாதமாய் மாட்டேனென்றார். இவர்களும் அவரை ப்ரார்த்திப்பதைவிடவில்லை. கடைசியில் அவர் "நீங்கள் என்னிடம் இவ்வளவு பக்திவைத்திருப்பதால், வந்த ஏழைகளுக்கெல்லாம் இல்லையென்னாமல் வேண்டியமட்டும் அன்னமிடுங்கள்" என்றார். "நாங்கள் நாள்தோறும் அந்த தர்மம் செய்துவருகிறோம். வேறு ஏதாவது



தாங்கள் கட்டளையிட்டால் செய்யத் தயாராயிருக்கிறோம்." என்று அவர்கள் ப்ரார்த்திக்க, 'அவர்களுக்கு வஸ்த்ரமிடுங்கள்' என்று சொல்லி அவர்கள் தன்னை ஒருவேளைபாவது இருந்து போகும்படி எவ்வளவுதான் வேண்டிக்கொண்டாலும் ஸம்மதிக்காமல் அப்போதே அவர் அவ்விடத்தை விட்டகன்றார். இந்தக்கதையெல்லாம் கேட்ட புத்ரஸந்தானமில்லாத ஸ்த்ரீகள் சிலர் பைராகியைப் பூஜித்து வரன்பெறவேண்டுமென்று காத்துக்கொண்டிருக்க, அவர் அவர்களுடைய கண்ணுக்குப் புலப்படாமல் மாயமாய் மறைந்துவிட்டார்.

தம்பதிகள் பழையப்ரகாரமே ஏழைகளுக்கு அன்னவஸ்த்ரமிட்டு வந்தனர். குழந்தையும் நாளொருமேனியாய் வளர்ந்துவந்தது. காலக்ரமத்தில் அதற்குப் 'பகல்திருடன்' என்று நாமகரணம் செய்தார்கள். குழந்தையும் பார்க்கப் பார்க்கப் பதினாயிரங்கண் வேண்டும் என்னும்படி அழகிலும்முகக்களையிலும் அபிவ்ருத்தியடைந்து வந்தது. ராத்திருடனும் ஆனந்த ஸாகரத்தில் மூழ்கியிருந்தான். இப்படியிருக்கையில் ஒருநாள் அவன் ஏதோ அகஸ்மாத்தாய் கஜானாபக்கம் சென்றான்; கதவைத்திறந்தான்; உள்ளேபார்த்தான். தனமெல்லாம் பெரும்பாலும் செலவழிந்துபோய்க் கஜானா காலியாய்த்தென்பட்டது. இந்தக்கஜானா மறுபடியும் எப்போது நிறையப்போகிறது என்று அவனுக்குத் திகில் உண்டாயிற்று. சற்றுக்கெல்லாம் மனதை ஒருவிதமாய்த் திடப்படுத்திக்கொண்டு பெண்சாதியைப்பார்த்து "நமது சண்மணி புத்ரன் விஷயமாய் நமதுபொக்கசம் காலியாய்விட்டது. அதை இப்போது மறுபடியும் பூர்த்திசெய்ய வேண்டும். ஆகையால் நான் மறுபடியும் என் உத்தியோகத்துக்குப் புறப்பட்டுப்போகிறேன். இதுவரைக்கும் நமது ப்ராந்தியத்தில் ஒரு தனிகனையாவது பாக்கிவைக்காமல் கொள்ளையடித்தாய்விட்டதால், இனி நமதுசோரத்தனத்தைத் தூரதேசஞ்சென்று பரீக்ஷிக்கப்போகிறேன்" என்று சொன்னான்.

அதைக்கேட்டு அவள் வ்யஸனமுற்றவளாய் "தங்களுக்கு இந்த யோசனை உண்டானதேன்? நமது செல்வக்குழந்தை விஷயமாய் எவ்வளவு தனம்தான் செலவழிந்தாலென்ன? என்ன முழுகிப்போயிற்று? மலையத்தனை குவியலில் சிறிது குறைந்தாலென்ன? இல்லை அதிகமாய்த்தான் செலவாய்விட்டாலென்ன? இருக்கும் பணத்தை வைத்துக்கொண்டு நமது பிள்ளை, பேரப்பிள்ளை, அவனுக்கும் பேரப்பிள்ளை காலம்வரைக்கும் ராஜபோகமாய் வாழ்ந்திருக்கலாமே! இப்படியிருக்கத்தாங்கள் இன்னும் பணம் தேடவேண்டிய அவசியமென்ன? இந்த விலையற்ற ரத்னத்தை விட்டுச்செல்ல தங்கள் மனம் எப்படி ஒப்பியது?" என்றுப் பலவாறாய்ப் பர்த்தாவின் எண்ணத்தை மாற்ற முயன்றாள்; ஒன்றும் பயன்படவில்லை. அவன் தான்கொண்ட எண்ணத்தை மாற்றவில்லை; குழந்தையை ஜாக்ரதையாய் வளர்த்துவரும்படி எச்சரித்துவிட்டு மறுநாளே புறப்பட்டுவிட்டான்.

ஸுகுணவதி என்னசெய்வாள், பாவம்! திருடன் பெண்சாதி என்றைக்கும் கைம்பெண்டாட்டி என்பதை எண்ணிச் சோரத்தொழிலாய்த் தூரதேசம் சென்றிருக்கும் தன்புருஷனை நினைத்து மனம் ஒருபக்கம் தவிக்க, இன்னொரு பக்கம் தவம்செய்துப் பெற்றெடுத்த தன் அருமைக்குழந்தையின் மழலைச்சொற்களைக் கேட்டு மனம் ஆனந்தமடைய இவ்வாறாக அவள் ஸந்தோஷமும் துக்கமுமாய்க் காலங்கழித்துவந்தாள். ஒழிந்த வேளைகளிலெல்லாம் அவள் தன் கணவனைக்குறித்துத் தெய்வங்களுக்குவேண்டிக்கொள்வாள். இவ்வாறாக ஒரு வாரம், ஒரு மாதம், ஒரு வருஷகாலமாயிற்று. குழந்தையும் வளர்மதியம்போல் கலைகளோங்கி வளர்ந்துகொண்டேவந்தது. ஒருவருஷம் இரண்டுவருஷமாயிற்று. இரண்டு மூன்றாயிற்று. மூன்று நாலு, நாலுஐந்து என்று காலங்கழிந்துவந்தது.

அவ்வாறு கன்னமிட்டுக்களவாடித்தனங்கைப் பற்றும் உத்தேசத்துடன் தேசாந்தரம் சென்ற ராத்திருடன் த்ராக்ஷாபுரம் என்ற ஊர்போய்ச் சேர்ந்து அங்கே வஸித்திருந்தான். அவ்விடத்தில் நடுத்தெருவில் ஒரு மாடிவீட்டைக் குடிக்கூலிக்குப் பிடித்துக்கொண்டு ஒரு பெரிய ஜமீன்

தாரனைப்போல் நடித்துவந்தான். இப்படி ஒரு மாஸத்துக்கெல்லாம், அவன் பட்டணத்திலுள்ள ரஹஸ்யங்கள், பணக்காரர்கள், அவர்களுடைய ஐஸ்வர்யத்தின் அளவு முதலியவற்றை நன்றாய் அறிந்துகொண்டான். அப்புறம் சில தினங்களுக்கெல்லாம் நல்ல கொழுத்த ஜமீன்தாரன் ஒருவன் வீட்டில் கன்னம் வைத்துக் கல்நகைகள் பலவற்றைக் கவர்ந்துவந்தான். அந்நகைகள் சுமார் இரண்டு லக்ஷம் ரூபாய்க்குக் குறையாது. மறுநாள் எல்லாரோடும் அவனும் ஒன்றும் தெரியாதவனைப்போல் ஜமீன்தார் வீட்டுக்கொள்ளையைப்பற்றி அதிசயிக்கலானான்.

ஒரு மாஸமாய்விட்டது. ஜமீன்தார்வீட்டில் திருடன் நுழைந்ததையும், கணக்கற்றசொத்துக்களை அபகரித்துச்சென்றதையும், அத்திருடன் அகப்படாததையும் எல்லாவற்றையும் ஜனங்கள் அடியோடு மறந்துவிட்டார்கள். அதிகாரிகள் மாத்திரம் திருடனைக் கண்டுபிடிக்கும் முயற்சியை விட்டுவிடவில்லை. அவர்களுடைய ப்ரயத்னங்களையெல்லாம் அப்போதைக்கப்போது கவனமாய்ப் பரிக்ஷித்து அவர்கள் தன்மீது சிறிதேனும் ஸந்தேகப்படாததைக்கண்டு தன் ஸாமர்த்தியத்தை வியந்துகொண்டான். அதிகாரிகள் தான் இல்லையென்றாலும், ஜனங்களுங்கூடத் தன்விஷயமாய் யாதொருவித அநுமானமுங் கொள்ளவில்லையென்பது அவனுக்குப் பரமஸந்தோஷத்தை உண்டுபண்ணியது.

மறுநாள் மறுபடியும் யார்வீட்டையாவது பார்க்கவேண்டுமென்று எண்ணி நகரத்தின் வீதிகளின் வழியாய் போய்க்கொண்டிருக்கையில் தாஸிகள்தெருவில் ஒரு வீட்டுத்திண்ணையில் விடர்களை வசியப்படுத்தவேண்டுமென்று ஒரு வேசி ஸர்வாபரண பூஷிதையாய் உட்கார்ந்திருப்பதைக்கண்டான். ராத்திருடன் பார்த்தவுடன் இரண்டுமூன்று லக்ஷம் ரூபாய் பெறும்படியான அவளுடைய நகைகளை அபகரிக்கவேண்டுமென்று அவனுக்கு எண்ணமுண்டாயிற்று. அன்று ராத்திரியே தகுந்தவேஷம் போட்டுக்கொண்டு வேண்டிய உபகரணங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு ரத்நாவதியென்னும் அந்தவேசிவீட்டில் கன்னம்வைத்து உள்ளே நுழைந்தான். அப்போது ரத்நாவதி இன்னும் தூங்கவில்லை. அன்றையதினம் அவள் வீட்டுக்கு ஒரு பெருந்தனிகன் வந்திருந்தான். அவனை ஸந்தோஷிப்பிப்பதற்காக அவள் நன்றாய்க் குரலெடுத்து அதிசாதுர்யமாய்ப் பாடிக்கொண்டிருந்தாள். அந்தஸ்திதியில் அவளைக்கண்ட ராத்திருடன் அவள்மீது மோகங்கொண்டான். அவளைத் தன்வைப்பாட்டியாகச்செய்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான். அவளிடமிருந்த நகை, தனம் முதலியவற்றைத் திருடவேண்டுமென்ற எண்ணத்தை அடியோடு ஒழித்துவிட்டு வீடுசென்று மறுநாள் அஸ்தமன ஸமயத்துக்கு ஸரியாய் ஒருபெரிய ராஜாவைப்போல் அலங்கரித்துக்கொண்டு அவள் வீட்டுக்கெதிராகச் சென்றான். தெருவில் நின்றுகொண்டிருந்த ரத்நாவதி அவனைக்கண்டவுடன் பணம்பறிப்பதற்கு ஸரியான ஆளென்று நினைத்துத் தன் தாதியைக் கூப்பிட்டுத் தான் அவர்மீது மோகங்கொண்டதாயும், அவர் உடனே வாராவிட்டால் தான் ப்ராணனைவிட்டுவிடுவதாயும் சொல்லியனுப்பினாள். தன் கோரிக்கை நிறைவேறிற்றென்று ஆனந்தித்துக்கொண்டே ராத்திருடன் தாதியுடன் ரத்நாவதி வீட்டுக்குள் சென்றான்.

ரத்நாவதியும் அவளுடைய தாயாரும் அன்றையதினம் முதல்கொண்டு அவனை அநேகவிதமாய் உபசரித்து மரியாதைசெய்து வந்தார்கள். அந்த உபசாரத்தையும், மரியாதையையும், சுகத்தையும் கண்டு ஸகலமும் மறந்து மதிமயங்கி அங்கேயே இருந்துவிட்டான். இப்படி ஒரு வருஷமாய்விட்டது. ராத்திருடன் தான் ஜமீன்தாரன்வீட்டிலிருந்து திருடிவந்தசொத்தையெல்லாம் அவளுக்குக்கொடுத்துவிட்டு அப்போதைக்கப்போது பரமஹம்ஸமாய் வெளியூர்களுக்குப்போய்த் திருடிவந்து ஸ்வேச்சையாய்க் காலங்கழித்துக்கொண்டிருந்தான். இவ்வாறு இன்னொரு வருஷமுமாயிற்று. வீட்டைவிட்டு வந்து இரண்டு வருஷகாலத்துக்கு மேலாயிற்று. ரத்நாவதி வலையிலகப்பட்டுப் பெண்சாதி பிள்ளைகளை அடியோடு மறந்துவிட்டான்.



இரண்டு வருஷமாயிற்று. பர்த்தா திரும்பி வரவில்லை. அவரைப்பற்றியஸமாசாரமொன்றும் தெரியவுமில்லை; வேறென்னவேண்டும்? திருடன் பெண்சாதியவள் ஸுகுணவதி மிகவும் வருத்தப்படலானாள். ஒற்றர்களைக் கூப்பிட்டு அவர்களுக்கு நிறைய பணம் வாரிக்கொடுத்துத் தன் பர்த்தாவின் க்ஷேமாதிசயங்களைக் கண்டறிந்து வரும்படி அவர்களை நாலாதிக்குகளுக்கும் அனுப்பினாள். தூரதேசத்திலிருக்கும் ராத்திருடன் ஸமாசாரங்களெல்லாம் அவளுக்கு எப்படித்தெரியக்கூடும். அவன் சிக்கியிருக்கும் வலையை அவள் எப்படிக்கண்டறிவாள்? தன் புருஷன் அதிகாரிகள் கையிலகப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டோ அல்லது கொலை செய்யப்பட்டோ இருப்பானென்று அநுமானித்து அவள் மனத்துயரப்பட்டாள். புத்திரனில்லாத விசாரத்துக்குப்பதிலாய் இப்போது அவளுக்கு, 'திரும்பி நான் என் கணவனைக் கண்ணால் காண்பேனா?' என்ற விசாரம் மேலிட்டது.

ஒற்றர்கள் எல்லாத்தேசங்களிலும் சுற்றித் திரிந்து கடைசியாய் த்ராக்ஷாபுரம் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் ஒருநாள் வேசியர்தெருவில் போய்க்கொண்டிருக்கும்போது ராத்திருடன் ரத்நாவதியுடன் ஸவாரி போய்வருவதைக் கண்டார்கள். உடனே அவர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டு: "ஐயா, தங்களுடைய பத்னி தங்களைப்பற்றி எவ்வளவோ விசாரப்பட்டுக் கொண்டிருக்கிறாள்; உங்களைத் தேடிக்கொண்டு நாங்கள் எத்தனையோ தேசங்களெல்லாம் அலைந்துதிரிந்தோம்; இன்றைக்குத்தான் நாங்கள் உயிர்பிழைத்தோம்; அப்பப்பா என்ன அலைச்சல்! கால்களெல்லாம் செருப்பாய்த்தேய்ந்துபோய் விட்டன; உங்கள் குமாரன் 'அண்ணா, அண்ணா' என்று உங்களைக்கூப்பிட்டுக்கொண்டிருக்கிறான்; ஆதலால், தாங்கள் இனி க்ஷணமும் தாமதிக்காமல் புறப்படவேண்டும்" என்று ப்ரார்த்தித்தார்கள். இதைக்கேட்டு ராத்திருடன் அதி ஆச்சர்யப்பட்டவனைப்போல் பாவனைசெய்து, "நீங்கள் யாரோ நான் அறியேன்; நான் குஜராத் தேசத்தவன்; என்னை நீங்கள் வேறுயாரோ ஒரு மனிதன் என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். நான் ஒருபெரிய ஜமீன்தாரன்; என்பெயர் ஸோமசேகரன் என்பார்கள்; நீங்கள் என்னை இன்னாரென்று தெரிந்துகொள்ளாததால் நான் இதுவரைக்கும் நீங்கள் சொல்லியவற்றையெல்லாம் சகித்தேன்; இனி வாயைமூடிக்கொண்டு வந்தவழியைத் தேடிப்போங்கள்; இல்லாவிட்டால் நன்றாயிராது" என்று கோபமாய்ச் சொல்லியனுப்பிவிட்டான். இந்த உபந்யாஸத்தையெல்லாம் கேட்டு ஒற்றர்கள் இது என்ன விந்தையாயிருக்கின்றதென்னி தலைதப்பியது தம்பிரான் புண்ணியமென்று அவ்விடத்தினின்று ஓடிப்போய்விட்டார்கள். ராத்திருடனும் இந்த சனியன்களைச் சாக்குபோக்குச் சொல்லி விரட்டியடித்துவிட்டோம் என்று ஸந்தோஷப்பட்டான்.

ராத்திருடன் தான் குஜராத் ஜமீன்தாரனென்று சொல்லி அதட்டியனுப்பிவிட்டபோதிலும் ஒற்றர்களுக்கு அவன் வார்த்தையில் நம்பிக்கையுண்டாகவில்லை. ராத்திருடன் தாஸி வலையிலகப்பட்டுத் தவிக்கிறானென்று நிச்சயித்து மேலேசெய்வதொன்றும் தெரியாமல் அவர்கள் உடனே ஸ்வதேசம் சென்றார்கள். அவர்களைப் பார்த்து ஸுகுணவதி "என்ன விசேஷம்? என் புருஷன் ஸங்கதியேதாவது தெரிந்துவந்தீர்களா?" என்று ஆத்திரத்துடன் கேட்டாள். ஒற்றர்களும் நடந்ததைச் சொன்னார்கள். ஸுகுணவதியும் உடனே துக்கம்மேலிட்டுக் கீழேவிழுந்து ப்ரலாபிக்கலானாள். நல்ல மானமுள்ள குலஸ்த்ரீகளுக்குப் பர்த்தா பரஸ்த்ரீலோலனாயிருப்பதைவிட வேறென்ன காரணம்வேண்டும் விசாரத்துக்கு? இன்னொருதடவை அவர்களை விசாரித்துப் பிறபாடு ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு, அப்பேர்ப்பட்ட பதிலளித்த புருஷனைப்பற்றி இனி என்ன ப்ரயத்னம் செய்தாலும் பலனில்லையென்று நினைத்துத்தான் செய்த புண்ணியமும் தன் தலையெழுத்தும் ஸரியாயிருந்தால் இன்றைக்கிராவிட்டாலும் என்றைக்காவது ஒருநாள் வந்துசேருவார் என்று நிச்சயம்செய்துகொண்டாள். இவ்விதமாகப் பத்துப்பதினாறு வருஷங்கள் கடந்தன. அப்போதுகூட ராத்திருடனுக்கு ஸ்வதேசம் போகவேண்டுமென்று

...து பெண்பிள்ளைகளைப் பார்க்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாகவில்லை. ஸுகுணவதிக்கு அவ்வளவுதான் கிடைக்கும். எப்படி அதிகமாய்க் கிடைக்கக்கூடும்? ரத்னாவதிக்குமுன் எம்மாத்ரம் அவள்? புதிய சட்டமுடியிருக்க பழபத்ரம் எதற்கு? அப்பேர்ப்பட்ட ஆனந்த ஸாகரத்தின்மீது அமர்ந்திருப்பவனுக்குப் புத்ரனுடைய ஞாபகம் மாத்ரம் எப்படி உண்டாகும்? ஸுகுணவதிக்கு இனி தன் புருஷன் வரப்போகிறான், நாம் அவனைக் கண்ணாரக்கண்டு களிக்கப் போகிறோம் என்ற நம்பிக்கையே அடியோடு போய்விட்டது. நாம் கொடுத்துவைத்தது இவ்வளவுதான் என்று தேற்றிக்கொண்டு, ஸரி புத்ரனாவது இருக்கிறானே அவனும் இல்லாவிட்டால் நம் கதி என்னவாயிருக்கும் என்று இருப்பதைக் கொண்டு த்ருப்தியடைந்தாள்.

பகல் திருடனுக்கு வயது பதினாறாயிற்று. அதற்குள்ளேயே அவனுக்குக் குலவித்தையில் அதிக ஸாமர்த்யம் உண்டாய்விட்டது. துப்பாக்வியிற்றில் பிரக்கியென அவன் சோரத் தொழிலில் தகப்பனிலும் பதின்மடங்கு அதிக சதுரனானான்; வயதுக்குத் தகுந்த விவேகமும் பூர்ணமாய் உண்டாய்விட்டது. ஆதலால், ஒரு நாள் அவன் தன் தாயாரைப்பார்த்து, "அம்மா, நான் எத்தனைதடவை கேட்டாலும் என் தகப்பனாரைப்பற்றிய விஷயங்களொன்றையும் நீ இதுவரைக்கும் எனக்குத்தெரியப்படுத்தவில்லை. ஊராரெல்லோரும் ஒருமாதிரி சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் சொல்வது நிஜமா அல்லது வேறே வ்ருத்தாந்தம் ஏதாவதுஉண்டா?" என்று நச்சுநச்சென்று கேட்டான். இனி மறைத்து வைப்பது யுக்தமன்று எனவெண்ணி "ஊரார் சொல்வதில் எள்ளளவேனும் பொய்கிடையாது; அவர்கள் சொல்வதெல்லாம் அவ்வளவும் உண்மைதான்" என்று ஸுகுணவதி அதிக வருத்தத்துடன் சொன்னாள். "அப்படியானால் நான்போய் என்தந்தையை அழைத்துவருகிறேன்; நாளையே நான்புறப்படுகிறேன்; ப்ரயாணத்துக்குவேண்டியதெல்லாம் ஸித்தம் செய்துவை" என்று பகல் திருடன் தாயாரிடம் சொன்னான். "அப்பா நீ அப்பேர்ப்பட்ட ஸாஹஸகார்யம் ஒன்றும்செய்ய வேண்டாம். அப்பா, குழந்தை நீ தூரதேசத்துக்குச் செல்வது உன்னால் ஸாத்தியமான கார்யமன்று. மேலும், உன்தகப்பனாருக்குத்தான் என்மீது தயையிராமல் போய்விட்டாலும் நான் இதுவரைக்கும் உன்னைப் பார்த்துக்கொண்டு ப்ராணனை வைத்திருக்கிறேன். நீ தூரதேசம் போனால், நீ திரும்பிவருமட்டும் நான் ப்ராணனை வைத்துக்கொண்டிருக்க முடியாது. உன் தகப்பனாரும் இராமல் நீயும் இராமல் நான் எவ்வாறு இவ்விடத்தில் தனியாயிருப்பேன்? நமக்கு நல்ல காலம் எப்போது உண்டாகிறதோ அப்போதுதான் உனது தகப்பனார் திரும்பிவருவார். அவரைத்தேடிச்செல்வது வீண். நீ செல்வதால் என் ப்ராணன் போவதுதான் மிச்சப்படும்" என்று தன்னாலானமட்டும் ஸுகுணவதி தன் மகனது எண்ணத்தை மாற்றமுயன்றாள். அவன் யாருடைய பிள்ளை? விரையொன்று போட்டால் சுரையொன்று முளைக்குமா? தகப்பனுக்குள்ள பிடிவாதகுணம் எங்கேபோகும்? பகல்திருடன் தாயாரைத் தன்னாலானமட்டும் ஸமாதானப்படுத்திவிட்டுத் தந்தையைத் தேடிச்சென்றான். காசிராஜன் அந்தப்புரத்தினின்று திருடிவந்த ஜரிகை பட்டு சால்வையின்மீது தன் தகப்பனாருக்கு அத்யந்தப்ரியமென்று தாயார் சொல்லக் கேட்டுப் பகல்திருடன் போகும்போது அச்சால்வையைஉடனெடுத்துச்சென்றான். ஸுகுணவதி பர்த்தாவின் க்ஷேமத்தையும் புத்ரனுடைய க்ஷேமத்தையும் கோரிப் பல தெய்வங்களுக்கு ப்ரார்த்தனைசெய்தவண்ணமாய் அவர்களுடைய வருகையை எதிர்பார்த்திருந்தாள்.

(இன்னும் வரும்.)

தாதாபாய் நௌரோஜி.

இதில் காலஞ்சென்ற தாதாபாய் நௌரோஜியின் ஜீவிய சரித்திரமும், அவர் எழுதிய ஸ்வயசரித்திரமும், அவரது குணாதிசய விவரங்களும், அவர் வயோதிக காலத்தில் வாழ்நாளைக் கழித்த விவரங்களும் அடங்கியிருக்கின்றன.

விலை அணா 3.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர்.
(தென்னிந்தியா.)



## Insect Pests.

## பயிர்களை நாசமாக்கும் பூச்சிகள்.

சென்ற மாதத்து "ஜனோபகாரி"யில் பூச்சிகள் பயிர்களை நாசமாக்காமலிருப்பதற்காக சென்னை கவர்ன்மெண்டு பூச்சிசாஸ்த்ரியாயிருந்த டி. ப்ரெயின்ப்ரிக்கி ப்ளெச்சர் எழுதியுள்ள சில விஷயங்களைக் கூறுகிறோம். இன்னும் அவர் ஆண்டு பத்திரிகையின் மூலமாக வெளியிட்டுள்ள சில விஷயங்களை இங்கு எழுதுகிறோம்.

இந்த ஸாதனங்கள் பூச்சிகள் ஏராளமாகத் தோன்றுவதற்கு முன்பாகவாவது அல்லது அவைகள் அதிகமாகத் தோன்றின பிறகாவது, அவைகளை மருந்து முதலிய ப்ரயோகங்களாலும், பொடிகளாலும், ஆவியினாலும் கொல்லாமல் கையினால் செய்யக்கூடியவைகளாகும். ஆனால் மருந்தின் ப்ரயோகத்தால் செய்யப்படுகிற முறைகளுக்கும் கையால் உபயோகப்படுத்தக்கூடிய ஸாதனங்களுக்கும் அதிக வித்தியாஸம் உண்டென்று சொல்லமுடியாது. கையால் செய்யக்கூடிய ஸாதனங்களில் கீழே குறிப்பிட்டிருக்கிறவைகள் அடங்கும். அவை யாவன:—

பூச்சிகளைக் கையால் பிடிப்பது; கைவலை அல்லது பெரிய வலையை உபயோகித்தல்; 'ஹாப்பர் டோஸர்' (Hopper Dozer) என்று சொல்லப்பட்ட வெட்டுக்கிளிகளைப் பிடிப்பதற்கான பெட்டிகளை உபயோகித்தல்; விளக்குப் பொறி வைத்தல்; மற்றவகைப் பொறிகளை வைத்து பூச்சிகளை அவைகளிடத்திற்கு வரும்படி செய்தல்; கிடங்குவெட்டி பூச்சிகளை ஒரு வயலிலிருந்து மற்றொரு வயலுக்குள் தாண்டவொட்டாமல் செய்தல்; தீயினால் கொளுத்தி எரித்துவிடுதல்; மரத்தைச்சுற்றிலும் கீல் எண்ணெய் முதலியவைகளைத் தடவியும், தகரத்தால் செய்த குடைகள் போன்ற ஸாதனங்களை உபயோகித்தும் பூச்சி, எலி முதலியவைகளை மரத்தில் ஏறவொட்டாமல் தடுத்தல்; காய் பழங்களை துணி அல்லது காகிதப்பையினால் மூடிவைத்தல்; மரத்தின் தண்டுகளில் உள்ள புழுக்களை எடுத்துக் கொல்லுதல்; பட்டுப்போன மரங்களையும் அவைகளின் கிளைகளையும் அப்புறப்படுத்தல்; புழுக்களால் வெட்டப்பட்ட குருத்துக்களை வெட்டி அப்புறப்படுத்தல் ஆகிய இவைகளே.

கையினால் பூச்சிகளைப் பிடிப்பது வெகு சுலபமான வழியாகும். மேலும் பூச்சிகள் பயிரில் தோன்றி அவைகள் சுவல்பமாக இருக்கும் பொழுதே, கையினால்பிடிக்க ஆரம்பித்து இடைவிடாமல் ஒழுங்காகப் பிடித்துக்கொண்டே வந்தால், பூச்சிகளை விருத்தியாகாமல் தடுக்கலாமென்பதற்குச் சந்தேகமில்லை. பூச்சிகளைப் பிடிக்காமல் அவைகள் விருத்தியாகும்படி விட்டுவிட்டால், வெகு சீக்கிரத்தில் கையால் பிடிக்கமுடியாதபடி அவ்வளவு ஜாஸ்தியாக விருத்தியாகும். ஆனால் பூச்சிகள் தோன்றினவுடனே அவைகளைக் கொன்றுவிடுவோமானால் அவைகளை விருத்தியாகாமல் தடுத்துவிடலாம். உதாரணமாக: 1912-ம் வருஷத்தில் கோயமுத்தூர் வியவசாயக்காலேஜைச்சேர்ந்த பண்ணையில் சம்பளிப்பூச்சிகள் தோன்றின. அவற்றைக் கையால்பிடிக்கும்படி ஒரு சிறு பையனை அனுப்பியதில் 4-நாட்களுக்குள் நூற்றுக்கணக்கான புழுக்கள் பிடிக்கப்பட்டன. இப்படிச் செய்ததில் அந்த சந்ததியால் நஷ்டம் ஏற்படாமலிருந்ததும் தவிர, அந்த வருஷத்தில் அப்பூச்சிகளின் வேறே சந்ததிகளும் தோன்றவில்லை. முதலில் தோன்றிய சம்பளிப்பூச்சிகளைப் பிடிக்காமலிருந்தால், அந்த வருஷத்தில் அப்பூச்சிகளில் குறைந்தது இரண்டு சந்ததிகள் தோன்றி அதிக நஷ்டத்தை உண்டுபண்ணியிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஏனென்றால், இவ்விதம் பூச்சிகளை முதலிலேயே பிடிக்காமல் விட்டுவிட்ட பக்கத்துப் பிரதேசத்தில் அதிக நஷ்டம் உண்டானதாகத் தெரிகிறது. ஆகையால் இப்படி ஆரம்பத்திலேயே பூச்சிகளைக் கையால் பிடிப்பது கல்லாரும் அனுஷ்டிக்கக்கூடியபடி இவ்வளவு லகுவாயும் ஸ்வல்ப பணச்செலவினால் ஆகக்கூடியதாயுமிருப்பதால், ஒவ்வொரு குடியானவனும் பயிருக்குக் கெடுதலை உண்டாக்குகிற பூச்சிகளைப்

பார்க்கும்போதெல்லாம், பயிரில் கொஞ்சமாகத் தோன்றியபோதிலும், அவைகள் அதிகமாகக்கூடாதென்ற நோக்கத்துடன் அவைகளைப் பிடித்துக் கொல்லவேண்டும். பூச்சிகள் ஏராளமாக விருத்தியாகிப் பயிரையும் நன்றாய்த்தின்று அழித்தபிறகு அவைகளைக் கொல்லுவதற்கு பிரயத்தனப்படுவது கொஞ்சமேனும் உபயோகப்படாது.

இப்படி பூச்சிகளைக் கையால்பிடித்து கொல்லும்விதம் பூச்சிகளின் ஜினுசுக்குத்தக்கபடி வேறுபட்டிருக்கிறது. மயிரில்லாத புழுக்கள், பெரிய நாவாப்பூச்சிகள், வண்டுகளில் அநேக ஜினுசுகள் இவைகளை கையால்பிடித்து நசுக்கிக் கொல்லலாம். புழுக்கள் பெரியவையாயிருந்தால் அவைகளைக் காலால் நசுக்கிக்கொல்லலாம். கம்பிளிப்பூச்சியையும், ப்ளிஸ்டர் பீட்டில்ஸ் (Blister Beetles) என்ற கொப்புளம் எழும்பச்செய்யக்கூடிய ஒருவித சத்தை வெளிப்படுத்தும் வண்டுகளையும், ஒரு பாத்திரத்தில் தண்ணீரைஊற்றி அதன்மேல் கொஞ்சம் மண்ணெண்ணையை ஊற்றி அப்பாத்திரத்தில் அவைகளைப்போட்டுக் கொல்லலாம். பருத்திப்பயிரில் தோன்றுகிற நாவாப்பூச்சிகளைப் பிடிப்பதற்கு சில வேளைகளில் ஒரு துணிப்பையின் வாயில் ஒரு தகரப்பெய்குழல் (Funnel) ஒன்றை வைத்து அதன்வழியாய் அந்தத் துணிப்பைக்குள் அப்பூச்சிகளை விழும்படி செய்வதால், அவைகள் அதிலிருந்தும் தப்பித்து, வெளியேற முடிகிறதில்லை. கொஞ்சம் உயரமான செடி அல்லது மரங்களினின்று பூச்சிகளைப் பிடிக்க வேண்டிய சந்தர்ப்பங்களில், வேறே மார்க்கம் ஒன்றும் கிடைக்காமற்போனால், தலைகீழாய்ப் பிடிக்கப்பட்ட ஒரு குடையானது அவைகளைப் பிடிக்க ஒரு சிறந்த சாதனமாகும்,

வெறுங்கையால் பிடிக்க முடியாதபடி அவ்வளவு சுறுசுறுப்பாய் ஓடித்திரியக்கூடிய பூச்சிகளைப் பிடிக்க ஒரு கைவலை மிகவும் உபயோகமுள்ளதாயிருக்கும். இந்தக் கைவலையை சுலுவாயும் விலை சகாயமாகவும் செய்துகொள்ளலாம். ஒரு சிறு கவைக்கொம்பின் இரு நுனியிலும் வளைக்கப்பட்ட பிரம்பு அல்லது ஒரு லேசான குச்சியை கவைகளின் ஒவ்வொரு நுனியிலும் தனியேகட்டி, கவையின் அடிப்புறத்தை கைப்பிடிப்பாக வைத்துக்கொண்டு வளைத்துக் கட்டப்பட்ட பிரம்பைச்சுற்றிலும் ஒரு லேசான துணிப்பையைத் தைத்துவிடவேண்டும். இப்படிப்பட்ட வலையால் பறந்து ஓடக்கூடிய பூச்சிகளாகிய நெற்பயிரில் தோன்றும் நாவாப்பூச்சிகள், வண்டுகளில் அநேக ஜினுசுகள் இவைகளைப் பயிரிலிருந்துபிடித்து விடலாம். அதேவலையினால் வெட்டுக்கிளியையும் பிடிக்கலாம். அவ்வலையில் பிடிக்கப்பட்ட பூச்சிகளை கையினால் அல்லது காலால் நசுக்கி அல்லது கல்லைக்கொண்டு நசுக்கிக்கொல்லலாம்; அல்லது தண்ணீரும் கொஞ்சம் எண்ணெயும் கலந்துவைக்கப்பட்ட ஒரு பாத்திரத்தில் போட்டுக்கொல்லலாம். ஒரு பயிரானது வெட்டுக்கிளிகளால் பிடிக்கப்பட்டிருக்குமானால் அந்தச்சந்தர்ப்பத்தில் துணியால் செய்த ஒரு பெரிய வலையை உபயோகிக்கவேண்டும். ஏனென்றால் அவ்விதம் ஒரு பெரியவலையைக்கட்டி இழுப்பதனால் வயல் முழுவதும் இழுக்கப்பட்டு, ஏறக்குறைய எல்லா வெட்டுக்கிளிகளையும் பிடிக்கச் சாத்தியமாகிறது. மேலே சொல்லிய பெரிய வலையானது 4 அடி அகலமும் வாய்ப்புறம் 2 அடி குறுக்களவுமுள்ளது. ஆழத்தில் 5 அல்லது 6 அடியும் உள்ளது. அதன் அடிப்பாகமானது நாலுமூலைகளும் ஒரே இடத்தில் சேர்க்கப்பட்டு குவிந்திருக்கும். வேலை செய்யும்போது வாய்ப்புறம் திறந்திருப்பதற்காக அதன் வாய்ப்புறத்தில் 4 அல்லது 5 அடி நீளமுள்ள இரண்டு மூங்கில்கள் கட்டப்பட்டிருக்கும்; அதேமூங்கில்களை கைப்பிடியாகவும் உபயோகப்படுத்தலாம். வயலில் இழுக்கப்படும்போது வலையின் அடிப்பாகம் நேராக இருப்பதற்காகவும், அது தரையோடு தொய்யாமல் சேர்ந்துவருவதற்காகவும், அதன் அடிப்பாகத்தில் மற்றோர் மூங்கிலும் கட்டவேண்டும். வலையானது பயிரின் ஊடே இழுக்கப்படும்போது எதிர்க்காற்றினால் சுலபமாகத் தலைகீழாகத்திருப்பப்பட்டு, அதில் பிடிக்கப்பட்டிருக்கும் வெட்டுக்



கிளிகள் கீழேவிழாமலிருக்கும்படிக்கும், பையின் குவிந்திருக்கும், அடிப்பாகம் திரும்பிவிடாமலிருக்கும்படிக்கும் அதில்கொஞ்சம் பளுவான கல் அல்லது கட்டையைக் கட்டவேண்டும். மேல் சொல்லிய வலையை இழுக்க இரண்டுபேர்கள் வேண்டும். வாய்ப்புறம் உள்ள மூங்கிலை கைப்பிடியாக உபயோகித்து பயிரின் ஊடே எவ்வளவு வேகமாகச்செல்லக்கூடுமோ அவ்வளவு வேகமாக இழுக்கவேண்டும். வலையானது இழுக்கப்படும்போது, பயிரிலுள்ள வெட்டுக்கிளிகள் அவைகள் தங்கியிருந்த இடங்களிலிருந்து கலைக்கப்பட்டு செடிகளிலிருந்தும் தாவிக்குதித்து அவைகள் தரைக்கு வருவதற்கு முன்பாகவே வலைக்குள் விழுந்துவிடுகின்றன. ஒவ்வொரு தடவையிலும் பிடிக்கப்பட்ட வெட்டுக்கிளிகளை வலையின் அடிப்புறத்தில் சேர்த்து நசுக்கிக் கொல்லலாம். அல்லது ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் கொஞ்சம் மண்ணெண்ணெயும் ஊற்றி அதில்போட்டு அவை சாகும்படி செய்யலாம். அதிகமான வெட்டுக்கிளிகளைப் பிடிக்க கீழே குறிப்பிட்ட விஷயங்களைக் கவனிக்கவேண்டும்.

1 வலையைத் தரையோடு எவ்வளவு ஒட்டி இழுக்கமுடியுமோ அவ்வளவு ஒட்டி இழுக்க வேண்டும்.

2. வலையை இழுக்கிற மனிதர்கள் அதிக வேகமாய் இழுத்துக்கொண்டு ஓடவேண்டும்.

3. கூடியவரையில் வலையை காற்றுக்கு எதிராக இழுக்கவேண்டும்.

ஒருவலையைக்கொண்டு ஒருநாளைக்கு ஏறக்குறைய 3 ஏகரா பூமியை இழுக்கலாம். அதை வேலைசெய்ய 3 பேர் தேவையாயிருக்கும். இரண்டுபேர் வலையை இழுத்துக்கொண்டிருக்கவும், மூன்றாவது மனிதன் வலைஇழுத்துக்கொண்டிருப்பவர்களில் ஒருவனை முறைப்படி மாற்றிக்கொண்டிருக்கவும் வேண்டியிருக்கும். ஒரு பயிரானது வெட்டுக்கிளிகளால் அதிகமாய்ப் பிடிக்கப்பட்டிருந்தால், அதில் பல தடவைகள் வலையை இழுக்கவேண்டியிருக்கும். எத்தனை தடவை இழுக்கவேண்டுமென்பது வெட்டுக்கிளியின் உபாதிக்குத்தக்கபடியும், பயிரின் வளர்ச்சிக்கும் பூமியின் தன்மைக்கும் தக்கபடியும் வேறுபட்டிருக்கும். நெல் சோளம் முதலிய பயிர்கள் அதிகமாய் வளர்ந்தபிறகு அவைகளில் வலையை இழுப்பதில் உபயோகமில்லை. ஏனென்றால், வெட்டுக்கிளிகளைப்பிடிக்க வலையைத் தரைமட்டத்திற்கு இழுப்பது அசாத்தியமாயிருப்பதும் தவிர, பயிரின் ஊடே வலையை இழுக்கும்போது செடிகள் வலையை இழுப்பவர்களால் மிதிக்கப்பட்டு பயிருக்கு அதிக சேதமும் உண்டாகும். ஆனால் அவ்வித பயிர்கள் 3 அடி உயரத்திற்கு அதிகப்படாமலிருக்கும்போது சுலபமாய் வேலைசெய்யலாம்.

கைவலையையும் பெரிய வலையையும் பயிரில் வெட்டுக்கிளியைப் பிடிக்க உபயோகிப்பதற்கு முன்னால், அவைகளை எண்ணெயில் நனைத்து அதன் பிறகு அவைகளை உபயோகித்தால் பூச்சிகள் அதிகமாகப் பிடிக்க சாத்தியமாகிறதென்று தெரிகிறது. ஆனால் இவ்விதம் செய்வதற்கு கழிவடை எண்ணெய் வெகு சுலபவிலையில் கிடைத்தால் மாத்திரம் செய்யலாம்.

பயிருக்குக் கெடுதல்பண்ணுகிற பூச்சிகளில் அநேகத்தில் முழுவதும் வளர்ந்தவைகளை விளக்குப்பொறிகளை வைத்து அவைகளிடம் அப்பூச்சிகளை வரும்படிசெய்து கொல்லலாம். விளக்குப்பொறிகள் செய்வது சுலுவு. மேலும் செலவும் குறைவு. நெல் கேப்பையைப்போன்ற பயிர்களில் தோன்றுகிற குருத்துப்பூச்சியின் தாய்ப்பூச்சியை பிடிக்கச் சிறந்த வழியாக ஏற்படலாம். ஒருநாள் ராத்திரிமுழுவதும் எரிவதற்கு வேண்டிய எண்ணெய் பிடிக்கக்கூடிய ஒரு சாதாரண லாந்தல் விளக்கே போதுமானது. அதைத் தண்ணீரும் எண்ணெயும் கலந்து வைக்கப்பட்ட ஒரு தட்டத்தில் வைத்தோ அல்லது அதற்குமேல் நேராகத் தொங்கவிட்டோ இருக்கவேண்டும். மேற்படி லாந்தல் தொங்கிக்கொண்டிருக்கும்போது தட்டத்தில் குறைந்தது $\frac{1}{2}$ அடி ஆரம் இடம் லாந்தலைச் சுற்றி நாற்புறமும் இருக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட ஒரு விளக்குப்பொறியை பயிரினூடே வெளிச்சம் நாற்புறமும் தெரியும்படி பயிருக்குச்சற்று உயரமாய் வைக்கவேண்டும். மண்

எண்ணெயோடு தேங்காய் எண்ணெயைக்கலந்து விட்டால் விளக்கு நன்றாய் எரிவதோடு செலவும் குறையும். அஸ்தமனமான சமயத்தில் விளக்கை ஏற்றி ராத்திரிமுழுவதும் எரியவிடவேண்டும். விளக்கை நோக்கிவரும் பூச்சிகள் விளக்கின் கண்ணாடியில் மோதி கீழேயிருக்கிற தண்ணீரும் எண்ணெயும் கலந்துவைக்கப்பட்ட தட்டத்தில் விழுந்து சாகும். இவ்விதமாய் ஏராளமான பூச்சிகள் கொல்லப்படும். மேலும் காற்றில்லாமல் உஷ்ணமான இருண்ட ராத்திரிகளில் இப்பூச்சிகள் இன்னும் அதிகமாகவரும். காற்று அதிகமாக அடித்துக்கொண்டிருக்கும்போதாவது நல்ல நிலவு காயும் பொழுதாவது விளக்குப்பொறி வைப்பது அவ்வளவு உபயோகப்படமாட்டாது.

பூச்சிகளை மற்றவித பொறிகளை வைத்து அவைகளினிடத்திற்கு வரும்படி செய்யலாம். இவ்விதப் பொறிகள் அநேகவகைப்படும். அவைகளை விவரமாய் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல ஸாத்தியமில்லை. பயிரில் இராக்காலங்களில் சஞ்சரிக்கக்கூடிய சிலவகைப் புழுக்கள் சில்வண்டுகள் முதலிய பூச்சிகள் பகற்காலத்தில் ஒளிந்துகொள்வதால் அவைகளைத் தேடிப்பிடிப்பது கஷ்டமாகும். ஆனால் அவைகள் வந்து திரியக்கூடிய இடங்களில் புல் பத்தைகள், பலகைகள் இவைகளைப்போட்டு, அதோடு அவைகள் தின்னும்படி பயிர்களின் இளந்தளிர்களையும் போட்டுவைத்து, மறுநாள் காலையில் அப்பலகைகளையும் புல் பத்தைகளையும் சோதிக்கவேண்டும்.

வயல்களிலும், நாற்றங்கால்களைப் போன்ற சிறு பாகங்களிலும் நகர்ந்து வரக்கூடிய புழுப்பூச்சிகள் வராமல் தடுக்க அவைகளைச் சுற்றிலும் கிடங்கு தோண்டி வைப்பதால், அப்படிப்பட்ட பூச்சிகளை வெகுவாய் வராமல் தடுக்கலாம். இப்படிப்பட்ட கிடங்குகளின் உள்புறத்து ஓரமானது செங்குத்தாயும், பொலபொலப்பான மண்ணுள்ளதாயுமிருந்தால், அவைகள் அதிக ஆழமும் அகலமுமாய் இருக்கவேண்டியது அவசியமில்லை. தவிர, மேல்சொல்லியபடி தோண்டப்பட்ட கிடங்கின் அடிப்பாகத்தில் கொஞ்ச தூரத்திற்கு ஒரு பள்ளமாக சில செங்குத்தான பக்கங்களுள்ள பள்ளங்களும் தோண்டினால், முதலில் தோண்டப்பட்ட கிடங்கில் விழுந்த புழுக்கள் கிடங்கின் அடிப்பாகத்தில் திரிந்து கொண்டிருந்து இந்தப் பள்ளங்களில் விழ ஏதுவாகும். கம்பளிப் பூச்சிகள் தோன்றும்போது கிடங்குகளை அதிக அகலமாயும் ஆழமாயும் தோண்டி அவற்றில் கொஞ்சம் புதிய இலைகளையும் தழைகளையும் போட்டால், அவைகளைத் தின்பதற்கு அப்பூச்சிகள் வருமாகையால் அவைகளைத் தினந்தோறும் சோதித்து ஒளிந்துக்கொண்டிருக்கும் பூச்சிகளைக் கொல்லலாம். ஆனால் இப்படிக் கிடங்கில் தழைகளைப் போட்டு நிரப்பும்போது அவைகளின் உதவியால் வயலுக்குள் புழுக்கள் வெகுவாய் ஏறிப்போக ஏதுவாயிராமல், பள்ளத்திற்கு உள்ளேயே தழைகள் இருக்கும்படி போடவேண்டும். ஒரு வயலுக்கும் மற்றொரு வயலுக்கும் ஊடே தண்ணீர் நிறைந்த ஒரு பள்ளமானது நாற்புறமும் இருக்குமானால், அந்தத் தண்ணீரின்மேல் கொஞ்சம் எண்ணெயை ஊற்றினால், புழுக்கள் அதைத்தாண்ட முடியாமல் போகும்.

நெருப்பு மூட்டி அதனால் சில சந்தர்ப்பங்களில் பூச்சிகளைத் தடுக்கலாம். நெருப்பின் வெளிச்சத்திற்குச் சிலவகைப் பூச்சிகள் வந்து அதில் விழுந்துசாகும். சில வேளைகளில் நெருப்பு மூட்டி சரியான விதமாய் புகைப்போடுவதால் பூச்சிகளைத் துரத்திவிடுவது சாத்தியமாகும். உதாரணமாக: மாமரங்கள் புஷ்பிக்கும் சமயத்தில் அம்மரங்களின் அடியே புகையும்படி நெருப்பு மூட்டுவதால் அம்மரத்திலுள்ள தேன் பூச்சிகளைத் தற்காலத்திற்கேயாயினும் ஓட்டிவிடலாம். இப்பூச்சிகளை மரத்திலேயே இருக்க விட்டால் அவைகளிலிருந்து உண்டாகிறதேனால் பூக்கள் காய்பிடியாமல் கெட்டுப்போகின்றன.

ஒட்டக்கூடிய அல்லது எண்ணெய் சம்பந்தமான வஸ்துவை, மரங்களின் அடிப்பாகத்தில் அகலமான பட்டையாகத் தடவுவதாலும், அல்லது அவைகளை முதலில் ஒரு துணி அல்லது காகிதத்தில் தடவி மரங்களின் அடிப்பாகத்



தைச் சுற்றி ஒட்டவைப்பதாலும் பூச்சிகளை அம்மரங்களுக்குப் போகவொட்டாமல் செய்யலாம். இவ்விதம் செய்ய ஆயில்எமல்ஷன் என்னும் மருந்தையும், கீல் எண்ணெயும் சமபாகமாகக் கலந்து உபயோகிக்கலாம். அப்பேர்ப்பட்ட மருந்து மரத்திற்குப் பூச்சிகளை வரவொட்டாமலிருக்கும்படி செய்வதில் சிறந்ததாயிருப்பதும் தவிர, அதைத் தடவுவதனால் மரத்திற்கு யாதொரு கெடுதியும் உண்டாவதில்லை; ஆனால் இப்படிக்கலந்து உபயோகிக்கப்பட்ட எவ்வித மருந்தும் நம்முடைய தேசத்தில் வெகுநாளைக்கு வீர்யம் கெடாமலிருக்குமென்று சொல்லமுடியாது. எலி, மரநாய்கள் தென்னைமரங்களில் ஏறாமலிருக்க அடிமரத்தைச் சுற்றிலும், தகரத்தைக் குடைபோல்செய்து, அதை ஆணிகளால் மரத்தில் அடித்தால் அவைகளால் ஏற்படும் நஷ்டம் குறையும்.

உயர்ந்த தினுசு பழவர்க்கங்களையும், காய்கறி தினுசுகளையும், ஈக்கள் முதலிய பூச்சிப் புழுக்கள் துளைக்காமலிருக்க, அவைகளை துணி அல்லது காகிதப்பைகளால் மூடிவைப்பது ஒரு சுலுவான வழியாகும்.

மரங்களில் சில வர்க்கங்கள் வண்டுகள், வண்ணாத்திப் பூச்சிகள் ஆகிய இவைகளுடைய புழுக்களால் துளைக்கப்படுவதுண்டு. அப்புழுக்கள் உயிரோடிருக்கிற அம்மரங்களின் பச்சைத் தண்டுகளில் கால்வாய்மாதிரி துளைகள் பண்ணுவதால் அம்மரங்கள் சில சந்தர்ப்பங்களில் பட்டுப்போவதும் உண்டு. இப்பேர்ப்பட்ட சமயங்களில் ஒரு கத்தியைக்கொண்டு அப்புழுவை வெட்டி எடுத்துவிடுவதே சுலுவான வழியாகும். புழுவை வெட்டி எடுத்தபிறகு அந்த இடத்திற்கு மற்றப் பூச்சிகளும் பூசண நோயும் வராதபடி, அந்த காயங்களுக்கு கீல்எண்ணெய் (தார்) பூசவேண்டும். இவ்விதம் கத்தியினால் மரத்தை வெட்டிப் புழுவை வெளியேற்றுவது மரத்திற்கு கெடுதலாயிருக்குமோவென்று தோன்றினாலும், அவ்விதம் செய்வதுதான் புழுவைத் தொலைக்க வெகு திறமையான வழியாகவிருக்கிறது. சாதாரணமாய் மரங்களின் தண்டைத் துளைக்கிற பாடோஸிரா ரூபஸ் (Batocera rubus) என்ற வண்டின் புழு மாமரங்களைத் துளைக்கிறதென்றும், ஆரெஞ்சு முதலிய மரங்களை அதே ஜாதியைச் சேர்ந்த மற்றொரு புழு நாசம் பண்ணுகிறதாகவும் நமக்குத் தெரியும். சில சந்தர்ப்பங்களில் இப்புழுக்களை அவைகள் துளைத்திருக்கும் துவாரங்களிலிருந்து ஒரு இரும்புக்கம்பியினால் குத்திக்கொன்று வெளியேற்றலாமென்றாலும், அவைகள் துளைத்திருக்கும் கால்வாய்களை கத்தியினால் வெட்டி, புழுக்களையும் கொன்று, அக்கால்வாய்களையும் சுத்தம் செய்வதே நல்லது. இவ்விதம் செய்வது அந்த இடத்திற்கு மற்ற பூச்சிகளை வரவொட்டாமல் தடுக்க ஏதுவாகும். தென்னை, பனை முதலிய மரங்களின் குருத்துக்களைத் துளைக்கும் வண்டைக்கொல்ல ஒரு கூரான இரும்புக்கம்பியைக் கொண்டு அவைகள் துளைத்திருக்கும் துவாரத்தில் விட்டு அவ்வண்டுகளைக் குத்தி இழுக்க வேண்டும். வண்டுகள் கம்பியின் நுனியில் மாட்டிக்கொண்டு வெளியே வந்துவிடும். பிறகு அந்தத் துவாரங்களுக்குக் கீல் எண்ணெயைப் பூசவேண்டும்.

ஒருமரம் அல்லது அதன் பாகமானது பட்டுப்போய் அல்லது பட்டுப்போகக்கூடியதாயிருந்தால், அது அநேகவித பூச்சிகள் தங்கி ஏராளமாய் விருத்தியாவதற்கு ஒரு நல்ல இருப்பிடமாகிறது. இப்பேர்ப்பட்ட செத்த அல்லது செத்து அழுகிக்கொண்டிருக்கிற மரங்களைத் தின்னக்கூடிய வண்டுகளே முக்கியமாய் அம்மரங்களில் உற்பத்தியாகி விருத்தியாகும். அவைகளுக்குப் பட்டுப்போன மரங்களில் வேண்டிய ஆகாரம் கிடைக்காமல்போனால், பச்சைமரங்களையும் பிடித்து, நஷ்டத்தை உண்டுபண்ணவும் கூடும். ஆகையால் பட்டுப்போன மரங்களையும், மரத்தின் கிளைகளையும், அப்புறப்படுத்தி விறகாகவோ அல்லது வேறுவிதமாகவோ உபயோகப்படுத்தவேண்டுமேயொழிய, அவைகளை பூமியிலேயே நின்றுகொண்டிருக்கவாவது வயலிலே கிடக்கவாவது விடக்கூடாது. முக்கியமாய் அழுகிக்கொண்டிருக்கிற தென்னை பனை இவைகளின் [illegible]

அடிப்பாகங்களிலும் தென்னம் வண்டின் ஏராளமான கொழுத்த வெள்ளைப்புழுக்கள் நெளிந்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம். மேலே சொல்லிய இடங்களிலிருந்து அவைகள் முழுதும் வளர்ந்த வண்டாகக் கிளம்பி பக்கத்திலிருக்கும் தென்னை பனை முதலியவைகளை நஷ்டப்படுத்தும்.

கரும்பு, சோளம், நெல் முதலிய பயிர்கள் குருத்துப்பூச்சிகளால் பிடிக்கப்பட்டிருக்கின்றனவாவென்பதை அவைகளின் குருத்து காய்ந்து போவதனால் அறிந்துகொள்ளலாம். அப்பேர்ப்பட்ட செடியின் சாய்ந்த குருத்தானது கையினால் தொட்டமாத்திரத்தில் கையோடுவந்துவிடும். இவ்விதம் கருகிக் குருத்து வாடின ஒவ்வொருசெடியையும் பார்க்கும்போது அதன் தண்டை குருத்துப்பூச்சி துளைத்துக் கொண்டிருப்பதாகத் தெரிந்துகொள்ளலாம். ஆகையால் கரும்புப்பயிரிலும் அதைப்போன்ற முக்கியமான பயிரிலும் புழுவடித்து குருத்து காய்ந்துபோவதாகத் தோன்றினவுடன், அப்புழு அதிகமாகப் பரவாதபடி, அப்பேர்ப்பட்ட குருத்துக்களை வெட்டிக் களைந்துவிடவேண்டும். ஏனென்றால், குருத்துப்புழுவினால் வெட்டப்பட்ட பயிர் உபயோகப்படமாட்டாது. ஆனால் அவ்விதம் புழுத்தோன்றினவுடன், அக்குருத்தை வெட்டி எறிந்துவிட்டால், பக்கத்தில் கிளைகள் தோன்றி பயிருக்கு அதிக நஷ்டம் ஏற்படாமலிருக்கும். தவிர, மேல்சொல்லியவிதம் புழு தோன்றினவுடன் குருத்துக்களை வெட்டி புழுக்களைக் கொல்வதால் அந்தப் புழுக்களிலிருந்தும் வேறு சந்ததிக்ள் உண்டாகி அதிக நஷ்டம் ஏற்படாமலிருக்கவும் கூடும்.

---

## Sita's Enterence into the Forest.

BY PANDIT P. K. SRINIVASACHARIAR.

### சீதை வனம்புகுந்த சரிதம்.

ஸ்ரீராமபிரானிடம் விடைபெற்றுக் குற்றமற்ற நற்குணங்களையுடையவர்களான ஜநகன் முதலியோர் தத்தம் நகர்க்குச் செல்ல, அன்போடு குடிக்கொண்டு பாருகாத்துப் பூபாரத்தைத் தாங்கிய மஹாவீரனாகிய ஸ்ரீராமன், வானத்துச்சியிற் சூரியன் வரும் நடுப்பகற்பொழுதில் தவறாது செய்தற்கு உரிய மாத்தியாந்நிக சந்தியா வந்தனமென்னும் வைதிகச் சடங்கைச் செய்துமுடித்து, அதன் பின்பு, தன் உயிர்போன்ற தம்பிமார் மூவரோடும் அரசுசெய்தருளி வீற்றிருந்தான். அப்பொழுது வானத்தில் இவ்வார்த்தை ஓங்கியெழுந்தது :—

“ஐயனே! புவனநாதனே! யான் புட்பகவிமானத்தின் தேவன். எனக்கு முன்னாளிற் குபேரன் உரைத்த சொற்களைக் கருத்துறக் கேட்பாயாக: ‘தசரதராமனால் அரக்கர்க்கதிபதியாகிய இராவணன் இறத்தல் திண்ணம். அவ்விராவணன் அழிய, அதன் பின்பு, உன்னையொன்ற உதவியை அவ்விராமபிரானுக்குச் செய்வாய். தீயவனாகிய அவ்விராவணன் இறந்தால்தான் எனது மனோவியாதி விலகும்’ என்று தூயவனான அக்குபேரன் எனக்கு முன்பு மொழிந்தபடியே முடிந்தது. இப்பொழுது யான் சென்று அக்குபேரனைப் பார்த்துவருகின்றேன்.”

புட்பக விமானத்திற்கு உரிய தெய்வம் என்றிங்ஙனம் சொல்ல, கேட்ட இராகவன் வியப்புற்று, ‘உன் கருத்து மிகவும் நன்று’ என்று அதனைக் கொண்டாடி, சந்தனம் முதலிய நறுமணப்பொருள்களையும், சுகந்தம் பொருந்திய மலர்களையுங்கொண்டு பூசித்து, ‘போ’ என்று சொல்லி விடையளித்தான். உடனே, அவ்விமானம், தான் விரும்பிய வடதிசையை நோக்கி, மனம்போல வெகுவேகத்துடன் சென்றது.

அந்த விமானம் பேசி அநுமதி பெற்றுச் சென்ற அதிசயத்தைப் பார்த்த பரதன் ஆச்சரி



யமடைந்து, இராமபிரானைத் தொழுது இவற்றைச் சொல்வான் :—“தூயோய்! இறைவா! இம்மாநிலத்தைக் காக்குமாறு நீ இங்கு வந்தபின்பு வந்த அற்புதச் செயல்களை எண்ணுமிடத்து அவற்றிற்கு ஓர் வரம்பில்லை’ என்று உரைத்து, மற்றும் நீ அரசாளத்தொடங்கிய பின்பு இப்பூலோகத்தில் எங்கும் அக்கிரமம் ஆகியவற்றால் எந்தப் பிராணிக்கும் மரணம் இல்லை. கொடிய விலங்குகளினால் யானைகளுக்குப் பகைமைத்துன்பம் இல்லை. வேங்கைகள், பசுக்களையும் மான்களையும் அடுத்து, அவற்றுடன் அன்புகூர்ந்து நட்புச் செய்யும். நீராலும் நெருப்பாலும் இறப்போர் இல்லை. தமது தனயர் மரிக்கக் காணுந் தாய் தந்தையர் இல்லை. நோயுறுவோர் இல்லை. நோயுறாமலே மூத்தோர்க்கும் நூறுபிராயம் நிரம்புதற்குமுன்னம் இடையாயுளில் இறுதி நேர்தல் இல்லை. கணவனை இழந்த மகளிர் இல்லை. உக்கிரமாக வீசி அழிக்கவல்ல காற்றும், எல்லாவுடலுக்கும் இன்பமாக மெல்லியதாய் வந்து அசையும். மகளிரெல்லாரும் ஆண் குழந்தைகளை அதிகமாகப் பெறுகின்றார்கள். மண்ணுலகத்திலுள்ள மன்னர்களும், மங்கையரும், தாம் என்னும் எண்ணங்களிலெல்லாம், ‘இராமபிரான்தானே எக்காலத்தும் அரசு செய்து இந்நிலவுலகத்தைக் காக்கக்கடவன்’ என்று வழியாயுற எண்ணி, அங்ஙனமே உறுதியாக வாய்விட்டு உரைப்பார்கள்.”

பரதன் இவ்வாறு சொல்ல, ஸ்ரீராமனும் அதனைக் கேட்டு, அவ்விடத்தில் அகமிக மகிழ்ந்து வீற்றிருந்தான். அக்காலத்தில், சூரியன் சாய்ந்து அந்தி அணுக, இரகுகுலதிலகன் சந்தியாவந்தனஞ்செய்யக் கருத்துற்றுச் சென்றான். திங்கள் விரிந்த வெண்ணிலாவை வீசித் தோன்றிற்று. அப்பொழுது, இராமபிரானும் சீதாபிராட்டியும் மனங்களித்திருந்தனர்.

இங்ஙனம் இவர்கள் இன்புற்றிருக்குங்கால், பங்குனிமாதம் வந்தடைந்தது. அந்தப் பின்பனிப்பருவத்தில் மரங்கள் யாவும் பழைய ஆடையை அகற்றிப் புதிய ஆடையை மேற்போர்த்துக்கொண்ட தன்மைபோல, கீழ் உதிர்ந்துவிழுந்த பழுத்த இலைகளையுடையவையாய், காணுந்தோறும் புதிது புதிதாக அழகுமிகத் தளிர்த்தன. கோங்குமரங்கள் தேன் பொழிகின்ற பொன்னிறமான பூக்களை உடைமையால், பொன்னிறமான ஆடையை மேலே போர்த்துக்கொண்டவை போன்றன. சிவந்த மலர்களையுடைய முருக்கமரங்கள் செந்நிறமான பெரிய அழகிய ஆடையைப் போர்த்துக்கொண்டவை போல விளங்கின. இராமபிரானும் சீதாபிராட்டியும், குளிர்ச்சியும் நறுமணமுமுடைய புன்னை, சண்பகம், செருந்தி, சந்தனம், ஜாதி, அழகிய பூக்களையுடைய தாழை, எண்ணிடுதற்கு அரிய குருந்தம், பாதிரி ஆகியான அழகிய விருட்சங்கள் தம்மில் ஒன்றோடொன்று நெருங்கியிருக்கப் பெற்றதும், விண்ணவர் வேந்தனாகிய இந்திரனது கற்பகச் சோலை மேலுலகத்தினின்று பூமியில் இறங்கிவந்தது போன்றுள்ளதுமான அழகு கொண்ட பூஞ்சோலையினிடத்தை அடைந்தார்கள்.

அது, சூரியன் சேர்வதற்கு அரியதாகவுள்ளதாகும். நீலோற்பலமலர்களும் செந்தாமரைமலர்களும் தங்கள் கண்களுக்கு ஒப்பாக முன்னிற்கமாட்டாமல் அஞ்சி நீரிலே ஒளிக்கும்படி சீதாதேவியும் இராமபிரான்தானும் அழகிய துறைகளில் இறங்கிப் படிந்து நீர்விளையாடுதற்கு இடமான தடாகங்களோடு, அந்தத்தடாகங்களின் கரைகளிலெல்லாம் விளங்குகின்ற படிகப்பாறைகளினாலாகிய மண்டபங்களையும் உடையது. இத்தன்மையாகிய இளமரப்பூம்பொழிலின் அழகுகளையெல்லாம் இராமபிரான் மனமுறச் செந்தாமரைமலர்த் திருக்கண்களால் நோக்கியருளி, ‘காதலி! இவற்றையெல்லாம் காண்’ என்று காட்டியுரைப்பான் :—

“துணைவி! மெல்லிய நடையையுடைய அன்னப்பறவைகள், நினது நடையழகுக்குத் தாம் நிகராகமாட்டாமல் அஞ்சி வெளியிடத்தில் நிற்றற்கு வெட்கப்பட்டு இடையீடின்றி நெருங்கிய மலர்களையுடைய அழகிய சோலையிலே மறைகின்றன பார்! மயில்கள், நினது, சாயலுக்கு நிகராகமாட்டாமல் தோற்று, அத்தோல்வியா

லாகிய அயர்ச்சியால் தமது நடை தளர்ந்து கெட்டு, 'இனி உயிர்தாங்கோம்' என்று தழலில் முழுகுவனபோல, மலர்ந்த பூக்களையுடைய அசோகமரத்தின்மேற் போய் விழுகின்றன. இவற்றைக்காண்பாய். அணங்கே! செல்வமுள்ளபோது இனிது உடன் உண்டிருந்து, அச்செல்வம் நீங்கியபோது அவரோடு உறவுவிட்டு மற்று அச்செல்வம் பொருந்திய இடத்தைத் தேடியடைகிற கீழ்மக்களுறவுபோலவே, உயர்ந்த தருக்களில் பொருந்திய மலர்களின் மதுவை நெடுநாள் உண்டு, மெள்ள அம்மரம் மலர் மாறிவிட, அதைவிட்டு வேறொரு மலர்மரத்தைத் தேடி வண்டுகள் போவனவற்றைக் காணாய்! பைந்தொடி! இதோ தெரிகிற பளிங்கினாலாகிய அறையைப் பார். அது வாழை தன் பக்கத்தில் வந்துற்றால் மரகதமாகி, செருந்திப்பூ வந்துற்றால் பொன்னாகி, பூவைமலர் பொருந்தினால் நீலமாகி, செந்தாமரைமலர் அடுத்தால் மாணிக்கமாகும். அது ஒழுக்கங்கெட்ட மகளிரது மனத்தை ஒக்கும். மெல்லியலே! பொய்த்தவவேடத்தில் மறைந்து உலகில் வேண்டியபடி தீச்செயல்களைச் செய்பவர்போல, திரியும் மீனைத் தப்பாமல் கொத்தித் தின்னும் உபாயத்தை மிகுதியாக எண்ணிய கொக்குக்கள் மெய்சலிக்காமல் கண்மூடி மௌனிகளாயிருப்பனவற்றைக் காணாய்! பாவாய்! வண்டுகள் மொய்த்த செங்கமலமலர்கள், கொல்லன் உலைக்களத்தில் கரிமூடிய கனலை ஒப்பன: காணாய்!'

சூரியகிரணங்கள் நுழையமுடியாத தழைத்து அடர்ந்த அப்பொழிலிலுள்ள வேறுவேறாகிய விசேடங்களை, 'திருமங்கைபோல்வாய்! காண்' என்று ஸ்ரீராமன் காட்டி, தாமரைத்தடாகத்தின் கரையிலுள்ள படிகக்கல்மண்டபத்தில், குளிர்ந்தும் பரிமளம்வீசுவதுமான தென்றற்காற்று இனிதாக வீசி வழிபடவும், மகளிர் மங்கல வாழ்த்துக் கூறவும், துதிபாடகர் துதிக்கவும் சானகியோடு இனிதாக வீற்றிருந்தான். பொன்னிறமான திருமேனியையுடைய இலக்குமியுடனே திருப்பாற்கடலின் நடுவிலே ஆதிசேஷசயனத்தின்மேல் பண்டு திருமாலாகிய தான் எழுந்தருளியிருக்கின்ற தோற்றம்போலவும், தோன்றியவளவிலே மறைந்திடுதலில்லாமல் நிலையாய் விளங்குகின்றதொரு மின்னலுடனே கூடி நிலத்திற் படிந்து விளங்குகின்ற கார்மேகம் போலவும், வெண்ணிறமான விசாலமுள்ள பளிக்குமண்டபத்தில் திவ்வியசிங்காதனத்தில் சிவந்த நிறமுள்ள திருமேனியையுடைய சீதாபிராட்டியை இராமன் தனது செந்தாமரைமலர் போன்ற திருக்கையினால் அணைத்துக்கொண்டு இனிது வீற்றிருந்தனன்.

அப்பொழுது இலக்கணப்படி திருந்திய தாளவொலியும் மற்றை வாத்தியங்களின் இசையும் திறம்பாது தழுவும்படி விளம்பிதமாகவும் துருதமாகவும் மத்யமாகவும் வைக்கும் மூவகைப்பட்ட காலடைவுமுறைகளையும் தவறாமல் தனித்தனி காட்டி, பலவகையாக அபிநயங்காட்டுகிற தமது கைகள் செல்லும் வழியே தமது கண்களின் குறிப்புநோக்கம் செல்லவும், அக்கண்களின் பார்வை செல்லும்வழியே மனத்தின் குறிப்பும் செல்லவும், அழகியமாதர், காண்போர் அதிசயத்தாலும் ஆனந்தத்தாலும் இன்னது புரிவதென்று அறியாது திகைக்கும்படியும், சுவர்க்கலோகத்து வாழ்கின்ற ஊர்வசி அரம்பை முதலிய அமரமாதர் தமது நாட்டியம் இதற்கு ஒப்பாகாதென்று நாணிநிற்கும்படியும் நடனஞ்செய்தனர். எழுவகைப்பட்ட இசைகளுக்குக் காரணமான எழுஎழுத்துக்களையுடைய பண்களுக்கு இசைந்தவையான தாளமும் மற்றை வாத்தியங்களும் மாறுபடாமல் ஒற்றுமையாய்த் தழுவும்வண்ணம், அமையச் சுருதிகூட்டி வைத்து, கீதவுருக்களை வாய்விட்டுப் பாடத்தொடங்கி, கண்களும் புருவங்களும் தோள்களும் கண்டமும் அசைந்து விகாரமடையாதபடி, இசைநூல்முறை வழுவுதலின்றி, வேய்ங்குழலினிசையோடும் யாழினிசையோடும் வேறுபாடின்றிக் கலக்கத் தானவடைவுமுறை தவறாமல், அருகிலுள்ள சராசரமனைத்தும் உருகும்படி துதிபாடகர் இசைபாடினர்.

இராமபிரான் அத்தகையசங்கீதத்தை இனிது கொண்டாடி, பெறுதற்கரிய செல்வத்தையும் ஆடைகளையும் ஆபரணங்களையும் அத்துதிபாடகர்க்குக் கொடுத்து, பிராட்டியோடும் பலவகை மலர்களைக் கொய்து, நீர்விளையாட்டிற் சிறிது பொழுதுபோக்கி, பின்பு அமுதம்போன்ற உணவை இனிது அருந்தி, பிறகு அரண்மனையிற் சேர்ந்துதங்கி, இங்ஙனமே மனைவியும் தானுமாக நாடோறும் விளையாடிக் களித்திருந்தான்.



(இன்னும் வரும்.)

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.

## Review of the Press.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### THE BILE AND ITS USES.

### பித்தநீரும் அதன் உபயோகமும்.

மேற்குறித்த விஷயத்தைப்பற்றி சமீபத்தில் வெளிவந்த "வைத்திய கலாநிதி" யில் ஒரு நிருபர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

பித்தநீரானது ஒருவித எண்ணெய்ப்பசையுள்ள வஸ்து. யக்ருத் என்கிற கல்லீரலால் விரைகளில் (சிறப்பு இரத்தக்குழாய்களில்) ஓடும் இரத்தத்திலிருந்து உண்டாக்கப்படுகிறது. கல்லீரலின் பிரதானமான சிற்றறைகள் தமது இயற்கையான ஜீவசக்தியினால் இந்த பித்தத்தை குடல்-ப்லீகங்களிலிருந்து கல்லீரலுக்குப் போகும் விரையிலிருந்து (Portal vein) வேறுபடுத்தி வெளியாக்குகின்றன. இந்த திரவம் முதலில் சின்னஞ்சிறிய பித்தநீர்க்குழாய்களில் விழுந்து. அப்பால் அச்சிறு குழாய்கள் ஒன்றுசேர்ந்து பரிணமித்த பெரியதோர் பித்தக்குழலின் மூலமாகச் சென்று, சிறுகுடலின் ஆரம்பபாகத்தில் அதன் உள்ளே விழுகின்றன. இரைப்பையில் ஒருவாறு ஜீர்ணமாய் சிறுகுடலில் விழும் உணவோடு இப்பித்தநீர் கலந்து, அவ்வுணவு தாதுக்களால் உறிஞ்சப்படுமாறு அதைப் பக்குவப்படுத்துவதே இதன் முக்கியமான காரியமாகும். குடலில் உணவோடு கலக்கும் பித்தநீரில் சிறுபாகம் அத்துடன் தேகத்திலேயே சேர்ந்துவிடும்; அவ்விதம் குடலால் உறிஞ்சப்பட்டு மிச்சமான பாகமெல்லாம் ஜீர்ணமாகாமல் மிகுந்திருக்கும் உணவின் கழிவுகளோடு மிச்ரமாய், மலத்திற்கு ஒருவித நிறத்தையும் கொடுத்து வெளியில் வந்துவிடும். ஜீர்ண வேலை குடலில் நடக்காத நேரங்களில், பித்த தாநாடி (Cystic duct) என்கிற பித்தக்குழலிலுள்ள மற்றொரு கிளையின் மூலமாய் பித்தாசயம் (Gall bladder) என்கிற பித்தப்பையில் சேர்ப்பிக்கப்பட்டிருக்கும்; இப்படிச்சேர்ந்துள்ள பித்தம் பிறகு குடலில் அவசியமான ஸமயங்களில் பொசிந்துவிழும்.

ஆமாசயம் என்கிற இரைப்பையினால் ஒருவாறு குழைக்கப்பட்ட அநேக வகையான உணவுப்பொருட்களின் குழம்பை இரஸமாக (Chyle) மாற்றுவது பித்தநீரின் முக்கியமான உபயோகங்களில் ஒன்றாகும். இது குடலின் இயற்கையான நெளியும் வேலையைத் துரிதப்படுத்துவதற்குத் தூண்டுதலாகவும் இருந்து, அதன் உள்ளடங்கிய பண்டங்களை மேன்மேலும் விரைவில் தள்ளிக்கொண்டு போகவும் செய்கிறது; ஆகவே எப்பொழுது பித்தம் குறைவுபடுகிறதோ, அப்பொழுது குடல் மிகவும் மந்தப்பட்டு பொருமலுடையதாயிருப்பது வழக்கம். ஒவ்வொரு பிராணியினுடைய பித்தம் ஒவ்வோர் இயல்புடையதாயிருக்கும்; அப்பித்த நீர்களில் அடங்கிய இரஸாயனக் கூறுகளும் பலவாறு பேதப்படும்.

மனிதருடைய பித்தம் பிசுபிசுப்பான ஒருவித திரவம்; பசுமை அல்லது பழுப்பான மஞ்சள் நிறமானது; அருவருப்பான வாசனையுடையது; கைப்பும் குமட்டலுண்டாக்குவதுமான சுவையுள்ளது. தண்ணீரில் ஊற்றினால், இது அமிழ்ந்து அடியில் போய்ச் சேரும்; நாம் கிளறிக் குழப்பினாலேயொழிய தண்ணீரோடு உடனே ஒன்றாகக் கலந்துவிடுவதில்லை; அவ்விதம் கலக்கிக் கலந்துவிட்டால், சவர்க்காரம் தேய்த்த தண்ணீரைப் (Solution of Soap) போல் அந்த ஜலம் நுரைத்துப்போகும். பெர்ஸிலியஸ் என்பவருடைய கொள்கைப்படி இப்பித்தம் அடியில் குறிப்பிடப்படும் அளவில் இரஸாயனக் கூறுபாடுகள் அடங்கியுள்ளது.

பித்தத்தின் பங்கு 1000 ஆனால் அதில்—

| | |
|---|---|
| தண்ணீரின் பங்கு ... ... | 904-4 |
| பிலேன் என்னும் பித்தச்சத்து (கொழுப்பு நிறப்பொருட்களும் சேர்ந்து) ... | 80 |
| சிலேஷ்மவஸ்து (விசேஷமாய் பித்தப் பையிலிருந்து ஊறுவது)... ... | 3 |
| உப்பு வகைகள் ... ... ... | 12-6 |

தேகத்தில் மற்றைத் திரவ ஊற்றுக்களைப் போலவே (Secretions) பித்தநீரும் வியாதி நிலைமைகளில் அதன் இரஸாயனக் கூறுபாட்டில் மாறுதல் அடையும். வயிற்றைப்பற்றிய வியாதிகளிலும், இருதய ரோகங்களி

னும் விரைகள் என்னும் காரித்தக் குழாய்களில் இரத்தவோட்டம் தடைப்படுமாகையால், பித்தத்தில் கெட்டிப் பொருள்கள் அதிகரித்துவிடும்; சுமையான வீக்கங்கள் காணும்போது, கெட்டிப்பொருள்கள் அதில் குறைவாயிருப்பதாகத் தெரியவரும். கல்லீரல் என்னும் அவயவத்தின் இயற்கைச் செயல்களில் கோளாறு சம்பவிக்கும்போது, பித்தமானது இரத்தத்தில் ஊறி தேகத்தில் பரவிவிட, அதனால் சர்மம் பசுமை நிறம் அடைந்துவிடும்; அதுதான் காமாலை யெனப்படுகிறது. கல்லீரல் மந்தமாகப்போய் அல்லது வேறுவித வியாதியைப் பெற்றால், பித்த நீரின் ஊற்று வெகு ஒழுங்கீனமாக ஆய்விடுமாகையால், அப்பொழுது அம்மனிதன் பித்தமாயிருப்பதாகக் கூறுவான்; அதாவது பித்தக் கோளாறு நேர்ந்திருக்கின்றது என்போம்.

சிறந்த ஊறுகாய், நல்ல மணமுள்ள ஸம்பாரப் பொடிகள், மது, பாதரஸம், எலுமிச்சம் பழச்சாறு இவ் வஸ்துக்களாலும், உஷ்ணத்தினாலும் பித்தநீர் அதிகமாய் சுரக்கும்; சோம்பித்திரிபவருக்கும் அதிகமாய் உற்பத்தியாவதுண்டு. இலகுவாகவும், அளவில் சொற்பமாகவும் உள்ள உணவுகளாலும், சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்வது அல்லது வியாயாமங்களைச் செய்வதாலும் அதிகாலையில் எழுந்திருப்பதாலும் பித்தநீரின் பொசிவு ஒருவாறு குறையும்.

## IHAPARASUKAM. *

## இஹபரஸுகம்.

தீயோர்க்கும் நன்மையே செய். ஒருவன் ஒரு தாடையில் அடித்தால் மற்றொரு தாடையையும் காட்டு. விரோதிகளிடத்திலும் பக்ஷமே பாராட்டு. சபிப்பவர்களுக்கும் ஆசீர்வாதமே செய். உன்னை ரொம்பவும் இம்சை செய்பவர்களுக்கு நற்புத்திகொடுத்து அவர்களை ரக்ஷிக்கும்படி பகவானை வேண்டிக்கொள்.

காரணமில்லாமல் எனக்குத் தீங்கிழைப்பவனுக்கும் என்னாலாகிய நன்மையே செய்வேன். ஒரு சிறிதும் அவனை வெறுக்கமாட்டேன். வெறுப்பை வெறுப்பினால் ஜயிக்கமுடியாது. அன்பினால் ஜயிக்கலாம். தீமையை நன்மையால் வெல். பொறாமை பிடித்தவர்களிடம் தாராள குணத்தைக் காட்டு. பொய்யனுக்கு உண்மையின் உயர்வை உபதேசம்செய். பதிலுக்குப்பதில் தீமைபுரிபவர்களுடைய குணம் எப்பொழுதும் சுத்தமாகாது. கொடியோன் புரியும் தீச்செயல்கள் விருத்தியாவதுபோலவே, நாம் அவனுக்கியற்றும் நற்செயல்கள், உபகாரங்கள் அதிகமாகவேண்டும்

கெட்ட எண்ணங்களுக்கு மனதில் இடங்கொடாதே. அவை உட்புகுந்தால் உடனே ஓட்டிவிடு. எப்படியெனில், தோன்றும் தீய எண்ணத்திற்கு நேர் விரோதமானதோர் நல்லெண்ணத்தால் முன் சொன்னதை மாற்று. இப்படியே பலநாள் பழகினால் மனத்தின் மாசு அகன்று, தோன்றும் கெட்ட நினைவுகள் எண்ணங்களை தனக்குத்தானே சுத்தமனமானது நல்லவைகளாக மாற்றிவிடும்.

பசுவைக் கொல்லாதே. கொடுமை புரியாதே. பிற உயிர்களைப் போற்று. எல்லோருக்கும் நன்மை செய். கடவுளை அறிபவனே கடவுளாவான். ஸர்வ வல்லமையுள்ள கடவுள் ஒருவரே. அவரே அணுவிலும் மகத்திலும் இருப்பவர்.

தன்னயங் கோருவதைவிட்டு பிறர் நன்மைக்காகவே பாடுபடும் ஞானிதான் ஆத்ம ஞானத்துக்கு அருகனாவான்.

ஆசாரங்களனைத்திலும் தேகசுத்தி முதன்மையானது. உலக ஆசைகளை முற்றிலும் விட்டு, ஸர்வத்தையும் படைத்து ரக்ஷிக்கும் ஸ்ரீ ஹரியின் பாதாம்புஜத்திலேயே இதயத்தை ஸதா செலுத்தினாலல்லது உயிர்த்திருப்பதில் உபயோகமில்லை.

முகம் சுருங்கிவிட்டது தலையும் நரைத்தது. கைகால்கள் பலங்குன்றித் தளர்ந்தன. ஆசைமாத்திரம் யௌவன பருவத்திலிருப்பதுபோலவே பொங்கித் ததும்புகின்றது.

அஞ்ஞானத்தை ஒழிப்பது என்றால் கடவுளைக் காண்பது என்று அர்த்தம். எவ்வித கவலைகளும் பயங்களும் ஒழிந்து உண்மையில் இருக்கும் ஏக வஸ்துவாகிய சிதானந்த ரூபியைத் தானாகவுணருதலே ஆத்மஞானம்.

தனக்கன்னியமின்றி தன்னுள்ளேயே நான் (பகவான்) இருப்பதாக எவன் சிந்தித்திருக்கிறானோ அவனுக்கு வேண்டிய தினசரி சௌகரியங்களை ஏற்படுத்தும் பாரம் என்னுடையதால் வகிக்கிறேன். என்னையே சர்வத்திலும் கண்டு என்னுள் சர்வமுமிருப்பதை எவன் காண்கிறானோ அவனை ஒருபொழுதும் கைவிடமாட்டேன், அவனும் என்னை விடமுடியாது.

* இது முப்பது மகாத்மாக்கள் எழுதியுள்ள நூல்களினின்றும்; உபனிஷத்துக்களினின்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட 100-நீதிகளடங்கிய ஓர் இனிய நூல். இதிலடங்கிய ஒவ்வொரு நீதியும் ஆழ்ந்த கருத்தைக் கொண்டது. இது ஒவ்வொருவரும் படித்தறியவேண்டிய சிறு நூலாகும். இதன் விலை அணா 2. வேண்டுவோர்: ஸீ. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர். என்று எழுதிப்பெறலாம்.



# Notes.

# குறிப்புக்கள்.

## இந்தியக் கைத்தொழில்களின் தற்காலத்திய நிலைமை.

இந்தியாவில் கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையான இயற்கைப் பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. அப்படியிருந்தும், அவை இங்கேயே கைத்தொழிற் செய்யப்படாமற் பெரும்பாகம் அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்விஷயமாய் ஏற்பட்டுள்ள சில கணக்குகளை இங்குக் குறிப்பிடுகிறோம்.

1. இந்தியாவில் உப்பு உற்பத்தி செய்வதற்கான சௌகரியங்கள் ஏராளமாக இருக்கின்றன. அவ்விதமிருந்தும் நமது உபயோகத்திற்காக பிரதி வருஷமும் 4,00,000 பவுன்கள் மதிப்புள்ள உப்பு பிறநாடுகளினின்று இறக்குமதி செய்கிறோம்.

2. நமது தேசத்தில் கரும்புப் பயிர்செய்வதற்கான வசதிகள் ஏராளமாகவிருந்தும் நாம் பிரதி வருஷமும் அன்னிய நாடுகளினின்று 6,00,000 பவுன்கள் சர்க்கரை இறக்குமதி செய்கிறோம்.

3. தேசமுழுவதும் இரும்பு கிடைக்கக்கூடிய சுரங்கங்கள் அநேகம் இருக்கின்றன. ஆனால் அவற்றில் வேலைசெய்யும் முறைகளைச் சிலரே அறிவார்கள். இக்காரணத்தினால், நமக்குத் தேவையானவற்றை வெளிநாடுகளினின்றே பெறுகிறோம்.

4. பிரதிவருஷமும் இத்தேசத்தில் உற்பத்தியாகும் ஏறக்குறைய 10,000,000 பவுன்கள் மதிப்புள்ள தோல்கள் அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவை அங்குக் கைத்தொழில் செய்யப்பட்டு மீண்டும் இந்த இறக்குமதி செய்யப்படுகின்றன.

5. நமது தேசத்திலிருக்கும் சுரங்கங்களினின்று பற்பல உலோகங்கள் கிடைக்கின்றன; அவற்றினின்று போதியளவு இரஸாயனப் பொருள்களைச் செய்துகொள்ளலாம். ஆனால், ஒவ்வொரு வருஷமும் 4,00,000 பவுன்கள் மதிப்புள்ள இரஸாயனப் பொருள்களை வெளிநாடுகளினின்று இறக்குமதி செய்கிறோம்.

6. இந்தியாவில் சாயம் போடுவதற்கு உபயோகமான வஸ்துக்கள் ஏராளமாக உற்பத்தியாகின்றன. முன்னே இக்கைத்தொழிலானது வெகு பிரபலமாக நடத்தப்பட்டு வந்தது. ஆனால், ஜெர்மானியரின் போட்டியால் இது நசித்துப்போய்விட்டது. இப்போது வருஷந்தோறும் பிறநாடுகளினின்று 7,00,000 பவுன்கள் மதிப்புள்ள சாயச்சரக்குக்களை வாங்கி வருகிறோம்.

7. இத்தேசத்தின் பல பாகங்களிலும் கண்ணாடிகள் செய்வதற்கான வசதிகள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் அவை எவ்விதத்திலும் உபயோகப்படுத்தப்படுவதில்லை. இதனால் வெளிநாடுகளினின்று 8,00,000 பவுன்கள் மதிப்புள்ள கண்ணாடிச் சாமான்களை வருஷந்தோறும் இறக்குமதி செய்கிறோம்.

8. காகிதம் செய்வதற்கான இயற்கைப் பொருள்கள் இங்கு ஏராளமாக இருக்கின்றன; இவற்றில் கொஞ்சம் அன்னிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்விதமிருந்தும், நமக்குத் தேவையான காகிதங்களை வெளிநாடுகளினின்றே இறக்குமதி செய்கிறோம்.

9. நமது தேசத்தில் உற்பத்தியாகும் பருத்தி, சணல், உரோமம் முதலியன அதிகமாக அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவை அங்குக் கைத்தொழில் செய்யப்பட்டு மீண்டும் இங்கு இறக்குமதியாகின்றன.

10. எண்ணெய் வித்துக்களை இங்கிருந்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, இவற்றிற்குப் பதிலாக எண்ணெயை இறக்குமதி செய்கிறோம்.

## செயற்கை மரம்.

மரங்களின் விலை நாளுக்குநாள் அதிகப்பட்டுக்கொண்டே வருவதால், ஸமீபத்தில் ஒரு ப்ரெஞ்சு நிபுணர் செயற்கைமரம் தயார்செய்யும் முறையை கண்டுபிடித்திருப்பதாகவும், இந்த முறையானது சுலபமாயும் செலவு குறைந்ததாயுமிருப்பதாகவும் "ஜனோபிமானி" பத்திரிகை எழுதியிருக்கின்றது. இப்பத்திரிகையில் காணும் விவரம் வருமாறு:—

செயற்கை மரம் செய்ய உபயோகிக்கும் மூலப்பொருள் வைக்கோலாகும். வைக்கோலை முதலில் அதற்கென்று செய்யப்பட்ட ஒரு கருவியால் நீளப்போக்கில் கிழித்துவிடுகிறார்கள். பிறகு அதை ஒரு யந்திரத்தில் போட்டு அதோடு வேறு சில சாமான்களையும் சேர்க்கிறார்கள். பிறகு சீராவியால் ஒரு குறிப்பிட்ட அளவு உஷ்ணம் கொடுக்க வைக்கோலும் அதோடு வைத்திருக்கும் பொருள்களும் சமமந்து பதமாகின்றன. வேண்டிய அளவுக்கு பக்குவமானபிறகு, அதன்மேல் பாரம் வைத்து அமிழ்த்துகிறார்கள். ரொம்பவும் அமிழ்த்தினால் வைக்கோலின் நாரும் அதோடு சேர்த்திருக்கும் பொருள்களும் ஒன்று சேர்ந்து கெட்டியான பலகை போலாகிறது. எவ்வளவு பருமனாகவும் அகலமாகவும் வேண்டுமானாலும் மரத்தை உண்டுபண்ணிக்கொள்ளலாம். யந்திரத்திலிருந்து மரம் வரும்போது மிகவும் நீளமாக இருக்கும் வேண்டிய நீளத்திற்கு அதைத் துண்டுகளாக நறுக்கிக்கொள்ளலாம்.

இது பார்வைக்குச் சாதாரண மரம்போலவே இருக்கும். ரம்பத்தால் அறுத்தால் சரியாக அறுபடும். சிறாம்புகள் உண்டாகா. அது சுமாராய் உறுதியுள்ளது. பற்பல வேலைகளுக்கு அதை உபயோகிக்கலாம். வேலைக்கு உபயோகிக்கையில் அது நொறுங்கி உடைந்து போவதில்லை. இந்த செயற்கை மரத்தை விறகாகவும் உபயோகப்படுத்தலாம். இது விறகுகளைவிட இது மலிவாம். இது அதிக புகைக்கட்டாமல் நல்ல ஜ்வாலையுடன் எரிவதோடு அதிக உஷ்ணமும் கொடுக்கிறதாம்.

## Books and Reviews.

### புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

[மானிட ஜீவிய சிந்தாமணி:—கும்பகோணம் டாக்டர் எஸ். சந்திரசேகர் எழுதியது. விலை ரு. 2—0—0.]

இவ்வரிய நூலில் மானிட தேகத்தின் ஒவ்வொரு பாகத்தைப் பற்றியும் பல சித்திரப்படங்களைக்கொண்டு விரிவாக எழுதப்பட்டிருக்கின்றது. ஒவ்வொருவரிடத்திலும் இந்நூல் இருக்கவேண்டியது அவசியமாகும். வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர் என்று எழுதிப்பெறலாம்.

[தாதாபாய் நௌரோஜி:—சென்னை ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டது. விலை அணா 3.]

நமது தேசத்தின் முன்னேற்றத்திற்காக இந்நாட்டில் மாத்திரமல்லாமல் பிறநாட்டிலும் தமது ஆயுள் முழுவதும் பாடுபட்ட இம்மகானின் ஜீவிய சரித்திரம் எல்லோராலும் படித்தறிந்துகொள்ளுமாறு மிகவும் எளிய தமிழ் நடையில் இனிமையாக எழுதப்பட்டுள்ளது. இன்னும், இதில் அவர் எழுதிய ஸ்வ சரித்திரமும், அவரது குணாதிசயங்களும் அடங்கியுள்ளன. வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர் என்று எழுதிப் பெறலாம்.

[ஸலோமீ:—கே. ம. சுந்தரராஜாச்சாரியார் எழுதியது; சென்னை ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனியார் பிரசுரித்தது. விலை அணா 2.]

இது ஹிந்து புராதன கதைகளில் ஒன்று; சிறுவர் சிறுமியர் முதல் எல்லோரும் வேடிக்கையாகப் படிக்குமாறு எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர் என்று எழுதிப் பெறலாம்.

[வளையல் உடன்பாடு:—சென்னை ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனியார் பிரசுரித்தது. விலை அணா 2.]

இது வீரரசம் பொருந்திய ஒரு ரஜபுத்ரக் கதை. நமது சிறுவர் சிறுமியர் அவசியம் படிக்கவேண்டிய புஸ்தகமாகும். வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர் என்று எழுதிப் பெறலாம்.

19


# ஜனோபகாரி.

## (JANOPAKARI)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.


24 APR 1918

புஸ்தகம் 3. Vol. III. } பிங்கள ஞு மாசி மீ, FEBRUARY 1918. ஸஞ்சிகை 2. No. 2.

## JANOPAKARI.

A high class illustrated Tamil Monthly Review devoted mainly to social, Literary, Educational and Economic topics of interest.

Selections from important speeches and papers on Economic subjects; notes of the month on Economic matters.

Pages for Boys and Ladies: A speciality.

### Rates of Subscription (Post Free.)

| | | Inland. | Foreign. |
|---|---|---|---|
| Per annum | Rs. | 3 0 0 | 4 8 0 |
| Single copy | ,, | 0 5 0 | 0 6 0 |
| Sample copy | ,, | 0 1 0 | 0 2 0 |

### Rates of Advertisement.

| | | | |
|---|---|---|---|
| 1 page. | Rs. | 8 0 0 | per month. |
| ½ ,, | ,, | 4 0 0 | ,, |
| ¼ ,, | ,, | 2 0 0 | ,, |

All orders for advertisement must accompany with advance.

**To Contributors**:—Contributions on subjects specified above will be received for publication. The articles should be written in plain colloquial Tamil with ink on one side of the paper only. Accepted articles will be paid for on publication. The copyright and right of translation of the articles paid belongs to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

All letters, contributions and remittances etc should be addressed to the Proprietors:

V. N. SAMA RAO & Co.,

VELLORE, (SOUTH INDIA.)

## ஜனோபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்து வரும் ஓர் சிறந்த சித்திரப்படங்கள் அடங்கிய தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இதில் கல்வி, விவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூட்டுறவு ஆகிய இவைகளைக்குறித்த பல விஷயங்களும், ஜனசமூகத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்களும், சிறந்த நீதிகளைப் போதிக்கவல்ல நாவல்களும் நாடகங்களும், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்களும், நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்களும், ஸ்திரீகளுக்கும், சிறுவர்களுக்கும் உபயோகமான பல விஷயங்களும் சிறந்த கற்றறிந்தவர்களால் மிகவும் தெளிவான நடையில் எழுதப்பட்டு வருகின்றன.

### தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

| | | உள்நாடு. | வெளிநாடு. |
|---|---|---|---|
| ஒரு வருஷத்திற்கு | ரூபா | 3—0—0 | 4—8—0 |
| தனிப்பிரதி | ,, | 0—5—0 | 0—6—0 |
| மாதிரிகாபி | ,, | 0—1—0 | 0—2—0 |

### விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1-பக்கத்திற்கு | மாதம் 1-க்கு | ரூபா | 8—0—0 |
| ½ ,, | ,, | ,, | 4—0—0 |
| ¼ ,, | ,, | ,, | 2—0—0 |

வியாசமெழுதுவோர் கவனிக்கவேண்டியவை:—வியாசம் எழுதுபவர்கள் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங்களைப்பற்றி எழுதலாம். ஒவ்வொரு வியாசமும் காகிதத்தின் ஒரே பக்கத்தில் அரைப்பாதியில் எழுதியிருத்தல்வேண்டும். கடினமான தமிழ் உதவாது. வியாசங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டால், பிரசுரமானதும் எழுதியவர்களுக்குத் தக்க சம்பாவனை செய்யப்படும். சம்பாவனை செய்திருக்கும் வியாசங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வியாசங்களைத் திரும்பவேண்டுவோர், தபால் ஸ்டாம்புகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லாக்கடிதங்களும், சந்தாப்பணம் முதலானவைகளும்கீழ்க்கண்டவிலாசத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,

இராயவேலூர், (தென்னிந்தியா.)

# How to Teach young Children?

BY MR. N. R. KEDARI RAO M.A., L.T.

## சிறுவர்களுக்குக் கல்வி போதிப்பதெப்படி?

'சிறுவர்களுக்குக் கல்வி கற்பிப்பது வெகு சுலபமானது' என்று பலரும் எண்ணியிருத்தல் கூடும். யோசித்துப்பார்க்கின், அது அப்படியன்று. பெரிய வகுப்புகளுக்குச் சொல்லிக் கொடுப்பதைக்காட்டிலும், சிறிய வகுப்புக்களுக்குச் சொல்லிக்கொடுப்பதே சிரமமானது என்று தெரியவரும்; ஏனெனில், நாம் எந்த விஷயத்தைப் பற்றிப் பேசுகிறோமோ அந்த விஷயம் மாத்திரம் நமக்கு நன்றாய்த் தெரிந்திருந்தால், அதை நாம் எப்படிச்சொன்னாலும் பெரிய பிள்ளைகளுக்கு அர்த்தமாய்விடும். அதே விஷயத்தைச் சிறுவர்களுக்குக்கூடத் தெரியும்படி சொல்லுவதற்கு மிகுந்த சாதுரியம் வேண்டும். உதாரணமாக: குழந்தைகட்குக் கசப்புமருந்து என்றால் பிடிக்காது. ஆனால், அதைச் சர்க்கரையில் கலந்து கொடுத்தால் சுலபமாய்ச் சாப்பிட்டுவிடும். அதே மாதிரியாக, கடினமான கல்வியையும் உருசியுண்டாகும்படி கற்பித்தால், குழந்தைகள் சுலபமாய் அவற்றை ஏற்கும். எந்த உபாயங்களினால் கல்வியை உருசியுண்டாகும்படி செய்யலாம் என்று யோசிப்போம்.

முதன்முதலில் கல்வி என்றால் என்ன? முற்காலத்தில் எழுதப்படிக்கத் தெரிந்திருப்பது, கணிதம், தர்க்கசாஸ்திரம், தர்க்கசாஸ்திரம், வியாகரணசாஸ்திரம் முதலியவைகளே கல்வி என்று நினைத்திருந்தார்கள். இப்பொழுதோ, ஊர் நடவடிக்கை முதற்கொண்டு இயற்கை யற்புதங்கள், சித்திரம்வரைதல், பூகோள சாஸ்திரம், நம் தேச சரித்திரம், வியாபார விஷயத்தில் பேரேடு முதலிய கணக்குகளை ஸரிவர வைத்துக்கொள்ளும் விதம், தச்சு வேலை, கொல்லத்துவேலை முதலிய தொழில்கள்—இவையெல்லாம் கல்வி யென்றே பெயர் பெற்றிருக்கின்றன. தவிரவும், முன்னாளில் 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்னும் வாக்கியத்தையே உபாத்தியாயர்கள் எப்போதும் அனுஷ்டித்து வந்தார்கள். அதன் பயன் என்னவென்றால், குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் போவதென்றால் தலைவலி வந்துவிடும். உபாத்தியாயரைக்கண்டால், உடம்பெல்லாம் நடுநடுங்கும். தற்காலத்திலோ பிரம்பை ஒரு உபாத்தியாயரும் உபயோகிக்கிறதில்லை; குழந்தைகளை அடிக்கிறதில்லை. அவர்களைப் பக்ஷமாகப் பாராட்டியே கல்வி கற்பிக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். மூன்றாவது, முற்காலத்தில் பள்ளிக்கூடங்களில் உலக விஷயங்களைப்பற்றி ஒன்றுமே சொல்லிக்கொடுப்பதில்லை. இப்பொழுதோ, ரெயில்வே, தபால், தந்தி, முனிஸிபாலிடி முதலிய உலகவிசார ஸம்பந்தமான பல விஷயங்களையும் சொல்லிக்கொடுக்கிறார்கள். நான்காவது பண்டைக்காலத்தில் ஒரு பையனுடைய புத்திசாலித்தனத்தையே அதிகரிக்கவேண்டுமென்று கருதியிருந்தார்களே தவிர, அவனுடைய தேகஸ்திதியைப்பற்றிக் கொஞ்சமும் கவனிக்கவேயில்லை. இப்பொழுதோ, ஒருவனுக்கு உடம்பில் திறமையிருந்தால்தான் அவன் மனம் நன்றாய் வேலை செய்யும் என்பதைத் தெரிந்துகொண்டு, தேகாரோக்கியத்துக்கு வேண்டிய விளையாட்டுக்களையும், டிரில் ஜிம்னாஸ்டிக்ஸ் முதலிய விஷயங்களையும் புதிதாய் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

முற்கால நிலைமைக்கும் தற்கால நிலைமைக்கும் இவ்வளவு வித்தியாசம் ஏன் இருக்கிறது என்பதை ஒருவர் ஆராய்ந்தால், அவருக்குப் பல நுட்பமான சங்கதிகள் தெரியவரும். முன்னாளில் ஒரு உபாத்தியாயர் தான் எந்தப் பாடத்தைச் சொல்லிக்கொடுக்கிறாரோ அதில் மாத்திரம் நிபுணரே யொழிய, குழந்தைகளின் இயற்கை என்ன? எவ்விதமாய்ச் சொல்லிக் கொடுத்தால் அவர்களுக்கு நன்றாய்த் தெரியவரும்? என்பனவற்றைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இப்பொழுதோ, குழந்தைகளின்



குணநிசயங்களைப் பற்றி ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் தெரிந்திருப்பது அவசியம் என்று ஏற்படுத்திவிட்டார்கள்.

அவ்வண்ணம் நோக்கின், குழந்தைகளுக்கு ஆறாவது வயதளவும் மூளை குறைச்சலாயிருக்கிறது என்று தெரியவருகிறது; ஆகையால், ஞாபகசக்தியும் குறைவே. ஏதாவது ஒரு சப்தம் உண்டானால், சப்தம் உண்டாயிருக்கிறது என்று தெரியுமே தவிர, அது எங்கிருந்து உண்டாகிறது, எதனால் உண்டாகிறது என்ற விவரம் அவற்றிற்குத் தெரியாது; இந்த விஷயம் சம்பாவிதம் என்றும், இந்த விஷயம் அசம்பாவிதம் என்றும் தெரியாது; நாம் என்ன செய்கிறோமோ அப்படியே நம்மைப்பார்த்துச்செய்யுமே தவிர, தானாக ஒன்றும் செய்யத்தோன்றாது. ஆறு வயது முதல் எட்டு வயது வரையில் தேகம் பருத்து வளரும்; ஆதலின், புத்தி அதிகமாக இடமில்லை. எட்டு வயது முதல் பன்னிரண்டு வயது வரையிலோ புத்தியானது வெகு சீக்கிரமாக வளரும்; தேகத்தில் களைப்பே தோன்றாது. நன்னடக்கைகளைப்போதிப்பதற்கு இதுவே உயர்ந்த காலம்; ஞாபகசக்தியும் அதிகம். ஆகையால்தான் எந்தப்பாடத்தையும் நெட்டுருப் போடுவது சுலபமாயிருக்கும். இளமெழுகில் பிரதி எப்படி அமையுமோ அப்படியே மனதில் எவ்விஷயமும் நன்றாய்ப் பதியும். பெரியோரைப் பேணுதல், சுறுசுறுப்பு, உண்மை பேசுதல் முதலிய நற்குணங்களையெல்லாம் இப்போது சொல்லிக்கொடுத்தால்தான் வாழ்நாள் முழுதும் நன்கு அமைந்திருக்கும். 'விளையும்பயிர் முளையிலே' என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோமல்லவா? இவ்விஷயங்களையெல்லாம் இப்போது கற்பிக்காவிட்டால், பிற்பாடு அவர்கள் கற்பது மிகவும் கஷ்டமாயிருக்கும்.

பன்னிரண்டு வயது முதல் பதினைந்து வயது வரையில் தேகவளர்ச்சி ஜாஸ்தியாயும், புத்தி தீக்ஷண்யம் கொஞ்சம் குறைச்சலாயும் இருக்கும். மறுபடியும், பதினைந்து வயது முதல் பதினெட்டு வயது வரையிலும் புத்தியானது வெகு தீவிரமாய் வளரும். பையன்களுக்கே கல்வியில் உருசி தோன்றும் காலம் இதுவே. விளையாட்டு விஷயங்கள் நீங்கி, ஒரு காரியத்தின் முன்பின் விஷயங்களை ஆலோசிக்கும் திறமையும் இப்பொழுதுதான் உண்டாகும். 'நாமும் கல்வியிற் தேர்ந்தவராய், யாவரும் புகழும்படி சற்காரியங்களைச் செய்யவேண்டும்' என்ற அவா இப்பொழுதுதான் அவர்களுக்குத்தோன்றும். அவர்களுக்கு நாம் 'இப்படிச்செய்வது உத்தமம்' என்று சொல்லலாமே தவிர, 'இப்படித்தான் செய்யவேண்டும்' என்று கட்டாயப்படுத்தக்கூடாது. அப்படிச்செய்தால், பிள்ளைகள் வணங்காமுடியாய் விடுவார்கள். அவர்களுக்கு மனம் ஒரு நிமிஷ நேரமும் சும்மா இராது; 'துருதுரு' என்று தத்தளித்துக்கொண்டேயிருக்கும். ஆதலின், இவ்வயதில் துன்மார்க்கர்களோடு பையன்களைச் சகவாசஞ்செய்ய விடவே கூடாது; சத்சங்கம் இன்றியமையாதது; மனதின் துருதுருப்பை நல்ல வழியில் செலுத்தினால்தான் நன்மையுண்டாகும். வகுப்பில் சட்டாம்பிள்ளை வேலையைக்கொடுத்தல், சிறுவர்கள் விளையாடுவதை மேற்பார்வை பார்த்தல் முதலிய சிறுவேலைகளை அவர்களுக்குக் கொடுத்து மனத்துருதுருப்பை உபயோகிக்கச் செய்வது மிகவும் உசிதமாகும்.

மேற்கூறியவைகளினின்று, சிறு பிள்ளைகளின் குணம் பெரியபிள்ளைகளின் குணம் இவ்விரண்டிற்கும் பலவித வேறுபாடுகள் இருக்கின்றன வென்று விளங்குகின்றதன்றோ? ஆதலின், பெரியவர்களுக்குக் கல்விகற்பிக்கும் விதமாகவே சிறுவர்க்கும் கல்வி கற்பித்தல் பெரிய பிசகாகும். ஆயினும், இந்த விஷயம் வெகுபேருக்குப் பலநாள்வரையில் தெரியாமலிருந்தது. இப்போது நூறு நூற்றிருபது வருஷங்களாகத்தான் இவ்விஷயத்தைப்பற்றிப் பலரும் சிரத்தையோடு யோசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஜெர்மனியில் 'பிரோபல்' என்ன (Froebel), பிரான்ஸில் 'ரூஸோ' என்ன (Rousseau) இத்தாலியாவில் 'மாண்டிஸோரி' (Madame Montessori) என்ன இவர்களெல்லோரும் இதை ஆராய்ச்சி செய்து அரிய பல நூல்களை எழுதியிருக்கிறார்கள்.

அவர்கள் சொல்லும் விஷயங்கள் எல்லாவற்றையும் நாம் கிரஹிக்காவிடினும், நமது தேச கால வர்த்தமானங்களுக்கு உரியவை எவை என்பதை மட்டும் ஆராய்ந்து அறிதலே மேன்மை.

## FROEBEL.

## ‘பிரோபல்’

“ பாலர்க்குப்—பாலனும்,
நேயர்க்கு—நேசனும்,
கற்றோர்க்குக்—கல்வியாம்,
நல்லோர்க்கு—நலனேயாம்,
என்னீசனே! பரமேசனே! ”

‘பிரோபல்’ என்பவரின் முழுப்பெயரானது ‘ப்ரெடரிக் வில்ஹெல்ம் அகஸ்டு பிரோபல்’ என்பதே. (Friedrick Wilhelm August Froebel) இவர் 1782-ம் வருஷம் ஏப்ரில் மாதம் 21-ம் தேதி ஜனனமானார். இவர் பிறந்து ஒரு வருஷத்துக்குள்ளேயே இவரது தாயார் தேகவியோகமானபடியாலும், தகப்பனார் இரண்டாவது கலியாணம் செய்து கொண்டபடியாலும், இவரைப் பாதுகாப்பதற்குத் தகுந்த மனிதர் ஒருவருமில்லாமல் போய்விட்டார்கள். இவர் பதினெட்டு வயதில் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டு, ஏழு வருஷகாலமாகப் பல உத்தியோகங்களைப் பார்க்க முயன்றார். ஒன்றும் சரிப்படாமலிருக்கவே இவர் ‘பிராங்க்போர்ட்’ (Frankfort) நகரத்தில் ஒரு உபாத்தியாயராக அமர்ந்தார்.

பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் போதெல்லாம், ‘கல்வியினாலாய பயனென்கொல்’ என்பதைப்பற்றி விசாரித்துக்கொண்டிருந்தார். இவருக்குத் தோன்றியதென்னவென்றால்: “ஒவ்வொருவரிடத்திலும் தெய்விகத்தன்மை கொஞ்சம் இருக்கின்றது; அத் தெய்விகத் தன்மையை வெளியே கொண்டு வருவதுதான் பிறப்பின் பயன்; நம்மைச் சிருஷ்டித்த கர்த்தாவுக்கும் நமக்கும் என்ன ஸம்பந்தம்? நமக்கும் இயற்கைப் பொருள்களுக்கும் என்ன ஸம்பந்தம்? ஆகிய இவற்றைக்கற்றுக்கொடுப்பதே கல்வியின் பயன்” என்பதே. இன்னும், “இக் கல்வியானது பள்ளிக்கூடத்தில் மாத்திரம் கற்பதன்று; வீட்டில் சற்குணமான பெற்றோர்கள் நல்ல ஞானத்தைக் குழந்தைகளுக்குப் புகட்ட வேண்டும்” என்றும் துணிந்தார். ஒருவனுக்குப் புத்திசாலித்தனம் மாத்திரம் இருந்தால் போதாது; அவனுக்குக் குணம் நல்லதாயிருக்க வேண்டும். இவை இரண்டும் இருந்தாலும் பிரயோஜனமில்லை; அவனுக்கு உடம்பில் வலிமை வேண்டும். இம்மூன்றும் இருந்தால் தான் அவனுக்குக் கல்வி பயன்படும் என்று அவருக்கு நன்கு விளங்கிற்று.

ஆதலின், ஒருவனுக்குத் தேகவலிமை, மனவலிமை, குணவலிமை ஆகிய இம்மூன்றையும் அளிப்பதற்கு உள்ள சாதகங்கள் எவை யென இவர் ஆராய்ச்சிசெய்யத்தொடங்கினார். சாதாரணமாய் இயற்கையில் ஒரு வித்தானது தகுந்த இடத்தில், அதாவது வெளிச்சமும் ஈரமும் போதுமான இடத்தில் விதைக்கப்பட்டால் அது எப்படி நாளுக்குநாள் பெரிதாகிப் பூக்கள் பூத்து காய்த்துப் பலன்கொடுக்கின்றதோ, அதே மாதிரியாக ஒரு சிறு குழந்தையை ஸக்சநத்தில் வைத்து காலத்தில் கல்வியைக்கற்பித்தால், அது தேகவலிமை, மனவலிமை, குணவலிமை இம்மூன்றிலும் மேம்பட்டுத் தகுந்தசமயத்தில் தக்க பலனை அடையும் என்று அறிந்தார்.

நம்மைச் சிருஷ்டித்த கடவுளே இயற்கைப் பொருள்களையும் சிருஷ்டித்திருக்கிறாராதலின், அவைகளின் சுவபாவம் எப்படியோ அப்படியே நம் சுவபாவமும் இருக்கும் என்று ஊகித்தறியலாம். ஆகையால்தான, ஜெர்மெனி தேசத்தில் பெயர்பெற்ற தத்வசாஸ்திரியும் கவிசிரேஷ்டருமான கீடே என்பவர் (Goethe), ‘நம்முடைய குழந்தைகள், மனதில் என்ன நினைக்கின்றனவோ அவைகள் நமக்குக் கொஞ்சமும் தெரியாது; அவர்களுடைய சுவபாவத்தை அறிவது அரிது; நாம் அதிகமாகச் சிரமப்பட்டால்தான் கொஞ்சமாவது தெரியும்’ என்று எழுதியிருக்கிறார். இதை மேற்கோளாகக்கொண்டு குழந்தைகளின் பிறவிக்குணம் எப்படியிருக்கிறதோ அதை ஒட்டித்தான் நாம் அவைகட்குக் கல்வி கற்பிக்க



வேண்டும் என்று பிரோபல் வற்புறுத்துகிறார். அதென்னவெனில், குழந்தைகளுக்கு [illegible] யாட்டு என்றால் மிகவும் பிரியம். கதைகேட்பதிலும், மற்றொருவர் பாடுவதை உற்றுக்கவனிப்பதிலும் மிக்க ஸந்தோஷம். ஆகையால், நாம் குழந்தைகளுக்குச் சிறியகதைகள் மூலமாயும், அழகான பாட்டுக்கள் மூலமாயும் விளையாட்டு வழியாயும் கல்வி கற்பிக்கவேண்டும் என்று தெரியவருகிறது. குழந்தைகளைக் கையால் அவது பிரம்பாலாவது அடிக்கவேகூடாது. அவைகள் ஸதாகாலமும் புஸ்தகத்தையே வைத்துக்கொண்டு வாசிக்கவேணும் என்றும் சொல்லக்கூடாது. விளையாடும்போது கவலையற்று மனப்பூர்த்தியாய் விளையாடவேண்டும். ‘அங்குமிங்கும் ஓடித்திரிந்து சிரித்துக்கொண்டு, தம்முடைய ஸமவயதான மற்ற குழந்தைகளோடு விளையாடுவதின் ஸந்தோஷத்தை என்னென்றுரைப்பது! உலகத்தில் பல நூதன விஷயங்களைக் கண்டுபிடித்துக் கொடுத்த மஹான்கள் ஒவ்வொருவருடைய வாழ்நாட்களைப்பற்றியும் ஆராய்ச்சி செய்தால், அவர்கள் எல்லோரும் குழந்தைப்பருவத்தில் பஹா விஷமக்குழந்தைகளாகத்தான் இருந்திருப்பதாகத் தெரிகிறது. குழந்தைகள் விஷமம் செய்யாமலும், முழுமனதோடு விளையாடாமலும், கையைக் கட்டிக்கொண்டு சும்மா உட்கார்ந்திருப்பதுதான் நன்மை என்று நம்மவர்களில் பலரும் நினைக்கிறார்கள். அது தவறான விஷயமாகும். எவ்வளவுக்கெவ்வளவு குழந்தைகள் சுறுசுறுப்பாய் விளையாடுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு நன்மை என்று தெரியவரும். “பெரியவர்கள் சுறுசுறுப்பாயிருப்பதால் பலவேலைகளைச் செய்துமுடிக்கிறார்கள். குழந்தைகள் விஷமம் செய்தால் அவர்களுக்கும் கெடுதி, பெற்றோர்க்கும் தீமை; ஆதலின், குழந்தைகள் சுறுசுறுப்பாய் ஏன் இருக்க வேண்டும்?” என்று சிலர் கேட்கலாம். குழந்தைப்பருவத்தில் இருக்கும் சுறுசுறுப்புத்தனத்தை நாம் கண்டித்தால், அவர்கள் ஸந்தோஷமற்று, மனக்கவலையும் வெக்கமும் மேலுற்று, கடைசியில் நடைப்பிணமாவாரேதவிர, ஒருவருக்கும் நன்மையுண்டாகாது. எவனொருவனுக்குக் குழந்தைப்பருவத்தில் ஸந்தோஷமில்லையோ, அவனுக்கு வாழ்நாள் முழுதிலும் ஸந்தோஷமேயில்லை என்பது திண்ணம். அப்படிக் குழந்தைகள் விஷமம் செய்யாமல் இருக்கவேண்டுமென்றால், அவர்களுக்கு இடங்கொடுக்காமல் நாம் பார்த்துக்கொள்ளவேண்டுமே தவிர, அவர்களை அடிக்கவாவது திட்டவாவது கூடாது. உதாரணமாக:—நெய்க்கிண்ணத்தைக் குழந்தை விளையாடுமிடத்தில் வைத்துவிட்டு அதைக் குழந்தை கொட்டிவிட்டது என்று சொல்வதில் பிரயோஜனமில்லை; குழந்தை கைக்கு எட்டாத இடத்தில் வைப்பதே நன்மை. அதேமாதிரியாக, உயர்ந்த பட்டு ஆடையைக் குழந்தைகளுக்கு உடுத்தி அவையெல்லாம் அழுக்காய்ப் போய்விட்டனவென்று பிறகு சொல்வதில் என்ன உபயோகம்? குழந்தைகள் ஆடையை அழுக்காகச்செய்வது இயற்கை என்பதைப் பெற்றோர் அறிந்து, மிகவும் விலையுயர்ந்த ஆடைகளை அவைகளுக்குக் கொடுக்காமலிருப்பதே உசிதம்.

தவிரவும், புத்தி தெரிந்த பிறகு நாம் விளையாடும் விளையாட்டுக்கும் சிறுகுழந்தைகளின் விளையாட்டுக்கும் பல வித்தியாஸங்கள் உள்ளன. முக்கியமாக நாம், வேலைசெய்வதால் உண்டாகும் களைப்பை மாற்றுவதற்காகவே விளையாடுகிறோம். இல்லாவிடில், தேகப்பயிற்சிக்காக விளையாடுகிறோம். குழந்தைகளுக்கோ அப்படியன்று. விளையாடுவதே அவற்றின் இயற்கை. அவ்விளையாட்டை நிறுத்துவதும் நன்மையன்று. குழந்தையின் மனம் போனபடிபோகட்டும் என்று நினைத்து அது செய்வதெல்லாம் சரி என்று நாம் சும்மா பார்த்துக்கொண்டிருப்பதும் நன்மையன்று. அவ்விளையாட்டுப்புத்தியை நல்லவழியில் திருப்பி அதினின்றும் நன்மையை உண்டாக்குவதே உபாத்தியாயரின் முதற் கடமையாகும்.

இவ்விஷயங்கள் எல்லாவற்றையும் தீர அறிந்து பிரோபல் என்பவர் 1826-ம் வருஷத்தில் ஒரு புஸ்தகம் எழுதி வெளியிட்டார். (The Education of Man) இதற்குப்பின் 1836-ம் வருஷத்தில் அவர் ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி அதில் சில குழந்தைகளுக்குக் கல்வி

கற்பிக்கும்போது, தான் எந்த மாதிரி சொல்லிக் கொடுத்தால் நல்லது என்று நினைத்திருந்தாரோ அதேமாதிரி செய்து ஒவ்வொரு குழந்தையின் மேலும் பக்ஷமாயும் பிரியமாயும் இருந்தார். அவர் நூதனமாய் ஸ்தாபித்த பள்ளிக்கூடத்துக்கு 'கிண்டர்கார்டன்' (Kindergarten) என்று பெயரிட்டார். 'கிண்டர்' என்றால் ஜெர்மென் பாஷையில் குழந்தைகள்; 'கார்டன்' என்றால் தோட்டம். ஸாதாரணமாய் ஒரு தோட்டத்தில் செடிகள் எப்படி செழித்து ஓங்கி வளருகின்றனவோ, அப்படியே பள்ளிக்கூடங்களிலும் குழந்தைகள் ஸந்தோஷமாய், கவலையில்லாமல், சுயேச்சையாய், நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளருமிடம் என்று பொருள்படும்படியாய், 'ரோஜாதோட்டம்', 'மல்லிகைத்தோட்டம்', 'முல்லைத்தோட்டம்' என்றபடி 'குழந்தைகளின் தோட்டம்' என்று அவர் பெயர் வைத்தார். அவர் பெயர் வைத்து இன்றைக்குச் சற்றேறக்குறைய நூறு வருஷங்களாயினும், அப்பெயரே செழித்து வருகிறது. அதுவல்லாமலும், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய தேசங்களிலும் குழந்தைகள் கல்வி கற்கும் இடங்களுக்கெல்லாம் 'கிண்டர்கார்டன்' என்ற பெயரே கொடுக்கப்பட்டிருக்கின்றது.

என். ஆர். சேதூரி ராவ்.

---

## Benefits of Co-operation to Agriculturists.

BY MR. P. CHINNASAWMY IYER.

## கூட்டுறவினால் வியவசாயிகளுக்கு உண்டாகும் நன்மைகள்.

சுமார் பத்துவருஷங்களுக்கு முன் சென்னை இராஜதானியில் ஐக்கிய நாணயச் சங்கங்கள் மூலைக்கு ஒவ்வொன்றாகச் சிலவேயிருந்தன. இப்பொழுதோ சுமார் 2400 சங்கங்களுக்கு மேலாகவே ஏற்படுத்தப்பட்டு, அவை ஏறக்குறைய ஒரு லட்சம் மெம்பர்களுக்கு உபயோகமாயிருந்து வருவதுடன், ஒரு கோடி ரூபாய் வரையில் லேவாதேவியும் நடந்துவருகின்றது.

முக்கியமாக ஐக்கியச் சங்கங்களை கிராமாந்தரங்களில் ஏற்படுத்திக்கொள்வதன் நோக்கம், பொருளுதவிக்காகத்தான். தங்களுக்கு வேண்டும்போது சகாயவட்டிக்குப் பணம் கடன்வாங்கி வியவசாயத்தை விருத்திசெய்வதும், தக்க காலங்களில் தங்களால் பயிரிடப்பட்ட தானியங்களை நல்லவிலைக்கு விற்று லாபம் சம்பாதித்துக் கொள்வதும் முக்கிய நோக்கங்களாக இருக்கின்றன. மேற்குறித்த நோக்கங்கள் எல்லா ஜில்லாக்களிலும் நன்கு பரவுமானால், இராஜதானியில் பொருள் சம்பந்தமான அபிவிருத்தி நன்கு ஏற்படுமென்பதற்குத் தடையில்லை. உதாரணமாக: வியவசாயிகள் இதுவரை சாவுகாரிகளிடத்தில் வாங்கிய பணத்தின் வட்டிக்கும், இப்போது ஐக்கியநாணயச் சங்கங்களுக்குக் கொடுத்துவரும் வட்டிக்கும் உள்ள வித்தியாசம் வருஷம் 1-க்கு 3-லட்சம் அல்லது 4-லட்சம் என்றால், இன்னும் சில வருஷங்களுக்குப் பின் இந்த 4-லட்சம் ரூபாய் 40-லட்சமாக ஆகிவிடுமென்பதற்குத் தடையில்லை. வட்டியில் லாபம் என்கிற நன்மையானது, கூட்டுறவினால் ஏற்படும் பல நன்மைகளுள் ஒன்று என்று சொல்லலாம். கூட்டுறவுச் சங்கங்கள் அபிவிருத்தியாக ஆக, ஒருவருக்கும் பிரயோஜனமில்லாமல் புதைக்கப்பட்டும், பானையில் போட்டு மூடிவைக்கப்பட்டதுமான தொகைகள் அநேக டிபாஸிட்டுகளாக மேற்படி சங்கங்களில் சேர்ப்பிக்கப்பட்டு, அநேக வியவசாயிகளை அநியாய வட்டியிலிருந்து மீட்க ஏதுவாயிருக்கும். கடனிலிருந்து மீட்கவும் வியவசாயச் செலவுக்காகவும் வேண்டியதொகை சுலபவட்டிக்குக் கிடைத்தால், வியவசாயிகள் தங்கள் வேலைகளை ஊக்கத்தோடும் சந்தோஷத்தோடும் செய்வார்களென்பதில் ஐயமில்லை. கவலையில்லாமலும், நிலத்தைச் சரியாய் உழுது எருப்போட்டு சாகுபடிசெய்வதனாலும் மாகூல் அதிகமாகி வியவசாயிகளின்



பொருளாதார நிலைமை விருத்தியடைகின்றது. கூட்டுறவின் முயற்சியினால் வியாபாரம், நெசவுத்தொழில் முதலியன, விருத்தியடைவதைக் காட்டிலும், வியவசாயம் அதிக பலனை அடைவதற்கு மார்க்கங்கள் உள்ளன. முன் கூறியபடி, வியவசாயிகளுக்குப் பணக்குறைவினால் உண்டாகும் கஷ்டங்களை நிவிருத்திசெய்யவும், அவர்களுக்குத் தங்கள் நிலங்களினின்று கிடைக்கும்வரும்படியை அதிகரிக்கச்செய்யவும், அவர்கள் அரைவயிறு கஞ்சி குடித்துப் பட்டினியிராமல் சாப்பாட்டுக்குக் குறைவின்றி ஜீவனம் செய்யவும் ஆகிய இவைகளே கூட்டுறவின் முயற்சியால் பெறப்படும் முக்கிய நன்மைகள்.

சாகுபடியான மாகூலை வியவசாயிகள் அறுவடையானவுடனே சீக்கிரமாகக் குறைந்த விலைக்கு விற்கநேரிடுகின்றது. இதனால், ஏற்கெனவே ஏழையான குடியானவன் இன்னும் நஷ்டமடைகிறான். மேலும், தனித்தனியாக ஒவ்வொரு குடியானவனும் தன்னிடத்திலிருக்கும் கொஞ்சம் தானியத்தை அருகிலிருக்கும் வியாபாரஸ்தலத்திற்குக் கொண்டுபோய் விற்பதனால் செலவு அதிகமாவதுடன், பொருளுக்குத்தக்க விலையும் கிடைப்பதில்லை. ஒன்றுமறியாத குடியானவன் பட்டணங்களிலுள்ள வியாபாரிகளின் தந்திரங்களுக்கு உட்பட்டுத் தான் கொண்டுபோன 10 கலம் நெல்லை 8 கலமாக அளந்து கொடுத்துவிட்டு வருகிறான். கூட்டுறவுச் சங்கங்களின் உதவியால் இவ்வித கஷ்டங்கள் நிவர்த்தியாகுமென்பது நன்கு ஏற்படுகின்றது. வியவசாயிகள் கிஸ்திகாலத்தில் சங்கத்திலிருந்து வேண்டிய பணத்தை நாலைந்து தவணைக்குக் கடனாகப் பெற்றுக்கொண்டு தமது மாகூலுக்கு நல்ல விலை வரும்போது விற்று லாபமடையலாம். இன்னும், ஒரு கிராமத்தில் உள்ள குடியானவர்கள் பலரும் ஒன்று சேர்ந்து, மேற்படி சங்கத்தின் மூலமாய் பட்டணங்களுக்கு அவரவர்களுடைய மாகூல்களை ஒன்றுசேர்த்து அனுப்பினால், தனித்தனியாக விற்பதனால் உண்டாகும் நஷ்டங்கள் பலவும் குறைந்து லாபமடைவார்களென்பதற்கு ஐயமில்லை.

வியவசாயிகள், தாங்கள் பாடுபடுவதற்குத்தகுந்த வரும்படி நிலங்களினின்று கிடைப்பதில்லை என்று சொல்வது உண்மைதான். ஏனென்றால், மாடுகளின் தேகவலிமையானது எப்படி போதுமானவளவு தீனியின்மையால் குறைந்து கொண்டு வருமோ, அப்படியேதான் சரியான எருப்போடாமல் பயிரிடப்படும் நிலங்களும் தக்க பலனைக் கொடுப்பதில்லை. குடியானவனுக்குத் தக்க சமயங்களில் நிலங்களுக்குப் போதுமானவளவு எரு, தழைகள் முதலியன வாங்கிப்போடுவதற்குப் பணம் அகப்படுவதில்லை. அப்படிப் பணம் கிடைக்கினும், அதிக வட்டிக்குத்தான் கிடைக்கும். ஆனால், கூட்டுறவுச் சங்கங்கள் உள்ள கிராமங்களில் இவ்வித கஷ்டங்கள் நேரிட மார்க்கமில்லை. ஏனெனில், இங்கு வேண்டும்போது வியவசாயச்செலவுக்காகத் தேவையான தொகையை பெற்றுக்கொள்ள சௌகரியமிருக்கின்றது. மேலும், கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாய் ஒரு கிராமத்திலிருக்கும் குடியானவர்கள் அவரவர்களுக்கு வேண்டிய கடலைப்பிண்ணாக்கு, முத்துக்கொட்டைபிண்ணாக்கு முதலான எருக்களை மொத்தமாக வாங்கி தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டால், தனித்தனியாக மேற்படி எருக்களை வாங்குவதனாலுண்டாகும் வண்டிவாடகை, சில்லரையில் வாங்குவதால் ஏற்படும் விலை நஷ்டம் முதலியன குறைந்து அதிக லாபமடைய ஏதுவாகும். வந்தவாசி தாலூக்காவில் ஒரு கிராமத்தில், கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாய் மெம்பர்கள் ஒரே மொத்தமாய் பிண்ணாக்கு வாங்கித் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டார்கள். மாகூல் அறுவடையான பிறகு அவர்கள் கணக்குப்பார்த்ததில், ஒவ்வொருவருக்கும் மேற்படி பிண்ணாக்கின் கிரயத்தைவிட இரண்டு பங்கு மாகூல் அதிகரித்ததாக ஏற்பட்டது. ஆகையால், கூட்டுறவுச் சங்கங்கள் எரு முதலியவைகளை மொத்தமாய் தருவித்து மெம்பர்களுக்குக் குறைந்தவிலைக்குக் கொடுத்து உதவிபுரிய சாதனங்களாக இருக்கின்றன. வியவசாய டிபார்ட்மெண்டாரால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் கலப்பை முதலிய கருவிகளையும், மேற்கூறியபடி மொத்த

மாகத் தருவித்து மெம்பர்கள் குறைந்தவிலைக்கு எடுத்துக்கொள்ளலாம். இவையன்றியும், கூட்டுறவு முயற்சியினால், கவலைக்குத் தேவையான தொண்டம் சால் முதலானவைகளை உள்ளூரிலேயே மொத்தமாகத் தோல்வாங்கிக்கொடுத்து குறைந்த விலையில் கிடைக்கும்படி செய்து கொள்ளலாம். கூட்டுறவின் முயற்சியால் வியவசாயிகள் தங்களுக்கு ஆகவேண்டிய காரியங்கள் பலவற்றையும் சுலபமாகச் செய்துகொள்ளலாமென்பது மேற்கூறியவற்றால் ஏற்படுகின்றனவன்றோ?

வியவசாயிகளுக்குக் கூட்டுறவினால் ஏற்படக்கூடிய நன்மை பொருளபிவிருத்திக்கு மாத்திரம் சம்மந்தப்பட்டதன்று; பொதுவாக ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்யத்தக்கச் சாதனமாகவும் இருக்கின்றது. எப்போது ஜனங்கள் பொருளாதாய விஷயமாய் ஒரே மனத்துடன் வேலைசெய்கிறார்களோ, அப்போதே கல்வியின் அவசியமும் ஏற்படுகின்றது. படிப்பின்மையே கூட்டுறவு முயற்சிக்கு ஒருபெரிய தடங்கலாகும். கூட்டுறவு முயற்சியே படிப்புக்குத் தூண்டுதலாயிருந்து, படிப்பு அபிவிருத்தியடைய அடைய அது கூட்டுறவு முயற்சியை அபிவிருத்திசெய்கிறது. நான் அறிந்தமட்டில், கையெழுத்துக்கூடப் போடத்தெரியாத அநேக குடியானவர்கள், சங்கங்களில் சேர்ந்த பிறகு எழுதப்படிக்கவும், ரசீது முதலியவைகளைச் சரிவர கணக்குப் பார்த்துத் தெரிந்துகொள்ளவும் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவின் நன்மைகள் இவை மாத்திரமன்று: சுலபவட்டிக்குப்பணம்கிடைக்கச் செய்வதும், ஜனங்களுக்குப் படிப்பின்மையால் உண்டாகும் நஷ்டங்களைக்காட்டி அவர்களைப் படிப்பிக்கச் செய்வதும் தவிர, அவர்களுக்குச் சிக்கனத்தையும் கற்றுக்கொடுக்கின்றது. சங்கத்தின் கடன்களுக்கு ஒவ்வொரு மெம்பரும் பொருப்பாவார்கள். ஆதலால், ஒவ்வொரு மெம்பரும் மற்ற மெம்பர்களின் நடவடிக்கைகளைக் கவனிக்க அவசியம் ஏற்படுகின்றது. இதனால், கடன் வாங்கின பணத்தை மெம்பர்கள் வீண் செலவு செய்ய முடிவதில்லை. குடிக்காரர்களும் சூதாடுகிறவர்களும் சங்கத்தினின்று நீக்கப்படுவார்கள் என்ற பயத்தினால், சிலர் நல்லவழிக்குத் திரும்பியிருக்கிறார்கள். சில இடங்களில் வியாஜ்ஜியங்களும் குறைந்திருக்கின்றன. கூட்டுறவு முயற்சியானது சுலபவட்டிக்குப் பணம் கிடைக்கும்படி செய்வதுடன், மெம்பர்களுக்கு நிதானம், வாய்தாதேதியில் பணம் கட்டும்படியான வாடிக்கை, பொய் சொல்லாமை, சட்டத்திற்குக் கட்டுப்படுதல், திருப்தி, சிக்கனம் முதலான நற்குணங்களையெல்லாம் போதிக்கத்தகுந்த சாதனமாயிருக்கின்றது.

பூ. சின்னசாமி ஐயர்.

---

# Anthathi Kalithurai.

BY MR. C. V. KUMARASAWMY PILLAI.

## அந்தாதிக் கலித்துறை.

திருப்பூந்துருத்தியில் ப்ரஹ்மஸ்ரீ நாராயணகுருஸ்வாமிகளின் யோகசமாதி ஆலயத்தில் இப்பிங்கள வருஷத்து மாசி௴ 5, 6, 7உ களில் தெய்வபக்தி, குருபக்தி, அடியார்பக்திகளில் மேம்பட்ட பெரியோர் பலர் கூடி ஷை ஸ்வாமிகளின் ஆராதன மகோத்ஸவத்தைச் சிறப்பித்தனர். அப்பொழுது, திருவையாறு ஸெண்ட்ரல் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் சி. வி. குமாரசுவாமிபிள்ளையவர்கள் குருபக்திவிசேஷத்தைக் குறித்து ஒன்றரைமணிகாலம் உபந்யஸித்தனர்; பின்பு, ஷை ஸ்வாமிகளைக்குறித்து அருமையாக அந்தாதிக் கலித்துறையால் பதினைந்துபாடல்கள் இயற்றிப் பொருள்விளக்கிப் படித்தனர். அவை படித்தற்கு இனியனவாயிருத்தலின், நம் அன்பர்களும் படித்து மகிழ்ச்சியுற இங்கு வெளியிடுகின்றோம்.



### தெய்வ வணக்கம்.

நாரா யணகுருவின் ஞானப் பெருமிதத்தை
நேரா யறைந்திடற்கென் னெஞ்சலரும்—பேரா
மிதக்குஞ் சாத்தான் விருப்பா யளித்த
மதக்குஞ் சரத்தாண் மலர்.

### குரு வணக்கம்.

ஈசன் பயந்த எம்பெரு மான்குரு
தாசன் றாண்மலர் தலைக்கணி வோமே.

### நூல்.

### அந்தாதிக் கலித்துறை.

1. பூவே மிதந்திடும் பொன்னே கொழித்திடும் பூந்துறைசேர்
காவே ரியின்பெரு வெள்ளந் திளைத்திடுங் கண்ணுதலார்
தேவே வளர்ந்திடும் ஆலயம் ஓங்கிடுந் தீம்புனறூட்
டேவே யனைய விழியணங் கேவளம் எண்ணரிதே.

2. அரிதே யதினும் அருமறை யந்தத் தமர்ந்தருளும்
சொரிதே னிதழித் தொடைபுனை வேணியன் தோகையொடு
பெரிதே மகிழ்ந்துறை பூந்துருத் தித்தலப் பேரருமை
விரிதே னிமிரும் வெறிகுழற் கோதை விரிப்பதுவே.

3. வேதங் கடந்திடு மேலோ னருள்கொடு மேதினியில்
ஏதங் கடந்திடத் தோன்றினன் ஞான இருங்குரவன்
போதங் கடந்திடு நாரா யணகுரு பொற்றொடிகேள்
பேதங் சடந்திடு ஞானப் பெருமிதன் பேசிடினே.

4. பேசப் பெரிதும் இனிக்கும் அவன்புகழ் பேருலகில்
நேசப் பெருங்கடல் மூழ்கும் புனிதர்க்கு நித்தனருள்
பேசப் பரசிவ மூர்த்தி தலங்கள் பெருகியன்பு
வாசப் பலமலர் தூவிப் பணிந்தான் மடமயிலே.

5. மயிலே இவரும் பெருமான் உரைக்கு மனமுவந்த
எயிலே பொடித்த பழம்பொருள் வாழும் இனமணிகள்
வெயிலே விரிக்கும் மழபாழி கண்டு வியனெடுங்கண்
அயிலே யனையாய் ஒளிர்பூந் துருத்தி யடைந்தனனே.

6. அடைந்தவர் நாளொரு நல்லை ருழவன் அழுகுரல்கேட்
டுடைந்ததென் உள்ளம் எனலும் சுவாமியென் ஓராஜந்தான்
மிடைந்தவிச் சூழலிற் போதலும் ஆவியை விட்டதந்தோ
குடைந்ததென் நெஞ்சமும் என்செய்கோ என்றான் குறுநகையே.

7. கய்யே யமர்த்திக் கரைந்திடல் எங்கது காட்டுகென
மய்யே இதுவென மூர்த்தி கரத்தால் வருடுதலும்
மெய்யே உயிர்பெற மெய்புக றித்தனை மீதினிலே
பொய்யே எனுமிடை யாளே நடந்தது பொய்யலவே.

8. பொய்யற்ற விச்செயல் கண்டுஞ் சிலபுன் பொறியிலிகள்
மெய்யுற்ற ஆவி பொருந்தும் ஒருவனை வீந்தவனென்
றய்யுற்ற நெஞ்சொடும் ஐயன் திருமுன் அருகிலிட்டிங்
கய்யுற்ற அங்கம் பிழைப்பியென் றோதினர் நங்கையரே.

9. நங்கைய ராசை வலைப்படும் ஏதம் நனியொழிந்த
சங்கையி லெங்குரு மூர்த்தி மரித்தவன் சற்றுமுயிர்ப்
பங்கையின் செய்திடான் பங்கமுற் றானிவன் பாங்கிதென
மங்கையர் சூளா மணிபணித் தானவன் மாண்டவனே.

10. மாண்டவ னற்றாய் செயலறிந் தாங்கே மதிமயங்கி
ஆண்டவ னேயன் அருமைத் தலைமகன் ஆருயிரைக்
காண்டவ மேனிக் கருணைக் கடலே கனிந்துதவி
ஆண்டருள் வாயென அன்புக் கிரங்கினன் ஆரணங்கே.

11. ஆரணந் தேடரி யானவன் அன்பன் அழுதருகேல்
மாரணம் உற்றவன் உற்றவ னேபெரு மாண்புடைய
பூரண ஆயுளோ டோரொரு மூவரைப் பொற்பினொடு
பாரணத் தாங்குவை பண்பிதே என்றனன் பைங்கிளியே.

12. பையவே சென்றொரு மாவடி நீழல் பரிந்தமர
வையகம் ஏத்திடும் பஞ்சாக திப்பதி வாழ்க்கைபெற
மையலில் அந்தணன் பஞ்சாக தப்பேர் மருவியவன்
சையகம் வந்தவன் காலகம் வீழ்ந்தனன் கற்பகமே.

13. கற்பக வாழ்க்கையைக் கைப்பதென் றுன்னினன் காற்கமலம்
அற்புறச் சென்னிபிற் சூடியென் சிந்தை யமர்புரியும்
அற்பராம் ஐம்புலக் கள்வரை வாட்டியே ஆரமுதாம்
சிற்பர மூர்த்தியைக் காட்டுவா யென்றனன் தேமொழியே.

14. மொழிவேத சாரச் சடலான் அவற்கு முடிபொருளை
வழியே உணர்த்தி நெறிகாட்டி யாண்டனன் மற்றொருநகால்
வழுபாடு செய்தே உவந்திடும் சீடரை வாழ்வளித்திங்
கொழியாத போகச மாதியிற் கூடினன் உத்தமியே

15. உத்தம ஞான குருமணி கூடின ஓர் தினத்தில்
சித்தம தாறிய சீடரும் பூசையைச் செம்மைபெற
வித்தகற் காற்றினர் மேலாம் பரிசிதை வேண்டினரிச்
சுத்தம னத்தர்செய் பூசை நலங்காண் சுடர்த்தொடியே.

வாழ்க நாரா யணகுரு மாணவர்
வாழ்க ஆரா தனைசெயு மாணவர்
வாழ்க பூந்துருத் தித்தல வாசிகள்
வாழ்க மன்னரும் மண்டலத் தாருமே.

சி. வி. குமாரசுவாமி பிள்ளை.

---

## Sita's Exile.

BY PANDIT P. K. SREENIVASACHARIAR,

### சீதை வனம் புகுந்த சரிதம்.

(29-ம் பக்கத் தொடர்ச்சி.)

அக்காலத்தில், சீதைக்குக் கருப்பசின்னங் ‘நீ இப்பொழுது வேண்டியிருப்பது என்?’
கள் உண்டாயின. அவற்றையெல்லாம் நன்கு என்று வினவியருளினன். அவள் தான் விரும்
நோக்கிய ஸ்ரீராமன், பிராட்டியை நோக்கி, பியதை விளம்புதற்கு வெட்கப்பட்டுப்



புன்னகைபூத்தனள். இராமன் பின்னும் பன்முறை, ‘உன் விருப்பத்தைச் சொல்’ என்று சொன்னபிறகு, சீதாபிராட்டி, ‘யான் வேண்டியிருப்பது இது’ என்று குறிப்பிட்டு இவற்றைச் சொல்வாள்:—“ கங்காநதியிலுள்ள திவ்யமான நீர்த்துறைகளிலே குளித்துச் சந்தியாவந்தனம் செய்பவர்களும், விளங்குகின்ற புப்புரிநூல் அசையப்பெற்ற மார்புடையவர்களும், மரவுரிதரித்துச் சிவந்த சடையைக் கட்டியுள்ளவர்களும், சிறந்த மிக்க தவத்தை உடையவர்களுமான முனிவர்கள் அக்கங்கையாற்றின் கரையில் வாழ்கிற ஆச்சிரமங்களை மற்றொருகால் அடைந்து, அவர்களுக்குக் குற்றேவல்செய்து, அங்கு ஒருநாள் தங்கியிருத்தலையும் யான் விரும்பியிருக்கின்றேன்” என்று பத்தினி சொல்ல, இராமபிரான், ‘நாளைக்கு நாம் உனக்குத் தவத்தோர் தங்கி வசிக்கின்ற ஆச்சிரமங்களைக் காட்டுவோம்’ என்றுரைத்து, பிராட்டியை அந்தப்புரத்திலே விட்டு, வாட்படையேந்திய விசயனும், பத்திரனும், தந்தவக்த்ரனும், சுமாகதனும், சாரஞ்சியும், காளியனும் முதலிய ஒற்றர்கள் சொன்ன பரிகாச கதைகளைக் கேட்டு, அவற்றை இனிது கொண்டாடி அந்த இருந்தவன், அவர்களை நோக்கி, ‘இந்தக்கதைகள் கிடக்கட்டும்: இக்கோசல நாட்டிலும் இவ்வயோத்தியாபுரியிலும் உள்ள சனங்கள் இப்பொழுது தமக்குள் யதேச்சையாகப் பேசிக்கொள்ளும் அவ்வார்த்தைகளைச் சொல்லுங்கள். அவையே, அரசர்கள் அறுதினமும் அல்லும்பகலும் அநவரதமும் கேட்டறியத்தக்கவையாம்’ என்று சொன்னான். அவ்வொற்றர்கள் இவற்றை உரைப்பவராயினர்:—

“ வங்தெறி கடலை மலைகளா லடைத்து,
மதிளிலங்காபுரி யழித்து
வெந்திற லரக்கர் குலத்தை வேரறுத்து,
விண்ணவர்கோன் தலையெடுப்பு
இந்திரசித்தைக் கொன் றிராவணனை
ஈரைந்துதலையறுத் தருட்டும்
சுந்தரவில்லிக் கெதிரிலை யென்று
சொல்லுவார் தொல்லுல குள்ளோர். ”

“ அலைகடலை மலையினக்கொண்டு அணை கட்டிக் கடந்து, மதிள்சூழ்ந்த இலங்காபுரியை அழித்து, கொடிய வலிமையையுடைய அரக்கர் குலத்தை வேரறுத்து, இந்திரன் தலையெடுக்கும்படி இராவணன்மகனை இந்திரசித்தைக் கொன்று, இராவணனைப் பத்துத்தலைகளையும் அறுத்து, அவனுடலைத் தரையில் விழுந்துருளச் செய்த அழகிய கோதண்டமென்னும் வில்லேந்திய வீரனான இராமனுக்கு எதிர் எவரும் இலர் என்று உலகிலுள்ளவரனைவரும் உரைக்கின்றனர்” என்றனர்.

அப்பொழுது அவ்வேவுகாரர்கள் இங்ஙனம் சொல்லக்கேட்ட சக்கரவர்த்திதிருமகன், அவர்களை நோக்கி, ‘நாங்கள் இந்நகரத்திலும் இந்நாட்டிலும் எங்களைக்குறித்துப் பிறக்கிற நன்மையும் தீமையும் கேட்டு, எங்களிடமுள்ள தீங்குகளை அகற்றி, சிறந்தவற்றைச் செய்வோம். ஆதலால், நீங்கள் செவியுற்ற நல்லவை தீயவை என்னும் இரண்டையும் சொல்லுங்கள். நீங்கள் ஒன்றுக்கும் கூசாதீர்’ என்று சொன்னான். அப்போது அவர்கள், ‘குற்றமற்றவனே! கேட்பாய்’ என்று சொல்லி, உரைப்பார்:—

“மன்னவ னிராமன் மானபங்கத்தை
மனத்தினால்நினைக்கிலன்: வானோர்க்கு
இன்னல்செய் தொழுகு மிராவணன் கொடுபோந்து
இடைவிடா தீரறுதிங்கள்
தன்னெடு நகரிதனிற் சிறைவைத்த
தையலைத் தாரமாய்க் கொண்டு
பின்னையும் வாழ்கை பேரிழுக் கென்று
பேசுவார் பெருநிலத் துள்ளோர்.”

“ நமது அரசனாகிய இராமன் மானபங்கத்தை மனத்தினால் நினைக்கின்றிலன்: தேவர்கட்குத் தீங்குசெய்துநடக்கின்ற இராவணனென்னும் தீயோன் எடுத்துக்கொண்டுபோய்ப் பன்னிரண்டுமாதகாலம் தனது இலங்காபுரியிலே இடைவிடாது சிறையில் வைத்திருந்த சீதையை அதன்பின்பும் தாரமாகக்கொண்டு வாழ்தல் பெருங்குற்றமாம்’ என்று உலகத்தவர்கள் உரைக்கின்றார்கள்.”

அவ்வொற்றர்கள் தம்மில் மாறுபாடின்றி ஒத்து இங்ஙனம் உரைத்திட்ட கொடுஞ்சொல் செவியின்வழியே மனத்திற் பொருந்த, ஸ்ரீராமபிரான், கூரிய வேற்படை மார்பில் தைத்தது போல வருந்தி, தன் சிந்தை தளர்ந்தபின்பு, தனக்கு நேர்ந்த மானக்கேட்டினால் சபையிலிருக்க மனங்கொள்ளாமல் வேறோரிடத்தில் இருந்துகொண்டு, புத்திமான்களான தன் தம்பிமார்களை அழைத்து, தான் கேள்வியுற்ற சொற்களெல்லாவற்றையும் அவர்களுக்குத் தெரிவுற உரைப்பவனாய், அவர்களை நோக்கி இந்தஇந்த வார்த்தைகளைச் சொல்வான் :—

"எனது உயிர் நீங்களே. எனது வலிமை நீங்களே. எனக்கு உற்ற துணையாகின்றவர்களும் நீங்களே. எனது அபிவிருத்தியும் நீங்களே. எனது தவப்பயன் நீங்களே. என் உடன்பிறந்தவர்களும் நீங்களே. எனக்கு அரசாட்சியினால் வரும் இன்பம் நீங்களே. ஆதலால், எனக்கு வரும் பழி உங்கட்கு வரும் பழியே. என் புகழும் அத்தகையதேயாம். ஆனபின், யான் இப்பொழுது சொல்பவற்றை நீங்களனைவரும் கருத்துற்றுக் கேளுங்கள் : சீதை, தீய இராக்கதனான இராவணனது சிறைக்காவலிலே இருந்து, பின்பு நல்லொழுக்கத்துக்குச் சாக்ஷியாகிற தீயிலே முழுகியெழுந்து, மிக்க தவத்தையுடைய முனிவர்களும் தேவர்களெல்லாரும் எனது மனமும் அறியத் தூய்மையுடையவளாயிருந்தாளாயினும், அவள்விஷயமாக உலகத்தவர் உரைக்கின்ற பெரும்பழியைக் கேட்டு எனது உள்ளம் தளர்கின்றது. உலகிலுள்ளோர்க்கு ஒத்து நடவாவிட்டால் பிழைத்திருத்தலினாற் பயன்யாது? "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும், கல்லாரறிவிலாதார்." சத்தியமான ஒழுக்கத்தால்மட்டும் என்ன பயன்? உலகத்திலுள்ளவர்கள் இல்லாததொன்றை உள்ளதென்று சொன்னால், அஃது உள்ளதென்றே அனைவராலுங் கொள்ளப்படும். உள்ளதான யாதொருபொருளை அவர்கள் இல்லையென்று சொன்னால், அப்பொருள் இல்லாததென்று அனைவராலுங் கொள்ளப்படும். இஃது உலகத்தின் இயற்கை. ஆதலால், அச்சீதையை முனிவர் வசிக்கிற ஆச்சிரமத்தின் அருகிலே விட்டிடுவோம். இது யான் துணிந்த காரியம். இனி வேறு எண்ணுவதொரு பொருள் இல்லை".

இவ்வாறு இராமன் சொல்லக்கேட்ட இனிய உயிரோடொத்த அவனது தம்பியர், தாம் செய்வது இன்னதென்று அறியாதவர்களாய், பிராட்டியும் பெருமாளும் வனம்போகும்படி கொடிய கைகேயி சூழ்ச்சிசெய்த அந்நாளிற் கலங்கின கலக்கத்தினும் மிகுதியாகக் கலங்கி, மனத்தில் மிக்கெழுகின்ற துயரத்தை உடையவர்களாய், எவ்வகையிலும் இது விலக்கமுடியாததென்று எண்ணி, இடி விழப்பெற்றாற்போலத் திகைத்திருந்தனர்.

மூன்று உலகங்களையும் கலக்குவேனென்று கருதுவனாயின் அவ்வாறே ஒருகணப்பொழுதிலே செய்து முடிக்கவல்ல லக்ஷ்மணனை இராமன் நோக்கி, 'இப்பொழுது யான் துணிந்த செயலை விலக்குவேன்' என்னும் எண்ணத்தை விட்டு வலிய தவத்தையுடையவர்களான முனிவர்கள் வாழ்கிற வனத்தில் சீதையைக்கொண்டு விடுவாயாக. இன்னும் யான் கூறுவதைக் கேள் : முனிவர்கள் தவஞ்செய்கின்ற வனங்களையெல்லாம் சீதைக்கு யான் காட்டுவதாக இசைந்திருக்கிறேன். சொல்லியவண்ணம் நான்செய்வேனென்று எண்ணி அவளும் மகிழ்ந்திருக்கிறாள். சுமந்திரனுக்குத் தெரிவித்துத் தேர் கொணரச்சொல்லி, தேரின்மேல் சீதையை ஏற்றிக்கொண்டு போய், நமது தந்தையின் சிறந்த பிராணசிநேகிதனான வான்மீகி முனிவன் தவத்தைச் செய்கின்ற வனத்திலே அவளை விட்டு வருவாய்."

இராமன் இவ்வாறு சொல்ல, கேட்ட இலக்குமணன், கொடிய துயரத்துடனே எழுந்து, சுமந்திரனுக்குத் தேர் சித்தஞ்செய்து கொணருமாறு தெரிவித்து, அவனைக்கொண்டு பெரிய அழகிய இரதத்தை அலங்காரத்தோடு சித்தப்படுத்தி, பொன்மயமாய் விளங்குகின்ற இரத்தினங்கள் இழைத்த ஆபரணங்களை அணிந்த சீதாபிராட்டியினது திருமாளிகையின் அழகிய இரத்தினமயமான வாசலிலே போய்ச்சேர்ந்தான். அது கண்டு, 'இன்று இங்கு வந்த கருத்து என்ன ?' என்று அவ்வந்தப்புரத்து ஏவலாளர்கள் வினவினார்கள்.



அவர்களுக்கு இலக்குமணன், "'பெரியோர்களான முனிவர்களுடைய திருவடித்தாமரைகளைச் சீதை வணங்குமாறு, அவளை அழைத்துக்கொண்டுபோய் அவட்கு அவர்களைக் காட்டு' என்று இராமபிரான் எனக்குக் கட்டளைகூறினான்" என்றுசொன்னான். அவ்வாவிலே, அவர்கள் அந்தப்புரத்தினுட் சென்று, அச்செய்தியைப் பிராட்டிக்குக் கூறினர்.

உடனே, அவள், பொங்கியெழுந்த சந்தோஷத்தினால் இனிய உயிர் களிக்கப்பெற்று, மின்னல்போல ஒளிவீசுகின்ற ஆரம் முதலிய ஆபரணங்களையும், விளங்குகின்ற சிறப்புள்ள புதுமையான அழகிய ஆடைகளையும், இவைபோன்ற மற்றும் வேண்டுவனவற்றையும் தேர்ந்தெடுத்துக்கொண்டு, இளையபெருமாள் சொன்னபடி இரதமேறினாள். அந்தத் தேர், நீர் கிழியும்படி கடலில் விரைந்து செல்லும் மரக்கலம்போல விரைந்து சென்றது.

பிராட்டி, வலக்கண் துடிக்கவும், வயிறு எரியவும் பெற்று, அத்துர்நிமித்தத்தால் தன் உள்ளமும் உடலும் நடுங்க, தன் மைத்துனனை நோக்கி, 'லக்ஷ்மணா ! எனக்கு நேர்ந்த இத்துர்நிமித்தத்தால் என்ன தீங்கு விளையுமோ ! என்று நான் அறியேன். விலக்கமுடியாத விதியினால் விளையும் விளைவை உலகில் அறிவார் யார் ? தாம் அடையும் துயரத்தை மகளிர் அறியார்' என்று சொல்லி, 'தெய்வமே ! எனக்கு நேர்ந்த இத்துர்நிமித்தத்தால், பரிசுத்தமான மனத்தையுடைய என் சுவாமியாகிய கணவனுக்கும், குற்றமற்ற என் கொழுந்தன்மார்க்கும், மாமியர்க்கும், மற்றைய சிறந்த சுற்றத்தார்க்கும், வளமுள்ள அயோத்தியாபுரியில் வாழும் ஜனங்களுக்கும் யாதொருதீமையும் நேரிடாமல், எல்லாம் நன்மையே ஆகக்கடவன" என்று உரைத்துப் பிரார்த்தித்துக் கைகூப்பி வணங்கினாள்.

அத்தகைய தீக்குறிகளைச் சீதை சொல்ல, இலக்குமணன் கேட்டு, மனத்திலெழுகின்ற துயரத்தையுடையவனாய், 'நீ சொன்ன இத்துர்நிமித்தங்களால் நமது உறவினர் யாதொரு துன்பமுமின்றிச் சௌக்கியத்துடன் இனிது இருப்பார்கள்' என்று தேறுதல்கூறினான். உடனே சீதை, சந்தோஷமுண்டாகப்பெற்றவளாய், மிக்க துன்பத்தை விட்டு, அத்தேரினிடத்தில் நிலைகொண்டனள். அத்தேர், சீதை, இலக்குமணன், சுமந்திரன் என்னும் அம்மூவரையும் தன்மேற்கொண்டு தென்றிசை நோக்கிச் சென்றது.

களங்கமில்லாத கற்பிற் சிறந்த சீதையும், எதிர்காலத்தில் நேரும் செயல்களை முன்னமே ஊகித்தறியவல்ல தூய அறிவையுடைய அமைச்சனாகிய சுமந்திரனும், துயரம் மிக்க மனத்தையுடைய இலக்குமணனும், கோமதியென்னும் நதியைச் சேர்ந்து, சூரியாஸ்தமனம் ஆனதனால், அன்றையிரவு அந்நதிக்கரையில் தங்கி, மறுநாள் சூரியன் வானத்துச்சியில் வருமளவில், பெரிய நீர்ப்பெருக்கையுடைய கங்காநதியைச் சேர்ந்தார்கள்.

அருகிற் சென்று கங்காநதியைக் கண்டவளவில், இலக்குமணன் கண்கள் நீர்துளிக்கத் தவிப்படைந்து, மனத்திலே பொங்கிய துயரம் புறத்தில் தோன்றுதபடி அதனை அடக்கமுயலவும், அந்தச் சோகம் அடங்காமல் உள்ளிருந்து விம்மி வெளிப்பட, சீதை அதைக்கண்டு, 'லக்ஷ்மணா ! இவ்விடத்தில் நீ இவ்வாறு துயருறுதல் என் ? சொல்வாய்' என்று வினவினாள். அதற்கு இலக்குமணன் மறுமொழி கொடாமல் வாய்விட்டுக் கதறியழுதனன்.

அப்பொது, பிராட்டி, 'பரிசுத்தமான இக்கங்காநதியைப்பார்த்தவர்களெல்லோரும், உள்ளம் உவந்து, கைகூப்பி வணங்கி, இதில் நீராடுவார்கள். அங்ஙனமிருக்க, தூய்மைக்குணமுடையவனே ! இந்நதியைக் கண்டவளவிலே, நீ சோகமடைவது எக்காரணம்பற்றி ? உலகில் உன்னைத் துன்பப்படுத்தவல்லவர் எவருமில்

லையே'! என்று சொன்னார். அதற்கு இளைய பெருமாள், 'இராமனை ஒருநாளும் விட்டுப் பிரிந்தறியாதவனான நான், நாளிரண்டாக விட்டுப் பிரிந்தேன். அப்பெருமானை நினைத்தலால் நேர்ந்த சோகம் இது' என்று அச்சோகத்தின் காரணத்தை உள்ளபடி உரையாமல் மறைத்து வேறாகக் கூறினன். அதற்குப் பிராட்டி மறுமொழி கூறுவாள் :—

"நன்மைக்கு மூலகாரணமாகிற நல்லொழுக்கத்தையுடைய சிறந்த தவத்தைச் செய்த முனிவர்களையெல்லாம் சென்று திருவடி தொழுது, அதனால் தீவினையனைத்தையும் போக்கி, விளங்குகின்ற ஒளியையுடைய ஆடைகளையும் ஆபரணங்களையும் முன்பு எனக்குத் துணையான தோழியர்களாகிய ரிஷிபுத்திரிகளுக்கும் அவர்களைப் பெற்று வளர்த்த அன்னையர்க்கும் அளித்தற்காக, இன்றை ஒருநாள் மாத்திரமே இங்குத் தங்கி, நாளைக்கே நாம் மீண்டு சென்றுவிடுவோம். இலக்ஷ்மணா! துயரமடையாதே."

இவ்வார்த்தைகளைச் சீதை சொல்ல, இலக்குமணன் துயரத்தை உள்ளே அரிதின் அடக்கிக்கொண்டு, கங்காநதியைப் படகுகொண்டு கடந்து இறங்கி நடந்துசென்று, அவ்வாற்றின் தென்கரைப்புறத்தைச் சேர்ந்து, அங்குச் சீதையை நான்முறைப்படி வலஞ்செய்து, அவளுடைய திருவடிகளை வணங்கி, 'ஏழுவகையுலகங்களையும் அடிமையாகவுடையவளே! தாயே! என் உரையைக் கேள்' என்று சொல்ல, அச்சீதை 'யாது? சொல்' என்று வினவினள். இலக்குமணன் கொடிய துன்பம் மேன்மேல் மிக அதிகப்பட, கண்களினின்று நீர் வெள்ளமாகப் பெருக, வலிமை ஒடுங்க, நீர் வறண்டு வாய் உலர, மனம் அஞ்சி நடுங்க நாக்குத்தடுமாறுதலால், சிரமப்பட்டுப் பிடுங்கிய சொற்களையுடையவனாய், இவ்விவ்வார்த்தைகளை மெள்ளமெள்ளச் சொல்லத்தொடங்கினான்:—

"உத்தமகுணங்களையுடையவளே! உலகமாதாவே! பரிசுத்தனாகிய சனகமகாராசனது யாகசாலையினின்று அவதரித்த தூயவளே! அறிஞனான இராமபிரான் ஏவிவிட்ட செயல்களையெல்லாம் உள்ளபடி சொல்வேன்" என்று சொல்லி, அவற்றைச் சொல்வான் :—"முகம் வாட்டமடைந்தவனும், கொடிய அவமானமாகிய வேற்படை நெஞ்சிற் பதிய அதனாலான வருத்தத்தால் பெருமூச்சுவிடுபவனும், தான் முன்னம் எண்ணிய காரியத்தின்மேலே விரைந்து செல்லும் மனத்தையுடையவனுமான ஸ்ரீராமபிரான், விரைவாகத் தான் அழைத்தலால் தன்பக்கத்தில் வந்துசேர்ந்த தனது தம்பியர்மூவருள்; என்னைக்குறித்து இத்தகைய வார்த்தைகளைச் சொல்பவனானான் :—'உலகத்தார் உள்ளதென்றது உண்மையில் இல்லாததாயினும் உள்ளதாம். உலகத்தார் இல்லையென்றது உண்மையில் உள்ளதாயினும் இல்லையாம். உலகத்தார் உள்ளதென்று உரைத்ததை ஒருவன் தான் இல்லையென்று உரைப்பானாயின், உலகத்தார்க்கு அவன் பேயாய்விடுவான். ஆதலால் உண்மையால் யாதொருபயனுமில்லை. சீதையைக் கொடிய இராவணன் கவர்ந்துகொண்டுபோய் நெடுநாள் சிறையிலே வைத்திருக்க, இராமன் அவளிடத்துக் கொண்ட காதலால், அவளை மறுபடியும் உடன்வைத்துக்கொண்டு அவளோடு கூடிவாழ்கிற வாழ்வினும் சாதலே அழகியது' என்று இவ்வுலகத்திலுள்ளார் சொல்லுகிறார்கள். ஆதலால், உண்மையில் பரிசுத்தையென்றே அறிந்துவைத்தும், அவளை விடத் துணிந்தோம்' என்று சொன்னான். நாங்களெல்லோரும் எதிர்மொழிகொடுக்க அஞ்சி, அவ்விடத்தில் நடுங்கி நின்றோம். அப்பொழுது, பெருமைக் குணமுடைய அவ்விராமன் என்னை நோக்கி, 'தேரைச் சித்தஞ்செய்யும்படி சுமந்திரனுக்குச் சொல்லி, இப்பொழுது இச்சுமந்திரனோடு அச்சீதையைத் தேரின்மேலேற்றி அவ்வயோத்தி நகரையும், கோசலநாட்டின் எல்லையையும் கடந்துசென்று, வனஞ்சேர்ந்து, நமது தந்தையாகிய தசரதனுக்கு இனிய உயிர்த்தோழனாகிய பெருமைபெற்ற வான்மீகிமாமுனிவன் எழுந்தருளியிருக்கின்ற பர்ணசாலையின் அருகில் சீதையை விட்டிடு' என்று எனக்குக் கட்டளையிட்டான். இராமபிரான் இங்ஙனம் சொல்ல, அப்பெருமானது கட்டளையை மறுத்தற்கு அஞ்சி அதற்காக இப்பொழுது உன்னை அழைத்துக்கொண்டுவந்தேன்" என்று இலக்குமணன் சொல்லி வருந்தினான்.

(இன்னும் வரும்)

புு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.



# Importance of National Education.

BY MR. V. MUTHUSAMY IYER, M.A., L.T.

## தேசீயக் கல்விச் சிறப்பு.

### காப்புச்செய்யுள் வெண்பா.

தேசீயக் கல்விச் சிறப்புரைக்கச் சின்மயமாய்த்
தேசோ மயமாய்த் திகழீசா!—மாசாரும்
சிந்தை யுடைய் சிறியேற்கு நல்லறிவு
தந்தருள்க; உள்ளம் தழைத்து.

### அகவற்பா.

(கல்வியின் பெருமை.)

அகிலாக் கருணை யாண்டவன் சிருஷ்டியில்,
அலைகடல் சூழும் அம்புவி மீது,
பலபல நிறமும் பலபல திறமும்
பலபல நிதியும் பலபல மதியும்
படைத்துள ராகும் பல்வகை மாந்தர்
படிப்படி வேறு பட்டுள ரெனினும்,
ஐம்பொறி யுணர்வோ டமையா தறிவெனும்
செம்மைசே ரீசன் திவ்யாம் சத்தினை
ஆறும் உணர்வா யவரவர் உளத்தில்
ஏறவோ தாழவோ இயற்கையிற் பெறுவர்;
இந்த அறிவினுக் கிருப்பிட மாகும்
சிந்தையை மாந்தர் செவ்வழி செலுத்தி,
மாசார் திநெறி மறந்தும் நினையா (து)
ஆசா னுரைப்ப தாய்ந்தாய்ந் தறிந்தே,
ஈசுர பக்தி, இன்னருள், வாய்மை,
தேசுறு நற்புகழ், திருந்துமா சாரம்
இவைமுதல் நன்மைகள் எய்துதல் தானே,
புவிமிசைக் கல்வியாய்ப் புகலுவர் மேலோர்
கல்வியின் பெருமையோ கணக்கிடல் அரிது.
பல்விதம் பகரினும் பகர்தற் பாலதோ?
கல்வியே அறமாம்; கல்வியே பொருளாம்;
கல்வியே இன்பம்; கல்வியே வீடு;
கற்றோர் தாமே கண்ணுடை யவர்கள்;
மற்றோர் முகத்து வாய்ந்தவை புண்ணே;
கலைவலார் மதிநலம், காசினி முழுதும்
கலைநிறை மதியெனக் காண்போர்க் கெல்லாம்
இன்பமும் கிளர்ச்சியும் இனிதின் அளிக்கும்.
என்பல கூறுதல்? இவ்வுல கத்தே
ஆதி நாள்முதல் அரும்புகழ் தொகுத்துப்
பூத வுடலம் போயின பின்னும்
என்றும் நிலையாய் இலங்குவோர் யாவர்?
என்றே நாமிங் கெண்ணு மிடத்து,—
வால்மீகி, வியாசர், வரகம்பர், ஔவை
போல்மேவு புண்ணியப் புலவரே யன்றோ?
வேறுள ராகும் வீரரை யரசரைக்
கூறிடல், அதுமதிக் குறைவே யாகும்.

### நொண்டிச்சிந்து.

(பண்டை இந்தியாவில் கல்விநிலைமை.)

இப்படிச் சிறப்புடைய—கல்வியில்
இந்தியா மிகவும் முந்தி யிருந்ததாம்
என்பதை உலகறியும்;—எனினும்,
ஒருசில விவரம் உரைசெய் தால்
உபயோக மேயாகும்:—வேத
சாஸ்திரங்கள், ஈசன் ஸ்தோத்திர நூல்கள்,
சாத்விக குணம் விளக்கும்;—அரிய
நீதிநூல்கள் பல போத நூல்கள்,
நிகரில் தத்துவ நூல்கள்,—இன்னும்,
கற்பனை அலங்காரம் பொற்புறக் கொண்டு,
கதைநயம், உயர்நீதி—முதலாம்
சொற்பொருள் நலங்கள் பற்பல சேரும்
சுவைமிகு காவ்ய நூல்கள்,—இதி,
காச புராணங்கள், மாசிலாச் சிற்பம்,

கணிதம், சோதிடம், வைத்யம்,—இவை [போல்
கலைபலவற்றை மலைவிளக்காகக்
காட்டும் பல நூல்கள் ;—வேறு
நாட்டுளோர் காட்டு முரட்டரென
நாட்டும் படியிருந்த—ஆதி
காலமுதலாய் நமது சிலநாட்டில்
களரிஷி முதலோரால்—நல்ல
குருசிஷ்ய முறையில் பரம்பரையாய்
கூறிவைத்தவை கோடி.

---

## கும்மிமெட்டு.

(தற்காலநிலை.)

இப்படிப் பற்பல வித்தை மலிந்து
இந்தியர் முன்னோர் செழித்திருக்க,
இடையிற் பற்பல மஹமதியர்கள்
இந்நாட்டிற் புகுந்தாண்டார்கள் ;
இந்த இடையிட்ட காலத்திலே, நல்ல
இந்தியக் கல்வியும், தர்மங்களும்,
மதத் துவேஷத்துட னுட்கலகங்களால்
மங்குத லுற்றன கொஞ்சங் கொஞ்சம்.
இவர்க்குப்பின் வந்த ஐரோப்பியர்களில்
இங்கிலீஷ் காரர்கை யேற்றமுற்றே,
இந்தியாவை யிப்போ தாள்வதில் நமக்கு
எய்திடு நன்மை பலவுமுண்டு,
அந்த நன்மைகளில் ஒன்றெனவே நாம்
ஆங்கிலக் கல்வியைக் கூறிடலாம் ;
ஆங்கிலத் தாலே நாம் தன்மறுப் பொற் [றமை
அறிவு விசால மடைகின்றோம்.
ஆயினும், இந்தியர் முப்பத்தைந்துகோடி
ஆனவர்க்கெல்லாம் துரைத்தனத்தார்,
ஆங்கில முறையிற் கல்வி பயிற்றுதல்,
அசாத்தியத்தோ டனுவசியமுமாம் ;
மேலும், கவனித்துப் பார்க்கில், நமது
மேலாம் கவர்ன்மெண்டார் எல்லார்க்கும்
பொதுவாய்ப் புத்திக் குரியதா மொன்றே
புரிந்து வருவது சாத்தியமாம் ;
அதற்கும் ராஜாங்கத்தார் அரசிறைப் [பொருளில்
அதிகம் எடுக்க முடியாது ;
ஏனெனில், காவல், மராமத், சுகாதாரம்,
இவைபிறவற்றுக்கும் பணம் வேண்டும் ;
ஆதலால், கல்வி விஷயமாக நம்
அரசாங்கத்தார் செய்வதெல்லாம்,
இந்திய ஜனத்தொகைக் கு நோக்கில், அது
என்றென்றும் போதாமல் தானிருக்கும் ;
அன்றியும், கல்விக் கனுகூலம் பல
அரசாங்கத்தார்கள் செய்தாலும்,
ஆசாரம், பாஷை அனுஷ்டானம், மதம்
ஆன இவை வித்தியாசத்தினால்,
நம்முடை யிந்தியா நாட்டுக் கிசைந்த
நலம் முழுவதும் நண்ணாது ;
ஆகையால், இந்தியக் கல்வி சிறக்க,
ஆசையோ டிந்திய கனவான்கள்
வேண்டும் பணமிகச் சேகரித்துத் தக்க
விற்பன்னர் தம்முடன் யோசித்துத்,
தேசியக் கல்வி நம்தேசமெங்கும் வெகு
தேஜஸுடனே பரவிவர,
ஆன முயற்சிகள் அறிஞர்கள் பற்பலர்
ஆழ்ந்து நினைத்துச் சொல்லும்வண்ணம்
ஆத்திரத்தோ டிந்திய புத்திரர் நாம் [செயின்
அடியினிற் கண்ட பலன்கள் உண்டாம்.

## ஆனந்தக்களிப்பு.

(தேசியக் கல்விப்பயன்.)

தேசியக்கல்வியால் நன்றுய்—நல்ல
செல்வம் வர்த்தகத்துடன் சேர் [ந்தெங்கும் நீளும்
தொழில்கள் பலபல கொழிக்கும் ;—நாட்டில்
தொன்மை வளமெலாம் தோன்றிச் செழிக்கும்
நாடெங்கும் அஞ்ஞானம் நீங்கும் ;—தூய
நல்லவரிடம் அபிமானமே ஓங்கும் ;
ஒத்துழைப்பென்பது கூடும்—இப்போ (து)
உள்ள மதத்வேஷம் ஊரைவிட் டோடும் ;
கல்விக்குச் செலவு குறையும் ;—வெறுங்
காசுக்கா யுழைத்திடு மாசையும் மறையும் ;
தேசாபிமானம் சொலிக்கும் ;—என்றும்
சிறுமைசேர் தன்னயப் பேயும் ஒளிக்கும் ;
தாய்பாஷைக்கு நல்ல காலம் ;—இந்தத்



தலமெங்கும் ஓங்குமே புண்ணிய சீலம் ;
சொற்ப வரவிருந்தாலும் :—தோன்றும்
தூய கருத்தே உளத்தி லெக்காலும் ;
நீசபுத்தி மிகமங்கும் ;—உண்மை
ராஜ பக்தி மேலும் நல முறப் பொங்கும் ;
ஈச விச்வாசம் இலங்கும் ;—எங்கும்
நேசம் பெருகவே நேர்மை துலங்கும் ;
இந்திய மாதாவின் கீர்த்தி—வளர,
மைந்தர்கள் நாடிது செய்வதே நேர்த்தி.
அருமையாம் தேசிய வித்தை—இதனை
ஆதரிப்பதில் வேணும் உள்ளத்தில் சிரத்தை
இந்த நல்முயற்சிக்கே உதவி - செய்பவர்க் (கு)
இந்துமாதேவி யருள்வள் நறபதவி.

## வாழ்த்து.

வாழி தேசீய வித்தையே—நாட்டில்
வாழி யதனால் வளம்பல மெய்யே
வாழிநாம் மிந்தியா வாழி—நாளும்
வாழி யன்னைபுகழ் வழிவழி யூழி
வாழிநம் ஜார்ஜ்மன் வாழி—மிக
வாழியவர் செங்கோல் மென்மேலும் வாழி
வாழிசர் வேச்வரன் கருணை—என்றும்
வாழிநம் முள்ளத்தில் அவன்நாம ஸ்மரணை.

வே. முத்துசாமி ஐயன் எம். ஏ; எல். டி.

---

# Ancient Stories of South India.

# தென்னிந்திய புராதனக் கதைகள்.

(20 ம் பக்கத் தொடர்ச்சி.)

பகல்திருடன் த்ராக்ஷாபுரம் போய்ச்சேர்ந்து ஒரு அன்னஸத்ரத்தில் ஸாப்பிட்டு நாலைந்து தினங்கள் பர்யந்தம் ஊரெல்லாம் ஸ்வேச்சையாய்த் திரிந்துபார்த்துக் கடைசியாய்த் தன் தந்தையிருந்த இடத்தை அறிந்துகொண்டான். பிறகு, ஒருநாள் சாயங்காலம் காசிராஜனது காச்மீரச் சால்வையைப் பகட்டாய்த் தரித்துக்கொண்டு, ரத்னவதி வீட்டுக்கெதிராக இரண்டு மூன்றுதரம் உலாவினான். அப்போது விகார் போய்க்கொண்டிருந்த ரத்னவதியும் ராத்திருடனும் அவனைப்பார்த்தார்கள். அவன் போர்த்துக்கொண்டிருந்த சால்வையைப் பார்க்கும்போதே, ரத்னவதிக்கு அதன்மீது அபேக்ஷை உண்டாயிற்று. ராத்திருடனுக்கும் அந்தச் சால்வை நாம் திருடிவந்த சால்வைதானோ? என்ற ஸந்தேஹம் ஜனித்தது. அவன் இவ்வாறு மனதுக்குள் ஸந்தேஹப்பட்டுக்கொண்டிருக்கும்போதே, ரத்னவதி 'கண்ணா? எனக்கு அதையொத்த சால்வையொன்று வாங்கிக்கொடுக்கிறாயா? எனக் கேட்டாள்.' அதற்கு ராத்திருடன் 'வைத்தியக்காரி, அதையொத்த சால்வையேன்? நான் அதையே கொண்டுவந்து கொடுக்கிறேன்' என்றான். அதைக்கேட்டு ரத்னவதி அதிக ஸந்தோஷப்பட்டு, இன்றே வேண்டுமென்றாள். அப்படியானால், நீ வீட்டுக்குப்போ எனக்கூறி அவளையனுப்பிவிட்டு, ராத்திருடன் அந்த நபர் இருப்பது, உண்பது, உறங்குவதாகிய முதலிய இடங்களைக் கண்டுகொள்ள எண்ணங்கொண்டு யாதொன்றும் தெரியாதவனைப்போல் அவன் பின்னரே சென்றான். பகல்திருடன் இவையெல்லாவற்றையும் கவனித்துக்கொண்டே சென்றான். தன் தகப்பனார் தன்னைப் பின்பற்றி வருவதைக்கண்டு ஸந்தோஷித்து அவன் மெதுவாய்த் தன் ஜாகைக்கு வந்துவிட்டான். ராத்திருடன் அவனுடன் ஸத்ரத்துக்குள் நுழைந்து, 'பாட்டியம்மா, சாப்பாடு போடுவதற்கு வேளைக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும்' என்று இப்படியப்படி பேசிக்கொண்டே ராத்திருடன், பகல்திருடன் தங்கியிருந்த வீட்டின் உட்புறங்களை நன்றாய்க் கவனித்துக்கொண்டிருந்து, கடைசியில் பாட்டியம்மாளுக்கு ஏதோ ஸமாதானம் சொல்லிவிட்டுப் போய்விட்டான். பகல்திருடன் நடந்த

வற்றையெல்லாம் பார்த்துத் தன் தந்தை அன்றிரவு அந்த வீட்டுக்கு வரப்போகிறானென்று நிச்சயஞ்செய்துகொண்டான்.

பொழுதோடு போஜனஞ்செய்துவிட்டுப் பகல்திருடன் சால்வையைத் தலைபணையாக வைத்துக்கொண்டு, நீர் நிறைந்த கலசமொன்றை மார்மீதுவைத்துத் தூங்கத் தொடங்கிவிட்டான். ராத்திருடன் இரவு இரண்டு ஜாமத்துக்கெல்லாம் அதிசாதுர்யமாக அந்த வீட்டுக்குள் நுழைந்து, பகல்திருடன் படுத்திருந்த அறைக்குள்வந்து பார்த்து, அவனுடைய ஜாக்ரதையைக் கண்டு வியந்து கலசம் சாயாமலும் அவன் விழித்துக் கொள்ளாமலும் மெள்ள மெதுவாகத் தலையைத் தூக்கிச் சால்வையை யெடுத்துக்கொண்டு போய்விட்டான். காலையிலெழுந்து பார்க்கையில் சால்வையைக் காணோம். பகல்திருடன் அதி ஆச்சர்யமடைந்தான். 'பலே, என் தகப்பனார் சமத்காரம் அற்பசொற்பமாகக் காணோம்; இருந்தாலும், ஆகட்டும் ஒருகை பார்ப்போம்' என்று நிச்சயித்துக்கொண்டான். மறுநாள் மத்யானம் வழக்கம்போல் ரத்னவதி விஹாரி சென்றாள். அவ்வழியாய் வரும்போது அவள் தன் தாதிவீட்டுக்குப்போய் வந்துகொண்டிருந்தாள். அவள் காச்மீரச்சால்வையை தரித்திருப்பதைக் கண்டு பகல்திருடன், அவளை இரண்டு மூன்று தடவை நின்று உற்றுப்பார்த்தான். தன் ப்ரியன் இரவில் திருடிக்கொண்டுவந்த விலையுயர்ந்த சால்வையைத் தான் தரித்துக்கொண்டு விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்த ரத்னவதி, பகல்திருடன் தன்னை இரண்டுமூன்று முறை உற்றுப்பார்த்ததைக்கண்டு பயந்து வீட்டுக்கோடினாள். பகல்திருடனும் தன் விடுதிக்குச் சென்றான்.

வீட்டுக்குச்சென்ற ரத்னவதி ராத்திருடனைப் பார்த்து, 'நேற்று இந்தச் சால்வையைத் திருடின வாலிபன் இன்றைக்கு நான் இதைப் போர்த்துகொண்டு என் செவிலித்தாய் வீட்டினின்று திரும்பி வந்துகொண்டிருக்கும்போது, என்னை ஏறஇறங்க மும்முறை விறைத்துப் பார்த்தான்' என்றாள். 'அப்படியானால் அவன் இன்றிரவு இந்தச் சால்வையைத் திருடவருவான் என்பது நிச்சயம். நாம் பத்ரமாய் வைக்க வேண்டும்' எனக்கூறி ராத்திருடன், ரத்னவதி ஆபரணங்களையெல்லாம் கழற்றி ஒருபெட்டியில் வைத்து, அவைகளுடன் அந்தச்சால்வையையும் வைத்துப் பெட்டியை மூடிப் படுக்கையறையில் ஒருபக்கம் தோண்டி அதனுள் அதனை ஜாக்ரதையாகவைத்து, அதன்மேலே படுக்கையை விரித்து ரத்னவதியுடன் படுத்திருந்தான்.

ராத்திரி இரண்டு ஜாமமாயிற்று. அப்போது தகுந்த ஆயுதங்களுடன் பகல்திருடன் ரத்னவதி வீட்டுக்கு வந்து கன்னம்வைத்து உள்ளே ப்ரவேசித்தான். அத்தருணம் ரத்னவதியும் ராத்திருடனும் நல்ல நித்திரையிலிருந்தார்கள். விலையுயர்ந்த நவரத்னங்களிழைத்த மஞ்சமிருக்க, அவர்களிருவரும் கீழே தரையில் படுக்கைவிரித்துப் படுத்திருப்பதைக் கண்டு, ஸங்கதிகளையெல்லாம் எளிதில் க்ரஹித்துக்கொண்டான். சோரபண்டிதனான பகல்திருடன் உடனே அதிக சாதுர்யமாக அவர்களுக்கு விழிப்பு வரவொட்டாமல் அப்படியே படுக்கையை நகர்த்திப் பெட்டியைத் திறந்து சால்வையைமாத்ரம் எடுத்துக்கொண்டு, யதாப்ரகாரம் அவர்களைப் பள்ளத்தின்மீது படுக்கவைத்துவிட்டு, தன் வீட்டுக்குத் திரும்பிவிட்டான்.

காலையில் படுக்கைவிட்டெழுந்து ரத்னவதியும் ராத்திருடனும் அந்த வாலிபன் தமது சால்வையையாவது நகைகளையாவது அபகரிக்கவில்லையென்று ஸந்தோஷப்பட்டார்கள். 'நாம் தேர்ந்த கை; நமக்குமுன் எம்மாத்ரம் அந்தச் சிறுவாலிபன்' என்று கர்வங்கொண்டான் ராத்திருடன். பகல்திருடன் இன்னானென்று அறிந்திருந்தால், ராத்திருடன் இவ்வாறு மார்தட்டிப் பெருமை பேசியிருக்கமாட்டான். ரத்னவதி ஸ்நானம் செய்து அலங்காரம் செய்துகொள்ளும்பொருட்டுப் பெட்டியைத் திறந்துபார்க்கையில், சால்வை காணாததைக் கண்டு ப்ரமித்துப்போய்விட்டாள்; உடனே ராத்திருடனுக்கு ஸங்கதியைச் சொன்னாள். அவனும் அதைக்கேட்டு



அதிசயித்து, 'அந்தச் சிறுவன் என்னிலும் இந்த வேலையில் கைதேர்ந்தவன் போலிருக்கிறது. ஸரி, நான் அந்தச் சால்வையை எப்படியாவது கொண்டுவந்துவிடுகிறேன்' என்று அவளுக்கு ஸமாதானம் சொல்லியனுப்பிவிட்டான். ஆனாலும் அவனுக்கு மாத்ரம் தலை கிறக்கமாய்த்தானிருந்தது. என்னசெய்வது? காக்கையின் குஞ்சு பறக்குமேயொழிய எப்போதாவது தவழுமா?

அன்றைய சாயுங்காலம் பகல்திருடன் சால்வையைப் போட்டுக்கொண்டு ரத்னவதிவீடு பக்கமாய் உலாவப்போனான். வீட்டுத்தெருத் திண்ணையில் உட்கார்ந்திருந்த ரத்னவதி அந்தச் சால்வையைப்பார்த்துத் தடாலென்று உள்ளே சென்று, 'நமது சால்வையைத் தரித்துக்கொண்டு அந்தச் சிறுவன் தெருவே போகிறான்' என்று ராத்திருடனிடம் சொன்னாள். உடனே எழுந்து ராத்திருடன் தெருவில்வந்து, அந்த வாலிபனைத் தொடர்ந்துசென்றான். ஊருக்கு வெளியே வந்ததும், அவன் பகல்திருடனைக் கைதட்டிக் கூப்பிட்டு உட்காரவைத்து, அவனுடன் ஸ்நேகம் செய்யத் தொடங்கினான். "இதற்குச் சுற்றுப் பக்கங்களில் நல்ல கொழுத்த ஸௌகார்கள் இருக்கிறார்கள். அவர்கள் வீட்டில் கன்னம் வைத்துப் பொருள்சேர்த்து நான் இரண்டுபங்கும் நீ ஒரு பங்குமாகப் பங்கிட்டுக்கொள்ளலாம்" என்று ராத்திருடன் சொன்னான். பகல்திருடன், "இவ்வகையான வேலை என்னால் எப்போதும் ஆகாது. நீயே திருடவேண்டும். திருடுவதால் உண்டாகக்கூடிய சிக்ஷை தண்டனையெல்லாம் உனது பொறுப்பேயொழிய நான் சிறிதும் உட்படமாட்டேன். ஆனால், பங்குமட்டுமோ: உனக்கு ஒன்றரை, எனக்கு ஒன்று. இவைகளுக்கு நீ ஸம்மதித்தால் நான் உன்னுடன் வருவேன்" என்றான். ராத்திருடன் ஒத்துக்கொண்டான். அன்றிரவே சென்று, அவர்கள் அபாரதனம் கொள்ளையடித்துவந்து, முன்னே செய்துகொண்ட பேச்சுப்படிக்குப் பங்கிட்டுக்கொண்டார்கள்.

ராத்திருடனுக்குமாத்ரம் "நாம் எவ்வளவோ கஷ்டப்பட்டு, எத்தனையோ ஆபத்துக்கிடாகி ப்ராணனைக் கையில் பிடித்துக்கொண்டு சென்று திருடிவந்தோம்; இவனொன்றும் செய்யவில்லை; துரும்பெடுத்துத் துரும்புமேல் போடவில்லை; கூடவந்தானும்; இவன் வந்ததால் மஹா கார்யலாபம். அந்தச்சாக்கை வைத்துக்கொண்டு ஏறக்குறைய ஸரிபங்கு அடித்துக்கொண்டுபோய்விட்டான்" என்று பகல்திருடன்மீது வயிற்றெரிச்சலாயிருந்தது. ஆனாலும், அவ்விஷயம் அப்போது வெளிவரக்கூடாதென்றும், ஏதாவது ஏற்ற சமயம் பார்த்துப் பையனை வேலைதீர்த்துவிட்டுச் சொத்தையெல்லாம் எடுத்துவந்துவிடலாம் என்றும் தீர்மானித்துக்கொண்டான். இப்படியிருக்கையில், மறுபடியும் ஒருநாள் ராத்திருடனும் பகல்திருடனும் ஸந்தித்து இன்னொருமுறை ஸஞ்சாரம் செய்து த்ரவ்யம் கொண்டுவரவேண்டுமென்று நிச்சயஞ்செய்துகொண்டார்கள். ஆனால், பங்குவிஷயமாய் மாத்ரம் சிறிது வித்யாஸம் அவர்களுக்குள் ஏற்பட்டது. ராத்திருடன் பகல்திருடனுக்கு ஒருபங்கு கொடுக்க ஒத்துக்கொள்ளவில்லை. 'நான் இரண்டுபங்கு எடுத்துக்கொண்டு உனக்கு ஒருபங்குதான் கொடுப்பேன்" என்று ராத்திருடன் சொல்ல, பகல்திருடன், "நீ என்ன என்னிலும் சிறந்தவன். இரண்டேன் உனக்கு?" எனக் கேட்டான். அதற்குமேல் ஒருவருடைய ஸாமர்த்யத்தையொருவர் அறியவேண்டிய அவசியம் ஏற்பட்டது. உடனே இருவரும் பரீக்ஷைக்கு ஸித்தமானார்கள்.

பக்கத்திலேயேயிருந்த பனைமரத்தின்மீதிருக்கும் காக்கையின் கூட்டைக் காண்பித்துப் பகல்திருடன், அதிலிருக்கும் முட்டைகளை அந்தக் காக்கைக்குத் தெரியாமல் எடுத்துவாவென ராத்திருடனுக்குச் சொன்னான். ராத்திருடனும் அப்படியேசென்று, மரத்தின்மேலேறிக் காக்கைக்குத்தெரியாமல் முட்டைகளை எடுத்து மடியில் வைத்துக்கொண்டான். இதற்குள் பகல்திருடன் மரமேறி ராத்திருடன் மடியிலிருந்த முட்டைகளை அவனுக்குத் தெரியாமல் எடுத்துக்கொண்டு அவனுக்கு முன்னமாகக்

கீழே வந்துவிட்டான். ராத்திருடன் இறங்கி வந்து 'இதோ உன் காய்கைமுட்டை, பார்த்துக்கொள்' என்று மடியில் கைவிட, அங்கே ரூபமாயிருந்ததைக்கண்டு ப்ரமித்தான். உடனே பகல்திருடன் தான் செய்ததையெல்லாம் சொன்னான். பகல்திருடனுடைய அரிய ஸாமர்த்யத்தை அங்கீகரித்து, திடீரென ராத்திருடன் அவனை இறுகத் தழுவிக்கொண்டு, 'அப்பா, உன்னைப் பார்த்தால் என் குமாரனெனத் தோன்றுகிறது. நிஜத்தைச் சொல்' எனக்கேட்டான். அதைக்கேட்டுப் பகல்திருடன், தன் தகப்பனுருக்கு இத்தனை நாளாக இன்றைக்குத்தான் பூர்வ ஞாபகம் வந்ததென்று மகிழ்ச்சியடைந்து உண்மையை ஒளிக்காமல் எல்லாவற்றையும் சொல்லிவிட்டான். உடனே ராத்திருடன் அவனை ஆலிங்கனம் செய்துகொண்டு, 'அப்பா, கண்மணி, இந்த ஸங்கதியை ஏன் எனக்கு முதலிலேயே தெரிவிக்கவில்லை' எனக்கேட்க, அவன் 'என் அன்னை அனுப்பிய ஒற்றர்களைத் திரஸ்கரித்து அவர்களை விரட்டியோட்டிய நீ, நான் முதலிலேயே உன் குமாரன் என்று சொன்னால் நம்பமாட்டாயென்றும், என் ஸாமர்த்யத்தைக் காட்டி உன்னை மகிழ்வித்துப் பிறகே யதார்த்தத்தைச் சொல்லவேண்டுமென்றும் எண்ணியிருந்தேன்' என்று பதிலளித்தான். பிறகு ராத்திருடன் ரத்னவதிக்கு ஏராளமான த்ரவ்யம் கொடுத்து அவளிடம் விடைபெற்றுக்கொண்டு, மிகுந்த தனத்துடனும் பிள்ளையுடனும் தன்னூருக்குப் புறப்பட்டான்.

புருஷனும் பிள்ளையும் க்ஷேமமாய்த் திரும்பி வந்ததைக்கண்டு ஸுகுணவதி ஆனந்தபரவசமானாள். இனிக் கண்ணால்கூடக்காணப்போவதில்லையெனக் கைவிட்ட தன் கணவனை க்ஷேமமாய்த் திரும்பயழைத்துவந்த தன் மகனை அவள் வாயார வாழ்த்தினாள். குமாரன் பட்ட கஷ்டங்களையெல்லாம் கேட்கக்கேட்க அவளுக்கு அடிவயிறு பகீல்பகீலென்றது; என்ன கஷ்டப்பட்ட போதிலும், கடைசியில் க்ஷேமமாய்த் திரும்பியதைக்கண்டு அக்கஷ்டங்களையெல்லாம் மறந்துவிட்டாள். ராத்திருடனும் தான் பதினாறு வருஷ காலமாய் அவர்களைத் திரஸ்காரம்செய்து அடியோடு மறந்திருந்ததற்காகத் தன்னை மன்னிக்கும்படி ஸுகுணவதியையும் மகனையும் கேட்டுக்கொண்டான்.

இப்படிப் போனவர்கள் மீண்ட களிப்பில் சில நாட்கள் கழிந்தன. ஒருநாள் சஜானவை இன்னும் நிரப்பவேண்டுமென்று ஆசை ராத்திருடனுக்கு உண்டாயிற்று. வேண்டிய பொருளாயிருந்தாலும் அவை ஒவ்வொன்றிற்கும் ஓர் அளவு இருக்கிறது. அதாவது: இவ்வளவுமட்டும் கிடைத்தால் இனி அது சிறிதேனும் அவசியமில்லையென்ற ஒரு வரையறை ஏற்பட்டுவிடுகிறது. ஆனால், ஸகலவித ஐசுவர்யத்துக்கும் மூலகாரணமும் ராஜமார்க்கமுமாகிய பரமசக்தியுள்ள அந்தப் பணத்தின் விஷயத்தில், ஆசையென்பதற்கு ஒரு முடிவுமில்லை, அந்தமுமில்லை. எவ்வளவு கிடைத்தாலும் "இன்னுங்கொஞ்சம் கிடைக்காதோ" வென்றே ஜனங்கள் அனைவரும் ஏங்கி நிற்பார்கள். பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும். பணத்தாசை பிடித்தாட்டும் ராத்திருடன் இம்முறை அவ்வூர் மஹாராஜா அரமனையையே தனது உத்யோகஸ்தலமாகக் கொள்ள நினைத்தான். அது நன்மையற்றதென்றும் ஆபத்துக்கிடமென்றும், சோரத்துக்குச் சொந்த ஊர் அபாயகரமானதென்றும் ஸுகுணவதியும் பகல் திருடனுமாக எவ்வளவோ சொல்லிப்பார்த்தார்கள். தன்னைவிட ஸாமர்த்யவான் என்று தான் அங்கீகரித்த தன் மகனுடைய வார்த்தைகூட ராத்திருடன் புத்திக்கேறவில்லை. கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே. ராஜா வீட்டில்தான் கன்னம் வைப்பேனென்று ஒரே பிடியாய்ப் பிடித்தான். காலத்துக்கேற்ற புத்தி. மேலே செய்யக்கூடியது ஒன்றுமிராமையால், பகல்திருடன் தகப்பனுடன் அரமனை நோக்கிச் சென்றான்.

தகப்பனும் பிள்ளையுமாய்ச் சேர்ந்து ஏற்ற விடத்தில் கன்னமிட்டார்கள். அவர்களுக்கு எங்கேயும் யாதொரு வித அப்யந்தரமும் உண்டாகவில்லை. கன்ன வாயிலில் பிள்ளையை வைத்துவிட்டு ராத்திருடன் உள்ளே சென்றான்.



முதல் தடவையில் அகப்பட்ட குவியலைக் கொண்டுவந்து குமாரனிடம் கொடுத்துவிட்டு ராத்திருடன் மறுபடியும் உள்ளே சென்றான். இதற்குள் காவல்காரன் விழித்துக்கொண்டான்; உடனே 'திருடர்கள் திருடர்கள்' எனக் கத்தினான். அரமனையிலுள்ளோர் யாவரும் எழுந்துவிட்டார்கள். உடனே ராத்திருடன் கன்ன வாயிலை நோக்கி ஓடிவந்தான். அவன் பின்னே இரண்டு வீரர்கள் துரத்திக்கொண்டு வந்தார்கள். ராத்திருடன் சன்ன வாயிலண்டை வந்துவிட்டான். அவர்களும் நெருங்கினார்கள். ராத்திருடன் கன்னவாயிலுள்ளுக்குள் தலையை நுழைத்தான். வீரர்களிலொருவன் கத்தியை வீசினான்; தலைவேறு உடல்வேறு ஆய்விட்டது. வெளியே நின்றுகொண்டிருந்த பகல்திருடன் தலையைக் கையிலெடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தான். காவல்காரர்கள் விளக்குக் கொண்டு வந்து பார்க்கும்போது, முண்டம் மாத்ரமே அவ்விடம் விழுந்து கிடந்தது. அதனால் என்ன ப்ரயோஜனம்? ஆனாலும், முண்டத்தை ஜாக்ரதைப்படுத்தும்படி மஹாராஜா கட்டளையிட்டார். பகல்திருடன் வீடுசென்று தாயாரிடம் நடந்த வரலாற்றையெல்லாம் சொல்ல, அவள் ஓவென்று அலறியழுதாள். திருடன் பெண்சாதியென்பது அவளுக்கு இப்போது தலையிடித்தது.

மறுநாள் பகல்திருடன் டம்பமாய் அலங்காரஞ்செய்துகொண்டு ராஜஸபைக்குச் சென்றான். அப்போது மஹாராஜா ராத்ரி மாண்ட திருடனைப்பற்றி விசாரணை செய்துகொண்டிருந்தார். நல்ல சமயத்துக்கு வந்தோமென்று பகல்திருடன் ஒன்றும் தெரியாதவன்போல எல்லாவற்றையும் செவிகொடுத்து உன்னிப்பாய்க் கேட்டான். "திருடன் உள்ளூர் பேர்வழிதான்; வெளியூரானல்ல; ஆகையால், நீங்கள் முண்டத்தை ஒரு வண்டியில் போட்டுக்கொண்டு நகர முழுவதும் ஓட்டிக்கொண்டு போங்கள்; இந்த முண்டத்தைக்கண்டு எவர்கள் அழுகிறார்களோ அவர்களைப் பின்கட்டுப் பாரையாகக் கட்டிக் கொண்டு வாருங்கள்" என்று மஹாராஜா சேவகர்களுக்கு ஆஞ்ஞாபித்தார்கள். பகல்திருடன் வீடுபோய் ராஜா சொன்னதைத் தாயாரிடம் சொல்ல, அவள் "அப்பா, என் ஆருயிர்த்தலைவன் உடலை இந்த வீதி வழியாய்ப் போகும்போது நான் எப்படி அழாமலிருக்கமுடியும்" என்று அழுதாள். தாயார் சொன்னதைக் கேட்டுப் பகல்திருடன், இந்த சங்கடத்துக்கு என்ன செய்வதெனச் சற்று யோசித்து, பிறகு ஸுகுணவதியைப்பார்த்து, "அம்மா, நீ சொல்வது வாஸ்தவந்தான்; ஆனால், ஒன்று செய்வோம்; நாமிருவரும் பிச்சைக்கார் வேஷம் போட்டுக்கொள்வோம். நான் நமது தெருக் கோடியிலிருக்கும் முருங்க மரத்தின்மேல் ஏறிக்கொள்ளுகிறேன். நீ கீழே உட்கார்ந்து சமைத்துக்கொண்டிரு. நமது தகப்பனார் முண்டம் அந்த மரத்துக்குச் சரியாய் வரும்போது, நான் மரத்தினின்று கீழே அந்த வண்டியின்மேல் விழுகிறேன்; அப்போது நீ என்மேல் விழுந்து உனது துக்கந்தீர அழுதுவிடு" என்று சொன்னான். அவள் அதற்கு ஒத்துக்கொண்டாள்.

(இன்னும் வரும்.)

| | |
|---|---|
| கணக்குப் பரிசோதனை<br>இது தஞ்சை கோ. நடேச ஐயர் இயற்றியது. இதில் எல்லாத் தொழில்களின் கணக்குக்களையும் பரிசோதிக்கும் பொது விதிகளும், இன்னும் முக்கியமான சில தொழில்களைப் பற்றிய முறைகளும் கூறப்பட்டிருக்கின்றன. | 1 0 0 |
| திருமலை ஸேதுபதி<br>அ. மாதவய்யா இயற்றியது. | 0 8 0 |
| இந்தியாவின் கோரிக்கைகள்<br>கே. விசுவநாதய்யர் மொழி பெயர்த்தது. இதில் காங்கிரஸ் கோரிக்கைகளும் இரண்டு ஸபைப் பிரதிநிதிகளால் டெல்லியில் இராஜப் பிரதிநிதியிடமும், இந்தியா மந்திரியிடமும் சமர்ப்பிக்கப்பட்ட விஞ்ஞாபனமும் அடங்கியுள்ளன. | 0 8 0 |

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
இராயவேலூர், (தென்னிந்தியா.)

## Social Service.

### சமூக ஊழியம்.

சென்றவருஷம் டிஸம்பர் மாதம் கல்கத்தாவில் கூடிய எல்லா இந்தியா ஜனசமூக ஊழியக் கான்பரென்ஸுக்கு ஸ்ரீமான் காந்தி அக்கிராசனாதிபதியாகவிருந்து ஓர் அரிய பிரசங்கம் செய்தார். அதன் முக்கிய அம்சத்தை இங்குக் குறிப்பிடுகிறோம்.



எம். கே. காந்தி.

சமூக ஊழியமானது நல்ல பலனைக் கொடுக்க வேண்டுமாயின், அது ஆடம்பரமில்லாமல் செய்யப்படவேண்டும். நாம் சமூக ஊழியம் செய்யும்போது, புகழ்ச்சியினால் ஊழியத்தில் ஊழலும், இகழ்ச்சியினால் ஊழியத்தில் பின்வாங்குதலும் கூடாது. நாம் இதுவரையில் சமூக ஊழியத்தில் அலட்சியம் செய்துவிட்ட சில முக்கிய விஷயங்களை இங்குக் கவனிப்போம்.

#### ஆங்கிலபாஷைக்கு அடிமை.

ஜன ஸமூஹத்திற்கு நாம் செய்யவேண்டிய ஊழியம் என்னவென்பதை முதலில் உணரவேண்டும். நாம் ஸ்வாதீனம்பெறவும் ஆங்கில பாஷையைக் கற்பதில் நம்மவர்களுக்கிருக்கும் மூடபுத்தியை ஒழிக்கவும் நாம் முயற்சி செய்யவேண்டும். நமது கல்விச்சாலைகளில் நமக்கு ஆங்கிலத்தின் மூலமாகவே கல்வி போதிக்கப்படுகின்றது. இப்போது ஏறக்குறைய அதுவே தேசபாஷையாக வழங்கிவருகிறது. நமது சிறந்த யோசனைகளையெல்லாம் ஆங்கிலத்திலேயே நாம் வெளியிடுகிறோம். இன்னும் கொஞ்சகாலத்திற்குள், சில உயர்ந்த குடும்பங்களில், ஆங்கிலபாஷையே தாய்ப்பாஷையாய்விடுமென்று நமது செம்ஸ்போர்டு பிரபு அபிப்பிராயப்படுகிறார். ஆங்கிலக் கல்வியைக் கற்கவேண்டுமென்ற எண்ணத்திற்கு நாம் ஆளாய்விட்டோம். இதனால், ஜனஸமூக சேவைக்கு நாம் தகுதியற்றவர்களாய் விட்டோம். ஆங்கிலத்தின் மூலமே கல்விச்சாலைகளில் போதனை நடந்துவருவதால், நமது ஞானம் ஒதுங்கி மூலையில் கிடக்கிறது. பாமரர்களினின்று நாம் விலகிநிற்கிறோம்; நமது ஜாதியினரில் மேதாவிகளாயுள்ளவர்களின் ஞானம் பிறர்க்குப் பயன்படாதபடி கூண்டில் அடைபட்டுக்கிடக்கின்றது. நமக்குக் கிடைத்துள்ள புதிய உத்தேசங்களை நம்மிடமிருந்து ஜனசமூஹத்தினர் பெற்றுக்கொள்ள முடியவில்லை. விஷயங்களை உணர்ந்து ஒழுங்குபடுத்திக்கொள்ளாமல் அன்னியவார்த்தைகளை மனப்பாடம் பண்ணுவதிலும், அவ்வார்த்தைகளின் உச்சரிப்பை கிரஹித்துக் கொள்வதிலும் சென்ற 60 வருஷங்களாக நாம் காலங்கழித்து வந்திருக்கிறோம். நமது பெற்றோர்களிடமிருந்து தெரிந்துகொண்ட விஷயங்களை கொண்டு மேன்



மேலும் நாம் அபிவிருத்தியடையாமல், தெரிந்துகொண்ட விஷயங்களை மறந்துவந்திருக்கிறோம்.

#### தேசபாஷைகளைக் கைதூக்கிவிடவேண்டும்.

நாம் முதலாவதாகச் செய்யக்கூடிய சமூக ஊழியம் என்னவென்றால்: நமது தேசபாஷைகளைக் கைதூக்கி விடவேண்டும்; ஹிந்தி பாஷையை ஜாதிய பாஷையாகச் செய்யவேண்டும். ஜாதீய சம்பந்தமான சகல காரியங்களையும் ஹிந்திபாஷையின் மூலமாகவே செய்யப்பார்க்க வேண்டும். தேசபாஷைகளின் மூலமாய்ப் போதனை நடக்கும்வரையில், நாம் நமது முயற்சியில் தூங்கக்கூடாது. நமது சட்டசபைகளின் நடவடிக்கைகள் யாவும் தேசபாஷைகளிலேயே நடக்கும்படியான நற்காலம் சீக்கிரம் வரவேண்டும். சட்டசபை நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் நடைபெறுவதால், அவற்றை நமது சமூஹத்தினர் உணர்ந்துகொள்ள முடியாமலிருக்கின்றார்கள். மேதாவிகளுக்குப் பிறப்பிடமாயுள்ள இப்புராதன தேசத்திலே கவிசிரேஷ்டரான தாகோரும், சாஸ்திர விற்பன்னரான வஸுவும், ரஸாயன ஞானியான ராயும் ஜனித்திருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை. எனினும், அத்தகைய கல்விமான்கள் வெகு சிலரே யிருப்பது மிகவும் வியசனிக்கத்தக்கது. தேசபாஷையைப் பற்றிய விஷயமானது சமூகஊழியத்தின் ஓர் அம்சமாகுமோவென்று நீங்கள் எண்ணலாம். நமது கல்விமுறையில் தேசபாஷைகள் மிகவும் அலட்சியம் செய்யப்பட்டிருப்பதால், இதனால், ஜாதீய முயற்சிகள் பலவும் தடைப்படுகின்றன. இக்காரணம்பற்றியே தேசபாஷையைப்பற்றி நான் உங்களுக்குச் சொல்ல முன்வந்தது.

#### ஜனங்கள் நோய்க்கு இரையாதல்.

ஜனங்களுக்குத் துன்பம் வருங்காலத்தில், அவர்களுக்கு ஊழியம் புரிதலே மிகவும் மேன்மையானது. 1914-ம் வருஷத்தில் காலரா, ப்ளேக், ஜ்வரம் ஆகிய இவற்றால் 46,30,663 பேர்கள் மாண்டுபோயினர். இவ்வளவு பேர்களும், இப்போது நடக்கும் யுத்தத்தில் மாண்டிருந்தால் நமக்குக் கியாதி கிடைத்திருக்கும். ஆனால், இவர்கள் நோய்க்கு இரையானதால், நமக்கு அபகீர்த்தியே கிடைத்தது. மேற்கூறிய நோய்களைப் போக்க ஆங்கிலேயர்கள் பல முயற்சிகளைச் செய்து வருகிறார்கள். ஆனால், அவர்கள் கைக்கொள்ளும் முறைகள் மிகுந்த பணச்செலவுள்ளவையாயிருக்கின்றன. ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் விரிவான வேற்றுமைகள் இருப்பதால், ஆங்கிலேயர்கள் அவற்றை உணராமல், மேனாட்டுக்கு ஏற்ற முறைகளில் முயன்றிருக்கிறார்களேயன்றி நமது தேசத்துக்கு ஏற்ற முறையில் முயலவில்லை.

#### நமது முயற்சி.

வைத்தியத்தில் கைதேர்ந்த ஆறுபேர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு காலரா, ப்ளேக், ஜ்வரம், ஆகிய இம்மூன்றையும் நிவர்த்திக்க முயன்றால், தக்க பலன் ஏற்படுமென்பதில் ஆக்ஷேபணையில்லை. இந்நோய்களை வரவொட்டாமல் தடுப்பதுதான் மிகவும் சிலாக்கியமான காரியம். இவற்றைப்பற்றிய விஷயங்களைப் பொதுஜனங்களுக்குத் தெளிவாக நாம் எடுத்துரைக்கவேண்டும். இவற்றை அவர்கள் பின்பற்றுவார்களென்பதில் ஐயமில்லை. இவ்விஷயங்களில் கவர்ன்மெண்டார் நமக்கு வழிகாட்டவேண்டுமென்று நாம் எண்ணுவது தவறு; நாம் முயற்சி செய்வோமானால் அவர்கள் நம்மைப் பின்பற்றி நடப்பார்கள்; தவிரவும், நமக்கு ஆதாரவும் அளிப்பார்கள். இவ்விஷயமாய் ஜனசமூஹ ஊழியம் செய்ய மிக்க இடம் உள்ளது.

கிராமாந்தரங்களிலுள்ள நிலைமைகளை நேரில் உணர்ந்து, அந்நிலைமைகளைப் போக்குவதற்கு இன்னின்ன வழிகளைத் தேடவேண்டுமென்று யோசனை சொல்வதற்காக ஆறு டாக்டர்களடங்கிய ஒரு கமிடியை இக்கான்பரென்ஸ் நியமிக்கலாம். அவ்வாறு அக்கமிடிகள் யோசனை சொன்னால், ஜனஸமூக உழைப்பாளிகளுக்கும் ஜனங்களுக்கும் மிகவும் அனுகூலமாயிருக்கும்.

#### ரெயில்வே பிரயாணிகள்.

ரெயில்வேயில் மூன்றாவது வகுப்புப்பிரயாணிகள் படும் கஷ்டங்கள் சொல்லத்தரமல்ல. ஆக

லால், ஜன சமூக ஊழியர் ஒவ்வொருவரும் அப்பிரயாணிகளுக்குப்பரிஹாரம் கிடைக்கும்படி முயன்று தக்க ஊழியம் புரியலாம். அவர்கள் படும் கஷ்டங்களைப் பார்க்க என்மனம் கரைகின்றது. பல தடவைகளில் நான் அவர்களுடனிருந்து, அவர்களின் கஷ்டங்களைக் கண்டிருக்கிறேன். நம் தேசத்திலுள்ள ஜனங்களில், லட்சக்கணக்கான ஏழைகள் அவ்விதம் கஷ்டப்படுகின்றனர். அந்த அசௌகரியத்தையும், அவமதிப்பையும் போக்காமல் நாம் சகித்துவருவதால், நமது ஜாதியார் க்ஷீணித்து வருகின்றனர். ரெயில் வண்டிகளிலே அவர்கள் படும்பாட்டை என்னென்று கூறுவது: வண்டிகளிலே இடம் கிடைப்பதற்காகப் பைத்தியம்பிடித்த நாயைப்போல ஓலமிடுகின்றனர்; நிற்பதற்கு இடம் கிடைப்பதற்குமுன், எனக்கு இங்கே நிற்க இடம் கிடைத்தால் போதுமென்று சத்தியம் செய்கின்றனர்; இடம் கிடைக்காது போயின், பிறரைச் சபிக்கின்றனர்; பிரயாணகால முழுவதிலும் அழுக்கில் மூழ்கிக் கிடக்கின்றனர்; நாய்கள் ஆகாரம் பெறுவதுபோல ஆகாரம் பெற்று உண்கின்றனர்; தங்களைவிட சரீரபலம் வாய்ந்தவர்களைக் கண்டு நடுங்குகின்றனர்; இரவு பகலாக உட்கார்ந்தவண்ணமாகவே தூங்குகின்றனர். இப்படியெல்லாம் அவர்கள் சொல்லவொண்ணாத கஷ்டங்களை அடைவதனால், அவர்களுக்கு மானக்கேட்டைத் தவிர வேறு என்ன கிடைக்கின்றது?

ஊழியம் புரியும் மார்க்கம்.

முரட்டு ஜாதியாரான காபூலியர்கள், ஜனங்கள் மிக்க நெருக்கியுள்ள அறைகளிலும் நுழைந்து ஆஸனங்களில் படுத்துக்கொண்டுவிடுகிறார்கள். வலியற்ற ஏழை ஜனங்களுக்கு அவர்களை எதிர்க்கச் சக்தி போதாது. இச்சமயங்களில் கற்றோராகிய நாம், ஜனங்களை இக்கஷ்டங்களினின்று விடுவிக்கவேண்டும். இல்லையேல், ஜனங்களுடைய பிரதிநிதிகளென்றாவது, அல்லது, அவர்களுக்கு வழிகாட்டுவதாகவாவது நாம் சொல்லிக்கொள்ளக்கூடாது.

தாழ்ந்தோரைக் கைதூக்கிவிடவேண்டும்.

தாழ்ந்தோரைக் கைதூக்கி விடவேண்டிய விஷயம் மிகவும் முக்கியமானது. அவர்களை கைதூக்கி விடுவோமானால், ஹிந்து மதத்திற்கு ஏற்பட்டிருக்கிற ஒரு பழியை நீக்கினவர்களாவோம். அவர்களுக்குப் பள்ளிக்கூடம் மாத்திரம் வைத்துவிட்டால் போதாது. பாமர ஜனங்களும் வைதிகர்களும் அவர்களிடத்தில் கொண்டிருக்கும் மனோபாவத்தை மாற்றவேண்டும். அவர்களுக்குப் புரியக்கூடிய பாஷையில் நாம் பேசினால்தான், அவர்கள் அவற்றை அங்கீகாரம் செய்யக்கூடும். நீங்கள் இங்கிலீஷ் பாஷையில் இருந்துகொண்டு ஒன்றும் செய்யமுடியாது. ஹிந்து தர்மத்தை அநுசரித்துத்தான் நடக்கவேண்டும். தபஸ் செய்யவேண்டும். விவேகத்துடன் நாம் வைதீக நெறியைக் கடைப்பிடித்தொழுகி, அசட்டு வைதிகத்தை எதிர்க்கவேண்டும்.

ஆத்மஞானமின்மை.

நமக்கு வரவர தர்மத்தினிடத்தில் நம்பிக்கை குறைந்துபோய்விட்டது. ஸத்யம், அஹிம்ஸை, பிரம்மசாரியம் ஆகிய தர்மங்களில் நம்முடைய பெரியோர்களுக்கிருந்த திடபுத்தி நமக்கு இல்லை. அவைகளைக் கைக்கொண்டு ஒழுகுவோமானால், அவை நம்மை நல்ல கதியில் கொண்டுவரும் என்ற நம்பிக்கையும் நமக்கில்லை. சௌகரியத்தை உத்தேசித்து அவைகளைக் கைக்கொண்டு ஒழுகலாமென்றும், அவசியமேற்பட்டால் அவைகளை விட்டுவிடலாமென்றும் நாம் நினைக்கிறோம். ஆகையால், நம்முடைய பழைய தர்மபுத்தி நமக்கு மறுபடியும் உண்டாகும்படி எவன் ஒருவன் செய்வானோ, அவனே ஜனோபகாரியாவான். அத்தகைய ஒரு குருஸ்வாமி வரக்கூடியதை எதிர்பார்த்து நம்மாலானவரையில் நாம் வழியை ஒக்கப்பண்ணிக் கொண்டிருக்கலாம்.

செல்வவான்கள் செய்வது என்ன?

இனி நாம் வகுப்புக்களைப் பற்றிக் கவனிப்போம். நம்முடைய மகாராஜாக்களும், செல்வ



வான்களும் வீண்தமாஷ்களிலும் குடியிலும் திரவியத்தைச் செலவழித்துவிடுகிறார்கள். குடியைப்போல் கொக்கெய்ன் தின்னும் வழக்கம் விருத்தியாகிவருவதாக நான் அறிகிறேன். ஜனங்களுள் பத்தில் ஒன்பது பட்டினியால் வாடும்பொழுது நமக்கு ஷோக் என்ன வேண்டியிருக்கிறது? பெரிய அந்தஸ்தில் உள்ளவர்களுடைய துர்வழக்கங்களை மாற்ற நாம் முயற்சி செய்வது சிரமமாய்த்தானிருக்கும். ஆயினும், நாம் பிரயத்தினம் செய்யாமல் இருக்கக்கூடாது.

ஸ்திரீகளின் நிலைமை.

ஹிந்து முகம்மதிய ஸதிரீகளின் நிலைமையானது அவசியம் கவனிக்கப்படவேண்டிய விஷயமாகும். படிப்பு சொல்லிக்கொடுத்து ஸ்திரீகள் விடுதலைபெறும்படி செய்துவிட முடியாது. புருஷர்கள் அவர்களிடத்தில் கொண்டிருக்கிற மனோபாவம் மாறி அதற்குத் தகுந்தாற்போல் நடக்கவேண்டும். ஸ்திரீகளுக்குக் கல்வி அவசியமே. அது விடுதலைக்குப் பிறகு வரவேண்டும். எழுதப்படிக்கத் தெரியாமலே, நமது ஸ்திரீகள், வேறு எத்தேச ஸ்திரீகளுக்கும் சமமான விவேகமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அந்தந்த ஸ்திரீயின் கணவன் இஷ்டப்பட்டால், ஸ்திரீகள் உயர்ந்துவிடுவார்கள்.

பிராணி ஹிம்ஸை.

எலும்பு புறப்பட்ட மாடுகள் வயல்களில் கட்டி உழப்படுவதைப் பார்க்க என் மனம் பதறுகிறது. நமது கால்நடைகளை விருத்தி செய்து அவைகளுக்கு ஹிம்ஸை செய்யப்படாமலும், அவை கொல்லப்படாமலும் காப்பாற்றுவோமானால் நம்முடைய தரித்திரம் பாதி நீங்கிவிடும். பசுவை சம்ரக்ஷிக்கவேண்டியதானது நம்முடைய ஐசுவரியத்தை விருத்தி செய்வதற்குள்ள வழியாகும். கட்டாயப்படுத்தி எதையும் செய்துவிட முடியாது. பசுக்கள் கொல்லப்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று நமது ஆங்கில சிநேகிதர்களையும் முகம்மதிய சிநேகிதர்களையும் நாம் கேட்டுக்கொள்ளவேண்டும்.— “சுதேசமித்திர” னின்று சுருக்கி எழுதப்பட்டது.

---

## The Lost Will.

BY MR. M. S. KRISHNASAWMY IYER.
*Author of Stolen Bride, Power of Love etc.*

## காணாமற்போன மரணசாஸனம்.

### 1-ம் அத்தியாயம்.

சங்கரய்யர் படுக்கையில் படுத்துப் புரண்டுகொண்டு சிறிது பெருமூச்சுவிட்டுக்கொண்டிருந்தார். அவர் மனைவி ஸுந்தரம்மாள் அவர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு அவருக்கு உபசாரங்கள் செய்துகொண்டிருந்தாள். அவர்கள் இருந்தவிடம் அவருடைய வீட்டில் மேல்மெத்தையில் ஒரு அறையாகும். அறையின் சுவர்களிலெல்லாம் பற்பல விதமான படங்களும் தேவிப்படங்களும் நிறைந்திருந்தன. ஸுந்தரம்மாள் புருஷன் கஷ்டப்படுவதைப்பார்த்து மனம் சகிக்காமல் கண்ணீர்விடுவதும், சங்கரய்யர் தன்னைப் பார்த்துவிட்டால் என்செய்வதென்று அவரறியாமல் கண்ணீரைத் துடைப்பதும், துக்கத்தையாற்ற அடிக்கடி சுவர்களிலுள்ள தேவப்படங்களைப் பார்ப்பதுமாயிருந்தாள். சங்கரய்யர் அடிக்கடி ஏதோ முணுமுணுத்துக்கொண்டு ஒரு நிலையாய்ப் படுத்திராமல் பல தடவையும் புரண்டுகொடுத்து வந்தார்.

“நீலகண்டன் எங்கே! அவன் பழையது சாப்பிட்டாயிற்றோ?” என்றார் சங்கரய்யர்.

“சாப்பிட்டிருப்பான். அவன் காரியமெல்லாம் ஆனபிறகுதானே அவனுக்கும் பார்வதிக்கும் பழையது போடவேண்டும்? சாப்பிட்டுக்

கொண்டிருக்கிறானே, என்னவோ? அவனைக் கூப்பிடட்டுமா?"

"கூப்பிடு. அவன் சதா என்னிடமிருந்தால் தேவலைப்போலிருக்கிறது. சாகப்போகிற ஸமயத்தில் சங்கரா சங்கரா என்பது போல—"

"அப்படிப் பேசாதேயுங்களேன். எனக்கு வருத்தமாயிருக்கிறது. எதுவும் பிராப்தம் போலத்தானே நடக்கும். பழங்கதையை நினைத்துத் துக்கப்படுவதில் பிரயோஜனமென்ன. துக்கந்தானே அதிகமாகிறது. இத்தனை நாள் எப்படியாயினும் போகட்டும். இப்போது நீங்கள் மனம் மாறியிருப்பதே எங்களுக்கு பெரியதல்லவா. அதனால் நாங்கள் ஸந்தோஷிக்கிறோம். ஸந்தோஷத்தில் துக்கத்தை நினைப்பானேன். சுவாமி கிருபையால் உடம்பு சௌக்கியமாகிவிட்டால், முன் எப்படியிருந்தாலென்ன. இனிமேல் யாதொரு மனஸ் ஸஞ்சலமில்லாமல் இருக்கலாம்" என்றாள் ஸுந்தரம்மாள்.

சங்கரய்யர் தமது மனைவி பேசுவதைக் கேட்டுக்கொண்டே கண்ணை மூடிக்கொண்டார். ஸுந்தரம்மாள் பேசுவதை நிறுத்தினபிறகு அவர் கண்மூடியபடியே ஆலோசனையிலாழ்ந்தார். ஸுந்தரம்மாள் தான் பேச்சுக்கொடுத்ததால் அவர் களைப்படைந்துவிட்டார் என்று எண்ணி அவரை தொந்தரவு செய்யக்கூடாதென்று தீர்மானித்து, உடனே எழுந்து தனது குமாரனைக்கூப்பிடப் புறப்பட்டாள். சங்கரய்யர் உடனே கண்ணை விழித்துக்கொண்டு, "ஏன் எழுந்திருக்கிறாய்; எங்கும்போகாதே; எனக்கு சிரமமாயிருக்கிறது; உனது மடியில் சற்றுத் தலைவைத்துக்கொள்ளுகிறேன்; ஏதாவது காரியமிருந்தால் பிறகு பார்த்துக்கொள்" என்றார்.

ஸுந்தரம்மாள் தனது கணவனுடைய தலையைத் தனது மடிமேல் வைத்துக்கொண்டு ஒரு கையால் அதை யணைத்து மற்றொரு கையால் அவரது கைகளை மெதுவாகப் பிடித்துவிட்டாள். அப்போது அவர்களுடைய மகன் நீலகண்டன் வேகமாய் ஓடிவந்து, "அம்மா மாமா வரவில்லை. ஸ்டேஷனிலிருந்து எல்லாரும் வந்துவிட்டார்கள். எதிராத்து ஸுப்பய்யர் கூடச் சொன்னார் மாமாவை ஸ்டேஷனில் பார்க்கவில்லை என்று. அவர் வண்டிதான் கடைசியாக வந்தது. மாமா நாளைக்கு வாராரோ என்னவோ?" என்றான்.

சங்கரய்யர் கண்ணைவிழித்துப்பையன் சொன்னவற்றைக் கவனித்துக்கேட்டார். பையன் தாயைப் பார்த்துக்கொண்டிருந்தானேயன்றி, தன் தந்தையைக்கவனிக்கவேயில்லை; அவள் பேசுவதையே எதிர்பார்த்திருந்தான். சங்கரய்யர் பெருமூச்செறிந்தார். பையனை எறிட்டுப் பார்த்தார். "ஆஹா! இவ்வளவு வனப்புவாய்ந்த புத்ரனைப் புறக்கணித்தோமே" என மனங் கசிந்தார். அழகிய கூந்தல் கட்டவிழ்ந்து தோளிலும் மார்பிலும் புரண்டு உடலின் அழகை அதிகரிக்கச் செய்யக்கண்ட இவருக்கு, அவன்பால் உண்டான அன்புக்கு ஓர் அளவில்லை. அவனை சிலநாட்களாக அவர்பார்த்ததுண்டென்றாலும், அக்காலம் அவர் வியாதியால் மெலிந்து, இயற்கை யழகையும் செயற்கை யழகையும் பார்த்து ஆனந்திக்கமுடியாத நிலைமையிலிருந்ததால், தன் மகன்மேல் அன்புகொள்ள இடமில்லாமற் போயிற்று.

சங்கரய்யர் சற்று யோசித்தார். இதுகாறும் புறக்கணிக்கப்பட்டுவந்த பையனை இப்போது கூப்பிட்டால் எங்கு அவன் தன்னிடம் வரஸம்மதியானோ என்றுஎண்ணினார். அன்றி வரினும், அவன் தம்முடன் தாராளமாய் நெருங்கிப் பழகி, விளையாடிப் பேசுவானோ எனஐயமுற்றார். அன்றியும், விளையாட்டு ஞாபகத்தால் தனது தகப்பன் செய்த கொடுமைகளை மறந்திருக்கக் கூடிய பையன், இப்போது அவைகளை நினைவிற்கொண்டு தம்மேல் வெறுப்புக் காட்டவுங் கூடும். இவ்விதம் பலவாறு சிந்தித்தவராய் ஒன்றுந் தோன்றாமல் மறுபடி கண்ணை மூடிக்கொண்டார்.

இதற்குள் ஸுந்தரம்மாள் பையன் சொல்லியவற்றிற்கு விடையாக "இன்றைக்கு வராவிட்டால் நாளைக்கு வருகிறான். ஒழியவில்லை போலிருக்கு. நீ சாப்பிட்டாயிற்றோ? பார்வதியும் சாப்பிட்டாயிற்றோ? சித்தி ஆற்றுக்குப் போயிருக்கிறாளா?" என்று கேட்டாள். "இப்பொழுதுதானம்மா சாப்பிட்டேன் நானும் பார்வதியும். சித்திசாதம்போட்டுவிட்டு காவேரிக்குப் போய்விட்டாள். பார்வதிதான் எச்சிலெடுத்து சுத்திசெய்தாள். ஏனம்மா, வேப்பிலைக்கட்டி இவ்வாத்திலே பண்ணியிருக்கிறது நன்றாயிருக்கிறதே! அதுமட்டும் நம்மாத்திலேயும் பண்ணுகிறதுதானே? வேப்பிலைக்கட்டியென்று கேட்டிருக்கிறேன்; இன்றைக்குத்தான் தின்றேன். பழையசாதத்துக்கு அந்த ஊறுகாய் நன்றாயிருக்கிறது. ஆனால், பேர்தான் வேப்பிலைக்கட்டி; கொஞ்சங்கூடக் கசக்கவில்லை.

இப்பேச்சால் சங்கரய்யர் இன்னும் மனங் கலங்கினார். அவன் வீடு எது? இந்த வீடு (பையன் தற்போது தங்கியிருக்கும்வீடு) தன் தந்தை வீடாயிருக்க, "இவாத்திலே" யென்று வித்தியாசமாய்ச் சொல்லுவானேன். தாம் இதுகாறும் செய்துவந்த செய்கைகளாலும் நடத்தையாலுமன்றோ நீலகண்டன் இவ்விதம் எண்ணிவருகிறான். அவன் மனத்தை எப்படியாவது மாற்றி தம்மேல் அன்புகொள்ளும்படி செய்யவேண்டுமென்றெண்ணி சங்கரய்யர் தமது கண்ணைத்திறந்து பையன் பக்கம் திரும்பி, "நீலகண்டா! இங்கேவா; உட்கார்; சித்தி நிறைய சாதம் போட்டாளா?" என்றார். நீலகண்டன் "ஆம், போட்டாள்" என்று சொல்லிவிட்டுச் சும்மாயிருந்தான். உடனே ஸுந்தரம்மாள் "ஏண்டா உட்காரேன், இப்படியுட்கார்" என்றுசொல்லி அவனை தன் கணவனண்டை உட்காரவைத்தாள்.

அதற்குள் பார்வதியென்ற சிறு பெண்ணும் அவ்விடம் வந்து "அத்தான், இங்கே எங்கே வந்தாய்? நான் உன்னை எங்கெங்கெல்லாமோ தேடினேனே. பூனையாட்டமா இங்கேவந்து அப்பாகிட்ட உட்கார்ந்துகொண்டாயே" என்று சொல்லிக்கொண்டு, "அத்திம்பேரே, இவன் விளையாடரேன் என்று சொல்லிக்கொண்டே இங்கேவந்துவிட்டான். நான் எத்தனைநாழி சோழியை வைத்துக்கொண்டு காத்துக்கொண்டிருக்கிறது" என்று நீலகண்டன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள்.

சங்கரய்யர்:-"சரி உட்கார்" என்று பார்வதிக்கு பதிலளித்துவிட்டுப் பையனைப்பார்த்து "நீலகண்டா, பழையது சாப்பிட்டாயா; சித்தி சரியாய்ப் போட்டாளா? அவள் உன்மேல் பிரியமாயிருக்கிறாளா?" என்றுகேட்டார்.

நீலகண்டன் உடனே, "பழையது சாப்பிட்டேன். சரியாய்ப் போடாமலென்ன? என்மேல் பிரியமாய்த்தானிருக்கிறாள்" என்றான். உடனே பார்வதி "உன்மேல் பிரியமா? அத்தை எனக்குத்தானே இரண்டுகட்டித் தயிர் வார்த்தாள். உனக்கு ஒருகட்டிதானே போட்டாள். நீ இல்லாதபோது உன்னை வைகிறது உனக்கு என்னதெரியும்? நான் இதெல்லாம் கேட்டுக்கொண்டிருந்திருக்கிறேன். என்னைக்கூட உன்னுடன் விளையாடாதே என்கிறாளே" என்றாள்.

ஸுந்தரம்மாள்.—அடி பார்வதி. இல்லாததையெல்லாம் இட்டுக்கட்டிச் சொல்லாதே. நீ சிறு பெண். உனக்கு என்ன தெரியும். ஏதோ கோபவேளையில் அவனை ஏதாவது சொல்லியிருந்தால், அதையெல்லாம் ஏன் இங்கே சொல்லுகிறாய். ஒரு கட்டித்தயிர் போட்டால் என்ன, இரண்டுகட்டித் தயிர் போட்டாலென்ன? இதையெல்லாமாவந்து கோள் சொல்லுகிறது."

"மாமி, உங்களுக்கு என்னதெரியும். நீங்கள் இந்த அறையுண்டு என்றிருக்கிறீர்கள். எங்க அத்தை வம்பளக்கிறது எனக்கல்லவா தெரியும். அதெல்லாம் போகட்டும், நீலகண்டனை வைவாளேன். எல்லாரிடத்திலும் அப்படியே வைது கொண்டிருக்கிறாள்.

சங்கரய்யர்.—என்ன வைகிறாள்?

பார்.—"என்ன வைகிறாள். திங்கரத்துக்கு வந்துவிட்டான். சொத்தை அடித்துக்கொண்டுபோக வந்துவிட்டான். இத்தனைநாளாக இருந்ததுபோல் மாமாவாமென்றிருக்கிறதுதானே.

சாகக்கிடக்கிற பிராமணனைக் கழுத்தறுத்து ஏதாவது சொத்து வாங்கிக்கலாமென்றுதானே இங்கே வந்திருக்கிறாள்" என்று என்னென்னவோ சொல்லுகிறாள்.

சங்.—"இவ்வளவு கெட்டவளென்று எனக்கு முன்னாலேயே தெரியாமல் போயிற்று. என்னசெய்கிறது. போனதைப்பற்றி விசாரப்படுவதில் பிரயோஜனமென்ன? இத்தனைநாள் உங்களையெல்லாம் கஷ்டப்படுத்தினேன். போகிறது, இப்போதாவது உங்கள் குணம் தெரிந்து உங்களை வரவழைத்தேனே. இனிமேல் நீங்கள் அங்கே போகவேண்டாம். இங்கேயே இருங்கள்.

பார்:—"இவர்கள் இங்கேயே இருந்தால் இன்னும் கஷ்டப்படவேண்டியதுதான். நான் கூட சீக்கிரம் ஊருக்குப் போகலாமென்றிருக்கிறேன். எங்கப்பாவுக்குக் கடுதாசி போட்டு என்னைக் கூட்டிக்கொண்டுபோகச் சொல்ல வேண்டும். நீலகண்டா! எங்கூருக்கு வாயேன்; எங்கம்மா ரொம்ப பிரியமாயிருப்பாள்; அத்தை மாதிரி கடுகடுத்துக்கொண்டிருக்கமாட்டாள்."

ஸுந்தரம்மாள் இவர்கள் பேசுவதைக் கவனித்துக்கொண்டு, தனது புத்திரன் நிலைமையையும் தனது சக்களத்தியின் குணத்தையும்பற்றி சிந்திக்கலானாள். பார்வதியின்மேல் அவளுக்கு ஒருவித பிரியம் ஜனித்தது. அவள் வெகுளியாய் எல்லாரோடும் பேசுவது அவளுக்கு இன்பங்கொடுத்தது. இப்படிப்பட்ட பெண் தனக்கு இல்லாததைப்பற்றி வருத்தப்பட்டாள்.

சங்கரய்யரும் சற்றுநேரம் ஆலோசனையிலாழ்ந்தார். தமது புத்திரனையும், பார்வதியையும் பார்த்துக்கொண்டே சிந்தித்துக்கொண்டிருந்தார். பார்வதியோ நீலகண்டன்மேல் சாய்ந்துகொண்டு அவன் கழுத்தில் கையைப் போட்டு வளைத்துக்கொண்டு, "ஏய், நீலா, நீ இப்போ விளையாடவருகிறாயா? இல்லையா? சித்தி வருவதற்குள் நாலைந்தாட்டமாவது ஆடவேண்டும்; பல்லாங்குழியில் எல்லா சோழிகளையும் சரியாய்ப் போட்டுவைத்திருக்கிறேன், நாம் போகலாமா?" என்று கேட்டாள், "சற்று இரு; பிறகு போகலாம்" என்றான் நீலகண்டன். "சித்தி வந்துவிட்டால் உனக்கு வசவுதான். நாம்பள் இங்கேவந்து ஆடலாமா; பல்லாங்குழியை இங்கே கொண்டுவரட்டுமா?" என்றாள் பார்வதி.

இவர்கள் இருவரையும் கவனித்துக்கொண்டிருந்த சங்கரய்யருக்குத் தமது பழையநாளைய சிந்தனையெல்லாம் மனத்தில் தோன்றின. தானும் தமது முதல் மனைவியும் ஒத்திருந்தகாலத்தில் அவளும் பார்வதியைப்போல் தம்முடன் விளையாடியிருந்ததுண்டென்பது நினைவிற்கு வந்தது. இருவரையும் பார்த்தார். அன்பு கொண்டு பிரியாத ஸதிபதிகள் இருவரைப்போல் தோன்றினார்கள். இவர்களிருவருக்கும் கல்யாணம் செய்துவிட்டால், எப்போதும் இவர்கள் ஸந்தோஷமாயிருக்கலாமே யென்று எண்ணி, தமது மனைவி முகத்தை நோக்கி மெதுவாய், "இவர்களைப் பார்த்தாயா? இரண்டு பேருக்கும் கல்யாணம் செய்து வைத்துவிட்டால், எவ்வளவு நன்றாயிருக்கும். இவர்களிருப்பதைப் பார்த்தவுடன்-" என்று சொல்லிக்கொண்டே கண்ணீர் விட்டார்; தாக்கிக்கலானார். சொல்லப்போகிறது இன்னவென்று அறிந்துகொண்ட ஸுந்தரம்மாள், "பழையகதைகளைப்பற்றி நினைப்பதில் பிரயோஜனமென்ன. உடம்பு சொஸ்தமாகி விட்டால் அதுவே எனக்குப் போதும். அப்புறம் உங்கள் பிரியம் எங்கேபோயிற்று. நம்முடைய காலம் ஆகிவிட்டது. இனிமேல் குழந்தைகள் ஸந்தோஷமாயிருக்கப் பார்க்க வேண்டியதுதான். கல்யாணமானால் நன்றாயிருக்குந்தான். உங்கள் மச்சினர் ஸம்மதிப்பாரோ? அவர் ஒன்றும் வேண்டாமென்று சொல்லாதிருக்கவேணுமே." என்றாள்.

"எல்லாம் ஈச்வராக்ஞைப்போல் நடக்கும்" என்று சொல்லிவிட்டு, சிரமமாயிருக்கிறதென்று கண்ணை மூடிக்கொண்டார்.

(தொடரும்.)

எஸ். எஸ். கிருஷ்ணஸாமி அய்யர்.



## The Progress of the world.

## பிரபஞ்சப் போக்கு.

### டாக்டர் ஸால்டரும், தாய்ப்பாஷையும்.

சிலருக்குத் தாய்ப்பாஷையில் பேசவேண்டுமென்றால் மிகவும் கஷ்டம். சிலர் ஆங்கிலபாஷையில் பேசினால்தான் பெருமையென்று கருதுகிறார்கள். ஆனால், கல்கத்தா யூனிவர்ஸிடி கமிஷன் தலைவராய் வந்திருக்கும் டாக்டர் ஸால்டர் தாய்ப்பாஷையைப்பற்றி என்ன சொல்லுகிறார் என்பதை இங்குக் குறிப்பிடுவோம்,

"ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் தமது தாய்ப்பாஷையை நன்கு படித்துணரவும், பேசவும் தெரிந்திருக்கவேண்டியது அவசியமே. தாய்ப்பாஷையில் பேசினால்தான் விஷயங்களைத் தெளிவாகவும், திருத்தமாகவும், இலகுவாகவும் எடுத்துச்சொல்லமுடியும். ஆகவே, சிறுவர் சிறுமிகளைத் தாய்ப்பாஷையில் நன்கு பழகச் செய்வதே கல்வியின் முக்கியாம்சமாக இருக்க வேண்டும்." இவ்வாறு டாக்டர் ஸால்டர் சொல்லியிருப்பதை நாம் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும்.

### படுக்கையில் படுத்துக்கொண்டே படிப்பதால் வரும் தீங்கு.

இவ்விஷயமாய் "வைத்திய கலாநிதி"யில் பின்வரும் விஷயம் காணப்படுகின்றது.

படுக்கையில் படுத்துக்கொண்டே படிப்பவர்கள் சாதாரணமாகச் செய்யும் வழக்கம் என்னவென்றால், வலது முழங்கையைப் படுக்கையில் அல்லது தலையணையில் ஊன்றி, அவ்வலது கையில் தலையைச் சாய்த்து அமர்த்திக்கொண்டு, இடது கையில் புஸ்தகத்தை வாங்கியவாறு சாய்ந்திருப்பதேயாம். குளிர்ந்த நேரங்களில் (முக்கியமாகக் குளிர் காலங்களில்) வலது தோளும், இடது கையும் மறைக்கப்பட்டுப்போய்ப் போர்க்க முடியாதவைகளாகித் திறந்து வைக்கப்படுகின்றன. பிறகு சிலநேரங்கழிக்க, அந்த இரண்டு பிரதேசங்களிலும் வலியும் இசிவும் உண்டாயிருப்பதாக உணர்ந்துகொள்ளுகிறார்கள். அவ்வுணர்ச்சியைத்தரும் குறிதான் ஆமவாதம் என்னும் வியாதிக்கு ஸம்பந்தப்பட்டதாக இருக்கிறது. கையின் உட்புறத்திலுள்ள நரம்புகளினூடே அவ்வலி பரவியிருப்பதாகவும், முக்கியமாய்க் கையின் பூட்டுகளுக்கு எதிரில் அவ்வித நோய் ஏற்பட்டிருப்பதாகவும் உணரப்படும். நரம்பைப்பற்றியும் பூட்டுகளைப்பற்றியும் இரண்டு விதங்களாக இந்த நோய் ஸம்பவிக்கும். சில கேஸுகளில் மாம்சபேசிகள் இதனால் க்ஷயமடைவதும் உண்டு. தோளின் பூட்டில் இந்த நோயால் கிரமமாக வீக்கமும் வலியும் விருத்தியாகக்கூடும். கையைத் தூக்கவும் அசைக்கவும் சக்தி குறைந்துவிடும். இப்படிப்பட்டவன் இவ்வழக்கத்தை விட்டுவிட்டால் கிரமமாக இவ்விகாரங்கள் குறைந்துவிடும். ஆனால், பெரும்பாலும் இதன் காரணம் இன்னதென்று யோசிக்காமலே அவ்விதம் படிக்கும் துரப்பியாஸத்தை மேற்கொள்ளுகின்றனர். தோளைக் குளிருக்கு வெளிப்படையாகக் காட்டாமல் படித்தால் கெடுதல் உண்டாவதில்லையென்று தெரியவருகிறது. இவ்வலியுண்டானால் சூடான ஒற்றடங்களாலும் பலமாகப் பிடிப்பதனாலும் சிறிது நிவர்த்தியுண்டாவதுண்டு. படுத்தபடியே படிப்பது முதலில் ஸௌகரியமாகத் தோற்றியபோதிலும், அதனால் அடுத்தாற்போல் இந்தத்தீங்கு ஸம்பவிப்பதால், படுக்கையில் படுத்துக்கொண்டே படிக்குட் வழக்கத்தை விட்டுவிடவேண்டும்.

### ஸ்திரீகளின் நிலைமை.

சென்ற டிஸம்பர்மாதம் கல்கத்தாவில் கூடிய ஆசாரதிருத்தக் கான்பரென்ஸில் டாக்டர் பிரபுல சந்திர ரே அக்கிராஸனம் வகித்து ஸ்திரீகளின் தற்போதைய நிலைமையைப்பற்றிச் சில விஷயங்களைக் குறிப்பிட்டார். அவற்றின் முக்கிய அம்சங்களை இங்கு எழுதுவோம்.

"இந்த ஸமூஹத்தில் ஸ்திரீகளின் நிலைமையானது மிகுந்த கேவலமான ஸ்திதியிலிருக்கின்றது. ஸ்திரீகளின் அறியாமைக்கும் கீழ்மைத்தனத்துக்கும் நாமே ஜவாப்தாரியாவோம். கிணற்றுத் தவளைகளைப்போல் ஸ்திரீகள் வெளியே புறப்படுவதில்லை. அவர்களுக்கு உலக விஷயங்களை அறிவதற்கு வழியில்லை. அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற எண்ணம் நமக்குக் கொஞ்சமும் கிடையாது. அநேக குருட்டு நம்பிக்கைகள் நம் வீடுகளில் குடிகொண்டிருக்கின்றன. எதிர்ஜாதின் வாங்

கும் வழக்கமானது பல குடும்பங்களை நாசத்துக்குள்ளாக்கி வருகின்றது. தேசமுன்னேற்றத்திற்காகப் பாடுபடும் உங்களில் எத்தனைபேர் எதிர்ஜாமீன் இல்லாமல் விவாகம் செய்திருக்கிறீர்கள். பழையகாலத்தில் ஸ்திரீகளுக்கிருந்த மேன்மையான அந்தஸ்தைக் கவனியுங்கள். இப்போது ஸ்திரீகளின் அஞ்ஞானத்தைப் போக்கி அவர்களுக்குப் படிப்புவசதிகளைச் செய்துகொடுங்கள்."

மேற்கூறியவாறு டாக்டர் சந்திர ரே குறிப்பிட்டிருப்பதைப் பலரும் கவனிக்கத்தக்கது. ஒரு தேசம் முன்னேற்றமடைய வேண்டுமாயின், அத்தேசத்து ஸ்திரீகளின் அஞ்ஞானம் ஒழிக்கப்படவேண்டும். தேச அபிவிருத்தியைக் கோரும் நமது சகோதரர்கள் ஸ்திரீகளின் தற்காலத்திய நிலைமையைக் கவனித்து, அவர்களின் முன்னேற்றத்திற்கான காரியங்களைச் செய்யவேண்டியது அவசியமாகும்.

### ஒரு பெரிய இரும்புப்பெட்டி.

அமெரிக்காவில் நியூயார்க் என்னும் பட்டணத்திலுள்ள ஒரு கம்பெனிக்காக, உலகத்திலுள்ள இரும்புப்பெட்டிகளுக்கெல்லாம் மிகப் பெரியதான ஒன்று செய்யப்பட்டிருக்கிறதாம். இதன் கதவுகள் ஒவ்வொன்றும் 40 டன் நிறையுள்ளது; 3 அங்குலம் கனம் உள்ளது. இந்தப்பெட்டியில் 900 கோடி ரூபாய் வைத்துப் பூட்டியிருக்கிறார்களாம். இதன் பூட்டுகள் மிகவும் சிக்கலான வேலைப்பாடுள்ளவையாயிருப்பதால், இரண்டு பேராய்ச் சேர்ந்துதான் பூட்டுக்களைத் திறக்கவாவது பூட்டவாவது கூடுமாம்.

### ஹைதராபாத்தில் கல்வியின் முற்போக்கு.

ஹைதராபாத்தில் கல்விக்காகச் செலவழிக்கப்படும் தொகையானது சென்ற முப்பது வருஷங்களுக்குள் கீழ்க்கண்டவாறு அதிகப்பட்டிருக்கின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1886 | ... | ... | ரூபா | 290,808 |
| 1896 | ... | ... | ,, | 684,367 |
| 1906 | ... | ... | ,, | 736,500 |
| 1916 | ... | ... | ,, | 1,322,210 |

## Books and Reviews.

## புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

[குகப்பெருமாள்:—பண்டித பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் எழுதியது; வேலூர் வி. என். சாமராவ் அண்டு கம்பெனியார் பிரசுரித்தது. விலை அணா 3]

இந்நூலை இயற்றியவர் வேலூர் வூர்ஹீஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதரும், தமிழில் செய்யுள் நடையிலும், வசன நடையிலும் பல நூல்களை இயற்றிப் பேர்பெற்றவருமாகிய மிஸ்டர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியாரவர். இது ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் கங்கைப்படலம், குகப்படலம் என்னும் பாகங்களில் காணப்படும் இனிய சரித்திரமாகும். இதில் ஸ்ரீராமபிரான் சீதாபிராட்டியாரோடும் இலக்குமணனோடும் பித்ருவாக்கிய மாதருவாக்கிய பரிபாலனத்தின் பொருட்டு அயோத்திநகரம் நீங்கிக்கங்கைக்கரையை அடைந்தவளவில் இனிய குணமுடையவனாகிய குகன் என்னும் வேடர்தலைவன் அவரைச் சந்தித்து நேயம்மிக்கதும் ஸ்ரீராமன் அவனை அன்புடன் ஏற்றுத் தோழனென்றும் சகோதரனென்றும் பாராட்டி அன்புகூர்ந்ததும், ஸ்ரீராமபிரானைக்காணப் பரிவாரத்துடன் வந்த பரதனை அக்குகன் இராமனிடத்துக்கொண்ட கனிந்த அன்பினால் மாறாகக் கருதிப் போர்க்குச் சித்தனானதும், பின்பு அவன் பரதனை உள்ளபடி அறிந்துகொண்டு மனமுருகியதும் ஆகிய பல விஷயங்கள் வெகு சாதுரியமாக எழுதப்பட்டிருக்கின்றன. மற்றும், இந்நூலானது நற்குணமுடைமையே உயர்ந்த சாதிக்கு லக்ஷணமென்பதையும், அஃதின்மையே கீழ்ச்சாதிக்கு லக்ஷணமென்பதையும், மற்றைப்படி பிறப்பினால் சாதியென்பது சரியன்றென்பதையும் நன்கு விளக்கிக் காட்டுகின்றது. தெள்ளிய வசனநடையில் இந்நூல் இயற்றப்பட்டிருப்பதால், இதை சிறுவர் சிறுமியர் ஆதி எல்லோரும் படிக்க வேண்டுமென்பதை நாம் வற்புறுத்துவோம்.

# ஜனோபகாரி.

(JANOPAKARI)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

28 MAY 1918

புஸ்தகம் 3. Vol. III. பிங்களஷு பங்குனிமீ, MARCH 1918.. சஞ்சிகை 3. No. 3.

## JANOPAKARI.

A high class illustrated Tamil Monthly Review devoted mainly to social, Literary, Educational and Economic topics of interest.

Selections from important speeches and papers on Economic subjects; notes of the month on Economic matters

Pages for Boys and Ladies: A speciality.

### Rates of Subscription (Post Free.)

| | | Inland. | Foreign. |
|---|---|---|---|
| Per annum | Rs. | 3 0 0 | 4 8 0 |
| Single copy | ,, | 0 5 0 | 0 6 0 |
| Sample copy | ,, | 0 1 0 | 0 2 0 |

### Rates of Advertisement.

| | | | |
|---|---|---|---|
| 1 page | Rs. | 8 0 0 | per month. |
| ½ ,, | ,, | 4 0 0 | ,, |
| ¼ ,, | ,, | 2 0 0 | ,, |

All orders for advertisement must accompany with advance.

**To Contributors**:—Contributions on subjects specified above will be received for publication. The articles should be written in plain colloquial Tamil with ink on one side of the paper only. Accepted articles will be paid for on publication. The copyright and right of translation of the articles paid belongs to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

All letters, contributions and remittances etc should be addressed to the Proprietors:

V. N. SAMA RAO & Co.,
VELLORE, (SOUTH INDIA.)

## ஜனோபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்து வரும் சிறந்த சித்திரப்படங்கள் அடங்கிய ஓர் தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இதில் கல்வி, வியவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூட்டுறவு ஆகிய இவைகளைக்குறித்த பல விஷயங்களும், ஜனசமூகத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்களும், சிறந்த நீதிகளைப் போதிக்கவல்ல நாவல்களும், நாடகங்களும், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்களும், நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்களும், ஸ்திரீகளுக்கும் சிறுவர்களுக்கும் உபயோகமான பல விஷயங்களும், சிறந்த கற்றறிந்தவர்களால் மிகவும் தெளிவான நடையில் எழுதப்பட்டு வருகின்றன.

### தபாற்கூலி உட்பட சந்தா விவரம்.

| | | உள்நாடு. | வெளிநாடு. |
|---|---|---|---|
| ஒரு வருஷத்திற்கு | ரூபா | 3—0—0 | 4—8—0 |
| தனிப்பிரதி | ,, | 0—5—0 | 0—6—0 |
| மாதிரிகாபி | ,, | 0—1—0 | 0—2—0 |

### விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1-பக்கத்திற்கு | மாதம் 1-க்கு | ரூபா | 8—0—0 |
| ½ | ,, | ,, | 4—0—0 |
| ¼ | ,, | ,, | 2—0—0 |

**வியாசமெழுதுவோர் கவனிக்கவேண்டியவை :—** வியாசம் எழுதுபவர்கள் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங்களைப்பற்றி எழுதலாம். ஒவ்வொரு வியாசமும் காகிதத்தின் ஒரே பக்கத்தில் அரைப்பாதியில் எழுதியிருக்கவேண்டும். கடினமான தமிழ் உதவாது. வியாசங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டால், பிரசுரமானதும் எழுதியவர்களுக்குத் தக்க சம்பாவனை செய்யப்படும். சம்பாவனை செய்திருக்கும் வியாசங்களின் காபி ரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வியாசங்களைத் திரும்பவேண்டுவோர், தபால் ஸ்டாம்புகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லாக்கடிதங்களும், சந்தாப்பணம் முதலானவைகளும் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
வேலூர், (தென்னிந்தியா.)

## The Poetic Genius of our women.

By Pandit P. K. Sreenivasachariar.

## நமது ஸ்திரீகளின் கவித்திறமை.

முற்காலத்தில் கல்விகேள்விகளிலும் நற்குண நல்லொழுக்கத்திலும் சிறந்த ஸ்த்ரீகள்பலர் இருந்தனர். அவர்களிற் பலர் பொருள்வளமிக்க கவிகளை இயற்றவும் வல்லவர்கள். அவர்களின் கற்பு, வீரம், கடைப்பிடி, உத்ஸாஹம், முதலிய குணங்கள் அவர்கள்பாடல்களில் விசேஷமாகக் காணப்படுகின்றன. அச்செய்யுள்கள் பொருள் விளக்கமுற எளியவையாயிருக்கின்றன; இயற்கைகூறுதலையே பெரிதுங் கொண்டன. அவற்றுட் சிலவற்றை இங்குக் குறிப்போம்.

### பொன்முடியார்.

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே ;
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே ;
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் [கடனே ;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே ;
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.

(இதன்பொருள்):—மைந்தனைப் பெற்று வளர்த்தல் எனது முதன்மையான கடமை; கல்விகேள்விகளால் அவனைப் பெரியோனாக்குவது தகப்பனுக்குக் கடமை; அவனுக்கு வேலாயுதத்தைக் காய்ச்சியடித்துக் கூர்மையாகச் செய்துகொடுப்பது கொல்லனுக்குக் கடமை; அவனுக்குப் போர்ச்செலவை நன்னடக்கையுடன் அளிப்பது [போர்க்கு அனுப்புவது] அரசனுக்குக் கடமை; வாட்படையேந்தி யுத்தத்தில் வலிய ஆண்யானைகளை வெட்டிக் கொன்று வெற்றிபெற்றுவருதல் மைந்தனுக்குக் கடமை.

இச்செய்யுளில், பகைவரைக் கொன்றுவரும் வெற்றிச்சிறப்பைப் பாராட்டிக் கூறிய நயமும், வீரர்க்கேயல்லாமல் அவ்வீரக்குடியிற் பிறந்த ஸ்த்ரீகளுக்கும் மிகுதியாகக் கோபமுண்டாதல் விளங்கும் சிறப்புங் காண்க. இங்ஙனம் பெண்ணொருத்தி சொன்னமை எவ்வளவு அருமை!

### காவற்பெண்டு.

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
'யாண்டுளனோ?' என வினவுதி ; என்மகன்
யாண்டுள னாயினும் அறியேனோரும் ;
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே ;
தோன்றுவன்மாதோ போர்க்களத்தானே.

(ஒருத்தி "உன் மகன் எங்கே?" என்று கேட்டதற்கு, காவற்பெண்டு என்பாள் கூறுவாள்:—)

(இதன் பொருள்):—சின்ன வீட்டிலே நல்ல தூணைப் பிடித்துக்கொண்டுநின்று 'உன்மகன் எவ்விடத்தில் இருக்கிறான்?' என்றுகேட்பாய்; என்னுடைய பிள்ளை எவ்விடத்தில் உள்ளானாலும் நான் அறியேன் ; புலி இருந்து போன மலைக்குகைபோல அவனைப் பெற்ற வயிறோ இது; அவன் யுத்தகளத்திலே விளங்கித் தோன்றுவான்; அவனைக் காணவிரும்பினால், அங்கே போய்ப் பார்.

புலி குடியிருந்துபோன மலைக்குகைபோல அவனுக்கு என்னிடத்தில் உறவும் அப்படிப் பட்டது என்பது கருத்து. இச்செய்யுளில், வெற்றிச்சிறப்புடன், நிகரில்லாதபடி ஆண்மைத் தன்மை மேன்மேல் ஏறுகின்ற குடிப்பிறப் பொழுக்கத்தை உயர்த்திச்சொல்லும் நயங் காண்க.

### ஒக்கூர் மாசாத்தியார்.

கெடுக சிந்தை ; கடி (து) இவள் துணிவே ;
மூதில் மகளி ராதல் தகுமே ?
மேனா ளுற்ற செருவிற் (கு) இவள்தன்னை,
யானை யெறிந்து களத்தொழிந் தனனே ;



நெருநல் உற்ற செருவிற் (கு) இவள் கொழுநன்,
பெருநிரை விலங்கி ஆண்டுப் பட்டனனே ;
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று [மயங்கி,
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் (து) [உடீஇப்,
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
ஒருமக னல்ல (து) இல்லோள்,
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே.

(ஒருஸ்த்ரீ தன் ஒரேமகனை யுத்தத்துக்கு அனுப்பியதை ஒருஸ்த்ரீ பாராட்டிச் சொல்லுகிறாள்:—)

(இதன் பொருள்):—என் சிந்தை கெடுக. இவளுடைய துணிவு கடுமையானது; உயர்குடிப்பெண்ணாகவும் பிறக்கலாமா? முதல்நாள் நடந்த யுத்தத்தில் இவளுடைய தந்தை யானைச் சேனையைத் தாக்கி யுத்தகளத்தில் இறந்து போனான்; நேற்று நடந்த போர்க்கு இவளுடைய கணவன் பெரியசேனையின் அணிவகுப்பைத் தொலைத்து விலக்கி, அப்பொழுது அங்கே இறந்துபோனான்; இன்றைக்கும் யுத்த வாத்திய கோஷத்தைக் கேட்டு விருப்பமுற்று ஆவேசங்கொண்டு, தனக்கு ஒருமகனேயல்லது வேறு இல்லாதவள், வேலாயுதத்தை அவன் கையிற் கொடுத்து, தூவெண்மையான வஸ்திரத்தை எடுத்து விரித்து உடுத்து, பருந்தின் மயிர்போலிருக்கிற * செம்மை இன்னும் மாறாத குடுமியில் எண்ணெய்தடவி வாரி, 'யுத்தமுகம் நோக்கிப் போ' என்று அனுப்புவாள்.

உயர்குடிப் பெண்ணாகவும் பிறக்கலாமா? என்று இகழ்வதுபோற் புகழப்பட்ட நயங் கருதுக. இச்செய்யுளில் பெண்ணின் யுத்தப் பிரியங் கொண்டாடப்பட்டது.

### ஔவையார்.

வாடு முலை ஊறிச் சுரந்தன ;
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே.

(இதன் பொருள்):—யுத்தத்தில் ஓடாத மேம்பட்ட கொள்கையையுடைய ஆண்மக்களிற் சிறந்த மைந்தனது தாய்க்கு, முன்பு வாடியிருந்த ஸ்தனங்கள் அச்செய்தி தெரிந்தவளவில் பாலூறிச் சுரக்கப்பெற்றுப் பருத்துவிட்டன.

இதில், வீரங்கருதிப் பகைவரோடு போர் செய்தற் சிறப்புக் கொண்டாடப்பட்டமையும், ஸந்தோஷத்தினாலாகிய உருக்கமும் நயம்பொருந்தக் கூறியமை காண்க.

### பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு.

(தன் கணவன் இறக்க அவனது பிரிவைப் பொறுக்கமாட்டாமல் அக்கினிப் பிரவேசஞ் செய்யுமுன் சொல்லியது:—)

பல்சான்றீரே ! பல்சான்றீரே !
செல்கெனச் சொல்லா(து)ஒழிகெனவிலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே !
அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந்திட்ட
காழ்போல் நல்விளர் நறுநெய் தீண்டா (து),
அடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய்(து) அட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பாற்பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரேம் அல்லேம் ; மாதோ!
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல ; எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே.

கணவனிறந்தபின் மற்றைமகளிர் இருப்பது போல் நான் இரேனென்கிறாள்.

(இதன் பொருள்):—பல பெரியோர்களே! பல பெரியோர்களே! 'உன் கணவனோடு இறக்கும்படி நீ போ' என்று சொல்லாமல், அந்த மரணத்தை விட்டொழியென்று சொல்லித் தடுக்கின்ற பொல்லாத விசாரத்தையுடைய பல பெரியோர்களே! அணிலின் வரிபோலும் வரியையுடைய வளைந்த வெள்ளரிக்காயை அரிவாளால் அரியப்பட்ட விதைபோலிருக்கிற நல்லவெண்

* இங்கு, வேறுபொருள் கூறுமுளர்; அது தகுதியின் றென்க.

மையான பரிமளமுள்ள நெய் தீண்டாமல், இலை இடையில் உள்ள, கையினால் பிழிந்துகொள்ளப்பட்ட நீர்ச்சோற்றுப் பிண்டத்துடனே வெண்மையான எள் அரைத்த விழுதுடனே புளிகூட்டிச் சமைக்கப்பட்ட வேளையிலை வெந்த கறியுமாகிய இவற்றை உணவாகக்கொண்டு, பருக்கைக் கற்களாலாகிய படுக்கையில் பாயுமில்லாமற் கிடக்கிற விதவை விரதத்தால் வருந்தும் ஸ்த்ரீகளில் நாம் ஒருவரல்லோம்; மயானத்தில் உண்டாக்கப்பட்ட கருமையான விறகுகளால் அடுக்கப்பட்ட பிணப்படுக்கை உங்களுக்கு அருமையாயிருக்கட்டும்; நமக்கு, நம்முடைய பெரிய தோளை உடையவனாகிய கணவன் இறந்துபோய் விட்டானானால், அரும்பாக இல்லாமல் வளப்பமான இதழ் மலர்ந்திருக்கப்பெற்ற தாமரையையுடைய நீர்நிறைந்த குளிர்ந்த பெரிய குளமும் தீயும் ஒரு தன்மையானதே.

இச்செய்யுளில், கணவனைவிட்டுப் பிரியமாட்டாத தன்மை வெளிப்படுதல் காண்க.

பக்குடுக்கை நன்கணியார்.

ஓரில் நெய்தல் கறங்க, ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்,
புணர்ந்தோர் பூவணி யணியப், பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார் (பு) உறைப்பப்,
படைத்தோன் மன்ற அப்பண்பி லாளன்;
இன்னு (து) அம்ம! இவ்வுலகம்;
இனிய காண் (க)இதன் இயல்புணர்ந்தோரே.

(இதன் பொருள்):—ஒருமனையிலே சாவுக்கான பறை ஒலிக்க, ஒரு மனையிலே கல்யாணத்திற்குக் கொட்டும் மிகவும் குளிர்ந்த முழவு என்னும் வாத்தியத்தின் ஓசை மிக ஒலிக்க, கணவரோடு கூடின மகளிர் புஷ்பஅலங்காரம் செய்துகொள்ள, அவரைப் பிரிந்த ஸ்த்ரீகளின் வருத்தத்தையுடைய முன்னே மையுண்ட கண்கள் நீர்பெருகித் துளிக்க, இவ்விதம் ஒத்தும் ஒவ்வாமலும், நிச்சயமாகத் தணையில்லாதவனான பிரமன் படைத்தான். இவ்வுலகத்தின் இயற்கை கொடியதாயிருக்கிறது. ஆதலால், இவ்வுலகத்தின் தன்மையை அறிந்தவர், மோக்ஷானந்தத்தைத் தரும் நல்ல செய்கைகளை அறிந்து செய்து கொள்க.

இச்செய்யுளில் உலகத்தின் இயல்பு அழகாகச் சொல்லப்பட்டுள்ளமை காண்க. கடைசியடி, —இவ்வுலகத்தின் இயற்கையை உணர்ந்தவர் இந்தத் துன்பத்தை இனிமையாகக் காண்க வென்னும் பொருளையும் தரும்.

இங்ஙனம் அரிய கருத்துக்கள் பல அடங்கிய செய்யுள்கள் ஆயிரக்கணக்காகப் பெண்மக்களாற் பாடப்பட்டுள்ளன.

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.

---

## What is Kindergarten?

By Mr. N. R. Kedari Rao, M.A., L.T.

## கிண்டர்கார்டன் என்றால் என்ன?

இந்தியாவில் இதுவரையில் பலருக்கும் கிண்டர் கார்டன் என்றால் என்ன? என்ற விஷயம் தெளிவாய் விளங்காமலிருந்தது. கணிதம், பூகோளம், சரித்திரம் முதலியவற்றைப் போலவே இதுவும் ஒருவிதமான பாடமென்றே பலரும் கருதிவந்தார்கள். ஆனால், அப்படி எண்ணுவது சரியன்று. கொஞ்சம் நாம் யோசித்துப்பார்க்கின், அது பாலர்க்குக் கல்வி கற்பிக்கும் முறைகளில் மிகவும் ச்ரேஷ்டமானதென்றே தெரியவரும்.

முன்பு சிலர், "அடியாத மாடு படியாது" என்ற வாக்கியத்தையே மனத்திற்கொண்டு, குழந்தைகள் வாசிக்காமல் வந்தால் அவர்களைத் திட்டுவதும் அடிப்பதுமாயிருந்தார்கள். குழந்தைகளை அடிப்பது தகாதது என்பதைப் பெரும்பாலோர் கவனிப்பதில்லை; அடிக்காவிட்டால் குழந்தைகள் படிக்கவேமாட்டார்கள் என்று கருதிவந்தார்கள். ஆனால், இப்போதோ, குழந்தைகளை அடிப்பதைக்காட்டிலும் அவர்களுக்குச் செய்யக்கூடிய தீங்கு வேறு ஒன்றுமில்லையென்று நினைக்கின்றனர். சாதாரணமாய், ஒரு மனிதனை மற்றொருவன் அடித்தால், அவ்விருவர்க்கும் பிரியம் இருக்குமா? த்வேஷமல்லவோ உண்டாகும்! அதே மாதிரி, பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் பிள்ளைகளைத் தினந்தோறும் அடித்துக்கொண்டிருந்தால், அவரைக் கண்டால் பிள்ளைகளுக்கு எப்படி பிரியம் உண்டாகும்? பிரியம் இல்லாவிடில் அவர் சொல்லும் வார்த்தைக்கு எப்படி மதிப்பு ஏற்படும்? இக்காரணம்பற்றியே இப்போது பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் பிள்ளைகளை அடிக்கக்கூடாது என்ற நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. சிறுவர்கள் பிழைசெய்வது இயற்கையே; அவற்றைப் பெரியோர் பொறுப்பதே மேன்மை. இன்னும், சிறுவர்கள் பெரும்பிழை செய்தாராயினும், அவர்களை மிருதுவான வாக்கியங்களாலும், அன்பான மொழிகளாலும் திருத்தவேண்டுமேயன்றி, கோபங்கொண்டு அவர்களைக் கண்டிப்பது அறிந்தோர்க்கு அழகன்று.

இவ்விஷயத்தைப்பற்றி நாம் நன்கு ஆலோசித்தால், இன்னும் பல அபூர்வமான சங்கதிகள் நமக்குப் புலப்படும். சிறுவர்கள் பிழை செய்வது இயற்கையென்று முன்னமேயே கூறினோம். குழந்தைகள் பிழை செய்வதற்கோ அல்லது முறை தவறி நடப்பதற்கோ மூலகாரணம் என்னவென்பதை நாம் கவனிக்க வேண்டும். உதாரணமாக: நேற்றைக்குச் சொல்லிக்கொடுத்த பாடத்தை இன்று திருப்பிக் கேட்கும்போது ஒரு குழந்தைக்குப் பதில் சொல்லத் தெரியவில்லையென்று வைத்துக் கொள்வோம். இது எப்படி உண்டாயிற்று என்று ஆராய்ந்தால், பலவிதமான காரணங்கள் நமக்குப் புலப்படும். முதலாவது, நேற்று நாம் சொல்லிக்கொடுத்த விஷயம் அவைகளுக்குத் தெரியாமலிருக்கலாம். இரண்டாவது, நேற்றையதினம் தெரிந்திருந்தாலும் இன்றைக்கு மறந்துபோயிருக்கலாம். மூன்றாவது, ஞாபகமிருந்தாலும் அச்சத்தினாலாவது, ஸங்கோசத்தினாலாவது நாம் கேட்கும்போது பதில் சொல்ல முடியாமலிருக்கலாம். இப்படிப்பட்ட காரணங்களுள் எதுவாயிருந்தாலும் சரி, அடிப்பதால் எவ்வித பிரயோஜனமாவது உண்டாகுமோ? குழந்தையை அடித்தவுடனே நேற்றைக்கே தெரியாத விஷயம் உடனே தெரிந்துபோகுமோ? அல்லது மறந்துபோன விஷயம் ஞாபகத்துக்கு வருமோ? அல்லது ஸங்கோசம் தெளியுமோ? ஒன்றும் ஆகாது. அடிப்பதால் பயமும் ஸங்கோசமும், அதிகமாகி சிறிதளவு ஞாபகத்துக்கு வந்த விஷயமும் மறந்துபோய்விடும். ஆகையால், பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் குழந்தைகளை அடிக்கவேகூடாது என்பதை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டும். குழந்தைகள் நெறி தவறி நடந்தால் அவைகளைத் தண்டிப்பது நன்மை என்று சிலர் எண்ணக்கூடும். குழந்தைகள் தப்பான காரியங்களைச் செய்தாலும், அவைகளை அடிப்பது உசிதமன்று. குழந்தைகளுக்குத் தாம் செய்வது தப்பு என்பது தெரியாமலிருக்கலாம்; ஆகையால், அவைகளுக்கு நாம் நன்னெறியைப் போதிக்கவேண்டுமேயன்றி, அவைகளைத் தண்டிப்பது கூடாது. ஒருதரம் சொல்லியும் அவைகள் கேட்காமலிருந்தால், மீண்டும் தப்புச் செய்யாமலிருக்கும்படி அவைகளை நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். உதாரணமாக? தாழ்வாரத்தில் தின்பண்டங்களை வைத்தால் குழந்தைகள் அவற்றை அதிகமாகச் சாப்பிட்டுவிடுவது வழக்கமே. மிதமிஞ்சிச் சாப்பிட்டதனால் உடம்பு அசௌக்கியமாய்விட்டதென்று குழந்தைகளை அடிப்பது மூடத்தனம். அத்தின்பண்டங்களைக் குழந்தைகளின் கைக்கு எட்டாமல் வைப்பதே நல்லது. இம்மாதிரி ஒவ்வொரு விஷயத்திலும் குழந்தைகள் தப்புச் செய்ய மார்க்கம் இல்லாதபடி பார்த்துக்கொள்ளவேண்

டுமே யன்றி, அவைகள் தப்புச் செய்தபிறகு தண்டிப்பது சரியன்று.

நிற்க, ஒருவகுப்பில் பலவிதமான பிள்ளைகள் இருக்கிறார்கள். சிலர் புத்திசாலிகள். சிலர் மத்தியமான புத்தியையுடையவர்கள். சிலருக்குப் புத்தி சற்று மந்தமாயிருக்கும். இப்போது பள்ளிக்கூடங்களில் நடப்பதென்னவென்றால்: உபாத்தியாயர்கள் வகுப்பு முழுவதையும் ஒன்றாகவே பாவித்துக் கல்வி கற்பிக்கிறார்கள். இதைவிட உபாத்தியாயர்கள் ஒவ்வொரு குழந்தையையும் சமீபத்தில் வைத்துக்கொண்டு அதற்கெது ஏற்குமோ அதைச் சரிவரச் சொல்லிக் கொடுத்தால், மிகுந்த நன்மையுண்டாகுமென்பதற்கு ஐயமில்லை. ஆகையால், குழந்தைகளின் புத்திக்குத் தகுந்தவாறு உபாத்தியாயர்கள் கல்வி போதிக்கவேண்டுமேயன்றி, வகுப்புக்குத் தகுந்தவாறு குழந்தைகள் கல்வி கற்பது சரியன்று என்பது நமது கொள்கை.

ஸ்வாமி விவேகாநந்தர் 'குழந்தைகளின் மனத்தில் ஒளிந்திருக்கும் அறிவை வெளிப்படுத்துவதே கல்வி கற்பித்தலின் முக்கியக் கருத்தாகும்' என்று சொல்லியிருக்கிறார். அதாவது, நமக்குத் தெரிந்த விஷயத்தையே நாம் பல நாட்கள் வரையிலும் சிந்தியாமலிருந்தால் எப்படி அது மறந்துபோகிறதோ, அப்படியே குழந்தைகளுக்கும் மறதி என்பது உண்டு. அதை விலக்கினவுடனே ஞானவொளி பிரகாசிக்கின்றது. இவ்விதம் அறிவு பிரகாசிப்பதற்கு, குழந்தைகள் போகும் வழியே நாமும் சென்று, அறிவு எப்படி உற்பத்தியாகிறது என்பதைக் கவனிக்க வேண்டுமே தவிர, நாம் சொல்லுகிறபடியே குழந்தைகள் நடக்கவேண்டும் என்று திட்டம் செய்யக்கூடாது. குழந்தைகள் உபாத்தியாயர் சொன்னபடி 'உட்கார்' என்றால் உட்காருவதும், 'நில்' என்றால நிற்பதுமாயிருந்தால், அவைகளுக்குப் புத்தி இல்லாமலேயே போய்விடும். ஒவ்வொரு விஷயத்துக்கும் உபாத்தியாயர் வந்து சொல்லிக்கொடுப்பது முடியாது. பல விஷயங்களிலும் குழந்தைகள் தங்கள் புத்தியையே உபயோகிக்கும்படி நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். 'இக்காரியத்தை எவ்விதமாய்ச் செய்யலாம்? எப்படிச் செய்தால் சுலாக்கியம்?' என்று குழந்தைகளே யோசிக்கும்படி நாம் செய்யவேண்டும். ஒருவழியாய் ஒரு காரியத்தைக் குழந்தைகள் செய்தபிறகு, 'மற்றொரு வழியாய் அதே காரியத்தைச் செய்யுங்கள்; அப்படிச் செய்தானபிறகு எது மேன்மையானது என்று யோசியுங்கள்' என்று அவைகளுக்குச் சொல்லவேண்டும். இப்படியே செய்து வந்தால், பிறகு உபாத்தியாயர் சமீபத்தில் இல்லாவிட்டாலும், தங்களுடைய புத்தியைக் கொண்டே குழந்தைகள் முன்னுக்கு வருவார்கள்.

சாதாரணமாக, குழந்தைகள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தால், 'உனக்கு என்ன தெரியும்' என்று எல்லோரும் கேட்பது வழக்கம். 'ஆத்திசூடி', 'கொன்றைவேந்தன்' இந்த இரண்டையும் தெரிந்த பையன் 'ஆத்திசூடி' மாத்திரம் தெரிந்த பையனைக்காட்டிலும் கெட்டிக்காரன் என்று பெயர். ஆனால், எவனொருவனுக்குப் புத்தி தீக்ஷண்யம் அதிகமோ அவன்தான் கெட்டிக்காரன்; புத்தியில்லாமல் பல புஸ்தகங்களை நெட்டுருச் செய்து ஒப்பிப்பதால் யாது பயன்? உலகத்தில் புத்திமானே பலவானாவான். புத்தியுள்ளவர்களுக்கே ஸகல காரியங்களும் கைகூடிக் கீர்த்தி கிடைக்கின்றது. ஆகையால், பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் குழந்தைகளின் புத்தியை அதிகரிக்கச்செய்யவேண்டுமேயன்றி, பலவித சமாசாரங்களை அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது மாத்திரம் போதாது.

மேலே கூறியபடி குழந்தைகளுக்குப் புத்தி அதிகரிக்கச் செய்வதற்கு பல வழிகள் உண்டு. புஸ்தகங்களை வாசிப்பது ஒருவகை. புஸ்தகங்களை வாசிப்போரெல்லோரும் குணத்திற் சிறந்தவர்களல்லர். ஒரு மனிதன் புத்திசாலியாயும் குணசாலியாயுமிருந்தாலும், தேகவலிமையின்றி ஸந்தோஷமாயிருக்க முடியாது. ஆகையால், பாலர்க்குக் கல்வி கற்பிப்பதென்றால், முதலா



வது அவைகளுக்குத் திடகாத்திரத்தை யுண்டாக்க வேண்டும். குழந்தைகள் திடகாத்திரமாயிருப்பதற்குச் சுயேச்சையாய் ஓடித்திரிந்து, சந்தோஷமாய் ஆடிக்குதித்துக் களைப்பாறவேண்டும். ஓரேயிடத்தில் எப்போதும் இருந்துகொண்டு கையைக்கட்டிக்கொண்டும் வாயைப் பொத்திக்கொண்டுமிருந்தால், அக்குழந்தையின் தேகம் பலமற்றுப் போய்விடும்.

இரண்டாவது, குழந்தைகளுக்கு நற்குண நற்செய்கைகளைப் போதிக்கவேண்டும். அவைகள் நன்னெறியில் வாழ்வதற்கு இராமாயணம், பாரதம், பாகவதம் ஆகிய இவைகளினின்றும், மற்றும் சரித்திரங்களினின்றும் கியாதிபெற்ற பெரியோர்களின் மேற்கோள்களை எடுத்துச் சொல்லவேண்டும். இவற்றைத் தவிரவும், உபாத்தியாயரே சற்குணமுள்ளவராயிருக்க வேண்டும். குழந்தைகளுக்குப் பொய் சொல்லக்கூடாது என்று சொன்ன உபாத்தியாயரே பொய் சொல்ல ஆரம்பித்தால், அவைகளுக்குச் சற்குணம் எப்படிப் படியும்? ஆதலால், உபாத்தியாயரே முதலில் குணத்தில் மேம்பட்டவராயிருக்கவேண்டும்.

மூன்றாவது, புஸ்தகஞானம் கற்பிப்பதில் கல்வியை எவ்வளவு சந்தோஷகரமாகச் செய்யலாமோ அவ்வளவு சந்தோஷகரமாகச் செய்யவேண்டும்; ஏனெனில், சந்தோஷமாயிருந்தால்தான் ஊக்கத்துடன் கல்வி கற்கமுடியும். இக்காரணம்பற்றியே நவீனப்பள்ளிக்கூடங்களில் சித்திரம் வரைதல், ஸங்கீதம், பலர்சேர்ந்து விளையாடும் விளையாட்டுக்கள் ஆகிய பலவற்றையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தம் என்று சொல்லப்படும் ஐந்து விஷயமான சக்திகளும் குழந்தைகளுக்கு உண்டாகும்படி பிரயத்தனம் செய்யவேண்டும். கண்ணை மூடிக்கொண்டே ஸ்பரிசத்தினால் இது பட்டு என்றும், இது பருத்தி என்றுசொல்லும் திறமையும், அளவுகோல் வைத்து அளக்காமல் இது இவ்வளவு அடி நீளம், இவ்வளவு அடி அகலம் என்று சொல்லும் திறமையும், ஒரு தொனியைக் கேட்டமாத்திரத்திலேயே இது இந்த மிருகத்தின் கூச்சல் என்று சொல்லும் திறமையையும், நாசியினால் நுகருவதனாலேயே இது இந்த புஷ்பத்தின் வாசனையென்று அறியும் வகையும், இன்னும் இவைபோன்ற பலவும் குழந்தைகளுக்குத் தெரிந்திருப்பது அவசியம்.

ஆதலால், கிண்டர்கார்டன் என்பது மிகப் புதிதான விஷயம் ஒன்றுமன்று. சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் விஷயமாய்ச் சில மகான்கள் ஆராய்ச்சிசெய்து சில நவீன மார்க்கங்களை நமக்குப் போதித்திருக்கிறார்கள். அவ்வழிகளில் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் பிரிவுக்கே கிண்டர்கார்டன் என்ற பெயர். நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது என்னவென்றால், கிண்டர்கார்டன் என்பது ஒருவிதமான பாடம் அன்று; கல்வி கற்பிக்கும் முறைகளில் சிரேஷ்டமான ஒரு முறையேயாம்.

இம்முறையின் முக்கியமான கொள்கைகளை இதுவரை சுருங்கச் சொன்னோம். இனி வரும் அத்தியாயங்களில் இம்முறையின்படி வாசகம், கணிதம், சரித்திரம், பூகோளம் முதலிய சாஸ்திரங்களைப் பாலர்க்கு எப்படி கற்பிப்பது என்பதை விஸ்தாரமாய்க் கூறுவோம்.

என். ஆர். கேதாரி ராவ், எம்.ஏ., எல்.டி.


# குகப்பெருமாள்.

இது ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் உள்ள அயோத்தியா காண்டத்தில் அடங்கிய 'கங்கைப்படலம்' குகப்படலம் என்னும் பாகங்களிற் பொருந்திய குகன் என்னும் வேடர் தலைவனது இனிய சரித்திரம்; சிறுவர் சிறுமியர் ஆதி எல்லோரும் படித்து சந்தோஷமடையும்படி இனிய எளிய வசன நடையில் வேலூர் ஊரீஸ் காலெஜ் பிரதம தமிழ்ப் பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால் எழுதப்பட்டது.

விலை அணா 3.

தபாற் செலவு வேறு.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,

வேலூர், (தென்னிந்தியா.)

# Bal Gangadhar Tilak.

## பால கங்காதர திலகர்.

பூமாதேவியின் முகதிலகம்போன்ற நமது பால கங்காதர திலகர் மகாராஷ்டிர தேசத்தில் இரத்தினகிரி என்னும் ஊரில் 1856-ம் வருஷம் ஜூலை மாதம் 23ந் தேதி ஜனனமானார். இவருடைய தந்தையின் பெயர் கங்காதர இராமசந்திர திலகர்; வித்தியா இலாகாவில் உதவி பரிசோதகராயும், சம்ஸ்கிருத வித்வானாகவுமிருந்தவர். பால கங்காதர திலகர் சிறுபிராயத்திலேயே கணிதசாஸ்திர நிபுணரெனப் பெயர் பெற்றார். தமக்குத் தெரிந்த விஷயங்களை உடனுக்குடனே ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டுமென்ற அவா இவருக்கு ஆதி முதற்கொண்டே உண்டு. இவருடைய தந்தை 1872-ம் வருஷம் காலகதியடைந்து விட்டதனால், தந்தையின்பிரிவைத் தாங்கமாட்டாமல் மனங்குன்றி, அவரது பெயரை விளக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் முன்னிலும் அதிகமாகப் படிக்கத்தொடங்கினார். தமது இருபதாம்பிராயத்தில் சர்வகலாசபைப்பட்டம் பெற்று, 1879-ம் வருஷத்தில் சட்டபரீக்ஷையிலும் தேறினார். பிறகு, காலஞ்சென்ற அகர்கர் என்பவருடன் நேசம்பூண்டு இருவருமாகத் தாய்நாட்டிற்குச் சேவைசெய்யத் தொடங்கினர். இதன்பின்பு, இன்னும் சில நண்பர்கள் இவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள்.



பால கங்காதர திலகர்.

அக்காலத்தில் பூனாநகரத்தில் கிறிஸ்தவப் பாதிரிமார்களின் ஆதினத்திலும் கவர்ன்மெண்டாரின் ஆதினத்திலுமே பள்ளிக்கூடங்கள் பெரும்பாலு மிருந்தபடியால், நமது தலைவர்கள், ஜாதீயமுறையில் கல்வியைப் பரவச்செய்ய எண்ணங்கொண்டு, 1880-ம் வருஷத்தில் ஒரு கலாசாலையை ஸ்தாபித்தனர்.

நாட்டின் பொதுவிஷயங்களைப் பாமரர்களும் அறிந்துகொள்ளும்பொருட்டு மகாராஷ்டிர பாஷையில் "கேஸரி" என்ற பத்திரிகையையும், பொதுஜனங்களின் அபிப்பிராயங்களையும், லட்சியங்களையும் இராஜாங்கத்தார் அறிந்துகொள்ளும் பொருட்டு ஆங்கில பாஷையில் "மராட்டா" என்ற பத்திரிகையையும் இவர்கள் பிரசுரித்துவந்தார்கள். இப்பத்திரிகைகள் நாளுக்குநாள் நன்கு அபிவிருத்தியடைந்து வந்தன. இவை கோலப்பூர் மகாராஜாவை ஆதரித்துச் சில கண்டனங்கள் எழுதியதன்பலனாக ஸ்ரீமான் அகர்கரும் திலகரும் நான்குமாத தண்டனையை யடைந்தார்கள். பிறகு, 1888-ம் வருஷம் முதற்கொண்டு திலகர் அவ்விருபத்திரிகைகளையும் தாமே எடுத்துக்கொண்டு நடத்திவந்தார்.

திலகர் வானசாஸ்திரத்தில் நுண்ணிய அறிவையுடையவர். வேதத்தின் தொன்மையைப் பலவிதமாக இவர் ஆராய்ச்சிசெய்து "ஓரியன்" என்னும் வியாசத்தைச் சீமைக்கு அனுப்பினார். இவ்வியாசத்தைக் கண்ணுற்ற மாக்ஸ்முல்லர், வெப்பர் முதலான பல ஆங்கிலேயப் புலவர்கள் இவரை மிகவும் கொண்டாடினார்கள். இதனால் இவருடைய கீர்த்தி வெளிநாடு எங்கும் பரவியது.



இவர் பொதுஜனங்களின் க்ஷேமத்தையே கோரி உழைப்பவராதலால், பம்பாய் மாகாண சங்கத்திற்கு ஐந்துவருஷகாலம் காரியதரிசியாகவும், காங்கிரஸ் மகாஸபையின் தக்ஷிணக் கமிட்டிக்குக் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டுப் பல அரிய காரியங்களைச் செய்தார். பம்பாய் சட்ட சபையில் இருமுறை ஜனங்களாலேயே இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொது விஷயங்களில் கவனஞ்செலுத்திவந்தார். பம்பாய் சர்வகலா சங்கத்தில் ஒரு அங்கத்தினராகவும் நியமிக்கப்பட்டார். இவர் 1895-ம் வருஷத்தில் பூனா நகர முனிசிபாலிடியில் ஒரு அங்கத்தினராக நியமிக்கப்பட்டு ஜனங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தார். அந்தவருஷம் பூனாநகரில் பெரும் பஞ்சம் உண்டாயிற்று. அப்பஞ்சத்தில் ஜனங்களின் கஷ்டங்களைச் சிறிதும் அவர் சகியாதவராய், அவர்களுக்குப் பல துறைகளிலும் உதவிசெய்யத் தீர்மானித்து, ஆங்காங்குத் தானியக்களஞ்சியங்களை ஏற்படுத்தினார். இதனால், ஜனங்களின் கஷ்டம் ஒருவாறு நீங்கியது. இக்கொடிய பஞ்சம் சற்றுத் தணிவதற்குமுன்னமே ப்ளேக் வியாதி பூனாநகரைச் சூறையாடத் தொடங்கிற்று; ஏராளமான ஜனங்கள் நகரத்தைவிட்டு வெளியேறிவிட்டார்கள்; பெரும்பாலான ஜனங்கள் நோய்க்கு இரையானார்கள். இச்சமயத்தில் திலகர் நகரைவிட்டு நீங்கிப் போகாமல், ஜனங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். சில ஆங்கில வைத்திய உத்தியோகஸ்தர்களுக்கும் ஜனங்களுக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தினாலும், ஏற்கெனவே ஜனங்களின் மனம் கொதிப்படைந்திருந்ததனாலும் சில முன்மார்க்கர்கள் இரண்டு ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களைக் கொலைசெய்தனர். அச்சமயம் திலகர் பொது ஜனங்களின் க்ஷேமத்தைக் கருதி உழைத்து வந்ததனால், இவர்மேல் இராஜத்துவேஷப் பழி சுமத்தப்பட்டு 1897-ம் வருஷம் 18 மாதம் கடுங்காவல் தண்டனை யடைந்தார். ஆனால், இவருடைய வித்தியா விசேஷத்தை அறிந்திருந்த மாக்ஸ்முல்லரும், உல்லியம் ஹண்டரும், விக்டோரியா மஹாராணியாருக்கு அறிவித்து விடுதலை செய்வித்தார்கள்.

பால கங்காதர திலகர் சாமானிய மனித சரீரத்தைக் கொண்டுள்ளபோதிலும், ஆன்ம சக்தியைக் கொண்டவர். இவருடைய தீவிர மனவெழுச்சியையும், தேசபக்தியையும், சமத்துவ உணர்ச்சியையும் அறியாத சில ஆங்கில உத்தியோகஸ்தர்கள், இவரைச் சதியோசனைக்காரனென்று குற்றஞ்சுமத்த, மறுபடியும் 1908-ம் வருஷம் இராஜ நிந்தனைக்காக 6-வருஷம் தண்டிக்கப்பட்டார். எதுவரினும் நொந்திடாத மனத்தினராய்த் தளராத சிந்தையும் பிரியாத ஆத்மவிசாரமும் கொண்ட இவர், கீதாரஹஸ்யமென்னும் சிறந்த கிரந்தத்தை மராட்டிய பாஷையில் எழுதினார்.

இவர் இத்தள்ளாத வயதிலும் பதினாறு வயது குமாரனைப்போல தேசநன்மைக்காக உழைத்துவருகிறார். நாட்டின் அபிவிருத்தியைக் கருதி திக்விஜயம் செய்துவந்த இவரை, பஞ்சாப் மாகாணத்து கவர்னரும் டெல்லி பிராந்தியத்து கமிஷனரும் தத்தம் மாகாணங்களுக்கு வரக்கூடாதெனக்கட்டளையொன்றைப் பிறப்பித்தார்கள்.

இவருடைய சஷ்டிப்பூர்த்தி தினத்தன்று ஜனங்கள் இவருக்கு ஒரு லட்சம் ரூபாய் காணிக்கையாகக் கொடுத்தார்கள். அப்போது சில உத்தியோகஸ்தர்கள், இவர் செய்த சில பிரசங்கங்கள் இராஜநிந்தனையெனக்கொண்டு இவரை நன்னடைக்கைக்கு 40,000 ரூபாய் ஜாமீன் கேட்டார்கள். ஆனால், இது பம்பாய் கோர்ட்டில் தள்ளப்பட்டுப்போய்விட்டது.

ஆதிமுதல் இதுவரையிலும் பொதுஜனங்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்து வந்த நமது திலகர், இன்னும் பல காலம் பொதுநலத்திற்காக உழைக்கப் போதிய ஆயுளையும் தேகவன்மையையும் கொடுக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## Sita's Exile.

BY MR. P. K. SREENIVASACHARIAR,

## சீதை வனம் புகுந்த சரிதம்.

(47-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவனது சொல்லாகிய எரிகிற நெருப்பிற் காய்ந்த நாராசம் சீதையின் இருசெவிகளிலும் நுழைந்தவளவில், அவள் தளர்ந்து தரையில் விழுந்துவிட்டாள். சீதை கொடிய அத்துயரத்தைப் பொறுக்கமாட்டாமல் கீழ்விழுந்து புரள்வாள்; எழுந்து மீளவும் விழுவாள்; இருகைகளாலும் வயிற்றை மோதிக்கொள்வாள்; கண்கள் மலையருவிபோல இடைவிடாது நீரைப் பெருக்க, ஆழ்ந்த துயரக்கடல்வெள்ளத்தில் அகப்பட்டு நிலைகுலைவாள். தேவர்கள் அது கண்டு சீதை இறந்துவிட்டாளென்று எண்ணிக் கலங்கினார்கள். இலக்குமணன் அவளது அவத்தையைக் கண்டு அலறிக்கொண்டு கீழே விழுந்துவிட்டான்; இன்னும் பாடுகள் மிகப் பலமேன்மேல் உண்டாகவேண்டியிருத்தலால், மன்னர்மன்னனாகிய இராமபிரானுடைய தருமபத்தினியான சீதை, அரிதின் உயிர்பெற்று, மூர்ச்சைதெளிந்து, இருகண்களும் விழித்து வாய்விட்டுப் புலம்பத் தொடங்கினாள்:—

"என் அன்னையே! என் தந்தையே! அரிய உயிர்த்தோழியரே! தனக்கு நேரில்லாத வெற்றிபொருந்திய இராமபிரான் என்விஷயமாகச் செய்த கொடிய இச்செயலை நீங்கள் கேள்விப்படும்பொழுது என்னபாடுபடுவீர்களோ? என்னே! இவ்வுலகத்தில் நானே இங்கு இத்துன்பங்களைப் படுவேன்! இவ்வுலகத்தில் அனைவரும் பழியாலே பழிமறைத்து நெய்யாலே நெருப்பவிக்க இதுகாறும் எங்கும் கண்டறியேன்; இராமபிரானிடத்தில் அதுகண்டேன். இச்சொல் தமது காதிற் பட்டால், என் மாமியார் உயிர்வாழார். கன்னெஞ்சராய் என்னைக் காட்டில் விடச்சொன்னவரோ, வன்னெஞ்சராய் அதற்கு இசைந்து வனத்தில் விடவந்தவரோ, மகளிர் நகைபுரிய இன்னம் சாகாதிருந்த யானோ, இம்மூவரில் வன்மனமுடையவர் யார்? மகளிர் என்னைப் பழித்துப் பரிகசிப்பார்களோ? அன்றி, இராகவன் வன்னெஞ்சனென்று சொல்வார்களோ? உலகத்திற் பிறந்த பிராணிவர்க்கங்கள்யாவும் பின்பு இறந்தேயொழிகின்றன. ஆயினும், இவ்வுலகத்தில் பெண்ணாய்ப்பிறந்தவர்களில் யான்பட்ட பெருந்துயரத்தைப் பட்டவர் யார்? கனிந்த மனத்தையுடைய ஸ்ரீராமன், உலகில் ஜனங்கள் சொல்லும் பழிக்கு அஞ்சி, அவனையன்றி வேறுகதியில்லாதவளான நான் தனியே கதறும்படி, தனிக்காட்டில் தம்பியைக்கொண்டு விடுவித்தான். சூரியனாற் பெற்று வளர்க்கப்பட்டவனும், பழிக்கத்தக்க குணஞ்செயல் இல்லாதவனுமான மனுவினது குலத்திற் பிறந்தவர்கட்கு இவையேயோ மனுநெறி? கைகேயியின் மனம் மாறிவிடும்படி கற்பித்த கூனியைப்போல, ஸ்திரீகளோ, புருஷர்களோ, யாரோ, இவ்வுலகில் இப்பொழுது என்காதலனை இக்காரியத்தைச் செய்வாயென்று மனத்திற் பதியும்படி கற்பித்தார்கள்! ஐயோ!"

இத்தன்மையான பலவார்த்தைகளை மேன்மேற்சொல்லி, இருகண்களினின்று நீர் ஆறாய்ப் பெருக, மலைகளும் மரங்களும் அங்குள்ள கொடிய மிருகங்களும் கலங்கிநின்று உருகவும், வனதேவதை நெஞ்சழிந்து கண்ணீர் சொரியும்படியும் சீதை மனந்தவித்துக் கதறினாள். அப்பொழுது, இலக்குமணனும் தான் ஆழ்ந்த துயரக்கடலை ஒருவாறு கடந்து கரையேறி, மனவருத்தம்மிக்க சீதைக்கு, 'உத்தமியே யான் உரைப்பதைக் கேள்' என்று சொல்லிப் பின்வருமாறு சொல்லலானான்:—

"வலிய வினையால் விளைகிற பயனை வெல்லுதல் தேவர்களுக்கும் அரிதாம். அங்ஙனமிருக்க, நிலவுலகத்திலுள்ள மனிதர்களில் அவ்வினைப்பயனை வெல்லவல்லவர் யார்? உலகமுழுவதுக்கும் ஒருதனித்தலைவனாய் ஒப்பற்ற தனது ஆஜ்ஞாசக்கரத்தை எங்கும் தடையறச் செலுத்தி, மலைபோலும் மதயானையின்மீது ஏறி, மதிமண்டலம்போன்ற ஒற்றைவெண் கொற்றக்குடையின் நிழற்கீழ் அரசுவீற்றிருந்து வாழ்ந்த நளசக்கரவர்த்தி, மலைபோன்ற மிகப்பெரிய வினைப்பயனால், தனது மேலான நிலைமை கெட்டு, தன் அழகிய மனைவியைப் பெரிய கானகத்தின் இடையிலே கைவிட்டு, தான் மடையனாய் வருந்தினனே! தனக்கு நேரில்லாத அரிச்சந்திரமகாராசன், முன் செய்த வினையால், தன் மைந்தனையும் மெல்லிய இடையையுடைய மெல்லியலாகிய தன் மனைவியையும் விட்டு, புலால்நாற்றத்தையுடைய பறையனுக்கு ஆளாகித் தான் மயானங் காவல் செய்து, தனது மேன்மைநிலைமையினின்று மாறிக் கீழ்மையுற்றான். விதியின் கொடுமை எத்தன்மையது! நீ, முற்பிறப்பில் முதலிற் செய்த நல்வினையினால் இராமபிரானைக் கணவனாகப்பெற்று, பின்செய்த தீவினையினால் இங்ஙனம் நீ அவனைப் பிரிவுற்றாய். புண்ணியபாபங்களாகிய இருவகைவினைகள் முறையே என்ன நன்மைதீமைகளைத்தான் விளைக்கமாட்டா? இத்தகைய இடரை நீ அடையாதபடி நீ செய்யவேண்டிய செய்கைமுழுதும் பெரிய தவமேயாம்; அதனைச் செய். மிக்க தவத்தையுடைய முனிவர்களது திருவடிகளை விரும்பி வணங்கி வழிபட்டு, வேதசாஸ்திரங்களிற் கூறிய விதிமுறையே அவர்கள் சொன்ன சன்மார்க்க முறை வழுவாது ஒழுகி, விரதங்களை அநுஷ்டித்து, உபவசித்து, அவ்விடத்திலே உனது காதலனை எப்பொழுதும் கருத்தில் வைத்துச் சிறந்த தவத்தைச் செய்வாயாக. இதுவே உனக்குச் செய்யத்தக்க தொழில்."

அவ்வாறு சொன்ன இளையபெருமானுக்குச் சீதை கூறுவாள்:—"உன் தமையனாரை நிழல்போல எப்பொழுதும் விட்டுப்பிரியாதவளல்லளோ நான்? முன்பு அப்பெருமானும் நானும் சேர்ந்து சென்று திருவடிவணங்கப்பெற்ற அரிய முனிவர்கள், கணவனுடனன்றித் தனியே சென்று அடிபணியும் என்னை நோக்கி, 'உனது காதலன் இன்று உன்னை விட்டுப் பிரிந்த காரணந்தான் என்ன? நீ சொல்' என்று வினவும்பொழுது, யான் அவர்களுக்கு என்ன உரைப்பேன்?' என்று, பின்னும் கூறுவாள்:—'பெரிய உலகமுற்றும் தனதாக உடையவனான இராமபிரானது பிழையினால் நேர்ந்தன அல்ல; பூமியிலுள்ள சனங்களின் குற்றத்தினால் நேர்ந்தனவும் அல்ல; என்னுடைய வினையாலேயே இச்செயல்கள் விளைந்தன' என்று சொல்லி, மீட்டும், 'இளையபெருமானே! உனது தமையனார்க்கு இன்று என்து நிலைமையை உணர்த்து' என்று உரைத்தாள்.

மிக்க வலிமையுடையவனான இலக்குமணன், தனது இருகண்களும் நீரைச் சொரிய, மனமயங்கி, 'வாய்விட்டுக் கதறுதலுடனே இன்று இந்த உரையைக் கேட்க என்ன பாவஞ்செய்தேனோ?' என்று பரிதவித்து, கொடிய துன்பத்துடனே, மிக்க துன்பத்தையுடையவளான பிராட்டியை நோக்கி, இச்சொற்களைச் சொல்லலானான்:—'வெதும்பிய மனத்தையுடையவளே! பரிசுத்தகுணமுடையவளே! உன் கணவன் உன்னைக் கைப்பிடித்த அன்றுமுதல் இன்றளவும், உன்னுடைய திருவடிகளைப் பணிந்துநின்றாலும், உனது திருமேனியைக் கண்டறியேன். இன்றுதான் உன்னைக் காணவல்லேனோ?' என்று உரைத்தான். இவ்வாறு இலக்குமணன் சொல்லி, பிராட்டிக்கு இனி வரும் துயரத்தைக்குறித்துச் சிந்தித்து, அவளது தாமரைமலர்போலுந் திருவடிகளைப் பணிந்து, கங்கையென்னும் பெருநதியைக் கடந்து, அவளைப் பின்பார்த்துப் பின்பார்த்து, கொடிய துயரத்தால் விம்மிவிம்மி அழுபவனாய் அயோத்திநகர்நோக்கிப் போனான்.

சானகி, 'இந்த என் மைத்துனனார் இங்ஙனம் இங்கே என்னைத் தனியே விட்டுவிட்டுப்

போயேவிடுவாரோ? அல்லது, மீண்டும் ஒருகால் திரும்பிவருவாரோ?' என்று எண்ணி, தான் வைத்தகண்வாங்காமல் பார்த்துக்கொண்டேயிருந்து, இளையபெருமாள் நெடுந்தூரம் சென்றுவிட்டபின்பு, 'தேரையோ யான் காண்கிறேனில்லை; இளையோனும் போய் மறைந்துவிட்டான். என்னை அறவே கைவிட்டார்கள்?' என்று எண்ணி, பெருங்குரலிட்டுக் கதறத்தொடங்கினாள்:—

"இலங்கையிலே நெடுங்காலம் பெரிய சிறையிலே இருந்து கதறியழுது நான்பட்ட சிறுமைகளும் துன்பங்களும் போதாமல், பூமியிலே பிரசித்தமாக விளங்குகிற பழியைப் பூட்டிக் கானகத்தில் என்னைத் தனியே விடுவித்து, விலகவொண்ணாத் துயரத்தை விளைத்த என்விதியே! ஐயோ! விதியே! ஐயோ! குற்றம்மிக்க பழியைக் கற்பித்து, அதனால், இப்பிறப்பில் என்னையொழிய வேறுமாதொருத்தியை என்மனத்தாலும் தொடேனென்று வரந்தந்த காதலனை மனங்கலக்கி என்னைக் காட்டில் விடுவித்து மனவேதனைவிளைத்த என்விதியே! ஐயோ! விதியே! ஐயோ! தயைதாக்ஷிணியமில்லாமையால் கண்ணில்லாதவனென்று சொல்லத்தக்க இராமன் என்னைக் காட்டில் விட்டிட, அதனைப் பூலோகத்திலுள்ள ஜனங்கள் கண்டிருந்து, மிக்க கொடுமையோடு வாய்திறந்து மானமில்லாத ஒழுக்கங்கெட்டவளென்று உரைத்துப் பழிதூற்றும்படி பண்ணுவித்தாய். அறிவினும் ஆற்றலினும் சிறந்த தேவர்கட்கும் விலக்குதற்குஅரிய விதியே! ஐயோ! விதியே! ஐயோ! தாசரதியாரது மனத்தை, அன்பார்ந்த நெருங்கிய உற்றாரது உரையை என்றும் கேளாதவகை கலக்கி, இடைவிடாது தீமை நேர்தற்குக் காரணமான கொடிய பாவத்தையுடையளான எனக்கு ஒருநாளும் மீண்டுவாராதிருக்கும்படியான வனவாசத்தைக் தந்த என் விதியே! ஐயோ! விதியே! ஐயோ! தகுதியமைந்த கணவன் வெறுத்து ஒருத்தியைக் கைவிட்டகன்றானாயின், அவளைப் புக்ககத்தாரெல்லோரும் ஏற்றுக்கொள்ளாமல் கைவிடுவார்கள். அவள் பிறந்தகத்தார்களும் ஏற்றுக்கொண்டு போற்றமாட்டார்கள். அன்னியர்கள் அக்கணமே எந்தப்பழியைவேண்டுமானாலும் அவள்மேல் இடுவார்கள். ஆதலால், அங்ஙனம் கணவனால் கைவிடப்பட்டவளாகிய, தொலைத்தற்குஅரிய பாவத்தைச் செய்துள்ளவளான யான், போய்ச் சேர்தற்குச் சிறந்த ஓரிடத்தையுங் காண்கிறேனில்லை. என்விதியே! ஐயோ! விதியே! ஐயோ!"

இத்தகைய பலவார்த்தைகளையும் மேன்மேற் சொல்லித் துயரப்படுபவளான பிராட்டி, 'இத்துயரம் தீரும்படி எனது உயிர்தானே போய்விடமாட்டாதோ?' என்றுசொல்லிக் கதறுகிற அக்காலத்தில், அக்கினியினும் அதிபரிசுத்தரான வால்மீகிமுனிவரது சிஷ்யர்கள், அச்சீதை அழும் ஒலியின்வழியாக வந்து அவளருகிற் சேர்ந்தார்கள். அவர்கள் அழுமவளைக் கண்டு இரங்கி, விரைவாகச்சென்று அவ்வால்மீகிமகாமுனிவரை அடுத்து, அவரைத் தொழுது செய்திசொல்வார்கள்:—

"அருந்தவனே! தேவலோகத்தினின்று வழுவியவளாய்க் கீழ்விழுந்தவளோ? அன்றி, பூலோகத்திலேயே உள்ளவள்தானோ? சித்திரத்தில் எழுதுதற்குஅரிய மிகஅழகிய திருமேனியையுடையவள் யாரென்று அறியோம். ஒருவருமில்லாக் காட்டிலே சோகம்நிறைந்த மனமுடையவளான ஒருபெண், ஒருதுணையுமின்றித் தெய்வமே துணையாகி, இருகண்களினின்று நீர் நதிபோற் பெருகக் கீழ்விழுந்து அழுகின்றாள். அவளுக்கு அருள்புரிதல் உனக்கு அடுக்கும்."

அம்முனிவர், அதுகேட்டவுடனே, அச்சீடர்களுடனே புறப்பட்டு, சீதையிருக்கின்ற அங்குப் போய்ச்சேர்ந்து, அழுகை ஓயாதபடி நெஞ்சில்தங்கிய சோகம் ஆறும்படி அப்பிராட்டியைத் தேற்றுபவராய், 'நீ இங்கிருந்து சோகித்துப் பயனென்ன? துக்கத்தை விட்டு,



மகளே! யான் சொல்வதைக் கேள்' என்று சொல்லி, மற்றும் சொல்லத்தொடங்கினார்:—

"குற்றமற்றவனான இராமபிரானது தேவி நீயென்றும், குற்றமில்லாதவள் நீயென்றும், சனகமகாராசனது சிறந்த மகள் நீயென்றும் யோகதிருஷ்டியினால் நான் உணர்ந்தேன். தகுதியையுடையவளான உன்னை, அவ்விராமன் காட்டில் விட்டானல்லன்; என்னிடத்திலேயே விட்டானென்று எண்ணிக்கொள். நாங்கள் வசிக்கிற இடத்திற்கு எம்மோடும் வருவாய். எங்களுடைய ஆச்சிரமத்தின் எல்லையாகிய இவ்விடத்தில், அளவில்லாத மங்கையர் தவவேடத்தைத் தாங்கிச் சிறந்த தவத்தைச் செய்பவர்கள் உண்டு. அங்கு அவர்கள் உன்னைக் கண்டால், அகம் மிகமகிழ்ந்து, உடனே தங்கள் ஆச்சிரமத்துக்கு உன்னை அழைத்துக் கொண்டுபோய் ஆதரித்துப் பாதுகாப்பார்கள். நீ தளர்ச்சியுறுதே."

வால்மீகிமகாமுனிவர் இவ்வாறு சொல்ல, சீதை அதுகேட்டுச் சிறிது ஆறுதலுற்று, அங்கு அப்பொழுது, அல்லலகற்றும் அம்முனிவனது அடியிணையை வணங்கினின்றாள். அம்முனிவர் பிராட்டியை உடனே அழைத்துக் கொண்டு, வைதிகாக்கினியின் ஓமப்புகை மாறாத தமது பர்ணசாலைக்கு வந்துசேர்ந்தார்.

சீதையைக் கண்ட மாதர்கள், தரித்திரராயுள்ளவர்கள் பெருஞ்செல்வத்தைப் பெற்றாற்போல மிக்கமகிழ்ச்சியுற்று, அவளது வடிவத்தைக் கண்டு, 'குற்றமற்ற மனத்தினாற் சிறந்த திருமகள் இவள்தானோ?' என்பவர்களும், 'மெல்லியலாகிய இவளுக்கு உள்ளத்தில் வேதனை உள்ளது' என்பவர்களும், 'தாங்குதற்குஅரிய சினத்தினால் தேவர்கள் சபிக்க, அதனால் நிலைகுலைந்து கீழே விழுந்துவிட்ட தேவமாதோ இவள்?' என்பவர்களுமாயினர். அங்கு அப்பொழுது, அத்தவப்பெண்டிர் இவ்வண்ணம் ஐயமுறுங்கால், வால்மீகிமகாமுனிவர், 'இங்கு வந்துள்ள இவளது சிறப்பையும், பெயரையும், இவள்கணவனது பெயரையும் நீங்கள் கேளுங்கள்' என்றுசொல்லி, அவற்றை அவர்கட்குக் கூறுவார்:—

"வைவஸ்வதமநுவினது குலம் விளக்கமுறும்படி அதில் அவதரித்து, கடலை மலைகளைக்கொண்டு அணைகட்டிக் கடந்து, கோதண்டமென்னும் தனது வில்லைக்கொண்டு இலங்கை நகரத்திலுள்ள அரக்கரை அழித்த தசரதசக்கரவர்த்திகுமாரனான ஸ்ரீராமபிரானது தருமபத்தினி இவள்; ஜனகமஹாராஜன் பெற்ற பரிசுத்தையான பெண்மணி; இவளது பெயர் சீதை; ஒருகாரணம்பற்றித் தன் கணவன் துறந்திட, இங்கு வந்துசேர்ந்தாள்."

வால்மீகிமகாமுனிவன் அங்கு இங்ஙனம் உரைக்க, அதுகேட்டு மங்கையரனைவரும் மகிழ்வுற்றுச் சீதையைப் போற்றினர்.

இதுநிற்க. அங்கு இளையபெருமாள் சுமந்திரனோடு அயோத்திநகரடைந்து, இரகுநாதனைப் பணிந்து, அவனது ஆணையின்படி தான் செய்ததை உரைத்தனன். அப்போது, இரகுவீரன், நாட்டிலுள்ள ஜனங்கள் சீதைவிஷயமாகச் சொன்ன பழியைக் கேட்டு வேதனைப்பட்ட அன்றையினும் மிகவும் வேதனைப்பட்டான். அப்பொழுது, இலக்குமணன், 'அநீதி, பழி இரண்டையும் தாம் கேட்டபடியே சொல்லும் உலகத்தாரையும் வெறுக்கத்தகாது; அவ்வுலகத்தாரோடு பொருந்தியொழுகும் மதியையும் வெறுக்கத்தகாது; அவ்வாறே, ஒழுக்கத்திற் சிறந்தவளான சானகியையும் வெறுக்கத்தகாது; அதிகுணவதியாய் அக்கினியினும் பரிசுத்தியுடையவளான அச்சீதையையும் உன்னையும் விதித்த விதியையே வெறுக்கத்தகும்' என்று தேற்றவுகூற, இராமபிரான் ஒருவாறு தேறுதலடைந்தான்.

முற்றிற்று.

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.

## Female Education.

### பெண்கல்வி.

பஞ்சாப் மாகாணத்திலுள்ள ஜாலண்டர் என்னும் நகரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கன்னியா மஹாவித்தியாலயத்தின் வருஷதினக் கொண்டாட்டம் இந்த மாதம் நடைபெற்றது. அப்பொழுது, ஸ்ரீமதி ஸரோஜினிநாயுடு அக்கிராஸனம் வகித்தார். அவர் தமது பிரசங்கத்தில், பெண்களுக்குக் கல்வியின் அவசியத்தைப்பற்றிப் பேசியதன் சில முக்கிய அம்சங்களை இங்கு எழுதுகிறோம்.



ஸ்ரீமதி ஸரோஜினி நாயுடு.

அநேகம்பேர்கள் பெண்கல்வியின் அபிவிருத்திக்கு ஒரு பெருந்தடையாயிருந்துவருவது மிகவும் வியசனிக்கத்தக்கதாயிருக்கின்றது. பெண்கல்வி அபிவிருத்தி விஷயமாய் உழைப்பவர்களை எவ்வளவோ பேர்கள் குறைகூறி வருகிறார்கள். இவ்விஷயமானது எனக்கு மனவருத்தத்தைத் தருகின்றது. பெண்கல்வி ஏற்பட்டால், பெண்களின் அடக்கம் மரியாதை முதலான நற்குணங்கள் போய்விடுமென்று சிலர் எண்ணுகிறார்கள்; அவர்கள் அப்படி எண்ணுவது தவறு. அப்படிப்பட்டவர்கள் தங்கள் பழைய சாஸ்திரங்களையும், சரித்திரங்களையும் அறியாதவர்களென்றே நாம் கருதவேண்டும். ஸ்திரீகளுக்கு இருக்கவேண்டிய தைரியமானது, இந்திய ஸ்திரீகளுக்குப் பரம்பரையாயிருக்கின்றது. முன்காலத்திலிருந்த ஸாவித்திரி முதலான ஸ்திரீகளைக் கவனியுங்கள். ஸாவித்திரி தன் கணவனது உயிரை யமனிடமிருந்து கேட்கவில்லையா? ஆதலால், இப்போதிருக்கும் நமது ஸ்திரீகளும் பழைய கால ஸ்திரீகளுக்கிருந்த கொள்கைகளை உயிர்ப்பிக்கவேண்டும்.

இந்திய ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிக்கப்படவேண்டுமென்பது புதிதன்று. பண்டைக்கால ஸ்திரீகளைக் கவனியுங்கள். கார்க்கி, மைத்ரீ, லீலாவதி முதலானவர்கள் கல்விப்பேற்றைப் பெற்றிருந்தார்களல்லவா? ஆண்மைத்தனத்திலும் சந்திபிபி, அகல்யாபாய் முதலானவர்கள் பேர்பெற்றவர்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா? முற்கால ஸ்திரீகளும், தமது புருஷர்களோடு நின்று போர்புரிந்திருக்கிறார்கள். இராமாயணம், மகாபாரதம் முதலியனவற்றைப்பார்த்தால், ஸ்திரீகளும் புருஷர்களோடு சேர்ந்து எல்லாக்காரியங்களிலும் உதவி புரிந்திருக்கிறார்கள் என்பது தெரியவரும். இப்போது நமது தலைவர்கள் இந்தியா கவர்ன்மெண்டாரைப் பல சுதந்திரங்களைக் கேட்டு வருகிறார்கள். ஆனால், அவர்கள் ஸ்திரீகளின் முன்னேற்றத்தைப்பற்றிச் சற்றும் கவனிப்பதில்லை. எப்படி ஒரு வண்டியானது ஒரே சக்கரத்தினால் ஓடமுடியாதோ, அப்படியே ஒரே மனிதனால் தேசமுன்னேற்றத்திற்கான விஷயங்களைக் கவனிக்கமுடியாது. ஆகையால், எக்காரியத்தையும் முன்னுக்குக்கொண்டுவர வேண்டுமென்றால், ஸ்திரீகளும் புருஷர்களும் ஒத்துழைக்கவேண்டும்.



ஸ்திரீகளுடைய கடமையானது சமையல் செய்வதும், குழந்தைகளைத் தொட்டிலில் விட்டு ஆட்டுவதுந்தான் என்று நாம் எண்ணக்கூடாது. அவர்களுக்குக் கல்வி கொடுப்பதனால், அவர்கள் புத்தி வன்மைபெறுவதோடு, தத்தம் கடமைகளையும், பொறுப்புக்களையும் நன்கு உணருவார்கள். ஐரோப்பாவில் பெண்கள் கல்விகற்பிக்கப்பட வேண்டுமென்று முயற்சி செய்யப்பட்டபோது, சிலர் அதை ஆக்ஷேபித்தார்கள்; ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிக்கக்கூடாதென்றும், அவர்கள் கல்வி கற்றுவிட்டால் வீட்டுக்காரியங்களையும் குழந்தைகளைப் பராமரிப்பதையும் விட்டுவிட்டுக் காலேஜ்களில் படிக்கத்தொடங்கி, புருஷர்கள் செய்யக்கூடிய காரியங்களைத் தாமே செய்துவிடுவார்களென்றும் சொன்னார்கள். ஆனால், ஸ்திரீகள் இவ்விஷயத்தில் பெருமுயற்சி செய்து தங்கள் காரியத்தில் சித்தி பெற்றார்கள். அவர்கள் அவ்வாறு செய்திராவிட்டால், இங்கிலாந்தில் இப்போது ஸகல காரியங்களையும் ஸ்திரீகளே கவனிப்பது கஷ்டமாயிருந்திருக்கும்.

ஜப்பான், சீனா முதலான தேசங்களிலும் பெண்கல்வி உணர்ச்சியானது பரவ, அதன்பலனாக ஸ்திரீகளுக்கென்று பல சர்வகலாசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. ஸ்திரீகள் கல்விகற்பதால், அவர்களுக்கு அடக்கமும் தெய்வபக்தியும் அவசியம் ஏற்படுகின்றதென்பதை மீண்டும் இங்குக் கூறுகிறேன். நமது தேசத்தில் இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும், இன்னும் இதர ஜாதியார்களுக்கும் ஒற்றுமை ஏற்படவேண்டுமென்று பலர் கூறுகிறார்கள். ஆனால், ஸ்திரீகளின் முன்னேற்றத்திற்கான வழிகளை எவரும் கவனிப்பதில்லை. நம்நாடு முற்போக்கடையவேண்டுமாயின், நாம் பெண்கல்வியை அபிவிருத்திசெய்து, அவர்களையும் நம்மோடு சேர்த்துக்கொண்டு பொதுநன்மைக்கான காரியங்களில் உழைக்கவேண்டும்.

---

## The Lost Will.

By Mr. M. S. Krishnaswamy Aiyar.

*Author of Stolen Bride, Power of Love etc.*

### காணமற்போன மரணசாஸனம்.

(60-ம் பக்கத் தொடர்ச்சி)

#### 2-ம் அத்தியாயம்.

கல்யாணபுரம் என்ற கிராமத்தில் நீலகண்ட சாஸ்திரிகள் என்று ஒரு அந்தணசிரேஷ்டர் இருந்தார். அவருக்குச் செல்வப்பொருள் ஒழிந்த ஏனைய சௌகரியங்களெல்லாம் ஒருவாறு நிறைந்திருந்தன. இரண்டுவேதம், இரண்டு சாஸ்திரம், இரண்டு ஸூத்ரம் அவருக்கு நன்றாய்த் தெரியும். மற்றபடி லோகவ்யவஹாரங்களிலும் அவருக்கு அநுபவம் அதிகமுண்டு. ஊரில் அவருக்கு அதிக மதிப்பு உண்டு. அவர் பரம்பரையாக உபாத்யாயத் தொழிலைச் சேர்ந்தவரல்லர்; காலவித்தியாசத்தால் அவருடைய தந்தை தமது சிறிது பொருளை இழந்து கஷ்டப்பட நேர்ந்தது. தனது புத்ரனும் கஷ்டப்படாமலிருக்க, அவருக்கு வேதசாஸ்திரங்கள் கற்பித்து, வைதிக மார்க்கத்தில் வயிறுவளர்க்கக் கற்பித்தார். நீலகண்டசாஸ்திரிகள் மிகவும் ஏழையானாலும், பொருளுக்காகக் கண்டவிடமெல்லாம் அலைவதில்லை. கௌரவக் குறைவாய்த்தகுதியில்லாருக்குக் கைநீட்டுவதில்லை. அவர் சற்குணசீலரென்று அறிந்த பலரும், அவருக்குச் செய்யவேண்டிய பொருளுதவியை மனஞ்சலிக்காது திருப்தியுடன் செய்துவந்தனர். அவருடைய திர

புத்ரர்தான் முன் அத்தியாயத்தில் கூறிய சங்கரய்யர். சாஸ்திரியார் தமது பையனை இங்கிலீஷ் படிக்கும்படி அவ்வூருக்கு அருகிலுள்ள ஓர் கிராமத்து இங்கிலீஷ் பாடசாலையில் சேர்த்தார். பையன் படிப்பில் அக்கரை சிறிதும் கொள்ளாமல், விளையாட்டையே பெரிதாகக் கொண்டு காலத்தை வீணாக்கிவந்தான். சில காலஞ் சென்றபின் பையன் படிப்பில் விருத்தியாகாதது கண்டு, அவனையும் தமது கூட்டத்தில் சேர்த்துக் கௌரவமாய்க் காலங்கழிக்க ஏற்பாடுசெய்ய எண்ணங்கொண்டார். பையனுக்கு அரசங்குச்சியும் நாணற்புல்லும் பிடிக்கவில்லை. வேதம் அவன் வாயில் நுழையவில்லை. சில ஸம்ஸ்கிருத பதங்களைச் சுரத்துடன் மனப்பாடம் செய்யமுடியாத இவன் மூளையில், வியாகரணமும் வேதாந்தமும் ஏறுவதேது? வெட்டிச்சோறு தின்பதும், மரமேறிக் காய்கனிகள் திருடுவதும், ஊர் சுற்றுவதுமாகத் தன் காலத்தைக் கழித்துவந்தான். தனயனுடைய நடத்தையைக்கண்டு மனந்தளர்ந்த சாஸ்திரியார், சிலகாலம் வியாதியாயிருந்து பரமபதமெய்தினார். அவர் மனைவியும், இரண்டொரு மாஸங்களுக்கெல்லாம், புருஷனைவிட்டுப் பிரிந்திருத்தல் மனைவிக்கேற்றதன்றென்று எண்ணி அவர் சென்றவிடம் சென்றனள்.

தந்தையையும் தாயையும், அவர்களுடைய அன்பையும் ஆதரவையும் இழந்த சங்கரன், இனியொருவருக்கும் பயப்பட்டு நடக்கவேண்டியதில்லை யென்று திடங்கொண்டு, தனது சுற்றத்தார் ஒருவருக்கும் தெரிவிக்காமல் தன்னூர்விட்டு எவ்விடமோ சென்று மறைந்தனன். அவனது நெருங்கிய பந்துக்கள் பலவிடங்களில் தேடியும், அவன் அகப்படவில்லை.

இப்படியாகப் பத்துவருஷங்கள் கழிந்தன. பின்பு ஒருநாள், சங்கரன் தன்னூருக்குத் திரும்பிவந்தான். வண்டிநிறைய மூட்டைகளும் பெட்டிகளும் கொண்டுவந்த அவனைக் கண்டு, பலர் வியப்படைந்தார்கள். சிலநாட்களில் சங்கரய்யர் வேற்றூர்களில் பெரும் பொருள் ஸம்பாதித்து வந்தாரென்ற செய்தி ஊரெல்லாம் பரவிற்று. சங்கரய்யர் தமது தந்தை குடியிருந்த வீட்டைச் செப்பனிட்டு அதில் குடியிருந்துவந்தார். அவருக்கு இன்னும் கல்யாணமாகவில்லை. அவனிடம் அபிமானங்கொண்ட சில எட்டின பந்துக்களும் அவனது தந்தையின் நண்பர்களும் அவ்விஷயத்தில் அதிக ஊக்கங்கொண்டார்கள். அவனது செல்வநிலைமை இன்னதென்று அறியாத பெண்ணைப் பெற்ற சிலர், அவருக்குப் பெண் கொடுக்க உடன்படவில்லை. இதன் உண்மையை அறிந்த சங்கரய்யர், தாமடைந்த பொருளைக்கொண்டு தமதூரிலும் பக்கத்தூரிலும் அடிக்கடி நிலங்கள் வாங்கலாயினர். அதனால், அவர் அதிகப்பொருள் படைத்தவரென்று பலருக்குத் தெரியவந்தது. இதன்மேல் சங்கரய்யருடைய தாய்வழி உறவினர் ஒருவர் தமது பெண்ணை அவருக்கு மணஞ்செய்விக்க உடன்பட, கல்யாணமும் நடைபெற்றது. கல்யாணமான சில மாதங்களுக்கெல்லாம் அவர் மனைவி சுந்தரம் வயதடைந்தனள். அதற்குச் சிலகாலத்துக்கெல்லாம் இருவரும் கல்யாணபுரத்தில் மனமொப்பிக் குடித்தனம் செய்துவந்தார்கள்.

சங்கரய்யர் முன்போலன்றிக் குணம் மாறியிருந்தார். மக்கு சங்கரன் என்றும், துஷ்ட சங்கரனென்றும், தர்ப்பக்கட்டைசாஸ்திரிகள் பிள்ளை யென்றும் பலவாறு இகழ்ந்த பலர், அவரது நற்குணங்களைக்கண்டு வியப்படைந்தனர். அவர் பல விஷயங்களிலும் அநுபவ அறிவுடன் பேசுவதைக்கண்டு, வயதுசென்ற கிழவர்களும் அவருடைய வார்த்தைக்கும் அபிப்பிராயங்களுக்கும் மதிப்புக்கொடுத்தார்கள். காலக்கிரமத்தில் அவர் ஊரில் ஒரு செல்வாக்குள்ளவரானார். அவரை யோசனைகேளாது ஊரில் பொதுக்காரியம் ஒன்றும் நடப்பதில்லை.

சங்கரய்யர் ஊருக்கேயன்றி வீட்டுக்கும் நல்லவராக இருந்தார். சங்கரய்யராவது அவர் மனைவி சுந்தரமாவது ஒருநாளாவது வருத்தப்



பட்டதில்லை. ஒருவர்க்கொருவர்க்கு ஒருநாளும் மனஸ்தாபம் ஏற்பட்டதில்லை. சுந்தரம் எப்போதும் தனது கணவனை மகிழச்செய்வதிலும், அவருடைய மனமறிந்து அவருடைய விருப்பங்களை நிறைவேற்றுவதுமாயிருந்தாள். இரண்டு வருஷங்கழித்து அவளுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அதற்கு நீலகண்டன் எனப்பெயர் கொடுக்கப்பட்டது. சங்கரய்யர் தமது குழந்தையையும் மனைவியையும் முன்னிலும் அதிகமாக அன்புடன் பாராட்டி நேசித்துவந்தார்.

உலகத்தில் கஷ்டப்படுவோரைக்கண்டு எவரும் பரிதாபங்கொள்ளுவதுண்டு. ஆனால், கஷ்டப்படுவோர் தெய்வவசத்தால் நற்கதியடைந்து சீரும்சிறப்புமாய் வாழ்வார்களாயின், முன்பு பரிதபித்தவர்களே மனம் வேறுபட்டு சீரும்சிறப்புமாய் வாழ்பவர்களைக்கண்டு பொறாமை கொள்வதுமுண்டு. பொதுவாய்ச் சொல்லுமிடத்து: கல்யாணபுரத்தில் சுந்தரம்மாளைக் கண்டு ஆனந்தமடையாதார் ஒருவருமில்லை யென்னலாம். சிலர் அவளது நிலைமைக்குத் தங்கள் நிலைமை மிகவும் தாழ்ந்ததென வருந்தி நின்றதுண்டெனினும், சுந்தரத்தின்மேல் பொறாமையாவது வெறுப்பாவது கொண்டது கிடையாது. அவள் யாரிடத்திலும் மரியாதையாய் நடந்துவந்ததனாலும், கேட்டவர்க்கில்லையென்று சொல்லாமல் கொடுத்து உதவிவந்ததனாலும், நாம் செல்வவானுக்கு வாழ்க்கைப்பட்டிருக்கிறோமென்று இறுமாப்புக்கொண்டு பலரையும் அலக்ஷியஞ்செய்து நடவாமல் யாவரிடத்திலும் பணிவுடனும் அன்புடனும் நடந்து வந்ததனாலும் அவளிடம் விரோதம் கொள்வார் ஒருவரும் இல்லாதுபோயிற்று.

இவ்விதம் பத்து வருஷங்கள் சென்றன. ஒருசமயம் சுந்தரம்மாளுக்குக் காய்ச்சலும் வேறு வியாதிகளும் உண்டாகி அவளை மிகவும் வருத்தின. அதனால், அவள் மிகவும் உடல் மெலிந்து எழுந்துநடக்கச் சக்தியற்றுப்போனாள். அவளது கணவர் அவள்பால் கொண்ட பிரியத்தால் ஏராளமாய்ப் பணம் செலவழித்து வைத்யஞ்செய்தார். ஆனால், வியாதி குணப்படவில்லை. இப்படி ஒருவருஷம் சென்றபின், அவளது ஸகோதரராகிய ராமய்யர், அவளைத் தமதூருக்கு அழைத்துக்கொண்டுபோய் வைத்தியம் செய்வித்தார். அவ்வூரில் இருந்த வைத்தியன் அதிக சாமர்த்யமில்லாதவனாயிருந்தும், சுந்தரத்தின் அதிருஷ்டவசத்தால் வியாதி மெள்ளமெள்ளக்குணமடைந்து வந்தது. வியாதி விஷயத்தில் சுந்தரம் அதிருஷ்டமுடையவளாயிருந்தாலும், மற்ற பாக்கியங்கள் விஷயத்தில் துரதிருஷ்டம் அவளைச் சூழலாயிற்று. இதுவரையில் அவளை அளவிலா அன்புகொண்டு ஆதரித்துவந்த சங்கரய்யர், தமது மனைவியில்லாததை முன்னிட்டுப் பற்பல ஊர்களையும் புண்ணிய நகரங்களையும் சுற்றிப்பார்த்துவரும்போது, ஒரு ஊரில் ஒரு பெண்ணை இரண்டாவது மனைவியாக மணம்செய்துகொண்டார்: அவளுக்குத் தந்தையில்லை; தாயும் இரண்டு சகோதரர்களுமே யிருந்தனர். அவள் சற்று அழகுள்ளவள்; ஸங்கீதம் சற்றுத் தெரிந்தவள்; தற்கால நாகரிகப்படி நடக்கும் இயல்புடையவள். கலியாணமானதும் சங்கரய்யர் சேஷி என்ற தமது இரண்டாவது மனைவியையும் அவளுடைய தாயையும் கல்யாணபுரத்துக்கழைத்து வந்தார். இரண்டொரு மாஸங்களுக்குப் பிறகு சேஷி ருதுவாகி, சாந்திமுகூர்த்தமும் நடந்தது. சங்கரய்யர் இளையாள்வலையில் அகப்பட்டவராய் அவள் சொற்படி நடந்து, அவளுடன் பிரியமாய் வாழ்ந்துவரலானார். அவருக்குச் சுந்தரத்தின் நினைவுபோய்விட்டது. சிற்சில ஸமயங்களில் அவளைப்பற்றிப் பிரஸ்தாபம் வந்து அதனால் அவள் ஞாபகம் ஏற்பட்டாலும், அவளைப்பற்றி அதிகம் சிந்திப்பதில்லை; அவள் பழையகாலத்துப் பெண் என்றும், நாகரிகம் தெரியாதவளென்றும் அவளை யிகழ்ந்து அவளைப் புறக்கணித்துவந்தார். இவ்விஷயங்களையறிந்த சுந்தரம், மிகவும் மனம் நொந்தாள்; சிலஸமயம் அலறினாள்; வந்த வியாதி தன்னைக் கொண்டுபோயிருக்கக்கூடாதா வென்று அழுதாள்.

சுந்தரம்மாளுக்குத் தன் கணவன்மேல் கோபமே உண்டாகவில்லை. அவரிடம் சற்றும் வெறுப்புக்கொள்ளவில்லை. எப்படியாவது அவர் ஸௌக்யமாய் இருந்தால், அதுவே தனக்குப் போதுமென்று எண்ணினாள்; அவர்களிடம் வேலையாவது செய்துகொண்டு, அவர் முகத்தைத் தினம் பார்த்துக்கொண்டிருந்தால், அதுவே தனக்குப் போதுமென்று எண்ணினாள்; சீக்ரம் தன்வீடு போகவேண்டுமென்று நிச்சயங்கொண்டாள். அதற்கேற்ப, அவளுடைய வியாதியும் முற்றிலும் குணப்பட்டுவிட்டது. தனது உடன்பிறந்தானைக் கூட்டிக்கொண்டு தனது வீடுவந்து சேர்ந்தாள். இவள்வரனைத் தூரத்திலிருந்து கண்ட சங்கரய்யர், தாம்அங்கிருந்தால் சண்டைச்சச்சரவு ஏற்படலாமென்று எண்ணி, அவ்வூர்க்கோயிலுக்குப் போய்விட்டார். சுந்தரம் வீட்டினுள் புகுந்ததும், சேஷியும் அவள்தாயாரும் காலகண்டிகள்போல் சண்டைபோட ஆரம்பித்துவிட்டார்கள். புருஷன் தள்ளிவிட்டபிறகு அவள் வீட்டில் காலெடுத்து வைக்கப் பாத்தியமில்லை யென்று அதிகாரம் செய்தார்கள். சுந்தரம் அதிகமாய் ஒன்றும் பேசாமல் தன் புருஷன் வரவை எதிர்பார்த்தவளாய்க் கூடத்தின் ஒருபுறத்தில் உட்கார்ந்துகொண்டாள். சண்டையைப் பார்த்த ராமய்யர், ஒன்றுந் தோன்றாதவராய் வாயில் திண்ணையில் உட்கார்ந்துகொண்டார். இரண்டு மூன்று நாழிகைக்கெல்லாம் சங்கரய்யர் வீடு வந்து சேர்ந்ததும், சுந்தரம் அவர் காலில் விழுந்து தன்னை அலக்ஷியம் செய்யாது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கெஞ்சினாள். அவர் சுந்தரத்தைக்கண்டதும் பூர்வஞாபகங்கள் உண்டாகவே, சற்றுத் தயங்கினார். இதற்குள், தாயும் பெண்ணும் கூக்குரலிட்டு உரத்துப்பேசி, சுந்தரத்தைக் கண்டபடி திட்டி, சங்கரய்யருக்குப் பல துர்ப்போதனைகள் செய்து, அவளை வெளியில் பிடித்துத் தள்ளும்படி செய்தார்கள். ராமய்யர் சங்கரய்யருக்குப் பலவாறு புத்திமதிகள் சொல்லியும் பயன்படவில்லை. இரண்டொரு நாள் தங்கிப்பார்த்தும், சங்கரய்யர் மனம் திரும்பாமல் வரவரச் சுந்தரத்தின்மேல் வெறுப்பு அதிகரிக்கவே, வாதாடுவதில் பயனில்லையென்று கண்ட ராமய்யர், தமது தங்கையையழைத்துக்கொண்டு ஊர் வந்து சேர்ந்தார்.

சுந்தரம் மனம் முறிந்தாள்; உடல் மெலிந்தாள்; புருஷனைவிட்டுப் பிரிந்த வாழ்க்கை என்ன வாழ்க்கையென மனம் நொந்தாள்; தான் உயிரோடு இருப்பதால்தான் இத்தனை துக்கங்களுக்கும் இடமேற்படுகிறதென்றெண்ணித் தன்னுயிரை மாய்த்துக்கொள்ளத் துணிந்தாள்; இரண்டொரு சமயங்களில் தன்னுயிரை நீத்துக்கொள்ள முயன்றாள்; தனது சகோதரனது ஆறுதல்மொழிகளாலும், சகோதரன்மனைவியின் அன்பாலும், தனது குழந்தையைவிட்டுப் பிரிய மனம் வாராததனாலும் ஒருவாறு மனந்திடங்கொண்டு, தனது பிள்ளை பெரியவனாகிறவரையிலாவது தன்னுயிரைவைத்துக்கொள்ளவேண்டுமெனத் தீர்மானித்தாள். ஆயினும், அவள் ஊண் உறக்கம் முதலியவைகளைப் பெரும்பாலும் துறந்தவளாய்த் தனது கணவனையே ஸதா தியானம்செய்துகொண்டு, தான் சாகுமுன் எப்போதாவது தன்னைஅவர் அழைத்துக்கொள்ளவேண்டுமென்னும் ஒரேவரத்தை அபேக்ஷித்தவளாய்ப் பற்பல தெய்வங்களையும் ஆராதித்துக்கொண்டு காலங்கழித்துவந்தாள். இவ்விதம் மூன்று வருஷங்கள் சென்றன.

## 3-வது அத்தியாயம்.

சேஷியம்மாள் சமையலறையில் உட்கார்ந்துகொண்டு தன்னெதிரில் ஒரு அரிவாள்மணையை வைத்துக்கொண்டு, கொத்தவரங்காய்களின் காம்புகளையும் நுனிகளையும் ஆய்ந்துகொண்டிருந்தாள். அவளருகில் சில கத்தரிக்காய்கள் கிடந்தன. அவளுக்குச் சற்றுத் தூரத்தில் சிறு தூணியில் ஒரு குழந்தை படுத்து விளையாடிக்கொண்டிருந்தது. அது பிறந்து ஐந்தாறுமாஸமிருக்கலாம். அடுப்பில் சாதம் கொதித்துக்கொண்டிருந்தது. அவள் சிறிது நேரம் யோசனையிலாழ்ந்தவளாய், கொத்தவரங்காய்களின் காம்புகளையும் நுனிகளையும் மெதுவாக ஆய்ந்துகொண்டிருந்தாள். அவள் தன்னை மெய்ம்மறந்து சிந்தித்துக்கொண்டிருந்ததால், இரண்டு வீடு தள்ளிக் குடியிருக்கும் அலமேலம்மாள் அவ்வறைக்குள் நுழைந்ததைக் கவனிக்கவில்லை.

"ஏண்டி, சேஷி. என்ன செய்கிறாய்? கையில் கொத்தவரங்காயை வைத்துக்கொண்டு என்ன யோசிக்கிறாய்?"

சேஷியம்மாள் உடனே ஆலோசனையிலிருந்து விழித்துக்கொண்டு, "யார், அலமேலு மாமியா? வாங்கோ, உட்காருங்கள்" என்றாள்.

"என்ன? நான் வந்ததுகூடத் தெரியாமல் என்னவோ எண்ணிக்கொண்டிருக்கிறாய்? உன்னைப்பார்த்தால் ஏதோ கவலைப்படுகிறவள்போல் தோன்றுகிறதே."

"கவலைக்கென்னம்மா? நாம் பிறந்ததே கவலைப்படத்தானே. சுகப்படவா பெண் ஜன்மம் எடுத்தோம்."

"என், கவலை யென்னத்துக்கு? கவலையெல்லாம் ஒழிக்கத்தான் ராஜாவாட்டமா பிறந்திருக்கிறானே. இனிமேல் உனக்கு விசாரமென்ன?"

"மாமி, என்வயிற்றெரிச்சலைக் கிளப்பாதேயுங்கள். அதைப்பற்றி யென்ன, கஷ்டமோ நிஷ்டூரமோ நான் அனுபவிக்கவேண்டியவள். இதையெல்லாம் பிறரிடத்தில் சொல்லுவானேன்" என்று ஆத்ரமாய்ப் பேசிவிட்டு—"எது வந்தது மாமி?"

"ஒன்றுக்கும் இல்லை. துருவுபலகையைச்சரிப்படுத்தவேண்டுமென்று நூறுதடவைசொல்லியாயிற்று. ஆத்திலே காதில் போட்டுக்கொள்கிறதேயில்லை. எத்தனை நாள்தான் துருவுபலகைக்காக ஒவ்வொரு அகமாகப் போகிறது? என்ன சொன்னாலும் அந்தப் பிராம்மணருக்குக் காதில் விழுவதில்லை. ஆனால் மாத்திரம், 'தேங்காய் கொண்டுவந்தேனே, ஒரு துவையலரைக்கப்படாதா? கறியில் தேங்காயைத் துருவிப் போடுகிறதுதானே' யென்று ஸதா திட்டிக்கொண்டுதான் சாப்பிடுகிறது. என்ன குடித்தனம் வேண்டியிருக்கிறது! உன்னுட்டமா ஸொத்துக்காரராயிருந்தால் பாதகமில்லை. உளுத்தம்பருப்பு ஆய்விட்டது. வாங்கிப்போடவேணும் என்று நாலுநாளாய்ச் சொல்லிவருகிறேன். காதில் போட்டுக்கொள்ளவில்லை. அந்த சறைப்பெட்டியில் இருந்த கொஞ்சம் பருப்பும் நேற்றோடு தீர்ந்துவிட்டது. சொன்னால்மாத்ரம் கோபம். கறியில் உளுத்தம்பருப்புக் கொஞ்சம் குறைந்தால் 'நாயே பேயே' என்றுதான் பேச்சு. என்ன வேண்டியிருக்கடி! எங்கேயேனும் போய் அக்கடா என்று ஒருமாஸமாவது இருக்கலாமென்றால், உன்னைப்போல் எனக்குப் பிறந்ததகமிருக்கா?"

"மாமி, என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதேயுங்களேன். எனக்கு வருத்தமாயிருக்கிறது."

"ஏண்டி, என்ன வருத்தம்? குழந்தை பிறக்கவில்லை; ஸொத்துக்குப் பிறந்தவன் வந்துவிட்டால், உன்பாடு திண்டாட்டமென்று வருத்தப்பட்டுக்கொண்டிருந்தாய். இப்போதுதான் மணியாட்டமாய் குழந்தை இருக்கானே. விசாரமென்ன?"

"நானும் அப்படித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். இப்போ அதெல்லாம் ஆகாசக் கோட்டையாய்ப் போச்சு."

"ஏன்?"

"நமக்குக் குழந்தை பிறந்தால் பாதி ஸொத்தாவது கிடைக்குமென்று நினைத்தேன். இப்போ பஞ்சப்படி கிடைத்தால் அதுவே பாக்யமென்று சொல்லவேணும்."

"நீ சொல்லுவது எனக்குத் தெரியவில்லையே."

"அவள் வந்து ஒரு மாஸமாக உட்கார்ந்துகொண்டிருக்காளோல்லியோ. என்ன உபதேசம் பண்ணினாளோ தெரியவில்லை. நேற்றுத்தான் ரெஜிஸ்டராச்சு: ஸொத்து முழுவதும் அவளுக்கும் அவள் பிள்ளைக்குமாம். அப்பா சாஸ்திரி குடியிருக்கிற வீடு எனக்கு. அதோடு இரண்டு காணி விட்டிருக்கிறார்கள். நான் இருந்த இருப்பென்ன? இப்போ எங்கே தள்ளிவிட்டிருக்கா, பாருங்கள்."

"உன்மேல் பிசகு என்றுதான் சொல்லுவேன். நீ சுந்தரத்தை இங்கே வரவிட்டிருக்கக்கூடாது."

"அதற்கு நானென்ன மாமி செய்கிறது?"

"உன்னைக் கூப்பிட்டவுடன் வந்துவிடுகிறது தானே. அவர்தான் நாள் பார்த்து அனுப்பினுரே.' உடனே புறப்படப்படாதோ. அவர் உடம்பு சரிப்படாமல் திண்டாடிக்கொண்டிருக்கும்போது, நீ பிறந்தாத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கலாமா ?"

"இப்படி ஒரு நொடியில் மனம் மாறுமென்று நினைத்தேனு? அது என் தலையிலெழுத்து: அதுதான் போகட்டும். நான் வந்தவுடன் சண்டை சண்டையாகப் பிடித்தார்; வாயிலே வராத வார்த்தையெல்லாம் சொன்னுர். நானிருந்த பிரியத்துக்கு அவர் சொன்ன வார்த்தையெல்லாம் நினைத்தால், இப்போ..பகீரென்கிறதம்மா! என்னவோ மருந்தீபோட்டு மயக்கிவிட்டாள். எப்படியாவது அவர் பிழைத்துக்கொண்டால், அவர் மனசை மாற்றிவிட்டாலும் விடலாம். என்பாடு எப்படியாவது போகிறது. எங்கேயாவது உழைத்தாவது சாப்பிடுகிறேன். அவல் குத்திப் பிழைக்கிறேன். அப்பளமிடுகிறேன். என் குழந்தை கதியென்ன ? இரண்டு காணியை வைத்துக்கொண்டு என்ன வாசித்துக் குப்பைகொட்டுகிறது?"

"ஏன் இப்படி அவர்மனம் மாறிப்போயிற்று?"

"என்னவென்று சொல்லுகிறதம்மா ? பிள்ளைபெறப் போனபோது அவர் பிரியமாய்த்தானிருந்தார். புண்ணியாஹவசனத்துக்கு வந்தபோது ஒரு மாதிரியாயிருந்தார். சரியாய்ப் பேசவில்லை. குழந்தையைக்கூடச் சரியாய்ப் பார்க்கவில்லை. என்னவோ என்று பேசாமலிருந்தேன். மறுபடியும், இரண்டு மாஸம் கழித்து வந்தார். அப்போது என் மேல் கோபங்கொண்டு கன்னுபின்னுவென்று வைதார். என் நடத்தை வரவரக் கெட்டுப் போயிற்ரும். என் கஷ்டகாலம். ஒருவர்மேல் சொல்லக் குற்றமில்லை. பிறகு அவர் திடீரென்று உடம்பு சரிப்படாமல் கஷ்டப்படுவதாகக் கடிதாசி எழுதியிருந்தார். நல்லநாள் அகப்படவில்லை. நாள் அகப்பட்டதும் புறப்படலாமென்றிருந்தேன். அதற்குள் சக்களத்தி வந்துவிட்டாள். ஸதா அவளுடன்தான் பேச்சு. அவள்தான் கஞ்சி வைத்துக் கொடுக்கிறுள். அவள்தான் தீர்த்தம் கொடுக்கிறுள். என்னை முகமெடுத்துப் பார்ப்பதே கிடையாது. குழந்தையைக்கூடப் பார்க்கவில்லை. என்னைக் கண்டால் அவ்வளவு கசத்துப்போயிற்று."

"இப்போது அவருக்கு உடம்பு எப்படியிருக்கிறது?"

"உடம்பு தேவலை. எழுந்து சற்று நடமாடுகிறுர். இன்னும் ஒரு வாரத்தில் குணமாகிவிடும்."

ஸம்பாஷணை இன்னும் சிறிதுநேரம் நடந்தது. பிறகு அலர்மேலம்மாள் தேங்காய்துருவத் துருவுபலகையையும், ஒரு கரண்டி "கடனுக, அளவாக" உளுத்தம்பருப்பையும் வாங்கிக்கொண்டு போனுள். சேஷி அம்மாள் இனுமாகக் கொடுத்துவிடவில்லை. தனக்கு வந்த பெயரையும் நஷ்டத்தையும் மாற்றிக் கொள்ள யோசனை கேட்டுக்கொண்டாள்.

(தொடரும்.)

எம். எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யர்.

## ஔவை.

நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதிநூல்களையும் தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம். பல நூல்களைத் தழுவியும் புலவர்களின் கர்ணபரம்பரையை அனுசரித்தும் இனிய எளிய வசன நடையில் இயற்றப்பட்டுள்ளது. சிறுவரும் சிறுமியரும் எளிதிற் படித்தறிந்துகொள்ளக்கூடியது. வித்வான்கள் பலராலும் மெச்சப்பட்டது.

விலை அணு 6. தபாற்செலவு வேறு.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர்,
(தென்னிந்தியா).



# Ancient Stories of South India.
## தென்னிந்திய புராதனக் கதைகள்.

[53-ம் பக்கத் தொடர்ச்சி.)

உடனே அவர்கள் இருவரும் பிச்சைக்கார வேஷம் தரித்து எவரும் பார்க்காமல் முருங்கமரத்தடிக்கு வந்தனர். பகல்திருடன் மரமேறி முருங்கக்காய் பறிக்கத் தொடங்கினுன். மரத்தடியில் ஸுகுணவதி நெருப்புமூட்ட ஆரம்பித்தாள். இதற்குள் ராஜ சேவகர்கள் சவத்தை வண்டியில் போட்டுக்கொண்டு அந்த வழியாய் வந்தார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் வண்டியும் மரத்திற்கு ஸரியாய் வந்தது. உடனே பகல் திருடன் அதிக சமத்காரமாய்க் கீழே விழுந்தான். ஸுகுணவதி ஓ வென்று அலறிக்கொண்டு அவன்மீது விழுந்து அழத்தொடங்கினுள். "ஆஹா ! அகப்பட்டு விட்டார்கள் திருடர்கள் ; அகப்பட்டு விட்டார்கள்" என்று சேவகர்கள் அவர்களின் அருகே போகும்போது, ஸுகுணவதி அவர்களைப் பார்த்து, "அப்பா! அப்பா! எனக்கு ஒரே பிள்ளை. என் புருஷன் கொஞ்சகாலத்திற்கு முன் இறந்து போய்விட்டார். நானும் என் பிள்ளையும் பிச்சையெடுக்க வந்தோம். இந்த வீதியிலுள்ள மரத்தில் காய்கள் நிறைய இருப்பதைப் பார்த்து, அதன்மீது ஆசைப்பட்டு அவன் கீழே விழுந்து இக்கதியானுன். ஐயோ! தெய்வமே ! நான் என்ன செய்வேன் ? இப்படியும் என்னைப் பரீக்ஷிக்க வேண்டுமா ? புருஷன் போனதுமல்லாமல் எனது ஒரு குமாரனைக்கூட இப்படிப் பண்ணிவிட்டாயே! இனி என் கதி என்ன ? ஐயோ குழந்தையே ! நீ ஏண்டா மரத்தின்மீது ஏறினுய் ? .........." என்று ஓலமிட்டாள். அவளது வார்த்தையைக்கேட்டு ராஜ சேவகர்கள் நாம் என்ன மோசம் போய்விட்டோமென்று அவ்விடமிருந்து வண்டியை ஓட்டிக்கொண்டு போய்விட்டார்கள்; பட்டணம் முழுவதும் வண்டியை ஓட்டிக்கொண்டு திரிந்தார்கள். அந்தத் திருடனது முண்டத்தைப் பார்த்து ஒருவராவது அழவில்லை. அந்த ஸங்கதியை அவர்கள் ராஜாவுக்குத் தெரியப்படுத்தினுர்கள்; கூடப் பிச்சைக்காரனுடைய விருத்தாந்தத்தையும் அரசனிடம் சொன்னுர்கள். "அந்தப் பிச்சைக்காரர்கள் திருடனுடைய உடலைப் பார்த்து அழுதவர்களே. அந்த ஸ்திரீ அவனுடைய பெண்சாதி. அந்தப்பையன் அவனுடைய பிள்ளை. இவ்வளவு தெரியாமல் போயிற்று உங்களுக்கு. முட்டாள்களே! ஸரி, நடந்துபோனது போகட்டும், இனிமேலாவது ஜாக்கிரதையாயிருங்கள். இன்றிரவு இந்த முண்டத்தைச் சுடுகாட்டில் வைத்துக் கொளுத்தவேண்டும். தீயிலிட்டவுடன் நீங்கள் பக்கத்தில் மறைந்திருந்து கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருங்கள். அந்தத் தீயில் தலையைப் போட்டுச் செல்லத் திருடன் குமாரன் அவ்விடம் வருவான். அவனைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று அரசன் கட்டளையிட்டான். பகல் திருடன் இராஜ சபையில் உட்கார்ந்து இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டு வீட்டுக்குச் சென்றுன்.

அன்றிரவு ராஜசேவகர்கள் அரசன்சொன்ன பிரகாரம் அந்த முண்டத்தைச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோய்க் காஷ்டத்தின்மீது வைத்துத் தீமூட்டிவிட்டு, நாலாதிக்குகளிலும் உருவின கத்திகள் உருவினபடியே திருடன் வந்தவுடன் சற்றும் தாமதிக்காமல் அப்படியே பிடித்துக் கொள்ள வேண்டுமென்று காத்துக்கொண்டிருந்தனர். அப்போது பகல்திருடன் மரக்கால்களைக் கட்டிக்கொண்டு முகம்நிறையக் கரிபூசித் தலைமயிரையவிழ்த்துத் தாறுமாறாகத் தொங்கவிட்டுக்கொண்டு, ரக்த வேஷ்டிகள் கட்டி, ஒரு கையில் திவர்த்தியும், மற்றொரு கையில் கத்தியும் எடுத்துக்கொண்டு, தசப்பனுர் சிரசை மூட்டையாகக் கட்டித் தோள்மீது போட்டுக்கொண்டு, கால்களில் கிங்கிணென்று சப்திக்கும் சஜ்ஜைஜங்களைக்கட்டி, ஹா,

ஹாஹாவென பெரிய ஹுங்காரம்செய்துகொண்டு சுடலையண்டை பெரிய ஆர்ப்பாட்டத்துடன் ஓடிவந்தான். அதைக்கண்டு சுற்றியிருந்த வீரப் புலிகள் எல்லோரும் இந்த மயானத்துப் பெரியபூதம் இரைதேடி வந்ததென்று ஒருவர்மீதொருவர் விழுந்து கத்திக் கதறிக்கொண்டு ஓடிப்போய் விட்டார்கள். உடனே பகல்திருடன் மூட்டையினின்று தகப்பனார்சிரஸையெடுத்துக் காஷ்டத்தைச் சுற்றிப் பிரதக்ஷிணம் வந்து, அந்தத் தலையைத் தீயிலிட்டுச் சப்தம் செய்யாமல் வீட்டுக்குப் போய்விட்டான்.

அடுத்தநாள் சூரியோதயமானவுடன் பகல்திருடன் ராஜசபைக்குப் போனான். சேவகர்கள் வந்து இரவு நடந்த விருத்தாந்தத்தையெல்லாம் அரசனிடம்சொன்னார்கள். அதைக்கேட்டு மகாராஜா, "அடே முட்டாள்களே! உங்களுக்கு ஏதாவது புத்தியிருக்கிறதா? நன்றாய்ச் சாப்பிடச்சொன்னால், வயிறு நிரம்பத் தின்னுவீர்கள். பூதமேது பிசாசேது? அங்கே வந்தது அந்தத் திருட்டுப் பிசாசுதான். செத்தவன் பிள்ளையவன். இது தெரியாமற் போயிற்றே உங்களுக்கு! இனிப் பன்னிப்பன்னி யுரைப்பதில் என்ன பிரயோஜனம்? அந்தத்திருடன் மகன் காலையில் அவசியம் பால்தெளிக்கவருவான். ஆகையால், நீங்கள் போய்ச் சுடுகாட்டில் சாம்பலண்டையில் காவலிருங்கள்" என்று சொல்லியனுப்பினார். "சித்தம் மகாராஜா" வென்று அவர்கள் தத்க்ஷணமே போய்விட்டார்கள். மயானத்துக்குப் பகல்திருடன் அரசனுடைய மந்தையை மேய்க்கும் ஆட்டிடையனைப் போல் வேஷம்போட்டு பால்நிறைந்த நாலைந்து பல்லாக்களைத் தலைமீது ஒன்றன்மேலொன்றாக வைத்துக்கொண்டு சுடலைக்கு அப்பாலிருந்து கோட்டையை நோக்கிவந்துகொண்டிருந்தான். காவலாளிகள் அவனைப்பார்த்து, அதட்டிக் கொஞ்சம் பால் வாங்கிக்கொள்ளலாமென்று நினைத்து அவனைக் கிட்டவரச் சொன்னார்கள். அவன் அருகேவந்து ஏன் கூப்பிட்டீர்களெனக் கேட்க, 'பாற்பல்லாக்களைக் கீழே இறக்கிவை' என்றார்கள்; அவன் மாட்டேனென்றான். 'மாட்டேனென்றால் விட்டுவிடுவோமோ' என்று அவர்கள் அவனைப் பிடித்துக் கொண்டார்கள். அவன் தப்பித்துக்கொள்ளப்பார்த்தான். 'அடே நீ எங்கே ஓடிப்போவாய்?" என்று அவர்கள் மிரட்ட, அவன் திடீரென அவர்களை ஏமாற்றி அவர்கள் கையினின்றும் விலகிக் கொண்டான். அவ்வாறு விலகிக்கொள்ளும்போது தலைமீதிருந்த பல்லாக்கள் சுடலைச் சாம்பலின்மேல் விழுந்து சுக்கல்சுக்கலாய் உடைந்து பாலெல்லாம் கீழே ஊற்றிக்கொண்டு போய்விட்டது. உடனே அவன் மஹா கோபங்கொண்டவனைப்போல் நடித்து, "ராஜாவுக்குப் பால் கொண்டுபோகும்போது என்னை இவ்வாறு வழிமறித்த விஷயத்தை நான் அரசருக்குத் தெரிவித்து, உங்களைப் படுத்திவைக்கும் பாட்டைப் பாருங்கள்" என்று கோட்டை முகமாய் ஓடினான். அவன் முன்னே போய்ச் சொல்லிவிட்டால், ராஜா எங்கே தங்களைத் தண்டிக்கப்போகிறாரோ என்று பயந்து சேவகர்கள் குறுக்கு வழியாய் ஓடி நடந்ததை ராஜாவுக்கு அறிவித்தார்கள். அதைக்கேட்டு இவர்களுடைய மூடத்தனத்தையும் அயோக்கியதையையும் கண்டு ராஜா கடுங்கோபமுற்று, "திருடனுடைய மகனே அந்த இடைய வேஷம்போட்டு வந்தது. தகப்பனார் அஸ்தியின்மீது பால் தெளித்துச் சென்றான். நீங்களெல்லோரும் முழு மூடர்களென அவன் நன்றாய்க் கண்டு கொண்டான். இனி அவனைப் பிடிப்பது உங்களால் திறமன்று. என்முன் நிற்கவேண்டாம். நிரம்பக் கஷ்டப்பட்டீர்களே, வீட்டுக்குப் போய் வயிறு நிறையக் கொட்டிக்கொண்டு இளைப்பாறுங்கள். நீங்கள் அதற்குத்தான் யோக்கியதை" என்று அவர்களை நிந்தித்துவிட்டு, ஒரு ஸர்தாரைப்பார்த்து, "அத்திருடன் ராத்திரி வந்து அஸ்தியைப் பொறுக்குவான். ஆதலால், நீ தயாராய்க் காத்திருந்து அவனைப் பிடித்து வா" என்று உத்தரவு செய்தார். பகல் திருடன் ஸபையிலிருந்து எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டான்.



அன்றிரவு அந்த ஸர்தார் ராஜா சொன்னபிரகாரம் சுடலைக்குச் சென்று டேரா போட்டு, திருடனுடைய அஸ்தியின்மீது தன் கட்டிலைப் போட்டுக்கொண்டு, சுற்றிலும் ஆயுததாரிகளான வீரர்கள் சிலரைக் காவல்வைத்துப் படுத்துக்கொண்டான். பகல்திருடன் அந்த ஸர்தார் வைத்துக்கொண்டிருக்கும் வேசையைப்போல் வேஷம்போட்டுச்சுடுகாட்டுப் பக்கம் வந்தான். காவல்காரர்கள் கேள்வியொன்றும் கேட்காமல் அவனை உள்ளே விடுத்தார்கள். டேராவுக்குள் வந்ததும் பகல்திருடன் நாலா பக்கமும் சுற்றிப் பார்த்துவிட்டுக் கட்டிலண்டையில் போய் உட்கார்ந்து, "காதலா, நல்ல தூக்கமா?" என்று ஸர்தாரைத் தட்டியெழுப்பினான். ஸர்தார் எழுந்து, "ஏன் இங்கே வந்தாய், துஷ்டை?" என்று ஓரடி அடித்தான்.

அடி விழுந்ததும் பகல்திருடன் "உன்னைக் காதலித்து எவ்வளவோ அபேக்ஷையுடன் மானத்தைக்கூடப் பார்க்காமல் இங்கே வந்ததற்கு நல்ல பலன் கிடைத்தது. என்னைப் பரிவுடன் அழைப்பதற்குப் பதிலாக என்னை அடித்து என் முக்தா ஹாரத்தை அறுத்துப் போட்டாயே. இது உனக்குத் தருமமாகுமா?" என்று சொல்லிக்கொண்டே, கீழே குனிந்து முத்துக்களைத் தேடும் பாவனையாக அஸ்திகளையெல்லாம் பொறுக்கியெடுத்துக்கொண்டு முணுமுணுத்தபடியே வெளியே வந்துவிட்டான். வழியில் வேஷத்தைக் களைந்துவிட்டு வீடுபோய்ச் சேர்ந்தான். மறுநாள் உதயம் ஸர்தார் ராஜாஸபைக்குப் போகும்போது ராத்திரி தான் அடித்துத்துரத்திய தன் தாஸியிடம் மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று வழியிலுள்ள தன் வேசை வீட்டுக்குள் நுழைந்து, "உன்னை ராத்திரி ஏதோ அவஸரப்பட்டு அடித்துவிட்டேன்; அதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டாம்" என்று ப்ரார்த்தித்தான். அதைக்கேட்டு அந்த விலைமாது, "இது என்ன விந்தை!" என்று ஆச்சர்யப்பட, ஸர்தார் தான் மோசம்போனதை அறிந்து முகம் வெளுத்தான். பிறகு மனோவேதனையுடன் ராஜஸமுகம் சென்றான். ராஜா கட்டளைப்படித் திருடனைப் பிடிக்கப்போன இடத்தில் கூட (அதுவும் சுடுகாடு.) ஸர்தார், தன் தாஸியை அழைத்துவந்ததைக்கண்டு கோபமுற்ற சேவகர்களுள் ஒருவன், ஸர்தாருக்கு முன்னமே அரமனைசென்று ராஜாவிடம் ஸங்கதிகளையெல்லாம் சொல்லிவிட்டான். ஸர்தாரும் யதார்த்தத்தை வெளியிட்டான். ஸபையிலுள்ளோர் தாஸிவேஷந் தரித்துவந்தவன் திருடன்மகனே என்று தீர்மானித்தார்கள்.

மஹாராஜா மந்த்ரியைப் பார்த்து, "அந்தத் திருடனைப் பிடிப்பது இந்த ஸர்தார்களால் ஸாத்தியமான கார்யமன்று. நீதான் அத்தொழிலுக்குத் தகுந்தவன். உன்னால்தான் அக்கார்யம் ஆகவேண்டும் இன்றைக்கு. அவன் அந்த அஸ்தியை ஏரி, குளம் எதிலாவது போட்டுவிட்டுப்போக வருவான். அப்போது நீ ஜாக்ரதையாயிருந்து அவனைப் பிடித்துவரவேண்டும்" என்று ஆஞ்ஞை செய்தார். அதைக் கேட்டு மந்திரி, 'அப்படியே பிடித்துவருகிறேன்' எனச் சொல்லிப்போனான். மந்திரி ஒருபக்கமாய்ப் போகப் பகல் திருடனும் இன்னொரு பக்கமாய்த் தன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

உடனே மந்திரி சென்று ஒற்றர்களை விளித்து 'ஊரில் ஒரு குளத்தில்கூட மனிதர்களை இறங்கவொட்டாமல் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று ஏவினான். வீட்டுக்குச்சென்ற பகல்திருடன் தாயாரைப்பார்த்து, "இன்றையதினம் நீ பிச்சைக்காரிபோல் வேஷம் போட்டுக்கொண்டு யாராவது கேட்டால் பண்டாரமென்று சொல்லிக் கோயில் நடைவாவிக் கரையில் சமைத்துக் கொண்டிரு. நான் என் தகப்பனார் அஸ்தியை நன்றாய்ப் பொடிசெய்து ஜலத்தில் குழைத்து விபூதியைப்போல் உடம்பு முழுவதும் பூசிக்கொண்டு, பைத்யக்காரனைப்போல் கூச்சலிட்டுக் கொண்டு அவ்விடம் வந்து சற்றுநேரம் இருக்கு

மங்குமோடிக் கடைசியில் குளத்தில் விழுகிறேன். அப்போது, ஐயோ! மகனே! என்று அடித்துக்கொண்டு இலையில் போட்ட அன்னத்தை அங்கேயே வைத்துவிட்டு ஜலத்தண்டை வா. அதற்குள் காவற்காரர்கள் என்னைக் கரையிலிழுத்துப் போடுவார்கள். நான் அதிகமாய்க் களைத்தவனைப்போல் பாசாங்குசெய்கிறேன். அப்போது நீ 'அப்பா, சிறிது அன்னம் சாப்பிடு; களை தீரும்' என்று என்னைக் கூப்பிடு; அதற்குள் அந்த அன்னத்தையெல்லாம் காக்கைகள் சாப்பிட்டுவிடுமாதலால், காக்கையின் உச்சிஷ்டத்தை (எச்சிலை) எனக்குப் போடவருகிறாயா? என்று நான் உன்னை அடிக்கிறேன். நீ அடிபொறுதவளைப்போல் இங்கு மங்குமோடிக் கால்தவறியதுபோல் குளத்தில் விழுந்து கைவளையல்களைப் படிகளில் மோதியுடைத்துத் திருமங்கல்யத்தையும் அறுத்தெறிந்து நன்றாய் ஸ்நானஞ்செய்துவிடு. காவல்காரர்கள் வந்து உன்னையும் வெளியே எடுத்துப் பொடுவார்கள். பிற்பாடு நீ யொருவழியாகவும், நான் வேறு வழியாகவும் சென்று வீட்டை அடைவோம்" என்று சொன்னான். அதைக் கேட்டு ஸுகுணவதி அப்படியே செய்வதாக ஒத்துக்கொண்டாள். பிறகு தாயாரும் பிள்ளையும் ஏற்பாடு செய்துகொண்டபடியே எல்லாவற்றையும் நடத்தி முடித்தார்கள். அவர்களுக்கு யாதொரு விக்னமும் ஏற்படவில்லை. காவலர்களாவது மந்திரியாவது அவர்களைக் கண்டு எவ்வித ஸந்தேஹமும் படவில்லை. வீட்டுக்குப் போன பகல்திருடன் உடனே வேஷத்தை மாற்றி ராஜஸபைக்கேற்ற உடைதரித்து அரண்மனை சென்றான்.

மந்திரி ராஜஸமுகம் வந்து பிச்சைக்காரர்களைத் தவிர வேறெவரும் குளத்தண்டை வரவில்லையென்று அந்தப் பிச்சைக்காரர்களுடைய கதையை ராஜாவிடம் சொன்னான். அப்போது அரசன் "ஐயோ! பைத்தியக்காரா! அந்தப் பிச்சைக்காரனே திருடன் மகன். அந்த ஸ்திரீ திருடனுடைய மனைவி" என்று சொல்ல, எல்லோரும் வெண் தாமரையாய் முகம் வெளுத்தார்கள். பிறகு, அரசன் மேலே நடந்ததைப்பற்றி விசாரிப்பதில் பயனொன்றுமில்லையென்று தீர்ந்து, மேலே நடக்க வேண்டியதைப்பற்றி யோசித்து, 'அவன் தன்தகப்பனுடைய ஆத்மா த்ருப்தியடையும் பொருட்டாக ப்ராமணர்களுக்குத் தான தர்மங்கள் செய்வானாதலால், ஸம்பாவனை பெற்று வரும் ப்ராஹ்மணர்களை விசாரித்தால் அவனுடைய வீடு தெரியக்கூடும்' என்று சொல்ல, மந்திரி அப்படியே செய்கிறேன் என்று கூறிச் சேவகர்களைப்பார்த்து ஜாக்ரதையாயிருங்களென எச்சரித்தான்.

அன்றையதினம் காசியிலிருந்து வந்த நூறு ப்ராஹ்மணர்கள் அந்நகரில் ஒரு ஸத்திரத்திலிருந்தனர். அதைக் கேட்டுப் பகல் திருடன் அன்றிரவு அவர்களனைவரையும் மறுபடியும் தெரிந்துகொள்ள ஸாத்யப்படாத சந்து பொந்துகள் மார்க்கமாய்த் தன் வீட்டுக்கழைத்து வந்து ஸமஸ்த தானங்களையும் சிறப்பாய்ச் செய்து, அவர்களை அதிக ஸந்தோஷப்படுத்தி, எல்லாம் முடிந்தபிறகு, மறுபடியும் அந்த ப்ராஹ்மணர்களை வந்ததுபோலவே கண்டுகொள்ள முடியாத மூலைமுடுக்கு வழியாயெல்லாம் அழைத்துப்போய் ஸத்திரத்தில் சேர்த்துவிட்டான். அந்த விப்ரர்களுடைய வருகையை யெதிர்பார்த்துக்கொண்டு ஸத்ர வாயிலில் காத்திருந்த காவலாளிகள் அவர்களை ஸமாசாரம் விசாரிக்க, அதற்கு அவர்கள் ஒரு தனிகன் தன் பிதா ச்ராத்தார்த்தமாய்த் தங்களுக்குப் பெரிய பெரிய தானங்கள் செய்தானென்று சொன்னார்கள். அவர்கள் அத்தனிகன் வீட்டைக் காண்பிப்பீர்களா வென, அதற்கு அவர்கள் "அவன் எங்களைக் கோணல் மார்க்கமெல்லாம் அழைத்துப்போய் மறுபடியும் அவ்வாறே இங்கே கொண்டுவந்துவிட்டான். நாங்கள் இவ்வூருக்குப் புதியவர்கள். ஆதலால், நாங்கள் அந்தவீட்டை அடையாளம் கண்டுபிடிக்க முடியாது". சேவகர்கள் இவற்றையெல்லாம் மந்திரிக்குத் தெரிவித்தனர். உடனே அவன் நேரில் வந்து



ப்ராஹ்மணர்களைப் பார்த்து, "ஸ்வாமிகளே, ராஜா உங்களுக்கு ஏராளமான பொருள் கொடுப்பார்; சொல்லுங்கள்" எனக் கேட்டார். "யார் கேட்டாலென்ன? எவ்வளவு தனந்தான் வருவதாயிருந்தாலென்ன? தெரிந்தால்தானே சொல்ல முடியும்? தெரியாவிட்டால் என்ன செய்வது?".

மந்திரி வாயினின்று இவற்றையெல்லாம் கேட்டறிந்த அரசன், "நீங்கள் கையாலாகாதவர்கள். நான் போய்ப் பிடித்துக்கொண்டுவருகிறேன்" என்க் கூறிப் பட்டணத்துக்கு வெளியில் அன்றிரவு டேரா போட்டுக்கொண்டு, எண்ணிறந்த மெய்க்காப்பாளர்கள் சூழ, நவரத்ன கசிதமான கட்டிலின்மீது படுத்திருந்தான். இதையெல்லாம் உணர்ந்த பகல்திருடன், ராஜசேவகன்வேஷந்தரித்து அரசனண்டை சென்று, "மஹாராஜ், அந்தத் திருடன். நாலைந்து கூட்டாளிகளுடன் கொஞ்சதூரத்திலுள்ள ஏரிகரையின் பக்கமாய் ஒரு புதரில் ஒளிந்திருக்கிறான். தாங்கள் தத்க்ஷணமே புறப்பட்டுவந்தால், அவனைப் பிடித்துவிடலாம்" என்று சொன்னான். உடனே அரசன் எழுந்து ஒற்றர்கள், காவலர்களை உடன் அழைத்துக் கொண்டு வெகு துரிதமாய் நடந்து சென்றான். பகல்திருடன் சிறிது தூரம் அவர்களுடன் சென்று ஸரியான ஸமயம் பார்த்து அவர்களை ஏமாற்றிவிட்டு, வேறுவழியாய் அரசனது டேராவுக்குத் திரும்பிவந்து, கட்டிலினுடைய நான்கு பவழக்கால்களையும் உடைத்து எடுத்துக்கொண்டு கம்பிநீட்டினான். அரசன் போனவன் ஏரிகரையை யடைந்து புதரிலுள்ள மனிதர்களைப் பிடித்துக்கொண்டு விளக்கொளியில் வந்து பார்க்கும்போது, அவர்கள் தன் வீரர்களாயிருத்தலைக் கண்டு ஆச்சர்யமடைந்து, மறுபடி திரும்பிக் கூடாரத்துக்கு வந்து கட்டில் கால்களொடிந்து நிலத்தின்மேல் விழுந்து கிடப்பதைக் கண்டான். தன்னைக்கூட ஏமாற்றிவிட்ட அந்தத் திருடனைக் கண்டுபிடிப்பது மனுஷ்ய ப்ரயத்னத்தால் கூடாத காரியமென்றெண்ணி, தலைமேல் கைவைத்துக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பினான். இத்தனை மனிதர்களை ஏமாற்றித் தன் காரியத்தை ஸாதித்த அந்தத் திருடன் அல்பஸ்வல்பமானவனல்லனென்று துணிந்து, இனி அவனுடன் ஸ்நேஹஞ் செய்துகொண்டாலொழிய, தன் ராஜ்யம் நிலைநிற்காதெனப் பயந்து, அந்தத்திருடன் எவனோ அவன் நேரில் வந்தால், அவனுக்குத் தன் மகளை மணம்புரிவித்துப் பாதி ராஜ்யத்துக்குப் பட்டாபிஷேகம் செய்துவைப்பதாகப் பறையறைவித்தான்.

அதைக்கேட்டுப் பகல்திருடன் ராஜஸமுகஞ்சென்று, "நானே அந்தத் திருடன்" என்று ஒத்துக்கொண்டான். "ஆதி முதற்கொண்டு உன் வரலாற்றை எடுத்துரைக்கவேண்டும்" என்று அரசன் கூற, பகல்திருடன், அவற்றையெல்லாம் ஸாங்கோபாங்கமாய் எடுத்துச் சொன்னான். மஹாராஜா பகல்திருடனுடைய முகத்தில் ஜ்வலிக்கும் தேஜஸையும் அவனது முகக்களையையும்கண்டு த்ருப்தியடைந்து, தன் புத்திரியைக் கொடுத்துக் கல்யாணம் செய்வித்து, பாதி ராஜ்யமும் கொடுத்தான். பகல்திருடனும், தன் குலத்துத் தொழிலை விட்டுவிட்டு நீதியாய் ராஜ்யத்தைப் பரிபாலித்துக்கொண்டு, தன் மனைவியுடன் ஸுகமாய் வாழ்ந்திருந்தான். ஸுகுணவதியும் தன் மகனுக்கு வந்த பதவியைக் கண்டு ஆனந்தமடைந்து, அந்த ஆனந்தத்தில் பர்த்தா இறந்ததால் உண்டாகிய சோகத்தை மறந்திருந்தாள்.


## சீதை வனம்புகுந்த சரிதம்.

கம்பராமாயணத்தில் இறுதியிலிருப்பதும், உத்தமகவியாகிய ஒட்டக்கூத்தப் புலவர்பாடியருளிய உத்தர காண்டத்தில் உள்ளதுமான "சீதை வனம்புகு படலம்" என்னும் பாகத்தில் அடங்கிய சரித்திரத்தை எளியவசனநடையில் வெளியிடும் நூல்; ஒன்பது சுவைகளில் மிகுநலம்பெறுவிக்கும் கருணாரஸம் அல்லது சோகரஸத்தை உண்டாக்குவது.

விலை அணா 3. தபாற்செலவு வேறு.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
வேலூர். (தென்னிந்தியா.)

# Selections.

## விசேஷத்திரட்டு.

### HOW TO PREVENT COLD.

### ஜலதோஷத்தைத் தடுக்கும் வகை.

ஜலதோஷம் இன்னதென்று அதை விவரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை. ஸாதாரண ஜலதோஷம் சிறிது உண்டானதும், சிறுவர்களுடைய நாசியில் சளியென்னும் கபம் ஒழுகுவது முதலாக, தொண்டை வலியென்ன—மார்நோவென்ன—முகம் விம்மிச் சிரச்சூலை யேற்படுவதென்ன—அபரிமிதமான கபம் நெஞ்சில் தோய்ந்து ஜ்வரம் விருத்தியாவதென்ன இவை யிருகவுள்ள ஜலதோஷ ஸம்பந்தமான கோளாறுகளின் நிலைமைகள் அநேகமாய் எல்லோருக்கும் தெரிந்தவிஷயமேயாம். ஒரு ஜலதோஷத்தினால் ஏற்படும் தொண்டை வீக்கமும், தலைநோயும், இருமலும் பெரும்பாலும் எல்லா ஜனங்களாலும் வெகு ஸாமானியக் கோளாறுகளாகக் கருதப்பட்டுவந்தாலும், அக்கோளாறுகள் சற்றேறக்குறைய ஒட்டுவாரொட்டிகளென்று தற்காலத்திய ஆராய்ச்சிக்காரர்களால் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

"வெஸ்டர்ன் மெடிகல் டைம்ஸ்" என்கிற பத்திரிகையில் வெளியாயுள்ள ஒரு சிறிய வியாசத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

"ஜலதோஷம் என்பது ஒரு ஸாமானியமான வியாதியன்று; அது ஒரு குடும்பத்தில் ஒருவரிடம் பற்றியதானால், அக்குடும்பத்தில் அனைவரையும் கிரமமாகத் தாக்குவதையும் நாம் கண்டிருக்கிறோம்; சில ஸமயம் ஊர் முழுவதிலும், நகரம் அனைத்திலுங்கூட அது வேகமாகப் பரவித் தீங்கிழைப்பதுண்டு; இவ்வியாதி இளங்குழந்தைகளையும், வாலிபர்களையும், வயது சென்றவர்களையும், ஆண்களையும், பெண்களையும் பேதமின்றி வாதைசெய்யும் இயல்பினது; மனிதரைப் போல மிருகங்களையும் பீடிக்கும்; பள்ளிக்கூடங்களிலும் தொழிற்சாலைகளிலும், பண்டசாலைகளிலும் ஜலதோஷ ஸம்பந்தமான தொற்றுவியாதி விரைவாகப் பரவிவிடும். ஸாமானியமான அற்ப ஜலதோஷம் அபிந்யாஸ ஜ்வரமாக (Pnumonia) மாறி பிராணாபாயம் விளைவிப்பது எல்லா வைத்தியத் தொழிலாளிகளுக்கும் தெரிந்த விஷயமேயாம்".

தாடையின் உட்புற வீக்கங்கள்; தொண்டையிலுள்ள கிரந்திகளின் வீக்கங்கள், பல்நோய், காதுவலி, காதுகளில் சீ வடிதல்; ச்வாஸாசயக்கழலை, ஆம்வாதம் என்னும் கீல்வாயு, இருதயத்தைப்பற்றிய கோளாறுகள், உடலில் உத்ஸாகம் குன்றிப்போய் ஜீவசக்தி மந்தமாய்விடுதல் என்னும் இத்தீங்குகள் யாவும் ஜலதோஷமாகும் நீராவியந்திரத்தைப் பின்தொடர்ந்தோடும் வண்டித்தொடர் எனக்கூடிய பெருவாரி வியாதிகள். ஆகவே, ஜலதோஷத்தை ஸாமானியமானதாய் நினைத்து, அலக்ஷ்யஞ் செய்வது அபாயமாய் முடியும் என்பதை நினைப்பில் வைக்கவேண்டும்.

ஜலதோஷத்தைத் தடுப்பதற்கு முக்கியமாய், தேகத்தைத் தாக்கும் குளிர்ச்சி முதலியவற்றைத் தாங்கி,வெளியிருந்து உட்புகக்கூடிய தோஷங்களைத் தாக்கி நிற்பதற்குத் தகுந்தவாறு சரீரம் போதிய வன்மையைப் பெற்றிருக்க முதலில் கவனம் செலுத்தவேண்டும். அதாவது என்னவென்றால், சரீரமாகிற யந்திரத்தில் அடங்கிய எல்லாக் கருவிகளும் எப்பொழுதுமே ஒழுங்காக உழன்று அதனதன் வேலைகளைச் செய்துவரும்படி கவனிக்க வேண்டும். குறிப்பிட்ட நேரங்களில் சிறந்த போஷணையைத் தரக்கூடிய உணவை உட்கொள்ளுதல், போதியவளவு நன்கு நித்திரை செய்தல், தேஹதாதுக்கள் வீணில் சிதைவுறுவண்ணம் கவனித்தல், மலமூத்திராதிகளை உற்ற நேரங்களில் வெளியிடுதல், வீட்டுக்கு வெளியில் தினந்தோறும் சரியானபடி வியாயாமம் செய்தல், உடம்பு—வாய்—நாசி—கைகால்கள் முதலிய எல்லா அவயவங்களையும் நிர்மலமாக வைத்துக்கொள்ளுதல், வீடு—வாயில்களை முற்றிலும் அழுக்கில்லாமல் பரிசுத்தமாகச் செய்து அவற்றில் வஸித்துவருதல், வஸிக்கும் இடமும் உடுக்கும் உடைகளும் ஈரமில்லாமல் துர்நாற்றம் அணுகாமல் அவற்றைப் பாதுகாத்துவருதல் என்னும் இவையாவும் தேகாரோக்கியத்தை மிகவும் நல்ல ஸ்திதியில் வைத்துக் காப்பதற்கு இன்றியமையாதவைகள். சீதளமான காலங்களிலும், அத்தகைய பிரதேசங்களிலும் உஷ்ணத்தைக் காக்கும் உடைகள் அவசியமானவை.—வைத்தியகலாநிதி.

---

### SOME HINTS CONCERNING CHILDREN.

### குழந்தைகளைப்பற்றிய சில குறிப்புக்கள்.

சிசுக்கள் ஜனித்தவுடன் மலஜல த்வாரங்கள் சரியாயிருக்கின்றனவாவென்று பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், சிற்சில குழந்தைகளுக்கு இத்த்வாரங்கள் பிறக்கும்போது அடைப்பட்டு இருப்பதுண்டு. அப்படிக்கிருந்தால், உடனே அவைகளைச் சரியாக்க ஏற்பாடு செய்யவேண்டும். இல்லாவிட்டால், வயிறு ஊதி, பொருமிக் கெடுதி நேரிடும். சாதாரணமாய்க் குழந்தைகள் பிறந்து கொஞ்சநேரத்திற்குள் மலஜலம் கழியும். முதலில் கழியும் மலம் கறுப்பு நிறமுள்ளதாயிருக்கும். குழந்தைகளுக்கு அடிக்கடி நீர் கழிவதுடன், பொதுவாய் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று தரத்திற்குக் குறையாமல் மஞ்சள் நிறமுள்ள நெகிழ்ந்த மலம் கழியும். குழந்தைகளுக்கு மலச்சிக்கு வரும்படி இடங்கொடுக்கக்கூடாது. குழந்தைகளுக்கு மலம் சிக்கிவிட்டால், எளிதில் மாந்தவலிப்பு வந்துவிடும். இஃது அபாயமுள்ள வியாதி. ஆகையால், இது வராமல் தடுத்துக்கொள்வதே நல்லது. தாயார் சௌக்கியமாயிருந்து, குழந்தைக்குத் தேவையான பால் உடையவளாயிருந்தால், குழந்தைக்கு மலச்சிக்கு ஏற்படுவது துர்லபம். அப்படி ஏற்பட்டாலும், அதை எளிதில் நிவிருத்தி செய்துவிடலாம். பெரியவர்களைப்போலவே, குழந்தைகளும் சுத்தமான தண்ணீர் உட்கொள்ளுவது அவசியம். அடிக்கடி அதாவது பால் கொடுக்கும் நேரங்களுக்கு மத்தியில், சுத்த ஜலம் கொடுப்பது நல்லது. கொஞ்சம் வயதான குழந்தைகளுக்கு ஆரஞ்சிப்பழரசம் கொடிமுந்திரிப்பழ ரஸம் முதலியவை இடையிடையே கொடுக்கலாம். தாயின் பாலிலேயே குழந்தைகளின் மலத்தைக் கட்டுவதற்கு உதவி செய்கிற ஸத்தை ஈசுவரன் அமைத்திருக்கிறார். ஆகையால், தாய்மாரே தங்களுடைய குழந்தைகளுக்குப் பாலூட்டுவதுதான் கிரமம். தாய் அதிக நோயாளியாயிருந்தாலொழிய, தாய்ப்பாலை நிறுத்தி வேறு பால் கொடுக்கக்கூடாது. தாய்க்குப்போதுமான பால் ஏதாவது காரணத்தால் இல்லாவிட்டால், அதை விருத்தி செய்யவேண்டும், புஷ்டியான ஆகாரம் கொடுத்து, அது ஜீர்ணிக்கச்செய்துகொள்ளவேண்டும். பருத்திக்கொட்டையின் பால் (அல்லது பருத்திக்கொட்டையின் சத்தடங்கிய Lactogol என்னும் மருந்து) உதய சாயங்காலம் பசுவின் பாலுடன் கலந்து சாப்பிட்டால், தாய்க்குப் பாலுண்டாகும். குழந்தைகளுக்குப் பாலூட்டுவதற்கு அரைமணி நேரத்திற்கு முந்தியும் மேற்கூறிய மருந்தைச் சாப்பிடலாம். Malt extract கலந்த Codliver oil பால்விருத்தி செய்யப் பிரயோசனமுள்ளது. என்ன செய்தும், தாய்க்குப் பால் உண்டாகாவிட்டால், அல்லது தாய்க்கு நோயினால் பால் கொடுக்க முடியாவிட்டால், வேறு விதமான ஆகாரம் குழந்தைகளுக்குக் கொடுக்கும்படி ஏற்படுகிறது. இந்தக் கஷ்டம் ஏற்படும் குழந்தைகளுக்கு அநேக வியாதிகள் உண்டாகின்றன. இவைகளில் முக்கியமானவை: மாந்தம், வயிற்றுநோவு, புளிப்பு மலம், மலச்சிக்கு முதலியவை. இவைகள் வாராமல் காக்கும் ஆகாரத்தைக் குழந்தைகளுக்குக் கொடுப்பது அவசியம். குழந்தைகளுக்கு முதல் மாஸங்களில் ½ மணி நேரத்திற்கொருதரமும், பின்பு 2-மணிக்கொருதரமும், பின் 3-மணிக்கொருதரமும் ஆகாரம் கொடுப்பது கிரமம். இதனால் ஏற்படும் விசேஷ சிரமத்தை உத்தேசித்து, அப்போதைக்கப்போது அடிக்கடி குழந்தைகளுக்கு ஆகாரம் தயார் செய்யும் சிரமத்தைக் குறைக்க, அநேகம் நவீன ஆகாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இவையெல்லாம் தாய்ப்பாலுக்குச் சமானமானவையென்று கூறப்படுகின்றன. இவைகளெல்லாம் கொஞ்சம் வயதான குழந்தைகளின் சரீரங்களுக் கிணங்கினாலும், பிறந்து இரண்டொரு மாஸக் குழந்தைகளுக்குச் சரிப்படுகிறதில்லை. இந்த ஆகாரங்கள் தேவையாய்க் குழந்தைகளின் வயசுக்குத் தக்கபடி கிடைப்பதில் இருக்கிற சிரமத்தை உத்தேசித்து, அதிபாலியக் குழந்தைகளுக்கு இயற்கையாயுள்ள பால் கொடுப்பதே சிலாக்கியம். இரஸாயன சாஸ்திரப்படி ஆராய்ந்து பார்த்ததில், ஸ்திரீயின் பாலுக்கு அநேகமாய் ஒப்பிடக்கூடியது கழுதையின் பால் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் சௌகரியமுள்ளவர்கள் புதிதாய்க் குட்டிபோட்ட கழுதையை நன்றாய்க் குளிப்பாட்டி வீட்டில் வைத்து நல்ல உணவு கொடுத்துவந்து, அதன் பாலைக் கறந்து குழந்தைகளுக்குக் கொடுத்தால் மிகவும் நல்லது. இது முடியாவிடின், சாதாரணமாய்க் கிடைக்கக்கூடிய பசுவின் பாலைத்தான் கொடுக்கவேண்டும். ஆனால், குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் பசுக்களுக்குப் பிண்ணாக்கு முதலிய கொழுப்புள்ள ஆகாரம் கொடுக்கக்கூடாது. புல், வைக்கோல், பருத்திக்கொட்டை, தவிடு இவைகளே போடவேண்டும். பசுவின் பாலைக் காய்ச்சி ஆடையை எடுத்துவிட்டு வயசுக்குத்தகுந்தபடி சரிபங்கு, அல்லது இரண்டுபங்கு வெந்நீர் கலந்து கொஞ்சம் சீனி சேர்த்துக் கொடுக்க வேண்டும். ஏதாவது ஓர் ஆகாரம் குழந்தையின் வயிற்றுக்குத் தக்கபடி கொடுக்கிறதென்று தீர்மானித்த பிறகு, அதை எப்படிக் கொடுப்பது என்ற கேள்வி உண்டாகிறது. இந்நாளில் பால்கொடுக்கும் புட்டிகளும், அவற்றிற்கு ரப்பர் காம்புகளும் ஸகாயமாய் விற்கின்றன. ஆகையால், அநேகர் இவைகளின் மூலமாய்க் குழந்தைகளுக்குப் பால் ஊட்டுகிறார்கள். மேலும், பால்பாட்டிலில், பாலை யடைத்துக் குழந்தையைச் சாப்பிடவிட்டுவிட்டு, தங்கள் வேலையைப் பார்க்கச் சௌகரியமிருக்கிறதென்று நினைக்கிறார்கள். இப்படி

பால் கொடுப்பதில் அநேகம் கெடுதல்கள் இருக்கின்றன. எவ்வளவு சுத்தம் செய்தாலும், இந்தப் பாட்டில்களையும் ரப்பர்களையும் இருக்கவேண்டிய அளவு சுத்தமாய்வைத்துக்கொள்ளுவது வெகுவாய் அசாத்தியமென்றே சொல்லலாம். பாட்டிலின் சுத்தக்குறைவால் அநேக வயிற்றுவியாதிகள் உண்டாகின்றன. ரப்பரைச் சப்புவதனால் சில பல்வியாதிகள் உண்டாகின்றன. இவ்விஷயங்களில் வெகுகால அனுபவமுள்ள ஐரோப்பிய வைத்தியநிபுணர்கள், மூடியுள்ள பெட்டிகளையும் ரப்பர் காம்புகளையும் உபயோகிக்கக் கூடாதென்ற அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்கள். உலோகத்தினால் செய்த திறந்த மூக்குள்ள பாலடைகளே சிலாக்கியமென்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள். ஆகவே, நம்முடைய முன்னோர்கள் உபயோகித்துவந்த வெள்ளி வெண்கலப் பாலடைகளே சிலாக்கியம் என்று தெரிகிறது. ஒவ்வொரு விஷயத்தையும் கவனித்தால், இப்படித்தான் ஏற்படுகிறது. இது நம்முடைய வாலிபர்கள் கவனிக்கத்தக்கது. உலோகத்தால் செய்த பாலடைகளை நெருப்பில் காய்ச்சலாம். அப்படிச் செய்வதனால் எல்லாவிதக் களங்கங்களும் நசித்துப் பாலடை சுத்தமாய்விடும்; இப்படிச் சுத்தம்செய்வது எளிது. எவ்வளவு ஜாக்கிரதையோடிருந்தாலும், எவ்விதம் பாலடைகள் உபயோகித்தாலும், எந்த ஆகாரத்தைக் கொடுத்தாலும், தாய்ப்பால் மாத்திரமே சாப்பிட்டுவந்தாலுங்கூட, குழந்தைகளுக்கு மலச்சிக்கு ஏற்படுவது சகஜம். ஆகையால், ஸாதாரணமாய் ஒரு நாளைக்கு இரண்டுமூன்று தரம் மலம் கிரமப்படி கழிந்தாலொழிய, ஏதாவது மருந்து கொடுக்கவேண்டியது அவசியமாகிறது. இதற்கு, தினந்தினமோ, ஒருநாள் விட்டொருநாளோ, வாரத்துக்கு இரண்டு தடவையோ அவசியம் ஏற்படுகிறது போல, காலையில் கொஞ்சம் ஆமணக்கெண்ணெய் கொடுத்துவரும் வழக்கம் நல்லதென்று நிதானிக்கத் தக்கதாயிருக்கின்றது. ஆமணக்கெண்ணெய் கொடுப்பதனால், பின்பு மலச்சிக்கு ஏற்படுகிறபடியால் அதை வழக்கமாய்க் கொடுக்கக்கூடாதென்று சிலர் ஆக்ஷேபிப்பதுண்டு. இதை நாம் ஒப்புக்கொள்ளவில்லை; ஆமணக்கெண்ணெய் அடிக்கடி கொடுப்பதால் ஏற்படுகிற கெடுதலைவிட அதை உபயோகியாமல் உண்டாகிற கெடுதல்கள் அதிகம் என்று தீர்மானமாய்ச் சொல்லலாம். ஒரு மாஸத்திற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு ஆமணக்கெண்ணெய் கொடுத்துவருவதுடன், அத்திப்பழ ஷர்பத், ஆரஞ்சு ஷர்பத், முந்திரிப்பழ ரஸம் இவைகளைக் கொடுப்பது நல்லது. பாரம்பரிய வழக்கத்தால் சில குழந்தைகளுக்கு மலச்சிக்கு ஏற்படும். இந்தச் சிக்குக்களுக்கு மேற்சொல்லிய சிகித்சைகள் தவிர, தினம் இரண்டுதரம் (உதய சாயங்காலம்) வயிற்றை லேசாய் அமுக்கவாவது, பிசையவாவது, விரல் நுனிகளால் குத்தவாவது செய்வது பிரயோசனப்படும். இப்படி 5 நிமிஷம் முதல் 15 நிமிஷம் வரை செய்யவேண்டும்: பிரதக்ஷிணமாய், அதாவது கடியாரத்தின் கை போவது போல் செய்யவேண்டும். இதைச் செய்யும் விதம் தெரிந்தவர்களிடத்தில் எளிதில் கற்றுக்கொள்ளலாம். இப்படிச் செய்வதனால், வயிற்றின் நரம்புகள் தசைகளெல்லாம் பலமடைந்து மலச்சிக்கு நிவிருத்தியாய் விடுகிறது. ஒருவயசுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மலச்சிக்குண்டானால், தேன், நெய், வாழைப்பழம், மேற்சொல்லிய பழ ரஸங்கள், ஷர்பத்துகள் முதலியவற்றை உபயோகிப்பதுடன், ரஸமுதலியவை கலவாத கஸ்தூரி முதலியவை கலந்துள்ள மாத்திரைகளை வைத்தியர்களிடமிருந்து வாங்கிவைத்து அவசியம்போல் உபயோகிக்கலாம். மற்ற மருந்துகளையும் சிகித்ஸைகளையும் வைத்தியர்கள் அனுமதியின்றி உபயோகிக்கக் கூடாது.—தமிழர் நேசன்.

---

## TUBERCULOSIS OF CATTLE.

### மாடுகளுக்கு வரும் க்ஷயம்.

ட்யூபர்குலாஸிஸ் என்று சொல்லப்பட்ட க்ஷயம் அல்லது எலும்புருக்கி நோய் எல்லாவகை மிருகங்களுக்கும், மனிதர்களுக்கும் பக்ஷிகளுக்கும் வரக்கூடிய ஒரு தொற்றுவியாதி. ஆனால் வெள்ளாடு, செம்மறியாடுகளுக்கு வருவது அபூர்வம். இந்த வியாதி நமது தேசத்தில் கால்நடைகளுக்கு ஸகஜமல்லவென்றாலும், கட்டிப்போட்டிருக்கும் மாட்டுமந்தைகளில் இந்த வியாதி வந்ததுண்டு. முக்கியமாக கறவை மாடுகளுக்குத்தான் இது அதிகமாக வருகிறது. பட்டணங்களில் மாடுகளை ஸுகாதாரமில்லாத கொட்டில்களில் கட்டி வருவதால், அவைகளின்மூலமாக க்ஷயரோகம் பரவக்கூடும். இதனால் மாடுகளுக்குள்மாத்திரம் க்ஷயரோகம் பரவி, அவைகள் இறக்குமென்பதில்லை; நோய்ப்பட்ட மாடுகளிலிருந்து கிடைக்கும் பால்மூலமாக மனிதர்களிடமும் இந்த வியாதி பரவக்கூடும். இந்த வியாதியானது நோயடைந்த மிருகங்களின் மலஜலங்களிலும் மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் வெளிவரும் திரவங்களிலும் உள்ள ஒருவகை கிருமியால் உண்டாகிறது. இந்த கிருமி கொட்டில்களிலுள்ள அசுத்தங்களிலும், புல், வைக்கோல் முதலிய தீவனப் பொருள்களிலும், ஜலத்திலும் சேர்ந்துகொண்டு வியாதியைப் பரவச் செய்கின்றன. கிருமிகள் காற்றோடு சேர்ந்துகொண்டும் வியாதியைப் பரவச்செய்யும். வியாதிக்கிருமிகளுள்ள



காற்றை சுவாஸிப்பதனாலும், அவைகள் சேர்ந்துள்ள தீனி, ஜலம் இவற்றை உட்கொள்ளுவதனாலும், வியாதிக்கிருமிகள் ரத்தத்தில் சேருவதனாலும், மாடுகள் பொலிவதனாலும் வியாதி பரவும். வியாதி பரவுவதற்கு ஈரமும் குளிர்ச்சியும் ஸுகாதாரக்குறைவும் ஸாதகமாக இருக்கின்றன. வியாதிக்கிருமி தேகத்தில் சேர்ந்து வியாதி வெளிப்படையாகத் தோன்ற 10-நாள் முதல் பலவாரங்கள் வரையில் செல்லும்.

### வியாதியின் அறிகுறிகள்.

கால்நடைகளுக்கு வரும் இந்த வியாதியின் அறிகுறிகள் பின்வருவனவாகும்:— அநேகமாக மாடுகளின் நுரையீரல்தான் முக்கியமாகப் பாதகமடையும். முதலில் வெளிப்படையாகத் தெரியும் அறிகுறி என்னவென்றால், மிகவும் பலஹீனமாகச் சிறு இருமல் இருமுவதாகும். மாடு வேலைசெய்து ஜலம் குடித்தபிறகு இருமல் கடுமையாக இருக்கும். மாடு மூச்சுவிடமுடியாமல் கஷ்டப்படும். இரைப்பையிலும் குடலிலும் வாயு நிரம்பியிருக்கும். உடம்பு மிகவும் இளைத்துப் போகும். கண்கள் குழிந்துபோகும். பிறகு மாடு அடிக்கடி இரும ஆரம்பிக்கும். மூச்சு விடுவது இன்னும் கஷ்டமாகும்: பிறகு இந்த வியாதி ந்யூமோனியா என்னும் நோயாக மாறி மாடு இறந்துபோகும்.

க்ஷயரோகத்தில் குடல் கெடுதலடையக்கூடும். அப்போது அடிவயிற்றில் நோவு இருப்பதாகத் தெரியும். பிறகு அதிஸாரம் உண்டாகி, மாடு நாளுக்குநாள் இளைத்துப்போகும். மாட்டின் மடியும் கெடுதலடைவதுண்டு. அது முழுவதுமோ அல்லது அதன் ஒரு பாகமோ வீக்கமடையும். வீங்கின பாகம் கெட்டியாகவும் வலியில்லாமலும் இருக்கும். முதலில் பால் ஜலம் கலந்ததாக இருக்கும்; பிறகு மஞ்சளாகவும் குறைவாகவும் போகும். மாட்டின் மூளை கெட்டுப்போயிருந்தால், விசேஷ மனக்கிளர்ச்சியும், பார்வைக் குறைவும், வலிப்பும் உண்டாகலாம். மாட்டின் எலும்புகளும், மூட்டுகளும் கெடுதலடைவதுண்டு.

ஸாதாரணமாக சோதித்துப் பார்ப்பதனாலேயே வியாதி இருப்பதும் இல்லாததும் தெரிவது கஷ்டம். கால்நடை வைத்தியர்கள் ட்யூபர்குலின் என்னும் மருந்தை இன்ஜெக்ட் செய்து வியாதி உண்டா இல்லையா என்று கண்டுபிடித்துவிடுவார்கள். வியாதி இல்லையானால், மருந்து இன்ஜெக்ட் செய்வதால் மாட்டுக்குக் கெடுதி ஒன்றும் ஏற்படாது. வியாதி இருந்தாலோ அந்த மருந்து சில கோளாறுகளை உண்டாக்கிவிடும்.

### சிகித்ஸை.

இந்த வியாதிக்குச் சிகித்ஸை செய்வதிற் பிரயோஜனமில்லை. வியாதியானது அநேகமாய் ஸ்வஸ்தமாவதில்லை. மேலும், அவைகளால் இதர மாடுகளுக்கும் மனிதர்களுக்கும் இந்த வியாதி பரவக்கூடுமாகையால், வியாதி இருப்பது தெரிந்தவுடனே மாடுகளை ஒழித்துவிடுவது நல்லது என்று சொல்லப்படுகின்றது.

### வியாதி வராமல் தடுத்தல்.

வியாதி உள்ள மிருகங்களையெல்லாம் தனியாக அப்புறப்படுத்தவேணும். வியாதி உண்டென்று ஸந்தேகித்த மாடுகளின் தேகத்தில் டுபேர்குலின் என்னும் மருந்தை இஞ்செக்ட்செய்து, வியாதி உண்டா இல்லையா என்று நிச்சயம் செய்துகொள்ள வேண்டும். எந்தப் பிரதேசத்திலாவது இந்த க்ஷயரோகம் தோன்றினால், தக்க வைத்தியர்களின் உதவியைக்கொண்டு இதைப் பரவவிடாமல் செய்யவேண்டும். கொட்டில்களை நல்ல காற்றோட்டமும் சுத்தமுமுள்ளவையாக வைத்து, மாடுகளின் ஸுகாதாரத்துக்குக் குறைவில்லாதபடி பார்த்துவந்தால், வியாதியைத் தடுப்பது சுலபமாகும். அதோடு, வியாதியுள்ள மாடு கொட்டில்களுக்குள் வாராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.—ஜனோபகாரி.

---

## GOOD ADVICE.

### நற்போதனை.

1. மன உற்சாக முள்ளவனே மன்னவன்.

2. பணம் என்பது நல்ல வேலைக்காரன்; ஆனால் கெட்ட யஜமானன்.

3. அதிகம் படி; அநேகவற்றைப் படியாதே.

4. பட்டினியாய்ப் படுத்துறங்கு; கடன்காரனாய்த் துயிலெழாதே.

5. முகத்தையும் வெளித் தோற்றத்தையும் கொண்டு ஒரு மனிதனை மதிப்பது, மேலட்டையைக் கொண்டு ஒரு புஸ்தகத்தின் யோக்கியதையை மதிப்பிடுவது போலாகும்.

6 அதிகாரமும் அந்தஸ்துமுள்ள ஒருவனுக்கு இனாம் கொடுப்பது வண்மையல்ல, வியாபாரமே.

7 மன ஸந்தோஷத்தை விளைக்கும் கருவிகளில் புஸ்தகங்களே முதலாவன; ஒரு நண்பனைப் போலாது, புஸ்தகங்கள், நம்முடைய சௌகரியத்தையும் சாவகாசத்தையும் எதிர்பார்த்துக் காத்திருக்கும்.

8. பாலியத்தில் பவுன்களைக்கொண்டு விளையாடுபவன் வயோதிகத்தில் பைசாக்களுக்குப் பிச்சை எடுப்பான்.—தமிழர் நேசன்.

# The Progress of the world.

## பிரபஞ்சப் போக்கு.

**இந்தியாவின் தோல் வியாபாரம்.**

இந்த மகா யுத்தத்திற்கு முன்னே இந்தியாவின் தோல் வியாபாரமானது பெரும்பாலும் ஜெர்மானியரிடமே இருந்தது. அவர்களே இந்த வியாபாரத்தை ஏகபோகமாய் ஆண்டு அனுபவித்து வந்தார்கள். இனி, இந்த வியாபாரத்தில் யார் ஆதிக்கியம் பெறுவார்களென்பது பிறகுதான் தெரியவேண்டும். எனினும், இப்போதே இங்கிலாந்தில் பல வியாபாரிகள் அவ்வியாபாரத்தில் கண்வைத்திருக்கிறார்களென்று தெரிகின்றது. ஸமீபத்திலே லண்டனில் சில வியாபாரிகளின் கூட்டமொன்று கூட்டப்பட்டது. அப்போது ஸர் ஹென்றி லெட்கார்டு என்பவர், ப்ரிட்டிஷ் வியாபாரிகளுக்கே இந்த வியாபாரத்தில் ஏகபோக அனுபவமிருக்கவேண்டுமென்று கூறினார். இந்தியாவிலே ஏராளமாகக் கிடைக்கும் தோல்களின் வியாபாரமானது இந்தியர்களுக்கே இருக்கவேண்டுமென்பதை அவர் சற்றும் கவனிக்கவில்லை. ஆகையால், இந்தியாவின் தோல் வியாபாரத்தை ஏகபோகமாய் ஆண்டு அனுபவிக்க இங்கிலாந்தில் பலர் கண்ணுங்கருத்துமாய் இருக்கிறார்களென்பதை இந்தியர்கள் உணர்ந்து, பிறகு கவனிப்போமென்றிராமல் தக்கது செய்யக் கோருகிறோம்.

**கூலிப்படையில் இந்தியரின் சம்பளம்.**

ப்ரான்ஸில், பற்பல தேசங்களினின்றும் திரட்டப்பட்ட கூலிப்படையினர் வேலைசெய்து வருகின்றனர். இந்தியர்களடங்கிய கூலிப்படையும் அங்கே இருக்கின்றது. அக்கூலிப் படைகளில் ஒவ்வொரு ஜாதியினரின் சம்பளம் என்னவென்று பார்லிமெண்டில் ஒரு கேள்வி பிறந்தது. அப்போது கிடைத்த பதிலில் சொல்லியுள்ளபடி அந்தந்த ஜாதியினருக்குக் கிடைக்கும் தினச்சம்பளம் வருமாறு:—

| | | | | |
|---|---|---|---|---|
| ப்ரிட்டிஷ் கூலிப்படை ஆளுக்கு | ரூ. | 2 | 15 | 0 |
| தென் ஆப்பிரிகா வாசி | ,, | 1 | 14 | 0 |
| ஈஜிப்ட் தேசத்தவன் | ,, | 1 | 4 | 0 |
| சீன தேசத்தவன் | ,, | 1 | 0 | 0 |
| பீஜித்தீவு வாசி | ,, | 0 | 12 | 0 |
| இந்தியன் | ,, | 0 | 11 | 0 |

மேலே குறிப்பிட்டிருக்கும் புள்ளிகளைப் பார்த்தால், இந்தியருக்கே மிகவும் குறைவான சம்பளமெனத் தெரியவரும். இவ்வித வித்தியாசம் ஏன்? மற்றவர்களுக்குள் இந்தியர்கள் எந்த அம்சத்தில் குறைந்தவர்கள் என்பதை நாம் அறிய விரும்புகிறோம்.

**டாடாவின் கைத்தொழில்பாங்கி.**

சாஸ்திரிய அபிவிருத்திக்காகவும், தொழில் அபிவிருத்திக்காகவும் கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்துத் தேச முற்போக்குக் கென்றே உழைத்துவரும் நமது ஜேம்ஸெட்ஜி நஸ்ஸர்வான்ஜி டாடாவைப் பலரும் அறிவர். இவர் இத்தேசத்தில் பல பெரிய பெரிய தொழில்களைக் கோடிக்கணக்கான மூலதனத்தைக் கொண்டு நடத்திவருகிறார். கைத்தொழில் அபிவிருத்திக்குப் பணமே பிரதானமாதலால், கைத்தொழில் பாங்கி ஒன்று மிகவும் அவசியமென இவர் கருதி, "டாடா கைத்தொழில் பாங்கி" என்று ஸ்தாபனமொன்றை ஸ்தாபிக்கலானார். இது பம்பாயில் இந்தியக் கம்பெனி சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலதனம் 12 கோடி ரூபாய். பங்குகளுள் பல லண்டனிலுள்ள சில பெரிய பணக்காரர்களால் எடுத்துக்கொள்ளப்படுமென்று சொல்லப்படுகின்றது.

ஜெர்மனியானது பலதுறைகளிலும் இவ்வளவு முற்போக்கடைந்திருப்பது அதன் கைத்தொழில்களுக்கும் வியாபாரங்களுக்கும்போதுமானவளவு சௌகரியங்கள் செய்துகொடுத்திருப்பதேயாம். அங்குத் தொழில்களை நன்கு



ஆதரிக்கப் பலவிடங்களிலும் கைத்தொழில் பாங்கிகள் போன்ற ஸ்தாபனங்கள் பல ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறே இங்கிலாந்திலும் ப்ரான்ஸிலும் ஏற்கெனவே உள்ள தொழில்களோடு இன்னும் பல புதியனவற்றையும் ஸ்தாபிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. புதிய தொழில்களுக்கு உதவி செய்வதற்காக ஏராளமான மூலதனத்தைக்கொண்டு தொழில் பாங்கிகளை ஏற்படுத்தி, தேசமுழுவதிலும் கிளை ஸ்தாபனங்களையும் ஸ்தாபித்திருக்கிறார்கள்.

ஏராளமாகச் செல்வத்தையுடைய இங்கிலாந்து பிரான்ஸ் முதலான தேசங்களிலேயே தொழில் பாங்கிகளின் தேவை இவ்வாறு உணரப்படும்போது, பொருளாதார விஷயத்தில் மிகவும் தாழ்ந்த ஸ்திதியிலுள்ளதாய், ஸகல விஷயங்களுக்கும் பிறநாடுகளையே எதிர்பார்த்து இருக்கின்ற இந்தியாவில் அவ்வித உணர்ச்சி எவ்வளவு இருக்கவேண்டுமென்பதை நாம் இங்குக்கூறவேண்டியதில்லை. இந்தியாவில் தொழில் செய்யப்படுவதற்குத் தேவையான இயற்கைப் பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. இவையெல்லாம் இத்தேசத்திலேயே தொழில் செய்யப்படாமல் ஒவ்வொரு வருஷமும் பிறநாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அங்கு அவை கைத்தொழில் செய்யப்பட்டு மீண்டும் இங்கு இறக்குமதி செய்யப்படுவதால், நாம் எவ்வளவு நஷ்டத்திற்குள்ளாகிறோமென்பதைப் பலரும் ஆழ்ந்து யோசிக்கவேண்டும்.


ஜே. என். டாடா.

இதுவரை இந்தியாவில் சில சிறுதொழில்களுக்குப் பண உதவிசெய்ய ஸெண்ட்ரல் அர்பன் பாங்கி போன்ற கூட்டுறவு ஸ்தாபனங்கள் இருந்தனவேயன்றி, லட்சக் கணக்காய்ப் பண உதவிசெய்ய இண்டஸ்டிரியல் பாங்கிபோன்ற ஸ்தாபனங்கள் இருந்ததில்லை. மேற்படி கைத்தொழிற் பாங்கியை ஸர். வில்லியம் மேயர் திறந்து வைக்கும்போது, "இந்தியாவின் கைத்தொழில் அபிவிருத்தியில் நம் எல்லோருக்கும் சிரத்தையுண்டு. தொழில்கள் அபிவிருத்தியடைவதற்கு பாங்கிகள் மிகவும் அவசியம். இந்த பாங்கியானது சாதாரண பாங்கியைப்போலிருந்தால், யாதொரு பிரயோஜனத்தையும் நாம் எதிர்பார்க்க முடியாது: பெரிய தொழில் முயற்சிகளுக்குப் பணம் கொடுத்து உதவவேண்டும். போட்ட மூலதனத்திற்கு உடனே பிரதி பிரயோஜனத்தை நாம் எதிர்பார்க்கக்கூடாது. பொறுமையோடிருந்து தொழில்களைச் சிறப்பாக நடத்திவந்தால், அவற்றிற்கு அபிவிருத்தி ஏற்படாமற் போகாது. இந்த பாங்கியானது மற்ற பாங்கிகளோடு போட்டி போடுவதற்கு ஸ்தாபிக்கப்பட்டதன்று. இதன் மூலதனம் பெரும்பாலும் இந்தியர்களிடமிருந்தே வசூலிக்கப்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பெரு முயற்சிக்கு டாடா கம்பெனியாரின் கியாதியும் ஊக்கமுமே முக்கிய காரணமென்பதையும், கவர்ன்மெண்டின் உதவியின்றியே இது ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது என்பதையும் கேட்டு நான் சந்தோஷிக்கிறேன்" என்று பேசினார். இந்த பாங்கியின் மூலதனத்திற்காக இதுவரை வசூலிக்கப்பட்டிருப்பது எழுபது லட்சம்

ரூபாய். பங்குக்காரர்களின் ரிஸர்வ் கடன்கள் ஆறுகோடி. இந்த பாங்கின் டைரெக்டர் போர்டில் பின்கண்டவர்கள் சேர்ந்திருக்கிறார்கள்: ஸர் டொராப்ஜே டாடா (சேர்மன்). ஸர் ஸஸூன் டேவிட், ஆர். என். முக்கர்ஜி, ஸர் ப்ரான்ஸிஸ் ஸ்டுவர்ட், ஸர் ஸ்டான்லி ரீட், ஆனரபிள் மிஸ்டர் புருஷோத்தம்தாஸ் தாகூர் தாஸ், மெஸ்ஸர்ஸ் R. D. டாடா, F. E. தின்ஷா, F. C. ரிம்மிங்டன், நாரடம் மோர்ஜி, ஹாஜி குலாம் முகம்மது ஆஸம், ஏ. ஜே. பில்லி மோரியா. இந்த பாங்கின் ஆக்டிங் ஜனரல் மானேஜராக மிஸ்டர் ஜாஸ் மக்பீல் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**புறங்கணிக்கப் பட்ட விஷயம்.**

பழமரஞ் செடிகளை வைத்து வளர்ப்பதும், காய்கறி பதார்த்தங்களை பயிர் செய்வதும் வியவசாயத்தில் முக்கியமான அம்சங்கள். இவற்றை வெகுவாக நமது தேசத்தவர்கள் அலக்ஷியம் செய்துவிட்டனர். இயற்கையாகவே நமது தேசத்தில் பழமரஞ் செடிகளையும் காய்கறி பதார்த்தங்களையும் பயிர் செய்வதற்குப் பல சௌகரியங்கள் உள்ளன. இத்தேசத்தில் பெரும்பாலாரும் காய்கறி சாப்பிடுபவர்களாகவிருந்தும், அத்துறைகளில் நம்மவர்கள் அலக்ஷியமாயிருப்பது மிகவும் ஆச்சரியமே. ஆனால், இவ்விஷயத்தில் அலக்ஷியமாயிருக்கக்கூடாதென மைசூர் சம்ஸ்தானவாசிகள் முன் வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் இவ்விஷயமாய்ச் செய்திருக்கும் ஏற்பாடுகளைப்பற்றி "கூட்டுத்தொழில் வர்த்தமானி" எழுதுவதாவது:—

மைசூர் ஸம்ஸ்தானத்திலுள்ள வியவசாயக் கமிடியார் மேற்கண்ட விஷயத்தில் சம்ஸ்தானமெங்கும் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளத் தலைப்பட்டிருக்கிறார்கள். பழமரஞ் செடிகொடி முதலிய பயிர்களில் கவனத்தைச் செலுத்துவதற்காக ஹார்டிகல்சரல் இன்ஸ்பெக்டர் என்று ஒருவர் அங்கே ஒரு ஜில்லாவில் சம்பளமின்றி வேலைபார்த்து வருகிறார். இதர ஜில்லாக்களிலே அத்தகைய ஸப் இன்ஸ்பெக்டர்கள் சம்பளம் பெற்று வேலை பார்த்து வருகிறார்கள். பழமரஞ்செடிகொடிகளை வைத்து வளர்ப்பதன் பலன் என்னவென்பதை அவர்கள் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி, பழமரக்கன்றுகளைத் தேடிக்கொடுத்து அவைகளை நன்கு பாமரிக்கும் வகைகளையும் சுட்டிக்காட்டி வருகின்றனர். பழமரஞ் செடிகளைப் பயிரிடும் விதத்தைச் சொல்லிவைப்பதற்காக ஒரு வகுப்பை ஏற்படுத்தவேண்டுமென்று வியவசாயக் கமிடியார் சொன்னதன்மேல், அவ்வாறே ஒரு வகுப்பை கவர்ன்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவ்வகுப்பில் 12 மாணிட்டர்கள் கவர்ன்மெண்டிலிருந்து உபகாரச் சம்பளம் பெற்று பயிற்சியடைந்துவருகிறார்கள். ஆங்காங்குள்ள சபைகள் பழமரஞ் செடிகளை வைத்து வளர்க்க இஷ்டப்படின், அச்சபையாருக்கு மேற்படி வியவசாயக் கமிடியார் இனமாய்க் கன்று செடிகளைக் கொடுத்து உதவுவதோடு, ஒரு இன்ஸ்பெக்டரையும் கொடுத்து உதவுகிறார்கள். பழமரஞ் செடிக் கன்றுகளை உண்டுபண்ணுவதற்கான தோட்டங்களை ஏற்படுத்தவும் சமஸ்தான கவர்ன்மெண்டார் உத்தேசங்கொண்டிருக்கிறார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டிருப்பதைக் கவனித்தால், இவ்விஷயமாய் மைசூர் ஸம்ஸ்தானத்தில் எவ்வளவு முற்போக்கு ஏற்பட்டிருக்கின்றதென்பது நன்கு விளங்கும். இவற்றை நமது ஜனத்தலைவர்கள் கவனித்துத் தக்கது செய்வார்களென நம்புகிறோம்.

**சென்னை இராஜதானியில் கரும்பு சாகுபடி.**

சென்னை இராஜதானியில் 1917-18-ம் வருஷத்தில் 108,410 ஏக்கர் நிலங்களில் கரும்பு சாகுபடி செய்யப்படுமென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால், முந்திய வருஷத்தில் 95,770 ஏக்கர்களில்தான் கரும்பு சாகுபடி செய்யப்பட்டது. அதாவது: 100-க்கு 13 வீதம் இப்போது அதிகப்பட்டிருக்கின்றது. இம்வாறு அதிகப்பட்டது சாகுபடி காலத்தில் வெல்லத்திற்கிருந்த அதிக விலையேயென்று சொல்லப்படுகின்றது.


# ஜனோபகாரி.

**(JANOPAKARI)**

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.


4-JUN 1918


புஸ்தகம் 3. Vol. III. | காளயுக்தி ௵ சித்திரை ௴, APRIL 1918. | சஞ்சிகை 4. No. 4.



## JANOPAKARI.

A high class illustrated Tamil Monthly Review devoted mainly to social, Literary, Educational and Economic topics of interest.

Selections from important speeches and papers on Economic subjects; notes of the month on Economic matters.

The Editor's Notes are unique.

**Rates of Subscription (Post Free.)**

| | | Inland. | Foreign. |
|---|---|---|---|
| Per annum | Rs. | 3 0 0 | 4 8 0 |
| Single copy | ,, | 0 5 0 | 0 6 0 |
| Sample copy | ,, | 0 1 0 | 0 2 0 |

**Rates of Advertisement.**

| | | | |
|---|---|---|---|
| 1 page | Rs. | 8 0 0 | per month. |
| ½ ,, | ,, | 4 0 0 | ,, |
| ¼ ,, | ,, | 2 0 0 | ,, |

All orders for advertisement must accompany with advance.

**To Contributors**:—Contributions on subjects specified above will be received for publication. The articles should be written in plain colloquial Tamil with ink on one side of the paper only. Accepted articles will be paid for on publication. The copyright and right of translation of the articles paid belongs to us. Stamps should be enclosed for the return of rejected manuscripts.

All letters, contributions and remittances etc. should be addressed to the Proprietors:

V. N. SAMA RAO & Co.,
VELLORE, (SOUTH INDIA.)

## ஜனோபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்து வரும் பல சிறந்த சித்திரப்படங்கள் அடங்கிய ஓர் தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இதில் கல்வி, வியவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூட்டுறவு ஆகிய இவைகளைக்குறித்த பல விஷயங்களும், ஜனசமூகத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்களும், சிறந்த நீதிகளைப் போதிக்கவல்ல நாவல்களும், நாடகங்களும் மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்களும், நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்களும், ஸ்திரீகளுக்கும் சிறுவர்களுக்கும் உபயோகமான பல விஷயங்களும், சிறந்த கற்றறிந்தவர்களால் மிகவும் தெளிவான நடையில் எழுதப்பட்டு வருகின்றன.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

| | | உள்நாடு. | வெளிநாடு. |
|---|---|---|---|
| ஒரு வருஷத்திற்கு | ரூபா | 3—0—0 | 4—8—0 |
| தனிப்பிரதி | ,, | 0—5—0 | 0—6—0 |
| மாதிரிகாபி | ,, | 0—1—0 | 0—2—0 |

விளம்பர விகிதங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1-பக்கத்திற்கு | மாதம் 1-க்கு | ரூபா | 8—0—0 |
| ½ ,, | ,, | ,, | 4—0—0 |
| ¼ ,, | ,, | ,, | 2—0—0 |

வியாசமெழுதுவோர் கவனிக்கவேண்டியவை:—
வியாசம் எழுதுபவர்கள் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங்களைப்பற்றி எழுதலாம். ஒவ்வொரு வியாசமும் காகிதத்தின் ஒரே பக்கத்தில் அரைப்பாதியில் எழுதியிருத்தல்வேண்டும். கடினமான தமிழ் உதவாது. வியாசங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டால், பிரசுரமானதும் எழுதியவர்களுக்குத் தக்க சம்பாவனை செய்யப்படும். சம்பாவனை செய்திருக்கும் வியாசங்களின் காபிரைட் எங்களைச் சேர்ந்தது. ஒப்புக்கொள்ளப்படாத வியாசங்களைத் திரும்பவேண்டுவோர், தபால் ஸ்டாம்புகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லாக்கடிதங்களும், சந்தாபணம் முதலானவைகளும் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
வேலூர், (தென்னிந்தியா).

## Stamp Collecting.

By Mr. K. S. Ramaswamy B.A.

### தபால் முத்திரைகளைச் சேர்த்தல்.

"அப்பா! எனக்குப் புதிய காசு கொடு" என்று குழந்தைகள் தம் பெற்றோரைக் கேட்பது அனைவரும் அறிந்ததே. குழந்தைகளுக்குப் புதிய நாணயங்களே பளபளப்பாலும், சத்தத்தாலும் சிறந்தவையாகத் தோற்றுகின்றன. ஆனால், சற்று ஆழ்ந்து யோசித்தால், புதிய நாணயங்களைவிடப் பழையவைகளே மிகச் சிறந்தவையென நமக்குப் புலப்படும்; ஏனெனில், புதிய நாணயங்கள் நமக்கு எளிதில் கிடைக்கும்; பழைய நாணயங்கள் கிடைப்பது அரிது.

#### பழைய நாணயங்களின் பிரயோஜனம்.

பழைய நாணயங்கள் பொதுவாகச் செலாவணியான போதிலும், சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுக்கு அவை பலவிதங்களிலும் உபயோகப்படுகின்றன. பிற்காலத்தில் ஒரு தேசசரித்திரத்தை எழுதும் ஆசிரியர்களுக்கு நாணயங்கள் மிகவும் பயன்படும். நாணயங்களின் மீதுள்ள வருஷ முத்திரையினாலும், எழுத்துக்களாலும் ஓர்நாணயம் எந்தவருஷத்தில் எவர் காலத்தில் பதிப்பிக்கப்பட்டது என்பது நன்றாய் விளங்கும். இவ்விஷயம் சித்திரபடங்கள் அடங்கிய நல்ல தேசசரித்திரத்தை வாசித்தால் தெரியவரும்.

#### தபால்முத்திரை அல்லது ஸ்டாம்பு.

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கடிதம் அனுப்பப்படவேண்டுமானால், அதற்காக நாம் கட்டணம் கட்டவேண்டும். அந்தக் கட்டணம் கட்டியாயிற்று என்று தபாலாபீஸார் அறிவதற்காக, முத்திரைகளைக் கடிதங்களின் மீது ஒட்டுகிறோம். காலணா முதற்கொண்டு அதிகவிலைக்கு ஸ்டாம்புகள் விற்கப்படுகின்றன. முத்திரைகள் அநேகமாய் எல்லாம் ஒரே அளவாயிருந்தபோதிலும், வர்ணத்தினால் விலைகள் மாறுபடுகின்றன.

நாம் ஸாதாரணமாய் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அனுப்பும் கடிதத்திலோ, மூட்டையிலோ ஸ்டாம்புகள் ஒட்டுகிறோம். அவை, முதலில், எடுக்கப்படும் ஆபீஸிலும், கொடுக்கப்படும் ஆபீஸிலும் முத்திரைகளிடப் பெறுகின்றன. ஒரு தடவை முத்திரிக்கப்பட்ட பிறகு, ஸ்டாம்புகள் பிரயோஜனப்படாவென்பதை அனைவரும் அறிவர். அவை அநேகமாய்க் கிழித்து எறிந்துவிடப்படுகின்றன.

#### முத்திரைபெற்ற ஸ்டாம்புகளின் பயன்.

இந்த வியாசத்தின் ஆரம்பத்தில் நாணயங்களைப்பற்றிக் கூறினது ஸ்டாம்புகளுக்கும் ஒக்கும். ஸ்டாம்புகள் எந்த ராஜாங்கத்தாரின் காலத்தில் எத்தேசத்தில் பிரசுரிக்கப்படுகின்றனவோ அவைகளைப்பற்றி அந்த ஸ்டாம்புகளே தெரிவிக்கின்றன. ஆகவே, சரித்திர நூலாசிரியர்கள் ஸ்டாம்புகளைச் சேகரித்து வைக்கவேண்டியது அவசியமாகின்றது. ஸ்டாம்புகளில், அந்தந்தத் தேசங்களில் எவை முக்கியமோ—பறவையோ, மிருகமோ—அவை முத்திரிக்கப்பட்டிருக்கும். இவைகளைப் பார்ப்பதனாலேயே ஒரு தேசத்தைப்பற்றிப் பல விஷயங்களை அறிந்துகொள்ளலாம்.

#### சில உதாரணங்கள்.

நம் தேசத்தில் நமது சக்கரவர்த்தியவர்களுடைய திருவுருவம் முத்திரிக்கப்பட்டிருக்கின்றது. ப்ரான்ஸ் தேசத்தில் ஸ்வயஆட்சித் தேவதையின் உருவம் காணப்படுகின்றது. ஆஸ்டிரியா, ஜெர்மனி ஆகிய தேசங்களின் ஸ்டாம்புகளில் ஒருவகையான ராஜாளி காணப்படுகின்றது. சீனதேசத்தவைகளில் சில எழுத்துக்களும் சர்ப்பங்களும் தோன்றுகின்றன. எகிப்துதேசத்து ஸ்டாம்புகளில் பிரமிட்ஸ் என்னும் ஸ்தூபிகளும், போர்னியோ தீவில் முதலைகளும், தென்னைமரங்களும் காணப்படுகின்றன.



இன்னும் சில தேசங்களின் ஸ்டாம்புகளில் நீர்வீழ்ச்சிகளும், மலைச்சிகரங்களும் முத்திரிக்கப்பட்டிருக்கின்றன.

#### ஸ்டாம்பின் சரித்திரம்.

1840-ம் வருஷத்தில் ஆங்கில துரைத்தனத்தார் ஸ்டாம்புகளை உபயோகிக்க ஆரம்பித்தனர். காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரவர்களின் உருவம் கறுப்பு மையில் முதன்முதலில் முத்திரிக்கப்பட்டது. ஆனால், கறுப்பு மை ஸரியானதல்லவென்று விட்டுவிட்டு, அடுத்தவருஷம் முதற்கொண்டு ஸ்டாம்புகள் சிவப்புவர்ணங் கொண்டவையாய் வெளிவரலாயின. 1854-ம் வருஷத்தில் இந்தியாவில் ஸ்டாம்புகள் முதன்முதல் உபயோகிக்கப்பட்டன. அதுமுதற்கொண்டு ஸ்டாம்புகள் பல வர்ணங்களில் கோடிக்கணக்காய்ப் பிரசுரிக்கப்பட்டுவருகின்றன. ஆஸ்டிரியா தேசத்தவர்கள் முதன்முதல் 1869-ம் வருஷத்தில் கார்டுகளை உபயோகிக்க ஆரம்பித்தனர். பிறகு ஆங்கில துரைத்தனத்தார் 1870-ம் வருஷத்தில் அதைப் பின்பற்றினர்.

வேலையொழிந்தவர்களுக்கும் சரித்திர நூலாசிரியர்களுக்கும் பல வருஷைங்களுக்கு முன்னமேயே முத்திரைகளின் பிரயோஜனம் தெரியவந்தது. 1864-ம் வருஷத்தில் ஆங்கில ராஜ குடும்பத்தினர் சிலர் ஸ்டாம்புகளைச் சேர்க்கின்றனர் என்பது தெரிந்ததும், பலர் இத்தொழிலிலேயே அமர்ந்தனர். பழைய ஸ்டாம்புகளை வாங்கி விற்பதே ஓர் வியாபாரமாயிற்று. பழைய ஸ்டாம்புகள் வேண்டுமென்பவர்கள் அதிக விலைகொடுத்து வாங்கினர். 1854-ம் வருஷத்தில் பிரசுரிக்கப்பட்ட ஸ்டாம்பும், விக்டோரியா மகாராணியாரது காலத்து கார்டும் இப்போது கிடைப்பது எவ்வளவு துர்லபம் என்பதை அறிந்தவர்கள், ஸ்டாம்புகளின் விலை அதிகமானதைக்கண்டு ஆச்சரியப்படமாட்டார்கள்.

#### பழைய ஸ்டாம்புகளின் வியாபாரம்.

சில வருஷங்களுக்கு முன்பு பழைய ஸ்டாம்புகள் வேண்டுமென்று பல விளம்பரங்கள் வெளிவந்தன. இந்த வியாபாரத்தில் நல்ல லாபமென்றே சொல்லப்படுகின்றது. 'ஸான்ட்விச்' என்னும் தீவில் 1851-ம் வருஷத்தில் பிரசுரிக்கப்பட்ட இரண்டு ஸெண்டு ஸ்டாம்பு வேண்டுமாயின், 25-வருஷைங்களுக்குமுன் 100 பவுன் கொடுத்திருக்கவேண்டும். 10-வருஷங்களுக்குமுன் அதே ஸ்டாம்பின் விலை 740 பவுனும். 1850-ம் வருஷைத்தில் ப்ரிட்டிஷ் கயானாவில் பிரசுரிக்கப்பட்ட இரண்டு ஸெண்டு ஸ்டாம்பு 1882-ம் வருஷைத்தில் ஸ்டாம்பு சேகரிப்பவர் ஒருவரால் 25-பவுனுக்கு வாங்கப்பட்டது. ஆறு வருஷங்களுக்குப் பிறகு அதே ஸ்டாம்பு 70 பவுனுக்கு விற்கப்பட்டது. அது மறுபடியும் 1892-ம் வருஷத்தில் 180 பவுனுக்கு விற்கப்பட்டது. இரண்டு வருஷங்களுக்குப் பிறகு அது மறுபடியும் 210 பவுனுக்கு அதாவது 3150 ரூபாய்க்கு ஏலத்தில் விலை போயிற்று. 69 பவுன் செலவிட்டு வாங்கின ஸ்டாம்புகள் 3,000 பவுனுக்கு ஒரு வியாபாரியால் விற்கப்பட்டனவாம்.

#### பாடசாலைகளும், பழைய ஸ்டாம்புகளும்.

பாடசாலைகளில் பழைய ஸ்டாம்புகள் இருந்தால், அவை சரித்திரம் பூகோளம் முதலியவற்றைப் போதிப்பதற்கு மிகவும் உபயோகமாயிருக்கும். பாடம் கற்பிப்பது பிள்ளைகளுக்கு நன்றாய்ப் பதிவதோடு, அவர்களுக்கு மேற்படி விஷயங்களில் ஊக்கமும் உண்டாகும். ஸாதாரணமாய்ப் பெரிய ஊர்களில் ஒவ்வொன்றிலும் இருக்கும் சங்கங்களுக்குப் பத்திரிகைகள் பல தேசங்களினின்றும் வரும். அங்கிருந்து ஸ்டாம்புகளைச் சேர்த்துத் தனியாக ஓர் புஸ்தகத்தில் ஒட்டி வைத்திருந்தால், அப்புஸ்தகம் மிகவும் பிரயோஜனப்படும் என்பதில் சந்தேகமில்லை.

மேற்கூறிய விதமாகச் சேர்த்து வைக்கப்பட்ட ஸ்டாம்பு புஸ்தகத்தையும் (நாணயப்

புஸ்தகமும் இவ்வாறே செய்யலாமாதலால்) நாணயப் புஸ்தகத்தையும் காணும் சிறுவன், " அப்பா! பழைய ஸ்டாம்புகளும், நாணயங்களும் (அயல்தேசத்தவை ; நம் தேசத்தவை) எனக்குக் கொண்டுவந்து கொடு " என்று நிச்சயமாய்த் தன் தகப்பனாரைக் கேட்பான்.

கி. சி. இராமஸ்வாமி பி. ஏ.,

---

## Thiruneelakanta Nayanar.

By Pandit V. Subrhamaniya Iyer.

## திருநீலகண்ட நாயனர்.

திருச்சிற்றம்பலம் என்று சொல்லப்படும் சிதம்பர க்ஷேத்திரத்தில் திருநீலகண்டர் என்ற ஒரு சிவபக்தர் வசித்துவந்தார். இவர் குயவர் குலத்துதித்தவர். இவர் சிவபக்தர்களுக்கு உதவியாகும்படி நல்ல இடங்களில் மண் எடுத்துக் கலங்கள் செய்தும், திருவோடுகள் செய்தும், பரதேசிகளுக்கும் சிவனடியார்களுக்கும் தினந்தோறும் தானம் புரிந்துவருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இவர் அருந்ததிபோன்ற கற்பிற் சிறந்த தம் பத்தினியுடன் நெடுநாள் சிதம்பர க்ஷேத்திரத்தில் தாம் மேற்கொண்ட அடியார்களின் பணியைச் செய்து கிரகஸ்தாசிரம தர்மத்திலிருந்துவந்தார். இவர் நீலகண்டனடியர்களுக்குத் தொண்டு செய்வதைத் தொழிலாகக்கொண்டு, திருநீலகண்டர் என்னும் சிவபிரான் பெயரையே தம் பெயராக வைத்துக் கொண்டார். இப்படி காலங்கழித்து வரும் நாளில், இவர் ஒருநாள் தாசியொருத்தியின் வீட்டுக்குப் போயிருந்துவந்தார். இந்தச் செய்தியறிந்த அவரது மனைவி, அவர் செய்த காரியத்தைப் பொறுக்கவில்லை. தம் மனைவி இவ்விஷயத்தில் கோபங் கொண்டிருப்பதைத் தணிக்க உத்தேசித்து அவ்விடம்போய், இம்மாதிரி கோபங் கொள்ளக்கூடாதென்று இத வார்த்தைகள் சொன்னார். அவர் மனைவியும், தன்னிடம் வந்து தன்னைத்தொடவந்த திருநீலகண்டரைத் தன்னைத் திருநீலகண்டன்மேல் ஆணைப்படி தொடக்கூடாதென்று கூறினாள். திருநீலகண்டரும் மிகுந்த சிவபக்தராதலால், திருநீலகண்டர் என்ற சிவபிரானைக் குறிக்கும் வார்த்தைக்கு மிகுதியும் கௌரவங்கொடுத்து, அவரிடம் சமீபிக்காமலே இருந்துவிட்டார். அவரது மனைவி தன் புருஷரைத் தொடுவது மட்டுமில்லாமல், மற்றைப்படி தன்னுடைய கணவனுக்குத் தேவையான சுச்ரூஷைகளைக்கொஞ்சங்கூட வழுவாமற் செய்துவந்தாள். இப்படி அவர்கள் பால்ய காலமெல்லாம் தேக சம்பந்தமில்லாமலே சென்றது. ஆனால், இவர்களுள்ளிருக்கும் சபதம் இன்னதென்பதைப் பிறரெவரும் அறிந்துகொள்ளக்கூடாமலிருந்தது. காலம் மிகுதியும் செல்ல, இவர்கள் இருவரும் வயதுசென்ற கிழவனும் கிழவியுமாகியும், தாம் கொண்ட சபதத்தை விடவேயில்லை. திருநீலகண்டரும் தம்மனைவியிட்ட ஆணையின்படி தம்மனைவியைத் தொடாமலிருந்ததுடன், அன்றுமுதல் வேறெந்தப் பெண்களையும் மனத்தினுற்கூட நினைப்பதில்லாமல், தாம் மேற்கொண்ட சிவனடியார்களுக்குச் செய்யும் திருவோடளிக்கும் கைங்கரியத்தைமட்டும் விடாமல் மேற்கொண்டு செய்துவந்தார்.

அப்படி நடந்துவரும் நாளில், தம்முடைய பக்தருடைய பக்தியைப்பரீக்ஷிக்கவேண்டியும், உலகத்தவர்க்கு இந்தத் தம்பதிகள் இப்படிப்பட்ட சிவபக்தி மிக்கவர்கள் என்பதைக் காட்டவேண்டியும், ஈசுவரன் ஒரு யோகியாக வேஷம் போட்டுக்கொண்டு உலகில் தோன்றி-



னர். அரையிலே கோவணமும், நெற்றியில் விபூதியும் தரித்து, மார்பில் யஜ்ஞோபவீதமும் பூண்டு, கையில் திருவோட்டுடன் திருநீலகண்டக் குயவனர் வீடுதேடி வந்தடைந்தார்.

இந்தச் சிவயோகியைக் கண்ட திருநீலகண்டர் அவரை எதிர்கொண்டு உபசரித்தார் ; அவரை அன்புடன் வரவேற்று உள்ளே அழைத்துப்போய், உரியபடி பூசை செய்தபின்னர், " அடியாரே ! நான் தங்களுக்குச் செய்ய வேண்டிய காரியமேதேனும் உள்ளதோ ?" என்று கேட்டார்.

"என்கையில் இதோ வைத்திருக்கும் திருவோட்டுக்குச் சமானம் இத்திருவோடேயாகும். இத்திருவோட்டில் எது தங்கினும் அதை அது பரிசுத்தமாக்கிவிடும். பொன், மணிகள் முதலியவற்றை எப்படி பந்தோபஸ்தாயும், உயர்ந்ததாயும் கொண்டாட வேண்டுமோ, அப்படியே இதனையும் கொண்டாட வேண்டும். இதைத் தாங்கள் வாங்கிக்கொண்டு போய்வைத்திருந்து நான், மறுபடியும் வந்து கேட்கும்போது இதைக் கொடுக்கவேண்டும். இதுதான் நீர் செய்யவேண்டிய காரியம்" என்று திருநீலகண்டரிடம் சிவயோகியார் கூறினர்.

திருநீலகண்டனரும், இப்படி அதன் மகிமையைப்பற்றிப் பெரிதும்கூறிக் கொடுத்ததை வாங்கிக்கொண்டுபோய்த் தம் வீட்டில் ஓர் மூலையில் பந்தோபஸ்தாயிருக்கும்படி மிடத்தில் கொண்டுவைத்துவிட்டுச் சிக்கிரமாக மீண்டு வந்து சிவயோகியாரை வணங்கினர்.

சிவயோகியாரும், திருநீலகண்டனர்வீட்டினுள்ளே சென்று திரும்பி வந்ததும், அவரிடம் போய்விட்டு மற்றொரு சமயம் வருவதாகச் சொல்லித் தம்மிருப்பிடம் சென்றார். அப்புறம் வெகுகாலம் சென்றபின், குயவனரிடத்தில் வைத்த திருவோடு குயவனர் வைத்ததான இடத்தைவிட்டு அவரையுமறியாமல் வேறிடம் போகும்படியாகச் செய்தார். அதன்பின், முன்போல் சிவயோகி வேஷம் போட்டுக் கொண்டு மறுபடியும் திருநீலகண்டரது வீடு நோக்கி வந்தார். நீலகண்டரைக்கண்டு, "குயவனரே! நான் நெடுநாள்களுக்குமுன்னே தங்களிடத்தில் ஓடொன்றைக் கொடுத்துப் பத்திரமாய் வைத்திருக்கும்படி சொல்லிப்போனேனே ! அதைக் கொண்டுவந்து கொடுங்கள் " என்று கேட்டார். இதுகேட்ட குயவனர், அதை எடுத்துக்கொண்டுவந்து கொடுப்பதாகச் சொல்லி வீட்டினுள்ளே சென்றார். தாம் முன்பு வைத்த இடத்திற் போய்ப் பார்த்தார் ; அவர் அதை அங்குக் காணவில்லை. மீட்டும், அவர் வீடெல்லாம் தேடிப்பார்த்தார். ஆனால், ஓடுமட்டும் காணக் கிடைக்கவில்லை. உடனே சிவயோகியாரின் முன்னால் குயவனர் மீண்டு வந்தார். "ஐயா! யோகியாரே! ஓட்டைப் பத்திரமாய்க் கொண்டு வீட்டுக்குள்ளேதான் வைத்திருந்தேன். அப்படி வைத்த இடத்தில் தேடினேன் ; அகப்படவில்லை. என்னிடத்தில் வேறு பழைய திருவோடு இருக்கிறது, தாங்கள் கொடுத்துவிட்டுப்போன திருவோட்டைக் காட்டிலும் மிகவும் நன்றாயிருக்கிறது ; வெகுநாள் தாங்கும்படியானது ; நான் வைத்திருக்கும் ஓட்டினைத் தங்களுக்குத் தருகிறேன். அதை வாங்கிக்கொண்டு தாங்கள் வைத்துப்போன ஓட்டை நான் காப்பாற்றிக்கொடுக்காத குற்றத்தை மிகவும் பொறுக்கவேண்டும். என்னை மிகவும் மன்னிக்கவேண்டும்" என்று திருநீலகண்டர் யோகியாரைக் கேட்டுக்கொண்டார்.

இப்படி தலைவணங்கிச் சொன்ன பக்தரைச் சிவயோகியார் ஏற இறங்கப் பார்த்தார். " என்ன ஐயா! என்னுடைய நல்ல ஓட்டை எடுத்து ஒளித்து வைத்துக்கொண்டு, பழைய ஓட்டை எடுத்துப்போ என்கிறீர்! நீர் சொல்லுவது நன்றாயிருக்கின்றது! மண்ணினாலேயோ அல்லது பொன்னினாலேயோ ஓடு செய்து கொடுத்தாலும் எனக்கு வேண்டாம். நான் தங்களிடம் கொடுத்துக் காப்பாற்றிவைக்கச்

"சொல்லிப்போன அந்த ஓட்டைதான் எனக்கு வேண்டும்" என்று சிவயோகியார் கோபத்துடன் கூறினர். "பெரியவரே! தாங்கள் ஓடு என்னிடம் கொண்டு வந்து கொடுத்ததை நான் இல்லையென்று சொல்லவில்லை. அது எப்படியோ கெட்டுப்போய்விட்டது. அதைக்காட்டிலும் நல்லதொரு திருவோடு தருகிறேன் என்று சொன்னாலும், தாங்கள் ஒப்புக்கொள்ள மறுக்கிறீர்கள். எனக்கு மிகவும் மனவருத்தமாயிருக்கிறது" என்று குயவனர் சொன்னர். "உம்மிடத்தில் எனக்கு வேலை என்ன இருக்கிறது? நான் உம்மிடம் வைத்த அடைக்கலப் பொருளை அபகரித்துப் பாவமான கார்யங்களைச் செய்தீர். நான் உங்களை விடப்போவதில்லை" என்று சிவயோகி கூறினர். "நான் தாங்கள் கொடுத்த விசேஷமான ஓட்டைத் திருடவேயில்லை. மனதினுற்கூடக் களவுத் தொழிலை நான் செய்ததில்லை. தாங்கள் என்னைத் திருடனென்று பழிச்சொல் சொல்கிறீரே; என்செய்வேன்!" என்றார். அப்போது சிவயோகியார், "நீர் திருடவில்லையானால், உம்முடைய புத்திரனைக் கைப்பிடித்துவந்து இக்குளத்தில் முழுகிச் சத்தியம் செய்துபோம்" என்றார். "அம்மாதிரி செய்வதற்கு எனக்குப் புத்திர சந்தானமில்லையே! எப்படி யான் இப்பழியைத் தீர்ப்பேன்?" என்று குயவனர் வருத்தப்பட்டார். "உம்மனைவியின் கைப்பிடித்துக் கொண்டாயினும் குளத்தில் மூழ்கி நான் திருடவில்லை என்று சத்தியம் செய்துகொடும்" என்று சிவயோகியார் மறுமொழி கூறினர். "ஐயா! எனக்கும் என் மனைவிக்குமிடையில் ஒரு சபதம் உள்ளது. அந்தச் சபதத்தினுல் நான் என் மனைவியைப் பற்றிக்கொண்டு குளத்தில் முழுகச் சரிப்படாது. நான் மட்டும் முழுகிச் சத்தியம் பண்ணிக்கொடுப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று குயவனர் சிவயோகியாரை வணங்கிக் கேட்டுக்கொண்டார். "உம்மிடத்தில் நான் வைத்த பொருளை நீர் அபகரித்துக்கொண்டு கொடுக்க மறுக்கிறீர். இன்னும் உம் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு குளத்தில் முழுகிச் சத்தியம் பண்ணிக்கொடும் என்று கேட்டால், அதனையும் செய்ய மறுக்கிறீர். என்னுடைய வழக்கைத் தில்லையில் வாழும் பிராமணர்களிடத்தில் போய்ச் சொல்லிக்கொள்ளுகிறேன். அவர்கள் செய்யும் தீர்மானமே எனக்குச் சம்மதமாகும்" என்று சொல்லிச் சிவயோகியார் குயவனருடன் அவர்களிடம் போனர். நான்கு வேதங்களின் கரைகண்டவரும், நல்லொழுக்கமுடையவருமான அந்த பிராமணர்களுடைய சபையிற் போய், "குயவனர், தம்மிடத்தில் யான் வைத்த பாத்திரத்தை அபகரித்துக் கொடுக்கமாட்டேனென்கிறார். அன்றியும், என்னிடத்தில் இல்லை என்று, அவர் மனைவி கையைப்பிடித்து ஸ்நாநம் செய்து சத்தியம் பண்ணிக் கொடுக்கச் சொன்னாலும் அப்படிச் செய்து கொடுக்காமல் சண்டித்தனமும் பண்ணிக்கொண்டிருக்கிறார். இந்த வழக்கை நீங்கள் தாம் தீர்க்கவேண்டும்" என்று சிவயோகியார் அந்தப் பிராமணர்களிடம் முறையிட்டார். அப்போது அது கேட்ட அந்தணர்கள், "குயவனரே! நீர் சொல்லிக்கொள்ளவேண்டியதைச் சபையில் சொல்லிக்கொள்ளும்" என்று சொன்னர்கள். "ஐயா! அவர் சொல்லியது வாஸ்தவம்தான். அவர் கொடுத்த ஓட்டை நான் மிகவும் பத்திரமாய் விசேஷ தனம்போலவே பாவித்துக்கொண்டுபோய்ச் சரியானவிடத்தில் தான் வைத்தேன். ஆனால், நான் வைத்த இடத்தில் அது இல்லாமல் எங்குப் போயிற்று என்பதை அறியக் கூடவில்லை. இதுதான் நடந்த காரியம்" என்று சொன்னர் குயவனர்.

"ஐயா! உங்களிருவருடைய வழக்கைக் கேட்டோம். நீர் ஓட்டைக் கெட்டுப்போகவிட்டுவிட்டீர். ஆகையால், நீர் உமது பத்தினியைக் கைப்பிடித்துக்கொண்டு குளத்தில் மூழ்கிச் சத்தியம் பண்ணிக் கொடுக்கவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டால், அதன்படி நீர் செய்துகொடுப்பதுதான் நீதியாகும்,



என்பது எங்களுடைய தீர்மானம்" என்றார்கள் பிராமணர்கள். இதைக்கேட்ட குயவனர், அந்நியாய சபையாருக்குத் தம் மனைவியைத் தீண்டக்கூடாமையைச் சொல்லவில்லை. தாம் அப்படியே கூடுமானவரையில் தாமும் தம்மனைவியும் குளத்தில் மூழ்கிச் சத்தியம் பண்ணித் தருவதாக ஒப்புக்கொண்டார். குயவனர், தம்முடைய மனைவியை அழைத்துக்கொண்டு, திருப்புலீச்சுரத்திலுள்ள திருக்குளத்தில் சிவயோகியார்முன்னே இறங்கினர். ஒரு மூங்கில் கழியின் ஒரு முனையைத் திருநீலகண்டரும், மற்றொரு முனையை அவருடைய மனைவியும் பிடித்துக்கொண்டு, தமக்குள்ளிருந்த சபதத்தை யாவரும் கேட்கச் சொல்லி, தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்தார்கள்.

அவர்களிருவரும் முழுகி எழுந்ததுதான் தாமதம்: கிழவியுங் கிழவனுமாக மூழ்கினவர்கள், குமாரனுங் குமரியுமாக மாறிக் கரையேறினர்கள். அப்போது, தேவர்கள் யாவரும் மந்தார மலர்களை மழைபோற் பெய்ய, குளத்தில் முழுகியெழுந்தவர்கள், மலர்மழையில் மூழ்கினர்கள். எழுந்தவர்கள், எதிரில்நின்ற வேதியரைக் காணுமல் அதிசயித்தார்கள். அப்போது, ஸ்ரீபார்வதி பரமேசுவரர் தம்து பரிவார தேவதைகளுடனும், மற்றும் சகல பூதகணங்களுடனும் விருஷபாரூடராய் அங்குப் பிரத்தியக்ஷமாகக்கண்டு, இத்தம்பதிகள் இருவரும் கைதொழுது, பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு நின்றார்கள். அப்போது பகவான், திருநீலகண்டரையும் அவர் மனைவியையும் நோக்கி, 'சிறந்த பக்தர்களே! நீங்கள் பஞ்சேந்திரியங்களையும் வென்று சிவபக்தியில் வழுவாத விதமாய் நின்ற தன்மையைப் பார்த்துச் சந்தோஷப்பட்டேன். நீங்கள் என்றும் இந்த இளமையோடு இருந்து, புத்திர சந்தானம் முதலியவைகளை அடைந்து, கடைசியில் நம் முலகம் வருவீர்கள்" என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர். அவர்களும், சிதம்பரத்திற் கடுத்த இளமையாக்கினர் கோயிலில் பலகாலம் வரையில் இளமையுடனிருந்து, புத்திரப்பேறடைந்து, பின்பு ஈசுவரனுடைய பதவியை அடைந்தார்கள் என்று பெரியபுராணம் கூறும்.

பண்டித வி. சுப்பிரமணிய ஐயர்.

161990

## Jatayu. *

BY PANDIT P. K. SREENIVASACHARIAR,

## சடாயு.

அச்சமயத்தில், கழுகுகளுக்கு அரசனுகிய சடாயு, 'எங்கு அடா போவது?' என்றும் 'நில்லு நில்லு' என்றும் இடியொலிபோலக் கர்ச்சித்து அதட்டிச் சொல்லிக்கொண்டே வந்தார். அவர் கண்களால் அப்போது கோபாக்கினியை அவ்விடத்துப் பரப்பு[illegible] மின்னல் போல விளங்கும் வீரம் வாய்ந்த மூக்கை உடையவர்; பெரிய மேருவென்னும் பொன்மலை ஆகாயத்திற் பறந்து வருவதேபோலும் உடலின் தோற்றத்தை யுடையவர்.

* பெரியவுடையார் என்னும் சடாயுவின் சரிதை, கம்பரது இராமாயணத்திலுள்ளதைத் தழுவி, இனிய வசனநடையில் வேலூர் வூர்ஹீஸ் காலெஜ் தமிழ்த் தலைமைப் பண்டிதர் மிஸ்டர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியால் இயற்றப்பட்டு, எம்மால் அச்சிடப்பட்டு வருகின்றது. நம் ஜனோபகாரிநேயர்கள் படித்து அபிமானித்து அந்நூலைப் பெற்றுக்கொள்வார்களென்று கருதி, மாதிரிக்காக அதிலின்று ஒருபாகம் இங்குக் காட்டுகின்றோம். இக்கதாபாகத்திற்கு முன்பின் தொடர்ச்சி இங்கு அறியக்கூடாவிடினும், முழுப்புத்தகத்தில் கதையை விளங்கக் காணலாகும். அன்பர்கள் இங்குக் காட்டிய கதாபாகத்தைக் குறித்துத் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதுடன், யாம் புஸ்தகம் அச்சிட்டு வெளிப்படுத்தியதும், பெற்றுக்கொள்வார்களென்று நம்புகின்றோம். புஸ்தகத்தின் விலை 8 அணுவாகும்.

பெரிய வலிய மலைகளெல்லாம் நிலைபெயர்க்கப்பட்டு மேலெழுந்து, ஒன்றோடொன்று தாக்குண்டு, புழுதிபோலப் பொடிபொடியாய் உதிரும்படியாகவும், ஆகாயத்தினிடத்தில் கடல் ஓங்கிப் பொங்கியெழுந்து அதனால் கடலும் உலகும் ஒன்றாய் அழியும்படியாகவும், கொடிய பிரளய காலத்துப் பிரசண்டமாருதம் உலக முழுதும் வீசுமே; அது இதுதானென்று சொல்லும்படி, தம் இருசிறகுகள் அடித்தலாலாகிய காற்று உக்கிரமாய் மோதி வீசலாயிற்று. அதனால் மரங்களும் கிளைகளுடன் தலைப்புறம் தரையில் தாழ்ந்தன. வானத்திலுள்ள மேகங்களும் இன்னும் மேன்மேல் ஓங்கி ஒதுங்கியோடுகின்றன. மிகவும் உயர்வான ஆகாய மார்க்கத்தில் உக்கிரமூர்த்தியான கருடபகவான்தான் வருகின்றானென்று எண்ணி, நாகங்களும் படங்களை ஒளித்துக்கொண்டு ஒதுங்கிப் பதுங்கி வருந்தின. யானைகளும், யாளிகளும், முதலிய எல்லாவிலங்குகளும், மரங்களும், புதர்களும், கற்களும் ஆகிய இவையும், அவ்வனத்துடனே, இருசிறகுகளின் காற்றுவீச்சால் நிலைபெயர்ந்து மேலேறி வானத்தில் நிறைந்து, வானத்தை வெற்றிடமில்லாதபடி செய்தன. அப்பொழுது, காடுள்ள இடம் வெற்றிடமாயிற்று. அதனால் வானம் வனமாயிற்று; வனம் வானமாயிற்று.

“உத்தமனான இராமனது தேவியை நிலத்துடனே எடுத்து உயர்ந்தொரு தேரில் வைத்துக்கொண்டாய். வானத்துடன் இத்தனை திசையையும் மறைத்துவிடுவேன்: நீ போவது எங்கே?” என்று சொல்லி, அவர் வலிய தம் சிறகுகளை விரிக்கிறார்; ஆபத்தில் உதவிபுரியும் உயர்குணமுடையவர்; சமயத்திற்கு ஏற்றபடி அறிந்து ஒழுகுபவர்; நற்குண நற்செய்கையில்லாத இராவணனது யந்திரத்தேர் செல்லுதலைத் தடுத்துவிடவேண்டுமென்னும் எண்ணமுடையவர்; சிந்தூரம்போல மிகச்சிவந்த கால்களையும், தலையையும், செந்நிறங்கொண்ட கழுத்தையுமுடையவர். கைலைமலையைப்போலும் வெள்ளைநிறமான பெரிய உடம்பின் தோற்றத்தையுடையவர் அவர். இத்தகைய கழுகுகளுக்கரசனாகிய சடாயு அங்கு வந்து தோன்றினார்.

அவர் திருமகளாகிய சீதையை நோக்கி, ‘அஞ்சாதே’ என்று தைரியமுரைத்து, இராவணன் அவளைத் தீண்டவில்லையென்று சிந்தையில் உணர்ந்து, கோபம் உக்கிரமாய் மூண்டு பொங்கியெழுந்ததாயினும், அதனை முதிரவிடாமல் சிறிது அடக்கிக்கொண்டு, மீட்டும் இராவணனை நோக்கிச் சிலசொற்களைச் சொல்லுவாராயினர்:—

“நீ கெட்டாய். உன் இச்செயலால் உன் உறவினத்துடனே உன் வாழ்வையெல்லாம் சுட்டெரித்து அழித்தொழித்தாய். இது என்ன தொடங்கினாய்! நீ இவளை விட்டு விலகாயாயின், இறந்தாயென்றே எண்ணிக்கொண்டு, இராமனது தருமபத்தினியும், பதிவிரதையுமான இவளை விட்டுச் செல். அங்ஙனம் விட்டிட்டு அகல்வையாயின், இறவாய். பேதையே! நீ பிழை செய்துவிட்டாய். பேருலகத்து உயிர்களுக்கெல்லாம் அன்புநிரம்பிய அன்னையே போன்றவளான இவளை, நீ என்னவென்று மனத்தில் எண்ணிக்கொண்டாய்! ஆலோசனையில்லாதவனே! உலகத்தில் மற்றெவரேனும் சினந்தால், திருமாலின் திருவவதாரமாகிய இராமபிரானிடத்துச் சரணமடைந்து பிழைத்து உய்வுபெறுதல் கூடும். அனைத்துலகிற்கும் தலைவனான அப்பிரானது கோபத்தின் பயனைத் தடுத்துப் பாதுகாக்கவல்லார் எவருமில்லை; ஆதலால், அவன்திறத்தில் பேரபராதத்தைச் செய்த நீ, யாரைத் துணைக்கொண்டு பிழைத்திடுவாய்? எவரும் உனக்குத் தஞ்சமில்லாமல் இறந்தேவிடுவாய். அன்றியும், குற்றமுடையார்மேல் பெருமான் கோபங்கொள்ளுங்கால் புருஷகாரமாய் நின்று, இன்சொற்கூறித் தணிவுண்டாக்கி, அக்குற்றத்தைப் பொறுப்பிக்கவல்ல பிராட்டிதிறத்திலே அபராதஞ்செய்தனையாதலால், உனக்கு இனி



ஆதாரம் யாருளர்? உன் இனத்தாராகிய அரக்கர் தப்பிப் பிழைக்கமுடியாமல், இராமன் போர்புரிந்து அவர்களது அரியஉயிரை மெய்யாகவே விருந்துணவாக முன்னம் அளிக்க, யமனார் கைநிறைய வாரியெடுத்துக்கொண்டு புதுமையாக விருந்துண்டதை, ஐயனே! அறியாயோ? அறிந்திருந்தாயெனின், இங்ஙனம் இராமன்விஷயத்திற் பிழைபுரியமாட்டாய்.

“உன்னைக் கொல்லுதற்குக் கொடிய சினமுற்றுங் கறுக்கொண்ட யானைவர, சாதாரணமாக எடுத்து வீசும் மண்ணுருண்டையைச் செலுத்த விரும்பினையே! கொல்லுமென்பதை உணராமல் நீ கொடிய விடத்தை உண்டாலும், இவன் உணராமல் உண்டானென்று அது கொல்லாமல்விடுமோ? பிராட்டியைக் கவர்தல் உன் அழிவுக்குக்காரணமாமென்பதை நீ அறியாயாயினும், அதனைச் செய்தனையாதலால், இனி உயிர்வாழ்கை உனக்கு உண்டோ? மூவுலகங்களிலும் உள்ளாரனைவரும், திரிலோகாதிபதியான இந்திரனும், மற்றுமுள்ள இவர்களினும் மேம்பட்ட மும்மூர்த்திகளும், யமனும், இராமனைக் கண்டவளவில், மான்கள் புலியேற்றைக் கண்டாற்போலக் கலங்குவரேயன்றி, வில்லாளராகிய இராமபிரானை வெல்லும் வல்லமையுடையரோ? இம்மையில் உறவினரோடும் இறந்தழிவதற்கு ஏதுவான கொடிய செய்கை, இப்பொழுது இங்கு நீ செய்த இச்செயலின்மேற்பட்டது இல்லை. அன்றியும், இச்செயல், வருபிறப்பிலும் மீளற்கரிய பெரிய நரகத்தைத் தரும். ஆதலால், இதனை நீ எப்பிறவிக்கு இதமாக எண்ணினையோ? இம்மனிதர் மும்மூர்த்திகளில் மற்றையிருமூர்த்திகளுக்கும் ஆதிமூலப்பொருளாகிய திருமாலின் அவதாரமாதலால், இவரை எத்தேவரோடு நிகராக நினைப்பது? சாதாரண தேவர்கட்கு நீ இழைத்த பெரும்பிழைகள்போல, தேவாதிதேவரான இவர்க்குச்செய்த பிழை வீண்போகாது. ஆலோசனையில்லாத பித்துக்கொளியாதலால், நீ இப்பிழைபுரிந்தாய். திரிபுரசங்காரஞ்செய்த சிவபிரானது அருளால் நீ பெற்ற வரங்களும், மற்றும் நீ கொண்டுள்ள மாயை முதலிய வித்தைகளும், சத்தியவாதியாகிய இராமன் தான் பற்றிய சாபத்தினால் சரம்விடும் வரையிலுமே வலிமைபெற்றனவாவன. சக்கரவர்த்திதிருமகன் வில்வளைத்து நேரில் வந்துவிட்டால், அவனால் உனக்கு நேருங்கேட்டை எதிர்நின்று தடுத்தல் யார்க்கும் அரிது. இவ்வுத்தமியை யானே முன்னிருந்த அவ்விடத்திற் கொண்டுபோய்ச் சேர்ப்பேன். நீ இவளை விட்டு விரைவாக ஓடிப்போய்விடு.”

இங்ஙனம் சடாயு இராவணனை நோக்கிச் சொன்னவளவிலே, அரக்கர்க்கரசனாகிய இராவணன் அதுகேட்டு, கொடிய கண்கள் தீச்சிந்த, கோபத்தால் வாயை மடித்துக்கொண்டு, சடாயுவை நோக்கி, ‘வலிமையில்லாதவனே! மேன்மேல் வார்த்தைகளை ஓட்டாதே. இனி, நீ சொல்லுகிறவர்களை விரைவில் எனக்குக் காட்டு’ என்று சினந்துசொல்லி, ‘எதிர்த்து வரும் கழுகே! என் அம்பினால் உன் மார்பு முழுதும் துளைபட்டுப் பெரிய புண்ணாகத் திறந்து விரிந்துபோகாதபடி, நீ அப்பாற் செல்வாயாக. காய்ந்த இருப்புண்ட நீர் ஒருகால் மீண்டு வெளிப்படுமாயினும், என்னிடத்திலிருக்கும் அழகிய இப்பெண் மீண்டுவரமாட்டாள். இதனை அறிந்துகொள்’ என்றான்.

இராவணன் இப்படி சொன்னவளவிலே, பிராட்டி முன்னினும் இருமடங்கு அச்சம் அதிகமாக வருந்துகின்றதைச் சடாயுபார்த்து, அவளை நோக்கி, ‘அம்மா! இவ்வரக்கனுடல் இப்பொழுதே என்னால் சின்னபின்னமாய்விடும். என் தோழன்மகன் இராமன் வில்லேந்தி வந்திலனேயென்று வருந்தாதே. கண்களினின்று நீர்த்துளி முத்துப்போலச் சிந்தி மார்பில் விழ, அழுது துடிப்புற்றுத்தளராதே. பனம் பழக்கொத்துப்போல இருக்கின்ற இவனது பத்துத் தலைகளைக்கொண்டு, இவன்தான் வென்று வசப்படுத்திக்கொண்டவையென்று சொன்ன பத்துத் திசைகளுக்கும்

இப்பொழுதே நான் பலியிடுவேன். இவ்வேடிக்கையைப் பார்' என்றார்.

இராவணனது தலைகளின் வரிசையைக் கீழே தள்ளி, அவற்றைப் பேரொலி செய்யும் தமது மூக்கினால் கடிப்பதற்காக, இடியொலிபோலும் பேரொலி உண்டாகும்படி, பெரிய தம் சிறகுகளை வீசியடித்துக்கொண்டு சடாயு ஓடிவந்தார். வந்த அவர், காணத்தக்க அழகிய நீண்ட வீணையின் வடிவத்தை எழுதிய அவ்விராவணனது தேர்க்கொடியைப் பிடித்து ஒடித்தார். அதனால், சிறந்த தேவர்கள் அவரை வாழ்த்தினர். அவ்விராவணன் இதற்குமுன்பு எக்காலத்தும் இத்தகையதொரு மானக்கேட்டை அடைந்ததில்லை. ஆதலால், அவன் இங்ஙனம் கொடி ஒடிபட்ட அப்பொழுது, கோபத்தால், உருக்கிய அரக்குப்போலக் கண்கள் சிவக்க, ஒரு பெருஞ்சிரிப்புச் சிரித்தான். மலைபோன்ற தன் கைவில்லையும் தன் புருவங்களின் நுனியையும் வளைத்தான். அப்பொழுது உலகேழும் நடுங்கின. அவன் தனது கோபத்தில் வக்கிரதந்தங்களை உக்கிரமாகக் காட்டினன்; அவை பிறைச்சந்திரன்போல வளைவாக விளங்குகின்றன. அவன் அம்புகளை மழைபோலச் சொரிய, அவை சடாயு மீது மிகுதியாக நெருங்கிவந்தன. அதுகண்ட சடாயு, அவற்றிற் சிலவற்றைத் தம் சிறகுகளால் அடித்துத் தள்ளினார்; சிலவற்றைத் தம் கூரிய நகங்களால் கண்டதுண்டமாக்கினார்; சிலவற்றைக் காலனும் காணுதற்கு அஞ்சுகின்ற தம் மூக்காகிய படையினால் துண்டு துண்டாகச் செய்துவிட்டார். பல பெரிய கொடிய கண்களையுடைய அளவிறந்த பல பாம்புகளை ஒருங்கே வாட்டுகிற கருடன்போல, இராவணனது வலிய பத்துத் தலைகளின்மீதும் சடாயு சக்கராயுதம்போலும் பெரிய தம் மூக்கை நீட்டி, அவ்வரக்கன் தனக்குப் பாதுகாவலாக வைத்திருக்கும் பெரிய வில்லின் தண்டத்தை வளைக்கும்பொழுதிற்குள்ளே; மீண்டும் அவனருகில் அணுகி, அவன் காதுகளில் அணிந்துள்ள இரத்தின குண்டலங்களைப் பறித்துக்கொண்டு கிளம்பினார்.

அவ்வளவில், அரக்கன் ஆரவாரஞ்செய்துகொண்டு, பதினொன்று அம்புகளை எடுத்து, தன் குண்டலங்களைப் பறித்துக்கொண்டு மேற்கிளம்பிய சடாயுவின் பெரிய மார்பில், பதிந்து நின்றிடாமல் துளைத்து ஊடுருவி அப்பாற்கழன்று செல்லும்படி பிரயோகித்து, மீளவும், ஒளிவீசும் கூரிய அம்புகள் பலவற்றைப் பொழிந்தான். அதனால், போர்செய்த சடாயு விழுந்துவிட்டாரென்றெண்ணி, விண்ணவர்கள் அஞ்சி வெப்பமாகப் பெருமூச்சுவிட்டனர். வெண்ணிறமுடைய சடாயு, அரக்கனம்புகள் தம் உடலிற்பாய, அதனாலாகிய புண்களினின்று புதிய இரத்தம் பலபலவென்று மிகுதியாகப் பொழியத் தோன்றுகிறார். அவர், கரன் முதலிய அரக்கர்களுடைய இரத்த வெள்ளத்தைப் பெரிய கடலென்று கருதிக் குடித்த ஒரு மேகமானது, தான் உட்கொண்டதை மீளக் கக்கி வானத்தில் வெண்ணிறமாய் விளங்குகின்றதென்று சொல்லும்படியுள்ளார். அவர் உடனே பெருமூச்செறிந்து, சினந்து, அவ்வரக்கனது நீண்ட இருபதுதோள்களின் வரிசையிற் பாய்ந்து, மூக்காற் கொத்தி, கால் நகங்களினாற் குடைந்து, சிறகுகளினால் புடைத்து, அவன் மார்பிற் கவசத்தின் பூட்டுக்களையும் அறுத்துவிட்டார்.

அங்ஙனம் செய்த சடாயுவின் மார்பில், அரக்கனும், நூறு அம்புகளை அழுந்தச் செய்தான். அவ்வளவிலே, தேவர்கள், 'இப்பாணங்களினால் சடாயுவுக்கு என்ன ஆகுமோ!' என்று அஞ்சித் திகைத்தனர். அவர்கள் அஞ்சித் திகைப்பதற்குமுன்னே, சடாயு, இராவணனது வில்லைத் தம் பல்லாற் கடித்துப் பறித்தார். அப்பொழுது, தேவர்கூட்டம், தங்கள் துந்துபி முதலிய வாத்தியங்களை ஒலித்து ஆரவாரித்தது. சடாயு இராவணனது வில்லை வாயினாற் பறித்துக் கௌவிக்கொண்டு, இந்திரவில்லைக் கொண்டு வானத்தில் எழுந்த பெரியதொரு



மேகம்போல விளங்குகின்றார். அவரது தோள் வலியைச் சொற்களைக்கொண்டு சொல்லவல்லார் யார்! சிவதனுசைக் கையாலொடித்த இராமபிரானது தந்தையின் தோழனாகிய சடாயு, இந்திரனை வென்ற இராவணனது வில்லை வாயினின்று வாங்கிக் காலால் ஒடித்துவிட்டார்.

இராவணன் தன் ஆற்றலுக்கேற்ற நல்லவில்லானது சடாயுவினால் அடியோடு ஒடிக்கப்பட்டதைக் கண்டு, மனங்கொதித்து, வீரம் சோர்வுறாதவனாய், சிவபிரான் திரிபுரசங்காரஞ்செய்தற்கெடுத்த ஒப்பற்ற அம்புபோலும் ஓர் சூலப்படையை எடுத்துச் சடாயுவின்மேல் எறிந்தான். அப்பொழுது, பறவைக்கிறைவர், 'இவன் இச்சூலத்திற்கு எதிர் நிற்க வலிமையில்லாதவனென்று எண்ணுதே; என் வலிமையைப் பார்?' என்று சொல்லி, அதனைத் தம் மார்பின்மேல் ஏற்றுக்கொண்டார். அவ்வளவில், தேவர்கள், 'இங்ஙனங்கொடிய பகைவனெறிந்த வலிய சூலத்தை மார்பில் வலிய ஏற்றுக்கொள்பவர் வேறு யார்?' என்று எண்ணி, இராவணனிடத்து அச்சத்தால், தங்களுடல்வெளித்தோன்றுமல் மறைந்து நின்று, களிப்பினால் தங்கள் தோள்களைக் கொட்டி ஆரவாரித்தனர். பொருளாற் பெறப்படும் ஐம்புலவின்பத்தைக் கருதி விருப்பமுற்ற தரித்திரர்கள், அதனை அடையமாட்டாமல் மனம் மீளுதல் போலவும், விருந்தோம்பலாகிய இல்லறத்தில் கருத்துள்ள உத்தமமாதர் இல்லாதவிடத்திற் சென்றடைந்த, முகம் வேறுபட்டு நோக்கினால் குழையும் குணமுள்ள நல்விருந்தினர் அவ்விடத்தினின்று உடனே மீளுதல் போலவும், ஜீவாத்ம பரமாத்ம சொரூபத்தையே கருதிக்கொண்டிருக்கும் மனத்தையுடைய யோகிகளை அடைந்த அழகிய பார்வையையுடைய மெல்லிய மாதரது ஆசை நோக்கம், அவரைத் தன் வசம் திருப்பமாட்டாமல் தான் திரும்பிவிடுவதுபோலவும், சடாயு மார்பில் ஏற்றுக்கொண்ட அந்த முத்தலைச்சூலம், அவரது மார்பைத் தாக்கித் துளைபடுத்தமாட்டாமல் திரும்பிவிட்டது!

இங்ஙனம் முத்தலைவேல் வீணே இழந்தவனை இராவணன், வேகத்தோடு வேறு ஆயுதத்தை எடுத்தற்குமுன்னே, சடாயு, பெரிய ஆகாயமும் மறையும்படி பரந்து உயர்ந்துள்ளதும், மினுமினுப்புடன் விளங்குகின்ற குதிரைகள் பூட்டியதுமான அவ்வரக்கன் தேரைச் செலுத்தும் பாகன் தலையைப் பறித்து, மிக்க கற்புடைய பிராட்டியிடம் மோகம் படைத்த அத்துஷ்டன் வருத்தமுறும்படி, அவன் முகத்தின்மேல் அத்தலையை வீசியெறிந்தார். இராவணன் அது நோக்கி, அச்சடாயுவின் நெஞ்சுறுதியை அறிந்து கோபங்கொண்டு, முன்னே பலபெரிய போர்களில் தான் கையாண்டு வெற்றி பெற்றதாகிய பொன்மயமானதொரு கதாயுதத்தை எடுத்து, நெருப்புப்பொறி பறந்தாற்போல அக்கினிச் சுவாலை மிகுதியாகக் கிளம்பும்படி, அதனால், அப்பறவைக்கரசைத் தாக்கினான். அவ்வளவிலே, அவர், தரையின்மேல், பெரிய மலை விழுந்தாற்போல விழுந்தார். அப்படி சடாயு விழுந்தவளவில், இராவணன் இதுதான் தக்க சமயமென்று, தனது தேரை, கண்பார்வையும் தொடர்ந்து செல்லவொண்ணாதபடி, பாகனின்மையால் தானே மிகு விரைவாகச் செலுத்திக்கொண்டு வானத்திற் கிளம்பினான்.

அப்படி ஆகாய வழியிற் புறப்பட்டவளவில், மென்மைத் தன்மையுள்ள பிராட்டியும், புண்ணில் வெந்தீ நுழையத் துடிக்கின்றவள் போல், துன்பத்தின்மேல் துன்பமுற்றுக் கீழ்வீழ்ந்து புரளலுற்றாள். இளந்தளிர் போல் மெல்லிய சீதை வாடி வருந்திய செய்தியைச் சடாயு கண்டு, 'அன்னமே! அவலத்தில் அழுந்தாதே. அஞ்சாதிரு' என்று, சீதையை நோக்கிச் சொல்லி, வருத்தத்தாற் பெருமூச்சு விட்டுக்கொண்டு, எழுந்து, 'அடா! இனி நீ எங்கே தப்பிப்போவது!' என்று இராவணனை நோக்கிக் கூறி, அவன்தேர்மீது பாய்ந்தார். அப்பொழுது, தேவர் கூட்டம், மகிழ்ச்சியால் துந்துபிமுதலிய வாத்தியங்களை முழக்கி ஆரவாரித்தது. பாய்ந்த சடாயு, அவனது பல்

மணிகளிழைத்த பொற்றண்டினை அப்பால் பறித்தெறிந்து, வேகம்பொருந்திய தேரிற் கட்டிய பதினறு குதிரைகளும் ஒடுங்கி அழிந் தொழியும்படி, மிக்க வலிமையுடைய மூக்கா கிய வாளினல், கோபங்கொண்டு வீசி, அவற் றின் உயிரைக் கவர்ந்தார். அதுகண்டு காலன், பிராணிகளின் உடலினின்று உயிரைக் கவர் வதைத்தொழிலாகவுடைய தானே அக்குதிரை களின் உயிரைக் கவர்ந்ததாகக் கருதித் தன் மீது அரக்கன் சினங்கொண்டு தன்னைத் தண் டிப்பனேவென்ற அச்சத்தினலோ, தன்னலா காத செயலைச் சடாயு செய்த தன்மையை நோக்கிக் கொண்ட அதிசயத்தினலோ கைந் நடுக்கமுற்றான். பின்பு சடாயு, இராவணனது வலிய தேரை அழித்தார்; அவனது வலிய தோள்களின் புறத்திலே அம்பறாத் தூணிகள் கட்டப்பட்டிருந்தன; அவை, அவன் கையில் வில்லில்லாமையால் போருக்குத் தாம் உதவவில்லை. ஆதலின், ஈகைக் குணமில்லாத வசைக்குரிய உலோபிகளுடைய பொக்கசம்தமக்கும் பிறர்க்கும்பயன்பட எடுக் கப்படாமல் வீணே கிடைப்பனபோல உள் ளன; *அவை ஆகாயத்தை மறைக்கும்படி உய ர்ந்துள்ளன. அவற்றை அவர் தம் கூரிய கால் நகங்களாற் பிடுங்கி யெறிந்தார்.

மற்றும், சடாயு, அவனது மார்பின்மேலும் தோள்களின்மேலும், விசித்திரமாக, பெரிய சிச்சிலிக்குருவிபோலப் பாய்ந்து, தம் சிறகு களினல் விசையாக எறிந்து அடித்து, வாயாற் கடித்தார். இவ்வளவிலே, அரக்கனும் வலி யொடுங்கி, மூச்சின்றி மூர்ச்சித்து, முடிசாய்ந் திருந்தான். அதுகண்ட சடாயு அவனைநோக்கி, 'தொலைந்தது! இவ்வளவுதானேஉன்வல்லமை!' என்று இழித்துக்கூறினர். அவ்வேளையில், வலி மைமிய உருவெடுத்துவந்தவன்போன்ற இராவ ணன், கோபங்கொண்டு, அச்சடாயுவின்மேல் அவர்வலிமையை அழித்தற்குப் பிரயோகிக்க ஏற்ற ஆயுதம் வேறொன்றைக் காணமல், 'இப் பொழுதே இவனது இனிய உயிரை உண்பேன்' என்று கருதி, பகைவரைக் கொல்லுதலில் தவ றாத நீண்ட வாட்படையொன்றை உறையினி ன்று உருவியெடுத்தான். இது கைலாசம் பெய ர்த்தெடுத்த பொழுது தனக்குச் சிவபிரான் அளித்தது. அவன் அதுகொண்டு சடாயு வின்மீது விசையாக வீசினன். எவராலுந் தடுக்கவொண்ணத தெய்வத்தன்மையுள்ள அவ்வாளினல், யாவர் தலையும் தவறுதழியும். அச்சிறப்பு மாத்திரமேயன்றியும், சடாயுவின் வாழ்நாளும் முடிவிற்கு வந்துள்ளது. ஆத லால், வலிமை எக்காலத்தும் தோல்வியுறாத அச்சடாயு, சிறகு அறுபட்டுக் கீழே விழுந்து விட்டார். அவர், அப்பொழுது, தேவேந்திரன் வச்சிராயுதத்தை வீச, அதனற் சிறகற்று விழுந்ததொரு மலைபோலத் தெரிகிறர். விரிந் துள்ள இறகு கீழே கிடக்கும்படி சடாயு மண் ணில் விழுந்துவிட்ட வளவிலே, தேவர்கள் அஞ்சியோடினர்கள். முனிவர் கூட்டத்தார், பிராட்டி துணையை இழந்தாளேயென்று துன் பமுற்று இரங்கினர்கள். சிறந்த பாகவதோத் தமராய அப்பெரியவுடையாரைப் பரமபதத் திற்கு எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போ தற்காக எதிர்கொண்டு வந்த நித்யசூரிகளென் னும் விஷ்ணு லோகத்தார், உவப்பினல் அவன் மீது பொன்மயமான பூமாரியைப் பொழிந் தனர்.

பண்டித பு. க. ஸ்ரீநிவாஸாசாரியார்.

* "உடா அதும், உண்ணதும், தம்முடம்பு செற் றும், கெடாஅத நல்லறமும் செய்யார்,—கொடாஅது, வைத்தீட்டினு ரிழைப்பர்: வான்தோய் மலைநாட! உய்த்தீட்டும் தேனீக் கரி". என்றவாறு, உலோபிகளின் செல்வம் இழக்கப்படுதல்போல, இத்தூணீரங்களும் இழக்கப்பட்டனவென்பது குறிப்பு.


இனிய தமிழ் நாவல்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| மனேரமா ... | ... | ... 0 | 8 | 0 |
| ஆரியகுமாரி... | ... | ... 0 | 6 | 0 |
| மாயாவதி ... | ... | ... 0 | 4 | 0 |
| இராமலீலை ... | ... | ... 0 | 12 | 0 |

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
புஸ்தக வியாபாரிகள், வேலூர். (தென்னிந்தியா.)




## Extracts from the Preface to Sita's Exile. *

## சீதை வனம் புகுந்த சரிதையின் முகவுரையினின்று தொகுக்கப்பட்டது.

கம்பராமாயணத்தில் ஈற்றதாகிய உத்தர காண்டத்தை இயற்றியவர், கவிச்சக்கரவர்த்தி யாகிய கம்பருக்குக் கவித்திறத்தில் அடுத்த வராம் ஒட்டக்கூத்தப் புலவர். இவர் ஒன்பது சுவைகளையும் இனிது உரைக்கவல்லவராயி னும், கருணரசம் அல்லது சோகரஸத்தை உண்மையில் உள்ளமுருக நன்கு வெளியிட வல்லவரென்பது, இவரது உத்தரகாண்டத்தில் உள்ள "சீதை வனம்புகுபடல"த்தினல் அறியப்படும்.

ஒன்பது சுவையும் மனிதர்க்கு நற்பயன் அளிக்குமாயினும், கருணரஸமொன்றே கல் லான மனமுங் கரைந்துருகச்செய்து, இரக்க மெனுங் குணத்தைத் தருகின்றது. அதனல், பிறர் துன்பங்கண்டால், ஐயோவெனப் பரிதபி த்து உதவிபுரியச்செய்து, மன்னுயிரை உய்விக் கும் மாண்புடையது. இத்துயரச் சுவையின் மெய்ப்பாடுகள்:—கண்ணீர் பெருகல், குரல் மெலிந்து நாத்தழுதழுத்தல், உடல் நடுங்குதல், செயலழிதல் முதலியன. உத்தமகவி சோகச் செய்தியை உரைத்தால் இத்தகையன தோன்றுநிற்கும். இவை தோன்றற்குக் கார ணமான இரக்கம் எங்கு உண்டாகின்றதோ, அங்குச் சர்வேச்வரனும் தோன்றி உறுதியளி ப்பனென்பது துணிபு. இங்ஙனம் ஈச்வரானுக் கிரகம் பெறுவிக்கும் உத்தமகவிகள் பாடிய கருணரஸ சரித்திரங்களைப் படிக்கவேண்டி யது மக்களின் கடமையென்பது மறுக்கவொ ண்ணதது.

அச்சரித்திரங்களிலும், உத்தம ஜனத்தும் வாய்ந்துள்ளமையால் செய்யத்தக்க திருவவதாரமூர்த்தி திரத்தில் கருணரஸச்செய்தியைப் எளிதில் உள்ளநெகிழ்ச்சி உண்டா ஒருதலை; என்னையெனின், நம்மு ளமும் நம் உள்ளமும் முன்னமே மானங் கொண்டுள்ளமையால் என்

திருமால் திருமகள் இவர்களி தார மூர்த்திகள் இராமன் சீ களென்று கொள்ளாவிடினும், குணநல்லொழுக்கங்களெல்லாம் ன்பதை மூர்க்கர்களொழிய உடன்பட்டுப் போற்றுவர். அ இராமசரித்திரம் அதுதோன்றிய டங்கி இதுகாறும் பல்லாண்டுகளா ராலும் மகிமையுள்ளதென்று ப வருகின்றது. இதன் சிறப்பு நோ பலபாஷைகளிலும் பலகவிகளும் பிரபந்தங்களைச் செய்தனர்! ப களும் அதனை நன்குமதித்து, ஆ னல் தமக்குச் சிறப்புண்டாகுமெ னமே பலநூல்கள் இயற்றினர். திரத்தைப் பாடின கவிகளின் ( றைச் சரித்திரம் பாடின கவிகள யினும் அதிகமென்பதும், உத்த வரும் இதனைப் பாடி இன்னும் றனர் என்பதும் நிராக்ஷேபமாக சரித்திரம் பல்லாயிரக்கணக்கில் தோன்றியிருப்பினும், அதனை இன்னும்பற்பலர் பாடிக்கொண்டி இன்னும் எத்தனைபேர் பாடுவார் யோம். ஆதலின், மகாமகிமை பெ விராமாயணத்தில் துயரச்செய்தி என்னத்தக்க "சீதை வனம்பு ஒட்டக்கூத்தப் புலவரால் நன்கு

குணங்கள
நாம் பக்தி
ளின் சரித்
படிப்பதில்,
தமென்பது
ரனேர் உள்
அதில் அபி
க.

ர் திருவவ
த என்பவர்
ிவர்கள் நற்
ரம்பியவரெ
மற்றெவரும்
தனலேயே,
காலம் தொ
யப் பல்லோ
திக்கப்பட்டு
க்கியன்றோ,
பலவகைப்
ிறமதத்தவர்
துதனைப் பாடி
ன்று, அங்ங
இராம சரித்
தொகை மற்
ரின் தொகை
ம, கவிகளை
மேன்மையுற்
னவை. இராம
இதுவரையில்
ய இன்னும்
ருக்கின்றனர்.
களோ? அறி
பொருந்திய இவ்
தனில் ஈற்றது
புகுந்த சரிதம்"
ல் பாடப்பட்டு

* இந்நூல் இப்போது புஸ்தக ரூபமாக அச்சிடப் பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றது. விலை அணு 3. தபாற் செலவு வேறு. சொற்ப காபிகளே அச்சிடப்பட்டிருப்பதனல், வேண்டுபவர்கள் உடனே கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

வி. என் சாமராவ் அண்டு கம்பெனி,
வேலூர், (தென்னிந்தியா.)
V. N. SAMA RAO & Co., VELLORE.

ருப்பினும், தமிழ்ச்செய்யுளைப் படித்தறியும் அறிவில்லாத மக்கட்கு பயன்படாமையைக்கருதி, அது எளிய வசனநடையில் வேலூர் ஊர்ஹீஸ் காலெஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் அவர்களால் எழுதப்பட்டு, ஜனோபகாரியில் சிறிது சிறிதாக மூன்று முறையில் வெளியாயிற்று.

இச்சரித்திரத்தில், உலகத்தோடொட்டவொழுகுதல் நீதியென்பது பிரதானமாக வற்புறுத்தப்படுகின்றது. இதில் இடக்கரான விஷயமேதும் இன்மையால், பாடசாலை மாணவரும், பெண்பாலரும் கூச்சமின்றிப் படிக்கலாமென்பதில் ஐயமில்லை. முக்கியமாக அவர்களை உத்தேசித்தே, இந்நூல் எழுதப்பட்டது.

---

# The Lost Will.

By Mr. M. S. Krishnasamy Aiyar,

## காணமற்போன மரணசாஸனம்,

(82-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 4-ம் அத்தியாயம்.

வைத்தியர் தாம் இனி வரவேண்டியதில்லையென்று சொல்லிவிட்டார். சங்கரய்யருக்கு வரவரப் பலம் அதிகமாக உண்டாயிற்று. வீட்டிற்குள் அவர் தாராளமாய் நடக்கலானார். சுந்தரத்தின் மனம் குளிர்ந்தது. அவள் என்றுமில்லா ஆனந்தங்கொண்டாள். தான் முன்பு புருஷனால் புறக்கணிக்கப்பட்டதை முற்றிலும் மறந்தாள். தனது புருஷன், மகன் ஆகிய இருவர்களுடைய யோகக்ஷேமத்தைப்பற்றிய எண்ணந்தவிர வேறு எண்ணம் அவள்மனதில் உண்டாகவில்லை. தனது சக்களத்தி பொல்லாதவளென்று தெரியவந்ததும், அவளால் தங்களுக்கு ஏதேனும் கெடுதல் உண்டாகலாமென்று பயந்து, தங்களுக்கென்று தனியாகச் சமையல்செய்ய ஆரம்பித்தாள். சேஷியும் அவளும் ஜன்மசத்துருவானார்கள். சேஷி ஒரு வாயாடியின் பெண் ஆதலால், சுந்தரத்தைக் காணும்போதெல்லாம் வெடுவெடுவென்று பேசுவதும், விறைத்துப் பார்ப்பதும், தெய்வத்தைக் கூப்பிடுவதுமாயிருந்தாள். சுந்தரத்தின் முன் அவள் யாருடனாவது பேசினால், சுந்தரத்தைப்பற்றி ஜாடையாகத் தூற்றுவதுண்டு. நீலகண்டனும் பார்வதியும் விளையாடக் கண்டுவிட்டால், சேஷிக்கு ஆத்திரம் வந்துவிடும். பையனையும் பெண்ணையும் கண்டபடி திட்டுவாள். பார்வதியை ஸதா அடிப்பாள். சில ஸமயங்களில் அவள் அடிபொறுக்கமாட்டாமல் சுந்தரத்தினிடம் ஓடிவந்துவிடுவதுண்டு. அப்போது சேஷி, "ஓடு, அங்கேதானே உனக்கு ஆக்கிப்போடப்போகிறா. அவதானே உன்னைவைத்துக் காப்பாற்றப்போகிறா. வா சொல்லுகிறேன்; ஊருக்குப்போ; உன் அப்பனிடத்தில் சொல்லி உன்னைப் பலியிடச்சொல்லுகிறேன்" என்று பலவிதமாகத் திட்டுவாள். சுந்தரம் ஒன்றையும் கவனியாதவள்போல இருந்துவிடுவாள்.

சங்கரய்யருக்கு நாளுக்குநாள் சௌக்கியம் ஏற்பட்டது. ஆனால், ஒரு மனோவியாதி மாத்ரம் இருந்துகொண்டுவந்தது. தனது இளையாளிடத்தில் தாம்கொண்ட வெறுப்பு அதிகரிக்கவே, அவளது செயல்களிலெல்லாம் குற்றம் கற்பிக்கலானார். அவளை எப்படியாவது அவளுடைய பிறந்தகத்துக்கு அனுப்பி, மானமோ அவமானமோ பிறந்தகத்திலேயே இருக்கட்டுமென்று எண்ணினார்.

சேஷியின் ஸஹோதரர் ஒருவர் சங்கரய்யரைப் பார்க்கவந்தார். அவர் இரண்டொருநாள் தங்கியிருந்தார். தமது ஸஹோதரியின் நிலைமையைக் கண்டு, மனம்பொறாதவராய், சங்கரய்யரிடம் குறைகூறினார்; சுந்தரத்தைப் பிறந்தகத்துக்கு அனுப்பும்படி போதித்தார். சங்கரய்யர் இதற்கு ஸம்மதிக்கவில்லை. அதற்குப்பதிலாக சேஷியைப் பிறந்தகம் கூட்டிக்கொண்டு போகும்படி சொன்னார். ஸஹோதரருக்குக் கோபம் வந்துவிட்டது. ஏகதேசமாகச் சில வார்த்தைகள் சொன்னார். சங்கரய்யர் அவள்நடத்தையைப் பற்றிக் குறைகூறி, அவளிங்கிருப்பது கூடாதென்று கண்டித்துவிட்டார். ஸஹோதரர் கோபத்தையடக்கிக்கொண்டு, ஏதாவது வழிசெய்வதாக ஒப்புக்கொண்டார்.

15-நாள்கள் சென்றன. ஒருநாள் சங்கரய்யர் திடீரென்று உடம்பு அசௌக்கியமடைந்தார். வாந்தியும் பேதியும் உபத்ரவம் செய்தன. வைத்யர்கள் தங்களாலானமட்டும் சிகித்ஸைசெய்து வியாதியின் உக்கிரத்தைத் தணித்தும், நாலைந்துநாள்வரையில் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்து பிறகு ஒருநாள் காலையில் காலகதியடைந்துவிட்டார்.

சுந்தரத்தின் துக்கத்துக்கு எல்லையேயில்லை. கண்ணில்லான் பெற்றிழந்தானென மனம் முறிந்தாள்; அலறினாள்; அழுதாள்; தரையில் புரண்டாள். என்னசெய்துமென்ன? போனவர் திரும்பி வருவதேது?

சேஷியைப்போல் துக்கம் காட்டினவர் ஒருவரும் இல்லையென்னலாம். நூதனமாயெழுதி வெளியிடப்பட்டுள்ள ஒப்பாரிகளையெல்லாம் பாடினாள். கண்ணிலிருந்து தாரைதாரையாக ஜலம் வடித்தாள். தரையில் புரண்டுபுரண்டு அழுதாள். அவளுடைய தலைவிரிகோலத்தையும் துக்கமான முகத்தையும் கண்டு, ஊரிலுள்ளோரெல்லாரும் அவளைக்குறித்துப் பரிதாபப்பட்டார்கள்.

முதல்நாளும் இரண்டாம்நாளும் நடக்கவேண்டிய உத்தரக்கிரியைகளெல்லாம் நடைபெற்றன. மூன்றாம்நாள், சங்கரய்யரோடு வாதாடிய சாம்பசிவய்யர் என்னும் சேஷியின் தமையன், ஸொத்துக்களுக்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறதென்பதைப் பார்த்து ஒருவிதமாக எல்லா விஷயங்களையும் தீர்க்கவேண்டுமென்று சொன்னார். அவருக்கு மூத்த தமையனும், பார்வதியின் தந்தையுமாகிய கோவிந்தய்யர், எல்லாம் பொறுத்துக்கொள்ளலாமென்றும், பதின்மூன்றுநாள் காரியங்களும் ஆன பிறகு அவைகளைப்பற்றிக் கவனிக்கலாமென்றும் எவ்வளவோ சொல்லியும், சாம்பசிவய்யர் கேட்கவில்லை; உயிலை (மரணசாஸனத்தை)க் கொண்டுவரும்படி கட்டாயப்படுத்தினார். ராமய்யரும் 'எப்போது இதைக்கவனித்தால் என்ன? எப்படியிருந்தாலும் என்றைக்காவது ஒருநாள் இவ்விஷயங்களைப்பற்றி முடிவு செய்யவேண்டியதுதானே' என்று எண்ணி ஸம்மதித்தார். சுந்தரத்தினிடம்போய், உயிலைப்பார்த்து அதில் கண்டபடி ஸொத்தைப் பாகம்செய்து அவரவர்களுக்குச் சேரவேண்டியதைக் கொடுக்கும்படி சேஷி வீட்டார் கட்டாயப்படுத்துகிறார்களென்றும், எப்படியிருந்தாலும், என்றைக்காவது ஒருநாள் பாகம் செய்யவேண்டுமாகையால், அதை இப்போதே செய்து தீர்த்துவிடுவது நல்லதென்றும் சொன்னார். சுந்தரம் தனது நாயகனைப்பற்றிப் பலவாறு பிரலாபித்துவிட்டு, தானும் உயிலைப்பற்றிய நடவடிக்கைகளை மறைவிலிருந்து கேட்கும்படி ஒரு குறிப்பிட்ட இடத்தில் உட்கார்ந்து பேசவேண்டுமென்று சொல்லி, சங்கரய்யருடைய இரும்புப் பெட்டியின் சாவியை அவரிடம் கொடுத்தாள்.

ராமய்யர் அதை வாங்கிக்கொண்டுவந்து, எல்லாரையும் இரும்புப்பெட்டி வைக்கப்பட்டுள்ள அறைக்குக் கூட்டிக் கொண்டுபோய், அதைத் திறந்து, கடுதாசிகளைப் புரட்டி, உயில்வைத்திருந்த ஒரு கடுதாசி உறையை எடுத்து, வந்திருந்தோரில் பெரியவராயிருந்த அவ்வூர் குப்பா சாஸ்திரிகளிடம் கொடுத்தார். குப்பா சாஸ்திரிகள் சங்கரய்யருடைய சிறிய தந்தைக்கு மாமனாவர்.

குப்பா சாஸ்திரிகள் அதை எடுத்துக்கொண்டு, கூடத்துக்கு வந்து பிரித்து வாசித்தார். அதில் பின்வருமாறு ஸொத்துகள் விநியோ

கம் செய்யப்பட்டிருந்தன: மொத்தம் ஸொத்துக்கள் 25 ஏக்கர் நன்செய்யும், 10 ஏக்கர் புன்செய்யும், 4 தோட்டங்களுமாகும். தவிர, இரண்டு வீடுகள் உண்டு. சில தொகைகள் நிலத்தின்மேல் கடன் கொடுக்கப்பட்டிருந்தன. இவற்றில் ஒரு சிறு வீடும், 2 ஏக்கர் நிலமும் சுந்தரத்துக்கும், அவள்மகன் நீலகண்டனுக்கும் கொடுக்கப்பட்டன. மற்றவைகளெல்லாம் சேஷிக்கும், அவளுடைய ஆறுமாஸக் குழந்தைக்கும் விடப்பட்டன. சங்கரய்யருக்கு வரவேண்டிய கடன் தொகைகளில் ஒரு சிறு தொகை மாத்ரம் நீலகண்டனுக்கு வைக்கப்பட்டது. இதைக்கேட்டதும் சுந்தரமும் ராமய்யரும் வியப்பும் கவலையும் கொண்டார்கள். ஊரிலுள்ளவர்களுள் அங்குவந்திருந்த குப்பா சாஸ்திரிகள் முதலானோரும் வியப்படைந்தார்கள்.

"வேறேவிதமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்களே. நீலகண்டனுக்கு ஆஸ்தி அதிகம் வைத்திருக்கிறதென்று சொன்னார்களே" என்றார் ஒருவர்.

"நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன்; இளையாளுக்கு ஜீவனம்சத்துக்கு இரண்டொரு காணி வைத்திருந்ததாகவும் கேள்விப்பட்டேன்" என்றார் இன்னொருவர்.

அலமேலம்மாளின் புருஷன், உடனே, "அதென்ன அப்படிச்சொல்லுகிறீர்கள்? சங்கரய்யர் அப்படிச் செய்யப்பட்டவரா? அவர் உங்கள் தங்கையிடம், (சாம்பசிவய்யரைப் பார்த்துக்கொண்டு), இருந்த ப்ரியத்துக்கு அப்படிச் செய்திருப்பாரா? இப்போது செய்திருப்பது தான் சரி. அவர் மனதில் எண்ணியிருந்தபடியே செய்திருக்கிறார்" என்றார்.

குப்பா சாஸ்திரிகள் ஸபையைப் பார்த்துப் பின் வருமாறு சொன்னார்: "நான் கேள்விப்பட்டது வேறு: இதில் எழுதியிருப்பது வேறாக இருக்கிறதே: இதென்ன சரியான உயிலா? அல்லது, முதலில் சங்கரன் எழுதிவைத்திருக்கக்கூடிய கைக்குறிப்பு நகலா? ஒரு ஸமயம், முதல்ஸம்ஸாரத்தைக் கூட்டிக்கொண்டு வருவதற்கு முன்னால், அதாவது அவன் உடம்பு அஸௌக்கியமாய்ப் படுத்துக்கொள்வதற்கு முன்னால், ஏதாவது உயில் எழுதிவைத்திருந்தானோ? அதுவோ இது? எல்லாவற்றிற்கும் பெட்டியில் வேறு ஏதாவது உயில் பத்திரம் இருக்கிறதா என்று பாருங்கள். எப்படியிருந்தாலென்ன? அவன்ஸொத்து அவனிஷ்டப்படி பாகம் செய்யவேண்டியதுதான் நியாயம்."

சாம்பசிவய்யருக்குக் கோபம்வந்துவிட்டது. "என் சாஸ்திரிகளே, என் எங்களைக்கண்டால் உங்களுக்கு ஆகவில்லை? இந்த உயில் கைக்குறிப்பு நகலுமன்று; பொய்நகலுமன்று: 20 நாளைக்குமுன் ரெஜிஸ்டராபீஸில் ரெஜிஸ்டர்செய்த உயிலாக்கும். இந்தமாதிரி ஏதாவது பேச்சு வருமென்றுதான் அவர் ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்றார். ஏது? ரெஜிஸ்டர் செய்யாவிட்டால் இன்னும் வேறு இருக்கிறதுபோலிருக்கிறதே."

"ஐயா, கோபித்துக்கொள்ளாதேயும். எனக்கு எல்லாரும் ஸரிதான். நீரானால் என்ன, ராமய்யரானால் என்ன? எல்லோரும் ஸௌக்கியமாயும் க்ஷேமமாயும் இருக்கவேண்டியது தான் என் பிரார்த்தனை. முன்பு வேறு விதமாய் ஸொத்தைப் பிரித்துவைத்துப் போயிருக்கிறதாகச் சொல்லிக்கொண்டார்கள்; அதற்காகச் சொன்னதே தவிர வேறு இல்லை" என்றார் குப்பா சாஸ்திரிகள்.

"அதற்கென்ன, பெட்டியை வேண்டுமானால் இன்னும் நன்றாய்ப்பார்த்துவிடுகிறது தானே. பத்திரம் ரெஜிஸ்டராகியிருக்கிறபோது ஸந்தேகமென்ன?" என்றார் அலமேலுவின் புருஷன்.

கோவிந்தய்யரும் அதை ஆமோதிக்கவே, மறுபடியும் பெட்டி பரிசோதிக்கப்பட்டது. ஆனால் உயில் ஸம்பந்தமாக ஒரு துண்டு கடுதாசியும் கிடைக்கவில்லை.

சாம்பசிவய்யர், குப்பா சாஸ்திரிகளைப் பார்த்து, "தாங்கள் கோபித்துக்கொண்டுவிட்டாற்



போலிருக்கிறது. வேறுவிதமாக உயில் எழுதுவதாக முன்பு ஒரு பேச்சு இருந்ததென்பது வாஸ்தவந்தான். அப்போது அவர் விஷயமெல்லாவற்றையும் கவனிக்கவில்லை. மூத்தாளை இதுவரையில் தள்ளிவைத்திருந்ததற்கு ஈடாகவும், பையனுடைய ஸௌக்கியத்தை உத்தேசித்தும், அவர்களுக்கு அதிகஸொத்து வைக்கிறதாக அவர் உத்தேசித்திருந்தார். ஆனால், இளையாளையும் அவள்குழந்தையையும் கவனித்துக்கொள்ளவேண்டும்; அவர்களைத் தெருவில் நிறுத்தக்கூடாதென்று எடுத்துச் சொன்னதன்மேல், இப்படிச் செய்திருக்கிறார். இதில் என்ன புரியாததிருக்கிறது?" என்றார்.

குப்பா சாஸ்திரிகள் உயிலைத் தம்மிடம் கட்டச்சொன்னார். உயிலில் அலமேலு புருஷன் நாராயண வாத்தியாரும், பள்ளிக்கூட வாத்தியார் ராமகிருஷ்ணய்யரும் கையெழுத்துப் போட்டிருந்தார்கள். உயிலை நன்றாய்ப் பார்த்துவிட்டு, "சரிதான், இரண்டு வாத்தியாரும் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள்" என்று சொல்லி, உயிலை ஸாம்பசிவய்யரிடம் கொடுத்தார். உயிலில் கண்டபடி ஸொத்துக்கள் விநியோகம் செய்யப்பட்டன. சுந்தரத்துக்கும் அவள்குமாரனுக்கும் இரண்டு ஏக்கர் நிலமும், ஒரு கூரைவீடும் கிடைத்தன. வீடும் போக்கியம் வைக்கப்பட்டிருந்ததால், அது கடன் அடையும் வரையில் கிடைப்பதற்கில்லாமலிருந்தது. அந்தக்கடனை அடைப்பதற்காக, ஸ்கூல் வாத்தியார் ராமகிருஷ்ண அய்யர் கொடுக்கவேண்டிய எழுநூற்றுச் சொச்சம் ரூபாயை நீலகண்டன் அடையவேண்டுமென்றுமிருந்தது.

சுந்தரத்துக்குத் துக்கம் ஏகமாய் மேலிடலாயிற்று. தனது கணவன் தன்னையும் தன் குழந்தையையும் இப்படி மோசம் செய்யலாமா என்று நொந்தாள்; தன்னை வெறுத்துக்கொண்டாள். தனது புருஷன் தன்னையழைத்து வந்து தன்னிடம் பிரியம் காட்டி, தனக்கு ஆசைவார்த்தைகள் சொல்லி வந்தது கனவு போலாயிற்றே என்றேங்கினாள். தன்முன் தனது சக்களத்தியைப் பலவிதமாகத் தூற்றியிருக்க, உயிலில் மாத்திரம் ஸொத்துக்களில் பெரும்பாகத்தை அவளுக்கும் அவள் குழந்தைக்கும் வைத்துப்போயிருப்பது அவளுக்கு விளங்கவில்லை. தன்னிடம் அவ்வளவு பிரியங்காட்டி, உடம்பு நடுவில் சொஸ்தமானபோது முன்போல் தன்னிடம் ஸந்தோஷமாயிருந்து வந்தவர் திடீரென்று மனம்மாறியதன் காரணம் அவளுக்குத் தெரியவில்லை. 20-நாளைக்கு முன் உயிலில் தன்னையும் தனது குழந்தையையும் அலக்ஷியம்செய்து குறைவான ஸொத்துகள் கொடுத்துவிட்டவர், அதற்குப்பின் சிலநாள்கள் தன்னுடன் கூடிக்குலாவிக்கொண்டிருக்கக் காரணமென்ன? அதற்குப்பிறகு, அவர் மறுபடியும் வியாதிபட்டபோதும், தன்னையே சிசுரூஷை செய்யச்சொல்லக் காரணமென்ன? இறந்துபோகும்போதும் தன் மடியிலேயே இறக்கக் காரணமென்ன? இவைகளெல்லாம் புதிர்கள்போலிருந்தன. தனது கணவன் தன்னைச் சிறிதுகாலம் ஸந்தோஷமாயிருக்கச் செய்ய இப்படி வேடிக்கை செய்தாரோ என்று எண்ணினாள். தன்னை வேண்டுமென்றே ஆசைவார்த்தைக்காட்டிக் கடைசியில் மோசஞ் செய்ததாக எண்ணி வருந்தினாள்.

உத்தரக்கிரியைகள் எல்லாம் நடந்து சுபஸ்வீகாரணம் முடிந்ததும், ராமய்யரும் சுந்தரமும் இனி அவ்வூரில் இருப்பது தகுதியல்லவென எண்ணி, நிலங்களைக் குப்பாசாஸ்திரிகள்மூலமாய்க் குத்தகைக்கு அடைத்துவிட்டு, பையனுடன் ஊருக்குப்போய் விட்டார்கள். குப்பாசாஸ்திரிகள் ஒருவர்தான் இவர்களிடம் அனுதாபம் காட்டினார். நிலவிஷயத்தில் ஒன்றும் கவலைப்படவேண்டியதில்லையென்றும், வருஷாவருஷம் பணமாகவோ நெல்லாகவோ, குத்தகையைத் தவறாமல் அனுப்ப ஏற்பாடு செய்வதாகவும், ராமகிருஷ்ணய்யரிடமிருந்து பணத்தை வாங்கி வீட்டைத் திருப்பிவிடுவதாகவும், இவைகள் விஷயமாய் ஒன்றும் கவலைப்படவேண்டியதில்லையென்றும் சொல்லி அவர்களை ஊருக்கு அனுப்பினார். (தொடரும்)

எம். எஸ். கிருஷ்ணசாமி அய்யர்.

# Gleanings.
## விசேஷத்திரட்டு.

### TOOTH STICK.
#### பற்குச்சி.

பல்துலக்க முள்ளுள்ளமரங்களின் குச்சிகளும் பாலுள்ள மரங்களின் குச்சிகளும் சிறந்தவைகள். 8-அங்குலம் நீளமுள்ளதாவது 12-அங்குலம் நீளமுள்ளதாவது நல்லது. கருங்காலி, அடம்பு, புன்கு, விளா, மூங்கில், பெருங்காயமரம், வேம்பு, நாவல்மரம், நாயுருவி, பில்வம், எருக்கு, அத்தி, மாமரம், புன்னை, வாகை, பிச்சிச்செடி, அரளி, ஆல், வேங்கை, இலந்தை, மருதை, வேலஞ்செடி, ஞாழல், குங்கிலியமரம், மாதுளை இந்த மரங்களின் குச்சிகளை நன்றாய்ப் பரிசோதித்து, நுனியைநசுக்கி, துர்க்கந்தமற்றதும் ஒழுங்காயுள்ளதும், மேல்பாகத்தில் தோலுள்ளதுமாக எடுத்து நன்றாய்க் கழுவி, கசப்பு, துவர்ப்பு, உவர்ப்பு ரஸமுள்ளதான குச்சியால் பற்களைத் தேய்க்கவேண்டும். பற்றுலக்கும்பொழுது பேசக்கூடாது. சிறிய பற்களுள்ளவனுக்கு மெலிந்ததும், நடுத்தரமான பற்களுள்ளவனுக்கு நடுத்தரமானதும், பருத்த பற்களுள்ளவனுக்குப் பருத்ததுமாகப் பற்குச்சி மூன்றுவிதமாகும்.

இந்தக் குச்சிகளை உபயோகிப்பதனால் விசேஷமான நன்மைகள் உண்டாகுமாம், குங்கிலியக்குச்சியால் தைரியமும், ஆலங்குச்சியால் காந்தியும், புன்கினால் போர்களத்தில் ஜயமும், இரளிக்குச்சியால் பொருளேற்றமும், இலந்தையால் இனிமையான குரலும், கருங்காலியால் நல்ல மணமும், வில்வத்தால் தனத்தின் விரிவும், அத்தியால் நல்வாக்கியமும், இலுப்பையால் உறுதியான அறிவும், கரும்பால் யசஸ்ஸும், நல்ல பாக்கியமும், புரசால் உத்தமமான வித்தியும், அடம்பால் லக்ஷ்மீ விலாஸமும், மாங்குச்சியால் ஆரோக்கியமும், நாயுருவியால் தைரியமும், புதிதுபுதிதாகத் தோற்றமும், சரீரபுஷ்டியும், நல்லறிவும், ஆயுஸும், நல்லசீலமும், யசஸ்ஸும், லக்ஷ்மியும், நல்லபாக்கியமும், எருக்கால் ரோகநாசமும், கொம்மட்டிமாதுளையால் கஷ்டநிவிருத்தியும், மருதால் நரைதிரையற்ற தீர்க்காயுஸும், மாதுளை, நொச்சில், சேமந்தி, மருது, பிச்சி, பெருங்களா இவைகளால் துஸ்ஸ்வப்பனநாசமும் பயனாக ஏற்படும். பல்துலக்கப்படும்பொழுது, பற்களுக்கருகிலுள்ள மாம்ஸங்களுக்கு பீடையுண்டாகாமலும், ரத்தம் வாராமலும், மெதுவாகப் பல்விடுக்கிலுள்ளதையும் நாக்கிலுள்ளதையும் குச்சியால் தேய்க்கவேண்டும்.—ஆர்யதர்மம்.

---

### GIDDINESS.
#### தலைசுற்றல்.

“சிரோ ப்ரமணம்” என்றும் “தலைசுற்றல்” என்றும் கூறப்படும் இந்த விகாரம் அனைவருக்கும் சர்தாரணமாகத் தெரிந்ததே. இது சிரசில் இயற்கைக்கு விரோதமாக இரத்தவோட்டம் நேரிடுவதால், அடிக்கடி ஸம்பவிக்கிறதென்றும், ஆனால் தத்வத்தை மிகவும் கவனித்துப்பரீக்ஷித்தால், ஸாதாரணமாய் இரத்தவோட்டம் மூளையில் முரண்படுவதனால் அல்லது அளவில் மிக்குறைவதனால் ஸம்பவிப்பதாகத் தெரியவருகிறதென்றும், பாமிலி டாக்டர் என்னும் பத்திரிகை கூறுகிறது; என்று மூளையில் ரத்தவோட்டக்குறைவினால் பாண்டுரோகம் போன்ற கோளாறு உண்டாவதனால் தலைசுற்றல் அடிக்கடி ஏற்படக்கூடுமென்று அறியப்படுகிறது. தேகம் இங்குமங்கும் தள்ளாடிவிழாத ஒரு ஒழுங்கான ஸ்திராக்கிய நிலைமையில் காக்கும் சக்தி குறைவுபடுவதனாலேயே வெகு ஸாதாரணமாய்த் தலைசுற்றல் உண்டாவது வழக்கம்; அப்பொழுது அம்மனிதன் நிற்கமுடியாமல் (அல்லது தேகத்தைத் தாங்கிக்கொள்ளும் திறமையிழந்து) பூமியில் விழுவான்.

இந்த நிலைமை பாண்டுரோகத்தைக் காரணமாகக்கொண்டு ஸம்பவித்ததானால், தலையைச் சாய்த்து, தலையைவிட உடல் சிறிது உயர்ந்து இருக்கும்படி செய்யவேண்டும்; மூளைக்கு இரத்தம் சுறுசுறுப்பாய் ஓடும்படி ஸௌகரியம் செய்வது அவசியம்; அப்படிச் செய்தால், மூளை தனது இயற்கையான வேலையைச் செய்ய முயன்று தலைச்சுற்றலும் நிவிருத்தியாகும்.

ஹிருதயம் பலங்குன்றித் துடித்து வருவதும் தலைசுற்றலுக்கு ஒரு காரணமாகும்; அப்பொழுது ஹிருதயம் மூளைக்கு இரத்தத்தை ஒழுங்கீனமாக மூளையின் இரத்தக்குழாய்களின் மூலமாய் இறைக்கும்; ஆகவே, தலைசுற்றல் இதனால் உண்டாவது வழக்கம்.

வயிற்றுப்பொருமலால் இரைப்பை மேற்புறமாகத் தள்ளப்பட்டு, ஹிருதயத்தின் செயலுக்கு ஒருவாறு இடையூறு நேரிடுவதும் உண்டு; அப்பொழுதும் தலைசுற்றல் ஸம்பவிக்கக்கூடும்.

திடீரென்று ஒரு மனிதன் தலையைக்குனிந்து கீழ்நோக்கிப்பார்த்தாலும், (அவன் பலக்குறைவாயிருந்தால்) அவனுக்குத் தற்காலம்மூளையில் இரத்தவோட்டம்குறைந்து இந்த விகாரம் உண்டாவது வழக்கம்.



எந்தக்காரணத்தினால் தலைசுற்றல் உண்டானாலும், உடனே தலையைச்சாய்த்துக் கீழே படுத்துக்கொள்வது அவசியம். உடனே வெந்நீரைக் குடிப்பதும் குளிர்ந்த ஜலத்தால் தலையை நனைப்பதும் நன்மையுண்டாக்கும்.

வெய்யிலில் அதிகமாகத் திரிவதனால் நேரிடக்கூடிய தலைசுற்றல் பலபேருக்கு உண்டு. அவர்கள் உடனே நிழலில்வந்து தரையில் படுத்துக்கொள்ளவேண்டும்.—வைத்திய கலாநிதி.

---

### SOME USES OF HOT WATER.
#### வெந்நீரின் சில உபயோகங்கள்.

வெந்நீரை வைத்தியத்தில் உபயோகப்படுத்தாதவர் ஒருவருமில்லை. வயிற்றுநோய், மார்புநோய், மூச்சடைப்பு, சீல்வாயு, தொண்டை நோய் இவைகளுக்கு ஸாதாரணமாய் வெந்நீரை உபயோகப்படுத்த அதனால் சுகம் ஏற்படுவதுண்டு. குழந்தைகளுக்கு நெஞ்சில் கபம் கட்டியிருந்தால் ஒரு கம்பளித்துண்டைக் கொதிக்கக் காய்ச்சிய வெந்நீரில் தோய்த்துப் பிழிந்து, மார்பிலும் தொண்டையிலும் ஒற்றடம் கொடுத்தால் கபம் கரைந்துபோகும். பல்நோய் கண்டாலும், சைத்யத்தால் கன்னத்தில் நரம்பு நொந்தாலும் வெந்நீர் ஒற்றடம் கொடுக்க லகுவாகும். தலைநோய் கண்டால் கால்களை வெந்நீரில் வைத்துக்கொண்டு பிடரியிலும் வெந்நீர் ஒற்றடம் கொடுத்தால் நீங்கிப்போகும். கட்டிகளை வெந்நீரால் அலம்புவதே ஹிதமான உபசாரமாகும். தலையில் அடிக்கடி மயக்கம் உண்டானால், வெதுவெதுப்பாயுள்ள வெந்நீரில் கால்மணிநேரம் முழங்கால்வரையிலும் வைத்திருந்து எடுத்தால், தலைமயக்கம் குணமடையும். கபம், இருமல், வயிற்றுவலி, மார்புநோய் முதலியவைகளுக்கு வெந்நீரைவிடச் சிரேஷ்டமானது கோதுமைத் தவிடு ஒற்றடமே. இந்த வியாதிகளுக்குக் கோதுமைத் தவிட்டைச் சட்டியில்போட்டுத் தண்ணீர்தெளித்து, நன்றாய் ஆவிகிளம்பவறுத்து, கம்பளித்துணியில்போட்டு ஒற்றடம் கொடுக்கவேண்டியது. இது ஆறுவதற்குமுன் வேறொன்று வறுத்துவந்து மாறிமாறி, ஒற்றடம் அரைமணிநேரம் கொடுத்தால், உடனே நல்ல ஸுகமும் ஆறுதலும் கிடைக்கும். ஒற்றடம் கொடுத்து முடிந்தவுடன், கொடுத்த இடத்திலுள்ள வியர்வையை நன்றாய்த் துடைத்துவிட்டு, கற்பூரத்தைலம் முதலிய தைலங்களை லேசாய்த் தடவவேண்டும். இந்த வியாதிகளுக்கெல்லாம் உள்ளுக்கு மருந்துகொடுத்து வந்தாலும் மேலுக்குச் செய்யும் இந்தச்சிகித்சையினால் வியாதிஸ்தருக்கு நல்ல ஆறுதலும் ஸுகமும் உண்டாகும்.—ஜனாபிமானி.

---

### EARLY RISING.
#### காலையில் எழுந்திருத்தல்.

அதிகாலையில் தூக்கத்தைவிட்டெழுந்திருப்பது அவசியமென்பது எல்லாத் தேசத்தாராலும்எல்லா மதஸ்தர்களாலும் விதிக்கப்பட்டிருக்கிறது. வைத்தியசாஸ்திரக்காரர்களும் இந்த வழக்கம் மிக உசிதமானதென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

இந்துசாஸ்திரப்படி ஒவ்வொருவரும் பிராம்மமுகூர்த்தத்தில் எழுந்திருந்து, மலஜல நிவிருத்திக்காக இருப்பிடத்தைவிட்டு முக்கால்மைல்தூரம் மேற்குமுகமாய்ப் போகவேண்டுமென்றும், பின்பு தந்தசுத்தி செய்து, ஸ்நானம் முடித்து, சூரியோதயத்துக்குள் ஸந்தியாவந்தனம் செய்தாகவேண்டுமென்றும், சொல்லப்பட்டிருக்கிறது. பிராம்மமுகூர்த்தமென்பது சூரியோதயத்திற்கு முந்தி ஒன்றரைமணி நேரம். ஆகவே, நாலரைமணிக்கு எழுந்திருக்கவேண்டியது கிரமம். ஔவையாரும் “வைகறைத்துயிலெழு” என்று ஆஜ்ஞாபித்திருக்கிறாள். ஆங்கிலத்திலும் இந்த அபிப்பிராயத்தைத் தழுவிய பழமொழிகள் இருக்கின்றன. இந்து சாஸ்திரங்களில் வைதிகக் கடமைகளைக் காலத்தில் செய்யும் பொருட்டாக, காலையில் எழுதல் வேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கிறது. ஆங்கிலத்திலோ, லௌகிக காரியங்களை நன்றாய்ச் செய்யும்பொருட்டாகவே காலையில் எழவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்பழமொழிகளாவன:—

“பொழுதோடு படுத்துப் பொழுதோடும் எழுவோர்
தழுவுவர் தேகசுகம் தனம் அறிவே”.
“ஆக்கம் அடைபவன் விடியுமுன் எழுக;
ஆக்கம் அடைந்தவர் விடிந்தபின் எழலாம்”.

இந்த நாளில் வாலிபர்கள் முன்னிரவில் அதிகநேரம் விழித்திருப்பதும், காலையில் 7, 8-மணி வரை தூங்குவதும், அல்லது படுக்கையில் கிடந்து புரளுவதும் சாதாரணமாயிருக்கிறது. இது மிகவும் கெட்ட வழக்கம். அப்படிச் செய்கிறவர்கள், இந்தக் கெட்ட வழக்கத்தை விட்டு, ஸகல சாஸ்திரங்களாலும் பெரியோர்களாலும் நன்கு மதிக்கப்பட்டிருக்கிற நல்ல வழக்கத்தைக் கைக்கொள்ளுவதே உத்தமம்.—தமிழர் நேசன்.

# Dreams.

By Mr. K. P. Seshadri Aiyangar.

## ஸ்வப்னம்.

நாம் நித்திரைபுரியுங்கால் நமது கர்மேந்திரியங்களெல்லாம் அடங்கி ஒடுங்கிக்கிடக்கின்றன. ஆனால் மனோசக்தி மாத்திரம் தன் காரியத்தைச் செய்துவருகிறது. அந்த மனோசக்தி விளையாடும் விளையாட்டாக ஸ்வப்னத்தைச் சொல்லலாம். ஸ்வப்னம் என்பது மிகவும் ஆச்சரியகரமானது. இதன் உண்மையான காரணங்களை இதுவரையில் ஒருவரும் கண்டுபிடித்தார்களில்லை. அதியத்புதமாயிருக்கிற சில விஷயங்களில் இந்த ஸ்வப்னம் என்பது ஒன்று.

கனவென்பது பகவானால் நமக்குப் பின்வரும் சுபாசுபங்களை முன்னமேயே யறிந்துகொள்ள அனுப்பப்படுந் தூது என்று பழைய காலத்தில் சில பெரியவர்கள் நம்பியிருந்தார்கள். இதற்கு உதாரணமாக ராமாயணத்தில் பரதன் தன் தகப்பனாரான தசரதன் இறப்பதற்குமுன் கண்ட கனவு, சீதை, சூடாமணியைக்கொண்டு ஹனுமான் லங்கைக்குச் சென்று பிராட்டியாரைக் காண்பதற்குமுன் கண்ட ஸ்வப்னம்; ஹரிச்சந்திரன் தன் பத்தினியான சந்திரமதியை ராஜாக்ஞையால் சிரச்சேதம் செய்வதற்குமுன் கண்ட கனவு இவைகளை நம்மவர்கள் யாவரும் படித்திருக்கலாம். கனவைத் தூதாக எண்ணியவர்கள் நம்தேசத்தார்மட்டுமல்ல. பிரபஞ்சத்திலுள்ள எத்தேசத்தினரும், எம்மதத்தினரும் இக்கனவு என்பதைத்தத்தம் முழுமுதற்கடவுளால் அனுப்பப்பட்ட தூது என்றே எண்ணி பூரணமாக நம்பிவந்தார்கள். இதற்கு திருஷ்டாந்தம் :—

நாகரிகம், கல்விகேள்விகளிற் வெகு காலத்திற்குமுன்பே பிரக்யாதிபெற்ற ரோம், க்ரீஸ் முதலான இடங்களில் கனவு ஈசுவரனால் அனுப்பப்பட்ட தூது என்ற கொள்கை முற்றிலுமிருந்தது. இந்தக் கொள்கை வெகுவாக முற்றியிருந்த காலம் அகஸ்டஸ் ஸீஸர் என்னும் ரோமாபுரியின் சக்கரவர்த்தி ராஜ்யபாரம் வகித்துக்கொண்டிருந்த காலந்தான். தன் ராஜ்யத்தில் ஒவ்வொருவனும் தான் இரவில் காணும் கனவை அரண்மனையில் வந்து பதியவைத்துப் போகவேண்டுமென்று இட்டமிட்டிருந்தான். பதியவைக்கத் தவறினால் தண்டனையும் ஏற்படுத்தியிருந்தான். அந்த சக்கரவர்த்திக்குப் பின்னால் ஜூலியஸ் ஸீஸர் என்பவன் அரசனானான். அவனுக்கு காலிபோர்னியா என்னும் சுந்தரமடந்தை மனைவி. ஜூலியஸ் ஸீஸர்க்கும் குடிகளுக்கும் கொஞ்சம் மனஸ்தாபமும் சச்சரவும் இருந்துவந்தன. இப்படியிருக்குங் காலையில் ஒருநாளிரவு காலிபோர்னியா ஒரு கனவு கண்டாள். மிகவும் பயங்கரமானகனவு. திடீரென்றுகண்விழித்து ஓவென்று கதறி அலறி தன் கணவனை எழுப்பி "நாதா! என்றைக்கும் காணாததும் எப்பொழுதும் கேழ்க்கப்படாததுமான ஒரு பயங்கரமான கனவு கண்டேன். வீதிகளில் பெண் சிங்கங்கள் குட்டிகளை ஈன்றன. சமாதிகளெல்லாம் திறந்து இறந்தவர்களை வெளிக்கிளப்பின. பராக்ரமும் வீரமும் பொருந்திய யுத்தவீரர்கள் மேகங்களோடு யுத்தம்புரிந்தனர். அவ்விதம் சமர்செய்யும்போது சிம்மாதனத்தின்மீது ரத்தம் மழையாக வருஷித்தது. குதிரைகள் யாவும் கனைத்தன; மனிதர்கள் இறக்கும் தருணத்தில் மரணவேதனையால் வீறிட்டனர். பிசாசங்கள் பேரிரைச்சலுடன் தெருத்தெருவாக அலைந்து திரிந்தன. ஹே! ஸீஸர்! ஐயோ! இம்மாதிரியான கனவை ஒருவரும் கண்டிருக்கமாட்டார்கள்; கேட்டுமிருக்கமாட்டார்கள். வழக்கத்தில் வராதகனவாகவன்றோ இது இருக்கிறது. நமக்கு என்ன கெடுதி சம்பவிக்கப்போகிறதோ தெரியவில்லையே! ஐயோ! காதல: ,என்செய்வது. பின் வரப்போகும் கெடுதியை இக்கனவு முன்னமேயே சூசிப்பிக்கும் என்பார்களே! ஏதோ ஒரு அசுபம் கட்டாயமாய் வெகு சீக்கிரத்தில் வரப்போகிறது. அதென்னமோ நான் அறியேன்" என்று மிகவும் பயந்து தன் கணவனுடன் சொன்னாள். காலிபோர்னியா கண்டகனவு மறுதினமே நிதர்சனமாகிவிட்டது. ஜூலியஸ் தன் சிம்மாதனத்தில் வீற்றிருக்கும் சமயத்தில், குடிகளில் மூவர் கத்திகளை அவன் மார்பில் பாய்ச்சினர்; ரத்தவெள்ளம் பெருகியது. ஜூலியஸ் ஸீஸர் கொல்லப்பட்டான்.

சில கவிகள் இந்த உலகம் எப்படி பொய்யோ அதுபோல கனவு என்பதும் தூக்கத்தாலுண்டாகும் பொய்த்தோற்றமென்பார்கள். இது கவனமேயல்லாது கனவின் காரணங்களைக் கூறும் சாஸ்திரமல்ல.

ஆனால் கனவு என்பது என்ன? அது நமது விழிப்புக்காலங்களில் நமது புத்தியில் படியும் எண்ணங்களின் பிரதிபிம்பம் என்று ஒருவாறு சொல்லலாம். தூக்கத்தில் உண்டாகி விழிப்புக் காலத்தில் உண்டாகாதபடியால், அநேகவித விசித்திரத்துடன் கனவு நிறைந்திருக்கின்றது. ஒருவன் விழிப்பில் காணாததை கனவில் காண்பதில்லை. ஆனால், விழித்திருக்கையில் எப்படிக் கண்டானோ அப்படியே காணாமல், சிலவேளை வித்தியாசமாயும் விபரீதமாயும் அலங்கோலமாயும் காணக்கூடும். அதற்குக் காரணம் தூக்கத்தில் புத்தி சரியாய் தன்காரியத்தை நடத்துகிறது என்று நாம் சொல்லியிருக்கிறோமே அதுதான். அற்ப எண்ணமும் அற்ப புத்தியுமுடையவன் பெரும்பாலும் பயங்கரமான கனவுகளைக் காண்பான். கொலை செய்தவனை ஜாக்கிரதையாய்த் தூங்கும்போது கவனித்துப் பார்ப்போமானால், கனவு அவன் மனதிலிருப்பதுடன் கலந்து பயங்கரமாகப் பிதற்றி அவன் ஒளித்து வைத்திருக்கும் சங்கதிகளை வெளியிடச்செய்யும். குழந்தைகள் தூங்கும்போது கவனிப்போமானால், அது குற்றமற்றதாகையால், தான் பகலில் சிரித்து விளையாடியதை மனதில் வைத்துக்கொண்டு தூக்கத்தில் சிரிக்கும்; பின்பு துக்கப்படும். நாம் இதை "நரிமிரட்டு" என்று சொல்லுகிறோம். நாம் விழிப்புக்காலத்தில் கெட்ட காரியங்களைச் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால், கனவில் மிகப்பயங்கரமான கனவுகளைக் காண நேரிடும். சில கணித சாஸ்திரிகள் விழிப்புக் காலத்தில் கண்டுபிடிக்கமுடியாத உண்மைகளைக் கனவில் கண்டுபிடித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

நமது ஆகாரப் பையினுடைய ஸ்திதிக்கும் கனவுக்கும் சம்பந்தமிருப்பதாக அநேக வைத்தியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். வயிறு புடைக்கத்தின்னாமல் எவ்வளவு நிதானமோ அதற்கும் குறைவாக எவனொருவன் சாப்பிடுகிறானோ, அவன் தூக்கத்தில் விருந்தைப்பற்றியும் சாப்பாட்டைப்பற்றியும் கனவுகாண்பான். நித்திரையில் எவ்வளவோபேர் கைகொண்டு ஆகாரத்தை எடுப்பதுபோலும், வாயில் போட்டு மெல்லுவதுபோலும், நொட்டைவிடுவதுபோலும் கனவு காண்கின்றனர். சிறு குழந்தைகள் நித்திரையில் தன் பாலமுது சாப்பிடுவதுபோல் தன் வாயை அசைத்தசைத்து கனவுகாண்கின்றன. "பைரன்" என்னும் ஆங்கிலபிரபு ஒரு பெரிய கவி. அவர் தனக்குச் சாப்பாட்டைப்பற்றி நல்ல சரியான அபிப்பிராயமுண்டாகும்படி இரண்டொருநாள் ஆகாரமில்லாது தூங்குவது வழக்கம். அவ்விதத் தூக்கத்தில் அவருக்குச் சாப்பாட்டைப்பற்றிய கனவே உதிக்கும். ஆகவே, கனவு என்பது நமது விழிப்புக்காலங்களில் நமது புத்தியில் படியும் எண்ணங்களின் பிரதிபிம்பம் என்றே ஒருவாறு கூறலாம்.

கீ. பி. சேஷாத்திரி ஐயங்கார்.


புதிய புஸ்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| கண்ணகி ... | ... | ... | 0 14 | 0 |
| யுக்திபோதினி | ... | ... | 0 10 | 0 |
| நகைப்பைத்தியம் | ... | ... | 0 2 | 0 |
| வளையல் உடன்பாடு | ... | ... | 0 2 | 0 |

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
வேலூர், (தென்னிந்தியா.)

## The Progress of the World.

### பிரபஞ்சப் போக்கு.

**யுத்தமும், கைத்தொழிலும்.**

இப்போது நடந்துவரும் யுத்தத்தினுல் இந்தியாவின் கைத்தொழில் அபிவிருத்தியானது பல விதங்களிலும் தடைப்பட்டிருக்கின்றது. இங்குத் தொழில் செய்யப்படுவதற்கு இயற்கைப்பொருள்கள் ஏராளமாக இருந்தும், போதுமானவளவு இயந்திர ஸாதனங்கள் இல்லாததனுல், அவை தொழில் செய்யப்படாமலேயே கிடக்கின்றன. ஆதலால், வேண்டியவளவு இயந்திரங்களை நாமே செய்து கொள்ளவேண்டும். இதற்கு ஏராளமான மூலதனம் தேவை. இடையில் பலவித கஷ்டங்களும் ஏற்படும். இவற்றையெல்லாம் கடந்து இங்கேயே தயாரிக்கப்பட்ட இயந்திரங்களைக் கொண்டு தொழில்களை ஏற்படுத்துவோமானுல், அவை சாஸ்வதமாக ஸ்தாபிக்கப்பட்டுவிடுமென்பதில் ஐயமில்லை. பிறகு, யுத்தம் முடிந்தவுடனே சிறந்த முஸ்தீபுக்களுடன் மேனுடுகளில் தயாரிக்கப்படும் சரக்குக்களுடன் இந்தியச் சரக்குக்கள் போட்டிபோட முடியாமலிருக்கலாம். ஆனுல், நாளாவட்டத்தில் இக்கஷ்டமானது நிவிருத்தியாய்விடுமென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. ஆதலால், இந்த நல்ல தருணத்தை நாம் கைவிடாமல் உடனே தொழிலபிவிருத்திக்கான விஷயங்களைக் கவனிக்கவேண்டும்.

**ஜப்பானில் காகிதத்தொழில்.**

காகிதத்தொழில் விஷயமாக ஜப்பானில் ஏற்பட்டுள்ள முற்போக்கானது கவனிக்கத்தக்கது. யுத்தம் காரணமாகக் காகிதக்கூழின்விலை உயர்ந்துவிட்டதனுலும், அது போதுமானவளவு கிடைக்காததனுலும் ஜப்பான் தேசத்தவர்கள் தாமே தமக்குத் தேவையானவளவு கூழைத் தயாரித்துக்கொள்ள ஏற்பாடுகள் செய்துள்ளார்கள். இக்கூழ் செய்வதற்கான இயற்கைப்பொருள்கள் கிடைக்குமிடங்களில் புதிய இயந்திரசாலைகள் பல ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. கொஞ்சகாலமாக ஜப்பானில் இறக்குமதியான காகிதத்தின் கணக்குக்களை இங்குக் குறிப்பிடுவது அவசியமாகும் :—

1916-ம் வருஷத்தில்ஜப்பானில் 36,777,000 பவுண்டுகள் எடையுள்ள காகிதங்கள் இறக்குமதியாயின. ஆனுல், அதற்கு முந்திய வருஷத்திலோ 28,209,000 பவுண்டுகள் எடையுள்ள காகிதந்தான் இறக்குமதியாயின. ஜப்பானிலேயே 1915-ம் வருஷத்தில் 367,578,871 பவுண்டுகள் எடையுள்ள காகிதம் செய்யப்பட்டிருக்கின்றன. காகிதக் கூழானது 1916-ம் வருஷத்தில் 57,263 டன்களும், 1915-ம் வருஷத்தில் 53,261 டன்களும், 1914-ம் வருஷத்தில் 44,993 டன்களும் வரவழிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது ஸாகலியன் என்னுமிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இயந்திரங்களில் இந்தவருஷ முதற்கொண்டு பிரதிவருஷமும் 80,000 டன்கள் கூழ்வீதம் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இன்னும் கொஞ்ச காலத்திற்குள் ஜப்பான் தேசமானது காகிதத்துக்காவது, காகிதக் கூழுக்காவது பிறநாடுகளை எதிர்பார்க்கத் தேவையில்லையென்று சொல்லப்படுகின்றது. இந்தியாவில் இந்த பிரயத்தனமானது பல நாட்களாகவிருந்தும், இதுவரை ஒன்றும் பிரயோஜனமில்லாமலேயேயிருக்கின்றது. இவ்விஷயங்களில் கவர்ன்மெண்டாரும் ஜனங்களும் ஒத்துழைப்பார்களாயின், அது கைகூடாமற் போகாது.

**கல்விச்செலவு.**

மற்ற தேசங்களைக் காட்டிலும் இத்தேசத்தில் கல்விக்காகச் செலவழிக்கப்படும் பணமானது மிகவும் குறைவென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. சென்ற 1916–17-ம் வருஷத்தில் வங்காள மாகாணத்தில் கல்விக்காகச் செலவழிக்கப்படும் தொகையைப்பற்றி ஓர் ஆங்கிலப்பத்திரிகை கூறியிருப்பதாவது:—

"கிரேட் பிரட்டனில் உள்ள ஜனத்தொகை சுமார் 480 லட்சம். வங்காள மாகாணத்திலும் ஜனத்தொகை அவ்வளவேதான். ஆனுல், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிலிருந்து வருஷந்தோறும் கல்விச் செலவுக்காகக் கிடைக்கும் பணம் 200 லட்சம் பவுனுகும். அதே ஜனத்தொகையுள்ள வங்காளத்திலோ கல்விச் செலவுக்காகக் கிடைக்கும் பணம் 10 லட்சம் பவுனுக்கும் கம்மியே"

ஆகையால், கிரேட்பிரட்டனிலும் இத்தேசத்திலும் கல்விச்செலவின் ஏற்றத்தாழ்வை நாம் கவனிக்கவேண்டியது அவசியம்.



**இதன் கருத்து என்ன?**

இப்போது கலாசாலைக் கல்வியை இலவசமாகச் செய்துவிடவேண்டுமென்று மைசூர் கவர்ன்மெண்டார் சில தினங்களுக்குமுன் தீர்மானித்திருக்கிறுர்கள். இன்னும் சில விடங்களிலும் கலாசாலைக்கல்வி இலவசமாயிருக்கின்றது. அன்றியும், யூனிவர்ஸிடி கல்வியானது செல்வவான்களுக்கே யல்லாமல், எல்லோருக்கும் பயன்படக்கூடியதாயிருக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகின்றது. இச்சமயத்தில், டாக்காநகரிலுள்ள கலாசாலையில், மாணவர்களிடமிருந்து மாதந்தோறும் வசூலிக்கப்படும் சம்பளமானது ஆறு ரூபாயிலிருந்து ஒன்பது ரூபாய்க்கு உயர்த்தப்படுவது ஆச்சரியமாயிருக்கின்றது. சம்பளம் இவ்வாறு உயர்த்தப்படுவதன் கருத்து என்ன?

**கரும்புச் சக்கையின் உபயோகம்.**

நாட்கள் செல்லச் செல்ல சாஸ்திர அபிவிருத்தியின் பலனுனது நமக்கு நன்கு புலனுகின்றது. கரும்பிலிருந்து பாலைப் பிழிந்தபிறகு அதை நாம் உபயோகமற்றதென்று எறிந்துவிடுகிறேம். நேடால் தேசத்தில் இந்த கரும்புச்சக்கையிலிருந்து அரக்கு எடுக்கும் தொழிலானது இப்போது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்றும், அவ்வாறு எடுக்கப்பட்ட அரக்கு கொஞ்சம் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டு அங்கு பரிசோதிக்கப்பட்டதென்றும் சொல்லப்படுகின்றது. இந்த அரக்கானது கிராமபோன்ரிகார்டு செய்வதற்கும், இன்னும் மற்ற வேலைகளுக்கும் உபயோகப்படுகின்றதாம். ஏராளமாகக் கரும்புப்பயிர் செய்யப்படும் இந்தியாவில் இவ்விதக்கைத்தொழில் தகுந்த முறையில் நடத்தப்பட்டால், நல்ல லாபமுண்டாகுமென்பதில் ஐயமில்லை.

---

## Books and Reviews.

### புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

[யுக்தி போதினி; சென்னை ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனியார் பிரசுரித்தது. விலை அணு 10 ]

இப்பெயர்கொண்ட நூதன புஸ்தகமொன்று வரப்பெற்றேம். இதில் அத்தியாவசியமான யுக்திகள் பல எழுதப்பட்டிருக்கின்றன. துணிமணிகளின் கறைகளைப் போக்கும் வழிகளையும், கடியாரத்தைப் பாதுகாக்கும் முறைகளையும், நவமணிகளைப் பரீக்ஷிக்கும் வகைகளையும், புஷ்பங்களை வாடாமற் வைக்கும் விதங்களையும், விளக்குச் சிம்னிகளை பாதுகாக்கும் திறத்தையும், ஜோடுகளையும், மேஜோடுகளையும் பராமரிக்கும் பான்மையைப்பற்றியும், இன்னும் பல அரிய யுக்திகளையும் ஒன்றுசேர்த்து இதில் விரிவாக எழுதப்பட்டுள்ளன. யுக்தியைப் போதிக்கும் இந்த யுக்திபோதினி ஒவ்வொருவரிடத்தும் இருக்கவேண்டியது அவசியமாகும். விலை அணு 10 தான். வேண்டு

வோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, புஸ்தக வியாபாரிகள் வேலூர் (தென்னிந்தியா) என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

[ஜாதக பஞ்ச சித்தாந்தம். (முதற்பாகம்); திருவையாறு ஆர். தாமோதர நாயுடு அவர்களால் பிரசுரிக்கப்பட்டது. விலை அணா 12.]

மேற்குறித்த அரிய புஸ்தகமொன்று வரப்பெற்றோம். இதில் ஜோதிட சம்பந்தமான பல விஷயங்கள் வெகு விரிவாக எழுதப்பட்டுள்ளன. இந்நூலானது ஜோதிடம் கற்றவர்களுக்கும், புதிதாகக் கற்க விரும்புவோர்களுக்கும் மிகவும் பிரயோஜனப்படுமென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. இச்சாஸ்திரத்தைக் கற்க விரும்புவோர் இந்நூலை வாங்கிப் படிப்பது அவசியமாகும்.

[ஆங்கில உச்சரிப்புப் புஸ்தகம்; வேலூர் வக்கீல் வி. வி. நாஜிங்கராவ் ஸாஹிப் பி. ஏ; பி. எல். அவர்களால் இயற்றப்பட்டது. விலை அணா 12].

இப்பெயர்கொண்ட அரிய புஸ்தகமொன்று வரப்பெற்றோம். ஆங்கில உச்சரிப்பு விஷயமாய்ச் சிறந்த பல ஆராய்ச்சிகளைச் செய்தபின்னரே இந்நூல் இயற்றப்பட்டதென இதனை நோக்குங்கால் தெரிகின்றது. இப்புஸ்தகமானது ஆங்கில பாஷையைப் படிக்கும் மாணவர்களுக்கு மிகவெளிதில் விளங்கும்படி எழுதப்பட்டிருப்பதால், அவர்கள் ஒவ்வொருவரும் இதை வாங்கிப்படிப்பது அவசியமாகும். புஸ்தகம் வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர் (தென்னிந்தியா) என்று எழுதிப் பெறலாம்.

[விஸ்வகர்மன்; சோமங்கலம் கந்தசாமி ஆச்சாரி 301, தங்கசாலைவீதி, சென்னை. வருஷசந்தா ரூ 3]

இது சென்னை விஸ்வகர்ம குலோத்தாரண சபையின் சார்பாக வெளிவரும் ஓர் மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதில் விஸ்வகர்ம தொழிலாளிகளுக்கேற்ற பல சிறந்த வியாசங்கள் வெளியாகின்றன. வியாசங்களின் நடை சற்றுக் கவனித்து எழுதப்படுமாகில், பத்திரிகையானது அவர்களுக்கு மாத்திரமல்லாமல் பிறர்க்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

[ஸ்ரீ லோகமாதா; பத்திராதிபர்: எம். எம். நாராயணசாமி ஐயர்; சொந்தக்காரரும் காரியஸ்தரும்: இ. எஸ். சிவராமலிங்கம் பிள்ளை புனலூர். வருஷசந்தா ரூ. 1-8-0.]

மேற்குறித்த பத்திரிகையின் மாதிரிகாப்பியொன்று வரப்பெற்றோம். இதில் பொது ஜனங்களுக்குத் தேவையான பல விஷயங்கள் காணப்படுகின்றன. விஷயங்களும் சிறந்த கற்றோர்களால் எழுதப்பட்டுவருகின்றதென்பதை இங்குக்குறிப்பிடுவது அவசியமாகும். இதனை நம்நேயர்கள் வாங்கிப்படித்துத் தக்க ஆதரவு அளிப்பார்களென்று நம்புகிறோம். பத்திரிகை வேண்டுவோர்: மானேஜர், "ஸ்ரீலோகமாதா" புனலூர் என்று எழுதிப்பெறலாம்.

[பாலர்பெரிய அரிச்சுவடி (3-பாகங்கள்); கொ. லோ. பாரியாள் செல்வரங்கம்மாள் அவர்கள் பதிப்பித்தது. விலை ஒவ்வொரு பாகத்துக்கும் அணா 2.]

இவை பழைய முறைப்படி பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. புஸ்தகங்கள் வேண்டுவோர்: கொ. லோ. பாரியாள் செல்வரங்கம்மாள் 29 வைத்தியநாத முதலியார் வீதி மதராஸ் என்று எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

## ஜீவிய சரித்திரங்கள்.

**கோபால கிருஷ்ண கோகலே** 0 8 0

இது "சுதேசமித்திரன்" உதவி ஆசிரியருள் ஒருவரான கே. விஸ்வநாதய்யர் எழுதியது. காலஞ்சென்ற கோகலேயின் ஜீவியசரித்திரமும் அவரது தேச சேவகமும் வெகு விஸ்தாரமாக எழுதப்பட்டிருக்கின்றன.

**தாதாபாய் நௌரோஜி** 0 3 0

இதில் காலஞ்சென்ற தாதாபாய் நௌரோஜியின் ஜீவிய சரித்திரமும், அவர் எழுதிய ஸ்வய சரித்திரமும், அவரது குணநிசய விவரங்களும், அவர் வயோதிக காலத்தில் வாழ்நாளைக் கழித்த விவரங்களும் அடங்கியிருக்கின்றன.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
புஸ்தக வியாபாரிகள், வேலூர், (தென்னிந்தியா)

# ஜனோபகாரி.

# (JANOPAKARI)

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புஸ்தகம் 3. Vol. III. } காளயுக்தி௵ வைகாசி, ஆனி௴, MAY & JUNE, 1918. { சஞ்சிகை 5 & 6. Nos. 5 & 6.

## A State Bank for India.

## இந்தியாவிற்கு ஓர் இராஜாங்க நாணயசாலை.

இந்தியாவில் கைத்தொழில் நடத்துவதற்கும் வியாபாரம் செய்வதற்கும் போதுமான வளவு மூலதனம் சுலபமாய்க் கிடைப்பதில்லை. இவ்வாறு மூலதனம் கிடைக்காமலிருப்பதற்கான மூலகாரணங்களை நாம் நிவிருத்தித்துக் கொள்ள முடியாமலிருக்கிறோம். இந்தியர்களால் மேற்பார்வை செய்யப்பட்டுவரும் கம்பெனிகளின் அழிவும், இவர்கள் பங்கிட்டுக் கொடுக்கும் டிவிடெண்டுகளின் குறைவுமே இதற்குச் சில முக்கிய காரணங்களாகக் கூறலாம். இதுபற்றியே பணமுள்ளவர்கள் தொழில்களிலும் வியாபாரங்களிலும் தங்கள் பணத்தைப்போடப்பின்வாங்குகிறார்கள். இவ்விதச்சிர்கேடான விஷயங்களை ஒரேகாலத்தில் போக்க முடியாவிடினும், காலக்கிரமத்தில், நாம் செய்யும் காரியங்களில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும்படி சில புதிய முறைகளை அனுசரிக்க வேண்டும். இப்படிப்பட்ட முறைகளில் ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தக்கூடியது இராஜாங்கத்தாரால் ஸ்தாபிக்கப்படும் நாணயச்சாலையே. இந்த ஸ்தாபனத்தால், தொழில் முயற்சிகளுக்குப் பணம்போடும் விஷயமாய் ஜனங்களுக்கிருக்கும் நம்பிக்கைக்குறைவை எவ்வாறு நீக்கலாமென்பதை இங்கு எழுதுவோம்.

செல்வமுள்ளோர் தங்கள் பணத்தைத் தமமாலோ அல்லது பிறராலோ, நடத்தப்படும் தொழிலில்போடப்பின்வாங்குகிறார்களேயன்றி இராஜாங்கத்தாரின் சம்பந்தமாக நடத்தப்படும் தொழில்களில்போடச் சற்றும் தயங்குவதில்லை. இதனால் ஜனங்களுக்கு இராசாங்கத்தாரிடம் எவ்வளவு நம்பிக்கையுள்ளதென்பது நன்கு விளங்குகின்றது. ஆதலால், இராஜாங்கத்தார் தங்கள் ஆதரவின்கீழ் ஓர் நாணயச்சாலையை ஆரம்பிப்பார்களாயின், பணமுள்ளவர்கள் தங்கள் பணத்தை அதில்போடக் கொஞ்சமும் பின்வாங்கமாட்டார்கள். இதனால், தொழில்கள் நன்கு விருத்தியடைந்து, தேசமுற்போக்குக்கான பல நன்மைகள் விளையுமென்பதில் சந்தேகமில்லை. இந்தியர்களின் மூலதனமானது பொதுவாகத் தொழில்களுக்கு உபயோகப்படாமலிருப்பது, தொழில் அல்லது வியாபாரத்தில் போட்ட மூலதனம் அழிந்துபோய்விடுமோ என்ற பயத்தினால்

தான். ஆதலால், இராஜாங்கத்தார் மேற்குறித்த நாணயச்சாலைக்குத் தம் முழு ஆதரவையும் கொடுத்து ஏழைகளுக்கும் உபயோகப்படும்படி சௌகரியங்களைச் செய்துகொடுப்பார்களாயின், இதனால், ஜனங்கள் பலவித நன்மைகளையடைவதோடு எவர்க்கும் உபயோகப்படாமல் மூலையில் விழுந்துகிடக்கும் பணத்தைச் சேகரிக்கவும் ஏதுவாகும். இந்தியர்கள் தங்கள் பணத்தைப் புதைத்துவைக்கிறார்கள்; நகைகளைச் செய்து வீணாக்குகிறார்கள் என்ற அபவாதமும் நீங்கும்.

இப்படிப்பட்ட நாணயச்சாலையானது எல்லாவித பாங்கித்தொழில்களையும் செய்யலாம். இதனால் நிரம்ப லாபமும் கிடைக்கக்கூடும். புதிதாகத் தொழில் நடத்துபவர்களுக்கும், வியாபாரம் செய்பவர்களுக்கும் தேவையான மூலதனம்கொடுத்து உதவலாம். ஆரம்பத்தில் கவர்ன்மெண்டார் பாங்கியின் விஷயங்களைத் தாமே நிர்வகித்துப் பொதுஜனங்களுடைய அதிபதிகளும் நிபுணர்களும் கூடிய டைரெக்டொரேட்டின் ஆலோசனைகளைக் கவனித்துவரலாம். பிறகு கொஞ்சகாலமானபின், பாங்கின் விஷயங்கள் கொஞ்சம் திருத்தப்பாடானதும், இராஜாங்கத்தார் பாங்கியைத் தாமே நிர்வகிப்பதைவிட்டு மேற்பார்வைமாத்திரம் பார்த்துவரலாம். இந்த பாங்கியானது ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூக்காவிலும் தனது கிளைஸ்தாபனங்களை ஏற்படுத்தலாம். இதனால், கிராமாந்தரங்களில் வசிக்கும் குடியானவர்கள் முதற்கொண்டு பலரும் தங்கள் மிச்சமான பணத்தை இதில் டிபாஸிட்டாகப் போட்டுவைக்க ஸௌகரியமேற்படும்.

இந்த பாங்கானது நிபுணர்களின் ஆலோசனையைக்கொண்டு தக்க பொறுப்பின்பேரில் சில்லரை வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும், குடியானவர்களுக்கும் கடனாகப் பணம்கொடுத்து உதவலாம். பொதுவாக, இந்தியரின் பொருளாதார அபிவிருத்திக்காக ஏற்படுத்தப்படும் எல்லாத்தொழில்களுக்கும் பணவுதவி செய்யலாம். இவைதவிர, டிஸ்டிரிக்ட் போர்டுகளும், முனிஸிபாலிடிகளும் கிராமயூனியன்களும் கைத்தொழில், வியாபாரம், கல்வி, சுகாதாரம் முதலியவற்றின் அபிவிருத்திக்காகத் தமக்குத் தேவையான பணத்தைச் சௌகரியமான வட்டிக்குத் தமது வருமானத்தை ஈடுகாட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த பாங்கிற்கு இங்கிலாந்திலும் ஒரு கிளைஸ்தாபனத்தை ஏற்பாடு செய்யலாம். அங்கு இந்தியா மந்திரி அவர்கள் கொடுத்துவரும் கௌன்ஸில் பில்லுகளையும், இந்தியாவிற்காக வாங்கப்படும் வெள்ளிமுதலியவற்றையும் இப்பாங்கி வாங்கும்படி ஏற்படுத்தலாம். இதனால், இராஜாங்கத்தாருக்கு நன்மை ஏற்படுமென்பதில் ஐயமில்லை. இந்தியாவோடு வியாபாரம் செய்யும் மற்ற தேசங்களிலும் இப்பாங்கியின் கிளைகளை ஸ்தாபித்துத் தேவையான பணவுதவி செய்துவரலாம். இவ்வித பாங்கியினால் இந்தியாவின் பொருளாதார நிலைமையானது தீவிரமாக அபிவிருத்தியடையுமென்பதில் ஐயமில்லை.

---

## Kindergarten.

BY MR. N. R. KEDARI RAO M.A., L.T.

## கிண்டர்கார்டன்.

### THE INFANTS' CLASS.

### பாலர்வகுப்பு.

நமது பெரியோர்கள் "இளமையிற் கல்" என்னும் முதுரையை மனத்திலிருத்திக் குழந்தைகளின் ஐந்தாம் பிராயத்திலேயே அக்ஷராப்பியாஸம் செய்துவந்தனரென்பது நமது துணிபு. இதுபற்றியே, "பருவத்தேபயிர்செய்" என்ற சாதாரணப் பழமொழியும் வழங்குகின்றது. ஆயினும், சற்று ஆழ்ந்து யோசிக்கின், குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புமுன்னரே அவர்களின் படிப்பு ஆரம்பிக்கின்றதென்பது விளங்குகின்றது. குழந்தை ஜனித்தவுடனே அது காணும் காட்சிகளும், கேட்கும் தொனிகளும் அதன் மனதிற் பதிந்துவிடுமென்பதில் ஐயமில்லை. குழந்தைக்கு இரண்டு மூன்று வயதிலேயே தன்னைச்சுற்றி நடக்கும் விஷயங்கள் இன்னின்னவையென்று நன்கு புலப்படுகின்றதென்பதைச் சில உதாரணங்களைக்கொண்டு நிரூபிக்கலாம். தென்னிந்தியாவிற் பிறந்த ஒரு குழந்தையை மூன்றுவயதானபின் இங்கிலாந்து முதலிய சீதள தேசத்துக்கு அழைத்துக்கொண்டுபோனால், இங்குப் பார்த்திராத காட்சிகளை இது கண்டவுடன், 'நாம் புதிதாக ஓரிடத்திற்கு வந்துவிட்டோம்' என்பதற்கு அறிகுறியாகச் சிரிக்கின்றது. அநுபவத்திலேயே கண்ட விஷயமொன்று: மழை அதிகமாக இல்லாத ஜில்லாக்களாகிய பல்லாரி கடப்பா பிராந்தியத்தில் பிறந்த ஒரு குழந்தையைத் தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி பாகங்களில் அழைத்துவந்தசமயத்தில், ஒருநாள் நல்ல மழை பெய்தது. மழை இன்னதென்றே அறியாத அக்குழந்தை தன் தாயாரைப் பார்த்து 'யாரோ மேலேயிருந்து தண்ணீர் கொட்டுகிறார்களே'! என்று சொல்லிற்று. ஆதலால், பாலர் வகுப்பிலிருக்கும் சிறு குழந்தைகளை வெகு ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கவேண்டுவது அவசியமாகும்.



மேல்வகுப்புக்குச் சொல்லிக்கொடுப்பதைக் காட்டிலும் கீழ்வகுப்புக்குச் சொல்லிக்கொடுப்பது சிரமமான காரியமென்று முன்னமேயே கூறினோம். சாதாரணமாய் ஒரு விஷயத்தைப் பற்றி ஒருமணிநேரம் உபாத்தியாயர் சொல்லிக்கொண்டிருந்தால், அதைக்கிரஹிக்கும்சக்தியானது மேல்வகுப்புப் பிள்ளைகளுக்கு உண்டு; ஆனால், கீழ்வகுப்புப் பிள்ளைகளுக்கு அவ்வளவில்லை. தத்துவசாஸ்திரிகள் இவ்விஷயத்தை ஆராய்ச்சிசெய்து நான்காவது வகுப்புவரையுள்ள பிள்ளைகளுக்கு ஒரேவிஷயத்தில் முப்பது நிமிஷங்களுக்குமேல் கவனம் செல்லாது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். பாலர்வகுப்புப்பிள்ளைகளுக்கு ஒரேவிஷயத்தில் பத்து அல்லது பதினைந்து நிமிஷத்துக்குமேல் புத்தி செல்லாது. தவிரவும், ஹைஸ்கூல்களிலும், காலேஜ்களிலும்வாசிக்கும்பிள்ளைகள் நாளொன்றுக்கு ஐந்து அல்லது ஆறுமணிநேரம் பள்ளிக்கூடத்திலேயேயிருந்து கல்விகற்கிறார்கள். பிரைமரி ஸ்கூலில் படிப்பவர்களோ, ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்குமணிநேரத்திற்குமேல் கல்வி கற்கமுடியாது. மேல்வகுப்புப்பிள்ளைகள் ஒருமணிநேரம் கல்விகற்றபிறகு, இடையே சுமார் ஐந்து நிமிஷங்கள் விட்டு மீண்டும் மற்றொரு பாடத்தைக் கவனிப்பார்கள். பாலர் வகுப்புக்கோ, ஒருபாடம் முடிந்து மற்றொருபாடம் ஆரம்பிப்பதற்கு இடையில் கால்மணிநேரமாவது பிள்ளைகள் சுயேச்சையாயிருக்கும்படி விடவேண்டும். அப்போதுதான் குழந்தைகள் சந்தோஷமாயும் குதூகலமாயும் இருப்பார்கள்.

பாலர்க்குப் பள்ளிக்கூடம் காலையில் பத்து மணிக்கு ஆரம்பிப்பது உசிதமாவென்பது யோசிக்கத்தக்க விஷயம். இத்தேசத்தில் பகல் 10-மணிக்குமேல் வெயிலின் கடுமை அதிகமானதால், அக்காலத்தில் சிறுவர்கள் கல்வி கற்பது கொஞ்சம் சிரமமாகவே யிருக்கும். ஆகவே, சிலர் முற்காலத்திலிருந்த வழக்கத்தை அநுசரித்துக் காலையில் ஏழுமணிமுதல் ஒன்பதுமணிவரையிலும், பிறகுமாலைநாலுமணி முதல் ஐந்துமணிவரையிலுமே சிறுவர்களுக்குக் கல்விகற்பிக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால், நாம் எண்ணியவாறே காலையிலும் மாலையிலும் மாத்திரம் சிறுவர்களுக்குக் கல்வி போதிக்கவேண்டுமென்பதை எல்லாவிடங்களிலும் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது சாத்தியமன்று. ஆகவே, சிறுவர்கள் பள்ளிக்குப்போய்க் காலை பத்துமணிமுதல் ஒருமணிவரையிலும், பிறகு இரண்டுமணி முதல் நான்குமணிவரையிலும் என்ன செய்யவேண்டுமென்பதை இங்குக் கவனிப்போம்.

பள்ளிக்கூடம் வரும் சிறுவர்கள் கொஞ்ச தூரமாவது நடந்திருப்பார்களாதலால், அவர்கள் சற்றுக் களைப்புடனிருப்பார்கள். ஆதலால், அச்சமயம் அவர்களுக்குச் சிரமமான வேலை ஒன்றும் கொடுக்காமல், இனிமையான கதைகளை உபாத்தியாயர் சொல்லவேண்டும். பிள்ளைகள் கதை கேட்டபிறகு பத்துநிமிஷங்கள் உலாவித்திரிந்து ஏதாவது தங்களுக்குத் தெரிந்த பாடல்களைப் பாடலாம் ; அல்லது, சுயேச்சையாய் அரைமணி அல்லது முக்கால்மணி நேரம் தூங்குவது நன்று. பள்ளிக்குப்போவது தூங்குவதற்குத்தானா ? என்று சிலர் எண்ணக் கூடும். நாலைந்து வயது குழந்தைகளுக்குச் சுமார் பன்னிரண்டுமணிநேரம் தூக்கம் வேண்டியிருக்கிறது. வீட்டில் பலவிதக் காரணங்களினால் குழந்தைகள் அவ்வளவு நேரம் தூங்க முடிவதில்லை. இதனால், அவைகள் சோர்ந்திருக்கும். உபாத்தியார் எவ்வளவு சொல்லிக்கொடுத்தாலும் அவை அவர்களின் புத்தியில் ஏறா ; கொஞ்ச நேரம் நன்றாய்த் தூங்கினால் இளைப்பாறி ஸந்தோஷமாயிருப்பார்கள்; பிறகு பாடம் சொல்லிக்கொடுத்தால், நன்கு கவனிப்பார்கள்.

பாலர்வகுப்புக்குச் சொல்லிக்கொடுக்கும் விஷயம் முழுதும் கதைமூலமாகவும், விளையாட்டுமூலமாகவும் இருக்கவேண்டுமேயன்றி, வேறு விதமாய்ச் சொல்லிக்கொடுப்பது நல்லதன்று என்பதை முன்னமேயே சொன்னோம். ஆற்றுமணலில் பொம்மை செய்தல், பம்பரம், கிலுகிலுப்பை முதலியவற்றை வைத்துக்கொண்டு வேடிக்கையாய்க் காலம்போக்குதல், சாக்கட்டியால் கறுப்புப்பலகையில் தமதிஷ்டம் போல் சித்திரம் வரைதல், கண்ணாமூச்சி ரெயில்வண்டி விளையாட்டு முதலியனவும், இவைபோன்ற பலவும் நமது சிறுவர்களுக்கு ஏற்றவை என்பதில் சந்தேகமில்லை. சிறுவர்கள் இவ்விதம் விளையாடுவதால் அவைகளுக்குத்தம் கைகால்கள் முதலிய அவயவங்களைச் சுயேச்சையாய் உபயோகிக்கும் திறன் உண்டாகும். இலை, கொடி, நாற்காலி, மேஜை, மிருகங்கள், பக்ஷிகள் இவைகளின் சித்திரங்களைச் சிறுவர்கள் எழுதினால், அவர்களுக்குக் கவனிக்கும் சக்தி சுலபமாய் ஏற்படும். பூனைக்கு இன்னின்ன அவயவங்கள் இத்தகையனவென்று புஸ்தகத்திலிருந்து அறிவதைக்காட்டிலும், பூனையைப்போல் ஒருபடம் எழுதினால், சிறுவர்கள் அதைக்கொண்டு விஷயங்களைத் தெளிவாக அறிந்துகொள்வார்கள். புஸ்தகத்திலிருந்து அறிந்துகொண்ட விஷயம் மறந்துபோனாலும், தாமாகவே சிரமப்பட்டுச் சித்திரம் எழுதிக்கற்றுக்கொண்ட விஷயம் மறக்காது. இம்மாதிரியே யானைக்கு நாலுகால்களும் ஒரு வாலும் தவிர, முன்னால் ஒரு தும்பிக்கையுமிருக்கின்றதென்பதை களிமண்ணினால் யானைபோன்ற ஒரு உருவத்தைச் செய்தால் நன்கு தெரியவரும்.

இன்னும், உபயோகமற்ற காகிதத்தை வைத்துக்கொண்டு கப்பல், கத்திக்கப்பல், மைக்கூடு முதலியனவற்றைச் செய்தலும், சதுரம், திரிகோணம் முதலிய விஷயங்களைக் கத்தரித்தலும் சிறுவர்களுக்கு நன்மை பயக்கும். இயற்கையற்புதங்களில், ஆலமரத்து விழுது, தென்னம்பட்டை, மாங்காய், வாழைத்தண்டு, மல்லிகைப்பூ முதலியவைகளைச் சிறுபிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடத்திலேயாவது அல்லது அவையிருக்குமிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோயாவது காட்டுவது அவசியமாகும். இப்படியே கணிதத்திலும், 'நாலும் ஐந்தும் ஒன்பது' என்று சொல்வதைக்காட்டிலும், குன்றுமணியையாவது அல்லது புளியங்கொட்டையையாவது வைத்துக்கொண்டு சிறுவர்களுக்கு நிரூபித்துக்காட்டுவது நல்லது. எவ்விதத்திலும் பாலர்க்கு விஷயங்களை நேராகவே ரூபித்துக்காட்டினால் அவர்களின் மனதில் விஷயம் சுலபமாய்ப் பதியும்.

பாலர்வகுப்பில் ஒருவருஷத்தில் சாதாரணமாய்க் கணக்கில் ஒன்றுமுதல் ஐம்பதுவரை எண்ணுதல், கூட்டல், கழித்தல் இவை சுலபமாய்ச் சொல்லிக்கொடுக்கலாம். கைவிரலும் கால்விரலும் இப்படிச் சொல்லிக்கொடுப்பதில் வெகு உபயோகமாயிருக்கும். இராகத்தோடு பாட்டுக்களையும் சொல்லிக்கொடுக்கலாம். இயற்கையில், இராப்பகல் எவ்விதம் மாறிமாறி வருகின்றதென்பதையும், பூஞ்செடிகொடிகள், பட்சிகள், மிருகங்கள் இவைகளையும், இவை போன்ற மற்றும் பலவற்றையும் பற்றிச் சொல்லிக்கொடுக்கலாம்.

இவ்வளவும் கற்றபிறகு, அவர்கள் முதல் வகுப்புக்குத் தக்கவர்களாவார்கள். அது முதற்கொண்டு நாலாவது வகுப்புவரையில் அவர்களுக்கு என்னென்ன விஷயங்களைச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்பதைப் பின் வரும் அத்தியாயங்களில் கூறுவோம்.

என். ஆர். சேதாரிராவ் எம். ஏ; எல். டி.



## Some uses of Erukkam Plant.

## எருக்கஞ்செடியின் சில உபயோகங்கள்.

சாதாரணமாக எங்கும் ஏராளமாய்க் கிடைக்கக்கூடிய வஸ்துக்களின் உபயோகமானது நமக்கு நன்கு புலப்படுவதில்லை. நமது தேசத்தில் எருக்கஞ்செடியானது ஏராளமாக வளர்ந்திருந்தும், அது எவ்விதத்தில் நமக்கு உபயோகப்படுகின்றதென்பது திட்டமாகப் பலருக்கும் தெரியாது. எருக்கானது நார் கொடுக்கக்கூடிய செடிகளில் ஒன்று. இதன் பட்டையிலிருந்து நார் உரித்தெடுக்கப்படுகின்றது. இந்த நாரானது தென்னை, கற்றாழை முதலியவற்றின் நார்களைக்காட்டிலும் மிகவும் உறுதியுள்ளது.

ஜனங்கள் தென்னை, சணல் முதலான நார்களை அடிக்கடி கையாண்டுவரும்போது எருக்கம் நாரை மாத்திரம் அவர்கள் உபயோகப்படுத்தாமலிருப்பதற்கான காரணம் புலப்படவில்லை. தென்னை, சணல் முதலான நார்களில் ஒரு குறிப்பிட்ட அளவு எடுத்துக்கொண்டு அதில் 350 பவுண்டுகொண்ட பாரத்தைத் தொங்கவிட்டு அந்நார்கள் அறுபட்டால், அதே அளவுள்ள எருக்கம்நாரில் 450 பவுண்டு எடையுள்ள பாரத்தைக் கட்டித் தொங்கவிடலாம்.

இச்செடியின் நாரானது சணல் முதலான நார்களைப்போல நெசவுக்கும் உபயோகப்படுகின்றது. நார்எடுப்பதிலும் கஷ்டமில்லை. செடியிலிருந்து பட்டையை எடுத்து மெல்லியதாய்க் கிழித்துத் தண்ணீரில் ஊறப்போட்டு எடுத்தால், சிறந்த நார் கிடைக்கின்றது. மற்றைய நார்களைப்போல் இதை அதிகநாட்கள் தண்ணீரில் ஊறப்போட்டிருந்தாலும், கொஞ்சமும் கெடுவதில்லை.

விவசாய சம்பந்தமாக இச்செடியானது எவ்வளவு பிரயோஜனப்படுகின்றதென்பதை இனிக் கவனிப்போம்.

சிலவிடங்களில் எருக்கந்தழையானது வயல்களுக்கு எருவாக உபயோகிக்கப்படுகின்றது. ஆனால், இதன் உபயோகமானது பலருக்கும் அதிகமாகத் தெரியாமலிருக்கின்றது. ஆகவே, ஜனங்கள் நெடுந்தூரத்திலிருந்து கொளுஞ்சி முதலான தழைகளைக்கொண்டு வருகிறார்களேயொழிய, தமக்கு அருகிலேயேயிருக்கும் எருக்கந்தழையை உபயோகப்படுத்துவதில்லை.

சில விவசாயிகள் எருக்கந்தழையை நாற்றங்கால்களுக்கு மாத்திரம் உபயோகிக்கிறார்கள். இது சீக்கிரத்தில் அழுகக்கூடியதாதலால், அவர்கள் இதை நாற்றங்காலுக்கு மாத்திரந்தான் ஏற்றதென்றும், மற்றைப் பயிர்களுக்கு உபயோகப்படாதென்றும் கருதுகிறார்கள். எருக்கந்தழையைப் பயிருக்குப் போட்டால், பயிர் எரிந்துபோகுமென்றும் சிலருடைய அபிப்பிராயம்.

எருக்கஞ்செடியை ஒரு ஏக்கர் நிலத்தில் 4 அடி தூரம் இடைவிட்டுப்பயிர்செய்தால், வருஷம் 1-க்கு 10 டன் அல்லது 20 வண்டி பாரமுள்ள தழை கிடைக்கும். வண்டி 1-க்கு

ரூ. 5 வீதம் 20 வண்டிகளுக்கு ரூ. 100 கிடைக்கும். இதைப் பயிர்செய்வதற்கான செலவு முதல் வருஷத்தில் ரூ. 40 செல்லும். அதன் பிறகு செலவுகிடையாது. தழைமாத்திரம் வெட்டிக்கொண்டிருக்கலாம். இதற்கு ஆடுமாடுகளினால் சேதம் இல்லை. ஆனால், ஒருவித விட்டில்கள் ஆயிரக்கணக்காய் உண்டாகித் தழைகளைத் தின்றுவிடும். அப்போது சமயம் பார்த்து இவ்விட்டில்கள் இறங்குவதற்கு முன்னமேயே தழைகளை வெட்டிவிடவேண்டும். அச்சமயத்தில் தழைகளை உபயோகிப்பதற்கு நிலம் தயாராயில்லாவிட்டால், எருக்குழிகளில் அவைகளைப்போட்டு மூடிவைத்து வேண்டும் போது உபயோகித்துக்கொள்ளலாம்.

எருக்கந்தழை நெற்பயிருக்கு சிலாக்கியமானதென்பதைக் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் கோயமுத்தூர் சர்க்கார்பண்ணையிலும், பாலூர் வியவசாயப் பண்ணையிலும் பரீக்ஷிக்கப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட கணக்கால் தெரியலாம்.

கோயமுத்தூர் பண்ணையில் ஏக்கர் 1-க்கு 4000 இராத்தல் வீதம் கொழுஞ்சித்தழையும், எருக்கந்தழையும் போட்டுவந்ததில் கீழ்க்கண்டவாறு பலன் கிடைத்திருக்கின்றது.

| வருஷம். | எருக்கந்தழை போட்டது. | | கொழுஞ்சித்தழை போட்டது. | |
|---|---|---|---|---|
| | நெல் தானியம் இராத்தல். | வைக்கோல் இராத்தல். | நெல் தானியம் இராத்தல். | வைக்கோல் இராத்தல். |
| 1908—09 | 2369 | 4955 | 2500 | 2367 |
| 1909—10 | 3537 | 3583 | 3520 | 3596 |
| 1910—11 | 3756 | 4269 | 3399 | 4110 |

மேற்குறித்த கணக்கால் கொழுஞ்சியைவிட எருக்கந்தழை உபயோகித்த நிலத்திலேயே அதிகமான தானியமும் வைக்கோலும் கிடைத்ததென்பது தெரியலாம்.

இம்மாதிரியான பரீக்ஷை பாலூர் சர்க்கார் பண்ணையிலும் 1907-ம் வருஷம்முதல் 1910-ம் வருஷம்வரை நடத்தப்பட்டதில் கீழ்க்கண்டவாறு பலன்கண்டிருக்கின்றது.

| வருஷம். | ஏக்கர் 1-க்கு 80 தலைச்சுமை பூவரசு, வாகை, வேப்பம் முதலிய பலவகைத்தழைகள் உபயோகித்ததில் நெல் விளைவு இராத்தல். | ஏக்கர் 1-க்கு 500 இராத்தல் நிலக்கடலைப் பிண்ணாக்கு உபயோகித்ததில் நெல் விளைவு இராத்தல். | ஏக்கர் 1-க்கு 10வண்டி சாணி எரு உபயோகித்ததில் நெல் விளைவு இராத்தல். | ஏக்கர் 1-க்கு 80 தலைச்சுமை எருக்கந்தழை உபயோகித்ததில் நெல்விளைவு இராத்தல். |
|---|---|---|---|---|
| 1907 | 1540 | 1568 | 1592 | 1590 |
| 1908 | 1968 | 2078 | 2004 | 2400 |
| 1909 | 1728 | 1832 | 1672 | 1704 |
| 1910 | 2898 | 2594 | 3048 | 2872 |

குறிப்பு:—இந்த வியாசத்தில் காணப்படும் கணக்குக்கள் "கிருஷிகனி" யினின்று எடுக்கப்பட்டவை.



இக்கணக்குக்களால்மற்றவகைத் தழைகளைக் காட்டிலும் எருக்கந்தழையானது கொஞ்சமும் தாழ்ந்ததன்று என்பது நன்கு விளங்குகின்றது. ஆகவே, நமது வியவசாயிகள் எருக்கஞ் செடியை அலக்ஷியஞ்செய்யாமல் உபயோகப்படுத்தி நல்ல பலனை அடைவார்களென்று நம்பப்படுகின்றது.

## Researches on the History of Buddah.

BY MR. T. A. GOPINATHA RAO, M. A.

### புத்தசரித்திரத்தைப்பற்றிய ஆராய்ச்சிகள்.

இப்பரதகண்டத்திற்றோன்றி ஓங்கிவளர்ந்து நெடுங்காலம் வாழ்ந்து பின்பு பூடற்றுப்போகிய பௌத்தமதத்தின் சரித்திரம் மிக்க வியப்பைத் தரத்தக்கதே. திபெத்து, பர்மா, சீனம், ஜப்பான், சயாம், சிங்கள முதலியவிடங்களில் தழைத்திருப்பத் தன் ஜனனபூமியாகிப் பல நாட்டுக்கும் நடுப்பட்டிருக்கும் இப்பரதகண்டத்தில் எத்தனைகாலம் பகவான் புத்தருடைய தருமசக்கரம் நாட்டப்பெற்றதென்பதும், எவ்வெக்காரணங்களால் வலிகெட்டுச் சீர்குலைந்ததென்பதும், எக்காலத்து இந்தியாவினின்றும் விலகிற்றென்பதும், அம்மதத்தாருடைய கோயில்களும் விக்கிரகங்களும் எங்குபோயொளித்தனவென்பதும், இம்மதத்தினரெவ்வாறுணர்களென்பதும் முதலிய விஷயங்களைப்பற்றிச் சரித்திரத்தில் அபிமானமுடையார்கட்கு அறிய மிகவும் விருப்பமுண்டாகுமென்பதில் ஐயமில்லை. ஆதலால், எனக்குக்கிடைத்த ஆதாரங்களைக்கொண்டு தென்னிந்தியாவில் பௌத்தமதவிஷயமான சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்லத் துணிகிறேன்.

தென்னிந்தியாவில் பௌத்தமதத்தைமுதன் முதற் பரவச்செய்தவர்கள் அசோகன்பந்துக்களாகிய மஹேந்துவும், சங்கமித்திரியும் என்பவர்கள். இவர்களால் நாட்டப்பெற்ற பௌத்தமதம் செழித்துவளர்ந்துவந்ததென்பதற்குப் பற்பல சான்றுகளுள.

மைசூரிலாகாவிற் கண்டுபிடிக்கப்பட்ட அசோகமகாராஜன் சாஸனத்தால் அவ்வரசனதிகாரம் தென்னாட்டின்கண் மைசூர் இராஜ்யத்தின் வடவெல்லைவரை செலுத்தப்பட்டு வந்ததென்பதும் அவன் நாடுமுழுதிலும் பௌத்தமதம் பிரபலமாய்ப்பிரசாரத்திலிருந்ததென்பதும் நன்குவிளங்கும். பின்னர் ஐம்பெருங்காப்பியங்களுளொன்றாகிய மணிமேகலையில் மணிமேகலையென்னும் பிக்ஷுணிசிரோமணி காஞ்சிமாநகர் புக்ககாலையில், அவ்வூரிலாண்டுவந்த சோழவரசன் இவட்கு, சோழன் கிள்ளியாற்கட்டப்பட்ட பௌத்தசெயித்தியம் காட்டியதுமன்றி இவள் வேண்டுகோளுக்கிணங்கி இந்நகரில் அவ்வரசன் ஒரு உத்தியானமும், இதினிடையில் ஒரு புத்தபீடிகையும், தீவதிலகைகோயிலும், இதனருகில் ஒரு வாவியும் மணிபல்லவமென்னுந்தீவிலிருப்பது போலச் சமைத்தானென்று கூறப்பட்டுள்ளது. இக்காஞ்சிபுரம் தென்னாட்டின்கண்ணதோர் மிகப்பழையநகரமாயும், ஸ்மரணமாத்திரத்தால் முத்திதாயகமான ஸ்தலங்களில் ஒன்றாயும், பல்வேறுமதத்தினருள் மேன்மைபடைத்தவல்லோர்கள் வசித்துவந்ததாயும், வெவ்வேறுமதத்தினர் கோவில்பள்ளிமுதலியனவுடையதாயும், கிறிஸ்தவாப்தத்தின் முதனான்கு நூற்றாண்டுவரை சோழர்களுக்கு இராஜதானியாயும், பின்னர் பல்லவர்களினிராஜதானியாயுமிருந்தவிடம். பதஞ்சலிபகவான் தம்முடைய மகாபாஷ்யத்தில் காஞ்சியைக்குறித்தெழுதியிருக்கிறார். எனவே கிறிஸ்தப்தத்தின் முன்னரே மிக்க பிரசித்திபெற்ற நகரமென்பதிற்சம்சயமொன்றுமில்லை. பல்லவவரசர்கள் பழங்காலத்திய மற்றையவமிசத்தரசர்கள்போலப் பற்பல மதத்தையுஞ்சார்ந்து

ஒழுகியவர்களென்பது அவர்கள் பெயர்களிற் சிலவாகிய புத்தவர்மன், ஸ்கந்தவர்மன், பரமேசுவரவர்மன், நரசிங்கவர்மன் என்பவைகளால் அறியலாகும். இவர்களிற் சிலர் பௌத்தர்களாயிருந்தார்களென்பது சாஸனங்களால் அறியக்கிடக்கின்றது. யுவங்சுவங் என்னும் சீனதேசத்துப்பௌத்தயாத்திரிகர் காஞ்சீபுரத்தைத் தாந்தரிசித்த அந்நாள் அந்நகரில் 100 பௌத்த செயித்தியங்களும் அவைகளில்10,000ஸ்தவிர ஸங்கத்தவருமிருந்தார்களென்று எழுதியிருக்கிறார். பின்னும், இவ்விடத்தில் ஜைனக்கோயில்களில் 80 உண்டென்றும், அவைகளிலநேகம் திகம்பரமதத்தாரதென்றும் அறிவிக்கிறார். இவ்வூரிற் பற்பலவிடங்களில் புத்தபகவான் தம்மதவிஷயமாய்ப் பிரசங்கித்ததாகவும், அவ்வாறுள்ளவிடங்கள்தோறும் அசோகமகாராஜன் ஸ்தூபங்களைக்கட்டிவைத்தானென்றும் இவர் எழுதியது உண்மையாயின் இந்தச் செயித்தியங்களிலும் ஸ்தூபங்களிலும் விக்கிரகங்களிலும் சிலவேனுங்காணப்படவேண்டுமே? அன்றியும், நாலந்தையின் சர்வகலாசாலையில் யுவாங்சுவங்காலத்தில் மகாபண்டித ஸ்தானத்தை வகித்தவர்களிலொருவராகிய தர்மபாலரென்பவர் பிறந்தவிடமும் இக்காஞ்சீபுரமாகும். தர்மபாலர் காஞ்சீபுரத்திற் பெரிய தோருத்தியோகத்திலமர்ந்திருந்த ஹீனயான மதகாரராய ஒருவர் மகனாய்ப்பிறந்து, கல்வி கேள்விகளாற்றம்மின்மிக்காரின்றி வடதேசத்தின்கண்சென்று மகாயானத்தைத்தழுவி நாலந்தவில் உபதேசகரானவர்.

பின்னும், காஞ்சீபுரத்தையாண்ட சிம்மவர்மனென்னுமரசன் புதல்வன் பரமேசுவரவர்மன் என்பவனியற்றிய மத்தவிலாசபிரகஸனம் என்னும் ஓர் சிறியநாடகத்தில் அந்நகரிலுள்ள பௌத்தபிக்ஷுக்களினுடையவும் காளாமுக சைவர்களுடையவும் துர்க்குணங்களை இவ்விரு மதத்தினர் அக்காலத்திருந்த இயற்கைக்கு நன்கிணங்க வர்ணித்துள்ளார். இவர் ஆணையிற் பொறித்த ஓர் சாஸனத்திலும் இந்நாடகத்தைக்குறித்திருக்கிறபடியால், இது இவரே யியற்றியதென்பதிற்றடையொன்றுமில்லை. இவர்காலம் கி. பி. 7-ம் நூற்றாண்டு. எனவே, இவர் காலத்துப்பௌத்தமதம் காஞ்சீபுரத்திலிருந்ததென்பது நிச்சயம்.

தேவாரம்பாடிய சைவநாயன்மார்கள்காலத்தும் காஞ்சீபுரத்தில் பௌத்தர்கள் ஏராளமாயிருந்தார்களென்பதை இந்நாயன்மார்கள் ஆங்காங்கு போதியார், பிண்டியார், தேரர் என்று குறித்து இவர்களை இழித்துக்கூறுவதனால் விளங்கும்.

கி. பி. 8-ம் நூற்றாண்டினிறுதியிலும் 9-ம் நூற்றாண்டின் ஆதியிலுமிருந்த சங்கரபகவத்பாதாசாரியர் காஞ்சியிலிருந்த பௌத்தாதி பாஹ்ய மதங்களைவென்று அவர்களை அவ்விடத்தினின்றும் துரத்தினர் என்று ஓர் ஐதிகமுண்டு. இந்நகரில் ஹிமசீதளன் என்னுமோராசன் ஆண்டுவந்தகாலத்தில் அகளங்களென்னும் ஜைனபிக்ஷு ஒருவர், பௌத்தர்களை வலுவில் வாதுக்கழைத்து, அவர்களை வாதில் வென்று அவர்கள் வலிதொலைத்தாரென்றும் ஓர் ஐதிகமுண்டு.

இங்ஙனமாகப் பலபடியாற் பௌத்தமத நிறைந்த காஞ்சியென்று புகழ்படைத்தநகரத்தினின்று அம்மதம் தொலைந்தபின்னர், அம்மதத்தினர்கோயில்களேனும் விக்கிரகங்களேனும் காணப்படவேண்டுமல்லவோவெனின், பல விக்கிரகங்களவ்விடத்தில் நானே முதன்முதற் கண்டுபிடித்துள்ளேன். அவைகளில் 7 அடி நீளத்தில் நின்ற திருக்கோலமான புத்த விக்கிரகமொன்று காமாக்ஷியம்மன் கர்ப்பக்கிருகத்துக்கடுத்த சுற்றுமண்டபத்தில் இன்றும் கிடக்கின்றது; மற்றொன்று இரண்டாம் பிராகாரத்தில் தலைமுறிந்துபோய் உட்கார்ந்திருக்கிறது. இன்னும் ஒன்று கோயிலின் தென் கிழக்கில் அடுத்துள்ள ஒரு தென்னந்தோட்டத்திலிருக்கின்றது. வேறு இரண்டு விக்கிரகங்கள் கருக்கிலமர்ந்த அம்மன்கோயிலில் வைக்கப்பட்டிருக்கின்றன. பின்னும், ஏகாம்பரநாத ஸ்வாமிகோயிலில்......விக்கிரகங்க



ளுள. ஆகவே, காஞ்சீபுரத்தில் பௌத்தமத சம்பந்தமான சின்னங்கள் பலவுளவென்பதற்கு நாம் வைத்திருக்கும் படங்களே வலியசான்றாகும்.

நெல்லிக்குப்பத்தையடுத்து, திருச்சோபுரமென்று ஒரு குக்கிராமமுண்டு. அதிற் பாடல்பெற்றசைவாலயமொன்றுண்டு. அது மணவில் மூழ்கிக்கிடந்து சிலவருடங்கட்குமுன்பு கண்டுபிடிக்கப்பட்டு ஜீர்ணோத்தாரணம் செய்யப்பெற்று இப்பொழுது ஒருவித நல்ல ஸ்திதியிலிருக்கிறது. இக்கோயிலில் என்னாற்கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கல்லில் பௌத்தசங்கத்தையும், சாரிபுத்திரனென்னுமொருவன் பெயரையும் குறிக்கும் ஒரு சாஸனம் ஜடிலவர்மசுந்தர பாண்டியன் காலத்திலெழுதப்பட்டிருக்கிறது. அதாவது கி. பி. 1......சாரிபுத்திரன் என்னும் பெயர் பௌத்தர்பெயர் என்னக் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. சங்கத்தையுங்கூடக் கூறியிருப்பதனால் அது பௌத்தசங்கமே எனத் துணியலாம்.

நாகபட்டினத்தில் முதல்இராஜராஜன்காலத்தில் சடாரத்தரசனை......விஜயோத்துங்கவர்மனென்பான் தன் தந்தை சூடாமணிவர்மன் பெயரால் ஒரு விஹாரஞ்சமைத்து, அதற்கு வேண்டுஞ்செலவுகட்காக ஆனைமங்கலமென்னுங்கிராமத்தை இராஜராஜனாற் கொடுக்கப்பெற்று இக்கோயிலுக்களித்தான். இக்கோயிலைச்சிலகாலத்துக்கு முன்பு காதோலிக் கிறிஸ்தவப்பாதிரிகள் விலைக்குவாங்கி இதிலிருந்த புதுவெள்ளிக்கோபுரத்தையும், இதிற்கிடைத்த பல பௌத்தவிக்கிரகங்களையும் ஐரோப்பாவுக்கு அனுப்பிவிட்டார்கள். இதிலிப்பொழுது அக்காலத்திய பழைய ஒரு குளம் மட்டும் இன்றுங் காணலாம்.

திருவாங்கூர்ச் சம்ஸ்தானத்திற் பலவிடங்களிலும் பௌத்தவிக்கிரகங்கள் காணப்படுகின்றன. இவை கிடைக்கும் ஊர்களெல்லாம் பள்ளிக்கல்லென்னும் பெயரை உடையன. இவ்வார்த்தையின் பொருள் பள்ளியினருகேயிருக்கும் ஊர் என்பது.

சில வருடங்களுக்குமுன்னர் எனக்கோர் தாமிரசாஸனங்கிடைத்தது. அதில் தமிழில் எழுதிய முதற்பாகத்தில் ஒரு ஏடுதவிர மற்றவை காணப்படவில்லை. இரண்டாம்பாகத்தில் சமஸ்கிருதபாஷையில் விருஷ்ணி அல்லது ஆய்க்குலத்தினனாகிய விக்கிரமாதித்தியவரகுணமகாராஜா திருமூலவாதத்துப்பட்டாரகர்க்குச் சிலபூமிகளைக் கொடுத்ததாகச் சொல்லிக்கொள்ளுகிறான். சாஸனத்தின் ஆரம்பத்தில் சௌத்தோதனி (புத்தனை) யையும், தர்மத்தையும், ஸங்கத்தையும் புகழ்ந்துள்ளது. இச்சாஸனத்தை அச்சிட்டகாலத்து அதிற்கூறப்பட்டகோயிலின்பெயர் அல்லது ஊரின்பெயர் திருமூலவாதமோ பாதமோவென்று சந்தேகப்படவேண்டியிருந்தது. பின்னர் மூஷகவம்சமென்று சம்ஸ்கிருதகாவியமொன்று கண்டுபிடிக்கப்பட்டது. அதினின்றும் இவ்வூர்ப் பெயர் ஸ்ரீமூலவாசமென்று விளங்கிற்று. சோழவரசன் தன்மேல் படையெடுத்து வருகிறானென்று தனக்குதவியாக மூஷகவரசனைக் கேரளராஜன் வேண்டினான். அவன் வேண்டுகோட்கிணங்கி மூஷகவரசன் தன் மருமகனாகிய வலபனென்பானை ஒரு பெரிய சேனையுடன் அனுப்பினான். பாதிவழிகடந்துபோனதும் ஒற்றர்வந்து மூஷகவரசனிறந்தானென்றும், அயல்நாட்டரசன் மூஷகராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டாளுகிறானென்றுந் தெரிவித்தார்கள். சங்கதிகளெல்லாம் செவிமடுத்த வலபன் வெகுண்டு தனக்கு நேர்ந்த விபத்தைக் கேரளராஜனுக்கு அறிவித்து, தான் தன் ராஜ்யத்தை நோக்கிச் சென்றான். செல்லும் மார்க்கத்தில் ஸ்ரீமூலவாசத்தில் புத்தபகவானைத்தரிசித்து அவ்விடத்திலுள்ள பௌத்த சான்றோரால் ஆசீர்வதிக்கப்பெற்று, சமுத்திரத்தாற்கபளீகரிக்கப்பட்டுக்கொண்டிருந்த ஸ்ரீமூலவாசத்தின்கரையைக் கல்முதலியவைகளால் கெட்டிப்படுத்திவிட்டு யாத்திரை புறப்

பட்டான் என்று சொல்லியிருக்கிறது. விக்கிரமாதித்தவரகுணன்காலம் கி. பி. 865. சோழர்கள் மேனாட்டுக்குப் படையெடுத்துச் சென்றது இராஜேந்திர சோழன்காலம்; அதாவது கி. பி. 12-ம் நூற்றாண்டின் கடைசிக் காலம். கி. பி. 865-ல் பிரபலமாயிருந்தகோயில் சுமார் 1100 கி. பி.யில் அழிந்திருக்கவேண்டும். அதாவது கீழ்ச்சமுத்திரக்கரையில் நாகப்பட்டினத்துள் ஒரு பிரபல பௌத்த விஹாரம் தோன்றியகாலத்தில் மேற்குச்சமுத்திரக்கரையில் நாகப்பட்டினத்துக்கு நேர்மேற்காயுள்ள மிக்கபிரசித்தியடைந்திருந்த ஸ்ரீமூலவாசம் சமுத்திரத்தால் நாசமடைந்தது. இம்மூலவாசம் வெகு புகழ்படைத்தவிடம் என்பது காந்தாரதேசத்துக்கண்டெடுத்த ஒரு பௌத்த லோகேசுவரவிக்கிரகத்தால் விளங்குகிறது. இதன்பீடத்தில் அதை,—

“தக்ஷிணாபதமூல வாஸ லோகநாத” என்று வர்ணித்திருப்பதைக்கொண்டு வெகுதூரத்துள்ள காந்தாரநாட்டிலும், ஸ்ரீமூலவாசத்துலோகேசுவரபிம்பத்தின் பிரதி ஒன்று வைக்கத் தோன்றிற்று என்று ஊகிக்கின், இவ்வூரின் பௌத்தாலயத்தின் பழமையும் பெருமையும் கூறவும்வேண்டுமோ? இம்மூலவாசம் மலையாளத்தில் எவ்விடத்திலிருந்ததோ நிச்சயமாகக் கூறவியலாததாயிருக்கிறது. ஆனால், அம்பலப்புழைக்குப் பக்கத்திலிருக்கலாமென்று உத்தேசிக்க விடமுண்டு.

அம்பலப்புழையையடுத்து, கருமாடி என்னும் ஒரு ஊர் உண்டு. அவ்வூரில் ஆற்றங்கரையோரத்தில் கருமாடிக்குட்டனென்று ஒரு சிலாபிம்பமுண்டு. அந்நாட்டார் அது ஒருபுலையனென்றும், அவன் ஒரு பிராமணன் இருக்குமிடத்திற்கருகேவந்தபோது, பிராமணனாற் கல்லாய்ப்போகவென்று சபிக்கப்பட்டானென்றும் ஒரு ஐதிகத்தைக் கூறுவர். என்னினும், அவ்விக்கிரகத்தின் படத்தை உற்றுநோக்குவோர்க்கு அஃதோர் பௌத்தவிக்கிரகம் என்று விளங்காதிராது.

பின்னும், மாவேலிக்கரையென்னுமூரில் ஒரு பௌத்தவிக்கிரகமுண்டு. இவ்வூருக்கு 7 மைல் தூரத்திலுள்ள பள்ளிக்கல்லுக்கடுத்த பரணிக்காவு என்னும் ஊரில் ஒரு பிம்பமுண்டு. மற்றும் ஆடூர் என்னும் ஊரையடுத்து இன்னமொரு பள்ளிக்கல் என்கிற ஊர் உண்டு. அதில் ஒரு தலையற்ற பௌத்தவிக்கிரகம் எனக்குக் கிடைத்தது. அதை இப்பொழுது நான் திருவனந்தபுரத்துக்காட்சிச்சாலையில் வைப்பித்திருக்கிறேன். இன்னமும் கருநாகப்பள்ளியடுத்து ஓரிடத்தில் மற்றொரு விக்கிரகமிருப்பதாகக் கேள்வி.

ஆகவே, மேற்கே மலைநாட்டில் வெகுகாலமாய்ப் பௌத்தமதம் வெகு பிரபலமாயிருந்ததென்றும், சுமார் 1,100 கி. பி. க்குள் அழிந்ததென்றும் சொல்லலாம். தென்னிந்தியாவில் பௌத்தம் சுமார் கி. பி. 1,300 வரையிருந்ததல்லாமல், அதற்குப்பிறகு இருந்ததாகத் தோன்றவில்லை.

பௌத்தமதம் என்னகாரணத்தால் இந்தியாவில் நிலைநிற்கவில்லையென்னும் பிரசினத்துக்குஉத்தரம் ஒருவாறுஊகிக்கலாம். பசுவைக்கொன்று யாகஞ் செய்யவேண்டுமென்னும் வேதவாக்கியங்களை ஆத்மாவின் பசுத்தன்மையைக்கொன்று நிர்மலமாக்கி அதனைப்பகவானுக்கு அற்பிக்கவேண்டுமென்பதோராது, பசுமுதலிய மிருகங்களை வீணே கொல்லுகிறார்களென்று பரமகாருணிகரான புத்தரும் அவர் ஞாதியான மகாவீரரும் அந்தணரொழுக்கத்தையிகழ்ந்து அஹிம்சையென்னும் தர்மத்தை வற்புறுத்திக் கூறலாயினர். அதிவர்ணாச்சிரமபதவியையடைந்த ஆசார்யபுத்தர் அம்பாலிவீட்டில் பன்றியிறைச்சிதின்றாரென்பதைமட்டுங்கவனித்து அவர்சிஷ்யர்கள் தாமும் மாம்ஸபக்ஷணஞ்செய்யத்தொடங்கினார்கள். அம்மகான் எதையும் புசிக்கலாம் எங்கேயும் எற்றுண்ணலாமென்பதையறியாது குயுக்தியெல்லாம் செய்து தமக்காகவென்று உயிர்க்கொலை செய்யப்படாது கிடைக்கும் மாம்ஸம் தமக்



கென்று கொன்றதாகத் தமக்குத் தெரியாது கிடைத்த மாம்ஸம் என்று இங்ஙனம் ஐவகை மாம்ஸங்களைப்புசிக்கலாமென்றும், இன்னன துராசாரங்களைக்கைப்பற்றிக் காலாந்தரத்தில் பதினறுவகைச் சிறுபிரிவினராய்ப் பிரிந்து, வித்தையும் புத்தியுங் குன்றி இழிவடைந்தார்கள். இவ்வீனதசையடையும்வரை பதுக்கவளர்ச்சியடைந்துவந்த வைதிகமதம் பலமடைந்து வலியற்ற பௌத்தமதத்தை எளிதிற்றுக்கித் தோல்வியடைவிக்கும் ஸ்திதிக்கு வந்திருந்தது. ஆசாரியர் குமாரிலபட்டர் முதன்முதல் பௌத்தர்களைத் தாக்கி முறியடித்தனர். பின்பு சைவநாயன்மார்களும், சங்கரபகவத்பாதாசாரியரும் கங்கணங்கட்டிக்கொண்டு இம்மதத்தின் வலியை முற்றும் தொலைத்தனர். நாளடைவிலேயே இம்மதத்தார் இந்துக்களில் ஒருஜாதி வைஷ்ணவர்களாய் மாறிவிட்டார்கள். ஜைனர்களும் இங்ஙனமே இந்துக்களாவதை இன்றைக்கும் காணலாம். ராமஸ்வாமி நாயனர் முதலிய பெயர்தரித்திருக்கும் ஜைனர்களை, தஞ்சாவூரின் ஓர் பாகமாகிய கருந்திட்டை குடியிலும், மன்னார்கோவில் முதலிய விடங்களிலுங் காணலாம். நாயன்மார்களும் ஆசாரியஸ்வாமிகளும் பௌத்தர்களையும் ஜைனர்களையும் கற்காணங்களிலிட்டு ஆட்டிக்கொன்றனர் என்பது உண்மையென்று கொஞ்சமேனுந் தோன்றவில்லை. பௌத்தமதப்பிரவீணரான கர்ன் என்ற துரையவர்களும் இந்துக்களால் இம்மதம் முடிவு அடையவில்லை; மகம்மதியர்களாற் சீர்குலைக்கப்பெற்றதென்றும், மகம்மதியர் சல்லியத்துக்குப்பயந்து உத்கலம், தக்ஷிணாப்தம் முதலியதேசங்களுக்குப் பௌத்தர்கள் ஓடிப்பிழைத்தனரென்றும் அபிப்பிராயப்படுகிறார். ஸ்ரீமான் நாகேந்திரநாதவசுவென்பவர் தக்க ஆதாரங்களைக்கொண்டு உத்கலதேசத்தில் இவர்கள் வைஷ்ணவரானவாறும், பரப்பிரம்மத்தை இவர்கள் மஹாசூன்யமென்றும், சூன்யபுருஷனென்றும் பலவாறு பெயர்கொடுத்து, பழம்பௌத்தமதத்தைப் புது வைஷ்ணவவடிவில் நிலைநிறுத்தியிருப்பதையும், இப்புதுப்பௌத்தம் இப்பொழுதும் உத்கலமுதலிய தேசங்களில் நடைபெறுவதையும் பற்றித் தம்முடைய மயூரபஞ்ஜா ஆர்கியாலாஜிகல்ஸர்வேயென்னும் புத்தகத்தில்செவ்வனே விளக்கியுள்ளார்.

பௌத்தர்கள் இங்ஙனம் ஹிந்துக்களானவுடனே அவர்களுடைய கோயில்களையும், ஜைனர்களுடைய கோயில்களையும் தமதாக்கிக்கொண்டு அதிலிருந்த பௌத்த ஜைன விக்கிரகங்களைப்பறித்தெடுத்து அக்கோயில்களின் ப்ராகாரங்களில் வைத்துவிட்டுத் தம் மதத்தின் தெய்வங்களாகிய விஷ்ணு, சிவன், தேவி முதலியவர்களின் விக்கிரகங்களை ஸ்தாபித்துக்கொண்டார்கள். ஆசாரியர் ராமாநுஜர் ஐந்து ஜைனகோயில்களைப் பிடித்துக்கொண்டு கீர்த்திநாராயணன், சத்தியநாராயணன் முதலிய பஞ்சநாராயணரை ஸ்தாபித்தாரென்று, ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரைகளும், சிலா சாஸனங்களும் கூறுகின்றன. சங்கரபகவத்பாதாசாரியாரும் ஒரு பௌத்த கோயிலைக் காமாக்ஷிதேவிகோயிலாக்கிக்கொண்டு அவ்விடத்தில் ஒரு ஸ்ரீசக்ரத்தையும் நாட்டியிருக்கவேண்டுமென்பதற்குத் தக்க சான்றுகளுள.

புத்த விக்கிரகங்களைச்செய்வதற்கு லக்ஷணங்கள் மானசாரமென்னும் வாஸ்துசாஸ்திரத்திற் சொல்லியிருக்கிறது. இவ்விக்கிரகம் நின்றதிருக்கோலத்துடனே ஸிம்ஹாசனமுதலியவற்றின்புறத்திலிருந்த கோலத்துடனே இருக்கவேண்டும். புத்தர் விக்கிரகம் வெளுத்தவர்ணமுடையதாயும், விசாலமான முகமும், தொங்குகிற காதுகளும், நீண்ட கண்களும், உயர்ந்த மூக்கும், சிரித்த முகமும், நெடிய கைகளும், அழகான மார்பும், சதைபிடித்துள்ள திவ்யாங்கங்களும், சற்றுச்சரிந்து தொங்கும் வயிறும், நிறைந்து பூர்ணமானசரீரமுமுடையதாயிருக்கவேண்டும். பாதங்களிரண்டையும் சமமாக வைத்துக்கொண்டு நிற்கும் நிலையும், தொங்கும் கை

களும், இரண்டு புஜங்களும், இரண்டு கண்களும், தலையில் ஜ்வாலையோடுகூடிய உஷ்ணீஷமும் ஸ்தானமூர்த்தியான புத்தருக்கு வேண்டியது. ஸ்தானத்திலும் ஆசனத்திலும் இம்மூர்த்தி பீதாம்பரத்தைத் தரித்திருக்கவேண்டும்.

ஆஸனமூர்த்தியாயின் பத்மாசனமாக இரண்டு கால்களையும் வைத்துக்கொண்டு சரீரத்தில் கோணலின்றியோ கோணலோடுகூடியோ யோகதத்பரமானமனதும், மேல்நோக்கி மடியில் வைக்கப்பட்ட வலக்கை இடக்கைளுமுடையதுமாயிருக்கவேண்டும். ஸிம்ஹாஸனத்திற்கு மேலே ரிஷிகளும், தேவஸங்கங்களும், வித்தியாதாரர்களும், திக்பாலர்களும் மற்றும்பலரும் ஆகாயத்தில் ஸ்தானமாயோ ஆஸனமாயோ இருந்துகொண்டு இவரைச் சேவிக்கவேண்டும். ஸிம்ஹாஸனத்தின் பின்வசம் ஸிம்ஹாஸனலக்ஷணத்திற்கூறியிருக்கும் கற்பகவிருக்ஷத்தினோடு அசுவத்தவிருக்ஷமுமிருக்கவேண்டும்.

இவ்விக்கிரகம் மரத்திலோ, கல்லிலோ, அல்லது லோகத்திலோ, சித்திரமாயோ, சித்திரார்த்தமாயோ, அல்லது சித்திராபாசமாயோ பீடத்திலேனும், அல்லது சுவரிலேனும் செய்யப்படலாம். புத்தருடைய விக்கிரகம் உத்தமதசகாலத்தில் சித்திரிக்கவேண்டும்.

சாதாரணமாய்ச் சாமானியஜனங்களுக்கு, பௌத்த ஜைனவிக்கிரகங்களுக்குள்ள வித்தியாசம்தெரியமுடிகிறதில்லை, இவ்விருமதத்தாருடைய விக்கிரகங்களில் ஆஸனமூர்த்திகள் வெகுவாய் ஒத்திருக்கும். ஆனால், ஜைனவிக்கிரகமானது ஆடையாபரணங்களற்றிருக்கும். தலையின் உஷ்ணீஷத்தில் ஜ்வாலையற்றிருக்கும்; மார்பின் வலதுபக்கத்தில் சுவர்ணவர்ணமுடைய ஸ்ரீவத்ஸலாஞ்சனம் காணப்படும், புத்தவிக்கிரகத்தில் உபவீதமாய்த்தரித்த உத்தரீயமும் தலையில் உஷ்ணீஷத்தின்பேரில் ஜ்வாலையும் காணப்படும், இவைகளே இவ்விரு திறத்தார் விக்கிரகங்களின் முக்கிய வித்தியாசங்கள்.—செந்தமிழ்.

---

# Iyarpagai Nayanar.

By Pandit V. Subrahmania Aiyar.

## இயற்பகை நாயனார்.

காவிரிநதி கடலில் சங்கமமாகும் இடத்தில் பூம்புகார் அல்லது காவிரிப்பூம்பட்டினமென்ற சிறந்த க்ஷேத்திரம் உண்டு. அந்த ஊர் முற்காலத்தில் துறைமுகப்பட்டணமா யிருந்தது. அந்த நகரில் வியாபாரம் பெருத்த செட்டிமக்கள் இருந்து வேற்று நாடுகளுடன் கடல் வியாபாரம் கப்பல்மூலமாய்ச் செய்துவந்த விஷயம், பழைய சரித்திரங்களால் பிரக்கியாதியாய்த் தெரிகின்றது. ஆகவே, இந்த நகரம் ஒருகாலத்தில் மாடமாளிகை கூடகோபுரங்கள் நிறைந்து, மிகவும் வளம் பொருந்தியதாய் இருந்ததற்கு அடையாளங்கள் இப்போதும் தெரிகின்றன. முன்னம் குபேரபட்டணம்போலச் சிறந்திருந்த இந்த நகரம், இப்போதும் காவேரிப்பட்டணம் என்ற பெயருடன் கடற்றுறையில் விளங்கிவருகிறது.

இந்த நகரத்தில் முற்காலத்தில் ஒரு செட்டியார் வசித்துவந்தார். அவர் சிறந்த சிவபக்தர். யார் வந்தாலும் அவர் இல்லையென்னாமல் அவரவர் வேண்டியதைக் கொடுத்துதவும் தன்மையையுடையவராயிருந்தார். அந்தச்செட்டியார் பெயர் இயற்பகையார். இவர் எப்பொழுதும், சிவனடியார்களுக்குக் கைங்கரியம் செய்வதில் தம்பொருளைச் செலவழிப்பதற்கே சிவன் தமக்குப் பொருளைக் கொடுத்திருக்கிறார்



என்று நினைப்பர். அவ்விதமே அவர்களுக்குத்தொண்டுசெய்வதல்லது வேறொன்றைச் செய்வதிலும் காலத்தை அவர் செலவிடுவதில்லை.

இப்படியிருக்கும்நாளில், பரமசிவன் தன்னுடைய சுயரூபத்தை விட்டு, பக்தருடைய மனப்பான்மையைப் பரிசோதிக்க வேண்டியதற்காக, பக்தர் விரும்பக்கூடிய அடியார் வேஷத்தைத் தாங்கிக்கொண்டு இயற்பகை நாயனார் முன் தோன்றினார். இயற்பகை நாயனார் தம் வீட்டின் வாயிற்படியில் அடியாரைப் பார்த்ததும், அவரை எதிர்சென்று வணங்கி, அவருடைய க்ஷேமலாபங்களை விசாரித்து, 'யான் என்ன தவம்செய்தோ தாங்கள் இங்கு எழுந்தருளும் பாக்கியம் பெற்றேன்? என்று கூறினார். "சிவனடியார்களில் எவர்கள் எவைகளைக் கேட்டாலும் மறுக்காமல் கொடுக்கும் குணம் தங்களுக்குண்டு என்று கேள்விப்பட்டு வந்தோம். உங்களிடத்திலிருந்து நாம் பெற வேண்டிய பொருள் உண்டு. அதற்காகத்தான் நாம் உம்மிடம் வந்தது. வந்தகாரியத்தைச் சொல்லலாமென்றால், நாம் சொல்லுகிறோம்" என்று, வேதியர் வேஷம்பூண்ட அடியார் நாயனாரிடம் சொன்னார்.

நாயனாரும், "என்னிடத்தில் அகப்படக்கூடியது எதுவானாலும், அதைத் தாங்கள் என்னிடத்திலிருந்து அடையலாம்; அதில் சந்தேகமேயில்லை. உங்களுக்கு வேண்டியதைக் கேளும்" என்று கூறினார். "தங்கள் மனைவியைத்தவிர வேறொன்றையும் இச்சித்து நாம் இங்கு வரவில்லை. அவளைத்தான் எமக்குத் தாங்கள் தரவேண்டும்" என்று அடியார் கேட்டார். இதைக்கேட்டதும் நாயனார், அடியார் தம்மிடத்துள்ளதையே கேட்டார் என்று அதிக சந்தோஷமடைந்தாரேயல்லது, வருத்தமடையவில்லை. உடனே இயற்பகை விதிப்படி தான் விவாகம் செய்துகொண்ட மனைவியினிடம்சென்றார். "கற்புடையபத்தினியே! இன்று அடியவராக வந்த இந்தப் பிராமணனுக்கு இன்று உன்னைக் கொடுத்துவிட்டேன்" என்று தம்மனைவியை நோக்கிக் கூறினார். இது கேட்ட இயற்பகையாரின் மனைவி கொஞ்சம் மனக்கலக்கமடைந்து பிறகு தெளிந்தாள்.

"ஐயனே! கணவன் சொல்லுக்கு மனைவி மாறு சொல்லுவதற்கில்லை. நான் தங்கள் வார்த்தைக்குக் குறுக்குச்சொல்லவில்லை. தங்கள் இஷ்டப்படியே நடக்கக் காத்திருக்கிறேன்" என்று சொல்லி, தன் கணவரையும் வேதியரையும் அவள் தொழுது நின்றாள். வேதியரும் இயற்பகையினிடமிருந்து அவரது மனைவியைப் பெற்று ஸந்தோஷமடைந்தார். அப்போது இயற்பகை, "வேதியரே! இனிமேல் நான் வேறு ஏதாவது காரியம் செய்யவேண்டுமென்றாலும் செய்யக் காத்திருக்கிறேன்" என்று சொல்லிக் கைதொழுது நின்றார். அப்போது வேதியர், "ஐயா! செட்டியாரே! நீர் உமது மனைவியை எமக்குக் கொடுத்துவிட்டீர். உம்மூரின் எல்லையைக்கடந்து உம்முடைய மனைவியை அழைத்துக்கொண்டுபோகும் வரையிலும் நீர் உதவி செய்ய வேண்டும். அதுதான் உங்களிடமிருந்து எதிர்பார்க்கும் ஒத்தாசை" என்று நாயனாரைப் பார்த்துச் சொன்னார். "இக்காரியத்தைத் தாங்கள் கேட்கு முன்பே நான் செய்திருக்க வேண்டும். இஃது என் பிழையேயாகும். இதோ தங்களுக்கு உதவி செய்வதற்குச் சித்தமாயிருக்கிறேன்" என்று சொல்லி, நாயனார் தமது வஸ்திரங்களைக் கட்டிக்கொண்டு, வேதியரைக் காவல் காக்கத்தகுந்த ஆயுதங்களையும் எடுத்து அணிந்து, வேதியர்க்கும் அவர் அழைத்துப் போகும் பெண்ணுக்கும் காவலாகச் சென்றார்.

"நாயனாருக்கு ஏதோ பித்துப்பிடித்துவிட்டது. இன்னது செய்யத்தகுந்தது, இன்னது செய்யத்தகாதது என்று அவர் அறியவில்லை. ஒரு வேதியர் வந்து தம்மனைவியைக் கேட்டால், இவ்விதம் எப்படி அவளைக் கொடுக்க இசைவர்? நாயனாரை இந்தச் செய்கையைச் செய்ய விடுவதில்லை" என்று நாயனாரைச் சேர்ந்த பந்துக்களும், நாயனார் மனைவியைச்

சேர்ந்த பந்துக்களும் வந்து வழியில் இவர்களை மடக்கி மறித்துக்கொண்டு சண்டையிட்டார்கள். அப்போது அடியார் வேஷத்துடனிருக்கும் பிராமணர் என்ன செய்வதென்று பயந்தவர்போல நாயனார்மனைவியைப் பார்த்தார். நாயனார்மனைவியும் அடியாரைப் பார்த்து, "நீங்கள் பயப்படவேண்டாம்: இயற்பகையார் எல்லோரையும் ஒழித்து விடுவார்" என்று தைரியம் கூறினாள். இவ்வார்த்தைகளை நாயனாரும் கேட்டு, வேதியர் எதிரில் வந்து, "நீர் பயப்படவேண்டாம்: நான் ஒருவனாகவே இவ்வளவுபேரையும் ஜயிப்பேன், தாங்களே அதைப் பார்ப்பீர்கள். நீங்கள் தைரியத்தைமாத்திரம் கைவிடாதீர்கள்" என்று சொன்னார். அப்போது அத்தம்பதிகளின் பந்துக்கள் நாயனாரை நோக்கி, "ஏனடா உனக்கு இந்தப் பித்துப் பிடித்தது? நீ செய்த காரியத்தை உன்குலத்தார் பழிப்பார்களென்று கொஞ்சமும் நீ எண்ணவில்லையே! நீபுண்ணியம் சம்பாதிப்பது மனைவியைத் தத்தம்பண்ணித்தானா? நாங்கள் மடிந்தாலும் எங்கள்குலத்துப்பெண்ணை விடமாட்டோம்" என்று கூக்குரலிட்டு ஆயுதங்களுடன் மீண்டும் எதிர்த்தனர். அப்போது நாயனார், "இப்படிச் சொன்ன உங்களையெல்லாம் என் கைவாளுக்கிரையாக்கி, என் மனைவியுடன் வேதியரைப் போகச் செய்வேனேயொழிய, உங்கள் வார்த்தைகளை நான் கேட்கமாட்டேன்" என்று கோபித்து அவர்களை எதிர்த்தார்; அநேகர்தலைகளைத்துணித்தார்; பலபேர்களுடைய கால்களை வெட்டித் தள்ளினார்; இன்னும் பலருடைய கைகளையும், மற்ற அங்கங்களையும் வீழ்த்தினர். இவ்வாறு நாயனார் தமது உறவினர்களை நாசமாக்கித் தம் யுத்த வன்மையை வேதியருக்குக் காட்டினார். இந்த யுத்தத்தில் தப்பியோடிய சிலர், மூலைக்கு மூலைவந்து நாயனாரைத் தாக்க, அவர்களையும் இவர் விடாமற் கொன்றார்.

பிறகு நாயனார் அடியாரிடத்திற் சென்று, "நீர் இனி யாதுக்கும் அஞ்சவேண்டாம். எனது மனைவியையழைத்துக்கொண்டு சுகமாய் உமது ஊர்சே[illegible]ய்வாரும்" என்று சொல்லி அவருக்கு உத்தரவு கொடுத்துத் தம் மனைவியைத் திரும்பிப் பாராமலேயே தம்மூர் நோக்கித் திரும்பினார். இப்படி இயற்பகை நாயனார் தாம் கொண்ட எண்ணத்தை நிறைவேற்றிச் சந்தோஷமாய்ப் போகும்போது, செய்வதற்கருமையான காரியத்தைச் செய்து போகும் இயற்பகையை அடியார் மீளவும் கூப்பிடலானார். இதனை[illegible]ப சேக்கிழார் நாயனார்,

"இயற்பகைமுனிவா வோலமீண்டு நீவருவாயோலம்
மயர்ப்பிலாதானே யோல மன்பனே யோலமோலஞ்
செயற்கருஞ்செய்கை செய்த தீரனேயோலமென்றான்
மயக்கறு மறையோலிட்டு மாலயன்றேடநின்றான்."

என்று கூறியிருக்கிறார்.

இப்படி கூப்பிட்டதுகேட்ட நாயனார், "நான் செய்த சண்டையில் பிழைத்தொளித்தவர் உம்மை இப்போது இம்சை செய்கிறார்களா? அவர்களையும் ஒழித்து உங்களை இரக்ஷிக்க இதோ வருகிறேன்" என்று மறுபடியும் திரும்பி வந்தார்.

அப்போது வேதியர் தம் கோலத்தை மாற்றிக்கொள்ள வேண்டியதற்காக மறைந்து போக, இயற்பகையார் அங்குத் தம் மனைவியைமட்டும் கண்டு வேதியர் எங்கென விசாரித்தார். அவளும் அவர்போன இடத்தை அறியாமல் திகைத்து நின்றாள். அப்போது பரமேசுவரன் பார்வதிசமேதராய் விருஷபாரூடராய்ப்பூதகணங்கள் சூழ்ந்துவர இயற்பகை நாயனாருக்கும் அவரது மனைவியார்க்கும் காட்சி கொடுத்தார். ஈசுவரனைக் கண்டதும் இயற்பகை நாயனார் விசேஷமான பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து வாழ்த்தினார். இதனைச் சேக்கிழார் சுவாமிகள்,

"சொல்லுவதறியேன்வாழி
தோற்றிய தோற்றம் போற்றி
வல்லை வந்தருளி யென்னை
வழித்தொண்டு கொண்டாய் போற்றி
யெல்லையிலின்ப வெள்ள
மெனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம்பலத்துளாடுஞ்
சேவடி போற்றியென்ன"

என்று கூறியிருக்கிறார்.



ஈசுவரனும் இவர் செய்த ஸ்தோத்திரத்திற்கும் பக்திக்கும் சந்தோஷப்பட்டு, பணிந்த பக்தனை நோக்கி, "உலகத்தில் உன்னைப்போல் என்னிடத்தில் பக்திபண்ணினவரில்லை. உன்னுடைய பக்தியை மிகுதியும் மெச்சினோம். நீயும் உன்னுடைய மனைவியும் நம் உலகம் சேர்வீர்களாக. உம்முடைய சுற்றத்தார்களும் வீரசுவர்க்கம் அடைவார்களாக" என்று சொல்லி மறைந்தார். அப்போது தேவதைகள் மலர்மாரி பொழிந்தார்கள். நாயனாரும் பக்தரை ஈசனன்பரென மதித்துத் தமது தாரத்தைக் கொடுத்த பெருமையால் பேரின்பமடைந்தார்.

பண்டித **வீ. சுப்பிரமணிய ஐயர்.**

---

## Cattle Plague or Rinderpest.

### வெக்கை.

வெக்கையென்பது மாடு, ஆடு, ஒட்டகை, அசைபோடும் காட்டுமிருகங்கள் முதலியவைகளுக்கு உண்டாகும் ஒரு தொற்று வியாதி. பன்றியும் இந்த வியாதிக்குள்ளாகக்கூடுமென்று சொல்லப்படுகிறது. இது மனிதருக்கும் குதிரைகளுக்கும் உண்டாவதில்லை. இது இந்தியா முழுவதும் உண்டாவதாகத் தெரிகிறது. ஆனால், சில ஜில்லாக்களில் இந்த வியாதி மிகவும் பிரபலமாயும் மற்றவிடங்களில் ஸாதாரணமாயும் இருக்கிறது. மலையடர்ந்த ஜில்லாக்களில் இந்த வியாதியால் ஏற்படும் கால்நடை மரணம் மிகவும் அதிகம். அந்த ஜில்லாக்களில் நோய்கண்ட மிருகங்களில் 100-க்கு 90-முதல் 100 வரையில் இறந்துபோவதுண்டு. ஸமவெளிகளில் ஸாதாரணமாய் நூற்றுக்கு 40 முதல் 50 வரையில் இறந்து போகின்றன. இந்த நோய் கண்டு ஸ்வஸ்தமடைந்த பிராணிகளுக்கு மறுபடியும் இந்த நோய் உண்டாவதில்லை, மாடுகளின் மலஜலங்கள், வியர்வை, வாயிலிருந்து வரும் ஜலம் முதலியவைகள்மூலமாக இந்த நோய் பரவுகிறது. மாட்டின் தோல் மூலமாகவும் இந்த நோய் பரவலாம். இந்த நோய்க்கு ஆதாரமான விஷம் இருக்கும் மலஜலங்களின்மேல் வெயில் தாக்குவதாலும், அவை காய்ந்துபோவதாலும், அழுகுவதாலும், கிருமிஹரமான மருந்து போடுவதாலும் விஷம் நாசமடையும். இந்த நோய்க்கு ஆதாரமான கிருமி இன்னதென்று எவரும் இன்னம் கண்டுபிடிக்கவில்லை. இந்த வியாதி கண்டு அது நன்றாய் வெளிப்படையாகத் தெரிவதற்கு 3 முதல் 7 நாள் வரை செல்லுகின்றது.

### வியாதியின் குறிகள்.

இந்த வியாதியின் முதற்குறி என்னவென்றால், மாட்டின் தேகம் மிகவும் சூடாயிருப்பதே. ஸாதாரணமாய் இந்த வியாதியில் தேகம் 104 முதல் 105 டிக்ரி வரையில் சூடாயிருக்கும். மாட்டின் தேகத்தில் தெர்மாமிடர் என்னும் உஷ்ணமானியை வைத்துச் சூட்டின் அளவை அறிந்துகொள்ளலாம். இந்த வியாதியில் ஆரம்பத்தில் தெரியக்கூடிய வேறு லக்ஷணங்கள் என்னவென்றால், மாடு மந்தமாயிருப்பது, அதன் வாய் கண் இவைகளின் உட்புறம் வீங்கியிருப்பது, இரையெடுப்பதில் விருப்பமில்லாமை, அசைபோடாமை, பால் கறப்பது நின்றுவிடுவது ஆகிய இவைகளே; மிருகத்திற்கு மலச்சிக்கும் ஏற்படலாம். அப்போது சாணியைச் சுற்றிலும் பசைபோன்ற ஒரு பொருள் காணப்படும். இரண்டாவது அல்லது மூன்றாவது நாளில் வாயில் நாக்கிற்கு அடியிலும், உதடுகளின் உட்புறத்திலும் சிறு கொப்புளங்கள் உண்டாகும். மிருகமானது ஸதா கீழே படுத்துக்கொண்டு, தனது தலையை விலாப்பக்கமாகச் சாய்த்துக்கொண்டிருக்கும். வாயிலிருந்தும் கண்ணிலிருந்தும் ஜலம் வெளி

வரும். இதற்குப் பிறகு வயிற்றுப்போக்கு உண்டாகும். அப்போது சாணியானது மிகவும் துர்நாற்றமுள்ளதாயிருக்கும். அதில் ரத்தமும் சீதமும் கலந்து போகக்கூடும். வாயிலுள்ள சிறு கொப்புளங்கள் ரணமாகிவிடும். மாட்டின் மேல்தோலிலும் கொப்புளங்கள் உண்டாகலாம். முக்கியமாய் மாட்டின் மடிப் பக்கத்தில்தான் இவை உண்டாகும். மாட்டுக்கு வயிற்றுப்போக்கு உண்டானதும் தேகத்தின் சூடு குறைகின்றது; மாடு மிகவும் பலஹீனமாகிவிடுகிறது. பிறகு அது கொஞ்சம் மயக்கமடைந்து அப்படியே சில நாள்களிருந்து 7-வது அல்லது 10-வது நாள் இறந்துபோகிறது. வியாதி மிகவும் கடுமையாயிராவிட்டால், இன்னும் சிலநாள் மாடு உயிருடன் இருக்கும். இந்த வியாதியில் வயிற்றுப்போக்கு ஏற்படுவதற்கு முன்னால் மாடு இறப்பது மிகவும் அரிது.

இந்த வியாதிக்குப் பற்பல மருந்துகள் கொடுத்துப்பார்த்தும் பயன் ஏற்படவில்லை. வயிற்றுப்போக்கை நிறுத்தவேண்டி சில கேஸ்களில் காரமான மருந்துகளைக் கொடுத்ததில் கெடுதலே ஏற்பட்டதாகத் தெரிகிறது. கார்பாலிக் ஆஸிட் பெர்மாங்கனேட் அப் பொட்டாஷ் அயோடைன் முதலிய மருந்துகளை உள்ளுக்குக் கொடுத்ததில் நோய்கண்ட சில மாடுகள் ஸௌக்கியப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. கார்பாலிக் ஆஸிட் மருந்துகொடுப்பதாயிருந்தால், ஒருதடவைக்கு ½ டிராம் முதல் 1 டிராம் வரை மருந்தை பட்டணம் படியால் 1½ படி ஜலத்தில் கரைத்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். பெர்மாங்கனேட் அப் பொட்டாஷ் மருந்தானால், அதே அளவு ஜலத்தில் 2 டிராம் முதல் 4 டிராம் வரை பெர்மாங்கனேட் அப் பொட்டாஷைக்கலந்து உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். அயோடைன் மருந்தைமாத்திரம் வைத்தியரைக் கேட்காமல் கொடுக்கக்கூடாது. வியாதியை ஸ்வஸ்தப்படுத்துவதில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயம், மாடுகளை நன்றாய்ப் பராமரிப்பதும், சரியான ஆகாரம் கொடுப்பதுமே. மாட்டுக்கு வயிற்றுப்போக்கு ஏற்படுவதற்கு முன் அதிகக் கடுமையாயிராத பின்வரும் பேதி மருந்தை அதற்கு உள்ளுக்குக் கொடுக்கலாம். லின்ஸீட் ஆயில் (அதாவது யாளிவிதை எண்ணெய்) அல்லது ஆமணக்கு எண்ணெய் 10 ஔன்ஸ், நல்லெண்ணெய் 10 ஔன்ஸ், க்ரோடன் ஆயில் என்னும் எண்ணெய் 20 துளிகள் இவைகளை நன்றாய்க்கலந்து உள்ளுக்குச் செலுத்தவேண்டும். ஆடுகளுக்கு இவ்வியாதி கண்டால், ஆமணக்கெண்ணெயைச் சேர்க்காமல் அதற்குப் பதிலாக லின்ஸீட் எண்ணெயைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். வயிற்றுக்கடுப்புக்குப்பின் ஏற்படும் தேகபலஹீனத்திற்குப் பின்வரும் மருந்தைக் கொடுக்கலாம். ஆரக்கு சாராயம் 4 ஔன்ஸ், பொடிசெய்த சுக்கு ½ ஔன்ஸ், பொடி செய்த மிளகு 2 டிராம் இவைகளைக் கலந்து, அரிசிமாவைக்கொண்டாவது யாளிவிதைமாவைக் கொண்டாவது செய்த கஞ்சியோடு கலந்து, 4 மணிக்கொருதடவை உள்ளுக்குக் கொடுக்கவேண்டும். ஜீர்ணம் செய்ய முடியாததும், மட்டமுமான தீனியைப் போடக்கூடாது. இளையதான பச்சைப் புல்லையாவது அல்லது வேறு இளை தழைகளையாவது தீனியாகப் போடலாம். கஞ்சியில் கொஞ்சம் உப்பும் சேர்க்கலாம். அல்லது மாட்டுக்கு எட்டக்கூடிய இடத்தில் ஒரு பெரிய கல்லுப்புக்கட்டியை வைத்திருந்தால், மாடு வேண்டுமானால் அதை நக்கிக்கொள்ளும். மாட்டின் தேகம் கதகதப்பாயிருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். அவசியமானால் துணிகளால் அதன் தேகத்தைப் போர்த்துவிடவேண்டும். மாட்டை நிழலில் கட்டிவைப்பதோடு, அது இருக்கும் இடத்தில் போதுமான அளவு காற்றோட்டமிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்.

நோய்ப்பட்ட மாடுகளோடு சேர்ந்திருந்ததனால் வியாதி உண்டாகுமோ என்று ஸந்தேஹித்த மற்ற மாடுகளுக்கு இந்த வியாதிக்கேற்பட்ட மருந்தால் இனாகுலேஷன் செய்துவிட்டால், அதாவது அம்மை குத்திவிட்டால், அந்த ஸந்தேகித்தமாடுகளுக்கு இந்த வியாதி உண்டாகாது. ஒரு இடத்தில் வெக்கை உண்டானவுடன் கால்நடை வைத்தியரை அழைத்துவந்து ஸௌக்கியமாயிருப்பதாகத் தோற்றும் எல்லா மாடுகளுக்கும் அம்மை குத்திவிடுவது நல்லது. அம்மை குத்துவதில் பல முறைகள் இருக்கின்றன. இந்தியாவில் அநுஷ்டானத்திலிருக்கும் முறை மிகவும் ஸௌகரியமானது. இதனால் கால்நடைகளுக்கு சிரமம் ஏற்படுவதில்லை; அவைகளுக்குக் காய்ச்சலாவது அல்லது வெக்கை நோயின் வேறு அறிகுறிகளாவது ஏற்படுவதுமில்லை. மாடுகளை வேலை செய்யவிடாமல் கட்டிப்போடவேண்டிய அவசியமுமில்லை. சினையாயிருக்கும் மாடுகளுக்கும் அம்மை குத்தலாம். அதனால் யாதொரு கெடுதலும் நேராது. அம்மைகுத்தின மிருகங்களை வியாதிகண்ட மிருகங்களோடு சேர்த்துக் கட்டிவைக்கலாம். அப்படிச் செய்வதுதான் நல்லது; ஏனென்றால், அம்மைகுத்தின மிருகத்துக்கு வியாதி உண்டானால், வியாதி கடுமையாயிருப்பதில்லை. அவை ஸ்வஸ்தமடைந்தபிறகு மறுபடியும் ஒருகாலத்திலும் அவைகளுக்கு இந்த வியாதி உண்டாவதில்லை.

மாடுகளுக்கு அம்மை குத்தினபிறகு அவைகள் இருக்கும் இடத்தில் உள்ள வியாதி பரவுதற்கேற்றசர்ணம் முதலியவைகளைக்கிருமிஹர மருந்து போட்டுச் சுத்தம் செய்யவேண்டும்.

வியாதி வரக்கூடுமென்று ஸந்தேகித்தஎல்லா மாடுகளுக்கும் அம்மை குத்தவேண்டியது அவசியமானது. இல்லாவிட்டால், அந்த மாடுகளுக்கு ஒன்றின்பின் ஒன்றாய் வியாதி ஏற்பட்டு, அது பரவிவிடக்கூடும்.—ஜனோபிமானி.



## The Lost Will.

By Mr. M. S. Krishnasamy Aiyar,

## காணாமற்போன மரணசாஸனம்,

(111-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 5-வது அத்தியாயம்.

சென்ற அத்தியாயத்தில் சொல்லிய விஷயங்கள் நடந்து மூன்று வர்ஷங்களாயின. சுந்தரத்துக்கும் நீலகண்டனுக்கும் 'பட்ட காலிலேபடும்; கெட்டகுடியே கெடு'மென்றபடி கஷ்டங்கள் ஒவ்வொன்றாய் வரலாயின. ராமகிருஷ்ணய்யர் அதிக ஸொத்து ஒன்றுமில்லாதவர். ஆனால், யோக்கியமானவர். அவருடைய யோக்கியதையை நம்பி சங்கரய்யர் எழுநூற்றுச்சொச்சம் ரூபாய் கடன் கொடுத்திருந்தார். இதைத்தவிர, ராமகிருஷ்ணய்யர் தமது வீட்டின்பேரிலும் ஸ்வல்ப நிலங்களின்பேரிலும் ஈட்டுக்கடன் வாங்கியிருந்தார். எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் ஆள்மிஞ்சுவது கஷ்டம். ஆனால், அவர் மிகவும் உழைப்பாளி. நிலங்கள் குத்தகைக்கெடுத்துப் பாடுபட்டுக் கொஞ்சங்கொஞ்சமாய் ஸொத்து சம்பாதித்துக் கடன்களை அடைத்துவந்தார். மற்றும், இப்படியே ஸம்பாதித்ததால் கடனை அடைப்பதானால் பத்து வருஷத்துக்குள் கடனெல்லாம் அதுவரையிற் சேரும் வட்டியுள்பட அடைபட்டுப்போகும். ஆனால், அதுவரையில் எல்லாரும் காத்திருப்பதேது? சிலர் பணத்துக்கு நெருக்கினார்கள். சிலர் ஒவ்வொருமாஸம் குறிப்பிட்டு அதற்குள் கடனைத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டுமென்று சொன்னார்கள். ராமகிருஷ்ணய்யருக்குக் கடனுபத்திரவம் பொறுக்கமுடியவில்லை, அவர் மிகவும் மானி. சங்க

ரய்யர் உயிருடனிருந்தால், அவர் இந்தக் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கமாட்டார். அவரும் இல்லை! இன்ஸால்வென்ஸிக்கு மனுப்போட்டார்; மானம் பொறுக்கமுடியாமல் புதுச்சேரிக்கு ஓடிவிட்டார். கடன்காரர்கள் ஸொத்தின்மேல் நடவடிக்கை நடத்தித் தங்கள் கடன்களை அடைந்தார்கள். சங்கரய்யர் கொடுத்திருந்த கடனுக்கு ஈடு ஒன்றுமில்லாததால், ஈட்டுக்கடன்களுக்குப் போனதுபோக ஸுமார் நூற்றைம்பது ரூபாயே நீலகண்டனுக்குக் கிடைத்தன. இந்த வியவஹாரங்களை நடத்தச் சுமார் எழுபதுரூபாய் செலவாகியிருந்தது. செலவுபோக நீலகண்டனுக்கு 80 ரூபாயே கிடைத்தன.

குப்பாசாஸ்திரிகள் எவ்வளவுதான் சிரத்தை எடுத்துக்கொண்டாலும், நீலகண்டனுக்கு நிலத்திலிருந்து வரும்படி அதிகம் கிடைக்கவில்லை. அவன் தன் தாய் மாமன் வீட்டிலேயே பெரும்பாலும் இருந்ததாலும், அவ்வூரில் படிக்க வஸதிகள் அதிகம் இல்லையாதலாலும், அவன் தந்தை இறந்தபோது அதிகம் படித்திருக்கவில்லை. பக்கத்தூரில் உள்ள ஒரு பாடசாலைக்குப்போய் வாசித்துக்கொண்டிருந்தான். தந்தை இறந்துபோகவும் தாயார் அவனை நன்றாய் வாசிக்கும்படி வற்புறுத்தினாள். சொத்தில்லாததால் படிப்பிருந்தால் தான் அவன் தன்னையும் அவனது தாயையும் காப்பாற்ற முடியுமென்றாள். அவளுடைய புருஷன் தனக்கும் அவனுக்கும் செய்துவிட்டுப்போன தீங்கை எடுத்துரைத்து, படிப்பில் அவனுக்கு உற்சாகம் உண்டாக்கிவிட்டாள். இரண்டுவர்ஷம் அவன் ஊக்கத்துடன் வாசித்துப் பாடசாலையில் உயர்ந்தவகுப்பாகிய ஏழாவதில் தேறிவிட்டான்.

நீலகண்டனுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களிலிருந்து வரும் வரும்படி அவனுக்கும் அவன் தாய்க்கும் சோற்றுக்குக்கூடப் போதாமலிருந்தது. ராமய்யர் இவர்களிடம் மிகவும் வாத்ஸல்யமுள்ளவராதலால், அவர்களைத் தம்மிடமே வைத்துக்கொண்டதோடு, பையனுக்கு ஸொந்தச் செலவிலிருந்து படிப்புக்குக் கொடுத்துவந்தார். அவருக்கு ஒரு பெண் இருந்தது. அதற்கு 8-வயதிருக்கும். அப்பெண்ணை அவர்மனைவி நீலகண்டனுக்குக் கொடுத்துவிடுவதென்றிருந்தாள். இதனால் அவள் தனது நாத்தனார்மேல் அதிகக் குறை சொல்லாமலிருந்து வந்தாள். சுந்தரமும் அதிக ஸாதுவாதலாலும், பாடுபட்டு அவ்வீட்டில் உழைத்து வந்ததனாலும், ராமய்யர் மனைவிக்கும் அவளுக்கும் மனஸ்தாபங்கள் உண்டாகவில்லை. மேலும், இருவரும் ஸம்பந்திகளாகப்போகிற ஸந்தோஷத்திலிருந்தார்கள். இப்படியிருக்க, நீலகண்டனுக்கும் ராமய்யர் பெண்ணுக்கும் பெரியம்மை வந்தது. இரண்டுவாரம் இருவரும் தவித்துப்போய்விட்டார்கள். இருவரும் பிழைக்கும் தறுவாயிலிருக்கும்போது, ராமய்யர் பெண்ணை மாத்ரம் யமன் தன்னுலகு சேர்த்துக்கொண்டான். நீலகண்டன் பிழைத்துக்கொண்டான்.

தனது ஒரே பெண்ணையிழந்த ராமய்யர் மனைவிக்கு உண்டான துக்கம் சொல்லத்திறமன்று. தான் அதுவரை எண்ணிய எண்ணமெல்லாம் வீணானதைப்பற்றி வருந்தினாள்; இருவரும் பிழைத்திருந்தால் அடுத்த வைகாசி மாஸமே கல்யாணம் நடத்தியிருக்கலாமே யென்று ஏங்கினாள். வந்த யமன் தன் மகளை மாத்திரம் கொண்டுபோவானேன் என்று கலங்கினாள். வரவர அவளுக்கு நாத்தனார் மேல் வெறுப்பு உண்டாயிற்று. துரதிருஷ்டம்பிடித்த சுந்தரம் வந்ததால்தான் தனக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டனவென்று அவள் எண்ணினாள். சொற்ப வரும்படியை வைத்துக்கொண்டு இருவரும் தன் வீட்டில் வந்து தங்கித் தின்பதோடு நில்லாமல், பையனுக்குப் படிக்கவும் கொடுக்க நேரிடுவது அவளுக்கு ஸம்மதமில்லை. முன்பாவது நீலகண்டன் தனக்கு மாப்பிள்ளையாவான் என்ற எண்ணமிருந்தது. தன் வயிற்றிலிருக்கும் குழந்தை



பெண்ணாய்ப்பிறந்தாலுங்கூட நீலகண்டன் மாப்பிள்ளையாகப்போவதில்லை. இனி அவனுக்குப் படிப்புக்குக் கொடுப்பானேன் என்று அவள் தன் புருஷனுக்கு உபதேசம் செய்தாள். சொற்பவரும்படியை இங்குக் கொண்டுவந்து போட்டு, இரண்டுபேரும் மூன்றுவேளை தின்றால், தனது ஏழைக்குடும்பம் எப்படிக் கடைத்தேறுமென்று கேட்டாள். ராமய்யர் என்ன சொல்வார்; பாவம்! அவரோ தமது மனைவி சொல்லுக்கு அடங்கி நடப்பவர். அவள் இட்டது தான் வீட்டில் சட்டமாகும். அவருக்குத் தமது தங்கையின்பேரில் விசேஷ அன்பு உண்டென்றாலும், மனைவி என்ன சொல்லுவாளோ என்று பயந்து அவளனுமதி கேட்டுத்தான் சுந்தரத்தைக் கூட்டிக்கொண்டு வந்தார். அவளுடைய ஸம்மதத்தின்பேரில்தான் அவர் சுந்தரத்தின் சொற்ப வரும்படியைக்கொண்டு இருவருக்கும் சாப்பாடுபோட்டுப் பையனையும் படிக்கவைத்தார். ராமய்யர் பெண் இறந்துபோகவே, சுந்தரத்தின் கதி அந்தரத்தில் நின்றது. எந்த நிமிஷத்தில் ராமய்யர் மனைவி தன்னை வீட்டைவிட்டு வெளியேறச்சொல்லுவாளோ என்று அவள் ஏங்கினாள். வீட்டிலிருந்து சோறு தின்பதே திண்டாட்டமாயிருக்க, பையனைப் படிக்கவைப்பது எப்படி? பையனோ, படித்துப் பெரிய உத்யோகம் செய்ய ஆசைகொண்டிருந்தான்.

நீலகண்டனுக்கு வயது 10 தானாயிற்றென்றாலும், 20 வயதுப் பையனுக்குள்ள அறிவும் அனுபவமும் இருந்தது. தன் மாமன் மனைவி தனது அன்னையை அலக்ஷ்யம் செய்வதும், தனது படிப்பை உத்தேசித்து அவள் வெகுவாய்க் கவலைப்படுவதும் அவனுக்குக் கவலை உண்டாக்கின. தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நிலங்கள் வளமைக்குறைவுள்ளவையாகையால், அதிலிருந்து வரும் வரும்படி இருவருக்கும் ஆறுமாஸச் சாப்பாட்டுக்கே போதாமலிருக்க, படிப்புக்கு நில வரும்படியை எதிர்பார்ப்பது தவறென எண்ணினான். எப்படியாவது படித்துப்பொருள் சம்பாதிக்க எண்ணமிருந்ததனால், அதற்கென்ன செய்வதென்று பலநாள் கவலையாயிருந்தான். தனது மாமி இல்லாத ஸமயங்களில் ராமய்யரை யோசனை கேட்டான். அவரோ தமக்குச் செலவுகள் அதிகரித்துவிட்டனவென்றும், அதனால் திரிசிரபுரம் போன்ற நகரங்களில் அவனுக்குச் சாப்பாட்டுக்கும் படிப்புக்கும் பணங்கொடுக்கத் தம்மாலியலாதென்றும், ஏதோ தாமிருக்கிற வரையில் இருவரும் உள்ளதைத் தமது வீட்டில் கொண்டுவந்து போட்டுச் சாப்பிட்டுக்கொண்டிருக்கலாமென்றும் சொல்லிவிட்டார்.

இந்தப் பதிலைக்கேட்ட நீலகண்டன் சற்றுக் கவலையடைந்தான்; ஊரிலுள்ள வாலிபர்களையும் பெரியவர்களையும் யோசனைகேட்டுக் கடைசியாக திரிசிரபுரம்சென்று எப்படியாவது படிக்கிறதென்று தீர்மானித்தான்; இதைத் தனது அன்னையிடம் தெரிவித்தால், அவள் அனுமதி கொடுக்க மறுக்கலாமென்று நினைத்து, ஒருநாள் ஒருவரிடமும் சொல்லாமல் திரிசிரபுரம் ஓடிவிட்டான். ஆனால், இதுகாறும் பலவகைகளில் துன்பத்துக்காளாகி மனம்முறியும் தறுவாயிலிருக்கும் தனது அன்னையை இன்னும் வருத்தப்படுத்த ஸம்மதமில்லாமல், தான் செய்யப்போகிறதைத் தெரிவித்து ஒருகடிதம் எழுதி ஸுந்தரம்மாள் எளிதில் எடுத்துப்பார்க்கக்கூடிய ஒருஇடத்தில் வைத்துவிட்டுப்போனான்.

திரிசிரபுரம் புறப்படும்போது நீலகண்டனிடம் 5 ரூபாய்களே இருந்தன. இதிற்பாதி அவனது நண்பர்கள் சேர்த்துக்கொடுத்தது. மற்றபாகம் தானாகச் சிறிதுசிறிதாகச் சேர்த்து வைத்திருந்தது. திரிசிரபுரம் வந்ததும் இன்னவிடம் போவது, இன்னது செய்வதென்று தெரியாமல் தயங்கினான். கடைசியாக, ஒரு பள்ளிக்கூடத்தில் சோறுபோடுகிறார்களென்றும், சம்பள வகையறாச் செலவுகளைத் தானே பார்த்துக்கொள்வதாயிருந்தால், அதிற்சேர்ந்து படிக்கலாமென்றும் தான் தங்கியிருந்த ஹோட்டலில் கேட்டறிந்துகொண்டான்; தன்னைப்

போலவே திக்கற்றுவந்த இரண்டொரு வாலிபர்களை நேசம் செய்துகொண்டு, அவர்கள் மூலமாகச் சில பெரிய மனிதர்களைக்கண்டு, அவர்களிடம் மன்றாடிக் கேட்கவே, 'அவர்களிற் சிலர் படிப்புக்குப் பணவுதவி செய்வதாக வாக்களித்தார்கள். இவையெல்லாம் நாலைந்து நாட்களில் நிறைவேறின. உடனே நீலகண்டன் தன் மாமனுக்கும் தாயாருக்கும் கடிதங்கள் எழுதி, தன் படிப்பு விஷயத்தில் இனி விசாரப்படவேண்டியதில்லையென்றும், தன்னைப்பற்றி ஒருவரும் கவலைப்படவேண்டியதில்லையென்றும், கூடிய சீக்கிரம் தான் ஊருக்கு வந்து அவர்களைப் பார்த்துப்போவதாகவும் தெரிவித்தான்.

சுந்தரம் கவலை தீர்ந்தாள். பையன் படித்துப் பெரியவேலை செய்து சம்பாதித்து வாரிக் கட்டுவான் என்று மனக்கோட்டை கட்டலானாள். நிலவரும்படி தன் ஜீவனத்துக்குக் கிட்டத்தட்டப் போதுமானதாகையால், உடன்பிறந்தான் மனைவி என்ன சொல்லுவாளோ என்ற கவலை யொழிந்துவிட்டது. வயிற்றை ஒடுக்கி ஜீவனம் செய்தால், பையனுக்காக ஏதாவது மிச்சம் பிடித்துவைக்கலாமென்றும் அவளுக்குத் தோன்றிற்று. ஆனால், ராமய்யர் மனைவி ஒருபாரம் ஒழிந்ததைப்பற்றி ஸந்தோஷங்கொண்டதால், சுந்தரத்தை வீட்டைவிட்டுத் துரத்த மனங்கொள்ளவில்லை. நீலகண்டன் தன் படிப்புக்காகக் கஷ்டப்பட்டவைகளையெல்லாம் எழுதியிருந்ததை அவள் வாசிக்கக்கேட்டிருந்ததால், அவன்மேல் மறுபடியும் அன்பு கொள்ளலானாள். "போகிறது, எப்படியோ படிக்க ஏற்பாடு செய்துகொண்டான். இனிமேல் நமக்குக் கவலையில்லை. அவஸரத்துக்குப் பணம் வேண்டியிருந்து ஒன்றிரண்டு அனுப்பினால், சட்டை துணிமணி வாங்கிக்கொள்வான்" என்று தனது நாத்தனாரிடம் சொல்லிவந்தாள். நாத்தனாரால் அதிகச் செலவு ஏற்படாது என்று தெரிந்ததும், அவள் முன்போல் சுந்தரத்தின்பேரில் வெறுப்புக் காட்டவில்லை. இரண்டொரு முறை சுந்தரம் தனியே வாழ எண்ணியிருப்பதாகத் தெரிவித்தபோது, கூடாதென்று கண்டித்துவிட்டாள்.

---

## 6-வது அத்தியாயம்.

'இனம் இனத்தோடு சேரும்' என்றபடி நீலகண்டன் தன்னைப்போல் ஏழையாயுள்ள பையன்களுடன்தான் சேருவது வழக்கம். பணக்காரப் பையன்களிடம் பழகுவது கிடையாது: ஆடம்பரமும் வீண்செலவும், பிறரை அவமதித்தலும் ஸ்வபாவமாக உடைய பல செல்வமாணவர்களைக்கண்டு அவர்களுடன் ஸகவாசம் வைத்துக்கொள்வதை நிறுத்திவிட்டான்; தன்னைப்போல் சிரமதசையிலுள்ளவர்களோடு கலந்து, ஒருவர்க்கொருவர் ஆதரவு சொல்லிக்கொள்வது வழக்கமாகிவிட்டது. எல்லா மாணவர்களும் நீலகண்டனிடம் வெகு விசுவாசம் கொண்டிருப்பார்கள். அவர்களுள் அந்தரங்க நேசங்கொண்டவன் துரைசாமி என்னும் பையன். அவன் கோவிந்தய்யருடைய மகன். இருவரும் ஒரேவகுப்பினர். அவர்கள் ஒரு நாள் மாலை காவிரியாற்றுக்குச் சென்று மணலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

துரை :—"உன் கதியை நினைக்கும்போது எனக்குப் பகீரென்கிறது. உன் தந்தையிருந்தால் இப்படி விட்டிருப்பாரா? என்னதான் உன் மாமி நல்லவளென்றாலும், உன் தாயை வெடுக்கென்று ஒருவார்த்தைகூடச் சொல்லாமலிருப்பாளா? இந்த வருஷம் ஸ்வாமி கிருபையால் பரீக்ஷை தேறிவிட்டால், எங்கேயாவது ஒரு ஆபீஸில் அமர்ந்துகொண்டு உன் தாயாரைக் காப்பாற்ற முயலவேண்டும்."

நீல :—"தாயாரை நினைத்தால் இப்பொழுதே வேலை கிடைத்தாலும் தேவலையென்றிருக்கிறது. ஆனால், எனக்கு பி. ஏ. யாவது தேறவேண்டுமென்பது ஆசை. 15 ரூபாயிலும் இருபது ரூபாயிலும் எப்படிக் காலக்ஷேபம் செய்கிறது?"

துரை :—"நீ பி. ஏ. படிக்கிறதென்றால் இன்னும் நான்கு வருஷமிருக்கிறதே. அதுவும் ஒவ்வொரு வகுப்பிலும் தவறாமல் தேறவேண்டுமே.



அப்படித்தான்தேறினாய். உனக்குச் சிபார்சு செய்ய யாரிருக்கிறார்? இருபது ரூபாய்தானே கிடைக்கும்?"

நீல :—"முதலில் சம்பளம் குறைவாய்க் கிடைத்தாலும் பின்னால் அதிகமாகலாமல்லவா! அதை உத்தேசித்துத்தான் மேலே படிக்க எண்ணுகிறேன்."

துரை :—"உன்னுடைய தாயாரைக் கவனிக்கவேண்டாமா? அவள் எத்தனைநாள் கஷ்டப்படுகிறது?"

தாயாரைப்பற்றிச் சொல்லும்போதெல்லாம் நீலகண்டனுக்கு மேலே யோசனை ஒன்றுந் தோன்றாது. அவளை எப்படி ஸௌக்கியமாய்க் காப்பாற்றுகிறதென்பது பெரும் விசாரமாய்த் தோன்றும். தனது மாமி தன் தன்னையைப் பலவகையிலும் துன்பப்படுத்துவதாக அவன் மனதில் காட்சிகள் உண்டாகும்; மெய்ம்மறந்து கண்ணீர்விடுவான். இந்த ஸமயமும் அவன் ஆலோசனையிலாழ்ந்து கண்ணீர்விடவே, "என்னடா நீலா! வருத்தப்படுகிறாய்?" என்று துரைஸாமி கேட்டான்.

"ஒன்றுமில்லை: என் தாயாரை நினைக்கும்போது வருத்தம் மேலிடுகிறது. எப். ஏ. என்னத்துக்கு பி. ஏ. என்னத்துக்கு என்று தோன்றுகிறது."

"அதை உத்தேசித்துத்தான் நான் சீக்கிரம் வேலை ஸம்பாதிக்கவேண்டுமென்கிறேன். என் தகப்பனார்கூட என்னை மெட்ரிகுலேஷனோடு நிறுத்திவிடுவதாகச் சொன்னார். என்னசெய்கிறது? என் தங்கைக்குக் கல்யாணமாகவேண்டும்; வயதாகிவிட்டது. வருகிற வருஷம் எப்படியும் கல்யாணம் நடத்திவிடவேண்டும். கல்யாணத்துக்குச் செலவழிக்கிறதா? எனக்குப் படிக்கக் கொடுக்கிறதா? அந்தமட்டோடு ஒரேபெண்ணாய்ப் போயிற்றே என்று சந்தோஷப்படவேண்டியதுதான்."

"நான் கட்டின கோட்டையெல்லாம் மாயக் கோட்டையாயிற்று. பி. ஏ., பாஸ் செய்து என் ஒன்றுவிட்ட தம்பியைவிடப் பணக்காரனாகலாமென்றிருந்தேன். அதையெல்லாம் இப்போது விட்டுவிடவேண்டியதுதான்."

"பணக்காரனாவதற்கும் படிப்புக்கும் என்ன ஸம்பந்தம்? அதிருஷ்டமிருந்தால் பணத்துக்கென்ன? படித்தால்தான் பணம்வருமென்று எண்ணாதே. கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிரித்துக் கொட்டாதா? அப்படியே படிக்கவேண்டுமென்றால், ப்ரைவேட்டில் படிக்க முடியாதா என்ன? எத்தனைபேர் வேலையில் அமர்ந்தபிறகும் ப்ரைவேட்டில் வாசித்து எப். ஏ., பி. ஏ. தேறவில்லை? அதற்குப்பிறகு தானாகச் சம்பளம் உயருகிறது. இதற்கெல்லாம் விசாரப்பட்டு ஸாத்தியப்படுமா? எது நமக்குப் பிராப்தமோ அதுதான் நமக்குக்கிடைக்கும். நம்முடைய அதிருஷ்டத்துக்கு இன்னொருவன் பிறக்கவில்லை."

"அப்படியானால் இந்தவருஷம் மெட்ரிகுலேஷன் பாஸானதும் நின்றுவிடுகிறேன். வேலைக்கு இப்போதுமுதலே நான் பிரயத்தனப்படுகிறேன்."

"உனக்கு அதிருஷ்டமிருந்தால் நீ மேலே படிக்க வழியிருக்கிறது."

"என்னவழி?"

"யாராவது பணக்காரர் உனக்குப் பெண்ணைக் கொடுத்துப் படிக்கவைக்கலாம்."

"அது எனக்கு இஷ்டமில்லை. நாம் பணக்கார இடத்தில் ஸம்பந்தம் செய்யக்கூடாது. ஏழைக்கு ஏழையே வரவேண்டும்.

"ஏன்!"

"பணக்காரப்பெண்களுக்குக் காபிகொடுத்துக் கட்டிவராது. அவர்களுக்கு நம்மால் புடவைவாங்கிக்கொடுக்க முடியாது. நாம் ஸம்பாதிக்கும் பணம் அவர்களுடைய ஸோப்புச்செலவுக்கும் கூந்தல் தைலத்துக்கும் சில்லரைச் சிங்காரச்செலவுக்குமே போதாதே. அவர்களைவைத்து ஸம்ரக்ஷிக்க நம்மாலாகுமா."

"ஏழையிடத்தில் ஸம்பந்தம்செய்துகொண்டால் கௌரவமாயிருக்க முடியுமா?"

“நாமென்ன கௌரவதை? அவர்களென்ன கௌரவதை குறைந்துபோகிறது? மேலும், கல்யாணத்தில் கௌரவம் பார்ப்பானேன்? பெண் மனஸுக்குப் பிடித்திருந்து மனுஷ்யாளும் நல்லவர்களாயிருந்தால், அதுவே போதும்.”

“பெண் நன்றாயிருக்கவேண்டாமா?”

“பெண் நன்றாயிருக்கவேண்டியதுதான். ஆனால், குணந்தான் பெரியது என்பது என் அபிப்பிராயம்.”

“அப்படியானால், என் தங்கையைக் கல்யாணம் செய்துகொள்வாய். அவள் குணசாலி என்று எத்தனையோதடவை புகழ்ந்துபேசியிருக்கிறாய். அவள் ஸுமாராய் அழகுதான் என்றும் நீ சொல்லியிருக்கிறாய்? உன் அபிப்பிராயம் என்ன.?”

“துரைசாமி, கேலிசெய்யாதே.”

“கேலியென்ன? என் வாஸ்தவமான அபிப்பிராயத்தைச் சொன்னேன்.”

“நான் உத்யோகமடைந்து ஒரு மனைவியை ஆதரிக்கும் நிலைமை வரும்வரையில் கல்யாணத்தைப்பற்றிப் பேச்சுவேண்டாம்.”

“என்னவோ, நீதான் உன் தாயாரைக் காப்பாற்றுகிறதாகவும், காப்பாற்றப்போகிறதாகவும் எண்ணிக்கொண்டிருக்கிறாய். உன் ஸாமர்த்தியத்தில் ஒன்றும் நடக்கவில்லை. எல்லாம் ஈசுவராஞ்ஜைப்படி நடக்கிறது. உன்னைப்போல் சொன்ன பிடிவாதகாரர்கள் எத்தனையோ பேர்களின் கதியைப் பார்த்திருக்கிறேன். காலம் வந்துவிட்டால் ஒன்றும் நிற்காது. அடுத்த வருஷமே உனக்குக் கல்யாணமாகும். வேண்டுமானால் பார்.” இப்படிச் சொல்லுகையில் ஒரு கர்த்தபம் சத்தமிட, துரைசாமி, “பார்த்தாயா! கழுதை கத்துகிறது; நல்லசகுனம். சரி: நேரமாகிறது. வீட்டுக்குப் போகலாம் வா” என்று எழுந்திருந்தான். நீலகண்டனும் எழுந்து இருவரும் நதியில் ஸந்த்யாவந்தனம் செய்துவிட்டுக் கரையேறினார்கள். உடனே துரைசாமி, “ராத்திரி என்வீட்டில் சாப்பிட்டுவிட்டுப் போகலாமே” என்றான். “ஏன் ஹோஸ்டலுக்கே போகிறேன். அவர்களிடம் தகவல் சொல்லாமல் நிற்கலாமா? ஏதாவது சொல்லுவார்கள்” என்று நீலகண்டன் பதில் சொன்னான்.

“சொல்வதென்ன? உனக்குத்தான் எல்லாரும் ஸ்நேகமாயிற்றே. உன்னை யார் என்ன சொல்லப்போகிறார்கள். அன்றைக்குப் போகாமலிருந்து தகவல் சொல்லியனுப்பினாயே. ஏதாவது சொன்னார்களா” என்று சொல்லிக்கொண்டே, அவ்வழிச்சென்ற ஒரு ஹோஸ்டல் மாணவனிடம் நீலகண்டன் இராத்திரி சாப்பிட வராததைப்பற்றிய தகவலைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டான். அம்மாணவனும் ஆகட்டுமென்று சொல்லிப் போய்விட்டான். நீலகண்டன் பலமுறை மறுத்துக்கூறியும் துரைசாமி கேட்காததால், அவன்வீட்டுக்குப் போக உடன்பட்டான்.

---

### ௭-வது அத்தியாயம்.

கோவிந்தய்யர் காவேரியோரமான சிந்தாமணியில் குடியிருந்தார். அவருடைய வீடு மிகச்சிறியது. அவருடைய வரும்படிக்கு அதைவிடப் பெரியவீடு அவருக்கு ஏற்றதன்று அவர் ஒரு பெரிய ஜவுளிக்கடையில் கணக்கராக அமர்ந்திருந்தார். சம்பளம் இருபது ரூபாய் கிடைத்துவந்தது. இந்த வரும்படியைக் கொண்டுதான் பிள்ளையைப் படிக்கவைக்க வேண்டும்; பெண்ணுக்குக் கல்யாணம்செய்யப் பணம் சேர்க்கவேண்டும்; குடும்ப காலக்ஷேபமும் நடக்கவேண்டும். அவர் சிறிதளவு நகைத்தரகு வியாபாரமும், கல் வியாபாரமும் செய்துவந்தாலும், அதனால் அதிகவரும்படி கிடைப்பதரிது. அவர் மனைவி பெரியவிடத்துப் பெண்ணாதலால், செட்டாய்க் குடித்தனம் செய்யத் தெரியாது. ‘வயிற்றைஒடுக்கி, வாயைஒடுக்கி’ என்று சொல்வதன்பொருள் அவள் அறியாள்; அதனால் அவள் குடித்தனப்பொறுப்பு அறியாதவள் என்று சொன்னதல்ல: அவள்குணம் இருந்தமட்டும் தாராளமாய்ச் செலவிடுவதாகும். காலை சமையலான அன்னத்தை ஜலங்கொட்டிவைத்து இரவில் சாப்பிடுவதென்னும் செட்டான வழக்கம் அத்தெருவிலிருந்த பல வீட்டாரிடமிருந்துவந்தாலும், அவ்விதம் செய்வதால் யாதொரு தேகஉபாதியும் நேரிடாதென்று கோவிந்தய்யர் பன்முறை வற்புறுத்தியுங்கூட, அவர் மனைவி ருக்மிணியம்மாள் ஒன்றையுங் கவனியாமல் ராத்திரி சமையல் செய்தேதீருவாள். “அம்மிவிற்று அரிவாள்மணைவிற்”றாவது பிள்ளையை வாசிக்கவைக்க வேண்டுமென்று எண்ணங்கொண்டு, தங்களுக்கு என்ன கஷ்டநிஷ்டூரங்கள் இருந்தாலும் அவைகளை ஒருபொருட்டாயெண்ணாமல், தங்கள் மகனின் படிப்பொன்றையே கருதி, சாப்பாட்டைக்கூடக் குறைத்துக் கேவலம் அரைக்கீரையும் வற்றற்குழம்புமே தினப்படி சமையல் திட்டமாகக் கொண்டுள்ள ஸ்த்ரீகளில் அநேகர் நமது ருக்குமணியம்மாளுக்கு மிகவும் வேண்டியவர்களாயிருந்தும், அவர்கள் இவளது நன்மையையே கோரினவர்களாய்ச் செட்டாய்க் குடித்தனத்தைச்செய்துவரவேண்டுமென்றும், பெண்ணை ஒருநல்லஇடத்தில் கொடுத்துத்தக்க சீர்கள் செய்து, புக்ககம் அனுப்பும்வரையிலாவது தங்கள் ஸுகங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்றும் பன்முறை வற்புறுத்தியும் ருக்மிணியம்மாள் அவைகளைக் காதில் வாங்கிக்கொள்ளாமல், தன்மனம்போன போக்கின்படியே குடித்தனத்தை நடத்திவந்தாள்.

கோவிந்தய்யர் மிகவும் ஸாது; ஒருவர் மேலும் கோபம் கொள்ளார்; தமது மனைவிசெய்யும் வேலைகளில் தலையிடார். அவள் பிறந்தகம் பார்த்துப் பத்துவருஷங்களானமையால், குடித்தனத்தில் அதிகப் பொறுப்புவாய்ந்தவளென்றும், பெரியஇடத்துப் பெண்ணாகையால் தாராளச்செலவுசெய்கிறாளென்றும் எண்ணித் தமது மனைவியைக் கண்டிப்பதில்லை. மேலும், கடவுள் அவருக்குக் குறைதோன்றாதபடி ஏதாவது ஒருவழியில் தக்க வரும்படி கொடுத்துவந்ததால், அதைப்பற்றி அவர் கவலைகொள்வது கிடையாது. தமது பெண்விஷயத்திற்கூட அதிகம் கவலை எடுத்துக்கொள்வதில்லை.

நமது வாலிபர்கள் இருவரும் கோவிந்தய்யர் வீடுசென்றபோது, அவர் கூடத்தில் ஒரு விளக்கண்டை உட்கார்ந்து ஜபம்செய்துகொண்டிருந்தார். பையன்கள் கூடத்தில் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து வார்த்தையாடலானார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம், கோவிந்தய்யர் ஜபத்தை முடித்துவிட்டுப் பையன்கள்பக்கமாகத் திரும்பி உட்கார்ந்து,

‘இவன்தானே கல்யாணபுரம் சங்கரய்யர் பிள்ளை’ என்றார்.

“ஆம்: சங்கரய்யர் பிள்ளைதான். என்வகுப்பில்தான் இவனும் படிக்கிறான்” என்றான் துரைசாமி.

“இவன் பெயரென்ன? நீலகண்டனல்லவா? இந்தவருஷம் பணம் கட்டவேண்டாமா?”

“ஆம், பணங்கட்டவேண்டும்.”

“மேலே படிப்பையோ?”

“மேலே படிக்க முடியாது.”

“ஆம், முடியாதுதான். சங்கரய்யர் செய்த ஏற்பாட்டில் ஆஸ்திதான் குறைவாய்ப் போயிற்றே. உன் தகப்பனார் செய்தது மிகவும் கொடுமை யென்றே சொல்லவேண்டும். ஸொத்தை ஆருக்குப் பாதியாகவாவது வைத்திருக்கலாம்.”

“அவர் ஸம்பாதித்ததுதானே. அவரிஷ்டம்போல் ‘வில்’ (மரணசாஸனம்) எழுதலாமல்லவா?”

“எழுதலாம். இருந்தாலும் தர்மாதர்மம் இல்லையா? என் தங்கையென்றுசொன்றென்று சொல்லமாட்டேன். அக்ரமத்தில் ஸொத்துக் கிடைத்தால் அது யாருக்கும் தகாது. என் தங்கைக்குக் கிடைத்த ஸொத்து, அவள் வீதத்துக்கு அதிகந்தான். இன்னொரு நாலைந்து ஏக்கரா நிலம் உனக்கு விட்டிருந்தாலும் நன்றாயிருந்திருக்கும்.”

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில், ருக்குமிணியம்மாள் ஒரு தட்டில் அடையும் மூன்று இலைக்கிழிச்சல்களையும் கொண்டுவந்து தன் புருஷன்முன் வைத்து நீலகண்டனுக்கு நல்வரவு கூறினாள்.

"இதேது! இப்பொழுது, தட்டினையா?"

"ஆமாம்: துரையும் பார்வதியும் தின்னவேணும் தின்னவேணும் என்றிருக்கிறார்கள். வேறென்ன பண்ண இருக்கிறது? இதையாவது தட்டிப்போடுவோமே யென்று அரைத்துத் தட்டினேன்." என்றாள் ருக்மிணியம்மாள்.

கோவிந்தய்யர் இலைத்துண்டுகளில் ஒன்றை நீலகண்டன் முன்போட்டு, அதில் இரண்டு அடைகளை வைத்து இன்னொரு துண்டைத் தமக்கும், மூன்றாவதை துரைக்கும் வைத்து, அடைகளைப்போட்டார். ருக்மிணியம்மாள் நெய்யும் வெல்லமும் பரிமாறினாள். யாவரும் தின்ன ஆரம்பித்ததும் மறுபடியும் சம்பாஷணை தொடங்கிற்று.

"இன்னம் நாலைந்து ஏக்கர் உங்களுக்கு விட்டிருந்தால் நன்றாயிருந்திருக்கும்."

"அதெல்லாம் நினைத்திருந்தால் பிரயோஜனமென்ன? உள்ளதைக்கொண்டுதான் திருப்தியடையவேண்டும்."

"இல்லை. இன்னும் கொஞ்சம் ஸொத்து இருந்தால் மேலே படிக்கலாமல்லவா? அதோடு கல்யாணத்துக்கும் ஸௌகர்யம்: நல்ல இடத்துப் பெண் வரும்."

"கல்யாணத்துக்கென்ன? மாமா, இந்த வருஷம் தேறிவிட்டால் போதும்; ஏதாவது ஒரு வேலையில் அமர்ந்து கொள்ளலாம். எங்கம்மாவையும் கொண்டுவந்து விடுவேன். அப்புறம் பார்த்துக்கொள்வோம். கல்யாணத்துக்கு என்ன அவஸரம்? ஆண்பிள்ளைகள்தானே. விசாரமில்லையே."

"இருந்தாலும் அதது அந்தந்தக்காலத்தில் நடந்தால்தான் சரியாயிருக்கும். நீ அஸ்திக்காரனாயிருந்தால், இத்தனைநாள் கல்யர்ணமாகாமலிருக்குமா?"

"இல்லாததைப்பற்றி நினைப்பானேன்? எங்கப்பா சாவதற்கு இரண்டுவாரத்துக்கு முன்னாலிருந்து, எனக்கு ஸொத்து நிறைய வைப்பதாகத்தான் சொல்லியிருந்தார். அப்புறம் என்னவோ மனஸு மாறிவிட்டது."

"ஆமப்பா: நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன். சேஷத்தைக் கண்டால் ரொம்ப ஆகாமலிருந்தது. சாம்பசிவன் வந்துகூட சண்டைபோடவேண்டியிருந்தது. அப்புறம் எப்படியோ மனஸுமாறி உங்களுக்கு இப்படிச் செய்துவிட்டுப்போனார்."

"முதலில் எங்களுக்குத்தானே அதிக நிலம் வைத்தார். பிற்பாடு என்னவோ மனம் மாறிப்போயிற்று."

உடனே துரைசாமி, "நீலா, எனக்கு ஒரு ஸந்தேகம்: இரண்டு உயிலா செய்தார்?" என்றான்.

"அதுதான் போலிருக்கிறது. வக்கீல் வந்து உயில் எழுதினபோது நான் கூட இருந்தேன். முதல் மனைவிக்கும், நீலகண்டனுக்கும் அதிக ஸொத்து வைக்கவேண்டும். அதற்குத் தகுந்தபடி உயில் எழுதவேண்டுமென்று சொன்னார். இரண்டு நாளுக்கெல்லாம் ரெஜிஸ்டராயிற்று. அதற்கப்புறந்தான் உன் சிற்றப்பா வந்தாற்போலிருக்கிறது. மறுபடியும் வேறு எழுதி ரெஜிஸ்டர் செய்திருக்கிறார்" என்றான் நீலகண்டன்.

"அதெல்லாமில்லை. ஒரே உயில்தான் எழுதினது. நானே விசாரித்தேனே. ஒன்றுதான் ரெஜிஸ்டராயிற்று: நான் ஸந்தேகப்பட்டு இரண்டு உயில் எழுதினாரென்று ரெஜிஸ்டிரார் ஆபீஸில் விசாரித்தேனே. அதைப்பற்றியென்ன? அந்த ஸொத்து அப்படி போகவேண்டுமாக்கும். அதைக் கண்டபடி செலவழித்து வருகிறாளாம்."

"யார், என் சித்தியா?"



"ஆமாம்."

"நீங்கள் ஸமீபத்தில் ஊருக்குப்போயிருந்தீர்களோ?"

"இல்லை. அங்குப்போய் நாலைந்து வர்ஷமாகிறது. எனக்கு அவளைக் கண்டால் பிடிக்கிறதில்லை. அவளைப்பற்றிச் சொல்லக்கேள்விப்பட்டேன்."

"ஏன், அப்பா, இரண்டு உயில் எழுதியிருந்தால், முதல் உயிலை ஊர்ஜிதப்படுத்தலாமல்லவா?"

"அது கேஸைப். பொறுத்தது; அவர் நோக்கமென்ன என்பதைப் பொறுத்தது. ஆனால் ஒரு உயில்தானே இருக்கிறது?"

"அதை நன்றாய் விசாரித்து விட்டீர்களா?"

"ஸந்தேகமேயில்லை."

இதற்குள் அடைகள் தீர்ந்துவிட்டன. மூவரும் எழுந்து முற்றத்தண்டை கையலம்ப வந்தார்கள்.

அப்போது துரைசாமி தன் தங்கை பார்வதி நிற்பதைப்பார்த்து "ஏனடி நிற்கிறாய்? ஜலம் கொண்டுவந்து கொடேன். இவன்தான் உன் அகமுடையான். இவனுக்காவது ஜலம் கொண்டுவா" என்று பரிகாஸமாய்ச் சொன்னான்.

"போடா, இதுதான் உனக்கு வேலை" என்று மெதுவாய்ச் சொல்லிவிட்டு ஜலங் கொண்டுவந்து வைத்தாள்.

நீலகண்டன் செம்பை எடுத்து நிமிரும்போது பார்வதியைப் பார்த்தான். அவளும் இவனைப் பார்த்தாள். இருவரும் புன்னகை கொண்டார்கள். உடனே அவள் தலைகுனிந்து கொண்டு அவ்விடம் விட்டகன்றாள்.

நீலகண்டன் நாலைந்து தடவை அவ்வீட்டிற்கு வந்திருக்கிறான் என்றாலும், அப்போது பார்வதி வீட்டிலில்லை; அயல்வீடுகளில் விளையாடப்போயிருந்தாள்; அல்லது ஊரிலேயே இருக்கவில்லை. திருச்சிக்கு வந்தபின் இதற்கு முன்னால் ஒரேயொரு தடவைதான் அவளைப் பார்த்திருக்கிறான். அதற்கு முன்னால், தன் தந்தையின் அந்தியகாலத்தில் அவனும் பார்வதியும் விளையாடிக்கொண்டிருந்ததுண்டு.

பார்வதியின் முகத்தைப் பார்த்ததும், அவன் முன் நடந்த விளையாட்டுக்களையெல்லாம் ஞாபகப்படுத்திக்கொண்டான். அவன் தந்தை இருவருக்கும் கல்யாணம் செய்து வைத்துவிடவேண்டுமென்று தன் தாயாரிடம் சொன்னது நினைவிற்கு வந்தது. பார்வதி அக்காலத்தில் தன் முதுகில் சாய்ந்துகொண்டு தன் கைகளால் கழுத்தைப் பிடித்துக்கொண்டு விளையாடினதைப்போல் மறுபடியும் விளையாடபாக்யமேற்படுமா என்றேங்கினான். உண்மையில் அப்போதுதான் அவளிடம் காதலென்பது ஏற்பட்டது. தன் அன்புக்கு ஏற்றபெண் பார்வதியே யென்று நிச்சயித்துக் கொண்டான்.

பார்வதியோ நாணம் மேலிட்டவளாய் சமையலறைப்பக்கம் புன் சிரிப்புடன் சென்றாள். அவள்முகஜாடையைக் கண்ட துரைஸாமி எப்படியாவது இருவருக்கும் கல்யாணம் செய்துவிடுகிறதென நிச்சயம் கொண்டான்.

மூவரும் மறுபடியும் கூடத்திலுட்கார்ந்தார்கள். ருக்மிணியம்மாள் துரைஸாமிசொன்ன கேலிவார்த்தைகளைக் கேட்டிருந்ததனால், தன் நாயகனிடம் "நம்ம பார்வதியை நீலகண்டனுக்குக் கொடுத்துவிடலாமே, ஸொந்தமாயுமிருக்கிறது; அசலில் தேடுவானேன்" என்றாள்.

"அவன் மாமாவுக்கு எழுதிக் கேட்போம். பிரியப்பட்டால் ஜாதகத்தை அனுப்பட்டும்"

"இங்கே ஜாதகமில்லையா, நீலகண்டா, இருந்தால் துரையிடம் அனுப்பேன்" என்றாள் ருக்மிணியம்மாள்.

"என்னிடம் இல்லை. ஜாதகமெதற்கு வைத்திருக்கிறேன்?"

"இந்த வர்ஷமேதாவது கல்யாணம் செய்வதாகப் பேச்சுண்டோ?" என்றாள் ருக்மிணியம்மாள்.

"எனக்கு ஒன்றும் தெரியாது. நான் ஊரில் இருந்தமட்டும் ஒருபேச்சுமில்லை. அதோடு, உங்களிடத்தில் சொல்லுவதற்கென்ன? இப்போது முதற்கொண்டே கால்கட்டு என்னத்துக்கு?" கோவிந்தையர் இவ்விஷயத்தைப் பற்றி அதிகம் பேச இஷ்டப்படவில்லை. வாலிபர்கள் முதலில் அப்படித்தான் சொல்லுவது வழக்கமென்றும், கல்யாணம் செய்துவிட்டால் தாய்தந்தையர்களை அலக்ஷ்யஞ்செய்து மனைவி பேச்சை வேதவாக்காகக் கொண்டு நடப்பவர்களென்றும் அவருக்குத் தெரியும். ஆகையால், அவர் ராமய்யருக்குக் கடிதம் எழுதி கேட்டுக் கொள்வதாகத் தீர்மானித்து, அவ்விதமே தெரிவித்துவிட்டு வாயிற்புறம் சென்றார்.

அதுவரை அதிகம் பேசாமலிருந்த துரைசாமி தாராளமாய்ப் பேசலானான். அவன் தாயாரும் சம்பாஷணையில் கலந்துகொண்டாள்.

"நீ ஒரு கடிதம் போட்டு ஜாதகத்தை வரவழையேன் நீலா. தை பிறந்ததும் கல்யாணம் நடக்கவேண்டியது அவசியம். இனிமேல் தாமஸிக்கக்கூடாது."

"நான்தான் அப்பொழுதே சொல்லிவிட்டேனே: எனக்கு இப்பொழுது கல்யாணம் வேண்டாமென்று. வேறு எங்கேயாவது வரன் பார்த்தால் போகிறது."

"வேறு வரன் பார்க்க உன்னை யோசனை கேட்கவரவில்லை. நீ கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்றுதான் கேட்கிறேன்."

"என்னடா உளறுகிறாய். நான் இருக்கிற ஸ்திதியென்ன? கல்யாணம் செய்துகொள்ளவாவது. பரமஏழையாய் ஹோஸ்டலில் சாப்பிட்டுக்கொண்டுபடிக்கிறேன். எதைக்கண்டு எனக்கு உன் தங்கையைக் கொடுக்கிறது? நல்ல இடமாய் பி. ஏ. பாஸ்செய்தவனாய்ப் பார்த்துக் கொடுத்தால் அவள் சௌக்யமாயிருக்கலாமே."

ஆம் பி. ஏ. க்கும் கொடுக்கலாம்; எம். ஏ. க்கும் கொடுக்கலாம். ஐயாயிரம் ரூபாயிருந்தால் எல்லாம் செய்யலாம். நாங்களும் ஏழைகள்தானே. ஏழைக்கு ஏழையாய்த்தானே பார்க்கவேண்டும். பணக்கார இடத்தில் கொடுத்தால், காபி ஊப்ளைசெய்யக்கூட என்தகப்பனார் வரும்படி போதாதே."

"அப்படிச்சொல்லாதே. ஸௌமாராய் அந்தஸ்துள்ள இடமாகக்கொடுத்தால், உன் தங்கையாவது ஸௌக்கியமாயிருப்பாளல்லவா?"

"ஆகா! அதெல்லாம் நான் பார்த்துத்தானிருக்கிறேன். பி. ஸெக்ஷன் ராமக்கிருஷ்ணன் அண்ணா பணக்கார இடத்துப் பிள்ளையென்றுதானே பெண்ணைக் கொடுத்தார்கள். பெண்ணைத் தள்ளிவைத்திருக்கிறார்கள். வேறு கல்யாணங்கூடச் செய்யப்போகிறார்களாம். பெண்மேல் என்ன தப்பு? சாந்திமுகூர்த்தத்துக்குச் சீர் சரியாகச் செய்யவில்லையாம். அதற்காகப் பெண்ணைத் தள்ளிவைப்பானேன்? வேண்டுமானால் பெண்வீட்டுக்கு ஒருவரும் போகவேண்டாம். பெண்ணும் பிறந்தகம் போகவேண்டாமென்று சொல்லட்டும். எப்படியும் அவள் ராமகிருஷ்ணன் வீட்டைச் சேர்ந்தவளாகிவிட்டாளல்லவா? அவள்செத்தால் ராமகிருஷ்ணன் வீட்டாரெல்லாம் பத்துநாள் தீட்டுக்காக்கவேண்டுமே. பணக்கார இடத்தில் கொடுத்தால் எப்போதும் இந்தக் கஷ்டந்தான்."

"எல்லாரும் அப்படியே இருக்கிறார்களா என்ன? ராமகிருஷ்ணன்கூடச் சொன்னான்: அவர் அண்ணா தனியாகப் போகப்போகிறானாம். அகமுடையாளைக் கூட்டிக்கொண்டுவந்து வைத்துக்கொள்ளப்போகிறானாம்."

"அது எப்படியாவது போகட்டும். நீ என்ன சொல்லுகிறாய்?"

"தை பிறக்க இன்னும் மூன்றுமாஸமிருக்கிறது. பரீக்ஷை தீரட்டும். பின்னால் பார்த்துக் கொள்வோம்."

"உனக்கு ஸம்மதமா, இல்லையா? அதை மட்டும் சொல். பிற்பாடு நான் பார்த்துக் கொள்ளுகிறேன்."



"அதுதான் சொன்னேனே, பின்னால் பார்த்துக்கொள்ளலாமென்று."

"மனம்பொருத்தமிருந்தால், மற்றபொருத்தங்களெல்லாம் சரியாகவிருக்கும். அதனால் தான் அதை முன்னாடிக் கேட்கவேண்டும்." என்றாள் ருக்மிணியம்மாள்.

நீல:—"மனப்பொருத்தமிருந்தால் மாத்ரம் போதுமா? அம்மாமி. மற்றபொருத்தங்களும் இருக்கவேண்டியவைதாம். போனவருஷம் எங்கள் க்ளாஸ்பையனொருவன் சொன்னான் ஒருபெண் தனக்குப் பிடித்திருக்கிறதென்று. ஆனால், பிராப்தம் வேறிடத்திலிருந்தது. இப்போது அந்தப் பெண்ணை ஒரு கிழவனுக்குக் கொடுத்திருக்கிறார்கள்."

ருக்—"பிராப்தப்படிதான் நடக்கும். இருந்தாலும் நாம் செய்யவேண்டிய பிரயத்தினங்களைச் செய்யவேண்டாமா? உனக்குப் பிடித்தமானால், உன்தாயார், மாமாவுக்கு எழுதிக்கேட்கலாம்."

நீல:—நான்தான் சொன்னேனே: இப்போது எனக்குக் கல்யாணம் வேண்டாமென்று".

துரை:—"நீ திருட்டுப்பயல். கேட்டகேள்விக்கு ஜவாபு சொல்லாமல் வேறு என்னவோ சொல்லுகிறாய். நாங்கள் கேட்பதென்ன? நீ சொல்லுவதென்ன? உனக்கு இஷ்டமானால்..."

இப்படிச் சொல்லும்போது, "இலையைப் போடு" என்று சொல்லிக்கொண்டே கோவிந்தையர் வந்துவிட்டதனால், ஸம்பாஷணை அப்படியே நின்றுவிட்டது.

மூவரும் சாப்பிட்டானதும் நீலகண்டன் விடைபெற்றுக்கொண்டு தன் ஹோஸ்டல் போய்ச்சேர்ந்தான். அவன் சாப்பிடும்போதும் அதற்குப் பிறகும் அவன்கண்கள் சமையலறைக் கதவண்டை நின்றுகொண்டிருந்த பார்வதியை அடிக்கடி கவனிக்கமுயன்றனவென்பதை துரைசாமியும் அவன் தாயாரும் அறியாமலிருக்கவில்லை. அதோடு, நீலகண்டன் விடைபெற்றுச் சென்றபோது பார்வதிக்காகத்திரும்பி அவளைப் பார்த்துப் புன்னகை கொண்டதையும், அதற்கவள் நாணிப் புன்னகைகொண்டதையும் துரைசாமி அறிந்து கொண்டான்.

(தொடரும்.)

எம். எஸ். கிருஷ்ணசாமி ஐயர்.

7

## Useful Hints.

By Mr., Pandit V. S. Aiyar.

## உபயோகமுள்ள குறிப்புக்கள்.

### மணத்தக்காளி.

தக்காளிவகையில் மணத்தக்காளி வாசனையுள்ளதென்பர். இதனைப் பச்சையாய் உப்பிட்டு ஊறுகாய்போட்டு ஜனங்கள் உண்ணலாம். காயவைத்து வற்றலாக்கி நெய்யில் வறுத்துச் சாப்பிட வாய்க்கு ஆரோக்கியமாக இருக்கும். நெய்யில் வறுத்த இதனைப் பொடித்துச் சாதத்தில் கலந்துகொண்டு சாப்படவும் ருசியுள்ளதாயிருக்கும். இதனை வறுத்துக் குழம்பில் சேர்த்தும் சாப்பிடுவர்; வறுத்து உபதார்த்தமாக வைத்துக்கொண்டும் சாப்பிடுவர். இந்த மணத்தக்காளி என்னும் பதார்த்தம் தேகத்திலுள்ள பெரியதோர் நோவைக் கொடுக்கும் கில்வாயு, பாரிசவாயுவையும் கண்டிக்கும் என்பர் வைத்தியநூலார்.

*
* *

### நீர்நிலைகளினருகில் நெல்லி.

நெல்லிமரம் தெய்விகத்தன்மைபொருந்திய விருக்ஷங்களிலொன்று. இம்மரத்தினடியில் சகல தேவதைகளும் வாசம்பண்ணுவதாக ஐதிஹ்யம். ஆகவேதான், இம்மரத்தடியில் கார்த்திகைமாசத்தில் மாத்வப்பிராமணர்கள்

முதலியவர்கள் வநபோசனம் முதலியன செய்து இம்மரத்தைப் பூசிக்கிறார்கள். இம்மரத் தின்கனிகள் மிகுந்த உருசியுள்ளன. மிகுந்த இனிமையும் குளிர்ச்சியும் பொருந்தி இக்கனிகளைத் துவாதசி திதியின்போது அவசியமாய் உபயோகிப்பார்கள். பிரமோபாசகர்கள் உண்டு அநுபவிக்கும் கனி இதுவே. தெய்விகம் பொருந்திய நெல்லிக்கனியையுண்டு முதாட்டியாராகவே ஔவை நெடுங்காலம் ஜீவதசையுடனிருந்தனர் என்பர். இக்கனியுண்ணின் தேகத்தின் அழல் நீங்கிக் குளிர்ச்சியுண்டாகும். இக்கனியை உண்டபின், நீர்த்தம் உட்கொள்ள வாயெல்லாம் இனிக்கும். இக்கனியின் ரேகைகள் பளிங்குபோல் வெளியில் தோன்றும். ஆகவேதான் 'கரதலாமலகம்' என்று புலவர்கள் உவமை கூறுகின்றனர். ஸஹ்ய மலையில் ஆமலக விருக்ஷத்தடியினின்றே மஹாமஹிமை பெற்ற காவேரிநதி உற்பத்தியாகி, தன் நீரை யருந்தினவர்களையெல்லாம் குளிர்ச்சிசெய்வித்து, தேககாந்தியை யடையச் செய்கிறது. ஆமலகம் என்றால் நெல்லிக்கனியென்றர்த்தம். வைத்தியமுறையில் நெல்லியின் எல்லா உறுப்புக்களும் மிகுதியும் கொண்டாடப்படுகின்றன. ஆகவே, நெல்லிமரங்களை நீர்நிலைகளின் ஓரங்களில் பயிரிடுகின்றனர். நெல்லியின் வேர்கள் நீரிலிறங்கித் தண்ணீரைக் குளிர்ச்சிசெய்விப்பதனால், அந்நீரில் முழுகுவோர் தேகசௌக்கியத்தை அடையக்கூடியவர்களாயிருக்கின்றனர்.

* * *

## வௌவால் எண்ணெய்.

"மாம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி இரந்தழைப்பார் யாவருமிங்கில்லை" என்பது வௌவாலைப்பற்றிச் சொல்லப்படும் நல்வழி வாக்கியம். பழங்களைத் தோட்டக்காரன் அநுமதியில்லாமல் அவை பழுத்ததும் வௌவும் தன்மையுடைமையால் வௌவால் என்னும் பெயரையடைந்தது என்று சொல்லினும் பொருந்தும். வௌவால் சாப்பிடாத பழமேயில்லை. பலதினுசான வௌவால்களிருப்பினும் பழந்தின்னி வௌவால்களின் ஜாதி மிகுதியும் கொழுத்திருக்கும். பலபழங்களையும் சாப்பிடுவதனால் இதன் இரத்தம் மிகுதியும் கொழுமையாயும் சுத்தமாயுமிருக்கும். இவ்வௌவாலின் இரத்தத்தை எடுத்து நல்லெண்ணெய் முதலிய தைலங்களில் சேர்த்துப் பக்குவப்படுத்தி உபயோகிக்க மண்டைகள் மிகுந்த குளிர்ச்சியடையும். வழுக்கைத்தலைகள் மயிர் நிறைந்த தலைகளாக மாறும்; கிழவிகளின் நரைத்தமயிர்களும் கறுக்கும். இவ்வெண்ணெய் கிழவர்களைப் பாலியராக்குமென்றால் வேறென்னவேண்டும்? அப்போது ஜபகுஸுமம் சம்பகமாலதி முதலிய மயக்கெண்ணெய்களை விரும்பார்கள். இக்கைத்தொழில் செய்வோர் குறைவுபட்டமையால், மேற்கூறிய போலி எண்ணெய்கள் மார்க்கட்டுகளில் வந்திருக்கின்றன. வௌவால்எண்ணெய் என்று முன்னுக்குவந்து உபயோகப்படுமோ?

* * *

## விடியற்காலத்தில் ஸ்நானம்.

சாஸ்திரங்களெல்லாம், சுகத்தையுத்தேசித்தே செய்யப்பட்டிருக்கின்றன. "சாஸ்திராயச சுகாயச" என்னும் ஸம்ஸ்கிருத வாக்கியம் கவனிக்கத்தக்கது. ஓடுகிற ஜலத்தின் அடியில் மணலில் ஒருவித புழுக்கள் வசிக்கின்றன. அவை சூரியன் புறப்படுமுன், அம்மணலடியிலிருந்து வெளிவருவதில்லை. சூரியன் புறப்பட்டபின்தான் அவை ஜலப்பரப்பிற்கு வருகின்றன. சூரியன் புறப்பட்டபின் தண்ணீரில் அமிழ்ந்து ஸ்நானஞ்செய்பவர்களின் ரோமத்துவாரங்களில் அவை உட்புகுந்து, தொந்திரவை விளைக்கின்றன. ஆகவேதான், இப்புழுக்கள் வெளிப்படாதிருப்பதற்குமுன், விடியற்காலத்தில் ஸ்நானஞ்செய்யவேண்டுமென்று ஹிந்துக்கள், விஷயத்தை அறிந்து சாஸ்திரமாக விதித்திருக்கிறார்கள் என்று, அமெரிக்கர் ஒருவர் இவ்விஷயத்தைக் கண்டுபிடித்து, அமெரிக்கப் பத்திரிகைகளிலொன்றிற் சிலகாலத்திற்குமுன்பு நீண்டதோர் வியாசம் ஹிந்துக்களின் விடியற்கால ஸ்நானத்தைக் கொண்டாடி எழுதியிருக்கிறார். ஆகவே, மேனாட்டவரும் சரியென்று ஒப்புக்கொள்ளும்படியாயிருக்கிற விடியற்கால ஸ்நானத்தினால் மனிதன் தேகாரோக்கியத்தை அடைகிறானாகவே, ஹிந்துக்கள் யாவரும், உஷ்ணதேசமாகிய இந்தியாவில் இப்பிராதகால ஸ்நானத்தை இழுக்காமற்போற்றி அநுஷ்டானஞ்செய்துவரக்கடவர். இந்த அநுஷ்டானத்தை மேற்கொண்டவரே இதன் பிரயோசனத்தை அறியக்கூடிய நிலையிலிருப்பர்.



* * *

## தாமிரபாத்திரத் தண்ணீர்.

குடிதண்ணீர் தாமிரபாத்திரத்தில் வைத்திருந்து சாப்பிடுவது தேகஆரோக்கியமானது என்று வைத்தியசாஸ்திரியொருவர் கூறுகிறார். தாமிரந்தான் பூஜார்ஹமானது என்று சாஸ்திரத்திற் கூறியதன் கருத்தும் இதுவேயென்னலாம். சாஸ்திரஜ்ஞர்கள் ஒவ்வொரு பாத்திரத்தின் குணங்களைச் சோதித்தே இப்படித் தாமிரத்தைச் சிலாக்கியமாய்ச் சொல்லியிருக்கவேண்டும் என்று ஊகிக்கலாம். இதற்குத் தாமிரபர்ணி நதியில் ஸ்நானஞ்செய்பவர்களின் தேகாரோக்கியத்தினின்று அறியக்கூடிய விஷயம் அதிகமிருக்கிறது. தாமிரபாத்திரத்தினின்று அருந்தப்பட்ட நீர் காலராமுதலிய வியாதிகளைக் கண்டிக்கிறதென்று வைத்தியமுறையிற் சொல்லப்படுகிறது. ஆகவே, உடலுக்குத் தொந்தரை விளைக்கும் கிருமிகளையும் அப்பாத்திரநீர் கண்டிக்கும் இயல்பையுடையதாயிருக்கிறதென்றால் வேறென்ன இவ்வுபயோகத்தைப்பற்றிச் சொல்லவேண்டும்?

* * *

## தோல்பதனிட ஆவாரம்பட்டை.

ஆவாரம்பட்டை துவர்ப்புள்ளது. கருவைப் பட்டையைத் தோல்பதனிட உபயோகிப்பது போல், ஆவாரம்பட்டையையும் தோல்பதனிடத் தொழிலாளிகள் உபயோகிக்கிறார்கள். இப்பட்டையினால் பதனிட்டதோல் வழவழப்பையடைவதுடன் வலிமையுடனுமிருக்கும். இன்னும் இத்தோலினால் பதனிட்டதோல் நல்ல சிவப்புநிறத்தை அடையும்.

* * *

## காக்கைகளுக்குப் பலி.

ஹிந்துக்களின் வீடுகள்தோறும் சாப்பிடுவதற்கு முன்னால், பிடிசோறு காக்கைகளுக்கு இடுவது வழக்கம். இதனையே காகபலியென்று சொல்வது. இப்படி இப்பறவைக்கென்று பிடிசோறிடாதவனை "எச்சிற்கையால் காக்கையை ஓட்டாதவன்" என்று நம்மவர் இழித்துக்கூறக் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்பலியிட்டபோது காக்கையொன்று வந்தாலும், அது பிறவற்றையும் தன்சத்தத்தினால் அழைத்துக்கொண்டுண்ணும். அதுபோல், நாமும் நம்மவர்களை பலருடனும் உண்ணவேண்டுமென்றும், தான்மட்டும் ஏகாங்கியாய் உண்ணக்கூடாதென்றும் கருத்துக்கொண்டே ஏற்பட்டிருக்கலாமென்று ஊகிக்கக்கூடியதாயிருக்கிறது. இன்னும் தன் கருத்துக்களை வெளிப்படையாய்ச் சொல்லக்கூடாத பிதுருக்களுடனும் கூடி நியமனம் செய்யப்பட்டிருக்கலாம். ஆகவே, இந்த அநுஷ்டானத்தினால் உண்டாகக்கூடிய பலன் அதிகமாயிருப்பதாகக் காணப்படுகின்றதனால், இம்முறையை ஹிந்துக்கள் யாவரும் அலட்சியம் செய்யக்கூடாது. சிராத்தகாலங்களில் காக்கைகளுக்கு இடும் அன்னத்திற்கு 'வாயஸபிண்டம்' என்று பெயர். அது வாயஸபலியாகமாட்டாது.

* * *

## காக்கிச்சாயம்.

உப்பிலாகாதார் காக்கிச்சாயமுள்ள கெட்டித்துணிகளால் உடுப்புத்தைத்து உபயோகிக்கிறார்கள். இந்தச்சாயம் சவுக்குமரப் பட்டையிலிருந்து உண்டாகிறது. இச்சவுக்குமரம் உண்டாகும் கடற்கரையோரங்களில் செம்படவர்

ளும் தம்மீன்பிடிக்கஉபயோகிக்கும் வலைநூல்களுக்கு இச்சாயத்தை ஏற்றுகிறார்கள். இச்சாயம் ஏறின நூல்கள் மிகுதியும் கெட்டிப்படுவதுடன், தண்ணீரில் நெடுநாள் இருந்தாலும், மட்காமலிருக்கிறது. இப்படிப்பட்ட சவுக்குமரத்தின் பட்டைகளை அடுப்பெரிக்கும் நம் நாட்டுவாசிகள், அதனைச் சாயமிறக்கும் கைத்தொழில் வியாபாரப் பொருளாக்கி மிகுதியும் ஊதியம்பெறக்கடவர்.

* * *

### அவரைச்சாறு, மணத்தக்காளிச்சாறு.

ஓலையேடுகளில் பல பிரபல சாஸ்திரங்களும் முன்னால் எழுதப்பட்டு வந்தன. காகிதம் வந்த பிறகும், அச்சுப்பிரதிகள் வந்தபிறகும் ஏடுகளைச் சிந்திப்பாரும், இலட்சியம்செய்வாருமிலராயினர். ஆகவே, ஏடுபிடித்தெழுதவல்லவராய் இக்காலத்தில் பெரும்பாலர் இருக்கவில்லை. ஆயினும், இன்னும் அவை வீட்டிலேயே இருந்துவருகின்றன. அச்சுவடிகளைப் பார்த்துப் படிக்கப்பழக்கம்பெற்றவர்கள் கொஞ்சம் பேர்தான் இந்தியாவிலுள்ளார்கள். சிலவேளைகளில் அந்தக் கொஞ்சம்பேருக்கே ஏடுகளிலுள்ள எழுத்துக்கள் பிரகாசமாய்த் தெரிவதில்லை. அக்காலத்தில், ஏடுகளிலுள்ள எழுத்துக்கள் பிரகாசமாவதற்கு அவரையிலைச்சாற்றையும், மணத்தக்காளி இலைச்சாற்றையும், எடுத்து ஏடுகளிலுள்ள எழுத்துக்களில் தடவ, அவ்வெழுத்துக்கள் தெளிவாய்த் தெரிகின்றன. அப்புறம் அவ்வெழுத்துக்களை இவர்கள் வாசித்து விஷய ஆராய்ச்சிசெய்கிறார்கள்.

* * *

### கன்றுக்குட்டி வயிற்றுவலிக்கு.

பசுவின் கன்றுக்குட்டிகள் சிலவேளைகளில் வயிற்றுவலி கண்டு வாதைப்படுவதுண்டு. அப்போது அவை கீழ்விழுந்து பரிதாபப்படும்படியாய் புரண்டு துள்ளும். எருக்கஞ்செடியை அடுப்பிற்காய்ச்சிச் சூட்டுடன் கன்றுக்குட்டித் தொப்புளில் அடித்தால் வலிநீங்கி அக்கன்றுக்குட்டி குணமடையும். இப்படி அடிப்பதனால் கன்றுக்குட்டியின் வயிற்றிலிருந்து அதற்குத் தொந்திரையைக் கொடுத்த பூச்சி செத்துப்போகும். பின்னால் ஓமத்தை அரைத்து அக்கன்றுக்குட்டிக்குப் புகட்ட வயிற்றுப்புழுக்கள் கீழ்வீழ்ந்துவிடும். வயிற்றுவலி குணமடையாதுபோனால் சிறிதளவு பெருங்காயத்தை வாழைப்பழத்தில் வைத்துக் கொடுக்கவும். பெருங்காயம் மிகுதியும் காரமுள்ள பொருளாகையால், கன்றுக்குட்டி விஷயத்தில் கடைசிப்பாகமாய்த்தான் உபயோகிக்கவேண்டும்.

* * *

### நாயுருவிக்குச்சிகள்.

நாயுருவிச் செடிகளின் குச்சிகள் பல்துலக்கச் சிலாக்கியமான வஸ்துவாகும். இக்குச்சிகளில் நார் உண்டு. ஆகவே, நன்றாக நசுக்கப்பட்ட பிரஷ்போன்று ஆகும். இக்குச்சிகளால் பல் தேய்த்தால் பல்லிலுள்ள வியாதி நீங்கும்; பல்லும் வலிவையடையும்; பல்லிலுள்ள அழுக்கும் போகும். இப்பற்குச்சி தேய்த்தலினால், மூளை சுத்தமாகி ஞானமும் உண்டாகும். ஆகவேதான், ரிஷிபஞ்சமிவிரதத்தை அநுஸரிக்கும் ஸ்திரிகள் ஆயிரத்தெட்டு நாயுருவிக்குச்சிகளால் தம்பற்களைச் சுத்திசெய்து கொள்ளக்கடவர் என்ற நியமனத்தை மஹரிஷிகள் ஏற்படுத்திவைத்திருக்கிறார்கள்.

* * *

### வாஸிலேன்.

வாஸிலேன் என்னும் பொருள் கிரோஸின் எண்ணெயினின்று செய்யப்படுகிற மருந்துப்பொருள். இம்மருந்துப்பொருளை உயர்ந்த யந்திரங்களுக்குக்கு உபயோகிக்கிறார்கள். காயங்களுக்கு உபயோகித்தாலும், அந்த இரணம் நன்றாகச் சீக்கிரம் ஆறிவிடுகிறது. இந்தப் பொருளில் சில வாஸனை சேர்த்தும் சேர்க்காமலும், தலையில் தடவிக்கொண்டால் தலைமயிர் நன்றாக வளர்கிறது.

பண்டித-வி. எஸ். ஐயர்.



# Topics from Periodicals.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### CHEW WELL.

### நன்றாக மெல்.

**1.** அளவறிந்து அருந்தாவிடில், ஜீர்ணிப்பதற்கும் மலங்களைக் கழிப்பதற்கும் சக்தியை அதிசயமாகப் பிரயோகிக்கவேண்டியிருக்கிறது. அந்த அதிசச்சக்தி வீண் செலவேயன்றோ? வீண்செலவு செய்யாமல் அந்தச் சக்தியை மிகுத்து அது வேறு வேலைகளுக்குப் பயன்படுமாறு செய்வதனால் தேகத்துக்கு வலிமையும் திறமையும் அதிகரிப்பதன்றி ஆயுளும் ஆரோக்கியமும் அதிகரிக்கின்றன.

2. தேகபலம் மிகுந்தவர்கள் நீடித்து வாழ்வார்களென்றும், பலவீனர்கள் அற்பாயுளர்களாக மாள்வார்களென்றும் சிலர் நினைக்கக்கூடும். உண்மையாதெனின் பலவீனர்களும் நெடுங்காலம் வாழ்வதற்காகும். அதற்கு உபாயம் என்னவெனில், அன்னபானாதிகளை அளவறிந்து அருந்துவதேயாம். தேகபோஷணைக்கு எவ்வளவு வேண்டுமோ அம்மட்டே அருந்தல்வேண்டும்; சிறிது அதிகமாகவும் கூடாது, சிறிது குறைவாகவுங் கூடாது.

3. அப்படி நிறுதிட்டமான அளவு எப்படித் தெரியுமெனின், அஃது அவரவருடைய பழக்கச்சாதனைகளையும் தொழில்களையும் பொருத்திருக்கின்றது. பெரும்பாலும் வெளிநிலத்திற் காலங்கழிப்பவர்களுக்கும், கடினமான கைவேலை செய்பவர்களுக்கும் உணவு அதிகமாக வேண்டியிருக்கும். கட்டடத்திற்குள்ளிருந்து கஷ்டமில்லாத வேலைசெய்து ஜீவிக்கிறவர்களுக்கு அவ்வளவு உணவு தேவையில்லை. அவரவரும் உண்டு பார்த்துத் தமக்குத் தேவையானது எவ்வளவு, தமக்கு ஏற்றது எவ்வுணவு என்று சோதித்து நிதானித்துக் கொள்ள வேண்டியவராவர்.

4. ஒவ்வொரு தேகமும் மத்திம வயதுவரையில் பெருக்கமுறுகின்றது. அந்த வயதுவரையில் அலைச்சல் அழிதல் முதலியவைகளினால் தேகத்திலேற்படும் கழிவுக்கு ஈடுசெய்யவும், தேகம் வளர்வதற்கு வேண்டிய புஷ்டிசெய்யவும் தக்கவாறு உணவு உட்கொள்ள வேண்டும். மத்திம வயதிற்குப்பிறகு தேகத்திற்கு வளர்ச்சியில்லையாதலால், வளர்ச்சிக்காக அதுவரையில் உண்டுவந்த அதிக உணவு அவசியமில்லை; கழிவுபடும் அம்சங்களுக்கு ஈடுசெய்யத்தக்க அளவு உணவு போதுமாகும்.



5. மத்திம வயதுக்குப் பிறகு அதுவரையில் உட்கொள்ள அன்னபானாதிகள் வேண்டியிரா என்று கண்டோம். மத்திம வயது என்பது முப்பத்தைந்து அல்லது நாற்பது வருஷம் என்னலாம். சுறுசுறுப்பாக அலைந்து திரிந்து உழைக்கும் வழக்கமில்லாதவர்களுக்கு அந்த வயதுக்குப் பிறகு தேகத்தில் தேய்வடையும் கழிவடையும், குறைவாகும். அந்தக் குறைவுக்குத் தக்கவாறு அவர்கள் உணவையும் குறைத்துக்கொள்ள வேண்டும். வயது முதிரமுதிர உணவைக் குறைப்பதே வழுழிவாகும் உபாயம். தேவையான அளவுக்கு அதிகம் உண்பது தீமைபயக்குமென்று கண்டிருக்கிறோம். முக்கியமாக பிற்பிராயத்தில் தேவையான அளவுக்கு அதிகமுண்பது பெருந்தீமை பயக்கும்.

6. எற்கும் உணவே உட்கொள்ளத்தக்கது. அவரவரும் தத்தம் தேகத்துக்கு இசைவான உணவே அருந்தவேண்டும். எதனைப் புசிக்கவேண்டும், எதனைக் குடிக்கவேண்டும் என்னும் விஷயத்தில் கட்டுதிட்டமான கடினவிதி ஏற்படுத்தமுடியாது. ஒவ்வொருவருடைய தேகம் ஒவ்வொரு மாதிரியாக அமைந்திருக்கிறது; ஒருவருக்கேற்றது மற்றொருவருக் கேற்காது. ஏற்றவுணவு இன்னதென்று பகுத்தறியும் விஷயத்தில், அவரவரும் தத்தம் அனுபவ ஞானத்தையும் இயற்கையுணர்வையுங்கொண்டு நிதானிக்கவேண்டும். எதைப் புசிக்கவேண்டுமென்று வகையறுத்துக்கூற முடியாதெனினும், எதைப் புசிக்கவொண்ணாதென்பதைத் திட்டமாகக் காட்டலாம்.

7. ஒரு பதார்த்தம் வாய்க்கு ருசியாக இருப்பதனால், அது ஜீர்ணேந்திரியங்களுக்கும் இசைந்ததாக இருக்குமென்று எண்ணக்கூடாது. வாய்க்கிசைந்தவையனைத்தும் இரைப்பைக்கு இசைந்திருக்கவேண்டியது கட்டாயமன்று. இங்ஙனம் கூறியதனால், ஒருவன் தனக்கு இஷ்டமில்லாத பதார்த்தத்தைப்புசிக்கவேண்டுமென்று கூறியதாகாது. வெறுப்பான பண்டமெதனையும் வற்புறுத்திப் புசிக்கலாகாது. வெறுப்பான பண்டத்தைத் தின்னவேண்டியது அவசியமாயின், அதன் குணத்தை உணர்ந்து மனத்தை இசைத்துக் கொள்ளல் வேண்டும். மாப்பண்டங்கள், புஷ்டி மிகுந்த பதார்த்தங்கள், இனிப்பு வஸ்துக்கள், மிட்டாய் தினுசுகள், கொழுப்பு உணவுகள், சித்திரான்னங்கள், ஸம்பாரங்கள், காரப்பணியாரங்கள், பன்றியிறைச்சி, உப்பிட்ட மாம்ஸகண்டங்கள் ஆகிய இவைகளை

ஒழிப்பதே உத்தமம். ஸாமானியமான வெந்நீரு(ணை)வுக்குச் சமானம் வேறொன்றில்லை. மதியினை மயக்கப்படுத்தும் பானமும்; சலப்பையினையேனும் அருட்டத்தக்க குடிநீர்களும் ஒழித்தற்பாலனவாம். உண்மையான தாகத்திற்குத் தண்ணீரினும் உயர்ந்த குணமுடையது பிறிதொன்றுமில்லை.

8. உணவினைத்தும் இரைப்பையிலே ஜீர்ணமாகின்றதென்று பெரும்பாலார் எண்ணுகிறார்கள். அது தவறு. ஜீர்ணம் முழுதும் இரைப்பையிலேயே நடப்பதில்லை; ஜீர்ணகாரியத்தில் முக்கியமான பாகம் வாயில் நடக்கின்றது. வாயினாற் செய்யத்தக்க ஜீர்ணகாரியம் இரைப்பையினாற் செய்ய முடியாது. இவ்வுண்மையை உணராமையினாலே அநேகர் அஜீர்ணவியாதிக்கு ஆளாகிறார்கள். அவர்கள் தங்கள் பற்களைச் சரியாக உபயோகிக்கிறதில்லை.

9. மெல்வதனால் வாயில் உமிழ்நீர் ஊறுகின்றது. அந்த உமிழ்நீரில் பாசகத்திரவங்கள் இருக்கின்றன. பாசகத்திரவங்கள் என்பவை ஜீர்ணிக்கும் சக்தியுள்ள நீர்கள். ஜீர்ணகாரியத்தில் முக்கியமான பாகம் உமிழ்நீரிலுள்ள இந்தப்பாசகத்திரவங்களினால் நடக்கின்றது. ஆகையினால், உட்கொள்ளும் பண்டம் ஒவ்வொன்றையும் நிதானமாகவும் புத்திபூர்வகமாகவும் அவஸரப்படாமல் அமைதியாக மெல்லல்வேண்டும். மனம் மற்றொரு விஷயத்தைப்பற்றி நிற்க, வாயில் உணவை மெல்லுவதனாற் குணமில்லை. மெல்லுங்காரியத்தில் மனத்தைச் செலுத்தியே பராக்கின்றி மெல்லல் வேண்டும். ஆதலினால், புத்தி பூர்வகமாக மெல்லல்வேண்டுமென மேலே விதிக்கப்பட்டது.

10. வாயில் உட்கொண்ட பண்டம் உமிழ்நீரோடு கலக்கத்தக்க நுண்ணிய அணுக்களாகும்படி அதனைப் பற்களினால் மென்று நசுக்கல் வேண்டும். அப்படி மெல்லுவதனால் அந்தப்பண்டம் நெய்யுள்ள பசையாகின்றது; அந்த நெய்யுள்ள பசை நமது பிரயத்தனமின்றித் தனக்குத்தானே விழுங்கப்பெறுகின்றது. இம்முறைப்படி யுண்பதனால், அஜீர்ணரோகமேனும் மலபந்த ரோகமேனும் ஒருநாளும் அணுகாது.

11. மெல்லுவதனால் உணவிலுள்ள புஷ்டி அம்சம் வெளிப்படுகின்றது. புஷ்டிஅம்சம் வெளிப்பட்ட பிறகு அந்த உணவில் உருசை இராது. உணவில் உருசை தங்கியிருக்குமாயின், இன்னும்மென்றுவெளிப்படுத்தவேண்டிய புஷ்டிஅம்சம் பாக்கியிருக்கிறதென்று தெரிந்துகொள்ளல்வேண்டும்.

12. உண்டி நால்வகைப்படும்:—(1) உண்ணல், (2) தின்றல், (3) நக்கல், (4) பருகல். அவையாவன: சோறு முதலிய உண்ணல், கறி முதலிய தின்றல், தேன் முதலிய நக்கல், நீர் முதலிய பருகல். மெல்வதனால் புஷ்டிஅம்சம் வெளிப்படுமென்றும், புஷ்டிஅம்சத்தை வெளிப்படுத்தும் பொருட்டு நன்றாகவும் நிதானமாகவும் புத்திபூர்வகமாகவும் மெல்லல்வேண்டுமென்றும் கூறிய விஷயம் சோறுவகைக்கும் கறிவகைக்குமே பொருந்தும் என்னலாம்.

13. தேன் வகையையும் நீர் வகையையும் உட்கொள்ளும் முறையாதெனின், அவைகளைச் சிறிது சிறிதாக உறிஞ்சிச் சப்பிச் சுவைத்து நிதானமாகப் புசித்தல்வேண்டும். ஒருமுழாக்குப் பாலைச் சாதாரணமாகக் குடிப்பதினும், இம்முறைப்படி கொஞ்சங்கொஞ்சமாக உறிஞ்சி யுட்கொள்ளுவதனால், இருமடங்கு புஷ்டி பெறுவதற்காகும். இவ்வாறு நிதானமாகப் புசிப்பதனால், அதனிலடங்கிய சுவையினைத்தினையும் பிரித்தெடுக்கின்றோம். சுவையைப் பிரித்தெடுப்பதாவது புஷ்டி அம்சங்களைப் பிரித்தெடுப்பதாகும்.

14. உணவை ஒருபொழுதும் அவஸரமாக விழுங்காதே. அவஸரமாக விழுங்கினால் அதிலுள்ள புஷ்டியம்சத்தில் பாதிகூடக் கிடைக்கமாட்டாய்; தீமை செய்யத்தக்க வீண்வஸ்துவை சரீரத்தில் ஏற்றிக்கொண்டவனாவாய். உனக்கு அவஸரமாக இருந்தால், குறைவாகப் புசி; ஆனால், ஒருபொழுதும் அஜாக்கிறதையாகவும் அவஸரமாகவும் உண்ணாதே.

15. உண்ணுகையில் நீர் குடியாதே. உண்ணுகையிற் குடிக்கும் நீர் பாசகத் திரவங்களின் (digestive Juices) வீரியத்தைக் குறைக்கின்றது; அதனால் ஜீர்ணகாரியம் கெடுகின்றது. கூடுமானால், உண்ட பிறகு நீர் குடிக்கப்பழகு.—வைத்திய கலாநிதி.

---

## THE SCHOOL MUSEUM.

### பள்ளிக்கூடப் பொருள் காட்சிச்சாலை.

உபாத்தியாயர் பாடசாலைகளில் பொருட்காட்சிச்சாலை வைப்பதைப்பற்றி ஒரு நிருபர் "கல்லாசிரிய"னில் சில குறிப்புக்களை எழுதியிருக்கிறார்.

ம்யூஸியத்தில் அதிக நேர்த்தியானவும், விலையுயர்ந்தவும், அரியவுமான பொருட்களைச்சேர்த்து வைக்கவேண்டும்; 'என்னிடம் ம்யூஸியத்தில் வைக்கத் தகுந்த ஸாமான் இல்லை; சேகரிக்கவும் முடியாது' என்று அநேகர் எண்ணுவார்கள். இது தப்பபிப்பிராயமேயொழிய வேறல்ல. ம்யூஸியத்தில் எந்த பொருள்களை எவ்விதம் சேர்க்கவேண்டும்? எவ்விதம் வைத்திருக்கவேண்டும்? அப்படிச் செய்வதாலுண்டாகும் பயன் என்ன? என்று ஆராய்வோம்.

பலவித கற்கள், மண்கள், வேர், அடிமரம், இலை, பூ, காய், தான்யங்கள், பறவைகளின் முட்டைகள், இறகுகள், கூடுகள், அலகுகள், கால்விரல்கள், எலும்புகள், கொம்புகள், குளம்புகள், சங்குகள், கிளிஞ்சல்கள், வண்டுகள், பூச்சிகள், புழுக்கள் முதலிய யாவற்றையும் ம்யூஸியத்தில் வைக்கலாம்.

கூடியவரை மாணவரைக்கொண்டும், உபாத்தியாயர்களைக்கொண்டும் பாடங்களை விளக்கக்கூடிய பொருள்களை ஸம்பாதித்தல் நல்லது.

எல்லாப்பொருள்களையும் ஒன்றுசேர்த்துப் பள்ளிக்கூடத்தின் ஒரு மூலையில் திருஷ்டிபரிஹாரம்போல் குவித்துவைக்காமல் தாதுப்பொருள்கள், ஜீவவர்க்கங்கள்; தாவரங்கள், ஊர்வன முதலியவற்றையும், கணித ஸம்பந்தமானதும், பூகோள ஸம்பந்தமானதும், கிண்டர்கார்டன் ஸம்பந்தமானதுமான வஸ்துக்களையும் வெவ்வேறாகப் பிரித்துப் பார்வைக்கு அலங்காரமாயும், ஒழுங்காயும், சுத்தமாயும் வைக்கவேண்டும்.

இலைகள், பூக்கள் முதலானவைகளை மையொட்டுங் காகிதங்களின் இடையில் வரிசையாய் வைத்து, இரண்டொரு நாட்களுக்கொருமுறை எடுத்து மாற்றிவைத்தால், தக்கபடி காய்ந்துபோம். பிறகு அவற்றை தக்கவைகளாகப் பிரித்து வெள்ளை அட்டைகளில் ஒட்டி வைக்கலாம்.

பிள்ளைகளாலும், உபாத்தியாயர்களாலும் செய்த களிமண்வேலைகள், சித்திரவேலைகள், கிண்டர்கார்டன் தொழில்கள் ஆகிய இவைகளை ஒழுங்காகவும், வரிசைக்கிரமமாகவும் வைத்தல் மேலானது. கூடுமானால் களிமண்வேலைகளைச் சுட்டுத் தக்கபடி வர்ணங்கொடுத்து வைக்கலாம்.

இறந்துபோன நாய், பூனை, முயல், ஆடு, எலி, அணில் முதலியவற்றின் எலும்புக்கூடுகளைத் தக்க ஸமயங்களில் எடுத்து ம்யூஸியத்தில் வைக்கலாம்.

வண்டுகள், வண்ணாத்திப்பூச்சிகள் ஆகிய இவைகள் அழுகிப்போகக்கூடியவை யல்லவாகையால், அவற்றைக் குண்டூசிகளாற் குத்திவைத்து, அவை யிருக்குமிடத்தில் நாப்தலின் என்னும் உருண்டைகளை வைக்கலாம். பூச்சிகள் கெட்டுப்போகாமலிருக்கும்.

மீன், தவளை, பல்லி, ஓணான் முதலியவற்றைச் சுத்தஜலத்தோடு கலந்த 'பார்மாலின்' என்னும் திராவகத்திலும், பாம்பு, தேள், பூரான் முதலானவைகளை 'ஆல்கஹால்' சாராயத்திலும் போட்டு வைக்கலாம்.

இவையன்றி, கணிதம், பூகோளம் ஆகிய இப்பாடங்களைக் கற்பிக்க அனுகூலமாயுள்ள உபகரணங்களையும், மற்றும் உபாத்தியாயர் பிள்ளைகள் இவர்களின் ஸாமர்த்தியத்துக்கேற்ற மற்ற வஸ்துக்களையும் ம்யூஸியத்தில் வைப்பது மெச்சத்தக்க கார்யமே.

இவற்றை ஒழுங்காய்ச் சேகரித்து ம்யூஸியத்தில் வைப்பதோடு, செல்வப்பிராணிகளையும் வைத்துவளர்ப்பது அதிக சிலாக்கியமானது. கிளி, மைனா, முதலிய பற்பல பக்ஷிகள், நாய், பூனை, குரங்கு, முயல் முதலான மிருகங்கள் முதலானவற்றை ஆசிரியர்களும் பிள்ளைகளும் சேகரித்து அவைகளுக்கேற்ற கூடுகளமைத்து, அக்கூடுகளில் அவற்றைவிட்டு வளர்ப்பதோடு, மாணவர்களே அந்தச் செல்வப்பிராணிகளைப் போஷித்து வரும்படி செய்வது நல்லது.

இப்படி ம்யூஸியம் சேகரித்தல், பாடசாலைக்கு அலங்கிருதமா யிருக்குமென்றல்ல; பின் எதற்கெனவோ? உபாத்தியாயர் போதிக்கும் விஷயங்கள் மாணாக்கரின் மனத்தில் ஆழமாய்ப் பதியவும், அவர்களுடைய 'உற்று நோக்கும் சக்தி' விருத்தியடையவுந்தான்.

எப்படியென்றால், 'பக்ஷிகளின் அலகுகளும், கால்விரல்களும், அவற்றின் ஆகாரத்துக்கும், பழக்கத்துக்கும் ஏற்றவாறு அமைக்கப்பட்டிருக்கின்றன' என்னும் பாடத்தை உபாத்தியாயர் மாணவருக்குப் போதிக்கிறாரென்று வைத்துக்கொள்வோம்: இப்பாடத்திற்கு ம்யூஸியத்திலுள்ள 'பட்சிகளின் கால்விரல்களும், அலகுகளும்' எவ்வளவு அநுகூலப்படுமென யூகித்துக் கொள்ளலாம். இவையில்லாவிட்டால், உபாத்தியாயர் எவ்வளவு சாதுர்யமாகக் கற்பித்தாலும் அது உசிதமாகாது. ஏனெனில், இவ்வாறு கற்றுக்கொடுப்பதால் மாணாக்கரின் 'உற்றுநோக்கும் சக்தியும்,' 'ஆராய்ந்தறியும் சக்தியும்' விருத்தியாக இடமில்லை.

'பொருள்களை நேரே வைத்துப் போதித்தல்' உத்தமமார்க்கமென்பது பிரத்தியக்ஷம். இம்முறையை யனுஸரிக்க ஏற்படும் நல்வழிகளில் ம்யூஸியம் ஒன்றும்.

அன்றியும், செல்வப் பிராணிகளை வளர்ப்பது பிள்ளைகளே யாகையால், அடிக்கடி பாலர்கள் இந்த பிராணிகளைப் பார்த்து, இவைகளுக்கு இரைகொடுத்து வருவதால், மாணாக்கரின் 'உற்றுநோக்கும் சக்தி' விருத்தியாவதுடன், அந்தந்த பிராணிகளின் குணாகுணங்கள், ஆஹாரங்கள் ஆகிய இவற்றை நேரில் சுலபமாய்ப் பார்த்து அறிந்துகொள்வார்கள்.

செல்வப் பிராணிகளிடம் பாலர் அடிக்கடி பழகுவதனால் அவைகள் பயமில்லாமல் சிறுவரிடம் பழக இடமுண்டு. இப்படியிருத்தல் உபாத்தியாயருக்கும் ஓர்வித நன்மையைப் பயக்கும்; அதென்னவென்றால்: முயலைப்பற்றி இயற்கைப் பொருட்பாடம் உபாத்தியாயர் கற்பிக்க ஆரம்பிக்கிறாரென வைத்துக்கொள்வோம். இந்த ஸந்தர்ப்பத்தில் பாலர்கள் முயலை நேரில் பார்த்தும், தொட்டும், ஆராய்ந்தறிய ஹேதுவாகிறது. இப்படிச்செய்வது எவ்வளவு உசிதமென்று சொல்லாமலே விதிதம்; மேலும் மாணவரிடம் தயை, சாந்தம், பொறுமை, பரோபகாரம், ஜீவஜந்துக்களிடத்தில் இரக்கம், அநுதாபம் முதலிய நற்குணங்கள் நாளடைவில் தாமாகவே உற்பத்தியாகிவிடும்.

ஆதலால், ம்யூஸியம் வைத்தல், 'செல்வப்பிராணிகளை வளர்த்தல்' ஆகிய இவைகள் எவ்வளவு உபயோகமுள்ளவைகளென நன்குணர்ந்து இவற்றை எல்லா உபாத்தியாயர்களும் அநுஸரித்தல் உத்தமமாகும்.

---

## Aniyayapuri Panchakam.

BY PANDIT P. K. SREENIVASACHARIAR.

## அநியாயபுரி பஞ்சகம்.

வடமொழியில் 'அநியாயபுரிபஞ்சகம்' என்னும் சிறுநூல் ஒன்று உள்ளது. அதில், ஐந்து சுலோகங்கள் அடங்கியிருக்கின்றன. அவை 'அநியாயபுரி' என்னும் நகரில் நடந்த அக்கிரமமான செய்திகளை விவரிப்பன. அவை படித்தற்கு விநோதமாக இருத்தலால், அவற்றை மொழிபெயர்த்து இங்கு விவரித்துரைப்போம். நம் அன்பர்கள் படித்து மகிழ்வார்களென்று நம்புகின்றோம்.

(1) அநியாயபுரியென்னும் நகரில் ஒருவணிகன் மிகு கடுவிலை வைத்துப் பயறுதானியம் வியாபாரஞ் செய்துகொண்டிருந்தான்; அவனிடத்தில் பயறு வாங்கும்பொருட்டு ஒருவன் வந்து, விலைபேசி ஒப்பந்தஞ்செய்து முடித்துக்கொண்டு, தானியத்தை அளக்கச் சொன்னான். அந்தப் பயறுவியாபாரி படியைப்பிடித்துத் தலைகீழாகக் கவிழ்த்துவைத்து அளக்கத் தொடங்கினான். பயறுவாங்கவந்தவன் அதனைக்கண்டு, சினமுண்டு, 'அடா! அயோக்கியா! உனக்கு வந்த கேடுகாலமென்ன? படியை நேராக நிமிர்த்துவைத்து அளக்கிறாயா? இல்லையா? என்றான். வர்த்தகன் அதற்கு, 'இந்நகரில் இங்கு அப்படி அளக்கிற வழக்கமில்லை' என்றான். அதன்மேல் இருவரும் வர்திட்டுக்கொண்டு சண்டையுடன் அப்பட்டணத்திலிருக்கும் நியாயாதிபதியினிடம் சென்று, தங்களுக்குள்ள நஷ்டத்தையும் மனஸ்தாபத்தையும் சொல்லி முறையிட்டனர். நீதியதிபதி அவர்களின் விவாதத்தைக் கேட்டபின், 'நீங்களிருவரும் சொல்வன சரியல்ல: என் தீர்ப்பின்படி நடவுங்கள்: படியை குறுக்கே வைத்து அளக்கவேண்டும்'' என்றான்.

(2) அநியாயபுரியில் ஒருவைசியன் தன் தோட்டத்தில் கீரைவிதைத்துப் பயிரிட்டிருந்தான். சிலநாள்களில் கீரை நன்றாய்ச் செழித்து வளர்ந்திருந்தது. அப்படியிருக்குங்கால், அவ்வூர் வண்ணானுடைய கழுதை அத்தோட்டத்திற்குள் வந்து கீரையை மேய்ந்துகொண்டிருந்தது. அதைக் கோமுட்டி கண்டு, அக்கழுதையைத் தடியால் அடித்தவளவில், அதன் கால் முறிந்து ஒடிந்துவிட்டது. அதை வண்ணான் பார்த்து, மிக்க கோபத்துடன், 'பாவி கோமுட்டி என் கழுதையின் காலை ஒடித்துவிட்டானே!' என்று வைது, விரைவாக அக்கோமுட்டியின் வீட்டிற்குள் நுழைந்து, கர்ப்பவதியாகிய அவன் மனைவியின் கர்ப்பம் சின்னபின்னமாகக் காலால் உதைத்தான். கர்ப்பங் குலைந்ததைக் கோமுட்டி கண்டு, 'அடா! நாசக்காலனே! ஆஹா! பாவி! என்ன பாதகஞ் செய்தாயடா! நான் இங்கு இருக்கும்போது வீட்டினுட் புகுந்து, என் மனைவியின் வயிற்றில்



உதைத்துச் சிசுஹத்தி செய்தாயே!' என்று பேரிரைச்சலிட்டுச் சொல்லி, வண்ணான் இடைவஸ்திரத்தைக் கைப்பற்றி இழுத்து, 'வா; நியாயஸ்தலத்துக்கு; அவ்விடத்தில் நீ படும் பாட்டைப் பார்' என்று சென்று, அந்நகரிலிருக்கும் நியாயாதிபதியிடம் விட்டு முறையிட்டான். நியாயாதிபதி அந்த விவாதத்தைக்கேட்டுத் தெரிந்துகொண்டு, 'செட்டீ! இக்கழுதையின் கால் கூடிவருகிறவரையில் இது சுமக்கும் துணிமூட்டையை நீ சுமக்கவேண்டும். உன் மனைவி மீண்டும் கர்ப்பந்தரிக்கும் வரையில் அவளை வண்ணானிடம் விட்டுவை' என்று தீர்ப்புச் செய்தான்.

(3) அநியாயபுரியில் ஒரு கள்வன் இருந்தான். அவன் நெடுநாளாக ஒரு சாவகாரியின் வீட்டில் கண்வைத்திருந்து, ஒருநாள் சமயம் வாய்த்து, அவனது வீட்டுச் சுவரில் கன்னமிட்டு நுழையும்பொழுது, சுவரிடிந்து தலையில் விழவே இறந்தான். பிறகு அவன்மனைவி அதனை அறிந்து, மிக்க துயரத்தோடு தர்மப்பிரபுவும் மகாவிவேகியுமாகிய அந்நகரத்து நியாயாதிபதியிடஞ்சென்று, 'மஹாப்பிரபுவே! என் கணவர் சாவகார் வீட்டில் கன்னம் வைத்தார்; சுவர் இடிந்து தலைமேல் விழுந்து விட்டது; அதனால் அவர் மாண்டார். இதனை விசாரிக்கவேணும்' என்று முறையிட்டாள். நீதிபதி அத்தனவானை அழைத்து விசாரித்தான். அத்தனவான், 'ஐயனே! நான் மண்வேலை செய்யும் ஒட்டர்களுக்குப் பணம் கொடுத்தேன். சுவரை அவர்கள் வைத்தார்கள். என் மீது குற்றமில்லை' என்றான். பின்பு அவ்வொட்டர்களை அழைத்து விசாரிக்க, அவர்கள், 'மகாராஜாவே! அது எங்களால் நேர்ந்த குற்றமன்று: நாங்கள் வீதியில் இருந்துமண்ணுவைத்துக்கொண்டிருந்தோம். அப்போது ஒரு வேசை அவ்வழியேசென்றாள். நாங்கள் அவளைப்பார்க்கும்படியாயிற்று. அவளைப் பார்த்துக்கொண்டு சுவர்வைத்ததனால் கவனக்குறைவுற்பட, மண் இளகியது. அதனால் சுவர் சரியாக அமையவில்லை. இதற்குத் தாசியே காரணம்' என்றார்கள். நியாயாதிபதி அத்தாசியை அழைத்து விசாரிக்க, அவள், 'ஐயா! நான் அவ்வீதியில் இருக்கும் தட்டானொருவனிடத்தில் நகை செய்துகொடுக்கும்படி பொன் தங்கம் கொடுத்தேன்: அவன் காலஹரணம் செய்து கொடாததனால், அவனைக்கேட்கும்பொருட்டு நான் அவ்வீதி வழியே போக நேரிட்டது' என்றாள். பின்பு நீதியதிபதி அக்கம்மாளனை வரவழைத்துக் கழுவேற்றும்படி கொலையாளிகளுக்குக் கட்டளைகொடுத்தான். கொலைஞர் அங்ஙனமே அவனைப் பிடித்துக்கொண்டு போய் மரணதண்டனை நிறைவேற்றுமிடத்தில் நிறுத்தினார்கள். அதனைப் பார்க்கப் பலர் திரள்திரளாகக் கூடியிருந்தனர். அச்சமயத்தில் அப்பொற்கொல்லன் நியாயாதிபதியை நோக்கி, 'மகாப்பிரபுவே! நான் ஒரு விண்ணப்பம் செய்துகொள்வேன். அதனைத் தயை செய்து கவனித்துக் கேட்கவேணும். அதாவது: இந்தக்கழுமரத்தைப்பார்த்தால் பெரிதாயிருக்கிறது. நானோ, மிகவும் இளைத்து மெலிந்திருக்கிறேன். அதோ நின்றுகொண்டிருக்கும் செட்டியார் பெருந்தொந்தியோடு ஸ்தூலதேகமுடையவராயிருக்கிறார், பெரிய இக்கழுமரத்திற்கு அவரது பெரிய உடல் சரியாக ஒத்திருக்கும்.*' என்றான். அம்மொழியைக்கேட்ட நீதியதிபதி, அத்தட்டானை விட்டுவிடச் சொல்லி, அக்கோமுட்டியைக் கழுவிலேற்றக் கட்டளையிட்டான். அதனால், அந்தோ! அவன் கழுவிலேற்றப்பட்டு இறந்தனன்.

(4) அநியாயபுரியில் ஒரு தனவான் இருந்தான். அவன் அவ்வூரில் அறஞ்செய்ய விரும்பி ஒரு குளத்தை வெட்டிவிடுத்தான். இரண்டு மூன்று மாதம் சென்றபின்பு மழை பொழியவே, குளத்தில் நீர் நிரம்பிக் குளம் அலைமோதிக்கொண்டிருந்தது. கைக்கோளன் மகனொருவன் அக்குளத்தில் இறங்கி நீரில் நீந்தி விளை

---

* "கழுவுக்கேற்ற கோமுட்டி" என்னும் பழமொழி இச்சரிதையைப்பற்றியே வழங்கலாயிற்று.

யாடுகையில், கைகால் ஓய்ந்து மரித்தான். பின்பு, அச்சிறுவனது தந்தை மிக்க துயரத்தோடு அந்நகரிலிருக்கும் நியாயாதிபதியிடம் சென்று,'ஐயா! தனவான்வெட்டுவித்த தடாகத்தில் என் குமாரன் விழுந்திறந்தான். இதனை விசாரியுங்கள்' என்றான். நீதியதிபதி அவனைவரவழைத்துவிசாரிக்க, அவன், 'மகாப்பிரபுவே! நான் ஒட்டர்களுக்குப் பணங் கொடுத்தேன். அவர்கள் வெட்டியது இக்குளம்' என்றான். பிறகு அவர்களை அழைத்துக்கேட்க, அவர்கள், 'சுவாமி! நாங்கள் குளம் வெட்டியது உண்மைதான்; ஆயின், நாங்கள் குளத்தில் ஜலத்தைக் கொணர்ந்து கொட்டினோமா?' என்றார்கள். பிறகு அந்நியாயாதிபதி சபையிலிருக்கும் கனவான்களைப் பார்த்து, 'இந்த ஜலம் எப்படி வந்தது?' என்று கேட்டான். அவர்கள் 'ஐயா! மேகங்கள் மழைபொழிந்ததனால் ஜலம்உண்டாயிற்று' என்றார்கள். நியாயாதிபதி 'மேகங்கள் எப்படி உண்டாயின?' என்று வினவினான். அவர்கள், 'குயவன் சட்டி பானைகளைச் சுடுவதற்குச் சூளைபோட்டுப்புகைப்பதனால் அப்புகை ஆகாயத்திற் சென்று மேகரூபமாயிற்று' என்றார்கள். அம்மொழியைக்கேட்ட அந்நியாயாதிபதி, குயவனுடைய வம்சமேயில்லாதபடி எல்லாரையும் சிரச்சேதம் செய்யுமாறு தீர்ப்புக் கொடுத்தான்.

(5) அநியாயபுரியில் ஒரு தோட்டக்காரன் இருந்தான். அவன் ஒருநாள் தன் காவடியில் பதின்மூன்றுபூசனிக்காயை வைத்துக்கொண்டு விற்பதற்குக் கடைவீதிவழியாகக் கொண்டு வந்தான். அப்போது, பிரதானி நான்கும், கொத்தவால் நான்கும், கர்ணம் மூன்றும், சேவகன் இரண்டுமாகப் பூசனிக்காய்களை பலவந்தமாக அவனிடத்திலிருந்து பிடுங்கிக்கொண்டனர். பிறகு அவன் அந்த வீதியைவிட்டு இரண்டாவதுவீதிக்குவரும்போது, கிராமத்தார் அவனைக் கண்டு, 'அடே! பூசனிக்காய் எங்களுக்கு இல்லையா?' என்று சொல்லி, அவன் மேல் விழுந்து அவனுடைய காவடிக்கழியைப் பிடுங்கிக்கொண்டார்கள். பூசனிக்காய்களோடு காவடியையும் இழந்த தோட்டக்காரன், அப்போது தனக்குள் ஆலோசிக்கலாயினன்: 'நமக்கு இவ்வளவு நஷ்டமுண்டாக்கிக் கெடுதி செய்தவர்களுக்கு மாறு என்ன செய்யலாம்? ஆனதாசட்டும்: இவர்களுடைய திரவியங்களைத் தந்திரமாக அபஹரிக்க இடுகாட்டிற் காவலிருப்பதே சரி?' என்றெண்ணி வழிச்செல்கையில், ஒருவன் கையில் கோலொன்றை எடுத்துக்கொண்டு போவதைக்கண்டு, அவனை வழிமறித்துக் கழியைப் பிடுங்கிக்கொண்டு மயானத்திற்குச் சென்று, அங்குக் காவலிருந்தான். முதலில் வந்த பிரேதத்திற்கு 'ஒரு ரூபாய் கட்டணம் கட்டவேண்டும்; கட்டினால்தான் பிரேதத்தைச் சுட்டெரிக்கலாம்' என்றான். பிரேதத்துடன் வந்தவர்கள், 'இப்படி இராஜாங்கத்துக் கட்டளை போலும்' என்று தொகை கட்டிவிட்டுப் பிரேதத்தைச் சுட்டெரித்துப் போனார்கள். இரண்டாவது வந்த பிரேதத்திற்கு இரண்டுரூபாயும், மூன்றாவதற்கு நான்குரூபாயும், தைரியம் வந்த பிறகுநான்காவதற்குஎட்டுரூபாயும்இங்ஙனமே கட்டணத்தை உயர்த்த, அனைவரும் அவன் சொன்னபடியே கொடுத்துப் பிரேதத்தைக் கொளுத்திவிட்டுப்போவாராயினர். இங்ஙனமே சிலநாள்கள் செல்ல, ஒரு நாள் பிரதானியின் தாய் இறந்துவிட, பிரேதத்தை ருத்திர பூமிக்குக் கொண்டு வந்தனர். அப்பொழுது காவற்காரன் இரண்டாயிரம் வராகனென்று கட்டணம் உயர்த்தியிருப்பதனால், அந்தத் தொகையைக் கட்டினாலொழியச் சவத்தைச் சுட்டெரிக்கலாகாதென, பிரதானியும் இது வழக்கம்போலுமென்று இரண்டாயிரம்வராகனையும் கொடுத்துவிட்டுத் தகனஞ் செய்து போனான். சிலநாள்கள் சென்றபின்பு, மன்னனது மாதா மரணமடைய, பிரேதத்தை மயானத்துக்குக் கொண்டுவந்தார்கள். தோட்டக்காரன் அவர்களைப் பார்த்து, "இப்பொழுது நாலாயிரம் வராகன் கொடுத்துக்கொளுத்தவேண்டும்' என்றான். அரசன் அதன்விவரம் யாதொன்றும் விசாரியாமல் அத்தொகையைக் கொடுத்து, தகனஞ் செய்து போனான். பிறகு தோட்டக்காரன் தனக்குள்



கருதுகின்றான்:—'ஆஹா! இந்த அரசன் எவ்வளவு அவிவேக சிரோமணி! இவனுக்குச் சிறிதும் அறிவில்லையே!' என்றெண்ணி, அவனது அருகிற்சென்று 'தலைவனே! நான் இந்நகரத்து உருத்திர பூமிக்குக் காவலிருந்து சம்பாதித்த வராகன்களைப் பார்த்தீர்களா?' என்று சொல்லி அவற்றை முன்பு வைத்தான். அதனைக்கண்ட அரசன், அவன் சாமர்த்தியவானென்றுமெச்சி, தன் அரசாட்சி நேரின்மையைக் குறித்துக் கவனியாமல் அத்தோட்டக்காரனுக்கு தன் இராச்சியத்திற் பாதிகொடுத்தனன்.

பண்டித பு. கு. ஸ்ரீநிவாஸாசாரியர்.

## The Progress of the World.

## பிரபஞ்சப்போக்கு.

**கல்விச் செலவு.** இந்தியாவில் கல்விக்காகச் செலவழிக்கப்படும் செலவானது நாளுக்கு நாள் அதிகப்பட்டு வந்திருக்கின்றது. அப்படியிருந்தும், அத்தொகையானது எவ்வளவு கொஞ்சமென்பதை இங்குக் குறிப்பிடுவது அவசியமாகும். 1906-ம் வருஷத்தில் இங்குக் கல்விக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை 560 லட்சம் ரூபாய். 1911-ம் வருஷத்தில் இச்செலவு 1005 லட்சம் ரூபாய்க்கு அதிகப்பட்டது. 1916-17-ம் வருஷத்தில் ரூ. 1125 லட்சத்துக்கு அதிகப்பட்டிருக்கின்றது. இவ்வாறு கல்விச்செலவு அதிகப்பட்டிருந்தும், அது தேசத்தின் ஜனத்தொகைக்குத் தக்கபடி கல்வியைப் பெருக்கப் போதுமானதாயில்லாமலிருக்கின்றது. அமெரிக்காவிலுள்ள நியூயார்க் பட்டணத்தில் கல்விக்காக எவ்வளவு பணம் செலவழிக்கப்படுகின்றதோ, அதைவிட ஜனத்தொகையில் அநேகமடங்கு அதிகமுள்ள இந்தியாவில் செலவழிக்கப்படும் தொகை மிகவும் குறைவென்பதை இங்குக் குறிப்பிடுவது பொருந்தும். ஆகையால், தேசமுற்போக்குக்குக் கல்வியே அடிப்படையாகவிருப்பதால், கல்வியபிவிருத்தி விஷயத்தில் இராஜாங்கத்தார் அதிக ஊக்கங் காட்டுவார்களென்று நம்புகிறோம்.

**ஸ்திரீகளின் படிப்பு.** மைசூர் பொருளாதாரக்கான்பரென்ஸ் பெங்களூரில் நடைபெற்றது. அப்போது ஸ்திரீகளின் கல்வி விஷயமாய் ஆலோசிக்கப்பட்ட கமிடியாரின் ரிபோர்ட்டு படிக்கப்பட்டது. அக்கமிடியார் ஸ்திரீகளுக்குத் தாய்ப்பாஷை மூலமாகவே கல்வி கற்பிக்கப்படவேண்டுமென்றும், அவர்களுக்குப் பிற்கால வாழ்க்கைக்கு உபயோகப்படக்கூடிய கல்வியே அவசியமென்றும் அறிவித்தனர். ஆனால், மைசூர் மஹாராணி காலெஜ் பிரின்ஸிபால் மிஸஸ். கே. டி. ருக்மிணியம்மாள் ஸ்திரீகளுக்குத் தாய்ப்பாஷைமூலமாய்க் கல்வி கற்பித்தால், படிப்புமுறை கெட்டுப்போய்விடுமென்றும், இக்காலத்திய படிப்புமுறையை மாற்றுவதனால் பெண்களின் கல்வியபிவிருத்திக்குக் குறைவு வருமென்றும் பேசினார். ஆண்பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் கல்வி பெண்பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படுவதனாலும், அவர்களுக்குத் தாய்ப்பாஷையில் கல்வி கற்பிக்கப்படாமையினாலும் ஸ்திரீகள் தமது கடமைகளை மறந்து, தெய்வத்தன்மையை யிழந்து, இன்னும் பல அநாகரிகச் செயல்களுக்குள்ளாகிறார்களென்று பலராலும் நம்பப்படுகின்றது. விஷயம் இப்படியிருக்க, மிஸஸ். ருக்மிணியம்மாள் கமிடியாரின் அபிப்பிராயத்துக்கு மாறாகப் பேசியதன் காரணமென்ன?

**கம்போடியா பருத்திப் பண்ணை.** பருத்திப்பயிர் செழித்தோங்கவும், முதல்தரமான விதைக்குப் பஞ்சமில்லாமலிருக்கவும் வேண்டியதற்காக, கோயமுத்தூர் ஜில்லாவில் ஒரு கம்போடியா பருத்திப்பண்ணையை ஸ்தாபிக்கவேண்டுமென்று விவசாய இலாகாத்தலைவர் கவர்ன்மெண்டாருக்கு ஒரு பிரேரணையைச் செய்துள்ளார்

அதை கவர்ன்மெண்டார் அங்கீகரித்திருக்கிறார்கள். இந்தப் பண்ணையின் விஸ்தீர்ணம் 47 ஏக்கராகும். இந்த நிலமானது பொள்ளாச்சிக்கு 9 மைலுக்கு மேற்கே ஒரேக்கட்டு கோப்பையாயுள்ளது. விவசாய இலாகாத் தலைவர் சொல்லும்வண்ணம் இப்பண்ணையை ஏற்படுத்த 40 ஆயிரம் ரூபாய்க்குமேல் செலவாகுமென்று நம்பப்படுகின்றது. இதற்கப்பால் வருஷந்தோறும் நேரக்கூடிய செலவு 5 ஆயிரம் ரூபாய். பருத்திச் சாகுபடிக்குக் கோயமுத்தூர் ஏற்ற இடமாதலால், இங்கு இப்பண்ணையை ஸ்தாபிப்பதில் பொதுஜனங்களுக்கு மிகுந்த உபயோகமிருக்குமென்பதில் ஐயமில்லை. ஆனால், அவசியம் செலவு செய்யவேண்டிய இனத்தில் பணத்தைச் செலவுசெய்து காரிய சித்தி பெறவேண்டுமென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

**கவனிக்கவேண்டும்.**

யுத்தகாலத்தை அனுசரித்து கிரேட்பிரடனிலுள்ள ரெயில்வேக்களைக் கவர்மெண்டாரே இப்போது கைவசம் வைத்திருக்கிறார்கள். இந்த யுத்தம் முடிந்த பின்பும், கவர்ன்மெண்டாரே அவற்றைத் தங்கள் வசம் வைக்கவேண்டுமென்று முதன்மந்திரி சொல்லியிருப்பது பின்வருமாறு "சுதேசமித்திர"னில் காணப்படுகின்றது:—

"ரெயில்வேக்களும் கால்வாய்களும் கவர்ன்மெண்டின்வசமே இருக்கவேண்டுமென்பதில் எனக்குப் பூர்ண அபிமானம் உண்டு. ராஜாங்கத்தாரிடமே அவைகள் இருக்கும்பொழுது ரெயில்வேக்களைக் கட்டுவதற்காகப் பணம்கொடுத்திருப்போருக்குக் குறைந்தவட்டி கொடுத்தாற் போதும். தவிரவும், ரெயில்வே சிப்பந்திகளுக்கு நல்ல சம்பளமும் கொடுக்கமுடியும். ரெயில்வே பிரயாணம் செய்வோருக்கும் சாமான்களை அனுப்புவோருக்கும் இன்னும் அதிகமான சௌகரியங்களைத் தேடிக்கொடுக்கலாம். பழையபடி கம்பெனிகளே முன் மாதிரியில் ரெயில்வேக்களைத் தம்வசம் வைத்திருப்பதென்பது முடியாது. ரெயில்வேக்கள் காரணமாகவே போக்குவரத்துக்குரிய கால்வாய்கள் அலட்சியம் செய்யப்பட்டுவிட்டன."

மேற்கூறிய வார்த்தைகள் இந்தியாவிற்கும் பொருத்தமாயிருக்குமென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. ரெயில்வேக்களைக் கம்பெனியாரே வைத்திருக்கவேண்டுமென்று வாதிப்போர் இவ்வார்த்தைகளைக் கவனிக்க வேண்டும்.

**மிஸ்டர் ஹார்னல் சொல்லுகிறார்.**

நடுத்தரப் பாடசாலைகளில் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் சம்பளமானது அதிகமென்பது பொதுவாகச் சனங்களின் அபிப்பிராயம். விஷயம் இப்படியிருக்க, வங்காள வித்தியா இலாகாத் தலைவர் மிஸ்டர் ஹார்னல் என்பவர், நடுத்தரப் பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களிடத்திருந்து வசூலிக்கப்படும் சம்பளம் குறைவு என்றும், ஏழைகளும் திறமையற்றவர்களும் கல்விகற்க ஆசைப்பட்டு ஏமாந்துபோக நேரிடுகிறதென்றும், இதனால் கல்வியின் திறமை குறைந்துபோகின்றதென்றும் கூறுகிறார். இவர் எந்த விஷயத்தை ஆதாரமாகக்கொண்டு இவ்விதம் கூறினாரென்பது புலப்படவில்லை. பணமுள்ளவர்களுக்குத்தான் படிப்பு என்பது இவருடைய கருத்துப்போலும்! ஒவ்வொருவருக்கும் படிப்புக் கிடைக்கவேண்டுமென்பதையும், இலவசமாயும் கட்டாயமாயும் ஒவ்வொருவருக்கும் கல்விகிடைக்கச் சுதந்திர முண்டென்ற தற்கால நிகழ்ச்சியையும் இவர் கவனிக்கவேண்டும்.

**தொழிலாளர்களின் சங்கம்.**

ஒரு தேசம் முன்னேற்றமடைவதற்கு அங்கு நடத்தப்படும் தொழில்களே காரணமாயிருக்கின்றன. இவ்வுண்மையானது மேனாடுகளைநோக்கின் நன்கு விளங்கும். தொழிலாளர் உதவியின்றி எக்காரியமும் நடைபெறாது. ஏராளமான செல்வமிருந்தும், அச்செல்வம் தொழில்முறையில் பெருக்கமடைவதற்குத் தொழிலாளர்களே காரணமாயிருக்கின்றனர். ஆதலால், தேசம் முற்போக்கடைவதற்கும், ஜனங்கள் க்ஷேமமடைவதற்கும் தொழிலாளர்களே காரணமாயிருக்கின்றனரென்பது இங்குக் கவனிக்கத்தக்கது. இந்தியாவில் இத்தகைய முயற்சி எவ்வளவுள்ளதென்பதைத் "தேசபக்தன்" எழுதுவதாவது:—

நமது நாட்டிலுள்ள தொழிலாளரது முன்னேற்றத்தை ஜனத்தலைவர்கள் நாடினதேயில்லை. தொழிலாளருக்காக உழைத்த ஜனத்தலைவரும் அரியர். மேல் நாட்டில் தொழிலாளருக்காக உழைத்துப் பேர் பெற்றவர் பலர். ஜனத்தலைவர்கள் இந்தியாவில் தொழிலாளர் முன்னேற்றத்தை நாடாமலிருந்தமையால், தொழிலாளர் தம் பெருமையைத் தாமுணராது வாளா காலங் கழித்து வந்தனர். தொழிலாளர்கள் உணர்ச்சிபெற்றுத் தம் முன்னேற்றத்தைக் கருதி உழைக்க ஒன்றுபடுவாராயின், அவர்களை ஜனத்தலைவர்களும் மற்றவர்களும் போற்றுதல் செய்வார்கள்."

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயத்தைக் கவனிக்கின், இந்தியாவில் இதுவரை தொழிலாளர்களது கூட்ட அமைப்பின் அவசியத்தையும், அதனால், ஏற்படும் நன்மையையும் நம்மவர்கள் அறியவில்லையென்பதை ஊகிக்கலாம்.

**சென்னையில் முயற்சி.**

இத்தகைய சங்கங்களின் அவசியத்தைச் சென்னையிலுள்ள சில தேசாபிமானிகள் உணர்ந்து, அவற்றின் அபிவிருத்திக்கான சில வழிகளைத் தேடிவருகிறார்கள். யுத்தங்காரணமாக உணவுப் பொருள்களின் விலைகள் பலமடங்கு ஏறியிருப்பதனால், தொழிலாளர்களுக்குத் தேவையான சாமான்களை இவர்கள் வாங்கி லாபம் சிறிதுமில்லாமல் கொள்முதலுக்கே கொடுத்துவருகின்றனர். வாரந்தோறும் தொழிலாளர்களை ஒன்றுகூட்டி, அவர்களுக்குச் சிக்கன முறைகளைப் பற்றியும், மதசம்பந்தமான விஷயங்களில் அநுஷ்டிக்கவேண்டிய காரியங்களைப்பற்றியும், எப்போதும் எச்சமயத்திலும் வேலை நிறுத்தும் செய்யக்கூடாதென்பதைப்பற்றியும், இன்னும் இத்தகைய பல விஷயங்களைப் பற்றியும் போதிக்கப்படுகின்றது. அரசியல் சம்பந்தமான விஷயங்கள் இக்கூட்டங்களில் பேசப்படுவதில்லை. இப்படிப்பட்ட சங்கங்கள் தேசத்தில் மற்றபாகங்களிலும் நடத்தப்பட்டால், தொழிலாளிவிருத்திக்கான சௌகரியங்கள் பல ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை.

**மைசூரின் பொருளாதார அபிவிருத்தி.**

ஸமீபத்தில் மைசூரில் கூடிய பொருளாதார மகாநாட்டில் ஸர். எம். விசுவேச்வரய்யா அக்கிராஸனம் வகித்து, மைசூர் சம்ஸ்தானத்தின் பொருளாதார நிலைமையைக் குறித்துச் சில விஷயங்களை வெளியிட்டார். தேசத்தின் செல்வ நிலைமையானது ஜனங்களின் கல்வி நிலைமையையும், வருமானத்தையும் பொறுத்திருக்கின்றதென்று அவர் குறிப்பிட்டு, பிறகு, மைசூர் சம்ஸ்தானத்தின் செல்வ நிலைமையைக் குறித்துப் பேசிய விஷயங்கள் வருமாறு:—

"மைசூர்சம்ஸ்தானத்தின் மொத்தச்செல்வ மதிப்பு 203 கோடிரூபாய். இத்தொகையை ஸம்ஸ்தானத்தின்ஜனத்தொகையால் வகுத்துப் பார்த்தால், ஒவ்வொருவருக்கும் சராசரி ஆஸ்தி ரூ. 338 என்று ஏற்படுகின்றது. ஆனால் பிறநாடுகளைக் கவனிக்கின், கிரேட்பிரட்டனில் ஜனங்களின் சராசரி ஆஸ்தி ரூ. 6000 என்றும், கானடாவில் ரூ. 4400 என்றும், ஆஸ்டிரேலியாவில் ரூ. 3960 என்றும் தெரிகின்றது.

'வருமானத்தைப்பற்றிக்கவனிப்போமானால், சம்ஸ்தானத்தின் மொத்த வரும்படி ரூ. 18 கோடி. அதாவது ஒவ்வொருவருடைய சராசரி வருஷவருமானம் ரூ. 31 ஆகிறது. ஆனால், மேற்கூறிய தேசங்களிலோ, ஒவ்வொருவருடைய சராசரிவருஷ வருமானம் ரூ. 500 முதல் 700 வரையென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

ஒவ்வொருவரும் செலுத்தும் வரியைக் கவனிக்கின், சம்ஸ்தானத்தில் ஒவ்வொருவனும் செலுத்தும் வரி ரூ. 4 என்றும், கிரேட்பிரிட்டனில் ரூ. 54 என்றும், கானடாவில் ரூ. 50 என்றும், ஆஸ்டிரேலியாவில் ரூ. 49 என்றும் தெரியவருகின்றது. சமஸ்தான ஜனங்களில் 100-க்கு 90-பேர் கல்வியறிவில்லாதவர்கள்.

மேற்குறித்தவாறு இவர் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களை நம்பிரிட்டிஷ் இந்தியாவிற்கு ஒப்பிடின், எவ்வளவு பொருத்தமிருக்குமென்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டும்.

**மற்றவிஷயங்கள்.**

மைசூர் சம்ஸ்தானத்தில் கைத்தொழில் வியாபார சம்பந்தமாகவும், கல்வி சம்பந்தமாகவும், அபிவிருத்திக்கான பலவித முயற்சிகள் செய்யப்பட்டுவருகின்றன. கொஞ்சங்கொஞ்சமாகப் புதிய தொழில்களும் பரவிக்கொண்டேவருகின்றன. அரக்கினின்று சாயம் எடுத்தல், வார்னிஷ் எண்ணெய் எடுத்தல் முதலிய கைத்தொழில்கள் நூதனமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உலோகங்களைக் கொண்டு நாநாவித சாமான்களைச் செய்ய ஒரு பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக சம்ஸ்தான அதிகாரிகள் இரண்டே முக்கால் லட்சம் ரூபாய் செலவிட உத்திரவு செய்திருக்கிறார்கள்.

வியவசாய சம்பந்தமாகச்செய்யப்பட்டுவரும் முயற்சிகள் குறிப்பிடத்தக்கன. இங்குச் கனிவர்க்கங்களைத் தரக்கூடிய பழமரங்களை வைத்துப் பயிர்செய்யும் விஷயமாய்ச் சம்ஸ்தான அதிகாரிகள் செய்துள்ள ஏற்பாட்டைச் சென்ற பங்குனிமாதப் பத்திரிகையில் எழுதியிருக்கிறோம். கால்நடைகளை வளர்த்தல், எருச்சேர்த்தல், காடுகளைப் பாதுகாத்தல் முதலிய விஷயங்களில் தக்க கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. கிராமாந்திரங்களிலுள்ள வியவசாயிகள் வியவசாயசம்பந்தமாய் நூதன விஷயங்களை அறிந்துகொள்ளும்பொருட்டு அவைகளைப்பற்றிய துண்டுப்பத்திரிகைகள் அச்சிடப்பட்டு அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன.

கல்விசம்பந்தமாயும் சம்ஸ்தான அரசாங்கத்தார் பல பலத்த முயற்சிகளைச் செய்துவருகிறார்கள். பிரதிவருஷமும் பல புதிய பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. இவைகளில் கைத்தொழில், இரஸாயனசாஸ்திரம் முதலான விஷயங்கள் விசேஷமாகப் போதிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இவைதவிர, கிராமந்தோறும் வாசகசாலைகளும், கல்வியபிவிருத்திக்குச் சாதனமான பல காரியங்களும் செய்யப்பட்டுவருகின்றன. பஞ்சமர்களின் கல்வியபிவிருத்திக்காக ரூ. 55,000 செலவழிக்கப்படவேண்டுமென்று ஸமீபத்தில் ஓர் உத்திரவு பிறந்திருக்கின்றது.

**நமது கடமை.**

சென்னை மாகாணக் கான்பரென்ஸானது இந்த வருஷம் மே மாதம் காஞ்சிபுரத்தில் கூடியது. அப்போது ஸ்ரீமதி ஸரோஜினி தேவி அக்கிராஸனம் வகித்தார். அக்கிராஸனாதிபதி தமது ஆரம்பப் பிரசங்கத்தில்



ஸ்ரீமதி ஸரோஜினி தேவி.

இந்தியாவின் இப்போதைய நிலைமையைப் பற்றி வெகு விஸ்தாரமாகப் பேசிவிட்டு, தேச மக்களின் கடமையைப்பற்றிப் பின் வருமாறு சொன்னார்:—

"தாய் நாட்டின் உயர்வுக்காக உழைத்து வரும் வாலிபர்களே! ஆயிரக்கணக்காக முன் வந்து சேனையில் சேருங்கள். கேவலம் சம்பளத்துக்காகச் சண்டை செய்யாமல் தேச கைங்கரியத்துக்காகவே சண்டை செய்யுங்கள். அப்போதுதான் நமது தேசம் சுதந்திரம் அடையக்கூடும். மேடையின் மீதேறிப் பேசிவிடுவதனால் நாம் சுதந்திரத்தையடைந்து விட முடியாது. தேசத்துக்குக் கௌரவம் உண்டுபண்ணக்கூடியவர்கள் போர்வீரர்களேயாதலால், வாலிபர்களே! உங்கள் கடமையைக்கண்டு உணருங்கள்."



**ஆடையில்லாக் கஷ்டம்**

வங்காளத்தில் ஆடையில்லாக் கஷ்டத்தினால் நேரும் துன்பங்கள் சொல்லத்தரமன்று. கனக்கில்லாத ஏழைகள் படும்பாடு எண்ணிறந்தன. இதனால் பலவிதக்கொலைகளும் திருட்டும் நடக்கின்றன. இத்தகைய நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் புலப்படவில்லை. போதுமானவளவு ஜவுளி கிடைக்காமையினாலோ, அல்லது அதிகலாபத்தைக் கருதி சரக்குகளின் விலை உயர்த்தப்பட்டதனாலோவென்ற விஷயம் எவ்வளவுதூரம் பரிசீலனைசெய்யப்பட்டுள்ளதென்பது ஒன்றும் விளங்கவில்லை. பொதுஜனங்களின் க்ஷேமத்தைபே கோரி நிற்கும் ஜனத்தலைவர்கள் இவ்விஷயங்களை உடனே கவனித்துத் தக்கது செய்யவேண்டுகிறோம்.

**புதிதாகவந்த நோட்டுகள்.**

இப்போது வந்திருக்கும் ஒருரூபாய், இரண்டரைரூபாய் நோட்டுகள் கொஞ்சம் கையாளப்பட்டவுடனே அழுக்கடைந்துவிடுகின்றன; பிறகு மங்கி உருக்குலைந்து போகின்றன. இதனால் பொதுஜனங்களுக்குள் புகார் கிளம்புவது வெளிப்படை. அதற்காக அம்மாதிரி அழுக்கடைந்து உருக்குலைந்த நோட்டுக்களை ஸர்கார் கஜானாக்களில் கொடுத்துப் புதிது பெறலாமென்று கவர்ன்மெண்டார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இது மிகவும் பாராட்டத்தக்கது. ஆனால், கிராமாந்தரங்களிலுள்ள ஏழை குடியானவர்கள் இத்தகைய நோட்டுக்களை மாற்றுவதற்குத் தொலைதூரங்களிலுள்ள ஸர்கார் கஜானாக்களை நாடிச் செல்வது சாத்தியமல்ல. ஆகையால், இந் நோட்டுக்களை தபாலாபீஸ் போன்ற இடங்களில் மாற்றிக்கொள்ளலாமென்று உத்திரவு செய்தால், பொது ஜனங்களுக்கு மிகுந்த சௌகரியங்கள் ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை.

**கல்கத்தா பிரஸிடென்ஸி கலாசாலை.**

கல்கத்தாவிலிருக்கும் பிரஸிடென்ஸி கலாசாலையானது ஸர்க்காரால் நடத்தப்பட்டு வருகின்றது. இத்தகைய கலாசாலைகள் மற்ற கலாசாலைகளுக்கு ஒரு வழி காட்டியாயிருக்கவேண்டுமென்று ஆங்காங்கு ராஜாங்கத்தாரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. மேற்குறித்த கலாசாலையானது இனி ஜனங்களிடம் ஒப்புவிக்கப்படுமென்ற வதந்தி அங்கு உலாவி வருவதாக "மாடர்ன் ரெவியூ" பத்திரிகை எழுதுகிறது. உயர்தர கலாசாலையை நடத்துவது சாமான்ய காரியமன்று. இது பொதுஜனங்களால் நன்கு நடைபெறக்கூடுமென்று நம்ப இடமில்லை. ராஜாங்கத்தார் கலாசாலையை விட்டுவிடுவதாயின், அது பல கஷ்டங்களுக்குள்ளாகுமாதலால், அதிகாரிகள் அதற்கு இடங்கொடுக்கமாட்டார்களென நம்புகிறோம்.

**ஓர் சுயச்சுரங்கம்**

பர்மாவிலுள்ள மாண்டலே என்னுமிடத்தில் ஓர் புதிய ஈயச்சுரங்கம் அகப்பட்டதைக் கேட்டு சந்தோஷிக்கிறோம். இது மிஸ்டர் மூசா எ. எஸ். ஜமால் என்ற ஒரு முஸ்லீம் கனவானால் கண்டுபிடிக்கப்பட்டதாம். இதில் கிடைக்கும் ஈயத்தில் வெள்ளியும் கலந்திருக்கின்றதென்று சொல்லப்படுகின்றது. இச்சுரங்கம் இந்தியர் கையில் சிக்கியிருப்பதால், அவர் இதை பிறநாட்டார்கையில் போய் விடாதபடி பார்த்துக்கொள்வார் என்று நம்புகிறோம். இச்சுரங்கத்தில் கிடைக்கும் வஸ்துக்களை உருக்க மிஸ்டர் ஜமால் கூடிய சீக்கிரத்தில் மாண்டலேயில் ஏற்பாடு செய்வாரென்று தெரிகின்றது.

## Books and Reviews.

### புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

[சீதை வனம்புகுந்த சரிதம்; வேலூர் வி. என். சாமாராவ் அண்டு கம்பெனியார் பதிப்பித்தது. விலை அணா 3. ]

இப்பெயர்கொண்ட நூலொன்று நமதுபார்வைக்கு வந்துள்ளது. இதை இயற்றியவர் வேலூர் வூர்ஹீஸ் காலெஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியாரவர். இவ்வரிய நூலானது கம்பராமாயணத்தில் இறுதியிலிருப்பதும்; உத்தமகவியாகிய ஒட்டக்கூத்தப்புலவர் பாடியருளிய உத்தர காண்டத்தில் உள்ளதுமான "சீதை வனம்புகு படலம்" என்னும் பாகத்தில் அடங்கிய சரித்திரத்தை வெளியிடுவது. இது படிப்போர்க்கு ஒன்பது சுவைகளில் மிருநலம் பெறுவிக்கும் கருணாரஸம் அல்லது சோகரசத்தை உண்டாக்குமென்பதில் ஐயமில்லை. இன்னும் இந்நூலைப் படிப்பதனால், உலகத்தோடு ஒட்ட ஒழுகவேண்டுமென்பதையும், எதிர்பாராமல் இடர்வருதல் இயல்பென்பதையும், அதனைப் பொறுத்துக்கொள்ளவேண்டு மென்பதையும், கற்புடைய மகளிர் தமக்குத் துயர்தரினும் கணவரைப் பழியாது பக்திசெய்து அவரைக் குறித்துத் தவம் புரிவரென்பதையும், இவை போன்ற பல நீதிகளையும் அறிந்துகொள்ளக் கூடுமென்பது எமது தீர்மானமான அபிப்பிராயம். புஸ்தகமானது எளிய சிறந்த செந்தமிழ் நடையில் இயற்றப்பட்டுள்ளது. இதில் இடக்கரான விஷயமேதும் இன்மையால், பாடசாலை மாணவரும், பெண்பாலரும் கூச்சமின்றிப் படிக்கலாமென்பதில் ஐயமில்லை. முக்கியமாகப் பெண்பாலரை உத்தேசித்தே இந்நூல் இயற்றப்பட்டுள்ளதென்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. புஸ்தகத்தின் விலை அணா 3. வேண்டுவோர் : வி. என். சாமாராவ் அண்டு கம்பெனி, வேலூர் (N. A. Dt.) என்று எழுதிப் பெறலாம்.

[ஸாக்ரடீஸ் சரித்திரம்; மதனபள்ளிக் காலெஜ் ஆசிரியர் ஆர். அரங்காசாரியர் எம். ஏ; எல்.டி. இயற்றியது. விலை அணா 12.]

இப்பெயர்கொண்ட அரிய நூலொன்று வரப்பெற்றோம். இது கிரீஸ் என்னும் தேசத்தில் சுமார் 2400 வருஷங்களுக்கு முன்னிருந்த ஸாக்ரடீஸ் என்னும் தத்துவஞானியின் சரித்திரமாகும். உலகத்தில் ஜனங்களுக்குள் அறியாமையைப்போக்கி அறிவையூட்டி அவர்களை மேன்மைப்படுத்துவதற்காக அவ்வப்போது சில மகான்கள் தோன்றுவதுண்டு. அவர்கள் செய்யும் காரியங்களும், போதிக்கும் போதனைகளும் உலகமெங்கும் பரவி வேரூன்றிவிடுகின்றன. அத்தகையவர்களுள் ஸாக்ரடீஸ் என்ற யவன தத்துவஞானியார் ஒருவர். இந்நூலில் இவருடைய பிறப்பு வளர்ப்பு வரலாறும், இவரது தத்துவக்கொள்கைகளும், அக்காலத்திலிருந்த வித்துவான்களுக்கும் இவருக்கும் ஏற்பட்ட வித்தியாசங்களும், இவரது குணாதிசயங்களும் வெகு விரிவாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. புஸ்தகமானது எல்லோரும் படித்தறியும்படி மிக வெளிய இனிய நடையில் எழுதப்பட்டுள்ளது. பள்ளிக்கூட மாணவர்கள் இந்நூலை படிப்பார்களானால், அவர்களுக்குத் தமிழில் எழுதுந் திறமை நன்கு ஏற்படுமென்பது நமது துணிபு. புஸ்தகம் வேண்டுவோர் : வி. என். சாமாராவ் அண்டு கம்பெனி, வேலூர் (N. A. Dt.) என்று எழுதிப்பெறலாம்.

[இருக்குவேதஸங்கிதை; குன்னூர் ஆநந்தாச்ரமத்து சிவதத்யானந்த மஹரிஷி மொழிபெயர்த்தியற்றியது. வருஷசந்தா ரூ. 6. தனிப்பிரதி ரூ 1.]

மேற்குறித்த புத்தகத்தின் மூன்றாம்பாகம் நமது பார்வைக்கு வந்துள்ளது. வேதங்கள் சம்ஸ்கிருதத்திலேயே யிருப்பதால், அவற்றை நம் தமிழ்மக்கள் படித்தறிய முடிவதில்லை. ஆகவே, இக்குறையை நீக்கும்பொருட்டு குன்னூர் ஆநந்தாச்ரமத்திலுள்ள சிவத்யானந்த மகரிஷி என்பவர் இப்போது இருக்வேதத்தைத் தமிழில் செய்யுள் ரூபமாக எழுதி வெளியிட்டுவருகிறார். செய்யுளுக்குப் பொருளும் குறிக்கப்பட்டிருக்கின்றது. வேதத்தைத் தமிழில்படிக்க விரும்புவோர்க்கு இப்புத்தகம் மிக்க பயனுள்ளதாயிருக்குமென்பதில் ஐயமில்லை. இது 36 மாதங்களில் முடிவுபெறும். வேண்டுவோர் : மானேஜர், வேதபிரோ, ஆநந்தாச்ரமம் குன்னூர், நீலகிரி என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.




# ஜநோபகாரி.

(JANOPAKARI)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புஸ்தகம் 3. Vol. III. காளயுக்தி௵ ஆடி௴, JULY, 1918. சஞ்சிகை 7. No. 7.


5-SEP 1918

## The Progress of the World.

### பிரபஞ்சப்போக்கு.

**புறம்போக்கு நிலங்களில் மரங்களைப் பயிர்செய்தல்.**

1916-ம் வருஷம் நவம்பர்மாதம் சென்னைச் சட்டசபையில் கனம் ஸ்ரீமான் சிதம்பரநாத முதலியார் அவர்கள், புறம்போக்கு நிலங்களிலிருக்கும் மரங்களையும், வாய்க்கால்களின் கரைகளில் முளைத்திருக்கும் மரங்களையும் அந்தந்த மரங்களின் பக்கத்து நிலக்காரர்களுக்குக் கொடுத்துவிடவேண்டுமென்றும், சில நிபந்தனைகளின் மேல் பட்டாதார்கள் தங்கள் நிலத்துக்கு அருகிலுள்ள புறம்போக்குநிலங்களில் மரங்கள்வைத்துப் பயிர்செய்துகொள்ள அனுமதி கொடுக்கவேண்டுமென்றும் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அத்தீர்மானத்தைக் கவர்ன்மெண்டார் ஆலோசித்துப் பார்த்ததில், கனம் மெம்பருடைய பிரேரணையை அங்கீகரிக்க முடியாதென்றும், இப்போதுள்ள விதிப்படி புறம்போக்குக்களில் மரங்களைப் பயிரிடுவதற்கு டிவிஷனல் ஆபீஸரின் உத்தரவு பெறுவதற்குப் பதிலாக தாசில்தாரிடத்திலும் டிப்டி தாசில்தாரிடத்திலும் உத்தரவு பெறலாமென்றும், விறகுக்காகவாவது நிழலுக்காகவாவது புறம்போக்குநிலங்களில் மரங்களைப் பயிர்செய்ய வேண்டுமானால், அச்சுதந்திரம் தனிப்பட்டதார்களுக்குக் கொடுக்க இயலாதென்றும், கிராமத்துக்குப் பொதுவாகக் கொடுக்கப்பட வேண்டுமென்றும், கிராம பஞ்சாயத்துக்கள் இக்காரியத்தைச் செய்ய முன்வருமானால் அவைகளுக்குச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு சௌகரியங்கள் செய்துகொடுக்கமுடியுமென்றும் உத்தரவுசெய்திருக்கிறார்கள்.

கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் விதிகளின்படி ரயித்துக்கள் புறம்போக்குநிலங்களில் மரங்களைவைத்துப் பயிர்செய்ய அனுமதி கொடுக்கப்படுவார்கள்.

1. புறம்போக்கு நிலங்களில் முன்னமேயே மரங்கள் இருக்குமாயின், அங்கு வேறுமரங்களை நடக்கூடாது; ஏனெனில், கொஞ்சகாலமான்பிறகு ஏற்கெனவேயிருந்த மரங்களுக்கும் புதிதாய் நடப்பட்ட மரங்களுக்கும் வித்தியாசம் தெரியாமற்போய்விடும்.

2. மரங்களைப் பயிரிட தாசில்தாருடையவாவது அல்லது டிப்டி தாசில்தாருடையவாவது உத்தரவு பெறவேண்டும். நிலமானது மராமத்து இலாகாவின் சுவாதீனத்தில் இருக்குமானால் அவர்களின் உத்தரவு பெறவேண்டும்.

3. லைஸென்ஸ் பெறும்போது பயிரிடப்படப் போகும் நிலத்தின் எல்லையும், மரங்களின் வகையும், எண்ணிக்கையும் குறிப்பிடப்பட வேண்டும்.

4. இந்த அனுமதியினால் பயிரிடுபவருக்கு நிலத்தின்மீது ஒருவிதச் சுதந்திரமும் உண்டாகாது.

5. பயிரிடப்படும் மரங்களுக்கு மொத்தமாக வேலிகட்டக்கூடாது. ஆனால், ஒவ்வொரு மரத்துக்கும் வேலி அமைத்துக்கொள்ளலாம்.

6. இம்மரங்களை அரசாங்கத்தார் வேண்டும்போது மரத்தின் சொந்தக்காரருக்கு யாதொரு பரிஹாரமும் செய்யாமல் வெட்டிக்கொள்வார்கள். இச்சமயங்களில் மரங்களைப் பஹிரங்கமாய் ஏலத்தில்விட்டு அப்பணத்தைக் கொடுப்பார்கள்; அல்லது மரம் வேண்டுமானாலும் கொடுப்பார்கள்.

7. மரங்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நடாவிட்டாலும், அல்லது அவை நன்கு பாதுகாக்கப்படாவிட்டாலும் லைஸென்ஸ் ரத்து செய்துவிடப்படும்.

8. லைஸென்ஸ் பெற்றுள்ளவர்கள் மரங்களின் மகஸூலையும், விறகையும் அனுபவிக்கலாம். ஆனால், வழக்கமாக வரிவிதிக்கப்படும் பழமரங்கள் காய்ப்புக்கு வந்தவுடன் அவற்றிற்கு மரப்பட்டா வாங்கவேண்டும்.

9. மரங்களை வெட்டுவதற்கு முன்னால் தாசில்தாருடைய உத்தரவையாவது, அல்லது டிப்டிதாசில்தாருடைய உத்தரவையாவது பெறவேண்டும். இந்த உத்தரவானது சாதாரணமாகக் கொடுக்கப்படும்.

10. மரங்களைப் பயிர்செய்யக் கிராமபஞ்சாயத்துக்கள் மனுப்போட்டால், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு விதிகளில் அவசியமான மாறுதல்கள் செய்துகொடுக்கப்படும்.

**இந்தியர்களும், கைத்தொழில்களும்.**

லண்டனிலுள்ள கலைஞான சங்கத்தின் கூட்டமொன்று இந்தியா மந்திரியான மிஸ்டர் மான்டேகுவின் அக்கிராசனத்தின்கீழ்க் கூடியது. அக்கூட்டத்தில் வாசிக்கும்படியாக ஸர். வாச்சா, "பருத்தியினையும், நெசவும்" என்ற தலைப்பெயரிட்ட ஒரு வியாசத்தை அனுப்பியிருந்தார். வியாசம் படிக்கப்பட்டதும், அக்கிராசனாதிபதி தமது முடிவுரையில் இந்தியாவின் நெசவுத்தொழிலைப்பற்றிக் குறிப்பிட்ட விஷயங்கள் வருமாறு:—

"இந்தியாவில் துணி நெசவுத்தொழிலுக்கு ஆதரவு அளிக்கவேண்டியது அவசியமென்று நான் இந்தியாவிலிருந்தபோது கண்டுகொண்டேன்; அவ்வாறு செய்யவுங் கூடும். இப்போது இந்தியாவானது தனது தொழில்களை நன்கு அபிவிருத்திசெய்துகொள்ளச் சமயம் வாய்த்திருக்கின்றது. ஏகாதிபத்தியத்திற்கும் அதன் அங்கங்களுக்கும் தேவையான பொருள்களை அவ்வவ்விடத்திலேயே விளைவித்துக்கொள்ளும்படி நாம் பார்க்கவேண்டும். இந்த விஷயமானது யுத்தத்தின் பலனாக நமக்கு அறியக்கிடக்கின்றது."

இவ்வாறு பேசியபிறகு இந்தியாவில் பொது ஜனங்களின் வாழ்க்கை நிலைமையைப்பற்றிக் கூறியதாவது:—

"இந்தியாவில் ஜனஸமூஹ வாழ்க்கையானது மிகவும் கேவலமான ஸ்திதியிலிருக்கின்றது. தொழிலாளர்கள் வாங்கும் சம்பளமோ மிகவும் குறைவு. அக்விலைகளின் ஏற்றம் சிறிது உண்டானாலும், அது அவர்களால் தாங்கக்கூடவில்லை. இவ்வித நிலைமையானது மிகவும் ஆபத்துக்கிடமானதாகும். ஆகவே, புதிய தொழில்கள் ஏற்பட்டால்தான், தொழிலாளரின் வருமானம் உயரக்கூடும். அப்போதுதான் இந்தியரின் நிலைமையும் உயர ஏதுவாகும்."

மேற்குறித்தவாறு இந்தியாமந்திரி குறிப்பிட்டது உண்மையே. இந்தியாவில் இத்தகைய



நிலைமையானது பல வருஷங்களுக்கு முன்பாகவே யிருந்தும், இதை ஒழிக்க என்ன பிரயத்தினங்கள் செய்யப்பட்டனவென்பது புலப்படவில்லை.

**பாலியக்கைதிகள்.**

பாலியக்கைதிகளைச் சீர்திருத்தி அவர்களை முன்னுக்குக் கொண்டுவரும் விஷயமானது கவர்ன்மெண்டாரின் ஆலோசனையிலிருந்துவந்தது. அவ்விஷயமாய் அவர்கள் ஒரு உத்தரவை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் பஞ்சாபில் அனுஷ்டிக்கப்படுவது போலச் சில குறிப்பிட்ட பாலியக்கைதிகளைப் பிறரிடம் வேலைசெய்கின்றதென்ற நிபந்தனையின்பேரில் விடுதலைசெய்யலாமென்று யோசனை சொல்லப்பட்டதென்றும், அம்முறையானது இந்த மாகாணத்திலும் அனுஷ்டிக்கப்படலாமென்று கவர்ன்மெண்டார் கருதுகிறார்களென்றும், ஆதலால் சில நிபந்தனைகளின் மேல் தஞ்சாவூர் சிறைச்சாலையினின்று ஐவர்களை விடுதலை செய்துள்ளார்களென்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

கீழ்க்கண்ட நிபந்தனைகளின்மேல் வாலிபக் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள்.

(1) கைதி விடுதலை செய்யப்பட்டவுடன் தான் எவரிடத்தில் வேலைசெய்ய ஏற்பாடோ அவர்களிடம்போய் தண்டனைகாலம் பூராவும் அவரிடத்திலே வேலைசெய்யவேண்டும்.

(2) கைதியானவன் ஒழுங்காயும் நாணயமாயும் வேலைசெய்யவேண்டும். தினம் எட்டுமணி நேரம் வேலைசெய்தால் போதுமானது. அவர்களிருவருக்குமுள்ள ஏற்பாட்டின்படி கைதிக்குச் சம்பளம் கொடுக்கப்படும்.

(3) தன்னுடைய தண்டனைகாலம் பூராவும் கைதியானவன் வேலைசெய்யாவிட்டாலும், அல்லது சரியானபடி வேலைசெய்யாமல் நிவிருத்திக்கப்பட்டாலும் தண்டனையில் பாக்கியிருக்கும் காலத்துக்குச் சிறைவாசம் செய்யவேண்டும்.

மேற்குறித்த விஷயமாய்க் கவர்ன்மெண்டார் முயற்சிசெய்தது பாராட்டத்தக்கதே. ஆனால், இவ்விஷயமானது கொஞ்சம் தாராள நோக்கத்துடன் செய்யப்பட்டிருந்தால், பொது ஜனங்களுக்குள் மிகுந்த திருப்தி ஏற்படுவதுடன், பாலியக்குற்றவாளிகள் நன்கு சீர்திருந்தப்பெற்று நற்கதியடையக்கூடும். இந்த நன்மைகள் ஒரு குறிப்பிட்ட வாலிபக்கைதிகளுக்கே யென்றிராமல், வாலிபக் குற்றவாளிகளாயுள்ள எல்லோருக்கும் பயன்படக்கூடியதாயிருக்கவேண்டும். மேலும், கைதிகளினுடைய நடவடிக்கை சீர்திருத்தம்பெறும் விஷயமானது அவர்கள் அமரும் யஜமானர்களின் நடவடிக்கைகளைப் பொருந்தியதாயிருக்கும். ஆதலால், இவ்விஷயங்களைக் கவர்ன்மெண்டார் நன்கு யோசித்துத் தக்கது செய்யவேண்டுகிறோம்.

**குறுகிய நோக்கம்.**

சமூஹ அபிவிருத்திக்கும் தேச முற்போக்குக்கும் கல்வியே அடிப்படையாகவுள்ளது. அதுவே நாம் நற்கதியடைவதற்கும், தேசநன்மைக்கான பல காரியங்களைச் செய்வதற்கும் காரணபூதமாயிருக்கின்றதென்பது வெளிப்படை. இவ்விஷயங்களை யனுசரித்தே மைசூர்போன்ற சுதேச சம்ஸ்தானங்கள் தங்கள் எல்லைக்குள் ஆரம்பக்கல்வியை இலவசமாயும் கட்டாயமாயும் செய்துள்ளன. அப்படியிருக்க, நமது மாகாண கவர்ன்மெண்டார் இவ்விஷயமாய்க் குறுகிய நோக்கத்துடனிருக்கக் காரணம் விளங்கவில்லை. கும்பகோணம் முனிஸிபல் ஸபையின் ஆதரவின்கீழ்ச் சில ஆரம்பப் பாடசாலைகள் நடத்தப்பட்டுவருகின்றன. அங்குப் படிக்கும் குழந்தைகளுக்குச் சம்பளம் கிடையாது. அந்நகரைச்சேர்ந்த கோட்டையூரில் இன்னொரு பாடசாலையை ஏற்படுத்தி, அதில் பிள்ளைகளுக்குச் சம்பளமில்லாமலேயே போதிப்பதென்று அச்சபையார் கருதி, மாகாண கவர்ன்மெண்டுக்கு எழுதினார்கள். பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வசூலிக்காமலிருந்தால் அதை அங்கீகரிக்க இயலாதென்று

கவர்ன்மெண்டாரால் பதில் சொல்லப்பட்டது. மீண்டும் அவ்விஷயமாய்க் கடிதப்போக்குவரத்து செய்ததில், பாடசாலைக்காகப் பணவுதவியை நாடாதிருக்கும்பக்ஷத்தில் அது அங்கீகரிக்கப்படுமென்று கவர்ன்மெண்டார் உரைத்தார்கள். இதன்பிறகே பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பக்கல்விவிஷயமாய் மாகாண கவர்ன்மெண்டாருக்கு இத்தகைய குறுகிய நோக்கமேன்?

**கங்காணிகளின் கொடுமை.**

இந்தியக்கூலிகள் இலங்கை முதலான இடங்களுக்கு வேலைசெய்வதற்காகக் கங்காணிகளால் அழைத்துக்கொண்டு போகப்படுகிறார்கள். இவர்கள் அங்குப்படும் சொல்லொணாக்கஷ்டங்களை நமது ஜனத்தலைவர்கள் நெடுங்காலமாகக் கூக்குரலிட்டும் பயனற்றதாயிருக்கின்றது. இக்கூலிகள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்குக் கங்காணிகளே காரணமென்று சொல்லப்படுகின்றது. இந்தக் கங்காணிகள் ஊரூராய்த்திரிந்து ஏழைஜனங்களிடத்தில் பொய்யும் புரளியும் பேசி அவர்களைக் கொண்டுவந்துவிடுகின்றனர்; பிறகு அவர்களைப் பல கஷ்டங்களுக்குள்ளாகும்படி செய்கின்றனர். இலங்கையில் ஸமீபத்தில் நிகழ்ந்த ஒருசம்பவத்தை இதற்கு உதாரணமாய்க் கூறலாம். அந்தவிவரம் இலங்கை "ஜனமித்திர"னில் பின்வருமாறு காணப்படுகின்றது.

"மூன்றுஆள் மூன்றுவருஷம் பாடுபட்டு வேலைசெய்திருக்கிறோம். ஒருவாவும் கிடையாது. இங்கேயுள்ள......ஹெட் கங்காணி செய்கிற ஒவ்வொரு அநியாயத்தையும் எழுதித் தெரிவிக்கமுடியாது. சகலகாரியங்களையும் சமுகம் நேரில்வந்து தெரிவிக்கிறோம். இப்போது 800 ரூபாய்கடன் சொல்லுகிறான். இந்தக் கங்காணி மாதம் ஒருமுறை கட்டிவைத்து அடிக்கிறான். மேலான இடத்தில் வந்து தெரிவிக்க வெளியேபோகாமல் காவல்."

மேற்குறித்த விஷயமானது கூலிகள் இருவரால் பிரக்டர் ஒருவருக்கு தங்கள் கஷ்டவிமோசனத்தின் பொருட்டு எழுதிய கடிதத்திலுள்ளது. இத்தகைய சம்பவங்கள் மிகுந்த கவலைக்கிடமானவையென்பதில் சந்தேகமில்லை. நமது ஜனத்தலைவர்கள் இவற்றைக் கவனிக்க வேண்டும்.

**இவ்வார்த்தைகள் கவனிக்கப்படுமா?**

இந்தியர்களுக்கு இராணுவத்தில் உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்படவேண்டுமென்று காங்கிரஸ் மகாசபைசென்ற 33-வருஷங்களாகக் கேட்டு வருகின்றது. இவ்வேண்டுகோள் எவ்வளவுதூரம் ஆதரிக்கப்பட்டதென்ற விஷயம் நம்மவரறிந்ததே. நிற்க, பிரிட்டிஷ் இராணுவத்தைச் சேர்ந்த ஸர் ஓமூர் க்ரிக் என்பவர், இந்தியர்களுக்கு இராணுவத்தில் கமிஷன்கள் கொடுக்க வேண்டுமென்னும் விஷயமாய் இங்கிலாந்தில் கூடிய ஒரு கூட்டத்தில் சொல்லியிருப்பது இங்குக் குறிப்பிடத் தக்கது: இவர் சில வருஷங்களுக்குமுன் இந்தியாவில் சேனாதிபதியாயிருந்தார். ஆகவே, இவர் வார்த்தைகள் மதிக்கத்தக்கன.

"இந்தியர்களுள் அநேகர் மேதாவிகளாயும், பலபாஷைகள் பேசுபவர்களாயுமிருக்கின்றனர். இவர்கள் பிரெஞ்சு யுத்தகளத்தில் மிகுந்த தீரத்துடன் போர்புரிந்திருக்கின்றனர். இத்தகையோரை இனிமேனும் கௌரவிக்காவிடின், அதிருப்தி எங்கும் பரவுமென்பதில் ஐயமில்லை."

இவ்வார்த்தைகள் இந்தியர்களின் திறமையை நன்கு விளக்குகின்றதென்பதில் கொஞ்சமும் ஐயமில்லை. இவ்வார்த்தைகள் கவனிக்கப்படுமா?

**ஓர் புதிய உத்தரவு.**

ஸமீபத்தில் வங்காள மாகாணத்துக் கல்வி இலாகாத்தலைவர் ஓர் புதிய உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றார். பிரத்தியேகப் பள்ளிக்கூடங்கள் கவர்ன்மெண்டு கிராண்டை விரும்புமானால், அவை தமது நிருவாகக்கமிடியின் தலைவராக ஒரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தரைப் பெற்றிருக்கவேண்டுமாம்.



ஜில்லா போர்டுகளுக்கும் தாலூக்கா போர்டுகளுக்கும் உத்தியோகஸ்தரல்லாத தலைவர்களை நியமிக்கும் இக்காலத்தில் இத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது மிகவும் விந்தையே. இவ்விதச் செயல்கள் பொதுஜனங்களுக்குப் பலவித கஷ்டங்களையும் இடையூறுகளையும் உண்டுபண்ணுமென்பதை இக்கல்வி இலாகாத் தலைவர் அறிவாராக.

**சென்ற வருஷத்து ஏற்றுமதி இறக்குமதி.**

சென்ற மார்ச்சுமாதத்துடன் முடிவான வருஷத்தில் இந்தியாவிலிருந்து இதர தேசங்களுக்கு ஏற்றுமதியான சாமான்களின் மதிப்பு ரூ. 223 கோடியாகும். இத்தொகையில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு 120 கோடிரூபாய் பெறுமானமுள்ள சாமான்களும், இதரதேசங்களுக்கு மீதியான 103 கோடிரூபாய் பெறுமானமுள்ள சாமான்களும் போயிருக்கின்றன. பிரஸ்தாப வருஷத்தில் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவில் இறக்குமதியான சாமான்களின் மொத்த மதிப்பு 150 கோடிரூபாய். இதில் 82 கோடி ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் கிரேட்பிரட்டனிலிருந்து வந்தவை. மிகுதி ஜப்பான், அமெரிக்கா முதலான தேசங்களிலிருந்து வந்திருக்கின்றன. முக்கியமாக கிரேட்பிரட்டனிலிருந்தே அதிகமான சாமான்கள் நம் தேசத்துக்கு வருகின்றன.

---

## Progress of Education in the Madras Presidency.

By Mr. N. R. Kadari Rao, M.A.; L.T.,

## சென்னை இராஜதானியில் கல்வியபிவிருத்தி.

சென்னை இராஜதானியில் 1911-12-ம் வருஷம் முதல் 1916-17-ம் வருஷம் வரையில் கல்வியானது எவ்வளவுதூரம் அபிவிருத்திசெய்யப்பட்டுள்ளதென்பதைப்பற்றியும்; அதன் குணாகுணங்களைப்பற்றியும் இவ்வியாசத்தில் கவனிப்போம்.

இப்போது நடந்துவரும் யுத்தத்தினால் கல்வியபிவிருத்திக்குச் சில பாதகங்களும், சாதகங்களும் ஏற்பட்டுள்ளன. ஒரு தேசத்தில் கல்வியறிவில்லாதவர்கள் அதிகமிருப்பின், அதுவே அத்தேசத்திற்குப் பலவிதத் தீங்குகளை உண்டுபண்ணுமென்பது இந்த யுத்தத்தினால் நன்கு புலனாகின்றது. இக்காரணம்பற்றியே கவர்ன்மெண்டாரும் கல்வியபிவிருத்தி விஷயத்தில் மிகுந்த ஊக்கங்காட்டிவருகிறார்கள். எனினும், யுத்தவிஷயமாய்ப் பணநெருக்கடியை இங்குக் கவனிப்பது அவசியமாகும்.

இவ்விஷயங்களை நாம் கவனித்துக்கொண்டால், சென்ற ஐந்துவருஷகாலத்தின் கல்வியபிவிருத்தியை ஒருவாறு நிதானிக்கலாம்.

சென்னை இராஜதானியின் விஸ்தீர்ணம் 1,42,330 சதுரமைல். இதில் இருக்கும் பட்டணங்கள் 279; கிராமங்கள் 53,835; ஆகமொத்தம் 54,114. இதன்ஜனத்தொகை, ஆண் 2,03,82,955; பெண் 2,10,22,449; ஆகமொத்தம் 4,14,05,404. இதில் பள்ளிக்கூடங்களில் வாசிப்பவர்கள் ஆண் 13,35,123; பெண் 3,25,889; ஆகமொத்தம் 16,61,012. ஆண்களின் கணக்கையும், பெண்களின் கணக்கையும் சேர்த்துப்பார்த்தால் நூற்றுக்கு நால்வரே பள்ளிக்கூடத்தில் வாசிப்பதாகத் தெரியவரும். ஐந்துவருஷகாலத்துக்குமுன்னால், அதாவது 1911-12ம் வருஷத்தில் நூற்றுக்கு மூன்றுபேர்களே பள்ளிக்கூடத்தில் வாசித்திருந்தார்கள். ஆனால், நாகரிகம் முதிர்ந்த இங்கிலாந்து அமெரிக்கா ஜப்பான் முதலான நாடுகளிலோ நூற்றுக்குப் பதினைந்துபேர்களுக்குக் குறைச்சலில்லாமல் பள்ளிக்கூடங்களில் வாசிக்கிறார்கள். ஆதலால், இவ்விஷயத்தில் நாம் அபிவிருத்தியடைய வேண்டிய அவசியமிருக்கின்றது.

இரண்டாவது:இவ்விராஜதானியில் இருக்கும் பள்ளிக்கூடங்கள் 36,045. இவற்றுள் உயர்தரக்கலாசாலைகள் (Colleges) 48; ஹை ஸ்கூல்கள் 345; மூன்றுவது பாரத்துக்குமேல் ஆறுவது பாரத்துக்குட்பட்டவகுப்புக்களையுடைய பள்ளிக்கூடங்கள் 104; எலிமெண்டரி (அதாவது பிரைமரி)பள்ளிக்கூடங்கள் 30,573. வேறுசில 270. இவைகளுள், காலேஜ்களில் வாசிப்பவர்கள் 9,565. ஸெகண்டரி பள்ளிக்கூடங்களில் வாசிப்பவர்கள் 1,49,892. பிரைமரிபள்ளிக்கூடங்களில் 13,64,821 பேர்வாசிப்பவர்கள். மற்றபள்ளிக்கூடங்களில் படிப்பவர்கள் 12,761.

மேற்சொன்னவைகளில் நாம் கவனிக்க வேண்டிய விஷயமென்னவெனில்:—பிரைமரி பள்ளிக்கூடங்களில் படிப்பவர்களில் பத்தில் ஒருவர்தான் ஹை ஸ்கூல்களில் வாசிக்கிறார். இந்த ஹைஸ்கூல்களில் வாசிப்பவர்களுள் பதினேந்தில் ஒருவர்கூட ஸர்வகலாசாலைகளுக்கு வருவதில்லை. இதனுல்தான் நான்கு கோடிக்குமேற்பட்ட ஜனத்தொகையுள்ள இவ்விராஜதானியில் பதினுயிரம்பேர்கூட ஸர்வகலாசாலைகளில் படிக்கவில்லை. இது மிகவும் விசனிக்கத்தக்க விஷயமே. ஏனெனில், இதே ஜனத்தொகையுள்ள இங்கிலாந்தில் முப்பத்தையாயிரம்பேர் காலெஜ்களில் வாசிக்கிறார்கள். வங்காளத்திலும் இதேஜனத்தொகையாயிருந்தாலும், பதினெண்ணுயிரம்பேர் காலேஜ்களில் வாசிக்கிறார்கள். இப்படியிருக்க, நமது இராஜதானியில்மாத்திரம் 9,565 பேர்களே காலெஜ்களில் படிப்பது மிகவும் மனக்குறைவாயிருக்கின்றது.

தவிரவும், இவ்வளவு விஸ்தீர்ணமுள்ள இந்த ராஜதானிக்கு 36,045 பள்ளிக்கூடங்கள் தாம் இருக்கின்றன. அதாவது: நான்கு சதுரமைலுக்கு ஒரு பள்ளிக்கூடம் வீதம் இருக்கின்றது. இப்பள்ளிக்கூடங்களில் வாசிப்பவர்கள் பெரும்பாலும் சிறுவர்களும், சிறுமிகளுமே. ஆதலால், இவர்கள் தங்கள் வீடுகளிலிருந்து பள்ளிக்கூடத்துக்குப் போவதென்றால் ஒரு மைலுக்குமேல் நடக்கமுடியாது. ஆகவே, இந்த இராஜதானியில் கல்வி நன்கு பரவ வேண்டுமாயின், ஒவ்வொரு சதுரமைலுக்கும் ஒரு பள்ளிக்கூடமாவது ஸ்தாபிக்கப்படவேண்டும். அதாவது:இப்போது இருக்கும் பள்ளிக்கூடங்களைப்போல் நான்குமடங்கு அதிகம் வேண்டும்.

இதுசம்பந்தமாய் நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று உண்டு: 1912-ம் வருஷத்தில் இவ்விராஜதானியில் 31,052 பள்ளிக்கூடங்கள் இருந்தன. இந்த ஐந்து வருஷகாலத்தில் முன்னைவிட 4,993 பள்ளிக்கூடங்கள்தாம் அதிகப்பட்டிருக்கின்றன. அதாவது: ஏறக்குறைய வருஷம் ஒன்றுக்கு ஆயிரம் பள்ளிக்கூடங்கள் வீதம் அதிகமேற்பட்டிருக்கின்றது. இவ்விதமே அபிவிருத்தியாய்க்கொண்டிருந்தால், நாம் முன்கூறியபடி ஒருசதுரமைலுக்கு ஒரு பள்ளிக்கூடம் வீதம் ஏற்பட இன்னும் 106 வருஷங்கள் செல்லும்.

இதில் மற்றொருவிஷயமும் கவனிக்கத்தக்கது. 1917-ம் வருஷத்தில் இவ்விராஜதானியில் இருந்த உபாத்தியாயர்கள் 61,806. அதாவது சராசரி ஒவ்வொரு உபாத்தியாயரிடத்திலும் 25 பையன்கள் படித்துவந்தார்கள். கீழ்தரப்படிப்பையாவது எல்லோருக்கும் அவசியமாய்க் கற்றுக்கொடுக்கவேண்டுமென்றிருந்தால், நமக்கு 2,48,432 உபாத்தியாயர்கள் தேவையாயிருக்கும். இவ்விதம் செய்வதில் நமக்கு என்ன நன்மையெனின், இப்போது மெட்ரிகுலேஷன் அல்லது இன்டர்மீடியேட் பரீக்ஷைகளில் தேறுதலவர்களாய் இன்னதுசெய்வதென்று தெரியாமல் அலைந்துகொண்டிருப்பவர்களுக்கு இது ஒரு நல்ல ஜீவனத்தைக் கொடுப்பதுமல்லாமல், நமது தேசத்துக்கும் பலவித நன்மைகளை விளைக்குமென்பது திண்ணம்.

இந்தியாவில் கைத்தொழில் முதலியன சொல்லிக்கொடுக்கும் பள்ளிக்கூடங்கள் மிகவும் குறைச்சலென்ற விஷயம் பலருமறிந்ததே. கவர்ன்மெண்டாரும் பொதுஜனங்களும் சேர்ந்து தொழிற்சாலைகளை ஆதரிக்கவேண்டுமென்று அடிக்கடி சொல்லப்படுகிறது. ஆனால், உண்மையான விஷயமென்னவெனில், நமது தொழிற்சாலைகள் குறைந்துகொண்டே வருகின்றன. அவற்றில் படிக்கும் பிள்ளைகளும் குறைந்துகொண்டேவருகிறார்கள். இவ்விஷயம் கீழ்க்கண்ட அட்டவணையில் நன்கு புலப்படும்.

| | 1911—1912 | | 1916—1917 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | பையன்கள். | எண்ணிக்கை. | பையன்கள். |
| ஸ்பெஷல் பள்ளிக்கூடங்கள்; ஐரோப்பியரல்லாதவர்களுக்கு ... ... | 49 | 2,278 | 41 | 2,131 |
| தொழிற்சாலைகள்; ஐரோப்பியரல்லாதவர்களுக்கு ... ... | 42 | 1,965 | 39 | 1,867 |



இவ்விராஜதானியில் சராசரி ஒவ்வொரு பிள்ளையும் இரண்டுவருஷம் இரண்டுமாதந்தான் பள்ளிக்கூடத்தில் படிக்கிறுனெனத் தெரிகின்றது. இது மிகவும் குறைவானகாலமே. ஒவ்வொரு பையனும் குறைந்தது நான்கு வருஷமாவது பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டும்.

பெண்கல்வி சம்பந்தமாய்ச் சில விஷயங்களை இங்குக் கவனிப்போம்: பெண்பிள்ளைகளில் பலரும் சிறுவயதிலேயே பள்ளிக்கூடத்தை விட்டுவிடுகிறார்கள். இவ்விதம் செய்வதானது அவர்களின் கல்வியபிவிருத்திக்கு ஒரு பெருந்தடையாகும். இவ்வழக்கத்தை ஒழிக்கச் சில புதிய முறைகளை நாம் அனுஷ்டிக்கவேண்டும். பெரியவகுப்பில் படிக்கும் பிள்ளைகளுக்குப் பலவித ஸ்காலர்ஷிப்புகள் (உபகாரச்சம்பளம்) கொடுத்து உதவவேண்டும். தவிரவும், இவர்கள் வாசிக்கும் ஹை ஸ்கூல்களில் ஸங்கீதம் முதலியன சொல்லிக்கொடுக்க ஏற்பாடுகளும் செய்யப்படவேண்டும். பெண்பிள்ளைகளின் ஹை ஸ்கூல்களில் ஆண் உபாத்தியாயர்கள் நியமிக்கப்படுவதனுல், அங்குப் பெண்கள் படிப்பதற்குஸங்கோசப்படுகிறார்கள். ஆதலால், பெண்களின் ஹை ஸ்கூல்களில் பெண்போதகாசிரியர்களே நியமிக்கப்படுவார்களானுல், இக்குறை நீங்குமென்பதில் சந்தேகமில்லை.

இனி, கல்விசம்பந்தமாய்ச் செய்யப்பட்டு வரும் சில செலவுகளை இங்குக் கவனிப்போம். இவ்விராஜதானியில்கல்விக்காகச்செலவழிக்கப்பட்டிருக்கும் மொத்தச்செலவு 2,16,87,896. விவரம் வருமாறு:—

| பள்ளிக்கூடங்களின் வகை. | செலவு ரூபாய். |
|---|---|
| உயர்தரக்கலாசாலைகள் F.A., B.A. முதலியன ... ... | 14,04,875 |
| வைத்தியம், சட்டம் முதலியன ... ... ... | 6,01,662 |
| ஹை ஸ்கூல்கள் ... ... ... | 47,20,243 |
| தொழில் சொல்லிக்கொடுக்கும் பள்ளிக்கூடங்கள் ... ... | 16,38,277 |
| எலிமெண்டரி (பிரைமரி) பள்ளிக்கூடங்கள். ... ... | 70,13,439 |
| மொத்தம் ... | 153,78,496 |
| இன்ஸ்பெக்ஷன், ஸ்காலர்ஷிப், கட்டடங்கள் வகையரா ... | 63,09,400 |
| ஆகமொத்தம் ... | 216,87,896 |

மேற்குறித்த கணக்கை ஆலோசித்துப் பார்க்கின், இவ்விராஜதானியில் ஜனத்தொகையில் ஒவ்வொருவருக்கும் சராசரியில் எட்டு அணு நான்குபைஸாதான் கல்விக்காகச் செலவழிக்கப்படுகின்றதென்று தெரிகிறது. இச்சிறுதொகையிலும் கவர்ன்மெண்டார் கொடுப்பது இரண்டு அணு பதினொன்றரைபைஸாவே. நாகரிகம் மிகுந்துள்ள இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி முதலான தேசங்களிலோ, ஜனத்தொகையில் சராசரியில் ஒவ்வொருவருக்கும் குறைந்தது பதினைந்துரூபாய் கல்விக்காகச் செலவுசெய்யப்படுகின்றது. அப்படியிருக்க, நமது தேசத்தில்மாத்திரம் இவ்வளவு குறைவாகச் செலவுசெய்யக் காரணமென்ன?

இதுசம்பந்தமாய் இன்னொருவிஷயத்தையும் நாம் கவனிக்கவேண்டும். இவ்விராஜதானியில் மொத்தம் கல்விகற்பவர்களுள் ஐரோப்பியர் 8415. மற்றவர்கள் ஹிந்துக்களும், முகம்மதியர்களும், இந்தியக்கிறிஸ்தவர்களுமாம். கவர்ன்மெண்டார் ஐரோப்பியர்களுக்கு மாத்திரம் ஒவ்வொருமாணுக்கனுக்கும் 69 ரூபாய் 12 அணு வீதம் பணம் செலவு செய்கிறார்கள். மற்றவர்களிலோ ஒவ்வொரு மாணுக்கனுக்கும் 4 ரூபாய் 4 அணுவீதந்தானே செலவுசெய்யப்படுகின்றது. இவ்விஷயம் எவ்வளவுதூரம் நியாயமென்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டும்.

இவ்விராஜதானியில் உபாத்தியார்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப்படுகின்றதென்ற விஷயமும் கவனிக்கத்தக்கது. பிரைமரி பள்ளிக்கூடங்களிலிருக்கும் உபாத்தியாயர்களுக்கு மாதம் 1-க்கு சராசரியில் ரூபாய்எட்டு கொடுக்கப்படுகின்றது. ஆனால், ஐரோப்பியர் படிக்கும் பள்ளிக்கூடங்களில் பிரைமரி உபாத்தியாயர்களுக்கு நாற்பத்தாறுரூபாய் சம்பளமாம். ஸெகண்டரி பள்ளிக்கூடங்களிலிருக்கும் உபாத்தியாயர்களுக்குச் சராசரியில் 46 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. ஆனால், ஐரோப்பிய பள்ளிக்கூடங்களிலோ உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளமானது ரூ.76. காலெஜ்



வகுப்புக்களில் சாதாரணமாய் ஒரு உபாத்தியாயருக்கு 146 ரூபாய்தான் சம்பளம் கிடைக்கிறது. இவ்விஷயமாய் யோசித்துப்பார்க்கின், உபாத்தியாயர்களின் சம்பளமானது இன்னும் பன்மடங்கு உயர்த்தப்படவேண்டுமென்பது நன்கு விளங்கும். இக்காலத்தில் சாதாரணக் கூலி நாளொன்றுக்கு 4 அணுகூலிக்கு வேலை செய்ய சம்மதப்படுவதில்லை. இப்படியிருக்க, உபாத்தியாயர்களுக்கு மாதம் 8 ரூபாய் சம்பளம் கொடுப்பது நியாயமாகுமோ?

இப்போது கொஞ்சகாலமாக உபாத்தியாயர்களின் நன்மையை உத்தேசித்து, "பிராவிடெண்ட் பண்டு" என்பதொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இதற்காக ஒவ்வொரு உபாத்தியாயரும் தந்தம் சம்பளத்தில் ஒரு அணு வீதம் கொடுத்தால், அந்தப் பள்ளிக்கூட மானேஜரும் கவர்ன்மெண்டாரும் சேர்ந்து ஒருஅணு கொடுப்பார்கள். இவ்விதம் சேரும் பணத்தைப் பள்ளிக்கூட மானேஜர் கால்வட்டிக்குப்போட்டு வைத்திருப்பார். உபாத்தியாயர் பள்ளிக்கூடத்தை விட்டுப்போகும்போது இவ்வாறு சேர்ந்த அவருடைய பணமானது திருப்பிக்கொடுத்துவிடப்படும். இப்படிச்செய்வதன் உத்தேசமென்னவெனின், விருத்தாப்பியதசையில் ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் தேவையான பணம் கொஞ்சம் சேர்ந்திருக்கும். அதைக்கொண்டு அவர் ஜீவிக்கலாமென்பதேயாம்.

ஆனால், இவ்விஷயத்தைக் கவர்ன்மெண்டார் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் கட்டாயப்படுத்தவில்லை. இதனால், பள்ளிக்கூடங்கள் பலவற்றிலும் பிராவிடெண்ட் பண்டு ஏற்படுத்தப்படவில்லை. இனியேனும் கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தை நன்கு யோசித்துத் தக்கது செய்வார்களாயின், மிகுந்த நன்மை ஏற்படுமென்பதில் ஐயமில்லை.

இவ்விராஜதானியில் கண்தெரியாதவர்களும், காதுகேட்காதவர்களும், பேசமுடியாதஊமைகளாயுள்ளவர்களும் அநேகர் இருக்கின்றனர். 1911-ம் வருஷத்துக்கணக்குப்படி 66,000 பேர்களுக்குக்குறையாமல் இத்தகையவர்கள் இருக்கின்றார்களெனத் தெரிகின்றது. இவர்களின் முன்னேற்றத்திற்காகப் பல பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தவேண்டியது நமது கடமையாகும். இப்படியிருக்க இவர்களுக்காக 6 பள்ளிக்கூடங்கள்தாம் இவ்விராஜதானியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் 265 பேர்களே கல்விபயில்வதாகத்தெரிகின்றது. நிர்க்கதியாயிருக்கும் இவர்களுக்கு இன்னும் அதிகமான சௌகரியங்களைச்செய்து கொடுக்கவேண்டுமென்பது நாம்சொல்லாமலே விளங்கும்.

உயர்தரப் பரீக்ஷைகளில் தேறும் மாணவர்கள் பற்பல நோய்களாற் பிடிக்கப்படுகிறார்களென்ற விஷயம் வெளிப்படை. ஆகவே, பள்ளிக்கூடங்களில் வைத்தியர்களை வைத்து ஒவ்வொரு பிள்ளையின் தேகத்தையும் பரீக்ஷித்துத் தக்க சிகித்ஸைகளைச் செய்யவேண்டியது அவசியமாகும். இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளில் இவ்விதமே நடந்துவருகின்றது. ஆகவே, இந்தியாவிலும் இப்படிச் செய்யப்படவேண்டுமென்பதை நாம் சொல்லத் தேவையில்லை.

இந்த வியாசத்தில் கண்டுள்ள பற்பல விஷயங்களையும் நாம் ஆழ்ந்துகவனித்து, இனி கல்வியபிவிருத்திவிஷயமாய் உழைக்கவேண்டியது நமது கடமையாகும்.

என். ஆர். தேசாயிராவ், எம். ஏ; எல். டி.


## குகப்பெருமாள்.

இது ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் உள்ள அயோத்தியா காண்டத்தில் அடங்கிய 'கங்கைப்படலம்', குகப்படலம் என்னும் பாகங்களிற் பொருந்திய குகன் என்னும் வேடர் தலைவனது இனிய சரித்திரம்; சிறுவர் சிறுமியர் ஆதி எல்லோரும் படித்து சந்தோஷமடையும்படி இனிய எளிய வசன நடையில் வேலூர் ஊர்ஹீஸ் காலெஜ் பிரதம தமிழ்ப் பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால் எழுதப்பட்டது.

விலை அணு 3.
தபாற் செலவு வேறு.
வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
வேலூர், (தென்னிந்தியா.)

# Teacher.

By Pandit P. K. Sreenivasachariar.

## ஆசிரியர்.

கல்வியே இம்மை மறுமை வீடு என்னும் மூன்றின் பயனையும் அளித்தலால், உலகம் அக்கல்வியைப்பற்றியே இனிது நடைபெற்றுக் கடைத்தேறவேண்டியதாயிருக்கிறது. இராஜாங்கமாயினுஞ்சரி, குடும்பவாழ்க்கையாயினுஞ்சரி, வியாபாரமாயினும் சரி, மற்றும் எதுவாயினும் சரி, எண் எழுத்து என்னும் கண்களில்லாதவர்களால் மேம்பாடுறாது. ஆதலின், கல்விபயிற்றுகின்ற ஆசிரியர்களின் பெருமை உரைக்கவொண்ணுமோ? ஆசிரியர் நல்லிலக்கணம் அமையப்பெறாரேல், அவர்களின்கீழ்க் கல்விபயிலும் மாணவர்களும் கீழ்மையுறுவர்; அதனால் மேற்கூறிய நற்பயனுக்கு மாறுபாடே நிகழ்வுறும். ஆசிரியர்கள் கலைகள் பலபயின்ற தெளிவுடையவர்களாயில்லாவிட்டால், அவர்கள், தம்கீழ்க்கற்கும் மாணவர்களை எங்ஙனம் தெளிவுறச்செய்யக்கூடும்? இவர்கள், "குருடனுக்குக் குருடன் கோல் கொடுத்துவழி காட்டிவரும் கொள்கைதானே" என்ற முதுமொழிக்கு இலக்காவரன்றோ? ஆசிரியர்கள் புலமைத்திறமுடையவர்களாயிருக்கவேண்டியதோடு, கல்வியை இதவசனங்களால் அருண்முகங்காட்டிப் பற்பல உதாரணங்களோடு மாணவர்கள்தன்மையை உணர்ந்து, சொல்வன்மையுறப் போதிக்கும் ஆற்றலை முக்கியமாக உடையவர்களாயுமிருத்தல் வேண்டும்.

நம்நாட்டில், முற்காலத்தில், உபாத்தியாயராக இருத்தலை அவரவர்கள் உண்மையாகப் போற்றி, அத்தொழிலையே பெருமையாக மதித்து மேற்கொண்டிருந்தனர். ஜனங்களும் அவர்களைத் தெய்வமென மதித்து, தம் மக்களை அவர்களிடத்தில் மனப்பூர்வமாக ஒப்பித்து, உபாத்தியாயர்கள் கடைத்தேற்றுவார்களென்று, நம்பிக்கையோடும் எண்ணினர். ஆசிரியர்களை வழிபடும்படி தம் மக்களை ஏவினர். அங்ஙனமே மக்களால் ஆசிரியர்கள் போற்றப்பட்டனர். அரசர்களும், பிரபுக்களுங்கூட ஆசிரியர்களுடைய நிலைமையைப் பாராட்டினர்.

அதற்கேற்றவாறு, ஆசிரியர்களும் சகல நல்ல லக்ஷணங்களோடும் பொருந்தியிருந்தார்களென்று சரித்திரங்களால் அறிகிறோம். இக்காலத்து ஜனங்களோ ஆசிரியர்களை நன்கு மதிப்பதில்லை. ஆசிரியர்களிற் சிலரும் பொருளே தாங்கள் பெறத்தக்க பேறென்று, அதனையே முக்கியமாகக் குறிக்கொண்டு, கல்வி புகட்டுதல் லோகோபகாரமான காரியமென்ற பரந்த நினைவை மறந்து, கூலிக்கே வேலைசெய்கிறார்கள். அதனாலேயே, நம் தேசம் கல்வியில் இப்போது பரிபூர்ணதசையை அடையாமல், குறைவுற்று நிற்கின்றது என்பர் அறிஞர். "தடியெடுத்தோர்களெல்லாம் வேட்டைக்காரர் ஆகமாட்டார்கள்." புலவரெல்லாம் புலவராகமாட்டார். குறுகிய நோக்கமில்லாத கம்பீரமான மனோபாவம் ஆசிரியர்களுக்கு இருத்தல் வேண்டும். ஆதலால், அவர்கள் உயர்குடியிற் பிறந்த உத்தமர்களாயிருத்தல்வேண்டும். அவர்கள் தம்மிடம் கல்விபயிலும் பிள்ளைகளைத் தம் மக்களெனவே அன்புகூர்ந்து நோக்கி, பரம கிருபையோடு போதித்தால்தான், அக்கல்வி மாணவர்களுக்கு இனிது சித்திக்கும். மாணவர்களும் ஆசிரியரை இறைவனென்று மதித்துப் போற்றினால்தான் கல்வியை இனிதின் ஏற்று, நற்குண நல்லொழுக்கங்களால் சான்றோராவர். ஆசிரியர்கள் இங்ஙனம் குணமேம்பாடும் அன்பு அருள் ஆதிய குணமேம்பாடும் உடையவர்களாயிருத்தலன்றியும், சிறந்த தெய்வபக்தியுடைய ஆஸ்திகர்களாயும் இருத்தல்வேண்டும். பெரும்பாலும் உலகத்தில் அவரவர்கள் வாம் புகடாமல் நற்குண நல்லொழுக்கங்களோடு அமைந்திருப்பது தெய்வ பயத்தினாலும், தெய்வ பக்தியினாலும் என்பதை மறுக்கவொண்ணுமோ? ஆசிரியர்களின் தெய்வபக்தியைக் கண்டு மாணாக்கர்களும் அத்தகையராவார்கள்.

மாணாக்கர்கள் ஆசிரியர்களிடம் விருப்பங்கொள்ளுவதற்கு அவர்களது கல்வியும், கல்வி பயிற்றும் திறமுமே, காரணமாகமாட்டா; மற்றும், பல விசேஷச் சிறப்புக்களும் காரணமாகும்.

இக்காலத்தில் எந்தத் துறையிலும் இறங்குதற்கு யோக்கியதையில்லாத பலர் கீழ்தரக் கல்விச் சாலைகளில் உபாத்தியாயர்களாக அமர்ந்திருத்தலால், கல்வி மேன்மையுற்றுச் சிறந்தோங்கவில்லையென்போம். பல பள்ளிக்கூடங்களில், தம் தாய்மொழியையே பிழையற எழுதப் பேசத் தெரியாதவர்களும், ஆத்திசூடி முதலிய நூல்களைக்கூடப் படித்தறியாதவர்களும், இருக்கின்றார்களென்று துணிவாய்ச் சொல்வோம்.

பல பள்ளிக்கூடங்களில் ஒற்றைக்கண் குருடர்களும், விகாரமுகமுடையவர்களும், கத்திப் பேசுபவர்களும், முடவர்களும், கூனர்களும், சக்தியற்றவர்களும், பெருவியாதி பிடித்தவர்களும் கோபமே உருவெடுத்துவந்தாற்போன்றவர்களும், தயை தாக்ஷிணியமில்லாதவர்களும், தம்மைக் கேவலரென்று நினைத்துச் சிறுமைப்படுத்திச் சொல்லிக்கொள்பவர்களும், "உபாத்தியாயர் பிழைப்பும் ஒரு பிழைப்பா?" என்று அதனை வெறுத்துப் பேசுகின்றவர்களும், பிச்சையெடுத்தல் முதலிய ஈனகாரியங்களைக் கல்விச்சாலை நேரந்தவிர மற்றைப்பொழுதிற் செய்வோர்களும், உள்ளும் புறமும் அசுத்தமாயிருப்போர்களும், இன்னோரன்ன பல அவலக்ஷணமுடையவர்களும் இருக்கிறார்களென்பதை வெளியிடாதிருக்க முடியவில்லை. உபாத்தியாயர்கள் தக்க பொருள் வருவாய், பொதுஜன நன்கு மதிப்பு, ராஜாங்கத்தின் ஆதரவு முதலியவற்றால் உள்ளபடி சௌகரியமும், பெருமையும் பெற்றிருக்கிறார்களென்றும் சொல்வதற்கில்லை.

ஆசிரியர்கள் நல்லமுகப்பொலிவுடன், கம்பீரமான குரல் வாய்ந்து, தாம் படிப்பிக்கும் செய்யுள்களை இசையுடன் ஓதி, இன்புறுத்த வல்லவராயிருத்தல்வேண்டும். மாணாக்கர்கள் ஆவலாய் விரும்பி வழிபடும்படி ஆசிரியர்களது உடலும் உடையும் தூய்மையுற்றிருக்கவேண்டும். கற்பிக்குங்காலத்தில் கல்வி கற்பித்தலொழிய வேறு சிந்தனையின்றி, மாணாக்கர்கள் ஈடேறவேணுமென்ற பெருநோக்கங்கொண்டு, கல்வி புகட்டவேண்டும். நன்னீதிகள் பல புகட்டுகின்ற கேட்பதற்கிய கதைகள் பல சொல்வதற்குத் தெரிந்திருக்கவேண்டும். சாதுர்யமாகப் பேசுந்திறமும் அமைந்திருக்கவேண்டும். அதனால் மாணாக்கர்கள் மனத்தைக் கவர்தல் எளிதின் இயலும். கல்வி பயில்கின்ற மாணவர்களை, கல், மரம், சுவர்போல் ஏதோவோர் அசேதன வஸ்துவாகக் கருதிவிடாமல், அவர்களும் தம்மைப்போலவே சேதனர்களென்றும், தம்மைப்போலவே மாத்திரமல்லர், தம் ஆசிரியர்கள்போலவே மற்றும் மேன்மக்களைப் போலவே பிற்காலத்தில் அவர்களாகக்கூடுமென்றும் கருதவேண்டும். பலர், தாம் அறிந்த கல்விகளைப் பிறர்க்குச் சொல்லிக் கொடுத்தால் தம்மைப்போலவே அவர்களும் கற்றவர்களாய்விடுவார்களென்றும், அங்ஙனமாயின் தமக்குள்ள பெருமை அவர்களுக்கும் ஏற்படுமேயென்றும் சிறுநினைவுகொண்டு, மனமுற்று உண்மையாகக் கல்வி பயிற்றாமல், வஞ்சிப்பவர்களுங்கூட உளர். இங்ஙனம் கல்வியைப் பாவச்செய்யாமல் மறைப்பவர்களும், பொறாமை கொள்வோர்களும் ஆகிய இவர்கள் தேசத்துரோகிகளும் பாஷைத்துரோகிகளுமேயாவர். இவ்வுலகம் ஞானச்சுடரால் விளங்கவேண்டுமென்பது நல்லாசிரியர்களின் நினைவு. ஆசிரியர் நம்பால் கல்வி பயின்றவர் மேன்மையுற்றால் அது நமக்கன்றோ பெருமை? என்று கருதவேண்டும்.

ஆசிரியர்கள் தம்மிடம் கல்வி பயிலும் மாணவர்களைப் பக்ஷபாதமின்றி நடத்தவேண்டும். நுண்ணறிவுடைய மாணவர்களை அதிகமாக அபிமானிப்பது இயற்கையேயாயினும், மற்றவர்களை வெறுத்து உபேக்ஷித்தல் சிறிதும்

அடாது. மாணவர்கள் தாம் அறியாதவற்றைக் குறித்தும், ஐயமுற்றவற்றைக் குறித்தும் வினவினால், அன்புகூர்ந்து இரக்கத்துடன் அவர்களது அறியாமையும், ஐயத்தையும் அகற்றுதற்குத் தெளிவுபெற விடையிறுக்கவேண்டும். சில ஆசிரியர்கள், மாணாக்கர்கள் தங்களை வினவினால் மஹா அதிகப்பிரசங்கிகளென்று மாறுக நினைத்து வைகின்றனர்; சிக்ஷிக்கின்றனர்; அன்றியும், தம்மை அவர்கள் பரீக்ஷிக்கின்றார்களென்று தப்பாக நினைத்துப் பெருஞ்சினங் கொள்கின்றனர். இத்தகையோர் ஆசிரியராகும் தகுதியுற்றவரல்லர். மற்றும், மாணவர்களில் சிலர் சட்டென்று கிரஹித்துக்கொள்ளும் நுண்ணறிவும் கூர்ந்தநினைவும் உடையவர்களாயில்லாமலிருக்கலாம். அவர்கள் ஒருமுறை இருமுறையல்ல, பன்முறை வினவக்கூடும். அக்காலத்தில் மிக்க பொறுமையுடன் பன்முறையும் விளக்கமுற விடையளிக்கவேண்டும். மேலும், பிள்ளைகள் அறியாமையாற் செய்யும் பிழைகளையும் பொறுக்கும் தகைமை ஆசிரியர்க்கு இருக்கவேண்டும்.

ஆசிரியர்கள் வருவாயே முக்கியமாக எதிர்பாராமல், அஃது ஒருகால் வரவு குறையினும், மாணாக்கர்க்குக் கல்விப்பொருளைக் கொடுக்கும் கொடைக்குணம் இருத்தல்வேண்டும். உள்ளன்போடு மலர்ந்த முகமும் இனியசொல்லும் ஆசிரியர்க்கு முக்கிய லக்ஷணங்கள்.

"உலகத்தோ(டு) ஒட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."

என்பவாதலால், ஆசிரியர்கள் உலகநடையை அறிந்து, அதற்கேற்றபடி கல்வியறிவை மாணவர்க்குப் புகட்டவேண்டும். ஆசிரியர்கள் தாம் கற்பிக்கவேண்டிய நூற்பொருளை முன்னதாக ஆராய்ந்துகொள்ளவேண்டும். பாடஞ்சொல்லுங்கால் (விரைவு) அவசரமின்றி, மாணாக்கர்களின் அறிவு குணம், இவற்றைக்குறித்து நன்கறிந்துகொண்டு, அதற்கேற்பக் கல்வியைப் புகட்டவேண்டும். இவற்றையெல்லாம் நோக்கியே, பவணந்திமுனிவர், தம் நன்னூலில் பொதுப்பாயிரத்தில், நல்லாசிரியர்களைக் குறித்தும், பாடஞ்சொல்லுதலைக் குறித்தும் பின்வருமாறு சூத்திரங்கள் உரைத்தார். அவை நன்கு கவனிக்கத்தக்கன.

(1)"குலன், அருள், தெய்வங்கொள்கை, மேன்மை,
கலைபயில்தெளிவு, கட்டுரைவன்மை,
நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்,
உலகியலறிவோ(டு), உயர்குணம் இனையவும்
அமைபவன் நூலுரையாசிரியன்னே."

(2)"ஈதலியல்பே யியம்புங்காலைக்,—
காலமும் இடனும் வாலிதினோக்கிச்,
சிறந்துழியிருந்து, தன்தெய்வம் வாழ்த்தி,
உரைக்கப்படும் பொருள் உள்ளத்தமைத்து,
விரையான், வெகுளான், விரும்பி முகமலர்ந்து,
கொள்வோன் கொள்வகை யறிந்(து),அவனுளங் [கொள்க,
கோட்டமில் மனத்தின் நூல்கொடுத்தலென்ப."

பண்டித பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.

---

## Foot and Mouth Disease.

## கோமாரி.

கால்நடைகளுக்கு வரும் வியாதிகளுள் கோமாரி என்பது ஒன்று. இது தொற்றுவியாதியைச் சேர்ந்தது. இந்த வியாதியானது கால்நடைகளின் காலிலும், வாயிலும், மடியிலும் உண்டாவதனால், இதற்குக் கால்நோயென்றும், வாய்நோய் யென்றும் பெயருண்டு. இது மாடுகளுக்கும், செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி முதலானவைகளுக்கும் உண்டாவது வழக்கம். சில சமயங்களில் மனிதர்களுக்கும் இந்த வியாதி உண்டாகின்றதென்று சொல்லப்படுகின்றது.



இந்த நோயால் கால்நடைகள் அதிகமாக இறப்பதில்லை. என்றாலும், அவை பலவீனப்பட்டுப் போகக்கூடும்; இதனால் வேலைக்கு லாயக்கில்லாமற் போகின்றன. சமவெளிகளிலுள்ள மிருகங்களைக்காட்டிலும், மலைப்பிரதேசங்களிலுள்ளவைகளுக்கே இந்த வியாதி அதிகமாக உண்டாகின்றதாம்.

### வியாதி பரவும் மார்க்கம்.

ஒரு இடத்தில் இந்த வியாதி உண்டானால், உடனே அது மற்ற இடங்களுக்கும் பரவுதலுறுவாகும். மாடுகளின் மூலமாகவும் மனிதர்களின் மூலமாகவும், நீரின் மூலமாகவும் இந்த வியாதி பரவும். வியாதிப்பட்ட கால்நடைகள் தங்கியிருந்த இடங்களின் மூலமாகவும் இந்த வியாதி பரவக்கூடும். வியாதியுள்ள கால்நடைகள் குடிக்கும் தண்ணீர்த்தொட்டிகள் அவ்வப்போது கிருமிஹரமருந்துபோட்டுச் சுத்தம் செய்யப்படவேண்டும். இல்லாவிடில், இதுவும் வியாதி பரவுவதற்கு ஒரு மூலகாரணமாயிருக்கும். ஒருமுறை இவ்வியாதியால் தாக்குண்ட கால்நடைகள், மீண்டும் இதேவியாதியால் தாக்கப்படலாம். சாதாரணமாகக் கால்நடைகளுக்கு இந்த வியாதிபற்றி வெளிப்படையாகத் தெரிவதற்கு 24-மணிநேரம் முதல் 7-நாட்கள்வரை செல்லும்.

### வியாதியின் அறிகுறிகள்.

கால்நடைகளுக்கு இந்த வியாதியுண்டானவுடன், அவற்றின் தேகம் ஒருவாறு நடுங்கும். பிறகு கொஞ்சநேரமானதும், தேகம் உஷ்ணமடைந்து சுரம் உண்டாகும். நாக்கை அல்லது கொம்புகளைத் தொட்டுப்பார்த்தாலும் சூடுண்டாயிருப்பது தெரியவரும். சுரங்கண்ட கொஞ்சகாலத்திற்கெல்லாம் வாயிலிருந்து தண்ணீர் வடியும். அவை நாக்கினால் உதடுகளை நக்கிக்கொண்டிருக்கும். அச்சமயம் வாயைத் திறந்துபார்த்தால், நாக்கிலும், பல் ஈறுகளிலும், கன்னத்தின் உட்புறத்திலும் சிறு கொப்புளங்கள் உண்டாயிருப்பதைக் காணலாம். சிலசமயங்களில் மூக்கிலும் இக்கொப்புளங்கள் உண்டாகக்கூடும். கொப்புளங்கள் பட்டாணி அளவுவரை பெரியவையாயிருக்கும். கொஞ்சகாலம் சென்றபின் இக்கொப்புளங்கள் பெரியனவாகி வெடித்து ஒன்றோடொன்று சேர்ந்துவிடும். இதனால், கால்நடைகளின் வாயினின்று நீர் ஸதா ஒழுகிக்கொண்டேயிருக்கும்.

இந்த வியாதி பசுக்களுக்கு உண்டானால், அவற்றின் மடியிலும், முலைக்காம்புகளிலும் இக்கொப்புளங்கள் உண்டாகின்றன. இதனால் பால் குறைந்துபோகும். இவற்றின் பாலைக் குடிக்கும் கன்றுகளுக்கும் இந்த [illegible] தொற்றிக்கொள்ளும்.

கால்நடைகளுக்கு வாயில் மாத்திரமல்லாமல் கால்களிலும் இந்நோய் உண்டாகும். கால்களின் குளம்புகளின்மேலும், குளம்புப் பிளவுகளிலும் சிறு கொப்புளங்களாகி வெடித்துப் புண்ணாகும். இதனால் அவை தம் கால்களை உதறும்; நொண்ட ஆரம்பிக்கும். இப்புண்களில் சில சமயங்களில் புழுக்களும் இருப்பதுண்டு.

இந்த வியாதிப்பட்ட கால்நடைகள் சரியாகத் தீனி தின்பதில்லை. வியாதி கொஞ்சம் சொஸ்தமானபிறகுதான் இரை யெடுக்க ஆரம்பிக்கும். பலஹீனமுள்ள மிருகங்களுக்கு இந்த வியாதி வருமாயின், அவை சரியாகத் தீனி தின்னாததனாலும், வலியினாலும் மிகவும் இளைத்துப்போகின்றன; சில ஸமயங்களில் இறந்தும் போவதுண்டு. சில மிருகங்களுக்கு இந்த வியாதியால் கொம்புகளும் விழுந்து போகின்றன.

இந்த வியாதி ஆடுகளுக்கு வருமாயின், அவற்றிற்கு முன்கூறிய குறிகள் காணப்படும். கால்களில்தான் இவைகளுக்குப் புண் அதிகமாயிருக்கும்.

### சிகித்ஸைகள்.

வியாதிப்பட்ட கால்நடைகளை வெகுஜாக்கிரதையாய்ப் போஷித்துப் பாதுகாத்துவந்தால், அவை சீக்கிரம் குணப்படுமென்பதில் ஐயமில்லை. இவ்வியாதி கண்டவுடன் கால்நடைகளை வேலைசெய்யவிடாமல் [illegible]

வேண்டும். அவ்விதம் நிறுத்திவைக்காவிடின், உஷ்ணத்தினால் புண்கள் அதிகப்பட்டு அவை இறக்க ஏதுவாகும். அவைகளை வெயிலில் கட்டிவைக்கக்கூடாது. தொழுவங்கள் ஈரமில்லாமல் எப்போதும் சுத்தமாகவேயிருக்கவேண்டும்; சுத்தமான காற்று வீசும்படியாயிருக்க வேண்டும். ஜீர்ணமாகாத தீனியை அவற்றிற்கு ஒருபோதும் கொடுக்கக்கூடாது. புல்லும் தவிடும் கொடுக்கலாம். அரிசிக்கஞ்சியில் கொஞ்சம் தேன்பாகு அல்லது உப்பும் பனைவெல்லமும் போட்டுக் கரைத்துக் கொடுக்கலாம்.

பொடிசெய்த படிகாரத்தையாவது வெண்காரத்தையாவது ½ அவுன்ஸ் எடுத்துக்கொண்டு, அதைக் கால்படி ஜலத்தில் கரைத்து, அதனால் மாட்டின் வாயைக் கழுவவேண்டும். மாடுகளின் கால்களில் புண்ணுள்ள இடங்களை அழுக்கில்லாமல் நன்றாய்த் துடைத்து நூறுபங்கு ஜலத்தில் ஒருபங்கு பினைல்மருந்து கலந்த திரவத்தைக்கொண்டு கழுவவேண்டும். பிறகு தில் எண்ணெயும் மண்ணெண்ணெயும் கலந்து காலிலுள்ள புண்ணுக்குத் தடவலாம். அல்லது, கொஞ்சம் தேங்காய் எண்ணெயில் சிறிது கர்ப்பூரத்தைக் கலந்து தடவினாலும் நல்லது. புண்களை எப்போதும் ஈரமில்லாமலும் சுத்தமாயும் வைத்திருக்கவேண்டும். ஈக்கள் மெய்க்காமல் பாதுகாக்கவேண்டும். குளம்புகளில் புண்கள் அதிகமாயிருந்து புழுக்கட்டியிருந்தால், அவ்வித கேஸ்களில் கால்நடை வைத்தியர்களைக்கொண்டு ரணசிகித்ஸை செய்விக்க வேண்டும்.

கோமாரியானது வெகுசுலபமாய்ப் பரவக்கூடியதாகையால், இவ்வியாதிகண்ட கால்நடைகள் முழுதும் சொஸ்தமடைந்த பிறகே மற்ற மாடுகளுடன் கலக்கவிடவேண்டும். வியாதிக்குறிகள் ஒன்றுமில்லையென்று தெரிகிறவரையில் அவற்றைத் தனியே கட்டிவைக்கவேண்டும். மேற்கூறிய முறைகளை அநுஸரிப்போமானால், வியாதிப்பட்ட கால்நடைகள் மரிக்காவண்ணம் பாதுகாக்கலாம்.

---

# Useful Hints.

By Pandit V. S. Aiyar,

# உபயோகமுள்ள குறிப்புக்கள்.

## எருக்கிலைவெண்ணெய்.

எருக்கின் இலையின்மேல் வெளுப்பாய் வெண்ணெய் படர்ந்திருப்பதை அனைவரும் பார்த்திருப்பார்கள். அந்த வெண்ணெயைச் சிரத்தையுடன் சேகரித்து, அதற்குச் சமமாய்ப் பசுமாட்டின் வெண்ணெயைச் சேகரித்துக்கலந்து பிசைந்து, மேகரோகத்தினால் உண்டாயிருக்கும் ரணங்களில்தடவ, அந்நோய் தீர்ந்து குணமுண்டாகும். மேகரோகத்தினால் அவதிப்படுபவர்களுக்கு இது தக்க ஔஷதமாகவே, இம்மருந்தை அவர்கள் சேகரித்து ஜாக்கிரதைப்படுத்திவைத்துக்கொண்டு உபயோகிக்கவேண்டும்.

*

## வெளவாற் புழுக்கைகளின் உபயோகம்.

சூரிய வெளிச்சமில்லாமல் இருளடைந்த கோயில்மண்டபங்களிலும், வெளிச்சம் அதிகமாகப் பிரவேசிக்காத இருட்டறைகளிலும் வெளவால்கள் தவம்செய்யும் யோகிகள்போல் தலைகீழாய்த்தொங்கும். பட்சிகள்போல் இறக்கைகளால் பறக்கும். மிருகங்கள்போல் குட்டிகள்போடும். ஆகவே, இவைபறவையினத்துடனும் சேருவதற்கில்லை; மிருக இனத்துடன் சேருவதற்குமில்லை. சிவசொத்துக்களை ஒழுங்காய்க் கோயிலுக்குக்கொடுத்து உபயோகிக்காமல் சொந்த உபயோகப்படுத்திக்கொண்டவர் இந்த வெளவால் ஜன்மமெடுத்துக்கோவிலையே தமது இருப்பிடமாகக்கொண்டு தவிக்கிறார்கள்



என்று வெளவால் ஜன்மத்தை இழித்துக் கூறுவர். என்றாலும், இந்த வெளவாலிலிருந்துண்டாகும் சில சாமான்கள் மனித சமூகத்திற்கும், தாவர ஸமூகத்திற்கும் பிரயோஜனம் தருகின்றன. இது கூட்டங் கூட்டமாக வசிக்கும் ஸ்தானங்களில் தினம் அவை தம் மலங்களைப் புழுக்கைகளாக இடுகின்றன. இவ்வெளவால்கள் பல அருமையான பழங்களைத் தின்று கழிக்கும் மலத்தில் மிக்க காரமும் ஸாரமும் உள்ளது. ஆகவே, இம்மலத்தினைச் சேகரித்து வெற்றிலைத் தோட்டக்காரர்களும், புஷ்பத் தோட்டக்காரரும் தம் பயிர்களுக்கு உரமாக இட்டு விசேஷ பலனைப் பெறுகிறார்கள். கோயிலில் உள்ளவர்கள் இவ்வெளவால் புழுக்கைகளைச் சேகரித்துக் கலம் 1-க்கு 3 ரூபாய் வீதம் விற்று ஊதியம் பெறுகிறார்கள். இது ஒரு கைத்தொழிலாகும்.

* * *

## பஞ்சக்காலத்தில் புளியங்கொட்டை.

புளியங்கொட்டை மிகச் சத்துள்ள பதார்த்தம். புளியம்பழத்தினையும் புளியங்கொட்டையையும் வேறுவேறு எடுத்துப்பழத்தினை வீட்டில் ஆகாரத்திற்கு உபயோகித்துக்கொள்ளுகிறார்கள். கறுப்பான உரப்பான தோலுள்ள புளியங்கொட்டையைச் சிலர் ஒரு மூலையில் கொட்டி வீணாக்குகிறார்கள். சிலர் எருமைமாட்டுத் தொட்டிகளில் போடுகிறார்கள். அங்கு அவை ஜலத்தில் ஊறினதும், எருமைமாடுகள் அவற்றை மிகவும் விரும்பியுண்ணுவதனால், அம்மாடுகள் விசேஷமான பாலைக் கொடுக்கின்றன. இதனால் மாடுகள் மிகவும் புஷ்டியடைகின்றன. நம்நாட்டில் பஞ்சம் நேரிட்டு ஆகாரத்திற்கு ஒன்றுமில்லாமல் அவதிப்படவேண்டிய காலங்களில் ஏழைச்சனங்கள் இப்புளியங்கொட்டைகளை ஊறப்போட்டுத் தோல்போக்கி, வாணலியில் வறுத்தெடுத்து உண்டு காலந்தள்ளினார்கள். இப்புளியங்கொட்டைகள் அக்னியில் இட, மிகுந்த உஷ்ணம் கொடுக்குமாதலினால், நெருப்பில் வேலைசெய்து ஜீவிக்கும் குயவன், கருமான் முதலியவர்கள் இதனை விலைக்கு வாங்கி அக்னியிலிட்டு உபயோகிப்பார்கள். இந்து சமூகக்குழந்தைகள் இவ்விதைகளை விளையாட்டுப்பொருளாக வைத்துக்கொண்டு விளையாடுவது அனுபவத்திலறிந்த விஷயம்.

* * *

## அடைப்பான் நோய்க்கு மருந்து.

அடைப்பான் என்னும் நோய் மாடுகளைப் பிடிக்கும் ஒருவித வியாதி. அவ்வியாதி முன்னடைப்பான் பின்னடைப்பான் எனப் பல வகைப்பட்டவை. இவ்வியாதிப்பட்ட மாடுகளுக்கு எருக்கிலைப் பழுப்பைக் கொண்டுவந்து அதில் ஓரளவு உப்பை எடுத்துவைத்துச்சுருட்டிமாட்டின் வாயினை நீக்கி உள்ளே செலுத்த, அதையுண்ட மாடு நோயினின்று நீங்கிச் சொஸ்தமடையும். இம்மருந்து அநுபவபூர்வமாய்ச் செய்துபார்த்து மாடு குணமடைந்த கைகண்ட மருந்து.

* * *

## அடிகாயங்களுக்கு மருந்து.

'நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்ததுபோல' என்பது உலகத்தில் வழங்கும் ஒரு பழமொழி. இப்படிக் கொழுத்திருக்கும் மரங்களில்தான் புல்லுருவி உண்டாவது வழக்கம், அது போலவே நல்ல மனிதர்களிடத்தில் அபூர்வமான துர்க்குணம் ஒன்று இருப்பது வழக்கம். புல்லுருவிகள் மூன்றுவகைப்பட்டன. அவை செந்தோட்டி, கருந்தோட்டி, செப்புத்தோட்டி என்பனவாம். செப்புத்தோட்டி என்பது துறிஞ்சி மரங்களிலேயே மாவிலைபோல் கணக்குவழக்கில்லாமல் ஏராளமாய் உண்டாயிருக்கும். இது மாமரங்களிலேயும் உண்டாவதுண்டு. துறிஞ்சியிலிருக்கும் செப்புத்தோட்டியைக் கொண்டுவந்து, ஓரளவு எடுத்துக்கொண்டு அதனை உரலிலிட்டு நன்றாக இடித்து, அதில் ஓரளவு காசுக்கட்டியைப் பொடித்துப் போட்டுக் கலந்து, அடிகாயங்களுக்கும், சுளுக்குக்கும், நாய்ப்புடைப்புக்கும் போட உடனே

நோய் தீரும். இது அனுபவத்திற்கண்ட மருந்து. இதனை மனித சமூகத்தினர் நன்கு கவனித்து மனத்திற் பதித்துக்கொள்ளுதல் தக்கதாகும்.

* * *

## வெட்டுக்காயங்களுக்கு மருந்து.

எருக்கன்செடியை அலட்சியம் செய்வோர் அநேகர். அதன் உபயோகம் தெரியாமல்தான் அவர்கள் அச்செடியை அலட்சியம் செய்கிறார்கள். எருக்கன்செடிகளின் இலைகளில் வெள்ளை வெளேரென்று பாசியொன்று படர்ந்திருக்கும். அதைச் சேகரித்து வைத்தியர்களிற் சிறந்தவர் பத்திரப்படுத்தி மருந்தாக உபயோகிப்பார்கள். வெட்டுக்காயங்கள் நேரிட்ட சமயத்தில், இம்மருந்தைக் காயங்களில் வைத்து உடனேகட்ட, வெளிப்படும் இரத்தத்தைத் தடைபண்ணும். அவ்வொரு கட்டிலேயே இரணம் சொஸ்தமாகும். இக்கட்டுக்கட்ட, காயத்தில் ஜலம்கொள்ளாது; இரத்தம் கசியாது. ஆகவே, மனிதர்கள் இம்மருந்தைச் சிமிழில் அவ்வப்பொழுது சேகரித்துவைத்துச் சமயம் வந்தபோது உபயோகித்துப் பயனடையவேண்டும். இதனால் உலகத்துள்ள ஒவ்வொரு பொருளும் பிரயோசனமுள்ளதாகவே யிருக்கிறதென்பது இங்கு அறியத்தக்கது.

பண்டித-வி. சுப்பிரமணிய ஐயர்.

---

# The Lost Will.

By Mr. M. S. Krishnasamy Iyer.

## காணமற்போன மரணசாஸனம்.

### 7-ம் அத்தியாயம்.

நீலகண்டன் இரவு எட்டேமுக்கால் மணிக்குத் தன்னிருப்பிடம் போய்ச்சேர்ந்தான். அப்போது அவன் மனமானது பலவகையான சிந்தனைகளுக்கு வசப்பட்டிருந்தது. இரண்டுநாள் கழித்து வாராந்தப் பரீக்ஷை நடப்பதாக இருந்தும், அவன் மனம் படிப்பில் செல்லவில்லை. தான் அன்று மாலை பேசிய விஷயங்களையே சிந்தித்துக்கொண்டிருந்தான். அன்று தன் வாழ்நாளின் போக்கைத்திருப்பக்கூடிய ஸம்பவங்கள் நேர்ந்ததாக அவன் மனதில் பட்டது. அவற்றுள் முக்கியமானது தனது கல்யாண விஷயமான பேச்சு. உண்மையில் அதுவரையில் அவன் கல்யாண விஷயமாக ஒன்றும் நினைத்தவனேயல்லன். தற்கால ஆசாரச் சீர்திருத்தக்காரர்களைப்போல் பால்ய விவாகத்தில் பற்பல தீங்குகளைக் கற்பனை செய்ய அவனுக்குத் தெரியாவிட்டாலும், சோற்றுக்குத் திண்டாடும் ஸமயத்தில் இன்னொரு பெண்ணைக் கட்டிக்கொண்டு, அவளையும் கஷ்டத்துக்குள்ளாக்குவது தவறென்று சிற்சில ஸமயங்களில் எண்ணினதுண்டு.

ஆனால், இன்று இரவோ அவன் மனம் மாற்றமடைந்தது. அதற்குக் காரணம் அவன் பார்வதியைப் பார்த்ததே. பார்வதி ஊர்வசி ரம்பை போல் அதிரூபவதி என்று சொல்வதற்கில்லாவிட்டாலும், அதிக கறுப்பி என்றாவது, விகாரி என்றாவது சொல்லும்படி இராமல் மாநிறத்தைவிடச் சற்றுச் சிவந்த மேனியளாய், அங்கங்கள் ஒன்றுக்கொன்று பொருத்தமாய் அமைந்தவளாய் இருந்தாள். பின்னவிட்ட அவளது அடர்ந்த கூந்தலும், அதில் செருகியுள்ள பூவும், அவளது அழகை அதிகப்படுத்தின. அவள் நிறத்துக்கேற்றபடி புடவை உடுத்தியிருந்தாள்; நகைகளும் வேண்டியவளவு போட்டிருந்தாள். இவைகளெல்லாம் தனித்தனியே அவன் கவனத்தைக் கவரவில்லை. அவளை அன்று பார்த்தபோதெல்லாம் அவள் முகத்தையே விசேஷமாகக் கவனித்தான். அவளது புன்சிரிப்பும் அன்பு நிறைந்த பார்வையும்



அவன் மனத்தைக் கொள்ளைகொண்டன. அவளுடைய நிர்மலமான மனம் அவள் முகத்தில் ஒருவிதத் தேஜஸை உண்டாக்கிற்று. அவளுடைய உருவம் ஸதா அவன் மனக்கண் முன் கூத்தாடி நின்றது. அவளே தனக்கேற்ற மனைவியென்று நீலகண்டன் நிச்சயித்துக்கொண்டான். அவளைத்தவிர வேறு எந்தப் பெண் வந்தாலும் தான் மணம்புரிவதில்லையெனத் தீர்மானித்தான். அவளுக்கு வேறு இடத்தில் கல்யாணமாகிவிட்டால், தன் சபதமெங்கே? அல்லது, தன் தாய் வேறு பெண்ணை நிச்சயித்துவிட்டால், தன் மன உறுதி தாய் சொல்முன் நிற்குமோ? என்று ஆலோசிக்கலானான். "இன்றுகாலைதானே உபாத்தியாயர் "தாய்சொல் துறந்தால் வாசகமில்லை" என்று பிரஸங்கம் செய்தார். அவர் சொன்னாலென்ன? வேறு யார் சொன்னாலென்ன? தாய் வார்த்தை பெரியதா? என் ஆசை பெரியதா? என்னை இதுகாறும் அன்புடன் வளர்த்து, என் ஸௌக்யமே தன் ஸௌக்யமாகக் கருதும் என் தாயாரின் வார்த்தையை எப்படி உல்லங்கனம் செய்வேன்? மாத்ருவாக்ய பரிபாலனத்தில் வேறு பெண் கிடைப்பதாயிருந்தால், என்மனம் எப்படி அந்த வேறு பெண்ணின் வசம் செல்லும்?. இது தர்மஸங்கடமாகவல்லவோ இருக்கிறது?" இப்படி சிறிதுநேரம் யோசித்தபிறகு, "அவள் என்னைக் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டந்தானா? இந்தக் காலத்தில் பெண்ணின் மனத்தை அறிய எவரும் முயற்சிப்பதில்லை. நான் மாத்ரம் உலக வியல்புக்கு மாறாக நடக்கிறேன். அவள் என்னை மணக்க இஷ்டப்பட்டால்தான், நான் கல்யாணம் செய்துகொள்ளக்கூடும். இல்லாவிட்டால் நான் அவளை மணம்புரிவதில் பயனென்ன? அவள் என்னிடம் பிரியங்கொள்ளாமலிருக்கும்போது அவளுடன் எப்படி அன்னியோன்னியமாய் வாழமுடியும்? ஆகையால், அவளும் உண்மையில் ஸம்மதப்படவேண்டும். பெற்றோர் கட்டாயத்துக்காக மனதிலொன்று வைத்துக்கொண்டு, வெளியிலொன்றாகச் சொல்லக்கூடாது. எந்த வழியில் கேட்டால் உண்மையான அபிப்பிராயம் வெளிவருமோ அந்த வழியை அனுஸரிக்கவேண்டும். அதற்கென்ன செய்யலாம்? துரைஸாமியையே கேட்கலாகுமா? ஆனால், அவன் கல்யாணத்தைப்பற்றி வாஸ்தவமாய்ப் பேசினானோ, அல்லது கேலிக்குப் பேசினானோ அது வியக்தமாய்த் தெரியவில்லை. தை பிறக்க இரண்டு மூன்று மாஸங்களிருக்கும்போதே இதைப்பற்றி அவனும் அவன் பெற்றோர்களும் பிரஸ்தாபிப்பானேன். அவன் வேடிக்கை செய்ததாகவே இருக்கட்டும். அவன் தாயார் ஸ்த்ரீ ஸ்வபாவத்தை அனுசரித்துப்பேசியிருக்கட்டும். கோவிந்த மாமாகூடக் கல்யாணத்தைப்பற்றிப் பேசினாரே. ஆகையால், மொத்தத்தில் பார்த்தால், கல்யாணப்பேச்சு கேலிப்பேச்சன்று என்று தோன்றுகின்றது. ஆகவே, முக்கால்வாசி நிச்சயமாய்விட்டதென்பதில் ஐயமில்லை. என் தாயார் ஸம்மதிக்கவேண்டும். பார்வதியும் ஸம்மதிக்கவேண்டும்" என்றிப்படியெல்லாம் யோசிக்கலானான்.

பின்னும், "எல்லாம் யோசித்துவிட்டோம். அவளைப்பார்த்தால் சீக்ரம் ருதுவாகிவிடுவாள் என்று தோன்றுகிறது. அதிக காலம் அவளைப் பிறந்தகத்தில் விட்டுவைப்பது கூடாது. சீக்கிரம் சாந்தி முகூர்த்தம் செய்துவிட்டால், அவளை ஸம்ரக்ஷிப்பது எப்படி? எங்கள் இரண்டுபேருக்கே வரும்படி போதாமலிருக்க, மூன்றும்பேருக்கும் எப்படிபோதும்? ஆகவே, இதை உத்தேசிக்கும்போது கல்யாணம் வேண்டாம்; பார்வதியைமட்டும் பார்க்கும்போது கல்யாணம் செய்துகொள்ளவேண்டுமென்று தோன்றுகிறதே. இதற்கு என்ன செய்கிறது? நம் தகப்பனார்தான் ஆஸ்தி அதிகமாக வைத்துவிட்டுப் போனாரா? அதுவுமில்லை. முதலில் எழுதின உயில் அப்படியே இருந்தால், இந்தக் கஷ்டம் இல்லையல்லவா? ஆனால், கோவிந்தய்யர் ஒரேயொரு உயில்தான் எழுதப்பட்டதென்கிறாரே. ஒரேயொரு உயில் என்றால், அதில்

எனக்குத்தானே ஆஸ்தி அதிகமாக வைத்திருந்தது. அப்பா சொன்னது நன்றாய் ஞாபகமிருக்கிறதே: இதில் ஒன்றும் நமக்குப் புரியவில்லை. வக்கிலை விசாரிப்போம். அதோடு, ரெஜிஸ்டிராபீஸிலும் விசாரிப்போம். இரண்டு ரெஜிஸ்டரான உயிலும் இருந்து, பின் உயில்தான் செல்லுமென்றால், நமக்கு உள்ளதைக் கொண்டுதான் திருப்தி ஏற்படவேண்டும். நமக்கு ஏதாவது கிடைப்பதாயிருந்தால், முதல் உயில் முன்பே தெரிந்திருக்கிறதா. அல்லது அதுவே செல்லுமென்று ஏற்பட்டிருக்காதா. எல்லாவற்றிற்கும் மாமாவுக்கு ஒரு கடிதம் எழுதி ஸந்தேகத்தை விளக்கச்சொல்வோம். வக்கீல் யார் என்று விசாரித்து அவரையும் கண்டு பேசுவோம். அப்பா முதலிற் சொன்னபடி அதிக ஸொத்து நமக்குக் கிடைப்பதாயிருந்தால், நாம் அதிருஷ்டசாலிதான். பார்வதியும் நமக்கு நிச்சயமாய்க் கிடைப்பாள்" என்று பலவாறு யோசனை செய்துகொண்டே தூங்கிவிட்டான். அவனுடைய சுவப்பனத்தில் அவன் பார்வதியுடன் விளையாடுவதுபோலவும், பேசுவதுபோலவும், தன் தாயார் கல்யாணத்துக்கு ஸம்மதித்துவிட்டதுபோலவும் கண்டான். மறுநாள் முழுவதுங்கூடப் பார்வதியின் ஞாபகந்தான் அதிகமாயிருந்தது. இனி பார்வதியைக் கவனிப்போம். அவள் ஆறு வர்ஷத்துக்குமுன் நீலகண்டனைப் பார்த்திருந்தாலும், அப்போது அவன் சிறு பையனாக இருந்ததால், இன்றிரவு அவனைக்காண்பதற்கு முன் முற்றிலும் மறந்திருந்தாள். அவனைப் பற்றி ஏதாவது பேச்சுவந்தாலும், அவனைப் பற்றிய உருவம் ஒன்றும் அவள் மனத்தில் தெளிவாய் ஏற்படவில்லை. ஆதலால், அவனைப் பற்றி ஒன்றும் விசேஷமாய் நினைத்ததில்லை. அவன் இரண்டொருதடவை சிந்தாமணியிலுள்ள தன் வீட்டுக்கு முன்பு வந்தபோது, பார்வதி பக்கத்துவீடுகளுக்குப் போயிருந்ததால், அவனை அவள் பார்க்கவில்லை; ஆறு வர்ஷத்துக்குப்பின் அன்றிரவுதான் அவனை முதல்தடவை பார்த்தது. நீலகண்டன் உண்மையில் அழகுவாய்ந்தவன். பார்வதியைப்போலவே நிறமுள்ளவன். அழகிய அடர்ந்த கூந்தலும், விசாலமான நெற்றியும், அகன்ற மார்பும் கம்பீரமான நடையுமுடையவன். அவனைப்பார்த்ததும், அவனைப்போல் அழகுள்ளவர் நாயகனாகக் கிடைத்தாலும் போதுமென்று எண்ணினாள். அவனுக்குக் கல்யாணமாகவில்லை; தன்னை அவனுக்குக் கல்யாணம் செய்துகொடுக்கலாமென்று தெரியவந்ததும், அவள் அவனையே மனத்தில் வரித்துவிட்டாள். உடனே ஸௌந்தர்யங்களெல்லாம் அதிகமாக மனத்திற் பட்டன. அவன் செய்யும் எந்தச் செய்கையும், அழகுடன் விளங்கிற்று. அவனது சிரித்த முகத்தைக்கண்டு ஆனந்தமடைந்தாள். அவன் இரண்டொருதடவை தன்னைப் புன்சிரிப்போடு பார்த்தபோது, தானும் புன்சிரிப்புக்கொண்டு பார்த்து, நாணத்தால் தலைகுனிந்துகொண்டாள். அவன் வீட்டைவிட்டுப் போகுமளவும் அவனையே கவனித்த வண்ணமாயிருந்தாள். தன் தமையன் கல்யாணப் பேச்சை எடுத்ததற்காக அவனை மனமார வாழ்த்தினாள். தனது தந்தையும் கல்யாணத்தைப்பற்றிப் பேசினாரே என்று மனமகிழ்ந்தாள். எப்படியாவது தனக்கும் நீலகண்டனுக்கும் கல்யாணம் ஆகிவிடவேண்டுமென்று பல தெய்வங்களையும் வேண்டிக்கொண்டாள்.

நீலகண்டன் போனதும் ருக்குமணியம்மாள் தனது கணவரிடம், கல்யாண விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தாள்.

கோ.—கல்யாணம் செய்துவிடலாம். ராமய்யர் நல்லவர்தான். அவர் தங்கை ஸாந்தாரமாளும் ஸாதுதான். பையனும் யோக்கியன். நன்றாய்ப் படிக்கிறான். ஆஸ்திதான் குறைவு.

ருக்.—என்ன ஆஸ்தி இருக்கும்?

கோ.—இரண்டு ஏக்கரா நிலம் இருக்கிறது. இதைத்தவிர, ஒரு சிறு வீடு இருக்கிறது. ஐந்நூறுரூபாய்க் கடன் இருந்தது; அடைத்துவிட்டார்களோ என்னவோ?



ருக்.—படிப்பைப் பார்த்துத்தான் கொடுக்கவேண்டுமே தவிர, ஆஸ்தியைப் பார்த்துக் கொடுப்பதற்கில்லை.

கோ.—படிப்புத்தானென்ன? பி. ஏ. பாஸ் செய்திருக்கிறானா? மெட்ரிகுலேஷன் வாசிக்கிறான்; பணம் கட்டியிருக்கிறான்; தேறவேண்டும்.

ருக்.—போகிறது. தேறிவிட்டால் ஒரு இருபது ரூபாய் வேலை கிடைக்குமல்லவா? ஏதாவது மேல்வரும்படி வந்தால், ஏதோ மானமாய்க் காலந்தள்ளலாம். அதிருஷ்டமிருந்தால் சம்பளம் உயராதா?

கோ.—அப்படிப்பட்ட இடத்திலா கொடுப்பது? ஆஸ்தியாவது இன்னும் கொஞ்சம் அதிகமாயிருந்தாலும் போகிறதென்னலாம்; எதைக்கண்டு கொடுக்கிறது?

ருக்.—உங்களுக்கு என்ன, பி. ஏ. பாஸ் பண்ணி பத்துகாணி நிலமுள்ள மாப்பிள்ளையாக வரப்போகிறானென்று எண்ணமோ? வரதக்ஷிணையே ஊர்ப்பட்டது கொடுக்கவேண்டுமே. அதற்கேற்றாற்போல் சீர்வகையறா செய்யவேண்டுமே. அதற்கு நாம் எங்கே போகிறது?

கோ.—பி. ஏ. வேண்டுமென்று சொல்லவில்லை. இன்னும் கொஞ்சம் ஸொத்து இருந்தாற் போதும்.

ருக்.—எல்லாவற்றிற்கும் ஜாதகத்துக்கு எழுதுங்களேன். அவாள் என்ன சொல்லுகிறார்களோ பார்ப்போம்.

கோ.—இப்பவே முதல்கொண்டு என்ன? தை பிறக்க இரண்டரை மாஸமிருக்கிறது.

ருக்.—எனக்கென்ன? பெண்ணை வைத்துக்கொண்டிருங்களேன். பெரியபெண். போன தையிலேயே கல்யாணம் செய்துவிடவேண்டுமென்று தலைகீழாக நின்றேன்; நடக்கவில்லை. அவளுக்கோ பதினொன்று ரொம்பிவிடப்போகிறது. அவள் திரண்டுவிட்டால் ஊர் சிரிக்காதா? தை மாஸத்திலேயே கல்யாணம் நடத்திவிடவேண்டும்; ஸங்கராந்தியான உடனேயே கல்யாணம் நடத்திவிட்டாலும் ஸம்மதந்தான். எழெட்டு வயதுப் பெண்ணானால் மெள்ள யோசிக்கலாம். நாளைக்கே எழுதிவிடுங்கள் கடிதாசியை. அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் பார்ப்போம்.

கோ.—நங்கபுரம் ராமசந்திரய்யர் பிள்ளை எப். ஏ. வாசிக்கிறான். அதிக வரதக்ஷிணை கேட்கமாட்டார். கூடவும், ஸொத்து ஸௌமாராக இருக்காம்; மனுஷ்யாள் நல்லவா.

ருக்.—அவன் ரொம்ப கறுப்புன்னா.

கோ.—பையன் கறுப்பாயிருந்தாலென்ன? ஆண்பிள்ளைகள் எப்படியிருந்தாலும் பாதகமில்லை.

ருக்.—அவா பொம்பண்டாட்டிகள் பெரிய வாயாடிகளல்லவா. மூத்தநாட்டுப் பெண்ணைப் படுத்திவைக்கிறது ஸ்வாமிக்கல்லவா தெரியும். அந்த இடம் வேண்டாம். அதோடு, அவர்கள் சோழதேசம்.

கோ.—இந்தக்காலத்தில் சோழதேசமாவது பாண்டியதேசமாவது: எல்லாந்தான் கலந்து போயிற்றே.

ருக்.—அவர்கள் வாயைக்கிழித்துக்கொண்டு பேசும்போது எனக்கே பயமாயிருக்கிறதே.

கோ.—ராமராஜபுரம் நாராயணய்யர் பிள்ளை ஜாதகம் கேட்டிருக்கிறேன். மெட்ரிகுலேஷன்தான் வாசிக்கிறான்; இந்த வர்ஷந்தான் பணங் கட்டியிருக்கிறான்; ஸொத்து உண்டு; வரதக்ஷிணைகூட அதிகம் வேண்டாமென்கிறார்கள்.

ருக்.—ஸொத்திருந்தால்மாத்திரம் போதுமா? குலங்கோத்திரம் பார்க்கவேண்டாமா? அந்த இடம் அவ்வளவு நல்லதல்ல.

கோ.—ஏன்?

ருக்.—அவர் தங்கை ஆத்திலிருக்கிறாளோ இல்லியோ ரொம்ப வர்ஷமாக. அவள் கொஞ்சம் பொல்லாதவளாம். ஊரெல்லாம் சிரிக்

றது." அந்த இடத்தில் பெண்ணைக் கொடுக்கலாமோ. நன்றாக இடம் பார்த்திர்கள்.

கோ.—நான் சொல்லுமிடமில்லாம் குற்றஞ் சொல்லு; சீக்கிரம் மாப்பிள்ளை நிச்சயம் செய்துவிடலாம்.

ருக்.—உள்ளதைச் சொன்னால் ஏன்கோபம்? எனக்கென்ன? அவிசாரி வீட்டிலும், வம்புக்காரி வீட்டிலும் ஸம்பந்தம் செய்யுங்களேன். உங்களிஷ்டம் நானென்ன சொல்ல இருக்கிறது.

இவ்வாறு சொல்லிவிட்டு சமையலறைப்பக்கம் போகத்திரும்பினாள்.

கோ.—மூக்குக்குமேலேகோபம்வருகிறதே; பேசினால்தானே விஷயம் தெரியும்? இங்கே வா. இன்னொரு வரன் சொல்லுகிறேன்.

ருக்குமணி முன்னின்ற இடத்தில் வந்து நின்றாள்.

கோ.—ராமசந்திரபுரம் கிருஷ்ணய்யர் பிள்ளைக்கு வயது இருபது ஆகிறது. அது நல்ல வரன்.

ருக்.—யார்? எனக்குத் தெரியவில்லையே.

கோ.—உங்க சின்ன தாத்தாவுக்கு மூத்தாள் மச்சினன் கோபாலய்யர் இருந்தாரோல்லியோ. அவர் அத்தங்கார் பிள்ளை கிருஷ்ணய்யர். இப்போது தெரிந்ததா?

ருக்.—உங்க தங்கை கல்யாணத்துக்கு வந்திருந்தாரே ஒரு கிழவர், அவரா?

கோ.—அவர்தான். அவர் பிள்ளையைத்தான் சொல்லுகிறேன்.

ருக்.—நல்ல இடந்தான். அவர் ஸம்சாரம் கூட நல்லமாதிரிதான். பிள்ளை என்ன வாசிக்கிறான்?

கோ.—அவன் கரூரில் மெட்ரிகுலேஷன் வாசிக்கிறான்; பரீக்ஷைக்கும் போயிருக்கிறான். ஆனால், இது இரண்டாவது வர்ஷம்; லொத்துண்டு. அவருக்கும் இவ்விடத்தில் பண்ணிக்கொள்ள இஷ்டந்தானாம். ஜாதகமனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்.

ருக்.—என்னிடத்தில் சொல்லவேயில்லையே,

கோ.—ஜாதகம் வரட்டுமென்றிருந்தேன்.

ருக்.—எந்த இடமானால் என்ன? நல்ல இடமாயிருக்கவேண்டும். இரண்டிடமும் பிடித்திருக்கிறது.

கோ.—இன்னொரிடம் எது?

ருக்.—அதுதான் நீலகண்டன்.

கோ.—பார்ப்போம்.

கோவிந்தய்யர் இவ்வாறு சொல்லிவிட்டு வெளியிற்போய் உட்கார்ந்துகொண்டார்.

அவர் போனதும் துரைஸாமி, "அம்மா, என்னைக்கேட்டால் நீலகண்டனுக்கே கொடுத்துவிடலாமென்று தோன்றுகிறது. அவன் தங்கக்கம்பிதான்; புத்திசாலி; நன்றாய்ப் படிக்கிறான்."

"ஏண்டீ, பார்வதி, உனக்குக் கல்யாணம் பண்ணிக்கொள்ள இஷ்டமா இல்லையா? சொல். இஷ்டமானால் எப்படியாவது கல்யாணம் முடித்துவிடுகிறேன்" என்றான் துரைசாமி.

பார்.—போடா. ஸதா உனக்குக் கேலிதான்.

துரை.—அப்பாதான் இங்கேயில்லை. என்னிடத்தில் சொல்லேன். நான் எப்படியாவது முடித்துவிடுகிறேன்.

ருக்.—அவளை என்னடா கேள்வி?

துரை.—இல்லையம்மா. நாங்களெல்லாம் ஒரு சபதம் செய்துகொண்டிருக்கிறோம்: கல்யாணம் செய்துகொள்ள ஸம்மதமா இல்லையா என்று பெண்ணை நேரில் கேட்கிறது. அல்லது தக்கவர்களைக்கொண்டு கேட்கிறது, பெண் ஸம்மதித்தால்தான் கல்யாணம். இல்லாவிட்டால் கிடையாது.

பார்.—(மெல்லிய குரலில்) உன் அகமுடையாளைக் கேட்டுவிட்டுவா போய்.

துரை.—என்னிடம் சொல்ல வெட்கப்படவேண்டியதுதான். நாளைக்கு நீலகண்டன் வந்து கேட்டால், அப்போது சொல்லித்தானே ஆகவேண்டும். உன் பசப்பெல்லாம் அங்கே பலிக்காது. கேட்ட கேள்விக்கு உடனே பதில் சொல்லாவிட்டால், அவன் ஸம்மதமில்லையென்று போய்விடுவான்.

பார்வதி பதிலொன்றும் பேசாமல் ஒரு புஸ்தகத்தைப் புரட்டிப் பார்த்துக்கொண்டு புன்சிரிப்புடன் மௌனம் ஸாதித்தாள்.

எம். எஸ். கிருஷ்ணசாமி ஐயர்.



---

# Ilayankudimara Nayanar.

By Pandit V. Subramaniya Iyer.

## இளையான் குடிமாற நாயனார்.

இளையான்குடி என்னுமூரில் சூத்திரஜாதியில் மாறன் என்பவர் பிறந்தார். அவர் மிகுந்த சிவபக்தர். சிவபக்தர்கள் எக்காலத்தில் வந்து எதுகேட்டாலும், அதைக்கொடுப்பதே தாம் பொருள் படைத்திருப்பதன் பிரயோஜனமென்று நினைத்து அவர் அடியார் தொண்டு செய்து வந்தார். இவ்விதம் அவர் கைங்கரியம் செய்து வந்ததனாலே தான், செல்வம் மேன்மேலும் பெருகி யாதொரு குறைவுமில்லாமல் வாழ்ந்துவந்தார்.

இளையான்குடிமாற நாயனார் பக்தர்களைக் கண்டவுடனே அவர்களின் குலகோத்திரம் விசாரிக்காமல், அவர்களை வீட்டுக்கழைத்து வந்து பூஜைசெய்து, வேண்டியபடி அன்னமளித்து, இனிய வசனங்கள் சொல்லி அவர்கள் போகும்போது தாமும் பதினன்கடிதூரம் சென்று வழிவிட்டு வருவார். இப்படி இளையான்குடிமாற நாயனார் மிகுந்த செல்வமுள்ளவராயிருந்தபோதும், வேண்டியமட்டும் அடியார் பக்தியில் மேம்பட்டவராயிருந்தார். இவர் செல்வராயினும் தரித்திரராயினும் எப்போதும் ஒரே மனநிலைமையையுடையவர் என்பதை உலகத்தவர்க்குக்காட்டும்பொருட்டு இவருடைய செல்வ முழுதும் அடியார்க்குச் செலவு செய்வதிலேயே போய்விடும்படி ஈசுவரன் செய்தருளினார். அப்போது நாயனார் மிகவும் ஏழையாகிவிட்டார். இச்சமயத்திலும் இளையான் குடிமாறன் குறைவில்லாத பக்தன் என்பதைப் பலருக்கும் காட்டவேண்டி, ஈசுவரன் அடியார்போல் வேஷம் போட்டுக்கொண்டு நாயனார் வீட்டுக்குப் பசித்தவர் போல் நடித்துவந்தார்.

இவர் நாயனார் வீட்டுக்கு வந்தகாலில், இராத்திரி மழை மிகவும் அதிகமாகப்பொழிந்துகொண்டிருந்தது. ஈரஞ் சொட்டச்சொட்ட நடந்து தம் வீடுநோக்கிவந்த அடியாரை நாயனார் அன்புடன் எதிர்கொண்டழைத்தார். அவருடைய தேகத்திலுள்ள ஈரத்தைப் போக்கவேண்டிய காரியங்களை நாயனார் காலதாமதமின்றிச் செய்தார். அவருக்கு அன்னமளிக்கவேண்டி, "அடியார் மிகப் பசித்திருக்கிறார்; என்ன செய்யலாம்? இன்றைக்கு நமக்கே உண்ண உணவில்லையாயினும், அடியார் பசித்திருக்கப் பார்த்திருக்கக்கூடாது. அதற்கு ஒரு யுக்தி சொல்லவேண்டும்" என்று நாயனார் தம் மனைவியைக் கேட்டார். "அயல் வீட்டாரும், இனிப்போய்க் கேட்போமாகில் கொடுக்க மாட்டார்கள்; பொழுதும் போய்விட்டது. இனி யாரையும் போய்க் கேட்பதற்கில்லை. ஆகையால், இன்று பகல் வயலில் விதைத்திருக்கிற செந்நெல் முளைகளைத் தாங்கள் வாரிக்கொண்டு வந்தால், நான் என்னால் இயன்றவளவு அதைப் பக்குவப்படுத்தி அன்னமாக்குகிறேன்" என்று நாயனாரின் மனைவி தன் புருஷனிடம் கூறினாள்.

இது கேட்ட நாயனார் உடனே வயலுக்குச் சென்றார். அவர் போகும்போது மழை பெய்து மிகவும் இருட்டாயிருந்தது. அவர் நடு இரவில் மெள்ள மெள்ள நடந்துசென்று, வயல

ளால் நிலத்தை தடவிப்பார்த்து, நெல்முளைகளைக் கோலி நிறைய வாரியெடுத்துக்கொண்டு வந்து தம்மனைவியிடம் கொடுத்தார். அவருடைய மனைவியும் அதை வாங்கி, அவ்விதைகளிற் படிந்திருக்கும் சேற்றை நீரினால் அலம்பினாள். பின்னால், அடுப்புமூட்டி விறகில்லையேயெனக்கணவனிடத்திற்சொன்னாள். அப்போது நாயனார் வீட்டில் உள்ள அலக்கினை வாளினால் அறுத்து அடுப்பில் வைக்கச்சொல்லிக் கொடுத்தார். மனைவியும் அதை வாங்கிக்கொண்டு நெல்முளைகளையெல்லாம் முன்னால் வாணலியிலிட்டு வறுத்துப் பின்னர் அரிசியாக்கினாள். பிறகு அதை உலையிலிட்டு அன்னமாகச் செய்தாள். பின்பு, நாயனாரின் மனைவி கறிக்கு என்ன செய்யலாமென்று கணவனைக் கேட்டாள்.

அப்போது நாயனார் கொல்லையிற்போய் புன்செய் நிலத்திலுள்ள குட்டையாய் வளர்ந்த பயிர்களை இருட்டில் கைகளால் தடவிப்பார்த்துக் கொணர்ந்து கொடுத்தார். அதையும் நாயனார்மனைவி நீரில் கழுவி நல்ல பாத்திரத்திலிட்டு வெவ்வேறுவிதமான கறிகளாகப் பக்குவம் செய்து வைத்து, பிறகு நாயனாரும் அவர் மனைவியும் பரிந்து வந்து துயிலிலிருக்கும் அடியாரைப் பிக்ஷை செய்விக்க எழுப்பினார்கள். அப்போது பிக்ஷைசெய்யவந்த அடியார் சோதிரூபமாய்த் தோன்றி நிற்க, நாயனாரும் அவருடைய மனைவியும் திகைத்து நின்றார்கள். அச்சமயம் ஈசுவரன் விருஷபவாகனருடராய்க் காட்சிகொடுத்து, "அன்பனே! நீங்களிருவரும் அன்பர்களுக்குப் பிக்ஷை செய்வித்த பெருமையைப்பார்த்துச்சந்தோஷப்பட்டோம். நீங்கள் இனி என் உலகத்திற்குவந்து குபேரன் உமக்குப் பணிவிடைசெய்யப் பேரின்பம் அடைந்திருப்பீர்களாக" என்று சொல்லி மறைந்தார்.

பண்டித-வி. சுப்பிரமணிய ஐயர்.

---

## Kindness wins.

By Mr. P. Chinnasamy Iyer.

## அன்பின் வெற்றி.

### 1-ம் அத்தியாயம்.

அன்று திங்கட்கிழமை மாலை சுமார் 6-மணியிருக்கும். பகலெல்லாம் சூரியன் தன் முழு சக்தியோடும் பிரகாசித்துக்கொண்டிருந்தபோதிலும், சாயங்காலம் நான்கு மணிக்குமேல் வானத்தில் மேகங்கள் சிறிது சிறிதாய்த் தோன்றி ஐந்து மணிக்குள்ளாக இருண்டுவிட்டது. சென்னப்பட்டணத்தில் "பீபில்ஸ்பார்க்" என்று சொல்லப்படும் தோட்டத்தில் ஒருமூலையில் போடப்பட்டிருந்த பலகையின்மேல் ஓர் வாலிபன் உட்கார்ந்துகொண்டிருந்தான். எப்பொழுதும்போலல்லாமல் அன்று சாயங்காலம் தோட்டத்தில் அதிக ஜனக்கூட்டமில்லை. மழைக்குப்பயந்து காற்று வாங்கவந்த நகர்வாசிகள் சீக்கிரம் தத்தம் வீடுகளுக்குப் போய்விட்டார்கள்போலும். வாலிபனுக்குச் சுமார் 25 வயதிருக்கலாம். ஏதோ குற்றம் ஒன்றைச் செய்துவிட்டவன்போலும், அதற்காக அநுதாபப்பட்டு அக்குற்றத்திலிருந்து தப்பிக்கொள்ள மற்றொரு குற்றத்தைச் செய்யத் தயாராயிருப்பவன்போலும் நாலாபக்கமும் திரும்பிப் பார்த்துக்கொண்டேயிருந்தான். சென்ட்ரல் ஸ்டேஷன் கடியாரத்தில் மணி ஆறு அடித்தது. வாலிபன் மறுபடியும் ஒருமுறை நாலாபக்கமும் பார்த்துவிட்டு, எவரும் பக்கத்திலில்லையென்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு தன் சட்டைப் பையிலிருந்து கறுப்பு தந்தப்பிடிபோட்ட ஓர் கூரிய கத்தியை எடுத்து உற்றுப்பார்த்தான்; தேகம் நடுக்கம் கொடுத்தது; கைகள் உதறலெடுத்தன. என்ன செய்வான் பாவம்! தைரியமில்லாத கோழை நெஞ்சமுள்ளவர்களுக்கு இதைவிட வேறு



என்ன வழியிருக்கின்றது? மானம்போய் நல்லோர்க்குப் பொல்லனாய், தீயோர்க்குத் தீயனாய்க்காலங்கழிக்கவேண்டியதுதான் மற்றொரு வழி. வாலிபன் கொஞ்சநேரம் யோசித்து மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு கையிலிருந்த கத்தியைப் பிரித்தான். திடீரென்று பின்பக்கத்திலிருந்து இவனுடைய கை உறுதியாய்ப் பிடிக்கப்பட்டது. கையிலிருந்த கத்தியும் உடனே பிடுங்கப்பட்டது. சுமார் ஐம்பது வயதுள்ள பெரியவர் ஒருவர் அரைமணி நேரமாக வாலிபன் உட்கார்ந்திருந்த பலகைக்குப் பின்னாலிருக்கும் ஆலமரத்தினடியில் உட்கார்ந்து ஏதோ யோசித்துக்கொண்டிருந்தார். பெரியவருக்கும் வாலிபனுக்கும் மத்தியில் ஆலமரமிருந்ததனால், வாலிபன் சுற்றிப் பார்க்கும்போது, அவன் கண்ணுக்குப் பெரியவர் புலப்படவில்லை. பெரியவர் மணி ஆறு அடித்ததும் வீட்டிற்குப் போவதாக எழுந்தபோது, தனக்கெதிரில் வாலிபன் வியசன முகத்துடன் உட்கார்ந்திருப்பதையும், கையில் கத்தியொன்றை வைத்துக்கொண்டிருப்பதையும் கவனித்தார். வாலிபன் ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு கத்தியைப் பிரித்தபோது, ஏதோ ஆபத்து நேரிடப்போகிறதென்று பெரியவர் நினைத்து, மெதுவாக அவன் அருகில்வந்து கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, கத்தியையும் பிடுங்கிக்கொண்டார். பெரியவர் மிகவும் சாந்தமும் கருணையுமுள்ளவராகக் காணப்பட்டாலும், கண்டிப்பான குரலோடுவாலிபனைப்பார்த்து, "நீ என்ன செய்ய நினைத்துக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார். வாலிபனும் கிழவருடைய முகத்தைப் பார்த்ததும், இவரிடத்தில் ஒன்றையும் மறைக்கமுடியாதென்று அறிந்துகொண்டு பின்வருமாறு தன் கதையைச் சொன்னான்:—

"நான் ஒரு நல்ல குடும்பத்திற் பிறந்தவன். மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினபிறகு சென்னை நேதன் கம்பெனியில் ஒரு குமாஸ்தாவாகச் சேர்ந்து, சென்ற 4, 5 வருஷங்களில் மானேஜர் வேலையும் கிடைத்தது. மாதம் 1-க்கு 100 ரூபாய் சம்பளம் கிடைத்தாலும், சகவாசதோஷத்தால் வரவுக்கு மிஞ்சின செலவுசெய்ய ஆரம்பித்தேன். கம்பெனியின் சாதல்வாரி செலவுகளுக்காக என்னிடத்தில் அட்வான்ஸாக 500 ரூபாய் இருப்பது வழக்கம். அதிலிருந்து நாலைந்து மாதங்களுக்குமுன் 50, 100 ரூபாய் எடுத்துச் சொந்தச்செலவு செய்வதும், மாதக்கடைசியில் என் சம்பளத்திலிருந்து அதற்கு ஈடுசெய்வதுமாக இருந்தேன். பிறகு சென்ற மூன்று நான்கு மாதங்களாக ரூபாய் 50, 100 லிருந்து 200, 300 வரை எடுத்துச் சொந்த செலவுக்கு உபயோகப்படுத்திக்கொண்டபடியால், இப்போது சமாளிக்க முடியவில்லை. நாளையதினம் வருஷக் கடைசியானதால், கம்பெனிக் கணக்குகள் முடிவுகட்டப்படவேண்டும். அப்பொழுது அட்வான்ஸ் ரூபாய் 500 யையும் யஜமானருக்குக் காட்டிக் கணக்கில் வரவுவைக்கவேண்டும். ஆகையால், அதற்குப் பணம் என்னிடம் ஒன்றுமில்லை. இப்பொழுது தான் என்னுடைய துஷ்ட சகவாசத்தின்பலன் தெரிந்தது. என்னுடைய மானம்போய் வாழ்வதைவிட உயிரை மாய்த்துக்கொள்ளலாமென்றே இந்தக்காரியம் செய்யத் துணிந்தேன்" என்று கண்ணீர்பெருகச் சொல்லி முடித்தான்.

வாலிபன் ஒன்றையும் ஒளிக்காமல் வெளிப்படையாய் நடந்த சங்கதிகளைச் சொல்லியதனாலும், தான் செய்த குற்றத்திற்காக அனுதாபப்பட்டதனாலும் கிழவருக்குக் கொஞ்சம் மனம் இளகியது.

"நீ செய்த குற்றத்தை இந்தக் கத்தி சரிப்படுத்திவிடுமா? ஒரு குற்றத்தை மற்றொரு குற்றம் எப்பொழுதும் மறைக்காது. தற்கொலை செய்வதைவிட அதிகமான பாபகாரியம் வேறு ஒன்றும் கிடையாது. உனக்கு ஒத்தாசைசெய்ய எவருமில்லையா?" என்று கிழவர் வாலிபனைக் கேட்டார்.

"என்னுடைய பெற்றோர்கள் நான் சிறுவனாயிருக்கும்போதே பரகதியடைந்துவிட்

டார்கள். பள்ளிக்கூடத்து உபாத்தியாயாயிருந்த என் தகப்பனார் எனக்கு யாதொரு ஆஸ்தியும் வைத்துவிட்டுப் போகவில்லை. பெற்றோர்களிறந்தபிறகு என்னைக் காப்பாற்றிவந்தவரும், இப்போதிருக்கும் வேலையைச் செய்து கொடுத்தவருமான என் தாயின் மாமனிடமிருந்து எவ்வித ஒத்தாசையையும் நான் எதிர்பார்க்கமுடியாது" என்று வாலிபன் அதற்குப் பதில் சொன்னான்.

"வேறெந்தவழியிலும் சமாளிக்க முடியாதா?" என்று மறுபடியும் கிழவர் கேட்டார்.

"முடியாது. என் தகப்பனார் போட்டுக்கொண்டிருந்த பொன் கடியாரமும் இரண்டு மாதங்களுக்குமுன்னே அடகு வைக்கப்பட்டுப் பணமும் செலவழிந்துவிட்டது. தகுந்த ஈடு இல்லாமல் யார் எனக்குக் கடன் கொடுக்கப் போகிறார்கள்". என்று மிக்க வியசனத்துடன் வாலிபன் மறுமொழி கூறினான்.

"எவ்வளவு பணமிருந்தால் போதும்"? என்று பெரியவர் கேட்டார்.

"நானூறு ரூபாய் இருந்தாற் போதும்" என்று ஹீனஸ்வரத்துடன் வாலிபன் விடைபகர்ந்தான்.

"இந்தக் கத்தியை அடமானமாக வைத்துக்கொண்டு நான் உனக்கு வேண்டிய பணத்தைக் கடன் கொடுப்பதாயிருந்தால், நீ உன் கெட்ட நடவடிக்கைகளையெல்லாம் ஒழித்துப் புதிதாக உன் வாழ்நாட்களை யாரம்பித்து பெற்றோரின் பெயரைக் கெடுக்காமல் நல்லவழியிலே நடக்கப் பிரயத்தனப்படுவாயா ?" என்று பெரியவர் கேட்டதற்கு,

"சத்தியமாய் அவ்வாறே செய்வேன். கொஞ்சமும் பிறழமாட்டேன்" என்று வாலிபன் பதில் கூறினான்.

பெரியவர் சொல்லியது வாலிபனுக்கு நிச்சயமாயிருக்குமென்று தோன்றவில்லை. கனவு கண்டு விழித்தவன்போல் தோன்றினான். பின்டும் பெரியவர் "எனக்கும் உன்னைப்போலவே ஒரு மகன் வீட்டிலிருக்கிறான்" என்று சொல்லிக்கொண்டே ஜேபியிலிருந்து தோற்பையொன்றை வெளியில் எடுத்தார். வாலிபன், கிழவர்பையிலிருந்து நோட்டுக்களாக 400 ரூபா எண்ணித் தனியாக வைத்ததை உற்றுப் பார்த்துக்கொண்டேயிருந்தான். பெரியவர் தனியாக எடுத்துவைத்த 400 ரூபாய் நோட்டுகளை வாலிபனிடத்தில் கொடுத்து.

"உனக்குச் சௌகரியமானபோது இந்தப் பணத்தை நீ திருப்பிக்கொடுக்கலாம். ஆனால், ஒரு ஒப்பந்தத்திற்கு நீ உடன்படவேண்டும். ஒவ்வொரு வருஷமும் இதே இடத்தில், இதே நாளில், இதே நேரத்தில் நான் உன்னைச் சந்திப்பேன். உன்னுடைய க்ஷேமலாபங்களைப்பற்றி நீ அப்போது எனக்குத் தெரிவிக்கவேண்டும். இந்த ஒப்பந்தத்திற்கு உடன்பட உனக்குச் சம்மதந்தானா?" என்று பெரியவர் கேட்டார்.

"ஆக: அப்படியே செய்கிறேன். இத்துணைய சந்தர்ப்பத்தில் தாங்கள் செய்த இந்த உபகாரத்திற்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்" என்று அவர் கரத்தைப்பற்றிக்கொண்டு கண்ணீர் பொழிந்தவாறு வாலிபன் பதில் கூறினான்.

"நமக்குள் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி நீ நடப்பதே எனக்கு திருப்தியையும், மகிழ்ச்சியையும் உண்டாக்கும்" என்று சொல்லிக்கொண்டே பெரியவர் இருட்டில் மறைந்துவிட்டார்.

---

## 2-ம் அத்தியாயம்.

சோமசுந்தரம் அண்டு கம்பெனியின் பாகஸ்தராகிய சுந்தரத்தை யார்தான் மூன்றுவருஷங்களுக்குமுன் 'பீபில்ஸ்பார்க்கில்' தற்கொலை செய்துகொள்ள முயன்றவனென்று தெரிந்துகொள்வார்கள். சுந்தரம் இப்போது நன்றாய் உடுத்திக்கொண்டும், சற்றே பருமனாயும் இருந்தான். தான் செய்த குற்றத்திற்காக நிசமாகவே அநுதாபப்பட்டவனாகையால், மிகவும்



ஊக்கமாய் வேலைசெய்து பல பெரியோர்களுடைய நன்மதிப்பையடைந்தான். இரண்டு வருஷங்களுக்குள் கையில் கொஞ்சம் பணமும் சேர்த்துவைத்துக்கொண்டான். சென்னையில் வியாபாரம் செய்யும் சோமு அண்டு கம்பெனியின் திருச்சிராப்பள்ளி கிளையாபீஸுக்கு ஒரு யஜமானன் தேவையாயிருந்ததால், அந்தக்கிளைக்கம்பெனியின் மானேஜராக இவன் நியமிக்கப்பட்டுத் திருச்சிக்கு மூன்று வருஷங்களுக்குமுன் சென்றான். மிகுந்த ஊக்கத்தோடு வேலை செய்ததனாலும், வியாபாரத்தில் அவனுக்கிருந்த கூர்மையான அறிவு நுட்பத்தினாலும், நாணயத்தினாலும் சோமு கம்பெனியாருக்கு சுந்தரத்தினிடத்தில் அதிக நம்பிக்கையும் விசுவாசமும் ஏற்பட்டது. ஆறு மாதத்திற்குமுன் சோமு கம்பெனி யஜமானரான சிதம்பர முதலியார் காலமானபடியால், அந்தக் கம்பெனியின் வேலையை அவருடைய மகன் சோமு முதலியார் பார்த்துக்கொண்டு வந்தார். சோமு முதலியார் வியாபாரத்தின் நுட்பங்களை அறிந்த சுந்தர முதலியாரைத் தன்னோடு பாகஸ்தராகச் சேர்த்துக்கொண்டு இருவரும் 'சோமசுந்தரம் அண்டு கம்பெனி' என்ற பெயரால் வியாபாரம் செய்துவந்தார்கள். சுந்தரமும் சென்னைக்கே பிறகு திரும்பிவந்துவிட்டான்.

இத்தனை வருஷங்களாகத் தான் கிழவருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றச் சுந்தரத்துக்குச் சந்தர்ப்பம் ஏற்படவேயில்லை. இவன் வேலையே அப்படி அவகாசமில்லாமற் செய்தது. இரண்டொரு தடவைகள் ரஜாவின் மேல் சுந்தரம் சென்னைக்கு வந்திருந்தும், ஒப்பந்தத்தின்படி ஏற்பட்ட காலத்திற்கு ஒத்துவரவில்லை. ஆகையால், தான் சென்னைக்குக் கம்பெனியின் பாகஸ்தராகத் திரும்பிவந்தபிறகு முதல்தடவை ஜூன் மாதம் 29-ம் தேதி வந்ததும், அது சுந்தரத்துக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. அன்று சாயங்காலம் சாதாரணமாக ஐந்து மணிக்கு ஆபீஸைவிட்டுப் போகும் சுந்தரம், நான்கு மணிக்கே தன்னுடைய இடத்தைவிட்டெழுந்து சட்டையைப் போட்டுக்கொண்டு சோமு முதலியார் இருந்த அறைக்குள் சென்று, "நான் அவசர வேலையாக வெளியே போகவேண்டியிருப்பதால், இன்று பாக்கியிருக்கும் வேலைகளை நாளை முடித்துவிடுகிறேன். நான் போய்த்திரும்பிவர ஆறு மணியானாலும் ஆகும்" என்று சொன்னான்.

"இன்றைய தினம் நான் உன்னை என்னுடன் சாப்பாட்டிற்கு என் வீட்டிற்கு அழைத்துப் போகலாமென்றிருந்தேன். உன்னுடன் முக்கியமான சில ஆபீஸ் விஷயங்களைப்பேசவேண்டியிருக்கின்றது. உன் வேலை முடிந்ததும் தயவுசெய்து நேராக என்வீட்டிற்கு வந்துவிடவேண்டும். இன்று பாக்கியாயுள்ள ஆபீஸ் வேலையைநாளைத்தினம் செய்துகொள்ளலாம்" என்று சோமு முதலியார் கூறினார்.

சரியென்று தலையை அசைத்துவிட்டுச் சுந்தரம் வெளியே சென்றான். தான் போகிற காரியம் கைகூடுமென்று சுந்தரத்துக்கு நம்பிக்கையேயில்லை. மூன்று வருஷங்களுக்குள் என்னதான் நடந்திருக்கக்கூடாது. சுந்தரம் ஆபீஸை விட்டதும் நேராகத் தான் மூன்று வருஷங்களுக்குமுன் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்துசேர்ந்தான். இத்தனை வருஷங்கள் கழித்துத் தான் அவரை அடையாளம் கண்டுபிடிக்கமுடியுமாவென்று யோசித்தான். அன்றையதினமும் முன்மாதிரியாகவே வானத்தில் மேகங்கள் நிறைந்து மழை பெய்யும்போல் பயமுறுத்திக்கொண்டிருந்தன. ஆனாலும், முன்போலில்லாமல் தோட்டத்தில் ஜனநடமாட்டம் மாத்திரம் இருந்தது. தான் முன் உட்கார்ந்திருந்த அதே பலகையில் ஓர் ஓரத்தில் கிழிந்த சட்டையைப் போட்டுக்கொண்டு ஒரு பெரியவர் உட்கார்ந்திருந்தார். கிழவரை யாரென்றுங்கூடச் சுந்தரம் நிமிர்ந்து பார்க்கவேயில்லை. யாரோ பிச்சைக்காரனென்று தன் மனத்தினுள்ளேயே சொல்லிக்கொண்டான்.

அரைமணி நேரம் கழிந்தது. ஸெண்ட்ரல் ஸ்டேஷன்கடியாரமும் மணி ஆறு அடித்தது. ஒவ்வொரு நிமிஷமும் மழைபெய்ய ஆரம்பிக்கும்போல இடிமின்னல்கள் வானத்தில் உண்

டாயின. இவ்வளவுநேரம் சும்மா உட்கார்ந்திருந்த கிழவர் இருமிக்கொண்டே தள்ளாடி எழுந்தார். எழுந்திருக்கும்போது கையிலிருந்த தடி கீழேவிழுந்துவிடச் சுந்தரம் அதை எடுத்து, "வெளியில் உலாவ இன்றைத்தினம் தகுந்ததன்று என்று நினைக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே கிழவரிடத்தில் கொடுத்தான்.

"அப்படித்தான் தோன்றுகிறது" என்று அசிரத்தையாய்க் கிழவர் சொல்லிவிட்டு மெதுவாக நடந்து சென்றார். சில நிமிஷங்களுக்கெல்லாம் மழையும் ஆரம்பித்துவிட்டது. தான் வந்த காரியம் பலிக்கவில்லையேயென்று சுந்தரம் வியாகூலத்துடன் சோமு முதலியாரின் வீட்டுக்குச் சென்றான்.

(அடுத்த பத்திரிகையில் முடியும்.)

பி. சின்னசாமி ஐயர்.

## Topics from Periodicals.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### ஸஞ்சரிக்கும் புஸ்தகசாலைகள்.

பட்டணங்களில் தவிர கிராமாந்திரங்களில் புஸ்தகசாலை என்பதே கிடையாது. ஜனங்கள் ஏழைகளானபடியால், அவர்கள் பணங்கொடுத்துப் புஸ்தகங்களை வாங்க இயலாதவர்களாயிருக்கின்றனர். ஆனால், ஜனங்களுக்குப் படிப்பு மிகவும் அவசியமாகையால், அவர்களுக்கு உபயோகமாகும்பொருட்டு சில ஸஞ்சரிக்கும் புஸ்தகசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இத்தகைய புஸ்தகசாலைகள் முதன்முதல் பரோடாவில் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றின் விவரங்களை ஒரு நிருபர் "ஜனோபிமானி" யில் பின்வருமாறு எழுதுகிறார்.

இந்த ஸமஸ்தானத்தைப் பரிபாலித்துவரும் கெய்க்வார் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களுக்குப்போய் அங்கே புத்தகசாலைகள், ஜனங்களுக்குள் கல்வியைப் பரவச்செய்யும் மார்க்கம் ஆகிய இவைகளை விவரமாய் அறிந்துகொண்டுவந்து தமது ஸம்ஸ்தானத்திலும் அம்மாதிரி நடக்க கல்வி அத்யாவசியமென்பதை உணர்ந்து ஸம்ஸ்தான முழுவதும் சிறுவர்களுக்குக் கட்டாயப்படுத்தி இலவசமாகக் கல்வி கற்பிக்க ஆரம்பக் கல்விச்சாலைகளை ஏற்படுத்தினார். இதனால் ஸம்ஸ்தானத்தின் எல்லா பிரஜைகளும், கல்வி கற்கத் தொடங்கி மேன்மேலும் விருத்தியடைந்து வருகிறார்கள். இதன் மத்தியில் ஸம்ஸ்தானத்தின் பிரதான நகரத்தில் பெரிய புஸ்தகசாலையொன்றை ஏற்படுத்தி அதனாலும் கல்வியை விருத்திசெய்து வருகிறார். இப்புத்தகசாலை நாளுக்குநாள் விருத்தியாய்க்கொண்டே வருகின்றது. பிரதான நகரத்தில் புத்தகசாலைகள் ஏற்பட்டால் கிராமாந்திரங்களிலுள்ளவர்களுக்கு பிரயோஜனமுண்டாகாதென்பதை உணர்ந்த அரசர், ஸஞ்சரிக்கும் புஸ்தகசாலைகளை ஏற்படுத்தி நடத்திவருகிறார்.

இந்த ஏற்பாடு முதன்முதல் 1911-ம் வருஷத்தில் ஆரம்பமாயிற்று. முதலில் சிறியதாக இருந்தபோதிலும், ஏழு வருஷங்களுக்குள்ளாக மிகவும் விருத்தியடைந்திருக்கின்றது. பெரிய புஸ்தகசாலையிலிருந்து படி சாலைகளில்லாத கிராமங்களுக்கும், வரையறைகுட்படுத்தப்பட்டிருக்கும் புஸ்தகசாலைகளுக்கும், அதிக விலையுள்ள புஸ்தகங்களை வாங்க சக்தியில்லாத இடங்களுக்கும், பாடங்களைத் தவிர உபபாடங்களாய்ப் படிக்கப் பள்ளிக்கூடங்களுக்கும், வியாபார கைத்தொழிற்சாலைகளில் வேலை செய்கிற கூலிகள் படிப்பதற்கும், வைத்தியசாலைகளுக்கும், இளமையிற் குற்றம்செய்து தண்டனைக்குட்பட்டிருக்கும் சிறுவர்களைத் திருத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் "ரிபர்மேட்டரி" ஸ்கூல்களுக்கும் புஸ்தகங்கள் பெட்டிகளில் அடக்கம் செய்யப்பட்டு கொண்டுபோகப்படுகின்றன. ஒவ்வொரு பெட்டிக்கும் 40 புஸ்தகங்கள் வீதம் 10 அல்லது 12 பெட்டிகள் ஒரு தடவையில் கொண்டுபோகப்படும். ஒவ்வொரு ஊரிலும் இந்தப் புஸ்தகசாலைகள் மூன்று மாஸம் தங்கியிருக்கும். இந்தப் புஸ்தகங்கள் வந்ததும், பழைய ஸஞ்சரிக்கும் புஸ்தகப் பெட்டிகளைத் திருப்பிவிடவேண்டும். திரும்ப வாங்கப்பட்ட புஸ்தகங்களை,



மற்றொரு ஊருக்குக் கொண்டுபோகுமுன் தலைமை நகரத்திலுள்ள பெரிய புஸ்தகசாலைக்கு ஆஜர்பார்ப்பதற்கும், கிழிந்த புஸ்தகங்களை செம்மைப்படுத்துவதற்கும் கொண்டுபோவார்கள். இம்மாதிரி புஸ்தகங்களைப் பெட்டிகளில் கொண்டுபோய் ஊரூராய்க் கொடுத்துவரவும், திரும்பப் பெற்றுக்கொள்ளவும் பிரத்தியேகமாய் உத்தியோகஸ்தர்களேற்பட்டிருந்தபோதிலும், உபாத்தியாயர்களும் மாணவர்களும் இது விஷயமாக அதிக சிரத்தையுடன் உழைத்துவருகிறார்கள்.

இம்மாதிரி சாலைகளேற்படுத்தி செவ்வனே நடத்தச் சராசரியில் ஒரு வருஷத்திற்கு ரூ. 3,000 ஆகிறது. ஏற்பட்ட வருஷம் முதல் இதுவரையில் இது ஸம்பந்தமாய்ச் செலவுசெய்தது ரூபாய் 16,568–4–1 ஆகும். இதில் புஸ்தகங்களுக்காக ரூ. 11,413–7–4ம், பெட்டிகள் செய்ய ரூ. 2,463–12–9-ம், போகவரச் செலவுக்காக ரூ. 2,691-ம் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஏற்பாடு ஆரம்பத்திலிருந்து எவ்விதம் விருத்தியடைந்திருக்கின்றதென்பதைஅடியிற்காணும் குறிப்பினால் நிரூபிக்கலாம்.

| வருஷம். | பெட்டிகள். | இடங்கள். | மொத்த புத்தகங்கள். | படித்தவர்களின் மொத்தம். |
|---|---|---|---|---|
| 1 & 2 | 90 | 49 | 7000 | 2754 |
| 3 & 4 | 354 | 302 | 13,950 | 7556 |
| 5 & 6 | 444 | 365 | 15,303 | ,, |

இம்மாதிரியான புஸ்தகசாலைகளை ஏற்படுத்தி நடத்துவதன் முக்கிய நோக்கம் வருமாறு.

1. இந்த புஸ்தகசாலைகள் தேசத்தின் தூர கிராமங்களுக்கு சீக்கிரமாகவும், எளிதாகவும், அதிக செலவில்லாமலும் கல்வியைப் புகட்ட ஸாதகமாயிருக்கின்றன.

2. கிராம ஜனங்களுக்கு நாளடைவில் ஸொந்தத்தில் புஸ்தகசாலைகள் ஏற்படுத்திக்கொள்ள அவா ஏற்படும்.

### குப்பைமேனியின் சிறப்பு.

இதை மேனி யென்றும், குப்பாமணி யென்றும் வழங்குவர். சிலர் பூனை வணங்கி யென்றும் கூறுவர். இந்தியாவில் சாப்பாங்கான இடங்களில் எங்கும் இது பயிராகின்றது. கிராமங்களில் குப்பைமேடுகளில் செழித்துப் பயிராவதுகண்டு இதற்குக் குப்பைமேனி யென்று பெயரிட்டார்போலும். இது சிறிய செடி. இலைகள் சற்றேறக்குறைய வட்டமாய், ஓரங்களில் பற்களைப்போல் வரிசையாகக் கூறுகூறாகவும், அரை அல்லது முக்கால் அங்குலம் சராசரி அகல நீளமுள்ளவையாயும், மெல்லியவையாயும் இருக்கும்.

இதற்கு ஸ்ரம்ஸனம் (Laxative) என்கிற குணமும் லேகனம் என்கிற குணமும் விசேஷமாயுண்டு. (1) மலபந்தமுள்ளவர்கள் இந்த இலையைப் பருப்புச் சேர்த்து சமைத்து கீரையாக அன்னத்தோடு கலந்து புசிக்கலாம். சாப்படுவதற்கும் சாதாரண கீரை இனங்களைப்போல் உபயோகப்படுகிறது; மலமும் வெகு சுகமாக வெளியாகும். மற்ற பேதிமருந்துகளைப்போல் வெகுட்டலையாவது, வயிற்றில் வேதனையையாவது சிறிதும் உண்டுபண்ணுவதில்லை. (2) பத்துப் பதினைந்து இலைகளைப் பறித்து, ஒரு சுடிக்கை ஜீரகமும், அரைக்கால் ரூபாய் எடை இந்துப்பும், நாலைந்து மிளகும் பொடித்துக் கூட்டி மென்றுவிட்டால், முற்கூறிய வேலைகளை நன்றாகச் செய்யும். இப்படி உபயோகிப்பதனால் ஜலதோஷமும் நிவிருத்தியாகின்றது. (3) இந்த இலைகளின் சாற்றைப் பிழிந்து வடிகட்டி, வேளைக்கு ஒரு உத்திரணிவீதம் தினத்துக்கு இரண்டுமூன்று தடவை சிறு குழந்தைகளுக்குக் கொடுத்தால், சாதாரண இருமல்களும், சில சமயம் கக்குவாயிருமலும் சாந்தமாகும் என்றும் அறிகிறோம்; இச்சாறு கொஞ்சம் வமனகாரியாக வேலைசெய்யும். (4) சூகதோஷம் என்கிற மேஹவிரணங்களுக்கும் சில சிரங்குகளுக்கும் இவ்விலைகளை அரைத்துத்தடவி வருவதால் சிறந்த பலன் உண்டாவதாகவும் தெரியவருகிறது. (5) இலைகளைவிட இச்செடியின் வேருக்கு விரேசன சக்தி அதிகம் உண்டு. (6) குப்பைமேனி இலைச்சாறு 1 பங்கு, ஆமணக்கெண்ணெய் ¼ பங்கு; இவ்விரண்டையும் சேர்த்து நீர்ப்பாகம் எல்லாம் சுண்டும் வரையில் காய்ச்சி எடுத்து, ஆமவாதம் என்னும் கீல்வாயுவில் வலியும் வீக்கமுமுள்ள இடங்களில் தேய்த்துவந்தால், அக்கோளாறுகள் நிவிருத்தியாகும் என்று சில கேஸுகளில் உபயோகித்து அனுபவத்தில் வந்திருக்கிறது. இந்த எண்ணெயை வெளியில் தேய்த்து வருவதோடு, தினத்திற்கு மூன்றுமுறையாக இரண்டு உத்தரணி யளவில் உட்கொண்டும் வரவேண்டியது அவசியம். (7) வயிற்று வலியைப் போக்குவதற்கு இந்த இலைகளை உபயோகிக்கலாம். (8) கிருமிநாசமான குணமும் இதற்கு உண்டு.—வைத்தியகலாநிதி.

### ரோட்டி செய்வதில் கடல்நீரின் உபயோகம்.

ரொட்டி செய்வதில் கடல்ஜலத்தின் உப

யோகத்தைப்பற்றி "ஜனுபிமானி" பின் வருமாறு எழுதியிருக்கிறது.

ரொட்டி கெடாமலிருக்க வேண்டுமானல் உப்பு சேர்க்கவேண்டியது அவசியமாகும். ஸாதாரணமாக 100 ராத்தல் ரொட்டிக்கு 1 ராத்தல் உப்பு சேர்க்க வேண்டும். இப்போது ப்ரான்ஸில் சிலர் ரொட்டி செய்யும்போது ஸாதாரண ஜலத்துக்குப் பதிலாக கடல் ஜலத்தை உபயோகிப்பது நல்லது என்றும், கடலோரமாக உள்ள ஊர்களில் இருக்கும் ரொட்டிக்காரர்கள் கடல் ஜலத்தை உபயோகித்து ரொட்டி செய்யலாமென்றும் சொல்லுகிறார்கள்.

ரொட்டி செய்வதில் கடல்ஜலம் உபயோகிப்பது புதிதன்று. 1870-ம் வருஷத்தில் பிரான்ஸைச்சேர்ந்த ஹாவை பட்டணத்திலிருந்து அமெரிக்காவிலுள்ள ஸான்பிரான்ஸிஸ்கோ பட்டணத்திற்குப் போன ஒரு கப்பலில் பிரயாணம் முழுவதும் இந்த ரொட்டிதான் உபயோகிக்கப்பட்டது. அந்தக் கப்பல் பிரயாணம் 5 மாஸம் பிடித்தது. கப்பலில் 41 பேர்கள் இருந்தார்கள். அவர்களுள் எவரும் வியாதி அடையவில்லை. பிரான்ஸில் ஷெர்பூர் பட்டணத்தில் மாத்திரம் ரொட்டிசெய்ய கடல்ஜலம் உபயோகிக்கலாமென்று கவர்ன்மெண்டார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அந்த ஊருக்குப் போயிருந்தவர்கள் எல்லோரும் அங்கே செய்யப்படும் ரொட்டி நேர்த்தியாயிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

கடல்ஜலம் சேர்ந்த ரொட்டி அநேக விஷயங்களில் மேலானது. அது எட்டுநாள் வரையில் கெடுவதில்லை. கடல்ஜலத்திலுள்ள தாதுப்பொருள்கள் தேகத்துக்கு போஷணையை உண்டாக்குகின்றன. அந்த ரொட்டி குழந்தைகளுக்கும், வியாதி குணமடைந்து வருகிறவர்களுக்கும் மிகவும் நல்லது. அது குன்மம், க்ஷயம், கண்டமாலை ஆகிய இந்த நோய்களால் வருந்துகிறவர்களுக்கு ஏற்ற உணவென்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள்.

---

## கல்விப்பயன்.

[ஸ்ரீமான் பண்டித பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் இயற்றியன.]

1. பூவார் குழலாய்! நயமார்ந்து பொலியு நூல்க ளிளைந்துள்ள
பாவா ரின்பந் தமக்குநிகர் பாரிலுண்டோ? பகருங்கால்,
நாவா ரின்பம் கழுத்தளவே நமக்கு ருசிக்கும் நலக்கல்வி,
ஆவா! மனத்திற் குட்புகுந்தே யளவில் லாத வின்பளிக்கும்.

2. கல்விக்கடலைக் கரைகண்டோர், காமரறமு, பெருநிதியும்,
நல்ல விருபால் மனமொத்து நயக்கு மின்பும், பெருவீடாம்,
மல்ல லின்பும் கண்டுநகர் வாழ்வைக் குறிப்பின், சிற்றுயிர்க்கு
வல்ல துணைதான் கல்வியென மதிப்ப ராய்ந்த வான்றோரே.

3. பெண்ணே! ஊனும் மூறக்கமும், பேதுற் றழுங்கு மச்சமும்,
மண்ணு ரின்பத் திறங்களும் வனமாக் களுக்கு முள்ளனவே;
எண்ணின், அவற்றின் மேலாக இன்பம் பெறுதல் கல்வியினல்,
பண்ணார் மொழியாய்! மாந்தரதைப் பற்றிக் கொள்ள லறிவாகும்.

4. இறைவ னருளைப் பெறுதற்கா மினிய உள்ள நெகிழ்ச்சியெனும்,
கறைதீ ரன்பு கற்றவர்க்கே கடிதி னெய்தும்; ஆனந்தம்
உறையு நன்றி புரிதற்கும், ஒங்கு மிதத்தை நாடற்கும்,
மறைகள் பலவும் ஆய்தற்கும் மன்னு மறிவை யளிப்பதுவே.

5. கற்ற பெரியோர் பலர்கூடிக் கடிய மாறு கிறிதின்றி,
உற்ற கல்விப் பொருளதனை யோதி யுணர்ந்து நுகரின்பம்,



மற்ற வுலகிற் றேவர்கள் மதிக்கு மின்பின் பதின்மடங்காம்;
எற்றே! அதனை யிகழ்ந்தவரு மென்னு மனித வுருப்பாரோ?

6. ஆய்ந்த நிதி யுணர்வுடையோர் அடக்க மணிந்தோரிடுக்கண்ணில்
வாய்ந்த வுநிக்கை யிழந்தவர்க்கை மான வுதவு மாண்பினோர்
வய்ந்த நண்பி னினியசுவை யெனவே நவிலும் விழுமியதால்
தோய்ந்து பயிலுந் தொறுமின்பஞ் சேரு மென்றார் வள்ளுவனார்.

7. ஒன்றை மறந்த காலத்தும், ஓர்ந்தே யறியாக் காலத்தும்
குன்றி மனந்தானிடருற்றுக் குமைந்து பதைக்கு மென்பதுவும்,
நன்று மனத்து ஞாபகமும் ஞான வொளியும் தோன்றுங்கால்
ஒன்று முள்ள முவப்பதுவும் ஒழிவில் லாது காண்கின்றோம்.

8. உலகத் தின்ப துன்பங்கள் ஒன்று நினைக்கும் சமபுத்தி,
பலவா மாசை நீக்கம், மனப்பல, மேலருள், சீரடக்கம், உறு
சலமில் லாத வாய்மை, நிறை, தவமா தியவாப் புகழின்பம்
நலமார் கல்வி யின்பயனே நம்பத் தக்க துணைவனதே.

9. சதமா ஞாலந் தனினிற்கும் தக்க புகழைத் தழைப்பிக்கும்;
இதமா வுயிரைப் பற்றித்தா னெழுமை தொடரும்; சிறிழையே!
நிதஞ்சா லாரோக் கியமளிக்கும்; நேரா நடுவு நிலைதரும்; பல்
விதந்தான் மதியினாய்ந்து விழுமி யவற்றை யதீந்திடினே.

10. இயற்கை யறிவு மனிதர்களுக் கியைந்த தேனும், மலராத
நயமில் லரும்பு போலுமது; நன்கு மலர்தல் கல்வியினல்;
கயத்தா மரைக்கட் காரிகையே! காணும் பாரில் இருபாலோர்
சயமா மறிவு படைத்தவர்கள் சலிப்பில் லாது கற்கவே.

---

## Books and Reviews.

## புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

புஸ்தக வரவு.

* புத்த அவதாரம்: ராவ்சாஹேப் ப. சம்பந்த முதலியார் பி.ஏ., பி.எல். அவர்களால் இயற்றப்பட்டது. விலை ரு. 1.

* வ்யவசாய மஞ்சரி: சென்னை ஜி. ஏ. வைத்தியநாமன் அண்டு கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டது. விலை அணு 12.

* மோஹநதாஸ் கரம்சந்த் காந்தி: சென்னை ஜி. ஏ. வைத்தியநாமன் அண்டு கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டது. விலை அணு 5.

* கதாரஸமஞ்சரி: பண்டித எம். எம். நாராயணசாமி ஐயர், எஸ். எக்ஞஸ்வாமி ஆகிய இவர்களால் இயற்றப்பட்டது. விலை அணு 4.

ஞாநோதயம்: சிவ. பெ. ராமலிங்கநாட்டார் பத்திராதிபர். வருஷ சந்தா ரு. 2.

கோகலே தோகுதி 1 பகுதி 1: ப்ரொக்ரஸிவ் பப்ளிஷிங் ஹவுஸ், லோடஸ் லாட்ஜ், திருவாரூர். விலை அணு 4.

---

மேற்கண்ட புஸ்தகங்களின் மதிப்புரை அடுத்த பத்திரிகையில் வெளியாகும்.

* இக்குறிப்பிட்ட புஸ்தகங்கள் வி. என் சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர் (தென்னிந்தியா) என்ற விலாசத்தில் கிடைக்கும்.

# Education and Science.
## கல்வியும், சாஸ்திரமும்.

### கல்வியின் அவசியம்.

சென்னை மாகாணக் கல்விக்கான்பரென்ஸானது இந்த வருஷம் மே மாதம் காஞ்சிபுரத்தில் கூடியது. அப்போது சென்னை பச்சையப்பன் காலெஜ் ப்ரொபஸர் கே. இராமானுஜாசாரியர் அக்கிராஸனம் வகித்தார். அக்கிராஸனாதிபதி தமது ஆரம்பப் பிரசங்கத்தில் ஜனங்களுக்குக் கல்வியின் அவசியத்தைப்பற்றிப் பேசியவை வருமாறு:—

கொஞ்சகாலத்திற்குமுன் ஜனங்கள் கல்வியின் அவசியத்தைப்பற்றி அவ்வளவாக அறியாமலிருந்தார்கள்; படிப்பென்றால் வீணைப் பணத்தைச் செலவழிப்பதேயென்று கருதிவந்தார்கள். கல்வியானது தமது பிறவிக்கே நன்மை பயக்கக்கூடியதென்று அவர்கள் எண்ணவில்லை. ஒவ்வொரு தேசத்திலும் ஆரம்பக் கல்வி கட்டாயமாயிருக்கவேண்டும். இந்தியாகவர்ன்மெண்டைத் தவிர மற்றெல்லா கவர்ன்மெண்டுகளிலும் ஆரம்பக்கல்வி கட்டாயமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்தியாவில் பம்பாய் மாகாணத்தில் ஆரம்பக்கல்வி சட்டமாகிவிட்டது. இவ்விஷயத்தைப்பற்றி சென்னைக் கவர்ன்மெண்டாரும் யோசித்து வருகிறார்கள். இந்தியாவில் படித்தவர்களின் கணக்கை எடுத்துப்பார்த்தால், ஆரம்பக்கல்வி எவ்வளவு அவசியமென்பதை அப்பொழுது அறிவீர்கள். இங்கிலாந்தில் கல்வி விஷயமாய் எவ்வளவு முயற்சிக்கப்பட்டு வருகின்றதோ, அப்படியே இந்தியாவிலும் செய்யப்படவேண்டும். ஆரம்பக்கல்வியை கட்டாயமாகவுள்ள மைசூர் சம்ஸ்தானமான து இப்போது காலெஜ் படிப்பையும் இலவசமாகச் செய்துவிடவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறது. இப்படியே தேசத்தில் பலவிடங்களிலும் அனுஷ்டிக்கப்படவேண்டுகிறோம். விஷய சொற்பொருளை அறிவதைக் காட்டிலும் விஷய ஞானத்தை அறிவதுதான் சிறந்தது. இவ்வித விஷய ஞானத்தை ஜெர்மனி, யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா முதலான தேசங்களிலுள்ளவர்கள் மிகவும் பெரிதாகப் பாராட்டுகின்றனர்.

### தேசீயக்கல்வி.

பிறகு அக்கிராசனாதிபதி தேசீயக் கல்வி விஷயமாய்த் தமது அபிப்பிராயத்தையும், அதன் அவசியத்தையும்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொன்னார்.

இந்தியாவில் இப்பொது தேசீயக் கல்வியின் முயற்சிகள் வெகு பலமாகச் செய்யப்பட்டு வருகின்றன. அதன் அபிவிருத்தி விஷயமாய்ப் பலர் உழைத்துவருகின்றனர். இப்போது அனுஷ்டானத்திலிருக்கும் கல்வி முறையானது இந்தியாவிற்கு ஏற்றதன்று. கல்வி சம்பந்தமாகவுள்ள நிர்வாகப் பொறுப்பானது இந்தியர்வசமே இருக்கவேண்டும். இந்திய மாணவர்கள் போதிக்கப்படுவதற்கு இந்தியர்களுக்குள்ளேயே போதகர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அவர்கள்தான் நமது மாணவர்களின் இயல்பையும், திறமையையும், அவாவையும் உள்ளது உள்ளபடியே அறியக்கூடும். இவ்விதமல்லாது, எவ்வளவு மேதாவியான அந்நியநாட்டு போதகர்களை நியமித்தாலும், அவர்கள் நமது மாணவர்களின் இயல்பையும், திறமையையும் அறியக்கூடாதவர்களாயிருக்கின்றனர். இப்போதைய கல்விமுறையில் தாய்ப்பாஷைகளுக்குப் போதுமான ஆதரவு அளிக்கப்படவில்லை என்ற கூக்குறல் இருந்து வருகின்றது. இவ்விஷயங்கள் பலராலும் முயற்சிக்கப்பட்டு வருகின்றன. எனினும், கவர்ன்மெண்டின் உதவியில்லாமல் இவை எவ்வளவு தூரம் சாதிக்கப்படுமென்பது கவனிக்கத்தக்கது.

### இங்கிலாந்தில் புஸ்தக பிரசுரக்கணக்கு.

இங்கிலாந்தில் 1917-ம் வருஷத்தில் 8,131 புஸ்தகங்கள் வெளியாயின. ஆனால், 1916-ம் வருஷத்திலோ 9,149 புஸ்தகங்கள் வெளியாயிருக்கின்றன. ஆகவே, 1917-ம் வருஷத்தில் 1916-ம் வருஷத்தைக் காட்டிலும் 1,018 புஸ்தகங்கள் குறைவாகவே வெளியாயிருக்கின்றன. கீழ்க்கண்ட அட்டவணையில் சென்ற பத்து வருஷத்துக் கணக்குக்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| வருஷம். | புதிய புஸ்தகங்கள். | புதிய பதிப்புக்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| 1908 | 7512 | 2309 | 9821 |
| 1909 | 8446 | 2279 | 10725 |
| 1910 | 8468 | 2336 | 10804 |
| 1911 | 8530 | 2384 | 10914 |
| 1912 | 9197 | 2870 | 12067 |
| 1913 | 9541 | 2838 | 12379 |
| 1914 | 8863 | 2674 | 11537 |
| 1915 | 8499 | 2166 | 10665 |
| 1916 | 7537 | 1612 | 9149 |
| 1917 | 6606 | 1525 | 8131 |



# Agriculture and Co-operation.
## வியவசாயமும், கூட்டுறவும்.

### மாட்டுத்தீனியில் உப்பின் உபயோகம்.

கால்நடைகளின் போஷணைக்கு உப்பானது ஓர் இன்றியமையாத வஸ்துவாகும். அவை உட்கொள்ளும் தீனியில் உப்புச் சத்துக் கொஞ்சம் குறைவாயிருக்குமானால், அத்தீனியின்மேல் அதிகமான விருப்பம் அவற்றிற்கு உண்டாகாது. சில சமயங்களில் மாடுகள் உப்புத் தரைகளையும், சுவர் கற்பாரைகளையும் நக்குவதை நாம் பார்த்திருக்கிறோம். இதனால், மாடுகளின் போஷணைக்கு உப்பானது ஓர் முக்கியமான வஸ்துவென்று நன்கு புலப்படுகின்றது. நாம் கால்நடைகளுக்குக் கொடுக்கும் தீவனத்தோடு சிறிது உப்பையும் சேர்த்துக்கொடுத்தால், அவை நன்கு வளர ஏதுவாகும். இன்னும், இதனால் அவற்றிற்குப் பல நன்மைகள் உண்டாகின்றனவென்றும் சொல்லப்படுகின்றது. அவற்றுள் சிலவற்றை இங்கு எழுதுவோம்.

(1) உப்பு எப்படி மனிதர்களுக்கு அத்தியாவசியமோ, அப்படியே கால்நடைகளுக்கும் அது ஓர் அவசியமான பொருளாகும். தீனிதின்பதில் அவற்றிற்கு உப்பானது நல்ல உருசியைக் கொடுக்கின்றது.

(2) நால்நடைகள் தின்னும் தீனியில் உப்பை உபயோகித்துவந்தால், அவை மலஜலங்கள் சரியாகக் கழியும். இதனால் அவை அடிக்கடி நோய்களாற் பீடிக்கப்படமாட்டா. இளங்கன்றுகளுக்கு ஆகாரம் கொடுக்கும்போது கொஞ்சம் உப்பையும் சேர்த்துக் கொடுக்கவேண்டும். இல்லாவிடில், அவற்றிற்குக் கழிச்சல் கண்டு அவை மெலிந்துவிடும்.

(3) பசுமாடுகளுக்குத் தீனி போடும்போது உப்பையும் அதோடு சேர்த்துப்போட்டால், அவற்றிற்குப் பால் விருத்தியாகின்றது.

(4) கால்நடைகளின் தீனியில் உப்பைச் சேர்ப்பதால் அவற்றின் வயிற்றில் சேரும் கிருமிகள் நாசமடைய ஏதுவாகும். சில கால்நடைகள் எவ்வளவு தீனி உட்கொள்ளினும், புஷ்டியுடனில்லாதிருப்பதை நாம் காண்கிறோம். இதற்குக் காரணம், அவற்றின் தீனியில் உப்பு சேர்க்கப்படாமையே.

(5) சில மலட்டு மாடுகளுக்கு உப்பைத் தீவனத்தில் சேர்த்துக்கொடுத்தால் கர்ப்பந்தரிக்கின்றதென்று சொல்லப்படுகின்றது.

(6) உப்பின் உபயோகத்தால் ஆடுகளுக்கு வாழ்த்தை என்னும் நோயை வரவொட்டாமல் தடுக்கலாம்.

சாதாரணமாக உப்பைக் கால் நடைகளுக்கு தினமும் சுமார் ஒரு ரூபாய் எடைமுதல் இரண்டு ரூபாய் எடை வரை தீனத்தில் கலந்து கொடுக்கலாம்.

### வியவசாயமும், ஆரம்பக்கல்வியும்.

அயர்லாந்தில் பெரும்பாலார்க்கு வியவசாயமே ஜீவனோபாயமாகும். ஆகவே, வியவசாயத்துக்கும் கல்விக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கவேண்டுமென்று அங்குள்ள கூட்டுறவுக்காரர்கள் சமீபத்திலே ஒரு மகாநாடு கூட்டி, ஆரம்பக்கல்வியை அபிவிருத்தி செய்யவேண்டுமென்பதைப்பற்றிச் சில தீர்மானங்களைச் செய்தார்கள். வியவசாயத்துக்கும் கல்விக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கவேண்டுமென்றும், வியவசாயத் தொழிலானது மிகுந்த கௌரவமானதென்று சிறுவர்கள் போதிக்கப்படவேண்டுமென்றும், ஆரம்பக் கல்வியானது வியவசாயிகளின் கருத்து, சிந்தனை உத்தேசம், வாழ்வுநிலைகளை அனுஸரித்தே போதிக்கப்படவேண்டுமென்றும் அவர்கள் அம்மகாநாட்டில் வற்புறுத்திப் பேசியிருப்பது குறிப்பிடத் தக்கது. இந்தியாவிலும் கிராமாந்திரங்களில் இத்தகைய சீர்திருத்தங்கள் தேவையென்பதை நாம் சொல்லாமலேயே விளங்கும்.

### வேப்பம்பாசி.

நன்செய் நிலங்களில் சாகுபடி செய்பவர்களுக்கு வேப்பம்பாசி என்னவென்பது நன்கு தெரியும். இந்தப் பாசியானது தண்ணீர் எளிதில் வடியக்கூடாத இடங்களில் உண்டாகின்றது. களர் நிலங்களிலும் விசேஷமாய் உண்டாகிறது. ஒருமுறை இப்பாசி நிலத்தில் உண்டாகிவிட்டால், அது முழுமையும் ஒழியுமட்டும் பிரதி வருஷமும் பரவிக்கொண்டேயிருக்கும். இந்தப் பாசி உண்டான நிலத்தில் நெற்பயிர் சரியாக விளையாது. ஏனெனில், பயிருக்குத் தேவையான உணவுச்சத்தை இது கிரஹித்து விடுகின்றது. நிலத்தின் அடிமண்ணில் தண்ணீர் இறங்கிப் பாயாவண்ணமும், நிலத்தினுள்ளே காற்றுப் புகாவண்ணமும் இப்பாசியானது நிலத்தின் மேல் மூடிக்கொள்ளுகின்றது. இக்காரணங்கள்பற்றியே இப்பாசி படர்ந்துள்ள நிலங்களில் நஞ்சைப்பயிர் சரியாக விளைவதில்லை.

வேப்பம்பாசியை ஒழிப்பதற்குப் பலரால் பலவித பிரயத்தினங்கள் செய்யப்படுகின்றன. நிலத்தில் இப்பாசி உண்டானவுடன், வேப்பம் பிண்ணாக்கைத் தூளாக உடைத்து நிலத்தில் தெளித்துத் தண்ணீர் கட்டினால், அது ஒருவாறு நீங்கலாம். அல்லது ஆடாதோடையைக்கொண்டுவந்து நடுவதற்கு முன் நிலத்தில் போட்டு மிதித்துவிட்டால், இப்பாசி உண்டாகாமல் நின்றுவிடும்.

# Industry and Commerce.

## கைத்தொழிலும், வியாபாரமும்.

### டாடா தொழில் ஆராய்ச்சிச் சாலை.

பெங்களூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் டாடா தொழில் ஆராய்ச்சிச் சாலையானது பற்பல உபயோகமுள்ள வேலைகளைச் செய்துவருகின்றது. அங்கு வாசனைப் புல்லினின்று எண்ணெய் எடுக்கும் விதம் கண்டுபிடிக்கப்பட்டது. ஐதராபாத்துக்கு வடக்கே ஏராளமாய்க் கிடைக்கும் 'மஹுவா' என்னும் பூவினின்று சர்க்கரையும், ஒருவித எண்ணெயும் தயாரிக்கும் விதமும் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த எண்ணெயானது மோட்டார் வண்டிக்கு ஸ்பிரிட்டுக்குப் பதிலாக உபயோகிக்கக்கூடுமாம். இப்பூவினின்று இனிய ஷர்பத்தும் எடுக்கப்படுகின்றது. இவையன்றியும், தானியங்களினின்று பற்பல சாயங்களெடுத்தல், அரக்கு செய்தல், பிராணி எலும்புகளினின்று கோந்து செய்தல் முதலியனவும் இத்தொழில் ஆராய்ச்சிச் சாலையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

### தென்னிந்தியாவில் காகிதத்தொழில்.

தென்னிந்தியாவில் காகிதத்தொழில் ஊக்கமானது இல்லையென்றே கூறலாம். சென்னை மாகாணத்தைச் சேர்ந்த புனலூர் என்னுமிடத்தில் மீஞ்சகி காகிதத் தொழிற்சாலையென்பதொன்று நடந்துவருகின்றது. அவ்விடத்தில் மூங்கில்கள் ஏராளமாகக் கிடைக்கின்றமையால், அவற்றினின்று கூழ் செய்யப்பட்டு பழுப்புக்காகிதங்களே தயாரிக்கப்படுகின்றன. வெள்ளைக்காகிதங்கள் செய்வதற்குச் சௌகரியங்கள் இல்லையெனப்படுகிறது. நல்ல மாதிரி காகிதக்கூழ் செய்யச் சௌகரியமில்லாததனாலேயே, தென்னிந்தியாவில் காகிதத்தொழிற்சாலைகள் ஏற்படவில்லை. இப்பொழுது பர்மாவில் டாடா கம்பெனியார் ஒரு காகிதக்கூழ் செய்யும் தொழிற்சாலையை ஏற்படுத்தப்போவதாகத் தெரிகின்றது. அங்குக்கூழ் தயாரிக்கப்பட்டுக் கிடைக்குமானால், தென்னிந்தியாவில் பல காகிதச் சாலைகள் ஏற்படுமென்பதில் ஐயமில்லை.

### வைக்கோலினின்று ஓர் புதிய வாயு.

நிலக்கரியிலிருந்து ஒருவித வாயு தயாரிக்கப்பட்டு இயந்திரங்கள் ஓட்டுதல் முதலிய பற்பல் வேலைகளுக்கு உபயோகிக்கப்பட்டு வருகின்றது. மண்ணெண்ணெய் வாயுவினால் விளக்குகள் எரிகின்றன. இவற்றைப்போலவே வைக்கோலினின்றும் ஒருவித வாயுவை உற்பத்திசெய்யும் முறையை அமெரிக்காவில் மிஸ்டர் ஹாரின் என்பவர் கண்டுபிடித்திருக்கிறார். வைக்கோலினின்று வாயு எடுக்கப்படுவதோடு அதனின்றே தாரும், லாம்ப்ளாக்கு என்று சொல்லப்படும் கறுப்பு வர்ணமும் கிடைக்கின்றதாம். ஏராளமாக வைக்கோல் கிடைக்கக்கூடிய சென்னை மாகாணத்தில் இத்தகைய தொழிற்சாலைகள் மிக்க பயனைத் தருவனவாகும்.

### இந்தியாவின் எண்ணெய் வித்துக்கள்.

இந்தியாவில் ஏறக்குறைய வருஷம் 1-க்கு 5,000,000 டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாகின்றன. இவற்றின் மதிப்பு சுமார் 50,000,000 பவுன்களாகும். 1913-14-ம் வருஷத்தில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட எண்ணெய் வித்துக்கள் சுமார் 1,600,000 டன்கள்; அவற்றின் மதிப்பு ஏறக்குறைய 17,000,000 பவுன்களாகும். இது தவிர 400,000 பவுன்கள் மதிப்புள்ள 3,250,000 காலன்கள் எண்ணெயும், சுமார் 1,000,000 பவுன்கள் மதிப்புள்ள ஏறக்குறைய 200,000 டன்கள் பிண்ணாக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன.

### சர்க்கரைக் கைத்தொழில்.

இந்தியாவில் சுமார் 2½ மிலியன் ஏக்கர்களில் கரும்புப் பயிர் செய்யப்படுகின்றது. அவற்றுள் சராசரி ஒரு ஏக்கரில் விளையும் கரும்பினின்று 0·1 டன் சர்க்கரை கிடைக்கின்றது. ஜாவாவில் இதைவிட நான்கு மடங்கு அதிகமாக உற்பத்தியாகின்றது. ஹாவாயித் தீவுகளில் ஏக்கர் ஒன்றுக்கு 10 முதல் 12 டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகின்றது. அதாவது இந்தியாவைக்காட்டிலும் இருபது மடங்கு அதிகமென்பதைக் குறிப்பிடவேண்டும்.

### இந்தியாவின் செல்வம்.

1917-1918-ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டின் மொத்த வரும்படி 98,870,800 பவுன்களாகும்; அதாவது 150 கோடி ரூபாய். இப்போது நடந்துவரும் யுத்தத்தில் ஒவ்வொரு தினமும் இங்கிலாந்து சராசரியில் 10 கோடி ரூபாய் செலவழித்து வருகின்றது. இந்தியாவின் ஒரு வருஷத்திய மொத்த வரும்படியை சண்டைக்கே உபயோகித்து வந்தால், அது 15 தினங்களுக்குள்ளாகவே தீர்ந்துவிடும். யுத்தம் ஆரம்பமாகி இத்தனை வருஷங்களாகியும், தினமொன்றுக்கு ஆறு முதல் பன்னிரண்டு கோடி ரூபாய் வரை செலவாயும் இங்கிலாந்துக்கு இன்னும் பணத்தட்டு என்பது கொஞ்சமும் ஏற்படவில்லை. இதனால், இந்தியாவானது எவ்வளவு ஏழ்மையான தேசமென்பதும், இங்கிலாந்தானது எவ்வளவு செல்வம் படைத்த தேசமென்பதும் நன்கு புலப்படுகின்றது.



# Sanitation and Medicine.

## சுகாதாரமும், வைத்தியமும்.

### வைத்திய உதவி

நமது தேசத்தில் மேனாட்டு வைத்தியமுறை இவ்வளவு பிரபலமடைந்திருப்பதற்குக் காரணம், இராஜாங்க ஆதரவு போதியவளவு அதற்கு இருப்பதேயாம். இத்தகைய ஆதரவு ஆயுர்வேத-யுனானி வைத்திய முறைகளுக்கு இல்லாமலிருப்பதனால்தான், அவை நாளுக்குநாள் க்ஷீணித்துக்கொண்டே வருகின்றன. இச்சுதேச வைத்திய முறைகள் இராஜாங்கத்தாரின் உதவியைப் பெறுமாயின், அவை மிக்க மேன்மையை யடைந்து, அவற்றால் ஜனங்களும் பலவித நன்மைகளை யடைவார்கள். சமீபத்தில் வெளியிடப்பட்ட ஐதராபாத்து ஸம்ஸ்தானத்து யுனானி வைத்திய இலாகாவின் 1917-ம் வருஷத்து ரிபோர்ட்டைக் கவனித்தால், இராஜாங்கத்தாரின் உதவியால் சுதேச வைத்திய முறைகள் எவ்வளவு மேன்மையை யடையக்கூடுமென்பதையும், அவற்றால் ஜனங்கள் அடையும் நன்மைகளையும் நன்கு அறியலாம்.

சென்ற வருஷத்தில் ஐதராபாத் நகரத்தைச் சேர்ந்ததாகவுள்ள யுனானி வைத்தியசாலைகள் 16: அவற்றுள் 6 வைத்தியசாலைகள் ஸம்ஸ்தான கவர்ன்மெண்டாராலேயே நடத்தப்பட்டு வருகின்றன. மீதியானவை ஸம்ஸ்தானத்திலிருந்து கிராண்டுகள் பெறுகின்றன. வெளி ஜில்லாக்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள யுனானி வைத்தியசாலைகள் 28. இவை லோகல் போர்டுகளால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ஆயுர்வேத முறைப்படி ஸ்தாபிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகள் 17. இவற்றிற்கு இராஜாங்க உதவி கிராண்டு மூலமாகக் கிடைக்கின்றது.

மேற்குறித்த விவரத்தைக் கவனித்தால், இராஜாங்க உதவியால் ஆயுர்வேத யுனானிமுறைகள் எவ்வளவு மேன்மையுறலாமென்பது விளங்கும். ஐதராபாத் ஸம்ஸ்தானத்தைப்போல் மற்ற சுதேச ஸம்ஸ்தானங்களும் நமது தேசத்தில் ஆதிகாலமுதல் அனுபவத்தில் வந்துள்ள ஆயுர்வேத-யுனானி வைத்திய முறைகளை ஆதரிக்க முன்வரவேண்டுமென்பதை இங்குக் குறிப்பிடுவோம்.

### தொற்று வியாதிகள் வருங்காலத்தில் அனுசரிக்க வேண்டிய விதிகள்

தொற்று நோய்கள் பரவியிருக்குங் காலங்களில் ஒவ்வொருவரும் கீழ்க்கண்ட விதிகளை அனுசரிக்கவேண்டும்.

குடியிருக்கும் வீட்டை எப்போதும் சுத்தமாகவே வைத்திருக்கவேண்டும். வீட்டில் சேரும் அழுக்குத் தண்ணீர் முதலியவற்றை வீட்டுக்கு வெளியே கொஞ்ச தூரத்தில்போய்விழும்படி செய்யவேண்டும். மாட்டுக்கொட்டிலில் சேரும் குப்பைகளையும், மற்ற அசுத்தங்களையும் வீட்டுக்குப் புறம்பே கொஞ்ச தூரத்துக்கப்பால் கொண்டுபோய்க் கொட்டவேண்டும்.

வீட்டில் தரையானது எப்போதும் ஈரமாகவேயிருக்கக்கூடாது. அப்படி ஈரமாயிருக்குமாயின், அம்மண்ணை வெட்டி வெளியே கொட்டிவிட்டு வேறு புதிய மண்ணைக் கொணர்ந்து அங்குக் கொட்டவேண்டும்.

வீட்டின் அறைகளுக்குள் நல்ல காற்று வீசும்படி எப்போதும் ஜன்னல்களைத் திறந்துவைக்கவேண்டும்.

படுக்கை அறையில் தட்டுமுட்டுச் சாமான்கள், துணிமூட்டைகள் முதலியன வைத்திருத்தல்கூடாது. உத்திரத்திலிருந்து தொங்கிக்கொண்டிருக்கும்படியாக எதையும் போடக்கூடாது.

முற்றத்திலும் கிணற்றோரத்திலும் கொட்டப்படும் தண்ணீர் எங்கும் தங்காமல் வீட்டுக்கு வெளியே போய்விடும்படி கவனிக்கவேண்டும்.

துர்நாற்றத்தை யுண்டாக்கும் கக்கூஸ் முதலியனவற்றை அவ்வப்போது சுத்தம் செய்யவேண்டும். இத்தகைய இடங்களை பினாயில் முதலிய மருந்துகளைத் தண்ணீரில் கலந்து தினமும் இரண்டுமூன்றுதடவை சுத்தம் செய்யவேண்டும்.

### கொத்தமல்லி.

இச்சிறு செடியானது நமது தேசத்தில் எங்கும் பயிர் செய்யப்படுகின்றது. இதன் இலையைக் குழம்பு ரஸம் தாளிப்பதற்கும், சட்டினி செய்வதற்கும் வீடுகளில் உபயோகிப்பது வழக்கம். கொத்தமல்லி கீரையினால் வாத அரோசகமும், பித்தசுரமும் போம். கொத்தமல்லி விதையைப் போஜன பதார்த்தங்களுடன் சேர்ப்பது உணவு இலகுவில் ஜீர்ணமாவதற்கும், வாசனையாயிருப்பதற்கேயாம். இவ்விதையானது அஜீர்ணம், வாந்தி, விக்கல், குளிர்ச்சுரம், நாவறட்சி, சொறி சிரங்கு முதலானவைகளைப்போக்கும். காப்பிக்கொட்டையைப்போல் கொத்தமல்லி விதையையும் வறுத்துப் பொடியாக்கிக் கஷாயம் செய்துகொண்டு, அதோடு கொஞ்சம் பசும்பால் சேர்த்துப் பருகலாம். இதனால், குளிர்ச்சுரம், உட்சூடு, அஜீர்ணம், வாந்தி முதலியன நிவிருத்தியாகும்.

## General Notes.
## பொதுக் குறிப்புக்கள்,

**புதிய ஜப்பான் காகிதம்.**

ஜப்பானில் முசுக்கட்டை செடியினின்று ஒருவிதக் காகிதம் செய்யப்படுகின்றதாம். இக்காகிதம் செய்வதில் சில புதிய வஸ்துக்கள் சேர்க்கப்படுவதால், அதன் வழியாய்த் தண்ணீர் இறங்காதாம். ஜப்பான் கப்பற்படையார் உயிர்படகுகளைச் செய்வதற்கும் இக்காகிதத்தையே உபயோகிக்கின்றார்களாம். இக்காகிதத்தினால் செய்யப்படும் பைகள் கித்தான்பைகளைப்போல் உறுதியாயிருக்கின்றனவாம். பைஸிகல்டியூப் செய்வதற்கும், புட்பால் ப்ளாடர் செய்வதற்கும் இக்காகிதத்தையே உபயோகிக்கக்கூடுமாம். துத்தநாகத்தகடுகளுக்குப் பதிலாகவும் இக்காகிதம் உபயோகிக்கப்படலாமென்று சொல்லப்படுகின்றது.

**பற்குச்சிகளைக்கொண்டு பல்துலக்குதல்.**

மேனாட்டவர்கள் பற்களைத் துலக்கக் கண்டவஸ்துக்களையும் உபயோகிப்பதில்லை. தென்னிந்தியவாசிகள் சில சமயங்களில் மணலையும், செங்கலையும், இன்னும் மற்றப் பொருள்களையும் பல்துலக்க உபயோகிக்கின்றார்கள். இவற்றால் பற்களுக்குக் கெடுதி நேரிடக்கூடும். இதற்காக மேனாட்டவர்கள் ஒருவித பிரஷை உபயோகிக்கிறார்கள். நமது தேசத்தில் பிரஷுக்குப் பதிலாகச் சில சமயங்களில் ஆல், வேல்முதலிய மரங்களின் குச்சிகள் உபயோகிக்கப்படுகின்றன. இக்குச்சிகளைக்கொண்டு நகர்ந்துகொண்டே பல்துலக்கக்கூடாதென்று நம்மவர்கள் சில நியமங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்விதம் செய்ததன்காரணம் பல்துலக்கியவாறு நடந்துசென்றால், பற்களுக்கு ஊனமுண்டாகும்போலும்.

**நமைமரப்பட்டை.**

நமைமரங்கள் தென்னிந்தியக்காடுகளில் ஏராளமாக உண்டாகின்றன. இவற்றின் பட்டைகள் துவர்ப்புள்ளன. இலைகளும் துவர்ப்பானவையே. சாயமெடுப்பதற்கு இம்மரத்தின் பட்டைகளை உபயோகிக்கக் காட்டிலாகாதார் ஏற்பாடுசெய்திருக்கின்றனர். இன்னும், இதன் இலைகளும் இத்தகைய காரியங்களுக்கு உபயோகப்படுவதாகத் தெரிகின்றது. நமது காட்டில் ஏராளமாயுள்ள இம்மாதிரி வஸ்துக்களின் உபயோகத்தைத் தெரிந்துகொண்டு அவற்றை நாமே உபயோகித்துக்கொள்ளவேண்டும்.

**எலுமிச்சம்பழச்சாறு.**

எலுமிச்சம்பழமானது நமது வீடுகளில் பற்பல காரியங்களுக்கும் உபயோகப்படுகின்றது. வெட்டுக் காயங்களினின்று ஓடும் இரத்தத்தை நிறுத்த இச்சாற்றை உபயோகித்தால், அது உடனே நின்றுவிடும். சிறு துணியைச் சாற்றில் தோய்த்தும் காயத்தின் மேற் போடலாம். இச்சாற்றோடு கொஞ்சம் சர்க்கரையைச் சேர்த்துக் குடித்தால் இருமல் நீங்கும்.

**அந்துப்பூச்சிகளைக் கொல்ல.**

நமது வீடுகளில் நெல், துவரை முதலிய தானியங்களில் அந்துப்பூச்சிகள்வந்து நாசத்தை விளைவிக்கின்றதென்பதைப் பலரும் அறிவர். இப்பூச்சிகளை ஒழிப்பதற்கு ஒரு நண்டைக் கொன்று இ[illegible]ந்திருக்கும் தானியங்களுக்கு நேரே தொங்கும்படி கட்டினால், பலன் உண்டாகுமென்று ஓர் பத்திரிகை கூறுகின்றது.

**மரம் உளுக்காதிருப்பதற்கு.**

நகரங்களிலும், இன்னும் மற்ற விடங்களிலும் பெரிய கட்டடங்களுக்குத் தேக்குமரங்களே உபயோகிக்கப்படுகின்றன. இவை உளுத்துப்போவதில்லை; கரையானால் அரிக்கப்படுவதில்லை. இம்மரங்களை உபயோகிக்கச் சௌகரியப்படாத இடங்களில் வேறு மரங்களையே உபயோகிக்க நேரிடுகின்றது. அப்போது மரங்களைக் கட்டடத்துக்கு உபயோகிக்குமுன் அவற்றை வெல்லத்தண்ணீரில் ஊறவைத்து உலரப்போட்டுவிட்டால், பிறகு அவை உளுக்கவாவது, கரையான் அரிக்கவாவது இடையாதாம்.

**முருங்கைமரத்தைக் காய்க்கவைத்தல்.**

முருங்கைமரம் காய்க்காமலிருக்குமானால், அதன் வேருக்கு அருகில் ஆறு அங்குலம் ஆழமுள்ள ஒரு குழி தோண்டி அதில் கொஞ்சம் பெருங்காயத்தைப் போட்டு மூடிவைத்தால், கொஞ்சகாலத்திற்குள் மரம் காய்க்க ஆரம்பிக்கும்.

**உமியின் உபயோகம்.**

நிலங்களுக்கு எருவாக மரச்சாம்பலுக்குப் பதிலாக நெல்லுமிச்சாம்பலை உபயோகப்படுத்தலாம். நெல்லுமியில் பொட்டாஷ் அதிகமாயிருப்பதால், அது பயிருக்கு ஏற்ற எருவாகும். கிராமாந்தரங்களில் வியவசாயிகள் நிலங்களுக்கு உமியையும், கருக்காயையும் எருவாக இடும் வழக்கத்தை நாம் கண்டிருக்கிறோம். உமியை எரிப்பதனால் அதன் சாரம் போய்விடாது.


# ஜனோபகாரி.

**(JANOPAKARI)**

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புஸ்தகம் 3. Vol. III. | காளயுக்தி௵ ஆவணி௴, AUGUST, 1918. | சஞ்சிகை 8. No. 8.


## The Progress of the World.
## பிரபஞ்சப்போக்கு.

**ஆயுர்வேத வைத்தியமுறையின் மேன்மை.**

இந்த வருஷம் ஆகஸ்டுமாதம் சென்னையில் கூடிய சட்டசபையில் கனம் ரங்காசாரியார் அவர்கள், சென்னை ஆயுர்வேத காலேஜுக்கும், அதுபோன்ற ஆயுர்வேத யுனானி சாலைகளுக்கும் பிரதிவருஷமும் கவர்ன்மெண்டார் பணவுதவி செய்யவேண்டுமென்றும், அவற்றின் மூலமாகச் சுதேசவைத்திய கிரந்தங்களை மொழிபெயர்க்கவும், அவைகளை அச்சிட்டுப் பிரசுரம்செய்யவும் ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றும், இந்தேச வைத்தியச் சரக்குகளின் குணாகுணங்களை ஆராய்ச்சிசெய்யவும் ஆயுர்வேத யுனானி முறைகளைக் கற்றுக்கொடுக்கவும் வேண்டுமென்றும் ஓர் பிரேரணையைக் கொண்டுவந்தார். ஊன்றிக்கவனிக்க, ஆயுர்வேத யுனானி முறைகளில் பல அரியபெரிய விஷயங்கள் பொதிந்துகிடக்கின்றனவென்பதை எவரும் மறுக்கவொண்ணாது. நமது தேசத்தில் பெரும்பாலான ஜனங்கள் ஆயுர்வேத யுனானி முறைகளின் மூலமாகவே சிகிச்சைகள் பெறுகிறார்களென்ற விஷயமும் பலரும் அறிந்ததே. இம்முறைகள் போதியவளவாக இராஜாங்கத்தாரின் ஆதரவில்லாமல் மழுங்கிப்போய்க் கிடக்கின்றனவே தவிர, அவை நமது தேசத்தில் பூண்டற்றுப் போய்விடவில்லை. ஹைதராபாத்போன்ற சுதேச சம்ஸ்தானங்களில் இம்முறைகள் எவ்வாறு ஆதரிக்கப்பட்டு வருகின்றனவென்ற விஷயம் சென்றமாதத்து "ஜனோபகாரி"யில் குறிக்கப்பட்டிருக்கின்றது. குடிகளின் தேகசௌக்கியம் நல்ல நிலைமையிலிருக்கச் செய்வது இராஜாங்கத்தாரின் கடமையாகும். இவ்விஷயம் எவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதென்பதில் ஐயமில்லை. எனினும், நமது இராஜதானியில் மொத்தம் ஜனத்தொகை 430 லட்சத்துக்கு 668 வைத்தியசாலைகள் இருக்கின்றன. அதாவது சராசரியில் 64,356 பேர்களுக்கு ஒரு வைத்தியசாலை வீதம் தேறுகின்றது. வைத்தியசாலைகளில் ஒவ்வொன்றும் பல மைல்களுக்கப்பால் இருக்கின்றது. இவைகளில் பிணியாளிகள் சிகிச்சைபெறுவது அசாத்தியமாயிருக்கின்றது. வைத்தியசாலைகளைப் பெருக்குவதென்றால், ஏராளமான பணச்செலவு பிடிக்கும். போதியவளவு சாஸ்திரப்பயிற்சி பெற்றவர்களும் கிடைக்கமாட்டார்கள். ஆகவே, பெரும்பாலான ஜனங்கள்

என்பவர் இயற்றிய உயர்ந்த ஆயுர்வேதநூலில் விரிவாய்க் குறிக்கப்பட்டிருக்கின்றது."

மேற்குறித்தவாறு ஸ்ரீமான் பண்டிதர் அவர்கள் எழுதியிருப்பது, இல்லையென்று கூறியவற்றிற்கு ஏற்ற பதிலாகும். இவற்றை நம் கவர்ன்மெண்டார் நன்கு கவனித்துத் தக்கது செய்யவேண்டுகிறோம்.

ஜெர்மன் கிழக்கு ஆப்பிரிகா.

ஜெர்மன் கிழக்கு ஆப்பிரிகாவை இந்தியாவுக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று சமீபத்தில் எச். எச். அகாகான் சொல்லியுள்ளதை ஸர் தியோடர் மாரிஸன் என்பவர் ஆமோதித்துத் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். அவர் சுமார் இரண்டுவருஷகாலமாக அங்கிருந்ததனால், இந்த யோசனை தமக்கு உறுதிப்பட்டதென்று கூறுகிறார். அவர் வெளியிட்ட யோசனைகள் "சுதேசமித்திரனில்" பின்வருமாறு காணப்படுகின்றன.

"கீழ் ஆப்பிரிகாவிலுள்ள ஜெர்மன் குடியேற்ற நாடுகளை இந்தியர்களுடைய உபயோகத்திற்குக் கொடுத்துவிடவேண்டுமென்று அகாகான் செய்திருக்கும் பிரேரணையை நான் ஆமோதிக்கிறேன். கீழ் ஆப்பிரிகாவிலுள்ள ஜெர்மன் குடியேற்ற நாடுகளை நான் நேரில் பார்வையிட்டபிறகு, இவ்விஷயத்தில் எனது அபிப்பிராயம் பலமடைந்திருக்கின்றது. இந்தியர்கள் குடியேறுமாறு இந்நாடுகள் கொடுக்கப்படுவதனால், இந்தியாவிற்கு மிகுந்த நன்மையுண்டாகும். இந்த ஜெர்மன் குடியேற்ற நாடுகள் வெகு விசாலமானவையாயிருப்பதனால், ஏழைகளாயுள்ள இந்திய வியவசாயிகளில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் குடியேறிப் பலனடைவார்கள். இந்தியாவிலிருந்து மூலதனம் கொண்டுவரப்படவும், இந்தியர்களின் ஊக்கத்தைப் பெருக்கவும் இதனால் வழி ஏற்படும். இந்தியர்கள் மூலதனத்தைப் போட்டுத் தொழில்களை இந்நாடுகளில் ஆரம்பித்தால், அவர்கள் விசேஷ லாபமடைவார்களென்பது திண்ணம். மேலும், இந்நாடுகளின் நிர்வாகத்தையும் இந்தியர்களிடத்திலேயே ஒப்படைத்துவிடவேண்டும். இந்தியாவிலோ மாகாண ஸர்விஸைச்சேர்ந்த ஜில்லா கலெக்டர் முதலிய உத்தியோகஸ்தர்கள் கீழ் ஆப்பிரிக்காவில் தகுந்த பதவிகளில் நியமிக்கப்படலாம். போலீஸ் டெப்டி சூபரென்டெண்டெண்டு போன்ற பதவிகளை வகிக்கும் இந்தியர்களை இந்நாடுகளில் நீக்ரோவத் துருப்புகளுக்கு ஆபீஸர்களாக நியமிக்கலாம். இஞ்சினீயர்கள், டாக்டர்கள், காடுகளைப் பராமரிக்கும் நிபுணர்கள், சாஸ்திர ஆராய்ச்சி செய்யக்கூடியவர்கள் ஆகிய ஸகல உத்தியோகஸ்தர்களும் இந்தியர்களாகவேயிருக்கவேண்டும். குடியேற்ற நாடுகளை ஸ்தாபித்து நிருவகிக்கத் தனக்கு யோக்கியதையுண்டென்பதை இந்தியா நிருபணம் செய்து காட்டுவதற்கு இந்த ஏற்பாடு அனுகூலமாயிருக்கும். இந்நாடுகளிலுள்ள நீக்ரோவ ஜனங்களைக் கைதூக்கிவிட்டு நாகரிகப்படுத்துவதற்குற்ற முறைகளை இந்தியர்களே நிர்ணயிக்கும்படியும் விட்டுவிடவேண்டும். தங்களுடைய நிருவாகத் திறமையைப் பரிசீலனைசெய்து பார்க்கும்படி கேட்கும் இந்தியர்களைப் பரிசீலனைசெய்ய இந்த ஏற்பாடு பிரயோஜனப்படும். இந்தியாவிலுள்ள ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் இந்தப்பிரசனையை இப்போதிருந்தே யோசனை செய்து, தங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிடவேண்டுமென்ற எண்ணத்துடனேயே நான் இவ்விஷயத்தைப் பிரஸ்தாபிக்கிறேன். இப்படி ஜெர்மன் குடியேற்ற நாடுகளை இந்தியாவின் குடியேற்ற நாடுகளாகச் செய்வதற்குத் தங்களுக்குள்ள பாத்யதைகளை இந்தியர் வெளியிடவேண்டியதோடு, இந்நாடுகள் நிருவகிக்கப்படவேண்டிய விதத்தையும் வெளியிடவேண்டுமென்பது எனது விருப்பம்."

மேற்கூறிய விதம் ஸர் தியோடர் மாரிஸன் சொல்லியுள்ளவற்றினின்று நாம் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பல உள. மிஸ்டர் மாரிஸனின் யோசனைப்படி ஜெர்மன் கீழ் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் குடியேற விடப்படுவார்களாயின், ஆயிரக்கணக்காக ஏழைகளாயுள்ள இந்திய வியவசாயிகள் அங்குச் செல்வதனால், நன்கு பலனடைவார்கள். அந்நாடுகளில் இந்தியர்கள் மூலதனத்தைப்போட்டுத் தொழில்களை ஆரம்பித்தால், விசேஷமான லாபமுண்டாகுமென்பது திண்ணம். இந்தியர்கள் பல துறைகளிலும் முன்னேற்றமடையவழியுண்டு. வெகு காலமாக இந்தியர்கள் தமக்கு ஆளுந்திறமையுண்டு என்று சொல்லி வந்ததை நிரூபித்துக்காட்ட சமயமும் ஏற்படும். ஆகவே, ஸர் தியோடர் மாரிஸனின் யோசனைகளை, பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் சிந்தித்து, தக்கது செய்யவேண்டுகின்றோம். நமது ஜனத்தலைவர்களும் இவ்விஷயத்தைக் கவனிப்பார்களாக.



## Requisites of a Teacher.

By Mr. K. T. Sundararajachariar, B.A., L.T.

## உபாத்தியாயர் கவனிக்கவேண்டியவைகள்.

உபாத்தியாயர் என்றபதத்திற்குக் குரு என்றும், ஆசாரியன் என்றும் ஆக இரண்டு பெயர்கள் உண்டு. குரு என்ற ஸம்ஸ்கிருத பதத்தில் இரண்டு அக்ஷரங்களிருக்கின்றன. முதல் எழுத்து 'கு' என்பதற்கு இருட்டு என்று பொருள். இரண்டாவது எழுத்தாகிய 'ரு' என்பதற்கு அகற்றுதல் அதாவது போக்கடித்தல் என்பது பொருள். ஆதலால், பிள்ளைகளின் மனத்திலுள்ள இருட்டுக்குச் சமானமான அஞ்ஞானத்தைப் போக்கி, சூரிய வெளிச்சத்தை யொத்த ஞானத்தை உட்புகுத்துபவனே குருவென்று சொல்லப்படுவான். ஆசாரியன் என்கிற பதத்திற்குக் குருவென்பதைக்காட்டிலும், மேன்மையான அர்த்தமுண்டு. எவனொருவன் ஸகல சாஸ்திரங்களையும் நன்கு பயின்று, இது நல்லது இது கெட்டது என்று பகுத்தறியக் கூடிய சக்தியுடன் விலக்கவேண்டியவற்றை விலக்கி, சத்விஷயங்களைக் கிரஹித்து, அவற்றைத் தானே முதன்முதலில் அப்பியசித்து, பிறகு மற்றவர்களுக்கு கற்பிக்கின்றானோ அவனே ஆசாரியனென்று அழைக்கப்படுவான். இவற்றினின்றே ஒரு உபாத்தியாயரின் கடமைகள் எத்தகையனவென்பது நன்கு விளங்கும். அவைகளுள் சிலவற்றைத் தொடர்ச்சியாக இங்குத் தருகின்றோம்.

(1) உபாத்தியாயர்களின் வேலையானது மிகவும் கடினமானதே. ஆனால், அவர்களின் வேலைக்குத் தகுந்தபடி சம்பளம் கொடுக்கப்படுவதில்லை என்ற விஷயம் பலருமறிந்ததே. இக்காரணத்தைக்கொண்டு உபாத்தியார்கள் எப்பொழுதும் பணத்தையே பெரிதாகக்கொள்ளக்கூடாது. தாங்கள் சொல்லிக்கொடுக்கும் பாடங்களில் தங்களுக்கே ஒருவித உத்ஸாகம் இருக்கவேண்டும். தங்களுடைய உத்ஸாஹத்தைக்கொண்டே பிள்ளைகளையும் உத்ஸாஹப்படுத்தலாம்.

(2) உபாத்தியாயர்கள் மிகவும் சுறுசுறுப்புள்ளவர்களாயும், உரத்துப் பேசக்கூடியவர்களாயும், கூன் குருடு முதலிய அங்கக்குறைவுகளில்லாதவர்களாயுமிருக்கவேண்டும்.

(3) உபாத்தியாயர்களின் கடமைகள் கேவலம் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதுமட்டிலுமல்ல; அவர்களின் நடவடிக்கைகளையும் ஒழுங்கு படுத்தவேண்டியது போதகாசிரியர்களின் கடமையாகும். பிள்ளைகள் தங்கள் மனத்தில் தம்முடைய உபாத்தியாயரைக்காட்டிலும் நற்குணமுள்ளவர்கள் வேறு ஒருவருமில்லையென்று படும்படி அவ்வளவு சிறப்பாக உபாத்தியாயர்கள் நடந்துகொள்ளவேண்டும். அதன்றியும், உபாத்தியாயர்கள் ஒவ்வொரு பிள்ளையையும் நன்றாகக் கவனித்து, அவனவனது தீக்குணங்களை அகற்றி, சத்தான காரியங்களையே செய்யும்படி தூண்டவேண்டும்.

(4) "கல்வி கரையில, கற்பவர்நாள்சில" என்பது பழமொழி. எவ்வளவு காலம் படித்தாலும் படிப்பு முடிவடையமாட்டாது. ஆயினும், சில உபாத்தியாயர்கள் தாங்கள் ஸகலமும் கற்றாய்விட்டதென்றும், இனிக்கற்கவேண்டியது ஒன்றுமில்லையென்றும் கருதுகிறார்கள். இது அவர்களின் பிற்போக்குக்கான மார்க்கமென்பதை அவர்கள் உணரவேண்டும்.

உபாத்தியாயர்கள் எவ்வளவு அதிகமாகப் படித்திருந்தாலும், தாங்கள் கற்பிக்கவேண்டிய வகுப்பு தாழ்ந்ததாயிருப்பினும், அங்குப் போவதற்குமுன் கற்பிக்கவேண்டிய விஷயங்களை நன்கு படித்துக்கொண்டே போகவேண்டும். இவ்விதம் செய்வதனால், பிள்ளைகளுக்கு இன்ன கற்பிக்கவேண்டுமென்பதும், இன்ன கற்பிக்கவேண்டாமென்பதும் முன்னமேயே ஏற்பட்டுவிடும். இதனால் வகுப்பில் காலஹரணமில்லாமல் பாடங்களை நடத்திப் போகலாம்.

(5) சில உபாத்தியாயர்கள் தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் பிள்ளைகளுக்குக் கற்பிக்க முயலுகிறார்கள். அது பிசகு. பிள்ளைகளுக்குக் கற்பிக்கும்போது, அவர்கள் பாடங்களைக் கவனிக்கக்கூடிய அளவை அறிந்து, அதற்கேற்றாற்போல் கொஞ்சங்கொஞ்சமாகவும், தெளிவாகவும் பாடங்களை உபாத்தியாயர்கள் கற்பிக்கவேண்டும். எத்தகைய விஷயங்களையும் தெளிவாக எடுத்துச் சொல்லும் சக்தியை உபாத்தியாயர்கள் பெற்றிருக்கவேண்டும். அதற்கு "போதனமுறை"ப் புஸ்தகங்களைப் படிப்பது நல்லது. அநுபவமுள்ள உபாத்தியாயர்களுடனும் கூடிப்பழகல் வேண்டும்.

(6) உபாத்தியாயர்களைக் கண்டால் பிள்ளைகள் அதிகக்கடுமையாகவும் பயப்படக்கூடாது; உபாத்தியாயர்கள் பிள்ளைகளிடத்தில் மிகுந்த பக்ஷமுள்ளவர்களாயிருக்கவேண்டும். பிள்ளைகளும் அவ்வித உபாத்தியாயர்களிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயும், வணக்கமுள்ளவர்களாயுமிருக்கவேண்டும். பிள்ளைகளுக்குப் பயமானது போதகாசிரியர்களின் பக்ஷத்தினால் ஏற்படவேண்டுமேயன்றி கடுமையினாலன்று. உபாத்தியாயர் சொல்வதெல்லாம் நம்முடைய நன்மைக்குத்தான் என்று பிள்ளைகள் அறியவேண்டும். உபாத்தியாயர்கள் பிள்ளைகள் செய்யும் கெட்ட காரியங்களைக்கண்டு அவர்களைத் தண்டித்தலும், நல்லகாரியங்களுக்காக அவர்களுக்கு வெகுமதியளித்தலும் செய்யவேண்டும். சில சமயங்களில் உபாத்தியாயர்களுக்கு வகுப்புக்களில் தங்களுக்குத் தெரியாமலேயே கோபம் வந்துவிடும். அப்போது அவர்கள் கோபத்தை வெளியே காட்டிக்கொள்ளக்கூடாது; அடக்கிக்கொள்ளவேண்டும். இல்லாவிடில், இதனால் தீங்கு ஏற்படுமென்பதில் ஐயமில்லை.

(7) பிள்ளைகளைப்பற்றிய கெடுதலான எண்ணத்தைஉபாத்தியாயர்கள் ஒருபோதும் வைத்துக்கொள்ளக்கூடாது. பிள்ளைகள் குற்றஞ்செய்தாலும், உபாத்தியாயர்கள் அதை ஆதாரமாகக்கொண்டு அவர்களைத் துன்பப் படுத்தக்கூடாது.

(8) உபாத்தியாயர்களில் சிலர் சப்தம்போட்டும், சிலர் அதிகமாகப் பேசாமலேயும் பாடம் கற்பிப்பதுண்டு. வகுப்பில் பாடம் நடக்கும்போது பிள்ளைகள் அதையே கவனிக்கும்படி உபாத்தியாயர் பார்த்துக்கொள்ளவேண்டும். பிள்ளைகள் உத்ஸாஹத்துடன் கவனிக்கும்படியாயும் பாடங்கள் வகுப்பில் நடத்தப்படவேண்டும். இதற்கு, சில சமயங்களில் கதைகள் சொல்லப்படலாம். சிலசமயங்களில் படங்கள் உருவங்கள் (Models) ஆகிய இவை காட்டப்படலாம்.

(9) மற்றைய தொழில்களைப் போலல்லாது உபாத்தியாயர்களின் தொழிலானது மனத்தையும் (Mind) நடத்தையையும் பற்றியது. பிள்ளைகள் இளமைப்பருவங்களில் ஏதாவது கெட்ட வழியில் பிரவேசித்துவிட்டால், அவர்கள் தம் வாழ்நாள் முழுதும் அதன் காரணமாகத் துன்புற நேரிடும். அவர்கள் அத்தகைய துறைகளில் இறங்காமலிருக்கச் செய்பவர்கள் உபாத்தியாயர்களேயாம். ஆதலால், உபாத்தியாயர்களின் கடமைகள் எவ்வளவு சிரமமானதென்பதை நான் இங்குக் கூறவேண்டியதில்லை. எனினும், அவர்கள் ஒவ்வொருவரும் தம்மாலியன்றவளவு தத்தம் கடமைகளைப் பூர்த்தி செய்ய முயலவேண்டும்.

கே. டி. சுந்தரராஜாசாரியர், பி. ஏ. எல். டி.



102

## Anthrax.

## அடைப்பான்.

அடைப்பான் என்பது ரக்த சம்பந்தமான ஓர் தொற்றுவியாதியாகும். இது மனிதர்களையும், மற்று எல்லாமிருகங்களையும் தாக்கக்கூடியது. குதிரை, மாடு, ஆடு, மான், ஒட்டகம் முதலான வீட்டு மிருகங்களே, இந்நோயால் அதிகமாகத் தாக்கப்படுகின்றன. ஆனால், நாய், பன்றி முதலியவற்றிற்கு எளிதில் இந்நோய் உண்டாவதில்லையாம். கால்நடைகளினின்று மனிதர்களையும் இந்நோய் தாக்கக்கூடுமென்று சொல்லப்படுகின்றது.

இந்த வியாதியானது சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்கவாறு அதிகப்படுவதும் குறைவதுமில்லை. இந்தியாவில் ஸமவெளிகளிலுள்ள பிரதேசங்களில் அநேகமாய்க் கால்நடைகள் இந்நோயால் பீடிக்கப்படுவதில்லையென்றும், மலைப்பிரதேசங்களிலுள்ள ஆடுமாடுகளுக்கு இந்த வியாதி பரவுகின்றதென்றும் சொல்லப்படுகின்றது.

### வியாதி பரவும் மார்க்கம்.

இந்த வியாதிக்கு மூலகாரணமாயுள்ளவிஷம் ரக்தத்தில் சேருவதனால், வியாதி உண்டாகின்றது. இந்த விஷமானது பள்ளத்தாக்கான பிரதேசங்களில் சதுப்பு நிலத்து மண்ணில் இருப்பது வழக்கம். இதன் மூலமாகவும், இதோடு சம்பந்தப்பட்ட ஜலத்தின் மூலமாகவும் இந்த வியாதி பரவும். ஆனால், இத்தகைய இடங்களில் நீர் வடியும்படியான ஏற்பாடுகளைச் செய்தால், பிறகு அங்கு இவ்வியாதி உண்டாவதில்லை. தீனியின் மூலமாகவும் இந்த வியாதி பரவும். கால்நடைகளுக்குக் காயங்கள் ஏவையேனுமிருந்தால், அவற்றின் மூலமாகவும் நோய் பரவும். அக்காயங்களின்மேல் ஈக்கள் மொய்க்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிடில் இவற்றின் மூலமாகவும் விஷமானது காயங்களிற் சேர்ந்து ரக்தத்தில் கலக்கக்கூடும். அடைப்பான் வியாதியால் இறந்துபோன கால்நடைகளின் [illegible]ம்பு, தோல் முதலானவற்[illegible]மாகவும் இந்நோய் பரவும். ஆதலால், இந்த வியாதி காரணமாக இறந்த பிராணிகளின் தோல் முதலியன நன்கு சுத்தம் செய்யப்பட்ட பிறகே உபயோகப்படுத்தப்படவேண்டும். சிற்சில ஏருக்களாலும் இந்த வியாதி பரவக்கூடுமென்று சொல்லப்படுகின்றது.

### வியாதியின் அறிகுறிகள்.

இந்த வியாதியானது கால்நடைகளுக்குத் திடீரென்று உண்டாகும். மிருகங்களை இவ்வியாதி தாக்கியவுடன், அது வெகுவேகமாகப் பரவி உடனே அவற்றை இறக்கச் செய்கின்றது. வியாதிகண்ட மாட்டுக்கு உஷ்ணமான காய்ச்சலடிக்கும்; அமைதியுடன் ஓரேயிடத்தில் படுத்திராது. அதற்கு முகம் வாடினாற்போலிருக்கும்; வயிற்றுவலி யுண்டாகும். மாடு சாணிபோடும்போது அதில் கொஞ்சம் ரக்தமும் கலந்திருக்கும். மூத்திரத்திலும் ரக்தம் கலந்திருப்பதுண்டு. மாட்டுக்குத் தேகத்தின் பலவிடங்களிலும் வீக்கங்கள் உண்டாகும். மூச்சு விடும்போதும், ஆகாரத்தை விழுங்கும்போதும் கஷ்டப்படும்; பிறகு தள்ளாடிக் கீழே விழுந்து மரணமடையும்.

### சிகிச்சைகள்.

சாதாரணமாக இந்த வியாதிக்கு வைத்திய சிகிச்சையால்யாதொரு பிரயோஜனமுமுண்டாவதில்லை. சிலர் வியாதிகண்ட பிராணிகளுக்கு உள்ளுக்கு மருந்து கொடுப்பதுண்டு. ஒருபடி ஜலத்தில் ஒரு ஔன்ஸ் பினைல் மருந்தைக் கலந்து கொடுக்கலாம். அல்லது கார்பாலிக் ஆஸிட்டையும் உபயோகிக்கலாம். ஆனால், இவற்றால் அதிகமான பலனை எதிர்பார்ப்பது அசாத்தியம்.

கால்நடைகளுக்கு இந்த வியாதி வராமலிருக்கும்படி நாம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

இவ்வியாதி தோன்றியிருக்குமிடங்களில் வியாதிப்படாத கால்நடைகளுக்கு இனாகுலேஷன் செய்வது நல்லது. வியாதிப்பட்ட மிருகங்களைத் தனியே கட்டிவைக்கவேண்டும்; மற்ற கால்நடைகளோடு சேரவிடக்கூடாது. இந்நோயால் இறந்த மாட்டின் உடலத்தை நெருப்பிட்டு எரித்துவிடவேண்டும். இதை மாடு இறந்த இடத்திலேயே செய்வது நல்லது.

# கிளியின் படிப்பு *

## (The Parrot's Training.)

[ஸ்ரீமான் என். எஸ். சுப்பிரமணியன் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.]

### 1

ஒருகாலத்தில் ஒரு கிளி இருந்தது. அது கற்றபக்ஷியன்று; மூடத்தனமானது; ஏதோ சில வார்த்தைகள் பேசிற்று. ஆனால், ஒருநாளும் வேதாத்யயனம் செய்யவில்லை. அடிக்கடி தத்தித் தத்தி விளையாடிற்று. ஆனால், அதற்கு நல்லொழுக்கம் போதாது.

ராஜா யோசித்தார்: "அறிவின்மையால் முடிவில் அதிகமான செலவு ஏற்படும். மூடர்களும் மற்றவர்களைப்போல் சாப்பிடுகிறார்களேயன்றி, அவர்களால் பிரதிப் பிரயோஜனமென்பதே கிடையாது."

உடனே தன் மருமான்களை வரவழைத்து அந்தக் கிளிக்குப் படிப்புச் சொல்லிக்கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி ஆஞ்ஞாபித்தார்.

சிறந்த பண்டிதர்கள் வரவழைக்கப்பட்டார்கள். விஷயங்களைத் தீர ஆராய்ந்தபிறகு, அல்பமான கூட்டில் வசிக்கிற ஸ்வபாவத்தினால் கிளிக்கு மந்தபுத்தி யுண்டாயிற்று என்று நிச்சயித்தார்கள். ஆகவே, கிளியின் படிப்பு விஷயமாய் முதலில் அவசியம் செய்யவேண்டியது தகுந்த கூடுதான் என்று பண்டிதர்கள் அபிப்பிராயப்பட்டார்கள்.

யதேஷ்டமான வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டு பண்டிதர்கள் ஸ்வக்ருஹம் சென்றார்கள்.

### 2

வெகு அலங்காரமான தங்கக்கூடு பண்ணப்பட்டது. உலகத்தின் நாலா பக்கங்களிலிருந்தும் கூட்டங்கூட்டமாய் ஜனங்கள் இவ்வற்புதக்காட்சியைக்காண வந்தார்கள். "ஆஹா, கல்வியைக் கவர்ந்து கூட்டிலிட்டார்கள்!" என்று சிலர் ஆனந்த பாஷ்பம் சொரியச் சொல்லிக் களித்தார்கள். மற்றவர்கள், "கல்வி எப்படியானாலும் கூடு முடிவுவரையில் சாச்வதமாயிருக்கும். பக்ஷிக்கு நல்ல அதிருஷ்டந்தான்" என்றார்கள்.

தட்டான் பையினைப் பணத்தை நிரப்பிக்கொண்டு வீடுநோக்கி நடந்தான்.

### 3

பக்ஷிக்குப் பாடம் கற்பித்துக்கொடுக்க ஒரு பண்டிதர் நியமிக்கப்பட்டார். ஆடம்பரத்துடன் ஒரு சிட்டிகைப் பொடியை மூக்கில் திணித்துக்கொண்டு, "பாடப் புஸ்தகங்கள் எவ்வளவிருப்பினும் தேவைதான்" என்றார் அப்பண்டிதர்.

உடனே மருமான்கள் அநேகம் காபிஸ்டுகளை வரவழைத்தார்கள். அவர்கள் அநேகம் புஸ்தகங்களிலிருந்தும் ஏடுகளிலிருந்தும் காபி செய்து போராய்க் குவித்துவிட்டார்கள். பார்த்தவர்கள் "ஆஹா, கல்வி கோபுரமாய்க் குவிந்து, குவியலின் சிரம் மேகத்தில் மறைந்திருக்கிறதே!" என்றனர்.

காபிஸ்டுகள் பணவெகுமதியால் மனங்களித்து வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

மருமான்கள் கூட்டைச் சீர்திருத்தி வைத்துக்கொள்ளுவதில் கண்ணுங்கருத்துமாய் இருந்தார்கள். கூட்டை நன்றாய்த் தேய்த்துப் பளபளவென்று வைத்திருப்பதைக்கண்ட ஜனங்கள், "இதுவல்லவோ கல்வியின் தேற்றம்!" என்றனர்.

கிளியின் படிப்பை முன்னிட்டு அநேகம் வேலையாட்களும், மேற்பார்வையாளர்களும், அவர்களைச்சேர்ந்த மாமன் மைத்துனன் மற்றுமுள்ள எல்லையற்ற பந்துக்களும் பங்களாக்களைக் கட்டிக்கொண்டு சௌக்கியமாய் வசித்து வந்தார்கள்.

### 4

உலகில் ஏது இருந்தாலும் இல்லாவிட்டாலும் குற்றஞ்சொல்லிகள் கட்டாயம் இருப்பார்கள். கிளியைத்தவிர கிளிஸம்பந்தமாக வேலைசெய்கிற மற்றெல்லோருக்கும் சுகந்தான் என்று மேற்கூறிய குற்றஞ்சொல்லிகள் சொல்லிவந்தார்கள்.

இது ராஜாவின்காதிற்கெட்டியது; மருமான்களைக்கூப்பிட்டு, "என தருமை மருமான்களே! கிளியின் படிப்பு விஷயமாய் என்னென்னவோ காதிற் படுகின்றனவே" என்றார்.

"மகாராஜாவே! அது விஷயமாய்த் தட்டார்களையும், பண்டிதர்களையும், காபிஸ்டுகளையும், மேற்பார்வையாளர்களையும் கேட்டுப்பார்த்தால் தெரியும். இந்தக் குற்றஞ்சொல்லிகளுக்கு வயிற்றுக்குச் சோறு இல்லாததனால், நாக்கு நீண்டுவிட்டது" என்று மருமான்கள் சமாதானம் சொன்னார்கள். ராஜா மிகவும் திருப்தியடைந்துவிட்டார்; சந்தோஷத்தினால் தம்மேலிருந்த ஆபரணங்களைக் கழற்றித் தம் மருமான்களுக்கு அணிந்துபார்த்துச் சந்தோஷித்தார்.

### 5

ஒருநாள் ராஜா கிளியின் படிப்பு விஷயமாய் நடந்திருக்கும் ஏற்பாடுகளையும், படிப்பின் தேற்றத்தையும் தாமே நேரில் கண்டு களிக்க வெண்ணிக் கல்விச்சாலைக்கு வந்துசேர்ந்தார்.

கலாசாலையில் தாரை தம்பட்டங்கள், சின்னமேளம், பெரியமேளம், பாண்டு, புல்லாங்குழல் முதலிய வாத்தியங்கள் முழங்கின. பண்டிதர்கள் உச்சஸ்தாயியில் ராஜாவுக்கு ஆசிகூறினார். தட்டான், காபிஸ்ட், மேற்பார்வையாளர், அவர்களைச் சேர்ந்தவர்கள் எல்லோருமாக ஏகோபித்துக் காதுசெவிடுபடும்படி ஜயகோஷம் செய்தனர்.

மருமான்கள் மந்தஹாஸத்துடன் "மகாராஜாவே! தங்களபிப்பிராயமென்ன?" என்று கேட்டார்கள்.

"மிகவும் சிலாக்கியமான படிப்புப்போல்தான் தோன்றுகிறது" என்றார் ராஜா.

அதிக ஸந்தோஷமாய் அரண்மனைக்குப் போவதற்காக யானையின்மீது ஆரோகணிக்கவிருக்கும் ஸமயத்தில் குற்றஞ்சொல்லி குறுக்கிட்டான்: "மகாராஜாவே! பக்ஷியைப் பார்த்தீர்களோ?"

"ஓஹோ, வாஸ்தவந்தான்! பக்ஷிஞாபகம் சுத்தமாய் இல்லாமற் போய்விட்டதே" என்றார் ராஜா. பண்டிதர்பக்கம் திரும்பி, படிப்புச் சொல்லிக்கொடுக்கும் வழிகளைப்பற்றி விசாரித்தார். பண்டிதர்கள் கற்பிக்கும் முறைகளை விஸ்தாரமாய்ச் சொன்னபொழுது, ராஜா மிகவும் திருப்தியடைந்தார். அந்த முறைகளின் நேர்த்தியையும்பெருமையையும் யோசித்துப்பார்த்ததில், பக்ஷியினுடைய எண்ணம் பறந்துபோயிற்று. ஏற்பாடுகள் சரிவர நடந்திருக்கின்றனவென்று திருப்தியடைந்தார். பக்ஷி ஏதாவது புகார் சொல்லக்கூடுமோவென்றால், அது முடியாதகாரியமாக இருந்தது. அதன் தொண்டை

* இது டாக்டர் ஸர் ரவீந்திரநாத தாகோர் வங்க பாஷையில் இயற்றியது. ஆங்கிலத்தில் தர்ஜுமா செய்யப்பட்டு "மாடர்ன் ரிவ்யூ" வில் வெளிவந்தது இங்கு மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது.

யில் அடைக்கப்பட்டிருந்த புத்தக எடுகள் அதைச் சத்தமிடவாவது பேசவாவது முடியாமல் செய்துவிட்டன. படிப்புச் சொல்லிக் கொடுக்கும்பொழுது யாராவது பார்த்தால், மயிர்ச்சிலிர்ப்பெடுக்கும்.

மறுபடியும் யானைமீது ஏறுமுன் ராஜா அந்தக் குற்றஞ்சொல்லியின் இரு செவிகளையும் நன்றாய்த் திருகும்படி கட்டளையிட்டார்.

6

பக்ஷி நாளுக்குநாள் சுத்த சூன்ய ஸ்திதியை நெருங்கிக்கொண்டு வந்தது. படிப்பும் ஸந்தேகமில்லாமல் விருத்தியாய்க்கொண்டுதான் வந்தது. ஆனாலும், சில சமயங்களில், காலைத் திரவின் கூட்டை எட்டிப் பார்த்தபொழுது, பக்ஷி இறகை அடித்துக்கொண்டு ஏதோ சந்தோஷப்படுவதுபோலக் காணப்பட்டது. இவை கற்று, மெதுவாய்க் கூட்டின் கம்பியைக் கொத்தினபொழுது பக்ஷியைப் பார்த்தல் பரிதாபகரமாயிருந்தது.

"என்ன அக்ஷட்டத்தனம்?" என்று உறுமினான் கொத்தவால்.

உடனே படிப்பு டிபார்ட்மெண்டில் கொல்லனுக்கு உத்தியோகம் கொடுக்கப்பட்டது. சுத்தியால் தட்டும் சப்தம் காதைத் துளைத்தது. சீக்கிரத்தில் ஒரு இரும்புச் சங்கிலி சித்தமாயிற்று. பக்ஷியின் இறகுகளும் வெட்டப்பட்டன.

ராஜாவின் மருமான்கள், "இந்தப் பக்ஷிக்கு நல்ல நடத்தைதான் கிடையாதென்றால், க்ருதஜ்ஞதையாவது இருக்காதா?" என்று கடிந்து கூறினார்கள்.

ஒரு கையில் புத்தகத்தையும் மற்றொரு கையில் கோலையும் வைத்துக்கொண்டு பண்டிதர்கள் பாடங்கற்பித்தார்கள்.

ஜாக்கிரதையாய்க் காவல் காக்கும் கொத்தவாலுக்கும், திறமையுடன் சங்கிலிசெய்த கொல்லனுக்கும் மரியாதைப் பட்டங்கள் கொடுக்கப்பட்டன.

7

பக்ஷி இறந்தது.

எப்பொழுது, எத்தனை நாட்களுக்கு முன் இறந்ததென்று ஒருவருக்கும் தெரியாது. குற்றம் சொல்லி முதன்முதலில் இதைப்பற்றி வதந்தி யுண்டாக்கினான்.

ராஜா மருமான்களைக் கூப்பிட்டு, "என்னருமை மருமான்களே! என்னென்னவோ காதில் படுகின்றதே" என்றார். மருமான்கள், "மகாராஜாவே! பக்ஷியின் படிப்பு பூர்த்தியாய்விட்டது" என்றார்கள்.

"இப்பொழுது குதிக்கிறதா?" என்றார் ராஜா.

"இல்லவே இல்லை" என்றார்கள் மருமான்கள்.

"பறக்கிறதா?"

"இல்லை."

"பாடுகிறதா?"

"இல்லை."

"பக்ஷியை இ[illegible]க் கொண்டுவாருங்கள்."

அநேகம் அரு[illegible]ச் சிப்பாய்கள் இருபுறத்திலும் உருவின [illegible]தியுடன்வர, கொத்தவால் பக்ஷியை ராஜாமு[illegible] கொண்டுவந்து வைத்தான். ராஜா பக்ஷியைத் [illegible] கையால் அழுத்திப் பார்த்தார்; பக்ஷி அசையவில்லை; சத்தமுமில்லை. உள்ளிருந்த காகித[illegible]ள்தான் சப்தித்தன.

வெளியில் வச[illegible]காலக் காற்று சப்தத்துடன் அடித்து, அசோக மரங்களின் இலைகளை அசைத்தது.



# New Sonnets in Tamil.

By Mr. V. Subba Aiyar

## தமிழ் நவீனப் பாசுரங்கள்.

### கண்ணன் திருவவதாரம்.

நிலைமண்டில ஆசிரியப்பா.

வசுதேவ னெனுமோர் மன்னவன் கஞ்சனின்
பசுங்கிளி யொத்தநற் றங்கையாந் தேவகி
தன்னையே மணந்து சகலருங் கண்டிட
வென்னவே பவனி யெழிலுடன் வருகையில்
ஆகா யத்திலோ ரசரீ ரவாக்கு
'ஓகோ! கஞ்சனே யுன்றனைக் கொல்ல
இவளது வயிற்றிலோ ரெழிலுடைப் புதல்வன்
தவறிலா துதிப்பனே தடுத்திட முடியுமோ?
என்றதுங் கஞ்ச னவளின் றெடுக்கும்
நன்றுடைப் புதல்வரை நாசமுஞ் செய்து
கண்ணனைப் பெற்றிடக் காலம் வருகையி
லெண்ணவுங் கூசுறுஞ் சிறையி லடைத்திட
வங்கே பிறந்துமற் றவன்றன் காவலைப்
பங்கப் படுத்திய பரமனந் துணையே.

### (2) சூரியன்.

நேரிசை ஆசிரியப்பா.

உலகினி லுள்ள பொருள்களை யெல்லாம்
பலமுறச் செய்து பலன்றனைத் தரவே
கிழக்கி லுதித்துக் கீர்த்தியோ டொளிரும்
பழமை வாய்ந்தவிப் பானுவைப் பாரீர்:
முழக்குடன் கூடிய முத்துறை கடலின்
நீரினை யாவியாய் நினைக்குமுன் செய்து
பாரினில் மறுபடி பண்புள மழையாய்ப்
பெய்வதாம் பெரிதோ ருதவியா லிங்குள
மாந்தர் குடித்திட மதுரமார் தண்ணீர்
வாய்த்திடு, மன்றியும் வறிதே கிடக்குங்
குப்பையை யெல்லாங் கூட்டியும் மானிடர்
செப்பொணுச் சுகமு மடைந்திடச் செய்திடும்;
இன்னதோ ருதவி யிலையேல்
நன்னய முடனு மிருத்தலெங் ஙனமே.

### (3) சந்திரன்.

நிலைமண்டில ஆசிரியப்பா.

ஒருநாள் முழுது மொளிகொடுத் துயர்ந்த
பரிதி மேற்கடல் தன்னிற் பாய்ந்திட
உலகை யிருள்வந் துவப்புடன் கொள்வதைத்
தடுக்க வென்றே வருகிற சந்திரன்,
எடுத்தோர் மந்திரம் வல்லவன் வானில்
விடுத்த தோர்வெண் தட்டென விளங்கக்
கண்டு மகிழா ருண்டோ சொல்லாய்;
வெண்டிரை வேலையுங் கண்டதும் பொங்கி
அவனை வரவேற் பதுபோ லகன்ற
விசும்பினை நோக்கியே யெழும்பு மன்றோ?
அன்றியு மவனது காந்தியா லொளிரும்
முன்றிலும் மோகம் விளைத்திட நின்றும்
அழகிலாப் பொருள்க ளழகுறச் செய்திடும்
பழமைவாய் மதியைப் பாருளோய் மகிழே.

### (4) இத்தேசத்துப் புண்ணிய நதிகள்.

நிலைமண்டில ஆசிரியப்பா.

சங்கரன் றலையினின் றிழிந்த கங்கையும்
அங்கதை யடைந்திடும் யமுனை யென்பதூஉம்
கோதறு நீர்தரு கோதா வரியுடன்

தீதிலாச் செம்மைவாய் வேத மோதிய
கரைகளை யுடையதாய்க் கனமுடன் வளர்
[ந்திடு
சரசு வதியெனுஞ் சால்புள நதியும்
நரர்வினை போக்கிடும் நருமதை யென்ப
[தூஉம்
பாரந்துள பூமியிற் பலன்பல தந்திடுஞ்
சிறப்புவாய் சிந்து வென்பதோ டாறும்
குறுமுனி குடவரை தன்னிற் கமண்டல
மிருத்தியங் ககன்றிட வியைந்தவோர்
[வாயசங்
கவிழ்த்தலுங் காவிரி யெனப்பெயர் கொ
[ண்டே
தவழ்ந்திடு மாறுந் தங்கி யின்றித்
தழைத்திடு மேழாந் தகைமைவாய் நதி
[களே.

---

(5)

**பருவதம்.**

நேரிசை ஆசிரியப்பா.

பூமியி லுயர்வுறு பாகமே பருவத
மாகுமென் றறைவது சகசமே யாயினும்
நாமதைக் குறித்து நன்குண ரப்புகின்
காமமே தந்திடு கான்பவ தோன்றிடும்
அன்னவை தம்மிலே யழகுவாய் மரம்பல
நன்னயமாகவும் நயத்தலை யுணரலாம்
அவைகளின் கிளைகளி லைந்சுக முதலிய
சுவைதரு குரலுள சோதியர் பறவை
[கள்
இருத்தலு மன்றியு மெழிலோ டிலவும்
யானையுஞ் சிங்கமு மமைந்துள கானலாம்
தீதிலா நீர்தரு திவ்விய நதிகளை
ஏதமில் லருவியா யிழிவதும் வியக்கலாம்
இவ்வித வெழிலு மேனையுஞ்
செவ்வனே சேர்ந்தது மலையெனச் சொல்
[வதே.

---

(6)

**போர்.**

நிலைமண்டில ஆசிரியப்பா.

"உலகினி லக்ரம மோங்கி வளர்ந்தே
கலைகளுங் கனமிழந் தழலும் வேயில்லை,
நாமே நயமுட னிங்கவ தரித்த
லாமே, அப்புறம் போரும் விளையும்,
அன்னதன் முடிவினி லறமே துலங்கும்"
என்றெழிற் கண்ண னிசைத்தான் பாண்
[டவர்
தம்முளே விசயன் தியங்கிடும் வேளையில்;
ஆகையாற் போரென வறையப் படுவதும்
வேகமாய்ப் புவியுளோர் விமல மடைந்
[திடச்
செய்திடும் வழிகளிற் சிறந்ததென் றுண
[ர்வாய் :—
இந்நாள் நடந்திடு சண்டையில் ஜெர்மனி
தன்னை யுகையுடை கைஸர்தன் நெறியை
மறந்ததா லன்னவன் மறத்தொழில் களை
[யப்
பிறந்தனர் ஜியார்ஜு மன்னனும் பிறரு
[மே.

வி. சுப்பய்யர்.

---

*N. B.*—This model will be continued, if the subscribers to the journal appreciate them: Editors of other journals are allowed to publish them provided they send 2 Copies of the issue in which they appear to the undersigned. But the right of publishing a collection in book-form is reserved by the author: The sixth sonnet is allowed to be used by the "War publicity Board" in any way they think best:

V. SUBBA AIYER,
*Sitharama Mudali St., Vellore.*

---

**ஔவை.**

நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதிநூல்களையும் தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம். பலநூல்களைத்தழுவியும், புலவர்களின் கர்ணபரம்பரையை அனுசரித்தும் இனிய எளிய வசன நடையில் இயற்றப்பட்டுள்ளது. சிறுவரும் சிறுமியரும் எளிதிற் படித்தறிந்துகொள்ளக்கூடியது. வித்வான்கள் பலராலும் மெச்சப்பட்டது. விலை அணா 6.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
வேலூர், (தென்னிந்தியா.)



## Elementary School Teachers.

BY PANDIT P. K. SREENIVASACHARIAR.

## கீழ்தரக்கல்விச்சாலை ஆசிரியர்கள்.

இக்காலத்தில், கீழ்தரப்பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் நிலைமை அவர்களுடைய கல்வியிலும், பொருள் வருவாயிலும் குறைவுற்றிருக்கின்றது. ஸ்திவாரம் என்னும் கீழ்க்கட்டிடம் பலமுற்றிருந்தாலன்றி, அதன்மேற் கட்டப்படும் மாடமாளிகை கூடகோபுரங்கள் உறுதியாயும் சாச்வதமாயும் நிற்குமோ? அங்ஙனமே, ஆரம்பக்கல்வி பிள்ளைகளுக்குச் சிறப்புற்றிருந்தாலன்றி அவர்கள் மேலே பயிலுங் கல்வி சிலாக்கியமாயும் உறுதியாயும் பயன்படுமோ? சிறு பிள்ளைகளுக்குக் கற்பிக்கின்ற உபாத்தியாயர்கள் கல்வியில் தேர்ந்து ஜீவனத்திற்கு முட்டுப்படாவண்ணம் தக்க பொருள்வாய் பெற்றிருந்தால்தான் மாணவர்களுக்கு இனிதாகக் கல்வி புகட்டக்கூடும். பல சிறு பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் தம்கீழ்க் கல்வி பயிலும் பிள்ளைகளுக்குப் போதிப்பதற்குற்றவளவும் கல்வியறிவின்றி யிருக்கிறார்கள். ஜீவனோபாயம் கடினமாயிருக்கிற இக்காலத்தில், உபாத்தியாயர்கள் மாதச்சம்பளம் எட்டுரூபாய் முதல் (அதிகமாய்ப் பெற்றால்) இருபத்தைந்து ரூபாய் வரையில்தான் பெறுகிறார்கள். இங்ஙனம் குறைந்த சம்பளம் பெறுபவரிற் பெரும்பாலோர் கல்வியிலும் குறைவுற்றிருப்பதை ஆங்காங்குக் காணலாம். இதனை எண்ணுங்கால், தயவாளர் ஐயோ! எனப் பரிதவியாமலிரார். ஜீவிப்பதற்குச் சௌகரியமான வரும்படியில்லாதவர்கள் எங்ஙனம் திருப்தியுடனும் சந்தோஷத்துடனும் கல்வி புகட்டக்கூடும்? அவர்கள் ஜனங்களால் நன்கு மதிக்கப்படுவார்களோ? சாதாரணமாக, ஒவ்வொருவருடைய அந்தஸ்தும் கௌரவமும் இக்காலத்தில் அவரவரது பொருள் வருவாயையே பொறுத்து இருக்கின்றன. ஆபீஸ் முதலிய இடங்களில் வேலைக்காரருடைய (Peon) மாதச்சம்பளம் ரூபாய் எட்டு, பத்தாகவிருக்க, உபாத்தியாயர்களுடைய சம்பளமும் அப்படியிருந்தால், இவர்கள் ஜனங்களால் எங்ஙனம் நன்கு மதிக்கப்படுவர்? பிள்ளைகள்தாம் இவர்களிடத்தில் எங்ஙனம் நன்கு மதிப்புவைப்பர்? இவ்விஷயத்தில் பள்ளிக்கூடங்களைத் தாபித்திருக்கின்ற இராஜாங்கத்தாரும், டிஸ்ட்ரிக்ட் போர்டாரும், தாலுக் போர்டாரும், முனிசிபாலிடியாரும், மற்றும் பிரபுக்களும் கருணையோடு கவனித்து நலம்புரியின், அது, உபாத்தியாயர்களுடைய ஜீவனம், அந்தஸ்து இவைகளை உயர்த்துவது மாத்திரமேயன்றி, பிள்ளைகளின் கல்விப் பயிற்சியையும் மேன்மையுறச்செய்யுமென்பது துணிபு. ஜீவனத்திற்குக் கஷ்டப்படும் உபாத்தியாயர்கள் ஈனமான தொழில்களைச் செய்வதும், கடன் வாங்கி அக்கடனில் மூழ்குவதும், அதனால் தங்கள் கல்வியை அபிவிருத்தி செய்துகொள்ள அவகாசம் பெறாமலிருப்பதும், கல்வி புகட்டவேண்டிய காலத்தில் தங்கள் சம்சாரத்தைத் தாங்குவதைக் குறித்து உபாயம் சிந்திப்பதுமாயிருந்தால், ஆரம்பக்கல்விச்சாலைகள் எங்ஙனம் மேன்மையுறும்?

ஆரம்பக்கல்வியானது குற்றங்குறைவுகளுக்கு இடமில்லாதபடி இருக்கவேண்டுமாயின், உபாத்தியாயர்கள் தங்கள் தாய்மொழியில் மிகவும் வல்லுநராயிருத்தல்வேண்டும். என்னையெனில், பிள்ளைகளுக்கு முதலில் புகட்டுங்கல்வி தாய்மொழியிலேயேயன்றோ? தெய்வபக்தியையும், நன்னீதிகளையும், தேசசரித்திரங்களையும், நாட்டுவளங்களையும், தேயத்துப் பழக்கவழக்கங்களையும், நாகரிகங்களையும் மற்றும் இவைபோன்ற பிறவற்றையும் நம் தாய்மொழியிலன்றிப் பிறமொழியில் கறந்தபால் கறந்தபடி சரியாகக் காண இயலுமோ? பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் இவற்றையெல்லாம் அறிதற்குத் தாய்மொழியில் வல்லவராயிருத்தல்வேண்டுமென்பது மறுக்கவொண்ணாதது. இக்காலத்து உபா

த்தியாயர்கள் ஆங்கிலத்தில்தான் தேர்ந்தவரல்லரென்பது திண்ணம். தம் தாய் மொழியிற் சிறிது ஊக்கமெடுத்துக்கொண்டால் தக்க பயிற்சி பெறலாமே! இவர்கள் தமிழாசிரியரிடத்துச்சென்று கல்வி பயின்றோ, தம்முயற்சியால் தாமே பயின்றோ தமிழில் ஏன் தேர்ந்தவராகக் கூடாது. இவர்களுடைய சோம்பலும் அறிவின்மையுமே இவர்களுடைய கீழ்நிலைமைக்குக் காரணம். இவர்களது ஊக்கமின்மையைக் குறித்துக் கவனிப்பின் இவர்களைக் குறித்துப் பரிதவிக்கத்தான் என்ன நியாயமிருக்கிறது? இவர்கள் தங்களுடைய கல்வியினால் தங்கள் நிலைமையை உயர்த்திக்கொள்ளவேண்டும். வித்தியா யோக்கியதை உள்ளபடி சம்பாதித்துக்கொண்ட பின்னர், தங்கள் வித்தியாதிகாரிகளைச் சம்பளம் முதலியவற்றில் சௌகரியம் செய்து கொடுக்கும்படி வற்புறுத்திக் கேட்கலாமன்றோ? ஆங்கிலமேயன்றித் தமிழும் தெரியாத இவர்கள் தங்கள் நிலைமையை உயர்த்திக்கொடுக்கும்படி தலைவர்களைக் கேட்க வாய் இருக்கிறதா? உபாத்தியாயர்கள் பாண்டித்தியம் பெற்றபிறகு, தங்களுக்குத் தலைவர்கள் தக்க சௌகர்யம் செய்துகொடுக்காவிட்டால், சௌகர்யமில்லாத அக்கல்விச் சாலைகளை விட்டு மற்றெங்கேனும் போய்ப் பிழைக்க வகையில்லையா? தமிழில் தக்க புலமையுற்ற பலர், பாரதம், இராமாயணம் முதலிய நூல்களைப் பிரசங்கிப்பவர்களாயும், மற்றும் உபந்நியாசகர்களாயும், பத்திரிகாசிரியர்களாயும், கிரந்தகர்த்தாக்களாயும், பெரிய கலாசாலைகளில் தமிழாசிரியர்களாயும் கௌரவமான நிலைமைகளில் இருந்துகொண்டு சுகமாக ஜீவனம் செய்பவர்களைக்குறித்து இந்தக் கீழ்தரப்பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்கள் ஏன் கவனிக்கக்கூடாது?

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும்,—நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானும், தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்."

"முயற்சி திருவினை யாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

"ஊக்க முடைமை, ஆக்கத்திற் கழகு."

இந்த நீதிமொழிகளை ஒவ்வொரு உபாத்தியாயரும் பாராயணம் செய்து சிந்தித்து ஏற்ப ஒழுகுவது நலமாகும்.

உபாத்தியாயர்களிற் பலர் தங்கள் பெயர்களைக்கூடப் பிழையற எழுத இயலாதவர்களாயிருப்பதைக்குறித்துமிகவும் வியசனிக்கவேண்டியதாயிருக்கின்றது. பலர்க்குக் கடிதமெழுதத்தெரியாது. பலர் ஆத்திசூடி முதலிய சிறுவர்களுக்குக் கற்பிக்கவேண்டிய நூல்களின் பொருளும் அறியார். பலர் 'ஐயா' என்பதை 'ஐய்யா' என்றும், 'அன்புள்ளஐயா' என்பதை, 'அன்பும் பிரியமுமுள்ள ஐயா' என்றும், 'இதனடியிற் குறித்த புஸ்தகங்களை' என்பதை 'யிதனடியிர்க் குரித்தப் புஷ்தகங்களை' என்றும் (சிலர் 'இதனடியிற்க் குறித்த புஸ்த்தகங்களை' என்றும்) எழுதுகிறார்கள் என்பதை நாம் நிரூபித்துக்காட்டக்கூடும். ம-ா-ா-ஸ்ரீ என்பதை ஒருவர் பெயர்க்குத்தான் குறித்தெழுதவேண்டுமென்பதை அறியாமல், ம-ா-ா-ஸ்ரீ பாமினைஞர் என்றும், மற்றும் இதுபோன்றும் விலாசம் எழுதுவதிற் பிழைசெய்பவர்களும் உண்டு. சிலர்க்கு மரியாதையாகக் கடிதமெழுதவே தெரியாது. கல்வியறிவு தகுதியாக இன்மையாலேயே இத்தகைய பிழைகளைச் செய்கின்றார்களென்பது ஒருதலை. உபாத்தியாயர்கள் மேன்மைநிலையை அடையவேண்டுமென்பதேயன்றி, அவர்களைத் தாழ்த்திப் பழித்துக் கூறுவது எமது கருத்தன்று. உள்ளபடி மனமுருகியே இவ்விஷயங்களை வெளியிடலானோம்.

பண்டித பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.



## How to spend Leisure Hours.

By Mr. D. S. Nesamani.

## விடுதிப்பொழுதைக் கழிக்கும் ஆறு.

["சுறுசுறுப்புடைய ஒரு சிறு தேனீ, ஒளிரும் ஒவ்வொரு மணி நேரத்தையும் லாபப்ரயோகஞ்செய்து, அலர்ந்த ஒவ்வொரு புஷ்பத்தினின்றும் எப்படி தேன் சேர்க்கின்றது! நானும், உழைப்பதிலும், சாதுர்ய வேலை செய்வதிலும் சுறுசுறுப்புடையவனாயிருப்பேன்; ஏனெனில், வேலை வெறுக்குங் கரங்களுக்குக் கலிபுருஷன் ஆராய்ந்து தீங்கைக் கண்டுபிடித்துக் கொடுத்துதவுகிறான். (நான் ஜீவித்த) ஒவ்வொரு நாளைப்பற்றியும் கடைசிக் காலத்தில் நான் நற்சரித்திரத்தைக் கொடுக்கக்கூடியவனாகும்படி என் முதற்பருவம் நூற்பயிற்சியில் அல்லது நற்கருமம் புரிவதில் அல்லது ஸ்வஸ்த விநோத விளையாட்டில் கழிவதாக." உவாட்ஸ் ]

நாம் வசிக்கும் இந்நூற்றாண்டு நாளுக்குநாள் கல்வியறிவு முதிரப்பெறுங் காலம். இது மநுஷ்யர் தமக்கு எவ்வெவை கிட்டுகின்றனவோ அவ்வவற்றினின்று நன்மைபெற முயலுங்காலம்; நம்மை நோக்குபவர் மகிமையை ஸம்பாதித்து, வேதநாயகனது இருப்பைக் கூறநின்று உணர்த்தவேயல்லாமல் வேறெதற்கும் உதவாதனபோல் தோன்றும் நீர்வீழ்ச்சிகளினின்றும் மநுஷ்யர் மின்ஸாரத்தை உற்பத்தியாக்கி, பெருநகரங்களுக்கு ஒளியுதவி, வண்டித்தொடர்களை இருப்புப் பாதைகளின்மீது எளிதில் துரிதமாய்ச் செலுத்தி, பல தொழிற்சாலைகளின் யந்த்ரங்களை இயக்கிக் களிக்கும் காலம். 'பிராணனை உடலினின்று பிரிக்கும் மஹா மாரியைப் பரவச்செய்து,' என்றும் தொந்தரையே தருவனவென்று எண்ணப்படுவதனால் கொல்லப்படும் எலிகளையும் மாநிடர் போஷித்து, அவற்றைக்கொண்டு நிலக்கரிக் குழிகளின் யந்த்ரங்களின் சக்கரங்களைச் சுழற்றிக்கொள்ளுங் காலம் இது. எனவே, இது, ஆறறிவினர் தம்மாலியன்றவரை தம்பாலுள்ளவற்றைப் பயன்படுத்திக்கொள்ளும் காலம்.

மற்றும், இது, மநுஷ்யர் தேற்றமடையுங் காலம். நாம் நம் மூதாதையர்களினும் சில துறைகளில் சற்றேறும் தேர்ச்சியடைந்துள்ளோம்; நடையுடைபாவனைகளில் இக்காலத்திற்கு ஏற்ற கோலந்தரித்து மகிழ்கின்றோம். தம்பெயரும் எழுதத்தெரியாதவர்களின் தொகை, சில பத்து வர்ஷங்களுக்கு முன்னிருந்ததைவிடத் தற்காலத்தில் குறைந்ததே. சுருங்கச்சொன்னால், உண்மையாகவே, இது, நாம் விருத்தியடைய ப்ரயாஸப்படுங் காலம்.

ஆம்: நாம் பல துறைகளில் தேர்ச்சியடைந்திருக்கிறோம்; ஆனால், நம்காலத்தை ஆதாயப்படுத்திக்கொள்ளும் வித்தையில் தேர்ந்திருக்கிறோமா? விசேஷமாக, நாம் நந்தொழிற்சாலைகளினின்று வெளிப்பட்டபின், நமக்குள்ள விடுதிப்பொழுதை நாம் சரியாக ப்ரயோகிக்கிறோமா?

'விடுதிப்பொழுது' என்னுந் தொடர்மொழியால், நாம், மநுஷ்யர் வேலையொழிந்து ஓய்ந்திருக்கும் நேரத்தைக் குறித்தோமாதலால், இக்கல்வி அநாவச்யமானது என்று பலர் கருதல் அறியாமையின்பாற்படும் என்பது நிச்சயம்; ஏனெனில், இது காலத்தைப்பற்றியது; காலம் நம்மாயுளே.

"மனிதர்க்கு வயது நூறல்லது இல்லை;
ஐம்ப(து) இரவில் அகலும் துயிலினால்;
ஒட்டிய இளமையால் ஒரைந்து நீங்கும்;
ஆக்கை இளமையில் ஐம்மூன்று நீங்கும்;
எழுபது போக நீக்கிருப்பன முப்பதே."

என்பதனால் நம் விடுதிப்பொழுதின் பெறுமதி உள்ளங்கையிற்பொருந்திய நெல்லிக்கனிபோல் தெற்றென விளங்கும். (ஒரு மநுஷ்யன் ப்ரதிதினமும் இரண்டுமணி நேரமட்டும் ஓய்ந்திருக்கக்கூடுமானால், அவன் தன் வாணாளான எண்பது வர்ஷங்களில் 6⅔ வர்ஷம் ஓய்ந்திருக்கலாம். இவ்வோய்வுகாலம் அவனுண்மையாயுளில் நான்கிலொரு பாகத்திற்கு மேற்படுகின்றது!)

"ப்ரெஞ்சு மொழியில் 'எனக்கு நீ ஒருவனைக் குறித்து அவனது நண்பர் இன்னாரென்று தெரிவி; அவன் எத்தகையன் என்று நான் உனக்குத் தெரிவிப்பேன்' என்பது ஒரு முதுமொழி. அவ்வண்ணமே, நாம், ஒரு மநுஷ்யன் தன் விடுதிப்பொழுதை எவ்வாறு செலவிடுகிறானென்று எனக்கறிவி. அப்பொழுது நான் உனக்கு அவன் எப்படிப்பட்டவன் என்று சொல்லிவிடுகிறேன் என்று கூறலாம்" என்று ஒரு ஆங்கில வ்யாசந்திரட்டுக்கர்த்தா கூறுகிறார். இவர் கூற்று முற்றுமுண்மையே; ஏனெனில், பாடசாலையிலும், தொழிற்சாலையிலும், ஜநஸமூஹத்திலும், ஒருவன் தன்னடையைக் காத்துக்கொள்ளலாம்; ஆனால், அவனது குணசீலத்தை நிஜநிஜமாக வெளிப்படுத்துவது அவன் தன் விடுதிப்பொழுதைக் கையாளும் விதமே. இதனால், அவன் தான் ஸ்வாதீனனோ அல்லனோ எனத் தன்னைப் பிறர்க்கு ஸூசிப்பிக்கின்றான். ஒருவன் இப்பூதவுடம்பை நீத்தபின் அவனுக்கு நேரிடுவது இன்னதென்று எவரேனும் அறியவேண்டுமாயின், அவன் தன்னொழிவுப் பொழுதைக் கழிக்குமாற்றைக் கவனிக்கவேண்டும். ஆதலின், விடுதிப்பொழுதின் திறம் இவ்வளவவ்வளவு என்று கூறல் தரமன்று. ஒழிவு நேரங்கள் மிகவருமையானவை; அவை ஜாஜ்வல்யமாய்ப் ப்ரகாசிக்கும் விலையுயர்ந்த ரத்நங்களினும் மிகவருமையானவை.

ஒருவன் ஓய்வு நேரத்தில் ஓய்ந்திருக்கவேண்டுமென்றறிவார் பலர். என்றாலும், ஓய்ந்திருத்தல் என்பது இப்படியிருத்தல் என்றறிவார் சிலர்; 'ஒருவேலையுமின்றி ஓரிடத்தில் உட்கார்ந்து வீண் காலக்ஷேபஞ்செய்தல்' என்றெண்ணுவார் எண்ணிறந்தோர். ஆனால், மநஸ்தத்வசாஸ்த்ரப்படி ஓய்ந்திருத்தலாவது, மனவிற்கு ஆயாஸந்தரும் இளைச்சிச் செய்தொழிலுக்கு மாறாக மனவிற்கு இனிய ஒரு தொழிற் செய்தலேயாம்; ஒருவன் தான் நெடுநேரம் வருந்திச் செய்துகொண்டிருந்த தொழிலை விட்டு, அவ்வேலையினின்று வித்யாஸமான ஒரு தொழிலை மேற்கொள்ளுதலே ஓய்ந்திருத்தல். பகலிற் பெரும்பாகம் கல்விக் கழகத்திற் கல்வி கற்பதிற் செலவிட்டுச் சோர்ந்திருக்கும் மாணவர் தேஹாப்யாஸஞ் செய்யின் ஓய்ந்திருப்பார்கள். வெய்யோன் காய்ந்து கொல்லும் பகற்பொழுதெல்லாம் தம்மெய்வருந்த உழைத்துக் களைத்த ஒரு உழைப்பாளி, சில நீதிநூல்களை வாசித்து ஓய்ந்திருக்கலாம். 'ஓய்வு' என்னும் மொழியை இவ்வாறேயன்றி வேறெங்ஙனம் அர்த்தப்படுத்தலாம்? ஒருவன் ஓய்ந்திருக்கவேண்டுமானால், தன்மநதை அரிக்குங் கவலைமுதலியனவற்றை மாற்றவல்ல ஒருமார்க்கத்தில் தன் மநதைச் செலுத்தவேண்டும். அத்தகைய நெறி எது? ஒருவன் தன்னவயவங்களைச் சிறிது சிரமத்துடன் பந்திக்கலாம். ஆனால், தம்மநதை ஒருவித எண்ணமுமென்றுமல் பந்திக்கவல்லவர் நூற்றுவரில் எத்தனைபேர்? 'வேலை வெறுப்பு, உயிருடனிருக்கும் மநுஷ்யனது ப்ரேதவறை' என ஷேக்ஸ்பியரென்னும் ஆங்கில நாடககவி புகன்றார். (கண்புதைந்த மாந்தர்)..........................

"உண்பது நாழி; உடுப்பது நான்குமுழம்;
எண்பது கோடிநினைந் தெண்ணுவன"

எனப் பெரியோரும் விளம்பினரே!

அமெரிக்கக் கவிஞரொருவர், "மேதாவிகளின் ஜீவ்ய சரித்ரங்கள், நாம் மாண்புடன் ஜீவிக்கலாம் என்னும் ஸத்யத்தை நமக்கு ஞாபகப்படுத்துகின்றன. அவர்கள் தம்பின் நாமும் தொடர்ந்து செல்லுமாறு, காலமாகிய மணற்பாதையில் நமக்குத் தோன்றும்படி, தம் காலடிச்சுவடுகளைப் பதிப்பித்துச் செல்கின்றனர்." என்று பகர்ந்தார். இவ்வுரையைப் பொய்ப்பிக்கவல்லார் எவருமில்லையென்று கூறலாம். மேனாட்டு வெள்ளையாளாயினுமென்? கீழ்நாட்டு இந்தியனாயினுமென்? மநுஷ்யர் தோற்றத்திலும், மதவிஷயத்திலும், நாகரிகத்திலும் வேறுபட்டாலும், மனவமைப்பில் ஒருதன்மையரே. ஆதலின், நாம், மேனாட்டு மேதாவிகளான சிலர் அறிஞரான மார்க்கம் எதுவென்று விசாரித்தல் பயன்தரும். நாம் மேதாவிகளென்று இன்றழைக்கும் சிலர் அறிஞரான வழி எதுவெனில், தம் விடுதிப்பொழுதைத் தக்கமுறையில் ஸரிவர ப்ரயோகித்ததேயாம். இன்னணங்கூறியதனால், நாமோவ்வொருவரும் ஜகத் ப்ரஸித்திபெற்ற நிபுணராவோமென்று நாம் உறுதிவாக்குரைத்தோமில்லை. இப்பூமி அழியாதிருக்குமளவும் மநுஷ்யர்க்குள்ளும் ஏற்றத்தாழ்வு இருந்தேதீரும். எவ்விதத்திலும் தமக்குள் வேற்றுமையில்லாது மநுஷ்யரனைவரும் இவ்வுலகின்மிசை என்றேனும் வாழ்வாராயினால், அன்று மோக்ஷவின்பத்தை ஒருவாறாய் இங்கேயே மானிடர் நுகர்ந்திட்டார் என்று கூறல் மிகையாகாது. எனவே, நாம் முன்னேற்றமடையவேண்டுமென்பதையே நாம் வற்புறுத்தியவாறு. ஒவ்வொரு மநுஷ்யனிடத்திலும் சில அருஞ்சக்திகள் உள. அவற்றை அவனவன் வ்ருத்திசெய்யவேண்டும். அவற்றை வ்ருத்திசெய்து ப்ரயோகியாதிருத்தல் தவறாகும். எனவே, இனிவரும் பத்திகளில், ஸாமாந்யர் பலர் தம் விடுநேரங்களை எவ்வெத்துறைகளில் செலவிட்டுப் பயனடைந்தார் என்று காட்டுவோம்.



இதன்முன், நாம் வ்ருத்தியடையவேண்டியதென்! என்று முதலில் ஆராயவேண்டும்: பெரும்பாலும், அவச்யம் ஏற்பட்டாலொழிய அக்கறை ஏற்படுவதில்லை; ஒருவஸ்து அல்லது விஷயத்தின் அருமைபெருமை விளங்குவதில்லை. நாம் என் வ்ருத்தியடையவேண்டும்?— இவ்வினவிற்குப் பல்விடைகள் அளிக்கலாமெனினும், முக்யமான நான்கு காரணங்களைக் கருத்தமாய்க் கவனிப்போம். முதலாவதாக: 'யாக்கையை யாப்புடைத்தாப்பெற்ற' நாம் ஸுகமாகவும் இன்பமாகவும் நம்மாலியன்றவரை வாழ்ந்திருக்கவேண்டுமானால், நாம் வ்ருத்தியடையவேண்டும். தம்மிடத்தில் அன்பில்லாதார் எவர்?. இரண்டாவதாக: பிறர் இன்புடனிருக்க. தான் இன்புடனிருக்கவேண்டில், பிறரும் இன்புடனிருக்கவேண்டும். மூன்றாவதாக: நம்மைக் கவனித்துப் பிறர் நெறி வழுவாது வாழுமாறு நாம் முன்னேற்றமடையவேண்டும். பெரும்பாலும், மநுஷ்யர் ஒருவரையொருவர் கவனித்து நடக்கின்றனரேயன்றி, தாமே சிந்தித்து நடப்பதில்லை. நம்மைக் கெடுத்துக்கொள்ள நமக்கே அதிகாரமில்லையாக, பிறர் கேட்டுக்குக்காரணராகலாமோநாம்? இதுவியாக: நம்முன்னோரிடத்திலிருந்து பல நன்மைகளை அநுபவிக்கும் நாம், நம்பின்னோர்க்குச் சிறிது நன்மையேனும் தாராது மறைதல் புன்மையன்றோ? "தக்கார்க்கு.....மானமுடியா ஒழுக்கத்தின் மிக்கதூஉமில்லைப் பழியாமல் வாழுந்திறம்." "உன்னிடத்தில் நீ அன்புகூருமாறு பிறரிடத்தும் அன்புகூர்க". என்பது விவிலிய வேதம்: "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்பது திருக்குறள். இத்யாதி சாஸனங்கள் பற்றி(யும், பிறகாரணங்கள்பற்றியும்) நாம் முன்னேற்றமடையவேண்டும்.

நிற்க. எவ்வெத்துறைகளில் நாம் வ்ருத்தியடையலாம்? இவ்வுலகில் ப்ரக்யாதிபெற்ற பெரியோர் பல சாஸ்த்ரங்களிலும் வ்யுத்பத்தியடைந்தார்கள். சிலர் வானசாஸ்த்ரத்திலும் சிலர் பூமிசாஸ்த்ரத்திலும், சிலர் தத்வசாஸ்த்ரத்திலும், சிற்சிலர் ஏனைய சிலசாஸ்த்ரங்களிலும் வல்லுநரானார்கள். ஆனால், நாம் இச்சாஸ்த்ரப்பயிற்சியைத் தவிர்த்து எளிதிற்கொண்டு பெரிதும் பெருமையடையக்கூடிய சில துறைகளையே கவனிப்பாம். தா. ஸா. நேசமணி.

## நூதன புஸ்தகங்கள்.

**ரவீந்திரநாத் தாகோர் அருளிய பஞ்ச வியாசங்கள்.**

உலகமெங்கும் பிரசித்திபெற்ற மகாகவி ஸர் ரவீந்திரநாத் தாகோர் முதலில் வங்கபாஷையில் எழுதி பிறகு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு "மாடர்ன் ரெவியூ" பத்திரிகையில் பிரசுரமான பஞ்ச வியாசங்களை வி. சுப்பிரமணிய பாரதியால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா. .., 0 10 0

**"பாரதபூஷண" டாக்டர் எஸ். சுப்ரமணிய ஐயர்.**

டாக்டர் எஸ். சுப்பிரமணிய ஐயரின் ஜீவிய சரித்திரமும், அவரது அரிய உபந்நியாஸங்களும் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. விலை ரூபா. ... 0 12 0

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர்.

# இலக்கணவாராய்ச்சி.

[ஓர் தமிழ் மாணவர் இயற்றியது.]

பேராசிரியரும், நச்சினார்க்கினியரும், "எருத்தே கொச்சகம்" என்னும் (152) செய்யுளியற்சூத்திரத்தில் அம்போதரங்க ஒருபோகு, தரவு, கொச்சகம், அராகம், சிற்றெண், சுரிதகமென்னும் ஐந்துறுப்பையும் பெற்று நாற்பத்துநான்கடியான் வந்ததற்கு மேற்கோளாகக் கீழே பதிப்பித்திருக்கும் செய்யுளைக் காட்டினர். ஆயினும், இவ்வுரையாசிரியருரைகளைப் பதிப்பித்த பதிப்பாசிரியர் மூவரும், இச்செய்யுளின் உண்மைவடிவை அறிந்துகொள்ளாது திரித்துத் தம் மனம்போனவாறு பதிப்பித்துள்ளார்கள். இச்செய்யுள் 44 அடியாக இருத்தலைத் தமிழ் மக்களறிந்து இன்புறும்பொருட்டு ஈண்டு வெளியிடலாயிற்று.

செஞ்சுடர் வடமேரு விருமருங்குந் திரிகின்ற
வெஞ்சுடரு மதியமும்போல் வேலொடு கேடகந்தழுவ
மாயிரு மணிப்பீலி மயிலெருத்திற் றோன்றுங்காற்
சேயொளி கடற்பிறந்த செந்தியிற் சிறந்தெதிப்ப
மறுவருந்தம் மனத்துவகைக் கலுழ்ச்சியான் வளர்த்தெடுத்த
வறுவருந்தம் முலைசுரந்தாங் கதல்விசும்பி லெதுவற்ற
ஆருருவத் தெயின்மூன்று மொருங்கவித்தோன் வியப்பெய்த
விருருவத் தொருபெருஞ்சூர் மருங்கறுத்த விகல்வெய்யோய்
ஆங்க, வினைமொழி காலத்து வெவ்வெயிற் கோலத்
தனைவருந் தத்த மறம்புரிந் தாங்கு
முனையடு தோற்றத்து முங்கான் குருவிற்
கனைகடல் சுட்டின கண் ;
தேவரு மக்களுஞ் சிற்றத்தா னஞ்சாமைக்
காவல் புரியுங் கதிர்மதி
போதுமே மூவிரு தோன்றுன் முகம் ;
மடமகள் வள்ளி மணிக்கட் பலம்போ
லிடையிடை சுற்றுத லின்றுந் தவிரா
தொடையமை தார்க்கடப்பன் றோள் ;
அவ்வழி, யடியிணை சேரா வவுணரைத் தாக்கிப்
பொடிபொடி யாகிப் பொருப்பொடு மாய
விடியுமிழ் வானத் திடைநின்று கூவுங்
கொடியணி கோழிக் குரல் ;
விழுச்சீ ரமரர் விசும்பிடைத் தோன்றிப்
பழிச்சிநின் றார்த்தார் பலர் ;
உருகெழு முருகிய முருமென வதிர்தொறு
மருகெழு சிறகொடு மனைவரு மணிமயில்
பெருகிய வருமறை பெறுநெடு மொழிபொடு
பொருதகா வழியிசை புகல்வன சிறுகுறள் ;
சிவந்தன திசை
சிலம்பின மலை
கிவந்தன தலை
கிரம்பின குறை
ஆர்த்தன மறை
யாடினர் பலர்
போர்த்தன ஆகுர்
பொழிந்தனர் மலர்
ஆங்கனந் தோன்றிய வடுபோர் வென்றியின்
வீங்கிருந் தொடித்தோள் விடலை நினக்கே
யாமறி யளவையிற் றமிழ்புனைந் தேத்துக
நின்னி தக்க தாயினு நின்னெதிர்
நாணில மாக வேண்டும் யாணர்க்
கடம்புங் களிமயிற் பீலியுந் தடஞ்சுனை
நீரொடு நின்வயி னமர்தர
வாராப் புலமை வருகமா ரெமக்கே.

---



## Kindness Wins.

By Mr. P. Chinnasami Iyar.

## அன்பின் வெற்றி.

### 3-ம் அத்தியாயம்.

இரவு எட்டுமணிக்குச் சுந்தரம் சோமு முதலியார் வீட்டையடைந்து இருவரும் சாப்பிட்டானதும், மாடியின்மேல் போய், இரண்டு சாய்ப்பு நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டார்கள்.

சோமு முதலியார் :—நான் உன்னுடன் பேசவேண்டுமென்ற விஷயம் நம்மையன் நடராஜனைப்பற்றித்தான். அவனுடைய கணக்குகளில் 200 ரூபாய் குறைகின்றது. சில மாதங்களுக்கு முன்பு அவனுடைய கணக்குகள் பார்க்கப்பட்டபோது ரூ. 50 குறைவு ஏற்பட்டது. இது ஏதோ கைப்பிசகாய் விடப்பட்டிருக்கலாம் என்று அப்போது அவன் சரிப்படுத்திவிட்டான். அது முதற்கொண்டு எனக்கும், நமது தலைமை குமாஸ்தா அப்பாதுரை முதலியாருக்கும் நடராஜன்மீது சந்தேகமுண்டு. நேற்றைத்தினம் திடீரென்று கணக்குகளைப் பரிசோதித்தபோது இக்குறைவு ஏற்பட்டது. அவனுடைய முகத்தை அச்சமயம் பார்த்தவர்கள், அவனைக் குற்றமற்றவனென்று சொல்லமாட்டார்கள்.

சுந்தரம் :—என்ன ! நமது நடராஜனா இத்தகைய காரியம் செய்தான்? நம்பக்கூடாத விஷயமாகவல்லவோ இது இருக்கின்றது !

சோமு முதலியார் :—ஆம் : இக்காலத்தில் எவரையும் உண்மையாக நம்புவதற்கு இடமில்லை. கபடமற்ற முகத்தோற்றமும், அடாத காரியங்களைச் செய்யக்கூடிய மனமுமுடையபலர் இருக்கின்றனர். "வெளுத்ததெல்லாம் பாலல்ல" என்பதை நீ உணரவேண்டும்.

சுந்தரம் :—அவனுடைய குடும்ப விஷயங்களைப்பற்றி உமக்கு ஏதாவது தெரியுமா ?

சோமு முதலியார் :—ஆஹா: நன்றாய்த்தெரியும். நமது கம்பெனியில் நியமிக்கப்படும் ஒவ்வொரு குமாஸ்தாவின் பூர்வோத்தரங்களையும், குடும்பங்களையும் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமென்று என் தகப்பனர் எனக்குச் சொல்லியிருக்கிறார். நடராஜனின் தகப்பனர் முன்பு மிக்க செல்வாக்குடன் வாழ்ந்தவர். இரண்டுமூன்று வருஷங்களுக்கு முன்பு அவருடைய வியாபாரத்தில் பெருத்த நஷ்டமேற்பட்டது. அதன்பிறகு எவையேனும் கஷ்டங்கள் அவர்களுக்கு நேர்ந்துகொண்டேயிருந்தன. இவ்வளவும் அவர்களுக்கு ஏற்பட்டதன் காரணம், அவர்கள் ரொக்கத்திற்கு வியாபாரம் செய்யாமல், கடனாகவே விற்றுவந்ததனாலே தானென்று சொல்லப்படுகிறது. நடராஜனுடைய தகப்பனரின் தாக்ஷிண்யத்திற்காகவேதான், அவனை நமது கம்பெனியில் வேலைக்கு அமர்த்திக்கொண்டது. இப்பொழுது என்ன செய்வதென்று எனக்குத் தோன்றவில்லை. என் மனத்திற்கு ஒரே மார்க்கம்தான் புலப்படுகின்றது. அது, அவனை வேலையினின்று நீக்கிவிடவேதான். குற்றம் செய்தவன் தான் செய்த குற்றத்திற்காக அனுதாபப்பட்டு நல்ல வழிக்குத் திரும்புவதாகச் சொல்லப்படும் பேச்சுக்களில் எனக்கு நம்பிக்கை இல்லை. அத்தகைய சம்பவத்தையும் நான் இதுவரை கேட்டது இல்லை.

இவ்வாறு சோமு முதலியார் சொல்லிவருகையில், சுந்தரத்தின் முகம் வெளுத்தது ; நடராஜனை எவ்விதத்திலாவது காப்பாற்றவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான். மூன்று வருஷங்களுக்குமுன் தானிருந்த நிலைமை இப்பொழுது இவனது ஞாபகத்திற்கு வந்தது. அந்த சமயத்தில் தனக்கு அப்பெரியவர் உதவி செய்திராவிட்டால், இப்போது வகித்திருக்கும் ஸ்தானத்தை அடைந்திருக்கமுடியுமாவென்று யோசித்தான். முதன்முதல் குற்றம் செய்தவனை நல்ல வழியில் திருப்புவதற்கு அன்பு ஏற்ற கருவியேயொழிய, தண்டனையன்று என்

பது சுந்தரத்தின் தீர்மானம். அவனுடைய செயல்களே அதற்குச் சாக்ஷியாகவிருந்தன. சுந்தரம், தன்னுடைய பூர்வோத்தரங்களைச் சோமு முதலியாருக்குத் தெரிவித்து, அன்பினால் குற்றம்செய்த ஒருவனை நல்லவழிக்குத் திருப்ப முடியுமென்று நிரூபிக்க எண்ணங்கொண்டான். "குற்றம்செய்த ஒருவன் தான் செய்த குற்றத்திற்காக அனுதாபப்பட்டு நல்ல வழிக்குத் திரும்பிய சந்தர்ப்பம் ஒன்று எனக்குத்தெரியும்" என்று சுந்தரம் மெதுவாகச் சொல்லிவிட்டு, தன்னுடைய கதையைச் சொல்லத் தொடங்கினான். கதை முடிந்ததும், சோமு முதலியார் வாய்திறவாமல் தனக்கெதிரில் மேஜையின்மேலிருந்த விளக்கையே உற்று நோக்கிக்கொண்டிருந்தார். சுந்தரத்தின் மனம் பதைத்துக்கொண்டிருந்தது. இந்த நிமிஷங்கள் வரையில் அவர்கள் உட்கார்ந்திருந்த அறை நிச்சப்தமாயிருந்தது. சுவரில் மாட்டியிருந்த கடியாரத்தின் "டிக்-டிக்" என்ற சப்தந்தவிர வேறு ஒன்றுமில்லை. மற்றவர்கள் தன்னையும் திருடனென்றே நினைப்பார்களல்லவாவென்று சுந்தரம் யோசித்தான்.

இம்மென்று சோமு முதலியார் "சுந்தரம்! நீ ஜயித்தாய். நடராஜன் விஷயத்தை உன்னிடமே விட்டுவிட்டேன். அதுவிஷயமாய் உனக்கு என்ன யுக்தமாகத் தோன்றுகிறதோ அப்படியே செய். பூர்ண நம்பிக்கை உன்னிடத்தில் எனக்கு உண்டு" என்று கூறினார்.

பிறகு, கொஞ்சநேரம் வேறு சமாசாரங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, சுந்தரம் சுமார் 10-மணிக்குத் தன் வீடுபோய்ச் சேர்ந்தான். அன்றிரவு முழுதும் சுந்தரத்திற்குத் தூக்கம் பிடிக்கவில்லை. எவ்விதம் நடராஜனை நல்ல வழிக்குத் திருப்புவதென்ற யோசனையிலேயே இரவு முழுதும் கழித்தான்.

## 4-ம் அத்தியாயம்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையாதலால், திங்கட்கிழமை காலை கம்பெனியின் வேலை ஆரம்பிக்கப்பட்டதும், சுந்தரம் நடராஜனைத் தன்னிடம் வரும்படி சொல்லியனுப்பினான். நடராஜன் அன்றைத்தினம் ஆபீஸுக்கு வரவில்லையென்றும், அவனைத் தேடிக்கொண்டு பெண் ஒருத்தி வாசலண்டை வந்திருக்கிறாளென்றும், கம்பெனி யஜமானர்களுள் ஒருவரை அவள் பார்க்க விரும்புகிறாளென்றும் சேவகன் தெரிவித்தான். சுந்தரம் அந்த ஸ்திரீயை உள்ளே அழைத்துவரும்படி சேவகனிடம் கூற, சுமார் 15-வயதுள்ள மீனாக்ஷி சுந்தரத்திற்கு எதிரில் வந்து நின்றாள். தான் வந்த காரியத்தைச் சொல்ல அவளுக்கு நாவெழவில்லை; ஒருவாறு மனதை திடப்படுத்திக்கொண்டு, தன்னுடைய சகோதரன் நடராஜன் நேற்றைத்தினம் ஆபீஸுக்குப் போவதாய்ச் சொல்லிவிட்டுப்போனவன் ராத்திரி வீட்டுக்கு வரவில்லையென்றும், தானும் தன் தாயாரும் அவனுக்கு ஏதாவது கெடுதி சம்பவித்ததோவென்று பயந்திருப்பதாயும், தன்னுடைய தகப்பனார் தேகசௌக்கியமில்லாமலிருப்பதனால் அவருக்கு இச்சமாசாரம் இன்னும் சொல்லப்படவில்லையென்றும் கண்ணீர் பெருகச் சொல்லி, நடராஜனைப்பற்றிய தகவல்களைச் சொல்லவேண்டுமென்று வினவினாள்.

நடராஜன் ஒருசமயம் தற்கொலை செய்து கொண்டானோ வென்ற ஸம்சயம் சுந்தரத்திற்கிருந்தபோதிலும், அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல் மீனாக்ஷிக்குத் தைரியம் கூறி, நடராஜனைத் தான் தேடுவதாயும், கூடிய சீக்கிரத்தில் அவனைக் கண்டுபிடித்துவிடுவதாயும் தெரிவித்து அவளை வீட்டுக்கு அனுப்பிவிட்டான்.

நாலைந்து நாட்கள் கழிந்தன. நடராஜனைப் பற்றிய சமாசாரமொன்றும் தெரியவில்லை. சுந்தரமும் தன் காலத்தையெல்லாம் அவனைத் தேடுவதிலேயே கழித்தான்; பிரதி தினமும் ஒவ்வொரு பத்திரிகையையும் பார்த்துக்கொண்டேயிருந்தான். ஒன்றிலும் நடராஜனுக்குக் கெடுதி நேரிட்டதாகத் தெரியவில்லை. இதைக்கொண்டு சுந்தரம் தன்மனத்தை ஒரு



வாறு தைரியப்படுத்திக்கொண்டான். நடராஜனுக்கு எவ்விதத்திலாவது உதவி செய்து அவனை நல்வழிக்குத் திருப்பவேண்டுமென்று சுந்தரம் தீர்மானித்திருந்ததனால், அதுவே இவன்விஷயமாய்ச்சுந்தரத்தை உழைக்கச்செய்தது. இதுவுமன்றி, இன்னொரு காரணமும் ஏற்பட்டது. தான் முதன்முதல் மீனாக்ஷியைப் பார்த்தவுடன், அவளுடைய விசனத்தைப் போக்கவெண்ணினான். மீனாக்ஷியின் சுந்தரமான முகலாவண்யம் சுந்தரத்தின் மனத்தைக் கவர்ந்தது. எவ்விதத்திலாவது நடராஜனைக் கண்டுபிடித்து, அவனுக்கு நன்மைசெய்து மீனாக்ஷியைச் சந்தோஷப்படுத்தவேண்டுமென்ற எண்ணம் மேலிட்டது. ஒவ்வொருநாளும் நடராஜனைப்பற்றிய சமாசாரங்களைத் தெரிவிப்பதற்காக மீனாக்ஷியைப் பார்ப்பது சுந்தரத்திற்கு வழக்கம். மீனாக்ஷியின் அமைதியான நடவடிக்கையையும், அழகையும் தினமும் சுந்தரம் பார்த்துவந்ததனால், தனக்கு இப்படிப்பட்ட மனைவி கிடைப்பாளோவென்று யோசிப்பான். மீனாக்ஷியே தனக்கு மனைவியாகக் கிடைத்துவிட்டால், தன்னைவிடப் பாக்கியவான் இப்புவியிலொருவருமில்லையென்று எண்ணுவான். தன்னிடத்தில் மீனாக்ஷிக்குக் கொஞ்சமாவது அன்பு இருக்குமோவென்பதைத் தெரிந்துகொள்ளச் சந்தர்ப்பம் சுந்தரத்திற்கு வாய்க்கவில்லை; நம்முடைய கடமையை நாம் செய்து முடித்தால், வருவது தானேவரும் என்று தீர்மானித்து மனதைத் திடப்படுத்திக்கொண்டான்.

சுந்தரத்தின் பொறுமைக்கு இணங்க, அன்று சாயங்காலமே நடராஜன் அவன் கண்ணுக்குப் புலப்பட்டான். சுந்தரம் மாலை ஆபீஸிலிருந்து தன் வீட்டுக்குப் போய்க்கொண்டிருக்கையில், சிந்தாத்திரிபேட்டை வாராவதிக்கருகில் அழுக்கடைந்த உடுப்புடன் நடராஜன் மெதுவாகப் பக்கிங்ஹாம்கால்வாய் ஓரமாய் நடந்து செல்வதைக்கண்டான். அச்சமயம் இரவு சுமார் 7-மணி இருக்கும். உடனே சுந்தரம் வண்டியிலிருந்து குதித்து நடராஜன் சென்றவழியே தானும் அவனைப் பின்பற்றிச் சென்றான். நடராஜன் கொஞ்சதூரம் சென்று நாற்பக்கங்களிலும் திரும்பிப்பார்த்தான். இதைக்கண்ட சுந்தரம் அங்குக் கால்வாய் ஓரமாய் விடப்பட்டிருந்த படகு ஒன்றின் பக்கத்தில் மறைந்துகொண்டான். இரவாதலால், சுந்தரம் மறைந்துகொள்ளாமலிருந்தாலும் தெரிந்திருக்காது. சுற்றிப்பார்த்து யாருமில்லாததுகண்டு நடராஜன் தன்னுடைய சட்டையை மெதுவாய்க் கழற்றினான். சுந்தரத்தின் சந்தேகமும் தெளிவடைந்தது. உடனே தான் மறைந்திருந்த இடத்தினின்று வேகமாய்ப்போய் நடராஜனது கையைப் பிடித்துக்கொண்டான். நடராஜன் இழுத்துக்கொண்டுபோக எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் முடியவில்லை. எங்கு தான் செய்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்படுவோமோ வென்று அஞ்சினான். சுந்தரம் நடராஜன் மனத்திலிருப்பவற்றை அறிந்துகொண்டு, யாதொரு கெடுதலும் அவனுக்கு நேரிடாதென்று சமாதானப்படுத்தி, கைப்பிடிவிடாமல் தனது வண்டியிருக்குமிடத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தான். பிறகு, இருவரும் வண்டியிலேறிச் சுந்தரத்தின் வீட்டை யடைந்தார்கள். உடனே நடராஜனை ஸ்நானம் செய்யச் சொல்லிச் சுந்தரம் தனது வேஷ்டிகளில் இரண்டைக்கொடுத்துக் கட்டிக்கொள்ளச் சொன்னான். நடராஜன் உண்டு இரண்டு தினங்களானபடியால், அவர்கள் சாப்பிடப் போனார்கள். இப்போதுதான் நடராஜனுக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. தான் செய்த குற்றத்தைப் பாராட்டாமல் தனக்கு இவ்வளவு நன்மையைச்செய்த சுந்தரத்தின்மீது ஒருவித அன்பும் மரியாதையும் ஏற்பட்டன. ஆபீஸ் விஷயத்தைப்பற்றிச் சுந்தரம் ஒன்றும் அவனிடத்தில் பிரஸ்தாபிக்கவில்லை. நடராஜன் தானாகவே சொன்னவற்றைமாத்திரம் கவனித்துக் கொண்டான். கதை முழுதும் தன்னுடைய பூர்வகதையாகவே யிருந்தது. நடராஜனின் தகப்பனாருடைய தேகசௌக்கியத்தைப்பற்றிச்

சுந்தரம் அவனிடத்திற் சொன்னபொழுது அவனுக்குத் தூக்கம் மேலிட்டது; ஒன்றுந் தோன்றவில்லை. கண்ணீர் பெருகியவாறே, "என் தந்தை அன்றைத்தினம் மாலை வெளியிற் போயிருக்கக்கூடாது. மழையில் அன்று நனைந்ததனால்தான், ஜ்வரம் கண்டதுபோலிருக்கிறது. என் தாயார் மாத்திரம் அவரை வெளியிற் போகவேண்டாமென்று தடுத்தாள். அப்போது அவருக்கு வந்த கோபத்துக்கு அளவேயில்லை. அவர் நினைத்த காரியத்தை முடித்துவிடவேதயென்ற பிடிவாத குணமுடையவராதலால், நாங்கள் எவ்வளவோ சொல்லியும் பிரயோசனப்படவில்லை. ஒவ்வொரு வருஷமும் அதே தேதியில் குறிப்பிட்ட ஒரே இடத்திற்குப் போவது வழக்கம்; அத்தினம் அந்த இடத்தில் யாரோ ஒருவரை சந்திக்கவேண்டுமென்று சொல்லுவார். அவர் திரும்பிவரும்போது அவருடைய முகத்தைப் பார்த்தால், போனகாரியம் கைகூடவில்லையென்பது நன்கு புலப்படும். இந்த வருஷமும் அந்தநாள் சாயங்காலம் நான் அவரைத்தொடர்ந்துசென்றேன். அவர் நேராகப் பீபில்ஸ் பார்க்குச் சென்று, அங்கு ஒரு மூலையில் போடப்பட்டிருந்த பலகையின்மேல் உட்கார்ந்தார். கொஞ்ச நேரத்திற்குள்ளே மழை பெய்ய ஆரம்பிக்கும்போல் குறிகள் தோன்றின. பிறகு நான் அவரது அருகிற் சென்று, இங்கிருந்தால் மழையில் நனையும்படி நேரிடுமென்றும், வீட்டிற்குப் போய்விடுவதே நலமென்றும் சொல்லி முடிக்குமுன், மிக்க கோபத்தோடு அவர் திட்ட ஆரம்பித்தார். அப்பொழுதுதான் தங்களை வெகு அவசரமாக அங்கு வரக்கண்டேன். என்னுடைய விஷயம் தங்களுக்குத் தெரிந்திருக்குமோவென்று நான் பயந்து வேறு வழியாகப் போய்விட்டேன்" என்று சொல்லிக்கொண்டே வருகையில், சுந்தரத்திற்கு முகம் வெளுத்தது; தேகம் நடுக்கமுற்றது; நடராஜனது கையைப் பிடித்துக்கொண்டே, "பீபில்ஸ் பார்க்கிலா? ஒவ்வொரு வருஷமும் அப்படித்தானா?" என்று மிகுந்த ஆத்திரத்துடன் கேட்டான். நடராஜனுக்கு இவ்வளவு ஆத்திரத்துக்குக் காரணம் விளங்கவில்லை. சுந்தரத்தின் மனதில் யோசனைகள் பலவாறு கிளம்பின. நடராஜன் தகப்பனும் தனக்கு உதவிசெய்தவரும் ஒருவர்தானோ? என்றும், 29-ந்தேதி தன் பக்கத்தில் பலகையின்மேல் உட்கார்ந்திருந்த பெரியவர் அவர்தானோ? என்றும் சுந்தரம் யோசித்தான்; எது எப்படியிருப்பினும், மீனாக்ஷியின்மீது தானுங்கொண்ட காதலுக்கு எந்த முகாந்திரத்திலாவது பாதகமேற்படுமோவென்று கவலைகொண்டான். பிறகு சுந்தரம், சற்றுயோசித்து "நானும் ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்றவேண்டியிருக்கின்றது. உன்னுடன் கூடவே நானும் உன் வீட்டுக்கு வருகிறேன்" என்று நடராஜனிடம் சொன்னான். விஷயம் ஒன்றும் புலப்படாததனால், நடராஜன் திகைத்து, சுந்தரத்துடன் தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

---

## 5-ம் அத்தியாயம்.

நடராஜனும் சுந்தரமும் விசுவநாத முதலியார் வீட்டையடைந்தார்கள். இவர்தான் நடராஜனின் பிதா. சுந்தரம், விசுவநாத முதலியாரைக் கண்டதும், அப்போதுதான், நடராஜனுடைய தந்தையும், தனக்கு உதவிசெய்த பெரியவரும் ஒருவரென்று தெரிந்துகொண்டான். அச்சமயம் சுந்தரத்திற்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. தன்னுடைய விருத்தாந்தங்களையெல்லாம் பெரியவரிடம் தெரிவித்து, தான் செய்துகொண்ட உடன்படிக்கையை மூன்று வருஷங்களாக நிறைவேற்ற முடியாமற்போனதைப்பற்றி மன்னிப்புக்கேட்டுக்கொண்டான். நடராஜனும், தான் ஆபீசில் செய்த குற்றத்தையும், சுந்தரம் தனக்குச் செய்துள்ள உதவியையும் தன் தகப்பனிடம் சொல்லி, இனி அத்தகைய காரியங்களில் பிரவேசிப்பதில்லையென்று அவருக்கு உறுதிகொடுத்தான். விசுவநாத முதலியாருக்கு நடராஜனைப்பற்றிய கவலை வேண்டியதில்லையென்றும், அவன் சம்பந்தமான விஷயங்கள் யாவற்றையும் தன் பாகஸ்தரான சோமு முதலியார் தன்னிடத்தில் ஒப்பித்திருக்கின்றாரென்றும், ஆகவே, இனி நடராஜன் முன்போலவே கம்பெனியில் வேலைக்குவந்து சேரலாமென்றும் சுந்தரம் கூறினான். அது முதற்கொண்டு நடராஜன் கம்பெனியின் வேலைகளை வெகு ஒழுங்காகச் சிரத்தையோடு செய்துவந்து, கடைசியில் அங்கு ஒரு பொறுப்புள்ள ஸ்தானத்தை வகித்தான்.



மீனாக்ஷியின் ஞாபகம் சுந்தரத்தின்மனத்தை விட்டு அகலவேயில்லை; என்ன செய்வதென்று யோசித்தான். இந்த சமயம் இதைப்பற்றி பெரியவரிடம் பிரஸ்தாபிப்பது சரியன்றுஎன்று சுந்தரத்திற்குத் தோன்றிற்று; ஆனால், காலக்கிரமத்தில் தனது எண்ணம் ஈடேறுமென்று மாத்திரம் உறுதிகொண்டான்.

சில நாட்களுக்குள்ளே விசுவநாத முதலியாருடைய தேகம் சௌக்கியமடைந்தது. சுந்தரம் பிரதிதினமும் நடராஜனின் வீட்டிற்குப்போகாமலிருப்பதில்லை. ஒவ்வொரு தடவையும் அவன் மீனாக்ஷியைச் சந்திப்பதுண்டு. இவர்களிருவருக்குமுள்ள காதலை மீனாக்ஷியின் தாயார் அறியாமலில்லை. இவ்விஷயத்தை அவள் தன் பர்த்தாவிடம் சொல்ல, அவருக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. உடனே இதைப்பற்றிச்சுந்தரத்தினிடம் அவர் கலந்துகொண்டு கலியாணத்துக்கு ஏற்பாடு செய்தார். சென்னைக்கடுத்த தண்டையார்பேட்டையில் ராகவசெட்டியார் பங்களாவில் நல்ல சுபமுகூர்த்தத்தில் சிரஞ்சீவி சுந்தர முதலியாருக்கும், சௌபாக்கியவதி மீனாக்ஷி அம்மாளுக்கும் விவாகம் நடந்தேறியது.

முற்றிற்று.

பு. சின்னசாமி ஐயர்.

---

# Books and Reviews.

## புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

[புத்த அவதாரம்: ராவ்ஸாஹெப் ப. சம்பந்த முதலியார் பி. ஏ; பி. எல். இயற்றியது. விலை ரூபா 1.]

மேற்குறித்த புஸ்தகமொன்று நாம் வரப்பெற்றோம். இதில் புத்த சரித்திரமானது நாடகரூபமாக எழுதப்பட்டுள்ளது. நாடகமெழுதுவதில் மிக்க கீர்த்திவாய்ந்த ராவ் ஸாஹெப் ப. சம்பந்த முதலியார் அவர்கள் இந்நூலை வெகு தெளிவாகவும், இனிமையாகவும் எழுதியிருப்பது புகழ்ச்சிக்குரியது. இந்நாவில் படிப்பினைகள் பலவிருப்பதனால், ஒவ்வொருவரும் இதை வாங்கி வாசிப்பது அவசியமாகும். புஸ்தகம் வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர், (தென்னிந்தியா) என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

[வியவஸாய மஞ்சரி: சென்னை ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டது. விலை அணா 12.]

இந்நூலில் வியவசாயிகள் அவசியம் அறியவேண்டிய பல நூதன ஸாகுபடி முறைகளும், வியவசாயக் குறிப்புக்களும் அடங்கியுள்ளன. முக்கியமாக, எருக்கள், நிலத்தைப் பண்படுத்தல், விதை, நெல்சாகுபடி, கரும்பு, பருத்தி, மணிலாக்கொட்டை, புகையிலை, பழமரங்கள் முதலிய பலவிஷயங்களைப்பற்றியும் சிறந்த குறிப்புக்கள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன. விஷயங்களுக்காக ஒரு பெரிய அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. வியவசாயிகள் ஒவ்வொருவருக்கும் இந்நூல் மிகப்பிரயோஜனமாயிருக்குமென்பதில் ஐயமில்லை. புஸ்தகம் வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர், (தென்னிந்தியா) என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மோகனதாஸ் காந்தி: சென்னை ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனியார் பிரசுரித்தது. விலை அணா 5.]

இந்திய தேசாபிமானிகளுள் ஒருவராகிய மோகனதாஸ் காந்தியின் சரித்திரம் இந்நூலில் எழுதப்பட்டிருக்கின்றது. இதில் அவருடைய பிறப்பு வளர்ப்பு வரலாறும், அவர் தென்னாப்பிரிகாவில் இந்தியருக்காகப் பட்ட கஷ்டநஷ்டங்களும், இப்போது நமது தேசத்தின் முற்போக்குக்காக உழைத்துவருவதும் ஆகிய பல விஷயங்களும் மிகத் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன. அவருடைய சில முக்கியப் பிரசங்கங்களும் இதிற் சேர்க்கப்பட்டுள்ளன. இந்திய மக்களில் ஒவ்வொருவரும் இத்தேசாபிமானியின் சரித்திரத்தை வாங்கிப் படிப்பது அவசியமாகும். புஸ்தகம் வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர், (தென்னிந்தியா) என்று எழுதிப் பெறலாம்.

[கோகலேயின் வரவுசெலவு திட்டம்: திருவாரூர் கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி ஐயர். விலை அணா 4.]

வைஸராய் சட்டஸபையில் காலஞ்சென்ற கோகலே மெம்பராயிருந்தபோது செய்த பல பிரசங்கங்களும் ஆங்கிலத்திலேயே யிருக்கின்றன. அவை ராஜீய விஷயங்களை அறிவதற்கு மிகப் பிரயோஜனமுள்ளவையென்பது பலருடைய கொள்கை. ஆகவே, இவற்றை நம் தமிழ் மக்களும் அறியும்பொருட்டு திருவாரூர் மிஸ்டர் கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி ஐயர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுவருகிறார். இப்போது 1902-ம் வருஷம் வைஸராயின் சட்டசபையில் மிஸ்டர் கோகலே வரவுசெலவு கணக்கைப்பற்றிப் பேசியதுந் தமிழில் மொழிபெயர்த்து ஒரு சிறு புஸ்தகமாக வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழின் நடை பலரும் அறியத்தக்கவாறு மிகத் தெளிவாக அமைக்கப்பட்டுள்ளது. புஸ்தகம் வேண்டுவோர்: கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஜவுளிக்காரத் தெரு, திருவாரூர் என்று எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

[கதாரசமஞ்சரி: பண்டித எம். எம். நாராயணசாமி ஐயர், எஸ். யஜ்ஞஸ்வாமி ஐயர். விலை அணா 4.]

மேற்கண்ட சிறிய நூலொன்று வரப்பெற்றோம். இதில் சிறுவர்களுக்கேற்ற பல சிறந்த கதைகள் அடங்கியுள்ளன. கதைகள் எளிய தமிழ் நடையில் நன்கு எழுதப்பட்டிருக்கின்றன. சிறுவர் சிறுமிகளுக்கு இது ஏற்ற புஸ்தகம். புஸ்தகம் வேண்டுவோர்: முடிகொண்டான் பண்டித எம். எம். நாராயணசாமி ஐயர் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## The Lost Will.

BY MR. M. S. KRISHNASAMY IYER.

## காணாமற்போன மரணசாஸனம்.

(181-ம் பக்கத்தொடர்ச்சி.)

நீலகண்டனைப்போலவே அவளும் அன்றிரவு தூங்கவில்லை. அவள் மனத்திலும் நீலகண்டனது உருவம் ஸதா குடிகொண்டிருந்தது. அவனைப்பற்றி நினைக்க நினைக்க அவன்மேல் அவளுக்கு அன்பு வேரூன்றலாயிற்று; பால்யத்தில் அவனுடன் விளையாடினதையெல்லாம் எண்ணியெண்ணி மகிழ்ந்தாள். அவனையே கணவனாக அடைந்தால் அதைவிட வேறு பாக்கியம் இல்லையென்று அவள் எண்ணினாள்; தன் தாயாருக்கு நீலகண்டன் விஷயத்தில் ஸம்மதந்தான் என்பதை அறிந்து ஸந்தோஷமடைந்தாள். தன் தமையனும் இவ்விஷயத்தில் ஊக்கங்காட்டுவது அவளுக்கு மகிழ்ச்சியுண்டுபண்ணியது. உண்மையில் துரைசாமி தன்னபிப்பிராயத்தைக் கேட்டானென்று எண்ணி, அதற்கு எப்படி பதில் சொல்வதென்று யோசித்தாள்; ஒருசமயம் நீலகண்டனே இவ்விஷயத்தை வற்புறுத்திக்கேட்டால், என்ன செய்வதென்று சிந்தித்தாள். ஆனால், இவ்விஷயத்தில் மாத்திரம் அவளுக்குச் சந்தேகமே. "நான் கண்டும் கேட்டுமுள்ள கலியாணங்களில் மாப்பிள்ளை பெண்ணை வந்துபார்ப்பதுதான் வழக்கம். பெண்ணின் அபிப்பிராயத்தைப் பெண்ணின் பெற்றோர்களாவது, பிள்ளையின் பெற்றோர்களாவது, அல்லது வேறு உறவினர்களாவது கேட்பது கிடையாது. சில ஸமயங்களில் மாப்பிள்ளைகூட பெண்ணைப் பார்ப்பதில்லை." என்று இவ்வாறு பார்வதி மனத்திலெண்ணி, "அவர் அடிக்கடி என்னைத் திரும்பிப்பார்த்துப் புன்னகை செய்ததிலிருந்து, அவருக்கு என்மேல் பிரியந்தானென்று சொல்லலாம். அப்படியே நானும் அவரிடத்தில் பிரியமாயிருக்கிறேன் என்று எவ்விதம் அவரிடத்தில் கூறுவேன். ஒருகால் அவரே நேரில் வந்துகேட்டால் ..."என்று பலவிதமாக யோசித்துக்கொண்டிருக்கும்போது, தான் வாசித்த கதைப்புஸ்தகங்களினின்று இதுபோன்ற சம்பவங்களெல்லாம் அவள் ஞாபகத்திற்குவந்தன. மௌனம் சாதித்துவிடுவோமா? பெண்களுக்கு நாணமல்லவோ சிறந்த ஆபரணம்? அவராகவேவந்துகேட்கும்பக்ஷத்தில், தகுந்தமாதிரி நடந்துகொள்வோம். உத்தம ஸ்திரீகள் தாங்கள் முதலில் வரித்த கணவனைத்தவிர, வேறு எவரையும் ஸ்மரிக்கமாட்டார்கள். நான் வரித்த கணவரே எனக்கு ஸித்திக்கும்படி ஈசுவரி அருள்புரிய வேண்டும். அவரையே பதியாக என் மனப்பூர்வமான பக்தியுடன் நான் எண்ணியிருக்கிறேன். ஆபத்காலத்தில் எத்தனையோ உத்தம ஸ்திரீகளுக்கு ஆதரவாயிருக்கிறவே! ஈசுவரி!! நீ என்னை ஆதரியாயோ. என் பக்தியின் பொருட்டாவது அவரையே நான் பதியாக அடைய அனுக்கிரஹிக்க வேண்டுகிறேன்" என்றிவ்விதம் பலவாறு சிந்தித்துவிட்டு, பிறகு சற்றுத் தூங்கினாள். தூக்கத்திலும், நீலகண்டன் அவளுக்குத் தரிசனங்கொடுத்து அவளது பக்தியை நிலைபெறச் செய்தான்.

(இன்னும் வரும்.)

எம். எஸ் கிருஷ்ணசாமி ஐயர்,



## Topics from Periodicals.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### தேக ஸௌக்கியத்தைக் குறித்த ஒன்பது விதிகள்.

நீங்கள் தேக ஸௌக்கியமுள்ளவர்களாயும், பலமுள்ளவர்களாயும் இருக்க விரும்பினால், தேக ஸௌக்கியத்தைக்குறித்த கீழ்க்கண்ட விதிகளை அனுஸரிக்க வேண்டும். அவற்றின்படி நடப்பது மிகவும் சௌகரியமே.

(1) தேகமுழுவதையும் தினம் ஒருமுறை ஜலத்தினால் சுத்திசெய்யவேண்டும். ஸ்நானம் செய்வதனால் தசை நரம்புகள் பலமடைவதுடன், தோலும் சுத்தியாகிறது. ரத்தத்திலுள்ள அநேக அசுத்தமான வஸ்துக்கள் தோலின்மூலமாய்த் தேகத்தைவிட்டு வெளிப்படுகின்றன.

(2) தேகத்தின்மேல் உடுத்திக்கொள்ளும் வஸ்திரங்களையெல்லாம் வாரந்தோறும் ஒருமுறை தோய்க்கவேண்டும். இரத்தத்திலுள்ள அநேக அசுத்தங்கள் சர்மத்தின் மூலமாய்த்தேகத்திலிருந்து வெளிப்பட்டு, அந்த வஸ்திரங்களில் தங்கி, அவைகளை அசுத்தியாக்குவதுமல்லாமல், அவற்றின் வாயிலாய் வியாதியுண்டாக்குவதற்கும் ஹேதுவாகின்றன.

(3) முற்றிலும் சுத்தமான இடத்திலே முற்றும் சுத்தமான பாத்திரங்களில் சமையல் செய்யப்பட்டு மிகவும் சுத்தமாயிருக்கிற ஆகாரத்தையே சாப்பிடவேண்டும். வாந்திபேதி ரத்தபேதி முதலிய வியாதிகளுக்குக் காரணமாயிருக்கும் அநேக அசுத்தங்கள் முதன்முதல் ஆகாரத்துக்குள் பிரவேசிக்கின்றன. பிறகு அவை ஆகாரத்தோடு விழுங்கப்பட்டு ரத்தத்திற் கலக்கின்றன.

(4) சுத்தமான பாத்திரத்தில், சுத்தமான கிணற்றிலிருந்தோ, சுத்தமான ஊற்றிலிருந்தோ, சுத்தமான குழாயிலிருந்தோ எடுக்கப்பட்டு மாசில்லாமல் முற்றிலும் சுத்தமாயிருக்கிற தண்ணீரையே குடிக்கவேண்டும். வாந்திபேதியைப்போன்ற வியாதியை உண்டாக்கும் அநேக அசுத்தங்கள் முதன்முதல் தண்ணீருக்குள் பிரவேசித்து உள்ளே விழுங்கப்பட்ட பிறகு

ரத்தத்தில் போய்ச் சேருகின்றன. இவ்விதமாக, வியாதியானது ரத்தத்தில் உற்பத்தியாகிறது: ஊறக் குறையத் தண்ணீர் பருகப்பட்டவுடனே அது இரைப்பையிலிருந்துபோய் ரத்தத்துடன் கலக்கிறது. ஆகவே, குடிக்கப்பட்ட தண்ணீரானது அசுத்தமானதாயிருப்பதனால் ரத்தமும் அசுத்தமாய்விடுகின்றது. மேலும், ரத்தத்தைச் சுத்தியாய் வைத்திராவிட்டால், தேகம் ஸௌக்கியமான ஸ்திதியிலிருக்க முடியாது.

(5) நாற்றமும் புகையும் தூசியுங் கலந்திராமல் புதிதாயிருக்கும் காற்றையே உட்கொள்ளவேண்டும். க்ஷயரோகம்போன்ற வியாதியையுண்டாக்கும் அநேக அசுத்தங்கள் முதன்முதல் காற்றில்பிரவேசித்து, சுவாஸத்தை உள்ளுக்கு இழுக்கும்போது அந்தக்காற்றுடன் சுவாஸப்பைக்குட் சென்று ரத்தத்துடன் கலக்கின்றன. ஆகவே, இரவிலும் பகலிலும் உங்களுடைய வீட்டின் ஜன்னல் அல்லது கதவைத்திறந்து வைத்திருக்கவேண்டும்.

(6) தேக முழுவதிலுமுள்ள தசை நரம்புகளை நாள்தோறும் குறைந்தது ஒரு மணிநேரம் பயிற்சி செய்து வரவேண்டும். தேகத்திலுள்ள தசை நரம்புகளைப் பிரதிதினமும் பலமாயுபயோகித்து வந்தால், அவை உறுதியாகின்றன. ரத்தவோட்டம் நன்றாகிறது; மேலும், சர்மத்திலிருந்து வியர்வை வழிகிறது. இதுவமல்லாமல், தசை நரம்புகள் மூலமாய் ரத்தம்பாய்ந்து அவைகளினின்றும் ஸகல அசுத்தங்களையும் வெளிப்படுத்துகிறது. இந்த அசுத்தங்கள் பிறகு தேகத்திலிருந்து வியர்வையில் வெளிப்படுகின்றன.

(7) கூடியவரையில் கிரமமான மணிநேரங்களில் மிதமாகச் சாப்பிட்டுத் தண்ணீர் குடிக்கவேண்டும்; ஏனென்றால், ஒருவன் அளவுக்கு மிஞ்சிச் சாப்பிட்டாலும், அளவுக்கு மிஞ்சித் தண்ணீர் குடித்தாலும் அவன் தேகஸௌக்கியமுள்ளவனாயிருக்க முடியாது.

(8) பகலில் தூங்குவதைக்காட்டிலும் இரவில் தூங்குவது நல்லது. ஒவ்வொருவரும் தேகஸௌக்கியத்துடன் பலமுள்ளவராயிருக்கும்பொருட்டு, அவர் இருபத்துநான்கு மணிநேரங்களில் ஸாதாரணமாய் 8-மணி நேரம் தூங்கவேண்டும்.

(9) பெரும்பாலும் நுண்ணிய கிருமிகளே வியாதியுண்டாக்குகின்றன என்று மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். அவ்விஷக்கிருமிகள் வாந்திவழியாயும், துப்புகிற எச்சில் வழியாயும், மூத்திரத்தின் வழியாயும், மலத்தின் மூலமாகவும் உடம்பிலிருந்து வெளிப்படும். இந்த அசுத்தங்களைக் கிருமி கொல்லுகிற திராவகம் விட்ட பாத்திரத்தில் போட்டு, ஆழமாய்ப் புதைக்கவேண்டும். அந்த விஷக்கழிவுகளைக் கரைக்குமேலாவது தரைக்குமேலாவது சாக்கடைகளிலாவது கொட்டலாகாது. அவ்விதங் கொட்டினால், அசுத்தத் துர்நாற்றம் உண்டாவதுந்தவிர, கொடிய வியாதிகள் ஊரெங்கும் தொற்ற ஹேதுவுமாகும்:—உதயதாரகை.

ஆபரணம்.

1. பிராமணன் வித்தையால் விளங்குகிறான்; க்ஷத்திரியன் விஜயத்தால் விளங்குகின்றான்; செல்வமுடையோன் தானத்தினால் விளங்குகின்றான்; குலஸ்திரீ நாணத்தினால் விளங்குகின்றாள்.

2. கைக்குத் தானம் ஆபரணமாம்; சுரோத்திரத்திற்குச் சாஸ்திரம் ஆபரணமாம்; அந்நிய ஆபரணங்களினால் என்ன பயன்?

3. நட்சத்திரங்களுக்குச் சந்திரன் ஆபரணமாம்; ஸ்திரீகளுக்குப் பதி ஆபரணமாம்; பூமிக்கு அரசன் ஆபரணமாம்; வித்தை யாவருக்கும் ஆபரணமாம்.

4. குதிரைக்கு வேகம் ஆபரணமாம்; ஸ்திரீகளுக்குப் பயம் ஆபரணமாம்; யதிகளுக்குத் தபசு ஆபரணமாம்; அரசனுக்குப் பொறுமை ஆபரணமாம்; வீரனுக்குப் பராக்கிரமம் ஆபரணமாம்.

5 ஆகாசத்திற்குப் பரிசுத்தத் தன்மை ஆபரணமாம்; தாமரை வனத்திற்கு வண்டு ஆபரணமாம்; வாக்கிற்குச் சத்தியம் ஆபரணமாம்; செல்வத்திற்குக் கொடை ஆபரணமாம்; மனத்திற்கு மைத்ரி ஆபரணமாம்; சத்துருக்களுக்கு இன்சொல் ஆபரணமாம்; யாவர்க்கும் விநயம் ஆபரணமாம்.—விவேகபாநு.

திரவரூபமான எரு.

திரவரூபமாயிருக்கும் எருவில் முக்கியமாய் மிருகங்களின் மூத்திரமும் சாணக்குவியல்களிலிருந்து வெளிப்படும் கசிவும் மழைஜலமுமே இருக்கும். இவைகளில் மூத்திரமே விசேஷமானது. அதில் நைட்ரொஜன் பொடாஷ் ஆகிய இவ்விரண்டும் அதிகமாகவும் பாஸ்பேட் மிகவும் ஸ்வல்பமாகவுமிருக்கின்றன. மூத்திரத்தின் தன்மை மிருகங்கள் உணவோடு உட்கொள்ளும் தீனியளவைப் பொருத்திருக்கிறது. மூத்திரத்திலிருக்கும் நைட்ரொஜனும், பொட்டாஷும் பயிர்கள் உடனே உபயோகித்துக்கொள்ளும்படியான ஸ்திதியிலிருக்கின்றன. ஆகையால், இந்த எருவே மிகவும் சிலாக்கியமானது. 1000 காலன் நிறையுள்ள திரவரூபமான எரு சுமார் 10,000 ராத்தல் அல்லது $4\frac{1}{2}$ டன் நிறையுள்ளது அதில் $20\frac{1}{2}$ ராத்தல் நிறையுள்ள நைட்ரொஜினும், 3 ராத்தல் பாஸ்பாரிக் ஆஸிட்டும், $46\frac{1}{4}$ ராத்தல் பொடாஷும், 2 ராத்தல் சுண்ணாம்புமிருக்கின்றனவாம்:—ஜனபிமானி.



# Education and Science.

## கல்வியும், சாஸ்திரமும்.

### பள்ளிக்கூடங்களில் வைத்திய பரிசோதனை.

ஆங்காங்கு நகரங்களிலும், கிராமங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கூடங்களில் கல்விபயிலும் மாணவர்கள் பலவித வியாதிகளுக்குள்ளாகி வருகிறார்கள். சில குறிப்பிட்ட காலங்களில் தக்க வைத்தியர்களைக்கொண்டு அவர்களுக்குச் சிகித்ஸை செய்யப்படவேண்டும். இவ்விஷயமாப் பள்ளிக்கூடத்து அதிகாரிகள் தக்க கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகும். பிள்ளைகள் பரிசோதிக்கப்படும்போது, கூடுமானவரையில் அவர்களின் தாய்தந்தையர்களை அருகில் வைத்துக்கொண்டு செய்வதுதான் நல்லது. பிள்ளைகளின் வியாதியைப்பற்றியும், அதற்காகச் செய்யப்படவேண்டிய சிகித்ஸைகளைப்பற்றியும் விவரமாக அவர்களின் பெற்றோர்களுக்குச் சொன்னால், அவர்கள் வேண்டியவற்றைச் செய்யக்கூடும்.

மாணவர்களுக்குள் தொற்று வியாதி பரவுவது ஸகஜமாயிருக்கின்றது. வியாதி கண்ட பிள்ளைகள் பள்ளிக்கூடம்போக முடிவதில்லை. அவர்களுக்கு ஸாதாரணமாக வரக்கூடிய நோய்கள்: கண்வலி, சிரங்கு முதலியனவாம். ஆகவே, இந்நோய்கள் கண்ட பிள்ளைகள் பள்ளிக்குப் போவதில்லை.

பிள்ளைகளின் வைத்திய பரிசோதனை விஷயமாய்க் கல்வி இலாகா அதிகாரிகள் கீழ்க்கண்டவற்றைக் கவனிக்க வேண்டும்:—

வருஷத்தில் இத்தனை முறைகளென்று பிள்ளைகள் வைத்திய பரிசோதனை செய்யப்படவேண்டும். அப்போது காணப்படும் தேக ஸௌக்கியத்தைப்பற்றிய விவரம் ஒரு புஸ்தகத்தில் குறிக்கப்பட்டுவரவேண்டும்.

பள்ளிக்கூடத்தை அடுத்துள்ள ஆஸ்பத்திரிகள் அவ்வப்போது மாணவர்களின் தேகஸ்திதியை கவனித்துத் தக்க சிகித்ஸைகளைச் செய்துவரவேண்டும்.

தொற்று வியாதிகளைப்பற்றியும், மற்றும் சுகாதார விஷயங்களைப் பற்றியும் அவ்வவ்விடங்களில் வழங்கும் பாஷைகளில் துண்டுப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டு உபாத்தியாயர்களின் உபயோகத்திற்காக அனுப்பப்படவேண்டும். தொற்றுவியாதி சம்பந்தப்பட்ட பிள்ளைகளை உடனே கண்டுபிடித்து அவர்களை வைத்திய சிகித்ஸைக்கு அனுப்பவேண்டியது உபாத்தியாயர்களின் கடமையாகும்

இவைதவிர, பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குப் போதியவளவு வசதிகள் நன்கு அமைக்கப்பட்டிருக்கின்றனவாவென்பதும் கவனிக்கப்படவேண்டும்.

பிள்ளைகள் படிக்கும் அறைகளில் போதியவளவு வெளிச்சமும் நல்ல காற்றும் இருக்கும்படி பார்க்கவேண்டும். பிள்ளைகள் படிக்கும்போது புஸ்தகங்களில் நிழல் தங்கும்படி யிருக்கக்கூடாது. புஸ்தகங்களைப் பிள்ளைகள் கொஞ்சம் தூரத்திலிருந்து படிக்கும்படியாயிருக்கவேண்டும்.

படிப்பறையில் தும்பு தூசிகள் இல்லாமலிருக்கவேண்டும். தரையானது சிம்மிட்டி அல்லது செங்கல்களைக்கொண்டு அமைக்கப்பட்டிருக்கவேண்டும்.

பிள்ளைகளின் உபயோகத்திற்காக கக்கூஸுகள் ஸ்கூலையடுத்தாற்போல் கட்டப்பட்டிருக்கவேண்டும். இவைகளையொட்டி ஜலவசதிகளும் இருக்கவேண்டும்.

இவைபோன்ற இன்னும் பல வசதிகளையும்,பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். மேற்குறித்த விஷயங்களைக் கல்வி இலாகா அதிகாரிகள் கவனித்துத் தக்கது செய்வார்களாயின், இப்போது பிள்ளைகள் பலவித நோய்களால் வருந்தும் எண்ணிக்கைக் குறையும்.

### படிப்பு.

பிரதிதினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் படிப்பதென்று வைத்துக்கொள்ளவேண்டும். ஒழிவுகாலம் ஏற்பட்டபோது படிப்பதென்பது அவ்வளவு உசிதமன்று. நாம் எப்படி வேளாவேளைகளில் சாப்பிடுகிறோமோ, அப்படியே படிப்பதற்கும் ஒரு குறித்த காலம் இருக்கவேண்டும். இப்படிச் செய்வதனால் வரும் பலனை அனுபவத்தில் கண்டறியலாம்.

### ஜெர்மன் ஸில்வர்.

ஜெர்மன் ஸில்வர் என்பது ஜெர்மனியில் உற்பத்தி செய்யப்படுவதில்லை; அதில் வெள்ளியும் இல்லை. இது முதன்முதல் சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்டது. இதில் செம்பு, நிக்கல், நாகம் ஆகிய மூன்று உலோகங்களும் சேர்ந்திருக்கின்றன

### நக்ஷத்திரங்கள் மின்னுதல்.

நக்ஷத்திரங்கள் மின்னுவதற்குக் காரணம் அவைகளுக்கும் பூமிக்கும் இடையில் இருக்கும் காற்றானது ஸதா அசைந்துக்கொண்டிருப்பதே. குளிர்ந்த காலத்திலும், காற்று பலமாய் அடிக்கும் காலத்திலும் நக்ஷத்திரங்கள் அதிகமாய் மின்னும்

# Agriculture and Co-operation.

## வியவசாயமும், கூட்டுறவும்.

### சுடலே ஆவாரை.

சுடலே ஆவரையானது கொளுஞ்சி முதலான வைகளைப்போல் ஒரு பசுந்தாள் உரமாக உபயோகப் படுகின்றது. இது கோதுப்பயிர் தினுஸைச் சேர்ந்தது. நஞ்செய் புஞ்செய் நிலங்கள், தோட்டக்கால், கருமண் செம்மண் நிலங்கள் ஆகிய பலவித நிலங்களிலும் இது நன்ருய் வளரும்; ஆனுல், களர் நிலங்களில் வளர்வதில்லே. இதை விதைப்பதற்கு ஒரு குறித்த காலம் கிடையாது. எந்த மாதத்தில் வேண்டுமானுலும் விதைக்கலாம் கொளுஞ்சியைப்போலல்லாமல் பயிர் நன்ருகச் செழித்து வளர்கின்றது.

விதைத்த ஒரு வாரத்திற்குள் பயிர் முளேத்துவிடுகின்றது. கோடைகாலத்திலும், பயிர் காய்ந்து போகாமல் ஆகாயத்திலுள்ள நீரைக் கிரஹித்துப் பசுமையாகவேயிருக்கின்றது. செடியானது சுமார் மூன்றடிமுதல் ஐந்தடிவரையில் வளரும்; மூன்றுமாத காலத்திற்குள் புஷ்பித்து விதை முதிறும்.

இச்செடியிலிருந்து விதை சேர்ப்பது கொளுஞ்சியைப்போல் அவ்வளவு கஷ்டமன்று. ஆனுல், அதிகமான காற்றடித்தால், அப்போது விதைகள் கொட்டுண்டுபோம்.

இச்செடியின் தழைகளேக் களர்நிலங்களுக்கு உபயோகித்தால், அவை கூடிய சீக்கிரத்தில் நல்ல நிலங்களாக மாறி விடுகின்றன. இத்தழைகளே ஆடுமாடுகள் தின்பதில்லே.

### மல எரு.

மல எருவானது சீனு, ஜப்பான் முதலான தேசங்களில் பயிர்களுக்குச் சிறந்த எருவாக உபயோகிக்கப் பட்டுவருகின்றது. நாம் மாட்டுச் சாணியை எவ்வளவு பத்திரமாகச் சேகரித்து எருவாக உபயோகிக்கிருேமோ, அவ்விதமே அவர்கள் மல எரு விஷயமாய்ச் செய்து வருகிருர்கள். நமது தேசத்தில் கிராமாந்தரங்களில் அநேகமாக எங்கும் இந்த வழக்கம் அனுஷ்டிக்கப்படுவதில்லே.

மல எருவைக் கீரைத்தண்டு, முள்ளங்கி முதலான பயிர்களுக்கு உபயோகித்தால், அவை மிக்க வீர்யமாயும் பருமனுயும் வளர்கின்றன. இதைச் சாம்பலுடனுவது, மண்ணுடனுவது கலந்து மக்கவைக்காமல் உபயோகித்தால், பயிர் சில தினங்களுக்குள் மிக்க வீர்யத்தோடு வளர்ந்து, பிறகு மஞ்சள் நிறமடைந்து இறந்துபோம். இந்த எருவை ஏராளமாகப் பயிர்களுக்கு உபயோகித்தாலும், போதியவளவு மழையில்லாவிட்டால், எருவின் காரத்தால் அவை எரிந்துபோய்விடும். ஆகவே, நீர்ப்பாய்ச்சலுள்ள பயிர்களுக்கே இதை உபயோகிப்பது நல்லது.

### மெள்ளே அடைப்பான்.

இந்த வியாதியானது அடைப்பானேப்போல் ஒருவித தொற்று வியாதியாகும். இதற்கான விஷம் பிராணிகளின் இரத்தத்தில் சேருவதனுல், இது உண்டாகின்றது. அதிகமாய் இந்த வியாதி எருமைமாடுகளுக்கே உண்டாகின்றது. மற்ற கால்நடைகளுக்கும்; இந்த வியாதி உண்டாவதுண்டு. மழை காலத்தில்தான் இது அதிகமாகப் பரவுகின்றது. இளமையாயுள்ள கால்நடைகளே அதிகமாக இந்நோயால் தாக்கப்படுகின்றன.

கிருஷிகர்கள் இந்த வியாதியைத் திட்டமாக இன்னதென்று அறியாமல் அடைப்பானென்று தீர்மானித்துவிடுகிருர்கள். ஏனெனில், இந்த இரண்டு வியாதிகளின் குறிகள் ஏறக்குறைய ஒத்திருக்கின்றன. மாட்டுக்கு இந்த மெள்ளே அடைப்பான் கண்டவுடனே, அதற்குக் கொடூரமான காய்ச்சலடிக்கும்,தொண்டையில் வீக்கமுண்டாகும்; நாக்கும்வீங்கியிருக்கும்; வாயிலிருந்து நீர் வடியும். மாடு ஆகாரத்தை விழுங்குவதற்குக் கஷ்டப்படும்; மிகுந்த வருத்தத்துடன் மூச்சுவிடும்; அதன் கண்களேயும் மூக்குத்துவாரங்களேயும் கவனித்தால், அவை சற்று ஊதா நிறமாயிருப்பதாகக் காணப்படும். மாட்டுக்கு வியாதி சற்று முற்றுமானுல், மஞ்சள் நிறமுள்ள உமிழ் நீர் அதன் வாயிலிருந்து வடிவதையும், மார்புவரை வீங்கியிருப்பதையும் காணலாம். இந்த வியாதியால் தாக்கப்படும் சில கால்நடைகளுக்கு, வேறு விதமான குறிகளும் காணப்படும்: மூத்திரம் இரத்தம்போல் சிவந்திருப்பது, வீக்கம் தொண்டையிலில்லாமல் முகம், வயிறு, கால் முதலான இடங்களில் காணப்படுவது ஆகிய இவைகளே. கிருஷிகர்கள் கால் நடைகளுக்கு இக்குறிகள் தோன்றியவுடன், வியாதியைத் திட்டமாக இன்னதுதானென்று அறிந்துகொண்டு வேண்டிய சிகிச்சைகளே உடனே செய்யவேண்டும்.



# Industry and Commerce.

## கைத்தொழிலும், வியாபாரமும்.

### குங்கிலியமும், கற்பூரத்தைலமும்.

குங்கிலியமும், கற்பூரத்தைலமும் இமயமலேச்சாரலில் விருத்தியாகும் தேவதாரு என்னும் மரத்தைத் துளேத்து, அதனின்று வடியும் திரவத்தைக் காய்ச்சி எடுக்கப்படுகின்றது. சென்ற 1908-ம் வருஷம் முதற்கொண்டு இத்தொழிலானது பல நூதன இயந்திரங்களேக்கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இத்தொழிலுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தொழிற் சாலேகளில் உற்பத்தியாகும் சரக்குகள், அந்நியநாடுகளிலின்று இறக்குமதி செய்யப்படுவனவற்றைக்காட்டிலும் மிகவும் சிறந்ததே. காட்டிலாகா அதிகாரிகள் இத்தொழிற் சாலேகளுள் இரண்டை நிர்வகித்து வருகின்றுர்கள். கீழே குறிக்கப்படும் சென்ற ஐந்து வருஷக் கணக்குகளால்,இந்தியாவிற்கு அந்நிய நாடுகளிலின்று குங்கிலியமும் கற்பூரத்தைலமும் எவ்வளவு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதென்றும், இவை இந்தியாவிலேயே எவ்வளவு உற்பத்தி செய்யப் பட்டுள்ளதென்றும் அறியலாம்.

| வருஷம். | குங்கிலியம். | | கற்பூரத்தைலம். | |
|---|---|---|---|---|
| | இறக்குமதி அந்தர். | இந்தியாவில் உற்பத்தி அந்தர். | இறக்குமதி அந்தர். | இந்தியாவில் உற்பத்தி. |
| 1912—13 | 61,017 | 20,198 | 20,779 | 4,937 |
| 1913—14 | 44,788 | 20,096 | 16,050 | 8,837 |
| 1914—15 | 24,323 | 21,878 | 117,868 | 6,541 |
| 1915—16 | 30,765 | 34,640 | 7,320 | 9,320 |
| 1916—17 | 18,355 | 43,452 | 6,608 | 10,472 |

மேற்குறித்த கணக்கால், இத்தொழிலானது எவ்வாறு அபிவிருத்தியடைந்து வருகின்றதென்பது நன்கு விளங்கும். இன்னும், சொற்பகாலத்தில் இத்தொழில் நன்கு அபிவிருத்தி செய்யப்பட்டு, நமது தேசத்துக்குத் தேவையானவளவு உற்பத்தியாகுமென்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

### ஸோப்புக் கைத்தொழில்.

இப்போது நடந்துவரும் யுத்தம் காரணமாக எண்ணெய் வித்துக்கள் ஏராளமாக அந்நிய நாடுகளுக்குப் போகக்கூடாமல் தடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதனுல், இந்தியாவில் எண்ணெய் ஆட்டும் தொழிலே விருத்திசெய்ய ஒரு நல்ல சமயம் வாய்த்திருக்கின்றது. மீண்டும் எண்ணெய் வித்துக்களே அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்வரை, இங்கு உற்பத்தியாகும் எண்ணெயை நாம் எவ்விதத்திலாவது உபயோகப்படுத்தவேண்டும். ஆகையால், இதைக் கொண்டுசெய்யப்படும் தொழில்கள் பலவற்றுள் ஸோப்புத் தொழில் ஒன்ருகும். இத்தொழிலே அபிவிருத்தி செய்ய இதுவே ஏற்ற சமயமாதலால், இச்சமயத்தைக் கைவிடாது,நாம் உபயோகித்துக்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

இந்தியாவில் ஸோப்புத் தொழிலானது மிக்க திருப்திகரமாக நடைபெறவில்லே. இங்கிருக்கும் தொழிற்சாலேகளில் சாதாரண ஸோப்புகள் செய்யப்படுகின்றனவேயொழிய, உயர்ந்த வாஸனேயுள்ளவை போதுமானவளவு தயாரிக்கப்படுவதில்லே. இவற்றின் தேவைகள் காலக்கிரமத்தில் எவ்வாறு அதிகப்பட்டுள்ளதென்பதைக் கீழ்க்கண்ட இறக்குமதி கணக்கால் தெரியலாம். இக்கணக்குகள் யுத்தத்திற்கு முன்பு எடுக்கப்பட்டவை.

| வருஷம். | அந்தர். | மதிப்பு பவுன்கள். |
|---|---|---|
| 1909—10 | 255,111 | 309,155 |
| 1910—11 | 275,244 | 358,231 |
| 1911—12 | 324,651 | 418,413 |
| 1912—13 | 350,617 | 476,138 |
| 1913—14 | 362,860 | 500,400 |

மேற்கண்ட இறக்குமதிகணக்கைக் கவனித்தால், நாம் இத்தொழில் விஷயமாய் எவ்வளவு அபிவிருத்தியடையவேண்டியிருக்கின்றதென்பது புலப்படும். இப்போது நமது தேசத்தில், ஆங்காங்கு ஸோப்புத் தொழிலே அபிவிருத்தி செய்வதற்கான ஊக்கம் காட்டப்படுகின்றது. சில சுதேச சமஸ்தானங்களும் இத்தொழிலே ஆதரிக்க முன்வந்துள்ளார்கள். ஆதலால், சமயத்தைக் கைவிடாது நமக்குத் தேவையான பொருள்களே நாமே தயாரித்துக்கொள்ளவேண்டும்.

## Sanitation and Medicine.

## சுகாதாரமும், வைத்தியமும்.

**வாந்திபேதிக்குச் சில முக்கிய காரணங்கள்.**

அகாலத்திலும் அளவுக்குமிஞ்சியும் உண்ணுதல். அடிக்கடி ஆகாரத்தை வித்தியாசப்படுத்தல். கெட்டுப்போன மாம்ஸவகைகளைப் புசித்தல். நிதானமாக ஜீர்ணமாகக்கூடிய ஆகாரவஸ்துக்களை அளவுக்குமிஞ்சி உண்ணல். எப்போதும் ஈரமான தரையில் வசித்தல். அசுத்தமான ஜலத்தைப் பருகுதல்., அசுத்தமான காற்றை சுவாஸித்தல். தேகத்தைப் பலவீனப்படுத்தும்படியான காரியங்களைச் செய்தல். இத்தகைய காரணங்களால் வாந்திபேதி உண்டாவது நிச்சயம்.

**கறிவேப்பலை.**

இந்தியாவில் சாதாரணமாக வீட்டுத்தோட்டங்களில் இது பயிர்செய்யப்படுகின்றது. இதன் துளிரானது வீடுகளில் குழம்பு முதலியன தாளிப்பதற்கு உபயோகப்படுகிறது. வாந்தியை நிறுத்துவதற்கு இதன் இலையைக் கஷாயமிட்டுக் கொடுக்கலாம். மூலவியாதி, சுரம், பித்தம், குன்மம் முதலியனவைகளுக்குக் கறிவேப்பலையைத் துவையல் செய்து உபயோகிக்கலாம்.

**துளசியின் உபயோகம்.**

இது நமது தேசத்தில் எங்கும் உண்டாகின்றது. இதற்குக் கற்பூரவாசனையும் காரமான ருசியுமுண்டு. இதன் தளத்தை இந்துக்கள் பூஜைக்காக உபயோகிக்கிறார்கள். இக்காலத்தவர்கள் அதன் மகிமையை அறியாமல அதைக் கேவலமாக மதிப்பதுண்டு. நமது பெரியோர்கள் வீடுகளிலும் குளக்கரைகளிலும் அச்செடியைவைத்து வளர்ப்பது, முக்கியமாக ஆரோக்கியத்தைக் கருதியே. துளசியானது ஔஷதச்சரக்காக உபயோகப்படுகின்றது. இதன் உதவியால் மலேரியா ஜ்வரமும் நிவிருத்தியாகின்றதென்று மேனாட்டு வைத்தியர்களாலும், சுதேசவைத்தியர்களாலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, ஒவ்வொரு வீடுகளிலும் துளசியை வைத்துப்பயிர்செய்யவேண்டியது அவசியமாகும். இதன் காற்றுப்பட்டாலும் தேகம் ஆரோக்கியமான நிலைமையிலிருக்கும்.

**சில சுகாதார விதிகள்.**

நாம் எப்போதும் காலாகாலத்தில் மிதமாய் ஆகாரத்தைப் புசிக்கவேண்டும்.

எப்போதும் நன்றாய்ப் பழுக்காத அல்லது அழுகிப்போன பதார்த்தங்களை உண்ணக்கூடாது.

புதிதாய்ச் சமைக்கப்பட்ட ஆகாரத்தையே உண்பது நல்லது; ஆறிப்போன அன்னத்தைச் சாப்பிடுவது உசிதமன்று.

நாம் உடுக்கும் உடை முதலியன எப்போதும் சுத்தமாகவே யிருக்கவேண்டும். தேகபலம் சற்றுக்குறைந்தவர்கள் வெந்நீரில் ஸ்நானம் செய்வது நல்லது. அவர்கள் உண்ணும் ஆகாரம் எப்போதும் சாதாரணமானதும், சரீரத்திற்குப் புஷ்டிதரக்கூடியதாயு மிருக்கவேண்டும்.

## General Notes.

## பொதுக் குறிப்புக்கள்.

**ஜில்லா போர்டு பிரசிடெண்டு.**

இராஜாங்கத்தார் ஸ்தலசுய ஆக்ஷியை விஸ்தரித்து நமக்குச் சில சுதந்தரங்களைக்கொடுக்க முன் வந்திருப்பதைப்பற்றி நாம் சந்தோஷிக்கிறோம். ஆங்காங்குத் தாலூக்போர்டு, ஜில்லா போர்டு பிரிசிடெண்டுகளும், முனிசிபல் சேர்மென்களும் உத்தியோகப்பற்றில்லாதவர்களே இப்போது நியமிக்கப்பட்டு வருவதானது மிகவும் பாராட்டத்தக்கது. உதாரணமாக: வட ஆற்காடு ஜில்லாவில் டிஸ்டிரிக்ட் போர்டு பிரிசிடெண்டு ஸ்தானமானது, வேலூர் முனிசிபல் சேர்மன் கான்பஹதூர் முகம்மது அபிபுல்லா சாஹிப்பஹதூர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதைக் கேட்டு ஆனந்திக்கிறோம். இவர் சிறந்த தேசாபிமானி; சுயநலத்தைக் கருதாது பொதுநன்மைக்கென்றே உழைத்து வருபவர். இவர் இதுவரை செய்துள்ள ஊழியத்தைக் கவனிப்போமாயின், இவரது அருங்குணங்களும் தேசபக்தியும் நன்கு விளங்கும். நமது நண்பர் கான்பஹதூர் முகம்மது அபிபுல்லா ஸாஹெப் பஹதூர் அவர்களுக்கு இராஜாங்கத்தார் இந்த பொறுப்புள்ள ஸ்தானத்தைத் தந்து கௌரவித்ததற்காக, அவர்களுக்கு எமது மனமார்ந்த வந்தனத்தை அளிக்கிறோம்.

**மணிலாக்கோட்டைப் பிண்ணாக்கு.**

இதுவரை மணிலாக் கொட்டைப் பிண்ணாக்கானது கால்நடைகளுக்கு உணவாகவும் எருவாகவும் உபயோகிக்கக்கூடுமேயன்றி, மற்றபடி எதற்கும் பிரயோஜனப்படாதென்று கருதப்பட்டு வந்தது. இதைப்பற்றி பம்பாய் கவர்ன்மெண்டாரால் சில ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. அதன் பலனாக, இப்பிண்ணாக்கானது உணவுப் பொருளாகவும் செய்யப்படக்கூடுமென்று கண்டுபிடிக்கப்பட்டது.

**காகிதம் செய்வதற்கான புல்.**

இந்தியாவில் காகிதக் கூழானது மூங்கில்களினின்றும், பலவித புல்லுகளினின்றும் செய்யக்கூடுமென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. இப்போது நமது தேசத்தில் சில பாகங்களில் யானைப்புல் என்று சொல்லப்படும் ஒருவகைப் புல்லினின்றும் காகிதக்கூழ்செய்யக்கூடுமென்று காட்டிலாகாதாரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. வியாபார முறையில் இப்புல்லினின்று காகிதக்கூழ் தயாரிக்கப்படுமானால், தக்க லாபம் கிடைக்கக்கூடுமென்று சொல்லப்படுகின்றது.

4 NOV 1918
MADRAS

114

# ஜனோபகாரி.

(JANOPAKARI)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புஸ்தகம் 3. Vol. III. | காளயுக்திஹூ புரட்டாசிமீ, SEPTEMBER, 1918. | சஞ்சிகை 9. No. 9.

## Progress of the World.

## பிரபஞ்சப்போக்கு.

**மேய்ச்சல் தரைகள்.**

நமது மாகாணத்தில் கால்நடைகள் மேய்வதற்காகப் புறம்போக்கு நிலங்களில் கொஞ்சம் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பது வெளிப்படையான விஷயம். இம்மேய்ச்சல் தரைகள் எவ்வளவு அத்தியவசியமென்பது நாம் கூறாமலே விளங்கும். நம்முடைய சரீரம் சௌக்கியமான நிலைமையிலிருப்பதற்கு எப்படி நல்ல காற்றோட்டமும், உலாவுதலும் அவசியமோ, அப்படியே கால்நடைகளுக்கும் அவை மிகவும் அவசியமானவை. கால்நடைகளைக் கட்டுத்தரையிலேயே யிருக்கும்படி செய்தால், அதனால் அவைகளுக்குப் பல கெடுதிகள் சம்பவிக்கின்றன. அவைகளுக்கு எவ்வளவு புஷ்டிதரக்கூடிய உணவுகளை நாம் கொடுத்தாலும், நாளுக்குநாள் அவை உடல் மெலிந்துபோவதை நாம் பிரத்தியக்ஷமாய்க் காணலாம். ஆகவேதான், கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரைகளின் அவசியத்தை ஜனங்கள் பல காலங்களுக்கு முன்னமாகவே உணர்ந்து, அவ்வப்போது நடக்கும் ஜமாபந்தி காலங்களில் போதியவளவு மேய்ச்சல்தரைகளைக் கிராமத்தில் பொதுவாகப் புறம்போக்கு நிலங்களில் விடும்படி கேட்டுவந்திருக்கிறார்கள். இவ்விதம் ஒவ்வொரு கிராமத்திலும் நடப்பது உண்டு. உதாரணமாக: 1909—10-ம் வருஷங்களில் தஞ்சாவூர் முதலான ஜில்லாக்களில் இவ்விஷயமாய்ப் பலத்த முயற்சிகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. ஆதலால், மேய்ச்சல் தரைகளின் அவசியத்தைப்பற்றி ஜனங்கள் இவ்வாறு உணரும்போது, கவர்ன்மெண்டார் மேய்ச்சல் தரைகளினால் கால்நடைகளின் அபிவிருத்தியானது பலதுறைகளிலும் பாதகமடைந்து வருகின்றதென்றும், அவை ஒன்று கூடுவதால் தாழ்வான பிறப்புள்ள கால்நடைகளே உண்டாக ஹேதுவாகின்றதென்றும் கூறுகிறார்கள். இது சம்பந்தமாய் கவர்ன்மெண்டு உத்தரவில் காணப்படும் விஷயமாவது:—

"மேய்ச்சல் தரைகளுக்காக ஏராளமான தரிசு நிலங்களை ஒதுக்கிவைப்பது இக்கால நிலைமைக்கு ஒத்ததாக இல்லை. இது கால்நடைகளை வளர்ப்பதற்குச் சரியான மார்க்கமன்றென்று கவர்ன்மெண்டார் கருதுகிறார்கள். 1871-ம் வருஷத்தில் நடந்த கால்நடைக் கமிஷனும், பொது மேய்ச்சல் தரைகளால் கால்நடைகளுக்குள் தொற்றுவியாதிகள் பரவ ஹேதுவாகின்றதென்று கூறியுள்ளது."

இன்னும் இதற்கு ஆதாரமாக 1888-ம் வருஷத்திய வியவசாயக் கமிஷன் ரிபோர்ட்டிலும் பின்வருமாறு குறிக்கப்பட்டிருக்கின்றது.

"பொதுவான இடத்தில் கால்நடைகள் வந்துசேரும் வழக்கம் இருக்கும்வரை, கால்நடைகள் க்ஷீணித்துக்கொண்டேதான் வரும். இதனால், மிகவும் கீழ்த்தரமான காளைகள்தான் உண்டாகும். நல்ல வம்சமில்லாத காளைகள் எந்தக் கிடாரியுடனும் கலந்துவிடக்கூடும். மேய்ச்சல் தரைகளில் வயிற்றுக்கில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் கால்நடைகள் கூடிக்கலக்கிற வரையில், நல்ல இனமுள்ள மாடுகள் உண்டாவது கஷ்டம்; தொற்றுவியாதியும் அதிகப்பட ஹேதுவாகும். எவனும் சிறந்த கால்நடைகளை வைத்திருக்கமுடியாது."

வியவசாய இலாகா டெப்டி டைரெக்டர் மிஸ்டர் ஸாம்ஸன் சென்னை இராஜதானியின் கால்நடைகளைப்பற்றிச்செய்துகொண்டிருக்கும் ரிபோர்டில் கூறப்பட்டுள்ளவிஷயம் வருமாறு:-

"நோயுள்ளவும் நோயில்லாதவுமான கால்நடைகள் மேய்ச்சல் தரைகளில் ஒன்று சேர்வதனால், அவை நாளாவட்டத்தில் க்ஷீணித்துவர ஹேதுவாகின்றது. இதனால் பல கெடுதிகள் நேரிடுகின்றன.

இதுவுமன்றி, 1906-ம் வருஷத்தில் கலெக்டர்களுள் பலரும் மேய்ச்சல் தரைகளைப்பற்றி யோசித்ததில், அவை கூடாவென்றே அவர்களுள் பெரும்பான்மையோர் அபிப்பிராயப்பட்டிருக்கின்றார்கள்.

மேய்ச்சல் தரைகளின் மூலமாய்க் கால்நடைகளை அபிவிருத்திசெய்வது பலதுறைகளிலும் கெடுதல்களை விளைவிக்கக்கூடியதாயிருப்பதால், அவைகளை வீடுகளிலேயே கட்டிவைத்துத் தீனிப்போடவேண்டுமென்று சொல்லப்படுகின்றது. அவ்விதமே கால்நடைகளைச் சொந்தக்காரர் வீடுகளிலேயே கட்டிவைத்துத்தீனிப்போடுவது சாஸ்திர ஆராய்ச்சியின் பலனாக நல்லதென்று கருதக்கூடுமாயினும், அது சிறந்த முறையன்று. மாடுகள் கட்டுத்தரையிலேயேயிருந்து அவைகளுக்கு நாம் எவ்வளவு புஷ்டியான தீனியைக் கொடுத்தாலும், அவை நாளுக்குநாள் மெலிந்துபோமென்று முன்னமேயே கூறினோம். கால்நடைகள் தினந்தினம் கொஞ்சநேரமாவது கட்டுத்தரையைவிட்டு வெளியிற்போய் உலாவிவந்தால்தான், அவை கொஞ்சம் தெளிவுற்றிருக்கும்; நல்லகாற்று சுவாஸிக்க இடமேற்படும். ஆகையால், கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரைகள் மிகவும் இன்றியமையாதனவென்பதை நாம் வற்புறுத்திக்கூறுவது அவசியமாகும். இவ்விஷயமாய் இராஜாங்கத்தார் திருப்திகரமான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பார்களென்று நம்புகிறோம்.

**மைசூரில் கூட்டுறவு முயற்சி.**

ஸமீபத்தில் மைசூர் ஸம்ஸ்தானத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களைக் குறித்த ஒரு ரிபோர்டானது ரெஜிஸ்டிராரால் வெளியிடப்பட்டிருக்கின்றது. அதில் சில முக்கியமான விஷயங்கள் காணப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்களை மேற்பார்வை பார்ப்பதற்காகச் சம்பளத்தை அபேக்ஷிக்காமலேயே கௌரவத்திற்காக உழைக்கும் சூபர்வைஸர்களைச் சம்ஸ்தான அதிகாரிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களின் மொத்தம் 56 பேர். ஒரு ஸூபர்வைஸர் ஒரு தாலூகாவின் சங்கங்களை மேற்பார்வை பார்ப்பார். இவர்கள் சுயநலத்தைக் கருதாது பொதுநன்மைக்கென்றே உழைத்துவருவதை நாம் பாராட்டவேண்டும். அவர்கள் சுற்றுப்பிரயாணம்போகும் தினம் ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு ரூ. வீதம்படிப்பணம் பெறுகிறார்கள். இவர்களுடைய கடமை என்னவெனில், புதிய கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தல், கூட்டுறவுச் சங்கங்களின் நன்மையையும் அவசியத்தையும் ஜனங்களுக்கு எடுத்துச்சொல்லல், சங்கங்களை மேற்பார்வை பார்த்தல் ஆகிய இவையாகும். சென்ற வருஷத்தில் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் படிப்பணம் ரூ. 8,400 ஆகும். நெசவுக்காரர்களின் நன்மையைக்கருதி அங்கு 23 சங்கங்கள் இருக்கின்றன. அவைகளில் அங்கத்தினர் 1,032



பேர்; மொத்தம் மூலதனம் ரூ. 58,875. சங்கத்தவர்களால் ரூ. 1,46,913 பெறுமானமுள்ள நூல்கட்டுகளும் சரக்குக்களும் வாங்கப்பட்டன. விலையாயுள்ள மொத்தம் சரக்குகளின் பெறுமானம் ரூ. 1,39,984. இச்சங்கங்களில் ஒன்றிரண்டு தவிர, மற்றவை அவ்வளவு திருப்திகரமாக வேலை செய்யவில்லை. இதற்குக் காரணம், நெசவுக்காரர்களிடம் காணப்படும் துர்க்குணங்களேயென்று ரிஜிஸ்ட்ரார் கூறுகிறார். அவர்களுக்குக்கிடைக்கும் லாபமானது, சாவுகாரர்களால் பரிக்கப்பட்டுப்போகின்றது. இதைப்போக்குவதற்கான வழிகள் அங்குச் செய்யப்பட்டுவருகின்றன.

**புறக்கடை சாகுபடி.**

சென்ற வருஷம் நவம்பர் மாதம் சென்னைச் சட்ட சபையில் கனம் ஸ்ரீமான் சிதம்பரநாத முதலியார் அவர்கள் வீட்டுப் புறக்கடைகளில் 25 செண்டு விஸ்தீர்ணத்திற்குட்பட்டுச் சாகுபடிசெய்யப்படும் கறிகாய்கள், பழவகைகள் தவிர மற்றெல்லாவிதப் பயிர்களுக்கும் குறைந்தது ரூ. 1 தீர்வை விதிக்கவேண்டுமென்ற கவர்ன்மெண்டு உத்தரவை ரத்து செய்து, எவ்வளவு விஸ்தீர்ணத்திற்குப் பயிர் செய்யப்படுகிறதோ அதற்குமாத்திரம் தீர்வை விதிக்கவேண்டுமென்று ஒரு தீர்மானங்கொண்டுவந்தார். இத்தீர்மானத்தைப் பிரேரேபிக்கையில், கனம் மெம்பர்: இந்த இராஜதானியில் மொத்தம் 6, 973, 296 வீடுகளிருக்கின்றனவென்றும், இவைகளுள் பெரும்பாலான வீடுகளுக்கு 25 செண்டுக்குக் குறைந்த புறக்கடைகளே யுள்ளனவென்றும், அவைகளுள் கேழ்வரகு முதலான உணவுப்பொருள்கள் சாகுபடி செய்துகொள்வது வழக்கமென்றும், 25 செண்டுக்குக் குறைவான எந்த விஸ்தீர்ணத்திற்கும் 1 ரூபாய் தீர்வை விதிப்பது ஸாகுபடி செய்பவர்களுக்குப் பெரிய நஷ்டத்தை விளைவிக்கக்கூடுமென்றும், இன்னும் இவைபோன்றும் பல காரணங்களையும் மிகு தெளிவாக எடுத்துக்கூறினார். ஆனால், கடைசியில் இத்தீர்மானமானது தள்ளப்பட்டுப் போய்விட்டது. எனினும், இம்முறையை நன்கு பரிக்ஷித்து அவசியமிருப்பின் தேவையான சௌகரியங்கள் செய்துகொடுக்கப்படுமென்று கவர்ன்மெண்டு தரப்பில் அப்போது பதில் சொல்லப்பட்டது. இது சம்பந்தமாய் கவர்ன்மெண்டார் ஓர் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். இந்த முறை 1327-ம் பசலியில், இந்த ராஜதானி முழுதும் அநுஷ்டானத்திலிருந்தது. இதற்கு முந்திய பசலியைவிட இதில் ரூ. 30,661 அதிகம் வசூலாயிருக்கின்றது. தஞ்சாவூர் ஜில்லாவில் மட்டும் 34,567 ரூபாய் அதிகம் வசூலாயிருக்கின்றது. இந்த ஒரு ஜில்லாவில்மட்டும் இவ்வளவு அதிகம் வசூலானால், ஏழை ஜனங்கள் என் செய்வார்களென்பதை நாம் சிந்திக்கவும் வேண்டுமோ? பொருளாதாரநிலைமையில் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கும் ஏழைகளுக்கு அதிகமான சிரமத்தைக் கொடுக்காமல், இவ்விஷயத்தில் தேவையான திருத்தங்களைக் கவர்ன்மெண்டார் செய்துகொடுப்பது அவசியமாகும்.

**திருவாங்கூரில் ஆயுர்வேத வைத்திய முறையின் அபிவிருத்தி.**

சென்ற மாதத்துச் சஞ்சிகையில் ஆயுர்வேத வைத்தியமுறையின் மேன்மையைப் பற்றியும், அது விஷயமாய்ச் சென்னைக் கவர்ன்மெண்டாரின் அபிப்பிராயத்தைப்பற்றியும் வெளியிட்டோம். இப்போது இம்முறையானது திருவாங்கூர் கவர்ன்மெண்டாரால் எவ்வாறு ஆதரிக்கப்பட்டு வருகின்றதென்பதைக் குறிப்பிடுவோம்.

திருவாங்கூர் சம்ஸ்தானத்தில் ஆங்கிலவைத்திய முறையை அனுஸரித்த ஸ்தாபனங்கள் பல இருப்பினும், அவைகளுக்குக் கெடுதலில்லாமல் ஆயுர்வேத முறையை விருத்திசெய்ய ஏற்பாடு செய்துவருகிறார்கள். ஏற்கனவே அங்கு ஸம்ஸ்தான அதிகாரிகளால் ஆயுர்வேத பாடசாலை ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது. அதை விருத்திசெய்து அதன் மூலமாக ஆயுர்வேதத்தைப் பிரபலமடையச்செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அவை: சுமார் 8 அல்லது 10 ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள ஒரு தோட்டத்தில் நானாவிதமான மூலிகைகளைப்பயிரிட

வும், அதன் மூலமாய் ஆயுர்வேதம் கற்கும் மாணவர்களுக்கு அம்மூலிகைகளின் தன்மைகளைக் கற்பிக்கவும் ஏற்பாடு செய்யப்படும். இதனால் மாணவர்கள் பற்பல மருந்துச்செடிகளையும், அவற்றின் குணகுணங்களையும் அறிய ஹேதுவாகும். ஆயுர்வேத முறைப்படி மருந்துகளைச் செய்ய ஒரு ஔஷதசாலை ஏற்படுத்தப்படும். பாடசாலையோடு ஒரு ஆயுர்வேத வைத்தியசாலையும் ஸ்தாபிக்கப்படும். இங்கு மாணவர்களுக்கு அனுபவபூர்வமாய்ச் சிகிச்சை முறைகள் கற்பிக்கப்படும். இந்தக் காலத்துக்கு ஏற்றபடி சரீர சாஸ்திரத்தை ஆயுர்வேத மாணவர்களுக்குக் கற்பிக்க அஸிஸ்டெண்டு ஸர்ஜன் பதவியிலுள்ள மேனாட்டு வைத்தியம் கற்ற ஒருவர் நியமிக்கப்படுவார். பாடசாலையை யொட்டி வைத்திய புஸ்தகங்களடங்கிய ஒரு சிறு புஸ்தகசாலையும் ஏற்படுத்தப்படும்.

இவ்விதம் ஆயுர்வேத வைத்திய முறையின் அபிவிருத்திக்காகத் திருவாங்கூர்கவர்ன்மெண்டார் செய்திருப்பதுபோல், நமது கவர்ன்மெண்டாரும் செய்ய முன்வருவார்களென நம்புகிறோம்.

## Language Teaching in the Kindergarten.

By Mr. N. R. Kedari Rao, M.A. (Hons) L.T.

### வாசகபாடம் சொல்லிக்கொடுக்கும் முறை.

சிறுவர்களுக்கு வாசிக்கச் சொல்லிக்கொடுப்பதைப் பார்க்கிலும் மேலான நன்மை ஒன்றுமில்லை. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற ஔவையார் வசனம் நமக்குத் தெரியாததன்று. ஞானக்கண்ணே கண்ணென்பர். மற்றதைப் புண்ணென்பர் பெரியோர். 'எண்' அதாவது கணித சாஸ்திரமும், 'எழுத்து' அதாவது வாசகம், காவியம், நாடகம், அலங்காரம் முதலிய சாஸ்திரங்களும் அறிவின் வளர்ச்சிக்கு அவசியமாகும்.

சற்றுக் கவனித்துப் பார்த்தால், வசனத்தைப் படிப்பதனால் குழந்தைகளுக்கு உண்டாகும் நன்மைகளுள் இரண்டு முக்கியமானவையென்பது புலப்படும். முதலாவது: அரிய காவியங்களையும், இதிஹாஸபுராணங்களையும், மற்றும் பல பெரிய நூல்களையும் ஆராய்ச்சி செய்து அதனால் உண்டாகும் மனத்தேர்ச்சி. இரண்டாவது: தன் மனதிலிருக்கும் விஷயங்களைப் பிறர்க்குச் சொல்லும் திறமும், பிறர் மனதில் இருக்கும் விஷயங்களைத் தான் கிரஹித்துக்கொள்ளுதலும்.

இவ்விரண்டில், முதலில் சொல்லப்பட்ட கருத்து நிறைவேறுவது சுலபமான காரியமன்று. இடைவிடாது பல வருஷங்கள் படித்தால்தான், பெரியோர்களால் இயற்றப்பட்டுள்ள அரும்பெருங் காவியங்களை வாசித்து அவற்றினின்றும் உண்டாகும் இன்பத்தை அநுபவிக்கலாம். இது நாளாவட்டத்தில் உண்டாகும் பலனேயன்றி, உடனே உண்டாகக் கூடியதன்று. ஆதலால், சிறுவர்களுக்கு வாசகம் சொல்லிக்கொடுப்பதால் உண்டாகும் தற்கால நன்மை என்னவென்றால், தன்மனப்போக்கைப் பிறர்க்கு அறிவிப்பதும், பிறர்மனப்போக்கைத் தான் அறிவதுமேயாம்.

இவ்விஷயமாப் நாலைந்து வயது குழந்தைகளுக்கு அரிச்சுவடி சொல்லிக் கொடுக்கும் முறையை நாம் முதலில் கூறி, அதன் பின் மற்ற வகுப்புக்களில் வாசகபாடத்தை எப்படி நடத்தவேண்டுமென்ற முறையையும் சுருங்கச் சொல்லுவோம்.

"அரிச்சுவடி சொல்லிக்கொடுப்பது ஒரு சிரமமான காரியமா?" என்று சிலர் பரிகாசமாய்ப் பேசுவார்கள். ஆனால், ஆழ்ந்து யோசிக்க: குழந்தைகளை உற்சாகப்படுத்தி, 'கல்வி கற்பது கஷ்டமன்று; மனதுக்கு இன்பத்தைக் கொடுக்கக்கூடியதே' என்று குழந்தைமனதுக்குத் தோன்றும்படி சொல்லிக்கொடுப்பது மிகவும் சிரமமான காரியமென்பது நன்கு புலப்படும்.



முற்காலத்தில் அ, ஆ, இ, ஈ முதலிய உயிரெழுத்துக்களையும், க், ங் முதலிய மெய்யெழுத்துக்களையும் உபாத்தியாயர் கறுப்புப் பலகையிலாவது, அல்லது மணற்குவியலிலாவது எழுதி அவற்றைப் பிள்ளைகள் படிக்கும்படி செய்வதுதான் முறையிலிருந்தது; பாலர் வகுப்பு முதற்கொண்டே அச்சுப் புஸ்தகங்களை உபயோகித்துக்கொண்டிருந்தார்கள். இவ்விதம் முதலில் எழுத்துக்களை அறிந்தபின், சொற்களையும், பிறகு வாக்கியங்களையும் கற்பித்துக்கொண்டிருந்தார்கள்.

இப்பொழுதோ பாலர் வகுப்பில் அச்சுப் புஸ்தகங்களை உபயோகிப்பது சரியல்லவென்று தெரிகின்றது. அதற்குப் பதிலாக கறுப்புப் பலகையில் எழுத்துக்களைப் பெரியதாய் எழுதி அவற்றின் மூலமாய்க் கற்பிப்பதே உத்தமம் என்று புலப்படுகின்றது. பாலர் வகுப்பிலிருக்கும் குழந்தைகளுக்கு அவ்வருஷம் முழுவதும் சுலபமான இரண்டு கதைகளையும், இரண்டு பாட்டுக்களையும் கற்பித்தல் போதுமானது. முதன்முதலில் கதைகளைச்சொல்லி, அவற்றினின்று வாக்கியங்களைச் சொல்லிக்கொடுத்து, பிறகு அவற்றினின்று சொற்களை வெவ்வேறாகப் பிரிக்கச் சொல்லிக்கொடுத்து, கடைசியாகத்தான் எழுத்துக்களைக் கற்பிக்க வேண்டுமென்பது நவீன முறையாகும்.

அரிச்சுவடியைக் குழந்தைகளுக்குச் சுலபமாய்ச் சொல்லிக்கொடுக்கும் விஷயமாய்ப் பலர் பலவித அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள் என்பது வெளிப்படையான விஷயம். முன்னாளில் பழக்கவழக்கங்கள் எப்படியிருந்தனவென்பதை மேலே கூறியிருக்கிறோம். இக்காலத்தில் அமெரிக்கா தேசத்திலுள்ள லூயி பேட்ஸ் (Lois Bates) என்பவர் ஒரு புது மாதிரி கண்டுபிடித்திருப்பதாகச் சொல்லுகிறார். அதாவது: இரண்டுமூன்று எழுத்துக்களைக் குறித்து ஒரு கதையை உண்டுபண்ணி, அக்கதையில் வரும்விஷயங்களை இவ்வெழுத்துக்களோடு சேர்த்து, அக்கதையைச் சொன்னவுடனே இந்த எழுத்துக்கள் நினைவுக்கு வரும்படி செய்வதாகும். ஆயினும், நமக்குத் தெரிந்தவரை இவ்விதம் சொல்லிக்கொடுப்பது சிறந்ததென்று தோன்றவில்லை. ஏனெனில், சொல்லப்படும் கதையும் அவ்வளவு விரும்பக்கூடியதாயிராது; குழந்தைகளும் கவனிப்பது கஷ்டம்.

இன்னொரு மாதிரி என்னவென்றால், அரிச்சுவடியிலிருக்கும் ஒவ்வொரு எழுத்தும் ஒரு பதார்த்தத்தைப்போலிருக்கிறது என்று சொல்லி, அப்பதார்த்தத்தின் பெயரைச்சொன்னவுடன் குழந்தைகள் மனதுக்கு அவ்வெழுத்துக்கள் ஞாபகத்துக்கு வரும்படி செய்வதே. இம்முறையும் அவ்வளவு சிலாக்கியமானதன்று என்பது நமது அபிப்பிராயம்.

இன்னும் ஒருமுறை என்னவெனில், 'அ' என்ற எழுத்தைச் சொல்லிக்கொடுக்கும்போது, அது முதலெழுத்தாய் வரும்படி அம்மி, அரிவாள், அணில் முதலிய வார்த்தைகளைச் சொல்லி, அவற்றைப்படங்களிலும் காட்டி, அவ்வார்த்தைகளின் முதல் அசையைப் பன்முறையும் குழந்தைகளைத் தனியாய்ச் சொல்லச் சொல்லுவதேயாகும். இது மேற்கூறிய முறைகளைக்காட்டிலும் சிறந்ததென்றே புலப்படுகின்றது.

ஆயினும், கற்பிக்கும் விஷயத்தில் எம்முறையைக் கைக்கொண்டாலும் மாணவர் விஷயங்களைச் சுலபமாய் கிரஹித்துக்கொள்ளுதல் போதிக்கும் உபாத்தியாயரின் திறமையைப் பொறுத்திருக்கின்றது.

இனி, மற்றவகுப்புக்களில் வாசகபாடத்தை நடத்தும் முறை இவ்விதமென்பதைப்பற்றிச் சொல்லுவோம். கூடியவரையில் செய்யுட்களைப் பண்ணோடு பாடவேண்டும். சிறுவர்களுக்கு ராகம் தெரியாததனால், உபாத்தியாயர் முதலில் ஒருதரம் பாடி அதன்பின் பிள்ளை

களையும் அம்மாதிரியே பாடல்களை வாசிக்கச் சொல்லவேண்டும். ஆனால், வாசகபாடத்திலோ பிள்ளைகளை முதலில் வாசிக்கச்செய்து, அதற்குப் பின்தான் உபாத்தியாயர் வாசித்துக்காண்பிக்கவேண்டும்.

சாதாரணமாய் உபாத்தியாயர் தம் வகுப்புக்கு வந்தவுடன் பிள்ளைகளுள் ஒருவரை எழுந்திருக்கச்செய்து, அன்றைப்பாடத்தைப் படிக்கச்சொல்லவேண்டும். அவன் படிப்பதை மற்றவரெல்லோரும் கவனிக்கும்பொருட்டு, மற்ற பிள்ளைகள் புஸ்தகத்தை மூடிவைக்கச் சொல்லவேண்டும். இங்ஙனம் செய்தால், வாசிக்கும் பிள்ளை ஏதாவது பிழைசெய்தால் உடனே அதை மற்றவர்கள் கண்டுபிடிப்பது சுலபமாகும்.

புஸ்தகத்தைப்பார்த்து ஒரு பிள்ளை வாசிக்கும்போது, பலவிஷயங்களை நாம் கவனிக்கவேண்டும்: ஒவ்வொரு வார்த்தையையும் கணீர்கணீர் என்று உச்சரிக்கும்படி செய்விக்கவேண்டும்; தம் வகுப்பில் உள்ளோர் எல்லோருக்கும் சுலபமாய்க் கேட்கும்படி உரக்க வாசிக்கச்செய்யவேண்டும். ஆயினும் உரக்க வாசிப்பதென்றால் கூச்சல் போடுவதன்று; ஒவ்வொரு எழுத்துக்கும் உள்ள மாத்திரையைக் கவனித்து வாசிப்பதுதான் முக்கியமானது. வாசிக்கும்பொழுது தனக்கும் பிறருக்கும் கருத்துநன்றாய் விளங்கும்படி வாசிப்பதே உத்தமம். சந்தர்ப்பத்தை அனுசரித்துக் குரலையும் மாற்றவேண்டும். கோபமாய்ப் பேசுமிடத்துக் கோபக்குரலோடும், சாந்தமாய்ப்பேசும்போது சாந்தமான குரலோடும் வாசிக்கவேண்டும். சோகரஸம் அதிகமாயிருக்கும் சமயத்தில் குரலைத் தாழ்த்தியும், உற்சாகம் அதிகமாய் இருக்குமிடத்துக் குரலைச் சற்று உயர்த்தியும் காட்டவேண்டும். கேள்வி கேட்குமிடத்தும், ஆச்சரியக்குறி இருக்குமிடத்தும் குரலைச் சற்றே ஏற்றவேண்டும். இதனாலன்றோ புஸ்தகத்தில் உள்ள சமாசாரம் முழுவதையும் ஒருவர் குரலிலிருந்தே அறிந்துகொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது? இக்காரணம் பற்றியே ஸம்ஸ்கிருதத்தில் வேத, சாஸ்திர, அத்தியயனங்களுக்கும், தமிழில் தேவாரம், திருவாசகம், ஆழ்வார் பிரபந்தம் முதலிய சைவ வைஷ்ணவ மத நூல்களுக்கும் ஸ்வரஞானம் இன்றியமையாதது என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆகையால், ஒவ்வொரு எழுத்தையும் நன்கு உச்சரித்து, சேர்க்கவேண்டிய வார்த்தைகளைச் சேர்த்தும், பிரிக்கவேண்டிய வார்த்தைகளைப் பிரித்தும், முற்றுப்புள்ளி (Full Stop) முதலிய குறிகள் இருக்குமிடத்து சமயோசிதமாய் நிறுத்தியும், வாசிக்கும் பாடத்தின் பொருள் தனக்கும் பிறருக்கும் நன்கு விளங்கும்படியாயும், பலரும் செவி சாய்த்துக்கேட்டு ஆனந்திக்கும்படியான இனிய குரலாயும் குழந்தைகளுக்கு வாசிக்கக்கற்றுக்கொடுப்பதே உபாத்தியாயரின் முதற்கடமையாகும்.

இப்படி இனிமையாய் வாசிப்பதற்கு, முதலில் நாசியால் நீண்ட சுவாஸத்தை உட்கொண்டு, பிறகு அதை வாசிக்கும்போது மெள்ள மெள்ள விடவேண்டும். பிள்ளைகள் பலரும் இவ்விஷயத்தை அறிவதில்லையாகையால், உபாத்தியாயர் இதைப் போதிக்கவேண்டியது அவசியமாகும். சுவாஸத்தை அடக்கி மெள்ள மெள்ள விடுவது, நமது தேகத்துக்கு மிக்க ஆரோக்கியமானது. அதனால்தான் 'பிராணாயாமம்' என்னும் யோகமுறையை வேதியர்கள் தொன்று தொட்டு அனுஷ்டித்து வருகின்றார்கள். நவீன கலைஞர் (Scientists) களும் இது சரியானது என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

நிற்க. பல சிறுவர்களுக்கும் 'ல, ள, ழ' இம்மூன்று எழுத்துக்களிலுமுள்ள வித்தியாஸம் புலப்படுவதில்லை; 'வாழைப்பழ'த்தை, 'வாளப்பளம்' என்று சொல்வதை நாம் பன்முறையும் கேட்டிருக்கிறோம். இன்னும், 'ற, ர' 'ன, ந' முதலிய எழுத்துக்களை உச்சரிப்பதிலுள்ள வேறுபாடுகள் நன்றாய் எடுத்துக்காண்பிக்கப்படவேண்டும். மார்பினின்று வரும் எழுத்துக்களுக்கும், கழுத்தினின்று வரும் எழுத்துக்களுக்கும், நாசியின் வழியாய் வரும் எழுத்துக்களுக்கும் உள்ள தாரதம்மியத்தைச் செவ்வனே பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.



இப்படிச் சொன்னபிறகும், சிலருக்கு நாக்குத் திரும்பாமலிருக்கும். அப்படிப்பட்டவர்களைத் தனியே அழைத்துக்கொண்டுபோய், தினம் பத்து நிமிஷம் எந்த எழுத்து உச்சரிக்க வரவில்லையோ அதையே ஒன்றுக்குப் பத்துத் தடவை சொல்லச் செய்யவேண்டும்.

சில குழந்தைகள் 'ச', 'த' இவ்வெழுத்துக்களை 'ஸ' மாதிரி உச்சரிப்பார்கள். சிவனை 'ஸிவன்' என்று சொல்வது மிகவும் சாமானியம். இப்படிப்பட்டவர்களுக்குப் பரிகாரம் என்னவென்றால், 'திதத்தித்த' முதலிய ஒரெழுத்துப் பாக்களைக்கொடுத்துப் பலதரமும் வாசிக்கச்செய்யவேண்டும். சற்று ஜாக்கிரதையாயிருந்தால், இவ்விதமான குற்றங்குறைகளைச் சுலபமாய் நீக்கிவிடலாம்.

மற்றும், சில குழந்தைகளுக்குத் திக்கல் இருக்கலாம். அவர்களை உபாத்தியாயர் மிக்க கவலையோடு நடத்தவேண்டும். அவர்களைப் பார்த்து மற்றவர் அழகு காட்டாமலும், சிரிக்காமலும் பார்த்துக்கொள்ளுவது உபாத்தியாயரின் முதற்காரியமாகும்; திக்கலை அடியோடு நீக்குவதற்கு வேண்டிய உபாயஞ்செய்வது இரண்டாவதுகாரியமாம். அப்படிச் செய்வதற்கு கிரேக்கர்களில் பெரும்புகழ்படைத்த 'டிமாஸ்தனீஸ்' என்ற சபாவாதிசெய்த உபாயத்தைவிட மேலானது ஒன்றுமில்லை. சிறு கூழாங்கற்களை வாயிற் போட்டுக்கொண்டு ஒருவருமில்லாத இடத்துக்குப்போய், சங்கோசமும், பயமும் இல்லாமல் வாயைவிட்டு உரக்கப் பலநாள் பேசினால் இக்குறை நீங்கிவிடும். இப்படி உபாத்தியாயர் பிள்ளைகளுக்குக் கற்பித்து அவர்களின் கஷ்டத்தை நீக்கினால், அவர் பெருநன்மை செய்தவராவார்.

சாதாரணமாய், முக்கால்மணிநேரம் உள்ள ஒரு வகுப்பில் குறைந்தபட்சம் பதினைந்து அல்லது இருபது நிமிஷம் வரையில், பிள்ளைகளும் உபாத்தியாயரும் 'வாசிக்கும்' விஷயத்தைப்பற்றிக் கவனிக்கலாம்.

பிறகு, ஒவ்வொரு பாராவையும் (Paragraph) தனியே எடுத்து, அதிலுள்ள அரும்பதங்களுக்கு அர்த்தம் சொல்லி, மற்றும் பிள்ளைகளுக்குத்தெரியாத விஷயங்களைச் சொல்லவேண்டும். பாடத்தில் ஏதாவது படம் இருந்தால் அதை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். சில படங்கள் மூலமாய் முழுக்கதையையும் விளக்கலாம். சிலவற்றின் மூலமாய், மிருக, பட்சிகளின் அவயவங்களைச்சுட்டிக்காண்பிக்கச்செய்யலாம். படங்களை உற்றுப் பார்த்து அவைகளினின்றும் விஷயங்களை அறிந்துகொள்ளுவதனால், குழந்தைகளுக்குக் கவனிக்கும் சக்தி (Observation) அதிகரிக்கும்.

இப்படி ஒருதடவை பாடத்தை முடித்தபின், தான் சொல்லிக்கொடுத்த விஷயத்தைப் பையன்கள் அறிந்துகொண்டார்களா என்று [illegible] கேள்விகளை உபாத்தியாயர் கேட்கவேண்டும். சிறிய வகுப்புகளில் கேள்விமூலமாய்ச் சொல்லிக்கொடுப்பதைவிட மேலானவகை ஒன்றுமில்லை என்பது சித்தாந்தம். ஆகையால், பிள்ளைகளைக்கேள்விகேட்டு அவர்களிடமிருந்து தகுந்த மறுமொழியைத்தருவித்தல் உபாத்தியாயரின் முக்கியக் கடமைகளில் ஒன்றாகும்.

பிள்ளைகள் எல்லோரும் கவனித்துக்கொண்டிருக்கும்பொருட்டுக் கேள்விகளை முதலில் பொதுவாய்ச்சொல்லிவிட்டு, பிறகு யாராவது ஒரு பிள்ளையைச் சுட்டிக்காட்டி, அவனிடமிருந்துவிடையை வருவிக்கவேண்டும். கேள்விகள் அதிக சுலபமாயும் அதிக கடினமாயும் இருக்கக்கூடாது. குழந்தைகளை யோசிக்கும்படி செய்யவேண்டுமேயன்றி, புஸ்தகத்திலிருப்பதையே திருப்பிச்சொல்லும்படி செய்யக்கூடாது. வகுப்பில் ஒருவரும் மறுமொழி கூறாமலிருந்தால், அதையே இன்னுங்கொஞ்சம் சுலபமான வழியில் கேட்டுப் பிள்ளைகளிடமிருந்தே மறுமொழி வருவிக்கவேண்டும்.

இதன் பிறகு யாராவது ஒரு பிள்ளையைக் கூப்பிட்டு, அக்கதையை எளியநடையில் சொல்லச் செய்யவேண்டும். அவன் சொல்லுவதில் ஏதாவது பிழையிருந்தாலும், அதனை அப்பொழுதே சுட்டிக்காட்டாமல் மனத்தில் வைத்துக்கொண்டு, அவன் கதையை முடித்த பிறகுதான் சொல்லவேண்டும். அப்படியல்லாமல் மத்தியிலேயே பிழைகளைக் காட்டிக்கொண்டுவந்தால், பிள்ளையின் உற்சாகம் குறைந்துபோகும்.

கதையை ஒருவர்க்கிருவர் கூடியவரையில் பிழையின்றிச் சொல்லிவிட்டால், வகுப்பில் எல்லோரும் அதை அறிந்திருப்பார்கள் என்று நாம் நினைத்துக்கொள்ளலாம். ஆயினும், சிலருக்குக்கொஞ்சம் சந்தேகம் இருக்கும். அதை நிவிருத்தி செய்வதற்கு அந்தக்கதையை ஒரு சிறு நாடகமாய் நடித்துக்காண்பிக்கலாம். நாடகம் நடிப்பதனால் மாணாக்கர்களுக்குப் பல வித நன்மைகள் உண்டாகும் என்பதற்கு ஐயமில்லை. பிள்ளைகளின் புத்திக்கூர்மையும் இதனால் நன்கு வெளிப்படும் என்பதற்குப் பல உதாரணங்களைக் கூறலாம். ஒரு காட்டின் காட்சியைக் காண்பிப்பதற்காக ஒரு உபாத்தியாயர் சிலசிறுவர்களைக் கூப்பிட்டு வரிசையாய் நிறுத்தி, 'நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மரமாய்ப் பாவித்துக்கொள்ளுங்கள்' என்றார் உடனே வரிசையில் நின்ற சிறுவர்களெல்லோரும் தலையை மும்முறமாய் ஆட்டிக்கொண்டிருந்தார்கள். உபாத்தியாயருக்கு இதன்பொருள் சரியாய் விளங்கவில்லை. 'ஏன் இப்படித் தலையை அசைத்துக்கொண்டிருக்கிறீர்கள் ?' என்றதற்கு, அவர்கள், 'காட்டில் காற்றுவந்தால் மரங்கள் அசையாவோ ?' என்ற கூர்மையான மறுமொழியைக் கொடுத்து உபாத்தியாயரைச் சந்தோஷிப்பித்தார்கள்.

ஆயினும், ஒவ்வொரு பாடத்தையும் நாடகமாய் நடிப்பிப்பது அசாத்தியம். சில கதைகளைத்தான் நாடகமூலமாய்க் காண்பிக்கமுடியும். இவ்விஷயத்தை உபாத்தியாயர் நன்றாய்த் தெரிந்துகொண்டு, எவ்வெக்கதைகளில் நாடகம் நடிப்பது உசிதமோ, அவ்வவைகளிலேயே பிள்ளைகளுக்கு உற்சாகத்தை உண்டாக்க வேண்டுமேயன்றி, ஒவ்வொன்றிலும் அப்படிச் செய்யக்கூடாது.

சாதாரணமாய்க் கதை முடிந்தபிறகு பல உபாத்தியாயர்கள், 'இக்கதையின் நீதி என்ன ? இக்கதையால் நீங்கள் அறிந்துகொண்டதென்ன ?' என்று கேட்பது வழக்கம். ஒரு கதையினின்றே பல நீதிகள் நமக்குப் புலப்பட்டாலும், சிறுவர்களுக்குப் போதிக்கும்போது அவற்றையே ஊன்றிக்காட்டக்கூடாது; ஏனெனில், அப்படிச்செய்தால் கதையில் உள்ள இன்பம் மறைந்துபோகும். கதையின் நீதிகளைத் தாங்களே உயர்த்துணரச்செய்யவேண்டுமேயன்றி, உபாத்தியாயர்கள் வெளிப்படையாகச்சொல்லுதல் நலமன்று.

மேற்கூறிய விஷயங்களையெல்லாங் கருதியே, இக்காலத்தில் ஏற்பட்டிருக்கும் வாசகபாடங்கள் முன்னுளில் இருந்தவைகளைவிட எத்துணையோ மடங்கு சுலபமாயும், உலக இயற்கைகளை வெளிப்படையாய்க் காட்டுவனவாயும் இருக்கின்றன. ஆகையால், உபாத்தியாயர்களெல்லோரும் ஊக்கத்தோடு கற்பிக்க முயன்றால், மாணவர்கட்குச் சிறிதும் சிரமமின்றி, மேலும் மேலும் அவர்களுக்கு வாசிக்கும் அவாவை உண்டாக்கலாம்.

என். ஆர். கேதாரி ராவ், எம். ஏ ; எல். டி.


## ஔவை.

நம் அருந்தமிழ் மொழியிற் சிறந்த நீதிநூல்களையும் தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம். பலநூல்களைத்தழுவியும், புலவர்களின் கர்ணபரம்பரையை அனுசரித்தும் இனிய எளிய வசனநடையில் இயற்றப்பட்டுள்ளது.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
புஸ்தகவியாபாரிகள், வேலூர் (தென்னிந்தியா).
**V. N. SAMA RAO & Co., VELLORE.**




## Turmeric.

### மஞ்சள்.

நமது தேசத்தில் மஞ்சள் எல்லாவிடங்களிலும் பயிர் செய்யப்படுகின்றது. முக்கியமாக, சென்னை இராஜதானியில் திருச்சினுப்பள்ளி, ஈரோட்டு, கரூர், சேலம், வேலூர், கடப்பை முதலான இடங்களில் இது விசேஷமாகப் பயிராகின்றது. இது கிழங்கு வர்க்கத்தைச் சேர்ந்தது. இதில் இரண்டு வகை உண்டு.

(1) சாயமஞ்சள் என்று சொல்லப்படும். இது சாயம் தோய்ப்பதற்கு உபயோகப்படுகின்றது.

(2) கறிமஞ்சள் என்று சொல்லப்படும். இது வீடுகளில் சமையலில் உபயோகிப்பதற்கும், ஊறுகாய்போடுவதற்கும் உபயோகப்படுகின்றது. இப்பயிரானது தனியாயும் அல்லது இஞ்சி, கருணை, சேப்பங்கிழங்கு, கொட்டை முத்து முதலியனவற்றோடும் பயிர்செய்யப்படுகின்றது.

#### நிலம்.

மஞ்சள் பயிரானது நல்ல வடிகால்வசதியுள்ள கரிசல்பூமியிலும், கொஞ்சம் மணல்கலந்த பூமியிலும் விளைவாகும். செம்மண் நிலங்களும் இதற்கு ஏற்றவையே. மற்ற கிழங்குப் பயிர்களைப்போல் இப்பயிரானது பயிரிடப்படும் நிலத்திலிருந்து அதிக சத்தைக் கிரஹிக்கக்கூடியது. ஆகையால், அதிகமான சத்துள்ளனவும், நன்கு எருவிடப்பட்டனவுமான மணற்பாங்கு நிலங்களே இதற்கு ஏற்றவை. தேவைக்கு மிஞ்சின ஈரம் நிலத்தில் தங்கினால், பயிர் கெட்டுப்போம்.

#### நிலத்தைத் தயார் செய்வதும், நடுவதும்.

பயிரிடப்படும் நிலமானது அதிகமான களைகள் உண்டாகக்கூடியதாயிருக்கக்கூடாது. நிலமானது மண்கட்டிகள் இல்லாததாய், குறைந்தது 6 தடவைகள் உழப்படவேண்டும்; மண்கட்டிகள் இருக்குமாயின், நடப்படும் கிழங்குகள் அழுகிப்போய் முளை வெளிவராது. நிலம் தயார் செய்யப்பட்டதும், சுமார் 12 அடி நீளமும் 6 அடி அகலமுமுள்ள பாத்திகள் கட்டப்படவேண்டும். பாத்திகளின் இடையே பாசனத்திற்காகக் கால்வாய் விடப்படவேண்டும். ஒவ்வொரு பாத்தியிலும், 1- அடிமுதல் 1½ அடி வரை தூரமாகவும், 3 அடி ஆழமாகவும் உள்ள குழிகளைத்தோண்டி அவற்றில் கிழங்குகளை நடவேண்டும். நட்டது முதற்கொண்டு ஐந்தாறு மாதங்கள்வரை வாரம் ஒருமுறை தண்ணீர் பாய்ச்சவேண்டும். பயிர் முளைத்து ஒரு மாதமானவுடன், மாதம் ஒருமுறை கொத்திக் களை பிடுங்கி நிலத்தைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும்.

#### எருவிடுதல்.

இந்தப் பயிருக்கு அதிகமான எரு தேவை; ஆட்டுக்கிடை கட்டலாம். ஏக்கர் 1-க்கு 10 வண்டி மாட்டெருவும், 20 வண்டி எரி மண்டூம் கொட்டவேண்டும். முத்துக்கொட்டைப் பிண்ணாக்கையாவது நிலக்கடலைப் பிண்ணாக்கையாவது, அல்லது வேப்பம் பிண்ணாக்கையாவது நன்றாகத் தூளாக்கி இடிற்போடலாம்.

#### வெட்டுதல்.

இது ஏறக்குறையப் பத்து மாதத்துப்பயிர். ஜுன் மாதம் முதலில் நட்டால், பிப்பரவரி மார்ச்சு மாதங்களில் வெட்டிவிடலாம். வெட்டும் சமயம் இலைகளெல்லாம் காய்ந்துபோகும். அப்போது அவற்றையெல்லாம் பொறுக்கி எடுத்துவிட்டுக் கிழங்கை வெட்டி எடுக்கவேண்டும்.

ஒரு ஏக்கர் மஞ்சள் பயிர்செய்வதற்கு ஏறக்குறைய ரூ. 120 செலவாகும். அதிலிருந்து சுமார் 200 ரூபாய் மதிப்புள்ள மஞ்சள் கிடைக்கும். மஞ்சளோடு வேறு கிழங்குகளைப் பயிர்செய்தால், அவற்றினின்றும் தகுந்த வருமானம் கிடைக்கும்.

வெட்டியெடுத்த கிழங்குகளை விற்பனை செய்வதற்கு அவற்றைப் பக்குவம் செய்யவேண்டும்.

பக்குவம் செய்யும் முறையானது, ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு விதமாக அனுஸரிக்கப்படுகின்றது. நமது இராஜதானியில் மஞ்சளைத் தண்ணீரில் வேகவைத்து உலர்த்துகிறார்கள்.” இப்படி வேகவைத்துப் பக்குவப்படுத்தின மஞ்சள் ஏக்கரா 1-க்குச் சுமார் 3,000 பவுண்டுகள் தான் கிடைக்கும்.

---

## Female Education.

BY MR. K. ANANTHACHARIAR.

### பெண்கல்வி.

இப்போது நமது தேசத்தில் நாகரிகம், கல்வியபிவிருத்தி முதலியவற்றில் ஆண்மக்களோடு பெண்மக்களை ஒப்பிட்டுப்பார்த்தால், அவர்கள் பலமடங்கு தாழ்ந்துள்ளார்களென்பது புலப்படும். இதற்கான காரணங்கள் பல விருப்பினும், முதன்மையானது பெண்கள் பாடசாலைகளை விட்டபிறகு கல்வியைப்பற்றிக் கொஞ்சமேனும் சிந்தியாமலிருப்பதே.

பலர் தம் பெண்மக்களைப் பாலியத்திலேயே பள்ளிக்கு அனுப்பி, கொஞ்சம் வயதுவந்ததும் படிப்பை நிறுத்திவிடுகிறார்கள். இப்படிச் செய்வதனால், எவர்க்கும் எவ்விதப் பிரயோஜனமும் உண்டாகமாட்டாது. இப்பெண்பிள்ளைகளும் தங்கள் கல்வி முற்றுப்பெற்றதென்று எண்ணி, வீட்டுவேலைகளொழிந்த நேரத்தை நித்திரை செய்வதிலும் வீண்பேச்சுக்களிலும் கழிக்கிறார்கள்; கல்வியைப்பற்றிக் கொஞ்சமும் நினைப்பதில்லை. இதனால், ஏதோ சொற்பமாகக் கிடைத்துள்ள கல்வியும் மறந்துபோய்விட ஏதுவாகின்றது.

சிறுவர்கள் கெட்டபழக்கமுடையவர்களாயிருப்பதற்கு, அவர்களின் பெற்றோர்களே காரணமென்று கூறலாம். அவர்கள், தந்தையைக் காட்டிலும் தாயினிடத்திலேயே அதிகப் பழக்கமுடையவர்களாயிருப்பதனால், படிப்பில்லாத தாய்மார்களின் அறியாமையும், துர்க்குணங்களும் பிள்ளைகளுக்குப் படிகின்றன.

கற்றவர்க்கும், கல்லாதவர்க்கும் உள்ள பேதமானது, மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை ஒக்கும். கல்வியின் அருமையானது கல்லாத ஸ்திரீகளுக்குப் புலப்படாதாகையால், அவர்கள் தத்தம் மக்களின் கல்வியபிவிருத்திக்குப் பெருந்தடையாயிருக்கின்றார்கள். கல்வித் தெய்வமாகிய ஸரஸ்வதி தேவி பெண்வடிவமாக இருக்க, ஸ்திரீகள் படிக்கக்கூடாதென்று சொல்லப்படுவதற்குக் காரணமேயில்லை. ஒளவை, உப்பை, உறுவை, வள்ளியம்மை முதலானவர்கள் கல்வியில் தேர்ந்தவர்களாயில்லையா? இவர்கள் பற்பல நூல்களை இயற்றவில்லையா? ஆகையால், முற்காலத்தில் ஸ்திரீகள் படித்து முன்னுக்குவந்தது போல், இப்போதும் நமது ஸ்திரீகள் படித்து முன்னுக்கு வரவேண்டியது அவசியமாகும்.

கல்விச் செல்வமானது எவராலும் மதிப்பிடக்கூடாதது. அது நாளுக்குநாள் விருத்தியடையும்; பலராலும் உபசரிக்கப்படும். அழகில்லாதவர்களுக்கு அதுவே அழகு. அது தரித்திரர்களுக்கு ஓர் பாக்கியமாகும். ஆகையால், கல்வியின் இத்தகைய பெருமையை மதிப்பிட இயலுமோ?

ஸ்திரீகள் படிப்பதனால், அவர்களின் அறிவு விசாலமடையும். அவர்கள், பர்த்தாக்களுக்கு மந்திரியைப்போல் சமயத்தில் நல்ல யோசனைகளைச் சொல்லக்கூடும்; காரியஸ்தர்களைப் போல் வீட்டின்சகலகாரியங்களையும் பார்த்துக் கொள்ளக்கூடும்; வீட்டுக் கணக்குக்களையும் ஒழுங்காய் வைத்துக்கொள்ளக்கூடும்.



படித்த பெண்கள் தம் வீட்டுவேலைகளைச் செய்தானதும், மிகுதியான காலத்தை வீணாக்காமல், அறிவைப் பெருக்குவதற்கான நீதிநூல்களைப் படிக்கலாம்; தம் மக்களுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்கலாம்; இன்னும், தம் புருஷர்கள் வெளியே சென்றிருக்குங்கால், அவர்களிடமிருந்து வரும் கடிதங்களை அன்னியரிடம் கொண்டுபோய்க் காட்டி அவற்றை அறிய இடமிராது.

ஆகையால், சமூக அபிவிருத்திக்கும் தேசமுற்போக்குக்கும் பெண்கல்வி அத்தியவசியமாயிருப்பதனால், ஒவ்வொருவரும் இது விஷயமாய்ச் சிரத்தை காட்டவேண்டியது முக்கியமாகும்.

கே. அனந்தாசாரி.

---

## How to spend Leisure Hours.

BY MR. D. S. NESAMANI.

### விடுதிப்பொழுதைக் கழிக்கும் ஆறு.

(211-ம் பக்கத்தொடர்ச்சி.)

#### I கல்வி.

இம்மண்ணிடை மானிடம்பெற்ற மாண்பினையுடையார், தாம் அடைதற்குரிய நான்குபேறுகளாம் அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றை அநுபவிப்பதற்குத் துணைக்காரணமாகவுள்ளது செல்வம். இச்செல்வம் இருவகைத்து: கல்விச்செல்வம், பொருட்செல்வம். இவ்விரண்டினுள், நடுவுநிலைமைபொருந்தி யார்மாட்டும் நில்லாது சுழல் சகடக்கால்போல வந்து,

“பூரியர்தமை வேந்தாக்கிப்,புவிபுரப்பித்துத் தூய்த்துச்
சிரியவுண்டி சேர்த்துத்,தேவர்தம் உலகம் போக்கிக்
காரியம் அனைத்துங் கூட்டிக், கருதலர்தம்மை வாட்
[டும்” பொருட்செல்வத்தினும்,

“வெள்ளத்தாற் போகாது, வெந்தணலால் வேகாது,
[வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும்நிறை(வு)
[ஒழியக் குறைபடாது,
கள்ளர்க்கோ மிகவரிதாய்க் காவலோ மிகவெளிதாய்
[……”

உள்ளத்தே இருந்து, மக்களுக்கு இன்றியமையாத பொருள்களுட் சிறந்ததான அறிவைச் சோபிக்கச்செய்யும் கல்விச்செல்வமே சிறந்ததாம்.

‘கல்வி’ என்னும் பதத்திற்கு ‘நூற்படிப்பு’, ‘காவ்யவாராய்ச்சி’, ‘பாடசாலையில் மாணவர் பெறுமறிவு’ என்பனபோன்ற போதியவளவு விஸ்தாரமில்லாதனவான சில வரையறுப்பு வாக்யங்களைப் பலர் வழங்குகின்றனர்; ஆனால், ‘கல்வி’ என்னுமொழி, ‘கல்’ என்னும் பகுதியினடியாகப் பிறந்த தொழிற்பெயராதலால், ஆராய்ந்து பயின்று அறிந்துகொள்ளல் எனப் பொருள்படும். ஆதலால், மநுஷ்யர் கற்றற்குரியனவெல்லாம் கல்வியின்பாற்படும்; எனவே, செல்வரும் வறியோரும், பெரியோரும் சிறியோரும், ஆண்மக்களும் பெண்மக்களும் விரும்பும் பாக்யத்தை அவரவர்கள் அநுபவிக்கும்படி அவரவர்களை நல்வாழ்க்கையுடையவராயிருக்கப் பக்குவப்படுத்துவன எவையோ, அவையே கல்வியாம்.

கல்வி பலவகைப்படும். அவற்றில் மனத்திற்குப் பெரிதும் மகிழ்ச்சிதந்து, இப்ரபஞ்சத்தை நச்வபதார்த்தமென்று விளக்கி, ஸத்பதார்த்தமான ஆத்மாவுக்குத் தீமைசெய்யும் அஞ்ஞானத்தை நசிக்கச்செய்து, மனுகுலத்தாரை ப்ரஹ்மஜ்ஞான ஸம்பந்நராக்கவல்ல நூற்கல்வியை முதலில் விஸ்தரிப்போம்.

1. நூற்பயிற்சி. முதுணர்ந்தோர் தாம் கற்றறிந்தவற்றைத் தம் பின்ஸந்ததியாரின் ப்ரயோஜனத்துக்காகச் சேர்த்துக்கொண்டு, பத்தழகு பொருந்தத் தொடுத்த ப்ரபந்தங்களே நூல்களாம். பன்னூற்றாண்டுகளாக நம் மூதாதையர் நமக்கெனத் திரைகடலோடித் தேடிப்பத்ரப்படுத்திய அருமையான சொத்து நூல்களாதலால், அவை நம் பித்ரார்ஜிதமாம். புஸ்தகங்கள், நமக்கிஷ்டமான நேரத்

ில், நம்மிச்சைப்படியும், நம் சக்திக்கேற்றபடியும் நமக்குக் கல்விபுகட்டும் நல்லாசிரியர்கள். அவை, நம் நிலைமையையும், நம்குணலக்ஷணங்களையும் பொருட்படுத்தாமல், நம்முடன் உட்கார்ந்து, நாம் 'பேசு' எனப்பேசி, 'நிறுத்து' என நின்று, 'போ'வென வெறுப்பின்றிப்போம் நம் உற்ற நண்பர்கள். கழிந்த அல்லது நம்மை விட்டுப்பிரிந்த நம்முன்னோரின் சப்தத்தை நம் செவிகளில் த்வனிக்கச்செய்யும் தூரலிபிகளி * நூல்களே. பூகோளத்தின் மறுபுறத்திலிருக்கும் விசேஷங்களையும், இயற்கை செயற்கை அத்புதங்களையும் நம் கண்கள்முன் நிறுத்தி, நமக்குச் சொல்லொணாக் களிப்பைத்தரும் 'ஸினிமேட்டொக்ராப்' நூல்களே. 'அண்ட கோளகைக்கு அப்புறத்து எம்மை ஆளுடைக் கொண்டல் நீள்' பதத்தினருகே கொண்டுசேர்க்கும் விமானமும் நூல்களெனக் கூறலாம். எனவே, நூல்கள் கற்போர் மனதைக் கவர்ந்து கொள்வன என்பது பெறப்பட்டது.

மாணவர் பலர் தாம் பாடசாலையை விட்டு நீங்கி உத்யோகிக்கத் தொடங்கியதும், தாம் கற்கவேண்டியவை அனைத்தையும் கற்றாயிற்று என்ற அபிப்ராயம் தம்முள்ளத்தில் ஊன்றக் கொண்டு, புஸ்தக ஸஹவாஸத்தை முற்றும் தவிர்க்கின்றனர். இவர்கள் கொண்டுள்ளது எத்துணை விபரீதமான கருத்து என்பது கீழ்க்குறிப்பிடும் த்ருஷ்டாந்தத்தால் விளங்கும். ப்ரஸித்திபெற்ற ஆக்ஸ்போர்ட் (Oxford) ஸர்வகலாஸங்கத்து பௌவனவித்யாபட்டதாரியொருவன், வயது சென்றதனால் சொற்றளர்ந்து சோர்ந்த நடையினரான தன்னாசிரியரிடம் பிரியாவிடைபெற உத்தேசித்து, அவரிடஞ்சென்று, "ஐயா, நான் என்கல்வியை முடித்துவிட்டதனால்—" என்று ஒரு வாக்யத்தை ஆரம்பித்து முடிக்குமுன், நூற்பயிற்சியிலே மூப்படைந்த இவ்வாசிரியர் திடுக்கிட்டு, கோபாவேசமுற்றவராய், "என்னய்யா! கல்வியை முடித்துவிட்டீரா! இப்பொழுதுதான் நான் கல்வியைத்தொடங்குகிறேனே!!" என்றாராம்.

* Telephone, Telegram etc.

இவ்வாசிரியர் செருக்குக்கொண்டு அல்லது கல்வியினிடத்துத் தமக்குள்ள அபிமானமுற்று இங்ஙனம் கூறினார் என்பதன்று; கல்வி காலக்ரமத்தில் மேன்மேலும் வளருவது; அது, மநுஷ்யரின் ஒரு பருவத்திற்குமட்டும் உரியதன்று என்று உணர்ந்தனாலேயே, ஸர் ஐஜ்ஸக் ந்யூட்டன் என்னும் ப்ரக்யாதிபெற்ற கணித, விஜ்ஞான சாஸ்த்ரியும், தம்மை அறிவெனும் மஹா ஸமுத்ரதீரத்திலுள்ள சிறு கூழாங்கற்களைப் பொறுக்கி விளையாடும் சிறு மகவிற்கு ஒப்பிட்டாரென்றால், நாம் இன்னும் இவ்விஷயத்தைப்பற்றிக் கூறவேண்டியதென்? ஔவையும், 'கற்றது கைம்மண்ணளவு, கல்லா(து) உலகளவு' என்றார். ஆகவே, மனிதர் தாம்கல்விக் குறையறக் கற்கவேண்டும்.

மற்றும், சிலர், ஒருநாளின் பெரும்பாகம் யந்த்ரங்களைப்போல் ஒரேவிதமான தொழில் செய்பவர்கள். இவர்கள் தந்தொழிலிடத்து வெறுப்புக்கொள்ளாமல், தங்கடமையைச்செவ்வனே செய்து தம் வாழ்க்கை மிகத் துக்கப்பாடு நிறைந்ததென்று எண்ணியெண்ணிக் குழையாதபடிக்கும், தம்தினசரிச்செய்தொழிலினின்று வேறுபடும் இனிய தொழிலான நன்னூல்கள் வாசித்தலைச் செய்யவேண்டும். மனக்கிலேசமுடையவர் பெரும்பாலும் தைர்யங்குன்றப்பெற்றவர்கள். தைர்யமிழந்தவன் அரைமனிதன். இதுபற்றித்தான் 'நம் ஜீவ்யத்தை நறுமணமுடையதாக்குவது வேற்றுமை" என்ற கருத்துக்கொண்ட வாக்யத்தை வழங்குகின்றனர் ஆங்கிலர்.

அன்றியும் நாம், அளந்தறிதற்கொண்ணாத அந்தமில்லானிச்சைப்படி நீதிநெறியினின்று பிறழாதபடி நூல்களைக் கற்கவேண்டும். நாம் கற்பனவெல்லாம் 'கல்வி' என்னும் பதத்தில் அடங்குமென்று மேலே கூறினோம். கூர்ந்தாராயின், நாம் ஓய்ந்திருக்கையிலும், ஏதேனுமொருகருமத்தை ஊக்கத்துடன் புரிந்துகொண்டிருக்கையிலும் நாம் கல்வியைப் பெறுகிறோம். எப்படியெனில், நாம் அறிவுபெறக் கருத்தூற்றுக் கல்வியை அடையலாம்; நம் மனத்திற்குத் தெரியாமலேயும் நாம் கல்வியைப் பெறுதல்கூடும். நாம் நம் மனமறியக் கற்பது, நூல்களை வாசித்தலாலே; கற்றறிந்த பெரியோரிடத்திலிருந்து நம் சந்தேகம் நிவ்ருத்திக்கப்பெறுவதாலே, அல்லது சிறந்த உபந்யாஸங்கள் கேட்பதனாலே, அல்லது ஏதோ ஒரு பொருளைப்பற்றி த்யானிப்பதால், நாம் அறியாமலிருக்கையிலும் கல்வியை அடைவது நம் புலன்களாலே. வீதிவழியே ஒருவர் நடந்து செல்கையில் அல்லது ஒருவேலையைச் செய்துகொண்டிருக்கையில் எத்தனை காட்சிகளை அவர்கண் காண்கின்றது; எத்தனை நன்மொழிகளையும், தீமொழிகளையும் அவர் செவி கொள்ளுகின்றது! எனவே, கல்வி, நற்கல்வி, தீக்கல்வி என இருவகைப்படும். நாம் நம்மை அறியாமலும் கற்கும் தீக்கல்வியின் வலிமையைக் குன்றச்செய்ய நாம் நல்லுபதேசங்களைப் பெறவேண்டும். நாம் வேண்டும்பொழுது நல்லுபதேசங்களை நமக்குத் தருவன நூல்களையன்றி மற்றெவை?

(இன்னும் வரும்.)

தா. ஸா. நேசமணி.



## Black Quarter.

## சப்பை நோய்.

சப்பை நோயானது தொற்று வியாதியைச் சேர்ந்தது. இது ஒருவித விஷக்கிருமியினால் உண்டாகின்றது. விசேஷமாய், மாடு, செம்மறிஆடு முதலானவைகளும், சிறிதளவு வெள்ளாடு, குதிரை, ஒட்டகம் முதலியவைகளும் இந்நோயால் தாக்கப்படுகின்றன. அநேகமாய், மூன்றுமாதம்முதல் நாலு வயது வரையிலுள்ள இளம்பிராயமான பிராணிகளுக்கே இந்த வியாதி அதிகமாக உண்டாகின்றது. ஆனால், வயது முதிர்ந்தும் திடமற்று மெலிந்தும் இருக்கும் பிராணிகளுக்கும் இவ்வியாதி காண்பது அரிதென்று சொல்லப்படுகின்றது. நல்ல புஷ்டியுள்ள கால்நடைகளுக்கு இந்நோய் காணுவது ஸகஜமாயிருக்கின்றது.

இந்தியாவில் இந்த வியாதியானது சில இடங்களில் கொஞ்சமாயும், சில இடங்களில் அதிகமாயும் உண்டாகின்றது. சில இடங்களில் வருஷந்தோறும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் இந்த வியாதி தோன்றுவதுண்டு. தாழ்ந்த சதுப்பு நிலங்களில்தான் இந்த வியாதி அதிகமாக உண்டாகின்றது. அங்குக் கால்நடைகள் மேய்ச்சலுக்குப் போகும்போது, மண்ணிலிருக்கும் இவ்வியாதிக்கிருமிகள் அவைகளுக்குத் தொற்றிக்கொள்ளுகின்றனவென்று சொல்லப்படுகின்றது. இன்னும், மிருகங்களின் வாயிலாவது அல்லது கால்களிலாவது புண்களிருந்தால், அவற்றின் மூலமாயும் இவ்வியாதிக்குரிய கிருமிகள் இரத்தத்துடன் சேர்ந்து வியாதியை உண்டாக்கும். மிருகங்கள் இவ்வியாதியால் தாக்கப்பட்டவுடன், வியாதிக்குறிகள் இரண்டுநாள்வரை வெளியில் தெரியாமல் விஷம் உள்ளேயே அதிகரித்துவரும். வியாதி வெளிப்படையாகத் தெரிந்ததும், அவை இரண்டு மூன்று தினங்களுக்குள்ளேயே இறந்துவிடும். இந்த வியாதியானது ஒருமுறை கண்ட பிராணிகளுக்கு மீண்டும் காணுவதில்லை.

### வியாதியின் அறிகுறிகள்.

மிருகங்களுக்கு இந்த வியாதி கண்டதும் சிலகுறிகள் தோன்றும். அவற்றைக் கவனித்துக் காலதாமதமில்லாமல் சிகித்ஸைகளைச் செய்தால், கூடியவரை பலன் ஏற்படலாம். மாடு இந்நோயால் தாக்கப்பட்டதும், நொண்ட ஆரம்பிக்கும்; மற்ற கால்நடைகளோடு சேராமல் தனியே நிற்கும். இதன் தேகத்தைப் பரிசோதித்துப் பார்த்தால், சிலவிடங்களில் வீக்கங்கள் காணப்படும். இவ்வீக்கங்கள் மாட்டின் கழுத்திலாவது, இடுப்பிலாவது,

மேல்தொடைகளிலாவது, தோள்பட்டைகளிலாவது மார்பிலாவது, முதுகிலாவது காணப்படும்; சில ஸமயங்களில் தொண்டையிலும், வாயிலும் காணப்படுவதுமுண்டு. முதலில் இவ் வீக்கமானது சிறியதாயிருந்து வரவரப் பெரியதாகும். ஆரம்பத்தில்கொஞ்சம் நோயிருக்கும்; பிறகு நோயாவது சூடாவது இருக்காது. வீக்கம் அதிகமாகவாக மாட்டுக்குக் காய்ச்சலும் நடுக்கமும் உண்டாகும்; மூச்சுவிடமுடியாமற் கஷ்டப்படும்; வயிற்றுவலி உண்டாகும். பிறகு, தேகம் பலவீனப்பட்டு நோயின் கொடுமையால் அது இறந்துபோகும். இந்நோயால் தாக்குண்ட பிராணிகள் பிழைப்பது அரிது.

சிகித்ஸைகள்.

இந்த வியாதியானது மிருகங்களைச் சீக்கிரம் கொன்றுவிடுவதனால், சிகித்ஸைகள் செய்யவும் முடிவதில்லை; அவற்றிற்கு உள்ளுக்கு ஏதாவது மருந்து கொடுத்தாலும், அதனால் எவ்வித அனுகூலமும் உண்டாவதில்லை. மாட்டுக்கு உண்டாயிருக்கும் வீக்கங்களை அறுத்து, நன்கு சுத்திசெய்து ஏதாவது கிருமிஹரமான மருந்துகளைத் தடவலாம். ஒருபடி கஞ்சித்தண்ணீரில் ஒரு அவுன்ஸ் பினாயிலைக் கலந்து உள்ளுக்குக் கொடுக்கலாம்.

மாடுகளுக்கு இந்த வியாதி வாராமல் தடுப்பதுதான் முக்கியமானது. அதற்கான காரியங்களை அவ்வப்போதே மிகவும் ஜாக்கிரதையாய்ச் செய்யவேண்டும். இந்தவியாதி தோன்றியிருக்கும் இடங்களில் மாடுகளைப் போகவிடக்கூடாது. மாடுகளுக்கு இந்த வியாதி தோன்றுமென்று தெரிந்தால், அவற்றிற்கு அம்மைகுத்தலாம். இதைக் கால்நடை வைத்தியர்களைக் கொண்டே செய்வது நல்லது.

---

# கருவேலமரம்.

[பண்டித வி. சுப்பிரமணிய ஐயர் எழுதியது.]

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும்சொல்லுக்குறுதி" என்றசாதாரணப் பழமொழியானது கருவேலமரத்தின் உபயோகத்தையும், பெருமையையும் நன்கு விளக்குகின்றது. இம்மரத்தின் குச்சிகளைக்கொண்டு பல்துலக்குவதனால், பற்கள் மிகவும் கெட்டிப்படுவதோடு, பல தந்தவியாதிகளும் நீங்குகின்றன.

வகைகள்.

வேலமரத்தில் கருவேல் என்றும், வெள்வேல் என்றும் இரண்டு வகைகள் உள்ளன. கருவேலமரங்கள் நீர்ப்பாய்ச்சல் ஆதாரம் மிகுதியும் கொண்ட உஷ்ணதேசங்களில் வயலோரங்களில் உண்டாகின்றன. தென்னாற்காடு போன்ற ஜில்லாக்களில் இம்மரங்கள் காடுகள் போல உற்பத்தியாகின்றன. வியவசாயிகளுக்குப் பலவிதங்களிலும் இம்மரம் உபயோகப்படுவதனால், அவர்கள் இதை வெகு ஜாக்கிரதையாய்த் தம் வயலோரங்களில் பயிர்செய்து கொள்ளுகிறார்கள்.

பயிரிடும் விதம்.

புன்செய்நிலங்களில் இம்மரங்களைப் பயிர் செய்யவேண்டுமானால், பயிரிடப்படும் நிலமானது நன்கு உழப்படவேண்டும். பிறகு, ஆட்டுக்கிடைகள் இந்நிலத்தில் கொஞ்சநாள் கட்டப்படவேண்டும். ஆட்டுக்கிடை கட்டுவதற்குப் பங்குனி சித்திரை மாதங்கள்தாம் ஏற்றவை; ஏனெனில், மாசி பங்குனி மாதங்களில் காய்த்துப் பழுத்த கருவேலம்பழங்களை ஆடுகள் தின்று, தாம் கிடையாகக் கிடந்தவிடத்தில் அசைபோடும்போது விதைகளை உமிழ்கின்றன; சில சமயங்களில் மலத்துடனும் விதைகளைக் கழிக்கின்றன. அப்பழவிதைகளே ஆட்டின் உரத்துடன் கலந்து பின்னால் மழைபெய்யுங்காலத்து நன்றாகப் பூமியில் ஊறிக் குவியல் குவியலாய் முளைக்கின்றன. அக்குவியல்களில்



வலிவான செடிகளை எடுத்துக்கொண்டு, இடம் விட்டு நட்டு, அவற்றை முளைக்கச் செய்ய வேண்டும்.

ஆடுகளும், வேலின் விதைகளும்.

ஆடுகளுக்கு வேலின் தழையிலும், அதன் காய்பழங்களிலும் மிகவும் பிரியம் உண்டு. வேலின் இளங்கொழுந்துகளையும், மெல்லிய குச்சிகளுடன் கூடிய தழைகளையும் ஆடுகள் இனிப்பாய் உண்ணும். ஆகவே, ஆட்டிடையன் தன் ஆடுகளை வேலங் காடுகளுக்கு ஓட்டிக்கொண்டு போவான். பங்குனி சித்திரை மாதங்களில் பழுத்திருக்கும் வேலன் காய்களையும் தழைகளையும் ஆடுகள் உண்ணுமாறு அவன் தன்கையிலுள்ள அலக்கினால் உலுக்கியும் அறுத்தும் தள்ளுவான். பசிமிகுதியும், இந்த உணவு உட்கொள்ளுவதில் பிரியம் மிகுதியுங்கொண்ட ஆடுகள் இக்காய்களையும் தழைகளையும் உண்டு குடலை நிரப்பிக்கொள்ளும். பிறகு, கிடை மறிக்கப்பட்ட இடத்தில் இவை தாம் உட்கொண்ட உணவை அசைபோடும்போது, விதைகளைக் குடலிலிருந்து மீட்டுக்கொணர்ந்து வாயினின்று உமிழும்.

இந்த வேலன் காய்களை உண்ணும் ஆடுகள் மிகுந்த புஷ்டியையடைந்து, அதிகமான பாலைக் கொடுக்கும்.

வேலன் பயிரைக் காக்கவேண்டிய விதம்.

சாடாக வேலன் பயிரைப் பயிரிட விரும்பாதவர்கள், வயலின் வரப்புக்களில் இவ்விதைகளை இடையிடையே இடம்விட்டு நட்டுப் பயிரிடுவார்கள். இவர்கள் இவ்விதைகளை ஆடி மாத காலத்தில் ஊன்றிக்கொள்வார்கள். ஆட்டுக்கிடைகட்டிக் கருவேலன் செடிகளைப் பயிர் செய்து கொண்டவர்கள், அச்செடிகளுக்கு ஆடுகள் முதலிய மிருகங்களின் உபத்திரவம் இல்லாதவாறு காத்துக்கொள்ளத்தக்க வேலிகளை அமைத்துக்கொள்ளவேண்டும். இச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றவேண்டுமென்பது அவசியமில்லை. காலக்கிரமத்தில் பெய்யும் மழையின் உதவியினாலும், ஆட்டுரத்தின் வலிமையினாலும் இவை ஐந்து வருஷங்களுக்குள் மரமாகி நல்ல பலனைக் கொடுக்கும் நிலைமைக்கு வந்துவிடுகின்றன.

கருவைப்பூச்சி.

வேலமரத்தைத் தென்னாட்டவர்கள் கருவை மரமென்று சொல்வதுண்டு. இது நன்றாகக் காய்த்துப் பழுக்கும் காலமாகிய மாசி பங்குனி மாதங்களில், கருவைப் பூச்சிகளென்பவை உண்டாகி, இம்மரத்தின் தளிர்களையுண்டு, அதற்குப் பலவிதக் கெடுதிகளை விளைவிக்கின்றன. இவை தம் வாயினின்று உண்டாகும் நூலேணி மூலமாய் மரத்தின் உச்சியிலிருந்து கீழேயிறங்கும். மரத்தின்கீழ் ஆடுகளுக்குத் தழையையும், காய்களையும் ஒடித்துப்போடும் இடையர்களை இப்பூச்சிகள் துன்பப்படுத்தும். கம்பளிப்பூச்சிகளின் அரிப்பையும் தழும்பையுங் காட்டிலும், இப்பூச்சிகளின் கடிப்பும் தழும்பும் அதிகமானவை. வெயில்வரும்வரை இவை மரத்தின்மேலேயேயிருந்து, வெயில் அதிகமாக வாக, மரத்தின் மூலமாயும் நூலேணியின் மூலமாயும் மரத்தடியில் வந்துசேர்ந்துவிடுகின்றன. ஏராளமான இம்மரங்களின் வளர்ச்சியைத் தடுக்கும்பொருட்டே இப்பூச்சிகள் ஏற்பட்டனபோலும்.

(இன்னும் வரும்.)

பண்டித வி. சுப்பிரமணிய ஐயர்.

---

சீதை வனம்புகுந்த சரிதம்! அணா. 3.

இது கம்பராமாயணத்தின் இறுதியிருப்பதும், உத்தமக் கவியாகிய ஒட்டக்கூத்தப் புலவர் பாடியருளிய உத்தரகாண்டத்தில் உள்ளதுமான "சீதை வனம்புகு படலம்" என்னும் பாகத்தில் அடங்கிய சரித்திரத்தை எளிய வசனநடையில் வெளியிடும் நூல்.

குகப்பெருமாள் அணா. 3.

இது ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டத்தில் கங்கைப் படலம், குகப் படலம், என்னும் பாகங்களிற் பொருந்திய குகன் என்னும் வேடர் தலைவனது இனிய சரித்திரம்.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
புஸ்தகவியாபாரிகள், வேலூர் (தென்னிந்தியா).
V. N. SAMA RAO & Co., VELLORE.

## New Sonnets in Tamil.

By Mr. V. Subba Aiyar.

## தமிழ் நவீனப் பாசுரங்கள்.

7

### தமிழ்.

நிலைமண்டில ஆசிரியப்பா.

தென்மொழி யென்றுநற் றேன்மொழி
[யென்றும்
உன்றனைப் பயின்றவோ ருள்ள முவக்கச்
சந்தமுஞ் சீருந் தளைகெடாக் கவிகளும்
விந்தையாய் நிறைந்துள மேன்மை மகிழ்
[வோர்
வாக்கியா நூல்களில் வளமிலை யென்று
நாக்கினால் நவிலவுந் துணிவரோ சொல்
[லாய்;
அகத்திய முனிவர னகத்தெழு நின்
[போற்
சகத்தினில் வேறொரு தனிமொழி யுள
[தோ?
ஆரிய மங்கை யிருப்பினு மன்னவைத்
தேருவோ ருலகிடைச் சிலரே யாயினர்.
அவ்வித மாய குறையுனக் கெய்தா
திவ்வுல குள்ளோ ரின்பம டைந்திடத்
தழைத்திடு செல்வியாந் தாயே யென்ற
[னக்
கழைத்தருள் கருணையை யருந்தமி ழணை
[ங்கே.

8

### மலைபடு திரவியம்.

நிலைமண்டில ஆசிரியப்பா.

மலைதனை முன்பே மதித்துரை செய்தனம்
பலபொரு ளதுதரும் பண்பினைப் பாடு
[வம்:—
கருநிற லதிலுள கல்லினா லுலகினில்
உறுதியாய்க் கோயிலு மொளியுட னெதி
[ரிலே
நீரினைத் தேக்க நினைந்துள குளங்களும்
இன்னும் பலவா மெழிலுறு கட்டிடம்
உன்னிச் சமைக்க வுதவி பயந்திடும்;
அன்றியு மதுவிலே தேக்குங் கோங்கும்
ஈட்டியு மூங்கிலு மின்னு மநேக
மரங்களான்மாளிகை மகிழ்வுடன் கட்டத்
தர்மென்த் தருதலோ டுலோகமாம் பொ
[ன்னும்
வெள்ளியுஞ் செம்பும் வெண்ணிற வீய
[மும்
இரும்பு மவ்வூட னினிப்புள தேனும்
விரும்பத் தந்து வியப்பெழச் செயுமே.

9

### இமயமலை.

நிலைமண்டில ஆசிரியப்பா.

இமமெனப் படுவது பனியின் பெயராம்,
அப்பனி மூடிய வரையே இமய
மலையெனப் பகர்தலை மனந்தனில் நினை
[யீர்!
அவ்விதம் பனியினு லணையப் படுவதால்
துய்ய வெண்ணிறந் துலங்கு நன்மலை
இத்தே யத்தின் வடபா ரிசத்தில்
இயைந்துள ததுவீ ரென்பதை யுணர்
[வேம்;
அன்னதி லானு றுறைந்திடுங் கயிலை
சொன்ன நிறத்துடன் சோதியாய் விளங்
[கும்,
அன்றியு மதுதனிற் கங்கையும் யமுனை
[யும்
சிந்துவு மின்னுஞ் சிறந்த நதிகளும்
உண்டா மத்துட னுலகிற் புகழ்கொளும்
அயோத்தியும் நேபா ளமுமத னருகே
இருத்தலை யுணர்ந்திடு மெழில்வாய் பாந்
[தரே!

10

### பொதிகை மலை.

நிலைமண்டில ஆசிரியப்பா.

வடக்கினி லிமயம் வளமுற வாய்ந்த
[தாம்
கடல்களை மற்றுள திசைகளைக் காத்தி
[டச்
செழித்திடு மிந்திய நாட்டின் தென்றிசை
அழகுற வமைந்திடும் பொதிகையின் புக
[ழை
அறைவதுட யாரால் முடிந்திடுஞ் சொல்
[லாய்;
அன்னதே முந்நீர் வேலையை யருந்தி
[யும்
தன்னகத் திருந்து தமிழாங் கடலை
உலகுளோ ருவக்கத் தந்த வகத்தியன்
அலகிலா தமைந்துறை யசலமா மென்பர்;
அதனடி யமர்ந்துள சிங்கம் பட்டியை
இதமுடன் நினையா திருப்பரோ வுலகில்;
நன்னீர் வழங்கி நாற்றினை போக்கிச்
செந்நெல் விளைத்துச் செழிப்பைக் கொடு
[க்கும்
பொருநை புகழுடன் வருமலை யதுவே.

11

### தாமிரவர்ணி.

நிலைமண்டில ஆசிரியப்பா.

குடித்திட நன்னீர் கொடுப்பது கங்கை
என்பதைப் பலருங் கேட்டிருக்கலாம்;
அன்னதோர் பேச்சை யாய்ந்துண ரப்பு
[கின்,
ஆரியர் தென்றிசை யடைந்திடும் வேளை
[யில்
சிருட னதுபோஞ் செயல்தனைக் கண்டு
சாற்றின ரென்பது சாதமாய் விளங்கும்;
ஏனெனி லவர்க ளெழிலுட னேடும்
தாமிர வருணியின் தண்புனை யடைந்து
நாமிருப் பதுபோல் நன்முற வதிந்திடில்,
காமித் ததனைக் கருதா தொழிவரோ?—
கன்னலின் சாறோ கருநிறப் பளிங்கோ
என்னநீ ரிந்திடு பொருநையின் சுவை
[களில்
விளையாப் பொருளு முளதோ? விண்ணி
[லும்
தனையார் பதம்பணிந் தனைபவ ரமுதே.

12

### நக்ஷத்திரங்கள்.

நிலைமண்டில ஆசிரியப்பா.

ஓகோ! நீருள வுயரத் திருப்பின்
பூகோ ளத்துளோர் புகழ்ந்திடு ஞாயிறு
அவர்களின் கண்களுக் ககப்படா னென்
[பதைத்
தவறிலா தவ்வயலாக் தைரிய முடனும்;
நீவி ரில்லதாம் வானம் நினைந்திடிற்
பூவி ரிந்திலாக் குளமெனல் பொருந்தும்;
பெண்மணி யொருத்தி பேரணியணிந்திட
எண்ணிய கருநிறக் கஞ்சுகத் தெழிலை
அதிக மாக்கவே யழகுடன் தைத்த
கதிரொளி தருநன் மணிகளோ வென்ன
இரவெனு மரசி யிணையிலா வுந்தமைக்
கரங்கொடு வானிற் கவித்தமைத் தனா
[ளோ?
அன்றேல், அகில நாதனு மிறைதனின்
முன்றில் விளக்கமோ மொழிந்திடு மூடிக்
[களே.

வி. சுப்பய்யர்.

## The Lost Will.

By Mr. M. S. Krishnasamy Iyer.

## காணமற்போன மரணசாஸனம்.

9-ம் அத்தியாயம்.

சுந்தரம் ஐயர் இரவு சாப்பிட்டானதும், தமது அறையில் உட்கார்ந்துகொண்டு ஒன்றிலே போட்டுக்கொண்டிருந்தார். அவர் அன்று காலையில்தான்......பொலீஸ்கேஸ் விஷயமாகத் திருச்சிக்கு வந்தார். அவர் அந்தக்கேஸின் ரஹஸ்யங்களை வெளிக்குக்கொண்டுவந்து, உண்மையான குற்றவாளியைத் தண்டனைக்குள்

ளாக்கி, குற்றமற்ற ஒரு பட்டிக்காட்டானை மரணதண்டனையிலிருந்து தப்புவித்தார் அதனால் அவருக்குக் கீர்த்தி அதிகரித்ததோடு, கவர்ன்மெண்டு அதிகாரிகளும் அவரிடம் அதிக மரியாதை பாராட்டினார்கள். பணக்காரப் பட்டிக்காட்டான் அவரது திறமைக்காக அடுத்தநாள் அவருக்கு வெகுமதி செய்யவிருந்ததனால், சுந்தரம் ஐயர் அன்று அங்குத் தாமதிக்க நேர்ந்தது. அவருடைய பிரதாபம் திருச்சியெங்கும் பரவிற்று. அவரைப் பார்க்கப் பல கனவான்கள் அன்றுமாலை அவருடைய விடுதிக்கு வந்திருந்தார்கள். பேட்டிகொடுத்ததனால் சிரமம் மேலிட்ட சுந்தரம் ஐயர் சீக்கிரம் படுத்துறங்கலாமென்று எண்ணி, தம்முடன் வந்திருந்த வேலைக்காரனைச் சீக்கிரம் படுக்கையைப் போடச்சொன்னார். படுத்துக்கொள்ளும் தறுவாயில்—சுமார் 9-மணி இருக்கும்—நீலகண்டனும் துரைசாமியும் அவரது அறைவாயிலண்டை வந்து 'சுந்தரம் ஐயர் இருக்கிறாரா?' என்று விசாரித்தார்கள். மிக்க சிரமமாயிருக்கும்போதும் வந்தவர்களை வெடுவெடெனப் பேசித் துரத்துவது சுந்தரம் ஐயருக்கு வழக்கமில்லையாதலால், அவர் தாமே சுந்தரம் ஐயர் என்று தெரிவித்து அவர்களை உள்ளே வரச்சொல்லி, உபசரித்து வந்தகாரியம் என்னவென்று கேட்டார்.

துரைசாமி:—தங்களைப்பற்றி இன்று கேள்விப்பட்டோம்: தங்களுடைய சாமர்த்தியத்தைப்பற்றிப் போலீஸாரும் புகழ்ந்து பேசுகிறார்கள். ஆகையால், உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தோம்.

சுந்தரம் ஐயர்:—ஏதாவது காரியமாகவா? அல்லது சும்மா பார்த்துவிட்டுப் போகவா? எப்படியிருப்பினும், நீங்கள் என்னைப் பார்க்க வந்ததைப்பற்றி மிக்க சந்தோஷமே.

நீலகண்டன்:—காரியமாகவே தான் வந்தோம்: எனக்குச் சில நாட்களாக ஒரு சந்தேகம் இருந்துவருகிறது. தங்களைக் கேட்டால், ஒருகால் அது நீங்கக்கூடுமென்று நினைத்தேன்' அதனால்தான் தங்களை இப்போது பார்க்க வந்தது. மேலும், தனித்துத் தங்களிடம் பேசவேண்டியிருப்பதனால், இரவில் வரலானேன். பகற்காலத்தில் வந்தால் இங்குப் பலர் இருக்கக்கூடும்.

சுந்தரம் ஐயர்:—அப்படியானால் வேறு அறைக்குப் போகலாமா?

நீலகண்டன்:—இவன் என்நண்பன். இங்கு இவன் இருப்பதனால் யாதொரு கெடுதியுமில்லை. வேறு எவரும் இவ்விஷயத்தை அறியாமலிருந்தாற் போதும்.

சுந்தரம் ஐயர்:—இங்கு நாம் பேசுவது ஒருவருக்கும் கேட்காது; வேண்டுமானால் மெள்ளப் பேசுவோம்.

நீலகண்டன்:—நான் இருப்பது கல்யாணபுரம். ஆனால், சில காலமாக எனது மாமன் ஊரில் வஸித்துவருகிறேன். இப்போது படிப்புக்காக இந்த ஊரில் இருக்கிறேன். என்தகப்பனார் பெயர் சங்கரய்யர். அவர் கல்யாணபுரத்தில் அதிகச் செல்வமுள்ளவராக இருந்தார். அவருக்கு இரண்டு மனைவிகள் உண்டு. நான் மூத்தாள்பிள்ளை. இளையாளை எனது ஒன்பதாம் வயதில் அவர் கலியாணம் செய்துகொண்டார்.

சுந்தரம் ஐயர்:—உன்தாயார் இருக்கிறாளல்லவா?

நீலகண்டன்:—இருக்கிறாள்; இப்போது என் மாமன்வீட்டில் இருக்கிறாள்.

சுந்தரம் ஐயர்:—உன் தகப்பனார் உன்தாயாரைத் தள்ளிவைத்துவிட்டாரோ?

நீலகண்டன்:—பத்துவருஷங்களுக்கு முன் என் தாயாருக்கு தேக அசௌக்கியம் ஏற்பட்டது. பல வைத்தியர்களைக்கொண்டு வைத்தியம் பார்த்தும் பயன்படவில்லை. அதன்மேல் என் மாமா ராமய்யர் எங்களைத் தமது ஊருக்கு அழைத்துக்கொண்டுபோய் வைத்தியம் பார்த்தார். சில மாதங்களுக்கெல்லாம் என் தாயார் சொஸ்தமானள். பிறகு, உடம்பு தேறினதும் ஊருக்குப் (கலியாணபுரத்துக்கு) போகலாமென்றிருந்தோம். அதற்குள் என்தகப்பனார் வேறு ஒருபெண்ணைக் கலியாணம் செய்துகொண்டதாக ஸமாசாரம் எங்களுக்கு எட்டிற்று. அவர் எங்களை அங்கே வரவேண்டாமென்று சொல்லியனுப்பிவிட்டார். நாங்கள் பலமுறை பிரயத்தனப்பட்டும், அவர்மனதை மாற்றக்கூடவில்லை. இளையாளது பேச்சைக் கேட்டு அவர் எங்களைத் தள்ளிவிட்டார். பிறகு என்தாயார் முழுதும் சொஸ்த மடைந்ததும், அவளும் நானும் என் மாமாவுடன் கல்யாணபுரத்திற்குப்போய் என் தகப்பனாரைக் கண்டோம். என் தகப்பனார் வருவதற்குள், என் சிறியதாயும் அவள்தாயாரும் எங்களைக் கண்டபடி வைது வீட்டைவிட்டுப் போகச்சொன்னார்கள். என் தகப்பனார் வந்ததும், அவரை நாங்கள் மன்றாடிக் கேட்டுக்கொண்டோம். அவரும் எங்களை வைது அனுப்பிவிட்டார். நாங்கள் என்ன கெஞ்சியும், அவர் மனம் இரங்கவில்லை. அதன் பிறகு நாங்கள் ஊருக்குப்போய்விட்டோம்.

சுந்தரம் ஐயர்:—உன் மாமாவின் ஊருக்கா?

நீலகண்டன்:—ஆம்: அங்கேபோனகொஞ்சகாலத்துக்கெல்லாம், என் தகப்பனார் நோய்கண்டு ஆபத்தான நிலைமையில் இருப்பதாயும், உடனே எங்களைப் புறப்பட்டு வரும்படியாயும் கடிதம் வந்தது. நாங்கள் உடனே புறப்பட்டுப் போனோம். அப்போது என் தகப்பனார் என் தாயாரிடம் முன்போலவே பிரியமாயிருந்தார். அவருக்கு வியாதியும் வரவரக் குணமடைந்து வந்தது.

சுந்தரம் ஐயர்:—அப்போது உன் சிறியதாய் ஒன்றும் சண்டை போடவில்லையா?

நீலகண்டன்:—அவள் அச்சமயம் ஊரில் இல்லை; ஊரிலிருந்து வர இரண்டு மூன்று வாரங்களாயின. அவள் வந்த பிறகு ஸதா சண்டையும் சச்சரவுந்தான். என் தகப்பனார் என் தாயாரிடத்தில் முன்போலப்பிரியமாயிருந்தாராம். அப்போது நடந்த சமாசாரங்கள் எனக்கு நன்றாய் ஞாபகத்திற்கு வரவில்லை. இப்போதுதான் எல்லாவிஷயங்களையும் என் தாயாரைக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். என் தகப்பனார் தமக்கு அந்தியகாலம் வந்துவிட்டதென்று எண்ணி, உயில் எழுதிவைக்க நிச்சயித்தார். என் தாயாரிடம், எங்களுக்குச் சொத்து அதிகம் வைப்பதாகவும், என் சிற்றன்னைக்கும் அவள்குழந்தைக்கும் சொற்பச் சொத்தே வைப்பதாகவும் சொன்னார்.

சுந்தரம் ஐயர்:—உன் சிற்றிக்குக் குழந்தைகள் உண்டோ? எத்தனை?

நீலகண்டன்:—ஒரு பிள்ளைதான்.

சுந்தரம் ஐயர்:—உன் தகப்பனார் உன் தாயாரிடம் முன்போலவே பிரியமாயிருந்ததாகச் சொன்னாயே; அப்படியானால், உன் சிற்றியிடம் வெறுப்பாயிருந்திருக்கவேண்டுமே. அப்படியிருந்தால், அதற்கு ஏதாவது காரணம் உண்டோ?

நீலகண்டன்:—என் சிற்றியின் நடத்தையைப்பற்றி என் தகப்பனார் ஏதோ சந்தேகம் கொண்டாராம். அதனால் அவருக்கு அவள்மேல் கோபமாம். என் தாயாரிடத்தில் அடிக்கடி அவளைப்பற்றித் தூஷிப்பதுண்டாம்.

சுந்தரம் ஐயர்:—மேலே சொல்.

நீலகண்டன்:—பிறகு, ஒருநாள் வக்கீல் வந்தார். அவரிடம் உயில் எழுதச்சொல்லி, அதில் எங்களுக்கு அதிகம் ஆஸ்திவைக்க வேண்டுமென்று சொன்னார். இவ்விஷயமாத்திரம் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது; மற்றவைகள் நினைவிற்கு வரவில்லை; வக்கீல் உயிலை எழுதினபின் அதைக்கொண்டுவந்து காட்டினார். இனி தாம் சாவதாயிருந்தாலும், திருப்தியாகச் சாகலாமென்று என் தகப்பனார் வக்கீலிடம் சொன்னார். அதோடு, என் தகப்பனார் என்னைச் சுட்டிக்காட்டி, "இவனை இத்தனைநாளாக அலக்ஷியம் செய்ததற்கு இது செய்தது திருப்தியாயிருக்கிறது" என்று சொன்னார். இதுவும் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது.

பிறகு, நாலைந்து நாட்களுக்குள்ளே, இவன் (துரைசாமியைச் சுட்டி) சிற்றப்பா வந்தார்.

அவர் தம் தங்கை விஷயமாக—அதாவது என் சிற்றி விஷயமாக—ப் பரிந்து பேசினார். என் தகப்பனார் மனம் மாறாமல் உறுதியாயிருந்ததோடு, என் சிற்றியைத் தம் ஊருக்கு அழைத்துப்போகும்படியாயும் கண்டித்துவிட்டார்; ஆனால் அவர் அழைத்துக்கொண்டு போகவில்லை. சில தினங்களுக்குள் இவன் சிற்றப்பா தனியாக ஊருக்குப் போய்விட்டார்.

என் தகப்பனாருக்குச் சிலநாட்களுக்குள்ளே வியாதி குணமாயிற்று; ஆனால், திடீரென்று திருப்பிக்கொண்டது. பிறகு நாலைந்து தினங்கள் சென்றதும் அவர் இறந்துபோனார். இறந்த மூன்றாம்நாள் சாம்பசிவ ஐயர்—இவன் சிற்றப்பா—உயிலின்படி அப்பொழுதே சொத்துக்களைப் பாகம்செய்யவேண்டுமென்றார். என் தாயாரும் அதற்குச் சம்மதிக்க, இரும்புப் பெட்டியைத்திறந்து உயிலை எடுத்துப்பார்த்தோம். உயிலில் என் சிற்றிக்கு அதிக சொத்தும், எனக்கு இரண்டு காணி நிலமும் ஒருவீடும் எழுதியிருந்தது. உயிலில் ஏதாவது பிசகு நடந்திருக்குமென்று எண்ணினோம். உயில் ரெஜிஸ்டராயிருந்தது. ரெஜிஸ்டராபீஸில் எக்ஸ்டிராக்ட் எடுத்துப் பார்த்தோம். அதிலும் அப்படியேயிருந்தது. என் தகப்பனார் எங்களை மோசஞ் செய்து போய்விட்டாரென்று தெரியவந்தது.

சுந்தரம் ஐயர்:—பிதுரார்ஜிதம் ஒன்றுமில்லையோ? எல்லாம் ஸ்வார்ஜிதந்தானோ?

நீலகண்டன்:—ஆம். ஸ்வார்ஜிதந்தான். இப்போது, நாங்கள் சிரமதசையிலிருக்கிறோம். ஆனால், அதைப்பற்றி நான் வருத்தப்படவில்லை. எனக்கு ஒரு சந்தேகம் மாத்திரம் உண்டு. என் தகப்பனார் இறக்கும்வரையில் என்மேல் பிரியமாகவேயிருந்தார். அது உண்மை. என் தாயாரிடத்திலும் அவர் பிரியமாகவே இருந்தார். இறக்கும்வரையில் அவர் என் சிற்றி சமைத்து அவள் கையால் சாப்பிடவில்லை. அவர் இறக்கும்போதும், என் தாயார் மடியில் படுத்துக்கொண்டேதான் இறந்தார். அப்படி இருந்தவர், எங்களுக்கு இவ்விதமாக உயிலெழுதியது மனித இயல்புக்கு ஒத்திருக்கிறதா? இவ்விஷயம் அஸம்பாவிதமாகத் தோற்றவில்லையா? மற்றொரு விஷயம்: முதலில் வக்கீல் எழுதின உயில் ரெஜிஸ்டரானது—[illegible], ரெஜிஸ்டரான விஷயம் நிச்சயமாய்ச் [illegible] முடியாது—அவர் அதை வாசித்துக் காட்டியபோது, எங்களுக்கு மிகுந்த திருப்தி ஏற்பட்டது உண்மைதான். அப்படி முதலில் எழுதினது ரெஜிஸ்டராயிருந்தால், இரண்டாவதாக ஒரு உயிலை ரெஜிஸ்டர் செய்ய முடியுமா? ஆனால், ரெஜிஸ்டராபீஸில் ஒன்றுதான் ரெஜிஸ்டராயிருக்கிறதென்று என் மாமாவும் இவன் (துரைசாமி) தகப்பனாரும் விசாரித்துள்ளார்கள். இவ்விஷயம் உங்களுக்குப் புதிராகத் தோற்றவில்லையா! இந்த விஷயத்தில் உண்மை இன்னதென்று தங்களால் கண்டுபிடிக்க முடியுமா? சொல்லுங்கள்.

சுந்தரம் ஐயர் சற்றுநேரம் ஆலோசித்து, பிறகு, "இது விஷயமாய் நான் ஒன்றும் இப்போது சொல்லுவதற்கில்லை. ஆனால், இரண்டொரு கேள்விகளைக் கேட்கிறேன்; அவற்றிற்குப் பதில் சொன்னால் போதும்: உயிலை எழுதிய வக்கீல் இப்போது எங்கிருக்கிறார்? அவருடைய பெயர் என்னவென்பது உனக்குத் தெரியுமா?" என்றார்.

நீலகண்டன்:—அவர் இறந்துபோய் இப்போது ஒரு வருஷ[illegible]றது. அவருடைய பெயர் மகாதேவ [illegible]ம் அவர் என் தகப்பனாருக்கு அ[illegible] வேண்டியவரென்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

சுந்தரம் ஐயர்:—எப்போது முதல் வேண்டியவர்?

நீலகண்டன்:—அது எனக்கு நிச்சயமாய்த் தெரியாது. ஆயினும், அவர் நாங்கள் தள்ளப்பட்டதற்கு முன்னால் எங்கள் ஊருக்கு வரவில்லை. இவன் சிற்றப்பாவுக்கு அவர் தெரிந்தவராம்.



சுந்தரம் ஐயர்:—இப்போது இவன்சிற்றப்பா எங்கிருக்கிறார்?

நீலகண்டன்:—நம்மூரில்தான் இருக்கிறார்.

சுந்தரம் ஐயர்:—உன் சிற்றி?

நீலகண்டன்:—சிலகாலம் என் ஊரிலும், சில காலம் குளித்தலையிலும் இருப்பாளாம். நான் என் சொந்த ஊர்போய் வெகுகாலமாயிற்று.

சுந்தரம் ஐயர்:—அவளைப்பற்றி முன்போல ஏதாவது புகாருண்டோ?

நீலகண்டன்:—புகார் உண்டென்றுதான் எனக்குக் கேள்வி. ஆனால், அந்த விஷயத்தைப்பற்றி நிச்சயமாய் நான் ஒன்றுங் கூற முடியாது.

சுந்தரம் ஐயர்:—அவளுடைய பிள்ளை என்ன செய்கிறான்?

நீலகண்டன்:—அவன் சிறியவன். அதிகம் வயஸாகவில்லை. அவனை அவள் படிக்க வைத்திருக்கிறாள். சில நல்ல சமாசாரங்களையும் அவள் விஷயமாய் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அநேக தானதருமங்களைச் செய்து வருகிறாளாம். அதனால் கொஞ்சம் கடனும் ஏற்பட்டிருக்கிறதாம்.

சுந்தரம் ஐயர்:—இனி நான் கேட்கவேண்டிய விஷயம் ஒன்றுமில்லை. நான் சீக்கிரம் சென்னைக்குப் போகவேண்டும். என்னால் கூடியவரையில் உன் விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கிறேன். ஏதாவது துப்புத் தெரியும் பக்ஷத்தில், அதை உடனே தெரிவிக்கிறேன். ஆனால், இந்த விஷயமாய் இப்போது நான் அதிகமாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை.

உடனே துரைசாமி, "இதன் இரகசியத்தைக் கண்டு பிடிக்க என்ன கொடுக்கவேண்டியிருக்கும்?" என்று கேட்டான்.

"நான் முதலில் ஒன்றும் கேட்பதில்லை. பிறகும் இவ்வளவு கொடுக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்துவதில்லை. இந்த விஷயங்களில் பிரதிப்பிரயோஜனம் இன்னதுதான் கொடுக்கவேண்டுமென்று வரையறை இல்லை. துப்பறியும் வேலை கடினமானது. சில சமயங்களில் உயிருக்கே ஆபத்து நேரிடலாம். உயிருக்கு விலை என்ன இருக்கிறது? ஆகையால், அவரவர் சக்திக்கும் பிரியத்துக்கும் தக்கபடி கொடுக்கட்டும் என்று நான் இருந்துவிடுவது வழக்கம். மேலும், சிரமதசையில் உள்ள நீ மனப்பூர்வமான வந்தனத்தைத் தவிர வேறு என்ன கொடுக்கமுடியும். அதற்காக நான் என் முயற்சிகளில் கொஞ்சமும் குறைப்பேனென்று நீ எண்ணாதே. உன் ஸந்தேகந் தீர்ந்தால், அதுவே எனக்குப்போதும்" என்று சுந்தரம் ஐயர் அதற்குப் பதிலளித்தார்.

பிறகு சிறிதுநேரம் வேறுபல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்து வாலிபர்கள் சுந்தரம் ஐயரிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றார்கள்.

(இன்னும் வரும்,)

எம். எஸ். கிருஷ்ணசாமி ஐயர்.

## Books and Reviews.

### புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

[ஹரிச்சந்திரன்: ராவ் ஸாஹெப் ப. சம்பந்த முதலியார். பி. ஏ; பி.எல். அவர்கள் இயற்றியது. விலை ரூ. 1.]

மேற்குறித்த புஸ்தகமொன்று நமது பார்வைக்கு வந்துள்ளது. இதில் இந்தியரால் மாத்திரமேயன்றி மேனாட்டாராலும் போற்றப்படும் ஹரிச்சந்திரன் கதையானது நாடகரூபமாக எழுதப்பட்டிருக்கின்றது. இது எழுதப்பட்டுள்ள நடையும், போக்கும், சொற்சுவையும், பொருட்சுவையும் படிப்போர் மனதைக் கவரத்தக்கதாயிருக்கின்றது. இந்நூலின் ஆசிரியர் எழுதியிருக்கும் மற்ற நாடகங்களில்

அமைந்துள்ள குண விசேஷங்கள் இருக்கும் பொருந்தியுள்ளனவென்று [illegible] மேலே விளங்கும். இந்நூலானது சொற்பப் படிப்பாளிகளும் படித்தறிந்து இன்புறுமாறு எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொருவரும் இந்நூலை வாங்கிப் படிப்பது அவசியமாகும். புஸ்தகம் வேண்டுவோர்: வி. என். சாமராவ் அண்டு கம்பெனி, வேலூர். (தென்னிந்தியா.) என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

[1008 சிவலிங்கப்படம்: "சிவலிங்கம்" நெ. 58 அவில்காரத் தெருவு; வேலூர். விலை அணா 4.]

மேற்குறித்த 1008 சிவலிங்க உருவங்கள் அடங்கிய படமொன்று நமது பார்வைக்கு வந்துள்ளது. இது அழகிய கோமுகமும், தலையில் ஐந்துதலை நாகமும், புஷ்பமாலையும் சூட்டியதாய்ப் பார்வைக்கு மிக அழகாயும், பூஜைக்கு ஏற்றதாயும் இருக்கின்றது. நாம் இப்படத்தின் விசேஷத்தைக் குறித்து அதிகம் எழுதத் தேவையில்லை. சிவபக்தர்கள் அனைவருக்கும் இது அத்தியாவசியமானதால், அவர்களில் ஒவ்வொருவரும் இதை மிகுந்த பக்தி விசுவாசத்துடன் பூஜைக்கு உபயோகப்படுத்திக் கொள்வார்களென நம்புகிறோம். இதன் விலை அணா 4. வேண்டுவோர்: "சிவலிங்கம்" நெ. 58 அவில்காரத் தெருவு, வேலூர் (வட ஆற்காடு ஜில்லா) என்று எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

[கதாவர்ஷிணி: பத்திராதிபர், சு. அ. சுப்பராய பிள்ளை; கதாவர்ஷிணி காரியஸ்தலம், தூத்துக்குடி. வருஷ சந்தா ரூ. 2.]

இதன் முதல் சஞ்சிகை நமது பார்வைக்கு வந்துள்ளது. இதில் அறிவின் பெருக்கத்திற்கான பல விஷயங்கள் காணப்படுகின்றன. நமது நேயர்கள் இதை ஆதரிப்பார்களாக.

## Topics from Periodicals.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### புளியம்விதையைக் கால்நடைத் தீவனமாய் உபயோகித்தல்.

புளியமரங்கள் ஏராளமாயிருக்குமிடங்களிலெல்லாம், பழங்களிலிருந்து புளியை அப்புறப்படுத்தி விட்டு, விதைகளைத் தூர எறிந்துவிடும் வழக்கம் இருந்துவருகிறது. இப்படி தூர எறிந்துவிடும் விதைகளைச் சில ஏழை ஜனங்கள் வறுத்து, பஞ்சகாலங்களில் சாப்பிடுகிறார்களென்பது நம்மெல்லோருக்கும் தெரிந்த விஷயம். சிலர் இதைச் சாதாரண காலங்களிற்கூட, வறுத்துச் சாப்பிடுகிறதை நாம் பார்த்திருக்கிறோம். இவ்விதைகளுக்கு ஸாதாரணமாய் யாதொரு விலையும் கிடையாது. ஆனால், இவ்விதைகளிலிருந்து பசை செய்து காகிதப் பெட்டிகள் முதலியவை செய்பவர்கள், இவ்விதைகளைப் பொறுக்கிக்கொண்டு வந்து கொடுப்பவர்களுக்கு ஏதோ இனாம் கொடுப்பதுண்டு. கிருஷ்ணா ஜில்லாவில்மாத்திரம் இவ்விதைகளைச் சொற்ப விலைக்கு விற்றுக்கொண்டிருந்தார்கள். ஜனங்கள் இவ்விதையைச் சாப்பிடுமுன், வறுத்தாவது அல்லது வேகவைத்தாவது மேல் தோலை நீக்கி உள்ளிருக்கும் பருப்பைத் தின்பதுண்டு. சிலர், இந்தப் பருப்பிலிருந்து மாவுசெய்து, அதை ரொட்டிகளாய்ச் சமைத்துச் சாப்பிடும் வழக்கமுமுண்டு. இவ்விதையிலிருந்து எடுக்கும் பசையைப் புஸ்தகங்கள் பயிண்டு செய்வதிலும், செருப்பு முதலிய பாதரக்ஷைகள் செய்வதிலும் உபயோகப்படுத்தி வருகிறார்களேயொழிய, வேறு விஷயங்களில் உபயோகப்படுத்தி வருவது எல்லோருக்கும் தெரியாது. திருநெல்வேலிஜில்லா தென்காசித் தாலூக்காவிலும், செங்கோட்டை முதலிய இடங்களிலும் இவ்விதைகளைச் சந்தைகளில் கொண்டுவந்து விற்கிறார்கள். சிலர் இதை மாட்டுத் தீவனத்திற்காகவும் உபயோகப்படுத்துகிறார்களென்று தெரியவருகிறது. சாதாரணமாய்ப் புளியம்பழம் அகப்படும் காலங்களில், விதைகளை ஏராளமாய் வாங்கி அவற்றைச் சட்டியில் போட்டு வறுத்து, சாக்குக்களில் கட்டிவைத்துக் கொள்ளுகிறார்கள். இப்படிச் செய்வதில் புளியம் விதைகள் லேசில் புழுத்துப்போகாமல் அப்படியே இருக்கும் சக்தியை அடைகின்றன. அப்பால் தினசரி வேண்டிய அளவு புளியங்கொட்டையை எடுத்து உரலில் போட்டுக் குத்தித் தோல்நீக்கிப் புடைத்து உள்பருப்பைச் சுமார் 20மணி நேரம் ஊறப்போட்டு மாடு ஒன்றுக்கு பட்



டணம்படி அரைவீசம் வைத்தால், மாடுகளுக்குப் பிண்ணாக்கு பருத்திக்கொட்டை முதலியவைகள் வைக்கவேண்டியதில்லை. முதன்முதல் மாடுகள் இதைத் தின்று வழக்கமாகிறதற்காக, பருத்திக்கொட்டை, கொள் அல்லது பிண்ணாக்கு முதலிய தீவனப் பொருள்களை ஊறப்போட்டு, அந்தத் தண்ணீரை மாடுகள் குடித்துப் பழக்கமானவுடனே இப்புளியம் விதைகளைமாத்திரம் தனியே ஊறப்போட்டு வைத்து வருகிறார்கள். புளியம் விதையை இரசாயன பரீக்ஷை செய்துபார்த்து ஹூப்பர் என்பவர் மாட்டுத் தீவனத்துக்கு வேண்டிய உயர்ந்த உணவுப் பொருள்கள் அதிலிருப்பதாகக் கண்டிருக்கிறார்.

மேலும், இப்புளியம் விதையையும் பருத்திக்கொட்டையையும் இரசாயனபரீக்ஷை செய்து பரிசோதனை பண்ணி இரண்டையும் சீர்தூக்கிப்பார்த்தால், புளியம் விதையிலுள்ள அம்சங்கள் அநேகமாய்ப் பருத்திக்கொட்டையிலுள்ளவைகளுக்குத் தாழ்ந்திருக்கவில்லையென்று ஊகிக்க வேண்டியதாயிருக்கின்றது. புளியம் விதை இக்காலத்தில் பொதி ஒன்றுக்கு ரூபாய் 2-க்குள் கிடைக்கின்றது. ஆனால், பருத்தி விதையின் விலையோ ரூபாய் பத்துக்குக் குறைகிறதில்லை. ஆகையால், புளியம் விதை பருத்தி விதையைப்போல சத்துள்ள கால்நடைத் தீவனமாயிருந்தபோதிலும், விலை சரசமாயுள்ளதனால், அது எல்லோரும் கையாளக்கூடிய வஸ்துக்களில் ஒன்று. இந்த விதையைத் திருநெல்வேலி ஜில்லாவின் சில பாகங்களிலும், மலையாளத்தில் செங்கோட்டை முதலிய சில இடங்களிலும் மாத்திரம் கால்நடைத்தீவனமாய் இப்போது உபயோகப்படுத்துகிறார்கள்.— விவேகபோதினி.

### பாலபோஷணைக்குப் பாலைப்பக்குவம் செய்தல்.

குழந்தைகளுக்குத் தாய்ப்பாலே மிகவும் சிறந்தது. அவற்றிற்குப் பத்தாவது மாதம் வரையில் தாய்ப்பாலே கொடுக்கப்பட்டு வரவேண்டும். அப்படித் தாய்க்குப் பால் ஏற்படாவிட்டால், வேறு ஏதேனும் பாலைப் பக்குவப்படுத்திக் குழந்தைகளுக்குப் புகட்ட வேண்டும். பாலைப் பக்குவப்படுத்தும் முறையானது "வைத்திய கலாநிதி" யில் பின்வருமாறு காணப்படுகின்றது:—

குழந்தைகளுக்குப் பத்தாவது மாதம் வரையில் தாய்ப்பாலே போஷணைக்கு முற்றிலும் ஏற்ற உணவென்பது இப்பொழுது புதிதாக கண்டுபிடித்துச் சொல்லும் விஷயமன்று; ஆனால், தாய்ப்பால் கிடைக்காத குழந்தைகளுக்கு வேறு ஏதேனும் பாலை (முக்கியமாய்ப் பசுவின்பாலைக்) கொடுத்து வருகிறோம். பசுவின் பாலைத் தாய்ப் பாலைப்போலவே சற்றேறக்குறைய பக்குவம் செய்து உபயோகிப்பது உசிதமாகும்; பொதுவாக ஆரோக்கிய நிலைமையில் இருந்து வரும் ஒரு இளங்குழந்தைக்குப் பசுவின் பாலை விரைவில் வயிற்றுக்குப் புகட்டி வருவது வழக்கம். இவ்வாறு கொடுப்பதன் குறைகுணங்களைப்பற்றி நாம் விசாரிக்கவேண்டியது அவசியம்.

"இருபது அவுன்ஸ் கொள்ளக்கூடிய ஒரு குப்பியில் ஸமபாகமாகப் பாலையும் ஜலத்தையும் கலந்து நிரப்பி, லேசாய் மூடிவிட்டு அசையாமல் வைத்திருக்கவும். சற்றுநேரம் கழித்து, அக்குப்பியிலிருந்து 15 அவுன்ஸ் பாலைக் கலக்காமல் மெல்லென வடித்தெடுக்கவும். இதில் நூற்றுக்கு ஏழு பங்கு வீதம் சுத்தமான வெள்ளைச் சர்க்கரையும் சேர்த்துக் கலக்கவும். இவ்விதம் செய்த ஆகாரம் [illegible] அப்பாலின் கூட்டு முறையில் பதார்த்தங்களின் விகிதம் காணப்படும்:—

| | |
|---|---|
| ப்ரோடீன் என்னும் [illegible] | 1·70 |
| சர்க்கரை | 7· |
| கொழுப்பு | 4· |
| உப்பு வகைகள் | 0·25 |
| தண்ணீர் | 86·15 |

இந்த விகிதப்படி இந்தப் பசும்பாலானது முலைப்பாலை அதன் பதார்த்தக்கூட்டு முறையில் *சற்றேறக்குறைய ஒத்திருக்கின்றது. முலைப்பாலின் கூட்டு முறை எவ்வாறு இருக்கின்றதென்றால்:—

| | |
|---|---|
| ப்ரோடீன் | 1·50 |
| சர்க்கரை | 7· |
| கொழுப்பு | 4. |
| உப்பு வகைகள் | 0·20 |
| தண்ணீர் | 87·30 |

குழந்தையின் தேகமானத்தின் நிறைக்கும், அதன் வயதுக்கும் அதன் மற்ற நிலைமைகளுக்கும் ஏற்றவாறு இருபத்துநான்கு மணிநேரத்தில் அதற்கு எவ்வளவு பால் தேவையாயிருக்குமென்பது கற்றறிந்த வைத்தியனைக் கொண்டு அறிந்துகொள்ளப்படவேண்டும்" என்று டாக்டர் ஜே. எப்ஸ்டீன் (Dr. J. Epstien.) என்பவர் கூறுகிறார். அந்த இருபத்துநான்கு மணிநேரத்தில் எத்தனை வேளை பால் ஊட்டவேண்டுமென்பதும் கவனிக்கப்படவேண்டும்.

இருபது இருபது அவுன்ஸ் பிடிக்கக்கூடிய இரண்டு புட்டிகளில் நிரம்பவும் முற்கூறிய வகையில் விளாவி வைக்கப்பட்டுள்ள (பாலில் கொதித்து ஆறிய ஜலம் சேர்க்கப்படவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது) பாலில், மேலேயுள்ள 15 அவுன்ஸை மாத்திரம் வேளைக்கு இவ்வளவு என்று விபாகம் செய்து குழந்தைக்குப் பருகக் கொடுக்கவேண்டும். ஒரு புட்டியிலுள்ள இருபது அவுன்ஸ் பாலில், மேற்புறமுள்ள 15 அவுன்ஸ் பால் செலவாய்விட்டதும், மற்றொரு புட்டியிலுள்ள பாலையும் அவ்விதமே வீதப்படி எடுத்து உபயோகிக்கலாம். முற்கூறியபடி ஸாதாரண வெள்ளைச் சர்க்கரையைச் சேர்ப்பதைவிட, க்ஷீர சர்க்கரை (Milk Sugar) கிடைக்குமானால், உபயோகிப்பது மிகவும் நலம். முக்கியமாய், இதில் கவனிக்கப்படவேண்டிய விஷயம் என்னவென்றால், ஒவ்வொரு வேளையிலும் குழந்தைக்குக் கொடுக்கப்படும் பாலின் அளவானது ஒரே சீராயிருக்கவேண்டும் என்பதோடு, பாலும் ஜலமும் ஸமபாகமாகச் சேர்க்கப்பட்டு, சர்க்கரையும் தகுந்தவாறு கலக்கப்பட்டு வரவேண்டும் என்பதேயாம். மேலும், ஒவ்வொரு தடவையிலும் பால் புகட்டும்போது இவ்வளவு நேரம் இடைவெளி இருக்கவேண்டுமென்பதையும் நியமத்துடன் கவனித்து வரவேண்டும்.

ஒரு குழந்தை பிறக்கும்போது, கடவுளின் செயலால், அதற்கு எல்லாவிஷயங்களிலும் ஏற்றவண்ணமாய் ஏற்படும் உணவானது தன்னைப் பெற்றெடுத்த மாதாவிடமிருந்தே உண்டாகின்றது. அந்தப்பால் பிறந்ததுமுதல், வேறுவித உணவு எடுத்துக்கொள்ளும் திறமை வருகிறவரையில் (பெரும்பாலும் 10-வது மாதம்வரையில்) குழந்தைக்கு இன்றியமையாத உணவாகிறது. ஏதோ துரதிருஷ்டத்தினால் தாய்ப்பாலை அநேக காரணங்களால் இழந்துவிட்ட இளங்குழந்தைகளுக்கு, தாய்ப்பாலின் ஸ்தானத்தில் வேறு ஏதாவது ஒரு உணவை உபயோகிக்கவேண்டிவருவதனால், அதற்குப் பசுவின்பாலைத்தவிர வேறொன்றும் ஏற்ற குணமுள்ளதன்று என்று பற்பல ஆராய்ச்சிகளால் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றது. ஆனால், பசுவின்பாலை உபயோகிப்பதற்கு முன்பு, அதை முற்கூறிய முறைப்படி முலைப்பாலுக்குச் சமானமாகப் பக்குவம்செய்து தான் இளங்குழந்தைகளுக்குக் கொடுக்கவேண்டும். இவ்விதம் பாலை விளாவிப் பக்குவம்செய்து உபயோகிப்பதனால், குழந்தையின் குடலில் அது எளிதில் ஜீர்ணமாவதோடு, அதன் தோமளமான தாதுக்களையும் தக்கவாறு போஷிக்கும்.

## தந்த சுத்தி.

பற்களைச் சுத்திசெய்துகொள்ளும் விஷயமாய் ஒருவர் "தமிழர்நேசன்" பத்திரிகையில் எழுதியிருப்பதாவது:—

தந்தசுத்திக்காகப் பற்பொடி செய்துகொள்ளுவதற்குக் கீழ்க்கண்ட சாமான்களைச் சேர்த்து எளிதில் செய்துகொள்ளலாம்.

கருவப்பட்டைப் பொடி, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய்ப்பொடி, கற்பூரத்தூள், சுக்குத்தூள், ஓமத்தூள். ஓமத்தூளைக் கருவப்பட்டைப் பொடிக்குச் சமமாகச்சேர்த்து, மற்றவைகளை வாசனைக்காகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். எந்தப் பற்பொடி உபயோகித்தாலும், அவை கொஞ்சம் சொரசொரப்பாயிருக்கவேண்டுமேயல்லாது, பல்லின் கடினமான மேற்பாகமாகிய தந்தத்தை (Dentine) தேற்றக்கூடியதாயிருக்கக்கூடாது. ஆகையால், சாம்பல் செங்கற்கட்டி, கோலப்பொடி, மணல் முதலியவைகளைப் பல்தேய்க்க உபயோகிக்கக்கூடாது. குச்சுப்புல்லுடன் சீனிச்சர்க்கரையை உபயோகிக்கலாம். குச்சுப்புற்களுக்குப் பதிலாகக் குச்சு உண்டாக்கக்கூடிய அநேகம் சாமான்கள் நமது தேசத்தில் தொன்றுதொட்டு வழங்கிவருகின்றன. இவற்றுள் முக்கியமானவை பழுத்த மாவிலை, நாயுருவிவேர், ஆலம், விழுது, கருவேலங்குச்சி, வேப்பங்குச்சி முதலியவை. அவைகளில், பின்சொல்லிய மூன்றும் சிலாக்கியமானவை. 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என்று ஒரு பழமொழி உண்டு. வேப்பங்குச்சி, வாயில் துர்க்கந்தமிருந்தால் அதை எடுத்துவிடும்; ஆனால், கொஞ்சம் கடினமாயுள்ளது. குச்சுப்புல்லோ அல்லது இக்குச்சிகளோ வழக்கமில்லாதவர்கள் உபயோகித்தால் எயிற்றிலிருந்து இரத்தம் வரும். ஆனால், இப்படி இரத்தம் வருவது முதலில் சிலநாட்களுக்குத்தான் இருக்கும். பின் வரவர இரத்தம் குறைந்து எயிறு இறுகி, பல் கெட்டிப்படும். எவ்விதம் தந்தசுத்தி செய்தாலும் பற்களின் எல்லாப்புறங்களிலும் அழுக்குப்போக, மேலுங் கீழுமாய்ப் பக்கத்திலிருந்து பக்கமாய்த் தேய்த்து, நாவையும் விரல்களினால் தேய்த்துத் துப்புரவுசெய்து, வாயைச் சுத்தஜலத்தால் கொப்புளிக்கவேண்டும். மலையாளத்தில், நாக்கை வழிப்பதற்கு, பிளந்ததென்னை ஈர்க்கை உபயோகிப்பதுண்டு. இது அவசியமன்று. கொஞ்சம் அஜாக்கிரதையாயிருந்தால் அது நாக்கைப் புண்படுத்திவிடும்.



# திருமகளிரட்டைமணிமாலை.

[ஸ்ரீமான் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் இயற்றியது.]

### காப்பு.

திருக்குருகூர் வந்துதித்த சீர்ச்சடகோபன் [மால்
திருக்கழுகூ ரம்பதமே சார்பு.

### நூல்.

(வெண்பா.)

மணிநிறத்தன் மார்புவரை மன்னுவிளக்கே
அணிநிறத்துப் பங்கயப்பூ வார்ந்து—தணிவில் [லாச்
சீர்மை விளைத்தலைபோற் சேவடியே சேர்ந் [தேனுள்
ஆர்ந்து பலம்விளைக்க லாம். (1)

(கட்டளைக் கலித்துறை.)

ஆமோ வடிமை யொருவனஃ தன்றி யலைந்து [மிகப்
போமோ துணைநா டிகந்தால் கூர்விற் புழுங்கி [யுளம்
சாமோ வினைக்கை விரித்திரந் தோடுமோ தாம [ரைக்கண்
தாமோ தரன்மகிழ் செல்விநீ தன்னருள் [சார்த்திடினே.

(வெண்பா.)

இடினுமன் செல்வ மிடாதிருந்து முன்சீர்
அடிபெற்குத் தஞ்சமல ரார்ந்தாய்—மிடிதீர்க் [கும்
பொன்னே சுராசுரர் போற்றுந் திருமகளே
அன்னே யார் மின்னே யறி. (3)

(கட்டளைக் கலித்துறை.)

அறிவே யறிக திருவினை நெஞ்சமே யம்புயத் [தாள்
எறிபூஞ் சுடர்த்தா ளினைத்திரு வென்றனிரு [பதமே
வறிதே யுழலா திலக்குமி கோயில் வலம்வருவீர்
நெறிதேர்ந் தவள்புகழ் சாற்றுவை நாவே [நினைத்துமன்னே.

(வெண்பா.)

மன்னும் பெருஞ்செல்வம் வந்து நிலமாடம்
துன்னு மனையூர்தி தொக்கவரன்—என்னும்
இவைமுதல வெய்தியே யின்புறுவர் பூமின்
நவைநீ தடிசேர் நரர். (5)

(கட்டளைக் கலித்துறை.)

நாருஞ் சுரரு மசுரரு நாகரு நாரமுனி
வரரும் புராரியு மாலும் பிரமனு மன்னுவிச்சா
தரருங் கலையின் மகளுமிந் திராணியுஞ் சந்திர [கலா
தரரின் மனையுந் திருவருள் வேண்டுவர் தாநித [மே.

(வெண்பா.)

நிதமு முயற்சியின்க ணின்றுமுறர் செல்வி
பதமுட் கருதார் பணத்தைப்—பதநினைந்தார்
என்று முயலா திருப்பினு நற்செல்வம்
துன்றிப் பெறுபபுகழ்ச் சொல். (7)

(கட்டளைக் கலித்துறை.)

சொல்லார் திருவே கலைமிகக் கற்றவர் தேச [மிலராம்
வல்லா ரிடம்பெரும் பாலும்விட் டெக்குண மாண் [பிலராம்
கல்லா ரிடத்தினைச் சார்ந்தியா லன்னதன் [காரணந்தான்
சொல்லா யவர்முனம் பூசித் தவர்கொல் [சுகம்பெறநீ.

(வெண்பா.)

பெறலாம் பொருள்களைப் பெற்றுநனியின்பம்
உறலா மிகுசெல்வாக் கொன்றித்—திறலா [ரும்
மக்களை யெவலரா மன்னலாம் பூமாதின்
தக்க வருளடைந்தாற் றான். (9)

(கட்டளைக் கலித்துறை.)

தானு ரனாற்குத் திருமக டொண்டர் தமதிடர் [கள்
நானு விதத்தி லுளமுருக் கங்கொள நன்று [சொல்லி
ஆனு திருத்தலி னன்றே புரத்தலை யன்னவள் [பூண்
டானு ளிரட்சக னென்றுதா னென்றும் மரு [ளடைந்தே.

(வெண்பா.)

அடைவின்றிப் பூவடிநா யன்னையே செல்வி
கடையனேனின்புகழைக்கண்டு—புடைபெயரா
நாட் கருதிச் சாற்றி புனதருளை யெய்தவென்னைக்
கட்கடையா னிறிது தான். (11)

(கட்டளைக் கலித்துறை.)

காணுஞ் சகத்தி னுயிருநீ யின்புநீ காதலின்பம்
பூணும் பொருளுநீ தேசுநீ சீர்த்திநீ பொற் [றிரணி
பேணும் பெரிய வறிவுநீ வன்மைநீ பேசுசுவை
ஊணுந் தொகுநெ(ல்) லுநீசெம்மலருறை [யோவியமே.

(வெண்பா.)

ஓவியமு நாணு முருவிளங்கு பொன்மகளே
காவிமலர்க்கண்ணான் றன்காதலீ—பாவியெனைப்
பற்றிநின்ற நீள்வினையைப் பாற்றியுனதருளைப்
பெற்றவனுச் செய்வையோ பேசு. (18)

(கட்டளைக் கலித்துறை.)

பேசுந் திருமகள்சேரிடநாரணன் பேர்நிறமும்
வாசந் தொடர்ந்தசெங் கஞ்சமுந் தொண்டர் [மனனகமும்
நேசம் புரியு மரசரி னில்லமு நேர்மணமும்
தேசம் புகழ்மட வாருந் துழாயுந் திறலருமே.

(வெண்பா.)

திறலுடைய மாயன்றிருமார்வார் பாவாய்
விறலுடைய வுன்னையான் வேண்டி—அறவ [டிமை
ஆகியு நின்னருளா மாரமுதம் வாய்க்காமல்
தாகியா நிற்றலேன் சாற்று. (15)

(கட்டளைக் கலித்துறை.)

சாற்றும் புகழ்த்திரு மாதுகண் ணோக்கந் தகப் [புரிந்தால்
கூற்றும் பயமுறுங் காடுநா டாகுமால் கூரறிவு
மாற்றும் வறுமையுந் தீரும் விகாரவடிவனுமற்
றேற்றந் தருமுருக் கூடுவன் மிக்க வெழில் [படைத்தே.

(வெண்பா.)

படைக்கு மயன்புதல்வன் பாராளந்தோன் [பர்த்தா
நடைக்கு மடவனமே நாடின்—உடைக்குமொரு
நாதனின் பேர வலனுடைய பொற்பாவாய்
ஓதனின் சீரெளிதோ வோர்ந்து. (17)

(கட்டளைக் கலித்துறை.)

ஓர்ந்தொரு வாறு புகன்றாற் றிருவி னுருவ [மெழில்
சார்ந்திடு பாத மரைமலர் மின்னிடை சந்தமர் [கை
கூர்ந்தொளிர் கஞ்ச மலர்முகம் வாரிசங் கூற [ருடான்
சேர்ந்திடு கண்ணிணை பங்கய மாம்பலஞ் செவ் [விதழே.

(வெண்பா.)

இதழா யிரமுற்ற வின்று மரைப்பூ
அதனைச்செய்யவளோ வன்னாய்—அதுதானின்
செவ்வுருவாற் செம்மை செறிந்ததோ சீர [ணங்கே
திவ்வியவாக் காலெனக்குச் செப்பு. (19)

(கட்டளைக் கலித்துறை.)

செப்புந் தரமன்று நின்புக ழாயினுஞ் செய்ய [செல்வி
தப்பின் றுரைக்க விழைந்தனென் பாடத் [தயை புரிந்தாய்
வெப்புத் துயரார் வறுமையு நோயு நீவிட்டியுல
கப்பன் முகுந்தனுக் காளாக வைப்பை யரு [மணியே

(நூற்பயன்.)

செய்யா ளிரட்டைமணிச் சீர்மாலை [illegible]
மெய்யான பத்தியுள மேவியுரை—செய்வார் [தாப்
பற்பலநற் பேறு [illegible]
சுற்றநண்ப ரோடு சுகித்து.

முற்றிற்று.

---


அஷ்டாங்க ஹ்ருதயம்.

ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்ப்பு.

மிகப்பிராசீன வைத்தியநூல்.

1500 வருஷங்களுக்கு முன்னால் ஆசார்ய வாக்பட நால இயற்றப்பெற்றதும், சாஸ்திரமோதிய அனைவராலும் பிரமாண நூலாகக் கொண்டாடப்படுவதுமான ஸம்ஸ்கிருத ஆயுர்வேதக் கிரந்தத்தின் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு. "வைத்திய கலாநிதி" பத்திராதிபரான ஆயுர்வேத பூஷணம் பண்டித எம். துரைசாமி ஐயங்கார் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூ. 5. தபாற்கூலி வேறு.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,

புஸ்தகவியாபாரிகள், வேலூர். (தென்னிந்தியா.)

V. N. Sama Rao & Co., Vellore.




## Agriculture and Co-operation.

## வியவசாயமும், கூட்டுறவும்.

மேன்னை அடைப்பான்.

சென்ற மாதத்துச் சஞ்சிகையில் இந்தவியாதி உண்டாவதற்கான காரணங்களையும், அதன் அறிகுறிகளையும் குறிப்பிட்டோம். இப்போது இதற்கான சிகித்ஸைகளைப் பற்றிக் கவனிப்போம்.

கால்நடைகளுக்கு இந்த நோய் உண்டானவுடன், அவை உடனே இறந்துபோகின்றன. சில ஒன்றிரண்டு நாட்கள் ஜீவித்திருந்து பிறகு மரணமடையும். ஆகவே, இந்நோய் கண்ட கால்நடைகள் உடனே இறந்துபோவதனால், அவற்றிற்குக் காலதாமதமில்லாமல் உடனே வேண்டிய சிகித்ஸைகளைச் செய்யவேண்டும். இந்த வியாதிக்குச் சிகித்ஸை செய்வது பிரயோசனமில்லாவிடினும், நம்மால் செய்யக்கூடியவற்றை நாம் செய்யாமல் இருத்தல் கூடாது. அவற்றிற்கு ஒருபடி தண்ணீரில் அரைக்கால் ஆழாக்கு பினைலைக்கலக்கி உள்ளுக்குக் கொடுத்தால் தொண்டையிலும் மற்ற இடங்களிலும் உண்டாயிருக்கும் வீக்கங்கள் சற்றுத் தணியும். வியாதி கண்ட கால்நடைகளின் வாயை அடிக்கடி படிகாரம் கலந்த தண்ணீரைக்கொண்டு கழுவவேண்டும்.

இந்நோய்ப்பட்ட கால்நடைகள் அதிக துர்ப்பலமடையாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். இந்த வியாதிக்கு அம்மைகுத்துவதும் சிலாக்கியமென்று கால்நடை வைத்தியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகையால், இந்த வியாதி பரவியிருக்குமிடங்களில் கிருஷிகர்கள் தத்தம் மாடுகளுக்கு கால்நடை வைத்தியர்களைக்கொண்டு அம்மை குத்த ஏற்பாடு செய்வது அவசியமாகும்.

ஆட்டுக்கிடை மறித்தல்.

நிலங்களில் ஆட்டுக்கிடை மறிப்பதன் உபயோகத்தைப்பற்றிக் கிருஷிகர்களுள் பலரும் அறிந்திருப்பார்கள். சிலர் தங்கள் நன்செய் நிலங்களிலும், தோட்டக்கால்களிலும் ஆட்டுக்கிடை மறிப்பதற்குச் சொந்தத்திலேயே கொஞ்சம் ஆடுகளை வைத்திருப்பார்கள். சிலர் ஆட்டிடையர்களிடம் கூலிக்குப் பேசி ஆட்டு மந்தையைத் தம் நிலங்களில் கிடை கட்டுவதுமுண்டு. இவ்விதம் செய்வதனால் உண்டாகும் நன்மைகளைக் கீழே குறிப்பிடுவோம்.

ஆட்டு எருவானது எந்தப் பயிருக்கு இடப்படுகிறதோ, அந்தப் பயிருக்கே அது உணவாகின்றது. ஆனால், மாட்டெரு முதலியன நன்றாக மட்கிப்பயிருக்கு உணவாக உபயோகமாவதற்குக் கொஞ்சநாள் செல்லும். இதுபற்றியே, "ஆட்டெருவு அப்போகம், மாட்டெருவு மறுபோகம்" என்ற சாதாரணப் பழமொழியும் வழங்குகின்றது. ஆதலால், கிருஷிகர்கள் எப்பயிருக்கு எருவிட உத்தேசமோ அப்பயிருக்கே உதவ ஆட்டெருவையே உபயோகிக்க வேண்டும்.

ஆட்டெருவானது கொஞ்சம் நாள் சென்றாலும், அளவில் குறையாது. ஏனெனில், அதில் நீரும் ஆவியாய்ப் போகக்கூடிய சத்தும் மிகக் குறைவு.

நிலத்திற்கு ஆட்டுக்கிடை கட்டுவதனால், ஆட்டெருத்துடன் அவற்றின் மூத்திரமும் நிலத்தில் சேருகின்றது.

ஆட்டுக்கிடை கட்டப்படும் நிலம் முழுவதிலும் எருவானது நன்கு பரவி ஆடுகளால் மிதிக்கப்படுகின்றது. எருவைக் கையினால் வாரி இறைத்தால், மேற்கூறிய விதம் பரவ இயலாது.

ஆடுகள் கிடையாகக் கிடந்து எழுந்திருக்கும்போது தம் சரீரத்தை உலுக்கிக்கொள்ளுகின்றன. அப்போது அவற்றின் உரோமம் நிலத்தில் உதிர்கின்றன. அப்படி உதிர்ந்த உரோமங்கள் பயிருக்கு உரமாகின்றன.

கிடை மறிக்கப்பட்ட நிலமானது ஆடுகளால் நன்கு மிதிக்கப்பட்டுப் பூமியின்மேற்பாகம் தூளாகின்றது.

ஆடுகள் நிலத்தில் படுத்துக்கொண்டிருக்கும்போது அவற்றின் தேக உஷ்ணம் மண்ணில் சேர்ந்து நிலத்துக்குச் சில நன்மைகளை உண்டுபண்ணுகின்றது.

கட்டாந்தரைகளில் ஆட்டுக்கிடை கட்டுவதில் பிரயோஜனமுமில்லை. அந்நிலங்களுக்கு ஆட்டுக்கிடை கட்டுமுன் அவை ஒரு முறையாவது உழப்படவேண்டும். அப்போதுதான் அந்நிலங்களுக்கு ஆட்டுக்கிடை கட்டுவதனால் உண்டாகும் பலன்கள் ஏற்படும்.

ஆட்டுக்கிடை கட்டப்படும் நிலமானது அதிக ஈரமாயிருக்கக்கூடாது. அப்படியிருக்குமாயின், அது ஆடுகளால் மிதிக்கப்பட்டு மிகவும் கெட்டியாய்ப் போய்விடும்.

தென்னைமரத்திற்குச் சப்பாத்தியை எருவாக உபயோகித்தல்.

தென்னைமரத்திற்குச் சப்பாத்தியை எருவிடும் விஷயமாய் "விச்வகர்ம குலோபகாரி" எழுதியிருப்பதாவது:—

தென்னைமரத்தைச் சுற்றியுள்ள மேல்வேர்களை எடுத்துவிட்டு மரத்தைச்சுற்றி அடியில் இரண்டடி ஆழமுள்ள பள்ளம் வெட்டவேண்டும். இப்பள்ளத்தில் சப்பாத்தியைப் போட்டு மேலே மண்ணைக்கொண்டு மூடிவிடவேண்டும். பிறகு இதற்கு நீர் பாய்ச்சி வந்தால், மரங்கள் மிக்க செழிப்புடன் வளர்ந்து நல்ல பலனைத்தரும். ஆகவே, தென்னந்தோப்புள்ளவர்கள் இம்முறையைக் கையாளுவது அவசியமாகும்.

# Education and Science.

## கல்வியும், சாஸ்திரமும்.

**பர்மா ஸர்வ கலாசாலை.**

இந்திய மாகாணங்களுள் ஒன்றான பர்மாவுக்கு ஓர் ஸர்வ கலாசாலையை ஸ்தாபிக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றனவென்ற விஷயம் வெளிப்படை. அது ஸம்பந்தமாய் ஒரு மசோதா கூடிய சீக்கிரத்தில் இராஜப் பிரதிநிதி சட்டசபையில் கொண்டுவரப்படும். இரங்கோன் காலேஜும், பாப்டிஸ்டா காலேஜுமே முதன்முதல் ஸர்வகலாசாலையைச் சேர்ந்தவையாயிருக்கும். அந்த மாகாணத்து லெப்டினண்டு கவர்னர், ஸர்வ கலாசாலை ஏற்படும்போது வேண்டியிருக்கும் சிப்பந்திகளைப்பற்றிய கணக்கைத் தயார் செய்வதற்காக ஒரு கமிட்டியை ஏற்படுத்தி விஷயங்களை விசாரிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கின்றனர். இக் கமிட்டியார், பாடங்களின் கிரமம், பரீக்ஷை தாரணை, யோக்கியதா பத்திரங்கள், வேறு விதமான வித்தியா பட்டங்கள், சிப்பந்திகளின் சங்கியை, ஸம்மானம் முதலியனவற்றைப்பற்றி விசாரித்துத் தீர்மானிப்பார்கள்.

**உபாத்தியாயர்களுக்குப் போதனைகள்.**

(1) வகுப்பில் நீர் உம்முடைய இடத்திலேயே இரும். பிள்ளைகள் தத்தம் இடத்தில் இருக்கட்டும். போர்டு பலகையின் வலது பக்கமே உபாத்தியாயருக்குத் தகுந்த இடம்.

(2) வகுப்பில் போதிக்கும்போது, போதனையைத் தவிர வேறொன்றையும் எந்தக் காரணத்தினாலும் கவனியாதிரும்.

(3) வகுப்பு முழுவதையும் கவனித்துப் போதியும்.

(4) நீர் முன் யோசனையுடன் கட்டளையிடும். கட்டளைக்குப் பிள்ளைகள் கீழ்ப்படியாததற்குமுன் வேறு வேலையைத் தொடங்காதிரும்.

(5) உமக்குச் சரியெனத் தோன்றியவாறு வகுப்பின் அபிவிருத்திக்கு எந்தக் காரியமும் செய்க. சிறுவர்களுடைய பல யோசனைகளையும் கேளுங்க.

(6) உமக்குக் கோபம் வரவொட்டாமல் காத்துக் கொள்ளுக. பிள்ளைகளைத் தண்டிக்க நேரிட்டால், அவர்களுக்கு நலம் உண்டாகும் பொருட்டேயல்லாமல், உம்முடைய கோபம் ஆறும் பொருட்டாகத் தண்டியற்க.

(7) சிறுவர்களிடம் அடிக்கடி குற்றங் கண்டுபிடியாதிரும்.

(8) சிறுவர்களை அடிக்கடி தண்டியாதிரும்.

(9) ஒரே சமயத்தில் அநேகரைத் தண்டிக்கவேண்டாம்.—ஜனோபமானி.

**கல்வி இலாகாவும், புதிய நியமனங்களும்.**

பம்பாய் மாகாணத்தில் எல்பின்ஸ்டன் கலாசாலையில் மிஸ் மார்ஜரி மாய்னெட் என்ற ஸ்திரீ சரித்திரப் பாடத்துக்கு உபந்நியாசகையாக நியமிக்கப்பட்டிருக்கிறார். நமது தேசத்தில் இதுவரை இத்தகைய நியமனம் செய்யப்படவில்லை. கல்வியில் தேர்ந்த ஸ்ரீமதிகளுக்கு இப்படிப்பட்ட பதவிகள் கொடுக்கப்படாமலிருப்பது நியாயத்துக்கு விரோதமேயாகும்.

இதுதவிர, நமது மாகாணத்தில் இந்தியன் சிவில் ஸர்விஸைச்சேர்ந்த ஒருவருக்குக் காலேஜில் உபந்நியாசக உத்தியோகம் கொடுக்கப்பட்டதும் புதிய நியமனமே.

மேற்கூறிய இரண்டு விஷயங்களும் கல்வியின் முற்போக்கில் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

**ஸங்கீதப்பயிற்சி.**

மனமானது எவ்வளவு வியாகூலமடைந்திருப்பினும், கொஞ்சநேரம் ஸங்கீதம் கேட்டால், அது ஒருவாறு ஆறுதலடையக்கூடுமென்ற விஷயம் நாம் அநுபவத்திற் காண்பதே. ஆகவே, மனோவியாதியை ஒருவாறு போக்குங்குணம் ஸங்கீதத்துக்கு உண்டென்பது நன்கு விளங்குகின்றது.

முற்காலத்தில் நமது தேசத்தில் ஸங்கீதமானது நன்கு முற்போக்கடைந்திருந்தது. ஆனால், அதன் வளர்ச்சியானது வரவரக் குன்றிப்போய்விட்டது. இப்போது அதன் உயர்வுக்காகப் பலர் உழைக்க முன்வந்துள்ளார்கள். கிருஷ்ணா ஜில்லா நாஸாப்பூர், பீமாவரம் வாசிகள் கலாசாலைகளிலும், நடுத்தரப் பாடசாலைகளிலும், கல்விபயிலும் மாணவர்களுக்கும் பாலிகைகளுக்கும் ஸங்கீதம் கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இராஜப்பிரதிநிதிக்கு ஒரு விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள். பிள்ளைகளுக்கு ஸங்கீதப்பயிற்சி கொடுப்பதனால், பலர் அதையே தொழிலாகக் கொள்ளக்கூடும். ஆதலால், இராஜப்பிரதிநிதி அவர்கள் இவ்வேண்டுகோளுக் கிணங்கி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களென நம்பப்படுகின்றது.



128

# Industry and Commerce.

## கைத்தொழிலும், வியாபாரமும்.

**சில முக்கிய தொழில் குறிப்புக்கள்.**

தொழில் அபிவிருத்தி விஷயமாய் நாம் கவனிக்க வேண்டியவை இரண்டு உண்டு. அவற்றுள் முதலாவது மூலதனம். இரண்டாவது கூலி. இவை இரண்டும் ஒன்றோடொன்று சமரஸமாய்க் கலந்துவந்தாலன்றி, தொழில் முற்போக்கடைய ஹேதுவிராது. எப்போதும் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் மனஸ்தாபம் நேரிடுவது கூடாது. அப்படி நேருமாயின், அதனால் பற்பல தீங்குகள் விளையுமென்பது திண்ணம்.

மூலதனமும் கூலியும் ஒன்றையொன்று சார்ந்து நிற்கின்றன. முதலாளிகளுக்கு அதிக லாபம் வரும்போது அவர்கள் வேலையாட்களைக் கவனிப்பதில்லை. நஷ்டத்துக்குப் பாத்தியப்படாத தொழிலாளிகளுக்கு லாபம் கொடுப்பது எங்ஙனமென்று முதலாளிகள் கூறுகின்றார்கள். இதை ஒருவிதத்தில் ஒப்புக்கொண்டாலும், முதலாளிகளுக்கு மிகுந்த லாபம் கிடைப்பது தொழிலாளிகளாலேயேயென்பதை அவர்கள் கவனிக்கவேண்டும்.

முதலாளிகள் தம்மிடம் வேலைசெய்யும் தொழிலாளிகளை மிருகங்கள்போல எண்ணி, அவர்களைக் குரூரமாய் நடத்தக்கூடாது. அவர்களுள் பெரும்பாலோர் ஏழைகளானபடியால், அவர்களுக்குப் போதியவளவு சௌகரியங்களைச் செய்துகொடுத்து, அவர்களை அன்புடன் நடத்திவரவேண்டும்.

லாப நஷ்ட கணக்குப் பார்க்கும்போது லாபத்தில் இவ்வளவு பாகம் தொழிலாளிகளுக்கென்று ஏற்படுத்தி அத்தொகையை அவர்களுள் பகிர்ந்து கொடுத்துவிட வேண்டும். இவ்விதம் செய்வதனால், தொழிலாளிகளுக்கு வேலையின்மேல் சிரத்தையும் ஊக்கமும் உண்டாகித் தத்தம் கடமைகளைச் சரிவரச்செய்து வருவார்கள்.

**முதலாளிகள் கவனிக்கவேண்டிய விஷயம்.**

தொழிலாளிகளை அன்பும் ஆதரவுங் கொண்டு நடத்திவந்தால், அவர்கள் தத்தம் கடமைகளை நன்கு உணர்ந்து மிகவும் திருப்திகரமாக வேலை செய்வார்களென்று மேலே கூறினோம். கள்ளிக்கோட்டை லோப் தொழிற்சாலையைப்பற்றி அதன் பிரதம அதிகாரி கூறியுள்ளதைக் கவனித்தால், மேலே சொன்ன விஷயம் விளங்கும்.

"ஆரம்பத்தில் தொழிலாளிகளுக்கு, பிரதிதினமும் குறிப்பிட்ட காலத்தில் வந்துவிட்டால் நல்ல பலன் உண்டாகுமென்றும், ரஜா பெறாமல் வீட்டில் நின்றுவிடக்கூடாதென்றும் உணர்த்துவது வெகு கஷ்டமாயிருந்தது. ஆனால், இப்போது தொழிலாளிகள் தத்தம் கடமைகளை உணர்ந்துவிட்டதனால், தொழிலின் அபிவிருத்தியானது திருப்திகரமாக ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் அவர்கள் அன்புடன் நடத்தப்பட்டனர்; அற்பப்பிழை செய்யப்படினும், அவை மன்னிக்கப்பட்டன. இவ்வாறு இவர்கள் நடத்தப்படுவதனால், கூடிய சீக்கிரத்தில் மேனாட்டுத் தொழிலாளர்களைப்போல தத்தம் கடமைகளை உணர்ந்து சிறந்தவர்களாவார்களென்பதில் ஐயமில்லை.

**வியாபாரத்தில் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.**

ஒவ்வொரு வியாபாரியும் தமது வியாபாரத்தில் முற்போக்கடைய வேண்டுமானால், கீழ்க்கண்டவற்றைக் கவனிக்கவேண்டும்.

(1) சொன்னசொல் தவறக்கூடாது.

(2) வியாபாரத்தை அஜாக்கிரதையாகவும், அவசரமாகவும் செய்யக்கூடாது.

(3) தான் செய்யக்கூடியதைப் பிறர் செய்யவிடக்கூடாது.

(4) செய்யவேண்டியவற்றைச் செய்யாமலிருக்கக் கூடாது.

(5) வியாபார மருமத்தை வெளியிடக்கூடாது.

(6) கடனைவிட ரொக்க வியாபாரமே மேலென்று கருதவேண்டும். அப்படி அவசியத்திற்காகக் கடன் கொடுக்க நேரிட்டால், சாதாரண விலையைவிடச் சிறிது ஏற்றியே கொடுத்துச் சீக்கிரத்தில் வசூலிக்கவேண்டும்.

(7) எழுதிவைக்கவேண்டிய விஷயங்களை ஞாபகத்தில் வைத்திருந்தால் போதுமென்று இருக்கக்கூடாது.

(8) வெளியில் அனுப்பப்படும் முக்கியக் கடிதங்களுக்கு நக்கல் வைத்துக்கொள்ளவேண்டும். தனக்கு வந்த கடிதங்களையும் பத்திரமாய் வைத்துக்கொள்ள வேண்டும்.

(9) எல்லா விஷயங்களிலும் மிகுந்த ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

(10) வருமானத்திற்குத் தக்கபடி செலவுசெய்து கொண்டும், கூடியவரையில் நியாயஸ்தலங்களுக்கு வழக்குக்கொண்டுபோகாமல் பார்த்துக்கொண்டும் தனது வியாபாரத்தில் கண்ணுங்கருத்துமாயிருக்க வேண்டும்.—தேசபக்தன்.

## Sanitation and Medicine.

## சுகாதாரமும், வைத்தியமும்.

**வாந்திபேதிகாலங்களில் அனுஸரிக்கவேண்டிய விதிகள்.**

வாந்திபேதி பரவியிருக்கும் காலங்களில் நாம் மிகுந்த ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும். நாம் உடுக்கும் வஸ்திரங்கள் எப்போதும் சுத்தமாயிருக்கின்றனவாவென்று கவனித்துக்கொள்ளவேண்டும். தேகம் சற்று பலஹீனமாயிருந்தால், வெந்நீரில் ஸ்நானம் செய்யவேண்டும். நன்றாய் ஜீர்ணமாகக்கூடியதாயும், புஷ்டி தரக்கூடியதாயுமுள்ள ஆகாரங்களையே புசிக்கவேண்டும்.

எப்போதும் புதிதாய்ச் சமைக்கப்பட்ட சோற்றையே உண்ணவேண்டும். சமையலானபிறகு அவற்றின்மேல் ஈக்கள் வந்து உட்காராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், ஈக்கள் விஷக்கிருமிகளைப் பரவச்செய்யக் கூடியனவாயிருப்பதனால், இவ்விஷயமாய் நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

வாந்திபேதி காலங்களில் எம்மருந்தை நாம் உண்பதாயிருந்தாலும், வைத்தியர் அனுமதியின்றி உண்ணுதல் கூடாது.

மதுபானம் வாந்திபேதியை அதிகப்படுத்துமாதலால், அதை அக்காலங்களில் நிறுத்திவைப்பது நலம்.

நாமும் வாந்திபேதியால் தாக்கப்படுவோமோ என்ற பயம் ஒருவருக்கும் இருக்கக்கூடாது. அப்படி மனது வியாகூலப்படுமானால், அதுவே தேஹபலஹீனத்திற்குக் காரணமாயிருந்து வியாதியை உண்டாக்கும்.

வாந்திபேதியின் விஷமானது வாந்தியிலும் பேதியிலும் இருக்குமாதலால், பிணியாளி இவற்றைக் கழித்தவுடனே, அவை அப்புறப் படுத்தப்படவேண்டும்.

இந்நோய்கண்ட பிணியாளியால் உபயோகிக்கப்பட்ட படுக்கை, பாத்திரங்கள் முதலியனவற்றை பினைல் முதலான மருந்துகள் கலக்கப்பட்ட தண்ணீரைக்கொண்டு சுத்தம் செய்யப்படவேண்டும். இந்த வியாதிகண்ட வீட்டை பினைல் கலந்த தண்ணீரைத் தெளித்து, சுண்ணாம்பு அடித்துச் சுத்தம் செய்யவேண்டும்.

பிணியாளிக்குச் சிசுருஷை செய்பவர்கள் தாம் சாப்பிடும்போதும், தாகசாந்தி செய்துகொள்ளும்போதும் முதலில் கைகால்களைச் சுத்திசெய்துகொள்ளவேண்டும். பிணியாளி இருக்கும் அறையில் சாப்பிடுவது கூடாது.

**சுண்டக்காய்.**

இது விசேஷமாய் நமதுதேசத்தில் பயிராகின்றது. நமது வீடுகளில் இது சமையலுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றது; வாய்க்குச் சிறுங்கசப்பாயிருக்கும். பித்த அரோசகம், மலக்கிருமி முதலியன இதன் வற்றலை உண்பதனால் ஒழியும்; நன்றாய்ப் பசி எடுக்கும். இன்னும், சீதபேதி, ரக்தபேதி, மார்சளி முதலியன வற்றிற்கும் இதை உபயோகிக்கலாம்.

## General Notes.

## பொதுக் குறிப்புக்கள்.

**அடுப்புக்கரியின் உபயோகம்.**

கரித்தூளானது கண்ணாடி முதலான பாத்திரங்களில் உள்ள கெட்ட நாற்றத்தைப் போக்க உபயோகப்படுகின்றது. கெட்ட நாற்றமுள்ள பாத்திரங்களை முதலில் மணல் முதலியனவற்றால் நன்றாய்த் தேய்த்து அழுக்கைப் போக்கிவிட்டு, மறுபடியும் கரித்தூளால் அவற்றைத் தேய்த்துக் கழுவிவிட்டால், கெட்டநாற்றம் ஒழிந்துவிடும். பல்லின் ஈறுகள் கோளாறடைந்து, வாய்நாற்றம் ஏற்பட்டால், அப்போது கரித்தூளைக்கொண்டு பல் துலக்கலாம். இதனால், வாய்நாற்றம் போவதோடு பற்களும் வெண்மையாகின்றன. இன்னும், அசுத்தமான ஜலத்தைச் சுத்தி செய்யவும் இது உபயோகப்படுகின்றது.

**சில குறிப்புக்கள்.**

திமிங்கலமானது மணியொன்றுக்குப் பத்து மைல் அல்லது பன்னிரண்டுமைல் வீதம் நீந்தக்கூடும்.

*    *    *    *

உலகத்தில் பற்பல பாகங்களிலும் ஏறக்குறைய 176 விதமான வாழை பயிர்செய்யப்படுகின்றனவாம்.

*    *    *    *

கால் ஜோடுகளுக்குப் போடும் பாலிஷானது உலர்ந்துபோனால், கொஞ்சம் டர்பின் கற்பூரத் தைலத்தைவிட்டு சரிப்படுத்திவிடலாம்.

*    *    *    *

**அந்துக்களை ஒழித்தல்.**

அந்துக்களை ஒழிப்பதற்குப் பின்வருவனவற்றை அனுஸரிக்கவேண்டும்.

தானியங்களை நன்றாக ஈரம்போகக் காயவைத்துப் பிறகு சேர்கட்டவேண்டும். அல்லது, நன்றாகக் காய்ந்த தானியங்களைச் சேர்கட்டும்போது இடையிடையே கொஞ்சம் கஞ்சாங்கோரை இலைகளைப் போடவேண்டும். இம்முறைகளைக் கையாண்டால், அந்துக்களின் உபத்திரவம் ஒழியும் என்று "விச்வகர்மகுலோபகாரி" எழுதுகிறது.

**மாஞ்செடிகளுக்கு எருவாதல்.**

டிகாக்ஷன் இறக்கியபிறகு தூர எறியப்படும் தேயிலையையும், காப்பித்தூளையும் வீணாக்காமல் மாஞ்செடிகளுக்கு எருவாக உபயோகிக்கலாம்.

**சுளுக்குகளில் பனிக்கட்டி.**

தேகத்தில் எங்கேயாவது சுளுக்கு உண்டாயிருந்தால், அவ்விடத்தில் வெந்நீர் ஒற்றடம் கொடுத்து அடுத்தாற்போல் பனிக்கட்டியை 15-நிமிஷங்களுக்குக் குறையாமல் நாளொன்றுக்கு இரண்டு மூன்று வேளை வீதம் வைத்து வருவதனால், சுளுக்கு எளிதில் நிவிருத்தியாகுமென்று ஓர் ஆங்கில வைத்தியர் கூறுகிறார்.—வைத்திய கலாநிதி.

121

# ஜனோபகாரி.

OFFICE OF THE REGISTRAR OF ... 3-DEC 1918 MADRAS

# (JANOPAKARI)

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புஸ்தகம் 3. Vol. III. | காளயுக்தி௵ ஐப்பசிமீ, OCTOBER, 1918. | சஞ்சிகை 10. No. 10.

## The Progress of the World.

## பிரபஞ்சப்போக்கு.

**சென்னை இராஜதானியில் வியவசாய அபிவிருத்தி.**

சென்னை இராஜதானியில் வியவசாய அபிவிருத்தி விஷயமாய் அந்த இலாகாவால் 1917–18-ம் வருஷத்தில் செய்யப்பட்டிருக்கிற வேலைகளின் விவரங்களடங்கிய ஒரு ரிபோர்டு இப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. நமது இராஜதானியில் பெரும்பான்மையோர் வியவசாயத்தையே தொழிலாகக் கொண்டுள்ளபடியால், பிரஸ்தாப ரிபோர்டில் கண்டுள்ள சில முக்கிய அம்சங்களை இங்குக் குறிப்பிடுவது அவசியமாகும்.

யுத்தத்திற்குமுன்பு நமக்குத் தேவையான சாயவகைகள் மேனாடுகளினின்றே வந்துகொண்டிருந்தன. கப்பற் போக்குவரத்துகள் நின்றுவிட்டதன் காரணமாக அவை வராததனால், அவுரிச்சாயத்தைப் பரிக்ஷித்து ரிபோர்டு செய்யும்படி மிஸ்டர் மார்ஸ்டன் என்பவர் நியமிக்கப்பட்டார். இவர் இந்தியாவில் அவுரிப் பயிர் செய்யப்படும் பற்பல இடங்களை நேரிற் சென்று பார்த்து, அங்கு அனுஷ்டிக்கப்படும் முறைகளையும் நமது இராஜதானியில் அனுஷ்டிக்கப்படும் முறைகளையும் கவனித்து, இவை இரண்டுக்குமுள்ள வித்தியாசங்களையும் இத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான முறைகளையும் குறிப்பிட்டு ஓர் ரிபோர்டு அனுப்பியிருக்கிறார். இது நமது இராஜதானி வியவசாயிகள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயமாகும்.

சாஸ்திரீயமாகப் பயிர்களைச் சாகுபடி செய்து, அதனால் உண்டாகும் நன்மைகளை வியவசாயிகளுக்குக் காட்டும்பொருட்டுச் சில முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றனவென்று ரிபோர்டினால் அறியப்படுகின்றது. அவற்றுள் சிலவற்றை இங்குக்குறிப்பிடுவது பொருந்தும். வியவசாய இலாகா அதிகாரிகள் மேற்குச் சமுத்திரக்கரைப் பக்கத்தில் நான்கு தென்னந்தோப்புக்களைத் தங்கள் ஆதீனத்திற் குட்படுத்திக்கொண்டு, அங்குச் சில சாஸ்திர முறைகளை அனுஷ்டித்து அதன் பலாபலன்களைக் கவனித்துவருகிறார்கள். இம்முறையானது இப்போது புதிதாகக் கையாளப்படுகின்றது. உருளைக்கிழங்கு சாகுபடி செய்வதற்கான சிறந்த விதைகளை வியவசாயிகளுக்கு உதவவேண்டி, அதற்காக அந்த சாகுபடிக்கு நல்ல வசதியாயுள்ள நீலகிரி ஜில்லாவில் 83 ஏக்கர்

79 ஸெண்டு நிலம் கொள்ளப்பட்டு ஒரு வியவசாயப்பண்ணை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. நன்செய் நிலங்களில் கரும்புசாகுபடி செய்வதன் பலனைக்கண்டறிய கோயமுத்தூர் ஜில்லாவில் 6 ஏக்கர் செரச்சம் நிலம் வாங்கப்பட்டு அங்கு ஒரு வியவசாயப்பண்ணை ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. குடியாத்தத்துக்கு அருகில் ஒரு வியவசாயப் பண்ணையை ஸ்தாபிப்பதற்காக வியவசாய இலாகாதார் 17 ஏக்கர் 74 ஸெண்டுநிலம் குத்தகைக்குவாங்கியுள்ளார்கள். நிலக்கடலை விஷயமாய்ப் பரிசோதனை செய்யவும்; பாலூர் பண்ணைக்குச் சமீபத்தில் 13 ஏக்கர் 70 ஸெண்டு நிலம் குத்தகைக்கு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இன்னும், பருத்தி சாகுபடி விஷயமாயும், நெல் சாகுபடி விஷயமாயும் குறிக்கப்பட்டுள்ள விஷயங்கள் கவனிக்கத்தக்கன.

வியவசாய காலேஜ் விஷயமாய் குறிக்கப்பட்டுள்ள இரண்டொரு விஷயங்களை இங்குக் குறிப்பிடவேண்டும்: சென்ற வருஷத்தில் இக்கலாசாலையில் சேருவதற்காக விண்ணப்பம்செய்து கொண்டவர்கள் 205 பேர்கள். அவர்களுள் கலாசாலையில் சேருவதற்காகச் செய்யப்படும் பரீக்ஷைக்கு 105 பேர்களே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் பரீக்ஷிக்கப்பட்டு முடிவில் 42 பேர்களே கலாசாலையில் படிக்க அருகர்களென்று குறிப்பிடப்பட்டார்கள். இவர்களிலும் 9 பேர்கள் விலகிக்கொண்டுவிட்டபடியால், மிகச் சிலரே வியவசாயக்கல்வி பெற வேண்டியதாயிற்று. 100-க்கு 70 பேர் வியவசாயிகளாயுள்ள நமது இராஜதானியில், மிகவும் கொஞ்சம் பேர்களே வியவசாயக் கல்வி கற்க முன்வந்திருப்பது வியசனிக்கத்தக்க விஷயமாகும். பொது ஜனங்களுக்குள் வியவசாயக் கல்விவிஷயமாய் ஊக்கமில்லாமலிருப்பதற்குக் காரணமென்ன? வியவசாயத்தையே நம்பியிருக்கும் நம்மவர்களுக்கு வியவசாயக்கல்வி விஷயமாய்ப் போதியவளவு சிரத்தை இல்லாமலிருப்பது ஆச்சரியமே. இது சம்பந்தமாய் வியவசாய இலாகா அதிகாரிகள் செய்துவரும் முயற்சியானது குறைவென்றே புலப்படுகின்றது. வியவசாயக் கல்வியின் அவசியத்தைப் பொது ஜனங்களுக்கு நன்கு எடுத்துக்காட்டி, பிரதி வருஷமும் அதிகமான மாணவர்களை இக்கல்வியைப் பயில வியவசாய இலாகா தூண்டவேண்டும்.

**சென்னையில் கால்நடைகள்.**

இந்தியாவில் மற்ற பாகங்களைக்காட்டிலும் சென்னை இராஜதானியில் வியவசாயமே முக்கிய தொழிலாக இருக்கின்றது. வியவசாயத்தை நன்கு நடத்துவதற்குக் கால்நடைகளே முக்கிய கருவிகளாயிருக்கின்றன. நமது இராஜதானியில் கால்நடைகளின் நிலைமையைப் பற்றிப் பலதுறைகளிலும் ஆராய்ந்து பார்த்தால், அவை திருப்திகரமாக இல்லையென்றே புலப்படும். முக்கியமாக இவ்விராஜதானியில் வியவசாயத்துக்குத் தேவையான கால்நடைகள் இருக்கின்றனவாவென்ற விஷயம் கவனிக்கப்படவேண்டும். 1909–10-ம் வருஷத்தில் இங்கு மொத்தம் சாகுபடியான விஸ்தீர்ணம் 36,687,000 ஏக்கர். இந்த விஸ்தீர்ணத்தைச் சாகுபடி செய்வதற்கு 3,701,693 ஜதை காளைகளும் எருமைகளுமே இருந்திருக்கின்றன. அதாவது சராசரியில் 10 ஏக்கர் நிலம் சாகுபடி செய்வதற்கு ஒரு ஜதை மாடுகளே ஆகின்றன. ஒரு ஜதை மாடுகளைக்கொண்டு 10 ஏக்கர் நிலத்தை எங்ஙனம் சாகுபடி செய்ய இயலும்? மாடுகள் மிகவும் திடமாயிருப்பினும், ஆறு அல்லது ஏழு ஏக்கர்களுக்குமேல் சாகுபடி செய்ய இயலாதென்பதே நமது அபிப்பிராயம். ஆகவே, சாகுபடி செய்யப்படும் விஸ்தீர்ணத்திற்குத் தக்கபடி கால்நடைகள் இல்லையென்றே மேற்கண்ட கணக்கால் அறியலாம்.

நமது இராஜதானி வியவசாயத்தையே நம்பியிருப்பதனால், வியவசாய இலாகா அதிகாரிகள் கால்நடைகளின் சங்கியை அதிகப்படுத்தும் விஷயத்திலும், சிறந்த கால்நடைகளை உற்பத்தி செய்யும் விஷயத்திலும் வியவசாயிகளைக் கலந்துகொண்டு தக்கது செய்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.



**துஷ்ட மிருகங்களினாலும், பாம்புகளினாலும் ஏற்பட்ட ஜனச்சேதம்.**

ஒவ்வொரு மாகாணத்திலும் துஷ்ட மிருகங்களினாலும்பாம்புகளினாலும் கொல்லப்பட்டவர்களின் கணக்குக்கள் இந்தியா கவர்ன்மெண்டு கெஜட்டில் பிரசுரமாயிருக்கின்றன. அதன்படி 1913-ம் வருஷத்திலும் 1917-ம் வருஷத்திலும் ஏற்பட்ட ஜனச்சேத விவரங்களைக் கீழேகுறிப்பிடுவோம்.

துஷ்ட மிருகங்களினால் கொல்லப்பட்டவர்கள்.

| மாகாணம். | | 1913. | 1917. |
|---|---|---|---|
| சென்னை | ... | 308 | 568 |
| பம்பாய் | ... | 20 | 34 |
| வங்காளம் | ... | 293 | 341 |
| ஐக்கிய மாகாணங்கள் | ... | 137 | 166 |
| பஞ்சாப் | ... | 10 | 24 |
| பர்மா | ... | 59 | 81 |
| பீகார், ஒரிஸ்ஸா | ... | 546 | 655 |
| அஸ்ஸாம் | ... | 102 | 138 |
| மத்திய மாகாணங்கள், பீரார் | ... | 125 | 158 |
| வடமேற்கு எல்லை மாகாணங்கள் | ... | 2 | 6 |

மேற்குறித்த கணக்கைக் கவனித்தால், 1913-ம் வருஷத்தைவிட 1917-ம் வருஷத்தில் அதிக ஜனச்சேதம் ஏற்பட்டிருப்பது விளங்கும். இதற்குக் காரணமென்ன? ஜனங்கள் நாளுக்குநாள் தைரியம் குன்றி இந்த துஷ்ட மிருகங்களினால் கொல்லப்படுகிறார்களா? அல்லது இந்த ஜந்துக்களுக்கு நாளாவட்டத்தில் பலம் அதிகரித்து ஜனச்சேதத்தை விளைவிக்கின்றனவா? ஊன்றிக் கவனித்தால், இந்த துஷ்டமிருகங்களினின்றும் தப்பித்துக்கொள்ள ஜனங்களுக்குப் போதியவளவு ஆயுதங்கள் இல்லாமையேயென்பது நன்கு புலப்படும். ஒவ்வொரு மாகாணத்திலும் 1913-ம் வருஷத்திலும் 1917-ம் வருஷத்திலும் பாம்புகளினால் கொல்லப்பட்டவர்களின் கணக்குக்கள் வருமாறு:—

| மாகாணம். | | 1913. | 1917. |
|---|---|---|---|
| சென்னை | ... | 1695 | 1452 |
| பம்பாய் | ... | 1406 | 1527 |
| வங்காளம் | ... | 4491 | 4393 |
| ஐக்ய மாகாணங்கள் | ... | 5166 | 6481 |
| பஞ்சாப் | ... | 899 | 957 |
| பர்மா | ... | 1044 | 1873 |
| பீகார், ஒரிஸ்ஸா | ... | 1940 | 5885 |
| மத்திய மாகாணங்கள், பீரார் | ... | 1155 | 1524 |
| அஸ்ஸாம் | ... | 167 | 151 |
| வடமேற்கு எல்லை மாகாணங்கள் | ... | 29 | 25 |

மனிதர்களால் கொல்லப்பட்ட துஷ்ட மிருகங்களும், பாம்புகளும்.

| | கொல்லப்பட்ட துஷ்ட மிருகங்கள். | | கொல்லப்பட்ட பாம்புகள். | |
|---|---|---|---|---|
| மாகாணம். | 1913. | 1917. | 1913. | 1917. |
| சென்னை | 2238 | 1898 | ........ | ........ |
| பம்பாய் | 3471 | 2937 | 37396 | 25035 |
| வங்காளம் | 2858 | 412 | 17134 | 1205 |
| ஐக்ய மாகாணங்கள் | 2659 | 2640 | 5310 | 4999 |
| பஞ்சாப் | 3080 | 492 | 3080 | 15026 |
| பீகார், ஒரிஸ்ஸா | 1550 | 1046 | 16784 | 9171 |
| மத்திய மாகாணங்கள், பீரார் | 1902 | 1564 | 1265 | 728 |
| பர்மா | 5311 | 5873 | 16222 | 16398 |
| அஸ்ஸாம் | 1988 | 1490 | 1981 | 322 |
| வடமேற்கு எல்லை மாகாணங்கள் | 90 | 44 | 595 | 396 |

மேலே குறிக்கப்பட்டுள்ள கணக்கைக் கவனித்தால், 1913-ம் வருஷத்தில் மனிதர்களால் கொல்லப்பட்ட துஷ்ட மிருகங்களையும், பாம்புகளையும் காட்டிலும், 1917-ம் வருஷத்தில் கொல்லப்பட்டவைகள் மிகக் குறைவென்றே புலப்படும். ஆகையால், துஷ்ட மிருகங்களும் பாம்புகளும் முன்னைக்காட்டிலும் அதிகமான ஜனச்சேதத்தையுண்டாக்குகின்றனவேயன்றி, மனிதர்கள் அவற்றைக்கொல்லும் எண்ணிக்

கைக் குறைந்தே வருகின்ற விஷயம் வியசனிக்கத்தக்கது:

### ஆயுத லைஸென்ஸ்களின் விவரம்.

கீழே குறிக்கப்படும் மாகாணங்களில் 1913-ம் வருஷத்திலும், 1917-ம் வருஷத்திலும் எவ்வளவு ஆயுத லைஸென்ஸ்கள் அமுலிலிருந்தனவென்ற விஷயம் வருமாறு:—

| மாகாணம். | 1913. | 1917. |
|---|---|---|
| சென்னை ... | 47,511 | 45,509 |
| பம்பாய் | 15,231 | 13,563 |
| வங்காளம் | 26,961 | 8042 |
| ஐக்ய மாகாணங்கள் | 22,952 | 6357 |
| பஞ்சாப் | 13,876 | 6219 |
| பர்மா | 7390 | 8051 |
| பீகார், ஒரிஸ்ஸா | 12,799 | 11,247 |
| மத்திய மாகாணங்கள், பீரார் | 16,070 | 15,511 |
| அஸ்ஸாம் | 13,046 | 13,114 |
| வடமேற்கு எல்லை மாகாணங்கள் | 5517 | 7717 |

மேற்கண்ட புள்ளி விவரப்படி அநேக மாகாணங்களில் 1913-ம் வருஷத்தில் அமுலிலிருந்த லைஸென்ஸ்களின் எண்ணிக்கையைக் காட்டிலும், 1917-ம் வருஷத்தில் அவை குறைந்து போயிருக்கின்றன. முக்கியமாக ஐக்ய மாகாணங்கள், வங்காளம், பஞ்சாப் இம்மாகாணங்களைக் கவனித்தால் உண்மை விளங்கும். என் இவ்விதம் ஆயுதங்கள் குறைக்கப்பட்டனவென்பதன் காரணம் புலப்படவில்லை. சென்ற 1913-ம் வருஷம் முதல் 1917-ம் வருஷம் வரை ஒவ்வொரு வருஷத்திலும் எவ்வளவு ஆயுத லைஸென்ஸ்கள் அமுலிலிருந்தனவென்பது கீழே குறிக்கப்படும் புள்ளிகளால் விளங்கும்.

| | | | |
|---|---|---|---|
| 1913 | ... | ... | 1,82,412 |
| 1914 | ... | ... | 1,76,779 |
| 1915 | ... | ... | 1,67,242 |
| 1916 | ... | ... | 1,37,183 |
| 1917 | ... | ... | 1,36,707 |

ஒவ்வொரு மாகாணத்திலும் 1913-ம் வருஷத்திலும் 1917-ம் வருஷத்திலும் ஆயுதந்தரிக்க எவ்வளவு லைஸென்ஸ்கள் புதிதாகக்கொடுக்கப்பட்டனவென்பதைக் கவனிப்போம்.

| மாகாணம். | | 1913. | 1917. |
|---|---|---|---|
| சென்னை | ... | 3096 | 4302 |
| பம்பாய் | ... | 2727 | 1888 |
| வங்காளம் | ... | 3230 | 392 |
| ஐக்ய மாகாணங்கள் | ... | 3162 | 594 |
| பஞ்சாப் | ... | 1636 | 1279 |
| பர்மா | ... | 1330 | 1201 |
| பீகார், ஒரிஸ்ஸா | ... | 753 | 531 |
| மத்திய மாகாணங்கள், பீரார் | ... | 7613 | 4903 |
| அஸ்ஸாம் | ... | 216 | 305 |
| வடமேற்கு எல்லை மாகாணங்கள் | ... | 1805 | 3625 |

வங்காளத்திலும் ஐக்யமாகாணத்திலும் புதிதாக லைஸென்ஸ் கொடுப்பதானது 1913-ம் வருஷத்தைக் காட்டிலும் 1917-ம் வருஷத்தில் மிகவும் குறைக்கப்பட்டுள்ளது வியசனிக்கத்தக்கது. தேச முழுமைக்கும் 1913-ம் வருஷம் முதல் 1917-ம் வருஷம் வரை ஒவ்வொரு வருஷத்திலும் புதிதாக எவ்வளவு லைஸென்ஸ்கள் கொடுக்கப்பட்டுள்ளனவென்று கவனித்தால், ஒரு வருஷம் தவிர மற்றவைகளில் குறைந்தேயுள்ளனவென்பது புலப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1913 | ... | ... | 25,627 |
| 1914 | ... | ... | 23,016 |
| 1915 | ... | ... | 19,975 |
| 1916 | ... | ... | 20,577 |
| 1917 | ... | ... | 19,316 |

லைஸென்ஸ்கள் எவ்வளவுக்கெவ்வளவு குறைக்கப்படுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு துஷ்ட மிருகங்களினாலும், பாம்புகளினாலும் ஜனச்சேதம் அதிகப்படுமென்பதில் ஐயமில்லை.

சென்ற 1911-ம் வருஷத்து ஸென்ஸஸ் கணக்குப்படி பிரிட்டிஷாரின் ஆக்ஷிக்குட்பட்ட இந்தியப் பிரதேசங்களின் மொத்த விஸ்தீர்ணம் 1,093,074 சதுர மைல். இதற்கு 1917-ம் வருஷத்தில் 136,707 லைஸென்ஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதாவது 8 சதுர மைலுக்கு ஒரு லைஸென்ஸ் வீதம் ஆகின்றது.



பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்த ஜனத்தொகை 24½ கோடியாகும் இவ்வளவு பெருத்த ஜனத்தொகைக்கு 136,707 லைஸென்ஸ்களே கொடுக்கப்பட்டிருப்பதானது 1786 பேர்களுக்கு ஒன்றுவீதம் ஆகின்றது. இந்தியாவில் நகரங்களும், கிராமங்களும் சேர்ந்து மொத்தம் 5,84 322 இருக்கின்றன. இவற்றில் லைஸென்ஸ் கொடுக்கப்பட்டுள்ள கணக்கானது 4 கிராமங்களுக்கு ஒனறுவீதம் தேறுகின்றது.

**ஆயுர்வேத யூனானி வைத்திய முறைகள்.**

ஆயுர்வேத யூனானி வைத்திய முறைகளைப் பற்றிச் சென்னை கவர்ன்மெண்டாரின் அபிப்பிராயத்தையும், அம்முறைகளின் உயர்வையும்பற்றிச் சென்ற இரண்டு சஞ்சிகைகளில் எழுதியிருக்கிறோம். ஆயுர்வேத யூனானி முறைகளைப்பற்றிச் சென்னைக் கவர்ன்மெண்டார் கொண்டிருக்கும் தப்பபிப்ராயத்தைக் கண்டிக்கும்பொருட்டு இந்த மாதம் 23-ந் தேதி விக்டோரியா ஹாலில் ஒரு பொது ஜனக்கூட்டம் கூடியது அப்போது திவான் பஹதூர் கே. கிருஷ்ணசாமி ராவ், ஸி. ஐ. இ. அக்கிராஸனம் வகித்தார். அக்கிராஸனாதிபதி தமது ஆரம்பப் பிரசங்கத்தில் சுதேச வைத்திய முறைகளின் விஷயமாய்க் கவர்ன்மெண்டார் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைக் கண்டித்துவிட்டு, அம்முறைகளின் விஷயமாப் பேசியவற்றுள் இரண்டொரு அம்சங்களை இங்குக் குறிப்பிடுவோம்.

"நம்முடைய சரீரத்துக்கு நம்முடைய தேசத்து மருந்துதான் ஏற்றது வைத்திய சாஸ்திரமானது அனுபவத்தினால் ஏற்பட்டது. இந்த அனுபவமானது ஒவ்வொரு தேசத்திலும் சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்கவாறு மாறுபடும். அது பழக்கவழக்கங்கள், மருந்து மூலிகைகள், உணவுப்பொருள்கள் முதலியவைகளைப் பொருந்தியது.

ஐரோப்பிய முறை மிகவும் விலையுயர்ந்தது. வைத்திய நிபுணர்களின் சம்பளமும் மருந்துகளின் விலைகளும் அளவுக்கு மிஞ்சினவை. ஆகையால், நம்முடைய முறைகளை நாம் அபிவிருத்தி செய்யவேண்டியது நமது கடமையாகும். எல்லோரும் இவ்விஷயத்தில் ஒற்றுமையுடன் உழைக்கவேண்டும்."

அக்கிராஸனாதிபதி கூறிய மேற்கண்ட வார்த்தைகள் கவனிக்கத்தக்கன. மிகவும் ஏழ்மையாயுள்ள இத்தேசத்தில் அளவுக்கு மிஞ்சின விலைகளையுடைய முறை என்ன நன்மை செய்யக்கூடும்? ஆகவே, பெரும்பாலான ஜனங்களுக்கு அதிகமாக உபயோகப்பட்டு வரும் இந்த சுதேசமுறைகளை இராஜாங்கத்தார் ஆதரிக்கவேண்டுமென்பதை நாம் பன்முறையும் வற்புறுத்துவோம்.

---

## Price and Trade Control in Ancient India.

## பூர்விக இந்தியாவில் விலையையும், வியாபாரத்தையும் கட்டுப்படுத்துதல்.

இப்போது நடைபெற்றுவரும் உலக யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் வேறு எப்பொழுதும் உண்டாயிருந்ததாகச் சரித்திரத்திற் காணப்படவில்லை. இப்பொழுது இக்கஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதனாலேயே வியாபாரமும் போக்குவரவும் உலகத்தின் எல்லாப் பாகங்களையும் எப்படி ஒன்றோடொன்று பிணைத்திருக்கின்றனவென்பது நன்கறிந்து கொள்ளக்கூடும். சரீரத்தின் ஏதாவதொரு பாகத்தில் கெடுதி சம்பவித்தால், சரீரம் முழுதும் எங்ஙனம் வருந்துகின்றதோ, அங்ஙனமே உலகத்தின் ஒரு பாகத்திலுண்டான உணவுப் பொருள்கள் முதலிய கஷ்டங்கள் எல்லாப் பாகங்களுக்கும் எளிதில் பரவியிருக்கின்றன.

ஏற்றுமதி இறக்குமதியைக் குறைப்பதனால் வியாபாரம் நிலைகுலைந்துபோகிறது. யுத்த சம்பந்தமான கைத்தொழில்கள் அதிகரிக்கவும் போதிய அளவு உணவுப்பொருள்கள் கிடைப்பது அரிதாய்விட்டது. இவ்விரண்டுடன் இலாபத்தின்மேலேயே கண்ணாயிருக்கும் வியாபாரிகளின் பேராசையும் ஒன்றுசேர்ந்திருத்தல், உணவுப்பொருள்களின் விலையேற்றத்திற்குக் காரணமாயிருக்கின்றது. இக்காரணம்பற்றி எளிய ஜனங்கள் மிக்க கஷ்டப்பட நேரிடுகிறது. வயிற்றின் கொடுமையால் அவர்கள் துணிகரமாகக் கொள்ளையடிக்கவும் முற்பட்டுவிடுகிறார்கள். உணவுப் பொருள்கள் கஷ்டத்தினால் அவர்கள் பலங்குறைந்து கொடிய வியாதிகளினால் பீடிக்கப்படுகிறார்கள். அவ்வியாதிகளினால் அவர்கள் அதிகமாக மரணமடைந்தும் வருகிறார்கள். அவர்களுடைய கஷ்டங்களைப் பார்த்தபிறகாவது நாம் கண்விழித்துக்கொண்டு இனியேனும் தக்க ஏற்பாடுகளைச்செய்ய முன்வரவேண்டும். இத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நம்முடைய பூர்விக ஹிந்து ராஜதந்திரிகள் சாதாரண காலங்களிலும் இவ்விஷயங்களை எங்ஙனம் கவனித்து வந்தனரென்பதைத் தெரிந்துகொள்ளுதல் அவசியமாகும்.

பொருள்களின் விலைகளை அரசனே கட்டுப்படுத்தவேண்டுமென்று யக்கியவாக்கியர் கூறுகின்றனர். மனுநீதிப்படி ஐந்துநாளைக்கொருமுறையாதல் இரண்டு வாரங்களுக்கொருமுறையாதல் அரசன் வியாபாரிகளை வைத்துக்கொண்டு விலைகளைக் கட்டுப்படுத்தவேண்டும். ஒவ்வொரு சாமானுக்கும் ஏற்படுத்தப்பட்ட இலாபத்தை வைத்து வியாபாரிகள் குறிப்பிட்ட விலைக்கே விற்கக் கட்டுப்பட்டிருந்தார்கள். அவர்கள் தங்களிஷ்டப்படி விலையை ஏற்படுத்திக்கொள்ள அதிகாரம்பெற்றிருக்கவில்லை.

இலாபம் மனம்போன போக்காக ஏற்படுத்தப்படவில்லை. விற்பனையின் நிலைமைக்கும் சாமானின் குணத்திற்கும் தகுந்தவாறே ஏற்படுத்தப்பட்டது. சுதேச சாமான்களுக்கும் அன்னிய தேசத்துச் சாமான்களுக்கும் இலாபவிகிதம் வெவ்வேறாக ஏற்படுத்தப்பட்டது. சுதேச சாமான்களின் இலாபம் சொந்தவிலையில் 100-க்கு 5 வீதமும், அந்நிய தேசத்துச் சாமான்களின் இலாபம் 100-க்கு 10 வீதமும் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இந்த விகிதம் சாமான்கள் செய்யப்பட்ட உடனேயோ இறக்குமதியான உடனேயோ செய்யப்படும் விற்பனைக்குத்தான் உரியது. சாமான்கள் காலந்தாழ்ந்து விற்கப்பட்டால், முதலின் வட்டிக்கு நஷ்டமேற்படாதவாறு இலாபவிகிதமும் படிப்படியாக உயர்த்தப்பட்டது. அந்நிய தேசத்துச் சாமான்களுடைய சொந்த விலையுடன் ஏற்றுமதிச் செலவும் சுங்கக்கட்டணமும் சேர்க்கப்பட்டன. மேற்கூறியவாறு விலை தீர்மானிக்கப்பட்ட பிறகு அரசன் 100-க்கு 5 முதல் 10 வரையில் இலாபவிகிதம் ஏற்படுத்துவான். எந்த வியாபாரியாவது இதர வியாபாரிகளுக்கு நஷ்டமுண்டாகுமாறும், தனக்கு இலாபமுண்டாகுமாறும் சாமான்களை அதிக விலைக்கோ குறைந்த விலைக்கோ விற்றானால், அவன் தண்டிக்கப்படுவான். இதனால் வியாபாரிகளுக்குள் அநாவசியமாகப் போட்டியுண்டாவதில்லை. சாமான்கள் வாங்குவோரும் வியாபாரிகளிடம் ஏமாறுவதில்லை. அரசாங்க ஏற்பாட்டிற்குமாறாக எந்த வியாபாரியேனும் அந்நியநாட்டுச் சாமான்களின் விலைகளை உயர்த்தவேனும் குறைக்கவேனும் முயன்றால், மேற்கூறியவாறே தண்டிக்கப்படுவான்.

பூர்விக ஹிந்து ராஜ்யங்கள் இங்ஙனம் வியாபாரத்தை மேற்பார்வைசெய்து விலைகளைக் கட்டுப்படுத்திவந்தன. அவ்வேற்பாட்டினால் வியாபாரிகள் அக்கிரம இலாபஞ் சம்பாதிக்கவாதல் எளிய ஜனங்கள் நஷ்டப்படவாதல் இடமுண்டாகவில்லை.—தேசபக்தன்.



3-DEC 1918 MADRAS

# முழங்காற் காயம்.

[ஸ்ரீமான் என். எஸ். சுப்பிரமணியன் எழுதியது.]

## I

பகல் இரண்டுமணி வெயிலில் ஒருவன் ஒற்றையடிப்பாதை வழியாய் மருவூரை நோக்கி வேகமாய் நடந்துகொண்டிருந்தான். பழுப்பு நிறமாய் வழவழவென்று கணுக்கொரு பூண் போடப்பட்டிருந்த மூங்கில் அவன் வலதுகையில் இருந்தது. அவன் இடுப்பில் ஒரு முண்டு கட்டியிருந்தான்; மேலுக்குச் சட்டை முதலியன ஒன்றும் அணிந்துகொள்ளவில்லை; தலையில் ஒரு பருத்த முண்டாசு கட்டியிருந்தான். அந்த முண்டாசுக்குள் தன் யஜமானன் கொடுத்திருந்த ஒரு கடிதத்தை வைத்திருந்தான். அந்த கடிதத்தை மருவூர் ஸ்ரீமதி கோமதியம்மாளிடம் கொடுத்துப் பதில் பெற்று வருவதற்காகத்தான் அவன் வெகு வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தான். விஷயம் மிகவும் ஜரூரானபடியால், சிரமத்தையும் பாராமல் ஓட்டமும் நடையுமாகவே அவன் சென்றான். அவன் பெயர் குமரன்.

குமரனுக்குச் சுமார் நூறுகஜ தூரத்திற்கு முன் மற்றொருவன் தலையில் முண்டாசும், கையில் தடியுமாய் விரைவாக நடந்துகொண்டிருந்தான்.

“யாரு முன்னே போரான், முத்துமாதிரியல்ல இருக்கு” என்று மனதில் சொல்லிக்கொண்டான் குமரன்.

இரண்டடி அதிக வேகமாய் நடந்து முன் சென்றவனைக் குமரன் அணுகினான். முத்துதான் என்று நிச்சயமாயிற்று.

“ஏ அண்ணே, முத்து அண்ணே” என்று குமரன் கூவினான்.

முத்து திரும்பிப்பார்த்தான்.

“குமரனா? வாப்பா. எது? எந்தமட்டும்?”

“மருவூர் கோமதியம்மாள் வீட்டுக்கல்ல போரேன்.”

“என்ன விசேஷம்? நானும் அங்கேதான் போரேன். வா, நடந்துகிட்டே பேசலாம்.”

“கடிதம் கொண்டுபோரேன்” என்றான் குமரன்.

“நானும் கடிதந்தான் கொண்டுபோரேன்” என்று முத்து தொடர்ந்து கூறினான்.

பிறகு இருவரும் பேசிக்கொண்டே நடந்து சென்று கோமதியம்மாள் வீட்டை யடைந்தார்கள்.

## II

மாலை ஐந்து மணிக்குக் காற்றுவாங்க சுப்பையத் தேவன் வெளியில் புறப்பட்டான். இவனுக்கு வயது 25 இருக்கும்; நல்ல கம்பீரமுள்ள அழகு வாய்ந்தவன்; கையில் வெள்ளிப் பூண்போட்ட பிரம்பு, தலையில் பட்டு உருமால், பித்தானில்லாமல் நாடாவால் முடியப்பட்ட அங்கி ஆகிய இவை சகிதமாய்க் காணப்பட்டான். இவன்தான் குமரனின் யஜமானன்; ஏரிக்கரையின்மேல் நடந்துகொண்டிருந்தான்.

“குப்பண்ணன் பைத்தியக்காரன். அப்போதே நான் சொன்னேன்: ‘அவள் என்னைத்தான் மணம்புரிய இஷ்டப்படுவாள். நீ வீணில் பிரயத்தனப்படாதே; வேறு கலியாணம் செய்துகொண்டு சௌக்கியமாயிரு. நானே அவளை அடைய ‘அவளுக்கு இஷ்டம்’ என்று பலதரம் சொல்லியும் அவன் கேட்கவில்லை. இப்போது என்ன செய்வான்? நேற்று அவனும் கோமதிக்குக் கடிதம்.....” என்று சுப்பையத்தேவன் தனக்குத்தானே பேசிக்கொண்டிருந்தபொழுது, முதுகில் ஒருவன் தட்டவே திடுக்கிட்டுத் திரும்பினான். குப்பண்ணத்தேவன் எதிரில் நின்றான்.

"ஏ! குப்பண்ணு!! சொன்னதைக் கேட்க மாட்டேன் என்கிறாயே. இதோ பார்" என்று சொல்லி அவன் கையில் ஒரு கடிதத்தை சுப்பையன் வைத்தான்.

மருவூர்,
.........பசலி 897.

அன்புள்ள ஐயா,

தங்கள் நிருபம் கண்டேன்; தன்யையானேன். நாளைப்பகல் இருபத்தைந்து நாழிகைக்குத் தங்களை இங்கு எதிர்பார்க்கிறேன்.

தங்கள் :
கோமதி.

சுப்பையத்தேவர் அவர்களுக்கு.

இதைப்படித்த குப்பண்ணன் "கொல்" என்று சிறித்தான்.

"ஏனப்பா சிறிக்கிறாய்?" என்று சற்றுக் கோபத்துடன் சுப்பையன் கேட்டான்.

"இதைப்பார்" என்று சொல்லி ஒரு கடிதத்தைக் காண்பித்தான் குப்பண்ணன்.

மருவூர்,
.........பசலி 897.

அன்புள்ள ஐயா,

தங்கள் நிருபம் கண்டேன். தன்யையானேன். நாளைப்பகல் இருபத்தைந்து நாழிகைக்குத் தங்களை இங்கு எதிர்பார்க்கிறேன்.

தங்கள் :
கோமதி.

குப்பண்ணத்தேவர் அவர்களுக்கு.

## III

'சைய்! சுடு பாழுங்குதிரையை' என்று சொல்லிக்கொண்டு, பலமாய் இரு குதிகால்களாலும் குதிரையின் விலாக்களில் குப்பண்ணன் இடித்தான். குதிரை வலி தாங்கமாட்டாமல் சற்றுக் கலங்கிற்று; வாயில் நுரைதள்ளிற்று; சரீரமெல்லாம் ஜலப்ரளயமாய் வேர்த்திருந்தது. இன்னும் உதைவிழுமோ என்ற பயத்தால் அது தன்னால் கூடியமட்டும் வெகு வேகமாய் ஓடிற்று. என்ன ஓடியும் அதற்கு முன் சென்றுகொண்டிருந்த குதிரையை அணுகமுடியவில்லை.

முன் சென்றுகொண்டிருந்த சுப்பையன் தன்னைக் குப்பண்ணன் முந்துவதற்குப் பிரயத்தனப்படுகிறான் என்பதை அறிந்தான். மெலிந்த நீண்ட கால்களையும், ஒடுங்கின இடையையும் உள்ள தன் அரபிக்குதிரையைத் தட்டிவிட்டான். அரபிக்குதிரை காற்றாய்ப் பறந்தது.

சுப்பையன் பேசுவதற்குமுன் தான் கோமதியிடம் பேசவேண்டுமென்ற எண்ணம் குப்பண்ணன் மனதில் ஊன்றிவிட்டது; தவிரவும், அப்படிச்செய்தால்தான், அவள் தனக்குக் கிட்டுவாள் என்றும் எண்ணினான். கோமதி இருவரையும் இருபத்தைந்து நாழிகைக்கு வரச்சொன்னதனால், இருவருக்கும் குதிரைப் பந்தயம்தான் ஏற்படுத்தினளோ என்றும் எண்ணினான்.

குப்பண்ணன் பலவிதமாய் யோசித்து, கடைசியில் எவ்விதத்திலும் சுப்பையத் தேவனுக்கு முன் தான் கோமதியிடம் சென்று பேசிவிடவேண்டும் என்று தீர்மானித்தான்.

ஆ! குப்பண்ணனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. "என்ன செய்வது, அப்படித்தான் செய்யவேண்டும்; வேறு வகையில்லை" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். பிறகு, குதிரையைச் சற்று நிறுத்திக்கொண்டு நன்றாய்க் குறிபார்த்துக் கருங்கல்லொன்றை எறிந்தான்.

சுப்பையத்தேவன் அரபிக் குதிரையின் தொடையில் குப்பண்ணன் எறிந்த கல் படவே, குதிரை நடக்க முடியாமல் அப்படியே சாய்ந்தது. சுப்பையன் சரேலென்று குதிரையினின்றும் கீழே குதித்தான்; குப்பண்ணனை வெறுத்தான்; குதிரையைத் தட்டிக்கொடுத்தான். இதற்குள் குப்பண்ணன் சுப்பையனிருக்குமிடத்திற்கப்பால் வாயுவேகமாய்ச்



சென்றான். கோமதி வீட்டிற்குச் சமீபமாய் வந்ததும், குப்பண்ணனுக்கு ஏதோ ஒரு யோஜனை தோன்றிற்று; குதிரையைவிட்டுக் கீழே இறங்கினான்; அருகிலிருந்த பாராங்கல்லில் தன் முழங்காலை மோதிக்கொண்டான். இரத்தம் கொட்டி வெளியே எலும்பும் வெளியில் தோன்றிற்று. தலைக்குட்டையைக் கிழித்துக் காயத்திற்குக் கட்டினான். தள்ளாடித் தள்ளாடி குதிரையை ஒரு கையில் பிடித்துக்கொண்டு மெதுவாய் நடந்தான்.

## IV

"சைய்; பதரே! பந்தயம் ஓடிக் குப்பண்ணனை ஜயிக்க முடியாதபோனால், கருங்கல்லால் அவன் முழங்காலை முறித்துப் போடுவது என்ன ஆண்மைத்தனம். போ!" என்று கம்பீரமாய்ச் சொன்னாள் கோமதி.

"கோமதி, நீ ஏதோ தவறுதலாய்ப் பிதற்றுகிறாய். நான் அப்படிச் செய்யவில்லை. எனக்குக் கருங்கல் எறியத் தெரியாதென்று ஊரெல்லாம் தெரியும். நீ பேசும் பேச்சிலிருந்து உனக்கு என்மீது அன்பு இல்லை என்று வெளிப்படுகின்றது. அன்பு இல்லாத இடத்தில் எனக்கு வேலை இல்லை" என்று சொல்லிக் கபடமற்ற பார்வையால் சுப்பையன் அவளைப் பார்த்தான். பிறகு மரத்தில் கட்டியிருந்த தன் குதிரையை மெதுவாய் அவிழ்த்து நடத்திக்கொண்டு வீடு நோக்கிச் செல்ல வாரம்பித்தான். குதிரை நடக்கமாட்டாமல் கஷ்டப்பட்டு நொண்டி நொண்டி நடந்தது. இப்படி நொண்டிக்கொண்டு குதிரை நடப்பதையும், அதன் தொடையில் காயம்பட்டிருப்பதையும் வீட்டுத் திண்ணையிலிருந்து கோமதி பார்த்தாள். சுப்பையன் கபடமில்லாத பார்வையும் அவள் கண்முன் நின்றது. "ஆஹா! சுப்பையன் அரபிக்குதிரை ஏன் நொண்டுகிறது?" என்று யோசித்தாள். அவள் மனதிற்கு உண்மை உடனே புலப்பட்டது. சீக்கிரம் தாதியை அனுப்பிச் சுப்பையனைத் தான் வணக்கத்துடன் அழைத்ததாகச் சொல்லி கூப்பிட்டுவரும்படி சொல்லியனுப்பிவிட்டு உள்ளே சென்றாள்.

நன்றாய்ச் சிங்காரிக்கப்பட்டிருந்த அறையில் கட்டிலின்மீது குப்பண்ணன் முழங்கால் கட்டுடன் படுத்துக்கொண்டிருந்தான். அவனருகில் வந்து நின்றாள் கோமதி.

"குப்பண்ணரே! உமக்குப் பின்வந்துகொண்டிருந்த சுப்பையத்தேவர், நீர் முன் செல்லுவது பொருக்காமல் உம்மைக் கருங்கல்லாலடித்தாரோ? சரிதான். அப்படியா? அது உமது பின்புறத்தில் எங்கேயாவது படவேண்டியிருக்க, முன்புறத்திலிருக்கும் முழங்காலில் பட நியாயமென்னவோ? என்ன காரியம் செய்தீர் நீர்! ஏன் இவ்வாறு அபவாதம் சொல்லி என்னை அபராதியாக்கினீர்? நீர் என் கிருஹத்தில் இருக்க அருகரல்லர்; நடந்துவிடும் வெளியில்" என்று கோபத்தின் உக்கிரமான பார்வையுடன் கோபத்தால் பெருமூச்சுவிட்டுக் கடிந்து கூறினாள்.

"கோமதி! நான் அற்பகாரியத்தைச் செய்தேன். நீ உன் புத்திசாலித்தனத்தால் அதைக் கண்டுபிடித்துவிட்டாய். இனி ஒளிப்பதில் என்ன லாபம். எனக்கு உன்மேலிருந்த ஆசையால் அவ்விதம் செய்தேன். என் மனோபீஷ்டமும் பூர்த்தியாயிற்று. நான் சொன்னவற்றையெல்லாம் நம்பி எனக்கு நீ செய்த சிசுருஷைகளும், நடக்க முடியாமலிருந்த என்னை உனது கைகளால் தாங்கி உன் படுக்கையில் படுக்க வைத்துச் செய்த உபசாரங்களும் என் மனதைச் சந்தோஷிப்பி..........."

"அதமா, வெளியில் போ! என்னிடம் இவற்றையெல்லாம் கூறுவது நன்றன்று" என்று சகிக்கமாட்டாத கோபத்துடன் கோமதி கடிந்து கூறினாள். குப்பண்ணனுக்கும் இவ்வார்த்தைகளால் சற்றுக் கோபமுண்டாகவே, கோமதியை அடிக்கவெண்ணி அவன் தன் கையை ஓங்கினான்.

ஓங்கிய கையைக் கெட்டியாய்ப் பிடித்துக் குப்பண்ணனை வெளியில் இழுத்தெறிந்தான் ஒருவன். அவன்தான் சுப்பையன்.

“நான் தங்களுக்குச் செய்த அபராதத்தை மன்னிக்கவேண்டும்” என்று சொல்லி வெட்கத்தால் இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு சுப்பையத்தேவன்பேரில் சாய்ந்தாள் கோமதி.

---

## Sir J. C. Bose.

### (A Sketch of his Life and Career.)

### ஸர் ஜகதீஸ சந்திர போஸ்.

இவர் வங்காள ராஜதானியில் டெக்கா ஜில்லாவிலுள்ள பிக்ராம்பூர் என்ற கிராமத்தில் ஜனித்தவர். இவர்தந்தையான பகவான் சந்திர போஸ் என்பவர், நற்குண நற்செய்கைகளிற் சிறந்த பெருமான். பரீட்பூர் (Faridpur) என்ற இடத்தில் டெபுடி கலெக்டர் வேலையைப் பார்த்துவந்தும் தற்காலத்துப் பெரிய உத்தியோகஸ்தர்களைப்போலல்லாமல் தம் மைந்தனுடைய கல்விவிஷயத்தில் வெகுவாய்க் கவனத்தைச் செலுத்தித் தக்க பிராயத்தில் அவ்வூர்ப் பாடசாலையில் கல்வி கற்கும்படி அனுப்பினார். அப்போதே இங்கிலீஷ்ப் படிப்பு பிரபலமாயிருந்தது. பெரிய மனிதர்களெல்லோரும் தங்கள் சிறுவர்களை இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதுதான் கௌரவம் என்றும் பாடசாலைக்கு அனுப்புவது அகௌரவமென்றும் நினைத்திருந்தார்கள். ஆயினும், இவரோ இதையெல்லாம் லக்ஷியம் செய்யாமல், காலைமுதல் மாலைவரையில் வேலைசெய்து ஜீவனம்செய்யும் கூலிக்காரர்களோடும் மற்றவர்களோடும் சேர்ந்து படிக்கும்படியான பாடசாலைக்கே அனுப்பினார். அப்படிக் கல்வி பயில்வதிலும் பலவிதமான நன்மை யுண்டென்று இவர் பிற்காலத்தில் கூறியிருக்கிறார். “மனது சுலபமாய்த் திரும்பும்படியான சிறு பிராயத்தில் நான் பாடசாலையில் வாசித்ததனால் என் தாய் பாஷையை நன்றாய்க் கற்றுக்கொண்டேன்; அறிவிலும் ஆண்மையிலும் மற்றெவ்வகையிலும் மேம்பட்ட நமது முன்னோர் எழுதியுள்ள பெரிய இதிஹாஸ, புராணங்கள்மூலமாய் நமது நாகரிகம் எப்படிப்பட்டது என்பதைச் சரிவர உணர்ந்தேன். தவிரவும், இங்கிலீஷ் கற்றவுடனே பலருக்கும் ஒரு பெரிய அஹம்பாவம் உண்டாய்விடுகிறது. அந்த அஹம்பாவம் எனக்கு இல்லாமற்போனதே பெரும்பாக்யம்” என்று ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார்.

இவரது தாயார் ஆசார ஒழுக்கங்களிற் சற்றும் தவறாத பெண்மணி. இவர் ஒரு சமயத்தில் தமது கலாசாலை மாணவர்களிற் சிலரோடு வீட்டுக்கு வந்தபோது, எல்லோரையும் ஜாதி வித்தியாசம் கொஞ்சமும் பாராட்டாமல் செவ்வனே உபசரித்து, நன்றாய்ப் போஜனம் செய்வித்து அவர்கள்மனத்தைக் களிக்கச்செய்தார். “தாய்க்குள்ள அன்பும் ஆதரவும் மற்றெங்குமுளதோ?” என்று இவரே தம் தாயாரைப் பற்றி வியந்து பேசியிருக்கிறார்.

இப்பேர்ப்பட்ட மேன்மைக்குணமுடைய தாய்தந்தையர்க்குப் பிறக்கும் புத்திரனும் சன்மார்க்கத்திலேயே ஒழுகுவான் என்பதற்கு ஐயமுண்டோ? நமது ஜகதீச சந்திரரும் பாடசாலையிற் கற்கவேண்டிய விஷயங்களில் தேர்ச்சியுற்று, பிறகு கல்கத்தாவிலுள்ள ஸெயிண்ட் க்ஸேவியர்ஸ் காலேஜில் (St. Xavier's College) பி. ஏ. (B. A.) பரீக்ஷை கொடுத்தார். அப்பால் அவருக்கு இங்கிலாந்துக்குப்போய் இண்டியன் ஸிவில் ஸர்விஸ் (Indian Civil Service) பரீக்ஷையில் தேறி ஜில்லா கலெக்டர் உத்தியோகம் பெற்றுவரவேண்டும் என்ற ஆசை அதிகமாயிருந்தது. ஆயினும், இவரது தகப்பனாருக்கு இது சம்மதமில்லை. உத்தியோகம்பெற்று மற்றவர்களை அரசாட்சி செய்வதை



க்காட்டிலும் ஞானோதயம்பெற்று, தன்னைத்தான் ஆண்டுவருவதே மேன்மையென்பது அவர் கருத்து. ஆதலின், “மேற்படிப்புக்காவது இங்கிலாந்துக்குப் போகிறேன்” என்று இவர் தந்தையிடம் அனுமதி கேட்டபோது, அவர் உத்தரவளித்ததுமல்லாமல் பூர்ண சந்தோஷமாய் ஆசீர்வதித்தார். அப்படியே இவர் கேம்பிரிட்ஜுக்குப்போய் (Cambridge) கிறைஸ்ட் காலேஜில் (Christ College) சேர்ந்து 1884-ம் வருஷம் பி. ஏ. பரீக்ஷையில் தேறி அடுத்த வருஷம் லண்டன் யூனிவர்ஸிடியிலிருந்து பி. எஸ்ஸி (B. Sc.) பட்டமும் பெற்றார்.

இவ்வாறு கௌரவமாய்த் தம் மேற்படிப்பை முடித்து, கல்கத்தாவுக்குத் திரும்பும்போது இவர் மறுபடியும் இங்கிலாந்துக்குப் போய்த் தாம் கண்டுபிடித்த நவீன சாஸ்திர விஷயங்களைப்பற்றிப் பிரசங்கம் செய்யப்போகிறார் என்று யாரே எண்ணியுள்ளார்?

இவர் இங்கிலாந்திலிருந்து திரும்பினவுடனே கல்கத்தாவிலுள்ள பிரஸிடென்ஸிகாலேஜில் முக்கியஉபாத்தியாயர்களுள் ஒருவராய் நியமிக்கப்பட்டார். இந்தியர்களுக்குள் இவ்வளவு இளவயதில் இப்பெருமையான வேலை கிடைப்பதரிதாயினும், இவர் கர்வமென்பது சற்றுமில்லாமல், தமது சிஷ்யர்களுக்குச் சாஸ்திரஞானம் நன்றாய்ப் போதிப்பதற்கு வேண்டிய கருவிகள் இல்லையேயென்று ஏக்கமுற்றார். ஆயினும் மனோதைரியத்தைக் கைவிடாமல், தம்மிடத்திலிருக்கும் கருவிகளையும் ஆயுதங்களையும் வைத்துக்கொண்டே ஒருகுறைவுமில்லாமல் சரிவரத் தமது உத்தியோகத்தைப் பார்த்துவந்தார். இப்படிப் பத்து வருஷம் கழிந்தபிறகு காலேஜில் ஒருசிறிய லெபொரெடரி (Laboratory) வைக்கப்பட்டது. இதினின்று இவரடைந்த நன்மை அளவற்றது. கலாசாலையிலுள்ள பிள்ளைகளுக்குச்சொல்லிக்கொடுப்பதைத்தவிர, தமக்கு ஒழிந்த நேரத்தில் இந்த லெபொரெடரியில் வந்து பலவிதமான ‘எக்ஸ்பெரிமெண்ட்கள்’ (Experiments) செய்துவந்தார். இதனால் இவருக்குப் புலப்பட்ட விஷயத்தை 1895-ம் வருஷம் மே மாதம் ஒரு வியாஸம் எழுதி, வங்காளத்திலுள்ள பெரிய மாதாந்தப் பத்திரிகையொன்றில் பிரசுரித்தார்; இன்னும் அதே வருஷத்தில் மின்சாரத்தைப்பற்றி ஆலோசனைசெய்து, ‘எலெக்டிரிஷியன்’ (Electrician) என்ற பத்திரிகையில் இரண்டு வியாஸம் எழுதி வெளியிட்டார்.

இவ்வியாசங்களின் அருமையையும் மேன்மையையும் லண்டனிலுள்ள ராயல் ஸொஸைடி (Royal Society) என்றசபையார் வெகுவாய்ப் பாராட்டி, கல்வியபிவிருத்திக்காக பார்லிமெண்டார் கொடுத்திருக்கும் தொகையில் ஒரு பாகத்தை இவருக்கு அளிப்பதாய்ச் சொன்னார்கள். அதைச் சந்தோஷத்துடன் ஏற்றுத் தம்ஆலோசனையை மேன்மேலும் பற்றிச் சென்றார்.

இப்படியிருக்க, 1896-ம் வருஷத்தில் இவருக்கு அற்புதமான ஒரு விஷயம் தெரியலாயிற்று. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தந்தியனுப்புவதென்றால் வழிமுழுவதும் கம்பி போடவேண்டியிருக்கிறதே, அது இல்லாமல் தந்தி பேச முடியாதா என்று யோசித்துக் கொண்டிருந்தார். பலநாள் கழித்து அப்படிச் செய்வது சாத்தியம் என்று இவர் கண்டுபிடித்தார்.

இதே சமயத்தில் இதே விஷயத்தைப்பற்றி பொலோனா (Bologna) யூனிவர்ஸிடியில் மார்கோனி (Marconi) யும், அமெரிக்கா தேசத்திலுள்ள ஒரு பெரிய கலைஞரும், இந்தியாவில் நமது ஜகதீச சந்திரரும் ஆலோசனை செய்து கொண்டிருந்தார்கள். இம்மூவரில் நமது ஜகதீசரே இவ்விஷயத்தை முதலிற் கண்டுபிடித்தார் என்பது திண்ணம். 1895-ம்வருஷத்திலேயே இவர் கல்கத்தா டௌன் ஹாலில் கவர்னர் அவர்கள்முன்பாக இவ்விஷயத்தை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

இச்சங்கதி யறிந்தவுடனே 1897-ம் வருஷத்தில் இங்கிலாந்திலுள்ள ராயல் ஸொஸைடியின் முன்பாகப் பிரசங்கம்செய்யவேண்டும் என்று பலரும் வேண்டிக்கொண்டார்கள். அதற்கு

மனமிசைந்து இவர், "மின்சார அலைகள்" (Electric Waves) என்பதைப்பற்றிக் கேட்போர் வியப்புறும்படி பிரசங்கித்தார்.

கல்வி, நாகரிகம், செல்வம் முதலியவற்றில் மிகச்சிறந்தவர்களாகிய லண்டன் சபையோரே இவரைக் கௌரவப்படுத்துவதைக் கண்டு வங்காள கவர்ன்மெண்டாரும், இவரை மதிக்கத் தொடங்கி, இவருக்கு வேண்டிய உதவி புரிய முன்வந்தார்கள்.

நிற்க. 1900-ம் வருஷத்தில் பூலோகத்திலுள்ள சாஸ்திரக் கலைஞர்களெல்லோரும் பிரான்சு (France) தேசத்தின் தலைநகராகிய பாரிஸில் (Paris) சாஸ்திர விஷயங்களை ஆராய்ச்சி செய்ய ஒரு பெரியகூட்டங் கூடினார்கள். இந்தியர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அம்மகா சபைக்கு அனுப்பவேண்டிய தருணம் நேர்ந்ததில், இந்திய கவர்ன்மெண்டாரும், வங்காள கவர்ன்மெண்டாரும் கூடிப்பேசி, இவரையே அனுப்பவேண்டுமென்று தீர்மானஞ் செய்தார்கள். இவரும் அதற்குச் சம்மதமுற்று, பாரிஸுக்குப் போய், தாம் ஆராய்ச்சி செய்துள்ள பல அபூர்வமான விஷயங்களைப்பற்றி உபந்நியாசஞ்செய்து பெரும்புகழ் படைத்தார். ஆதலின், பிரான்சு தேசத்திலுள்ள அறிஞர்கள் தமது சபையின் அங்கத்தினருள் ஒருவராய் இவரை நியமனஞ்செய்தார்கள்.

அடுத்த வருஷம் (1901) மறுபடியும் இவர் இங்கிலாந்துக்குப்போய், ராயல் ஸொஸைடியின் வேண்டுகோளுக்கு ஏற்றபடி இரண்டாவது தடவை பிரசங்கம்செய்தருளினர்.

சாஸ்திர ஞான விஷயங்களில் இவருக்குள்ள ஆராய்ச்சியை மெச்சி, இந்திய கவர்ன்மெண்டார் 1903-ம் வருஷம் இவருக்கு ஸி. ஐ. இ. (C. I. E.) என்ற கௌரவப் பட்டத்தை அளித்தார்கள்.

1906-ம் வருஷத்தில் இவர், செடிகளுக்கும் மனிதர்களைப்போல் சுகதுக்கங்களையும் கஷ்டநிஷ்டூரங்களையும் உணரும் சக்தி நுட்பமாய் உள்ளது என்பதைச் சித்தாந்தஞ் செய்து, ஒரு புஸ்தகத்தை எழுதி வெளியிட்டார். (Plant Response.) 1907-ம் வருஷத்தில் மின்சார விஷயமாய்த் தாம் நூதனமாய்க் கண்டு பிடித்திருப்பவைகளை 'எலெக்ட்ரோ பிஸியாலஜி' (Elctero-Physiology) என்ற புஸ்தகத்தில் பிரசுரம் செய்தனர். இவ்விரு புஸ்தகங்களும் வெகு ஆச்சரியப்படத் தக்க நவீன விஷயங்களைப்பற்றிக் கூறுவதனால், நமது ஜகதீச சந்திரருடைய பெயர் உலகெங்கும் பரவிற்று. அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான், இங்கிலாந்து முதலிய தேசங்களிலிருந்து இவருக்குப் பல கடிதங்களும், உபந்நியாசம் செய்யும்படி வேண்டுகோள்களும் வரத்தொடங்கின. இவையெல்லாவற்றையும் உணர்ந்து 1911-ம் வருஷம் டிஸம்பர் மாதம் நமது ஐந்தாவது ஜ்யார்ஜ் சக்கரவர்த்தியார் சிங்காதனம் ஏறியபோது இவருக்கு ஸி. எஸ். ஐ. (C.S.I.) என்ற பட்டம் அளித்தார்.

எனினும், தாம் கண்டுபிடித்த உண்மைகளை சாஸ்திர வல்லமையுள்ளவரெல்லோரும் அங்கீகாரம் செய்வதற்கு இவரே ஒவ்வொரு தேசத்துக்கும் சென்று பிரசங்கங்கள் செய்யவேண்டியது அவசியமாயிற்று. அதற்காக இவர் இந்திய கவர்ன்மெண்டாரின் உதவியடைந்து, 1915, 1916 இவ்வருஷங்களில் பல தேசங்களுக்குப் போய், ஆங்காங்குள்ள சர்வ கலாசாலைகளில் உபந்நியாசம் செய்தார். எங்கும் இவரை நல்வரவேற்று மனப்பூர்வமாய்க் கொண்டாடினார்கள் என்பது அக்காலத்துப் பத்திரிகைகளினின்று தெளிவாய் அறியலாம். இப்படி விஜயம் செய்து, தமது கொள்கைகளை ஸ்திரமாய் ஸ்தாபித்துத் திரும்பி, கல்கத்தாவுக்கு வந்தவுடன் அந்நகரவாசிகள் எல்லாரும் ஒரு பெரிய சபை கூடி இவருக்கு வந்தனமளித்து உபசரித்தார்கள்.

தமக்கு இப்படி அழியாப்புகழ் அமைந்திருப்பினும் இவருக்கு மனதில் திருப்தியேயில்லை. மற்ற தேசங்களைக்காட்டிலும் இந்தியாவானது சாஸ்திர ஞானவிஷயத்தில் (Scientific Research) தாழ்வான ஸ்திதியில் இருப்பதைக் கண்டு விசனமுற்று, இக்குறையை நீக்கும் பொருட்டுத் தாமே ஒரு பெரிய கலாசாலை ஏற்படுத்தி, அதில் கல்வியூக்கம் அதிகமாயுடைய சிலரைத் தமது சிஷ்யராகச் செய்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு வெகு நாளாய் உண்டு. ஆயினும் அப்படிச் செய்வதென்றால் ஏராளமான திரவியமும், மனக்கிளர்ச்சியுடைய பல பெரியோருடைய சேர்க்கையும் வேண்டுமென்பதை நன்கறிந்தவராதலால், இவ்வெண்ணத்தை ஒருவருக்கும் வெளியிடாமல் தம் மனதிலேயே வைத்திருந்தார். கடைசியில் தக்க சமயம் வாய்த்தபோது, இவர்தமது அன்புள்ள நண்பர்கள் சிலரிடத்தில் இதைப்பற்றிப் பிரஸ்தாபம் செய்தார். அவர்கள் உதவியாலும் ஈசனருளாலும் இவ்வெண்ணம் நிறைவேறி நவம்பர் மாதம் இக்கலாசாலையை ஏற்படுத்தினர். (Bosc Research Institute.)



நாளுக்குநாள் இவரது கல்விச் செல்வம் பெருகவே, கவர்ன்மெண்டாரவர்களுக்கும் இவரிடத்திலுள்ள மதிப்பும் மரியாதையும் அதிகரித்துக்கொண்டேயிருந்தன. ஆதலின், 1917-ம் வருஷத்தில் இவருக்கு ஸர் (Sir) என்ற பட்டப்பெயரைக் கொடுத்தார்கள். அப்போது இவரது மாணவர்களெல்லாரும் சேர்ந்து வந்தனமளித்து உபசரித்தார்கள். அவ்விராஜதானியில் பெயர்பெற்ற மற்றொரு சாஸ்திர ஞானியாகிய டாக்டர் பி. ஸி. ரே என்பவர் (Dr. P. C. Ray) அக்கிராசனம் வகித்து, "உண்மையையே நாடும் நமது முற்கால ரிஷிகளைப்போல் இவர் தமது வாழ்நாள் முழுவதையும் சாஸ்திர ஆராய்ச்சியிலேயே செலுத்திவந்த மஹானுபாவர். தாம் புதிதாய்ச் செய்திருக்கும் கருவிகளை வேறெவரும் செய்யக்கூடாது என்று கூறி, கவர்ன்மெண்டாரிடமிருந்து இவர் ஒரு உத்திரவு வாங்கியிருந்தால் இதுவரையில இவர் அநேக கோடிரூபாய் சம்பாதித்திருக்கலாம். ஆனால் கல்வியையும், ஞானத்தையும் விற்பது என்றால் இவருக்கு மனம் இசையவில்லை. இவர் மானிடரெல்லோரும் ஒருவிதமான வேறுபாடுமில்லாமல் தாம் ஆராய்ந்த உண்மைகளை அறிந்து இன்புறவேண்டும் என்று நினைக்கும் உத்தமோத்தமர்" என்று பலவாறாய்ப் புகழ்ந்துள்ளார்.

எவ்வளவு நிபுணராய் இருந்தாலும் ஒருவனுக்குத் தன் நாட்டில் கௌரவம் கிடைப்பது அருமை. அதிலும் இந்தியாவிலோ சொல்ல வேண்டியதில்லை. உதாரணமாக: ஈசுவராவதாரமென்றே சொல்லப்படும்படியான ஸ்வாமி விவேகாநந்தர் இங்கிருந்து அமெரிக்காவுக்குப் போனபோது, சென்னையிலுள்ள (Dr. S. Subrahmanya Iyer) ஹைகோர்ட் ஜட்ஜ் மணி ஐயரைத் தவிர வேறெவராலும் மதிக்கப்பட்டவரல்லர். ஆயினும், அங்குச்சென்று அமெரிக்காவிலுள்ளவர்கள் பலராலும் புகழப்பட்டவுடனே இங்கேயும் அவரைத் துதித்துக் கொண்டாடினார்கள். இன்னும் காவியத்தில் மகா வல்லமையுடைய ரவீந்திரநாத் டாகோர் (Robindra Nath Tagore) என்பவருக்கும் ஐரோப்பாவிலிருந்து நோபில் பிரைஸ் (Nobel Prize) என்ற பரிசு அளிக்கப்பட்டபின்புதான் இந்தியாவில் புகழ் பரவிற்று. அதேமாதிரி, நமது ஜகதீச சந்திர போஸுக்கும் லண்டனிலுள்ள ராயல் ஸொஸைடியார் கௌரவப்படுத்திய பின்பே, இந்திய கவர்ன்மெண்டார் உதவி செய்ய ஆரம்பித்தார்கள். இப்படியே இவருக்கு லண்டன் யூனிவர்ஸிடியிலிருந்து டி. எஸ்ஸி (D. Sc.) பட்டம் வெகுநாளைக்கு முன்பே (1896-ம் வருஷத்திலேயே) அளிக்கப்பட்டதனால், கல்கத்தா யூனிவர்ஸிடியிலும் அப்பட்டத்தை இவருக்குக் கொடுத்துத் தாமே கௌரவம் செய்துகொண்டார்கள்.

பஞ்சாப் யூனிவர்ஸிடியார், 1913-ம் வருஷத்தில் வரவழைத்து உபந்நியாசம் செய்யும்படி கேட்டுக்கொண்டு, அதற்கு வெகுமதியாய் 1200 ரூபாய் கொடுத்தார்கள். பிறவியிலேயே உதாரகுணமுடைய இவர், அதைத் தாம் ஏற்றுக் கொள்ளாமல், மேற்படிப்பு வாசிப்பவர்களில் புத்திக்கூர்மையுள்ள ஒரு மாணவருக்கே அளிக்கும்படி கூறிவிட்டார்.

இவ்வருஷ ஆரம்பத்தில் (1918) நமது ராஜப் பிரதிநிதியாகிய செம்ஸ்போர்டு பிரபு அவர்கள் (Lord Chelmsford) இவரிருப்பிடத்துக்குப் போய், இவர் நூதனமாய் ஆராய்ந்திருக்கும் விஷயங்களைப்பற்றிச் சாவகாசமாய்ப் பேசிக்கொண்டிருந்ததுமல்லாமல், வெகுவாய் மெச்சித் தம் அத்யாநந்தத்தையும் கூறினர்.

இவ்வாறே இவர் கல்வியபிவிருத்தியில் ஊக்கமுள்ளவராய், தமக்கும் தம் ஜனன பூமியாகிய இந்து தேசத்துக்கும் புகழ் அடைவித்து நீடூழி வாழ்வாராக!

என். ஆர். கேசரி ராவ், எம்.ஏ., எல்.டி.

---

# New Sonnets in Tamil.

## By Mr. V. Subba Aiyer.

## தமிழ் நவீனப் பாசுரங்கள்.

### 13. நண்பன்.

நேரிசையாசிரியப்பா.

உடுக்கை யிழந்திடி னுதவிடுங் கைபோல்
இடுக்கண் களைபவ னிணையிலா நண்பன்
என்றுமுன் வள்ளுவ ரியம்பிய தறிந்தும்
நன்றிபா ராட்டிடும் நண்பரெத் தனைபேர்?
நண்பெனுங் குணத்தை நாமுண ரப்புகின்
பண்புடன் தோன்றுவ பகர்ந்திடல் கேண்
[மோ—
ஒருவனை யுலசினி லுவப்புட னின்றோர்
திருவுடன் றன்னையே சேர்ந்தோ ரென்ன
[வும்
அவன்றன் றேவியைச் சோதரி யென்ன
[வும்
கவலையுங் களிப்பு மிருவர்பங் கென்னவும்
நினைந்திடு மனநிலை புனைந்தவ ரிருவர்
கனங்கொளு நண்பெனுங் கதிதனை யுடை
[யோர்
என்பதை யின்போ டியம்புவந்
தன்பினைக் களைந்திடுந் தூயபெண் மணி
[யே:
சொன்னவர் சூக்கும மதியிலா ரென்பது
உள்ளங் கையுறை நெல்லியங் கனியெனக்
கொள்ளக் கிடப்பதைக் குறித்தக மகிழ்
[வாம்,
ஏனெனி லிவ்வுல கந்தனிற் பெண்கள்,
மான முடனே வாழ்பவ ராயின்,
தங்களைத் தந்த குலத்தின் கீர்த்தியைப்
பொங்கச் செய்துதாம் புகுந்த மனையிலும்
மங்களம் பெருக்கி மகிழ்ச்சியை யெழுப்பி
எங்கணு மதனிசை பரவச் செய்தலோ
டுலகப் புகழ்படை யுரமே வாய்ந்த
பலபுத் திரர்களைத் தருவராம் பாவையே:

---

### 14. பெண்.

நிலைமண்டில வாசிரியப்பா.

பெண்ணெனச் சொல்வதும் பேயெனச்
[சொல்வதும்
எண்ணிடி லொன்றெனு வியம்புவர் சில
[பெயர்;
அனைவர் பேச்சையா ராய்ந்துணர்ந்திடில்

---

### 15. பெண்ணின் சிருட்டி.*

நிலைமண்டில வாசிரியப்பா.

பிரம னாதியிற் பெரிதக மகிழ்ந்து
கிரமமாய்ப் புவிதனைப் படைத்ததன்
[பின்பு
மனிதனை யிங்கு மேன்மையாய் வைத்
[திடத்
துணியிலா தன்னவன் சொலிப்புடன்
[வாழ்ந்தான்;
இங்ஙனஞ் சிலநா ளிசையுடன் செல்கை
[யில்
அங்கொரு நீரி லவன்முகங் காணவே
'ஐயோ! இப்பொரு ளகப்பட வேண்டுமே

* The ideas Contained in this and the following two sonnets are found in an old Sanskrit story.



கையா லிதுதனைக் கட்டவும் வேண்டுமே'
என்று மனத்தினி லெக்குறப் பிரமன்
நன்று லோசனை நலமுறச் செய்தே
அன்றிலி னன்பும் புலியின் கொடுமையும்
கிள்ளையின் மெதுவும் வைரக் கடினமும்
சூரியன் மகிழ்ச்சியும் காரி னழுகையும்
ஒன்றோ டொன்று சேர்த்தது பெண்
[ணே:

---

### 16. பெண்ணின் சிருட்டி.

(தொடர்ச்சி.)

நிலைமண்டில வாசிரியப்பா.

இன்னு மிதுபோ லேறுமா றுன
குணங்களைப் பெண்ணெனக் கூட்டிப் பிர
[மன்
அவ்விடம் வருந்திய வவன்கை கொடுக்க
அன்னவ ளவனுடன் வாரமு மொன்று
நன்னய முடனே நயந்தபின் பிரமனைச்
சேர்ந்து 'நாதனே, சிறுமியோ டிருத்தல்
முடியா தாதலால் நீவிரே கொளு'மென,
அவரு மவனைத் தன்னிட மிருத்தினர்;
பின்போர் வாரஞ் சென்றபின் மனிதன்
விரும்பினன் கன்னியைப் பிரமனு மீந்
[தனன்;
மூன்றே நாட்களில் முடியா தென்றம்
மனிதன் பெண்ணினை மறுபடி யனுப்ப,
பிரமன் 'பெயா, போடா. இவடனை
நீயே நிலையாக் கொள்க'வென் றனனே.

---

### 17. பெண்ணின் குணங்கள்.

நிலைமண்டில வாசிரியப்பா.

சந்திரன் விருத்தமும், லதைகளின் வளை
[வும்,
படர்கொடிக் கூந்தலின் பற்றுங் குண
[மும்,
புல்லின் நடுக்கமும், பூவின் மலர்ச்சியும்,
இலைகளை யொத்த விலேசாந் தன்மையும்,
துதிக்கையின் துவட்சியும், மானின் பார்

சுரும்பின் தொகுதியிற் றோன்று கூந்த
[லும்,
வாயுவின் சலனமும், மலையின் றிரமும்,
முயலையு மொத்திடுங் கோழைத் தன
[மும்,
நெருப்பின் வெம்மையும், பனியின்
[தண்மையும்,
சூரிய காந்தியும், இரவி னிருளும்,
கோகிலக் குரலும், காக்கையின் சத்த
[மும்,
கொக்கின் கபடமும், கோதிலாச் சக்கர
வாகப் புள்ளெனு மாண்புறு மனமுங்
கூடி யிருப்பவள் பெண்ணெனக் கொள்
[ளே:

---

### 18. தந்தையர்க் கோர்விண்ணப்பம்.

நிலைமண்டில வாசிரியப்பா.

தந்தை யென்பவன் றன்மக னவையில்
முந்தி யிருந்திட முயல்வதே யுதவியாம்
என்றுமுன் வள்ளுவ ரியம்பிய தறிந்து
நன்றே விளைந்திடும் நயனம் போன்ற
கல்வியை மகர்க்குக் கனமாய்க் கெடுமின்,
அல்லெனு மவித்தை யறவே களைமின்,
புவிமிசைப் பொருளெனக் காசும் வீடும்
தவறிலா தீந்திடு தந்தையி னுயிர்தான்
மோகுமுன் விரையச் செய்வீர் புத்தி
[ரர்;
சாகிற வரையவர்க் ககாய மாவது
கல்வியே யென்பதைக் கருதுமின் றந்தை
[யீர்;
சொல்லிய யாவுஞ் சோதிவா யுந்தன்
புத்திரி கட்கும் பொருத்தமா மென்று
சித்தந் தனிலே சிறந்தமைப் பீரே:

---

### 19. போரின்முடிவு.

நிலைமண்டில வாசிரியப்பா.

போரும் முடிந்தது புகழுடன்; நல்லோர்
தோள்வலி யுலகினிற் றுலங்கி நின்றது;
சீருஞ் செழிப்புஞ் சிறக்குநல் லறமும்
ஆள்வினை யோடு செய்திடச் சமயம்
வாய்த்ததைக் குறித்து மகிழ்ந்திடா யுல

இதுவரை யிதுவெலா மியற்றுதற் கில்லா
விதமா யுலகின் வெங்கலி யென்ன
யுத்தப் படைகளை யொருங்கே சேர்த்த [வுன்
மத்த னடங்கினன் மகிழ்க, மகிழ்க,
10. இவ்வித மாய விசையினைத் தந்த

திவ்விய வருளைத் தொழுக, மேலும்
* ஆயிரத் தொளாயிரப் பதினெண் ணுண் [டின்
பதினொரு மாதப் பதினொரு.தேதியின்
14. பதினொரு மணியைப் பதிமி னுளத்தே:

வி. சுப்பையர்.

* Hostilities Ceased at 11 A. M. on the 11th of the 11th month of 1918.

## How to Spend Leisure Hours.

BY MR. D. S. NESAMANI.

## விடுதிப் பொழுதைக் கழிக்கும் ஆறு.

(237-ம்பக்கத் தொடர்ச்சி.)

இவைமட்டுமல்ல; நூல்கள் அறிவையும் பெருக்குவன. அறிவு இயற்கையறிவு, செயற்கையறிவு என இருவகைப்படும். நிலம் வாழ்வன, நீர்வாழ்வன வான்வாழ்வனவாம் ஜீவவர்க்கங்களுள் மனிதன் ஆதிக்கம்பெற்று விளங்குவது, அவன் தன் இயற்கை யறிவோடு செயற்கையறிவையும் அடைந்து புகழும் பெருமையும் இன்பமும் வாய்ந்து மேன்மையுறும் ஆற்றலுடையதாலென்க. ம்ருகங்களின் தேஹவமைப்பு மனிதனின் சரீரக் கட்டிற்குப் பெரிதும் ஒத்திருப்பினும், விலங்குகள் ஒன்றினறிவினால் பிறபயனடைய அநேகமாய் ஹேதுவில்லாதிருக்க, மநுஷ்யர் எழுத்துப் பயிற்சியையுமடைந்திருப்பதைப்பற்றி யோசிக்கில், ஆப்மதியுறுநர் தாமாராய்ந்தறிந்த ஸத்யங்களை மற்றையோர் அதிசுக்காலம் செலவழியாமலும், மிகுந்த ஸங்கடமுறாமலும் உணர்ந்துய்யவேண்டுமென்பதே முதலடியில்லான் சித்தமென விளங்கும். எனவே, நூலோதுவது திருவருட் சித்தத்திற்கு இசைந்த கருமமென்பது வெளிப்படை. பூர்வம் மேற்கேயுள்ள பலஸ்தீன தேசமுழுவதும் 'ஆழியொன்றுருட்டி' த் தனியாசி யற்றிய அரசனான ஸாலமோன் என்னும் மஹா ஞானியும், 'ஞானிகள் அறிவைச் சேர்த்து வைக்கின்றார்க' ளென்று புகன்றார்; மற்றும், 'அறிவுடையவன் தன் வலியைப் பெருக்குகின்றவன்' என்று சுருங்கக்கூறி அறிவுபெறல் எவ்வளவு அவச்யமென்பதை விளங்கவைத்தார். 'அறிவையைத் திருடினால் விலங்கு, அறிவைத் திருடினால் ஆதாயம்' என்னுந் தமிழ்ப் பழமொழியையும் இதனுடன் ஒப்பிடுக. ஊன்றிப் பார்ப்பின், கடவுள் கருணையுடன் நமக்கீந்த எதையும் தகுந்த காரணங்களின்றி அநுபவியாதிருப்பது பெரும்பாபமென்பது விசதமாகும். ஆனால், மேதையர் ஆக்கிய நூல்களைக் கற்றுப் பயன் துவ்வாது காலத்தை வீணே செலவழிப்பது பாபமேயன்றோ?

"தொட்டனைத்(து) ஊறு(ம்) மணற்கேணி மாந்தர்க் [குக்
கற்றனைத்(து) ஊறு(ம்) அறிவு."

"மாந்தர்க்கெலாம் கேள்வியா(ல்) அறிவும்,
அறிவினாற் கல்வியும், கல்வியாற் புகழும்,
புகழாற் பெருமையும் விளைந்து வளரும்."

சிறந்த புஸ்தகங்களைக் கற்கவேண்டிய அவச்யத்தைப் பற்றிச் சில குறிப்புக்களைக் கூறிய பின், 'நூற்பயிற்சி செய்தற்குரியவர் எவ்வெவர்?' என்னும் வினவிற்கு விடையிறுத்தல் முறையாம். ஸ்வஸ்தபுத்தியுடைய மக்களனைவரும்—ஆண்பாலராயினும் பெண்பாலராயினும் ஸரி, வலியோராயினும் சரி, பெரியோராயினும் சரி, ஸந்தோஷ ரஹிதராயினும் ஸந்தோஷ ஸஹிதராயினும் ஸரி—எவ்வித ஆசங்கையுமின்றி நூல்களை ஆராய்ந்து மாண்புறலாம். இச்சந்தர்ப்பத்தில் காலத்தைநோக்கி 'மாதர் நூற்பயிற்சி' யைப்பற்றி இரண்டொரு குறிப்புக்களை எடுத்துரைத்தல் 'மற்றொன்று விரித்தல்' ஆகாதென்பது ஒருதலை.



ஆண், பெண்பாலிருவரும் செயற்கையறிவு பெறவல்ல ஜீவராசிகளானமையான் அவ்விருவரும், பெரும்பாலும் உள்ளதை உள்ளபடியே உணர்த்தி அறிவைப்பெருக்கும் நூற்கல்வியை அசட்டை செய்யாதிருத்தல் சிறப்பும் நியாயமுமாம். நூற்கல்வி ஆண்மக்களுக்கு எங்ஙனம் இன்றியமையாததோ, அங்ஙனமே பெண்மக்களுக்கும் இன்றியமையாததாம். நூற்பயிற்சி ஆண்பாலர்க்குப் பூஷணமாகில் பெண்பாலர்க்கும் பூஷணமாம். ஆடவரை நன்னெறியினின்று வழுவச் செய்யாதது கல்வியாயின் பூவையரைத் தீவழியில் கல்வி செலுத்துமோ?

"பொருந்துநல் கலைதெரி பூவை கற்பது
திருந்தியே மிகுமலாற் றேய்ந்து போமெனல்
வருந்திடா(து) உயிர்தரு(ம்) மருந்தை மானிடர்
அருந்திடின் சாவரென்(று) அறைதல் ஒக்குமே."

"சிறைகாக்கும் காப்(பு) எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை."

கல்வியறிவில்லார் ஏகதேசம் ம்ருகங்களுக்குச்சமானமானவர் என்பது நல்லோர் பலரின் அபிப்பிராயம். இவற்றை உணர்ந்துமுணராதும் கல்வியம்ருதத்தை மடந்தையர் அருந்தாவண்ணம் அவரைத் தடுத்தல் தந்நயங்கருதி தந்நலமிழப்பவர் செயல்.

ஜோஸப் ஆடிஸன் என்பவர் கூறியபடி, புருஷர் ஜீவனோபாயத்தின்பொருட்டு நாளின் பெரும்பாகம் வெளியேயிருக்க, ஸ்திரீகள் வீட்டிலே இருந்து, அட்டுண்டு மிகுந்த நேரத்தை வீணிற் செலவழிக்கின்றனர்; இவர்களுக்குப் பேசுந்திறமும் ஆடவருக்கு அமைந்திருப்பதைவிட அதிகமாதலால், இவர்கள் ஓழிவேற்பட்டதும் அயலகத்தாரிடம் நல்லவல்ல கூறிக் காலஹரணஞ் செய்கின்றனர். இவர்கள் கல்வியறிவு பெற்றிருப்பின் இவர்கள் தம் ஓய்வுபொழுதைப் ப்ரயோஜனகரமாகச் செலவழிப்பர் என்பதற்கு ஐயமுண்டோ?

சிலர், பெண்கள் இறந்த பிறப்பில் தாம் செய்த தீவினையின் பயனாக இப்பிறப்பிற் பெண்களாய்த்தோன்றினவராதலின், அவர்கள் ஆண்மக்களைப்போல் கற்று ஆண்களுக்கு ஸமமானவர்களாகக் கூடாது என்று கூறிப் பெண்கல்வியை விலக்க முயலுகின்றனர். இவர்கள் புகல்வது மெய்யெனக் கொண்டாலும், இக்காரணம் பற்றியே மாதர் கல்வியறிவு புகட்டப் பெறவேண்டியவர் என்பது நிஜம். தக்காலத்தில் தண்டனை தண்டிக்கப்பெறுபவரைச் சீர்படுத்தச்சகுந்ததாயிருக்கவேண்டுமேயன்றி, தீமைக்குத் தீமை செய்கிறதாயிருத்தலொண்ணாதென்று நாகரிகமடைந்த தேசத்தார் அனைவரும் கவலைகொண்டிருக்கின்றனர். இங்ஙனம் சிருஷ்டிகளான மானிடர் நீதிசெய்ய அவாவுவாரெனில், சர்வச்ருஷ்டிகனான ஞானஸம்பந்நன் பெண்களுக்கு இத்தகைய தண்டம் விதிப்பானோ? எனவே, இவர்கள் ஒழிவுநேரத்தில் பலகுற்றங்கள் புரிந்து இன்னும் இழிபிறப்படையாவண்ணம் இவர்களைக் காத்தல் ஹிந்து தேசவாஸிகளின்மேல் விழுந்த கடன்.

கீழ்க்கூறிய குறிப்புக்கள் பெண்களும் நூற்பயிற்சி செய்தற்குரியவர் என்று நாம் முன் கூறியதை நிரூபணஞ்செய்யப் போதுமானவை. ஆதலால், மடநல்லாரும் நூலோதுவது நலம் என்று கூறுதல் இழுக்குறாது. நிற்க.

இக்கல்வி கற்குங்கால் சிலஸமயங்களில் சிறிது துன்பந்தந்து, கற்றபின் மிகுதியும் இன்பந்தருவது; இம்மை அம்மை இரண்டிற்கும் ஸாதகமாகவுள்ளது. இக்கல்வி மனத் தெளிவைத் தந்து, லோக வ்யவஹாரங்களைச் செவ்வனே நடாத்தும ஆற்றலை மானிடர்க்குத் தருதலால், இது, மக்கள்தம் அறிவாம் விளக்கை மங்கவிடாது ஜ்வலிக்கச்செய்யும் தூண்டுகோல். மற்றும், நரிடத்துள்ள அறியாமையையும் புன்மையையும் அகற்றி, தெய்வ பக்தியையும் தண்ணளியையும் அவர்களிடத்தில் பெருக்கி, நன்னடக்கையையும் மானத்தையும் அவர்கள்பால் பொருத்தவல்லது கல்வியாதலால், அது அருமையான ஸஞ்சீவி. இதுபற்றியே, பொய்

யாமொழியார், "கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்து இரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்றார். முனைப்பாடியாரும்,

"எப்பிறப்(பு) ஆயினும் ஏமாப்(பு) ஒருவற்கு
மக்கள் பிறப்பில் பிறி(து) இல்லை,—அப்பிறப்பில்
கற்றலும், கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின்."

என விண்டார். ஔவையும், "ஓதாதார்க்(கு) இல்லை உணர்வொடும் ஒழுக்கம்" என்றதை நாம் கவனித்தல் நன்மை பயக்கும்.

எனினும், நாம் நன்மை தரவல்ல நூல்களையே தேர்ந்தெடுத்துக் கற்கவேண்டும்; ஏனெனில், நாம் புஸ்தகங்களை வாசிக்கும்பொழுது நாம் ஏட்டுத் தொகுதிகளோடன்று, அவ்வேட்டுத் தொகுதிகளில் பல விஷயங்களை அடக்கின மநுஷ்யரோடு நாம் ஸஹவாஸஞ் செய்கின்றோம். பெரும்பாலும், மநுஷ்யர் எப்படிச் சிந்திக்கிறார்களோ அப்படியே எழுதுகின்றனர். எப்படி எழுதுகிறார்களோ அப்படியே நடக்கின்றனர். ஆதலால், நாம் ஸத்குணர் எழுதிய நூல்களை வாசிக்கையில் பாலோடளாய நீர் நீராய் நிறந்தெரிந்து தோன்றாது அப்பாலோடு ஒத்தல்போலவும், மலர்தொடுத்த வாழைநார் மணம்பெறுவதுபோலவும் நாம் நம்சிறுமையை இழந்து அப்பெரியார்பெருமையைப் போர்த்துக்கொள்ளத்தகுந்த யோக்யராவோம். நீர்மையுடையவரல்லாத கயவராக்கிய ஏட்டுத் தொகுதிகளிலுள்ள வாக்யங்களை வாசிக்குங்கால் நாம் அக்கயவரோடு கூடுகின்றோமாதலின், பன்றியுடன் சேர்ந்த கன்றும் பவ்வீத்தின்னத் தலைப்படுவதுபோல் நாமும் காலக்ரமத்தில் தேய்தழிவோம் என்பது திண்ணம். அமெரிக்க தேசத்து ஜே. ஆர். மில்லர் பண்டிதர் "ஒரு கெட்டபுஸ்தகம் எழுதும்மனிதன் தூய்மையல்லாதனவான சக்திகளாலான பவனியை என்றும் நடந்துகொண்டே இருக்கும்படி நிலைபெறச்செய்கிறான்" என்றார். புஸ்தகங்கள் இவ்வளவு வல்லமையுடையன எனத் தேர்ந்தறிந்த மில்டன் என்னும் ஆங்கிலக்கவி "புஸ்தகங்கள் முற்றும் உயிரற்றவைகளல்ல" என்றார். "கண்டதைக்கற்க பண்டிதனாவான்" என்னும் முதுமொழி எதிர்மறைப்பொருள் தருதல் காண்க. எனவே, நாம் ஸ்நேஹிதரைத் தெரிந்துகொள்வதில் கொள்ளும் ஜாக்ரதை புஸ்தகங்களைப் பொறுக்கி எடுப்பதிலும் நமக்கு இருக்கவேண்டும்.

"மருவுக மாசற்றார் கேண்மை ஒன்(று) ஈத்தும்
ஒருவுக வொப்பிலார் நட்பு."

இப்படிக் கூறியதால் 'எவ்வெந் நூல்களைக் கற்கலாம்?' 'எவ்வெவ்வற்றைக் கற்கலாகாது' என்ற கேள்விகள் பிறக்கலாம். இவற்றிற்குத் திட்டமாய் ப்ரத்யுத்தரங்கள் அளிப்பது அரிது. ஒருவர் விரும்பும் புஸ்தகங்கள் பலர்க்குத் திருப்தியைத் தரா. ஆகவே, நூல்பயில உன்னுவார் கற்றறிந்த ஆன்றோர் உதவிகொண்டு தம்மன நிலைக்குகந்த புஸ்தகங்களைத் தேர்ந்தெடுத்துக் கற்கவேண்டும்.

(இன்னும் வரும்.)

தா. ஸா. நேசமணி.

## இலக்கணவாராய்ச்சி.

[தமிழ் மாணவரொருவர் எழுதியது.]

"சித்திர வண்ண, நெடியவுங் குறியவு நேர்ந்துடன் வருஉம்" என்னுந் தொல்காப்பியச்செய்யுளியற் (222) சூத்திரத்திற்கு உரை செய்த மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியரும் "நிரனிறை முதலிய" என்னும் யாப்பருங்கலவிருத்தி ஒழிபியற் (2) புறனடைச் சூத்திரவுரையில், "அம்மை முதலிய வாயிரு நான்மையும், வண்ணமும்" என்னும் பகுதிக்குக் குணசாகரமுனிவரும் "சித்திர வண்ணமாவது நெட்டெழுத்துங் குற்றெழுத்



தும் ஒப்பவிராய்வரும்" என்று பொருள் கூறியிருத்தலைப் பதிப்பாசிரியரிருவரும் அறிந்து வைத்தும் "ஊர்வாழி" என்னும் உதாரணச் செய்யுளை ஏட்டுப்பிரதியிலுள்ளவாறே ஒழுங்காகப் பதிப்பிக்க அறியாது மனம்போனவாறு இரித்து மாறுபடப் பதிப்பித்துள்ளார்கள்; ஆயினும், உரையாசிரியர் இருவர் கருத்தையும் தமிழ்மக்கள் விளங்க அறிந்து உவக்கும் வண்ணம் ஈண்டு வெளியிடலாயிற்று:—

"ஊர வாழி யூர தேர
தார வாசி (1) பேர சேரி
(2) கார வேரி ரைய வாரி
பீர நீர தோழி தோளே."

(பி-ம்.) (க) ஏர சேரி, கார வேறிரைய. (உ) (1) காரிரையவாரி. (2) சாரலிதொயவாதிபீர.

## The Lost Will.

By Mr. M. S. Krishnasamy Iyer.

## காணமற்போன மரணசாஸனம்.

### 10-ம் அத்தியாயம்.

பரீக்ஷை முடிந்ததும் நீலகண்டன் தனது மாமன் ஊருக்குப் புறப்பட்டான். அவன் புறப்பட்ட இரண்டு நாட்களுக்குமுன் துரைசாமி வீட்டுக்குப்போய் பார்வதியைப் பார்த்தான். பார்வதியின் கலியாணம் இன்னும் நிச்சயமாகவில்லை. பல்வரன்கள் வந்துகொண்டிருந்தன. ருக்மணியம்மாளுக்கு மாத்திரம் பார்வதியை நீலகண்டனுக்கே கொடுத்துவிடவேண்டுமென்றிருந்தது. சாம்பசிவ ஐயரோ பல விதங்களிலும் மனங்கலங்கியிருந்தார்; நீலகண்டன் பரீக்ஷையில் தேறிவிட்டால், தக்கவர்களைக் கொண்டு சிபார்சு செய்வித்து அவனுக்கு ஒரு வேலையை ஸம்பாதித்துக் கொடுத்து, அவனுக்கே தமது பெண்ணையும் கொடுத்துவிடலாமென்றிருந்தார். ஆனால், அதற்குள் வேறு ஏதாவது நல்ல வரன் கிடைத்தாலும் பார்த்துக்கொள்ளலாமென்றிருந்தார். ராமய்யரிடமிருந்து வந்த கடிதம் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. அவரிடமிருந்து ஜாதகமும் வந்தது. ஆனால், இப்பொழுது முதற்கொண்டே நீலகண்டனுக்குக் கல்யாணம் செய்துவைப்பது தமது தங்கைக்கு இஷ்டமில்லையென்று தெரிவித்திருந்தார்.

சுந்தரமய்யரிடமிருந்து இரண்டு கடிதங்கள் கிடைத்தன. முதலில் வந்த கடிதத்தில் தாம் உயில் விஷயமாய்ச் சில விசாரணைகள் செய்து வருவதாயும், பிறகு வந்த கடிதத்தில், தம்மால் ஒன்றும் செய்வதற்கில்லையென்றும் அதைப் பற்றி முயற்சிப்பது வீண் என்றும் அவர் எழுதியிருந்தார். அக்கடிதங்கள் கிடைத்ததும், நீலகண்டனும் துரைசாமியும் இனி உயில் விஷயத்தில் கவலைகொள்வதில் பிரயோஜனமில்லையென்று அதைத்தங்கள் மனத்தினின்று நீக்கிவிட்டார்கள்.

நீலகண்டன் ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் அவன் மாமன், மாமி, தாயார் முதலானவர்கள் அவனை அன்புடன் வரவேற்று உபசரித்தார்கள். அவன் மாமிகூட அவனிடத்தில் அதிகப் பிரியங்காட்டினாள். அவன் ஊருக்குவந்து சில நாட்களானதும், சுந்தரம்மாளுக்கு முறை ஜ்வரம் கண்டது. ஸாதாரண ஜ்வரமாயிருக்குமென்று ஸ்வல்பமாக் வைத்தியம் செய்யப்பட்டு வந்தது. அதில் ஒன்றும் பலிக்கவில்லை. பக்கத்தூர் வைத்தியனைக்கொண்டு வைத்தியம் செய்வித்தும், அவள் தேகம் மெலிந்துகொண்டேதான் வந்தது. வரவர சுந்தரம்மாள் தேகம் துரும்புபோலாயிற்று. அற்ப காரியத்தைக் கூடச் செய்ய அவளுக்குச் சக்தியில்லாமலிருந்தது. அவளுடைய அந்திகாலம் இந்தவாரமோ அடுத்தவாரமோ என்று எண்ணும்படியிருந்தது. அவள் படுத்தபடியேதான் இருந்தாள்.

இந்தக் கஷ்டத்தோடு, தன் புத்திரன் நிர்க்கதியாகிவிடுவானோ வென்ற எண்ணம் அவளை வருத்திற்று; அவனுக்குக் கல்யாணம் செய்வித்துப் பார்க்கக் கொடுத்துவைப்போமா என்று ஏங்கினாள். தன் உடன்பிறந்தான் நீலகண்டனை ஆதரிக்கமாட்டானென்ற பயம் அவளைச் சூழ்ந்துகொண்டது.

இப்படி அவள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கையில், கல்யாணபுரத்தில் ஒரு வைத்தியர் இருக்கிறார் என்றும், அவர் மகா சமர்த்தர் என்றும் ராமய்யர் கேள்விப்பட்டார். அங்கே சுந்தரம்மாளை அழைத்துக்கொண்டுபோய் வைத்தியம் பார்க்கிறதென்று நிச்சயித்துத் தாமும் தமது மனைவி, சுந்தரம்மாள், நீலகண்டன் ஆகிய எல்லோருமாகப் புறப்பட்டு அவ்வூர் போய்ச்சேர்ந்தார்கள். குப்பா சாஸ்திரிகள் அவ்விடத்தில் அவர்களுக்கு வெகு ஆதரவாயிருந்தார். அவருக்கு அதிக வயதாகிவிட்டதென்றாலும், நீலகண்டன் மேலுள்ள வாஞ்சையால் வைத்திய விஷயமாய் வெகுவாய் அலைந்தாரென்று சொல்லவேண்டும். அவ்வூர்ப்பழக்கம் அதிகமில்லாத ராமய்யரும், நீலண்டனும் குப்பாசாஸ்திரிகள் இல்லாவிட்டால் திண்டாட வேண்டியிருக்கும். அவ்வூர் ஸ்திரீகளுள் பலர் சுந்தரம்மாளுக்குப் பலவகைகளிலும் உதவி செய்தார்கள். அவர்களுள் சுந்தரத்தினிடம்—அவள் பாக்கியவதியாயிருந்தபோது—வாங்கிச் சாப்பிட்டபேர்கள் அநேகர். அவளுடைய குணத்துக்குச் செய்தபேர்கள் அநேகர்.

நடேசய்யர் வைத்தியத்தில் பேர்போனவர். அவர் பார்க்காத வைத்திய நூல்கள் எவையுமில்லையென்று எல்லோரும் சொல்லிக்கொண்டார்கள். அவருக்கு மாந்திரீகமும் கொஞ்சம் தெரியுமாம். ஜோதிஷத்திலும் கொஞ்சம் பரிச்சயம் உண்டு. வியாதிஸ்தர்களிடம் வெகு பிரியமாய்ப் பேசுவார். எட்டிக்காயைப்போல் கசக்கும் மருந்தையும் சிறுவர்கள் பிரியமாய் உண்ணும்படி செய்துவிடுவார். அவருக்குக் கைராசியுமுண்டு. அவர் ஏதோ வேண்டுதலுக்காகத் தன் தலைமயிரையும் தாடிமீசையையும் வளர்த்துக்கொண்டிருந்தார். எப்போதும் ஒரு பெரிய காவி அங்கியையே அவர் உடுத்திக்கொண்டிருப்பார். அவருக்குக் கண் சற்று சாளேச்வரமாயிருந்தபடியால், அதற்காக ஒரு கண்ணாடியைப் போட்டுக்கொண்டிருந்தார். தனிமையாகவே அவ்வூரில் அவர் வாஸம் செய்துகொண்டிருந்தார்.

குப்பா சாஸ்திரிகள் அவரைக்கண்டு சுந்தரம்மாளுக்கு வைத்தியம் செய்யும்படி கேட்டுக்கொண்டார். அவர் சாஸ்திரிகளுடன் புறப்பட்டு வந்து சுந்தரம்மாளைப் பார்த்தார். வியாதி மிகவும் கடுமையானதுதானென்றும், ஆனால் ஒரு வாரத்திற்குள் குணப்படுத்தக்கூடுமென்றும், அது தப்பினால் ஒரு மாதகாலமாகுமென்றும், அதுவரையில் எவரும் அதைரியம் கொள்ளக்கூடாதென்றும் அவர் சொன்னார். அவருடைய வைத்தியத்தில் தைரியம்தான் பிரதானமாம். தைரியமிருந்தால் எவ்வித வியாதிகளையும் போக்கிவிடலாமென்பது அவருடைய கொள்கை. ஆகையால், எந்த விதமான விசாரமும் சுந்தரம்மாள் மனதில் வைத்திருக்கக் கூடாதென்றும், எல்லா கவலைகளையும் ஈசுவரன் மேல் பாரம் போட்டுவிட்டு நிர்மலமான மனத்தோடு இருக்கவேண்டுமென்றும் வைத்தியர் கூறினார்.

இவர்களின் குடும்ப யோகக்ஷேமங்களைப் பற்றிச் சிறிதளவு குப்பா சாஸ்திரிகள் வைத்தியரிடம் தெரிவித்திருந்தார். இதனால்தான் வைத்தியர் கவலை கூடாதென்று முதலிலேயே சொன்னார். பிறகு சுந்தரம்மாளுக்கு வைத்தியர் நாலுவேளைக்கு மருந்து கொடுத்துவிட்டுத் தம் வீடுபோய்ச் சேர்ந்தார்.

வைத்தியர் வந்த சமயத்தில் நீலகண்டன் வீட்டில் இல்லை. அவன் வீடு திரும்பினதும், வைத்தியர் வந்து போனதையும் அவர் சொன்ன விஷயங்களையும் அறிந்து சந்தோஷமடைந்தான். அன்று பிற்பகல் தானே வைத்தியரை நேரில் கண்டு வியாதியைப் பற்றித் தம் அபிப்பிராயத்தைச் சொல்லும்படி கேட்க எண்ணினான். ஆனால், அவன் அவரை அன்று சாயங்காலந்தான் பார்க்க முடிந்தது. அவர் அச்சமயம் அவ்வூர்க் கால்வாயில் சந்தியாவந்தனம் செய்துகொண்டிருந்தார். அவர்தான் வைத்தியரெனக் கேட்டுத் தெரிந்துகொண்டு, நீலகண்டன் அவரையணுகி, "நீங்கள்தான் வைத்தியர் நடேசய்யர்வாளோ?" என்று கேட்டான்.

நடேசய்யர்:—ஆம். நான்தான். ஏதாவது விசேஷம் உண்டோ?

நீலகண்டன்:—காலையில் என் தாயருக்கு நீங்கள் வைத்தியம் பார்த்தீர்களே; அது விஷயமாய்க் கண்டுபோகலாமென்று வந்தேன்.

நடேசய்யர்:—என்? ஏதாவது உடம்பு சரிப்படவில்லையோ? ஆத்துக்குப் போகும்போது வந்து பார்க்கிறேன்.

நீலகண்டன்:—நீங்கள் வரவேண்டியதில்லை. மருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கிறாள். பகலில் கூட உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாள். அவள் தேஹஸ்திதி எப்படியிருக்கிறதென்பதையும், சீக்கிரத்தில் குணமாய்விடுமா வென்பதையும் கேட்கலாமென்று வந்தேன். தங்களுடைய உண்மையான அபிப்பிராயத்தை நான் எதிர்பார்க்கிறேன்.

நடேசய்யர்:—நீ இப்போது கேட்ட விஷயங்களைக் காலையிலேயே சொல்லிவிட்டேன். அவற்றைத் தவிர சொல்லுவதற்கு வேறு ஒன்றும் இல்லை. எப்படியும் தேஹம் குணமாக ஒரு மாதம் செல்லும். இதில் மனோவியாதியும் கலந்துகொண்டிருக்கிறதென்று தெரிகின்றது. வீணாகக் கவலைப்படாமலிருந்தால் சீக்கிரம் குணம் ஏற்படலாம்.

"மனோவியாதியும் உண்டுதான்" என்று நீலகண்டன் சொல்லிவிட்டுத் தன்து குடும்ப யோகக்ஷேமங்களுள் சிறிதளவு வைத்தியரிடம் தெரிவித்தான்.

"எப்படியாவது சொஸ்தப்படுத்திவிட்டால் தேவலை. எனக்கு என் தாயாரைத்தவிர வேறு கதி கிடையாது. இந்த வருஷம் எனக்குப் பரிக்ஷை தேறிவிட்டால், ஏதாவது ஒரு வேலையைப்பார்த்துக்கொள்வேன்; பிறகு பயமில்லை."

"என்னாலானதைப் பார்க்கிறேன். சீக்கிரம் குணமடையுமென்றுதான் எனக்குத் தோன்றுகிறது. கவலைப்படாமலிருப்பது நல்லது. எல்லாம் ஈசுவரன் செயலென்று இருக்கவேண்டும்."

நீலகண்டன் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான். வைத்தியரை எங்கேயோ பார்த்தாற்போலிருக்கிறது. ஆனால் நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை: அதனால் அவரிடம் அவனுக்கு ஒருவித பிரியம் ஏற்பட்டது. அவர் மகா வைதீகரென்றும், மாந்திரீகம் தெரிந்தவரென்றும் நீலகண்டன் கேள்விப்படவே, அவர்மேல் அவன் மிகுந்த விசுவாசங்கொண்டான். அவரை ஒருநாள் "எந்த ஊர்" என்று அவன் கேட்க, அவர் சேலம்ஜில்லா என்று மறுமொழி கூறினார். அவரை எங்கேயோ பார்த்ததுபோலிருக்கிறதே என்று அவன் மீண்டும் கூறினான். அதற்கு அவர், சேலம் கோயமுத்தூருக்கு வந்ததுண்டா வென்று அவனைக் கேட்டார். நீலகண்டன் அந்தப் பக்கங்களிற் போனதேயில்லை.

நாளாவட்டத்தில் சுந்தரம்மாளுக்குக் குணம் ஏற்பட்டது. இருந்தாலும், அவளுடைய மனோவியாதி மாத்திரம் அவளை விட்டகலவில்லை. பழைய கதையை நீலகண்டன் அவளுக்கு ஞாபகப்படுத்தியதுமுதல்—அதாவது உயில்விஷயமாய் அவன் கடிதமெழுதி கேட்டதுமுதல்—அவள் அதேநினைவாய்க் கவலைகொண்டிருந்தாள். என்ன சொல்லியும் அவள் மனம் அமைதியடையவில்லை.

(இன்னும் வரும்.)

எம். எஸ். கிருஷ்ணசாமி ஐயர்.

# செந்தமிழ்ச் சான்றோர்.

[பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் எழுதியது.]

பண்டைக்காலத்துச் செந்தமிழ்ச் சான்றோர்கள் இயற்றியருளிய செய்யுள்களெல்லாம் பொய்யுறு கற்பனைகளின்றி, பெரும்பாலும் உவமையணியே ஆங்காங்கு அமைந்து, இயற்கை நவிற்சியாகப் பொருந்தியுள்ளன. "நவில்தொறும் நூல்நயம்போலும்" எனும் பொய்யாமொழியார் திருவாக்கிற்கு அவற்றைச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறலாம். அத்தமிழ்க் கவிஞர் எடுத்துரைக்கும் சீரிய கருத்துக்கள் கற்போருளத்தைக் கொள்ளைகொள்வன. பிற்காலத்து ஆசிரியர்கள் சிலர் மிடுக்கான சொற்களை ஆடம்பரமாகப் பொழிந்து முடுக்கான விருத்தங்கள் பாடுவதுபோல் அவர்கள் பாடுவதில்லை. அவர்கள் நோக்கம் பொருள்வளத்திலேயேயன்றிச் சொல்லாடம்பரத்திலன்று. ஆயினும், அவர்கள் செய்யுள்களிலமைந்த சொற்கள் சுருங்கி இன்னொலியமைந்து இயற்கையாயுள்ளன. பெரும்பாலும் சொற்களெல்லாம் இரண்டுமூன்றெழுத்துக்களாலானவையே. சொற்கள் அவர்கள் காலத்தில் வழங்கியன; அவற்றுட்சில இக்காலத்து வழக்காறொழிந்தன. ஆதலின், அத்தகைய சில சொற்களுக்குப் பொருள் விளங்குதல் அரிதேயன்றி, பிறசொற்களுக்கெல்லாம் பொருள் எளிதில் விளங்கும். திரிசொற்களைப் பிரயோகித்து நடையைக் கடுமையாக்கவேண்டுமென்பது அவர்கள் கருத்தன்று. இன்னொலிக்காக அளபெடைகள் அழகாக ஆங்காங்கு வருகின்றன.

அறுவகைத் தொகைநிலைகளும் அமைந்து வருதலால், அவர்களது பாக்கள், சுருங்கச் சொல்லல் என்னும் முதன்மையழகு வாய்ந்துள்ளன. பிராசம், முற்றுமோனை முதலிய சொல்லணிகள் இயற்கையாக வருவனவே. சிரமப்பட்டு அவர்கள் அவற்றை அமைப்பதில்லை. தாம் குறித்த பொருளை இயற்கையழகு பொருந்தச் சொல்வதற்கு மோனை, எதுகை முதலியன தடை செய்வனவாயின், அவற்றைக் கைக்கொள்ளாது விடுப்பர். அங்ஙனமே, பொருள்வளத்தைக் கருதிச் சீர், தளை முதலியவற்றைப்புறக்கணித்தலும் உண்டு. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு முதலிய நூல்களில் இங்குக்குறித்த இச்சிறப்பியல்புகளை இடந்தொறும் இடந்தொறும் காணலாம். அவர்கள் இயற்கையேயே இனிமையாக எடுத்துரைப்பவர்கள் என்பதற்கு உதாரணமாக, நக்கீரர் என்னும் சான்றோர் இனிமையாக உரைத்தருளிய கார், கூதிர்க்கால வர்ணனையொன்றை இங்குச் சுருக்கமுறப் பொழிப்புரையாகக் காட்டுவோம்.

## கார், கூதிர்க்கால வர்ணனை.

மேகம், உலகமெல்லாம் குளிரும்படி தான் கிடந்த மலையை வலமாக வளைந்து எழுந்திருந்து, கார் காலத்தில் மழையைப் பெய்தது. மழை வெள்ளத்தை வெறுத்த இடையர்கள் காளைகளையும், பசுக்களையும் மேட்டு நிலமாகிய முல்லை நிலத்துக்குக் கொண்டுபோய் மேயவிட்டனர். அவர்கள் தாம் பழகிய நிலத்தை விட்டுப்போகின்ற தனிமையினால் வருத்தமுற்றனர். காந்தளிதழ்களாற் கட்டிய அவர்கள்மாலை நீர் அலைத்தலாலே கலக்கமுற்றன. அவர்கள், பெரிய குளிர்உடலை வருத்துதலால், பலருங் கூடிக் கையை நெருப்பிலே காய்ச்சி, அதிற்கொண்ட சூட்டைக் கன்னத்தில் ஒற்றிக்கொண்டார்கள்; பற்கள் பறைகொட்ட நடுங்கினர். மிருகங்கள் மேய்தற்றொழிலை மறந்தொடுங்கின.

மரங்களிலே தங்குவனவாகிய பறவைகள் காற்று மிகுதியால் மேலிருந்து நிலத்தில் விழுந்தன, பசுக்கள், மிக்க குளிரால், கன்றைக் கொடுமையாக உதைத்து, ஏற்றுக்கொள்ளாதொழிந்தன. முசுட்டையென்பதன் வெள்ளிப்பூ பொன்போன்ற நிறத்தையுடைய பீர்க்குடனே சிறுபுதர்கள்தோறும்விரிந்தன. விரை



ந்தோடின நீரினின்றும் ஒருகால்பற்றிக் கயல்மீன்கள் அற்றநீர்க்கெதிரே வருதலாலே, மழையாலே வருந்தி அது சிறிது விட்டவளவிலே எழுந்து பறந்த கொக்கின் கூட்டம் நாரைகளுடன் கரிய வண்டலிட்ட சேறு பரவிய வெண்மணலாகிய எவ்விடங்களிலுமிருந்து அக்கயல்களைத் தின்றன.

மழை பெய்தபின்னர் வெள்ளிய மேகம் ஆகாயத்தில் சிறு தூற்றலைத் தூவக்கற்றன. நெற்பயிரினின்று புறப்பட்ட கதிர்கள் முற்றி வளைந்தன. பாக்குமரத்தின் கழுத்தில் பாளை விரிந்த தாறுகளில் பசுங்காய்கள் வீங்கி இனிமையாக முற்றின. சோலைகள், குளிர்ந்த கொம்புகளை உடையவையாய், அவற்றில் ஏற்றுநின்ற மழைத்துளிகள் இடைவிடாமல் விழப்பெற்றன. தேகபலமுடைய மிலேச்சர் கள்ளையுண்டு களித்துச் சிறு மழைத்துளிக்கு அஞ்சாமல், முன்னும் பின்னும் தொங்கவிட்ட வஸ்திரங்களை உடையவர்களாய்த் தமக்கு வேண்டிய இடத்தில் திரிந்தனர். மகளிர் அந்திக்காலத்துக் கடவுட்பூஜைக்கு அழகிய தட்டிலே இட்டுவைத்த பிச்சியென்பதன் பக்குவமான அரும்பினிதழ்கள் பகற்பொழுதைக் கடந்து விரியும் சமயத்தில் பரிமளித்தலால், அந்திக்காலமென்று அறிந்தனர். [கூதிரால் இரவும் பகலும் தெரியவில்லையாதலால், அந்தப் பூமலர்வதைக் கண்டே அந்தியென்றறிந்தனர்] இராக்காலமும் பகற்காலமும் தெரியாமல் மயங்குதலால், வீட்டிலே இருக்கும் ஆண்புறாக்கள் தம் பெண்புறாக்களோடு வீதியிலே சென்று இரைதேடி யுண்ணாமல், செய்கையற்று இருப்பிடத்திலேயே பறவாதிருந்தமையால் கடுத்த கால் ஆறும்படி அதனை மாற்றி மாற்றியிருந்தன.

பெரிய வீடுகளில் சிறிய வேலைக்காரர்கள் சாந்தம்மியிலே கஸ்தூரி முதலியனவற்றைக் கூட்டி அரைத்தனர். வடநாட்டார் கொணர்ந்த சந்தனக்கல்லும், தென்றிசைச் சந்தனமும் பயன்படாமற் கிடந்தன. மகளிர் மிக்க குளிரால் தம் குழலில் மலர்மாலையிட்டு முடிக்காமல், தம் பலவாகிய கரிய மயிரில் மங்கலத்திற்காகச் சிலமலரிட்டு முடித்தல்வேண்டி, மயிர்ச் சந்தனமாகிய விறகிலே நெருப்பையுண்டாக்கி, அதிலே அகில் முதலியனவற்றைக் கூட்டிப் புகைத்தனர். ஆலவட்டம் என்னும் விசிறிகள் உறையிடப்பட்டு, சுவரில் அடித்த ஆணிகளில், சிலந்தியினது வெள்ளிய நூலால் சூழப்பட்டுத் தூங்கின. உயர்ந்த வீடுகளில் மேல் நிலத்தில் (மெத்தையில்) இளவேனிற்காலத்தில் தூங்கும் படுக்கைக்குத் தென்றற்காற்றைத் தரும் சாளரத்தில் நின்று உலாவக்கூடாமல், இரண்டு கதவும் தாளிட்டுக் கிடக்கும்படி, ஓசையுடைய சிறுதுளிகளை வாடைக்காற்று எங்கும் வீசிற்று.

இங்ஙனம் குளிர்காலமாதலால், இளையோரும் முதியோரும் கரகத்தில் தண்ணீரைக் குடிக்கவில்லை; ஆனால், தூபமுட்டியில் இட்ட நெருப்பின் வெம்மையை உண்டனர். ஆட்டத் தொழிலையுடைய மகளிர் தாம் பாடுகின்ற பாட்டை வீணை தன்னிடத்திலே கொள்ளும்படி நரம்பைச் சுருதிகூட்டுதற்குத் தொடங்கினர். ஆயின், குளிர்ச்சியினாலே இனிய குரலாகிய யாழின் நரம்பு தன்னிலை குலைந்திருந்தது. ஆதலால், அதை அவர்கள் தம் மார்பின் வெப்பத்தில் தடவிக்கொண்டு, வீணையைப் பண் நிற்கும் முறையிலே நிறுத்தினர்.

இங்குக் குறித்த கார், கூதிர்வர்ணனையில் பொருந்தாததொறுவும் இன்மையையும், அழகிய கருத்துக்கள் உள்ளம் வியக்கும்படி அமைந்திருத்தலையும் அன்பர்கள் கூர்ந்து கவனிக்க. பொருளழகையே இங்குக் குறித்தோம். சொற்சுருக்கமும், சொல்லினிமையும் அன்பர்கள் செய்யுளிற் கண்டுகொள்க. இது, நக்கீரர் பாடிய நெடுநல்வாடை என்னும் பாட்டினின்று எடுக்கப்பட்டது.

# கருவேலமரம்.

[பண்டித வி. சுப்பிரமணிய ஐயர் எழுதியது.]

(239-ம் பக்கத் தொடர்ச்சி.)

### தழைகளின் உபயோகம்.

கருவைத்தழை மிகவும் துவர்ப்புள்ளதாதலால், இத்தழை படிந்த நன்செய்ப்பயிர் நிலங்கள் மிகுந்த வலிவையடைகின்றன. ஆகவே, இம்மரத்தில் சிலவற்றை நன்செய் நிலங்களின் வரப்புக்களில் பயிரிட்டு, அவற்றின் தழைகளை வயலுக்கு உபயோகிப்பது சிறந்தது. உரத்திற்காக ஆடுகளை வளர்க்கும் வியவசாயிகளுக்கு ஆடுகளுக்குப் புஷ்டிதரும் உணவாய் இம்மரத்தின் தழை உபயோகப்படுகின்றது. வேலமரத்தின் கொழுந்துகளைச் சேகரித்து இராக்காலங்களில் தூங்கும்போது மனிதர் கண்களில் வைத்துக் கட்டிக் காலையில் அவிழ்க்க, கண்களிலுள்ள தீராத ரோகங்களெல்லாம் தீர்ந்து, அவை நல்ல பார்வையடைகின்றனவென்று வைத்திய சாஸ்திரம் கூறும்.

### முட்களின் உபயோகம்.

“கருவைக்கு முள்கட்டுவாரு முண்டோ” என்பது ஒரு பழமொழி. கருவைமரம் முள்மரமாயிருப்பதனால், இப்பழமொழி யுண்டாயிற்றென்பர். நன்றாக வளர்ந்த முட்கள் கூருள்ளவையாய் நீண்டிருக்கும். ஒரு விரலளவு நீண்ட முட்கள் அடிமுதல் நுனிவரையில் நன்றாக வெளுத்திருக்கும். இம்முட்களுடன் கூடிய கிளைகளைத் தறித்துத் தோட்டங்கள், வயல்கள் முதலியனவற்றிற்கு வேலியாக உபயோகிக்கலாம். இத்தகைய வேலிகள் போட்ட இடங்களிலெல்லாம், முட்கள் நிரம்பியிருக்கும். இவ் வேலிகளை வருஷந்தோறும் புதுப்பிக்கவேண்டும்.

### பற்குச்சிகள்.

இம்மரமானது நார் மிகுதியாகக்கொண்டது. ஆகவே, இந்தியவாசிகள் இதன்குச்சிகளை ஒடித்துப் பற்களினால் கடித்து, பிரஷ் (Brush) போல ஆக்கிக்கொண்டு, அவற்றால் தம்பற்களைத் துலக்குகின்றார்கள். பட்டணங்களில் இப்பற்குச்சிகளுக்கு மிகுந்த கிராக்கியுண்டு. இப்பற்குச்சியைக்கொண்டு, பற்களைத் துலக்குவதனால் தந்தரோகங்கள் பல நீங்கித்தந்தங்கள் வலிவை அடைகின்றன.

### மரப்பட்டையின் உபயோகம்.

வேலமரத்திலிருந்து பட்டைகளை எடுத்து உலர்த்தி, உரலிலிட்டு இடித்து, வஸ்திரகாயம் செய்து, கற்பூரம் முதலிய சில கடைச்சரக்குகளைப் பொடி செய்து சேர்த்தால் சிறந்த பற்பொடியாகின்றது. சில சமயங்களில் வேலமரத்தின் காய்களும் பொடிசெய்யப்பட்டு மேற்சொன்ன பற்பொடியோடு சேர்க்கப்படுகின்றன.

இம்மரத்தின் பட்டைகள் மிகவும் துவர்ப்பாதலால், அவை தோல்பதனிட மிகவும் உபயோகமாகும். இப்பட்டைகளைக் கொண்டு பதனிட்ட தோல்கள், வலிமையாயும், வழவழப்பாயும், கருநிறமாயும் இருக்கின்றன.

### மரத்தின் உபயோகம்.

வேலமரமானது இந்திய வியவசாயிகளுக்கு மிகவும் இன்றியமையாததாகும். வியவசாயக் கருவிகள் அனைத்தையும் குடியானவர்கள் இம்மரத்தினாலேயே செய்துகொள்வார்கள். வியவசாயிகளின் கலப்பை, ஏர்க்கால், பழுவு முதற்கொண்டு எல்லாக் கருவிகளும் இம்மரத்தைக் கொண்டே செய்யப்படுகின்றன. இம்மரத்திலிருந்து அறுத்த பலகைகள், வீடுகள் கட்டும்போது பலவழிகளில் உபயோகப்படுகின்றன. நிலத்தைச் சமன்செய்ய உபயோகிக்கப்படும் பரம்படிக்கும் பலகைகளும் இவற்றைக் கொண்டு செய்யப்படலாம். இம்மரத்தின் அடிப்புறம் சுற்றளவில் கொஞ்சம் பருத்தும் வலுத்துமிருந்தால், இதனால் உரல்களும் குந்தாணிகளும் செய்யப்படலாம்.



### மரத்தின் பால்.

வேலமரத்திலிருந்து ஒருவகைப் பால் வடிந்து மரத்தின்மீதே கெட்டியாய்விடுகின்றது. மிகவும் செழுமையான மரங்களினின்றே இப்பால் வடிந்து, சிவப்பான பளிங்கு நிறத்தை அடைந்துமரத்தின்மீதேஉறைந்துவிடுகின்றது. இப்பால் பிசின்போன்று பலகாரியங்களுக்கும் உபயோகப்படுவதனால், இம்மரங்களைக் காடாக வளர்ப்போர் கத்தியினால் இப்பிசினைச் சுரண்டிச்சேர்த்து, வியாபாரப் பொருளாக்கி அதினின்றும் மிக்க ஊதியம் பெறுவார்கள். மரத்தினின்று இப்பிசினை எடுக்கும்போது அழுக்கும் மரச்சக்கையும் அதோடு வருவதனால், உபயோகிப்பவர்கள் அதை ஜலத்தில் ஊறவைத்து வடிகட்டி எடுத்துக்கொள்வார்கள். அப்போது அது சுத்தமான பிசினாகின்றது. கவர்ன்மெண்டுசாலைகள் பலவற்றுள்ளும், இன்னும் வியாபாரச் சாலைகளிலும் உறைகள் செய்தல் முதலிய காரியங்களெல்லாம் இதைக்கொண்டே செய்யப்படுகின்றன. இங்கி காய்ச்சும்போதும் அதில் கொஞ்சம் வேலம் பிசின் சேர்க்கப்படுவதுண்டு.

### மாடுகளுக்கு உணவு.

வேலமரத்தின் தழைகளையும் காய்களையும் மாடுகளும் விரும்பி உண்கின்றன. இளைத்துப்போன பசுமாடுகள் இவற்றை ஆகாரமாக உட்கொண்டால், பருத்திக்கொட்டை உட்கொண்டவைபோல் நன்கு வலிவையடைந்து சதைப்பற்றை அடைகின்றன. இவ்விதைகளை உண்ணும் மாடுகள் மிகுதியான பாலைக் கொடுக்கின்றன. அதினின்று அதிகமான வெண்ணெயும் உண்டாகின்றது. வேலங் காய்களை உட்கொண்ட மாடுகள் சாணத்துடன் அவ்விதைகளைக் கழிக்க, அவ்வுரத்துடன் சேர்ந்த அவை மிக்க வீர்யத்துடன் செடிகளாய்க் கிளம்புகின்றன.

### வெள்வேலன்.

வெள்வேல மரத்தின் தழைகள் காய்கள் முதலியன கருவேல மரத்திற்கு இருப்பன போலவே யானாலும், மரத்தின் பட்டைகள் மட்டும் வெளுத்திருக்கும்.

கருவைமரங்கள் பயிரிடுபவர்கள், மரங்களில் அதிகம் முட்கள் ஏற்படாவண்ணம் காத்துக்கொள்வதுண்டு. இதுபற்றியே, ஆடுகள் தின்று கழித்த விதைகளினின்று உண்டாகும் மரங்களில் முட்கள் அதிகமுண்டாகாவென்ற கருத்துக்கொண்டு அவ்விதைகளையே ஜனங்கள் நாடுவது வழக்கம்.

வேலன்மரங்களில் கறையான்கள் சுலபமாய்ப் பிடிக்கக்கூடியதென்று சொல்லப்படுகின்றது. இக்காரணம்பற்றியே, இம்மரங்களில் கீல்கள் பூசியும், வேறு ஜாக்கிரதைகள் செய்தும் வருகின்றார்கள்.

### முடிவு.

வேலமரத்தின் கிளைகள் முதலியன ஜனங்களுக்கு உயர்ந்த விறகாக உபயோகப்படுகின்றன. செங்கல்கள், ஓடுகள் முதலியன சூளை போடுவதற்கும் இம்மரத்தையே அதிகமாக ஜனங்கள் உபயோகிக்கின்றார்கள். செழுமையாய் வளர்ந்த வேலமரமானது கடைசியில் நல்ல விலை போகின்றது. ஆராய்ந்து பார்ப்போமானால், விசேஷமாய் இம்மரமானது குடியானவர்களுக்கு நல்ல லாபத்தைக் கொடுக்கக் கூடியதாகவே யிருக்கிறதென்று புலப்படும்.

---

## Topics from Periodicals.

## பத்திரிகை ஆராய்ச்சி:

### அசையும் சித்திரங்களைக் காண்பது கண்களுக்குக் கேடுதியா ?

ஸமீபத்தில் வெளியான “வைத்திய கலாநிதி” சஞ்சிகையொன்றில் ஒரு நிருபர், அசையும் சித்திரங்களைக் காண்பது கண்களுக்குக் கெடுதி செய்யக்கூடியதாவென்றும் விஷயமாய் ஓர் வியாசம் எழுதியிருக்கிறார். அதை இங்குக் குறிப்பிடுகிறோம்.

மூளை-நரம்பு மண்டலங்களுடைய நிலைமையும் கண்

களும் அனுகூலமான ஸ்திதியில் இருக்கும்வரையில் அசையும் சித்திரங்கள் (பயாஸ்கோப் படங்கள்) நெடுநேரம் எழுத்துக்களைப் பார்த்துப் படிப்பதனாலுண்டாவதைப்போல அவ்வளவு அதிகமான மழுக்கத்தைக் கண்களுக்கு உண்டாக்குவதில்லை. அசையும் சித்திரக் காட்சிகளை அடிக்கடி பார்த்து வருபவர் சிலர் அக்காட்சி கண்பார்வையைக் குறைத்துவிடுவதாகக் குறை கூறுகிறார்கள்; ஆனால், அவர்களுக்கு ஏற்கெனவே நேத்திரங்களில் ஏதேனும் கோளாறு ஏற்பட்டிருப்பதாய் அனுபவத்தில் தெரிந்துகொண்டிருக்கிறோம். கண்கள் சரியான நிலைமையிலிருக்கையில் அசையும் சித்திரங்களைப் பார்த்துவிட்டு மீண்டும் இதர உருவங்களைக் கண்கள் மழுக்கமின்றி அல்லது கலக்கமின்றி நன்றாய் உற்றுநோக்கும் சக்தியுடையவைகளாயிருக்கும். கண்களின் அமைப்பில் எவ்விதக் கோளாறும் ஏற்படாமலிருக்கையில் அம்மனிதன் ஒருவாரத்தில் நாலைந்து முறை இக்காட்சியை நெடுநேரம் (ஒவ்வொரு தடவையிலும் நான்குமணி அவகாசம் வீதம்) பார்த்துவந்தாலும், அவன்தன் கண்களில் எக்கெடுதியும் ஏற்படாமல் சுகமாயிருக்கக்கூடும். ஆகவே, ஆரோக்கிய நிலைமையிலுள்ள கண்களையுடையவன் அசையும் சித்திரங்களைக் காண்பதில் நேத்திரம் கோளாறடையுமென்பதற்கு அஞ்சவேண்டியதில்லை.

எவருக்குக் கண்களின் ஆரோக்கிய நிலைமை ஏற்கெனவே ஒருவாறு சீர்குலைந்திருக்கின்றதோ, அவர்கள் அசையும்சித்திரங்களைக் காண்பதனால் கண்பார்வை மிகவும் மந்தப்படும்; தொடர்ந்தாற்போல் அக்காட்சியைப்பார்த்து வருவதனாலே அவர்களுக்குக் கண்களில் விகாரமும் கெடுதியும் அதிகப்படும். அத்தகையோர் நெடுநேரம் சித்திரத்தையே உற்று நோக்கி வருவதனால் நேத்திரப் பார்வை மிகவும் மந்தமாகப்போய், கண்களில் அவக்குறிகள் அதிகரித்து விடுவதாகவும் கண்டிருக்கின்றோம். இவ்விதச் சித்திரங்களையேயல்ல—ஆனால் எப்பொருளையுமே வெகுநேரம் அசைவின்றி உற்று நோக்குவது நேத்திரபலம் குன்றியவர்க்கு ஆகாது; ஆனால், அவர்கள் சித்திரங்களையும் வேறு விஷயங்களையும் மாற்றி மாற்றிக் கண்ணோக்கி வருவது அனுகூலமாயிருக்கும்; ஐந்து நிமிஷத்துக்கு ஒரு முறை இரண்டுநொடி நேரமேனும் வேற்று உருவங்களை மாற்றி மாற்றிப் பார்த்துவருவதனால் த்ருஷ்டியின் கூர்மை மழுங்காமலிருக்கும். இடையிடையே கண்களைச் சற்று மூடிக்கொள்வது நலம்.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவனது கண்பார்வைக்குள்ள சக்திக்கு ஒவ்வொரு விதமான பரிமிதி பிரத்தியேகமாய் உண்டு. ஓர் அசையும் சித்திரத்தைப் பார்த்துக்கொண்டேயிருக்கையில் தோற்றம் மந்தப்படுமானால் (அல்லது விகாரப்படுமானால்), அப்பொழுது கண்களில் ஏதோ கோளாறு ஏற்கெனவே ஏற்பட்டிருப்பதாய்த் தெரிந்துகொள்ளலாம். அப்படிக்கில்லையேல் சித்திரத்தில் ஏதோ வித்தியாசம் அமைந்திருக்கவேண்டும்.

அசையும் சித்திரத்தை நீடித்த நேரம் இடைவிடாது பார்த்துக்கொண்டிருக்கும் ஒருவன் கண்களில் எவ்வித ஸௌகரியக் குறைவும் ஏற்படாமலே அவ்விஷயத்தைக் கவனித்து வருவானானால், அவனுடைய கண் மிகவும் நல்ல ஆரோக்கிய நிலைமையில் இருப்பதாகக் கருதலாம். நாம் விசேஷமாய் இக்காட்சிகளை வழக்கமாகக்கண்டுவரும் நபர்களைக் குறிப்பிட்டு விசாரித்து வந்ததில், அசையும் சித்திரங்களைப் பார்த்தால் எவருக்கும் தீங்கு நிரந்தரமாக ஸம்பவித்துவிட்டதென்று தெரியவில்லை.

இக்காலத்தில் அசையும் சித்திரங்களுடைய காட்சியோ உலகமெல்லாம் மிகுதியாய் வியாபித்து விட்டது. இக்காட்சியினாலுண்டான நன்மை தீமைகளை ஒருவாறேனும் தெரிந்துகொள்வது முடியாத காரியமன்று. உண்மையைக் கவனிப்போமானாலும், இப்பொழுது உலகில் தினந்தோறும் ஒருகோடி ஜனங்களுக்குக் குறையாமல் இக்காட்சியைப் பார்த்துக் களித்து வருகின்றார்கள். இவர்களுள் ஒருவராவது அச்சித்திரக்காட்சியைப் பார்த்ததனால் இன்னவிதமான தீமை ஸம்பவித்ததென்று குறிப்பிட்டுக் குறை கூறவில்லை. கண்பார்வையில் குறிப்பிட்ட கோளாறு எதுவும் அதனால் நேர்ந்ததாக நேத்திர ரோக நிபுணர்களும் விளம்பரப்படுத்தவில்லை. கண்பார்வையில் ஏற்கெனவே கோளாறுள்ளவர்களுக்குச் சிறிய சூரிய வெளிச்சமும் ஸௌகரியக் குறைவை உண்டுபண்ணுவதுபோலவே, சித்திரக் காட்சியும் ஏதேனும் கஷ்டமுண்டுபண்ணுமானால், அது நேத்திரத்தின் குற்றமேயன்றிக் காட்சியின் குற்றமன்று.

## பொதினா.

பொதினாச் செடியைச் சிலர் புதினாவென்று கூறுகிறார்கள் இது உற்பத்தியாகும் விதம் ஆச்சரியமாகவேயிருக்கின்றது. அதன் இலை மிகவும் உபயோகமானது. ஆகவே, எல்லோரும் இதை உணவோடு சேர்த்து உபயோகிக்கிறார்கள். "ஜனாபிமானி" யில் ஒரு நிருபர் இச்செடியைப்பற்றி ஒரு வியாசம் எழுதியுள்ளார். இச்செடியின் உபயோக விஷயமாய் அவர் குறிப்பிட்டுள்ள சில முக்கிய அம்சங்களை இங்கு எழுதுவோம்.



இந்த இலையை அதிகமாகக் கொண்டாடுகிறவர்கள் மகம்மதியர்களே. நாள்தோறும் அவர்கள் தங்கள் உணவுடன் இதைச்சேர்த்து உட்கொள்ளுகிறார்கள். மகம்மதியர் கிச்சிலிச்சோறு பக்குவம் செய்யும்போது இதன் இலையை அதிகமாக உபயோகிக்கிறார்கள்.

இதை உண்பதனால் ஜனங்கள் அடையும் நன்மைகள் பல. இது தேக ஆரோக்கியத்துக்கு இன்றியமையாதது. வைத்தியத்தில் இது சிரேஷ்டமாகக் கொண்டாடப்படுகின்றது. வாயுரோகம், காய்ச்சல், பித்த அரோசிகம் முதலியவைகளுக்கு பொதினா சிறந்த மருந்தாக உபயோகப்படுகிறது. இதன் இலையை உபயோகிப்பதனால் ரத்த விருத்தியும், பித்த சாந்தியும், ஜீர்ணசக்தி முதலான குணங்களும் உண்டாகின்றன. ஆகையால், ஐரோப்பியர்கள் இதை அதிகமாக உபயோகிக்கிறார்கள். ஸுலபத்தில் ஜீர்ணமாகாத மாம்ஸம் முதலிய உணவுகளை இந்த இலை அதிக சீக்கிரத்தில் ஜீர்ணிக்கச் செய்கிறது.

ஹிந்துக்கள் இந்த இலையை நெய்யில் வதக்கி உப்பு, புளி, இஞ்சி, மிளகாய், கருவேப்பிலை முதலியவைகளைச் சேர்த்து அரைத்துப் பித்த சாந்தியும் ஜீர்ணசக்தியும் உண்டாவதற்கு உணவுடன் கலந்து சாப்பிடுகிறார்கள். வைத்தியர்கள் இந்த இலையைப் பிழிந்து சாறெடுத்து, வைத்திய முறைக்கேற்ற சில சரக்குகளைச் சேர்த்து, க்ருதம் (நெய்) செய்கிறார்கள். இந்த நெய் வியாதிஸ்தர்களுக்கு மிகவும் உபயோகப்படுகின்றது. இதைச் சாப்பிடுகிறவர்கள் மனஸ்ஸந்துஷ்டியுள்ளவர்களாயும், திடகாத்திரர்களாயும், ஆரோக்கியமுள்ளவர்களாயுமிருக்கிறார்கள்.

ஐரோப்பியர் இதன் சாற்றை உபயோகித்து, பெப்பர்மிண்டு என்னும் மிட்டாய் செய்து ஜனங்களுக்குப் பயன்படும்படி விற்கிறார்கள். இந்த இலையின் சாற்றை ஜலரூபமான பெப்பர்மிண்டு மிக்சர் ஆகச்செய்து, பித்தசாந்திக்கும் மற்ற வியாதிபரிகாரத்துக்கும் உபயோகிக்க வைத்தியசாலையில் வைத்திருக்கிறார்கள்.

## புகையிலையினால் வருங் கேடு.

புகையிலைச் சுருட்டு உபயோகிப்பதனால் அநேக விதமான தீங்குகள் விளையுமென்பதில் யாதொரு ஸந்தேகமுமில்லை. புகையிலையைச் சுருட்டாகவோ, வேறுவிதமாகவோ உபயோகித்துவருபவர் பலமான வேலை செய்யும்போதும், மல்யுத்தம் முதலிய விளையாட்டுவேலைகள் செய்யும்போதும் இருதயம் பலவீனப்பட்டு, அவர்கட்குச் சிலசமயம் மயக்கம் அல்லது மூர்ச்சையுண்டாகும். எவ்வளவு பலிஷ்டர்களானாலும், புகையிலையை உபயோகித்து வந்தார்களானால், அவர்களுடைய சத்வம் ஒடுங்கிப் பார்வைக்கு மட்டும் ஒழுங்கான மனிதர்களாய்த் தோற்றுவார்கள். அதிலும் சிறுபிள்ளைகள் இக்கெட்ட வழக்கத்தினால் பெருத்த தீங்குக்கு உள்ளாகிறார்கள். புகையிலையை உபயோகிக்காத வாலிபர்களும் சிறுவர்களும் ஓடியாடியுழைத்துவருவதுபோல் புகையிலையை உபயோகிப்பவர்கள் ஓடியாட முடியாது. பந்தய விளையாட்டுக்களில் இவர்கள் புகையிலைப் பழக்கமில்லாதவருடன் போட்டிபோட்டுக்கொண்டு விளையாடி, இறுதியில் அபாயகரமான தீங்குகட்கு வீணில் ஆளாகிறார்கள். இவர்களுக்கு ஜீர்ணசக்தியும் சீரழியும். இவர்களுடைய இருதய நடையும் அவ்வாறு வேலை செய்யும்போது வெகு விரைவாகப் படபடத்து ஒடித் திடீரென்று இறுதியில் நின்றுவிடவுங் கூடும். இதனை உபயோகிப்பவருடைய மூளையும், நரம்புமண்டலங்களும் தளர்ச்சியடையும். ஞாபக சக்தியும் குன்றிப்போகும் இவருடைய சரீரம் எவ்வித ரோகத்திற்கும் காலக்கிரமத்தில் இடங்கொடுத்து உடலைச் சீர்கெடுத்துவிடும். தசைநார்களுக்கு உள்ள வலிமையைக் குறைத்துவிடும். புகையிலையை உபயோகிக்கும் வாலிபரிடம் இவ்விஷயங்களை எடுத்துரைத்தாலும், அவர்களால் அவ்வழக்கம் நிறுத்த முடியாததாக இருக்கின்றது. சிறுகச்சிறுக அவ்வழக்கத்தைக் குறைத்துக்கொண்டு வருவது நலமாகும். உபாத்தியாயர்களும் மாணவர்களிடம் இந்தத் துர்ப்பியாசத்தைக் காணும்போது கண்டித்தும் தண்டித்தும் விலக்குவது நலமாகும். பெற்றோரும் புத்திரர்களிடம் கவனம் செலுத்தி இந்தக் கெட்ட வழக்கத்தை அவரிடத்தினின்று நீக்கிவிடுதல் நலமாகும்.—வித்தியாபாநு.

## Books and Reviews.

## புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

### புஸ்தக வரவு.

நாகரிகம்?: சென்னை சே. மு. ராஜா செட்டியார் அவர்களால் இயற்றப்பட்டது. விலை ரூ. 2.

நடராஜன் நாடகம் சென்ற வைபவம்: ச. தா. மூர்த்தி முதலியார் அவர்களால் வெளியிடப் பெற்றது. விலை அணா 8.

மெல்லியலார் சுதந்திரம்: காஞ்சீபுரம்-வாசுதேவ ஐயர் எழுதியது. விலை அணா 6.

மேற்கண்ட புஸ்தகங்களின் மதிப்புரை அடுத்த பத்திரிகையில் வெளியாகும்.

# The Diamond Ring.

BY MR. S. NARASIMHACHARIAR B.A., B.L.

## வைர மோதிரம்.

### 1-ம் அத்தியாயம்.

### ஜமீன்தார்.

ஏறக்குறைய முந்நூறு வருஷங்களுக்கு முன்பு காஞ்சீபுரத்துக்கு மேற்கே நூறுமைல் தூரத்திலுள்ள பனைப்பாளையம் என்னும் ஒரு பெரிய கிராமத்தில், சொக்கநாதர் என்ற பெயருள்ள ஜமீன்தார் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த பரோபகாரி. பனைப்பாளையமும், அதைச்சுற்றியுள்ள நாற்பது ஐம்பது கிராமங்களும் அவருக்குச் சொந்தமாயிருந்தன. கொஞ்சம் ஸொத்துள்ளவர்கள் அதிகமான ஆஸ்தியையுடையவர்களைக் கண்டு பொறாமைகொள்வது போலல்லாமல், இவர் நற்குணமுடையவராய் தெய்வபக்தி மிகுந்துவிளங்கினார். இவர் சிறந்த பரோபகாரியாகையால், தீயசிந்தனைகள் கொஞ்சமும் இன்றி, தமது கீழிருந்த குடியானவர்கள் ஸுகமடைந்து திருப்தியோடு வாழ்ந்தால் அதுவே போதுமானதென்று எண்ணி, அவர்களிடமிருந்து குறைந்த வரிகளையே வாங்கிவந்தார். பணத்தில் இவருக்குப் பேராசை இல்லாததனால்,மென்மேலும் இவருடைய செல்வம் பெருகிற்று. தகுந்த காலத்தில் மழைபெய்து வந்தபடியால், பயிர்கள் செவ்வையாய் விளைந்தன. குடிகளும் ஸந்துஷ்டியாயிருந்தார்கள். சிற்சில ஸமயங்களில் மழை காலத்தில் பெய்யாததனாலாவது, வெள்ளப் பெருக்கினாலாவது, ஆறு ஏரி முதலியன கரைபெருகி நிலங்களைப் பாழாக்கினாலாவது நிலங்கள் பலன்தராவிட்டால், அவர் அந்த வருஷங்களில் குடிகளிடமிருந்து வரி வாங்குவதில்லை. இத்தகைய நற்குணங்கள் அவரிடம் அமைந்திருந்தபடியினால், குடிகள் அனைவரும் அவரிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டி, அவரைத் தமது தந்தைபோலக் கௌரவித்து வந்தார்கள்.

அவருடைய நற்குணங்களை மதித்து, கடவுள் அவருக்கு ஸகல பாக்கியங்களையும் தந்ததோடு, புத்திர பாக்கியத்தையும் அளித்திருந்தார். இவருடைய மனைவி காந்திமதியம்மாளும், தமது கணவனுடைய மனதிற்குத்தக்கபடி நடந்துவந்தாள். இவர்கள் தமது ஏகபுத்திரனை அம்பலவாணனிடத்தில் எவ்வளவு அன்புபாராட்டி வந்தார்களோ, அவ்வாறே அப்புத்திரனும் பெற்றோர் சொல் தவறாது நடந்துவந்தான்.

சொக்கநாதருக்கு ஒரு ஸகோதரி இருந்தாள். அவள் இவரைக் காட்டிலும் பதினைந்து பிராயம் பெரியவள். சொக்கநாதருக்கு மூன்று வயதாகுமுன்னரே அவருடைய தாய் காலஞ்சென்றமையால், அவருடைய சகோதரியே அவரை எடுத்து வளர்த்தாள். இக்காரணம்பற்றி அவர் அவளைத் தன் தாயைப்போல் பாவித்துவந்தார். அந்த அம்மாளும் ஒரு பிள்ளையைப்பெற்று, அப்பிள்ளையின் ஆறாம் வயதில் இறந்துபோனாள். மற்றொரு வருஷத்திற்குள் இந்தப் பிள்ளையின் தந்தையும் இறந்துபோனமையால், சொக்கநாதரே, இப்பாலகனை வளர்த்து, தன்பிள்ளை வேறு இக்குழந்தை வேறு என்று எண்ணாமல், இருபிள்ளைகளையும் தம் இருகண்களைப்போலவே பாவித்துவந்தார்.

இப்படி இருக்கும் நாளையில், இருவருக்கும் பதினைந்து வயதாயிற்று. நாளுக்குநாள் அம்பலவாணன் நன்னடத்தையிலும் தெய்வ பக்தியிலும் மிகுந்து கல்வியையும் விரைவில் கற்றுத்தேர்ச்சியடையவே, அனைவரும் அவனைக்கொண்டாடினார்கள். தனது அத்தை மகனான மாசிலாமணியிடத்திலும் அவன் அளவற்ற விசுவாசம் வைத்து, சகோதரன்போலவே அவனைக்கருதி வந்தான். ஆனால், மாசிலாமணிக்கு இவன்மீது பொறாமை உண்டு. வெளிக்கு நல்லவன்போல் நடித்துச் சமயத்தில் ஏமாற்றுவதில் மாசிலாமணி தேர்ச்சிபெற்றிருந்தான். பிறரை வஞ்சிப்பதே இவனுக்குப்பேரானந்தம். அதிலும், அம்பலவாணனிடத்தில் இவனுக்குப் பொறாமை வரவர அதிகமாயிற்று. தனது மாமனுடைய காலம்வரைக்குந்தான் தனக்குச் செல்வாக்கு இருக்குமென்றும், அவர் காலத்திற்குப் பிறகு அம்பலவாணன் தன்னை மதிப்பானோ மதிக்கமாட்டானோ என்றும், தான்மாத்திரம் ஏழையாயிருந்து அம்பலவாணன் கோடீசுவரனாக வாழ்வதை எப்படிக் கண்டு சகிப்பது என்றும் எண்ணி மாசிலாமணி மனம் புழுங்கினான்; நெடுநாள் யோசனை செய்து, எவ்விதத்திலாவது அம்பலவாணனுக்கும் அவனுடைய தகப்பனாருக்கும் மனஸ்தாபத்தை உண்டாக்கிவிட்டால், அப்போது தன் எண்ணம் நிறைவேறுமென்றும், மாமன் ஸகல ஸொத்துக்களையும் தனக்கே கொடுக்க இசைவார் என்றும் எண்ணினான். எந்த விதமாக இவர்களிருவருக்கும் மனஸ்தாபத்தை மூட்டலாமென்று மாசிலாமணி இரவும் பகலும் சிந்தனைசெய்து வந்தான். இப்படிச் சில வருஷங்கள் கழிந்தன.

எஸ். நரசிம்மாச்சாரியார், பி.ஏ; பி.எல்.



# Education and Science.

## கல்வியும், சாஸ்திரமும்.

### கல்விச் செலவு.

சென்னை இராஜதானியிலுள்ள முனிஸிபாலிடிகளிலும் ஸ்தலஸ்தாபனங்களிலும் கல்விக்காக எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கின்றனவென்ற கணக்கைக் கவனிப்போம்.

சென்னை இராஜதானியிலுள்ள முனிஸிபாலிடிகளுக்கு 1907-08-ம் வருஷத்தில் மொத்தம் வரும்படி ரூபாய் 62·88 லட்சம். அவை கல்விக்காகச் செலவழித்திருப்பது 4·51 லட்சம் ரூபாய். அதாவது அவைகளின் மொத்த வரும்படியில் 100-க்கு 7·2 வீதம் ஆகின்றது. அதற்கு அடுத்த இரண்டு வருஷங்களில் அவற்றின் கல்விச்செலவானது முறையே 100-க்கு 8·8 வீதமும் 100-க்கு 7 வீதமும் ஆகும் அதன்பிறகு செலவு இன்னும் குறைந்துபோயிற்று. 1914-15-ம் வருஷம் முதல் மூன்று வருஷங்களுக்குக் கல்விச் செலவு வருமாறு.

| வருஷம். | வரும்படி. | கல்விச் செலவு. | விகிதம் நூற்றுக்கு |
|---|---|---|---|
| 1914—15 | 100·31 | 10·90 | 10·8 |
| 1915—16 | 103·05 | 11·29 | 10·9 |
| 1916—17 | 107 84 | 9·54 | 8·8 |

சென்னை இராஜதானியிலுள்ள ஜில்லாபோர்டுகளுக்கு 1907-03-ம் வருஷத்தில் கிடைத்த வருமானம் ரூபாய் 150·70 லட்சம். இதில் கல்விக்காக செலவழிக்கப்பட்ட தொகை 19·89 லட்சம் ரூபாய். இந்தக் கல்விச்செலவானது அவற்றின் மொத்த வரும்படியில் நூற்றுக்கு 13 வீதமாகும். சென்ற 1914—15-ம் வருஷம் முதல் 1916—17-ம் வருஷம் வரையில் கல்விச் செலவின் விவரம் வருமாறு.

| வருஷம். | வரும்படி லட்சம். | கல்விச் செலவு லட்சம் | கல்விச் செலவு 100-க்கு இவ்வளவு. |
|---|---|---|---|
| 1914—15 | 209·95 | 32·90 | 10·9 |
| 1915—16 | 190·95 | 34·20 | 17·8 |
| 1916—17 | 191·64 | 32·97 | 17· |

மேலே குறிப்பிட்ட கணக்கைக் கவனித்தால், சென்ற இரண்டு வருஷங்களில்தான் கல்விச்செலவு அதிகப்பட்டுள்ளதென்பதும், அதற்குமுன்பு குறைந்தேயுள்ளதென்பதும் புலப்படும்.

### அலகாபாத் ஸர்வகலாசாலை.

பிள்ளைகளுக்கு மேற்படிப்புக்கான ஸௌகரியங்கள் பல இருந்தும், காலேஜ்களில் போதுமானவளவு இடமில்லாததனால், அவர்கள் தங்கள் படிப்பை நிறுத்திக்கொள்ளவேண்டியிருக்கின்றது. இக்காரணம்பற்றியே காலேஜ்களை அதிகமாக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாரை நாம்கேட்டுக்கொள்வது விஷயம் இப்படியிருக்க, அலகாபாத் ஸர்வகலாசாலையார் அங்குள்ள காலேஜ்களில் படிக்கும் பிள்ளைகளின் ஸங்கியைப் பொதுவாக 45க்கு அதிகப்படக்கூடாதென்றும், தேவையாயின் அறுபதுவரை இருக்கலாமென்றும் ஓர் உத்திரவை வெளியிட்டிருக்கிறார்கள். இத்தகைய உத்திரவு நமது இராஜதானியில் இருப்பதாகத் தெரியவில்லை. காலேஜ் வகுப்புப் பிள்ளைகளுக்கும் கீழ்த்தரப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளுக்கும் பலமடங்கு வித்தியாசம் உண்டு. காலேஜ் மாணாக்கர்கள் வயதுவந்தவர்கள்; தங்கள் பொறுப்பை உணர்ந்தவர்கள். இவர்கள் விஷயமாய் இத்தகையஉத்தரவைப் பிறப்பித்திருப்பது நியாயமான காரியமாகத் தோற்றவில்லை. காலேஜ்கள் அதிகமாக இல்லாத இக்காலத்தில் அவர்கள் இவ்விதம் செய்திருப்பது கண்மூடித்தனமாகும். அலகாபாத் ஸர்வகலாசாலையார் இனியாவது ஆழ்ந்துயோசித்து இந்த உத்தரவை உடனே ரத்து செய்வார்களென நம்புகிறோம்.

### புகையினால் செடிகள் கெடுவது.

தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் இருக்கும் மரஞ்செடிகளுக்கு அங்கு உண்டாகும் புகையினால் பலவித கெடுதல்கள் சம்பவிக்கின்றன. புகையினால் அவற்றின் வளர்ச்சி குன்றிப்போகின்றது. ஏனெனில், புகையில் கரியும், தாரும். திராவகங்களும் இருக்கின்றன. இவை மரஞ்செடிகளின்மேல்பட்டு அவற்றை அரித்துவிடுகின்றன. செடிகளின்மேல் தார் ஒட்டிக்கொள்வதனால், அவற்றின் உட்புறத்தினின்று நீர் வெளியாக முடிவதில்லை. இன்னும், புகையினால் சூரிய வெளிச்சம் குன்றிப்போகவே இதனால் செடிகளின் வளர்ச்சியும் பாதகமடைகின்றது.

## Agriculture and Co-operation.

## வியவசாயமும், கூட்டுறவும்.

### முள்ளங்கி விதை.

முள்ளங்கிவிதை வேண்டுபவர்கள், கிழங்கு பிடுங்கும்போது வேறு ஒரு இடத்தில் குழிதோண்டி எரு விட்டு, ஒரு கிழங்கை இலையுடன் பிடுங்கி அக்குழியில் வைத்துத் தண்ணீர் பாய்ச்சிவரவேண்டும். பிறகு செடியானது வளர்ந்து புஷ்பித்துக் காய்க்க ஆரம்பிக்கும். காய் நன்றாக முதிர்ந்ததும், நல்லதாய்ப் பொறுக்கி எடுத்துக்கொண்டு, நிழலில் காயவைத்து விதைகளைச் சேகரித்துக் கொள்ளவேண்டும்.

### உரங்களின் வேலை.

உரங்களில் உள்ள முக்கிய பாகங்களாகிய பொடாஷ், நைட்ரொஜின், பாஸ்பாரிக் ஆஸிட், சுண்ணும்பு ஆகிய இந்த நான்கும் செடிக்குப் பல விதங்களில் உதவியாயிருக்கின்றன. பொட்டாஷ் ஸத்தானது செடியின் இளம் இலைகளிலும் இளங் கொம்புகளிலும் ஏராளமாயிருக்கிறது. இது இலையில் "ஸ்டார்ச்" என்னும் மாஸத்து, சர்க்கரை முதலிய பொருள்கள் உண்டாவதற்கு ஸாதகமாயிருக்கிறது. காய்கள் காய்க்கும்போது மாஸத்தும், சர்க்கரையும் இலையிலிருந்து காய்க்கும் பழத்துக்கும் போய்ச் சேருவதற்கு உதவியாயிருக்கிறது. இந்த இரண்டு வேலையும் முடிந்த பிறகு பொடாஷில் ஒரு பாகம் மறுபடியும் பூமிக்குப் போய்விடுகிறது.

நைட்ரொஜின் இலையும் தண்டும் வளருவதற்கு ஸாதகமாயிருக்கிறது. இது மொட்டுகளும், புஷ்பங்களும் வளருவதற்குத் தடையாயிருக்கிறது. செடிக்கு நைட்ரொஜின் ஸம்பந்தமான எருக்களிட்டால் செடி மிகவும் நன்றாய் வளரும். இதனால் செடியில் உள்ள நைட்ரொஜின் அதிகமாவதோடு, காய்கள் முதலியவைகளில் ப்ரொடீன் என்னும் (மாம்ஸம் வளருவதற்கேற்ற) பொருள் அதிகமாவதற்கும் இடமேற்படும்.

பாஸ்பாரிக் ஆஸிட்டானது செடிகள் காய்காய்ப்பதற்கு உதவியாக இருக்கிறது. பாஸ்பேட்டுகள் என்னும் பாஸ்பாரிக் ஆஸிட் சம்பந்தமான செடி உணவுகள் பொதுவாய் விதைகளில் தான் அதிகம். பாஸ்பேட்டுகள் வேண்டிய அளவு பூமியில் இல்லாவிட்டால் செடியில் விதைகள் உண்டாகமாட்டா.

நிலத்தில் சுண்ணும்பு இருந்தால் இந்திரிய வஸ்துக்கள் அழுகி மாறுபாடடையும். செடிக்கு உணவாக முடியாத ஸ்திதியிலிருக்கும் எருப்பொருள்களை உணவாகக்கூடிய ஸ்திதிக்கு மாற்றிவிடும். இது முக்கியமாய் நிலத்திலுள்ள மண்ணின் தன்மையை விருத்தி செய்ய உதவுகிறது. முக்கியமாய் மிகுந்த களியான நிலங்களை புசுபுலப்பாக்கவும் மணற்பாங்கான நிலங்களைக் கெட்டிப்படுத்தவும் உதவுகிறது. மேலும், நிலத்தில் இந்திரிய வஸ்துக்கள் அழுகுவதனால் உண்டாகும் புளிப்புத் தன்மையையும் அது போக்கிவிடும்.
—ஜனாபிமானி.

### எலுமிச்சை சாகுபடி.

எலுமிச்சை சாகுபடி விஷயமாய் நாம் கவனிக்க வேண்டிய விஷயங்களென்னவெனில்:—(1) செடிகளை ஒருபோதும் ஆழமாய் நடக்கூடாது. (2) செடிகள் ஒவ்வொன்றிற்கும் போதுமானவளவு இடைவெளி இருக்கவேண்டும். (3) வைத்த செடிகளை மிகவும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும்; எவ்வளவு பார்க்க முடியுமோ அவ்வளவே நடுவது நல்லது.

### தென்னந் தோப்புகள்.

தென்னந் தோப்புகளில் இளம்பிள்ளைகளாயுள்ள செடிகளைச்சுற்றிக் குப்பைகளையும் செத்தைகளையும் போட்டுவைத்தால், அவை நன்றாய் வளருமாம்.



## Industry and Commerce.

## கைத்தொழிலும், வியாபாரமும்.

### பருத்திக்கோட்டை மாவு.

மேனாடுகளில் பருத்திக்கொட்டை பிண்ணாக்கு மாவை கோதுமை மாவுக்குப்பதிலாக உபயோகப்படுத்தும் விஷயமாய்ச் சில ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வந்தன. அமெரிக்காவில் டெக்ஸாஸ் யூனிவர்ஸிடியார் இவ்விஷயமாய்ப் பரிசீலனை செய்து வந்தார்கள். 3½ அவுன்ஸ் பருத்திக்கொட்டை மாவோடு அரிசி மாவு, வெண்ணெய், சர்க்கரை, திராக்ஷிரஸம் ஆகிய இவைகளைக் கலந்து ரொட்டிசெய்து சில பேர்களுக்குக் கொடுத்துவந்ததில், 100-க்கு 85 பாகம் ஜீர்ணிக்கப்பட்டு வந்ததுடன், அவர்களின் தேகத்தில் அசதி காணப்படவில்லை. இதனால், சரீரக்கட்டுக்குத் தேவையான பொருள்கள் பருத்திக்கொட்டையில் இருக்கின்றனவெனத் தெரிகின்றது.

### கவனிக்கவேண்டிய சில வியாபாரக் குறிப்புக்கள்.

பாங்கியில் பற்றுவரவு செய்ய எண்ணுவதை யோசித்துச்செய். பாங்கியில் கடன் வாங்கினால், அதைச் சீக்கிரத்தில் கொடுத்துவிடு.

அவசியம் தேவையான மூலதனத்துடன் நீ உன் தொழிலை ஆரம்பஞ்செய். வியாபாரத்திற்கு வேண்டிய சரக்குகளுக்கு மூன்று மடங்கு அதிகப்பணம் கையில் இருக்கவேண்டியது அவசியம்.

ஒரு தொழிலில் புழங்கிவரும் பணத்தை எடுத்து வேறு தொழிலில் போட்டுவிடாதே. வேறு தொழிலைப்பற்றி நீ அதிகமாய் யோசனைசெய்து பணம் போடுவதாய் எண்ணினாலும், உன்னுடைய பழைய தொழிலை நிராகரிக்கும் குற்றத்திற்குள்ளாவாய்.

நடைபெற்றுவரும் தொழிலுக்கு இருந்துவரும் பணம் அதிகமென்றும், அவ்வளவு தேவையில்லை என்றும் உனக்கு நிச்சயமாய்த் தெரிந்தாலொழிய அத்தொழிலின் பணத்தை எடுக்காதே.

உனது பற்றுவரவு ஆசாமிகளுக்குக் கேட்பதற்கு மேல் சரக்குக்கொடுத்துக் கடனை அதிகப்படுத்தாதே. ஏனெனில் சிறிதுகாலம் வரையில் கடன் கொடுத்து வந்து, பிறகு உனக்கிருக்கும் கஷ்டத்தினால் இனி கடன் கொடுக்கமுடியாதென்று மறுத்தால், நீ ஏதோ அவநம்பிக்கைப்படுவதாய் அவன் எண்ணுவான். இந்த அபிப்பிராயத்துக்கு நீ இடங்கொடுக்காதே. உனக்குச் சரக்குக்கொடுத்துவரும் ஆசாமியின் பணத்தை அதிகநாள் உன்னிடம் வைத்துக்கொள்ளாதே. அவர்கள் உனக்கு அதிக தவணை கொடுப்பது உனக்குச் சிரமத்தையே கொடுக்கும்.

சிறிது நாளைக்குப் பணம் வேண்டியிருந்தால் பாங்கியில் கடன் வாங்கிக்கொள். பாங்கியுடன் பற்றுவரவு வைத்துக்கொள்வது உனக்குச் சௌகரியத்தைக் கொடுக்கக்கூடும்.

உனது தொழில்களை ஒவ்வொன்றாய்த் தனித்தனியே செய்துகொண்டுவா. உன்னிடத்தில் சும்மாவிருக்கும் பணத்தைக்கொண்டு ஒவ்வொரு பிரிவையும் தனித்தனியே பலப்படுத்த முயலு.—வர்த்தக மித்திரன்.

### கூட்டுறவும், கைத்தொழில் அபிவிருத்தியும்.

இப்போது நமது தேசத்தில் நாணயச் சங்கங்கள் அதிகமாயிருக்கின்றனவேயொழிய, கைத்தொழில் வியவஸாயம் முதலியனவற்றை அபிவிருத்தி செய்யப்போதுமான கூட்டுறவுச் சங்கங்கள் இல்லை. இவற்றில் தொழிலாளர்களுக்குத் தேவையான ஸங்கங்களைப்பற்றியே இங்குக் கவனிப்போம். தொழிலாளர்களுக்காக ஏற்படுத்தக்கூடிய ஸங்கங்களை இரண்டுவிதமாய்ப் பிரிக்கலாம். முதலாவது : தொழிலாளிகள் தங்கள் வீடுகளிலேயே வேலைசெய்துகொண்டு தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக்கொள்வது, செய்த பொருள்களை விற்பது. இரண்டாவது : பல தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து ஒரு சிறு தொழிற்சாலையை ஏற்படுத்திக்கொண்டு வேலைசெய்து லாபத்தைப் பங்கிட்டுக்கொள்வது. முதலாவதாகக் கூறிய தொழிலாளிகள் தங்கள் ஒழிவு நேரங்களில் தொழிற்சாலைகளின் போட்டியால் நஷ்டமேற்படாத தொழில்களைத் தம் வீடுகளிலேயே செய்து ஸங்கங்களின் மூலமாய் விற்பார்கள். கைத்தொழிலுக்குத் தேவையான பொருள்களை சங்கங்களின் மூலமாகவே தருவித்துக் கொள்வார்கள். மேனாடுகள் சிலவற்றுள் வியவசாயிகள் தங்கள் தங்கள் ஒழிவு நேரங்களில் பொம்மைகள் முதலியனசெய்து ஸங்கங்களின்மூலமாய் விற்பனைசெய்து வருகிறார்கள். இரண்டாவதாகக் கூறிய சங்கம் இப்போது நமது தேசத்தில் ஏற்படக்கூடியதன்று. போதுமான உதவியிருக்குமாயின், நாளாவட்டத்தில் இந்நிலைமைக்குவரலாம். ஆகவே, இராஜாங்கத்தாரும் பொது ஜனங்களும் தொழிலாளிகளின் முன்னேற்றத்திற்காக உழைத்துவருவது அவசியமாகும்.

## Sanitation and Medicine.
## சுகாதாரமும், வைத்தியமும்.

**மிளகின் உபயோகங்கள்.**

இது தென்னிந்தியாவில் மலபார், கொச்சின், குடகு மைசூர் முதலான மலைநாடுகளில் பயிராகின்றது. நல்ல மிளகானது காரமுள்ளதாயும் பளுவாயுமிருக்கும். இது ஜீர்ணத்தையுண்டாக்கும். இருமல், ஜலதோஷம், வாந்திபேதி, பாண்டு, குன்மம், காதடைப்பு முதலானவற்றை இது போக்கடிக்கும். அதிகமாக இதை உபயோகிப்போமானால் உடம்பு எரிச்சல் தாகம் முதலியன உண்டாகும்.

**வெங்காயத்தின் ஔஷதத் தன்மைகள்.**

வெங்காயம் நாக்கில் அரோசகத்தைப் போக்கி பசியை உத்தீபனம் செய்யுமென்றும், கபப்பிரகோபத்தினால் உண்டாகிற மார்சளியையும், வாத விகாரங்களை நிவிருத்திக்கக்கூடியதென்றும், குன்மத்தை நிவாரணம் செய்யத் தருந்ததென்றும் ராஜநிகண்டிலும், தன்வந்தரி நிகண்டிலும் கூறப்பட்டுள்ளது.

சாஸ்திராராய்ச்சி செய்து பார்த்த பரிசோதனை செய்யும் இக்காலத்து நிபுணர்கள் வெங்காயத்தை உணவுச்சத்து நிறைந்த சிறந்தோர் சரக்காகக் கருத ஆரம்பித்திருக்கிறார்கள். சாகவர்க்கங்களில் இது சிரேஷ்டமானதென்றும், போஷணைக்குரிய தர்க்கியகாரச் சத்துக்களும், சரீரத்தில் வன்மை உண்டாக்கக்கூடிய உப்புவகைகளும் இதில் அடங்கியிருக்கின்றனவென்றும் சாஸ்திர பரிசோதகர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். பிரான்ஸ் தேசத்தில் துருப்புக்களுக்கு வெங்காயம் விசேஷமாய் உணவாகக் கொடுக்கப்பட்டுவருகிறது. மார்சளி அல்லது ஜலதோஷத்தை நிவிருத்தி செய்ய இச்சரக்கு உபயோகிக்கப்படுறது. சமைத்த வெங்காயம் மலச்சிக்கலைப் போக்கவும், குடல் முதலிய வற்றிலுண்டாகும் அழற்சியைப்பரிஹரிக்கவும் தருந்ததாயிருக்கின்றது. நித்திரையின்மையினால் வருந்துபவருக்கு வெங்காயத்தை அடிக்கடியும் உபயோகிக்க, காலத்தில் நித்திரையுண்டாகும். ஆமவாதம் என்கிற கீல்வாயுவில் இதை புஜித்தும், வீக்கமுள்ள விடங்களில் பொட்டலிகையாக (போல்டிஸாகஸ்) கட்டியும் நல்ல பலன் கண்டதுண்டு. நாட்பட்ட மார்சளியையும் மாரடைப்பையும் தணிப்பதில் வெங்காயப் பொட்டலிகைக்குச் சமானமானது மற்றொன்றில்லை. வெங்காயம் எளிதில் ஜீர்ணமாகிறது. தாதுக்களை நன்கு போஷிக்கின்றது. பசியை உத்தீபனம் செய்கிறது. நரம்பு மண்டலத்தைக் குளிரச்செய்கிறது. மிருதுவாக மலத்தையும் மூத்திரத்தையும் வெளிப்படுத்துகிறது. வெங்காயத்தில் கந்தகச்சத்தும் வேறு சில உப்புச் சத்துக்களும் அடங்கியிருப்பதனால், குடலில் தோஷஹராமாகவும் (antiseptic) வேலை செய்கிறது.—வைத்திய கலாநிதி.

## General Notes.
## பொதுக் குறிப்புக்கள்.

**காகிதத்தினால் பால் புட்டிகள்.**

காகிதத்தினால் பால்அடைத்துவைக்கக்கூடிய புட்டிகளைச்செய்யவும், அவற்றை மணியொன்றுக்கு ஐயாயிரம் வீதம் தயார் செய்யவும் ஓர் நூதன இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றதாம். இதன் நீளம் 90 அடி என்றும், விலை மூவ்வாயிரம் ரூபாய் என்றும் சொல்லப்படுகிறது. இப்புட்டிகளை மரத்தினின்று எடுக்கப்பட்ட காகிதக் கூழினாலேயே இந்த இயந்திரத்தைக்கொண்டு செய்துவிடலாமாம். ஒருடன் கூழினால் 60 ஆயிரம் புட்டிகள் செய்யக்கூடுமென்றும், இயந்திரத்தை ஓட்ட மூவர் இருந்தால் போதுமென்றும், இப்புட்டிகள் கண்ணாடி புட்டிகளைவிட விலை ஸரசமாயும் கெட்டியாயுமிருக்கின்றனவென்றும் ஓர் பத்திரிகை கூறுகின்றது.

**ஓர் பத்திராசிரியர்.**

அமெரிக்காவில் பிரிஸ்பேன் என்ற ஓர் பத்திரிகாசிரியர் இருக்கிறார். அவருடைய பத்திரிகைக்கு 20 லட்சம் பேர் சந்தாதார்கள் இருக்கின்றார்களாம். அவர் அமெரிக்கப் பிரெஸிடெண்ட் வில்சனைவிட அதிகச் சம்பளம் வாங்குகிறாரெனச் சொல்லப்படுகின்றது.

**தோலுக்கு மெருகு செய்தல்.**

பூட்ஸ்கள், குதிரை சேணங்கள் முதலிய தோல் சாமான்களைச் சுத்திசெய்யக் கீழ்கண்ட கலப்பை உபயோகிக்கலாம்:—இரண்டு பயின்டு காடியில் ஒரு பயின்டு ஆறின தண்ணீரைக் கலந்துகொண்டு, அதோடு பிசின்பொடி $\frac{1}{4}$ பவுண்டு, செம்மரத்தூள் $\frac{1}{2}$ பவுண்டு, அவுரிச்சாயப்பொடி $\frac{1}{4}$ அவுன்ஸ் நல்ல ஸோப் $\frac{1}{4}$ அவுன்ஸ் ஆகிய இவைகளைக் கலந்து கால் மணிநேரம் கொதிக்கவைத்து, பிறகு தண்ணீரை நீத்துவிட்டு சூட்டோடு ஒரு கண்ணாடி டப்பியில் போட்டுவைத்துக்கொள்ளவேண்டும்; சூடு ஆறினதும் உபயோகிக்கத் தருந்ததாகும்.

**தேனைப் பரிக்ஷித்தல்.**

தேன் சுயமானதாவென்பதைக் கீழ்க்கண்ட முறைகளினால் கண்டுபிடிக்கலாம்:—ஒரு பருத்தித்திரியைத் தேனில் தோய்த்து எற்றவேண்டும். தேன் சுயமானதாயிருந்தால் அது எரியும்; இல்லாவிடில் எரியாது. நல்ல தேனைச் சுண்டவைத்தால், அடியில் கசண்டு நிற்காது. சுயமான தேனைக் காகிதத்தில் விட்டால், காகிதம் ஊறாது.

**கைப்பிடி ஒட்டவைக்க.**

அடிக்கடி கைப்பிடிகளும், குடைக்காம்புகளும் கழன்றுபோகின்றன. அவற்றைக் கெட்டியாயிருக்கும்படி செய்ய: ரோசனம் கொஞ்சம் பொடிசெய்து ஒரு கரண்டியில் வைத்து நெருப்புக்கு நேராகப்பிடிக்கவும். ரோசனம் உருகியதும் அதை கைப்பிடி துளையில் விட்டு நிரப்பி சூடு தணியும்வரை அசையாமல் சொருகி வைத்திருக்கவேண்டும்.

OFFICE OF ... MADRAS. 4-JAN 1919

145

# ஜனோபகாரி.

THE JANOPAKARI.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புஸ்தகம் 3. Vol. III. காளயுக்திஹூ கார்த்திகைமீ, NOVEMBER, 1918. சஞ்சிகை 11 No. 11.

## The Progress of the Word.
## பிரபஞ்சப்போக்கு.

**இந்தியாவின் தொழில் அபிவிருத்தி.**

இந்தியா தேசமானது ஒரு பெரிய வியவசாய தேசமாயினும், ஒரு காலத்தில் அது கைத்தொழில்களில் தேர்ச்சியடைந்த நாடாக இருந்தது. ஆங்கிலேயர்கள் முதன்முதல் இந்தியாவிற்கு வந்தபோது, இந்தியர்களால் செய்யப்பட்ட பலவித சாமான்களை அவர்கள் தங்கள் தேசத்திற்கு வாங்கிக்கொண்டுபோனார்கள். அத்தகைய உன்னத ஸ்திதியையடைந்திருந்த இந்தியத்தொழில்கள் எவ்வாறு நசித்துப்போயின வென்ற விஷயம் கவனிக்கத்தக்கது. இந்தியாவின் கைத்தொழில் அபிவிருத்தி விஷயமாய்த் தொழில் அபிவிருத்திக் கமிஷன் சிலயோசனைகளைக்கூறியிருக்கின்றது. ஆயினும், அக்கமிஷன் மெம்பர்களுள் ஒருவரான கனம் மாளவியா ஒரு முக்கியமான விஷயத்தை வெளியிட்டிருக்கிறார். அதாவது: இந்தியாவில் தொழில்கள் விருத்திசெய்யப்பட்டால்மாத்திரம் போதாதென்பதும், அவை இந்தியரால் ஸ்தாபிக்கப்பட்டு நடத்தப்பட்டாலொழிய இந்தியா அனுகூலமடையாதென்பதும் அவருடைய கருத்தாகும். 1916-ம் வருஷம் மார்ச்சு மாதம் 26ந் தேதியன்று ராஜப்பிரதிநிதியின் சட்டசபையில் தொழில் அபிவிருத்தியைப் பற்றி விசாரித்து யோசனைசொல்லும்படி ஒரு கமிட்டியை நியமிக்கவேண்டுமென்று கனம் ஸர் இப்ராஹிம் ரஹிம்துல்லா ஒரு தீர்மானம் கொண்டுவந்தபோது, ஸர் வில்லியம் க்ளார்க் சொன்ன அபிப்பிராயம் இங்குக் குறிப்பிடத்தக்கது.

"இந்தியாவில் இந்தியருடைய முதலைக்கொண்டு இந்தியருடைய அதிகாரத்திற்குட்பட்டு இந்தியர் நிர்வகிக்கும்படியான தொழிற்சாலைகள் ஏற்படவேண்டுமேயல்லாமல், அந்நிய தேசங்களில் தொழில்செய்யும் முதலாளிகள் தங்கள் தொழிற்சாலைகளை இந்தியாவிற்குக் கொண்டுவந்துவிடும்படி செய்துவிடக்கூடாது."

மேற்குறித்த விஷயத்தை நாம் ஊன்றிக் கவனிக்கவேண்டும். அந்நியதேசத்துத்தொழிலாளிகள் இங்குவந்து தொழில்நடத்துவதனால் அவர்கள் ஸம்பாதிக்கும் லாபம் அந்நிய தேசங்களுக்குப் போய்விடுமேறதுவாகும். அப்போது இந்தியாவின் செல்வமானது நாளுக்கு நாள் குறைந்துகொண்டேவருமேயல்லாது

பெருகாது. ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் என்பவர் தொழில் அபிவிருத்திக் கமிஷன் முன்பு எழுத்துமூலமாய்த் தெரிவித்த தமது அபிப்பிராயங்களில், இந்தியாவில் கிடைக்கும் மூலப்பொருள்களைக்கொண்டே தொழில் செய்யப்படவேண்டுமென்றும், இந்தியாவில் தொழிற்சாலைகள் பல ஏற்படுத்தப்படவேண்டுமென்றும், இந்தியத்தொழிற்சாலைகளால் கிடைக்கும் பணம் இந்தியாவிலேயே இருக்கவேண்டுமென்றும் தெரிவித்திருந்தார்.

ஆகையால், மேலே குறிப்பிட்ட அபிப்பிராயங்களையொட்டி இந்தியாவில் தொழில் அபிவிருத்தி செய்யப்பட்டாலொழிய, மற்றெவ்வித முறைகளும் பலனைத்தராவென்பது திண்ணம்.

செம்படவருக்குள் கூட்டுறவு.

செம்படவரின் நிலைமையையும், ஜனசாரத்தையும் கூட்டுறவு முயற்சியைக்கொண்டு உயர்த்தும் விஷயமாய் ஆராய்ச்சிசெய்து ஸர் பிரடரிக் நிக்கல்ஸன் ஒரு ரிபோர்டு எழுதி வெளியிட்டிருக்கிறார். செம்படவர்களின் நிலைமை உயர்த்தப்பட்டாலொழிய மீன் தொழில் இலாகாவின் எத்தொழிலையும் அபிவிருத்தி செய்ய இயலாதென்று அவர் கூறுகிறார். இன்னும், இந்த ஸமூஹத்தினரின் அறியாமை, செட்டின்மை, மதுபானம், கட்டுப்பாடின்மை ஆகிய பலவித குறைகளை அவர்களுக்கு எடுத்துரைத்து நன்னடக்கையைப் போதிக்கவேண்டுமென்றும், இதற்குத் தக்க ஆசிரியர்களை அவர்களுக்குள்ளேயே தேர்ந்தெடுக்கவேண்டுமென்றும், கூட்டுறவுச்சங்கங்களின் அவசியத்தையும் அவற்றின் கடமைகளையும் அவர்கள் உணரும்படிசெய்யவேண்டுமென்றும் அவர் தமது ரிபோர்ட்டில் வற்புறுத்தியிருக்கிறார். அவர் கூறும் யோசனைகள் யாவும் சிறந்தவையே. போதியவளவு இவ்விஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொள்ளப்படுமாயின், காரியம் சித்திபெறுமென்பதில் ஐயமில்லை.

பாடசாலைகளில் வைத்திய பரிசோதனை.

இந்தியாவில் பாடசாலை மாணவர்கள் பற்பல வியாதிகளால் பீடிக்கப்பட்டு வருகின்றார்கள். இதனால் அவர்கள் தேகபலங் குன்றித் தங்கள் கடமைகளைச் சரிவர முடிக்க இயலாதவர்களாக இருக்கின்றனர். பிள்ளைகளின் தேகவளர்ச்சியும் அறிவு பெருக்கமும் தேசத்துக்கு அவசியமானவைகளாகும். ஆகையால், தேசத்தின் நலத்தைக் கோருபவர்கள், இவர்களின் தேக சௌக்கியத்தைக் கவனிப்பது அவசியமாகும்.

மேனாடுகளில் பள்ளிப்பிள்ளைகளுக்கு வைத்திய பரிசோதனை செய்விப்பது கவர்ன்மெண்டாரின் கடமையாக இருக்கின்றது. ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு வைத்தியர் அவசியம் நியமிக்கப்படவேண்டுமென்பது அங்குச் சட்டமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இச்சட்டத்தை மீறி நடப்பவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள். ஆகவே, பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படுமுன் கலாசாலை வைத்தியரால் பரீக்ஷிக்கப்படுகின்றனர். பிள்ளைகளுக்கு வியாதிகள் இருக்குமாயின், அவை அவர்களின்பெற்றோர்களுக்கு அறிவிக்கப்படுகின்றன. இம்முறையினால் அங்குள்ள பள்ளிக்கூடங்களில் கல்வி பயிலும் பிள்ளைகள் நல்ல தேகபுஷ்டியுள்ளவர்களாகவிளங்குகிறார்கள். இவ்விஷயமானது நமது கவர்ன்மெண்டாருக்குப் பலமுறைகள் எடுத்துரைக்கப்பட்டும், அது கவனிக்கப்படாமலிருந்தது. ஆனால், இப்போது அவர்கள் பள்ளிக்கூடத்து மாணவர்களுக்கு வைத்திய பரிசோதனை அவசியமென்று ஓர் உத்தரவை வெளியிட்டிருக்கிறார்கள். அதை மற்றொரு பத்தியில் பதிப்பித்திருக்கிறோம். இந்த உத்தரவு அமுலுக்கு வருமாயின், பிள்ளைகளின் வியாதிகளும், பள்ளிக்கூடங்களின் சுகாதாரக் கேடுகளும் ஒழியுமென்பதில் சந்தேகமில்லை.



# நாகரிக நிலை.

[ஓர் தமிழ் மாணவர் எழுதியது]

பல்லாண்டுகளுக்கு முன்னர், புண்ணிய மாதெனப் புகழெடுத்த, சகலச் சிறப்புக்களும் குறைவற நிறைந்த இவ்விந்திய நாட்டின்கண் வாழ்ந்த நம்முதோதையர் அனுசரித்த பற்பல பழக்கவழக்கங்களையும், தற்காலத்திய நவீன நாகரிகர் எனப் பேற்பெற்ற இச்சில் வாழ்நாட் பல்பிணியிச் சேதனரின் நடையுடை பாவனைகளையும் ஈண்டுச் சிறிது எடுத்துக் காட்டுவோம்:—

பண்டைக்காலத்து வேதியர் தன் தொழில் மறவாது, வெய்யோன் உதயமாகாமுன் எழுந்து தம் காலைக்கடன்களைச் செவ்வனே முடித்து, புனலிடை மூழ்கி, அரிய பெரிய நம் முதாட்டி "நீரில்லா நெற்றி பாழ்" என்பதனால், திருமண், திருநீற்றுக் காப்புக்களை விதிப்படி புனைந்து, ஜபதபங்களை நேர்பெற முடிப்பர். பின்பு, அன்னோர் மனவாட்டமின்றி இயற்றும் தன் தவத்திற்குரிய குற்றேவல்களை புரியுமாறு தம்மனைவியரிடம் கட்டளையிட்டுச் சதாகாலமும்,

"கல்லினுட் சிறுதேரைக்கும் கருப்பையுண்டத் [துயிர்க்கும்
புல்லுண வளித்துக் காக்கும் புண்ணியனாய்க் கண்ணி [யண்ணல்."

யைப்பற்று ஈடுபட்டிருப்பர்.

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்."

என்பதற்கிசைய, இவ்வருமறையந்தணர் முகாரவிந்தத்தைக் கண்ட எவர் தாம் அன்னோர் மாசிலாக் குணங்களைப் போற்றார்? அத்தகையோர் வறுமையைச் செல்வமெனக்கொள்ளல் வியப்பாமோ? குசேலர், வசிட்டர் முதலானோர் இத்தகையோர் என்பது வெள்ளிடைமலை. இன்னோர் நான்கு வேதங்களையும் தம் இனிய நாவால் எக்காலும் ஓதியவராய் வாழ்ந்திருந்தனர். மன்னர்கள் இவ்வேதியரின் அரிய குணங்களைக்கண்டு, அவர்கள் பாதத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்து, ஆசீர்வதிக்கப்பெற்று, அவர்களுக்குத் தக்க சம்மானம் கொடுத்தனர் என்றால், பிரஜைகள் அவர்களிடம் நடந்துகொண்டதை நாம் ஊகித்தறியலாம். இவ்விஷயத்தை நைடதத்தில், அதிவீரராம பாண்டியர், அரிய வேதத்தின் பொருள்களைக் கற்றுணர்ந்த அந்தணரின் பொருளாசை அழியும்படி அன்பினாலே கொடுக்கப்பட்ட பெரிய பொருள்களின் குவியல்களோடு விதிப்படி (தாரை) வார்க்கப்படும் நீரானது பெருக்கெடுத்து விரைந்தோடி, இரைகைகளையுடைய சங்குகளால் கூவித்தரப்பட்ட முத்துக்களனவை, இளஞ்சந்திரிகை வீசுகின்ற அழகிய நீண்ட கழனிகள்தோறும் செந்நெற்பயிரை வளர்க்கும்" என்னும் கருத்து அழகுபெற அமையும்படி,

'அருமறைக் கிழவருள்ளத் தவாக்கெட வன்பின்நல் [கும்
பெருநிதிக் குப்பையோடு பெய்புனல் பெருகியோடி
வரிவளை யலறி ஈன்ற மணியிள நிலவுகாலும்
திருவளர் கழனிதோறும் செந்நெலை வளர்க்குமா [தோ."

என்று பாடியுள்ளார். மற்றும், "வேதமோதிய வேதியர்க் கோர்மழை" என்பதனால் அந்தணர் வேதமோதுதல் பிரஜைகளின் க்ஷேமத்தைக்கருதியே என்பது கரதலாமலகம்.

பண்டைக்காலத்து மன்னரோ, இக்குவலயத்தையாளும் பெரும்பதவியிலிருந்தும், பிராம்மணர்களைப் பணிந்து, அவர்களை "முன்னுறுதல் சேமிக்கும்" அமைச்சராக்கினர். ஓர் வேதியன் அரசவைக்களத்திற் செல்லினும், அவர்கள் உடனே தம் இருக்கைவிட்டெழுந்து ஆசனமளித்து, யோகக்ஷேமங்களை வினவித் தக்க சம்மானமளித்து அவர்களால் ஆசீர்வதிக்கப்பெற்றனர்.

"தேவர் நிலைகடவார்; மேலோர் திறம்பிழையார்;
நாவி னிரண்டுரையார்; நன்கல் லவைபுரியார்;
காவன் முறைதிறம்பார்; காமச்செயல்பெருக்கார்;
பூவ லயங்காவல் புரியும் புரவலரே."

என்னும் பாவால் பண்டை அரசரின் இயல்பு குறிக்கப்படுகின்றது. அவர் மன்னுயிரைத் தம்முயிராகப் பாவித்தனர் என்பதற்குப் பல திருஷ்டாந்தங்களிருப்பினும், ஈண்டு ஒன்றைக் குறிப்பிடுவோம் :—

ஒட்டக்கூத்தன், குடந்தை வீரசிங்காதன மடசங்கமர் ஒருவரைக் கையால் அடித்துக் கொன்றான். உடனே மற்றைச்சங்கமர் ஒருங்கு சேர்ந்து, ஒட்டக்கூத்தனைத் தண்டிக்குமாறு புறப்பட்டனர். இதையறிந்த கூத்தன் உடனே, மனுச்சோழன் வமிசத்தோன்றலின் அரண்மனை புக்கு நிகழ்ந்தனவுரைத்தான். அவன் கவியை ஓரிடத்தில் ஒளித்துச் சங்கமர்களைப் பன்முறைபணிந்து, அக்கொடிய குற்றத்தைப் பொருக்குமாறு மன்றாடினன். என் சொல்லியும் செவிகொடாது வாளாவிருந்த அவர்கள் ஒரேபிடிவாதமாய்ப் பழிவாங்குதலையே கூறிநின்றனர்.

அரசன் சற்று ஆலோசித்து, பிறகு உட்சென்று, தன் அருமைமைந்தனை இரகசியமாக அழைத்து, நடந்தனவுரைத்து, "இக்கஷ்டம் உன்னாலேதான் தீரவேண்டும்" என,

"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான்கொல் என்னும் சொல்."

என்னும் பொன்னேபோற் போற்றும் பொருளுரை பழுதாகாவண்ணம் அச்சிறுவன் "மனுக்குலத்துத் தோன்றலின் மகனுபயான் மறுத்தல் என்றும் இல்லை. என் பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பையும் இன்னுயிரும் தங்களதீனம். எது வேண்டினும் அஃதாற்றக் கடமைப்பட்டுள்ளேன் ; இதைத்தவிர வேறு இன்பம் எனக்கு ஒன்றுமில்லை" என்றனன்.

உடனே அரசன் புதியதோர் முறுவல் செய்து, மைந்தன் குணத்தை மிகுதியும் மெச்சி, அவனை ஓர் மூடுபல்லக்கில் ஏற்றித் திரைகட்டி அவையில் கொணர்ந்து, சங்கமர்களை விளித்து, "ஐயன்மீர் ; கூத்தரை இதனுள் ஏற்றியிருக்கிறேன். இவரை ஓர் மறைவிடத்தில் வைத்துக்கொள்ளுங்கள்" என்றான். இது

"அகளங்கச்சோழ னொருபிள்ளையீந்தான்."

என்னும் தனிப்பாடலில் குறிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதுவன்றோ அரசரியல்பு ? முன்னாட்களில் புலவரிடம் அரசர் காட்டிய கௌரவம் மெச்சத்தகுந்ததே !

வைசியர் வாணிகஞ்செய்வதில் பிறழாமலிருந்தனர். ஜனங்களின் முன்னேற்றத்தை எதிர்பார்த்தவராய் சொற்ப ஊதியம்வைத்தே தானியங்களை விற்றனர். பஞ்சக்காலத்தில் ஏழைச்சனசமூகத்தின்மேல் இரக்கம்காட்டித் தங்களாலியன்றமட்டும் தானியங்களைச் சொற்பவிலைக்கே விற்றனர். அரசனையும் அந்தணனையும் தெய்வம்போலக் கருதினர்.

நான்காம் வருணத்தவரோ, எப்போதும் ஏர்தாங்குதலொன்றையே தம் தொழிலாகக் கருதி மேலோரிடத்துப் பயப்பட்டிருந்தனர். சிலர் இதைத் தவறாக எண்ணிவிடுகின்றனர். ஏர்தாங்குதலின் மிக்கதோர் தொழில் வேதுமுளதோ ? கம்பர் ஏரெழுபதில் உழவுச் சிறப்பைக் கீழ்வருமாறு கூறுகின்றனர் :—

"நீர்விளாக் கொளவளர்ந்த நிலமெல்லாம் தம்
[முடைய
சீர்விழாக் கொளவிளக்குந் திருவிழாப் பெருக்காளர்
ஏர்விழாக் கொளினன்றி யெறுழ்க்கரி, தேர், மாப்
[படையாற்
போர்விழாக் கொளமாட்டார் போர்வேந்த ராணே
[ரே."

இத்தகைய தொழிலாளிகளாகிய சூத்திரரைக் குறித்து மற்றும்,

"வேதியற்றம் முயற்குலமும், விறல்வேந்தர் பெருங்
[குலமும்,
நீதிவளம் படைத்துடைய நிதிவணிகர் தங்குலமும்
ஜாதிவளம் படைத்துடைய தாயனைய காராளர்
கோதில்குலந் தனக்குநிகர் உண்டாகிற் கூறீரே."

என்றார். யாம் முதலில் கூறியுள்ள மாசற்ற குணங்களே உருவெடுத்தாற்போன்ற அருமறையந்தணரை இந்நான்காம் வருணத்தவர்



அடிபணிந்து சேவித்தல் நேர்மையன்றோ ? ஊன்றிப் பார்க்குமிடத்து இதில் இகழ்ச்சி எள்ளளவேனும் இல்லையென்பது புல்லும் ; பெருமையேயாகும்.

ஆதலால், பண்டைநாட்களில் நம்மிந்திய நாட்டில் இருந்த நம்முன்னோர் நிலைமையை,

"கல்லாதுநிற்பார் பிறரின்மையிற் கல்விமுற்ற
வல்லாருமில்லை ; அவைவல்லரல்லாரு மில்லை ;
எல்லாருமெல்லாப்பெருஞ்செல்வமு மெய்தலா
[லே,
இல்லாருமில்லை; உடையார்களு மில்லை மாதோ !"

என்னும் கம்பர்வாக்கால் அறியலாகும். நம் மூதாதையர் கல்வி கேள்விகளில் வல்லுநராயும் வருணாச்ரம தர்மங்களைச் சிரமேற்கொண்டு ஒழுகுபவராயும் இருக்க, இக்காலத்திய நவீன நாகரிகரின் நிலைமையை இனி எழுதுவோம்.

## New Sonnets in Tamil.

BY MR. V. SUBBA AIYER.

## தமிழ் நவீனப் பாசுரங்கள்.

### 20. தாய்களுக்கோர் விண்ணப்பம்.

நேரிசை யாசிரியப்பா.

தாய்களே ! உங்களுக் கோர்சிறு தாய
வாய்மொழி சொல்வதை மன்னித் தருளு
[மின் ;
சேய்களைச் செல்வத் துடனே வளர்த்தல்
அன்னையர்க் குரியநற் குணமே யாயினும்
அன்னவர் தங்களி னறிவிலா நிலைமையில்
அன்ன மளித்தலே போதா துணர்மின் ;
அவர்களை நல்வழி யடையச் செய்தல்,
தவறுகள் செய்வதைத் தடுத்துக் காத்தல்,
தேகம் பேணுதல், தெய்வந் தொழுதல்
ஆகிய வினையெலா மறிந்திட நீரே
இத்தரை தனிலவர்க் கிணையறு துணை
[யாம்
வித்தையைக் கொடுத்து விளக்குமின் மொழி
[லே ;
இவ்விதஞ் செய்திடி லிந்நிலஞ்
செவ்வனே யாகுதல் திண்ணந் திண்ண
[மே.

### 21. சகோதரர்.

நிலைமண்டில வாசிரியப்பா.

தனியே காட்டிடை நின்றிடு மோர்மரம்
தோப்பெனப் பெயர்பெறா தென்பதை
[யறிவோம் :
அத்தோப் பிலேயெனி லவ்விடம் நீழலும்
ஈரமுங் குறையுமென் றுரைத்திடல்
[வேண்டுமோ ?
அவ்வித மொருவன் தன்னந் தனியே
ஈட்டிடும் பொருளுங் கீர்த்தியுஞ் செல்வ
[மே
செழிப்பது துர்லப மாகையாற் சோதரர்
ஒன்றாய்ச் சேர்ந்திவ் வுலகிடை யுறைதல்
நன்றென வுணரும் நயமாய் ; மேலும்
சோலையி லோர்மரங் காற்றினால் விழுவ
[தைப்
பக்க மிருக்கும் பலமரந் தடுக்கும்,
அதுபோ லொருவன் வருந்தும் வேளை
[யில்
அன்னவன் சோதர ரவனுட னிருப்பின்
பின்ன மடையா திருப்பது மெளிதே.

### 22. பிள்ளைகளுக்கோர் கட்டுரை.

நேரிசை யாசிரியப்பா.

பிள்ளைகாள் ! வள்ளுவ ரெனுமோர் பெரிய
[வர்
உள்ளங் கனிந்தே யுங்களுக் கோர்மொழி
சொல்லிய துளதஃ தேதோ வென்னில்,
நல்லவ ரென்றே யுலகம் புகழ்ந்திட,
நீவிர் கீர்த்தியை நிலையா யடைந்து

நந்தமைப் பெற்ற தந்தையர் புகழைப்
பரவச் செய்து பாருளோ ரெல்லாம்
அன்னவ ரோம்பிய தவத்தைப் பேசுதல்;
அவ்வித மாய நிலையை யடையக்
கல்வியைப் போன்ற துணையிலை கருது [மின்;
அத்துட னறநெறி வழுவா திருமின்;
பெற்றவர் தம்மைப் பேணுமி னினிதாய்;
சிற்றறி வுடையோர் சேர்க்கையை
இற்றே விடுமி னிசையுடன் வாழவே.

---

### 23. குயில்.

நேரிசை யாசிரியப்பா.

நம்தே சத்தில் நயமாய் வசந்த
காலந் தன்னிலோர் காலை வேளையில்
இளந்தளிர் செறிந்த மரங்கள் நிறைந்த
தோப்பிடைச் செல்கையிற் காதுக்கினி [மையாய்
ஓர்புள் ளொழுங்காய்ப் பாடுவ தறிவீர்;
அச்சிறு பறவைச் சுத்தக் கறுப்பாய்
அல்லதேல் வெண்மை நிறம்வாய்ப் புள்ளி [கள்
கலந்தோ விளங்கிடு மிறகுக ளுடையது;
அதனின் குரலும தகத்திற் புகலுஞ்
சகந்தனை மறந்துநஞ் சங்கட மொழிப் [பீர்;
அவ்வித மாய வமிருத கானஞ்
செவ்விதாய்ச் செய்திட வதனைப் படைத் [துத்
தம்மருள் காட்டிய தயாபரன்
உம்மையுங் காத்திட வுறுதியாய்ப் பணி [மினே.

---

### 24. கிளி.

நேரிசை யாசிரியப்பா.

"சொன்னதைச் சொல்லுமாங் கிள்ளை" [யென்றே
இந்நிலத் துள்ளபே ரறிவுள மக்கள்
தாமா யொருபொரு ளுணரா தாரைக்
கேவல மாகக் குறித்துரை செய்வர்,
ஆயினுங் கன்னியின் மொழியைப் பேசி [டிற்
'பசுங்கிளி போன்றநற் பாவை' யென்பர்;
அவ்வித மெழில்வாய் கிள்ளையி லநேக
சாதி பேதமுஞ் சாற்றிடி லுண்டு;
பச்சை நிறமா யிருக்கும் பக்ஷியை
நித்தமுங் காணலாம், நேர்மை வாய்ந்த
பஞ்ச வர்ணமுந் தூய வெண்மையும்
சிவப்பு மின்னும் பலநிற முள்ள
கிளிகளி னழகைக் காண்டொறும்
அளிப்பவ னருளை யகத்திற் பதிமினே.

---

### 25. மழை.

நிலைமண்டில வாசிரியப்பா.

கடல்குளம் முதலிய நீர்நிலை களின்மேல்
சூரிய வெப்பஞ் சுருக்கெனப் பட்டதும்
அவைகளி லுள்ள தண்ணீ ராவியாய்
ஆகா யத்தினை யடைந்து நிற்கும்,
அதன்மேற் சில்லெனக் காற்று மடித்தி [டில்
அன்னது திரண்டுநன் மேகமாய் விளங்கி
அங்கு மிங்குமக் காற்றுடன் சென்று
தங்க முடியாக் கனமும் வாய்ந்திடில்
மழையெனப் பொய்திடும் மண்ணுளோ [ருய்ந்திட;
அம்மழை யில்லையே லருந்திட நீரும்
உண்ண உண்டியு முடிக்கத் துணியும்
கிடைப்பது துர்லப மென்பது திண்ணம்;
ஆகையால் மழையை யடிக்கடி பெற்றிட
அகில நாதனி னடிபணி வீரே.

The right of publishing all the sonnets that have appeared in book form is reserved by the author. Editors of other journals may publish them provided they send 2 copies of the issue in which they appear to V. Subba Aiyar, Seetharama Mudali Street, Vellore.



4-JAN 19..
148

## நம்மையாளும் ஜியார்ஜரசர்

### வெற்றிவாழ்த்துப் பஞ்சரத்நம்.

[ஸ்ரீமான் வி. வி. குமாரசாமி பிள்ளை எழுதியது.]

மன்னர்தம் வெற்றிவாழ்த்துவந் துரைக்க
முன்னர்வந் துதவும் முன்னவன் அடியே."

பாலோங்கு மேனியனைப் பார்புகழும் ஜார்ஜரசை
மாலோங்கு சேரார் மலைகடலை—நூலோங்கும்
மாதவனைப் போற்குடித்த வாகையனைமண்புரந்த
மாதவனைப் போற்பிடித்தம் வாழ்ந்து.

(1) மணமுறிய சடையான்மகன் வடிவேல் [கொடு முனமே
வழிமீறிய அவுணப்படை மடியப் [பொரு கதையும்
நிணமுறிய வேல்தாங்கிய நில்ஞெள் தச [ரதன்சேய்
நெறிகோடிய அரக்கன்படை நீறாக் [கிய செயலும்
குணமாறிய துரியோதனன் குலவேரொடு [மடியக்
குறித்தேதிரி புயல்போல்வரு குரி [சில்புரி பரிசும்
வணமுறிய பெருநூல்களி லறிந்தேமிது [நேரே
மகிழ்தந்தது கண்டேமொரு வளநல் [விளை வரவே.

(2) நயமுறிய நமக்கேயிது நாளுந்நிலை பெறு [மே
நடுமாறிய ஜர்மானியர் நாலாம்படை [யிருளும்
சயமேறிய ஜார்ஜாமனர் தாவாவொளிர் [நவிரால்
தரைவாடிய முறைநீடிய தனியே [வளர் செங்கோல்
வயமேறிய மதியேய்குடை வளர்வாகுற [விரிந்த
வண்டாமரை மலர்தாங்கிய திருமா [மகள் மகிழ்ந்தாள்
பயமாறிய குடிகள்வெகு பயனுனவை [புற்ற
பார்மீதினி வாழ்வேமிகும் பாரிது [மெய்யே.

(3) குலமாமகள் கொஞ்சுங்கிளி கொடியே [ரிடை மேரி
குணமாமலை குருமாமணி கொள்ளுங் [களி கண்டே
தலமாமகள் தானேமகிழ் தரவேபுரி நட [னத்
தாளாயின ளாமேபுவி தடையின்றியு [ரைக்கும்
மலர்மாமகள் அயனார்மனை வெண்டாமரை [மகளும்
வாளேந்திய வள்ளல்புய வதனத் [துறை பேறே
நலமாவர என்னேபுரி தந்தாரறம் நன்றே
ஞாலந்தனி லறவேகலி நலிந்தேநடந் [ததுவே.

(4) போரோங்கிய சேனைக்கொரு பொருவில் [பல படைக்கே
பூவில்வரு மயனும்புகழ் பொற்பே [யமை கொலைசேர்
கூரோங்கிய பரிக்கேகதி வகையோங்கிய [சமரே
குறியாவினை யாரும்பய மின்றே [முனை கூடி
வாரோங்கிய கழலன்பொடுவனந்தேசெ [யுற்றார்
மணிவண்டின முசுந்தொடை யண் [வான்புனை நாமம்
பாரோங்கிய தருவாழ்பசுங் கிளியுப்பயின் [றனவே
பலகூறியெ னுலகாமுட னலவு [முயி ரிவனே.

(5) தேனூறிய தார்சூடிய ஜியார்ஜாமர சிவ [தே

செயமாமகளோடேநெடு நாளேநனி [வாழ்க
வானேறிய புகழேநெறி குடையேகழல் [வாளே
மணிமாமுடி கொடியேமுர சணி [கோலொடு வாழ்க
கானூறிய குழலேந்திய கருணைக்கடல் [மேரி

காதல்புரி மக்கள்படை குடிகண் [ணில மென்றும்
மானேறிய கையானயன் அரியேயிவ ரரு [ளால்
வாழ்வோங்கிட வாழ்வோங்கிட [வாழ்வோங்கிட நன்றே.

பூர்த்தியின்பம்.

---

# The Lost Will.

BY MR. M. S. KRISHNASAMY IYER.

## காணாமற்போன மரணசாஸனம்.

### 11-ம் அத்தியாயம்.

சங்கரய்யருடைய இளையமனைவி சேஷியைப் பற்றி இனி நாம் கவனிப்போம். சேஷி தனது கணவன் இறந்து நாலைந்து மாதங்களானதும், அவள் தனது துக்கத்தை மறக்கலானாள். "ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வருவரோ மானிலத்தீர்" என்பது போன்ற பல நீதிவாக்கியங்களை அவள் எடுத்துச்சொல்லி: "பிறந்தவர் இறப்பது நிச்சயம், இறந்தவர் பிறப்பது நிச்சயம். சாவைத்தடுக்க ஈசனாலும் முடியாது. பிறப்பொழிந்தால் இறப்பும் ஒழியும். அதுவரையில் நாம் காலச்சக்கிரத்தில் அகப்பட்டுக் கஷ்டப்படவேண்டியது தான். ஆகையால், ஒவ்வொருவரும் ஸம்ஸாரபந்தங்களை விட்டொழிப்பதற்காக ஆத்மவிசாரணை செய்துவரவேண்டும். பகவானிடத்தில் மனத்தைச்செலுத்தி அவரை ஸதாஸர்வகாலம் ஸ்துதி செய்தவண்ணமாயிருக்கவேண்டும்—" என்றிவ்வாறு வேதாந்த உபதேசம் செய்யத் தலைப்பட்டாள். அவ்வூரிலுள்ள அநேக ஸ்திரீகளும் சில புருஷர்களும் அவளுடைய வேதாந்தத்தைக்கண்டு ஸந்தோஷமடைந்தார்கள். சேஷி எப்போதும் நெற்றிநிறைய விபூதியைப் பூசிக்கொண்டு கையில் சிறுமணிகள் உள்ள ருத்திராக்ஷமாலையை வைத்துக்கொண்டு உருட்டிக்கொண்டிருப்பாள். அவளுக்குக் கொஞ்சம் வாசிக்கத் தெரியும்.

ஊரிலுள்ள ஒவ்வொரு வீட்டிலிருந்தும் சேஷி புஸ்தகங்களைத் தருவித்து வாசித்துவந்தாள். இதனால் அவளை அநேகர் ஒரு பெரிய யோகினி யென்றே மதித்துவந்தார்கள்.

வரவர அவளுக்கு வேதாந்தம் முற்றலாயிற்று. இந்த தேகம் என்னத்திற்கு; இதை ஸம்ரக்ஷிப்பானேன்; இது எப்படிப் போனாலென்ன என்று அலக்ஷியமாய் இருந்துவிடுவோமென்று சொல்லி ஆகாரத்தைக் குறைக்கலானாள். இதனால் ஜனங்களுக்கு அவள்பேரில் மிகுந்த மரியாதை உண்டாயிற்று.

சேஷிக்கு ஸொத்து அதிகமானதனாலும், அவள் சிறுவயதினளானதனாலும், குடும்பத்தைக் கவனித்துவர வேறு மனுஷ்யாள் இல்லாததனாலும் அவளுடைய சகோதரர் சாம்பசிவ அய்யர் தமது மனைவி சகிதமாய் வந்து, சேஷி வீட்டில் தங்கியிருந்து ஸொத்தைப் பராமரித்துவந்தார். சேஷி எல்லாப்பொறுப்புக்களையும் தனது தமையனிடம் விட்டுவிட்டு ருத்திராக்ஷத்தை உருட்டுவதே பெரிய வேலையாகக் கொண்டுவிட்டாள்.

சாம்பசிவ ஐயர் மனைவி ஸீதை மிகவும் ஸாது. அவளுக்கு இகலோக விஷயங்கள் தெரியுமேயல்லாமல், பரலோக விஷயங்கள் ஒன்றும் தெரியாது. மோக்ஷம் என்றால் என்ன? ஸ்வர்க்கம் என்றால் என்ன? என்று



கேட்டால், அது தெரிந்தென்ன ஆகவேண்டுமென்பாள். உண்பதும் உறங்குவதுமே வேதாந்தமென்பாள். சேஷியைக்கண்டால் அவளுக்குப் பிடிக்கிறதில்லை. சேஷி வேதாந்தம் பேசிக்கொண்டு ரேழித்திண்ணையிலும் கூடத்திலும் உட்கார்ந்திருக்க, தான் சமையல் அறையில் உட்கார்ந்துகொண்டு சமையல் செய்து வந்தவர்களுக்கெல்லாம் சோறுபோடுவது அவளுக்கு இஷ்டமில்லை. ஏனெனில், சேஷி ஒருகாரியமும் செய்யாவிட்டாலும், தன்னுடன் பேசவந்தவர்களில் சிலரைத் தினம் சாப்பாட்டுக்கு அழைக்காமலிருப்பதில்லை. நித்யம் நாலைந்து ஸ்திரீகளும் குழந்தைகளும் சாப்பிட உட்கார்ந்துவிடுவார்கள். ஸீதை இரண்டொருமாஸம் பொறுத்துப்பார்த்தாள். அவளால் ஒன்றும் ஸகிக்கமுடியவில்லை. எத்தனைபேருக்குச் சமைத்தாலும் சில ஸமயங்களில் அதற்கதிகமாக ஸ்திரீகள் சாப்பாட்டுக்கு வந்துவிடுவது வழக்கம். தனக்கும் சாதம் போதாமல் போகும் ஏனெனில், ஸீதையம்மாள் சேஷிமேலிருந்த வெறுப்பால் அவளுடன் உட்கார்ந்து சாப்பிடாமல், அவளும் அவளுடைய தோழிகளும் தொலைந்தபிறகே சாப்பிடுவது வழக்கம். சில ஸமயங்களில் கொஞ்சங்கூட அன்னம் இல்லாமல்போய், மறுபடியும் சமைக்க நேரிட்டதுமுண்டு. இரண்டொரு ஸமயங்களில் தன் புருஷனிடம் குறைகூறியும், சாம்பசிவய்யர் அதை காதில் போட்டுக்கொள்ளவில்லை. சிலஸமயங்களில் மிச்சமிருந்த சொற்ப அன்னத்தை உண்டு ஸீதை திருப்தியடைந்ததுமுண்டு; சிலநாள் சிரமத்தால் மறுபடி சமைக்க மனமில்லாமல் பொரிமாவை மோரில்கரைத்துக் குடித்துவிட்டு சும்மாயிருந்ததும் உண்டு.

ஒருநாள் சேஷியிடம் அதிகம்பேர்கள் பேசவாததைக்கண்டு, ஸீதை கொஞ்சமாய் சாதம் சமைத்திருந்தாள். நித்தியம் உண்டு ருசிகண்ட ஸ்திரீகளும் குழந்தைகளும் சாப்பாட்டு வேளைக்கு அங்குவந்துவிட்டார்கள். சமைத்த சாதம் அவர்களுக்கே போதும்போதாமலிருந்தது. அன்று கறிகூட்டுகூட மிஞ்சவில்லை. குழம்பு ஒருசாண்டிதான் மிஞ்சிற்று. சேஷியும் மற்றவர்களும் மறுபடியும் வம்புக்குப் போனதும், ஸீதை தனது கஷ்டத்தை நினைத்து துக்கப்பட்டு, சமையலறையில் ஒரு ஓரமாகப் படுத்துக்கொண்டாள். அப்போது சாம்பசிவய்யர் ஏதோ கார்யமாக சமையலறைக்குவந்து அவள் படுத்திருப்பதைப்பார்த்து,

"ஏன், சாப்பிடவில்லையோ?" என்று கேட்டார்.

ஸீதை தன் புருஷனைத் துன்பப்படுத்த இஷ்டப்படுவதில்லை. தன் கஷ்டகாலம், பிறருக்கெல்லாம் சமையல் செய்து போடவேண்டுமென்று தலையில் எழுதியிருக்க, பிறரை நோவானேன் என்று அதிகம் குறைகூறுவதில்லை. ஆகையால் அவள், "சிரமமாயிருந்தது; அதனால் படுத்துக்கொண்டேன்; சாப்பிட்டால் போகிறது" என்றாள்.

சாம்பசிவய்யர் பிறர் விஷயத்தில் எப்படியிருந்தாலும், தமது மனைவியின்மேல் அவருக்கு அதிக அன்புண்டு. பூலோகத்தில் மற்ற எதற்கும் கட்டுப்படாதவர் அவளுடைய வார்த்தைக்குமாத்திரம் கட்டுப்பட்டு நடப்பார். ஸீதை மிகுந்த குணவதியாகையால், அவளுக்கு யாதொரு தொந்தரவும் அவர் வைப்பதில்லை.

சிரமத்தால் படுத்துக்கொண்டிருப்பதாகத் தெரிந்ததும், சாம்பசிவய்யர் தாமே சாதம் பரிமாறுவதாகச் சொல்லி ஒரு இலையை எடுத்துப் போட்டு, ஜலந்தெளித்து, அதில் அவளை உட்காரச் சொல்லிவிட்டு, கறியெடுக்கப்போனார். கறியையும் காணோம் கூட்டையும் காணோம். மற்ற பாத்திரங்களையும் அவர் பார்த்தார்; எல்லாம் துடைத்திருந்தது.

"ஏன்? எல்லாம் ஆகிவிட்டதா?"

"ஆம், ஆகிவிட்டது."

"நீ சாப்பிட வேண்டாமோ?"

"என்னமோ, சாப்பிடாவிட்டால் போகிறது. நெல்லுமாவையாவது அவலையாவது எடுத்துக் கொண்டால் போகிறது."

"ஏன்? கொஞ்சம் அதிகமாகச் சமையல் செய்யக்கூடாதோ? நித்தியம் இப்படித்தானே?"

"எத்தனைபேர் இலையில் உட்காருவார்களென்று யாருக்குத் தெரியும். நான்தான் பரிசாரகியாய்ப் போனேன். என்னிடத்தில் யார் இதைச் சொல்லுகிறார்கள். அவாள் வந்து சாப்பிட்டுப் போகவேண்டியது. இங்கு நான் எப்படிப் போனாலென்ன."

"நீதான் இன்னும் கொஞ்சம் அதிகமாக வடிக்கக்கூடாதோ? உனக்காகத் தெரிய வேண்டாமோ இது?

"அது பிசகுதான். அதற்கபராதம் இதோ அனுபவிக்கிறேனே. அது போதாதா? நான்தான் பரிசாரகியாய்ப் போய்விட்டேன். கண்ட பேர்களுக்கெல்லாம் சமையல் செய்து போடவேண்டுமென்று என் தலையில் எழுதியிருக்கிறது. சரி, அதைப்பற்றி உங்களுக்கென்ன கவலை."

"இல்லை. யாரத்திலாவது கொஞ்சம் சாதம் வாங்கிக்கொண்டு வரட்டுமா?"

"சரி, மானம்போகவேண்டியதுதான் பாக்கி. இப்போதே என்னைப் பரிசாரகி என்று பலர் ஏளனஞ் செய்யப்போகிறார்கள். நீங்களும் சோற்றுப்பிச்சை கேட்கப் போங்கள் எனக்காக."

"அப்புறம், நீ சாப்பிடவேண்டுமே; என்ன செய்வாய்?"

"என்னமாவது செய்கிறேன். அவல் இருக்கிறது—"

இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கையில் சேஷி தீர்த்தம்குடிக்க சமையலறைக்கு வந்தாள். "என்ன விஷயம்" என்று கேட்டாள். சாம்பசிவய்யர் விஷயத்தைத் தெரிவித்தார்.

அதற்கு சேஷி கொஞ்சமும் வருத்தங்காட்டாமல், மறுபடியும் சமைத்தால் போகிறதென்றும், அதிகமாகச் சமைக்கிறதற்கென்னவென்றும், யார் வீட்டிலாவது கொஞ்சம் சாதம் வாங்கிக்கொண்டு வரலாமென்றும் சொன்னாள்.

சீதை புருஷனிடம் தனிமையாக இருக்கும்போதுதான் தாராளமாய்ப் பேசுவாளேயொழிய, பிறர் முன்னிலையில் ஒன்றும் பேசுவதில்லை. ஆனால், சேஷி சொன்ன வார்த்தைகளால் அவளுக்குக் கோபம் தன்னையுமறியாமல் வந்துவிட்டது; எவ்வளவு அடக்கியும் அடங்கவில்லை.

"உன் வீட்டில் பரிசாரகியாய் வந்து கண்ட பேரிடத்தில் பேச்சுக்கேட்பதும் போதாமல், சோற்றுப் பிச்சையெடுக்கச் சொல்லுகிறாயா? உன் வீட்டில் சமையல்காரியாய் வந்திருக்கிறேனே அந்த அதிருஷ்டத்தைச் சொல்லவேண்டும். நீ என்ன செய்வாய். பணமிதப்பு. தோன்றினதெல்லாம் பேசுவாய்" என்று சொல்லிவிட்டு வேறு ஒரு அறைக்குள் போய்ப் படுத்துக்கொண்டாள்.

சேஷியம்மாள் சீதையைச் சற்று தூஷித்து, சமையலுக்கு ஆள் போடுவதாகச் சொல்லிவிட்டு, வேதாந்த விசாரணை செய்யப் போய்விட்டாள். சாம்பசிவய்யர் தன் மனைவியைத் தேடிப்போய் சமாதானம்செய்து, பேரில் நனைத்த அவலும் பொரிமாவும் சாப்பிடும் வரையில் கூட இருந்து, அவள் பிடிவாதத்துக்கு இணங்கி தனிக்குடித்தனத்துக்குச் சம்மதப்பட்டார்.

அன்றிரவு சமையல்காரி வந்துவிட்டாள். அலமேலு அம்மாள் சேஷியின் பரிதாபநிலைமைக்கு வருத்தப்பட்டு, தனக்கும் தன் புருஷனுக்கும் மாஸம் ஏழு ரூபாயும், வேறு யாராவது பந்துக்கள் வந்துவிட்டால் அவர்களுக்குச் சாப்பாடும், இவை இருந்தால் போதுமென்று சொல்லி ஒப்புக்கொண்டாள். பற்று பாத்திரம் தேய்க்க ஒரு வேலைக்காரி நியமிக்கப்பட்டாள். அலமேலு தன் புருஷனுக்கு ஏதாவது கணக்கு எழுதக்கொடுத்தால் அதற்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டியதில்லையென்றும், தன் புருஷன் வேலைபார்த்து வருவார் என்றும் சொன்னாள்.



சேஷி தனது தமையன் என்ன சம்பளம் போட்டுக்கொடுக்கிறானோ அதைக் கொடுப்பதாகச் சொன்னாள். சாம்பசிவய்யர் 10 ரூபாய் கொடுக்க ஸம்மதித்தார். தம்பதிகளிருவருக்கும் சேஷி வீட்டில் சாப்பாடும் சம்பளமும் கிடைத்தது.

(தொடரும்,)

எம். எஸ் கிருஷ்ணசாமி ஐயர்.

---

## The Diamond Ring.

By Mr. S. Narasimhachariar, B.A; B.L.

*High Court Vakil, Madras.*

## வைர மோதிரம்.

### அத்தியாயம்—2.

### காந்திமதி கண்ட கனவு.

பனைப்பாளையத்துக்கு எழுபதுமைல் தூரத்தில் பூங்குப்பம் என்ற ஊரில், மற்றொரு ஜமீன்தார் இருந்தார். அவர் பெயர் பாண்டுரங்கபூபதி. இவர் சொக்கநாதருக்கு நெருங்கின பந்து. இவருக்கு ஏகபுத்திரியாகிய ஸௌந்தரவல்லி என்னும் கன்னிகை, அழகிலும் புத்தியிலும், அடக்கத்திலும், தனக்குச்சமானமானவர் இல்லையென்று அனைவரும் கூறுமாறு, சிறந்து விளங்கினாள். பாண்டுரங்கரும் சொக்கநாதரும் அடிக்கடி சந்திப்பது வழக்கம். இப்படி ஒருஸமயம் ஸந்தித்தபோது, அப்போது பத்துவயதுள்ளவனாயிருந்த அம்பலவாணனுக்கும், சிறுபெண்ணான ஸௌந்தரவல்லிக்கும் விளையாட்டு ஸ்நேகம் உண்டாகி, நாளடைவிலே அந்த அன்பு மேன்மேலும் விருத்தியாயிற்று. இப்படியிருக்க, ஒருமுறை பாண்டுரங்கர் சொக்கநாதருடைய வீட்டிற்கு வந்திருந்தபோது, இவ்விருவருக்கும் ஏதோ காரணத்தால் அற்ப மனஸ்தாபம் உண்டாயிற்று. ஊசிமுனை அவ்வளவு பிரமாணமுள்ள நெருப்புப்பொறி ஐந்து நிமிஷத்திற்குள் ஆகாயம் வரையிலும் கொழுந்துவிட்டெரியும் பெரு நெருப்பாவதுபோல, முதலில் அல்பமாயிருந்த த்வேஷம் தினேதினே பெரிதாகிவரவே, கடைசியாக இவ்விருவருக்குள் போக்குவரவுமின்றி பேச்சும் இல்லாமல் போய்விட்டது. என்றாலும், அம்பலவாணனுக்கும் ஸௌந்தரவல்லிக்குமுள்ள பரஸ்பர அன்புமாத்திரம் கொஞ்சமும் குறையவில்லை. இவ்வாறே சில வருஷங்கள் கழிந்தன.

அம்பலவாணனுக்கு இப்போது வயது இருபதாயிற்று. ஸௌந்தரவல்லிக்கு வயது பதினாறு. சிறுவயதில் உதித்த பால்ய ஸ்நேஹம் இப்போது இவ்விருவருக்கும் காதலாக முதிர்ந்தது. சொக்கநாதருடைய அந்தஸ்தைக்கண்டு அவருடைய புத்திரனுக்குத் தங்கள் பெண்களைத் தருகிறோம் என்று அநேக தனவான்கள் மேல்வந்து முயன்றபோதிலும், அப்பெண்களில் ஒருவரையும் அவன் விரும்பினானில்லை, தான் மணந்தால் ஸௌந்தரவல்லியை மணப்பது; அது கூடாவிடில், கல்யாணமில்லாமல் ஏகாங்கியாகக் காலத்தைக் கழிப்பது என்று அவன் மனவுறுதிகொண்டான். சொக்கநாதருக்கும் பாண்டுரங்கபூபதிக்கும் மனஸ்தாபம் உண்டாவதற்குமுன், ஸௌந்தரவல்லியைத் தன் புதல்வனுக்கே மணஞ்செய்விக்க வேண்டுமென்று அவர் எண்ணியிருந்தார். ஆனால், மனஸ்தாபம் உண்டானவுடனே அவர் தன் புதல்வனை அழைத்து, "அம்பலம்! நான் இன்று உன்னிடம் சொல்வதைக்கவனமாய்க்கேள். பாண்டுரங்கருக்கும் எனக்கும் ஜன்மசத்ருத்திரம் உண்டாய்விட்டதென்று உனக்குத் தெரியுமல்லவா. ஸரி, அவருடைய பெண்ணின்மீது நீ பிரியம் வைத்திருந்தாய்; அந்த வனிதையும் உன்னை நாடினாள். அப்பெண் சிறந்த குணபூஷணி என்பதற்குத் தடையில்லை. ஆயினும்,

அவளை இன்றுமுதல் அறவே நீ மறந்துவிடுவது அவசியமாகும். என் விரோதியின் புத்ரியை உனக்கு மணஞ்செய்விக்க என்மனம் ஒப்பவில்லை. அக்கன்னிகையைக்காட்டிலும் அழகும் அந்தஸ்தும் மிக்கவளும், உன் மனதிற்கிசைந்தவளுமான ஒரு பெண்ணைத்தேடி உனக்குக் கல்யாணம் செய்துவைக்கிறேன். இதைப்பற்றி நீ கவலை கொள்வதும் முயல்வதும் வேண்டாம். நான் உன்மீது அளவில்லா அன்பும் ஆதரவும் உள்ளவன் என்று உனக்குத்தெரியும். இந்த விஷயத்தில் நீ என் இஷ்டத்திற்கு மாறாக நடப்பாயாகில், என்னுடைய அன்பெல்லாம் வற்றி, அவ்வளவுக்கவ்வளவு கோபம் மூளும். அன்றுமுதல் எனக்கு நீ புத்திரன் அல்லவென்று உறுதியாய் நினைத்துக்கொள். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பதை மனத்தில் ஊன்றி, என் விருப்பத்தை நிறைவேற்றுவாயாகில், அப்பொழுதான் நீ எனக்கு ஸத்புத்ரன் ஆவாய்" என்றார்.

தந்தைகூறிய மொழிகளைக்கேட்ட அம்பலவாணன், இடியோசைகேட்ட ஸர்ப்பம்போலப் பிரமித்து நின்றான். அவருக்குப் பதில்சொல்ல அவனுடைய நா எழவில்லை. "நான் மிகவும் அருமையாகக் காதலித்த பெண்மணியை 'உடனே மறந்துவிடு' என்று தந்தை சொல்லிவிட்டாரே! நான் எவ்வளவு துரதிருஷ்டசாலி! என் தந்தையினுடைய கட்டளையை இன்றுவரையில் நான் கொஞ்சமும் மீறிநடந்தவனல்லவே. இப்போதும் அவ்வாறே அவரிஷ்டப்படி நடக்க முயலலாமென்றால், அது என்னால் ஸாத்தியமானதல்லவென்று தோன்றுகிறது. கனவிலும் நினவிலும் ஸௌந்தரவல்லியின் முகமே என் கண்முன் நிற்கின்றதே; என்னசெய்வேன். வெகு ஸுலபமான காரியம்போல, 'அவளை மறந்துவிடு' என்றாரே. அந்தக் காதற்கனியை மறப்பது கூடுமான காரியமா? ஆயினும், ஒருகால் முயன்று பார்க்கலாம். கடவுள் எனக்குத் துணைபுரிவாராக!" என்று அம்பலவாணன் சற்றுநேரம் தனக்குள் பிரலாபித்து, பிறகு ஒருவாறாகத் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு, அன்றுமுதல் ஸௌந்தரவல்லியை நினைப்பதில்லை என்ற விரதத்தை அநுஷ்டிப்பானானான். ஆயினும், மனம்நிறைந்த காதலை ஜயிப்பது மனிதரால் கூடுமான காரியமா? அவன் எவ்வளவுக்கெவ்வளவு முயன்றானோ அவ்வளவுக்கவ்வளவு காதலும் மிகுந்து பெருகிற்று. அவன் மனத்தினின்றும் ஸந்தோஷம் அகன்றது; துக்கம் மேலிட்டது. அன்றுமுதல் அவன் தன் ஸ்நேகிதரிடத்திலாவது, தனதருமைத் தாயினிடத்திலாவது, தந்தையிடத்திலாவது தான் காதலித்த பெண்மணியைப்பற்றி ஒரு வார்த்தையும் பேசவில்லை. இவ்வாறு தன் புதல்வன் இருப்பதைக்கண்ட சொக்கநாதர், தன் கட்டளைப்படி அவன் நடப்பதைக்கண்டு மிகவும் ஸந்தோஷித்தபோதிலும், அவனுக்குத் துக்கம்மேலிட்டிருப்பதைக்கண்டு அவன் விஷயத்தில் மனமிரங்கி; அவனுக்கு எந்தமார்க்கத்தால் ஸந்தோஷம் விளைக்கலாமென்று கருதி, தன்னாலியன்றவரையிலும் அவனிடம் பிரீதிபாராட்டி ஆதரித்துவந்தார். ஆயினும், நோயொன்றும் மருந்தொன்றுமாதலால், அம்பலவாணனுடைய துக்கம் கொஞ்சமும் குறையவில்லை.

காந்திமதியம்மாளுக்கு மனம் தவித்து. எப்போதும் ஸந்தோஷமுகத்துடன் உலாவிவரும் புதல்வன் திடீரென்று வியாகூலமடைந்து நாளடைவில் மனங்குழைவதைக் கண்டால், தாய்க்கு மனந்தாளுமா? அதனிலும், காந்திமதியம்மாளுக்கு ஒரே பிள்ளை. தன் அருமைப் புதல்வன் இவ்வாறு வருந்துவதைக் கண்டு அந்த அம்மாளும் வருந்தினாள். தன் புதல்வனிடத்தில் மிகுந்த அன்புபாராட்டி அவனை உபசரிப்பாளானாள். தனது குலதெய்வமான திருப்பதி வேங்கடாசலபதியை அல்லும் பகலும் தியானித்து, அக்கடவுளுடைய அருளாலன்றித் தன் குமாரனுக்கும் தனக்கும் ஸந்தோஷம் உண்டாகாதென்று துணிந்து, அப்பகவானை அநுதினமும் பிரார்த்தனை செய்தாள்.



ஒருமுறை திருப்பதிக்குச்சென்று அந்தக் கடவுளைத் தரிசித்து வந்தால், தன்னுடைய பெருங்குறை நீங்கும் என்று நினைத்தாள். ஓர் நாள் இரவில் காந்திமதியம்மாள் நித்திரை செய்யும்போது, தான் தனது புருஷனோடும் புத்திரனோடும் திருப்பதிக்குச் சென்றதுபோலவும், அங்கு ஸ்வாமியைத் தரிசித்து மலையினின்றும் கீழிறங்கினவுடன் தனது குமாரனுக்கும் ஸௌந்தரவல்லிக்கும் கல்யாணம் நடந்தேறியதுபோலவும், அன்றுமுதல் தன்குடும்பத்தில் ஸகலவித ஸம்பத்துக்களும் நூற்றுக்கணக்காகப் பெருகினதுபோலவும் கனவுகண்டு விழித்து, "ஹா! என்னகனவு கண்டேன்! எல்லாம் நிஜமாக நடந்ததுபோலவே தோன்றிற்றே. இது ஸ்வாமியின் பெருங்கருணையால் வந்த கனவேபோலும். கடவுளுடைய அருளுக்கு எல்லையுமுண்டோ! நாம் அவரைத் தரிசிக்கவேண்டுமென்று அவருக்குத் திருவுளம் போலும். அவ்வாறே செய்வோமாக. பாலகனைக் காலொடுகையமுக்கிப் பால்புகட்டும் தாய்போல, தாமே என் மனத்தில் தோன்றி, தன்னை வந்து வணங்கித் தரிசிக்குமாறு ஏவின கடவுளின் கருணையேகருணை! ஸ்வாமி! என் குழந்தைபடுங் கவலையைத் தீர்ப்பது உமது பாரம். உம்மையல்லால் தெய்வமில்லை" என்று மனத்தால் வணங்கி, அன்றிரவு கழிந்து, பொழுது புலரும்வரையிலும் கண்ணுறங்காது விழித்திருந்தாள்.

வெளியூர்க்குச் சென்றிருந்த சொக்கநாதர் வீட்டுக்கு வந்தவுடன், காந்திமதியம்மாள் தான் கண்ட கனவை அவரிடம் சொல்லி விரைவிலே ஸ்வாமிதரிசனம் செய்வது நல்லது என்று அவரை வேண்டினாள். அம்பலவாணனுக்கும் ஸௌந்தரவல்லிக்கும் விவாஹமானதாகக்கண்ட கனவைமாத்திரம் அவரிடம் அவள் கூறவேயில்லை. இதற்குக் காரணம் நாம் சொல்லாமலே விளங்குமல்லவா?

## அத்தியாயம்—3.

## மலைக்கடவுள் கோயில்.

பிரயாணத்திற்கு வேண்டிய யாவும் சித்தமாயின. நல்லநாளில் சொக்கநாதர் முதலியோர் எல்லோரும் தம்மூரைவிட்டுப் புறப்பட்டு, ஒருவாரம் பிரயாணம் செய்து, எட்டாம்நாள் காலையில் திருப்பதிமலையின் அடிவாரத்திலுள்ள திருச்சானூரையடைந்தார்கள். அங்குத் திருக்கோயில்கொண்டு விளங்கும் அலர்மேல்மங்கை நாயகியைப் பணிந்து இரண்டுநாள் அங்கேயே தங்கியிருந்து, சனிக்கிழமை காலையில் மலையேறி வெங்கடாசலபதியை அனைவரும் தரிசித்தார்கள். ஆறுமலையுங்கடந்து ஏழாவது மலையில் அப்பரமன் நிற்கும் கோயிலையும், ஸ்வர்னகலசங்கள் வரிசைவரிசையாக நிறைந்துள்ள ஆகாசமளாவிய கோபுரங்களையும், அங்குப் பலதேசங்களினின்று வந்திருந்த ஜனங்களையும், அவர்கள் பக்திவிஞ்சி, "கோவிந்தா கோவிந்தா! வடக்குமலையானே! ஏழுமலையானே! வெங்கடாசலபதியே! மும்மூர்த்திகளின் ஸ்வரூபமான முதல்வா! இளங்குமார் கோமானே! நாராயணா!" என்று கூவி ஓலமிடுவதையும், கண்ணுக்கெட்டின தூரம் வரையிலும் உயர்ந்த மலைகளும், அவற்றின்மேல் பச்சைப்பசேலென்று உயர்ந்து வளரும் மரங்கள் செடிகள் புல்பூண்டுகளையும், அம்மலைகளின்மீது ஸஞ்சரித்துப் பறக்கும் வெளுத்த மேகங்களையும், ஆங்காங்கு ஓடும் அருவிகளையும் கண்ட அம்பலவாணன் ஆனந்த பரவசனாகி, இதுகாறும் தன் மனத்தைவிட்டு நீங்காதிருந்த துக்கத்தையும் மறந்தான்.

கோயிலுக்கு வடக்கேயுள்ள பொய்கையில் அனைவரும் ஸ்நாநம்செய்து, தூய உடை தரித்து, நெற்றியில் வெளுத்த நீரணிந்து கோயிலுக்குச் சென்றார்கள். பகவானை விரைவில் தரிசிக்கவேண்டுமென்னும் பேராவலினால், அம்பலவாணன் மற்றெல்லோருக்கும் முந்திச் சென்றான். அவன் ஸந்நிதியில் நுழைந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து கடவுளைப் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்யலானான்.

1. "நோற்றேன் பல்பிறவி உன்னைக் காண்ப
[தோர் ஆசையினால்;
ஏற்றேன் இப்பிறப்பே இடர் உற்றனன்;
[எம்பெருமான்!
கோற்றேன் பாய்ந்தொழுகும் குளிர்மா
[மலை வேங்கடவா!
ஆற்றேன் வந்தடைந்தேன் அடியேனை
[ஆள்கொண்டருளே. *

2. தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள்
[செய்துமிட்டேன்;
பெரியேன் ஆயினபின் பிறர்க்கே உழை
[த்து ஏழையானேன்;
கரிசேர் பூம் பொழில்சூழ் கனமாமலை
[வேங்கடவா!
அரியே! வந்தடைந்தேன்; அடியேனை
[ஆள்கொண்டருளே. *

3. † வரிசேர்ந்திடு சேல்கணை யோவெனும்
இருள் போன்றிடு வேலையு நீலமும்
வடுவாங்கிடு வேல் விழிமாதர்கள்—
[வலையாலே

வளர்கோங்கிள மாமுலை ஆகிய
தனவாஞ்சையி லேமிக மாயையில்
வளர் மாந்தளிர் போனிறமாகிய—வடி
[வாலே

இருள் போன்றிடு கார்குழல் நீழலின்
இழைசேர்ந்திடு பாயலின் மீதுற
இனிதாம்கனி வாயமுதூறல்கள்—பரு
[காமுன்

எமதாம்தன மானவை போனபின்
எவர் வேண்டுவ ராகில மேயினி
வைசீங்கிட வேயிரு தாளினை—
[அருள்வாயே

கரிமாயதி தேர்திரள் சேனையும்
உடனாம்கதி யோதனனாதியர்
அவர் மாண்டிட வேஒரு பாரதம்—அதி
[லேகி

கனபாண்டவர் தேர்தனி லேயெழு
பரிதூண்டிய ஸாரதி யாகிய
கதிரோங்கிய நேமிய னாமரி—ரகுரா
[மன்

திரைநீண்டிரை வாரியும் வாலியும்
நெடுவான்பயில் மாமரம் ஏழொடு
தசமாம்சிர ராவண னார்முடி—பொடி
[யாக

சிலைவாங்கிய நாரண னார்மரு
மகனாம்குக னேபொழில் சூழ்தரு
திருவேங்கட மாமலை மேவிய—பெரு
[மாளே!

4. ['பாலைவாய்க முகில்' என்ற காவடிசிந்துமெட்டு.

* (i) ஐயிரண்டு மலையுமேறி ஆழ்ந்தகுளம்
[தன்னிலாடி
ஆலயம் வலம் புரிந்த பின்னர்—உன்
[றன்
தேசுதிகழ் ஸந்நிதியின் முன்னர்
மெய்சிலிர்த்துக் கைகுவித்துக் கண்
[ணீர்த்து வாய்பிதற்றி
மெய்த்த நின்பல் நாமம் ஓதுவோமே—
[நின்முன்
பேயர் என்னப் பாடியாடு வாமே.

(ii) மனைவிமக்கள் சுற்றமென்னும் நினைவி
[லேயமுந்தினின்று
நீசராளேம் நாங்களிந்த மண்ணில்—
[யாங்கள்
என்று சேர்வோம் நின்னுலகாம் விண்
[ணில்.
நினைந்து நைந்துன் குணங்களேத்தி நின்
[கருணைக் குரியராக
நீயலவே காத்தருளல் வேண்டும்—
[அன்றேல்
தீப்பிறப்பில் உழலுவோம் பல்லாண்டும்.

(iii) கோபதாபம் குரோதம் சொலைகளவு
[க்ரூரம் செய்தோம்
குறுக நின்னை மிகவுமஞ்சி நின்றோம்—
[தயைநீ
செய்யில் பாவந் தன்னை இன்றேவென்
[றோம்.

* பெரிய திருமொழி.

† திருப்புகழ்.

* இந்நூலாசிரியர் இயற்றியது.



3 ma 2 11/4116 DM 1 2 16990 800

சாபமாரும் நீலமேகம் வேகமோடு மாரி
[பெய்யும்
மலையினுற்ற நலவிளக்கே கோவே!—
[நின்னை
அல்லால்உண்டோ விண்ணில் மற்
[றோர் தேவே!

(iv) நாரணா! அலர்மேல் மங்கை நண்ணும்
[மார்பா நாரசிங்கா!
நந்தகோபன் சிறுவனே எம்மானே!—
[பத்தர்
சிந்தை தன்னில் என்றும் ஊறும்
[தேனே!
பூரணா! ஓ புண்டரீகம் போன்ற கண்ணா!
[புண்ணியத்தின்
பொருளும் வேதப் பொருளும் ஆன
[நாதனே!—வானோர்
பூச்சொரிந்து போற்றிடும் பொற் பாத
[னே!

(v) குன்றெடுத்துக் குடைபிடித்துக் கோவ
[ளர்த்துக் கன்றடர்த்து
கோகுலத்தில் கோபிமாரோ டாடி—
[நாகக்
கொடி உயர்த்தோன் செயல்நினைந்து
[வாடி,
வென்றிதன்னை அர்ச்சுனனார் பெறுவதற்
[காய் வார்பிடித்து
வாசியோட்டி வாகைதந்த வள்ளலே—
[கோது
முற்றியுள்ள எம்மைநீ இன்றெள்ளலே.

என்றும் இன்னும் பலவாறாகவும் ஸ்தோத்ரம் செய்து, ஸந்நதியினின்றும் வெளியேவந்து, கோயிலை ப்ரதக்ஷணம் செய்வதற்குத் திரும்பினான்.

நிற்க. பாண்டுரங்கபூபதியாருக்கு மிகவும் நண்பரான ஒருவர் சந்திரகிரியில் இருந்தார். அவர் புதியதாக ஒரு மாளிகை கட்டி, அதில் கிரகப்பிரவேசம் செய்ய ஒரு நல்லநாள் பார்த்து, அந்தத் தினத்தில், தன் உறவினர் நண்பர் முதலானோர்க்கு அப்புதுவீட்டில் பெரிய விருந்து செய்தார். அந்த விருந்துக்குப் பாண்டுரங்கரும் அவருடைய மனைவியும் ஸௌந்தரவல்லியும் வந்திருந்தார்கள். சந்திரகிரிக்கும் திருப்பதிமலைக் கோயிலுக்கும் தூரம் கொஞ்சமேயாகையால், அவ்வளவு தூரம் வந்திருந்தும், ஸ்வாமிதரிசனம் செய்யாமல் போனால் தெய்வாபசாரம் நேருமென்று எண்ணி மலைக்கு வந்திருந்தார். அவர் ஆலயத்தில் நுழைகையில், அம்பலவாணன் ஸ்வாமி தரிசனம் செய்து வெளியே வரும்போது அவருக்கு எதிர்ப்பட்டான். தலைநிமிர்ந்து பார்த்தவுடன், பாண்டுரங்கரையும் அவர் மனைவியையும் ஸௌந்தரவல்லியையும் அவன் கண்டான். ஸௌந்தரவல்லியின் நேத்திரங்களும் அம்பலவாணனுடைய கண்களும் ஒன்றையொன்று ஸந்தித்தவுடனே, தான்நெடுநாளாய்க் காணாது திடீரென்று தன் காதலியைக் கண்ட ஆச்சரியத்தாலும் ஸந்தோஷத்தாலும் பிரமித்தவனாய், அவ்வணங்கினையே ஒரு நிமிஷநேரம் உற்று நோக்கிய வண்ணமாயிருந்தான்; பிறகு உடனே தன் செயலைக்குறித்து நாணமடைந்தான். அம்பலவாணன் முகக்குறியைப் பார்த்திருந்த பாண்டுரங்கர் அவன் தலைகுனிவதைக் கண்டு,

"அப்பா! அம்பலம்! நீ இங்கு எப்பொழுது வந்தாய்? எதிர்பாராதிருக்கையில் உன்னை நான் திடீரென்று கண்டதில் எனக்கு மிகுந்த ஸந்தோஷம். உன்னைநான் பார்த்து நான்குவருஷங்களுக்கு மேலாகின்றது. நீ ஸௌக்கியமா? உன் தாயும் தந்தையும் ஸௌக்கியமாக இருக்கின்றார்களா?" என்று கேட்டார்.

அவருடைய கேள்விகளுக்கு அம்பலவாணன் என்ன பதில் கூறினானென்பது அவனுக்கே தெரியாது. பிறகு பாண்டுரங்கர்,

"அம்பலம்! தென்னண்டை வீதியில் உத்தராதியார் சத்திரத்திற்கு மேற்கேயுள்ள மாளிகையில் நாங்கள் தங்கியிருக்கிறோம். ஸாயங்காலத்தில் நீ அங்கே வர முடியுமா? கொஞ்ச நேரம் நான் உன்னுடன் பேசி, உனது யோக க்ஷேமங்களை அறிய விரும்புகிறேன்; வரக்கூடுமோ உன்னால்?—ஸ்வாமி தரிசனம் செய்ய

நேரமாகிறது. நாங்கள் போய்வருகிறோம்" என்று கூறினர்.

"அப்படியே அவசியம் வருகிறேன் மாமா" என்று அம்பலவாணன் பதில் சொன்னவுடன், பாண்டுரங்கரும் அவருடனிருந்தவர்களும் கோயிலுக்குள் சென்றார்கள். அம்பலவாணனோ, தான் நின்ற நிலையிலேயே ஸ்தம்பம்போல் நின்றான். அவனுடைய மனமனைத்தும் ஸௌந்தரவல்லியைப் பின்பற்றிச் சென்றது.

"ஆகா! இது ஆச்சரியமாகவேயிருக்கின்றது. ஸௌந்தரவல்லியை இங்கே ஸந்திப்பேனென்று நான் ஒருபொழுதும் எண்ணினதில்லை. அவளை நான் பார்க்க நேர்ந்தது ஸ்வாமியினுடைய அளவில்லாத கருணையின் பொருட்டே. அவளும் என்னை அன்புடன் உற்று நோக்கினாள். அவளுடைய உடம்பு இப்போது சற்று இளைத்திருக்கின்றது. ஒருவாறு துக்கத்தால் வாடிய முகத்தோடு தோன்றினாளே; என்ன காரணமோ விளங்கவில்லை. எல்லாவற்றையும் இன்று ஸாயங்காலம் கண்டறிவோம். அதுவரையில் எப்படி காலங்கழிப்பதோ—" என்றிவ்வாறு அம்பலவாணன் பலவிதமாகச் சிந்தித்துக்கொண்டே ஸந்நிதியைப் பலமுறையும் வலம்வந்து, கொஞ்ச நேரம் சென்றபின் வீட்டிற்குத் திரும்பினான்.

சொக்கநாதரும் காந்திமதியும் அவனுக்கு முன்பே வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டபடியால், அவர்கள் பாண்டுரங்கரைக் காணவில்லை.

எஸ். நரசிம்மாச்சாரியர், பி.ஏ., பி.எல்.

---

## Cultivation of Onians.

### வெங்காய சாகுபடி.

வெங்காயமானது தோட்டக்கால்பயிரைச் சேர்ந்தது. இது சாதாரண ஜனங்களுக்கு உணவுப்பொருளாக உபயோகப்படுகின்றது. ஆகவே இது பலவிடங்களிலும் ஏராளமாக விற்பனையாகின்றது. இப்பயிர் செய்வதற்குக் குளிர்காலமே ஏற்றது. மழை அதிகம் தேவையில்லை.

#### நிலம்.

வெங்காயப்பயிர் செய்வதற்கு நல்ல வடிகால் வசதியுள்ள நிலமே சிறந்தது. ஆனால், களிப்பான நிலம் ஏற்றதன்று. பூமியானது மிகவும் கெட்டியாயிராமல் புலபுலத்த மண்ணையுடையதாயிருக்கவேண்டும். ஏனெனில், இதன் கிழங்குகள் பூமியிலேயே வளர்ந்து பெரியதாக வேண்டியிருக்கின்றன. நல்ல வளமையுள்ளதும் கொஞ்சம் ஆழம்வரை மண்புலபுலத்தும் உள்ள எந்த பூமியிலும் இப்பயிர் செய்யக்கூடும்.

#### நிலத்தைப் பண்படுத்தல்.

இப்பயிர் செய்யப்படும் பூமியை ஐந்தாறு முறை சுமார் ஒன்பது அங்குலம் ஆழத்துக்கு நன்றாக உழவேண்டும். உழுவதற்கு முன்னால் ஏக்கர் 1-க்கு 10 டன்னுக்குக் குறையாமல் நல்ல தொழுவத்தெரு போடவேண்டும். பிறகு எருவை நிலம் முழுதும் நன்றாகப் பரப்பி புல் பூண்டு முதலியனவற்றைப் பிடுங்கி எறிந்துவிடவேண்டும்.

#### நாற்றங்கால்.

நாற்றங்காலை நன்றாக உழுது மண்கட்டிகளில்லாமல் நன்கு புழுதியாக்கவேண்டும். அதிகமாக உரம் போடவேண்டும். பிறகு நிலத்தைப் பாத்திகளாகப் பிரிக்கவேண்டும்.

#### விதைவிதைத்தல்.

நாற்றங்காலில் விதையைத் தூவும்போது ஒவ்வொரு பாத்தியிலும் விதை ஸமமாக விழும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். ஒரு ஏக்கர் நிலத்தில் நட நாற்றுக்களுக்கு 10 முதல் 15 ராத்தல் விதைவிட்டால்போதும். நாற்றங்காலில் விதைகள் முளைக்கிறவரையில் வாய்க்கால் மூலமாய் ஜலம் பாய்ச்சக்கூடாது. கையில் ஜலத்தைத் தெளிப்பதுதான் நல்லது. ஜலம் தெளிப்பதானது பிரதிதினமும் இரண்டுமுறை செய்யப்படவேண்டும். விதைகள் நன்றாக முளைத்தானபிறகு பாத்திகளுக்கு வாய்க்கால் மூலமாய்த் தண்ணீர் பாய்ச்சலாம். நாற்றங்காலில் களைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். நாற்றுக்கள் சுமார் 6 அங்குலம் உயரமானவுடன்; அவற்றைப் பிடுங்கி உடனே வயலில் நடவேண்டும்.



157

#### நாற்று நடுதல்.

நாற்று நடப்படும் நிலமானது முன்கூறியபடி நன்கு சீர்திருத்தப்பட்டு, பிறகு பாத்திகளாகக் கட்டப்படவேண்டும். இப்பாத்திகளில் நாற்றங்காலிலிருந்து நாற்றுக்களை பிடுங்கிக்கொண்டு வந்து நடவேண்டும். நாற்றங்காலிலிருந்து நாற்றுக்களை பிடுங்குவதற்குமுன்னால், அதற்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டும். ஏனெனில், நாற்றுக்களை பிடுங்கும்போது அவை ஒடியாமலிருக்கும். நாற்றுக்களைப் பிடுங்கினவுடனே அவற்றின் வேர்களில் உள்ள மண்ணோடு கூடைகளில் ஜாக்கிரதையாக வைத்திருக்கவேண்டும். நடுவதற்குமுன்னால் அவற்றின் தழைகளை நறுக்கிவிடுவது நல்லது. நடப்படும் நிலத்திற்கு ஜலம் பாய்ச்சி மண் இளகியவுடன், நாற்றுக்களை நான்கு அங்குலத்துக்கு ஒன்றாக நடவேண்டும். நாற்றுக்களை நட்ட இரண்டு மூன்று நாட்கள் கழித்து நிலத்திற்கு ஜலம் பாய்ச்சவேண்டும். பிறகும், அதேமாதிரி செய்யவேண்டும். அதற்குள் நாற்றுக்கள் வேர்பிடித்துக்கொள்ளும். இதற்கப்பால் பத்து தினங்களுக்கு ஒரு முறை ஜலம் பாய்ச்சினால் போதும். தேவையானபோது களை பிடுங்கிக் கொத்தலும் அவசியமாகும்.

#### பலன்தரும் காலம்.

இப்பயிரானது ஐந்தாறு மாதங்களில் பலன் தரும். இது நட்ட நாலு மாதங்களுக்கெல்லாம் பூக்க ஆரம்பிக்கும். அப்பூக்களை கிள்ளி எறிந்துவிடவேண்டும். பிறகு பயிர் முதிர்ந்ததும் அதன் இலைகள் மஞ்சள் நிறமாய்ப் போய்க் கீழேவிழும். இக்குறியைக் கொண்டே பயிர் முற்றிவிட்டதென்று அறிந்து கொள்ளலாம்.

#### மகசூல்.

வெங்காயமானது அதிக ஆழத்தில் கிழங்கு வைப்பதில்லை. கிழங்குகள் தரை மட்டத்திற்கு ஸமீபத்திலேயேயிருக்கும். இதனால் கிழங்குகளை மிகவும் ஸுலபமாய்ப் பிடுங்கிவிடலாம். கிழங்குகளைப் பிடுங்கினதும், அவற்றின் இலைகளையும் வேர்களையும் நறுக்கிவிட்டு மேலுள்ள புரைகளையும் எடுத்துவிடவேண்டும். நல்ல கிழங்குகளோடு காயம்பட்டவற்றைச் சேர்க்கக்கூடாது. அப்படி சேருமானால், நல்ல கிழங்குகளும் கெட்டுப்போகும்.

ஸுமாராக வளமுள்ள நிலத்தில், மாரிகாலத்துப் பயிரில் ஏக்கர் 1-க்கு சுமார் 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் பவுண்டு வரையில் வெங்காயம் கிடைக்கும். இது சற்றேறக்குறைய ரூ. 200 வரை விலைபோகும்.

---

## Some Useful Hints.

### சில உபயோகமுள்ள குறிப்புக்கள்.

#### பிரஷ் கெடாமலிருக்க.

தலைமயிரைக் கோதும் பிரஷ்ஷை உபயோகித்தபிறகு, அதில் படிந்திருக்கும் எண்ணெயைப் போக்குவதற்கு ஸோப்பைக்கொண்டு கழுவுவதுண்டு. பிறகு அது மறுபடியும் விறப்பாக இருக்க, அதைப்பாலும் ஜலமும் ஸமமாகக் கலந்த ஜலத்தில் சற்றுஊறவைத்து, பிறகு எடுத்து அனலில் காட்டினால், அது உலர்ந்து பழைய நிலைமையை யடையும்.

### ஜமக்காளங்களில் விழும் இங்கிக்கரைகளைப் போக்க.

ஜமக்காளங்களில் இங்கிக்கரை விழுந்தால், உடனே ஒரு எலுமிச்சம்பழத்தை இரண்டு துண்டாக நறுக்கி அதன்மேல் தேய்க்கவும். பிறகு அந்த இடத்தை ஒரு மிருதுவான துணியைக்கொண்டு துடைக்கவும். அப்படியும் கறை விடாவிட்டால், எலுமிச்சம்பழத்தை உப்பில் தோய்த்துக் கறையின்மேல் தேய்க்கவும்.

### ஒட்டுமாஞ்செடிக்கு எரு.

ஒட்டுமாஞ்செடிக்கு அதிகமான எரு ஒன்றும் தேவையில்லை. செடிவைக்கும்போது குழிதோண்டி அதில்சப்பாத்தியைத் துண்டுகளாக வெட்டிப் போட்டு, தண்ணீர் பாய்ச்சி மக்கவைத்து, பிறகு அதில் மண்ணைத்தள்ளி செடியை வைத்துவிடவேண்டும். அதன்பின்பு செடி வளர்ந்ததும், அதனின்று விழும் சருகுகளை அதன் கீழேயே மட்கும்படி செய்ய வேண்டும். இதுவே அதற்குச் சிறந்த எருவாக உபயோகப்படுகின்றது. மட்கின இலை எருவில் ரஸாயன வஸ்துக்கள் அடங்கியிருக்கின்றன.

### பூட்ஸ்களைச் சுத்தம்செய்தல்.

பூட்ஸ்கள் நன்கு பளபளப்பாயிருக்கவேண்டுமானால், அவற்றைத் துடைத்துக் கறுப்பு பாலிஷ் போடும்போது, அதோடு கொஞ்சம் ஆறின தேயிலைக் கஷாயத்தையும் கலந்து உபயோகிக்கவேண்டும். இப்படிச் செய்தால், பாலிஷ் செய்யப்பட்ட பூட்ஸ் மிகவும் பளபளப்பாயிருக்கும்.

### டைப்ரைடிங் இங்கிக் கரைகளைப் போக்க.

டைப்ரைடிங் இங்கிக் கறைகளைப் போக்க, கறை செய்யப்பட்ட இடத்தை 24 மணிநேரம் டர்பன்டைனில் ஊறவைக்கவேண்டும். பிறகு அதன்மேல் கொதிக்கவைத்த ஸோடா ஜலத்தை ஊற்றி அலசி உலரவைத்தால், கறை நீங்கி விடுகிறது.

### ஜன்னல்களைச் சுத்தம் செய்தல்.

ஜன்னல்களை ஸோப் ஜலத்தைக்கொண்டு சுத்தம் செய்வதைவிட, கொஞ்சம் அமோனியா கலந்த ஜலத்தினால் சுத்தம் செய்வது நல்லது.

### சுவர்களில் ஒட்டப்பட்டிருக்கும் காகிதங்களில் எண்ணெய்ப் பசை.

சிலவிடங்களில் சுவர்களில் அலங்காரமாயிருப்பதற்காக வர்ணகாகிதங்கள் ஒட்டப்படுவதுண்டு. அவற்றில் எண்ணெய் பட்டுவிட்டால், ஓர் துணியை ஸ்பிரிட்ஸ் ஆப் ஒயினில் நனைத்து மெதுவாக அதன்மேல் துடைத்தால், எண்ணெய்ப்பசை நீங்கிவிடும்.

### கிச்சிலிப்பழம் தோலை உரித்தல்.

கிச்சிலிப்பழம் தோலை மிகவும் எளிதாக உரிக்கவேண்டுமானால், அதை அரைமணிநேரம் வெந்நீரில் ஊறப்போடவேண்டும். பிறகு அதை எடுத்து உரித்தால், வெகு சுலபமாக தோல் உரிபடும்.

### கறவை மாடுகளுக்கு வெந்நீரைக் குடிக்க வைத்தல்.

கறவை மாடுகளுக்கு வெந்நீரைக் குடிக்க வைத்தால், அவற்றிற்குப் பால் விருத்தியாகின்றதென்று சொல்லப்படுகின்றது.

---


### தேசாபிமானிகளின் சரித்திரங்கள்.

"பாரதபூஷண்" டாக்டர் எஸ். சுப்பிரமணிய ஐயர் ... 0 12 0

இதில் டாக்டர் எஸ். சுப்பிரமணிய ஐயரின் ஜீவிய சரித்திரமும், அவரது அரிய உபந்நியாஸங்களும் அடங்கியுள்ளன.

மோஹனதாஸ் காந்தி ... 0 5 0

இதில் இவரது ஜீவிய சரிதமும், இவர் இந்தியருக்காகப் பாடுபட்ட பல விஷயங்களும்; இவருடைய சில பிரசங்கங்களும் அடங்கியுள்ளன.

ஸ்ரீமதி ஸரோஜினிதேவி ... 0 4 0

இதில் இந்திய கவி ஸ்ரீமதி ஸரோஜினிதேவியின் ஜீவிய சரிதமும் அவருடைய அருமையான பிரசங்கங்களின் சாராம்சமும் அடங்கியுள்ளன.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
135, தேவராஜ முதலி தெரு, மதறாஸ்.




# ஆமணக்குப்பயிர்.

[பண்டித வி. சுப்பிரமணிய ஐயர் எழுதியது.]

### பயிரின் வகைகள்.

சிற்றாமணக்கு, நாட்டுக்காட்டாமணக்கு, பேராமணக்கு, சீமைக் காட்டாமணக்கு என்று ஆமணக்குப் பயிரில் நாலுவகை உண்டு. சிற்றாமணக்கு, பேராமணக்கு ஆகிய இரண்டு பயிர்களும் சாதாரண புன்செய்நிலங்களிலும் ஆற்றுப்படுகைகளிலும் ஜனங்களால் அவற்றின் விசேஷமான உபயோகத்தை உத்தேசித்துப் பயிர் செய்யப்படுகின்றன. மற்ற இருவகை ஆமணக்குப் பயிர்களும் நாட்டில் எல்லாவிடங்களிலும் வேலிப் பயிராக வைத்துப் பயிர் செய்யப்படுகின்றன.

### நாட்டுக் காட்டாமணக்கு.

நாட்டுக் காட்டாமணக்கு, சீமை காட்டாமணக்கு ஆகிய இவைகள் மழைபெய்த ஈரத்தில் கிளைகளாக வெட்டிவைத்துப் பயிர் செய்யப்படுகின்றன. இவைகளை விதைகளைக்கொண்டும் பயிர் செய்யலாம். ஆனால், அம்முறையில் செடிகள் வளருவதற்கு நாள் செல்லும். இக்காரணம்பற்றியே இம்முறையானது அதிகமாக அனுஸரிக்கப்படுவதில்லை.

### உபயோகம்.

நாட்டுக்காட்டாமணக்கின் இலை பயிர்செய்யப்படும் நிலத்தில் வளமைக்குத் தக்கபடி வெண்ணிறமாயும், பச்சை நிறமாயும் இருக்கும். செழுமையாய் வளர்ந்த இலை இரண்டு கையளவு அகலமிருக்கும். நாட்டுக்காட்டாமணக்குப் பட்டையை ஜ்வரகஷாயத்திற்குச் சேர்ப்பதுண்டு. அதன் பாலானது புண்ணை ஆற்ற உபயோகப்படுகின்றது. நெல் குத்தின உமியையும் காட்டாமணக்கு இலையையும் கலந்து சட்டியில்போட்டு வறுத்து ஒத்தடங் கொடுக்க, சூலைநோயும் ஜன்னி நோயும் குணமடையும். சிறுபிள்ளைகள் இலைத்தொன்னையில் காட்டாமணக்குப் பாலைக் கறந்து, புல்லினால் செய்த வளையம்போன்ற முடிச்சை அதில் தோய்த்து எடுத்து வாயினால் ஊத, அது அழகான ரஸகுண்டுகளைப்போல் ஆகாயத்தில் பறப்பது அவர்களுக்கு வேடிக்கையாயிருக்கும். இந்த ஆமணக்குப் பருப்பில் எண்ணெய் விசேஷமாக இருப்பதனால், கைத்தொழிலாளிகள் இதை மிக்க லாபகரமாக உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

### சீமை காட்டாமணக்கு.

சீமை காட்டாமணக்கு நம்நாடெங்கும் வேலிப்பயிராக உபயோகப்படுகின்றது. இந்த ஆமணக்கின் பாலுக்குப் புண்ணை ஆற்றும் சக்தி மிகுதியும் உண்டு. ஆனால், நாட்டுக் காட்டாமணக்குப் பாலைப்போலிராமல், இப்பாலைப் புண்ணில் போட்டால் எரியும். இவ்வாமணக்குக் கிளைகளையும் தறித்து மழைகாலத்தில் வேலியோரங்களில் நட்டால், ஒருமாதகாலத்திற்குள் அவை கப்புங்கிளையுமாய் வளர்ந்து, வேலி மிகவும் பந்தோபஸ்தாய்விடும். இச்செடிகள் வளரும் நிலத்தின் தன்மைக்கிணங்க, அவற்றின் இலைகள் பச்சைநிறமுள்ளவையாயும், சிவந்த நிறமுள்ளவையாயும் இருக்கும். இந்த இலை கையினால் தொட்டால் பிசுக்கென்று ஒட்டிக்கொள்ளும் தன்மையையுடையது. இந்த ஆமணக்கு விதைகளினாலும் பயிராகும். சில ஸமயங்களில் இது காட்டுத்தனமாய் கண்டவிடங்களில் வளர்ந்து வருஷக்கணக்காக ஜீவதசையுடனிருக்கும். இதன் தழைகளை நிலத்திற்கு உரமாக சேற்றில் மிதித்து உபயோகிக்கிறார்கள்.

### சிற்றாமணக்கு.

சிற்றாமணக்குப்பயிர் சாம்பல் கலந்த நத்தவாய் நிலங்களில் ஏராளமாய்ப் பயிராகும். அது பயிர் செய்யப்படும் பூசாரத்திற்கும் நீர்வளமைக்கும் தகுந்தாற்போல ஐந்து வருஷகாலமளவும் அதற்குமேலும் கப்பும் கிளையுமாக ஜீவதசையுடனிருந்து, ஏராளமாகப்பலன் தரும். ஐந்து சிற்றாமணக்குக் கொட்டைகள் ஒரு

பேராமணக்குக் கொட்டையின் பருமனுக்குச் சமானமாகும். ஒரு பட்டணம்படி சிற்றாமணக்குக் கொட்டையைப் புழுக்கிக் காயவைத்து இடித்துக்காய்ச்சினால், 24 ரூபாய் எடையுள்ள ஒரு சேர் ஆமணக்கு எண்ணெய் கிடைக்கும். இந்தப்பயிரை ஏதோ சில இடங்களில்தான் செய்து எண்ணெய் உண்டாக்கி உபயோகிக்கிறார்கள். இச்சிற்றாமணக்கு எண்ணெய் பேராமணக்கு எண்ணெயைக் காட்டிலும் வைத்திய விஷயத்தில், மிகவும் உபயோகமாதலினால், இது வைத்தியர்களால் அதிகமாகக் கொண்டாடப்படுகின்றது.

பேராமணக்கு.

பேராமணக்குப்பயிர் சாதாரணமாய்ப் புன்செய் நிலங்களில் ஆனி ஆடி மாத காலங்களில் காணை மஞ்சள் சாகுபடி செய்யும்போது அவற்றுடன் பயிரிடுவதுண்டு. இப்படிச்செய்யப்படும் பயிர் தைமாதம் வரையில் பலனைக்கொடுத்துப் பிறகு பட்டுப்போகின்றது. காணைமஞ்சளுக்குப் பாய்ச்சும் தண்ணீரே இப்பேராமணக்குக்கும் பிரயோஜனப்படுகின்றது. மேற்கூறிய காணை மஞ்சள் வெட்டப்பட்டுப்போனபிறகு, பேராமணக்குப் பயிருக்குக் காவலும் தண்ணீரும் இல்லாததனால், அது தானாகவே பட்டுப்போகின்றது.

(இன்னும் வரும்)

## How to Spend Leisure Hours.

BY MR. D. S. NESAMANI.

## விடுதிப்பொழுதைக் கழிக்கும் ஆறு.

[272-ம் பக்கத் தொடர்ச்சி.]

(ஆகவே, நூல்பயில உன்னுவார் கற்றறிந்த ஆன்றோர் உதவிகொண்டு தம் மனநிலைக்குகந்த புஸ்தகங்களைத் தேர்ந்தெடுத்துக் கற்கவேண்டும்) இவ்வான்றோர் தம் குணநடவடிக்கைகளுக்கு இணக்கமுடையவராய்த் தம்மிடம் மெய்ந்நட்புடையவராயிருப்பின் நலம்; ஏனெனில், மநுஷ்யர் தம் ஆசாரநடைகளுக்கொத்த ஒழுக்கமுடையாரிடத்தும், தம்மின் சிறந்தோரிடத்தும் அன்பைச் செலுத்துகின்றனரேயன்றி, தம் குணவபேக்ஷைகளுக்கு முற்றும் விரோதியானவருடன் ஒட்டுவதில்லை. ஆதலின், தம் மனநிலைக்குகந்த புஸ்தகங்களை, நூலநுபவமுடையவரும், தம் உள்ளத்தைக் கொள்ளைக்கொண்டவருமான மெய்ந்நண்பரது உதவிபெற்றன்றோ ஒருவர் எளிதில் தேர்ந்தெடுக்கலாம்? இன்னணங் கூறியதனால், “அறிவு, அருள், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி, வெறுப்பு முதலிய அருங்குணங்களுடைய மனிதன் ஸ்வாதீனமுள்ளவனல்லனோ? தான் கற்கத்தகும் நூல்களை அவனே தேர்ந்தெடுக்கும் ஆற்றல் உடையவனல்லனோ? ஜான்ஸன் பண்டிதரும், ‘நீ எந்நூலை வாசிக்க அவாவுகின்றனையோ, அந்நூலையே ஓதுக’ என்று கூறினரே! என்று ஆசங்கிக்கும் சிலர், மநுஷ்யர் பராதீனரல்லராயினும், தம் உரிமையை அவர்கள் சற்று மட்டுடன் எக்காலத்தும் செலுத்துவதே பெரிதும் நன்மைபயக்கும் என்பதை நினைவுகொள்ளவேண்டும். தம் நண்பர் தமக்கெனத் தேர்ந்தெடுத்த பல புஸ்தகங்களில் தமக்கு விருப்பமான சிலவற்றைத் தெரிந்தெடுத்து கற்பினும், மனுஷ்யர் ஸ்வாதீனம் குன்றாது என்பதற்கு ஸந்தேஹமில்லை. விவேகம், குணம், தனம், ரூபமென்னும் அருமையான குணங்களுடன் நற்குலத்துதித்த புருஷர் தம் ஒழுக்கத்தைத் திரித்து அன்னாரைக் கேவலம் ம்ருகங்களுடன் ஒற்றுமைப்படுத்தவல்ல கேடென்னும் கொள்ளைநோயைப் பரவச்செய்யும் நுண்ணிய க்ருமிகள் அழகிய கட்டிடங்களுடைய



பல நூல்களால் பரவும் இக்காலத்தில், தம் ஸ்நேஹிதர் தம்மிடம் புகழ்ந்தொப்பித்த நூல்களில், தம் மனதைக்கவர்ந்துகொண்டவைகளை ஒவ்வொன்றாக வாசிப்பதனால் நன்மையும் இன்பமும் விளையுமென்பது தேற்றம். களவையும் கற்று மறக்கவேண்டுமெனினும், களவாடக் கற்றுக் களவாடிக் காராக்கிரகம் புகாதவர் எத்தனைபேர்?

‘எவ்வெந்நூல்களைக் கற்கலாம்?’ என்னும் வினாவிற்கு ஒருவாறு உத்தரமளிக்கலாம். இவ்வகுப்பு நூல்களை, காவ்யங்களான செய்யுணூல்கள், சரித்ரஸம்பந்தமான நூல்கள், மத நூல்கள் (இவ்வகுப்பிற்படும் நூல்களிலும் பல செய்யுள் ரூபமுடையன), விஜ்ஞான, தத்வ முதலிய சாஸ்த்ர நூல்கள், கற்பித கதைகள் என வகைப்படுத்தலாம். இவைகளைப்பற்றிப் பின்னே கூறுவோமெனினும், கற்பித கதைகளைப்பற்றி ஈண்டுக்கூறல் பொருந்தும். மலிந்து கிடக்கும் அபிநவகதைகளிற் பல, யாதேனும் ஒரு தேசசரித்ரத்தைப்பற்றியேனும், நீதிபோதனைகளைப்பற்றியேனும் கிஞ்சித்துங் கூறாது, நன்னெறியிலமைந்தார் படிக்கற்கேலாத இடக்கரான அல்லது ச்ருங்காரரஸமான விஷயங்கள் பொதிந்துகிடப்பன வாசிப்பவரின் அறிவின்கூரை மழுக்குவன. இதனால் நாம் அபிநவகதைகளெல்லாம் இத்தகைய தீயவிதைகளை வித்துவன என்று பொருட்படுத்தினோமல்லோம். காலஞ்சென்ற வேதநாயகம் பிள்ளையவர்களின் பிரதாபமுதலியார் சரித்ரத்தையும், தாண்டவராய முதலியாரவர்கள் மொழிபெயர்த்த பஞ்சதந்திரத்தையும், முத்துஸ்வாமி அய்யரியற்றிய சென்னபட்டணத்தின் சரித்ரஸம்பந்தமான பத்மினி என்னும் கதையையும் இவைபோன்ற மற்ற புனைந்துரை நூல்களையும் குற்றமுடையன என்று கூறத் துணிவார் யாவர்? நல்ல நாவல்களிற் பல வாசிப்பவரின் கற்பனாசக்தியை விசாலிப்பித்து, பலரைத் தீவழியினின்று விலக்கி நல்வழியிற் செலுத்தியிருக்கின்றன; ஆயாஸங்கொண்ட மனங்களைத் திடப்படுத்தியிருக்கின்றன; மெலிந்த மனங்களுக்கு வலிதந்துள்ளன. எனினும், அபிநவகதைகளல்லனவான நன்னூல்களை வாசிக்கக்கூடியவராயிருக்கையிலும் அபிநவகதைகளையே வாசித்தல் நன்றன்று.

மற்றும், புஸ்தகங்களை அவை முதன்முதலாக ப்ரசுரிக்கப்பட்ட ஒருவர்ஷம் தேயுமுன் கூடுமானால் வாசியாதிருத்தல் நன்மைதரும் என்று எமெர்ஸன் என்னும் அமெரிக்க வ்யாஸக்கருத்தா கூறுகின்றார்.

கற்கற்பாலனவாம் நூல்களனைத்தும் ஒரு தன்மையனவே என்றெண்ணுதலும் தவறு. இக்குறிப்பைநாம் பெருக்காது ப்ரான்ஸிஸ் பேக்கன் என்னும் தத்வஜ்ஞானியின் இனிய மொழிகளை எடுத்துரைப்போம்: “சிலபுஸ்தகங்கள் ருசிக்கப்படவேண்டியன; சில விழுங்கப்படத்தகுவன; சில மெல்லப்பெற்று ஜீர்ணிக்கப்பெறுதற்குரியன:—என்றதனால், சிலநூல்களில் சிலபாகங்களைமட்டும் வாசிக்கவேண்டும். சில முற்றும் வாசிக்கப்படத்தகுந்தன, என்றாலும், அதிக ஜாக்ரதையுடனன்று; சில முற்றும் அதிஜாக்ரதையோடும் கருத்தோடும் கற்கப்படத்தக்கன என்றபடி.”

“கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கின், பிணிபல;—தெள்ளிதின்
ஆராய்ந்(து) அமை(வு) உடைய கற்பவே;
நீர் ஒழியப் பால்உண் குருகின் தெரிந்து”

என்பது சமணமுனிவர்களியற்றிய நாலடி நானூற்றில்.

இனி, பண்பாற்றும் நெஞ்சத்தவர்களான சொல்லேருழவர் செய்த நூல்களைப்பற்றிக் கூறுமுன், நூல்பயில உன்னுவார் அவச்யம் அறியவேண்டிய விஷயமான மனோசக்திகளைப் பற்றியும், நூற்பயிற்சிக்கு ஏற்றபடி அவற்றைப் பழக்கும் விதத்தைப்பற்றியும் பொழிந்துரைத்தல் முறையாம். தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்ப்பென நால்வகைப்படும் கல்விநூல்களைப் பயில்வார் கவனிக்கத்தகும் மனோசக்திகள் (கற்றவற்றை) உணருஞ்சக்தி, ஞாபகசக்தி என்பனவே.—நாம் உற்

ருராயும் விஷயங்களை ஐயந்திரிபற முதற்சக்தியால் தேர்ந்து தெளிகிறோம். ஞாபகசக்தியால் ஒருகால் நம்கண், செவ்வழியாய் நெஞ்சுகளை அடைந்தவற்றை வேண்டுங்கால் வருவித்து நம் மனத்தின்முன் நிறுத்திச் சிந்தனையென்னும் நம்மனக்கண்களால் அவற்றைச் சந்தித்துக் களிப்போம். இவ்விரண்டு சக்திகளும் பித்தரல்லாதார் அனைவரிடமும் பொருந்தியிருப்பனவெனினும், புத்திஸ்வாதீனர் அனைவரும் இவற்றை ஒரேயளவாகப் பெற்றிருப்பவர்களல்லர். ஆகவே, கல்வியில் முன்னேற்றமடைய விரும்புபவர் இச்சக்திகளை விருத்திசெய்துகொள்ள வேண்டும்.

இவ்விரண்டு சக்திகளும் கூர்ந்தாராயும் பழக்கமுடையவரிடத்து விஞ்சியிருக்கும். என்றதனால், ஒருவருக்குத் தாம் கற்கும் விஷயத்தில் தமக்கு எவ்வளவு பற்றுள்ளதோ அவ்வளவாக அது அவர்க்கு விளக்கமுறும் என்பது பெறப்பட்டது; என்னை? தாம் வாசிக்கும் நூலிடத்துப் பற்றுக்கொள்ளுமாறு அந்நூலின் ஒவ்வொரு வாக்யத்தையும் மயக்கமற உணர்ந்துகொள்ளுதலாலே என்க. அந்நூலின் ஒவ்வொரு வாக்யத்தையும் மயக்கமற உணர்தல் என்பது, நிகண்டு, இலக்கணம் முதலிய கருவி நூல்களை உபயோகித்து ஒரு வாக்யத்தையாக்கும் மொழிகளின் பரியாயங்களையும் சில இலக்கணக் குறிப்புக்களையும் கற்றுக்கொள்ளுதல் மாத்ரமன்று, ஒரு சொல்லுக்கும் மற்றைப்பதங்களுக்கும் உள்ள சம்பந்தத்தைத் தெரிந்துகொண்டு, பிரதிமொழியும் அவ்வாக்கியத்திலுள்ள கருத்துக்கு எவ்வண்ணம் சுவை தருகிறதென்று, பின் அவ்வாக்கியத்துக்கருத்தை நுட்பமாய்ச் சோதித்துப் பிழைதிருத்திக் கொள்வதேயாம். இது மிக்க ஜாக்ரதையுடன் தாம் தெரிந்துகொண்ட நூலில் ஒரு சிறுபாகத்தைக் கவலையுடனும், மந்தகதியுடனும், ஆழ்ந்த சிந்தனையுடனும், கற்கும் விஷயத்திற்குரிய வல்லாதனவாம் விஷயங்களைக் கொஞ்சமேனும் கருதாது, வேண்டுமாயின் மீட்டுமீட்டும் அப்பாகத்தை வாசித்து, அப்பாகத்தைத் தம்மனத்தில் ஐயந்திரிபறப் பொருத்தியபின்பே வேறு பாகத்தைப் படிக்கவாரம்பிப்பதனால் ஆகும்: "நுண்ணுணர்வின்மை வறுமை." ஆயினும், பைங்கிளிபோல் ஒரு புஸ்தகத்திலுள்ளவற்றையெல்லாம் மனனஞ்செய்ய முயலுவார், சுடரைத்தூண்டவேண்டி அதனை ஊதியே தொலைப்பவரன்னர். நம்மாயுள் குறியது; வாசிக்க வேண்டிய நூல்கள் பலவாயிருக்க, ஒரு நூலையே மேலுமேலுங் கற்றுப் புலமைத்திறம் நிரம்பப் பெறுதிருப்பது சிறப்பன்று. எனவே, கற்றவற்றின் கருத்தை தம்மனதில் இருத்திக் கொள்வார்க்கு அது சாலும்.

ஒரு நூலைக் கற்கத்தொடங்கியபின் எவ்வித காரணத்தை முன்னிட்டும் அதனை முற்றுந்தவிர்த்து மற்றொரு நூலை வாசிக்கத் தொடங்குதல் ஒருவரின் கல்வியபிவ்ருத்திக்கு ஊறுவிளைக்குமேயல்லது நன்மையை அற்பமேனும் தாராது. ஆதலின், தொடங்கிய நூலை முடித்தேதீரவேண்டும். இலைதழைகள் நிறைந்திருக்கும் இடத்தில் அவற்றைச் சிறிது உட்கொண்டதும், அவ்விடத்தினின்று பசுமைநிறந்தெரியும் மற்றோரிடத்திற்குச் சென்று அங்குச் சிறிது இலை உட்கொண்டதும் இன்னொரு பக்கம் செல்வதனால் சிறிது சிறிதே மேயுமியல்புடைய ஆட்டிற்கு வயிறு நிரம்புவதில்லை யென்பது, பெரியோர் கூற்று.

இம்முறைகளை அநுசரிப்பவர் தாம் கற்கும் விஷயத்தைத் தெற்றெனத்தெளிந்து மகிழ்வர் என்பர் பெரியோர்.

(இன்னும் வரும்.)

தா, கா நேசமணி.

ஹஸ்தரேகை சாஸ்திரம்.

இது ஹஸ்த ரேகைகளைக்கொண்டும், ஹஸ்தலக்ஷணத்தைக்கொண்டும் மனிதர்களின் நடவடிக்கைகளை நிர்ணயிக்கும் ஓர் சாஸ்திரம். இதில் அநேகம் சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

விலை ரூபாய் 2.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
135, தேவராஜ முதலி தெரு, மதராஸ்.



# Topics from Periodicals.
## பத்திரிகை ஆராய்ச்சி.

### வெற்றிலைப் போட்டுக்கொள்ளுதல்.

சாப்பாட்டிற்குப்பிறகு வெற்றிலைப்போட்டுக்கொள்ளும் வழக்கமானது நமது தேசத்தில் வெகுகாலந்தொட்டு வழக்கத்தில் இருந்துவருகிறது. இந்த வழக்கமானது சிலருக்குப் பிடிக்கிறதில்லை. சிலர் இதை வெறுக்கிறார்கள். சிலர் இதை ஆதரிக்கிறார்கள். ஸமீபத்தில் வெளிவந்த "வைத்திய கலாநிதி"யில் ஒரு நிருபர் இந்த வழக்கத்தைப்பற்றி ஒருவியாசம் எழுதியிருக்கிறார். அதில் அவர் குறிப்பிட்டுள்ள சிலவற்றை இங்கு எழுதுகிறோம்

வெற்றிலைப் போட்டுக்கொள்வது நல்ல வழக்கமென்று நிர்த்தாரணம் செய்ய, அமெரிக்கா முதலிய விசாலமான இதர நாடுகளிலும் அவ்விதம் எதையேனும் உணக்குப் பின்பு உபயோகிக்கும் வழக்கமே ஓர் ஆதாரமாகின்றது. புஜித்த உணவு நன்கு ஜீர்ணமாவதற்கு ஏற்ற சுரப்பை ஜீர்ணகோசங்களுக்கு உண்டாக்கும் சக்தியும் இதை மெல்லுவதனால் விருத்தியடையும். உணவுக்குப்பிறகு பற்களைச் சுத்தம் செய்யவும் இது ஒத்தாசை செய்கின்றது; புஜிக்கும்போது பற்களின் இடுக்குகளில் புகுந்து நிற்கும் உணவின் அணுக்கைகள் அவ்விடங்களிலேயே சில காலம் தங்கிவிட்டால் அவ்விடங்களில் பற்களில் சிதைவு நேரிட்டுவிடும்; அவ்விதம் வழக்கமாகச் சேரும் உணவுத்துண்டுகளை அவ்விடங்களிலிருந்து விலக்குவதற்கு வெற்றிலையைப்போட்டு மெல்லுதல் உதவியாயிருக்கும். வெற்றிலை மெல்லுவதனால் உமிழ்நீர் அதிகமாகப் பொசிய ஆரம்பிக்கும்; இது வெற்றிலையுடன் இரைப்பையிற் சேரும்; இதனால் ஜீர்ணசக்தி அதிகரிக்கும் நமது பள்ளிக்கூடச் சிறுவர்களும் வேலைக்குப்போகும் பிள்ளைகளும் மற்றும் உத்தியோகஸ்தர்களும் போஜனம் செய்யும்போது மிகத்துரிதமாக உணவுகளை நன்கு மெல்லுவதற்கும் ஸாவகாசமில்லாமல் விழுங்கி வேலைக்குப்போக அவஸரப்படுகிறார்கள் என்பது நமக்கு அநுபவத்தில் தெரிந்த விஷயம். அவ்விதம் விழுங்கும்போதெல்லாம் உமிழ்நீர் போதுமான அளவு அவ்வுணவில் கலப்பதற்கு வழியில்லை. ஆகவே, குடலில் அதற்குப்பிறகு நடக்கேற வேண்டிய ஜீர்ணசக்தி அத்தகையவர்களுக்குக் குறைவுபட்டுவிடும். அவஸரப்படாமல் புஜிப்பவர்களுக்குக் கூட உமிழ்நீர் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாய் உட்கொள்ளும் உணவில் கலக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு ஜீர்ணவேலையும் குடலில் எளிதாய் நடந்தேறும். இதற்காகவே வெற்றிலைப் போட்டுக்கொள்வது நல்ல அப்பியாஸமென்று நான் எழுதத் துணிந்தேன். வெற்றிலையை மெல்லும்போது ஸ்ரவிக்கும் மிகுதியான உமிழ்நீர் இரைப்பையில் சென்று, இதற்குமுன்பு புஜித்துள்ள உணவோடு கலந்துகொண்டு அவ்வுணவு சீக்கிரம் சுலபமாய் ஜீர்ணம்செய்ய உபயோகமாகின்றது. மேலும் இரைப்பையில் புளிப்பு அதிகரிக்காமல் அவ்விடத்திய ஜீர்ணதிரவங்களை ஸமநிலைமையில் வைத்து குடலில் அம்லாதிக்யத்தினால் அழற்சி நேரிடாமல் காப்பதற்கும் உதவுகின்றது.

ஆகையினால், வெற்றிலைப்போடும் வழக்கம் ஒரு துரப்பியாஸம் என்று கூறுவதும், அவ்வாசாரமுள்ளவர்களைப் பழிப்பதும் சரியன்று.

---

### இந்தியாவின் வறுமை.

இந்தியா மிகவும் ஏழ்மையானதேசமென்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். இதற்கான காரணங்களையும், இந்தியர்களின் வறுமையைப் போக்க என்னென்ன செய்யப்படவேண்டுமென்பதைப்பற்றியும் "ஜனாபிமானி" பின்வருமாறு எழுதியிருக்கின்றது.

வறுமையின் காரணங்கள்.

(1) வியவசாயிகள் தங்கள் வியவஸாயத்தொழிலில் தற்கால சாஸ்த்ரீய முறைகளை உபயோகிக்காமலும், நூதனமானவும் சீர்திருந்தியவுமான கருவிகளை உபயோகிக்காமலு மிருக்கிறார்கள்.

(2) வியவஸாயிகள் பொதுவாய் கல்வியறிவில்லாதவர்களாயும், அதனால் சாஸ்த்ரீய வியவஸாயம் தெரியாதவர்களாயு மிருக்கிறார்கள்.

(3) சிறுகைத்தொழிலாளிகள் தங்கள் தொழிலுக்கு வேண்டிவையான புதுமாதிரியான ஸாதனங்களை அறிந்து உபயோகிக்காமலிருக்கிறார்கள்.

(4) தற்காலம் மலிவான அயல்நாட்டு ஸாமான்கள் இந்தியாவில் விற்பதனால், தொழிலாளிகள் செய்யும் ஸாமான்களில் அதிக வியாபாரம் நடக்கவில்லை. இதனால் தொழிலாளிகள் தங்கள் ஸாமான்களை விற்கக் கஷ்டப்படுகிறார்கள்.

(5) அன்னியநாடுகளில் வீட்டுத்தொழில்களாக நடந்துவரும் கைத்தொழில்களோடு போட்டிபோட

அந்தமாதிரிக் கைத்தொழில்களை நாம் இன்னும் ஸ்தாபிக்கவில்லை.

(6) அன்னியதேசக் கைத்தொழில்களின் போட்டி இல்லாத புதுக்கைத்தொழில்களை நாம் இன்னும் ஸ்தாபிக்கவில்லை.

(7) நமது தேசத்தில் கைத்தொழில் கல்வி இல்லாததனால், ஒரு தொழிலிலும் தேர்ந்த தொழிலாளிகள் இல்லை.

(8) அதற்குப்பதிலாக தேர்ச்சிபெறாத வேலையாட்கள்தான் அதிகமா யிருக்கிறார்கள். வேலையாட்களில் பெரும்பாலர் கல்வியறிவில்லாத கூலியாட்களும், சிறு குமாஸ்தாக்களுமாவார்கள்.

(9) ஜனத்தொகை அதிகரிப்பதற்கேற்ப, புதுக் கைத்தொழில்களும், வியாபாரங்களும் ஏற்படவில்லை. அதனால் ஜனங்களில் பலர் விவசாயத்தில் பிரவேசித்து வருகிறார்கள். ஆனால் ஏற்கனவே விவசாயத்தைக் கைக்கொண்டிருக்கும் ஜனங்களின் தொகை மிதமிஞ்சினதாயிருக்கின்றது.

(10) தற்காலம் ஜனங்களுக்கு வியாபாரக்கல்வியும் வியாபார ஊக்கமும் இல்லை. வியாபார முயற்சிகளுக்கு வேண்டிய வஸதிகளும் இல்லை.

(11) ஜனங்களுக்குப் போதுமான பொதுக்கல்வி இல்லாமலிருப்பதனால், அவர்கள் முன்னேற்றமடைவது முடியாமலிருக்கிறது.

(12) கிராமங்கள் ஸுகாதாரக் குறைவாக இருப்பதனாலும், கிராமங்களில் வைத்திய உதவிக்குத் தக்க ஏற்பாடுகள் இல்லாமலிருப்பதனாலும் மலேரியா முதலிய வியாதிகள் விருத்தியாகி பலசாலிகளான அநேக ஜனங்களை வேலைக்கு லாயக்கில்லாமல் செய்துவிடுகின்றன.

### வறுமையை நீக்கவழி.

நமது பொருளாதார நிலைமையைக் கெடுத்துவரும் காரணங்களுள் இவைகளே முக்கியமானவை.

நமது நிலைமையை விருத்தி செய்யப் பின்வருமாறு முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

(1) விவசாயிகளுக்கு விவசாயக்கல்வி கற்பிப்பதோடு, அவர்கள் தற்கால விவசாய முறைகளை அனுஷ்டிக்க அவர்களுக்குப் பணம கடன்கொடுத்து உதவுவது.

(2) தொழிலாளிகளுக்கும் பொது ஜனங்களுக்கும் தொழில் கல்வி கற்பித்தல்; தொழில்கல்வி கற்றவர்கள் கற்றதொழிலை அப்யஸிக்க அவர்களுக்குப் பணம் கடன் கொடுத்து உதவுவது.

(3) நாட்டில் செய்யப்படும் ஸாமான்களை விற்பதற்கும், அவைகளைச் செய்வதற்கும் கம்பெனிகள் ஸ்தாபிப்பதை ஆதரித்தல்; ஸ்தாபிக்கப்பட்டுள்ள கம்பெனிகளுக்குப் பணவுதவி செய்தல்.

(4) தேசத்திலுள்ள இயற்கைப் பொருளாதாரங்களை உபயோகித்து ஸாமான்கள் செய்ய இந்தியர்களுடைய மூலதனத்தைக்கொண்டு கம்பெனிகள் ஸ்தாபித்தால் அவைகளுக்குப் பண உதவி செய்தல்.

(5) வீட்டுக் கைத்தொழில்கள் ஏற்படுத்துதல்.

(6) ஜனங்களுக்கு வியாபாரக்கல்வி கற்பித்தல்.

(7) கட்டாயப்படுத்தி இலவசமாகப் பிரைமரிக் கல்வி கற்பித்தல்.

(8) ஸுகாதாரமும், வைத்ய உதவியும் ஏற்படும்படி செய்தல்.

## Books and Reviews.

## புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

[நாகரிகம்: சே. மு. ராஜு செட்டியார் அவர்கள் இயற்றியது. விலை ரூ 2.]

இப்பெயர்கொண்ட தமிழ் நாவலொன்று நாம் வரப்பெற்றோம். இது பல நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ராஜு செட்டியார் அவர்களால் இயற்றப்பட்டது. கதையின் போக்கானது படிக்கப்படிக்க ஆச்சரியமும், ஆனந்தமும் உண்டாகும்படி வெகு நேர்த்தியாக அமைந்துள்ளது. இடையிடையே பற்பல நீதிகளும் அடங்கியுள்ளன. இக்காலத்திய நாகரிக விநோதங்கள் இதில் நன்கு எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. புஸ்தகம் சுமார் 500 பக்கங்கள் கொண்டது. இதன் விலை ரூ 2. வேண்டுவோர்: செ. மு. ராஜு செட்டியார் ராஜண்டேல், வால்டாக்ஸ்ரோட், சென்னை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

[நடராஜன் நாடகம் சென்ற சம்பவம்: ச. தா. மூர்த்தி முதலியார் அவர்கள் இயற்றியது. விலை அணா 8.]

மேற்குறித்த புஸ்தகமொன்று நமது பார்வைக்கு வந்துள்ளது. இதை இயற்றியவர் பல புஸ்தகங்களை இயற்றியுள்ள ச. தா. மூர்த்தி முதலியார் என்பவராவர். இந்த புஸ்தகத்தில் யௌவன ஸ்திரீகளும் புருஷர்களும் நாடகம் செல்வதனால் ஏற்படும் பற்பல தீங்குகளையும் நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. கதை எழுதப்பட்டுள்ள நடையானது மிகவும் தெளிவாக அமைந்துள்ளது. சிறுவர் சிறுமியர் ஆகிய எல்லோரும் இதைப் படிப்பது அவசியமாகும். புஸ்தகமானது நல்லகாகிதத்தில் வெகு நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது. இதன் விலை அணா 8. வேண்டுவோர்: நவீன கதா புஸ்தகசாலை, நெ. 8. சூளை, சென்னை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.



## Education and Science.

## கல்வியும், சாஸ்திரமும்.

### கல்விச்சாலைகளில் வைத்திய பரிசோதனை.

இம்மாகாணத்திலுள்ள கல்விச்சாலைகளில் வைத்ய பரிசோதனை செய்யவேண்டிய விஷயமாய்க் கவர்ன்மெண்டார் ஓர் உத்தரவை வெளியிட்டிருக்கிறார்கள். அவ்வுத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றின் சாராம்சம் வருமாறு:—

மாகாணத்திலுள்ள கல்விச்சாலைப் பிள்ளைகளை வைத்தியப்பரிசோதனை செய்யும் விஷயமானது அந்தந்த உத்தியோகஸ்தர்களின் புத்தியைப்பொருத்ததாகும். ஆனாலும், கவர்ன்மெண்டார் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பிள்ளைகளின் தேகஸ்திதியைப் பற்றி பரிசோதனை செய்யவேண்டியதற்கு லாயக்குள்ளவரும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டவருமான டாக்டரொருவரை நியமிக்கவேண்டுமென்றே சிபார்சு செய்திருக்கிறார்கள். அப்படி நியமிக்கப்பட்ட டாக்டர்கள் அந்தந்த பள்ளிக்கூடத்தின் உபாத்தியாயர்கள் அல்லது அதன் அதிகாரிகளுடன் கலந்துகொண்டு, புதிதாய் ஒவ்வொரு வருஷத்திலும் வந்து சேரும் பிள்ளைகள் வியாதிகளில்லாமலிருக்கிறார்களா என்று பரிசோதிக்கவேண்டும். அப்படி அவர்களுக்கு ஏதாவது வியாதி இருக்கும்பக்ஷத்தில், உடனே அதை அவர்கள் பெற்றோர்களுக்காவது போஷகர்களுக்காவது தெரிவிக்கவேண்டும். அவ்விதம் தெரிவிப்பதனால் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இருக்கப்பட்ட வியாதிகளை அறிந்து அவற்றைப் போக்க வழிதேடுவார்கள்.

சில மாணவர்களுக்குக் கொடிய வியாதிகள் தோன்றியிருந்தால், அந்தந்த ஸ்கூல் தலைமையுபாத்தியாயர் மானேஜர் முதலியவர்கள் அவர்களைப் பள்ளிக்கூடத்தைவிட்டுப் போகச்சொல்லிவிடவேண்டும். அதனால் மற்ற பிள்ளைகளுக்கும் அவ்வியாதிகள் பரவாமலிருக்கும்.

பள்ளிக்கூடங்களில் நியமிக்கப்பட்ட வைத்தியர்கள் பள்ளிக்கூடக் கட்டடங்களையும் அவற்றைச் சுற்றியும் அடிக்கடி பரிசோதனை செய்து, அவைகளில் உள்ள சுகாதாரக் குறைவுகளை ஸ்கூல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவேண்டும். அப்பால் ஸ்கூல் அதிகாரிகள் வித்யா இலாகாத் தலைவர் முதலியவர்களின் யோசனைகளைக் கலந்துகொண்டு பணவுதவிக்குத் தக்கபடி பரிகாரம் தேடவேண்டும்.

மேற்கூறிய யோசனைகளெல்லாம் பள்ளிக்கூடங்களைப் பொருத்தவையாகும். காலெஜ் மாணவர்களின் தேகஸ்திதியைப்பற்றி அந்தந்த காலெஜ் அதிகாரிகள் கவனித்தால் நலமாயிருக்கும். கவர்ன்மெண்டு ஸ்கூல்களிலும் ஸ்தல ஸபைகளுக்குட்பட்டிருக்கும் ஸ்கூல்களிலும் அந்தந்த ஸர்கிள் இன்ஸ்பெக்டர்கள் எவ்விதமான சுகாதார ஆபீஸர்களை நியமிக்கவேண்டுமென்று வித்யா இலாகாத் தலைவருக்கு ஒரு ரிபோர்ட்டு அனுப்பவேண்டும். அதன்மேல் கவர்ன்மெண்டார் தக்க ஏற்பாடுகளைச் செய்வார்கள். கவர்ன்மெண்டினிடமிருந்து பணச்சகாயம்பெறும் கல்விச்சாலைகளில் ஸ்கூல் மானேஜர்களே வைத்தியர்களை நியமிக்க வேண்டும். அப்படி சகாயம் பெறும் பள்ளிக்கூடங்களிலுள்ள மாணவர்களுக்கு அதற்கென்று ஏதாவது சம்பளம் வாங்கலாமாவென்ற விஷயம் மானேஜர்களின் அபிப்பிராயத்தைப் பொருத்திருக்கிறது.

—சுதேசமித்திரன்.

### இங்கிலாந்தில் கல்விச் சட்டம்.

இங்கிலாந்தில் கல்வி மந்திரியான மிஸ்டர் பிஷர் (Fisher) என்பவர் பார்லிமெண்டில் கல்வி ஸம்பந்தமாக ஒரு மசோதா கொண்டுவந்தார். அது இப்போது இங்கிலாந்திலும் வேல்ஸிலும் சட்டமாக அமுலுக்கு வந்துள்ளது. அந்தச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் "விவேக போதினி"யில் பின்வருமாறு காணப்படுகின்றன:—

(1) ஐந்து வயதுக்கு மேலும், பதினுன்கு வயதுக்கு உட்பட்டுமுள்ள பிள்ளைகள் கட்டாயமாகப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

(2) பிரதேச அதிகாரிகள் சந்தர்ப்பானுசாரமாக இந்தக் கட்டாய வயது வரையறையைப் பதினைந்தாக்கலாம்.

(3) 16 வயது வரைக்கும், சிற்சில வேளைகளில் 18-வயது வரைக்கும், சிறுவர்களுக்கு "தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்கள்" ஸ்தாபிக்கப்படவேண்டும்.

(4) இந்தத் தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்களில் வருஷமொன்றுக்குப் பிரதமத்தில் 280 மணி நேரமும், ஏழுவருஷங்களுக்குமேல் 320 மணி நேரமும் பிள்ளைகள் படிக்கவரவேண்டும்.

(5) 12 வயதுக்குக் குறைந்தபிள்ளைகளை யாதொரு தொழிலிலும் அமர்த்தக்கூடாது.

(6) 12 வயதுக்கு மேற்பட்டு 14 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை யாதொரு ஞாயிற்றுக்கிழமையிலும் இரண்டு மணி நேரத்துக்கு அதிகமாக வேலையில் அமர்த்தக்கூடாது.

(7) பிரதேச அதிகாரிகள் பிள்ளைகளின் தேகாரோக்கியத்துக்கும் சன்மார்க்கத்துக்கும் ஏற்ற சௌகரியங்களைச் செய்து கொடுக்கவேண்டும்.

(8) ஸெகண்டரிப் பள்ளிக்கூடங்களிலும் தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்களிலும் சிறுவர்களுக்கு இலவசமாக வைத்தியம் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(9) இரண்டு வயதுக்கு மேற்பட்டு ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு "நாற்றங்கால்" பள்ளிக்கூடங்களைப் பிரதேச அதிகாரிகள் ஸ்தாபிக்கலாம்.

(10) சரீர வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு ப்ரத்யேகமான பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன.

(11) பிரதமப் பள்ளிக்கூடங்களில் சம்பளம் வசூலிக்கவே கூடாது.

## Agriculture and Co-operation.

## வியவசாயமும், கூட்டுறவும்.

### வெங்காய விதைகள்.

வெங்காய மாலைகள் ஆனபிறகு அதில் நல்ல கிழங்குகளாகப் பொறுக்கி எடுத்துக்கொள்ளவேண்டும். நிலத்தை நன்றாக உழுது, நிரம்ப எருவிட்டு, அதில் அவற்றை ஒவ்வொன்றுக்கும் 18 அங்குலம் இடம் விட்டு நடவேண்டும். நட்டபிறகு மற்ற பயிர்களைப் போலவே களையெடுத்தலும் தண்ணீர் பாய்ச்சலும் செய்யவேண்டும். பயிர் பூக்க ஆரம்பித்த 5 மாஸங்களுக்குள் விதை உண்டாகும். ஏக்கர் 1-க்கு ஸுமார் 200 ராத்தல் விதை கிடைக்கும்.

### நெற்பயிருக்கு உழவு.

நெல்லானது சேற்றில் பயிராகக்கூடியதாதலால், இதற்குப் புழுதியுழவு கூடாது. "நெல்லுக்கு நான் குழவு" என்ற சாதாரணப் பழமொழிபடி, பயிரிடப்படும் நிலமானது நான்குமுறைகள் நன்கு உழப்படவேண்டும். சேறானது பக்கவேண்டியிருப்பதனால், நான்கு நாட்களுக்கு ஒருமுறை உழப்படுவது நல்லது. நெற்பயிரின் வேர் தாராளமாக பூமிக்குள் சென்று பரவும்படி ஆழ உழவேண்டும். உழவுக்குத் தக்கபடிதான் பயிர் விளையும்.

### சோளப்பயிருக்கு எரு.

சோளப்பயிருக்கு மிகவும் சிரேஷ்டமான எரு தொழு எருவேயாம். இதைத்தவிர, பின்வருவனவற்றையும் உபயோகிக்கலாம். சோளம் அறுவடையான பிறகு, அதை உழுது அதில் கொள் விதைத்து, அது பூப்பிடிக்கும் தருணத்தில் உழுதுவிட்டால், சிறந்த எருவாகும். கடலை துவரை முதலிய பயிர்களின் செடிகொடிகளை மக்கவைத்துப் போடுவதிலும் நல்ல பலன் கிடைக்கும். சோளப்பயிரை அடிக்கடி ஒரே நிலத்தில் பயிரிடாமல் மாற்றிப் பயிர்செய்வதும் நல்லது.

### பிரண்டையின் உபயோகம்.

இது வேலிகளில் தானாகவே முளைக்கும். இதில் பலவகை உண்டு. இதை ஜனங்கள் துவையல்செய்து சாப்பாட்டில் உபயோகிக்கிறார்கள். இதை உபயோகிப்பதனால் அஜீரணம், மூலநோய் முதலியன நீங்கும். மாடுகள் தண்ணீர்குடியாமற்போனால், அவற்றின் மூக்கில் இதை அரைத்துக் கட்ட, அவை தண்ணீர்குடிக்கும்.

### மணல்பூமியின் தன்மைகள்.

மணல்கலந்த பூமிக்கும் களிமண் பூமிக்கும் மிகுந்த வித்தியாஸம் உண்டு. களிமண்பூமிக்கு என்னென்ன குணங்கள் உண்டோ, அவற்றிற்கு எதிரிடையான குணங்கள் மணல்பூமிக்கு அமைந்துள்ளன. மணல் பூமியில் உழக்கருவிகள் மிகவும் சுலபமாக வேலை செய்யக்கூடும். அதில் தண்ணீர்பாய்ச்சினால், அடியில் இறங்கிவிடும். பயிர்பூண்டுகளுக்கு வேண்டிய சத்து அதில் ஒன்றும் இல்லை. இதை நல்ல நிலமாகத் திருத்தவேண்டுமானால், பின்வருவனவற்றைக் கவனித்துச் சீர்திருத்தம் செய்யவேண்டும்: மணலோடு களிமண்ணைச் சேர்க்கவேண்டும். மண்ணை அடிக்கடி கீழ்மேலாகப் புரட்டவேண்டும். நன்கு மக்கின எருவை மண்ணோடு கலக்கவேண்டும். இதோடு பசுந்தாள் எருவையும் போடலாம். பலவித மரங்களையும் வைத்துப் பயிர்செய்யலாம். இம்முறைகளை அனுஸரித்தால், மணல்நிலம் நன்கு சீர்திருந்தப்பெறுமென்பதில் ஐயமில்லை.

### பசுந்தாள் எரு.

பசுந்தாள் எருக்களில் பலவகை உண்டு. அவற்றின் உபயோகத்தைப்பற்றி அவ்வப்போது நாம் எழுதி வருகிறோம். அவுரி, புங்கம், எருக்கம், நொச்சி, வேம்பு முதலியனவற்றை சேற்றில் மிதித்து மக்க வைத்து, உபயோகித்தால், நல்ல பலன் உண்டாகுமென்பதில் ஐயமில்லை. சப்பாத்தியும் இப்பச்சை எரு இனத்தைச் சேர்ந்ததே. இதை வெட்டி ஒரு பள்ளத்தில் போட்டு, மேலே மண்ணைமூடி, கொஞ்சம்நாட்களுக்கு வைத்திருந்தால், பிறகு மட்கி சிறந்த எருவாகின்றது. தென்னை முதலியவற்றின் குழிகளுக்கு இச்சப்பாத்தியைப் போட்டால், அது சிறந்த எருவாகி மரத்தின் வேர்களுக்கு ஈரத்தைக் காத்துவரும்.

### சில வியவஸாயப் பழமொழிகள்.

1. மணலுழுது வாழ்ந்தவனுமில்லை, மண்ணுழுது கெட்டவனுமில்லை.

2 உள்ளூர்ப்பெண்ணும், அயலூர் மண்ணும் ஆகாது.

3. அழுதுகொண்டிருந்தாலும், உழுதுகொண்டிரு.

4. உழவால் பயிராகிறது எருவால் பயிராகாது.

5. களைஎடாதவன் விளைவெடான்.

6. உரம் உதவுவது ஊரார் உதவமாட்டார்.

7. கோரை குடியைக் கெடுக்கும்.

8. ஆட்டுரம் அந்தவருஷம், மாட்டுரம் மறுவருஷம்

9. உழுதசேர் காய்ந்தால், உழக்கு நெல்லும் காணாது.

10. காம்பு உழுது கம்பு விதை.

11. அகல உழுவதை ஆழ உழு.

12. களைபிடுங்காப்பயிர் கால் பயிர்.

13. ஆண் உழவு முழு எருவுக்குச் சமானம்.



## Industry and Commerce.

## கைத்தொழிலும், வியாபாரமும்.

### திருவாங்கூரில் பென்ஸில்தொழில்.

ஒரு தேசம் முற்போக்கடைவதற்குக் கைத்தொழில்களே ஆதாரமாயிருக்கின்றன. இந்தியாவானது ஏராளமான இயற்கைப் பொருள்களைக் கொண்டுள்ளதாயும், கைத்தொழிலபிவிருத்திக்கு ஏற்ற நாடாயுமிருந்தும், பொதுஜனங்களுக்குப் போதுமான அளவு கல்வியறிவும் ஊக்கமும் இல்லாததனால், எத்தொழிலும் முன்னுக்குவர மிகுந்த சிரமமாயிருக்கின்றது. மைசூர்போன்ற சம்ஸ்தானங்களில் தொழில் அபிவிருத்தியானது பலதுறைகளிலும் நன்கு முற்போக்கடைந்து வருகின்றது. திருவாங்கூர் சமஸ்தானத்தில் பென்ஸில் தொழில் செய்வதற்கான வசதிகள் இருந்துவருகின்றன. இத்தொழிலுக்கு அவசியம் தேவையான மூலப்பொருள்கள் இரண்டு. அவை பென்ஸில்கட்டை செய்வதற்கான சிறந்த மரமும், க்ராபைட் என்னும் காரீயமுமாம். இவையிரண்டும் அந்த ஸம்ஸ்தானத்தில் ஏராளமாகக் கிடைக்க வசதியுண்டு. அங்குக் காரீயம் மிகுதியாகக் கிடைக்கக் கூடுமென்று அந்த சம்ஸ்தானத்து தொழில் இலாகா அதிகாரி கூறுகிறார். இந்த க்ராபைட்டானது பெங்களூர் இந்திய தாதுப்பரீக்ஷா சாலையில் பரீக்ஷை செய்யப்பட்டதில், அது பென்ஸில் செய்வதற்கு மிகவும் சிறந்ததாயும் சுத்தமாயும் இருக்கின்றதென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பென்ஸில் தொழிலுக்குத் தேவையான இரு மூலப்பொருள்களும் திருவாங்கூர் சமஸ்தானத்தில் சௌகரியமாகக் கிடைத்துவிட்டதனால், அங்கு இத்தொழிலானது வெகு சீக்கிரத்தில் முன்னுக்கு வருமென்பதில் ஐயமில்லை.

### தோல்பதனிடுந் தொழில்.

பற்பல காரணங்களால் இந்தியாவில் கால்நடைகள் க்ஷீணித்து வருகின்றன. அப்படிக்கிருந்தும், தோல்களின் உற்பத்தியில் இந்தியா முதன்மையான ஸ்தானத்தை வகிக்கின்றது. உலகமுழுதும் வெள்ளாட்டுத் தோல்கள் எவ்வளவு கிடைக்குமோ அதில் மூன்றில் ஒருபங்கு இந்தியாவில் கிடைக்கின்றன. இப்போது முடிவான யுத்தத்தில் சேனைகளுக்குத் தேவையாயிருந்த பூட்ஸ்கள் இந்தியாவில் கிடைத்த தோல்களினாலேயே தயாரிக்கப்பெற்றவை, க்ரேட்பிரிட்டினில் 60 லட்சம் மாடுகளும் 870 லட்சம் ஆடுகளும் உள்ளன. ஆனால், இந்தியாவிலோ, 1,800 லட்சம் மாடுகளும் 870 லட்சம் ஆடுகளும் இருக்கின்றன. இவையல்லாமல், தோல் பதனிடுவதற்காக இயற்கைப் பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. அப்படியிருந்தும், தோல்பதனிடுந் தொழிலானது இத்தேசத்தில் முற்போக்கடையவில்லை. இங்கே கிடைக்கும் தோல்கள் அந்நிய நாடுகளுக்குப்போய் அங்கே தயாரிக்கப்பட்டு, பிறகு இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால், அந்நியநாட்டினர் ஏராளமான லாபத்தையடைந்து வருகின்றார்கள். இத்தொழிலானது இந்தியாவில் விருத்தியானால், நம்முடைய ஜனங்கள் பிழைப்பதோடு, பணம்போடும் நம்மவர்களுக்கு நல்ல லாபமும் கிடைக்குமல்லவா!

### வியர்த்தமே.

1. லாபகரமான தொழில்களிலும் வியாபாரங்களிலும் போட்டுப் பலனடையாமல், பரம்பரையில் கிடைத்த ஸொத்துக்களைப் புதைத்துவைப்பதுபோல் சும்மாவைத்திருப்பதும், அதைப்பற்றிக் கவலை கொண்டிருப்பதும் வியர்த்தமே. நாளடைவிலே அது இல்லாமலும் போய்விடும்.

2. மழுங்கலும் திறமையற்றதுமான ஆயுதங்களைக் கொண்டும், வயிற்றுக்கு ஒன்றுமில்லாமலும் வேலை செய்தல் வியர்த்தம். அவ்வாறு வேலைசெய்வதனால் நாளுக்குநாள் உடம்பு இளைத்துவருமென்பதோடு, வைத்தியனுக்கும் பணம்கொடுக்கவேண்டியிருக்கும்.

3 நம்மால் வகித்து நிர்வகிக்கக்கூடியதைவிட அதிகமான கால்நடைகளை வைத்திருப்பதும், ஒரே வயலில் அவைகளை நாளக்குநாள் மேய்த்துவருவதும் வியர்த்தமாகும். ஏனென்றால், அவைகளுக்குத் தகுந்த அளவு தீவனம் கிடைக்காமல் போய்விடும்.

4. மனிதன் தன் நெற்றி வியர்வை நிலத்தில் விழும் வண்ணம் வேலைசெய்து ஜீவிக்கவேண்டியதுதான். ஆகவே, ஒவ்வொருவனும் தனக்கும் தன் ஸமூஹத்தினருக்கும் உபயோகமாயிருக்கக்கூடிய ஏதேனும் ஒரு தொழிலைப் பார்த்துவரவேண்டும். ஆனால் எவரும் ஓய்வில்லாமலாவது உல்லாஸப்பொழுதுபோக்கில்லாமலாவது இருத்தலும், வரம்புகடந்து வேலைசெய்தலும் வியர்த்தமாகும்.

5. இரண்டுவார்த்தை பேசவேண்டிய இடத்தில் இருபதுவார்த்தைகள் பேசுவதும், ஏதோ கார்யமாகப் போகும் மனிதனைப் பேச்சுக்காக நிறுத்திவைத்தலும் வியர்த்தமே.—சென்னைக் கூட்டுத்தொழில் வர்த்தமானி.

## Sanitation and Medicine.

### சுகாதாரமும், வைத்தியமும்.

**ஸ்நானம் செய்கிறவர்கள் கவனிக்கவேண்டியவை.**

1. குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்கிறதாயிருந்தால், 10 அல்லது 12 நிமிஷத்திற்கு அதிகமாகத் தண்ணீரில் இருப்பது தீமையான காரியம்.

2. ஸ்நானம் பண்ணுங்கால் தேகத்தை நன்றாய் தேய்த்துச் சுத்திபண்ணவேண்டும்.

3. ஸ்நானம் செய்தவுடனே ஈரமற்ற மிருதுவான ஒரு துவாலைத்துணியைக்கொண்டு உடம்பை நன்றாய்த் துவட்டிவிட்டுப் பின்பு ஒரு முரட்டுத் துவாலையைக்கொண்டாவது, அல்லது பிளானல் கம்பளித் துணியைக்கொண்டாவது 4 அல்லது 5 நிமிஷ நேரமட்டும் தேகமெங்கும் நன்றாய்த் தேய்த்தல்வேண்டும். மார்பு, வயிறு, இடுப்பு, முழங்கால், கணுக்கால் முதலிய பொருத்தங்கள் ஆகிய இவைகளை விசேஷமாய்த் தேய்க்கவேண்டும். இப்படி தேய்க்கிறதனால் தோலானது சற்றுச் சிவந்து தேகமெங்கும் ஆரோக்கியமான ஒருவித அனல் உண்டாகும். குளிர்ந்த தண்ணீர் ஸ்நானத்திற்குப் பின்பு தேகத்தில் உண்டாகிற இந்த அனலினால்தான் சரீரத்திற்குச் சுகம் உண்டாகிறது. இந்த அனல் உண்டாகாவிட்டால் குளிர்ந்த தண்ணீர் ஸ்நானத்தில் நன்மை ஒன்றுமில்லை. ஆகையால், ஒருவன் ஸ்நானம் பண்ணினபின்னர் உடம்பைத் துவட்டிவிட்டு முரட்டுத் துவாலைக்கொண்டு தேகத்தைத் தேய்த்தபின்னும், சரீரத்தில் அனலுண்டாகாமல் ஒருவகையான குளிர் இருந்தால், அது அவன் தகாத நேரத்தில் ஸ்நானம் பண்ணினானென்றாவது அல்லது வெகுநேரமாகத் தண்ணீரிலிருந்துவிட்டானென்றாவது காட்டுகிற அடையாளம். எக்காரணத்தினாலாவது அனலுண்டாகாதமதப்பட்டால், விரைவாய்நடத்தல் ஓடுதல் முதலிய தேகப்பயிற்சிகளைச் சற்றுநேரஞ்செய்து அனலை உண்டாக்கிக்கொள்ளவேண்டும். —சக்ரவர்த்தினி.

**ப்ளேக் வியாதியில் புகையிலையின் உபயோகம்.**

ப்ளேக் வியாதியைப் பரவச்செய்வதற்குத் தெள்ளுப்பூச்சிகளே காரணமாயிருக்கின்றன. அவற்றைப் புகையிலை வெகு சீக்கிரத்தில் கொன்றுவிடுகிறது. தெள்ளுப்பூச்சிகள் வீட்டிற்குள் நுழையாமலிருந்தால், ப்ளேக் வியாதி பரவுவதற்கு இடமிராது. இதற்கு ஜனங்கள் தூங்குகிற வீட்டுத் தரைகளின்பேரில் புகையிலையைப் பரப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வதனால், தெள்ளுப்பூச்சிகள் உள்ளே நுழைந்தவுடன் சாகின்றன இம்முறையானது பரிசோதிக்கப்பட்டு பலன் கண்டிருக்கிறது.

---

## General Notes.

### பொதுக் குறிப்புக்கள்.

**கண்ணாடியைச் சுத்தம்செய்யும் முறை.**

சில ஸமயங்களில் ஜன்னல்கள் முதலியவற்றிற்கு உபயோகிக்கும் தட்டைக்கண்ணாடிகளில் கீறல்கள் ஏற்படுவதுண்டு. அவற்றைப் போக்க, மெல்லியதான சிறு துணியை ஸ்பிரிட் எண்ணெயில் நனைத்து கீறல்பட்ட கண்ணாடியின்மேல் கொஞ்சநேரம் தேய்த்துப் பிறகு, ஒரு சிறு பட்டு அல்லது தோலைக்கொண்டு தேய்த்தால், கீறல்கள் மறைந்து கண்ணாடி சுத்தமாய் விடும்.

**மரஸாமான்களிலுள்ள கீறல்களைப் போக்கல்.**

நாற்காலி மேஜை முதலான மரஸாமான்களில் கீறல்கள் ஏற்படுவது ஸகஜம். அப்படி ஏதாவதேனுமிருந்தால், சிறிய பிரஷ்ஷில் ஷெல்லெக் என்னும் அரக்குசேர்ந்த வார்னிஷை கீறல் உண்டாயிருக்குமிடத்தில் விட்டு நிரப்பிவிடவேண்டும். பிறகு, பள்ளங்கள் அடைபட்டுச் சரியாய்ப்போய்விடும். வார்னிஷ் காயும்வரை அதைத் தொடுவது கூடாது.

**உருளைக்கிழங்கு பசை.**

உருளைக்கிழங்கு நன்கு வெந்தவுடன் கொஞ்சம் ஆறியதும், அதை ஒரு காகிதத்தின்மேல் போட்டுத் தேய்த்து எடுத்தால், நன்கு ஒட்டக்கூடிய பசை கிடைக்கும்.

**உடையின் மண்கறையைப் போக்குதல்.**

நாம் தரிக்கும் உடைகளில் மண்கறைகள், சில ஸமயங்களில், எவ்வளவுநேரம் தோய்த்தாலும் போவதில்லை. அதற்கு, கறைபட்ட இருபுறங்களிலும் உருளைக்கிழங்கினால் தேய்த்தபிறகு தோய்த்தால், சீக்கிரத்தில் விட்டுவிடும்.

**புஷ்பங்கள் வாடாமலிருக்கச் செய்தல்.**

புஷ்பங்களை வேறு ஊர்களுக்குத் தபால்மூலமாய் அனுப்பவேண்டுமானால், அவை அங்குப் போய்ச் சேருவதற்குள் வாடிப்போகின்றன. இதற்கு, அனுப்பவேண்டிய புஷ்பங்களை இராக்காலத்தில் பறித்து தண்ணீர்த்தொட்டியில் வைத்திருந்து, விடியற்காலத்தில் எடுத்துப் பாக்செய்துவிட்டால், அவை கெடாமலிருக்கும்.

---


# ஜனோபகாரி.

**(THE JANOPAKARI.)**

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.


159
4-FEB 1919
MADRAS

புஸ்தகம் 3. Vol. III. | காளயுக்திஹு மார்கழிமீ, DECEMBER, 1918. | சஞ்சிகை 12. No. 12.

## The Progress of the World.

### பிரபஞ்சப்போக்கு.

**தமிழ்ப்பண்டிதர்களின் மகாநாடு.**

நமது தேசத்தில் பலவித மகாநாடுகள் கூடுவதைப்பற்றி நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், தமிழ்ப்பாஷையின் அபிவிருத்திக்கான மகாநாடுகள் இதுவரை எங்கும் கூடியதாகத் தெரியவில்லை. இந்தமாதம் திருச்சி ஸெண்ட்ஜோஸப் காலெஜ் லாலிஹாலில் தமிழ்ப்பண்டிதர்களின் முதலாவது மகாநாடு கூடியது. அப்போது தமிழ் ஆசிரியர் ஸ்ரீமான் செல்வகேசவராய முதலியார் அக்கிராஸனம் வகித்தார். அக்கிராஸனாதிபதி தமது பிரசங்கத்தில், வசனநூல்களை எவ்வாறு பெருக்கவேண்டுமென்பதைப்பற்றிப் பேசிவிட்டு, தற்காலத்தில் வெளியாய்க்கொண்டு வரும் போலி நாவல்களைப்பற்றிக் குறிப்பிடுகையில்: இந்நாவல்களில் பலவித கெடுதிகளை விளைவிக்கக்கூடிய விஷயங்கள் காணப்படுகின்றனவென்றும், அவை நமது சகோதர சகோதரிகளைப் பெரிதும் பாதிக்கக்கூடியவையென்றும், அத்தகையன நமது நாட்டுக்கு ஏற்றவையன்றென்றும் சொன்னார். இவ்விஷயம் முற்றிலும் உண்மையே. இன்னும் அவர், வாசகபாட கமிடியிலுள்ள குறைபாடுகளையும், ஸொஸைடி கல்விக் கூட்டத்திலுள்ள குறைபாடுகளையும் எடுத்துக் கூறியதைப்பற்றி நாம் மெச்சுகின்றோம். அக்கிராசனாதிபதி மீண்டும் குறிப்பிட்டுள்ள இன்னொரு விஷயத்தையும் நாம் கவனிக்கவேண்டும். "நமது பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான வாசகபாடங்களை ஆங்கிலக்கம்பெனியார்கள் அச்சிட்டு நல்ல லாபம் சம்பாதிக்கிறார்கள். இக்காரியத்தை ஏன் ஒரு இந்தியக்கம்பெனி தகுந்த மூலதனத்தைக்கொண்டு செய்யக்கூடாது?" இவ்வாறு அக்கிராசனாதிபதி கேட்டது சரியே. இவ்விஷயத்தைச் செல்வவான்களாயுள்ள தமிழ் மக்கள் கைக்கொண்டு தக்கது செய்வார்களென நம்புகிறோம்.

**மலாய்தீவுகளில் இந்தியர் குடியேறுதல்.**

மலாய் நாடுகளில் குடியேறிய இந்தியர்கள் அனுபவித்துவரும் கஷ்டங்களை தீரவிசாரித்து, அவைகளை நிவிருத்தி செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றி ஆலோசிப்பதற்காக மிஸ்டர் ஆண்ட்ரூஸ் என்பவர் சில மாதங்களுக்குமுன்பு ஆஸ்திரேலியா, ஜாவா, மலாய் முதலான நாடுகளுக்குச் சென்றிருந்தார். அவர் திரும்பிவந்ததும், அங்கு இந்தியர்கள் குடியேறுவதனால் உண்டா

கும் தீமைகளையும் கஷ்டங்களையும் நமது தேசத்தில் ஆங்காங்குப் பிரசங்கம் செய்து வருகிறார். இவர் மேற்குறித்த விஷயத்தைப் பற்றி ஸமீபத்தில் சென்னையில் பிரசிங்கித்த போது, சில அரிய விஷயங்களை வெளியிட்டார். ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பு இந்தியா மிகவும் நாகரிகம்வாய்ந்த தேசமாயிருந்ததென்று பேசியபோது அவர் குறிப்பிட்டதாவது:—

"நான் ஆஸ்ட்ரேலியா, ஜாவா, முதலான இடங்களுக்கு யாத்திரை செய்துகொண்டிருக்கையில், இந்தியர்கள் அங்கு ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பு சென்று ஸ்தாபித்த மேன்மையான உருவச்சிலைகளைக்கண்டு ரொம்பவும் ஆச்சரியமடைந்தேன். அவற்றின் வேலைகள் மிகவும் பாராட்டத்தக்கவையாகவே யிருந்தன. அக்காலத்தில் இந்தியர்கள் நாகரிகத்தைப் பரவச்செய்வதற்காகவே அவ்விடங்களுக்குச் சென்றிருந்தனர். இவ்விஷயமானது இந்தியர்கள் அப்பொழுது நாகரிகத்தில் எவ்வளவு மேன்மையுற்றிருந்தார்கள் என்பதை நன்கு விளக்குகின்றது."

இந்தியர்களின் மேன்மையைப்பற்றி மிஸ்டர் ஆண்ட்ரூஸ் மேற்கண்டவாறு பேசிவிட்டு, அவர்கள் அவ்விடங்களில் அநுபவித்து வரும் பலவித அசௌகரியங்களைக்குறித்தும் விரிவாகப் பேசினார். அவ்விஷயங்களை நாமும் கவனித்து அவற்றை ஒழிக்க முயலவேண்டுவது நமது கடமையாகும்.

**சிறுவர்கள் புகைகுடித்தல்.**

சிறுவர்கள் புகைக்குடிப்பதானது நமது தேசத்தில் நாளுக்குநாள் அதிகமாய்க்கொண்டே வருகின்றது. முக்கியமாய்ச் சிறுவர்கள் புகைக்குடிப்பது பீடி என்பதும், சிகரேட் என்பதுமேயாகும். பீடி என்பதில் உள்ளே கொஞ்சம் புகையிலையும், மேலே கனத்த இலையும் சுற்றப்பட்டுள்ளது. சிகரெட்டுகள் ஐரோப்பாவினின்று வருவன. அவை அழகான காகிதத்தில் சுற்றப்பட்டுப்பார்வைக்கு இனிமையாயிருக்கின்றன. இந்தியச்சிறுவர்கள் இவற்றை வாங்கிப் புகைக்குடிக்கிறார்கள். இதனால், அவர்களின் தேகஆரோக்கியமானது நாளுக்குநாள் கெட்டுவருகின்றது. வங்காளத்துச் சட்டசபையார் சிறுவர்கள் புகைகுடிக்கக்கூடாதென்று ஓர் சட்டம் செய்திருக்கிறார்கள். சிறுவர்கள் புகைக்குடிப்பதனால் ஏராளமான பணம் செலவாகின்றன இவற்றைப் பிள்ளைகளின் தேக ஆரோக்கியவிஷயமாய்ச் செலவிட்டால், மிகுந்த நன்மை உண்டாகுமென்பதில் ஐயமில்லை. நமது மாகாண கவர்ன்மெண்டாரும் இதைக் கவனிக்கவேண்டும்.

---

## Scout Boys.

By Mr. N. S. Subramanian.

### 'ஸ்கௌட்' சிறுவர்கள்.

பழுக்கக்காய்ந்த இரும்புதான் வேலைக்கு உபயோகப்படும். ஆறிக்குளிர்ந்துவிட்டால், அதை நம் இஷ்டம்போல அடித்து நல்ல ஸாமானைச்செய்யமுடியாது. சிறுவர்களின் மனது பழுக்கக்காய்ந்த இரும்புக்குச்சமானமாகும். சிறுபிராயத்திலேதான் அவர்களுக்குக் கீழ்ப்படிதல், நாணயம், ராஜபக்தி, தெய்வபக்தி முதலான நற்குணங்களைப் போதித்தல் சாத்தியமாகும். அப்படி போதிக்கப்பட்ட சிறுவர்கள் சிறந்த நற்குணமுள்ளவர்களாகித் தத்தம் கடமைகளைச் செய்வார்களென்பதில் ஐயமில்லை.

பால்யத்தில் திருந்தாத மனம், பிறகு ஒருநாளும் திருந்தாது. பால்யம் தவறினால், பிறகு மனமானது ஆறிக்குளிர்ந்த இரும்புக்குச்சமானமாகி வேலைக்கு உதவாமற் போய்விடும்.

மற்றொரு விஷயம். பால்யத்தில் ஊக்கம், ரக்தம், திமிர் இவை மிதமிஞ்சி இருக்கும். அவற்றைச் சரியானவழியில் செலவிட்டால்



நன்மை உண்டாகும். அத்தகைய வழியைக் காண்பிப்பது நமது கடமையாகும். எவ்வளவோ சிறந்த மூளைகளும் மேலான சக்திகளும் தப்பான மார்க்கத்தில் செலவழிக்கப்பட்டதனால், அவை வீணாய்ப்போயும், அநேகம் கெடுதிகளை உண்டுபண்ணியும் இருக்கின்றன. துஷ்டப்பிள்ளைகள் வெகுவாய் மிகுந்த புத்திசாலிகள். அவர்களின் புத்தி துஷ்டத்தனத்தில் செலவிடப்பட்டு, அதில் அவர்கள் தேர்ந்தவர்களாகிறார்கள். அவர்களுக்கு வேறுவிதமானதும், உபயோகமானதும், வேடிக்கையானதுமான சில வழிகளைக் காண்பித்தால், அவர்கள் துஷ்டச்செய்கைகளைவிட்டு நற்குணமுள்ளவர்களாவதுடன், பற்பல விஷயங்களையும் அறிந்துகொள்ளுவார்கள். இங்கிலண்டில் பள்ளிக்கூடங்களில் இப்படிப்பட்ட கெட்டிக்கார துஷ்டப்பிள்ளைகளைக்கண்ட ஸர் ராபர்ட் பேடன் பவல் என்பவர், இவர்களின் புத்தியை ஸன்மார்க்கத்தில் திருப்ப ஒருவழியைத் தேடவேண்டுமென்று எண்ணினார். சுமார் 10 வருஷங்களுக்குமுன் அதற்காக 'ஸ்கௌடிங்' என்னும் ஒருவிஷயத்தை ஆரம்பித்தார். 11 வயது முதல் 18 வயது வரையில் உள்ள எல்லாச் சிறுவர்களும் அதில் சேரலாம். பரோபகாரம் செய்யவேண்டும் என்பது 'ஸ்கௌட்டுகளின்' பிரதமவிதி. ஒவ்வொரு ஸ்கௌட்டும் தினந்தோறும் ஒரு உபகாரமாவது பிறருக்குச் செய்யவேண்டும். ஸ்கௌட்டுகளுக்கு, பிறருக்கு உபகாரஞ்செய்ய ஹேதுவாயிருக்கும் பொருட்டு சில முக்கியமான விஷயங்கள் போதிக்கப்படுகின்றன. 'பர்ஸ்ட் எய்ட்' என்று சொல்லப்படும் முதற்சிகிச்சை ஒவ்வொரு ஸ்கௌட்டுக்கும் தெரியும். 'ட்ராகிங்' என்று சொல்லப்படும் ஊகித்தறிதல் மிகவும் முக்கியமானது. கால்நடைகள் அல்லது குழந்தைகள் வழிதவறிவிட்டால், அவைகளின் அடிகளைத்தொடர்ந்து சென்று கண்டுபிடிப்பதற்கு "ட்ராகிங்" வெகு அநுகூலமாயிருக்கும். இன்னும், 'ஸிக்னலிங்' பறவையினம், மிருகங்கள் இவைகளின் இயற்கையை அறிதல், வீடுகளில் நெருப்புப்பற்றினால் அதை அவிக்கும்வழி, அந்த வீட்டிலுள்ள ஜனங்களைத் தீயினின்றும் அப்புறப்படுத்திக் காப்பாற்றும் வழிகள், தண்ணீரில் மூழ்கினவனுக்குச் செய்யவேண்டிய சிகிச்சைகள், தண்ணீரில் தத்தளித்துக்கொண்டிருப்பவனைக் கரையில் கொண்டுவந்து சேர்க்கும் வழிகள், குடிசை கட்டுதல், கயிறுகளாலும் மூங்கில்தடிகளாலும் பாலங்கட்டுதல் முதலிய பிள்ளைகளின் மனத்திற்கிசைந்ததும் உபயோகமுள்ளவையுமான பலவிஷயங்களும் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. பிள்ளைகள் இவ்விஷயங்களை மிக்க உத்ஸாகத்துடன் கற்றுக்கொள்வது இயற்கை. வெளியில் வராமல் உள்ளேயே உட்கார்ந்து கொண்டு, எப்போதும் புஸ்தகமும் கையுமாக இருந்து, உடம்பைத் துரும்புபோலாக்கிக்கொண்டு பலஹீனர்களாயிருக்கும் நம் தற்காலப்பிள்ளைகளுக்கு, 'ஸ்கௌடிங்' மூன்று விதங்களில் நன்மைபயக்குகின்றது. முதலாவது: வெளியில் ஸஞ்சரித்து நல்ல பிராணவாயுவை உட்கொண்டு, தேக ஸௌக்கியத்தையடைகிறார்கள். இரண்டாவது: மனது குறுகி மெலிந்து போகாமல், விசாலமாகிப் பல விஷயங்களையும் அநுஷ்டான பூர்வமாகக் கற்றுக்கொள்ள அவர்களுக்கு இடமேற்படுகின்றது. மூன்றாவது: நல்ல குணமுள்ளவர்களாயும், பரோபகாரிகளாயும் ஆகிறார்கள்.

சென்ற பத்து வருஷங்களுக்குள் 'ஸ்கௌடிங்' எல்லா நாகரிக தேசங்களிலும் பரவிவிட்டது. அதற்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு. அது சென்ற விடங்களிலெல்லாம் மேன்மையைப் பெற்றிருக்கின்றது. அமெரிக்கா ஐக்ய மாகாணங்களில் மட்டும் 250,000 ஸ்கௌட்டுகளுக்கு மேல் இருக்கிறார்கள். தேச நன்மைக்காக உழைக்கும் விஷயங்களுள் ஒன்றென்று சட்ட பூர்வமாக அமெரிக்காவில் இது அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. ந்யூஸிலண்ட் என்னும் ஒரு சிறிய தேசத்திலகூட 20,000 'ஸ்கௌட்டுகள்' இருக்கின்றார்கள். இத்தகைய நன்மை பயக்கக்கூடிய முயற்சியானது இந்தியாவிற்கு அவசியமன்றோ!

என். எஸ். சுப்பிரமணியன்.

# Sir Jagadish Chandra Bose.

(A Life Sketch.)

By Mr. N. R. Kedari Rao, M.A., L.T.,

## ஸர் ஜகதீஸ சந்திர போஸ்.

நமது ஜகதீச சந்திரபோஸுக்கு இவ்வளவு பெயரும் கீர்த்தியும் வருவதற்குக் காரணம் என்னவென்று இனிக் கவனிப்போம். அநாதி காலந்தொட்டு உலகத்திலுள்ள வஸ்துக்கள் எல்லாவற்றையும் ஸ்தாவரம், ஜங்கமம் ஆகிய இந்த இருபிரிவுகளுக்குள் அடக்கி வந்து கொண்டிருந்தார்கள். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தானாக அசையும் சக்தி உள்ளவைகளை ஜங்கம வஸ்துக்களென்றும், அப்படித் தானாகவே அசையும்சக்தி இல்லாதவைகளை ஸ்தாவர வஸ்துக்களென்றும் எண்ணியிருந்தார்கள். உதாரணமாக: செடி, கொடி, மரம், மட்டை முதலியன ஸ்தாவர வர்க்கத்தைச் சேர்ந்தனவென்றும், ஆடுமாடு முதலிய ஜந்துக்கள் ஜங்கமவர்க்கத்தைச் சேர்ந்தனவென்றும் எண்ணியிருந்தார்கள். தவிரவும், இவ்விரு வர்க்கங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் பலவென்றும், ஜந்துக்களுக்குள்ள உணர்ச்சி என்பது செடிகொடிகளுக்கு இல்லை என்றும் கருதியிருந்தார்கள். மிருகங்களை அடித்தால், இந்த உணர்ச்சியினால் அவை வருந்துகின்றன. மனிதனைக் கிள்ளினால் அவன் கத்துகிறான். அவ்விதமே ஒரு மரத்தை வெட்டினாலும் சரி, கிள்ளினாலும் சரி, அடித்தாலும் சரி அது பேசாமலிருப்பதனால், அதற்கு உணர்ச்சிச் சக்தி இல்லை என்று தீர்மானம் செய்திருந்தார்கள்.

ஆயினும், செடிகளிலும் சிலவற்றைத் தொட்டால், அவை உடனே சுருங்கிவிடுகின்றன. சாதாரணமாய் 'தொட்டாற் சுருங்கி' என்னும் இலையை நாம் பலதரமும் பார்த்திருக்கிறோம். அதைத் தொட்டவுடனே அது சுருங்கிவிடுகின்றதல்லவா? இதன் காரணமென்னவென்று சாஸ்திரிகள் பலரும் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். சிலர் மனிதனைப்போல் இச்செடிக்கும் உணர்ச்சிச்சக்தி உண்டு என்றார்கள். அப்படி உணர்ச்சிச்சக்தி இருந்தால், "அதற்கு நாம் மயக்கம்கொடுத்தால் அது மயங்கி விழுந்துவிடுகிறதா?" என்று சிலர் கேட்டார்கள். உணர்ச்சியிருந்தால், தொட்டாற்சுருங்குவதேயல்லாமல், மயக்கம்கொடுத்தால் மனிதனைப்போல் அதுவும் மயங்கி விழுந்துவிடவேண்டும். சந்தோஷமாயிருக்கும் போது உத்ஸாகமாயும், வேலையால் களைப்படைந்தபோது சோர்ந்தும் இருக்கவேண்டும். இவ்விதமெல்லாம் இருக்கின்றனவா பார்ப்போம் என்று எண்ணி பெப்பர் என்ற மேல்நாட்டறிஞர் ஒருவர் (Peffer) சில சோதனைகளைச் செய்துபார்த்தார். மனிதனுக்கு "க்ளோரோபாரம்" (Chloroform) என்ற மயக்கத்தைக் கொடுத்தால் அவன் சோர்ந்து விழுகிறான்; அப்படியே இச்செடி சோர்வடைகிறதாவென்று பார்த்தார். "க்ளோரோபாரத்தைக்" தண்ணீரில் கரைத்து அதைச் செடியின்பேரில் தடவினதில், அது சோர்வடைந்ததாகத் தோற்றவில்லை. ஆகையால், பெப்பர் "இச்செடிக்கு உணர்ச்சி என்பதே யில்லை" என்று எண்ணினார். ஆயினும், "தொட்டால் அது ஏன் சுருங்குகிறது" என்பதற்குப் பின்வரும் பதிலை அளித்தார்: "சாதாரணமாய் ரப்பர்குழாயில் தண்ணீரை ஊற்றி, அக்குழாயின் ஒரு பாகத்தை அழுத்தினால், மற்ற இடத்திலும் அதற்குத் தகுந்த மாறுபாடு எப்படி உண்டாகிறதோ அப்படியே இச்செடியிலும் நாம் தொட்டவுடனே அது சுருங்குகிறது. அவ்வளவே தவிர, இச்செடிக்கு உணர்ச்சிச்சக்தியேயில்லை" என்றார்.






இவற்றில் A B என்பது தண்ணீரால் நிரப்பப்பட்ட ரப்பர்குழாய். இதில் D என்பது பிஸ்டன் (Piston). இந்த ரப்பர் குழாயை C என்ற இடத்தில் அழுத்தினால், D என்ற பிஸ்டன் வெளியே வந்து E என்ற வஸ்துவின்பேரில் மோதும். இதை நாம் ஸகஜமாய் அறியலாம். இப்படியே 'தொட்டாற் சுருங்கி' என்ற செடியிலும் நடக்கிறது என்று அவர் ஸ்தாபித்திருந்தார்.

ஆயினும், நமது போஸுக்கு இது ஸரியானது என்று புலப்படவில்லை. இவ்விஷயத்தைத் தாமே ஆராய ஆரம்பித்தார். நமக்கு 'க்ளோரபாரம்' கொடுத்தால், அதன் ஆவியானது நமது நரம்புகளுக்குச் சென்று அவைகளின் உணர்ச்சியை நிறுத்திவிடுவதனால்தான் நமக்கு ஒன்றுந் தெரியாமல் உணர்ச்சியற்றவர்கள்போலக் கிடக்கிறோம். பெப்பர் செய்த சோதனையில் பல பிசகுகள் இருக்கலாம். ஒரு செடியை க்ளோரபாரம் தண்ணீரில் நனைத்தவுடனே, அந்த மயக்கம் நரம்புகளுக்குச் செல்லாமலிருந்திருக்கலாம். சதையின் மத்தியிலிருக்கும் நரம்புக்கு மயக்கங்கொடுப்பது எளிதான காரியமன்று. ஆகையால் அதே சோதனையை நாம் மறுபடியும் செய்து பார்ப்போம் என்று துணிந்தார். பருமனான செடியைச் சோதனைசெய்வது கஷ்டமாதலால், மெல்லியதான இலையைச் சோதனைசெய்ய முயற்சித்தார். இவருடைய ஆலோசனைகளின் விவரங்களாவன:—"இந்தியா ரப்பருக்கு உணர்ச்சி இல்லாததனால் அதை அழுக்கினாலொழிய பிஸ்டன் வெளியே வர வழியில்லை. ஒரு வஸ்துவுக்கு உணர்ச்சியிருந்தால், அது விஷத்தால் கஷ்டப்படும்; இருட்டில்வைத்தால் சோர்வடையும்; அதிக வேலைசெய்தால் களைப்பாற வேண்டிவரும்; சீதோஷ்ண ஸ்திதியை வெகுவாய் மாற்றினால், அதற்குத்தகுந்த மாறுபாடுகள் தெற்றென விளங்கும். இவையெல்லாம் இச்செடியில் இருக்கின்றனவா இல்லையாவென்று பரிசோதனை செய்வோம்" என்று தம் செடியைப் பரிக்ஷைக்கு உட்படுத்தினார்.



தொட்டாற் சுருங்கி என்னும் செடி இப்படத்தில் காண்பிக்கப்பட்டிருக்கின்றது.

1. செடி எப்போதும் இருக்கும் மாதிரி.
2. நாம் அதைத் தொட்டால், இலை சுருங்கியிருக்கும் மாதிரி.

........நரம்புகள் இருக்கும் இடம்.

இச்செடியைப் பரிக்ஷைக்கு உட்படுத்துவதென்றால், சுலபமான காரியமா? அதற்கு உணர்ச்சி உண்டா இல்லையா என்பதை அறிவதற்கு மார்க்கம் என்னவென்று பலநாட்கள் அவர் யோசித்துக் கடைசியில் தமது "ரிஸொனண்ட் ரிகார்டர்" (Resonant Recorder) என்ற அற்புதக்கருவியை ஏற்படுத்தினார்.



தன்றோ? அப்படியே இச்செடிக்கும் உணர்ச்சி உண்டாவதற்குக் கொஞ்சநேரம் ஆகின்றது. அதுவரையிலும் a b ஆகிய நேர்கோடு தெரியும். உணர்ச்சியுண்டானதும் இலைகள் சோர்வடைவதனால், b c என்ற கோடு வளைந்து தெரிகிறது. பரீக்ஷை செய்ததில், இச்செடியை நாம் தொடுவதற்கும், அவ்வுணர்ச்சி அதற்குத் தெரிவதற்கும் மத்தியில் எவ்வளவுகாலம் ஆகிறது என்பதை a b என்பதனின்று அறியலாம். நேரில் பரிசோதித்ததில், இக்காலம் ஒரு ஸெகண்டில் பத்தில் ஒருபாகத்துக்குக் கொஞ்சம் மேலாயிருக்கிறது (·109 Second.)

இதனின்று இச்செடிக்கு உணரும்சக்தி உண்டென்று தெளிவாய்த் தெரிகின்றதல்லவா? ஆயினும், நமது போஸுக்கு இச்சக்தியைப் பற்றி மேலும் மேலும் அறிய அவா உண்டாயிற்று. செடியின் உணர்ச்சி சீதோஷ்ணத்தினால் மாறுமா என்று ஆலோசனை செய்துபார்த்தார். ஆகவே செடியை உஷ்ணப்படுத்தியும், குளிர்வித்தும் மேற்சொன்ன பரீக்ஷையைச் செய்தார்.

இதன் மர்மத்தை அறிவது அரிதன்று. தொட்டாற் சுருங்கி என்றஇலையை K என்ற பட்டு நூலில் கட்டிவிட்டு அந்நூலை V என்ற லீவரோடு சேர்த்துவிட்டால், இலை சுருங்கும்போது நூல் தாழ்ந்துவிடும். தாழ்ந்ததும், W என்ற கையானது G என்ற கரிதித்த கண்ணாடியில் தேய்ந்துகொண்டே வரும். இக்கண்ணாடியை ஒரேமாதிரியாய்த் தாழ்த்திக்கொண்டுவந்தால் a b c முதலிய கோடுகள் கண்ணாடியில் தோன்றும். இதில் சோதனை என்னவென்றால்:—முதலில் இலைகளைச் சும்மாவைத்திருந்து கண்ணாடியைத் தாழ்த்திக்கொண்டுவரவேண்டும். பிறகு மின்சாரத்தைக்கொண்டு இலைகளை மூடிக்கொள்ளும்படி செய்வதனால் உண்டாகும் வேறுபாட்டைக் கண்டுபிடிப்பது சுலபமாகும். S R P E முதலியவைகள் மின்சாரக் கருவிகள். நாம் ஒரு ஜந்துவைத் தொட்டதும், அது உணர்வதற்குக் கொஞ்சநேரம் செல்லுகின்ற



செடியைச்சற்று உஷ்ணத்துக்குட்படுத்தினவுடனே, அதன் உணர்ச்சிச்சக்தி அதிகமாய் விடுவதும், சீதளப்படுத்தினவுடன் சக்தி குறைவதும் கண்டு அவர் ஆச்சரியப்பட்டார்.

1. சீதளம்.
2. கொஞ்சம் உஷ்ணம்.
3. அதைப்பார்க்கிலும் உஷ்ணம்.



இன்னும், செடியை அதிக உஷ்ணத்துக்குட்படுத்தியதனால் அது செத்துப்போய்விடுவதையும், உணர்ச்சிச்சக்தியைக் காண்பிக்காமலிருப்பதையும் கண்டு அவர் வியந்தார்.

இம்மாதிரி பலவித சோதனைகளைச் செய்து, செடிகொடிகளுக்கும் மிருகங்களுக்கும் உணர்ச்சியில் வித்தியாஸமேயில்லையென்று அவர் நன்றாக ஸ்தாபித்தார்.

சில சாஸ்திர அறிஞர்கள், 'தொட்டாற் சுருங்கி' என்ற செடியில்மாத்திரம் இப்படியிருக்கும், மற்றவைகளில் இல்லை என்று சொல்லுவார்கள் என்பதை இவர்முன்னறிந்து, புளிச்சை இலை முதலான பலவகை இலைகளையும் சோதித்துத் தாம் உணர்ந்த விஷயம் மெய்தான் என்று சித்தாந்தம் செய்தார்.

இவ்விஷயத்தின் அருமையை நாம் என்னென்று போற்றுவது! இதுவரையிலும் உயிரில்லை என்று நினைத்திருந்த செடிகொடிகளுக்கு உயிருண்டென்றும், நம்மைப்போல் அவைகளும் சுகதுக்கங்களுக்குத் தக்கவாறு மாறுபாடுகளடைகின்றனவென்றும், காற்றும் வெளிச்சமும் நமக்கு எப்படி அவசியமோ அப்படியே அவைகளுக்கும் அவசியமென்றும் இவர் தம் அற்புதக் கருவிகளைக்கொண்டு காட்டியுள்ளார்.

இவ்விஷயங்களைப்பற்றி இவரே சில சமயங்களில்: "இவ்வளவு காலமாய் மிருகங்களுக்குத்தான் உயிருண்டென்றும், செடிகளுக்கு அது இல்லை என்றும் எண்ணியிருந்தோமே. பல ஆண்டுகளுக்கு முன்னமேயே நமது முன்னோர்கள் இவ்விஷயத்தைத் தெளிவாய் உபனிஷத்துக்களில் உபதேசித்திருக்கிறார்களே" என்று எண்ணி நமது ஆன்றோர் பெருமையை விளக்கியிருக்கிறார்.

"ஜந்துக்களிலும், மிகவும் சிறியதாகவுள்ள மரம் முதல் விசாலமான ஆலமரங்கள் வரையிலும், மனிதனிலும், மற்றெவ்வகைப் பொருட்களிலும் உள்ள உயிரைத் தன்னுயிராகக் கருதுபவன் எவனோ அவன்தான் சாஸ்திரஞானி; மற்றெல்லோரும் அறியாதார்" என்று கங்கா நதி தீரத்திலிருந்து சொல்லிய இருடிகளின் மொழிகள் எவ்வளவு மெய்யுடைத்து" என்று நமது போஸ் மெச்சியிருக்கிறார்.

என். ஆர். கேதாரிராவ், எம்.ஏ; எல்.டி

---

## New Sonnets in Tamil.

BY MR. V. SUBBA AIYER.

### தமிழ் நவீனப் பாசுரங்கள்.

26. தெலுங்கு.

நிலைமண்டில வாசிரியப்பா.

'தெலுங்கோ வல்லது தேனோ?' வென்று
பலமொழி யுணர்ந்தவர் பகர்வது சரதம்;
அன்ன தினமுகினை யாய்ந்திடா மாந்தருஞ்
சின்னதா மோர்க்குறி செவியுட் புகுத [ஆங்
தம்மனங் குளிரத் தலைகளை யசைத்தே
'ஹா! ஹா!! ஹா! ஹா!! பேஷ்! [பேஷ்!!' என்று
தங்களி னுளக்களி காட்டுவ ரென்பதிற்
சந்தே கமுமிலை; சாற்றிடி லந்தப்
பாஷையி னுள்ள பத்யமுங் கத்யமும்
வடமொழி போன்ற வளமுடன் வயங் [கும்:
பாண்டியின் மன்னனைப் பண்புடன் [பெற்றனள்,
ஆண்டவ னருளை யடைந்தபே ரீன்றனள்,
மன்னுயிர் காக்க வல்லவ ரீந்தபின்
என்னையும் பெற்றென ளிளந்தெலுங் [கனங்கே.

---

### 27. வாழை.

நேரிசை யாசிரியப்பா.

வாழை யெனப்படும் மரந்தனை யறியார்
இத்தே சத்தினு மிருப்பரோ வறிகேம்;
ஆயினு மதுதரு மிலையுங் காயுந்
தண்டும் நாருந் தரையுள வர்க்கு
நித்தமு முதவியாம் நேர்மை நினைந்தே
இங்கே சற்று எழுதத் துணிந்தேம்;
பெரிய வாழை யீன்ற கன்றினைப்
பெயர்த்தே வைத்த வருட மொன்றிற்
குலையாய்க் காய்களைக் கொடுத்து நிற்கும்;
வாழை மரந்தான் வளர்ந்திட வேண்டில்
ஈர முலரா திருத்தல் வேண்டும்:
வாழைய டிவாழை வளருதல் போல
நீவிரும் பத்தியை நிலையாய்
அடைந்திடக் கடவுளி னடிதொழு மின்
[றே.

---

### 28. வாழை.

(தொடர்ச்சி)

நேரிசை யாசிரியப்பா.

வழையி லநேக வகையுள தறிந்திடும்:—
மொந்தன் கதலி யெனப்படு மிருவகை
எந்த விடத்திலு மிருப்பது சகசம்,
பேய னென்றவோர் விதமாங் காயின்
மேலெலாஞ் சாம்பல் நிறமே காணும்,
இரசதா ளியெனு மின்னொரு வகையோ
இனிப்பு மிகுந்தே யிருக்கும் மற்றுச்
சிறுமலை தன்னிலோர் சிறந்த வாழை
தந்திடுங் கனியைப் போல வேறொரு
கனியிலை யென்பதைக் கருத்துட் பதி
[மின்;
அதுவிடிற் சேலஞ் சில்லா மலைகளில்
வளரும் வாழையின் பழங்களு மினிய
[வே:
இவையெலாங் காண்போ ரெங்ஙனம்
அவனை மறுப்பதென் றறைந்திடு மெமக்
[கே.

---

### 29. ஏத்தம்வாழை.

நிலைமண்டில வாசிரியப்பா.

ஏத்தம் வாழை யென்பதோர் மரத்தை
ஏந்தர மென்றும் நேந்தர மென்றும்
வழங்குத லுண்டே யன்னது வளரும்
மலையா ளத்தினு மூள்ள மானிடர்:
அதுதான் விளையச் சாற்பாங் கான
நிலமே நன்றுமென்பது தேரும்:
கன்றைப் பதித்த பிறகோர் காலை
வேளையிற் சென்று வாழையை நோக்க
அதனின் குருத்தின் நுனியிற் றண்ணீர்
இரண்டி ருப்பதைக் காணலாம், பின்னல்
அந்நீ ரிரங்கி வாழைக் குதவும்:
அதன்காய் வறுவலும் மாவுஞ் செய்ய
[லாம்,
அதுதரும் நாரா லாகிய கயிறுகள்
கப்பலுங் கட்ட வலியுடைத் தாகுமே.

---

### 30. பசு.

நிலைமண்டில வாசிரியப்பா.

அரசர் கவரும் ஆனிறைச் செல்வம்
கானில வளத்தை நல்கும் செல்வம்
மானிடர் நோய்க்கு மருந்தாம் செல்வம்
மலர்மகள் மனையில் வாழ்ந்து நிலவிக்
குலமெலாம் நலமுறு குறைவிலாச் செல்
[வம்
எவ்வகைத் தேவரும் இன்புடன் தங்கும்
ஒப்பிலா மெய்யே உன்னருஞ் செல்வம்
அன்னதன் பெருமை அறைகுதல் அரி
[தே
ஆவோ டந்தணர் அமையும் வாழ்க்கை
கோவோ டமையும் குவலயம் செழிக்க
அமலன் ஆடும் ஐவகை நலனும்
ஆவின் பாலே படுமென வறிமின்
பசுமலைப் போக்கே ஈதோ பாரென
நீற்றை உடலில் நிறை யணிவீரே.

Note:—The right of publishing these sonnets in book form is reserved by the author. But Editors of other journals may publish them provided they send two copies of the issue in which they appear to V. Subba Aiyar, Seetharama Mudali Street, Vellore.



## Indian Women and their Education.

## இந்திய ஸ்திரீகளின் கல்விப் பயிற்சி.

மேற்குறித்த விஷயமாய் ஸ்ரீமதி ஸரோஜினி தேவி கீழ்க்கண்ட கருத்துக்களடங்கிய ஓர் பிரசங்கம் செய்தார். அதன் விவரம் வருமாறு :—

நீங்கள் இந்துஸ்திரீகளின் சிறப்பைப்பற்றிப் பேசும்பொழுதெல்லாம், பூர்வகாலத்திலிருந்த சாவித்ரியை உதாரணமாகச் சொல்லுகிறீர்கள்; அவளுடைய பயபக்தியையும், ஸாஹஸத்தையும் எடுத்துக்கூறுகிறீர்கள்; அவளுடைய நற்குணங்களினாலும், விடாமுயற்சியினாலும் அவள் தன் புருஷனுடைய உயிரை யமபுரியினின்றும் மீட்டதை வியந்துகொண்டாடுகிறீர்கள். அப்படிப்பட்ட நீங்கள் இக்காலத்து சாவித்ரிகளென விளங்கக்கூடிய உங்கள் ஸ்திரீகளை எந்த நிலைமையில் வைத்திருக்கிறீர்கள்? உயிர்ப்பிக்கும் ஆற்றல் சாவித்ரிக்கு உண்டென்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்கள். அந்த ஆற்றல் அவளுக்குத் தனக்குத் தானாகவே வந்து அமைந்ததோ? கல்விப்பயிற்சியினாலும் நற்பழக்கங்களினாலுமே அவளுக்கு அந்தத் திறமை உண்டாயிருக்கவேண்டு மல்லவா?



ஸ்ரீமதி ஸரோஜினி தேவி.

இந்நாளில் தேசீய உணர்ச்சி என்பது நசித்துப்போயிருக்கின்றது. தேசீய உணர்ச்சி யாவது நமது தேசத்துப் பொதுநலத்தை நாடி உழைக்கும் எண்ணம். இந்த உணர்ச்சி இப்பொழுது இந்தியாவில் மாண்டுபோயிருக்கின்றது. மாண்டதை உயிர்ப்பிக்கும் ஆற்றல் சாவித்ரியைப்போன்ற ஸ்திரீகளுக்கே உள்ளது. அப்படிப்பட்ட உங்கள் ஸ்திரீகளுக்கும் அந்தத் திறமை வாய்ப்பதற்கு வேண்டிய அநுகூலங்களையும் பழக்கங்களையும் அவர்களுக்கு நீங்கள் அமைத்துக்கொடாதிருப்பது தர்மமாகுமா?

இக்காலத்து இந்தியப்பெண்கள் தங்கள் மூதாதைகளை நாகரிகமற்ற கிழங்களெனக் கடிந்து தள்ளுகிறார்கள். அவர்களை அப்படி அவமதிப்பது தகாது. அம்மூதாதோரே புத்திச்தேர்ச்சி மிகுந்தவர்கள். அவர்களுடைய நோக்கங்களே சிறந்தவைகள். இக்காலத்துப் பெண்களுக்கு மேனாட்டு நாகரிகத்திற்கிசைந்த வெளித்தோற்றப் பதுமையுமில்லை; கீழ்நாட்டு நாகரிகத்திற்கு அறிகுறியான மனக்கிளர்ச்சியும் குறிசயங்களும் இல்லை. கவிவாணரொருவர் கூறியபடி, “இவ்வுலகத்து நற்குணமில்லை, அவ்வுலகத்திற்கேற்ற குணமுமில்லை” என்று சொல்லலாம்.

ஸ்திரீகளுக்குஸ்வபாஷையின் மூலமாகவேகல்வி புகட்டவேண்டும்.முற்காலத்து ஸ்திரீகளைப்போன்று அவர்கள் குடித்தனத்தலைவிகளாவதற்கு வேண்டியவாறு அவர்களுக்குக் கல்வி கற்பிக்கவேண்டும். இதுவே தேசீயக் கல்வி யெனப்படும். இத்தேசத்தவர் முன்னுக்கு வருவதற்கு மூலகாரணம் தெய்வபக்தியும் மதப்பற்றுமேயாகும். இந்தத் தத்துவங்களை வற்புறுத்துங்கல்வியே தேசீயக்கல்வி. இந்தியாவின் அபிவிருத்திக்கு இந்தத் தேசீயக் கல்வி இன்றியமையாததாகும்:—இந்துநேசனில்

T. R. S.

# Castor Cultivation.

BY PANDIT V SUBRAMANIA IYER.

## ஆமணக்குப் பயிர்செய்தல்.

(306-ம் பக்கத்தொடர்ச்சி.)

### ஆற்றுப்படுகை ஆமணக்கு.

கொள்ளிடம்போன்ற நதியோரமுள்ள படுகைகளில், மார்கழி மாதம் பிறந்ததும் ஏர்கட்டி உழுது ஆமணக்கு விதையைப் போடுவார்கள். ஒருகாணி விஸ்தீர்ணமுள்ள நிலத்திற்கு 4-படி (பட்டணம்படி) விதை விதைக்கப் போதுமானது.

இக்கொட்டைமுத்துச் சாகுபடியின் இடையில் சொற்பகாலப்பயிராகிய எள், கேழ்வரகு, காராமணி முதலியவற்றைப் பயிர்செய்து பலன் பெறுவதுமுண்டு. கொள்விதைத்தால், அதன் கொடிகள் ஆமணக்கின்மேல் படர்ந்து காய்க்கும்.

இப்படுகைக் கொட்டைமுத்துக்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டிய அவசியமில்லை. இப்பயிர் அடியிலுள்ள ஆற்றுவண்டலின் ஈரத்தைக்கொண்டே செழித்து வளர்கின்றது.

ஆமணக்குப் பயிருடன் செய்யப்பட்ட எள் முதலிய பயிர்கள் பலன்கொடுத்து முடிவதற்கும், ஆமணக்குப்பயிர் பலன் கொடுக்கத் தொடங்குவதற்கும் காலம் ஒற்றுமையாயிருக்கும். இது ஆனி மாதம்வரை நல்ல பலனைக் கொடுத்துவருகின்றது. ஆற்றுப்படுகையில் செய்யப்படும் பயிரில் ஜலம் ஏறாமலிருந்தால், அது வருஷமுழுதும் பலன் கொடுத்துக்கொண்டிருக்கும்.

ஆமணக்கை வியாபாரப் பொருளாக வர்த்தகர்கள் பிடித்து நாநாதேசங்களுக்குக்கொண்டு போய் வியாபாரம் செய்கிறார்கள். கொட்டைமுத்துக்கள் ஏராளமாக செக்கிலிட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கும் வியாபாரம் செய்யப்படுகின்றது. ஆமணக்குக்கொட்டையைச் சுட்டு வண்டிமை செய்து இயந்திரங்களுக்கு உபயோகிக்கப்படுகின்றது. இந்த எண்ணெயைச் சுயமாகவும், கடலைக்கொட்டை எண்ணெயோடு கலந்தும் விளக்கெரிக்க உபயோகிக்கிறார்கள். இப்படிப்பட்ட கலப்பெண்ணெயை உபயோகித்தால், விளக்குப் பிரகாசமாயும் நின்றும் எரியும்; விளக்குத்திரியை அடிக்கடி தூண்டிக்கொண்டிருக்க வேண்டியிராது. விளக்கெண்ணெயில் வேறு ஒன்றையும் கலக்காமல் சுயமாக உபயோகித்தால், விளக்குக் கொஞ்சம் மங்கலாய் எரியும். ஆனால், இவ்விளக்குக் கண்ணுக்கு மிகுதியும்குளிர்ச்சியை உண்டுபண்ணுவதனால், இது பிரஸவ அறைகளில் பெரிதும் உபயோகப்படுத்தப்படுவதுண்டு. இன்னும், வியாதிஸ்தர் இருக்கும் அறைகளிலும் இந்த விளக்கை உபயோகிப்பது நல்லது. காய்ச்சின விளக்கெண்ணெய் தேகத்திற்கு மிகுதியும் ஆரோக்கியத்தைக் கொடுக்கும். ஆகவே, இதை குழந்தைகளுக்கும் வியாதிஸ்தர்களுக்கும் விரேசனத்திற்காக கொடுக்கப்படுவதுண்டு.

இயந்திரங்களில் கொடுபட்டு சாஸ்திரமுறையில் குளிர்ச்சி செய்யப்பட்ட எண்ணெய், கண்ணாடி குப்பிகளில் அடைக்கப்பட்டு கடைகளில் விற்பனைக்குக் கிடைக்கின்றது. இன்னும், இச்சாஸ்திர முறைப்படி தயாரித்த எண்ணெயைப் பரிசோதித்து ஆஸ்பத்திரிகளில் விரேசன மருந்தாக உபயோகிக்கப்படுகின்றது. இந்த எண்ணெயை உட்கொண்டவர்களுக்குப் பித்த உஷ்ணவாயு முதலான வியாதிகள் நீங்கும்.

புழுக்கிக் காயவைத்து இடித்து அடுப்பிலிட்டு வடித்த எண்ணெயே பெரும்பாலும் குழந்தைகளுக்குப் புகட்டப்படுகின்றது. குழந்தை பிறந்தவுடன் இந்த எண்ணெயை முலைப்பாலில் கலந்து அதற்குப் புகட்டப்படும். இதற்குத்தான் செவ்வெண்ணெய் என்று சொல்லுவார்கள். 'ஆமணக்கெண்ணெய் அனை



வளர்க்கும்' என்பது ஆமணக்கைப் பற்றின சாதாரண பழமொழியாகும்.

இந்த எண்ணெய்க்கிருக்கும் குளிர்ச்சியைத் தரும் குணத்தைக்கருதியே, அநேகர் இதைத் தலையில் தேய்த்துக்கொண்டும் ஸ்நாநம் செய்கிறார்கள். கண்வலியினால் கஷ்டப்படுவர்கள் இரவு படுத்துக்கொள்ளும்போது இந்த எண்ணெயைக் கொஞ்சம் கண்ணில் கட்டிக்கொண்டால், காலைக்குள் அவர்களின் கண்கள்சுத்தமாகி நல்ல பார்வையை யடைகிறார்கள். ஆமணக்கு எண்ணெயைச் சாப்படுவது சிரமமாயிருக்கும். இதையொட்டியே, "ஆமணக்கு எண்ணெயைச் சாப்பிடவேண்டாம், அம்மா வயிற்றில் பிறக்க வேண்டாம்" என்ற பழமொழியும் வழக்கத்திலிருக்கின்றது.

### ஆமணக்கு இலைகள், கிளைகள்.

ஆற்றுப்படுகைகளில் செய்யப்படும் ஆமணக்குப்பயிரில் வெள்ளப்பெருக்கின் ஜலம் ஏறிவிட்டால், பயிரின் வேர் அழுகி, இலைகள் பழுத்துச் செடிகள் அப்படியே பட்டுப்போகும். ஆகவே, அவை பட்டுப்போவதற்குமுன்னால், கிருஷிகள் அவற்றைப் பிடுங்கிக் காயப்போட்டு அடுப்பெரிக்க உபயோகிப்பார்கள்.

கொட்டை இலைத்தளிர்கள் மிகுதியும் ருசியுள்ளவை. ஆகவே, இவற்றை மாடுகள் மிக்க அவாவுடன் தின்னுகின்றன. இவைகளைத் தின்ற மாடுகள் தாகம் மேலிட்டவையாய், வண்டலாய் ஆற்றில் வரும் தண்ணீரையும் உடனே குடிக்கின்றன. அப்போது ருசியுள்ள முத்துக்கொட்டை இலையின் தித்திப்புடன் இந்த ஜலம் உட்சென்றதும், மாட்டின் வயிற்றில் ஏற்கனவேயுள்ள பூச்சி இந்த இலையின் தித்திப்புக்காக அதன் நெஞ்சுவரையில் வந்து அடைத்துக்கொள்ளுகின்றது. அப்போது மாட்டுக்கு மூச்சுவிட முடிவதில்லை; வயிறு பெருத்து, பிறகு பூமியில் விழுந்துவிடுகின்றது. அதற்கு உடனே சிகித்சை செய்யாமற்போனால், ஐந்து நிமிஷ நேரத்திற்குள் இறந்துவிடுகின்றது. ஆனால், முத்துக்கொட்டை இலையை மாடுகள் தின்று கொஞ்சநேரம் கழித்துத் தண்ணீர் குடிக்குமானால், அவை இறப்பதில்லை. மாடுகள் இந்த இலைகளைத் தின்று உடனே தண்ணீர் குடித்து, மேற்கூறியவாறு தொந்திரவுகள் உண்டானால், ஒரு பித்தளைப் பாத்திரத்தில் கொஞ்சம் புளியையும் உப்பையும் கரைத்து உள்ளுக்குக் கொடுத்துவிட்டால், அவை உடனே சௌக்கியமடைகின்றன. ஆகவே, கொட்டைப்பயிரில் மாடுகளை மேய்ப்பவர்கள் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டியது அவசியமாகும். முத்துக்கொட்டை இலை இன்னும் வேறு மருந்துச் சரக்காகவும் உபயோகப்படுகின்றது.

### கொட்டை எடுக்கும் விதம்.

முத்துக்கொட்டை விதைத்து இரண்டுமாதகாலமானவுடன், அவை பூத்துக் காய்த்துக் குலைகள் விடுகின்றன. குலை பழுத்ததென்பதற்கு, குலையின் நுனிக்காய் முற்றியிருக்கப் பார்ப்பதே அடையாளமாகும். அப்போது கொட்டைக்குலைகள் ஒடித்துச் சேர்க்கப்படவேண்டும். அக்காய்களை ஒரு மூலையில் குவித்து மூன்று நாட்கள்வரையில் அவற்றை அவிய வைக்கவேண்டும். பிறகு அவற்றைக் காயவைத்தால், கொட்டைகள் வெடித்து விதைகள் தாமாகவே வெளிப்படும். வெடிக்காதபோக மற்றவைகளைத் தடிகொண்டு அடித்து, பிறகு உமியினின்று விதைகளை புடைத்துப் பிரிக்கவேண்டும்.

### ஆமணக்குப் பயிரில் பூச்சி.

மழை இல்லாமல் வெயில் அதிகமாய்க் காயும் காலங்களில், ஆமணக்குப்பயிரின் இலைகளில் புழுக்கள் உண்டாகும். அவை கருநிறமுள்ளவையாயிருக்கும். முசுக்கட்டை பூச்சிகளைப் போல் அவை தாம் பிறந்த இலையிலேயே வாசஞ்செய்து அதைத் தின்றுவிடும். இப்பூச்சிகளால், செடிகளில் கொட்டையொடிப்பவர்கள் மிகவும் சிரமப்படவேண்டியிருக்கின்றது. இப்பூச்சிகள் பதினைந்து நாட்கள்வரை ஜீவதசையுடனிருந்து பிறகு இறக்கும். அச்சமயம் கழுகுகள் முதலான பக்ஷிகள் அங்குவந்து அவற்றைக் கொத்தித் தின்றுவிடுகின்றன.

பண்டித வி. சுப்பிரமணிய ஐயர்.

# The Lost Will.

BY MR. M. S. KRISHNASAMY IYER.

## காணமற்போன மரணசாஸனம்.

### 12-ம் அத்தியாயம்.

சுந்தரம்மாள் வைத்தியத்திற்காகக் கல்யாணபுரம் வந்திருந்தபோது, சேஷியம்மாள் ஊரில் இல்லை. ஒரு மாதத்திற்கு முன்பாகவே அவளும், கேசவய்யரும், சாம்பசிவய்யரும் ஸ்தலயாத்திரை புறப்பட்டுவிட்டார்கள். அவர்களுக்கு வழியில் சமைத்துப்போட ஒரு விதவை துணைபோனாள். சேஷியின் பிள்ளையும் அவர்களுடன் போனான். தை பிறந்ததும் திருப்பதிக்குப்போய்ப் பையனுக்கு முடியிறக்க அவர்கள் உத்தேசித்திருந்தார்கள். அதுவரையில் அவர்கள் வெளியூர்களிலேயே சுற்றிக்கொண்டிருந்தார்கள். சாம்பசிவய்யர் மனைவிக்கு சேஷியின் நடத்தைப் பிடிக்காததனால், அவள் ஸ்தல யாத்திரைக்குப் போகவில்லை; தன் பிறந்தகம் போய்விட்டாள். ஸ்தல யாத்திரை புறப்படுமுன் சேஷிக்குக் கடன் அதிகமாயிருந்ததனாலும், அவள் ஊர்சுற்றவும் முடியிறக்கவும் பணம் வேண்டியிருந்ததனாலும் தனது நிலங்களில் இரண்டொன்றை வைத்துக் கடன் வாங்கியிருந்தாள். கடன் கொடுத்தவர்களுள் முக்கியமானவர் நாராயணவாத்தியார். அவர் தனக்குக்கிடைத்துவந்த சம்பளத்தையும், தானும் அலமேலுவும் திருடிச்சேர்த்த பொருள்களை விற்றுவந்த பணத்தையும் வட்டிக்குவிட்டு நாளடைவில் பணக்காரரானார். இந்த சமயம் அவரிடம் மூவ்வாயிரம் ரூபாய் ரொக்கமாக உண்டென்று ஊரார் சொல்லிக்கொண்டார்கள். அதில் அவர் ஆயிரத்தைந்நூறு ரூபாய்வரை சேஷிக்கு நிலத்தின்மேல் கடனாகக் கொடுத்திருந்தார்; மற்ற பணத்தை ஊராருக்குக் கடனாகக் கொடுத்திருந்தார். இதைத்தவிர, அலமேலுவும் தனியாகக் கொஞ்சம் சேர்த்துக் கையில் ஐந்நூறு ரூபாய்வரை வைத்துக்கொண்டிருந்தாள். கேசவய்யருக்கு ஸொத்து சேர்க்கத் தெரியாதென்றாலும், அவரும் சேஷிக்குக் கடன் கொடுத்திருப்பதாகக் கணக்கு ஏற்பட்டிருந்தது.

ஸ்தலயாத்திரை சென்றவர்களுக்குப் பணத்தட்டு ஏற்பட்டால், அதற்காகத் தந்தியடித்தவுடன் பணம் அனுப்பும்படி சாம்பசிவய்யர் சிலரைக் கல்யாணபுரத்தில் நியமித்திருந்தார். அவர்கள் கேட்டபோதெல்லாம் பணம் கொடுத்து சேஷிக்குக் கெடுதிவிளைவிக்கத் தயாராயிருந்தார்கள்.

தைமாதம் பத்துத் தேதியோடு ஸ்தலயாத்திரையும், திருப்பதி முடியும் முடிவுபெற்றது. யாத்திரை போனவர்கள் உடலும் பொருளும் மெலிந்தவர்களாய் ஊர்வந்து சேர்ந்தார்கள். சுந்தரம்மாளுக்கு அப்போது உடம்பு அநேகமாய்க் குணமாகிவிட்டது. நீலகண்டனுக்கும் துரைசாமிக்கும் பரீக்ஷை தேறிவிட்டதென்று ஸமாசாரமும் எட்டிற்று. நீலகண்டன் மேலே படிக்கமுடியாததைப்பற்றி வியஸனமடைந்தான். தான் முதல் வகுப்பில் தேறியதனால், ஒரு ஸமயம் உபகாரச் சம்பளம் பெற்று வாசிக்கமுடியுமென்றிருந்தான். தன் தாயாருக்கு உடம்புகுணமாகவே தான் திருச்சிக்குப்போய் ஸ்காலர்ஷிப் பெற முடியுமாவென்று பார்க்க எண்ணினான். பரீக்ஷை சமாசாரம் தெரிந்தவன்று சாயந்திரம், நீலகண்டன் தன் தாயாரிடம் தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டான்.

"எனக்குப் படிக்கவேண்டுமென்ற ஆசையிருக்கிறது. அநேகமாய் எனக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கும். ஸ்காலர்ஷிப்புப் பணம் சம்பளத்துக்கும் புஸ்தகங்களுக்கும் போதும். சாப்பாட்டுக்குத்தான் யோசிக்கவேண்டியிருக்கின்றது."

"நான் என்ன செய்கிறதப்பா. நமக்கோ ஆஸ்தியொன்றும் அதிகமில்லை. உன் மாமாவை



இனிமேல் பணத்துக்கு எதிர்பார்ப்பதில் பிரயோஜனமில்லை. சாப்பாட்டுக்குக்கூட அவனிடம் இனி இருப்பது உசிதமல்ல. நீ சீக்கிரம் ஏதாவது ஒரு வேலையைப் பார்த்துக்கொண்டு என்னையும் அழைத்துப்போய்விடு. இதுவரையில் அவன் எனக்குச்சோறுபோட்டதேபெரிது. இதற்குமேலும் இருந்தால், உன் அம்மாமி ஏதாவது வார்த்தை சொல்வாள். அதை நான் பொறுக்கமாட்டேன். உனக்கு எப்படியும் இருபது ரூபாயில் வேலை கிடைக்குமல்லவா? தகுந்த சிபார்சுகளைக்கொண்டு ஒரு வேலையைத் தேடிக்கொள். இருபது ரூபாய் கிடைத்தால் போதும். நமக்கு நிலத்திலிருந்து வருவதை நெல்லாக வேண்டுமானாலும் தருவித்துக் கொள்வோம். உனக்கு அப்படி படித்துத்தேற வேண்டுமென்றால், வீட்டிலிருந்தே வாசித்துப் பரீட்சை கொடு."

"துரைசாமிகூடப் பரீக்ஷையில் தேறிவிட்டான். அவன் மேலே படிக்கப்போகிறானாம்."

"அவனுக்கு ஸொத்து உண்டு. அப்பா சம்பாதிக்கிறார். மேலும், அத்தை நினைத்தால் அவன் படிப்புக்கு என்ன குறை."

"அத்தையா? அவள் விஷயங்கள் அவனுக்குப் பிடிக்கிறதேயில்லை. அவன் அவளிடம் போய்ப் பணம் கேட்பானென்று நினைக்காதே. அவன் அப்பாவுக்கே தங்கையைக்கண்டால் ஆகாது. அவள் நடத்தையைப்பற்றி அவரே கண்டிக்கிறார்."

"எல்லாம் பணம் என்றால் பேசாமலிருப்பார்கள்."

"அப்படியில்லை. அது விஷயம் உனக்குத் தெரியாது. அவர்கள் எல்லோருக்கும் சேஷி சித்தியைக்கண்டால் பிடிக்காது. அவர் பெண் பார்வதிக்குக்கூட அப்படித்தான். ஒருநாள் சித்தியைக்கண்டபடி அவள் வைதாள்."

"எனக்குக்கூட ஒரு யோசனை இருந்தது. அது சரிப்படாதென்று விட்டுவிட்டேன்."

"என்ன யோசனை?"

"பார்வதியை உனக்குக் கலியாணம் செய்து வைத்து, உன்னை அவர்கள் படிக்க வைத்துக் கொள்ளச் செய்யலாமென்றுதான். உனக்குச் சம்பளம் இருக்காது; சாப்பாடுதானே. அவர்கள் போட்டுவிடுகிறார்கள். ஏதோ எப். ஏ. யாவது படித்தால் நல்ல வேலை கிடைக்குமென்று பார்த்தேன். நான் இன்னும் எத்தனை நாள் இங்குக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதோடு, கோவிந்தையர் அவராம்படையாள் குணமெப்படியோ தெரியாது. அவர்கள் சேஷியைச் சேர்ந்தவர்களாகையால், அவர்களோடு சம்பந்தமே வேண்டாமென்று தோன்றுகிறது. ஆகையால்தான் சும்மாயிருக்கிறேன்."

"எல்லாவற்றிற்கும் நான் ஒருதடவை கோட்டைக்குப் போய்வருகிறேன். அங்கே சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்துவிட்டால், மேலே படிக்கலாமல்லவா?"

"நீ அவ்விதம்செய்வது எனக்கு ஸௌகரியமாயிருக்குமா? நான் இங்கிருப்பது கஷ்டமாக இல்லாவிட்டாலும், அவள் என்ன சொல்வாளோ என்ற பயந்தான் இருக்கின்றது."

நீலகண்டன் மேலே ஒன்றும் பேசத்தோன்றாதவனாய், வெளியே போய்வருவதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அடுத்த மூன்றாம்நாள் திருப்பதி சமாராதனை நடக்கப்போகிறதாகவும், அதற்காக துரைசாமியும், அவன் பெற்றோர்களும், பார்வதியும் வரப்போகிறதாகவும் நீலகண்டன் கேள்விப்பட்டான். எல்லா விஷயங்களையும் துரைசாமியுடன் கலந்து யோசனை செய்யலாமென்று அவன் எண்ணியிருந்தான்.

நீலகண்டனுக்கு வைத்யர் நடேசய்யரிடம் எப்படியோ அத்தியந்த விசுவாசம் உண்டாய்விட்டது. அவன் பொழுதுபோகாத வேளைகளில் அவருடன் பேசிக்கொண்டிருப்பான். அவருக்குமனுஷ்யாளைக்கண்டால் வெகுப்ரியம். அதிலும், நீலகண்டனிடத்தில் அதிக ப்ரியம் என்று சொல்லலாம். நீலகண்டன் தன் வீட்டு விஷயங்களை யெல்லாம் அவரிடம் சொல்லி

யோசனை கேட்பான். அவன் தன் வீட்டிலிருந்து புறப்பட்டதும், நேராக வைத்தியர் வீட்டுக்குப்போனான். வைத்தியர் உட்கார்ந்துகொண்டு ஏதோ வாசித்துக்கொண்டிருந்தார். அவன் வந்ததும், அவர் புஸ்தகத்தைக் கீழே வைத்துவிட்டு அவனை உபசரித்தார்.

"மாமா! என்ன வாசித்துக்கொண்டிருக்கிறீர்கள்?"

"இது ஒரு ஜோஸ்யப் புஸ்தகம்."

"உங்களுக்கு ஜோஸ்யம் தெரியுமே! ஒரு ப்ரச்னம்."

"நாற்பெட்டுக்குள் ஒரு எண் சொல்லு."

நீலகண்டன் ஒரு எண் சொன்னான்.

நடேசய்யர் சற்று நேரம் ஆலோசனையிலாழ்ந்தவராய்க் கண்மூடியிருந்து பிறகு;

"நீ கேட்ட ப்ரச்னம் படிப்பைப்பற்றி. படிப்பு விருத்தியடையும்; அதோடு தனவந்தனுமாவாய்."

"கேட்ட கேள்வி படிப்பைப்பற்றித்தான். ஆனால், பலன்தான் ஸந்தேகம்.

"என்?"

"ஏனெனில், இனி படிக்கமுடியாதென்று தோன்றுகிறது. என் மாமா இனிமேல் படிப்புக்கு உதவிசெய்வாரென்று சொல்லுவதற்கில்லை. என் ஆஸ்தியும் குறைவென்பது உங்களுக்குத் தெரிந்ததுதான்."

"ஏன், உனக்கு இந்தவருஷம் யாராவது பெண்ணைக்கொடுத்துப் படிக்கவைத்தால்?".

"அதெல்லாம் எங்கேமாமா நேரப்போகிறது. அதோடு, தனவந்தனகப்போகிறேன் என்றீர்களே."

"பணக்காரவீட்டுப் பெண்ணாயிருந்து, அவளுக்கு ஏதாவது ஸொத்து வைக்கப்பட்டிருந்தால், அப்போது நீ பணக்காரனவாயல்லவா?',

"நான் மேலே படிப்பேனா?"

"படிப்பாயென்றுதான் சொல்லுகிறேன்".

"அப்படியானால், இந்தவருஷம் கலியாணம் நடக்குமா?"

அவ்விஷயத்தை ஜாதகத்தைப் பார்த்துத்தான் சொல்லவேண்டும்.

"ஆனால் அதை நாளைக்குக் கொண்டுவருகிறேன்; பார்த்துச் சொல்லுகிறீர்களா?"

"அப்படியே பார்க்கிறேன்."

நீலகண்டனுக்கு நடேச வைத்தியரிடத்தில் அதிக நம்பிக்கை உண்டானதையால், அவர் சொல்லுவது சரியாயிருக்குமென்று எண்ணினான். அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு அவன் மனக்கோட்டை கட்டலானான். அவன் பார்வதியின்மேல் கொண்ட ஆசையை இன்னும் விட்டுவிடவில்லை. "ஸமாராதனைக்கு அவர்கள் வந்தாலும் வரலாம். அப்போது துரைசாமியின் தாயார் எப்படியிருக்கிறாள் என்பதை என் தாயார் பார்த்தால், அவளுடைய குணம் நன்றாய்த்தெரியும். ருக்மணியம்மாளுக்கு சிற்றியைக் கண்டால் பிடிக்காது இவ்விஷயம் அம்மாவுக்குத் தெரிந்தால் நல்லதுதான். பார்வதியின் குணமும் அம்மாவுக்குத் தெரிந்துவிட்டால், அவள் கல்யாணத்துக்குத் தடையொன்றும் சொல்லமாட்டாள். ஸ்காலர்ஷிப்புக் கிடைத்துவிட்டால் சாப்பாடுதானே. கோவிந்த மாமாவுக்கு அது ஒரு பெரிதல்ல. மாமனாரத்தில் சாப்பிட்டுக்கொண்டு வாசிப்பது கொஞ்சம் கௌரவக் குறைவுதான். ஆனால், அவர்கள் நல்லவர்கள்.

"அப்பொழுதே ஜாதகம் சரியாயிருக்கிறதென்று சொன்னார்கள். நாம் வைத்தியரிடமும் காட்டுவோம்; அவர் சொல்லுவதையும் கவனிப்பது நலம்" என்றிவ்வாறெல்லாம் நீலகண்டன் யோசனை செய்தான்.

திருப்பதி ஸமாராதனையின் முதல்நாள் கோவிந்தையரும் அவருடைய குடும்பமும் கல்யாணபுரம் வந்து சேர்ந்தார்கள். வந்ததும், அவர்கள் நேராகச் சேஷி வீட்டுக்குப்போகவில்லை. ஸீதை அதற்கு இரண்டுநாள் முன்



னேயே ஊர்வந்துவிட்டதனால், சாம்பசிவய்யர் வீட்டிலேயே அவர்கள் தங்கினார்கள்.

மறுநாள் காலையில் நீலகண்டன் துரைசாமியைப் பார்க்கச்சென்றான். துரைசாமியும் அவன் பெற்றோர்களும் அவனை அன்புடன் வரவேற்றார்கள். ருக்மணியம்மாள் ஸீதையிடம் நீலகண்டனைப்பற்றிப் புகழ்ந்து பேசினாள்; தன் பெண் பார்வதியை அவனுக்குக் கலியாணம் செய்துவைக்க எண்ணியிருப்பதாகவும் தெரிவித்தாள். ஸீதை தான் ஊரிலிருந்து வந்த இரண்டு மூன்று நாட்களுக்குள் சுந்தரம்மாளின் நற்குணங்களைப்பற்றிப் பிறர் சொல்லிக் கேட்டிருந்ததனால், நீலகண்டன் பேரில் அவள் அஸூயைக் கொள்ளவில்லை. மேலும், அவள் தன் நாத்தனாரையும் அவளுடைய பிள்ளையையும் வெறுத்ததையால், சுந்தரம்மாளுடன் சம்பந்தம்செய்வது அவளுக்குத் திருப்தியாகவேயிருந்தது. அதோடு, தான் அதுவரை சுந்தரம்மாளைப் பார்க்காமலிருந்தது பிசகு என்று எண்ணி, நதிக்குப்போகும்போது அவளை விசாரித்துவருவதென்று நிச்சயித்தாள். ருக்மணியும் இதற்கு உடன்பட்டாள்.

ருக்மணிக்கு ஸமாராதனைக்குவர இஷ்டமேயில்லை. சேஷி எக்கேடு கெட்டாலென்ன என்பதே அவளுடைய கருத்து. ஸீதையும் திருப்பதிக்குப் போயிருப்பாள்; அதற்காகவாவது தான்வரவேண்டுமென்று அவளுடையபுருஷன் வற்புறுத்தியதனால்தான், அவ்வூர்வர அவள் ஸம்மதித்தாள். அதோடு, சுந்தரம்மாளும் அங்கு வந்திருப்பதனால், கல்யாண விஷயமாய்ப் பேசலாமென்றும் ஒரு எண்ணம் ருக்மணிக்குத் தோன்றியது. அதனாலேயே, அவர்கள் எல்லோரும் புறப்பட்டு வந்தார்கள். ருக்மணிக்கு சேஷிகையில் சாப்பிடக்கூட இஷ்டமில்லை. அவள் சமைக்காமல் அலமேலு சமைக்கிறது பாதகமில்லையென்று அவளுக்குத்தோன்றிற்று.

சாம்பசிவய்யர் ஸமாராதனைக்கு வரும்படி ராமய்யரைக் கூப்பிட்டார். கூடுமானால், சுந்தரத்தையும் சாப்பிட வரச்சொல்லும்படி கேட்டுக்கொண்டார்; நீலகண்டனையும் அழைத்தார். ராமய்யருக்குச் சேஷியின் விஷயங்கள் பல தெரியுமென்றாலும், அவற்றை அவர் வெளிக்குக்காட்டவில்லை. சுந்தரம்மாள் தான் இனி அந்த வீட்டில் காலெடுத்து வைப்பதில்லை என்று சொல்லிவிட்டாள். மேலும், அவள் இன்னும் பத்தியத்திலேயே யிருந்தாள். நீலகண்டன் மாத்திரம் சமயோசிதம்போல் நடந்துகொள்வதாகச் சொல்லிவிட்டு, கடைசியாகப் போவதில்லையென்றே தீர்மானித்துவிட்டான்.

ருக்மணியும் ஸீதையும் காலையில் சேஷிவீட்டுக்குப்போய்ச் செய்யவேண்டிய கார்யங்களைச் செய்துவிட்டு, ஆற்றுக்குப்போனார்கள்; போகும்போது வழியில் ஸுந்தரம்மாளைப் பார்க்க அவள் வீட்டில் நுழைந்தார்கள். அப்பொழுது சுந்தரம்மாள் பல்துலக்கி மருந்து சாப்பிட்டுவிட்டு, கூடத்தில் ஒரு கம்பத்தில் சாய்ந்துகொண்டிருந்தாள்.

இருவரும் உள்ளே நுழைந்ததும், குங்கள் குடங்களைக் கீழே வைத்துவிட்டு சுந்தரம்மாளிடம் போனார்கள். சுந்தரம்மாள் அவர்களை வரவேற்று உபசரித்தாள்.

வந்தவர்கள் பேசுமுன், நீலகண்டன் அவர்கள் இன்னாரென்பதைத் தன் தாயாரிடம் தெரிவித்தான். பிறகு சுந்தரம்மாள், "உங்களை எப்பவோ பார்த்தது; எனக்கு ஞாபகமில்லை. அப்புறம் இந்தப்பக்கம் யார் வருகிறார்கள்."

ருக்மணியம்மாள்:—அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தால்தான் பழக்கமிருக்கும். இல்லாவிட்டால், இன்னாரென்று தெரிந்துகொள்வதே கஷ்டமாகிவிடுகிறது.

சீதை:—எனக்கு நீங்கள் வந்திருப்பதே தெரியாது. நான் இங்கே வந்து இரண்டு மூன்று நாட்கள்தானாகின்றன. நேற்றையதினந்தான் நீங்கள் இங்கிருப்பதாக என் ஆத்துக்காரர் சொன்னார். நேற்று ஸாயங்காலம் வர ஒழியவில்லை. ராத்ரிதான் இவளும் வந்தாள். இன்று மத்தியானம் தங்களைக்காண வரலா

மென்றிருந்தேன். அப்போது ஒழியுமோ ஒழியாதோவென்று இப்போதே வந்துவிட்டேன்.

சுந்தரம்மாள்:—போகிறது. இவ்வளவாவது வந்தது எனக்கு ரொம்ப ஸந்தோஷம். வேறு எனக்கு யார் இருக்கிறார்கள். அவள்தான் எட்டிப்பார்ப்பதே கிடையாது. நானும் அங்கு போவதற்கில்லாமலிருக்கிறது. மேலும், நான் போவதற்கில்லாம லிருக்கும்போது அவள் என்னை ஏதாவது ஒரு பேச்சுச் சொன்னால், அது எனக்கு ஸகிக்காது.

சீதை:—அவள் விஷயமாய் எங்களுக்கும் அப்படித்தான். நீங்கள் அவளிடம் பேசுவதில்லை. நாங்கள் பேச்சுவார்த்தை மாத்திரம் வைத்துக்கொண்டிருக்கிறோம். அவ்வளவு தானே தவிர, வேறொன்றும் இல்லை. இப்போது அவள் வீட்டுக்குக்கூட நான் போவதில்லை. அவள் வேதாந்தமும் பாட்டும் யாருக்குப் பிடிக்கிறது. மேலுக்கு வேதாந்தம்...... அதெல்லாம் நமக்கென்ன. ஒருவர் நமக்குப் பிடிக்கவில்லையென்றால், நாம் தூரவே யிருந்துவிடுவோம்.

சுந்தரம்மாள்:—ஸமாராதனைக்கு யார் சமையல்?

சீதை:—அலமேலு கிழவிதான் இருக்கிறாளே. அவள்கூட எனக்குப் பிடிக்கவில்லை. ருக்மணி வராவிட்டால் நான் இங்கு வந்திருக்க மாட்டேன். நானும் திருப்பதிக்குப் போயிருக்கேனென்று இவர்கள் வந்திருக்கிறார்கள். அலமேலுவும், சேஷியும் சமைத்து நாங்கள் சாப்பிடுவதைவிட, கஷ்டத்தைப் பாராமல் நாங்களே சமைத்துவிடலாமென்று தோன்றுகிறது.

ருக்மணியம்மாள்:—எனக்கும் அப்படிதான் தோன்றுகிறது. அந்தக் கிழவியை ஏதாவது வேறு காரியங்களைச் செய்யச்சொல்லிவிட்டால் போகிறது. உங்களுக்கு உடம்பு கொஞ்சம் தேவலை என்று நீலகண்டன் சொன்னான். இப்போது எப்படி இருக்கிறது?

சுந்தரம்மாள்:—கொஞ்சம் தேவலைதான். இன்னும் பத்துநாள் மருந்து சாப்பிடவேண்டுமென்று வைத்தியர் சொல்லுகிறார்.

ருக்மணியம்மாள்:—நீலகண்டனுக்குப் பரீக்ஷை தேறிவிட்டது; மூதல் வகுப்பில் தேறியிருக்கிறான். எங்கள் துரைசாமியும் தேறிவிட்டான். நீலகண்டனை மேலே படிக்கவைக்கப்போகிறீர்களோ?

சுந்தரம்மாள்:—எப்படி படிக்கவைக்கிறதம்மா. இதுவரையில் அவன் படித்ததே பெரிது. ஏதாவது ஒரு பதினைந்து ரூபாயில் வேலை கிடைத்தால் போதும்; ஸ்மாராய்க் காலந்தள்ளலாம்.

சீதை:—தை பிறந்துவிட்டதே. யாராவது பெண்ணைக்கொடுத்துப் படிக்க வைக்கிறார்கள். அவன்தான் நன்றாய்ப் படிக்கிறானே.

சுந்தரம்மாள்:—அதற்கெல்லாம் அதிர்ஷ்டம் வேண்டாமா?

சீதை:—இந்த வருஷம், கல்யாணம் செய்ய உங்களுக்கு இஷ்டந்தானே?

சுந்தரம்மாள்:—நம்முடைய இஷ்டத்தில் என்ன இருக்கிறது. பிராப்தமிருந்தால் நடக்கிறது.

சீதை:—எங்கள் பார்வதி இருக்கிறாள். அவளை உங்கள் பிள்ளைக்குக் கொடுத்துவிடலாம். ஒரே பெண்தான். ஏதோ எங்களாலானதைச் செய்யத் தடையில்லை.

சுந்தரம்மாள்:—அதற்கென்ன. அவளுக்குப் பிராப்தமுள்ள இடத்தில் நடக்கிறது.

சீதை:—உங்களுடைய இஷ்டத்தைச் சொல்லுங்கள்.

சுந்தரம்மாள்:—அது விஷயம் என் உடன் பிறந்தானைக் கேட்டுச் சொல்லுகிறேன். அப்போதே சொன்னான், பின்னால் பார்த்துக்கொள்ளலாமென்று. நீலகண்டன் என்ன சொல்லுகிறானோ. அதையும் கேட்கிறேன்.



சீதை:—அவர்களுடைய சம்மதம் இருக்கட்டும். உங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள்.

சுந்தரம்மாள்:—எப்படியானாலும் சரி. காரியம் நடக்கவேண்டியதுதானே.

சுந்தரம்மாள் பிடிகொடுத்து பேசுவதாக இவர்களுக்குத் தோன்றவில்லை; தங்களையும் சேஷியுடன் சேர்த்துவிட்டாளோ என்று எண்ணினார்கள். இவர்கள் கூடியவரையில் சிரமப்பட்டும், சுந்தரம்மாள் ஸாதகமான பதில் ஒன்றும் சொல்லவில்லை. பிறகு வேறு விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்துவிட்டு இவர்கள் ஆற்றுக்குப் போய்விட்டார்கள்.

இந்த சம்பாஷணைகளையெல்லாம் நீலகண்டன் கேட்டுக்கொண்டிருந்தான். ஆகவே, அவர்கள் சென்றதும், அவன் தனது தாயாரைக் கல்யாண விஷயமாய்க் கேட்டான். அதற்கவள்: "சேஷியின் ஸம்பந்தமே எனக்கு வேண்டாம். அவளுடைய மனுஷ்யாளோடு உறவாடுவதே கெடுதல்" என்றாள்.

அதற்கு நீலகண்டன், "அவர்களுக்கு சேஷியைக்கண்டால்தான் பிடிக்காதே" என்று சொல்ல, "அப்படியானால், ஸமாராதனையில் அவள் கையால்தானே அவர்கள் சாப்பிடப் போகிறார்கள்" என்றாள் சுந்தரம்மாள்.

ருக்மணிக்கும் ஸீதைக்கும் வாஸ்தவத்தில் சேஷியின்மேல் அஸூயை என்றும், விசேஷ காலங்களில் அதைக் காட்டிக்கொள்ளக்கூடாதென்றும் எவ்வளவோ சமாதானம் சுந்தரம்மாளுக்குச் சொல்லப்பட்டும், அவளுடைய மனம் திரும்பவில்லை.

(இன்னும் வரும்.)

எம். எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயர்.

## Single Planting of Paddy.

## நெல் ஒற்றை நாற்று நடுகை.

நன்செய் நிலங்களில் நெற்பயிர் செய்துவரும் ஒவ்வொருவரும், நாற்றுக்களைக் குத்துக்குத்தாய் நடாமல் ஒவ்வொன்றாய் நடும் வழக்கத்தை அனுஸரிப்பது நல்லது.

கிருஷ்ணாநதி பாசனங்களில் ஒவ்வொரு முதலாய் நடுவதுதான் சாதாரண வழக்கம். இந்த ராஜதானியில் மற்ற எந்தப்பாகத்திலும், அவ்விடத்திய பயிரைவிட சிலாக்கியமானதைக் காண்பது அரிதாயிருக்கின்றது. திருநெல்வேலி, தஞ்சாவூர் முதலான ஜில்லாக்களில் ஒற்றைநாற்று நடுகையானது பரீக்ஷிக்கப்பட்டு, இப்போது பலராலும் ஆயிரக்கணக்கான நிலங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. சம்பா, பிசானம் முதலான நெல் தினுசுகளெல்லாம் ஒற்றைநாற்று நடுகையால் நல்ல மேனியைத் தரும். இன்னும் இப்படிச் செய்வதனால், கீழே குறிக்கப்படும் அனுகூலங்களும் உண்டாகும்.

(1) நாற்று நட அதிகமான விதை வேண்டியதில்லை.

(2) நாற்றங்காலில் நாற்றைப் பிடுங்கி முடிச்சுமுடிச்சாய்க் கட்டும் செலவும், அவ்விதம் கட்டிய முடிச்சுக்களை நாற்றங்காலினின்று நடுமிடத்திற்குக் கொண்டுபோகும் கூலியும், சிரமும் குறைகின்றது.

(3) களையெடுத்தல் சுலபமாவதுடன், தண்ணீரும் எளிதாய் வயலில் பாயும். இதனால், உறை, நெல்சக்களத்தி, வெப்பம்பாசி முதலான களைகளைப் பரவவிடாமல் தடுத்துவிடலாம்.

(4) நாற்றங்காலில் விதையைக் குறைத்துப் பாவுகிறதனால், அதில் முளைக்கும் நாற்றுக்களும் மிகவும் திடமாயிருக்கின்றன. ஆதாரணமாய், நடுகை காலங்களில் பெய்யும் மழைகளால் வயல்களில் தண்ணீர் தேங்கினாலுங்கூட, நடப்பட்ட நாற்றுக்கள் திடமானவை

யானதனால், அவை அழுகிக் கெட்டுப்போகாமல், தண்ணீர்ப்பெருக்கையும் தாங்கும் சக்தியையுடையவையா யிருக்கின்றன.

(5) தண்ணீர்த்தட்டு உண்டாகும் காலங்களில், இப்படி நட்ட பயிர் வாட்டங்கொடுக்காமல், அதிக நாட்களுக்குக் காய்ச்சலைத் தாங்குகின்றது.

(6) ஒற்றை முதலாய் நட்டபயிர்கள் மற்றபடி நட்ட பயிர்களைவிட வீரியமாய் இருப்பதுடன், நோய் நொடிகளால் அவை அதிகமாகப் பீடிக்கப்படமாட்டா. தஞ்சாவூர் ஜில்லாவிலும், இன்னும் நெல் பயிரிடும் இதர ஜில்லாக்களிலும், எவ்வளவோ நஷ்டத்தையுண்டுபண்ணும் 'சூரை' நோயானது ஒற்றை முதலாய் நட்ட இடங்களில் காண்பது அரிது.

(7) ஒற்றை முதலாய் நட்ட பயிரில், தானியங்கள் ஒரே நிதானமாய் முற்றிப் பதர் அதிகமில்லாமலிருப்பதனால், கண்டு முதல் அதிகமாய்க் கிடைக்கும்.

ஆகவே, ஒற்றை முதலாய் நடும் வழக்கத்தை எல்லோரும் எவ்வித சிரமமின்றி அனுஷ்டிக்கக்கூடும். அப்படிப்பட்டவர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் குறிப்புக்கள் பிரயோஜனமுள்ளவையாய்க் காணப்படும் :—

(1) விதை நல்லதாயும், நன்கு காயப்போட்டு பத்திரப்படுத்தியதாயுமிருந்தால், எழுசெண்டு நாற்றங்காலில் ஏழு பட்டணம்படி விதை நாற்றுப் பாவினால், ஒரு ஏக்கர் நிலத்தில் நடப் போதுமான நாற்றுக்கள் கிடைக்கும். தஞ்சாவூரில் கிருஷிகர்களுள் பலர், ஒரு ஏக்கர் நிலம் நட, மூன்று பட்டணம்படி சிறுமணியையாவது சிவப்புச் சம்பாவையாவது நாற்றுப் பாவுவதாகச் சொல்லப்படுகின்றது.

(2) கூடுமானவரையில் முந்திய வருஷத்தில் ஒற்றைநாற்றாய் நட்ட பயிரிலிருந்தே விதையைச் சேகரிக்கவேண்டும். முதன்முதல் இவ்விதம் செய்வது அவசியமில்லாமற் போயினும், ஒருமுறை ஒற்றை முதலாய்ப் பயிர் செய்துவிட்டால், அந்தப் பயிரிலிருந்து தேவையான விதையைக் கையிருப்பில் வைத்துக்கொள்ளலாம்.

(3) புழுதிக்காலில் பாவின நாற்று சேற்றுக்காலில் பாவிய நாற்றைவிட திடமாயிருக்கும்.

(4) நாற்றங்காலில் நாற்று அதிகமாய் முற்றிப்போகுமுன் பிடுங்கிநடவேண்டும். நாற்றுவிடப்பட்டிருக்கும் நெல் இனத்தில் மொத்த வயதைக் கணக்கிட்டு, ஒருமாதம் வயசுக்கு ஒருவாரத்திற்குமேல் நாற்றங்காலில் நாற்றை வளரவிடக்கூடாது. உதாரணமாக : ஐந்து மாதங்களில் விளையக்கூடிய நெல் தினுஸின் நாற்றை, 35 நாட்களுக்குமேல் நாற்றங்காலில் வளர விடக்கூடாது.

(5) ஒற்றைநாற்று நடுகையானது, எவ்வளவு தூரத்திற்கு ஒன்று நடப்படவேண்டுமென்னும் விஷயத்தைக் கிருஷிகர்களே நிதானித்துக்கொள்ளவேண்டும். எனினும், கீழ்க்குறிக்கப்படும் அளவுகளும் கவனிக்கப்படலாம். ஏக்கரா ஒன்றுக்கு ஆயிரம் பட்டணம்படிக்குமேல் மாசூல் கொடுக்கும் நிலங்களில் சாண் ஒன்றுக்கு ஒரு நடுகையும், ஏக்கர் ஒன்றுக்கு 750 பட்டணம் படி மாசூல் கிடைக்கும் நிலங்களில் முக்கால் ஜாணுக்கு ஒரு நடுகையும், ஏக்கரா ஒன்றுக்கு 500 பட்டணம் படிக்கு மேல்படாத மாசூல் கொடுக்கும் நிலங்களில் அரை ஜாணுக்கு ஒரு நடுகையும் போடுதல் ஒரு சமயம் பொருந்தும். சாதாரணமாய் ஏகரா ஒன்றுக்கு 1,500 பட்டணம்படி மாசூல் கொடுக்கும் கொழுத்த நிலங்களில், ஒரு நடுகைக்கும் மற்றொரு நடுகைக்கும் இரண்டு ஜாண் தூரமிருந்தால் நல்ல மாசூலை எதிர்பார்க்கலாம். ஆனால், நடுகை செய்யாதவும் எப்பொழுதும் விதைப்பையே கையாடிவருவதுமான மிகவும் கேவலமாயிருக்கும் நிலங்களில் ஒற்றைநாற்று நடுவதனால் அதிகமான மாசூல் கிடைக்கலாமென்று சொன்னபோதிலும், அப்படி நட்டதனால் கிடைக்கும் ஜாஸ்தி மாசூலை



விட, ஒற்றைநாற்றாய் நெருக்கி நட செல்லும் செலவு ஜாஸ்தியாகவே யிருக்கும்.

ஒற்றைநாற்று முதன்முதல் நடப்படும் பொழுது பார்வைக்கு மிகவும் கலப்பாயும் கேவலமாயும் தோன்றும். இக்காரணம்பற்றி, முதன்முதல் இதைக் கையாடும் கிருஷிகர்கள் அதைரியப்படக்கூடாது. அருகில் பயிரிடும் கிருஷிகர்கள் இவ்விதம் நட்ட பயிர் கெட்டுப் போகுமென்று முன்னாடி பயமுறுத்தினாலும், தைரியத்தைக் கைவிடக்கூடாது. 10, 20 அல்லது 30 நாற்றுக்களை வைத்து நடும் இடத்தில் ஒரு நாற்று நட்டிருத்தல் பார்வைக்கு மிகக் கலப்பாய்த்தான் தோன்றும். ஆனால், இந்தப் பயிர் நாளாவட்டத்தில் களைத்துப் பக்கம் வைத்துக் காலி இடத்தை மூடிக்கொண்டு, அக்கம்பக்கங்களில் குத்துக்குத்தாய் நட்ட நடுகைகளைவிடப் பார்வைக்கு மேன்மையாகவே யிருக்கும்.—வியவசாயத் துண்டுப் பிரசுரத்திலிருந்து சுருக்கி எழுதப்பட்டது.

## Industriousness and Work.

BY MR. T. R. RAJAGOPALAN.

### ஊக்கமும், உழைப்பும்.

"நெடுநீர் மறவி மடிதுயி லான்குங்
கெடுநீரார் காமக்கலன்"

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்."

வாழ்வென்ற இனிய செடியை மிகச் செழிப்புடன் வளரச்செய்வது ஊக்கம் என்ற தெண்ணீரே. அறிவின் விசாலத்திற்கும், நாகரிகக் கிளர்ச்சிக்கும், மாந்தரின் முதிர்ச்சிக்கும் இன்றியமையாத சாதனங்கள் ஊக்கமும், உழைப்புமே. உழைப்பினால் பாமரன் கலைஞனாகலாம்; கசடன் அசேலனாகலாம்; ஏழை தனவந்தனாகலாம். புத்தி விளப்பத்தினால் மனிதன் இதர ஜீவப் பிராணிகளைவிடப் பன்மடங்கு பெரியவனாக விளங்குகிறான். ஆனால், அப்புத்தியைத் தக்க உழைப்பினால் நன்மார்க்கங்களிற்புகுத்தி, யாவர்க்கும் நன்மைபயக்கக் கூடியவைகளையே பின்பற்றிச் செய்வதில் உபயோகிக்காவிடின், நாளடைவில் அது மழுங்கி உபயோகமற்றதாகிவிடும். எடுத்தாளாத ஆயுதம் துருப்பிடித்ததைப்போல், ஒரு வேலையையும் மேற்கொள்ளாது வாளா ஒருவன் வீணில் கழிப்பானானால், தேகாரோக்கியம் குன்றி, அறிவு தாழ்வடைந்து, வியாதிஸ்தனாகவும், உன்மத்தனாகவும் மாறி, தனக்கும் பிறர்க்கும் எவ்வித நன்மையுமில்லாது சோற்றுக்குக் கேடும் பூமிக்குப் பாரமுமாக ஆகிவிடுவான். தேகத்தைப் பலப்படுத்தி, விவேகத்தை அதிகரிப்பித்து, விசுவாசம்-வீரம்-வைராக்கியம் முதலானவைகளைப் பெருகச்செய்து இவ்வுலக வாழ்வில் ஓர் உற்சாகத்தை உண்டுபண்ணுவது ஊக்கமும், உழைப்புமே. ஊக்கமும், உழைப்புமாகிய எண்ணெயும் திரியும் ஜீவான்மாவாகிய தீபத்தைப் பிரகாசிக்கச்செய்து சோம்பல், தரித்திரம்-பிணி என்பனவற்றால் உண்டாகும் துக்கமாகிய அந்தகாரத்தைத் துரத்துகின்றன. எங்ஙனம் விளக்கெண்ணெய் குறையக்குறைய பிரகாசமும் குறைவடைகின்றதோ, அல்லது மலினம்நிரம்பிய எண்ணெயினால் விளக்கு நன்கு விளங்காதோ, அங்ஙனமே, உழைப்பு அதாவது பிறருடைய மனத்தையும்-இருதயத்தையும் தெரிவித்து உயர்த்தி நன்கு எய்துதற்கு உதவுவதான உழைப்பில்லாவிடின், ஜீவாக்னியின் சக்தி குறைந்து ஒடுங்கிப்போம். மிடியின் காரணம் மடியே; மடியின் தூண்டுகோல் மெய்யறிவின்மை; மீண்டும் அவித்தையின் காரணம் மடியேயாகும். தெளிவுறச் சொல்லின், மடியும்-மிடியும்-அஞ்ஞானமும்-அவஸ்தையும் ஒன்றையொன்று இடைவிடாது தொடர்ந்துகொண்டே

யிருக்கும். தேகவன்மைக்கும், மனோதிடத்திற்கும் அடிப்படை, அல்லது ஆதாரமாக இருப்பது ஊக்கமும் உழைப்புமே. வாழ்க்கையின் அத்தியந்த நண்பர்களாக நின்று உதவி புரியும் மிக்க மேலான விசுவாசமும் தைரியமும், மேற்சொல்லிய ஊக்கம் உழைப்புகளினால் மிகச் செழிப்புடன் வளர்த்தப்படுகின்றன. நரகத்தில் அழுத்துவது மடியாகும்; சுவர்க்கத்தில் அமர்த்துவது உழைப்பாகும்; மடியின் மகவு தீமை; தீமையின் மாற்றுந்தாய் அவிவேகம். சுவர்க்கம் என்பது ஒரு உயர்ந்த சிகரத்தின்மீது இருக்கின்றது; அங்கு செல்வதற்கான பாதைகளோ செங்குத்தாகவும், கூரிய கட்களும் முள்களும் நிரம்பியதாகவுமிருக்கின்றன. இத்தகைய பாதைகளை எளிதிற் கடந்து மேற்செல்வது எங்ஙனம்? தக்க உழைப்பினாற்றான். மடியினாற் பீடிக்கப்பட்டு இருந்து வருபவன் விஷச்செடிகள், அல்லது முதிர்ந்த நாகங்களைவிட அதிக அபாயகரமுள்ளவனாகிறான். முயற்சியில்லாதவனுக்கு மனவமைதியும், இன்பமும், ஆரோக்கியமும் எங்கிருந்து உண்டாகும்? முயற்சி செய்யாதவன் இகழ்ச்சிக்குரியவனாகிறான்; பற்பல இன்னல்களுக்கு அடைக்கலமாகிறான்; கடவுளின் துரோகியும், மானிடராசியின் விரோதியும், அஞ்ஞானத்தின் உறைவிடமும், கொலை-களவு-கட் காமக் குரோதிகளின் சிநேகிதனுமாகிறான்.

“விதியை மதியால் வெல்லலாம்,” மதியை மேன்மேலோங்கி வளரச்செய்வது ஊக்கமும், உழைப்புமே. “முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.” இவ்வான்றோர் மொழிகளை மறந்து ஒழுகுதல் நன்றன்று.

மேலும், புதர்களும், குரிஞ்சி முட்களும், விஷச்செடிகளும், கரபக்ஷிணிகளும் நிறைந்த காடுகளையும், மேடுபள்ளங்களையும் செப்பனிட்டு நாடு நகரங்களைப் பரப்புவது உழைப்பே. பாழ்பூமிகளை உழுது பயிரிட்டு அறுப்பறுத்து, தானியங்களைச் சேமித்து மனிதர்களுக்கு நன்மை செய்வது உழைப்பே; நிஷ்பிரயோஜனமாய் இங்குமங்கும் ஓடியாடித்திரியும் நதிகளை யடக்கி, வாய்க்கால்-குளம்-கிணறு-சிற்றாறுகளாகப் பிரித்து, அவற்றின் தண்ணீரை வயல்களுக்குக் கொணர்ந்தொழித்து அவைகளைச் செழிக்கச்செய்வது உழைப்பே; பெரும்பெரும் பாறைகளையும், மலைகளையும் தகர்த்து, நாலாபக்கங்களிலும் நூற்றுக்கணக்கான கிளைகளைப் பரப்பிநிற்கும் மாமரங்களை முறித்துத்தள்ளி, அவைகளைக்கொண்டு நேர்த்தியான உயர்ந்த கட்டடங்களை நாடெங்கும் நிரப்புவது ஊக்கமும் உழைப்புமேயாகும்; பூமியில் புதைந்துகிடக்கும் நானாவித உலோகங்களை வெட்டி வெளிப்படுத்திச் சுத்தமாக்குவதும், அலைகடலையும்-கடும்புயல்களையும் கடற்பிராணிகளையும் சுலபமாகத் தாண்டிச் செல்வதற்கான மரக்கலம், அல்லது புகைக்கப்பல்களைச் செய்வித்து, சிதறிக்கிடக்கும் பற்பல தேசங்களை வியாபாரத்தினால் ஒருங்குசேர்த்து, அவ்வியாபாரங்களையும் பெருக்கிப் பலப்படுத்தி, வறுமையை யகற்றி, ஐஸ்வரியத்தை விருத்திசெய்து, நாகரிகத்தை நாலாபக்கங்களினும் வியாபிக்கச் செய்து நிலைநிறுத்துவது உழைப்பேயாகும்; சாதாரண கற்களினின்று விதம்விதமான கண்ணாடிகளை உண்டுபண்ணுவதும், உபயோகமற்றபதார்த்தங்களை, ரசாயன சாஸ்திரத்தினுதவியினால், நல்லவைகளாகச் செய்வதும், பாறை நிலங்களையும், வனாந்தரங்களையும் மாடமாளிகை கூடகோபுரங்கள் நிறைந்த இடங்களாக மாற்றுவதும் உழைப்பென்ற மாந்திரிகனே.

சுருங்கச் சொல்லின், மனோதிடத்திற்குத் தேக வலிமையும், தேக வன்மைக்கு உழைப்பும் இன்றியமையாத கருவிகளாகும்

டி. ஆர். ராஜகோபாலன்.

அன்பின் வேற்றி.
இது ஓர் புதிய தமிழ் நாவல்.
இதில் அன்பினாலேயே நாம் எவ்வாறு ஸகல காரியங்களையும் சாதித்துக்கொள்ளலாமென்பது நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது. விலை அணா 3.
வி. என். சாமாராவ் அண்டு கம்பேனி,
135, தேவராஜமுதலி தெரு, மதராஸ்.



# Topics from Periodicals.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### மாமரம் பயிர் செய்தல்.

மாமரம் பயிர்செய்யும் விஷயமாய் “விவேக போதினி” யில் ஓர் அரிய வியாசம் காணப்படுகின்றது. அதை இங்குச் சுருக்கமாகப் பிரசுரிக்கிறோம்.

நல்ல மணமுள்ளதும், ருசியுள்ளதுமான பழங்களிலிருந்து கொட்டைகளைச் சேதப்படாமல் எடுத்து, சிறு மண்தொட்டிகளில் நல்ல உரமுள்ள மண் அல்லது களிமண் போட்டு அவைகளில் நடவேண்டும். அக்கொட்டைகளில் பூச்சிபுழு முதலானவை இருத்தலாகாது. அக்கொட்டைகளுக்குத் தினந்தோறும் ஜலம் விடவேண்டும். சிறு செடிகள் முளைத்தபின்பு அவைகள் அதிக மழையினாலாவது காற்றினாலாவது கெட்டுப்போகாமல் பாதுகாத்தல் அவசியம்.

மேலும், இச்செடிகளை வைத்து விருத்திசெய்வதற்கான இடம் அதிக மணற்பாங்காயிருத்தல் கூடாது. ஏனென்றால், மணல்பூமியும், சாள்பூமியும் தண்ணீர் கொள்ளாதாகையால் மாமரம் இவ்விடங்களில் நன்றாய் வளராது. அதற்கு ஈரம் அதிகம் உள்ள தரையே தேவை. மண்ணும், சுண்ணாம்பும், கொஞ்சம்மணலும் கலந்த பூமியானது மாமரத்தின் ஆழமான வேர்களையும், அவ்வளவு பெரிய மரத்தையும் தாங்கச் சக்தியுள்ளது. ஆகையால், இத்தரையிலேயே மாமரம் நன்றாய் வளரும். மேற்சொன்ன பூமி அகப்படாவிடின், மணலையோ அல்லது களிமண்ணையோ தரையோடுகலந்து, நல்லபூமியாக உபயோகப்படுத்தலாம். அத்தரையானது பூமி மட்டத்திற்குச் சற்று உயர்ந்தேயிருக்கவேண்டும். அவ்விடத்திற்குக் கிழக்கேயும் தெற்கேயும் யாதொரு அடைப்பும் இருக்கக்கூடாது. அவ்வாறிருப்பின், கீழ்காற்றும் தென்றலும் மரத்திற்படாது. மேலும், பெரிய ஊர்கட்கு அருகாமையில் மாந்தோப்புகள் உண்டாக்குவது பெரும் பேதமையே. ஏனெனில், பட்டணங்களிலுள்ள தூசி இலைகளின்மேல் படிவதால், அம்மரத்திற்கு வேண்டிய காற்றையும் சூரியவெளிச்சத்தையும் உட்கொள்ள அவ்விலைகளுக்குச் சக்தியில்லாமல் போகின்றது. ஆகையால், மரங்கள் நல்ல வளர்ச்சியில்லாமல் க்ஷீணமடைகின்றன. நிலத்தில் உரமில்லாவிடின், எரு, குப்பை, எலும்புத்தூள் முதலியவைகளை உபயோகப்படுத்தலாம்.

இவ்வாறு பூமியைச் சீர்திருத்திய பிறகு, மாங்கன்றுகளை நடுமுன் நிலத்தை உழவேண்டும். பிறகு, மூன்றடி நீளம், மூன்றடி அகலம், மூன்றடி ஆழமான குழிகளை சுமார் நூறடிக்கு ஒன்றாக வெட்டி இரண்டுமாதம் வரையில் அவைகளை மூடாமல் வைத்திருக்கவேண்டும். மரங்களை அதிக நெருக்கமாக நட்டால், மழைகாலத்தில் பூச்சிகள், உண்டாவதுடன், அவை அதிக உயரமாய் வளர்ந்து கிளைகள் இல்லாமல் போகின்றன. குழிகளிலிருந்து வெளியே எடுத்துப்போட்ட மண்ணுடன் ஒருகூடை எருக்குப்பை, கொஞ்சம் எலும்புத்தூள் இவைகளைக் கலந்து, குழிகளை அம்மண்ணால் நிரப்பி, செடிகள் நடுவதற்காகச் சிறு துவாரங்கள் செய்யவும் மழை காலத்திலாவது அல்லது நன்றாய்த் தண்ணீர் சிலநாட்களாகப் பாய்ச்சின பிறகாவது கன்றுகளைத் துவாரங்களில் நடவேண்டும். தொட்டிகளிலிருக்கும் கன்றுகளைச் சாக்கிரதையாக எடுக்கவேண்டும். தொட்டிகளை உடைத்து, கன்றின் வேரைச் சுற்றியிருக்கும் மண் சேதப்படாமல் எடுத்துப் புதைக்கவும். கன்று காற்றினால் அடிபட்டுக் கீழே விழாமலிருப்பதற்காக, பலமான குச்சியொன்றை நேராக நட்டு, அதோடு கன்றைக் கட்டுவது நல்லது. தினந்தோறும் தண்ணீர் விடுவதை நிறுத்தக்கூடாது. ஆனால், நல்ல மழைபெய்த நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குத் தண்ணீர் விடவேண்டாம்.

ஒவ்வொரு செடியைச் சுற்றியும் பாத்திகட்டி, கோடைகாலத்தில் செடியைச் சுற்றியுள்ள மண் பிளவுபடாமலும் ஈரம் உலராமலும் இருப்பதற்காகப் பாத்தியில் சுமார் இரண்டு அங்குல கனத்திற்குக் காய்ந்த இலைகளைப் போட்டுவைக்கலாம். இவ்வாறு செய்துகொண்டும், தண்ணீர் சரியாய் ஊற்றிக்கொண்டும் வந்தால், சுமார் இரண்டு அல்லது மூன்று வருஷங்களில் மரம் பெரிதாகிப் பூக்கும். இப்பூக்களை நாம் பிடுங்காமல் விட்டுவிட்டால், அவை காயாகிப் பிறகு பழுத்துவிடும். ஆனால், அப்பழங்கள் பெரியனவாயும் ருசியுள்ளனவாயும் இருக்கமாட்டா; மரமும் பிறகு நல்ல பழங்களைக் கொடுக்காது. ஆகையால், முதல்வருஷப் பூக்களைப் பிடுங்குவதே மேல்; இன்னும் இரண்டு வருஷங்களுக்கு அப்படியே செய்தால், பிறகு பெரும் லாபம் அடையலாம்.

ஐந்தாவது வருஷம் வந்ததும், மரம் காய்க்குமாதலால், அதற்கு நல்லுணவு தேவை. அதற்கு, மரத்தின் கிளைகள் சிலவற்றையாவது, சிறு வேர்களையாவது வெட்டவும். ஆனால் மாமரத்தின் வேர்களை வெட்டுவதுதான் சிலாக்கியம். அதற்கு மரத்தைச்

சுற்றி ஆழமாய்த் தோண்டி அடிவேர்களிலிருந்து உண்டாயிருக்கும் சிறு சிம்புவேர்களை மாத்திரம் வெட்டி, எலும்புத்தூள் ஐந்தாறு ராத்தலும், எருவும், குப்பையும், கொஞ்சம் உப்பையும் அந்த மண்ணுடன் நன்றாய்க் கலந்து தோண்டிய குழியை அதால் மூடிவிடவேண்டும். மரம் பெரிதாக வளர்ந்துவிட்டதேயென்று நாம் தண்ணீர்விடாமல் இருக்கக்கூடாது. அப்பொழுதுதான் மரத்திற்குவேண்டிய தண்ணீர் விடவேண்டும். அப்படிச் செய்தால்தான், அடியில் போடப்பட்ட உரம் கரைந்து ஆகாரமாய் வேர்களால் உட்கொள்ளப்படுகிறது. உப்புப்போடுவதனால் மரத்தை அழிக்கும் புழுபூச்சிகள் அழிந்துபோகும்.

சிலநாட்களுக்குப் பிறகு மரம் பூத்துக் காய்கள் உண்டாகின்றன. காய்களைப் பறிக்காவிடில், அவை பழுக்கும். ஆனால், சிலர் காய்களைப் பறித்துப் பழுக்கவிடுகின்றனர். அப்படிப் பழுத்த பழங்கள் ருசியாயிருப்பதில்லை; ஆகையால், மரத்திலேயே பழுக்கவேண்டும். காய்கள் பழுக்கும்பொழுது நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது என்னவென்றால், மரத்திற்கு வேண்டிய தண்ணீர் ஊற்றப்படுகிறதா என்பதே. தண்ணீரில்லாவிட்டால் பழங்கள் காற்றினாலும் வெயிலினாலும் கெட்டு, சரியாகப்பழுக்காமல் கீழே விழுந்துவிடுகின்றன. ஆனால், புரட்டாசியிலிருந்து மார்கழி மாதம் வரைக்கும் அதாவது செப்டம்பர் மாதத்திலிருந்து டிஸம்பர் வரைக்கும் மரத்திற்குத் தண்ணீர் விடுவதை நாம் நிறுத்திவிடவேண்டும். தண்ணீர் விடுவதனால் கெடுதியில்லையென்றாலும், அது வீண் சிரமமே. ஏனெனில், அம்மாதங்களில், போஷணம் மரத்திற்கு வேண்டிய அளவுக்கு மேல் இருப்பதாலும், காய்கள் புதிதாக உண்டாகாமல் இலைகளே உண்டாகின்றனவாதலாலும், தண்ணீர் விட்டும் ஜாஸ்திக் காய்கள் இருப்பதில்லை; இலைகளே அதிகமாகின்றன.

மேலே சொல்லியவாறு, ஐந்துவருஷ காலம் பொறுத்து பிறகு சற்றுக் கஷ்டப்பட்டுப் பழங்கள் உண்டாக்கினால், ஏராளமான லாபம் அடையலாமென்பதற்குத் தடையில்லை. பழங்களோ அதிக ருசியும் மணமும் கொண்டிருக்கும்.

---

## வேப்பிலையின் உபயோகம்.

வேப்பிலைகளின் உபயோகத்தைப்பற்றி ஒரு நிருபர் "வைத்திய கலாநிதி"யில் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

வேப்பிலைகளை ஜலத்தில்போட்டுக் காய்ச்சி, பிரஸவித்த ஸ்திரீகளுக்கு அதைக்கொண்டு ஸ்நானம் செய்விப்பதுண்டு. இந்த இலைகளுக்குக் கிருமிஹரமான குணம் உண்டென்பதை உணர்ந்தே நமது பெரியோர்கள் இவ்விதம் ஏற்பாடு செய்தார்களென்று யோசிக்கவேண்டியிருக்கின்றது. இளங்குழந்தைகளுக்கும் இவ்வித ஜலத்தினால் ஸ்நானம் செய்விப்பதுண்டு. இந்த ஜலத்தை உபயோகிப்பதனால், பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் தேகத்தில் எவ்வித விஸர்ப்பமும் சொறிசிரங்கும் ஏற்படுவதில்லை. இதன் இலைகளைக் கல்கமாக அரைத்து எலிகடிக்கு உட்கொள்ளக் கொடுப்பதும், கடித்தவிடத்தில் போட்டலிகையாக (Poultice) ப் போடுவதும் வழக்கம். அடிபட்டு வழுண்டுபோன பாகங்களில்முட்டிவீக்கங்களிலும்கூட இவ்விதம் செய்வதுண்டு. மாதவிடாயில் அநேகம் ஸ்திரீகளுக்குக் கருப்பையிலும் உடலில் மற்ற விடங்களிலும் வலியும், கடுப்பும் அதிகமாய் ஏற்படும்போது, வேப்பிலை இடித்துப் பிழிந்தெடுத்த சாற்றை இரண்டு உத்தாணி அளவாக உட்கொண்டு வருவது அநுகூலமாயிருக்கும். இலையை மென்று விழுங்கினால் பசி உத்தீபனம் ஆகும். இதன் இலைகளிலிருந்து பிழிந்தெடுத்த சாறானது நேத்திரங்களிலுண்டாகும் மாம்ஸ வளர்ச்சியையும், அபிஷ்யந்தமென்கிற கண் நோவையும் நிவிருத்தி செய்யவல்லது. நன்கு முதிர்ந்த இலைகளின் ஸ்வரம் பல்வீறுகளில் ஏற்படக்கூடிய கட்டி அல்லது வீக்கத்தைப் பரிஹரிக்கக்கூடியது. குடலில் நாகப்பூச்சிகள் உண்டாயிருந்தால், இரண்டு உத்தாணியளவு இச்சாற்றில் இரண்டு குண்டுமணியெடை உப்பு கலந்து தினத்திற்கு நாலைந்து முறை கொடுக்க நன்மையுண்டாகும். இந்தச் சாற்றிலேயே சிறிதளவு தேன் கலந்து காமாலையில் கொடுப்பதும் வழக்கம். சொறிசிரங்குகளும், வேறுவித சர்மதோஷங்களும் உண்டாயிருந்தால், அவற்றின்மேல் பூசுவதற்கும் இதனிலைச்சாறு மிகவும் உபயோகமாயிருக்கிறது. மஞ்சளும் வேப்பிலையும் ஸமபாகமாய் அரைத்து அழிப்புண்களின்மேல் பூச, நல்ல குணமுண்டாவதாக சக்ரதத்த ஸம்ஹிதை கூறுகிறது. இச்சாற்றை தத்ருவென்கிற படைக்கும் அடிக்கடி போட்டுவரலாம். சவித்ரமென்கிற வெண்குஷ்டத்திற்கு இச்சாற்றையும் சிறிதளவு பசுமூத்திரத்தையும் கலந்துகொடுக்கலாமென்றும் கிரந்தங்களில் கூறப்பட்டுள்ளது. அடிபட்டு அதிகமாய் வெளிவரும் இரத்தத்தைத் தடைசெய்வதற்கும், இந்த இலையின் போட்டலிகை அல்லது சாறு உபயோகமானது. டாக்டர் கே. என். நாயக் அவர்கள், இந்த இலைகளால் குடும்பங்களுக்கு உபயோகப்படும் மற்றொரு முறையையும் கூறுகிறார். உணவுகளுக்கு உபதம்சமாகத் தென்னிந்தியாவில் செய்யப்படும் ஒருவித சம்பாரப் பொடியிலும் இவ்வேப்பிலையைச் சிறிதளவு சேர்ப்பது வழக்கமாம்; இதற்கு வேப்பிலைக்கட்டியென்று பெயராம். இதனால் வயிற்றில் வாயு சேருவதும், கிருமிகள் உண்டாவதும் கண்டிக்கப்படும்.



---

# The Diamond Ring.

By Mr. S. Narasimhachariar B.A., B.L.
*High Court Vakil, Madras.*

## வைர மோதிரம்.

### 4-ம் அத்தியாயம்.

ஸாயங்காலம் ஸுமார் நாலுமணி இருக்கும். தான் வாக்களித்த பிரகாரமே, அம்பலவாணன் நல்லாடைதரித்து, ஸ்வாமியை மனத்தில் இருத்தி, தன் வீட்டினின்றும் புறப்பட்டுப் பாண்டுரங்கர் கூறிய இடத்தைச் சென்றடைந்தான். இவனைக்கண்ட பாண்டுரங்கர், மிக்க ஆதரவோடு அவனை எதிர்கொண்டு அழைத்து, உபசரித்துத் தன் பக்கத்திலமர்த்திக்கொண்டு, வீட்டு க்ஷேமலாபங்களை விசாரிக்கலானார்.

"உங்கள் வீட்டில் எல்லோரும் ஸௌக்கியமா?"

"ஈச்வரன் கிருபையால் அனைவரும் ஸௌக்கியமே. தாங்களும், தங்களைச் சேர்ந்தவர்களும் ஸௌக்கியமென்றே நான் நம்புகிறேன்".

"ஆஹா! எல்லோரும் சுகம்தான். உங்களூரில் நல்ல மழையுண்டா இந்த வருஷம்? குடிகளுக்கு எவ்விதக் குறைகளுமிராதென்றே எண்ணுகிறேன்."

"இந்த வருஷம் நல்ல மழை பெய்ததென்று சொல்ல முடியாது. ஆயினும், விளைவு கிருஷிகர்களுக்குத் திருப்தியையே தந்தது. கால்நடைகளுக்கும் தீனிக்குக் குறைவில்லை. இவ்விதமே எங்கும் உண்டென்று நான் நினைக்கிறேன்."

"எங்களுக்கு இந்த வருஷம் எவ்விதக் குறைவுமில்லை. தக்ககாலத்தில் நல்லமழை பெய்தது. ஏரி குளங்களெல்லாம் நிறைந்தன. குடிகளும் காலமுறைப்படி உழுது நல்லபலனை யடைந்தார்கள். எல்லாம் கடவுள் கிருபையே.—நீ திடீரென்று இந்த ஊருக்கு வந்ததன் காரணமென்ன? உன் பெற்றோர்கள் இங்கிருக்கிறார்களா?"

"என் தாய்தந்தையர் இப்போது இங்கு வந்திருக்கிறார்கள். அவர்களுடனே தான் நானும் வந்தேன். நான் மாத்திரம் தனியாய் இந்த ஊர் வருவதற்கு யாதொரு காரணமுமில்லை."

"ரொம்ப ஸந்தோஷம். குடும்பமுழுதும் இப்போது இங்கு வந்ததன் விசேஷமென்னோ?"

"விசேஷம் ஒன்றுமில்லை. என் தாயார் ஸ்ரீ வேங்கடாஜலபதியை தரிசிக்கவிரும்பினார்கள். அதற்காக நாங்கள் எல்லோரும் புறப்பட்டு வந்தோம். இன்னும் இரண்டு தினங்களில் ஊருக்குத் திரும்ப உத்தேசித்திருக்கிறோம். நான் எதிர்பாராத காலத்தில் தங்களைச் சந்திக்க நேர்ந்ததைப்பற்றி எனக்கு மிக்க ஸந்தோஷம்."

"எனது நண்பர் ஒருவர் நேற்று சந்திரகிரியில் கிரவப்பிரவேசம் செய்தார். அதற்காக நாங்கள் நான்கு தினங்களுக்குமுன் அங்கு வந்தோம். உன்னையும் தற்செயலாய் இங்குக்காண நேர்ந்தது. என்ன உன் உடம்பு மிகவும் இளைத்திருப்பதாகக் காணப்படுகின்றதே? தேகஸௌக்கியம் குறைவாயுள்ளதோ?" என்று பாண்டுரங்கர் வினவினார்.

161990



பாண்டுரங்கர் சாய்ந்துகொண்டிருந்த சுவற்றில், அவருடைய தலைக்கு நேரே ஒரு ஜன்னல் இருந்தது. ஸரியாக இந்த ஸமயத்தில் தன் பிதாவினிடம் ஏதோ விஷயத்தைச் சொல்வதற்கு, ஸௌந்தரவல்லி தற்செயலாய் அச்சுவற்றிற்கு அப்புறம் வந்தாள். வந்தவள் அம்பலவாணனைக் கண்டு, சற்றே நாணி, புன்னகைசெய்து, உடனே அப்புறம் போய்விட்டாள். தன் மனதைக் கவர்ந்த கட்டழகியைக் காணலாமென்ற எண்ணத்தோடே அங்கு வந்திருந்த அம்பலத்திற்கு, ஆனந்த மேலீட்டால் மெய்கூச்செறிந்தது. எல்லாம் கடவுளருளாலல்லாமல் மனிதராலாவது ஒன்றுமில்லை என்று நினைக்குந்தோறும், மேலும் மேலும் மகிழ்ச்சி பொங்க, காதல் என்னும் கன்னற்சுவையால் மனம் பூரித்ததால், பாண்டுரங்கர் கேட்ட கேள்வியை அவன் மறந்தானாகையால், அதற்கு ஒன்றும் பதில்கூறாது மௌனமாயிருந்தான்.

"என்ன! அம்பலம்! நான் கேட்டதற்குப் பதில் ஒன்றையும் காணோம்" என்று மறுபடியும் பாண்டுரங்கர் கேட்டார்.

அம்பலவாணன் ஒரு விநாடிகாலம் யோசித்தான். ஸௌந்தரவல்லியைக் கண்ட சந்தோஷம் ஒருபக்கம் அவனைக் களிப்பித்தது. பாண்டுரங்கருக்கு என்ன பதில்சொல்வதென்று ஒன்றும் அவனுக்குத் தோன்றவில்லை. "உள்ளதை அவரிடம் சொல்வோம். அவர் எப்போதும் என்மீது அன்புள்ளவர். இதற்கு அவர் ஸம்மதப்பட்டாலும், இல்லாவிட்டாலும் சரி. நாம் இனிமேல் மௌனமாயிருப்பதில் பலன் ஒன்றுமில்லை. வீணாக மனதில் அடக்கிக்கொண்டிருப்பதைக் காட்டிலும், அது கைகூடுமா? என்பதைத் தெளிவாய்த் தெரிந்துகொள்வதே நலம்" என்று அவன் தனக்குள்ளேயே துணிந்து,

"அன்புள்ள மாமா! தாங்கள் இதுவரை என்மீது பாராட்டிவந்த அன்பே, இன்று நான் தங்களுக்குப் பதிலுரைக்கக் காரணமாயிருக்கின்றது. என்னுடைய பதில் தங்கள் கருத்துக் கிசைந்திருந்தாலும், இல்லாவிடினும், தங்களுக்கு என்மீதுள்ள அன்பு மாத்திரம் குறையாமலிருக்கும்படி வேண்டுகிறேன். என்னுடைய பத்தாவது பிராயத்தில் சுந்தரவல்லியும் நானும் நேசங்கொண்டோம். அன்றுமுதல் இன்றுவரையில் ஸௌந்தரத்தின் ஞாபகம் என்மனத்தைவிட்டு ஒருக்ஷணமேனும் பிரிந்திருக்கவில்லை. மத்தியில் தங்களுக்கும் என் பிதாவுக்கும் நேரிட்ட மனஸ்தாபத்தினால் தங்களுடைய மனது என் விஷயத்தில் ஒருகால் வேறுபட்டிருக்குமோவென்று பயந்து வியாகூலமடைந்திருந்தேன். இன்று தாங்கள் பாராட்டிய அன்பும் ஆதரவும் எனக்கு மிகுந்த ஸந்தோஷத்தைத் தந்தது. ஆதியில் நாங்களிருவரும் கொண்ட ஸ்நேகமானது காதலாக மாறியுள்ளது. தாங்கள் என்ன எண்ணியிருக்கிறீர்களென்பது எனக்குத் தெரியாது. நான் கூறிய விஷயம் தங்கள் இஷ்டத்திற்கு இசைந்துள்ளதாவென்பதைப்பற்றி நான் கவலைப்படுகிறேன். என் மனம் முற்றும் விவரமாக அறிந்த தங்களுக்கு, நான் அதிகம் கூறவேண்டியது ஒன்றுமில்லை" என்று கூறி முடித்தான்.

(இன்னும் வரும்.)

எஸ். நரஸிம்மாசாரியர், பி.ஏ, பி.எல்


## புதிய தமிழ் நாவல்கள்.

| | | | |
|---|---|---|---|
| பாலாமணி அல்லது பக்காத்திருடன் ... | 2 | 0 | 0 |
| வஸந்தமல்லிகா ... ... | 1 | 0 | 0 |
| ராஜேந்திரமோஹனா ... ... | 0 | 12 | 0 |
| வஸந்தகோகிலம் ... ... | 0 | 12 | 0 |
| மாயாஸௌந்தரி ... ... | 0 | 8 | 0 |
| மங்கையர்ப்பகட்டு ... ... | 0 | 12 | 0 |
| குப்பன் பித்தலாட்டங்கள் ... | 0 | 8 | 0 |
| உட்டாணி ... ... | 0 | 6 | 0 |
| கோகிலாம்பாள் ... ... | 0 | 12 | 0 |
| ஆனந்தவல்லி ... ... | 0 | 6 | |

வி. என். சாமாராவ் அண்டு கம்பெனி,
135, தேவராஜமுதலி தெருவு, மதராஸ்.